இராமபிரானைக் கற்போம்

ஸீதா கல்யாணம்





ஸ்ரீ பறவாக்கோட்டை ஸ்ரீமதாண்டவன்

ஸ்ரீ கோபால தேசிக மஹாதேசிகன்

ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்ரீமதாண்டவன் ஆஶ்ரம வெளியீடு

இராமபிரானைக் கற்போம்





.... ''மராமரம் ஏழ்துளை
எய்த எய்தவற்கு எய்திய மாக்கதை
செய்ய செய்தவன்'' வால்மீகி, தம் சீடர்களுடன்
நாரண நாமம் நவிலும் நாரதரை வரவேற்றல்

இராமபிரானைக் கற்போம்

ஸீதா கல்யாணம்

பால காண்டம்

ஸ்ரீ பறவாக்கோட்டை ஸ்ரீமதாண்டவன்
ஸ்ரீ கோபால தேசிக மஹாதேசிகன்

Srimad Andavan
Sri Poundarikapuram Swami Asramam
Srirangam, Trichy - 620 006.
2001

முதற்பதிப்பு : 2001

ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஶ்ரமம்,
43-A/13 ஆஶ்ரமம் சாலை, ஸ்ரீரங்கம் - 620 006.

Price : Rs. 200/-
Postage extra

Cover design and drawings by Sri Keshav.

Colour separation by
Sanka Graphics,
43, Kasturi Ranga Road,
Chennai - 600 018.

DTP Typesetting & Printing by
Sri Maruthy Laser Printers
200, Peters Road, Royapettah,
Chennai - 600 014.



ஸ்ரீ

ஸ்ரீமதே கோபாலதேசிக மஹாதேசிகாய நம:

ஸமர்ப்பணம்


பூர்வாச்ரமத்தில் பறவாக்கோட்டை ஸ்ரீமதாண்டவனின்
திருத்தகப்பனாரும், ''பரமைகாந்திஸ்வாமி'' என்று
எல்லோராலும் மதிக்கப்பட்டவரும், ஸ்ரீமத் ராமாயண பக்தரும்,
இந்நூலை எழுதுவதற்கு மூலகாரணமாக அமைந்தவரும்,
வைகுண்டவாஸியுமான பறவாக்கோட்டை

கந்தாடை ஸ்ரீநிவாஸாசாரியார் எனும் வேங்கடாசாரியார்

ஸ்வாமியின் திருக்கரகமலங்களில் பக்தியுடன் ஸமர்ப்பிக்கிறோம்.

இங்ஙனம்,
நீடாமங்கலம் மாடபூசி
N.S. மணி அய்யங்காரின்
குடும்பத்தினர்

श्रीः



श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ।

श्रीमते रामानुजाय नमः ।

ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் (வழுத்தூர்) வேதாந்த லக்ஷ்மண
முனிவரின் நேர் ஸந்யஸ்த குருபரம்பரையாம் மணிஹாரத்தில்
நாயகரத்நமான ஸ்ரீமத் பௌண்டரீகபுரம் ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமி
ஆச்ரமத்தில் எழுந்தருளியிருக்கும் பரமஹம்ஸேத்யாதி
ஸ்ரீ பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன்

ஸ்ரீ கோபாலதேசிக மஹாதேசிகன் அருளிய

ஸ்ரீமுகம்

श्रीनिवासं परं ब्रह्म तन्नाम्नश्च गुरुत्तमान् ।
नारायणं रंगनाथौ प्रणमाभि पुनः पुनः ।
माहयास्यं उपासेऽहं मन्मानस विलासकम् ।
अभीष्टदान, कोशाक्षमाला पद्म करैर्युतम् ॥

ஸ்ரீமத் ராமாயணம் பவித்ரமான பெருங்காப்பியம். இது சிறந்ததும் முதலாவதுமாகும். ராமனுடைய சரித்திரம், ஸீதையினுடைய சரித்திரம் என்று பொருள். ராமனும், ஸீதையும் இக்காப்பியத்தின் நாயகனும் நாயகியும் ஆவர். இவர்களுடைய செயலைக் கேட்பதும், படிப்பதுமே இவ்வுலகினரை வாழ்வாங்கு வாழச் செய்து வந்திருக்கிறது. நாரதர், தம் அனுபவத்தைக் கூறும்போது

''तुष्टः पुष्टः सुधार्मिकः । निरामयो ह्यरोगश्च दुर्भिक्ष भय वर्जितः ॥

''இந்நூல் மனிதனை மகிழ்ந்தவனாகவும், நிறைந்தவனாகவும், அறவோனாகவும், மனக்கவலை அற்றவனாகவும், நோயற்றவனாகவும், துர்பிக்ஷம் (ஏழ்மை) இல்லாதவனாகவும், அச்சமற்றவனாகவும் வாழச் செய்யும்'' என்கிறார். ஒருவனுக்கு நல்வாழ்வு வாழ இவற்றைவிட வேறு என்ன வேண்டும்?

உயர்வு

வால்மீகி கூறுவார் : ''समुद्रमिव रत्नाढ्यं सर्वश्रुति मनोहरम्'' ராமாயணம் கற்போருக்குக் கடல் போன்றது; கம்பீரமானது; ஆழமானது; முத்துக்

குளிப்போருக்கு, எத்தனை தடவை மூழ்கி கடலடிவரை சென்றாலும், ஒவ்வொரு தடவையும் விதவிதமான முத்துக்களும், ரத்தினங்களும் கிடைத்த வண்ணமிருக்கும். அது போன்று இதைப் படிக்கும் அறிஞனுக்குப் படிக்கப் படிக்க ஒவ்வொரு தடவையும் ரத்தினங்கள், நல்முத்துக்கள் போன்ற உயரிய அழகிய கருத்துக்கள், தொனிப் பொருள்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். இக்காதையைப் பிறர் சொல்லக் கேட்போன், பாலனாயினும், வாலிபனாயினும், முதியவ னாயினும் செவி வழி புகுந்து அமிழ்தம் போன்று, புத்துயிரையளித்தும், மனதைக் கவர்ந்தும், மகிழ்விக்கும், கதாநாயகனாகிய ராமபிரானே

''ममाऽपि तत् भूतिकरं प्रचक्षते, महानुभावं चरितं निबोधत''

தம் ப்ராதாக்களைப் பார்த்து'' குசலவாள் பாடும் இச்சரித்திரம் எனக்கே பல்வகை ஐச்வர்யத்தைக் கொடுக்கிறது. இது மக்களுள் எவ்வித வேற்றுமையும் பாராட்டாது அனைவருக்கும் எல்லா நன்மைகளையும் அளிக்கவல்லது'' எனவே நீங்களும் கவனமாகக் கேளுங்கள்'' என்கிறார். இப்பெருமைகளை உணர்ந்த நம் கூடஸ்தரான நம்மாழ்வாரும் ''கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ'' என்றார். ஆழ்வாரின் அடி யொற்றி நாமும் இக்கட்டுரைத் தொடருக்கு ''இராமபிரானைக் கற்போம்'' என்று திருநாமம் சூட்டினோம்.

இத்தொடரை எழுதக் காரணம்

தன் லீலைகளால் குழந்தைகளையும், விலங்குகளையும் கூட தன்பால் ஈர்க்கும் கண்ணன் கதையிருக்க; இதை எழுத முக்கிய காரணம் ஒன்றுண்டு. பூர்வாச்ரமத்தில் எனது திருத்தகப்பனார் பரமபதிப்பதற்குச் சிறிது நேரம் முன்பு என்னை அழைத்து ''काश्यांतु मरणान्मुक्तिः अथवा पुत्रसन्निधौ என்று சொல்லுவார்கள். எனவே உன் மடியின் மீது என் தலையைத் தூக்கி வைத்துக் கொண்டு உட்கார்'' என்று ஸாதித்தார். நானும் அவ்வாறே செய்ய ''கவலைப்படாதே. உனக்கு ராமதனமும், கோதனமும் இருக்கிறது. எல்லாம் நன்கு நடக்கும்'' என்றார். ''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' என்பர். தந்தையின் வாக்கையே மஹாமந்திரமாகக் கொண்டு குறிப்புக் களைத் தயாரித்து ப்ரதிபலனை எதிர்பாராமல் ஸ்ரீமத்ராமாயண ப்ரவசனம் பண்ணத் தொடங்கினேன். ஆஶ்ரம ஸ்வீகாரமான பிறகு 'ஸ்ரீ காஞ்சி பேரருளாளன்' பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ உப.வே. வைகுண்டவாஸி திருப்புட்குழி நரஸிம்ஹ தாதார்ய மஹா தேசிகனின் இடைவிடாத வற்புறுத்தலின் பேரில் ''இராமபிரானைக் கற்போம்'' தொடரை எழுதத் தொடங்கியதில் ராமனைக் கற்கும் பாக்கியம் கிட்டியது.

இந்த ''இராம பிரானைக் கற்போம்'' (ஸீதா கல்யாணம்) எனும் நூல் ராமாயணச் சொற்பொழிவாளர்கள், பட்டிமண்டபங்களில் பங்கு கொண்டு பேசுவோர். ராமாயண பாராயணம் செய்யும் சான்றோர் ஆகியோர் பயன்பெறும்படி எழுதப்பட்டிருக்கிறது.

பதிப்பு

இதை அழகிய புத்தக வடிவில் பதிப்பித்து வெளியிட முன்வந்தவர் நீடாமங்கலம் மாடபூசி ஸ்ரீமான் N.S. மணி அய்யங்கார் B.A.B.L., அவர்களின் குடும்பத்தினர். N.S. மணி அய்யங்கார் தள்ளாத வயதிலும் உடல் தளர்ச்சியைப் பொருட்படுத்தாது ஆஶ்ரமத்தில் வந்து தங்கி வேதாந்த காலக்ஷேபம் பண்ணியவர். இவர்தம் புதல்வர்களான ஸ்ரீமான்கள் N.S. பார்த்தஸாரதி அய்யங்கார், N.S. நரஸிம்ஹ அய்யங்கார், N.S. ராஜகோபாலய்யங்கார், N.S. ரங்கநாத அய்யங்கார், புதல்வி மாதுஸ்ரீ ராதா ஆநந்தமூர்த்தி ஆகியோர், இதை அச்சேற்றுவதைத் தம் குடும்பத் திருப்பணியாக ஏற்றுப் பதிப்பித்துள்ளனர். இவர்களுள் மூத்தவரான N.S. பார்த்தஸாரதி அய்யங்காரின் பக்திச்ரத்தையும், அயராத உழைப்பும், சுறுசுறுப்பும், அச்சுத் தொழிற்புலமையுமே இவ்வழகிய புத்தகமாக வடிவெடுத்தது என்றால், அது மிகையன்று.

மேற்கூறிய இவர்களும் உடனுக்குடன் 'ப்ரூப்' (Proof) பார்த்தும், பிழைகளை அகற்றியும், இந்நூலுக்கு நறுமணமேற்றிய ஸ்ரீ உப.வே. தில்லி ராஜகோபாலாசாரியாரும், ஸ்ரீ உப. வே. கொத்திமங்கலம் கோபால சக்ரவர்த்தியாசாரியாரும் வேதோக்த தீர்க்காயுஸ்ஸையும், ஸீதாராமனின் திவ்ய கடாக்ஷங்களையும், நோயற்ற திடமேனியையும், ஸர்வாபீஷ்ட ஸித்திகளையும் பெற்று வாழ்வாங்கு வாழவும், காண்போர் வியக்கும் வண்ணம், அழகிய சரித்திரப் படங்களை வரைந்து கொடுத்த கேசவ ஐயங்காரும், விரைவில் அழகிய முறையில் அச்சேற்றித்தந்த அச்சகத் தினரும் பேறுகள் பதினாறும் பெற்று நல்வாழ்வு வாழவும் இராம பிரானைப் பிரார்த்தித்து நாராயண ஸ்மரணம் பண்ணி சுபமங்களங்களை ஆஶாஸனம் பண்ணுகிறோம்.

நாராயண நாராயண

ஸ்ரீரங்கம் **ஸ்ரீமதாண்டவன்**
18-2-2001 ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆஶ்ரமம்.


ஸ்ரீ:

ஸ்ரீ கோபாலதேசிக மஹாதேசிகாய நம:

அஞ்ஜலி



ஸ்ரீமதி ரங்கநாயகி
(ரங்கா)



ஸ்ரீ N.S. மணி ஐயங்கார்
(வேங்கடேச ஶர்மன்)

எங்கள் ஆசார்யோத்தமராகிய ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பறவாக் கோட்டை ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ கோபால தேசிக மஹாதேசிகனது சரணார விந்தங்களில் அனேக கோடி ப்ரணாமங்களை ஸவிநயம் ஸமர்ப்பிக் கிறோம். ஸ்ரீமதாண்டவன் அருளிய 'இராமபிரானைக் கற்போம்' என்ற உயர்ந்த ஸ்ரீ கோசத்தை அவருடைய

ஶதாபிஷேக மஹோத்ஸவ வைபவத்தில்

ஸ்ரீ விக்ரம ஷு பங்குனி மீ 17உ, ரோஹிணீ நக்ஷத்ர, ஶுபதினத்தில் (30-3-2001) அடியோங்களது திருதகப்பனார் ஸ்ரீ நீடாமங்கலம் மாடபூசி N.S. மணி ஐயங்காரின் (வேங்கடேச ஐயங்கார்)

ஶதமான (நூறாவது) திருநக்ஷத்ரத்தை

நினைவிற்கொண்டு வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அடியோங்களது பெற்றோர், பகவத், பாகவத, ஆசார்ய பக்தி நிறைந்தவர்களாக இருந்து, எங்களையும் அப்பாதையிலேயே வளர்த் தனர். எங்களை மிகக் கண்ணியமாகவும், நேர்மையுடனும் வாழவும், பிறருக்கு எவ்வேளையிலும் உதவுமாறும் தூண்டினார்கள்.

அடியோங்களுடைய தந்தையார் ஆசார்யன் திருவடிகளையே ஆஶ்ரயித்து ஆஶ்ரமத்திலேயே சில காலம் காலக்ஷேபம் செய்து கொண்டு தங்கியிருந்தார்.

பிரபல வழக்கறிஞராக இருந்த எங்கள் தந்தையார் பொதுத் தொண்டாற்றுவதிலும் மிக்க ஈடுபாடுடையவர். வெள்ளையர் காலத்தில், அவர்களே வியக்கும் வண்ணம் மருத்துவத் தொழிலில் சிறந்து விளங்கிய டாக்டர் ரங்காசாரியின் உருவச் சிலையை, சென்னை, பொது மருத்துவ மனையின் நுழைவாயிலில் வைப்பதற்காக அமைக்கப்பட்ட 'கமிட்டி'யில் செயலாளராகப் பணியாற்றி பல்வேறு இடையூறுகளுக்கிடையே வெற்றி கண்டு சிலையை நிறுவிய பெருமையுடையவர்.

எங்கள் தாயார், ஏழை எளிய பெண்களுக்கு, அவர்கள் திருமணத் திற்குத் தேவையான கூறைப் புடவையையும், திருமாங்கல்யத்தையும் வாங்கிக் கொடுத்து உதவுவார். தேவையென அணுகியவர்க்கு, எப் பொழுதும் உதவி செய்வார்.

எனவே, எங்கள் பெற்றோர் நினைவாக, இந்த ஸ்ரீ கோஶத்தை அச்சடிக்கும் செலவனைத்தையும் பெரு மகிழ்ச்சியுடன் ஏற்கிறோம்.

அச்சடிக்கும் 1000 ப்ரதிகளின் விற்பனையால் கிடைக்கும் தொகை அனைத்தும் ஆஶ்ரமத்தையே சேரும் என்று விநயத்துடன் விண்ணப் பிக்கிறோம்.

ஸ்ரீமதாண்டவன் திருவடிகளையே தஞ்சமாகக் கொண்ட

N.S. பார்த்தஸாரதி **ராதா A. மூர்த்தி**

N.S. நரஸிம்ஹன் **N.S. ராஜகோபாலன்**

N.S. ரங்கநாதன்

பொருளடக்கம்

ஸ்ரீ

ஸ்ரீமதே கோபால தேசிக மஹா தேசிகாய நம:

அடியேன் செய்யும் விண்ணப்பம்

अध्यासीन तुरङ्गवक्त्र विलसज्जिहाग्रसिंहासनात्
आचार्यादिह देवतां समधिकामन्यां न मन्यामहे
यस्यासौ भजते कदाचि दजहत् भूमास्वयं भूमिकां
मग्नानां भविनां भवार्णव समुत्तारायनारायण:

—ஸ்வாமி தேசிகன்

சிறந்த ஆசார்யனது நாவின் நுனியென்னும் சிங்காதனத்தில் கல்விக் கடவுளான—பரிமுகன்—ஹயக்ரீவன் அமர்ந்து விளங்குகிறான். இத்தகைய ஆசார்யனைவிட, வழிபடத்தக்க தெய்வம் வேறில்லை. ஏனெனில் ஆசாரியன் என்பவன் ஸாக்ஷாத் பகவானே. மக்களது நல்வினை பெருகும் போது இப்பிறவிக் கடலில் மூழ்கியுள்ள அவர்களைப் பிறவிக் கடலினின்று கரையேற்றுவதற்காகத் தன் பெருமையைச் சிறிதும் விடாமல் ஆசார்யன் என்ற போர்வையில் பகவானே இப் பூவுலகில் தோன்றுகின்றான்.

ஸ்வாமி தேசிகனருளிய सिद्धं सत्सम्प्रदायेस्थिरधियमनघं श्रोत्रियं ब्रह्मनिष्ठं என்ற ஶ்லோகத்தில் கண்ட ஆசார்யனுக்குரிய நற்பண்புகள் அனைத்தும் குறைவற நிரம்பப் பெற்றவரும்,

आचिनोतिहिशास्त्रार्थान् आचारेस्थापयत्यपि
स्वयमाचरते यस्मात् तस्मादाचार्य उच्यते ।
गुशब्दस्त्वन्धकारस्स्यात् रुशब्दस्तन्निरोधक:
अन्धकार निरोधित्वात् गुरु रित्यभिधीयते ।

—த்வயோபநிஷத்

ஶாஸ்த்ரங்களையறிந்து, பிறரை—சிஷ்யர்களை நன்னெறியில் நடப்பித்துத் தாமும் நெறிதவறாமல் ஒழுகுவதால் ஆசார்யன் எனப்படுகிறார். ''கு'' என்ற சொல் அறியாமையிருளையும் ''ரு'' என்பது அதனை—அறியாமையைப் போக்குதலையும் குறிக்கும். மக்களது அறியாமையிருளைப் போக்குவதால்தான் ''குரு'' எனப்படுகிறார்.

மேற்கூறப்பட்டவற்றிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ் பவருமான ஆசார்யோத்தமர் நம் பறவாக்கோட்டை ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ கோபாலதேசிக மஹாதேசிகனது ஶதாபிஷேக மஹோத்ஸவம் ஆங்கில ஆண்டு 2001 மார்ச் மீ 30உ விக்ரம ஆண்டு பங்குனித் திங்கள் ரோஹிணீ நக்ஷத்ரத்தன்று ஸ்ரீரங்கத்தில் நடைபெறப்போவது நாடெங் கிலுமுள்ள நல்லோர் அறிந்த ஒன்றாகும்.

இதனையொட்டி ஆஶ்ரம ஶிஷ்யர்கள் சிலர் ஒன்றுகூடி இம் மஹோத்ஸவத்தை எங்ஙனம் சிறப்பாகக் கொண்டாடலாம் என்று ஸாதாரண முறையில் (informal) கலந்து பேசும் போது ஶதாபிஷேக நினைவாக ஏதாவதொரு நூலை மறுபதிப்பு செய்வதோ, சிறிய புதிய நூலொன்றை வெளியிடுவதோ செய்யலாம் என்று பேசினர். ஒரு சிறிய நூல் வெளியீட்டிற்கான செலவுத் தொகையை யான் ஏற்பதாக அப்போது கூறினேன்.

பின்னர் சிந்தித்தபோது ஆசார்ய வள்ளலான நம் பறவாக் கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன் கடந்த 10, 12 ஆண்டுகளாக ''ஸ்ரீ காஞ்சீ பேரருளாளன்'' என்ற மாத இதழில் தொடர்ந்து எழுதிவரும் ''இராமபிரானைக் கற்போம்'' என்ற தொடர் ஸீதா விவாஹம் வரை– அதாவது பாலகாண்ட நிறைவு வரை வெளிவந்திருப்பதால் அதனை வெளியிட வேண்டும் என்ற பேரவா என்னை உந்தியது. ஆனால் இதற்குப் பெருஞ்செலவு பிடிக்குமே என்ற அச்சமும் தோன்றியது.

ஆசார்யரது ஶதாபிஷேகத்தையொட்டியே, அடியோங்கள் திருத் தகப்பனார் ஸ்ரீ உ. வே. N.S. மணி அய்யங்கார் (வேங்கடேஶ ஶர்மன்) ஸ்வாமியின் நூறாவது திருநக்ஷத்ரம் ஸமீபத்தில் நிறைவு பெற்றதால் அவரது நினைவாக இந்நூலை வெளியிடலாமென்று என் ஸஹோதரர் களிடமும், ஸஹோதரியிடமும் விளக்கிக் கூறினேன். அவர்கள் எனது கருத்தை முழுமனதோடு ஏற்று இதன் செலவிலும் பங்கேற்பதாக மிக்க ஸந்தோஷத்துடன் கூறினர்.

இதனால் உத்ஸாஹமடைந்த அடியேன் ஸ்ரீரங்கம் சென்று ஆசார்யரான ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமதாண்டவன் பறவாக் கோட்டை ஸ்ரீ கோபால தேசிக மஹாதேசிகனது திருவடிகளில் பணிந்து ''*இராமபிரானைக் கற்போம்*'' என்ற ஸ்வாமியின் தொடரில் ஸீதா விவாஹம் வரை உள்ள பகுதியை புத்தக வடிவில் வெளியிட அனுமதிக்கு மாறும், இச்செயல் தடையின்றி நிறைவேற அனுக்ரஹித்தருளுமாறும் விண்ணப்பித்தேன். ப்ரம க்ருபையுடன் ஆசார்யர் அனுக்ரஹித்தாயிற்று.

நூலை வெளியிடுவதற்கான காரணங்கள்

ஏற்றிமனத்தெழில் ஞான விளக்கை இருளனைத்தும்
மாற்றினவர்க்கு ஒருகைம்மாறு மாயனும் காணகில்லான்
போற்றியுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி
வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே.

நம் உள்ளத்தில் அறிவு எனும் விளக்கையேற்றி அறியாமை யென்னும் இருளை அகற்றிய ஆசார்யனுக்கு நாம் செய்யக் கூடிய கைம்மாறு–பதிலுதவி யாது என்பதை மாயனான எம்பெருமானும் அறியான். அத்தகைய உயர்ந்த ஆசார்யனைப் புகழ்ந்து மகிழ்வதும், உள்ளத்தில் அவரது திருவுருவை த்யானிப்பதும் அவரது புகழை எங்கும் பரப்புவதும் ஆகிய இச்செயல்கள் யாவும் ஆசார்யனிடமிருந்து நாம் பெற்ற உதவிக்குச் சிறிதும் ஈடாகா.

गुरुं प्रकाशयेद्धीमान् मन्त्रं यत्नेन गोपयेत्
अप्रकाश प्रकाशाभ्यां क्षीयेते सम्पदायुषी
यस्य देवे पराभक्तिः यथा देवे तथा गुरौ
तस्यैते ह्यकथिता ह्यर्थाः प्रकाशन्ते महात्मनः

அறிவுள்ளவன், தனது ஆசார்யனது புகழை எங்கும் பரவச் செய்ய வேண்டும். ஆனால் மந்த்ரத்தைக் கண்டவர்க்கு வெளிப்படுத்தாமல் மறைக்க வேண்டும். ஆசார்யனது புகழைப் பரப்பாவிடினும் மந்த்ரத்தைக் கண்டவர்க்கு வெளியிட்டாலும் அவனது ஆயுளும் செல்வமும் குறையும்.

எவனுக்கு, பகவானிடத்தில் உள்ளது போல் ஆசார்யனிடத்திலும் பக்தி மேலோங்கி நிற்கிறதோ அத்தகையவனுக்கு ஆசார்யனருளிய அர்த்தங்கள் யாவும் மறக்காமல் நிலைத்து நிற்பதோடு, ஆசார்யன் அருளாத அர்த்தங்களும் புலப்படும்.

अशिथिल गुरुभक्तिः तत्प्रशंसादि शीलः
प्रचुर बहुमतिः तद्वस्तु वास्त्वादिकेऽपि
गुणवति विनियोक्तुं गोपयन् संप्रदायं
कृतविदनघवृत्तिः किं न विन्देन्निधानम्

குறைவற்ற ஆசார்ய பக்தி, ஆசார்யனை எப்போதும் பலரிடையே புகழ்ந்து பேசுதல், ஆசார்யனது வீடு, மனை போன்றவற்றிலும் அளவற்ற

கௌரவபுத்தி, உபதேசம் பெற்ற மந்த்ரங்களைக் கண்டவனுக்குக் கூறாமல் ஸத்பாத்ரத்தில் விநியோகம் செய்தல், ஆசார்யனது உதவிக்கு என்றும் நன்றி பாராட்டல், நன்னெறி தவறாமை போன்ற பண்புகளை உடையவன் க்ஷேமநிதி போன்ற பகவானை—மோக்ஷத்தைக் கட்டாயம் அடைவன்.

ஸ்வாமி தேசிகன்

सर्वस्वं वा तदर्धं वा तदर्धार्धार्धमेववा
गुरवे दक्षिणां दद्यात् यथा शक्त्यपिवापुनः ।

தான் ஈட்டிய பொருள் அனைத்தையுமோ, அதில் பாதியையோ, அதிலும் பாதியான கால் பாகத்தையோ, இயன்ற அளவையோ ஆசார்யனுக்காகச் செலவிடுக என்பன போன்ற ஸ்வாமி தேசிகனது ரஹஸ்ய த்ரயஸார ஸ்ரீஸூக்திகளும், எடுத்துக் காட்டு ஸ்ரீஸூக்திகளும் என் உள்ளத்தில் நிழலாடின.

தற்கால ஸ்ரீ வைஷ்ணவர்கள் நமது உயர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ தத்துவங்களை அறியாதவராயுள்ளனர். நமது ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீமத் ராமாயணத்திற்கு மிகச் சிறந்த ஏற்றமுண்டு. நமது ஸ்ரீ வைஷ்ணவ நெறியில் ப்ரபத்தியே—சரணாகதியே ஒப்பற்ற மோக்ஷோபாயமாகும். இப்ப்ரபத்திப் பற்றி வேதங்கள், இதிஹாஸங்கள், பாஞ்சராத்ராகமங்கள் ஆகியவற்றில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இப்ப்ரபத்தி நெறியை நன்கு வெளிப்படுத்திய பெருமை நம்மாழ்வாருக்கே உரியது. எனவேதான் ''ப்ரபந்ந ஜன ஸந்தான கூடஸ்தர்'' என்று அவர் சிறப்பிக்கப்படுகின்றார். ஸ்ரீமத் ராமாயணத்தை ஶரணாகதி ஶாஸ்த்ரம் என்றே பெரியோர் போற்றுகின்றனர். பால காண்டம் தொடங்கி இறுதிவரை தேவர், பரதன், முனிவர், ஸுக்ரீவன், காகாஸுரன், விபீஷணன் ஆகியோரது ஶரணாகதிகளும் அவற்றால், அவர்கள் பெற்ற நற்பேறுகளும் விளக்கப்பட்டுள்ளன. இதனால்தான் ஸ்ரீபகவத் ராமானுஜர் ஓராண்டுகாலம் திருமலைநம்பிகள் பக்கல் அமர்ந்து ஸ்ரீமத் ராமாயண காலக்ஷேபம், அதாவது அதிலுள்ள ரஹஸ்யார்த்தங் களைக் கேட்டதாகக் கூறுவர். ''படி கொண்ட கீர்த்தி ராமாயணமென்னும் பக்திவெள்ளம் குடி கொண்ட கோயிலிராமானுசன்'' என்று இராமானுச நூற்றந்தாதியில் திருவரங்கத்தமுதனார் ஸ்ரீபாஷ்ய காரரைப் போற்றுகின்றார்.

वेदोपबृंहण कुतूहलिना निबद्धं
विश्वंभरा श्रुति भवेन महर्षिणा यत्

व्यासेन यच्च मधुसूदनपादरक्षे
द्वे चक्षुषी त्वदनुभावमवेक्षितुं नः ।

ஸ்வாமிதேசிகன், பாதுகாஸஹஸ்ரம் - 33

''பகவானைப் பற்றியோ அவனது திருவடி, திருவடி நிலைகளைப் பற்றியோ அறிய வால்மீகி மஹர்ஷியின் ஸ்ரீமத் ராமாயணமும் வ்யாஸ பகவானுடைய பாரதமும் மக்களுக்கு இரு கண்களாக உள்ளன'' என்றருளினார் ஸ்வாமிதேசிகன். மேலும் நமது ஸநாதந மதத்தில் சிறந்த நூல் என்பது 'வேதமே'.

वेदात् शास्त्रं परंनास्ति नदैवं केशवात्परम्

என்று வ்யாஸ பகவான் ஸத்யம் செய்தே இக்கருத்தைக் கூறினார். வேதத்தால் போற்றப்படுபவன் ஸ்ரீமந் நாராயணனே என்பது உலகோர் உணர்ந்த உண்மையாம்.

वेदाक्षराणि यावन्ति पठितानि द्विजातिभिः
तावन्ति हरिनामानि कीर्तितानि न संशयः

வேதத்திலுள்ள ஒவ்வோர் எழுத்தும் ஹரியின் பெயரையே கூறுகின்றது என்பர்.

वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे
वेदः प्राचेतसा दासीत् साक्षाद्रामायणात्मना

வேதத்தில் போற்றப்படும் பரமபுருஷன் இவ்வுலகில் தஶரத மகனாகத் தோன்றியபோது வேதமும் வால்மீகி வாயிலாக ராமாயண மாகத் தோன்றியது என்கின்றனர்.

இத்தகைய சிறந்த ராமாயணக் கதையை எளிதில் அறிந்து மக்கள் நற்பேறு பெற வேண்டுமென்ற ஒரே உயர்ந்த நோக்கில் நடமாடும் தெய்வமாக விளங்கும் நம் ஆசார்யரான பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன் இதனை விரிவாக எழுதத் தொடங்கியாயிற்று. நமது ஆசார்யோத்தமர் எளிய நடையில் வால்மீகி கூறியதை மட்டுமின்றி அத்யாத்ம ராமாயண, ஆனந்த ராமாயணங்களில் உள்ளவற்றையும் ஸ்ரீ துளஸிதாஸ் ராமாயணம், கம்பராமாயணங்களில் உள்ளவற்றையும் அழகாக விளக்கி வருகிறபடி. மேலும் ஆங்காங்கே ஆழ்வார்களது

அருளிச்செயல்கள், காளிதாஸனது நூல்கள், திருக்குறள், புறநானூறு, ஸ்காந்த புராணம், பவபூதியின் உத்தரராம சரிதம், ஹனுமந் நாடகம் மற்றும் பல தர்ம சாஸ்த்ர நூல்கள் ஆகியவற்றில் உள்ளவற்றை ஆங்காங்கே பொருத்த மான இடங்களில் மேற்கோள்களாகக் காட்டி விளக்கியுள்ளது போற்றற்குரியது மட்டு மின்றி வியப்புக்குரியதுமாகும்.

ராமாயண பாராயணம், அக்கதையைக் கேட்டல் ஆகியவற்றின் சிறந்த பயனை, ஸுமதியின் சரித்திரம், கலிகன் கதை, ஸோமதத்தன் கதை, ஆகியவற்றின் வாயிலாக ஆசார்யர் விளக்கியுள்ள முறையும், ஆங் காங்கே படிப்போர் உள்ளங்களில் எழும் வினாக்களைத் தாமே எழுப்பி, அவற்றிற்குப் பல்வேறு சான்றுகளுடன் விடையும் அருளியுள்ள முறை யும் அடியேனைக் கவர்ந்தன. ஆசார்ய பக்தியும் யான் பெற்ற பேறு இவ்வையகமும் பெற வேண்டும் என்பதற்கிணங்க பண்டிதர் பாமரர் வாசியற அனைவரும் இச்சீரிய நூலைப் படித்து உய்யவேண்டும் என்ற அடியேனது பேரவாவுமே இந்நூலை வெளியிடக் காரணங்களாகும். இறுதியாக வித்யாதானம்–கல்விக் கொடை மிகச் சிறந்தது என்று அடியேனது பெற்றோர் அடிக்கடி கூறிவந்த அறிவுரையும் இதனை வெளியிட முக்கிய காரணமாகும்.

ஆசார்ய நியமனம்

ஸ்ரீகாஞ்சீ பேரருளாளன்'' மாத இதழில் வரும் வடமொழி மேற் கோள்கள் யாவும் தமிழ் எழுத்து வடிவிலேயே உள்ளன. ''அவற்றை வடமொழி எழுத்து வடிவிலேயே வெளியிட்டால்தான் மக்கள் ஒப்பிட்டுப் பார்த்துப் பயனடைவர். எனவே வடமொழி எழுத்து வடிவிலேயே வெளியிட முயற்சி செய்'' என்று ஆசார்யன் நியமித்தாயிற்று.

ஏராளமான பக்கங்கள் வரக்கூடிய மேற்கோள் ஸ்லோகங்களை யார் எழுதுவது என்ற நிலையில் அப்போது ஸ்ரீரங்கம் ஆஶ்ரமத்திலிருந்த டில்லி ஹரிநகர் வித்வான் D. ராஜகோபாலாசாரியார் ஸ்வாமி ஆசார்ய நியமனத்துடன் அவற்றை எழுதிக் கொடுக்க முன் வந்தார். பாதி பாகத் திற்கு மேல் அவர் தன்னலம் கருதாது பல்வேறு வேலைகளுக்கிடையே எழுதிக் கொடுத்தார். அவர், தலைநகர் டில்லிக்குச் சில மாதங்கள் போக வேண்டிய கட்டாயமேற்பட்டது. இந்நிலையில் நம் ஸ்வாமியிடம் மிகுந்த ப்ரதிபத்தி கொண்ட கொத்திமங்கலம் வித்வான் கோபால சக்ரவர்த்தி ஸ்வாமி, ஆசார்ய நியமனத்தின் பேரில் பிறபகுதிகளை எழுதிக் கொடுத்தார்.

நன்றிக்குரியவர்கள்

'ஸ்ரீ காஞ்சீ பேரருளாளன்' மாத இதழில் தொடராக வெளிவந்த இதனைத் தனி நூலாக வெளியிட பெருந்தன்மையுடன் ஆஶ்ரமத்திற்கு இசைவு தந்தமைக்கு ஷெ இதழுக்குரியவர்கள் முதலில் நன்றிக்குரியவ ராகின்றனர்.

ஆசார்யரது நியமனப்படியும், அவரது திருவுள்ள முகக்கும் படியும் ஆங்காங்கே எழுந்தருளியுள்ள ராமபிரானது பல்வேறு "அர்ச்சா வடிவங்களின்" போட்டோக்களைப் பெற உதவிய ஸ்ரீ K. நாராயணாசாரி, சென்னை; ஸ்ரீ M.N. ஸ்ரீநிவாஸன் வேளச்சேரி, சென்னை; ஸ்ரீ C. அனந்த கிருஷ்ண குப்தா, திருவல்லிக்கேணி; ஸ்ரீ C.R. சாரங்கபாணி ஐயங்கார், கும்பகோணம்; அம்பாஸமுத்ரம் அருகேயுள்ள மன்னார் கோவிலில் கோயில் கொண்டுள்ள ராமபிரான் படத்தை மிக்க ஶ்ரமத்துக்கிடையே அடியேனுக்குச் சேர்ப்பித்த ஸ்ரீ S.R. ஸுப்ரஹ்மண்யம் (அய்யா) ஆகியோருக்கு உளமார்ந்த நன்றிகள் பல உரியன.

"ப்ரூப்"களை அவ்வப்போது பல்வேறு வேலைகளுக்கிடையே படித்தும், திருத்தியும், ஸ்ரீமதாசார்ய வள்ளலிடம் படித்துக் காட்டி ஆசார்யரது திருவுள்ளக் கருத்துக்களை ஆங்காங்கே குறிப்பிட்டும், பேருதவி புரிந்த டில்லி ஹரிநகர் வித்வான் D. ராஜகோபாலாசாரியார் ஸ்வாமிக்கு அடியேன் மிகவும் கடமைப்பட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொத்திமங்கலம் கோபால சக்ரவர்த்தி ஸ்வாமி பல அலுவல்களுக் கிடையே அச்சகத்திலிருந்து வரும் "ப்ரூப்"களைத் திருத்திக் கொடுத்த தோடு, விட்டுப் போன ஸம்ஸ்க்ருத ஶ்லோகங்களையும் அவற்றின் தமிழாக்கத்தையும், கட்டுரைகளையும் விரைவாகவும் மிக்க நேர்த்தி யாகவும் எழுதிக் கொடுத்தார். அடியேன் உடல்நிலை சரியாக இல்லாத போதெல்லாம் அடிக்கடி அடியேனுடைய குடிசைக்கு காலையிலும், மாலையிலும் வருகை தந்து வேண்டியவற்றை முடித்து கொடுத்தார். வண்ணப் படங்களுக்கும், வரைபடங்களுக்கும், அதிநேர்த்தியான தலைப்புகளை எழுதி புத்தகத்தின் சீரமைப்பை அதிகரித்தார்.

ஆஶ்ரமத்திலிருந்து படிக்கப்பட்ட 'ப்ரூப்' திரும்பி வந்ததும், அதை மறுபரிசீலனை செய்து அடியேனுக்கு விளக்குவார். அடுத்த 'ப்ரூப்'பை யும் திரும்ப முழுமையாக படித்ததோடு நிறுத்தாமல் மூன்றாவது 'ப்ரூப்' களையும் அச்சகத்திலிருந்து கேட்டு வாங்கி படித்து, விட்டுப்போன

பிழைகளைத் திருத்தினார். இவரிடம், ''அடியேன் இப்படி இரண்டு அல்லது மூன்று முறை 'ப்ரூப்' படிக்கச் சொல்வதற்கு அடியேனை மன்னிக்க வேண்டும்'' என்றதற்கு அவர் அளித்த பதில் என்னை ப்ரமிக்கச் செய்தது.

''இவ்வளவு அழகாகவும், எளிதில் புரியும்படியும் ஶாஸ்த்ர விசாரங்களை எல்லோருக்கும் விளங்கும்படியாகவும், மேற்கோள்களை பல க்ரந்தங்களிலிருந்து அலசி எடுத்து எவ்வளவு நேர்த்தியாக ஸ்ரீமதாண்டவன் அருளியிருக்கிறார். இதைத் திரும்ப, திரும்ப படிப் பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே'' என்றார். இப்புத்தகம் வெளி வருவதற்கு அவர் எடுத்த ப்ரயத்தனம் பிரமிக்கதக்கது.

கொத்திமங்கலம் ஸ்வாமிக்கு அடியேன் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். அவர் பலகாலம் திடகாத்திரமாக வாழ்ந்து இம்மாதிரி தொண்டுகள் அனேகங்களைச் செய்ய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை ப்ரார்த்திக்கிறேன்.

மாம்பலத்திலுள்ள அடியேனிடமிருந்து அவ்வப்போது ''ப்ரூப்'' களை வாங்கிக் கொண்டுபோய் ஸ்ரீகோபால சக்ரவர்த்தி ஸ்வாமியிடம் கொடுத்து அவற்றை அவர் திருத்தியதும் அடியேனிடம் கொடுத்தல் என்ற செயலை அடியேனது வேண்டுகோளின் பேரில் ஸ்ரீ கோபால சக்ரவர்த்தி ஸ்வாமியின் மைத்துனர் நாவல்பாக்கம் ஸ்ரீமான் பால ராமானுஜன் முணுமுணுப்பின்றி பயன் கருதாது செய்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரும் நமது ஆசார்யனிடம் பெரும் பக்தி கொண்டவராவார்.

படங்களில் வண்ணக்கலவைகளைப் பிரித்தெடுத்தல் (Colour Seperation) எனும் பணி மிகுந்த கஷ்டமான பணியாகும். அதைச் சிறந்த முறையில் செய்து கொடுத்த சென்னை, ''சங்கா க்ராபிக்ஸ்'' நிறுவனத் தினருக்கு என் ப்ரணாமங்கள் உரியன.

இந்நூலின் அட்டைப் படத்தையும் மற்றுமுள்ள வரைபடங்களை யும் காண்போர் உள்ளம் கவரும் வகையில் சிறப்பாக வரைந்து கொடுத்த ஸ்ரீமான் ''கேசவ்'' அவர்களுக்கு எனது முழுமையான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பதிப்புக்கு வேண்டிய காகிதம், அட்டை முதலியவற்றை மலிவு விலையில் கொடுத்து உதவிய ஸ்ரீ M. க்ருஷ்ணமாச்சாரி நிறுவனத்திற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி.

சென்னை, இராயப்பேட்டையிலுள்ள ''ஸ்ரீ மாருதி லேஸர் ப்ரிண்டர்ஸ்'' உரிமையாளர் திருமதி கலைவாணி ஸ்ரீதரன் அவர் களுக்கும், அவரது தலைமையில் சீரிய முறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் இந் நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்தமைக்கு நன்றிகள் பல உரியன.

இந்நூலை நாங்கள் வெளியிட முற்பட்டதை அறிந்த, எமது உறவினரில் சிலரும், நண்பர்களில் பலரும் தாமாகவே முன் வந்து பல வகைகளில் உதவியுள்ளனர். அவர்கள் அனைவர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள் உரியன.

இச்சீரிய நூலை வாங்கி பக்தியுடன் படிப்பவர்கள் ''ஈரிரண்டு மால் வரைத்தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்'' என்பது உறுதி. இத்தகையோர் இந் நூலினை அருளிய ஆசார்யோத்தமரது ஈடிலா அருளுக்கும் உரியவ ராவார் என்பதும் அடியேனுடைய அசைக்கவியலாத கருத்து.

''மருளற்ற தேசிகர் வானுகப்பாலிந்த வையமெல்லாம்
இருளற்று இறைவன் இணையடி பூண்டுய வெண்ணுதலால்
தெருளுற்ற செந்தொழிற்செல்வம் பெருகிச்சிறந்தவர்பால்
அருளுற்ற சிந்தையினால் அழியா விளக்கேற்றினரே''.

அறியாமை என்பதே இல்லாத ஆசார்யர்கள், தாம் மோக்ஷம் செல்ல விரும்பியபோது, இவ்வையகத்திலுள்ளோர் அனைவரும் அறியாமையகன்று இறைவனது இணையடிகளில் ''சரணாகதி'' செய்து உய்ய வேண்டுமென்ற பெருநோக்கால், சிறந்த விவேகத்தைப் பெற்று பகவத் கைங்கர்யத்தில் ஆர்வமுள்ள சிறந்த சிஷ்யர்களிடம் ஒருகாலும் அழியாத ஸம்ப்ரதாயமென்னும் தீபத்தை ஏற்றி வைத்தனர்—என்ற ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ ஸூக்திக்கேற்ப உலகுய்யுமாறு இந்நூலை அருளி யதற்கும் இச்சீரிய நூலை வெளியிடும் பெரும்பேற்றை அடியேனுக்கும், அடியேன் குடும்பத்தினருக்கும் மிகுந்த க்ருபையுடன் வழங்கியதற்கும், ஆசார்யரது சரணாரவிந்தங்களில் ஆயிரக்கணக்கான ப்ரணாமங்களைத் தெரிவித்து அமைகிறேன்.

லோகா: ஸமஸ்தா: ஸுகிநோபவந்து

29.3.2001

"SUKRITH'
1, Raghaviah Road,
T. Nagar, Chennai - 600 017.

பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவனது
திருவடித்துகளான
N. S. பார்த்தஸாரதி தாஸன்

श्री

ஸ்ரீ கோபாலதேசிக மஹா தேசிகாய நம:

ஆசாரியாரின் சரித்திரம்

श्रीवासरङ्गपरकाल मुनित्रयाप्त
लक्ष्मात्मरक्षण यतित्व युगागमान्तम् ।
आचार्यभक्ति परिपूत मनर्धशीलं
गोपालदेशिकमुनिं गुरुमाश्रयामः ॥

நமது செந்தமிழ் நாட்டில் சோழநாட்டுக்குத் தனியான ஏற்றமுண்டு.

त्रिविष्टप निभां स्तत्र दृष्ट्वा जानपदान् बहून्

ஸ்வர்கலோகத்திற்கு நிகரான நாடு சோழநாடு என்று ஸ்வாமி தேசிகன் ''யாதவாப்யுதயத்தில் புகழ்கிறார்.

इमंमेगङ्गे यमुने सरस्वति....मरुद्वृधे....सुषोमया என்று பாரத நாட்டிலுள்ள பெருமைமிக்க ஆறுகள் பலவற்றை வேதம் சிறப்பித்துள்ளது அதில் மருத்வ்ருதே என்பது காவிரியைக் குறிக்கிறது என்பது ஸ்வாமி தேசிகனது திருவுள்ளம். श्रियाध्युषितवक्षसः श्रितमरुद्वृधासैकताः விந்தியத் திற்குத் தெற்கில் உள்ள வேறு ஆறுகள் பற்றிய குறிப்பு வேதத்தில் இல்லை. இக்காவிரியின் பெருமையைத் துலா காவேரி மாஹாத்ம்யத்தில் காணலாம். ''வான் பொய்ப்பினும்தான் பொய்யாக் காவிரி என்று கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் சிறப்பிக்கப்பட்ட இக்காவிரி பாய் தலால் சோழநாடு வளமிக்கதாய் விளங்குகிறது. ஸ்வாமி தேசிகனும் பலவிடங்களில் இந்நதியைப் பொன்னியாறு'' என்றே சிறப்பிக்கின்றார். (कनकसरिदनूपेकल्पवृक्षस्य....) प्रादुर्भूतं कनकसरितः கங்கையை விட ஏற்ற மிக்கது காவிரி என்றும் அருளியுள்ளார். प्रत्यादेशो विबुधसरितः स्यन्दते सह्यकन्या''

சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை ஆரா வமுதனைப் பரவவந்ததால்தான் நாதமுனிகள் வாயிலாக நாலாயிரத் திவ்யப்ரபந்தம் ஸ்ரீ வைஷ்ணவர்க்குக் கிடைத்தது. ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்களுள் மிகுதியானவை. சோழவள நாட்டைச் சேர்ந்தனவேயாம்.

नाथोपज्ञं प्रवृत्तं बहुभिरुपचितं यामुनेयप्रबन्धैः ஸ்வாமிதேசிகன், நம் ஸித்தாந்தம் நாதமுனிகள் தொடங்கி ஆளவந்தார் போன்ற ஆசார்யோத் தமர்களால் வளர்க்கப்பட்ட பெருமையுடையது என்று அருளுகிறார். அத்தகைய நாதமுனிகள், உய்யக்கொண்டார். மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, விஷ்ணுசித்தர் (திருவெள்ளறை) போன்ற ஆசார்யோத்தமர்கள் அவதரித்த நாடு சோழநாடு, நமது திருக்குடந்தை தேசிகன், வழுத்தூர் ஸ்வாமி என்று போற்றப்படும் வேதாந்த ராமானுஜ ஸ்வாமி போன்ற ஆசார்ய ஶ்ரேஷ்டர்களும் இப்பகுதியிலேயே அவதரித்துள்ளனர்.

அவதாரம்

இத்தகைய உயர்ந்த சோழவளநாட்டில் மன்னார்குடி என்று புகழ் பெற்ற ஸ்தலத்திற்கு அண்மையிலுள்ள பறவாக் கோட்டை என்ற அக்ரஹாரம் சிஷ்டர்களாயும் வித்வான்களாயுமிருந்த மஹநீயர்கள் வாழ்ந்த இடமாகும். இங்குதான் ஆசார்ய ஶ்ரேஷ்டரான ஸ்ரீமதாண்டவன் கோபால தேசிக மஹாதேசிகன் ரௌத்ரி ஞ பங்குனி மீ ரோஹிணீ நக்ஷத்ரத்தில் (1921) அவதரித்தார். திருத்தகப்பனார் ஶிஷ்டரும் காலக்ஷேபாதிகாரியுமான ஸ்ரீவேங்கடாசாரிய ஸ்வாமியாவார். தாயார் ஜானகியம்மையார். மாதா மஹர் குப்புஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியும் சிறந்த வித்வான். ஸ்வாமி யின் முன்னோர்கள் சிறந்த வித்வான்களாக விளங்கியதால் இவ்வூரைச் சோழ மன்னன் இவர்களுக்களித்தான். இவர்கள் வாதூல கோத்ரத்தினர்; கந்தாடை மரபினர்.

நாமகரணம்

''நம்பி பிம்பியென்று நாட்டு மானிடப்பேரிட்டால் நம்பும்
பிம்பு மெல்லாம் நாலுநாளிலழுங்கிப்போம்
செம்பெருந்தாமரைக் கண்ணன் பேரிட்டு அழைத்தக்கால்.
நம்பிகாள் நாரணன் தம்மன்னை நரகம் புகாள்''

என்ற ஆழ்வாரின் திருவாக்குக்கேற்பவும், ரோஹிணீ நக்ஷத்ரத்தில்— கண்ணன் அவதரித்த நக்ஷத்ரத்தில் ஜனித்ததாலும், பிதாமஹனது திருநாம மாதலாலும் மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி திருத்தேர் உத்ஸவத் தன்று அவதரித்ததாலும் ''ராஜகோபாலன்'' என்றே பெற்றோர் நாம கரணம் செய்தனர்.

தகப்பனாரும் பிதாமஹரும்

ஸ்வாமியின் திருத்தகப்பனார் வேங்கடாசார்ய ஸ்வாமி சிறந்த கர்மானுஷ்டானபரர்; பரமைகாந்தி; ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனிடம் அளவற்ற ஈடுபாடுடையவர் ஸ்ரீமத் பௌண்டரீகபுரம் ஆண்டவனிடம்

காலக்ஷேபம் செய்தவர். ஸ்வாமியின் பெரிய தகப்பனார் ஸ்ரீ.உ.வே. சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமியும், ஸ்ரீமதாண்டவனுக்கு பிக்ஷா கைங்கர்யம் செய்து வந்தவர். ஸ்வாமியின் பிதாமஹரான ஸ்ரீ. உ.வே. ராஜ கோபாலாசார்ய ஸ்வாமியும் மிகுந்த அனுஷ்டானபரராக எழுந்தருளி இருந்தார்.

வித்யாப்யாஸம்

உரிய காலத்தில் உபநயநஸம்ஸ்காரம் நடந்ததும் பள்ளிப் படிப்பு நிறுத்தப்பட்டு மன்னார்குடி ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமியிடம் வேதாத்யயனம் செய்ய அனுப்பப்பட்டார். பின்னர் K.R.M. எஸ்டேட் ஶாஸ்த்ர பாடசாலையில் சேர்ந்து வ்யாகரணத்தில் மஹாவித்வானும் சிறந்த கவியுமான பெருகவழந்தான் கிருஷ்ணமாசாரிய ஸ்வாமியிடம் மூன்று ஆண்டுகள் காவ்யாதிகளைக் கற்றார். அந்த ஸ்வாமியின் கண்டிப்பான போதனை, ஸம்ஸ்க்ருதத்தில் நல்ல புலமை ஏற்பட உதவியது. பின்னர் மருதூர் A.R. க்ருஷ்ணமாசார்யார், தாம் வாசித்து வந்த சோள ஸிம்ஹபுரம் (சோளிங்கர்) பாடசாலையில் ஸ்வாமியைச் சேர்த்து, தாமும் விச்வ குணாதர்சம் போன்ற சம்பூகாவ்யங்களைச் சொல்லிக் கொடுத்தார்.

திருப்பதி வாஸம்

1936-இல் திருப்பதி ஸ்ரீவேங்கடேச்வர ஸம்ஸ்க்ருதக் கல்லூரியில் ஸ்வாமியைச் சேர்த்ததோடு, A.R. க்ருஷ்ணமாசார்யரும் அக்கல்லூரியிலேயே சேர்ந்தார். அக்காலத்தில் திருப்பதி கல்லூரி மிகச் சிறந்து விளங்கியது. பண்டிதராஜ D.T. தாதாசாரிய ஸ்வாமி, உத்தமூர்ஸ்வாமி போன்ற மஹான்கள் அங்கு அத்யாபகர்களாக விளங்கினர். அக்காலத்தில் திருப்பதி ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்வாமியோடு, வில்லிவலம் நாராயணாசாரியர் (வேதாந்தவாவதூகர் என்று பிற்காலத்தில் போற்றப்பட்ட மஹான்) மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ஸரஸகலாநிலையம் ஹேமப்பூர் ஸ்ரீநிவாஸாசார்யர், புரிசை க்ருஷ்ணமாசார்யர், மருதூர் A.R. க்ருஷ்ணமாசார்யர் முதலானோர் தங்கி வாசித்து வந்தனர். 1942-இல் ஸ்வாமி வ்யாகரணசிரோமணி பரீக்ஷையில் தேர்ந்தார். கோடைவிடுமுறை நாட்களில் ஊருக்கு வரும்போதும் வீணாகக் காலத்தைக் கழிக்காமல் தில்லையம்பூரில் ப்ரஸித்த வித்வானாக விளங்கிய வேங்கடாசார்ய ஸ்வாமியிடம் தொடர்ந்து வாசித்துவந்தார்.

ஸமாஶ்ரயணமும் பரந்யாஸமும்

ஸ்வாமிக்குப் பன்னிரண்டாவது வயதில் திருத்தகப்பனார், அப்போது ப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்ரீமதாண்டவன்

ஸ்ரீநிவாஸ மஹா தேசிகனிடம் ஸமாஶ்ரயண பரந்யாஸங்களைச் செய்து வைத்து ஸதாசார்ய கடாக்ஷத்திற்கு வழி வகுத்தார்.

ஆசாரத்தில்—நன்னெறியில் நாட்டம்

जायमानं हि पुरुषं यं पश्येन्मधुसूदनः

सात्त्विकस्स्तु विज्ञेयः स वै मोक्षार्थ चिन्तकः

என்றபடி ஜாயமான கடாக்ஷம் பெற்ற ஸ்வாமி சிறு வயது முதற்கொண்டே திருத்தகப்பனாரின் அடிச்சுவட்டிலேயே ஒழுகி ஆசார சீலராக விளங்கினார். இரண்டரை வயதில் தாயாரை இழந்ததால் உரிய ஸம்ஸ்காரங்களுக்குப் பிறகு சிறு வயது முதலே மாத்ருச்ராத்தம் செய்ய வேண்டி வந்தது. அக்காலத்தில் ப்ரஸித்தர்களாக விளங்கிய தில்லையம்பூர் வேங்கடாசார்யஸ்வாமி, பெருகவழந்தான் தேசிகாசாரியஸ்வாமி, கனபாடி சாக்கோட்டை தாத்தா போன்ற மஹனீயர்கள் சிறுவன் செய்யும் ச்ராத்தத்தில் ''நிமந்த்ரணம்'' இருந்தார்கள் என்றால் சிறு வயது முதலே ஸ்வாமியின் ஆசார அனுஷ்டானங்கள் எவ்வளவு சிறந்து விளங்கின என்பதை உணரலாம். அனாசாரத்தை அன்று முதல் அடியோடு வெறுத்து ஒதுக்கிய மஹான் நம் ஸ்வாமி. திருப்பதி பாடசாலையிலேயே ஸஹ மாணாக்கர்கள் ஸ்வாமியை ''வஸிஷ்டர்'' என்றே மரியாதையுடன் அழைப்பார்களாம்.

மைசூர் வாஸம்

திருப்பதியில் சிரோமணி பட்டம் பெற்ற பின் சொந்த ஊர் எழுந்தருளிய ஸ்வாமியை, திருத்தகப்பனார் பரமபதிக்குங்கால் ''வேலைக்கு அவசரப் பட்டுப் போகாதே. நமது பௌண்டரீகபுரம் ஸ்ரீமதாண்டவனைப் போல் ஜ்ஞான வைராக்ய அனுஷ்டான சீலராக விளங்கும் மைசூர் பரகாலமடம் அபிநவரங்கநாத ப்ரம்ஹ தந்த்ரஸ்வாமி ஸன்னிதியில் காலக்ஷேபம் செய்'' என்று நியமித்தார். ஸ்வாமியும் அவ்வாறே மைசூர் எழுந்தருளி பரகால ஸ்வாமி ஸன்னிதியில் க்ரந்த சதுஷ்டயங்களையும் காலக்ஷேபம் செய்ததோடு ப்ரஸித்த வித்வானாக விளங்கிய ஸ்ரீ உ.வே. தீக்ஷாசார்யஸ்வாமியிடம் ந்யாயஸித்தாஞ்ஜனம். ந்யாய பரிஶுத்தி, தத்வமுக்தா கலாபம் போன்ற ஸ்வாமி தேசிகனது சிறந்த க்ரந்தங்களையும் ஸேவித்து முடித்துவிட்டு 1947-இல் தில்லையம்பூர் எழுந்தருளினார். மைசூரில் ஸ்ரீபரகால ஸ்வாமி நடத்திவந்த வேதாந்த தேசிக விஹார ஸதஸ்ஸில் வேதாந்தத்தில் ஆறு பாகங்களிலும் மஹாராஜா வித்வத் ஸதஸ் பரீக்ஷை யில் வேதாந்தத்தில் பூர்வோத்தரபாகங்களிலும் ஸ்வாமி பரீக்ஷை கொடுத்தார்.

ஆர்வம் காரணமாக ஸ்வாமி தமது சொந்த முயற்சியில் ஹிந்தி பாஷையில் ''விஶாரத்'' வரை பரீக்ஷை கொடுத்துத் தேர்ந்தார்.

விவாஹம்

विवाहश्च विवादश्च समयोरेवशोभते என்றபடி சிறந்த அனுஷ்டான சீலரும் காலக்ஷேப அதிகாரியுமான திருக்குடந்தை ஆறுபாதி சேட்லூர் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியின் மூத்த குமாரத்தி லக்ஷ்மியை பாணி க்ரஹணம் செய்து க்ருஹஸ்தாஶ்ரம தர்மங்களை (வழுவின்றி)க் குறைவற அனுஷ்டித்து வந்தார். ஸ்வாமிக்கு ஐந்து குமாரர்களும் ஒரு குமாரத்தியும் ஜனித்தனர்.

மஹான்களிடம் ஈடுபாடு

உத்யோக நிமித்தமாக முசிறியில் வாஸம் செய்து வந்தபோது ஆஶ்ரம கார்யங்களுக்காக அடிக்கடி ஸ்ரீரங்கம் எழுந்தருளுவது வழக்கமாயிற்று. அப்போதெல்லாம் ப்ரஸித்த வித்வானாயும் ஆத்மகுண பரிபூர்ணராயும் அனுஷ்டானபரராயும் விளங்கிய மதுராந்தகம் ஸ்வாமியை தண்டன் ஸமர்ப்பித்துப் போவது வழக்கம் மதுராந்தகம் ஸ்வாமி எவ்வளவோ மூத்தவராயிருந்தும் ஸ்வாமிக்கு ப்ரதிவந்தனம் செய்வது வழக்கம்.

இதனை ஸ்வாமியால் எவ்வளவு முயன்றும் தடுக்கவியலவில்லை. இதனைத் தடுக்க வேண்டும் என்பதில் உறுதியாயிருந்த ஸ்வாமி மதுராந்தகம் ஸ்வாமியிடமே வைஶ்வதேவோபதேஶம் பெற்றார். அதன் பிறகு அந்தஸ்வாமி ப்ரதிவந்தனம் செய்வதில்லை. ஆனால் ''வைச்வ தேவோபதேஶம் என்ற வ்யாஜத்தில் என்னை ஏமாற்றி ப்ரதி வந்தனம் செய்வதைத் தடுத்து விட்டீர். நீரும் அதிக தடவை ஸேவிக்க வேண்டாம்'' என்று குனிந்து ஸ்வாமியைத் தடுத்தாகும். எங்கு சென்றாலும் ஆங் காங்கே எழுந்தருளியுள்ள மஹான்களைத் தண்டன் ஸமர்ப்பிக்காமல் செல்லக் கூடாது என்ற முன்னோர் மரபை ஸ்வாமி விடாமல் கடைப் பிடித்து வந்தார்.

வடதேசயாத்திரை

जीवतो र्वाक्य करणात् प्रत्यब्दं भूरिभोजनात्
गयायां पिण्डदानाच्च त्रिभिः पुत्रस्य पुत्रता ।

பெற்றோர் எழுந்தருளியிருந்த காலத்தில் அவர்தம் வாக்கை ஸ்வாமி மீறியதில்லை. தகப்பனார் விருப்பத்திற்கிணங்க ஸ்வாமி மைசூர் சென்று காலக்ஷேபம் செய்தார். ப்ரதிவர்ஷம் பெற்றோர் ச்ராத்தங்களைக் குறைவற

நடத்தி வந்தார். அதோடு புத்ரனின் மற்றொரு கடமையான ''கயா'' சென்று ச்ராத்தம் செய்து அக்ஷயவடத்தின் கீழ் பிண்டம் போடுதல் என்பதை நிறைவேற்ற குடும்பத்துடன் ஆசாரக் குறைவின்றி கயா சென்று முறைப்படி ச்ராத்தங்களை முடித்து க்ஷேத்ரயாத்ரையாக நர்மதை, கங்கை, த்ரிவேணி ஸங்கமம் போன்ற புண்ணியத்துறைகள் பல ஆடி பத்ரிகாஶ்ரமம் சென்று நாராயணனை வணங்கி அஹோபிலத்தில் ந்ருஸிம்ஹனையும் மங்களாஶாஸனம் செய்து எழுந்தருளினார்.

ஆஶ்ரமஸ்விகாரம்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி விண்ணாற்றங்கரை ஆண்டவன் நியமநத்தி னாலும் மற்றும்பல பெரியோர் கூறியதாலும் 20.2.82 துன்மதி ௵ மாசி மாதம் த்வாதசியன்று விண்ணாற்றங்கரையில் உரிய முறையில் ஆஶ்ரம ஸ்வீகாரம் நடைபெற்றது.

தோற்றப்பொலிவு

ஸ்வாமியை ஒரு முறை தண்டன் ஸமர்ப்பிக்கும்போதே ''रूपमेवास्यै तन्महिमानं व्याचष्टे'' என்ற ஶ்ருதிப்படி விளங்கும் ஸ்வாமியின் கம்பீரத் தோற்றமும், திருமுகத்தில் பொலியும் ப்ரஹ்மதேஜஸ்ஸூம் நம்மை ஸ்வாமிபால் அடிமையாக்கிவிடும்.

விரக்தியும் ஆசாரமும்

ஸ்வாமி ख्याति लाभ पूजादிகளில் மிகவும் விரக்தராக எழுந்தருளியுள்ளபடி, யார்வந்தாலும் உடனே சிஷ்யராக ஏற்பது வழக்கமில்லை. முதலில் வந்தவரை 'ஸந்த்யா வந்தனாதிகளை முறைப்படி செய்கிறாரா? மந்த்ரங்கள் தெரியுமா? என்று வினவியறிந்த பின்பே ஸமாச்ரயண; பரந்யாஸாதிகளைச் செய்வது வழக்கம். யாராக இருந்தாலும் தவறு களைச் சுட்டிக் காட்டித் திருத்துவதில் ஸ்வாமிக்குத் தயக்கமோ தாக்ஷிண்யமோ கிடையாது. स्खलित्येशासितारं என்ற ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்திக்கு ஸ்வாமியே சிறந்த எடுத்துக்காட்டு.

ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் பறவாக் கோட்டை ஸ்ரீகோபால தேசிக மஹாதேசிகன் சிறந்த விரக்தாக்ரேஸரராய் எழுந்தருளியிருப்பது நாட றிந்த உண்மை. ஆனால் ஸ்வாமி திருவுள்ளத்திலும் ஒரு பேராசை உண்டு. அதாவது அனைவரும் தத்தம் வர்ணாஶ்ரம தர்மங்களை அனுஷ்டிக்க வேண்டும். சிறப்பாக ப்ராஹ்மணர்கள் தத்தம் சக்திக்கேற்றபடி ஸந்த்யா வந்தனாதிகளை அனுஷ்டித்து திருவாராதனம் செய்து பகவானுக்கு

நிவேதனம் செய்த அன்னத்தையே உண்ண வேண்டும். சிகை, கச்சம் வைத்து வேஷ்டி, திருமண் இவற்றை எக்காரணம் கொண்டும் விடக்கூடாது என்பதே அப்பேராசை.

தமது நியமத்திற்குக் கட்டுப்படாதவரை ஶிஷ்யராகஸ்வாமி ஏற்பதில்லை என்ற ஸ்வாமியின் உறுதியை மஹான்கள் மதிக்கின்றனர்.

புகழ்மாலை

ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவேதாந்ததேசிக மஹாதேசிகன் (44-ஆம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்)

''ஸ்ரீரங்கம் பௌண்டரீகபுரம் ஆண்டவன் ஆச்ரமத்தில் ஸ்ரீ விண்ணாற்றங்கரை ஆண்டவன் அனுக்ரஹத்தால் ப்ரகாசமான ஜ்ஞாநம் பெற்றவரும் ஆசாரானுஷ்டானங்களால் சிஷ்யவர்க்கத்திற்கு மார்க தர்சியும், மந்த்ரராஜ ரஹஸ்யக்ரந்தாதிகளை உபதேசித்தருள்பவரும் ஶாந்தராயும் தீபத்தில் ஏற்றிய ப்ரதீபம் போல் ஆதர்சபூத யதிபதியாகவும் விளங்குகின்றவர் நம்ஸுஹ்ருத்தான ஆண்டவன் பறவாக் கோட்டை ஸ்ரீகோபால தேசிக மஹாதேசிகன்''.

வில்லூர் மஹாவித்வான் ஆசுகவிஸார்வபௌம நடாதூர் ஸ்ரீநிதிஸ்வாமி

''இந்த ஸ்வாமி பரவாக்கோட்டைக்காரர் பர என்றால் உயர்ந்த வாக்–சொற்களான வேத இதிஹாஸ புராண அருளிச்செயல் ஆசார்ய திவ்ய ஸூக்திகள் இவற்றிற்கு பாலம். கோட்டையாக விளங்குகிறார்.''

மஹாவித்வான் வில்லிவலம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி (ப்ரக்ருதம் 45-ஆம் பட்ட ஸ்ரீஅழகியசிங்கர்)

''யதோபதேசம் ப்ரதிஷ்டித புத்தியாய், யதா ஶாஸ்த்ரம் ஆசரித்து, அடைந்தவர்களையும் ஆசரிப்பிக்கைக்கு ருசியும் சக்தியும் உடையனாய் ब्रह्मविद्यः परं भूतं न किञ्चिदिहविद्यते என்று கொண்டாடும்படியானவன் உபாதேயரில் (நாம் ஆஶ்ரயிக்கத்தக்க ஸ்வாமிகளுள்) ப்ரதானன் என்ற ஸ்ரீஸ்வாமி தேசிகன் அருளியபடி ஆஶ்ரயிக்கத்தக்க ஸ்வாமிகளுள் இந்த ஸ்வாமி தலைசிறந்தவராவார்.''

பெருக்காரணை மாடபூசி மஹாவித்வான் சக்ரவர்த்தியாசாரிய ஸ்வாமி (ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான்)

''இந்த ஸ்வாமி கலியுகத்தில் ஸந்யாஸத்தை ஏற்றபோதிலும் 'அகலியுக ஸந்யாஸி' என்றே இவரைப் புகழலாம். க்ருத, த்ரேதா யுகங்களில் ஸந்யாஸம் பெற்றவர்களைப் போல் மிக்க பயத்துடனும்,

அதிக ஶ்ரத்தையுடனும், ஆஶ்ரம தர்மத்தினின்று வழுவாமல் இருக்க வேண்டும், என்றும், பகவானது உகப்பைப் பெற வேண்டுமென்கிற மரியாதையுடனும், சாஸ்த்ர மரியாதையைத் தாண்டாமல் கட்டுக்கும் கண்யத்திற்கும் ஸம்ப்ரதாயத்திற்கும் அடங்கி ஆசாரத்துடன் சாலத் திகழ்கிறார்''.

மஹாவித்வான் நாவல்பாக்கம் N.S. ராமானுஜ தாதாசார்யஸ்வாமி

''இந்த ஸ்வாமி திருப்பதியில் வாசிக்கும் போது கீழ் வகுப்பில் வாசித்து வந்த அடியேனும் மற்றும் சிலரும் ஓய்வு நேரங்களில் இந்த ஸ்வாமியிடம் लघुसिद्धान्त कौमुदी என்ற வ்யாகரண புஸ்தகத்தைச் சிந்தனை முறையில் வாசித்தோம். அப்போதே ஸ்வாமியின் அத்யாபன–பாடஞ் சொல்லும் முறையை (வைகரியை) நன்கு அனுபவித்தேன். இந்த ஆச்ரமத்தில் நெறியான அனுஷ்டானங்களை மேற்கொண்டு பரமவிரக்த ராய் காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டு விலக்ஷணராய் எழுந்தருளி யிருப்பதை ஸேவிப்பதற்குப் பெருமைப்படுகிறேன்''.

இத்தகு பெருமைகளைப் பெற்ற ஸ்ரீஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டு அரோக த்ருடகாத்ரராக விளங்கி நம்மனோரை அனுக்ரஹித் தருள வேண்டுமென்றும் ''இராம பிரானைக் கற்போம்'' தொடரின் பிற்பகுதிகளையும் உலகோர் உய்ய எழுதியருள வேண்டுமென்றும் திவ்யதம்பதிகளின் திருவடிகளில் ப்ரார்த்தனை செய்ய வேண்டியது நல்லோர் கடமையாகும்.

B-88 ஹிந்து காலனி
நங்கநல்லூர்,
சென்னை - 600 061.

கொத்திமங்கலம்
கோபால சக்ரவர்த்தி தாஸன்
29-3-2001

ஸ்ரீமத் ராமாயணத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் நம் ஆசார்யன் தொடங்கி பெருமாள்வரை தனியன்களை அனுஸந்தித்த பிறகு அனுஸந்தானம் செய்ய வேண்டிய த்யான ச்லோகங்கள்

ஆரம்பிக்கும் க்ரமம்

कूजन्तं राम रामेति मधुरं मधुराक्षरम् ।
आरुह्य कविताशाखां वन्दे वाल्मीकि कोकिलम् ॥
वाल्मीकेर्मुनिसिंहस्य कवितावनचारिणः ।
शृण्वन् रामकथानादं को न याति पराङ्गतिम् ॥
यः पिबन् सततं रामचरिताऽमृतसागरम् ।
अतृप्तस्तं मुनिं वन्दे प्राचेतसमकल्मषम् ॥
गोष्पदीकृतवाराशिं मशकीकृत-राक्षसम् ।
रामायणमहामालारत्नं वन्देऽनिलात्मजम् ॥
अञ्जनानन्दनं वीरं जानकीशोकनाशनम् ।
कपीशमक्षहन्तारं वन्देलङ्काभयङ्करम् ॥
मनोजवं मारुत तुल्यवेगं जितेन्द्रियं बुद्धिमतांवरिष्ठम् ।
वातात्मजं वानरयूथमुख्यं श्रीरामदूतं शिरसा नमामि ॥
उल्लंघ्य सिन्धोः सलिलं सलीलं यश्शोकवह्निं जनकात्मजायाः ।
आदाय तेनैव ददाह लंकां नमामि तं प्राञ्जलिराञ्जनेयम् ॥
आञ्जनेयमतिपाटलाननं काञ्चनाद्रिकमनीयविग्रहम् ।
पारिजाततरुमूलवासिनं भावयामि पवमाननन्दनम् ॥
यत्र यत्र रघुनाथ कीर्तनं तत्र तत्र कृत मस्तकाञ्जलिम् ।
बाष्पवारिपरिपूर्णलोचनं मारुतिं नमत राक्षसान्तकम् ॥
वेद वेद्ये परे पुंसि जाते दशरथात्मजे ।

குறிப்பு: ஸ்ரீ கோசத்தின் (புத்தகத்தின்) மேல் அக்ஷதையால் ஸ்ரீராமன், ஸீதை, லக்ஷ்மணன் இவர்களை ஆவாஹனம் செய்து அர்க்யம், பாத்ய, ஆசமநீயம், கந்தம், புஷ்பம், தீபங்களை ஸமர்ப்பித்து, பழங்கள் முதலியவைகளை நிவேதனஞ் செய்து அதன்பின் த்யான ச்லோகங்களை அனுஸந்தானஞ் செய்து பாராயணம் செய்யவும். இதே போல் முடியும் போதும் செய்ய வேண்டும்.

वेदः प्राचेतसादासीत्साक्षाद्रामायणात्मना ॥
तदुपगत-समास सन्धि-योगं सम-मधुरोपनतार्थवाक्यबद्धम् ।
रघुवरचरितं मुनिप्रणीतं दशशिरसश्च वधं निशामयध्वम् ॥
श्रीराघवं दशरथात्मजमप्रमेयं सीतापतिं रघुकुलान्वयरत्नदीपम् ।
आजानुबाहु मरविन्द-दलायताक्षं रामं निशाचर-विनाशकरं नमामि ॥
वैदेही-सहितं सुरद्रुमतले हैमे महामण्टपे ।
मध्ये पुष्पकमासने मणिमये वीरासने सुस्थितम् ॥
अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्त्वं मुनिभ्यः परं ।
व्याख्यान्तं भरतादिभिः परिवृतं रामं भजे श्यामलम् ॥

கூஜந்தம் ராம ராமேதி மதுரம் மதுராக்ஷரம் ।
ஆருஹ்ய கவிதா ஶாகாம் வந்தே வால்மீகி கோகிலம் ॥
வால்மீகேர் முநிஸிம்ஹஸ்ய கவிதா வநசாரிண: ।
ஶ்ருண்வன் ராமகதா நாதம் கோ நயாதி பராங்கதிம் ॥
ய: பிபன் ஸததம் ராமசரிதாம்ருத ஸாகரம் ।
அத்ருப்தஸ்தம் முநிம் வந்தே ப்ராசேதஸமகல்மஷம் ॥
கோஷ்பதீக்ருத வாராஶிம் மஶகீக்ருத ராக்ஷஸம் ।
ராமாயண மஹாமாலா ரத்னம் வந்தேऽநிலாத்மஜம் ॥
அஞ்ஜநா நந்தனம் வீரம் ஜாநகீ ஶோக நாஶனம் ।
கபீஶமக்ஷஹந்தாரம் வந்தே லங்கா பயங்கரம் ॥
மனோஜவம் மாருத துல்யவேகம் ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம் ।
வாதாத்மஜம் வானரயூத முக்யம் ஸ்ரீராம தூதம் சிரஸா நமாமி ॥
உல்லங்க்ய ஸிந்தோஸ் ஸலிலம் ஸலீலம் யஶ்ஶோக வஹ்னிம்
ஜனகாத்மஜாயா: ।
ஆதாய தேநைவ ததாஹ லங்காம் நமாமி தம் ப்ராஞ்ஜலி ராஞ்ஜனேயம் ॥
ஆஞ்ஜனேயம் அதிபாடலானனம் காஞ்சனாத்ரிகமனீய விக்ரஹம் ।
பாரிஜாத தருமூல வாஸிநம் பாவயாமி பவமாந நந்தனம் ॥
யத்ரயத்ர ரகுநாத கீர்த்தனம் தத்ர தத்ர க்ருத மஸ்தகாஞ்ஜலிம்
பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம் மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம் ॥
வேத வேத்யே பரே பும்ஸி ஜாதே தஶரதாத்மஜே ।
வேத: ப்ராசேத ஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா ।
ததுபகத ஸமாஸ ஸந்தியோகம் ஸமமதுரோபநதார்த்த வாக்யபத்தம்
ரகுவர சரிதம் முநிப்ரணீதம் தஶ ஶிரஸஸ் ச வதம் நிஶாமயத்வம் ॥
ஸ்ரீ ராகவம் தசராதாத்மஜம்அப்ரமேயம் ஸீதாபதிம்
ரகுகுலான்வயரத்ன தீபம் ।

ஆஜாநுபாஹும் அரவிந்ததளாயதாக்ஷம் ராமம் நிசாசரவிநாசகரம் நமாமி ॥
வைதேஹீ ஸஹிதம் ஸுரத்ருமதலே ஹைமேமஹா மண்டபே ।
மத்யே புஷ்பக மாஸனே மணிமயே வீராஸநேஸுஸ்திதம் ॥
அக்ரே வாசயதி ப்ரபஞ்ஜன ஸுதே தத்வம்முநிப்ய: பரம் ।
வ்யாக்யாந்தம் பரதாதிபி: பரிவ்ருதம் ராமம் பஜேஶ்யாமளம் ॥

முடிக்கும் க்ரமம்

एवमेतत्पुरावृत्तं आख्यानं भद्रमस्तुवः ।
प्रव्याहरत विस्रब्धं बलं विष्णोः प्रवर्धताम् ॥
लाभस्तेषां जयस्तेषां कुतस्तेषां पराभवः ।
येषामिन्दीवरश्यामो हृदये सुप्रतिष्ठितः ॥
काले वर्षतु पर्जन्यः पृथिवी सस्यशालिनी ।
देशोऽयंक्षोभरहितः ब्राह्मणाः सन्तु निर्भयाः ॥
कावेरी वर्धतां काले काले वर्षतु वासवः ।
श्रीरङ्गनाथो जयतु श्रीरङ्गश्रीश्च वर्धताम् ॥
स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकास्समस्ता स्सुखिनोभवन्तु ॥

ஏவமேதத் புராவ்ருத்தம் ஆக்யானம் பத்ரமஸ்துவ: ।
ப்ரவ்யாஹரத விஸ்ரப்தம் பலம் விஷ்ணோ: ப்ரவர்த்ததாம் ॥
லாபஸ்தேஷாம் ஜயஸ்தேஷாம் குதஸ்தேஷாம் பராபவ: ।
யேஷாம் இந்தீவர ஶ்யாமோஹ்ருதயே ஸுப்ரதிஷ்டித: ॥
காலே வர்ஷதுபர்ஜந்ய: ப்ருதிவீஸஸ்ய ஶாலிநீ ।
தேஶோயம் க்ஷோபரஹிதோப்ராஹ்மணாஸ்ஸந்து நிர்பயா: ॥
காவேரீவர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ: ।
ஸ்ரீரங்க நாதோ ஜயது ஸ்ரீரங்க ஸ்ரீஸ்ச வர்த்ததாம் ॥
ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம் ந்யாய்யேநமார்க்-
கேணமஹிம்மஹீஶா: ।
கோப்ராஹ்மணேப்ய: ஶுபமஸ்து நித்யம் லோகாஸ் ஸமஸ்தா:
ஸுகிநோ பவந்து ॥

மங்களம்

मङ्गलं कोसलेन्द्राय महनीय-गुणाब्धये ।
चक्रवर्ति तनूजाय सार्व भौमाय मङ्गलम् ॥

वेद वेदान्त वेद्याय मेघश्यामलमूर्तये ।
पुंसां मोहन रूपाय पुण्यश्लोकाय मङ्गलम् ॥
विश्वामित्रान्तरङ्गाय मिथिलानगरीपतेः ।
भाग्यानां परिपाकाय भव्यरूपाय मङ्गलम् ॥
पितृभक्ताय सततं भ्रातृभिस्सह सीतया ।
नन्दिताखिललोकाय रामभद्राय मङ्गलम् ॥
त्यक्त साकेत वासाय चित्रकूट विहारिणे ।
सेव्याय सर्वयमिनां धीरोदाराय मङ्गलम् ॥
सौमित्रिणाच जानक्या चापबाणासि धारिणे ।
संसेव्याय सदा भक्त्या स्वामिने मम मङ्गलम् ॥
दण्डकारण्य वासाय खण्डितामरशात्रवे ।
गृध्रराजाय भक्ताय मुक्तिदायास्तु मङ्गलम् ॥
सादरं शबरीदत्तफलमूलाभिलाषिणे ।
सौलभ्य परिपूर्णाय सत्त्वोद्रिक्ताय मङ्गलम् ॥
हनुमत्समवेताय हरीशाभीष्टदायिने ।
वालिप्रमथनायास्तु महाधीराय मङ्गलम् ॥
श्रीमते रघुवीराय सेतूल्लंघित सिन्धवे ।
जितराक्षसराजाय रणधीराय मङ्गलम् ॥
आसाद्य नगरीं दिव्यां अभिषिक्ताय सीतया ।
राजाधिराजराजाय रामभद्राय मङ्गलम् ॥
मङ्गलाशासन परैः मदाचार्यपुरोगमैः ।
सर्वैश्च पूर्वै राचार्यैः सत्कृतायास्तु मङ्गलम् ॥

மங்களம் கோஸலேந்த்ராய மஹநீய குணாப்தயே ।
சக்ரவர்த்தி தநூஜாய ஸார்வபௌமாய மங்களம் ॥
வேத வேதாந்த வேத்யாய மேகஶ்யாமள மூர்த்தயே ।
பும்ஸாம் மோஹன ரூபாய புண்யஶ்லோகாய மங்களம் ॥
விஶ்வாமித்ராந்தரங்காய மிதிலா நகரீபதே: ।
பாக்யானாம் பரிபாகாய பவ்ய ரூபாய மங்களம் ॥
பித்ருபக்தாய ஸததம் ப்ராத்ருபி: ஸஹஸீதயா ।
நந்திதாகிலலோகாய ராமபத்ராய மங்களம் ॥

த்யக்த ஸாகேத வாஸாய சித்ர கூடவிஹாரிணே ।
ஸேவ்யாய ஸர்வயமிநாம் தீரோதாராய மங்களம் ॥
ஸௌமித்ரிணாச ஜானக்யா சாபபாணாஸி தாரிணே ।
ஸம்ஸேவ்யாய ஸதாபக்த்யா ஸ்வாமினே மம மங்களம் ॥
தண்டகாரண்ய வாஸாய கண்டிதாமரஶத்ரவே ।
க்ருத்ர ராஜாய பக்தாய முக்திதாயாஸ்து மங்களம் ॥
ஸாதரம் ஶபரீதத்த பல மூலாபிலாஷிணே ।
ஸௌலப்ய பரிபூர்ணாய ஸத்வோத்ரிக்தாய மங்களம் ॥
ஹனுமத் ஸமவேதாய ஹரீஶாபீஷ்டதாயினே ।
வாலி ப்ரமதநாயாஸ்துமஹாதீராயமங்களம் ॥
ஶ்ரீமதே ரகுவீராய ஸேதூல்லங்கித ஸிந்தவே ।
ஜிதராக்ஷஸ ராஜாயரணதீராய மங்களம் ॥
ஆஸாத்ய நகரீம் திவ்யாம் அபிஷிக்தாய ஸீதயா ।
ராஜாதி ராஜ ராஜாய ராமபத்ராய மங்களம் ॥
மங்களா ஶாஸன பரை: மதாசார்ய புரோகமை: ।
ஸர்வைஸ்ச பூர்வை ராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம் ॥

ஶ்ரீமத்ஸீதாலக்ஷ்மண பரத ஶத்ருக்ந ஹனுமத்ஸமேத ।
ஶ்ரீ ராமசந்த்ரபரப்ரஹ்மணே நம: ॥

जयत्याश्रित सन्त्रास ध्वान्त विध्वंसनोदयः ।
प्रभावान् सीतया देव्या परमव्योम भास्करः ॥
चतुर्मुखेश्वर मुखैः पुत्र पौत्रादिशालिने ।
नमस्सीता समेताय रामाय गृहमेधिने ॥
कविकथकसिंह कथितं कठोर सुकुमार गुम्फगम्भीरम् ।
भवभयभेषज मेतत् पठत महावीर वैभवं सुधियः ॥

ஜயத்யாச்ரித ஸந்த்ராஸ த்வாந்த வித்வம்ஸ நோதய: ।
ப்ரபாவான் ஸீதயா தேவ்யா பரமவ்யோம பாஸ்கர: ॥
சதுர்முகேஸ்வர முகை: புத்ர பௌத்ராதிஶாலினே ।
நமஸ் ஸீதா ஸமேதாய ராமாய க்ருஹமேதினே ॥
கவிகதக ஸிம்ஹ கதிதம் கடோர ஸுகுமாரகும்ப கம்பீரம் ।
பவபய பேஷஜ மேதத் படத மஹாவீர வைபவம் ஸுதிய: ॥

ஸ்வாமி தேசிகன் - ரகுவீரகத்யம்

ஶ்ரீ :

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீ ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹநுமத் ஸமேத
ஸ்ரீ ரகுநந்தன பரப்ரம்ஹணே நம:

ஸ்ரீமத் பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆஶ்ரமத்தில் எழுந்தருளியிருக்கும்
பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ பறவாக்கோட்டை ஸ்ரீமதாண்டவன்

ஸ்ரீ கோபால தேசிக மஹாதேசிகன்

அருளிய

இராமபிரானைக் கற்போம்

ஸ்ரீநிவாஸம் பரம் ப்ரம்ஹ தந்நாம்னஶ்ச குருத்தமான் ।
நாராயணம் ரங்கநாதௌ ப்ரணம்யேதம் விலிக்யதே ॥

முகவுரை

இவ்வுலகில் பிறவியைப் பெற்றவர் அனைவரும் இன்பத்தையே விரும்புகின்றனர். இவ்வின்பத்தைப் பெரியோர் இருவகையாகக் கூறுவர். ஒன்று சிற்றின்பம். மற்றொன்று பேரின்பம். இம்மையில் பெறுவது சிற்றின்பம். இது அளவுடையது. மறுமையில் பெறுவது பேரின்பம். இது அளவற்றது. இதை ப்ரம்ஹானந்தம் என்பர். இப்பெயரே இது பெரியது, மேலும் உயரியது என்பதைக் காட்டுகிறது.

ஒரு ததீயாராதனம் நடக்கிறது. அதில் அறுசுவை உண்டிகள் பரிமாறப் பட்டன. அனைவரும் நன்கு சுவைத்து உண்ட பிறகு ஒருவரை மற்றொருவர் கேட்கிறார். ''இன்றைய சாப்பாடு எப்படி?'' ''சாப்பாடா! ப்ரம்ஹானந்தம். என் ஜன்மத்தில் இத்தகைய சாப்பாடு நான் சாப்பிட்டதே இல்லை'' என்கிறார் மற்றொருவர்.

ஒரு ஸங்கீதக் கச்சேரி. பக்தியைச் சுரக்கும் கீர்த்தனைகளை மிகவும் அனுபவித்துப் பாடுகிறார் இசைப்புலவர். அவையிலுள்ளோர் அனைவரும் மெய் மறந்து ரஸிக்கின்றனர். தன்னை அறியாமலே, ''பேஷ்! ஐயோ!'' எனும் சொற்கள் வாயிலிருந்து வருகின்றன. வீடு திரும்பும்போது எதிரே வருபவர்

''ஸ்வாமி, ஸபாவில் கச்சேரி எப்படியிருந்தது'' என்று கேட்கிறார். ''கச்சேரியா, நீ கேட்கக் கொடுத்து வைக்கவில்லை. ப்ரம்ஹானந்தம், அதை எப்படி வாயால் சொல்வது'' என்று பதில் வருகிறது.

இவ்வனுபவப் பேச்சுக்களிலிருந்து மறுமையில் பெறக்கூடிய இன்பம் உயரியது, அளவற்றது, வாயால் சொல்லி விளக்க முடியாதது என்று அறிகிறோம். அதே நேரத்தில் இவ்வுலகில் பெறும் இன்பம் சிறியது, அளவுடையது என்பதை அவரவர் தம் வாழ்விலேயே காணலாம்.

அரியணை ஏறி, செங்கோல் பிடித்து, அரசாட்சி செலுத்தி, அரண் மனையில் வாழ்ந்து, ராஜபோகங்களைத் துய்த்த, பர்த்ருஹரி எனும் அரசன் தன் வாழ்வில் கண்ட உண்மையைக் கூறுகிறான்.

तृषा शुष्यत्यास्ये पिबति सलिलं शीत मधुरं
क्षुधार्तः शाल्यन्नं कबळयति सूपादि कलितम् ।
प्रदीप्ते कामाग्नौ सुदृढतरं आलिङ्गति वधूं
प्रतीकारं व्याधेः सुखमिति विपर्यस्यति जनः ॥

த்ருஷாசுஷ்யத்யாஸ்யே பிபதி ஸலிலம் சீத மதுரம்
க்ஷுதார்த: சால்யன்னம் கபளயதி ஸூபாதி கலிதம் ।
ப்ரதீப்தே காமாக்னௌ ஸுத்ருடதரம் ஆலிங்கதி வதூம்
ப்ரதீகாரம் வ்யாதே: ஸுகமிதி விபர்யஸ்யதி ஜன: ॥

பர்த்ருஹரி

ஒருவனுக்கு கடுங்கோடையில் நாக்கு வறண்டுபோகிறது. தண்ணீரைக் கேட்கக் கூட நா எழ மறுக்கிறது. அந்நிலையில் குளிர்ந்த இனிய பானத்தைப் பருகுகிறான், வறட்சி தணிகிறது. ''என்ன ஸுகம்!'' என்கிறான்.

ஒருவன் பரம ஏழை இரண்டு நாட்களாக உணவே கிடைக்கவில்லை. பல வீடுகளுக்கு அலைந்து திரிந்தும், இரந்தும் கொடுப்பாரிலர். எங்கேயோ மேளத்தின் ஓசை கேட்கிறது. பசிக் கொடுமை, கால்கள் நடக்க மறுக் கின்றன. எனினும் விழுந்தெழுந்து திருமண மண்டபத்தை அடைகிறான். இவனைக் கண்டதும் இரக்கங் கொண்ட ஒருவர் உள்ளே அழைத்துச் சென்று சாப்பாடு போடச் செய்கிறார். கலியாணச் சாப்பாடு அல்லவா? அள்ளிப் போடப் போட, ருசி பார்க்காது, உள்ளே தள்ளுகிறான். உண்ணுகிறான். பசி தணிந்தது. அப்பாடா, என்று பெருமூச்சு விட்டான்.

ஒருவன் சொந்த காரியமாக வெளியூர் சென்றான். இயற்கை இன்னல் களினால் உடனே வீடு திரும்ப முடியவில்லை. திருமணம் ஆகி சில மாதங்கள்தான் ஆகியிருக்கும். மனைவியின் நினைவு தொடர்கிறது. எப்படியோ கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு வீடு சேர்கிறான். தன்

அன்பிற்குரியவளை இறுகத் தழுவுகிறான். காம வேட்கை தணிகிறது. பித்துப் பிடித்த மனம் ஒரு நிலைக்கு வந்தது. ''ஆஹா என்ன இன்பம்!'' என்று எண்ணுகிறான். ஆக மனிதன் தாகம், பசி, காம வேட்கைகளாகிற வியாதி நீங்கியதையே ஸுகமாக எண்ணுகிறான்.

ஒரு பௌராணிகர் கதை சொல்லும்போது ஸம்ஸார ஸுகத்தைப் பற்றி அழகாக விளக்கம் கொடுக்கிறார். ''ஒரு வாய்க்காலில், தண்ணீர்ப் பாம்பு ஒன்று ஒரு தவளையை விழுங்கிக் கொண்டிருக்கிறது. அந்தத் தவளை பாம்பின் வாயில் கத்திக் கொண்டே வாய்க்காலின் எதிர்க் கரையைப் பார்க்கிறது. எதிர்ப் பக்கத்திலும் ஒரு வளையில் பாம்பின் வாயில் ஒரு தவளை அகப்பட்டு கத்திக் கொண்டிருக்கிறது. இவ்விரு தவளைகளும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டே கத்துகின்றன. என்ன காரணம்? ஒரு தவளை ஆண், மற்றொன்றோ பெண். திடீரென்று இரண்டும் கத்துவதை நிறுத்தி விட்டன. ஆனால் ஒன்றையொன்று பார்க்கிறது. ஏன்? திருக்குறள் கூறுகிறது.

> கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின்
> வாய்ச்சொற்கள் என்ன பயனுமில. குறள்- 1100

''இவ்வாறு இரண்டும் கலியாணம் செய்து கொள்ள அன்பு செய் கின்றனவாம். இதைப் போன்றதே ஸம்ஸார ஸுகம்'' என்றார்.

இத்தகைய, எளிதில் கிடைக்கக்கூடிய சிற்றின்பத்தை அற்பமானது, பயனற்றது என ஒதுக்கி எட்டாக்கனியைக் குள்ளன் எட்டிப் பறிக்க முயல்வது போல், ஸ்ரீவைகுண்டம் சென்று அங்கு ''திருமாமணி மண்டபத்தில் திருமகளோடு கூடிய நாராயணனை அனுபவிப்பதாகிற மோக்ஷானந்தத்தை நாம் பெறமுடியுமா? எங்ஙனம் பெறுவது?'' என சிலருக்கு விரக்தி மனப் பான்மை எழலாம். இதைப் போக்குகிறார் நம்ஆழ்வார்.

> வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே
>
> திருவாய்மொழி -10 ப.9 தி.

விண்ணவர்களாகிற நித்ய ஸூரிகளால் அனுபவிக்கப்பெறும் மோக்ஷானந்தத்தை மண்ணவர்களாகிற நாமும் பெறமுடியும். அதைப் பெறுவது நமது பிறப்புரிமை. இதைப் பெறச்செய்யவே பரமன் நம்மை இவ்வுலகில் படைத்தான். ப்ரளயகாலத்தில் நாம் அறிவை இழந்து செயலற்று ப்ரகிருதியில் ஒன்றிக் கிடக்கிறோம். அதாவது பொற்கொல்லர்களின் மெழுகில், உயர்ந்த தங்கத்தின் துகள்கள் தம் ஒளி இழந்து பதிந்து கிடப்பது போல், அப்பொழுது நாம் கருங்கல் போல ஞானசூன்யர்களாய் இருப்பதாக வேதம் கூறுகிறது. எனவே இம்மையில் பெறும் போகத்தையும், மேலுலகில் பெறும் போகத்தையும் இழந்து கிடக்கிறோம். ப்ரளயத்திற்குமுன் நாம் வாழ்ந்தபோது பற்பல தீய செயல்களைப் புரிந்ததின் காரணமாக துன்பம்

சூழ்ந்த இந்நிலைக்கு ஆளானோம். இவ்வாறு அவதியுற்ற நம் மீது எம்பெருமானுக்கு நிர்ஹேதுகமாக (காரணமின்றி) ஒருநாள் கருணை உண்டாகிறது. தயையின் காரணமாக நமக்கு இச்சரீரத்தையும் கைகால் முதலிய செயற் புலன்களையும், கண்டு, கேட்டு, உண்டு, முகர்ந்து, உற்று, அறிதற்குரிய அறிவுப் புலன்களையும் அளித்து மீண்டும் நம்மைப் படைத்தான். மேலும், நாம் உண்மை அறிவைப் பெறுவதற்காக வேதங்களையும், இவற்றின் கருத் தாழத்தை அறிவதற்காக, ஆழ்வார், ஆசார்யர்களையும் அவதரிப்பிக்கிறான்.

एवं संस्कृति चक्रस्ते भ्राम्यमाणे स्वकर्मभिः ।
जीवे दुःखाकुले विष्णोः कृपा कापि उपजायते ॥
विचित्रा देह सम्पत्तिः ईश्वराय निवेदितुम् ।
पूर्वमेव कृता ब्रह्मन् हस्तपादादि संयुता ॥

ஏவம் ஸம்ஸ்க்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: ।
ஜீவே துக்காகுலே விஷ்ணோ: க்ருபா காபி உபஜாயதே ॥
விசித்ரா தேஹஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும் ।
பூர்வமேவ க்ருதா ப்ரம்ஹன் ஹஸ்தபாதாதி ஸம்யுதா ॥

ஜீவாத்மாக்கள் தன்னை அடைவதற்காக பகவான் கொடுத்த உடலையும் கைகால்களையும், ஐம்புலன்களையும், அறிவையும், அவனைப் பெறுவதற் குரிய செயல்களில் ஈடுபடுத்தாவிடில் பேரின்பத்தை அடைய முடியுமா? ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் செல்ல, மனமிரங்கி, ஒருவன் படகைக் கொடுத்தால் அதை அக்கரைக்குச் செலுத்தி, செல்லாமல், ஆற்றின் போக்கிலேயே செலுத்தி, அது மிக வேகமாகப் போகிறதே என மகிழ்ந்து, அவ்வழியே சென்றால் கடலை அடைந்து, அலைகளால் இழுத்தடிக்கப் பட்டு, பாறைகளில் மோதி, படகு உருக்குலைவதோடு சென்றவனும் அழிந்து விடுகிறான். அவனைப்போலன்றி, நாம் நம் உடலையும், உறுப்பு களையும், புலன்களையும் வைகுந்தம் பெறுவதற்குரிய வழிகளில் ஈடு படுத்த வேண்டும். இவ்வழியை ராமபிரானிடம் ஆழ்ந்த குலசேகரர் கூறுவார்:

जिह्वे कीर्तय केशवं, मुररिपुं चेतोभज, श्रीधरं
पाणि द्वन्द्व समर्चय अच्युतकथाःश्रोत्रद्वय त्वं शृणु
कृष्णं लोकय लोचनद्वय, हरेः गच्छाङ्घ्रियुग्मालयं
जिघ्र घ्राण मुकुन्दपादतुलसीं, मूर्धन् नमाऽधोक्षजम्

ஜிஹ்வே! கீர்த்தய கேசவம், முரரிபும் சேதோ பஜ ஸ்ரீதரம்
பாணி த்வந்த்வ ஸமர்ச்சய அச்யுதகதா: ச்ரோத்ரத்வய த்வம்ச்ருணு

க்ருஷ்ணம் லோகய லோசனத்வய ஹரே: கச்சாங்க்ரி யுக்ம ஆலயம்
ஜிக்ர க்ராண முகுந்த பாததுலஸீம் மூர்தன் நம அதோக்ஷஜம்

முகுந்தமாலை

''நாக்கே! கேசவனையே பாடுவாயாக; மனமே! முராரியை எண்ணு வாயாக; கைகளே! ஸீதை மணாளனை அர்ச்சியுங்கள்; காதுகளே! கார் வண்ணனின் கதைகளைக் கேளுங்கள்; கண்களே! கண்ணனையே பாருங் கள்; கால்களே! கோயிலுக்கு அழைத்துச் செல்லுங்கள்; மூக்கே! முகுந்தனின் துழாய் மலர்களை நுகர்; தலையே! பரமனையே வணங்கு!'' என்று.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியும் ''தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்கப் போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்'' என்கிறாள்.


''மெய், மொழி மனமாகிய த்ரிகரணங்களையும் கண்ணனுக்கே உரித்தாக்கினால் பாபங்கள் விலகி அவனுக்கே ஆட்செய்து இன்னருள் பெற்று வாழ்வர்'' என்பர்.

இத்தகைய நிலையை நாம் பெற உதவுவது ஸ்ரீமத் ராமாயணமாகும். இதைத் தெளிவுறக் கற்பதனால், இதில் கூறியபடி, ஸதாசார்ய ஸம்பந்தம் பெற்று, சரணாகதியாகிய உபாயத்தை அனுஷ்டித்து, இவ்வுலக வாழ்வில் அனைத்துப் பேறுகளையும் பெற்று, முடிவில் பேரின்பப் பெருவாழ்வை எய்துவது திண்ணம்.

மேற்கோள் நூல்களின் பெயர்ச் சுருக்கம்

வா.ரா., பால.-2 — வால்மீகி ராமாயணம், பாலகாண்டம் -2வது சர்க்கம்.

க.ரா., பால.- நகர. — கம்பராமாயணம், பாலகாண்டம், நகரபடலம்.



கதையோ ராமனைப் பற்றியது, இயற்றியவரோ மஹர்ஷி வால்மீகி, பாடுபவர்களோ கிந்நரர் போன்ற குரல் வளமுடைய லவ குசர்கள், எனவே இவர்கள், கேட்போர் மனங்களை வயப்படுத்தும் ஆற்ற லுள்ளவர்கள் என்பதைக் கூறவும் வேண்டுமோ.

वृत्तं रामस्य वाल्मीकेः कृतिः तौ किन्नरस्वनौ ।
किं तत् येन मनो हर्तुमलं स्यातां न शृण्वताम् ॥

—ரகுவம்சம் - ஸ 15-64

காவியத்தின் சிறப்பு

நாம் கற்கவேண்டியவற்றுள் மிகச் சிறந்தவை வேதங்களாகும். பயனைக் கருதாது தன்னைக் கற்கும்படி வேதமே நமக்குக் கட்டளை யிடுகிறது. ஆனால் இன்னார் தான் கற்கலாம், கேட்கலாம், குறிப்பிட்ட காலத்தில் தான் கற்கலாம், குறிப்பிட்ட இடத்தில் தான் கற்கலாம், குறிப்பிட்டவரிடம் தான் கற்கலாம் என்கிற பலவகை கட்டுதிட்டங்கள் உண்டு வேதத்திற்கு. ஸ்ரீமத் ராமாயணத்திற்கோ இவ்வளவு கடுமையான விதிகள் இல்லை. இதைக் கற்றாலே வேதங்களைக் கற்றதாகவும், படித்தால் வேத பாராயணம் செய்ததாகவும் ஆகும். ஏனெனில் வேதங்களின் அவதாரமே ராமாயணம் ஆகும். வேதங்களால் அறியப்படும் காரணப் பொருளாகிய நாராயணன் தசரத குமாரனாக அவதரித்தபொழுது வேதங்கள் வால்மீகி முனிவரினின்றும் இராமாயணமாக அவதாரம் செய்தனவாம்.

वेद वेद्ये परे पुंसि जाते दशरथात्मजे ।
वेदः प्राचेतसादासीत् साक्षाद्रामायणात्मना ॥

வேத வேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே ।
வேத: ப்ராசேதஸாத் ஆஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா ॥

இக்காரணம் பற்றியே நம் ப்ரபந்தஜன கூடஸ்தரான ஆழ்வாரும் அருளினார் :

கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ
புல் பா முதலாப் புல் எறும்பு ஆதி ஒன்று இன்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே

திருவாய்மொழி -7ப. 5 தி.

இராமபிரான் காட்டுக்கு எழுந்தருளியபோது, பிரமன் ஸ்ருஷ்டிக்குட் பட்ட பிராகிருதமான இவ்வுலகிலுள்ள அயோத்தி மாநகரில் வாழ்ந்த, நிலம், நீர், காற்று முதலியவைகளையே தங்களுக்கு தாரகமாகவும் போக்யமாகவும் கொண்ட புல், எறும்பு முதலிய ஸ்தாவர ஜங்கமங்கள் அனைத்தும் வாடி வதங்கினவாம். திரும்பியதும் மகிழ்ந்தனவாம்.

அதாவது இராமன் அவதரித்த அயோத்தியில் தோன்றியதின் காரணமாக இதுவரை நிலம், நீர், காற்று ஆகிய இவை தாங்களே பிற உயிரினங்கட்கு தாரகமாகவும், போஷகமாகவும், போக்யமாகவும் இருக் கிறோம் என எண்ணியிருந்ததை விட்டு, இராமன் அவதரித்த பிறகு ராமனே தங்களுக்கும் பிற உயிரினங்கட்கும் தாரக, போஷக, போக்யங்களாவான்

என உணர்ந்தனவாம். காரணம், இராமபிரானுடைய கருணை, உயர்வு தாழ்வு பாராமல் பள்ளமடை பாய்வது போல் எல்லா ஸ்தாவர ஜங்கமங்களின் மீது வெள்ளமிட்டதாம். கர்மயோகம் முதலிய உபாயங்களை அனுஷ்டிக்காமலே ராமனின் திருவடித் தாமரைகளையே தாரக, போஷக, போக்யங்களாகக் கொள்ளும் பாக்யம் கிட்டியதற்குக் காரணம் ராமபிரானே. ''அவன் ராமன்—அழகன்—பிறரை மகிழ்விப்பவன், உபகாரம் செய்பவன், பிரியமாகவும் ஹிதமான உபாயமாகவும் இருப்பவன். எனவே பிற அவதாரங்களுக்கு இல்லாத இச்சிறப்பு பற்றி இவனே கற்பதற்கு உரியன்'' என்றபடி.

முராரி என்பவர் புகழ்பெற்ற கவிஞர். ஒரு நாடகம் எழுதத் துணிந்தார். யாரைக் கதாநாயகனாகக் கொண்டு காப்பியம் படைப்பது என்று யோசித்தார். நண்பர்களோ, பலரைக் கூறினர். முராரியோ இராமபிரானைக் கதாநாயகனாகக் கொண்டு **அனர்க்கராகவம்** எனும் நூல் எழுதப் போவ தாகக் கூறினார். ''இராமனைப் பற்றி எத்தனையோ படைப்புக்கள் உள்ளன. புதிதாக ஒரு தலைவனைக் கதாநாயகனாகக் கொள்வதுதான் சீரியது'' என்றனர் நண்பர்கள். இதற்கு முராரி விடையளித்ததாவது:

यदि क्षुण्णं पूर्वैरिति जहति रामस्य चरितम् ।
गुणैः एतावद्भिः जगति पुनरन्यो जयति कः ।।

யதி க்ஷுண்ணம் பூர்வைரிதி ஜஹதி ராமஸ்ய சரிதம் ।
குணை: ஏதாவத்பி: ஜகதி புனரன்யோ ஜயதி க: ।।

''முன்னோர்கள் பலரால் ராமனின் சரித்திரம் பலவாறாகப் படைக்கப் பட்டிருக்கிறது என்பதற்காக அதை விடுவது உசிதமல்ல. ராமனின் நற்குண, நற்பண்புகளை எவரும் எழுதி முடித்தவர்கள் இலர். நாடு என்பது எது? அரசன் எப்படி ஆள வேண்டும்? மக்கள் எங்ஙனம் வாழ வேண்டும்? ஒரு குடும்பத்தில் தலைவன் தலைவி, மகன் தந்தை, அண்ணன் தம்பி, தாய் மகன், மாமியார் மருமகள் முதலியோர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பன போன்றவற்றை, வாழ்வாங்கு வாழும் முறையை வகைப்படுத்திக் கொடுப்பது ராமகாவியம். இது கதையாக, வரலாற்று நூலாக, அற நூலாக, வேதாந்த நூலாகத் திகழ்ந்து மனித வாழ்வைச் செம்மைப்படுத்துகிறது. இதுபோன்று அறிவுப் பொக்கிஷமாய், வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழும் வேறொரு சரித்திரத்தை உலகில் காட்ட முடியுமா?'' என்றாராம் முராரி.

ஒரு பக்தி நூல்

மறுமையில் பெற வேண்டிய பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவதற்கு உபாயமான பக்தியை, பாகவதம் விரித்துக் கூறுவதை இங்கு காணலாகுமோ என, சிலர் ஐயுறலாம். சுகாசாரியர், பிரஹ்லாதன் வாயிலாக :

श्रवणं कीर्तनं विष्णोः स्मरणं पादसेवनम् ।
अर्चनं वन्दनं दास्यं सख्यमात्मनिवेदनम् ॥

ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம் ।
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்ம நிவேதனம் ॥

பாகவதம், 7-5

என்று ஒன்பது வகையாக பக்தியை சிறப்பித்துக் கூறுகிறார். இதை ராமாயணத்திலும் நன்கு காணலாம்.

धन्या रामकथा, श्रुतौतु हनुमान्, वल्मीकभूः कीर्तने,
सीता संस्मरणे, तथैव भरतः श्रीपादुका सेवने ।
अर्चायां शबरी, प्रणाम करणे लङ्काधिपो, लक्ष्मणः
दास्ये, सख्य कृते अर्कजः, तनुकृतत्राणे जटायुर्नव ॥

தன்யா ராமகதா, ச்ருதௌது ஹனுமான், வல்மீகபூ: கீர்த்தனே
ஸீதாஸம்ஸ்மரணே ததைவ பரத: ஸ்ரீபாதுகாஸேவனே ।
அர்ச்சாயாம் சபரீ, ப்ரணாம கரணே லங்காதிபோ, லக்ஷ்மண:
தாஸ்யே, ஸக்ய க்ருதே அர்கஜ:, தனுக்ருத த்ராணே ஜடாயுர் நவ ॥

ஒன்பது வகையான பக்தியை ஒன்பது பாத்ரங்களைக் கொண்டு விளக்கும் ராமகதை மிகவும் போற்றப்படுவது. எனவே தான் இதைப் பாடியவரைக் குயிலாகவும் இக்காப்பியத்தைக் குயிலிசையாகவும் சிறப் பித்துக் கூறுவர் பெரியோர்.

कूजन्तं राम रामेति मधुरं मधुराक्षरम् ।
आरुह्य कविता शाखां वन्दे वाल्मीकि कोकिलम् ॥

கூஜந்தம் ராம ராமேதி மதுரம் மதுராக்ஷரம் ।
ஆருஹ்ய கவிதா ஶாகாம் வந்தே வால்மீகி கோகிலம் ॥

வா.ரா. பால.-1

வால்மீகியாகிற குயில், கவிதையாகிற மரக்கிளையில் அமர்ந்து, கேட்போர் மகிழும்படி இனிய வர்ணங்களுடன் 'ராம ராம' என்று ராமநாமாவையும், ராமாயணத்தையும் கூவுகிறது. ராமனை, அதாவது ராம சரிதத்தைக் கூவும் பெருமை பெற்ற வால்மீகி எனும் குயிலை வணங்குகிறேன் என்று.

ச்ரவண பக்தி (ச்ருதௌ து ஹனுமான்)— ராமாயணத்தின் மிகச் சிறந்த பாத்திரங்களுள் ஒருவர் ஹனுமான். இவர் ச்ரவண பக்தியில் ஆழ்ந்தவர். இராமபிரான் அவதார காரியத்தை முடித்துக் கொண்டு ஸ்ரீவைகுண்டம் எழுந்தருளும்போது, உடன் வருகின்ற பக்தர்களை அழைத்துச் செல்லத் திட்டமிட்டார். அப்பொழுது அனுமனை அழைத்து ''நீரும் என்னுடன் வாரும்'' என்றார். முடியாது! முடியவே முடியாது என அழுத்தமாக பதில் வந்தது. ஏன்? ''அங்கு வருவதெனின் இவ்வுடலை நீத்தல்லவோ வர வேண்டும். என் உடல் விடுவதற்கரிய தாயிற்றே! உமது திருமேனியோ, ஸீதைப் பிராட்டியால் இறுகத் தழுவப் பெற்ற பாக்கியம் பெற்றது. அத்தகைய உமது திருமேனியால் தழுவப் பெற்ற தன்றோ எனது மேனி. இதை எங்ஙனம் நீக்குவேன்? மேலும் உமது வரலாற்றுப் பெட்டகமான ராமாயணத்தை அங்கு கேட்க முடியாதே.! உம்மையும் ஸேவிக்க முடியாதே! தேவரீர் முடி சூடியதிலிருந்து பத்தாயிரம் ஆண்டு காலமாக உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் ராமன் என்று வாழ்ந்து, ஆடியாடி அகம் கரைந்து, இசை பாடிப்பாடிக் கண்ணீர் மல்கி, எங்கும் நாடி நாடி இராமாவோ என்று, வாடும் தன்மையன்யான். எனது உயிர் நாடியான ராமாயணத்தை அங்கு கேட்க முடியாதே! ஸாமகானத்தை யன்றோ அங்கு கேட்க முடியும்'' என விடையளித்தாராம். இதைக் கருத்திற் கொண்டே

यत्र यत्र रघुनाथकीर्तनं तत्र तत्र कृतमस्तकाञ्जलिम् ।
बाष्प वारि परिपूर्ण लोचनं मारुतिं नमत राक्षसान्तकम् ॥

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம் தத்ர தத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம் ।
பாஷ்ப வாரி பரிபூர்ண லோசனம் மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம் ॥

இராமனைப் பற்றிய பேச்சு நிகழும் இடங்களில் எல்லாம் தலையின் மீது இருகரங்களையும் குவித்து, அஞ்ஜலி செய்த வண்ணம் ராம கதையாம் அமிழ்தத்தைச் செவியாரப்பருகி, கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்க நிற்கும்—தீமைகளை விரட்டும் மாருதியை வணங்குவீர் என அனுஸந்தித்து வருகிறோம்.

रामायणस्य पठनं यदाऽरभ्येत हि क्वचित् ।
तद्ग्रन्थस्य पुरस्तात्तु कोपि नासीत सर्वदा ॥

शृणोति तत्र हि आसीनः हनुमान् राघवीं कथाम् ।
स्वस्थाने यः समासीनः तं शपेत् सतुकोपतः ॥

ராமாயணஸ்யபடனம் யதா ஆரப்யேதஹிக்வசித் ।
தத்க்ரந்தஸ்ய புரஸ்தாத்து கோபி நாஸீத ஸர்வதா ॥
ச்ருணோதி தத்ரஹி ஆஸீந: ஹனுமான் ராகவீம்கதாம் ।
ஸ்வஸ்தானே ய: ஸமாஸீந: தம் ஶபேத் ஸது கோபத: ॥

ஸ்காந்த புராணம்

எங்கேயாவது ராமாயண பாராயணமோ, பிரவசனமோ தொடங்கப் படுமானால் அங்கு ஸ்ரீராமாயண புத்தகத்திற்கு முன்பு யாரும் உட்காரக் கூடாது. ஏனெனில் அங்கு அனுமன் அமர்ந்து ராகவனின் கதையைக் கேட்கிறான். எனவே ஸ்ரீ கோசத்தின் முன்பு அமர்கின்றவரைத் தனக்கு இடமளிக்காத கோபத்தினால் சபிப்பானாம். இவ்வாறு ஸ்காந்த புராணமும் அனுமனுக்குள்ள ச்ரவணபக்தியைத் தெரிவிக்கிறது.

கீர்த்தன பக்தி (வல்மீகபூ: கீர்த்தனே)—*வால்மீகி முனிவர் பிரமனின் அனுக்ரஹத்தைப் பெற்று ராமகதையை இருபத்து நாலாயிரம் பாக்களால் (ச்லோகங்களால்) பாடினார். ''பாட்யே கேயே ச மதுரம் தந்த்ரீ லயஸமன் விதம் ஸர்வச்ருதி மனோஹரம்'' என்றபடி பாடல்கள் அனைத்தும் படித்தாலும், இசையுடன் பாடினாலும், வீணையில் மீட்டினாலும், பாடுபவருடையவும் கேட்போருடையவும் இதயங்களைக் கவர்ந்தன. முனிவரும் தனிமையில் பாடியும், பிறருக்குக் கற்பித்தும், பரமனை நினைத்து உள்ளம் உருகி மகிழ்ந்தார். அதிலும் ராம நாமமானது அவரை மிகவும் கவர்ந்தது: ராமபட்டாபிஷேகத்திற்குப் பிறகு அயோத்தி மக்களின் மகிழ்ச்சியை வெளியிடும் முகமாக, ஒரு சிறு ச்லோகத்தில் ராமநாமாவை ஐந்து தடவை சொல்லி மகிழ்கிறார்.*

रामो रामो रामइति प्रजानां अभवन् कथाः ।
राम भूतं जगदभूत् रामेराज्यं प्रशासति ॥

ராமோ ராமோ ராம இதி ப்ரஜானாம் அபவன் கதா: ।
ராம பூதம் ஜகத் அபூத் ராமேராஜ்யம் ப்ரஶாஸதி ॥

வா.ரா. யுத்த - 128

ராமன் தன் அழகாலும், சீலத்தாலும், ஆட்சியாலும், தன்னை ஒழிய வேறு இடத்தில் மனம் செல்லாதபடி அனைவரையும் திருத்தி, அவதார பிரயோஜனமான மோக்ஷத்தை அளித்து ரக்ஷிக்கிறான் என்பர்.

ஸ்மரண பக்தி (ஸீதா ஸம்ஸ்மரணே)

संकल्पहय संयुक्तैः यान्तीमिव मनोरथैः ।
हा राम सत्यव्रत दीर्घबाहो हा पूर्ण चन्द्र प्रतिमान वक्त्र ।
हा जीव लोकस्य हितः प्रियश्च ॥
रामेति रामेति सदैव बुद्ध्या विचिन्त्य वाचा ब्रुवती तमेव ।
विचिन्तयन्ती सततं तमेव तथैव पश्यामि तथा शृणोमि ।

ஸங்கல்பஹய ஸம்யுக்தை: யாந்தீமிவ மனோரதை: ।
ஹாராம ஸத்யவ்ரத ! தீர்க பாஹோ !
ஹா பூர்ண சந்த்ரப்ரதிமான வக்த்ர ॥
ஹா ஜீவலோகஸ்யஹித: ப்ரியஶ்ச ।
ராமேதி ராமேதி ஸதைவ புத்யா விசிந்த்ய வாசா ப்ருவதீ தமேவ
விசிந்தயந்தீ ஸததம் தமேவ ததைவ பச்யாமி ததா ச்ருணோமி ॥

வா.ரா. ஸுந்தர - 19, 28, 32

ஸீதாப்பிராட்டி பெருமாளைப் பிரிந்த பிறகு அசோகவனத்தில் தனது மனமாகிற ரதத்தில் இராமனைப் பற்றிய எண்ணங்களாகிற குதிரைகளைப் பூட்டி விரைந்து ராமனிடம் செல்கிறவள்போல் இருந்தாளாம். மேலும் ''ஹே ராமா! தந்தையின் சொல்லை உண்மையாக்கியவனே! முழங்கால் அளவும் நீண்ட கைகளை உடையவனே! நிறைமதி போன்று என்னை மகிழ்விக்கும் திருமுகத்தோனே! உயிரினங்களையெல்லாம் நேசித்து நன்மை புரிபவனே! ராமா! ராமா! என்றவாறு எப்பொழுதும் ராமனையே நினைத்தும், பார்த்தும், பேசியும், கேட்பதுமாகவே இருந்தாளாம். இங்கு பரமனை நினைத்து நினைத்து உருகும் ஸீதையின் ஸ்மரண பக்தியைக் காண்கிறோம்.

பாத ஸேவனம் (பரத: ஸ்ரீபாதுகா ஸேவநே)— *பரதன் இராமனிடம் ஸாத்விகமான பக்தியை உடையவன். கேகய நாட்டிலிருந்து அயோத்தி திரும்பியதும் ராமனின் வனவாஸத்திற்குக் காரணம், கூனியும், தன் தாயும் தான் என அறிந்தான்.*

हन्यामहमिमां पापां कैकेयीं दुष्ट चारिणीम् ।
यदि मां धार्मिको राजा नासूयेत् मातृ घातकम् ॥

ஹன்யாம் அஹம் இமாம் பாபாம் கைகேயீம் துஷ்ட சாரிணீம்,
யதி மாம் தார்மிகோ ராஜா நாஸூயேத் மாத்ரு காதகம் ॥

வா.ரா. அயோத்யா - 78

''நாட்டை ஆண்ட அரசனை (தசரதரைக்) கொன்றும், நாட்டை ஆளும் உரிமையுள்ள அரசனை (ராமனை) காட்டிற்கனுப்பியும், பெரும்

பாபங்களைப் புரிந்த கைகேயிக்கு உரிய மரணதண்டனையை இப்பொழுதே நிறைவேற்றுவேன். ஆனால் பரம தார்மிகனான ராம ராஜன் என்னை ''தாயைக் கொன்ற பாபம் புரிந்தவன்'' எனக் கருதி அருகில் வர அனுமதிக்க மாட்டானே''.

इमामपि हतां कुब्जां यदि जानाति राघवः ।
त्वां च मां चैव धर्मात्मा नापि भाषिष्यते ध्रुवम् ॥

இமாமபி ஹதாம் குப்ஜாம் யதி ஜானாதி ராகவ: ।
த்வாம்ச மாம் சைவ தர்மாத்மா நாபி பாஷிஷ்யதே த்ருவம் ॥

வா.ரா.அயோதயா - 78

''சத்ருக்னா! இந்தக் கூனியைக் கொன்றதாக அறிந்தால், அறவோனாகிய இராமன் உன்னோடும் என்னோடும் முகம் கொடுத்துப் பேசக் கூட மாட்டானே'' என்றான். இங்கு பரதனின் ராமபக்தி இருவரையும் காப்பாற்றிற்று.

यदित्वार्य नशक्ष्यामि विनिवर्तयितुं वनात् ।
वने तत्रैव वत्स्यामि यथाऽऽर्यो लक्ष्मणस्तथा ॥

யதிது ஆர்யம் நசக்ஷ்யாமி விநிவர்த்தயிதும் வநாத் ।
வனே தத்ரைவ வத்ஸ்யாமி யதார்யோ லக்ஷ்மணஸ்ததா ॥

வா.ரா. அயோத்யா - 82

''காட்டிலிருந்து இராமனை நாட்டிற்குத் திருப்பி அழைத்து வர முடியாவிட்டால் நானும் லக்ஷ்மணன் போன்று காட்டிலே அவன் திருவடி வாரத்திலேயே வசிப்பேன்'' என்று வஸிஷ்டர் முதலிய மந்திரிகளுக்கு எதிரில் சபதம் செய்தான்.

பின்னர் காடு சென்று ராமனிடம் எவ்வளவோ வாதிட்டும், வணங்கியும், இவன் எண்ணம் நிறைவேறவில்லை. எனவே

अधिरोहाऽऽर्य पादाभ्यां पादुके हेमभूषिते ।
इमे हि सर्वलोकस्य योगक्षेमं विधास्यतः ॥

அதிரோஹ ஆர்ய பாதாப்யாம் பாதுகே ஹேமபூஷிதே ।
இமேஹி ஸர்வலோகஸ்ய யோகக்ஷேமம் விதாஸ்யத: ॥

வா.ரா. அயோத்யா - 112

பரதன் இராமனின் கட்டளைக்கு இணங்கி அவரால், ஏறி இறங்கி, அனுக்ரஹிக்கப்பட்ட திருவடி நிலைகளைத் தலை மேல் தாங்கி நந்திக் கிராமத்தில் அரியணை மீது அமர்த்திப் பாதுகா ஸேவகனாக பதிநான்கு ஆண்டுகாலம் அரசாட்சி செய்தான்.

இராமன் ஆணையை மீறி சரணாகதி செய்து, இளையபெருமாள் காட்டிற்குக் கூடவே வந்தார். ஆனால் பரதனோ! நாடு திரும்பேன் என சபதம் செய்திருந்தும், ராமனின் ஆணைக்குப் பணிந்து நாடு திரும்பி ராம பாத ஸேவைக்குப் பதிலாக ராம பாதுகா ஸேவையைச் செய்து வந்தான். இங்கு பரதனிடம் சீரிய ஸாத்விகமான பக்தியைக் காண்கிறோம்.

அர்ச்சன பக்தி (அர்ச்சாயாம் ஶபரீ)—ஶபரீ எனும் மாது பம்பை நதிக் கரையிலுள்ள காட்டில் வாழ்ந்து வந்தாள். மதங்க முனிவர் தம் சீடர்களோடு பம்பையில் நீராடித் தம் ஆஶ்ரமத் திற்குச் செல்வதை ஒருநாள் பார்த்தாள். அன்று முதல் காட்டிலுள்ள உயர்ரகக் கனிகளையும், காய்ந்த சுள்ளிகளையும் பொறுக்கி அவர்கள் செல்லும் வழியில் வைத்துவிட்டு ஒதுங்கி நிற்பாள். ஒருநாள் முனிவர் இவ்வுதவியைச் செய்பவர் யார் என நிமிர்ந்து பார்த்தார். ஶபரீ கூப்பிய கையளாய் வணங்கினாள். முனிவரின் கடாக்ஷத்தைப் பெற்ற பிறகு ஆச்ரமத்திற்கே சென்று அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்து வந்தாள். முனிவர்களும் சீடர்களும், இவ்வுலக வாழ்வை நீத்து மேலுலகுக்குப் புறப்படும்போது, இராமன் இங்கு வரும்போது நமது ஆஶ்ரமத்தில் அவரை உபசரித்துப் பின்னர் மேலுலகு வரலாம்'' என ஶபரியைப் பணித்தனர்.

அன்று முதல் ஶபரி ''கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு என் கண் இணைகள் என்று கொலோ களிக்கும் நாளே'' (பெருமாள் திரு மொழி 1-1) என்று இராமன் வரவை எதிர் பார்த்து நின்றாள். கபந்தன் கூற்றுக்கு இணங்க இராமன் தம்பியுடன் பம்பைக்கு வந்தார். ஶபரீயும் முனிவரின் சொல் உண்மையானதை நினைத்து, அகம் மகிழ்ந்து, கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்க, அவர்களை அணுகி, கொய்ம் மலர்த்தூவி, வணங்கி, கை களைக் கூப்பி, வாய்புதைத்து நின்றாள். பின்னர் ஶபரீ :

''ஆண்டு அவள் அன்பின் ஏத்தி, அழுது, இழி அருவிக் கண்ணள்,
மாண்டது என் மாயப்பாசம்; வந்தது வரம்பில் காலம்; (யான்)
பூண்டமாதவத்தின் செல்வம்'' போயது பிறவி என்பாள்

க.ரா. ஆரண்ய - சவரி

தனது ஆசார்ய பக்திக்கும் பரமாத்ம பக்திக்கும் உரிய பயன் இங்கேயே கிட்டியதே என அளவற்ற மகிழ்ச்சியுடன் தன் ஆச்ரமத்திற்கு அழைத்துச் சென்று இராமன் லக்ஷ்மணன் திருவடிகளுக்குத் திருமஞ்சனம் செய்து, அந்நீரால் தன்னை அபிஷேகம் செய்து கொண்டு, மிகுந்ததைப் பருகினாள். முறைப்படி அர்க்யம், ஆசமனீயம் ஸமர்ப்பித்து, இதுகாறும் சேமித்து வைத்திருந்த உலர்ந்த இனிய கனிகளையும், கொம்பில் பழுத்த புதிய பழங் களையும் ஸமர்ப்பித்து, பருகு நீரையும் அளித்தாள். நறுமண மலர் கொண்டு

திருவடிகளில் அர்ச்சித்தாள். சக்ரவர்த்தித் திருமகனும் உள்ளம் உவந்து அனுக்ரஹித்தார்.

तामुवाच ततोरामो श्रमणीं संशित व्रताम् ।
अर्चितोऽहं त्वया भक्त्या गच्छ कामं यथा सुखम् ॥

தாம் உவாச ததோ ராம: ச்ரமணீம் ஸம்ஶித வ்ரதாம் ।
அர்ச்சிதோSஹம் த்வயா பக்த்யா கச்ச காமம் யதா ஸுகம் ॥

வா.ரா. ஆரண்ய - 74

கருணாகாகுத்தனும், ஆசார்யனுடைய பணிவிடையில் மண்டிக் கிடந்த ஸந்யாஸினியான ஶபரியை நோக்கி ''நான் உன்னால் பரம பக்தியுடன் நன்கு (அர்ச்சிக்க) உபசரிக்கப்பட்டேன். நீ இன்னலின்றி மகிழ்வுடன் விரும்பி யதை அடைவாயாக'' என்றான். அவளும் ராமானுக்ரஹத்தினால் இங்கேயே பக்தியின் பயனாய் விபவ ப்ரஹ்மஸாக்ஷாத்காரத்தைப் பெற்றிருப் பினும் ஆசார்யனோடு பரப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெற ராமனால் அனுமதிக்கப் பட்டு, சுடர்விடும் அக்னியில் ஆத்மஹவிஸ்லை (தன்னை) ஹோமம் செய்து பளிச்சிடும் மின்னற் கொடி போன்று அத்தீயினின்றும் கிளம்பி வானுலகு எய்தினாள். அவளின் ஆன்ம ஒளி, பக்தியின் பெருமையை இவ்வுலகினர்க்கு விளக்க எண்ணியதோ என்னும்படி அந்நாடு முழுவதும் தன் ஒளிக்கற்றையால் விளங்கும்படி செய்ததாம். என்னே பக்தியின் பெருமை! இக்கருத்தினை வால்மீகி விளக்குகின்றார்:

अनुज्ञाता तु रामेण हुत्वात्मानं हुताशने ।
ज्वलत्पावक संकाशा स्वर्गमेव जगाम सा ॥
विराजयन्ती तं देशं विद्युत्सौदामिनीयथा ॥

அனுஜ்ஞாதா து ராமேண ஹுத்வா ஆத்மானம் ஹுதாஶனே ।
ஜ்வலத் பாவகஸங்காசா ஸ்வர்கமேவ ஜகாம ஸா ॥
விராஜயந்தீ தம் தேஶம் வித்யுத் ஸௌதாமினீ யதா ॥

வ.ரா. ஆரண்ய - 74

வந்தன பக்தி (ப்ரணாமகரணே லங்காதிப:)—விபீஷணன், ராவண னுடைய தம்பி. ஆயினும் ''விபீஷணஸ்து தர்மாத்மா நது ராக்ஷஸசேஷ்டித'' விபீஷணன் பரமதார்மிகன் அரக்கர்கட் குரிய செய்கை சிறிதும் இல்லாதவன். எனவே கொடியனாகிய அண்ணன் ராவணனிடம் ''ஸீதையை ராமனிடம் சேர்ப்பித்து விடு. இலங்கையில் பல அபசகுனங்களைப் பார்க்கிறேன். வலுவில் அழிவைத் தேடிக் கொள்ளாதே. பெண் பாவம் பொல்லாதது'' எனப் பலவாறாகப் பல தடவை ஸபையில், ஸகோதர பாசத்தினால், அறிவுரை கூறினான். ''மரணம் நெருங்கும் போது மருத்துவரின் சொல் எடுபடாது''. காலன் பிடரியைப் பிடித்துத்தள்ள ராவணன் ''விபீஷணா!

நீயன்றி பிறன் எவனாவது பேசியிருந்தால் அவன் இந்த க்ஷணமே உயிருடன் இருக்க மாட்டான். நொடியில் அவனை முடித்திருப்பேன். நீ அரக்கர் குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக்காம்பு'' என்றான்.

इत्युक्तः परुषं वाक्यं न्यायवादी विभीषणः ।
उत्पपात गदापाणिः चतुर्भिस्सह राक्षसैः ॥

இத்யுக்த: பருஷம் வாக்யம் ந்யாயவாதீ விபீஷண: ।
உத்பபாத கதாபாணி: சதுர்பிஸ்ஸஹ ராக்ஷஸை: ॥

வா.ரா. யுத்த - 16

விபீஷணன் தன் சொல் நிற்காத இடத்தில் தான் நிற்பது தகாது என எண்ணி அண்ணனின் கொடுஞ் சொல்லைப் பொறாது உற்ற நண்பர்கள் நால்வருடன் உயரே கிளம்பி இராமன் இருக்குமிடம் வந்தான். மேலும்

सोऽहं परुषितस्तेन दासवच्चावमानितः ।
त्यक्त्वा पुत्रांश्च दारांश्च राघवं शरणं गतः ॥

ஸோऽஹம் பருஷிதஸ்தேன தாஸவச்சாவமானித: ।
த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் சரணம் கத: ॥

பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதி

நேராக கடலின் அக்கரைக்குச் சென்று ''நான் ராவணனால் கடிந்து பேசப்பட்டு வேலையாள் போன்று அவமதிக்கப்பட்டேன். எனவே ராஜ்ய போகங்களை உதறி, மக்கள் மனைவி முதலியோரையும் வேண்டாமென ஒதுக்கி

परमात्मनि यो रक्तः विरक्तः अपरमात्मनि

பரமாத்மனி யோ ரக்த: விரக்த: அபரமாத்மனி ।

பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதி

என்றபடி ''பரமனைத் தவிர்த்தவைகளில் பற்றறுத்து ஸர்வலோக ஶரண்ய னான ராகவனைச் சரணடைந்தேன்'' என்றான்.

''பிரிந்தேன் பெற்ற மக்கள் பெண்டிர் என்று இவர் பின் உதவாது அறிந்தேன்.... வெறிந்து வந்து.... செறிந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகர் மேயவனே'' என்ற திருமங்கை மன்னனைப் போன்று உற்றவர்களை விட்டு அகிஞ்சனனாய்ப் பரமன் திருவடிகளையே பொருந்தி வணங்கினான். இடையில் ஸுக்ரீவன் முதலியோரால் சிறிது தாமதம் ஏற்படினும் ''தத்தம் அஸ்ய அபயம் மயா'', என்னால் விபீஷணனுக்கு அபயம் அளிக்கப் பட்டது, என்ற ராகவனின் உறுதியான நிலையின் காரணமாக ஏற்கப்பட்டான்.

தருமமும் ஞானமும் தவமும் வேலியாய்
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்க்

கருணையங் கோயிலுள் இருந்த கண்ணனை
அருள் நெறி எய்திச் சென்று அடிவணங்கினான்.

க.ரா.யுத்த-வீடணன்

நாம் மதில் சூழ்ந்த பெருமாள் கோயிலுக்கு சென்று பரமனை அடிபணிந்து வணங்குவதுபோல் விபீஷணனும் தர்மம், ஞானம், தவம் ஆகிற மூன்று பக்கங்களிலுள்ள மதில் சுவர், முன்புறம் பெருமை, பொறுமை ஆகிற கோபுர வாயில், கருணைமயமான கர்ப்பக்ருஹம், அங்கு மூலஸ்தானத்தில் அருளைச் சுரக்கும் பக்தி மேலிட்டு பெருமானை முறைப்படி உள்ளே சென்று தண்டம் போன்று விழுந்து வணங்கினான்.

स तु रामस्य धर्मात्मा निपपात विभीषणः ।
पादयोश्शरणान्वेषी चतुर्भिः सह राक्षसैः ॥
''निपपात विभीषणः - पादयोः शरणान्वेषी ॥

ஸ து ராம்ஸ்ய தர்மாத்மா நிபபாத விபீஷண: ।
பாதயோஸ்ஶரணாந்வேஷீ சதுர்பி: ஸஹ ராக்ஷஸை: ॥
''நிபபாத விபீஷண: பாதயோ: சரணான்வேஷீ ॥

வா.ரா.யுக்த-19

''ராமன் திருவடிகளையே அடைக்கலமாகக் கொண்டு வீபீஷணன் அடிபணிந்தான்''. இங்கு வந்தன பக்தியை அனுபவித்து உவக்கிறோம்.

தாஸ்யபக்தி (லக்ஷ்மண: தாஸ்யே)—*துளஸீ, முளைக்கும்போதே நறு மணத்துடன் தோன்றுவது போல இலக்குவன் அவதரிக்கும்போதே பகவத் கைங்கரியத்திற்காக இட்டுப் பிறந்தானாம். குழந்தைக்குப் பெயரிடும் போதே வஸிஷ்டர் இவன் கைங்கரிய லக்ஷ்மியோடே பிறந்தவனாகையாலே லக்ஷ்மணன் எனப் பெயரிட்டாராம். ''லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந'', என்பர் வால்மீகி.*

இராமன் காட்டுக்குப் புறப்படும்போது ஸீதையைப் புருஷகாரமாகக் கொண்டு இராமன் திருவடிகளை இறுகப் பிடித்துக் கொண்டு ''அடைக்கலம் என்றவரை அஞ்சற்க'' என வாழ்விக்கும் வ்ரதம் பூண்ட உம்மைவிட்டுப் பிரியேன், எனச் சரணாகதி பண்ணியன்றோ கைங்கரிய லக்ஷ்மியைப் பெற்றான் !

सभ्रातुश्चरणौ गाढं निपीड्यरघुनन्दनः
सीतामुवाचातियशाः राघवं च महाव्रतम् ॥

ஸப்ராதுஸ் சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தன: ।
ஸீதாம் உவாச அதியஶா: ராகவம் ச மஹா வ்ரதம் ॥

வா.ரா. அயோத்யா - 31

உலகில் சிலர் தொண்டு செய்வது போன்று பாவனை பண்ணுவர். சிலர் கௌரவமான தொண்டுகளைச் செய்ய முயல்வர். தாம் செய்யும் தொண்டினால் மக்களிடையே பெருமையைப் பெறக் கருதுவர். இளையாழ்வானின் தொண்டு இத்தகையதன்று. கோயில்களில், திருவிழாக் காலங்களில், புறப்பாட்டின் போது, ஸ்வரூபம் அறிந்த பெரியோர் சிலர், இறைத் தொண்டு செய்ய எண்ணி வெண்சாமரம் வீசப் போட்டியிடுவர். பரமன் ஸந்நிதியில் சிலர் தம் கல்வி, உயர்குடி, விருது, பெருமை அனைத்தையும் மறந்து ஶேஷத்வ ஞானம் (அடிமையுணர்வு) மேலோங்கி தீவட்டியையும் எண்ணெய்ச் சட்டியையும் கையில் ஏந்தப் போட்டியிடுவர். இதுவன்றோ உண்மையானதாஸ்யம் (ஊழியம்).

धनुरादाय सगुणं खनित्र पिटकाधरः ।
अग्रतस्ते गमिष्यामि पन्थानं तव दर्शयन् ॥
अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते ॥

தனு: ஆதாய ஸகுணம் கனித்ர பிடகாதர: ।
அக்ரதஸ்தே கமிஷ்யாமி பந்தானம் தவ தர்ஶயன் ॥
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்சதே ॥

வா.ரா. அயோத்யா - 31

இளையபெருமாள் ''குருஷ்வமாம் அனுசரம்'' ''க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி'' என்னை உம்மைப் பின் தொடரும் ஊழியனாக ஏற்றுக் கொள்ளும். அப்பொழுதுதான் பெற்ற பிறவி பயனுற்றதாக அமையும்—ஜன்ம ஸாபல்யம் கிட்டும். நாண் ஏற்றிய வில்லைக்கையில் ஏந்தியவனாய் கனி, கிழங்கு முதலிய உணவு வகைகளைச் சேகரிப்பதற்கு உதவும் கூடை, களைக் கொட்டு (பூமியைக் கொத்தி, கிழங்கு, வேர் போன்றவற்றை தோண்டி எடுக்க உதவுவது) முதலியவைகளை முதுகில் சுமந்தவனாய் தாங்களும் பிராட்டியும் நடந்து செல்வதற்குரிய நல்வழியை ஒரு கையினால் சுட்டிக் காண்பித்துக் கொண்டு முன் செல்வேன்''.

''இவ்வாறு காட்டில் ஆங்காங்குள்ள இயற்கைச் சூழ்நிலைகட்கேற்ப முன்னும் பின்னும் சென்று உதவுவதோடு மலைத் தாழ்வரைகளிலோ, நதிக் கரைகளிலோ, அடர்ந்த காடுகளிலோ வசிக்க நேரிடும்போது அவ்வோ இடங்களுக்கேற்ப தட்ப, வெப்ப நிலைகட்கேற்ப விழித்தோ, உறங்கியோ இருக்கும் காலத்திற்கேற்ப இருவருக்கும் என்னென்ன பொருள் தேவையோ, என்னென்ன ஊழியம் தேவையோ அவை அனைத்தையும் செய்வேன்'' என்றான். இவ்வாறு இளையவன் பேசுவது எதுவும் பக்தியினால் தான் என்பதை

एवं मयि च ते भक्तिः भविष्यति सुदर्शिता ।

ஏவம் மயி ச தே பக்தி: பவிஷ்யதி ஸுதர்ஸிதா ॥

வா.ரா. அயோத்யா - 31

''இவ்வாறு என்னிடத்தில் உனது பக்தி நன்கு காட்டப்பட்டதாகும்'' எனும் தாஸரதியின் கூற்றினால் நன்கு அறிய முடிகிறது. இவ்வாறு லக்ஷ்மணனின் தாஸ்ய பக்தி இக்காப்பியத்தில் உரிய இடங்களில் நிரம்ப காணக் கிடக்கிறது.

ஸக்யபக்தி (ஸுக்ரீவன், ஸக்யக்ருதே அர்கஜ:)—ஸக்யம் எனில் 0தோழமை, நட்பு, பக்தி, உயர்ந்தோரிடத்தில் கொள்ளும் அன்பு பகவானிடத்திலும் அவன் அடியார்களிடத்திலும் ஏற்படும் ஸ்னேஹம். அவதார காலத்தில், இறைத்தன்மையை ஐயமின்றி முன் கூட்டியே உணராது, மனிதராகவே கருதி, ஒரளவு தனக்குச் சமமாகவே பாவித்துச் செலுத்தும் ப்ரீதியாகிற நட்பே ஸக்யபக்தியாகும். ச்வேதாச்வதரம் எனும் உபநிஷதம் அனைவர்க்கும் புகலளிக்கும் நல்லிதயமுள்ள நண்பனாகவே பரமனை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. ராமனைப் பார்த்த மாத்திரத்தில் ஸுக்ரீவன் ராமனிடம் இறைமையும் (ஈச்வரத்தன்மையும்) சான்றோர்களின் நற்குண நற்பண்புகளையும் ஒருங்கே காண்கிறான்.

''உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே, இடுக்கண்
களைவதாம் நட்பு''

குறள் - 788

மானத்தைக் காக்க ஆடை அணிகிறோம். சரியாக முறைப்படி ஆடை அணியாதவனுக்கு பலரோடு பழகும்போது அவனை அறியாமலேயே ஆடை அவிழ்ந்துவிடுகிறது. அது அவிழ்ந்து நழுவினால் அவமதிப்பு ஏற்படும். அது ஏற்படாதவாறு அவனது கைகள் அதை அவன் உணர்வதற்கு முன்னரே ஆடையை இடுப்பில் பிணைத்துவிடுகின்றன. இத் தகைய கைகள் போன்று நண்பனும் நமக்கு வரும் தீங்கை நாம் உணர்வதற்கு முன்னரே களைந்து விடுவானாம்.

இத்தகைய உற்ற நண்பனாக்கிக் கொள்ள உரியவன் என நன்கு தீர்மானித்து ராமனிடம் கவடு அற்ற அன்பைச் செலுத்துகிறான் ஸுக்ரீவன். இராமனை முதலில் சந்தித்த அனுமன் அவனது திருமேனி அழகையும் உறுப்புக்களின் அமைப்பையும் கொண்டே எம்பெருமானின் அவதாரமே ராமன் என நிஸ்சயித்துவிடுகிறான். மேலும் ஸுக்ரீவனிடமும் அதைத் தெரிவிக்கிறான். எனவே கம்பனும் ஸுக்ரீவன் வாயிலாக

''தேறினன் அமரர்க்கு எல்லாம் தேவராம் தேவரன்றே
மாறி இப்பிறப்பில் வந்தார் மானுடராகிமன்னோ''

க.ரா. கிஷ்கிந்தா.- நட்பு

''தேவதேவோத்தமனாகிய மஹாவிஷ்ணுவே மானிடராக இப்பொழுது அவதரித்திருக்கிறார்'' எனக் கூறுவன். எனவே ராமனிடம் ஏற்பட்ட பக்தியின் காரணமாகவே அக்னி ஸாக்ஷியாக

''रोचते यदि वा सख्यं बाहुरेषः प्रसारितः ।
गृह्यतां पाणिना पाणिः ।

''ரோசதே யதி வா ஸக்யம் பாஹு: ஏஷ: ப்ரஸாரித: ।
க்ருஹ்யதாம் பாணினா பாணி: ॥

வா.ரா. கிஷ்கிந்தா - 5

''என்னோடு நட்புக் கொள்வது உவப்பாக இருக்குமாகில் எனது நீட்டிய கையைப் பற்றுங்கள்'' எனக் கூறியவாறு ஸுக்ரீவன் நட்பு கொள்ள விழை கிறான்.

இங்கு சிலர் ஸக்யம் (நட்பு) ஸுக்ரீவனுக்கு ராமனோடு என்பது சரியன்று. நட்பு என்பது ஓரளவு ஸமநிலையில் இருப்பவர்கட்குள் தான் பொருந்துவது. இங்கு ராமன் ஸுக்ரீவனிடம் சரண் அடைந்ததாகத் தெரிகிறது. எனவே ராமன் தாழ்ந்த நிலையிலிருப்பதால் நட்பு என்பது பொருந்தாது என்கின்றனர்.

अहंचैव च रामश्च सुग्रीवं शरणं गतौ ।
तस्य पुत्रः शरण्यस्य सुग्रीवं शरणं गतः ॥
गुरुर्मे राघवस्सोऽयं सुग्रीवं शरणं गतः ॥

அஹம் சைவச ராமஸ்ச ஸுக்ரீவம் ஶரணம் கதௌ ॥
தஸ்ய புத்ர: சரண்யஸ்ய ஸுக்ரீவம் ஶரணம் கத: ॥
குரு: மே ராகவ: ஸோயம் ஸுக்ரீவம் ஶரணம் கத: ॥

வா.ரா.கிஷ்கிந்தா-4

''நாட்டை இழந்து, செல்வத்தை இழந்து, தாய் தந்தையரை இழந்து, காடு வந்ததும் மனைவியை இழந்து தவிக்கும் ராமன் ஸுக்ரீவனைஶ் ஶரண் அடைந்தான். இந்திரன் முதலியோருக்காக பத்துத் திசைகளிலும் தேரில் சென்று உதவி அவர்கட்கு புகலளித்த சக்ரவர்த்தி தசரதனின் மைந்தன் ஸுக்ரீவனை ஶரண் அடைந்தான். (தர்மமே உருவாய் உலகில் அனைவர்க்கும் அடைக்கலமாய்த் திகழ்ந்த ரகுவம்சத் தோன்றல் ஸுக்ரீவனை அடைக்கலமாக ஏற்கிறான் என்று நான்கைந்து தடவைகள் ஶரண் அடைந்ததாக வால்மீகி உறுதியாகத் தெரிவிக்கிறார். புகலடைய விரும்புபவனையும் புகல் அளிப்பவனையும் ஸமமாகக் கருத முடியாது. எனவே இருவருக்கும் நட்பு எவ்வாறு அமையும்.) மாறாக ஶரண் அடைந்தவனிடத்தில் புகல் அளிப்பவனுக்குக் கருணை தான் அமையும். எனவே ஸக்யமே இல்லாத போது ஸக்யபக்தியைக் கூறுவது எங்ஙனம்?'' விடை காண்மின்.

இங்கு சரணடைந்ததாகச் சொல்லும் சொற்கள் எல்லாம் ராமனுடையவை அல்ல. ஸீதையை இழந்த ராமனின் நிலையைக் கண்டு வருந்திய இளையபெருமாள் அதைக் களைய எண்ணி எப்படியாவது ஸீதை இருக்குமிடம் அறிந்து அவளை மீட்க வேண்டுமென்கிற பேரவாவினால்

உந்தப்பட்டு கூறிய வார்த்தைகளே இவை. ஆற்றுவெள்ளத்தில் தத்தளிப்பவன் தான் கரையேற வேர் அரிக்கப்பட்ட நாணல் புல்லைப் பற்றுவது போன்றதே இது. உண்மையில் ஸுக்ரீவன் ராமனைத் தெய்வமாகவே கருதிச் செயல்படுகிறான்.

वालिनः मे महाभाग । भयार्तस्याभयं कुरु ।

''வாலின: மே மஹாபாக! பயார்தஸ்ய அபயம் குரு ॥''

''வாலியினால் ஒடுக்கப்பட்டு நடுங்கிச் சாகும் எனக்கு அபயம் அளிப்பீராக''.

तव प्रसादेन नृसिंह वीर प्रियां च राज्यं च समाप्नुया महम् ।

தவ ப்ரஸாதேன ந்ருஸிம்ஹ, வீர, ப்ரியாம்ச ராஜ்யம் ச
ஸமாப்னுயாம் அஹம் ॥

வா.ரா. கிஷ்கிந்தா.- 5

ந்ருஸிம்ஹாவதாரம் எடுத்த வீரனே! மனைவி ருமையையும் ராஜ்யத்தையும் அடைய உதவுவீராக.''

''अब्रवीत् प्राञ्जलिः वाक्यं सबाष्पं बाष्पगद्गदः ।''

''அப்ரவீத் ப்ராஞ்ஜலி: வாக்யம் ஸபாஷ்பம் பாஷ்பகத்கத:''

வா.ரா. கிஷ்கிந்தா.-7

ஸீதையை இழந்த இராமனின் துன்பத்தைக் கேட்கப் பொறாதவனாய்க் கண்ணீர் ததும்ப உள்ளம் நொந்து கைகளைக் கூப்பி ஸுக்ரீவன் விடை அளிக்கலானான்.

இம்மாதிரியான ஸுக்ரீவனின் வாக்யங்களை ஆராயுங்கால் அபய ப்ரதானம் செய்தது, நரஸிம்ஹனாய் வீரச் செயல் புரிந்தது, அஞ்ஜலி செய்வதற்கு உரியனாயிருப்பது எல்லாம் பரம புருஷன் ஒருவனுக்கே பொருந்தும். எனவே ராமனிடத்தில் ஸுக்ரீவனுக்கு நட்பும் (ஸக்யமும்) பக்தியும் கலந்து இருப்பதை மிகத் தெளிவாக (ஸக்ய பக்தியை) கிஷ்கிந்தா காண்டத்தில் தெளியலாம்.

ஆத்மநிவேதன பக்தி (தனுக்ருதத்ராணே ஜடாயு:) — அகஸ்த்ய முனிவரின் கூற்றுக்கு இணங்க சக்ரவர்த்தித் திருமகனும் இளைய பெருமாளும் ஸீதையுடன் பஞ்சவடிக்குப் புறப்பட்டனர். எதிரே கழுகரசனைச் சந்தித்தனர். அவர்

उवाच वत्स ! मां विद्धि वयस्यं पितुरात्मनः ॥

உவாச வத்ஸ ! மாம் வித்தி வயஸ்யம் பிதுராத்மன: ॥

வா.ரா. ஆரண்ய - 14

இராமனை அன்புடன், ''குழந்தாய் ! நான் உனது தந்தையின் உற்ற தோழன்'' என அறிமுகம் செய்து கொண்டார். மேலும் நான் கருடனின் உடன் பிறப்பான அருணனின் குமாரன். என்னை ஜடாயு என அழைப்பர் என விளக்கி ''நான் உனக்கும் உன் தந்தைக்கும் மிக நெருங்கிய நண்பனாவேன்.

सोऽहं वास सहायस्ते भविष्यामि यदीच्छसि ।
सीतां च तात रक्षिष्ये त्वयि याते सलक्ष्मणे ॥

ஸோஹம் வாஸ ஸஹாயஸ்தே பவிஷ்யாமியதி இச்சஸி,
ஸீதாம் ச தாத ரக்ஷிஷ்யே த்வயி யாதே ஸலக்ஷ்மணே.

வா.ரா. ஆரண்ய.- 14

''அரக்கர்கள் குழுமிய இக்காட்டில் வஸிக்க இருக்கும் உனக்கு உற்ற துணையாக இருப்பேன். நீங்கள் இருவரும் வெளியில் செல்லும் போது ஸீதையைப் பாதுகாத்துக் கொடுப்பேன்'' என்றார். பின்னர் இராவணன் ஸீதையைப் பறித்துச் செல்லும் போது தனது முழு வலிமையையும் உபயோகித்து அவ்வரக்கனுடன் போரிட்டார். இராவணன் எய்திய அம்புகளைப் பல தடவை தன் இறகுகளாலே ஒடித்தும், கால்களினால் வில்லை ஒடித்தும், அழகிய தேரை உடைத்தும், வெண்கொற்றக்குடை, சாமரம் முதலியவற்றை வீழ்த்தியும், அவன் ஸாரதியை அலகினால் மாய்த்தும், அலகினாலும் நகங்களினாலும் ராவணன் உடல் முழுவதும் ரத்த வெள்ளம் பெருகச் செய்தும், ஸீதையைத் தாங்கி நிற்கும் இடப்புறக்கைகள் பத்தையும் துண்டித்து விழச்செய்தும் நிகரற்ற போர் வீரனாகத் திகழ்ந்தார். கடைசியில் தனது இறக்கைகளையும் கால்களையும் இராவணன் துண்டிக்க, வேறுவழி யின்றித் தரையில் சாய்ந்தார். ஜடாயு நிகழ்த்திய போரை ''அத்புதம் யுத்தம்'' என வால்மீகி புகழ்கிறார். ''ஸீதையைப் பாதுகாக்கிறேன்'' என இராமனிடம் கூறிய உறுதி மொழிக்கிணங்க தன் உடல் கீழே சாயும் அளவும் போரிட்டு ஸீதையை மீட்க முயன்றார்.

जटायो हरणं यावत् मम रामाय वक्ष्यसि ।
तावत् शरीरे ते प्राणाः सञ्चरिष्यन्ति धीरपि ॥

''ஜடாயோ ஹரணம் யாவத் மம ராமாய வக்ஷ்யஸி ।
தாவத் சரீரேதே ப்ராணா: ஸஞ்சரிஷ்யந்தி தீரபி ॥

அத்யாத்ம ராமாயணம்

''ஜடாயுவே! நான் ராவணனால் பறித்துச் செல்லப்படுவதை ராமனிடம் விண்ணப்பிக்குமளவும் உம் சரீரத்தில் உயிரும், நினைவாற்றலும் இருக்கும்'' எனும் ஸீதையின் அருள் வாக்கினால் இச்செய்தியை அறிவிக்கும் பாக்யத்தைப் பெற்றார். இராமன் அங்கு வந்ததும் வாத்ஸல்ய பக்தியினால் சிறகால் அணைத்து, மூக்கினால் உச்சிமுகந்து, நடந்த நிகழ்ச்சியைக் கூறிப் பரமனிடம் நேரிலேயே தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் பாக்யத்தைப்

பெற்றார். ஜடாயு, மோக்ஷத்தைப் பெறுவதற்குரிய உபாயமான பக்தியைப் பெற்றிருந்தார் என்பதை:

अन्तकालेऽपि दृष्ट्वा त्वां मुक्तोऽहं रघुसत्तम ।
हस्ताभ्यां स्पृश मां राम । पुनर्यास्यामि ते पदम् ॥

அந்தகாலேபி த்ருஷ்ட்வா த்வாம் முக்தோஹம் ரகுஸத்தம ।
ஹஸ்தாப்யாம் ஸ்பிருச மாம் ராம ! புனர்யாஸ்யாமி தேபதம்:

''பஞ்சவடியில் பலதடவை உன்னை ஸேவிக்கும் பாக்யம் கிட்டிய தோடன்றி இப்பூத உடல் நீங்கும் காலத்திலும் எனக்கு அந்திம ப்ரத்யக்ஷம் கிடைத்தது. ஒரு தடவை உன் இருகைகளாலும் என்னைத் தடவிக் கொடு. முக்தனாய் உன் திருவடியை (வைகுண்டத்தை) அடைகிறேன்'' எனும் அத்யாத்மராமாயண வாக்யம் விளக்குகிறது.

மஹாநாடககாரரும்: ''ராமேதிமாத்ரம் அனிசம் நிகதன் முமுக்ஷு'' என ஆவி பிரியும் காலத்தில் மோக்ஷத்தை விரும்பியவராய் ராமமந்த்ரத்தை ராமனை விளிக்கும் வியாஜத்தில் ஜபித்தார் என்கிறார்.

வால்மீகத்திலும் வானவீதியில் இராவணன் தன்னைப் பறித்துச் செல்வதைச் சக்ரவர்த்தி திருமகன் அறியவேண்டும் என்பதற்காக ஸீதை ''ஓ ஜடாயுவே! இக்கொடிய அரக்கனை இச்செயலினின்றும் தடுக்க முடியாது, ஆயினும் எனது நிலையை முழுவதுமாக பெருமாளுக்கும், இளைய பெருமாளுக்கும் கட்டாயம் தெரிவிப்பாயாக'' என உரத்த குரலில் சொல் கிறாள். இவ்வார்த்தையை துக்கத்தில் ஆழ்ந்திருந்த ஜடாயு கேட்கிறார். உடனே ராவணனைப் பார்த்துப் பேசலானார். இங்கு

वनस्पतिगतः श्रीमान् व्याजहार शुभांगिरम्

வநஸ்பதிகத ஸ்ரீமான் வ்யாஜஹார சுபாம்கிரம்

வா.ரா. ஆரண்ய. - 50

மரத்திலிருந்த ஜடாயு மங்களமான வார்த்தையைப் பேசினார் என்று சொல்லும் போது 'ஸ்ரீமான் ஜடாயு' என்கிறார் முனிவர். யுத்தகாண்டத்தில் விபீஷணனை ''அந்தரிக்ஷகத: ஸ்ரீமான்'' என்று வால்மீகியும், கஜேந்திரனை சுகர் ''ஸதுநாகவர: ஸ்ரீமான்'' என்று கூறி பக்தி ஸ்ரீயையும், இதன் விளை வான பகவத் கைங்கர்ய ஸ்ரீயையும் குறிப்பிடுவதுபோல், ஜடாயுவும் பக்தி ஸ்ரீயை உடையவர் எனலாம். எனவே ஒன்பது வகையான பக்தியை வெளியிடும் இராமகாதையையும் பக்தி நூல் என சிறப்பித்துக் கூறுவதும் உண்மைதானே!

கவிஞர்களின் தீர்ப்பு

நம் நாட்டில் போஜ அரசனின் காலம் ஸம்ஸ்கிருத இலக்கியத்திற்கு ஒரு பொற்காலமாகும். போஜனின் அவையில் பலப்பல கவிகள் மிகப் புகழ் பெற்று விளங்கினர். சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தனர். அவர்களுள் காளிதாஸனுக்கு அலாதியான மதிப்பு. பன்னாட்டவர்களால் போற்றப்பட்டு உலகப் பேரிலக்கியமாகத் திகழும் 'சாகுந்தல' மஹா நாடகம் காளிதாஸனின் அற்புதப் படைப்பாகும். ''உபமா காளிதாஸஸ்ய'' உவமை அணியில் காளிதாஸ மஹாகவி நிகரற்றவர் எனச் சிறப்பித்துக் கூறுவர். ஸாதாரணப் பேச்சுக்களிலும் உவமை அணிமிளிரும்.

ஒரு வறிஞன் ஏழ்மையின் காரணமாக போஜ அரசனை அணுகிப் பொருள் வேண்ட வந்தான். மிக மிக சிரமப்பட்டு பாதி சுலோகத்தை இயற்றினான்.

भोजनं देहि राजेन्द्र घृतसूप समन्वितम् ।

''போஜனம்தேஹி ராஜேந்த்ர க்ருத ஸூப ஸமன்விதம் ।

''பேரரசே! நெய்பருப்புடன் கூடிய சாப்பாட்டைக் கொடு'' என்று எழுதின அவனால் எவ்வளவோ முயன்றும் அடுத்த அடியை இயற்ற முடிய வில்லை. அவன் அரண்மனைக்குச் செல்லும் வழியில் காளிதாஸனைச் சந்தித்து தன் அவல நிலையை விரித்துக் கூறினான். மஹாகவி உடனே:

माहिषं च शरच्चन्द्र चन्द्रिका धवलं दधि ।

மாஹிஷம் ச சரச்சந்த்ர சந்த்ரிகாதவளம் ததி ।

''சரத் காலத்தில் (ஐப்பசி கார்த்திகை) மதியின் நிலவொளி போன்று வெண்மையான எருமைத் தயிரையும் கொடு'' எனப்பூர்த்தி செய்து கொடுத்தான். அரசன் உணவு அளிக்காவிட்டாலும், இந்த இரண்டாம் அடியின் ரஸத்தைச் சுவைக்கச் சுவைக்க வயிறு நிரம்பிவிடும் போலிருந்தது வறிஞனுக்கு. அரசனிடம் இச்சுலோகத்தை வறிஞன் விண்ணப்பிக்கும் போது போஜன் இவ்வுவமையைக் கேட்டதும் காளிதாஸனைப் பார்த்தா னாம். வேறு எவரால் இவ்வணியை அழகாகக் கையாள முடியும். இத்தகைய அணிகள் நிறைந்த காளிதாஸனின் காப்பியங்களைக் கேட்டுக் கேட்டு அரசனும் கவிஞனும் உயிரும் உடலும் போல் ஆயினர்.

ஒரு நான் போஜனுக்கு ஒரு பேராசை தோன்றியது. அதாவது நாம் இறந்தால் நம் அவைக் கவிஞர்கள் அனைவரும் நம்மைப் பற்றி சரம சுலோகம் (இரங்கற்பா) இயற்றிப் பாடுவார்கள் அல்லவா? அவற்றுள் நம் மஹாகவியின் இரங்கற்பா கற்பனை வளம் நிரம்பி மிக அழகாக இருக்குமே'

அதைக் கேட்க நமக்கு பாக்கியம் இல்லையே! என வருந்தியவனாய் காளிதாஸனுக்குத் தன்னைத் தனிமையில் சந்திக்க ஓலை அனுப்பினான். கவிஞன் வந்ததும் தனது பேரவாவினை வெளியிட்டு அதை நிறைவேற்றும் படி வேண்டினான்.

''அரசே! மனிதர்கட்கு ஆற்றல் இருப்பினும் செய்ய வேண்டியவை பல, செய்யக்கூடாதவை சில. இவற்றுள் சில தர்ம சங்கடமானவை. அதாவது அரசனின் ஆணைக்குக் கீழ்ப்படியவும் வேண்டும். அதே நேரத்தில் சில வற்றுக்குக் கீழ்ப்படியவும் கூடாது. இவ்வினத்தைத் சேர்ந்தது உமது அவாவும் உத்திரவும்'' என்றான்.

போஜன்: கவிஞரே! என் அவாவை நிறைவேற்றுவதில் உமக்குத் தயக்கமேன்?

கவிஞன்: மன்னா! என் பெயரை நீர் அறியீர் போலும்.

போஜன்: ஏன் அறியேன்? காளிதாஸன் தானே, வேறு பெயரும் உண்டோ!

கவிஞன்: இல்லை, அதே பெயர்தான், அது காரணப் பெயராகும். என் வரலாற்றினை அறியீரோ?

போஜன்: ஓரளவு அறிவேன். காளியின் வரத்தினால் நாவன்மை பெற்றவர் என்று.

கவிஞன்: ஆம், அதற்காகவே தயங்குகிறேன். உமது விருப்பப்படி பாடினால் எனது வாக்கு உண்மையாகி விடும், என கண்ணீர் தளும்பக் கூறினான்.

போஜன்: உண்மையான அரசனுக்கு உயிர் ஒரு பொருட்டன்று. உமது கவிதைச் சுவையைப் பருகிப்பருகி இன்புறுவதை விட உயிர் பெரிதன்று. விரைவில் பாடத் தொடங்கும், என கட்டளைத் தொனியில் கூறினான்.

கவிஞன்: முடியாது, முடியவே முடியாது, நண்பரின் முகம் வாடுவதைக்கூட, சிறிதும் காணச்சகியேன்.

போஜன்: என் சொற்கேளாதவருக்கு என் நாட்டில் இடமில்லை தேசப் பிரஷ்டம் (நாடுகடத்தல்) செய்யப்படுவீர்.

கவிஞன்: தேசம் விசாலமானது. கற்றோர்க்கு உலகம் முழுவதும் சொந்தம்.

மறுநாள் அரண்மனையிலிருந்து உத்தரவு பிறந்தது. ''காளிதாஸர் தேசப்ரஷ்டம் செய்யப்பட்டார்'' என்று. தாராபுரத்திலிருந்து வெளியேறிய காளிதாஸன் காவி உடை உடுத்தி, பிக்ஷுவாக ஆங்காங்கு பிச்சை எடுத்து தம் பொழுதைப் போக்கினார். போஜனிடமுள்ள முதிர்ந்த நட்பின் காரணமாகத் தமக்கு வந்த இன்னல்களைத் தெய்வத்தால் வந்ததெனக் கருதி அவற்றைப் பொறுமையுடன் ஏற்று பழைய நட்பின் நினைவலைகளில் மூழ்கி மகிழ்வுடன் இருந்தார்.

அழிவின் அவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின் கண்
அல்லல் உழப்பதாம் நட்பு குறள் : 787

துன்பங்களை விளைவிக்கும் தீய வழிகளில் செல்லாது அவற்றை விலக்கி நன்னெறிகளிலேயே மனதைச் செலுத்தி, தெய்வத்தால் எதிர் பாராத துன்பங்கள் நேர்ந்த பொழுது அவற்றை நண்பனுடன் தானும் சேர்ந்து அனுபவிப்பதே நட்பு என்பர்.

இம்முறையில் போஜனும், தன்னையும் அறியாது இட்ட உத்தர வினால் நேர்ந்த பிரிவுத் துயரை எண்ணி எண்ணி என்ன நேரினும் நண்பனைத் தேடிக் கண்டு விடுவது என முடிவுக்கு வந்தான்.

அக்காலத்தில் நாடாளும் மன்னர்கள் நாட்டு நடப்பைத் தூதர்கள் மூலம் அறிவதுமட்டுமின்றி, தாங்களே பற்பல வேடம் பூண்டு பல பிரிவினரான மக்களோடு நெருங்கிப் பழகி உண்மையை நேரிலும் உணர்ந்து, அவர்தம் இன்னல்களைப் போக்கி, ஆட்சி செய்து வந்தனர். எனவே பற்பல வேடங்கள் தாங்கிப் பிறர் அறியாவண்ணம் பொது மக்களிடையே பழகும் பழக்கத்தைப் போஜன் பயன்படுத்திக் கொண்டான். ஒரு குடு குடுப்பாண்டி வேடம்பூண்டு நாடெங்கிலும் திரிந்து, சோர்ந்து ஒரு மரத்தடிக்கு வந்து சேர்ந்தான். அதன் அருகில் ஒரு மாமிசக் கடை. அங்கு ஒரு பிக்ஷு நிற்பதைப் பார்த்தான். அவர் உணவிற்காக ஊரெங்கும் சுற்றுபவரானபடியால் அவரை விசாரித்தால் காளிதாஸனைத் தேடுவது எளிதாகலாம் என நினைத்து அருகிற் சென்று பேசலானான்.

குடு குடுப்பாண்டி: भिक्षोमांस निषेवणं किमुचितं—பிக்ஷோ! மாம்ஸ நிஷேவணம் கிம் உசிதம்?—ஸந்யாஸியே! மாமிசத்தைப் புசிப்பது உமக்குத் தகுமோ?

பிக்ஷு: கேள்வி பாவடிவில் அமைந்திருந்தபடியால் தானும் சுலோக உருவிலேயே விடையளித்தான். किं तेन मद्यंविना—கிம்தேன மத்யம் விநா—வெறும் மாமிசத்தைப் புசிப்பதில் யாது பயன்? ஒரு மொந்தை கள் இல்லாது போனால் அது ஜரிக்காதே!

குடு: मद्यं चापि तव प्रियं—மத்யம் சாபி தவ ப்ரியம்?—கள்ளும் உமக்குப் பிடிக்குமோ?

பிக்ஷு: प्रियमहो वाराङ्गनाभिस्सह—ப்ரியம் அஹோ வாராங்கனாபி: ஸஹ,—ஓ! ரொம்ப பிடிக்குமே. அதை ஒண்டியாகப் பருகுவதில் ஒரு பயனுமில்லை. விலைமாதர்களோடு சேர்ந்து பகிர்ந்துப் பருகுவதுதான் எனக்கு வழக்கம்.

குடு: वारस्त्री परिषेवणे किमु धनं—வாரஸ்த்ரீ பரிஷேவணே கிமு தனம்?—எடுப்பதோ பிச்சை, விலைமாதர்கட்கு நிறைய விலை (பணம்) கொடுக்க வேண்டுமே, பணத்திற்கு எங்கே போவீர்?

பிக்ஷு: द्यूतेन चौर्येण वा—த்யூதேன சௌர்யேண வா—எனக்கு நன்கு சூதாடத் தெரியும். சூதாடிப் பணத்தை ஸம்பாதிப்பேன். ஒருவேளை தோற்றுப் பணம் கிடைக்காது போனால், எங்கேயாவது திருடிப் பணத்தைத் திரட்டுவேன்.

குடு: चौर्य द्यूत परिग्रहः तव मतः—சௌர்ய த்யூத பரிக்ரஹ: தவ மத:—திருடவும் சூதாடவும் உமது மனச்சாட்சி ஸம்மதிக்கிறதா?

பிக்ஷு: भ्रष्टस्य का वा गतिः—ப்ரஷ்டஸ்ய காவா கதி: ஒழுக்கத்தினின்றும் வழுவினவனுக்கு மனச்சாட்சி வேறு இருக்கிறதா?

போஜனுக்கு வேறு பொருள் இவ்வடிக்குத் தோன்றியது, அதாவது மனை, மனைவி, மக்கள், சுற்றம் இவர்களினின்றும் பிரிக்கப்பட்டு தேசப்ரஷ்டம் செய்யப்பட்டவனுக்கு வேறு வழி ஏது என்று.

भिक्षो! मांस निषेवणं किमुचितं, किं तेन मद्यंविना
मद्यं चापि तव प्रियं, प्रियमहो वाराङ्गनाभिस्सह ।
वारस्त्री परिषेवणे किमु धनं, द्यूतेन चौर्येण वा
चौर्य द्यूत परिग्रहस्तव मतः, भ्रष्टस्य का वा गतिः ॥

பிக்ஷோ மாம்ஸ நிஷேவணம் கிம் உசிதம்! கிம் தேன மத்யம் விநா!
மத்யம் சாபி தவப்ரியம்? ப்ரியம் அஹோ வாராங்கனாபிஸ்ஸஹ ।
வாரஸ்த்ரீ பரிஷேவணே கிமு தனம்? த்யூதேன சௌர்யேணவா ।
சௌர்ய த்யூதபரிக்ரஹஸ் தவ மத: ப்ரஷ்டஸ்ய காவா கதி: ॥

கேள்விக்கேற்றபடி பாவடியிலேயே பதில் அளித்த முறையையும், தேசப்ரஷ்டம் செய்யப்பட்டவன் என்பதையும் குறிப்பால் உணர்த்தியதையும், குரல் ஓசையின் வன்மையையும், சீர்தூக்கி ஆராய்ந்த போஜன் (குடுகுடு பாண்டி) காளிதாஸனே பிக்ஷு வேடம் பூண்டவன் எனும் முடிவுக்கு வந்தான். எனினும் பொறுத்துப் பார்க்க எண்ணியபொழுது

பிக்ஷு: குடுகுடுபாண்டியே ! தாங்கள் எந்த ஊரோ?

குடு: என் ஊரா! தாராபுரர்; யாத்திரையாகக் கிளம்பி வந்தேன்.

பிக்ஷு: உங்கள் ஊர் அரசர் கவிஞர்களை மிக மிகப்போற்றுவாராமே? அவரைச் சந்திக்க வேண்டுமென்று ஆசை. பேட்டி கொடுப் பாரோ?

குடு: (தழுதழுத்த குரலில்) அவரையா? அவர் விண்ணுலகு எய்தி இன்று ஆறு நாட்கள் ஆகின்றனவே.

பிக்ஷு: அப்படியா! (மயங்கிக் கீழே விழுந்தான்.) போஜன் அவரை மடியில் தாங்க, பிக்ஷு புலம்பலானான்.

अद्य धारा निराधारा निरालम्बा सरस्वती ।
पण्डिताः खण्डिताः सर्वे भोजराजे दिवं गते ॥

அத்ய தாரா நிராதாரா நிராலம்பா ஸரஸ்வதீ ।
பண்டிதா: கண்டிதா: ஸர்வே போஜ ராஜே திவம் கதே ॥

''இன்று தாராபுரம் மக்களை தாங்கும் புரவலனை இழந்து தவிக் கின்றதே! கலைவாணியே! நீ களிநடனம் புரிந்த அரங்குகள் அனைத்தும் பரிதவிக்கின்றனவே''. புலவர் பெருமக்களே:

''निराश्रयाः न शोभन्ते पण्डिताः वनिताः लताः''

''நிராச்ரயா: ந சோபந்தே பண்டிதா; வனிதா: லதா:

''தக்க ஆஶ்ரயத்தை (ஆஶ்ரயம்: ஆதரிப்பவர், கணவர், கொழு கொம்பு) இழந்த அறிஞர்கள், பெண்கள், கொடிகள் ஆகியோர் சோபிக்க மாட்டார்கள் என்பார்களே, அது இன்று உண்மை யாயிற்றே. போஜராஜனே! செங்கோலால் அணைத்து ஆதரித்த மக்களையும், கல்வியையும், மற்ற கலைகளையும் போற்றிய பாங்கினைக் கண்டு மகிழ்ந்து உன் நாட்டையே தனக்கு உறைவிடமாகக் கொண்ட கலையரசியையும், போற்றிப் புகழ்ந்து உம்மையே தம் உயிராகக்கொண்ட புலவர்களையும் விட்டு விண்ணேக மனம் துணிந்தாயோ?'' எனப் புலம்பினான்.

போஜன் : மஹாகவி காளிதாஸனா? என் ஆசை நிறைவே... என பேச்சின் இடையிலேயே கவிஞன் மடியிலேயே சாய்ந்தான். உயிரும் பறந்தது.

கவிஞன்: ''அரசனே! உயிர் துறக்கவோ இவ்வேடம் பூண்டாய்!'' என்று அலறினான், பதறினான், கட்டி அணைத்தான்.

ஒரு யோசனை தோன்றியது. இரு கரங்களையும் குவித்து வானத்தை நோக்கிய வண்ணம் கலைவாணியைத் துதித்தான். *அவளும் பிரத்யக்ஷ மானாள். ''நீ பாடிய ச்லோகத்தைத் திருப்பிப்பாடு. அரசன் உயிர் பெற்று எழுவான்'' என்று அருளினாள். ''ஆனால் 3¾ நாழிகை தான் (1½ மணி) வாழ்வான்'' என்றாள். உடனே கவிஞன்*

अद्य धारा सदाधारा सदालम्बा सरस्वती ।
पण्डिताः मण्डिताः सर्वे भोजराजे भुवं गते ॥

அத்ய தாரா ஸதாதாரா ஸதாலம்பா ஸரஸ்வதீ ।
பண்டிதா: மண்டிதா: ஸர்வே போஜராஜே புவம் கதே ॥

''இம்மேதினியில் இன்று போஜராஜனின் நல்லாட்சி நிலவுகின்ற காரணத்தினால் தாராபுரம் பண்புள்ள ஒரு காவலனைப் பெற்றது. ஸரஸ்வதியும் தன்னைப் போற்றும் அறிவும் ஆற்றலும் மிக்க அரசனைப் பெற்றாள். பரிசில்களும், பொற்கிழியும் அளித்து வாழ்விக்கும் கவிராஜனைப் பெற்று புலவர்கள் மகிழ்ந்தனர்'' என்று பாடியதும் தூங்கியவன் விழித்தெழுவது போன்று அரசன் உயிர் பெற்று எழுந்தான்.

இருவரும் ஈருடல் ஒருயிராய் இறுகத் தழுவிக் கொண்டனர். ஒன்றரை மணி நேர வாழ்வில் நாட்டுக்கும் நமக்கும் நலம் நல்கும் நற்பணியைச் செய்ய வேண்டும்; என்ன செய்யலாமென ஆராய்ந்து ஒரு நொடியில் தீர்வு கண்டனர். பழவினைகளும் பாபங்களும் தேய ஸ்ரீராமாயணம் பாடினர். உரைநடையும் பாநடையும் மிளிரும் அக் காப்பியத்தைத்தான் போஜ சம்பூ என அரசன் பெயரால் குறிப்பிடுகிறோம். ஸ்ரீபாகவதம் பரீக்ஷித்து மஹாராஜாவின் ஜன்ம ஸாபல்யத்துக்காக ஏழு நாட்களில் பிறந்தது. சம்பூராமாயணமோ மூன்றே முக்கால் நாழிகையளவில் தோன்றியது. இராமகாவியத்தின் சிறப்பைப் பற்றிய கவிஞர்களின் தீர்ப்பு யாதென புகலவும் வேண்டுமோ!

ராமாயணத்தின் ஏற்றம்

ஸுமதியின் சரித்திரம்

த்வாபர யுகத்தில் ஸுமதி எனும் ஒரு அரசன் இருந்தான். இவன் ஸோம வம்சத்தில் பிறந்தவன். பரமதார்மிகன்; இராமனை அர்ச்சிப்பதிலும், ராமகதையைக் கேட்பதிலும் ஈடுபாடு உடையவன். அவனுக்கேற்றவாறு மனைவியும் வாய்த்திருந்தாள். அவள் சத்தியவதீ. பதியையே தன் உயிராகப் போற்றும் கற்புக்கரசி. குளம், நந்தவனம், கிணறு போன்ற பொதுமக்கட்குப் பயன்படக் கூடிய திருப்பணிகளை இத்தம்பதிகள் செய்து வந்தனர். இவர்களின் அறப்பணிகளையும், ராமபக்தியையும் மேலுலகில் தேவர்களும் புகழத் தொடங்கினர்.

ஒருநாள் விபண்டக முனிவர் தமது சீடர்கள் பின் தொடர ஸுமதியைப் பார்க்க வந்தார். அரசன் முனிவருக்கு அர்க்ய பாத்யாதிகளைக் கொடுத்து ஆஸனத்தில் அமர்த்தி, வணங்கி அவர் அனுமதி பெற்று அமர்ந்து பேசலானான்.

''முனிவரே! உம் வரவு நல்வரவாகுக. ஒருவனுக்கு மஹான்களின் அருளும் அன்பும் இருக்குமாகில், அவனுக்கு தேஜஸ், புகழ், தனம், மக்கட்பேறு ஆகிய எல்லாச் செல்வங்களும் போட்டியிட்டுக் குவிகின்றன எனப் பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன்''.

यत्र स्यात् महतां प्रेम तत्र स्युः सर्व सम्पदः ।
तेजः कीर्तिः धनं पुत्रः इति प्राहुः विपश्चितः ।।

யத்ர ஸ்யாத் மஹதாம் ப்ரேம தத்ர ஸ்யு: ஸர்வஸம்பத: ।
தேஜ: கீர்த்தி: தனம் புத்ர: இதி ப்ராஹு: விபஶ்சித: ॥

''மேலும் செந்தண்மை பூண்டு ஒழுகும் அறவோராகிய அந்தணரின் திருவடிகளில் பட்ட தீர்த்தத்தை எவனொருவன் தன் தலை மீது தாங்குகிறானோ அவன் எல்லாப் புண்ய தீர்த்தங்களிலும் நீராடிய பலனைப் பெறுகிறான்.''

यो मूर्ध्नि धारयेत् ब्रह्मन् विप्र पादतलोदकम् ।
स स्नातो सर्वतीर्थेषु पुण्यवान् नात्र संशयः ।।

யோ மூர்த்னி தாரயேத் ப்ரஹ்மன் விப்ர பாததலோதகம் ।
ஸ ஸ்நாதோ ஸர்வதீர்த்தேஷு புண்யவான் நாத்ர ஸம்ஶய: ॥

''எனவே இன்று நாங்கள் தன்யர்களானோம். சாந்த ஸ்வரூபியான முனிவரே! அடியோங்கள் என்ன செய்ய வேண்டுமோ? உத்தரவிடுங்கள்'' என்றான்.

இதைக்கேட்டு விபண்டகர், ''அரசே! பணிவு உடையோர் உலகில் அனைத்து நலன்களையும் பெறுவர். நீர் கூறியது முற்றிலும் உண்மையே. திருமாலின் பெருமைகளைப் புராணங்களும் இதிஹாஸங்களும் பரக்கப் பேசுகின்றன. திருமாலும் பற்பல அவதாரங்களை எடுத்து மக்களை வாழ்வித்திருக்கிறார். அவற்றுள் தங்களுக்கு, இராமபிரானிடத்தில் மிகுந்த பக்தியையும், இராமாயணத்தைப் படிப்பதிலும், கேட்பதிலும், பிறருக்கு மகிழ்ச்சியுடன் எடுத்தியம்புவதிலும் உள்ள பேரவாவையும் காண்கிறேன். யாது காரணமோ? யான் அறியலாமோ?'' என்றார்.

ஸுமதி: ''முனிவரே! உண்மையைத் தங்களிடம் கூறத் தயக்கமேன். நான் முற்பிறவியில் மாலதி என்ற பெயருடன் நான்காம் வர்ணத்தில் பிறந்தேன். தீ நெறியில் சென்று பாபச் செயல்களைப் புரிந்தேன். நல்லறப் பணிகளைப் பழிப்பேன். கோயில் சொத்துக்களில் ஒரு கண். திருடுவதைக் கலையாகவே பயின்றேன். உயிர்க்கொலைக்கு அஞ்சேன். விலைமாதர் உறவு, கோஹத்தி, ப்ரம்ஹஹத்தி, நல்லோரை ஒறுப்பது எல்லாம் எனக்கு விளையாட்டாக அமைந்தவை. ஒரு நாள் உணவிற்காக வேட்டைக்குச் சென்றேன். எதுவும் சிக்கவில்லை. உச்சிவேளை, நல்லபசி, மரணதாகம். சுற்றிச் சுற்றிக் கடைசியில் வஸிஷ்டரின் ஆஶ்ரமத்திற்குச் சென்றேன். அதன் அருகில் பெரியதோர் தாமரைப் பொய்கை. அதில் வயிறு நிரம்பத் தண்ணீரைப் பருகிக் கரையிலுள்ள மர நிழலில் இளைப்பாறினேன். பின்னர் வேட்டைக்குச் செல்வதும் அங்கு வந்து தங்குவதுமாக இருந்தேன். ஒருநாள் ஒருவேடுவப் பெண், அவள் பெயர் காளீ. தன் உறவினரைப் பிரிந்து, வழி தடுமாறி, பசிதாகங்களினால் சோர்வுற்று நான் இருக்குமிடம் வந்தாள். அவளுக்குப் பருக நீரையும் புசிக்கக் காட்டுப் பழங்களையும் கொடுத்து உதவினேன்''.

''அவள், தான் விந்திய மலைச்சாரலில் வசிப்பவள் என்றும், கோள் சொல்வதையும், திருடுவதையும் தொழிலாகக் கொண்டவள் என்றும், தன் கைப் பிடித்த கணவனைக் கொன்றதின் காரணமாக உறவினர்களால் கை விடப்பட்டு இங்கு வந்ததாகவும், தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். பின்னர் இருவரும் அங்கேயே தம்பதிகளாக வாழ்ந்தோம். அப்பொழுது மாகமாதம் (மாசி). வஸிஷ்டரின் ஆஶ்ரமத்தில் ஒரே கோலாஹலமாக இருந்தது. ஒருவர் ராமாயணம் சொல்ல மஹர்ஷிகள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். தொடர்ந்து ஒன்பது நாள் நிகழ்ந்தது. நாங்களும் ஒன்பது நாட்களும் விடாமல் கதையைக் கேட்டோம்''.

''அக்கதை முடிந்த தினமே எங்கள் ஆவியும் பிரிந்தது. ராமதூதர்கள் எங்களை ராமபவனத்திற்கு விமானத்தில் அழைத்துச் சென்றார்கள். அங்கு

திவ்ய போகங்களை அனுபவித்துவிட்டுப் பிறகு பிரஹ்ம லோகத்திலும், இந்திர லோகத்திலும் இன்பமாக வாழ்ந்து பூமியில் பிறவியைப் பெற்றோம்''.

ततः पृथ्वीं वयं प्राप्ताः क्रमेण मुनिसत्तम ! ॥

தத: ப்ருத்வீம் வயம் ப்ராப்தா: க்ரமேண முனிஸத்தம ! ॥

''மாசிமாதம் சுக்லபக்ஷத்தில் ராமாயணத்தை ஒன்பது நாள் கேட்டதின் பயனாக ஸோம வம்ஸத்தில் பிறந்து ராஜாவாகவும், ராணியாகவும் இருக்கக் கூடிய பாக்யத்தைப் பெற்றோம்'' என்றான்.

ஸ்காந்தம் உத்தர காண்டத்தில் நாரத ஸனத்குமார ஸம்வாதத்தில் இக்கதை காணப்படுகிறது.

கலிகன் வரலாறு

மேலும் சித்திரை மாதத்தில் ஒன்பது நாள் ராமாயண பாராயணம் செய்வது, சொல்வது, கேட்பது இவற்றின் பலனை மற்றொரு சிறுகதை ஸ்காந்தத்தில் உணர்த்துகிறது.

இக்கலியுகத்தின் ஆரம்பத்தில் கலிகன் என ஒரு வேடுவன் வாழ்ந்து வந்தான். அவன் பிறன்மனை விழைதல், பிறர் பொருளைக் கவர்தல் போன்ற மாபெரும் பாதகச் செயல்களில் ஈடுபட்டு வந்தான்.

परदार परद्रव्य हरणे सततं रतः ।
तेन पापानि अनेकानि कृतानि सुमहान्ति च ॥

பரதார பரத்ரவ்ய ஹரணே ஸததம் ரத: ।
தேன பாபானி அனேகானி க்ருதானி ஸுமஹாந்தி ச ॥

ஸ்காந்தபுராணம் – இராமாயண மாஹாத்மியம்

கலிகன் ஒரு ஸமயம் ஸௌவீர நகரத்திற்குச் சென்றான். அங்குள்ளவர்களின் இராமாயண ஈடுபாட்டினால் நகர் செழித்து வளர்ந்திருந்தது. போகும்போது ஒரு நந்தவனத்தைக் கண்டான். அதன் நடுவே அழகிய ராமமந்திரம். அதில் பல பொற்குடங்களையும், தங்க நகைகளையும் கண்டான். அவற்றைக் கண்டதுமே கவரத் தூண்டியது மனம். மெள்ள மெள்ள ராமபவனத்தில் நுழைந்தான். உள்ளே ஒரு வைதிக அந்தணர், அவர் பெயர் உத்தங்கர். அவரது கருணையே வடிவெடுத்த முகமும், திருக் கண்களும் பற்றற்ற தவநிலையைக் காட்டின. ராமத்யானத்திலிருந்தார் அவர். அங்கிருந்த பொற் குடங்களைக் கவர விரும்பிய கலிகன் அவர் மீது வேகமாகப் பாய்ந்தான்.

उत्तङ्कं हन्तुमारेभे उद्यतासिर्मदोद्धतः ।
पादेनाक्रम्य तद्वक्षः गलं संगृह्य पाणिना ॥

உத்தங்கம் ஹந்தும் ஆரேபே உத்யதாஸி: மதோத்தத: ।
பாதேன ஆக்ரம்ய தத் வக்ஷ: கலம் ஸங்க்ருஹ்ய பாணினா ॥

உத்தங்கரைக் கீழே சாய்த்தான். ராமனை தியானம் செய்து கொண்டிருக்கும் திருமார்பின் மீது ஒரு காலை வைத்து அழுத்திக் கொண்டான். ஒரு கையால் அவர் கழுத்தை இறுகப் பற்றிக் கொண்டு மற்றொரு கையால் உறையினின்றும் வாளை உருவினான். இந்நிலையில் அந்தணரின் தியானமும் மௌனமும் கலைந்து, பேசலுற்றார் :-

हन्तुं कृतमतिं व्याधं उत्तङ्को प्रेक्ष्य चाब्रवीत् ।
भो भो साधो वृथा मां त्वं हनिष्यसि निरागसम् ॥
मया किं अपराद्धं ते तद्वद त्वं च लुब्धक ! ॥

ஹந்தும் க்ருதமதிம் வ்யாதம் உத்தங்க: ப்ரேக்ஷ்ய சாப்ரவீத் ।
போ போ: ஸாதோ! வ்ருதா மாம் த்வம் ஹனிஷ்யஸி நிராகஸம் ॥
மயா கிம் அபராத்தம் தே? தத்வத த்வம் ச லுப்தக! ॥

தன்னைக் கொல்லத் துணிந்த வேடுவனை ''ஏ ஸாதுவே'' என அழைத்தார். ''குற்றமற்ற என்னை ஏன் கொல்லத் துணிந்தாய்? உன் செயலுக்கு நான் என்ன இடையூறு செய்தேன்? ஏதாவது தீங்கினை யான் இழைத்திருப்பின் அதைக் கூறுவாயாக'' என்றார். மேலும் நல்லோர்கள், எவரையும் எக்காரணத்தைக் கொண்டும் பகைக்க மாட்டார்கள். தன்னிடம் பகைமை பாராட்டுபவர்களிடம் எத்தனை தீய குணங்கள் இருந்தாலும் அவனிடமுள்ள ஒரு சில நற்குணங்களைத் தேடிக் கண்டு அன்பைச் செலுத்துவார்கள். ஏனெனில் அவர்கள் தம் மனதை தீ நெறிகளில் செல்லாது அடக்கி ஆளும் தன்மையர். ''ஆமை தனது ஐந்து உறுப்புக்களுக்கும் (தலை, நான்கு கால்கள்) எவ்விதத் தீங்கும் நேராதவாறு உள்ளே இழுத்து அடக்கிக் கொள்ளும். அது போல ஸாதுக்கள் தங்களது கண் காது முதலிய அறிவுப் புலன்கள் ஐந்தையும் பாபச்செயல்களுக்கு இடமாக்காமல் அடக்கிக் காத்துக்கொள்வர். இப்புலனடக்கம் அவர்களை ஏழு பிறப்புகள் வரை பாதுகாக்கும்''.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்து அடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து. குறள் - 126

विरोधिष्वपि मूर्खेषु निरीक्ष्य अवस्थितान् गुणान् ।
विरोधं नाधिगच्छन्ति सज्जनाः शान्त तेजसः ॥

விரோதிஷ் வபி மூர்க்கேஷு நிரீக்ஷ்ய அவஸ்த்திதான் குணான் ।
விரோதம் நாதிகச்சந்தி ஸஜ்ஜனா: ஶாந்த சேதஸ: ॥

தான் சொல்வதைக் கலிகன் செவிமடுத்துக் கேட்பதைப் பார்த்து இவனை நல்வழிப்படுத்த முடியும் எனும் நம்பிக்கையினால் மேலும் பேசலுற்றார்.

सुजनो न याति वैरं परहित निरतो विनाशकालेऽपि ।
छेदेऽपि चन्दन तरुः सुरभीकरोति मुखं कुठारस्य ॥

अहो निष्कारणं लोके बाधन्ते सुजनान् जनान् ।
धीवराः पिशुनाः व्याधाः लोके अकारण वैरिणः ॥

ஸுஜனோ ந யாதி வைரம் பரஹித நிரதோ வினாஶகாலேபி ।
சேதேபி சந்தனதரு: ஸுரபீகரோதி முகம் குடாரஸ்ய ॥

அஹோ நிஷ்காரணம் லோகே பாதந்தே ஸுஜனான் ஜனான் ।
தீவரா: பிஶுனா: வ்யாதா: லோகே அகாரண வைரிண: ॥

முற்றிய சந்தன மரம் விலை உயர்ந்தது. அதன் நறுமணமே, தான் இருக்கும் இடத்தைக் காட்டிவிடும். அம் மரத்தை கோடரி கொண்டு வெட்டுகிறார்கள். பின்னர் ரம்பத்தைக் கொண்டு சிறு துண்டுகளாக அறுக் கிறார்கள். அந்த கோடரியையோ, ரம்பத்தையோ முகர்ந்து பார்த்தால் நறுமணம் வீசும். அக்கருவிகள் நம்மை சின்னாபின்னமாக்கினவே என்கிற கோபத்தினால் அவற்றுக்கு சந்தனமரம் தன் வாஸனையைக் கொடுக்காமல் இருப்பதில்லை. அதுபோலவே ஸாதுக்கள் தமக்கு அழிவு நேரிடினும் தீமை புரிந்தவர்கட்கு நன்மையே செய்வார்களே ஒழிய சிறிதும் பகைமை பாராட்ட மாட்டார்கள். இவர்கள் செய்த இனிய உதவிகளை நினைத்து அவன் வெட்கித் தலைகுனிய நேரிடும். அதோடு பகைவனாயினும் நாம்தானே அவனுக்குத் தக்க தருணத்தில் உதவினோம் என நல்லோர் பெருமைப் படவும் மாட்டார்களாம்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல். குறள் - 314

''சிலர் பிறரைத் துன்புறுத்தவே பிறந்தவர்கள். நீரில் தன் இனத்தோடு மகிழ்ந்து துள்ளி விளையாடும் மீன்களைப் பிடித்துக் கொல்கின்றனர். விளையாட்டாக பிறர்க்கு இடையூறின்றிக் காட்டில் திரியும் விலங்குகளை வேடுவர்கள் வில்லம்புகள் கொண்டு மாய்க்கின்றனர். நம்மிடையே வாழும் சில மூர்க்கர்கள் இணைபிரியாது வாழும் நண்பர்களிடையேயும் கோள் சொல்வதன் மூலம் பகைமையை விதைக்கின்றனர்''.

இவ்வுலக இயற்கையை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். ஒருவன் நன்கு உழைத்துப் பொருள் ஈட்டுகிறான். ஆனால், சோம்பேறி களாய்ப் பலர் பற்பல உறவுகளைக் கூறிக் கொண்டு, தேன் ஒழுகப் பேசி, அவர் ஈட்டிய பொருளைத் தாம் அனுபவித்து மகிழ்கின்றனர். அவன் அவர்கட்குக் கொடுப்பதை நிறுத்திவிட்டால் எல்லா உறவுகளும் பறந்து விடும். பின்னர் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள்.

यावत् अर्पयति द्रव्यं तावत् भवति बान्धवः ।
आर्जितं तु धनं सर्वे भुञ्जते बान्धवाः सदा ॥

யாவத் அர்ப்பயதி த்ரவ்யம் தாவத் பவதி பாந்தவ: ।
ஆர்ஜிதம் து தனம் ஸர்வே புஞ்ஜதே பாந்தவா: ஸதா ॥

ஸ்காந்தபுராணம்– இராமாயண மாஹாத்ம்யம்

கலிகன் உத்தங்கரின், இப்பொன் மொழிகளைக் கேட்டான்; தான் கவர்ந்து செல்ல வந்த பொற்குடத்தை மறந்தான். ராமபவனத்தில் ராம பிரானின் ஸாந் நித்யமும், ஸத்ஸங்கமும், உத்தங்கரின் இதமொழியும் அவன் மனதை மாற்றியது. கொள்ளை குடி கொள்ளும் மனதில் பக்தி முளைக்க லாயிற்று. எழுந்தான், கைகளைக் கூப்பினான். இதுவரை செய்த பாபச் செயல்களுக்கு வருந்தினான். கண்ணீர்மல்க தொண்டை தழுதழுக்க ''மன்னி யுங்கள், மன்னியுங்கள், மன்னியுங்கள்'' எனக் கூறினான். இதுகாறும் செய்த பாபங்கள் விலகின. முனிவரின் கடாக்ஷம் திருடனைப் பக்தனாக்கியது. ஒருவன் செய்த பாபங்களுள் நாலில் ஒருபங்கு, செய்ததைத் தவறென உணர்ந்து வருந்துவதினால் கழிகிறது. மற்றொரு கால்பாகம் மீண்டும் அத்தவறை செய்யாமலிருப்பதினால் கழிகிறது. மற்றொரு பாகம் செய்த பிழைக்கு ப்ராயச்சித்தம் செய்ய முற்படுவதினால் நீங்குகிறது. மீதமுள்ளது பிராயச்சித்தம் செய்வதினால் மறைகிறது என்பது அறநூல் சாற்றிய உண்மையன்றோ!

कलिकः प्राञ्जलिः प्राह क्षमस्वेति पुनः पुनः ।
तत् सङ्गस्य प्रभावेण हरि सन्निधि मात्रतः ॥
गत पापो लुब्धकश्च सानुतापः अभवत् ध्रुवम् ॥

கலிக: ப்ராஞ்ஜலி: ப்ராஹ க்ஷமஸ்வேதி புன: புன: ।
தத் ஸங்கஸ்ய ப்ரபாவேண ஹரிஸந்நிதி மாத்ரத: ॥
கதபாபோ லுப்தகஶ்ச ஸானுதாப: அபவத் த்ருவம் ॥

ஸ்காந்தபுராணம்- இராமாயண மஹாத்ம்யம்

கலிகன் ''முனிவரே! நான் முற்பிறவியில் செய்த பாபங்களின் பயனாக இப்பிறவியில் வேடுவனாகப் பிறந்தேன். இப்பிறவியிலோ தெரிந்து செய்த பாபங்கள் பலப்பல. இவற்றைப் போக்கிக் கொள்ள ஏதேனும் வழி உண்டா? அருள்வீராக'' என்றான்.

चैत्रे मासि सिते पक्षे कथा रामायणस्य च
नवाह्ना किल श्रोतव्या भक्तिभावेन सादरम् ॥
यस्य श्रवण मात्रेण सर्व पापैः प्रमुच्यते ॥

சைத்ரே மாஸி ஸிதே பக்ஷே கதா ராமாயணஸ்ய ச ।
நவாஹ்னா கில ஶ்ரோதவ்யா பக்திபாவேன ஸாதரம் ॥
யஸ்ய ஶ்ரவண மாத்ரேண ஸர்வபாபை: ப்ரமுச்யதே॥

ஸ்காந்தபுராணம் - இராமாயண மாஹாத்ம்யம்

உத்தங்கர் ''கலிகனே! சித்திரை மாதம் ஶுக்லபக்ஷத்தில் இராமாயணக் கதையை ஒன்பது நாட்கள் பக்தியுடன் கேட்பவனுக்கு பாபங்கள் அனைத்தும் தேயும்'' என்றார். உடனே அவனும் முனிவரை வணங்கி இராமாயணத்தை அவரிடமே கேட்டான். ஒன்பதாம் நாள் ராம பட்டாபி ஷேகத்தைக் கேட்டதும் பூத உடலை நீத்தான். தேவர் உலகிலிருந்து விமானம் வந்தது. ''உமது இன்னருளால் நான் பாபங்களினின்றும் விடுபட்டுத் தேவர் உலகை எய்த இருக்கிறேன்'' என்று கூறி அவரை மும்முறை வலம் வந்து, வணங்கி, விடைபெற்று, விமானத்தில் ஏறி விஷ்ணு லோகத்தை அடைந்தான்.

பக்தியுடன் ரர்மாயணத்தை நவாஹக்ரமத்தில் பாராயணம் செய்வதி லும், கேட்பதிலும் கைமேல் பலன் உண்டு. அதன் முறையாவது:

முதல் நாள் பால காண்டம் 77-வது ஸர்கம் வரை, 2-ஆம் நாள் அயோத்யா காண்டம் 60-வது ஸர்கம் வரை, 3-ஆம் நாள் அயோத்யா காண்டம் 118-வது ஸர்கம் வரை, 4-ஆம் நாள் ஆரண்ய காண்டம் 68-வது ஸர்கம் வரை, 5-ஆம் நாள் கிஷ்கிந்தா காண்டம் 49-வது ஸர்கம் வரை, 6-ஆம் நாள் ஸுந்தர காண்டம் 56-வது ஸர்கம் வரை, 7-ஆம் நாள் யுத்த காண்டம் 56-வது ஸர்கம் வரை, 8-ஆம் நாள் யுத்த காண்டம் 111-வது ஸர்கம் வரை, 9-ஆம் நாள் யுத்த காண்டம் 128-வது ஸர்கம் வரை.

ஸோமதத்தன் கதை

யுகங்களுள் கலியுகம் மிகக்கொடியது. சாஸ்த்ரம் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறது. அவற்றைப் பின்பற்றுவதற்கு மனத்திண்மை தேவை. அது கலியில் மிகுதியாகத் தேவை. கலியில் பெரும்பாலும் பெண்களிடம் பணிவு குறைந்து காணப்படுகிறது. தாம் நினைப்பது தகாததாயினும், அதைச் சாதிக்கும் பேச்சாற்றல் மிகுந்து காணப்படுகிறது. ஆண்கள் நற்குடியில் பிறந்தவர்களாயினும் தமக்குரிய கர்மானுஷ்டானங்களினின்றும் வழுவியவர்களாயும், சிகை, கச்சம், யக்ஞோப வீதம், பகவதாராதனம் இவற்றைக் கைவிட்டவர்களாயும் காணப்படு கிறார்கள். மேலும் கைலி போன்ற விதவிதமான ஆடைகளில் மோஹம் கொள்கிறார்கள். இதனால் மனத் தூய்மையின்றி நிம்மதியற்று அல்லல் படுவதைக் காண்கிறோம். இதற்குக் காரணம், புராணங்களில் பேசப்படு கின்ற அரக்கர்களும், அரக்கிகளும், அந்தணர் இல்லங்களில் பிறப்பை எய்தி சமூகச் சீர்கேட்டிற்கு அடித்தளம் அமைக்கின்றார்கள் போலும், என ஸ்காந்தோத்தரம் பேசுகிறது.

वाचालाश्च भविष्यन्ति कलौ प्राप्ते च योषितः ।
विप्रवंशोद्भवः श्रेष्ठः उपवीतं शिखां त्यजेत् ।
राक्षसाः कलिमाश्रित्य जायन्ते ब्रह्मयोनिषु ।
कलौ विप्राः भविष्यन्ति कञ्चुकोष्णीष धारिणः ।
द्विजाः अनुष्ठान रहिताः भगवद्धर्मवर्जिताः ।
मनश्शुद्धि विहीनानां निष्कृतिश्च कथं भवेत् ।

வாசாலாஸ்ச பவிஷ்யந்தி கலௌ ப்ராப்தே ச யோஷித: ।
விப்ரவம்ஸோத்பவ: ஸ்ரேஷ்ட: உபவீதம் ஸிகாம் த்யஜேத் ॥
ராக்ஷஸா: கலிம் ஆஸ்ரித்ய ஜாயந்தே ப்ரஹ்ம யோனிஷு ॥
கலௌ விப்ரா: பவிஷ்யந்தி கஞ்சுகோஷ்ணீஷ தாரிண: ॥
த்விஜா: அனுஷ்டானரஹிதா: பகவத்தர்ம வர்ஜிதா: ॥
மனஸ்ஸுத்தி விஹீனானாம் நிஷ்க்ருதிஸ்ச கதம் பவேத் ॥

இவ்வாறு சமூஹத்தைக் கெடுக்கும் நிலைமாறி, உரிய உடை, உரிய வேஷம், நித்யகர்மானுஷ்டானம் இவைகளில் ஊக்கமும், இதன் காரணமாக மனத்தூய்மையும் பெற்று இன்னலின்றி வாழ வழி யாதெனில் கேண்மின்.

கார்த்திகை, மாசி, சித்திரை மாதங்களில் வளர்பிறையில் நவமி திதியில் சான்றோரைக் கொண்டு ராமாயணக் கதையைச் சொல்லச் செய்து ராம கதையாம் அமிழ்தத்தைப் பக்தியுடன் செவிகளாரப் பருகினால், போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசு போன்று பாபங்கள் அழிந்து 21 தலைமுறையினரான தம்மவர்களோடு தாமும் நன்னிலை அடைவர். இப்பாக்கியமும் பலப்பலப் பிறவிகளில் செய்த புண்யத்தின் பயனாலே கிட்டும்.

ऊर्जे माघे सिते पक्षे चैत्रे च द्विजसत्तमैः ।
नवम्यहनि श्रोतव्यं रामायण कथामृतम् ॥
त्रिसप्तकुल संयुक्तः सर्वपाप विवर्जितः ।
कोटि जन्म समुत्थेन पुण्येनैव तु लभ्यते ॥

ஊர்ஜே மாகே ஸிதே பக்ஷே சைத்ரே ச த்விஜஸத்தமை: ।
நவம்யஹனி ஸ்ரோதவ்யம் ராமாயண கதாம்ருதம் ॥
த்ரிஸப்தகுல ஸம்யுக்த: ஸர்வபாப விவர்ஜித:
கோடி ஜன்ம ஸமுத்தேன புண்யேனைவ து லப்யதே ॥

ஸோமதத்தன் கிருதயுகத்தில் வாழ்ந்தவன். தர்ம சாஸ்த்ரங்களைக் கசடறப் பயின்றவன்; கர்மானுஷ்டானங்களிலும் குறைவற்றவன். கௌதம

முனிவரின் ஶிஷ்யன். இவன் ஒரு நாள் அவனது குடிசையில் பகவதாராதனம் செய்து கொண்டிருந்த பொழுது, எதிர்பாராமல் அவனது குருவான கௌதமர் அங்கு வந்து சேர்ந்தார். குருவைப் பார்த்ததும் எழுந்திருக்கவுமில்லை, வணங்கவும் இல்லை. பூஜையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தான். பூஜாகாலமாயினும் தன் குருவைக் கண்டால் எழுந்து, வணங்கி, வரவேற்று, முகமன் கூறி, அவரை இருக்கையில் அமர்த்தி, விடைகொண்டு பூஜையைத் தொடர்வதே பண்பாடு. இப்படிச் செய்யாததினால் ஶினம் கொண்ட கௌதமர் ''என்னை அவமதித்த நீ அரக்கனாகக் கடவாய்'' என ஶபித்தார். உடனே ஸோமதத்தன் ''யான் அறியாமல் செய்த பெரும்பிழையை மன்னித்தருள்க'' எனத் திருவடிகளில் விழுந்து வணங்கி வேண்டினான். அதனால் இரக்கம் கொண்ட குரு ''நீ கார்த்திகை மாதம் வளர்பிறையில் நவமியன்று ராமாயணத்தைக் கேட்பாயாகில் ஶாபவிமோசனம் ஏற்பட்டு அரக்கத்தன்மை நீங்கியவனாவாய்'' என அருளினார்.

அன்று முதல் ஸோமதத்தன் சாபத்தின் காரணமாக ராக்ஷஸன் ஆனான். எதிரே வரும் மனிதர்கள், விலங்குகள், பறவைகள், ஸர்ப்பங்கள் இவற்றை அடித்து உணவாகக் கொண்டான். பாம்பு புகுந்த வீட்டில் வசிப்பவர்கள் அஞ்சுவது போல மக்கள் அவனிடம் அஞ்சினர். ஒரு நாள் கலிங்க நாட்டைச் சேர்ந்த, கர்கன் என்ற ஒரு அந்தணன் கங்கைக்குச் சென்று நீராடி அக்காட்டின் வழியே ஊருக்குத் திரும்பப் புறப்பட்டான். கங்கை நீர் நிறைந்த ஒரு குடத்தைத் தோளில் சுமந்து வந்தான். அவனுக்கு கங்கா ஸ்னானம் தனக்குக் கிடைத்தது பற்றி பெரும் மகிழ்ச்சி. மேலும் அவன் சிறந்த ராமபக்தன். தன்னந்தனியாகக் காட்டில் வருகிறான். ஆபத்தான பாதையில் செல்கின்றவர்கட்குப் பரமனை நினைப்பதும் அவனைப்பற்றிப் பாடுவதும் இயல்பு. எனவே தன்னையும் அறியாது உரத்த குரலில் ''ஸ்ரீ ராம! ஜய ராம! ஜயஜய ராம!'' என்றவாறு இராமபிரானின் திருநாமங்களைப் பக்தியுடன் ஊனும் உயிரும் உருகப் பாடிக் கொண்டே வருகிறான்.

गायन् नामानि रामस्य समायातः अतिहर्षितः ।

காயன் நாமானி ராமஸ்ய ஸமாயாத: அதிஹர்ஷித: ॥

ஸ்காந்ததோத்ரம் - இராமாயண மஹாத்ம்யம்

காட்டில் சிங்கம் புலிகள் மோப்பங் கொண்டு மனிதன் இருப்பதை அறியும் அதேபோன்று அரக்கர்களுக்கும் மனிதவாஸனை நன்கு தெரியும். கர்கனோ உரக்கப் பாடுகிறான், எனவே, ஸோமதத்தன் குரலோசை வருகிற வழியே விரைந்து வந்து கர்கன் மீது பாய்ந்தான். சற்று ஒதுங்கி நின்று கர்கன் பேசலானான். ''அப்பா! அறிவற்ற பிராணிகள் தான் உயிர்க் கொலை செய் கின்றன. பகுத்தறிவுள்ள நீயுமா இச்செயலைச் செய்ய வேண்டும்? சற்றுத் தெளிவாகச் சிந்தித்துப்பார். ஏதோ தகாத செயலைச் செய்துதான் நீ இந் நிலையை அடைந்திருக்கிறாய். என்னிடமுள்ள கங்கை நீர் உன் பாபத்தைப்

போக்கும். அதுவும் ராம நாமத்தினால் மந்த்ரிக்கப்பட்ட தீர்த்தம். சிறிது பருகுவாயாக'' எனக் கொடுத்தான். உடனே அரக்கனுக்கு கௌதம சாபமும் ராமாயணமும் நினைவிற்கு வந்தன. ''அந்தணரே! உமது உபதேசத்தால் எனது முன்நிலையை உணர்ந்தேன். இன்று என்ன மாதம்? என்ன நாள்?'' எனக் கேட்டான். கர்கர் ''இன்று கார்த்திகை மாதம் சுக்லபக்ஷம் நவமிநாள்'' என்றார். ''அப்படியா! என்ன ஆச்சரியம்! எனது குருவின் கருணையன்றோ என்னையும், நாளையும், உம்மையும் ஒருங்கே இணைத்தது'' எனக் கூறியவனாய் கர்கரின் திருவடிகளில் வணங்கிப் பணிந்துப் பிரார்த்தித்தான். ''இராமாயணமே எனக்கு சாபவிமோசனம், இராமாயணத்தை உபதேசியுங் கள்'' என்றான். குறிப்பால் விஷயத்தை அறிந்த கர்கர் இராமாயணத்தைப் பரிவுடன் உபதேசித்தார். இருசெவிகளாலும் கதையைக் கேட்டு இராம பத்ரனை இதயத்தில் நிறுத்தினான். இராமகாதையைப் பக்தியுடன் கேட்ட தன் பயனாய் ராக்ஷஸத் தன்மை நீங்கிப் பழைய ஸோமதத்தனானான்.

शङ्खचक्र गदापाणिः रामभद्रः समागतः ।

ஶங்கசக்ர கதாபாணி: ராமபத்ர: ஸமாகத: ।

ஸ்காந்ததோத்ரம் - இராமாயண மஹாத்ம்யம்

சங்கசக்ர கதாபாணியாய் ராமபிரான் அவனெதிரே தோன்றி அவனுக்கு அபயப்ரதானம் செய்தான். இக்கதையைக் கேட்பவர்களும், படிப்பவர்களும் கங்காஸ்நான பலனைப் பெறுவார்கள் என்று கூறிப் புராணம் கதையைத் தலைக்கட்டுகிறது.

இராமபிரான் பதினொன்றாயிரம் ஆண்டுகள் நாட்டை ஆண்ட பிறகு ஸ்ரீ வைகுண்டம் செல்லத் திட்டமிட்டார். இதை அறிந்த பூதேவி கூடாதென வாதாடினாளாம். ஆயினும் ராமராஜா ஒப்புக் கொள்ளவில்லை. ஏன்? அவருக்கு ஸ்ரீவைகுண்டத்தின் நினைவு வந்துவிட்டது. அதன் பிறகு பூமியில் இருக்க, இருப்புக் கொள்ளவில்லை போலும்!

''ஜனனீ ஜன்ம பூமிஶ்ச ஸ்வர்காத் அதிகரீயஸீ'' அதாவது பெற்ற தாயும், பிறந்த நன்னாடும், சுவர்க்கத்தைவிட மிகச் சிறந்தது என்பர். ஒரு அரசன் வேட்டைக்குச் சென்றான். ஒரு மரப் பொந்தில் பச்சைக் கிளியைப் பார்த்தான். வலையை வீசி மெள்ளப் பிடித்து அரண்மனைக்கு எடுத்து வந்து தங்கக் கூண்டில் வைத்து வளர்த்து வந்தான். அழகிய பேச்சுக் களையும் பயிற்றுவித்தான். தினந்தோறும் தங்கக் கிண்ணியில் நெய்யும் சர்க்கரையும் கலந்த அன்னத்தை வைரமோதிரங்கள் அணிந்த தன் கைகளால் எடுத்து ஊட்டுவான். இவ்வாறு இராஜ போகத்தில் கிளி வளர்ந்து வந்தது. ஆயினும்தான் வசித்துவந்த மரப்பொந்தை அதனால் மறக்க முடியவில்லை. தினமும் காட்டையும் மரப்பொந்தையும் நினைத்து வருந்தும், ஒரு நாள் கூண்டின் வெளியே வைத்து அதற்கு அரசன் உணவு ஊட்டும்போது கிளி திடீரெனப் பறந்து ஜன்னல் வழியே காட்டிற்குச் சென்றுவிட்டது. அதே போல் பதினோராயிரம் வருஷம் பூமியில் சக்கரவர்த்தியாக ராமன் வாழ்ந்த

போதிலும் சொந்த வீடான ஸ்ரீ வைகுண்டத்திற்குப் புறப்படுவது உறுதியாகி விட்டது. பூதேவி, ''நீர் வீடு சென்றாலும் உமக்குச் சொந்தமான ஒன்றை எனக்குக் கொடுத்துவிட்டுத் தான் புறப்பட வேண்டும்'' என மன்றாடினாள். உடனே ராகவன் ''என்னினும் உயர்ந்த இராமாயணமாகிய அழியாத தனத்தை உனக்குக் கொடுத்துவிட்டுப் போகிறேன்'' என்றாராம். எனவே இராமாயணம் ராமனையும் விடச் சிறந்தது.

இராமனை விட் ராம காவியமே பன்மடங்கு சீரியது. ஏன்? ஒரு நிலைக் கண்ணாடி தன் எதிரே உள்ளவரைத் தான் காட்டும். காவியக் கண்ணாடியோ ராமனை எக்காலத்தும் காட்டும். இராமனால் தனது விபவாவதார காலத்தில் இருந்தவர்களைத் தான் அனுக்ரஹிக்க முடிந்தது. ஸ்ரீமத்ராமாயணமோ எல்லா யுகங்களிலும், சிறப்பாகக் கலியுகத்திலும் நம்மை வாழ்விக்கிறது.

மஹாபாரத யுத்தம் முடிந்த பிறகு தர்மபுத்திரர் பீஷ்மரை அணுகி, ''பிதாமஹரே! பல அரசர்கள் போரில் மடிந்த படியால் நாட்டில் அராஜகம் வந்துவிடுமே. எப்படி சமாளிப்பது?'' எனக்கேட்டார். பீஷ்மர் ''தர்மபுத்ரா! வேதவித்வான்களின் ஆலோசனையைப் பெற்று ஆட்சி செய். மேலும் முக்கியமாக நாட்டில் ஆங்காங்கு ஸ்ரீமத் ராமாயணத்தின் பாராயணத்தை ஏற்பாடு செய். தீமைகள் அனைத்தும் தாமே விலகும்'' என்றாராம்.

பரத்வாஜ முனிவர் எல்லா வேதங்களையும் கற்றுவிடத் துணிந்தார். பின்னர் இந்திரன் மூலமாகத் தான் ''கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு'' என அறிந்தார். பின்னர் வேதஸாரமான இராமாயணத்தை இயற்றிய வால்மீகி முனிவரை அணுகிச் சிஷ்யராகி இராமாயணத்தைக் கற்றார். ''ரா'' என்பது ரிக்வேதத்தையும், ''மா'' என்பது ஸாம வேதத்தையும், ''ய' என்பது யஜுர் வேதத்தையும், ''ணம்'' என்பது அதர்வண வேதத்தையும் குறிப்பதால், எல்லா வேதங்களின் ஸாரமான இராமாயணத்தைக் கற்றது நான்கு வேதங்களையும் கற்றதற்குச் சமமாகிவிட்டது. இப்பெருமையின் காரணமாகத்தான் நான்கு வகைப் படைகளுடன் வந்த பரதனுக்கு அவரால் ராஜோபசாரமாக அதிதி ஸத்காரம் (விருந்தோம்புதல்) செய்ய முடிந்தது.

குசலவர்கள் பண்ணமைத்து ராமாயணத்தை நல்லிசையாகப் பாடும் பொழுது சக்ரவர்த்தித் திருமகன் ஸிம்ஹாஸனத்தினின்றும் எவரும் அறியாது இறங்கி மக்களுள் ஒருவனாக அமர்ந்து கேட்டாராம், ஏன்? ''இராமாயணம் அவதரித்த பிறகு ஸிம்ஹாஸனம் அதற்கே உரியது; எனக்கல்ல'' என்று தாழ்ந்த இடத்தில் அமர்ந்தாராம்.

இவ்வாறு பல்வேறு வகையில் ஸ்ரீமத்ராமாயணத்தின் சிறப்பை அறிந்த நாம் இனி அக்காப்பியத்தையும் கற்க வேண்டியதுதானே!

குரு சிஷ்யபாவம்

तपः स्वाध्याय निरतं तपस्वी वाग्विदां वरम् ।
नारदं परिपप्रच्छ वाल्मीकिः मुनिपुङ्गवम् ॥

தப: ஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீ வாக்விதாம் வரம் ।
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகி: முனிபுங்கவம் ॥

வா.ரா.பால. - 1

உலகில் மனிதன் உயர்ந்தவன். ஏன்? அவன் எதையும் எண்ணிப் பார்க்கும் வல்லமை பெற்றவன். எனவே விலங்கினத்திடமிருந்து வேறுபடுகிறான். உண்பதும், உறங்குவதும், அஞ்சுவதும், கூடி வாழ்வதும், விலங்கிற்கும் மனிதனுக்கும் பொதுவானவை. ஆனால் இது நல்லது, இது தீயது எனப் பகுத்து உணரும் அறிவு மனிதனுக்கே உரியது. இது இல்லாவிடில் மனிதன் விலங்கிற்குச் சமமாகிறான்.

आहार निद्रा भय मैथुनानि सामान्यमेतत् पशुभिः नराणाम् ।
ज्ञानं हि तेषां अधिको विशेषः ज्ञानेन हीनः पशुभिः समानः ॥

ஆஹார நித்ரா பயமைதுனானி ஸாமான்யம் ஏதத் பசுபி: நராணாம் ।
ஞானம்ஹி தேஷாம் அதிகோ விசேஷ: ஞானேனஹீன: பசுபி:
ஸமான: ॥

பார்த்ருஹரி-நீதிசதகம்

என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வறிவைப் பெறக் கசடறக் கல்வியைக் கற்க வேண்டும். இக் கல்வியை யாரிடம் கற்பது? எவ்வாறு கற்பது? நமக்குக் கற்பிக்கும் ஆசிரியர் இளமையில் சாஸ்த்ரங்களையும் பன்னூல்களையும் நன்கு கற்று, கற்றதற்கேற்ப தாமும் நடந்து, பிறரையும் அவ்வழியில் நிற்கச் செய்யும் ஆற்றலும் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். மேலும் வேதங் களைக் கற்பதோடு மட்டுமன்றி அவற்றில் கூறப்படும் பரம்பொருளை நாடும் மனமுடையவராயும், ஶிஷ்யனின் அறியாமையாகிற இருளைஅகற்றும் ஞானஸூர்யனாகவும் திகழ வேண்டும். இத்தகைய ஆசிரியரை அணுகும் ஶிஷ்யன், பணிவும், மனவடக்கமும், உடையவனாய், பணக்காரரிடம் செல் வத்தை இரப்பவன் போன்ற தாழ்மையுடையவனாய், தான் எனும் மானம் களைந்து, சிறு காணிக்கையுடன் கூடியவனாய் இருக்க வேண்டும். இத்தகைய இலக்கணத்திற்கு இலக்கியமாய்த் திகழும் குருவையும் ஶிஷ்யனை யும் நமக்கு அறிமுகம் செய்கிறது ராமாயண முதல் ஸ்லோகம்.

த்ரிலோக ஸஞ்சாரியும் தேவர்ஷியுமான நாரதரைச் சந்தித்து அடி பணிந்து வால்மீகி முனிவர் பரம்பொருளைப் பற்றி வினவுகிறார். பரம்

பொருளைப் பற்றி விளக்கமாகக் கூறும் தகுதி பெற்றவர் நாரதர். பரம் பொருளான ஸ்ரீமந் நாராயணனின் நாபிக் கமலத்தில் தோன்றிய நான்முகனின் தவப் புதல்வர் அல்லவா? இவர் அறியாமையாகிய இருளை அகற்றும் பெற்றியர்; நமது பாபங்களையும் அச்சத்தையும் அகற்றும் திருநாரணனின் கதைகளையும் திருநாமங்களையும் பாடிக் கொண்டே மக்களுக்கு எளிய முறையில் நல்லறிவைப் புகட்டிப் பரமனை மக்கள் இதயங்களில் நிலை பெறச் செய்பவர்; எப்பொழுதும் நான்மறைகளை ஓதிக் கொண்டே இருப் பதினாலும், வேதங்களில் கூறிய நற்கருமங்களை அனுஷ்டிப்பதினாலும் பாபங்கள் தேய்ந்து அறிவில் தெளிவு பெற்றவர்; வேதாந்தங்களின் விழுமிய கருத்துக்களைத் தாம் அறிந்து இன்புறுவதோடு, பிறருக்கும் உபதேசித்து மகிழும் தன்மையர். ஸாமகானலோலர். வேதவேதாங்கங்களைக் கற்ற அறிஞர் குழாத்திற்குத் தலைமை தாங்குபவர்.

प्रह्लाद नारद पराशर पुण्डरीक व्यास अम्बरीष शुक शौनक भीष्म दाल्भ्यान् ।
रुक्माङ्गदार्जुन वसिष्ठ विभीषणादीन् पुण्यानिमान् परम भागवतान् स्मरामि ॥

ப்ரஹ்லாத நாரத பராசர புண்டரீக வ்யாஸ அம்பரீஷ
சுகஶௌனக பீஷ்ம தால்ப்யான் ।
ருக்மாங்கத அர்ஜுன வஸிஷ்ட விபீஷணாதீன் புண்யான்
இமான் பரமபாகவதான் ஸ்மராமி ॥

என்று போற்றப்படும் பகவத் பக்தர்கட்குள்ளே தலை சிறந்தவர்.

ஒருவர் எவ்வளவு கற்றவராயினும் அவ்வறிவு, பரமனை அகப் படுத்தும் கர்மயோக, ஞானயோக, பக்தியோகங்களைச் செய்வதிலும், பகவத் குணங்களைக் கேட்பதிலும், அவற்றை அடிக்கடி நினைத்து நினைத்து தியான நிலையில் நின்று மகிழ்வதிலும் பயன்படாவிடில் நாய்வால் போன்று பயனற்றது, என்பர் பெரியோர்.

न आच्छादयति कौपीनं न दंश मशकापहम् ।
शुनः पुच्छमिव अनर्थं पाण्डित्यं धर्मवर्जितम् ॥

நஆச்சாதயதி கௌபீநம் ந தம்ஶ மஶகாபஹம் ।
ஶுன: புச்சமிவ அனர்த்தம் பாண்டித்யம் தர்மவர்ஜிதம் ॥

நாயின் வால் தனது குஹ்யப் பிரதேசத்தை மறைப்பதில்லை. தன்னைக் கடிக்கும் ஈ, கொசுக்களை விரட்டவும் வாலால் முடிவதில்லை. அது போல் பரதத்வத்தை அறிவதற்குக் காரணமான நிவிருத்தி மார்க்கத்தில் ஈடுபடப் பயன்படாத அறிவும் பயனற்றதாகும்.

இவ்வாறின்றி நாரத முனிவரோ தம் தபஸ்ஸினால் பரம் பொருளைப் பூர்ணமாக நன்கு உணர்ந்தவர். இத்தகைய நாரதரை ஆசார்யனாகப் பெற்றார் வால்மீகி முனிவர். பெருமைமிக்க ஆசார்யனுக்குப் பெருமை சேர்க்கும்

ஶீடர் வால்மீகி. நல்ல தபஸ்வீ, ப்ரஹ்மகாண்டமான உபநிஷத்துக்களின் உண்மைப் பொருளை அறிவதற்கேற்ற பூர்வமீமாம்ஸை, வ்யாகரணம் முதலிய வேதாங்கங்களான ஶாஸ்த்ரங்களை நன்கு பயின்றவர். ''கர்ம காண்டம் எனும் வேதத்தின் முற் பகுதியை துருவித்துருவி ஆராய்ந்து கற்றும் நிலையான அழிவற்ற பலனைப் பெற முடியவில்லையே! உயரிய பரம்பொருளை அறியவும், அறிந்ததை எண்ணி எண்ணி மகிழவும், முடிவில் அவ்வுயரிய பொருளையே பெறவும் என்றுதான் காலம் வாய்க்குமோ! இவ்வரிய பொருளை விளக்கமாக உபதேசிக்கும் ஸதாசார்யனின் கடாக்ஷம் என்று தான் நம்மை ஆட் கொள்ளுமோ!'' என ஏக்கம் நிறைந்த மனத்தவர். இவ்வாறு ப்ரஹ்ம ஞானத்தைப் பெறத் துடிக்கும் வால்மீகியின் எதிரே தோன்றினார் நாரத பகவான். முனிவரின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கீதையில் கண்ணன் பார்த்தனுக்கு அறிவுறுத்தியபடி.

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनः तत्वदर्शिनः ॥

தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஶ்னேன ஸேவயா ।
உபதேக்ஷ்யந்தி தே ஞானம் ஞானின : தத்வதர்ஶின: ॥

பகவத் கீதை - 4.34

என்றபடி குருவின் திருவடிகளில் வணங்கி, வலம் வந்து, உபசரித்து ''தத்வதர்ஶியான இவர் ப்ரஹ்மஞானத்தைத் தெளிவுற உபதேசித்து நமக்கு மார்கதர்ஶியாகத் திகழ்வார்'' என திடநம்பிக்கையுடன் பல கேள்விகளை நாரதபகவான் திருச்செவி சாற்றும்படி விண்ணப்பிக்கலானார். இக்கேள்வி களே ராமாயணம் அவதரிக்கக் காரணமாய் அமைந்தன.

वाल्मीकिः नारदं परि पप्रच्छ । ''வால்மீகி: நாரதம் பரிபப்ரச்ச''— வால்மீகி முனிவர் நாரதரை பரம்பொருளைப் பற்றி விரிவாகத் தெளிவாக உரைக்கும்படிக் கேட்டார். இங்கு நாரதரைப் பற்றி நன்கு அறிந்தோம். ஆனால் ஶீடரான முனிவருக்கு ''வால்மீகி'' என பெயர்வரக் காரணம் கேள்விக் குறியாகவே இருக்கிறது. அதைச் சிறிது ஆராய்வோம்.

வால்மீகியின் வரலாறு

ऋक्षोऽभूत् भार्गवः तस्मात् वाल्मीकिः योऽभिधीयते

ரிக்ஷோபூத் பார்கவ: தஸ்மாத் வால்மீகி : யோபிதீயதே ॥

எனும் விஷ்ணு புராணவசனத்தைக் கொண்டு பிருகுவின் புதல்வனுக்கு ரிக்ஷன் என்று பெயர். நீண்ட காலம் தவம் புரியும்பொழுது இவனைப் புற்று சூழ்ந்தது, ப்ரசேதஸ் என்கிற வருணனால் கடும் மழை பொழிவிக்கப்பட்ட பொழுது புற்று (வல்மீகம்) கரைந்து இவன் தோன்றியபடியால் ரிக்ஷன் வால்மீகி என்றும், ப்ராசேதஸன் என்றும் அழைக்கப்படலானான் என்று அறிகிறோம். இதையே ப்ரஹ்மவைவர்த்தம் எனும் நூலும் ''வல்மீக ப்ரபவோ யஸ்மாத் தஸ்மாத் வால்மீகி ரித்யஸௌ'' வல்மீகத்தி (புற்றி) னின்றும் தோன்றியபடியால் வால்மீகியானார் என்று உறுதி செய்கிறது.

வால்மீகிக்கு நான்முகன் ப்ரத்யக்ஷமாகி அவர்தம் சரித்திர நிகழ்ச்சி களை எடுத்துக் கூறுவதாக ஸ்காந்த உபபுராணம் கூறுகிறது. இக்கதை வேறு பட்டதாக உள்ளது. விஷ்ணு புராணப்படி ப்ருகு குமாரர், இதன்படி வருணகுமாரர்.

ப்ரஹ்மா: ''முனிவரே! நீர் வருணனுடைய குமாரர். உமது பெயர் ஹாரீதன். உமது தந்தையின் ஆச்ரமத்திற்கு ஒரு ஸமயம் ஸநகாதி மஹர்ஷிகள் வந்தார்கள். அனைவரும் வரவேற்கப்பட்டுத் திண்ணையில் அமர்ந்தனர். அச்சமயம் இராவணனுடைய கொடுமைகள் பல்கிப் பெருகியிருந்தன. இவற்றைத் தவிர்க்க யாது செய்யலாம்? எனக்கூடிப் பேசி ஆராய்ந்தனர்''.

क्रीडा परवशः त्वं तु तदाऽभूः गृह बर्हिणा ।
तत् केकाभिश्च ते हासैः कथा विघ्नो बभूवह ॥

க்ரீடா பரவஶ: த்வம் து ததாபூ: க்ருஹ பர்ஹிணா ।
தத் கேகாபிஶ்ச தே ஹாஸை: கதா விக்நோ பபூவ ஹ ॥

''அச்சமயம் நீயோ விளையாட்டுப் பிள்ளை. உனது வீட்டில் ஒரு மயில் வளர்க்கப்பட்டு வந்தது. மயிலோடு நீ ஓடி விளையாடினாய். அது தன் தோகையை விரித்து உரக்கக் கூவிற்று. அதோடு நீயும் கைதட்டி உரக்கச் சிரித்து விளையாடினாய். இது முனிவர்களின் மந்திராலோசனைக்குப் பெரும் இடையூறாக அமைந்தது. ஸனத்குமாரர் கோபத்திற்கு இரையானாய்.

पक्षिणा क्रीडसे तस्मात् व्याधत्वं तु गमिष्यसि ।

பக்ஷிணா க்ரீடஸே தஸ்மாத் வ்யாதத்வம் து கமிஷ்யஸி ॥

''நீ பறவையோடு விளையாடிக் கொண்டு எங்களுக்கு ஊறு விளைவித்தமையால் வேடுவனாகக் கடவாய்'' என சபித்தார். இதைக் கேட்ட உன் தந்தை மனம் வெதும்பி மஹர்ஷிகளை வணங்கிப் ''பெரியோராகிய தாங்கள் சிறுவன் செய்த சிறுபிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என மன்றாடினார்.

''உனது குமாரன் குறுகிய காலத்தில் ஸப்தரிஷிகளின் இன்னருளால் ராமதாரக மந்திரத்தை உபதேசம் பெற்று வேடுவத்தன்மை நீங்கித் தூய்மை பெற்றுச் சிறந்த முனிவனாகவும், வேதங்கள், வேதாந்தங்கள் அனைத்தும் அறிந்த சான்றோனாகவும் திகழ்வான்'' என ஶாபவிமோசனத்தையும் கூறி மஹர்ஷிகள் விடைபெற்றனர்.

कालेन व्याधवृत्तिश्च भविताऽसि गिरा मम ।
सप्तर्षीणां प्रसादेन रामनाम प्रभावतः ॥
पूतो भूत्वा तपः कृत्वा मुनिवर्यत्वं एष्यसि ॥

காலேன வ்யாத வ்ருத்திஶ்ச பவிதாஸி கிரா மம ।
ஸப்தர்ஷீணாம் ப்ரஸாதேன ராமநாம ப்ரபாவத: ॥
பூதோ பூத்வா தப: க்ருத்வா முனிவர்ய த்வம் ஏஷ்யஸி ॥

இந்நிலையில் வருணபுத்ரனான ஹாரீதன் பிதாவின் நித்ய கர்மானுஷ்டானங்களுக்கு வேண்டிய ஸமித்து தர்பம் சுள்ளிகளைக் கொணரக் காட்டிற்குச் சென்றான். காட்டின் உட்பகுதியில் மான் முதலிய விலங்குகளோடு விளையாடுவதும், அவற்றை அடித்துத் துன்புறுத்துவதுமாய் பொழுதைப் போக்கிக் கொண்டு வீடு திரும்பவில்லை. தந்தை தேடிப் பார்த்து ஆச்ரமத்திற்கு அழைத்தும் திரும்ப மறுத்துவிட்டான். வேட்டையாடுவதைத் தன் தொழிலாகக் கொண்டான். பெரியோர் இட்ட சாபம் வீண்போகுமா? வேடுவனாய்த் திரிந்து ஒரு வேடுவப் பெண்ணையே மணந்து பல ஆண், பெண் மக்கட்குத் தந்தையாகி, விலங்குகளையும், பறவைகளையும், வேட்டையில் கொன்று குவித்துத் தன் குடும்பத்தைப் போஷித்து வந்தான். ஒரு நாள் குடும்பப் பொறுப்பை நினைத்து மனம் வருந்தியவனாய் உணவுக்காக அலைந்து கடைசியில் ஒரு பறவையை மரத்தில் பார்த்தான். உடனே நாணேற்றிக் குறி பார்த்து அம்பை எய்தான். அதற்குள் பறவை பறந்துவிட்டது. அம்பு கிளையில் தடைபட்டுத் தலைகிழாகத் திரும்பியது. அதை அவன் பார்க்கவில்லை. அம்பு வந்த வேகத்தில் அவன் தோளின் மீது பாய்ந்து. நன்கு பதிந்துவிட்டது. வலி பொறுக்க முடியவில்லை. உரக்கக் கதறி அழுதான். அவ்வழியே வானத்தில் சென்று கொண்டிருந்த ஸப்த ரிஷிகள் இவ்வழுகைக் குரலைக் கேட்டு அதிர்ச்சியுற்றுக் கிழே வந்து, வேடனைப் பார்த்துக் கேட்டனர்.

ஸப்தர்ஷிகள்: ''அப்பா! ஏன் அழுகிறாய். வேகம் குன்றித் திரும்பிய அம்பு உன் தோளில் தைத்தது. இதன் வலியே உன்னால் பொறுக்க முடிய வில்லையே. நீ காது வரை இழுத்து வேகமாய் விடும் அம்புகள் பறவை களையும், விலங்குகளையும் அடிக்கும்போது அவற்றுக்கு வலியே உண்டாகாதா? அவை என்ன பாடுபடும். எவன் ஒருவன் தனது மாமிசப் பிண்டமான உடம்பைப் பல பிராணிகளின் மாமிசத்தைக் கொண்டு வளர்க்கிறானோ அவன் உடம்பை நரகலோகத்தில் பல நாய்கள் திரண்டு வந்து கடித்துத் தின்னும்''.

पलायितः सच खगः स च बाणोऽपतत् त्वयि ।
तेन विद्धांसदेशस्त्वं रुदितो वेदनावशात् ॥
तदा सप्तर्षयो मार्गागताः त्वां वीक्ष्य कम्पिताः ।
यथा त्वं खिद्यसे मूढ बाणेनानेन विध्यता ।
तथा मृग विहङ्गानां व्यथा किंनेति ते मतिः ।
स्वमांसं परमांसेन यः पुष्णाति नराधमः ।
रुरवो भक्षयिष्यन्ति तस्य मांसं यमालये ।

பலாயித: ஸ ச ம்ருக: ஸ ச பாணோ அபதத் த்வயி ।
தேன வித்தாம்ஸ தேச: த்வம் ருதிதோ வேதனாவசாத் ॥
ததா ஸப்தர்ஷயோ மார்காகதா: த்வாம் வீக்ஷ்ய கம்பிதா: ॥
யதா த்வம் கித்யஸே மூட! பாணேன அனேன வித்யதா ।
ததா ம்ருக விஹங்கானாம் வ்யதா கிம்நேதி தே மதி : ॥
ஸ்வமாம்ஸம் பரமாம்ஸேன ய: புஷ்ணாதி நராதம: ।
ருரவோ பக்ஷயிஷ்யந்தி தஸ்ய மாம்ஸம் யமாலயே ॥

தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை. குறள் - 327

மக்கள் பேச்சு வழக்கில் ''என்ன உயிர் வெல்லமோ? ஏன் அஞ்சு கிறாய்?'' என்பர். சிற்றெறும்பு, யானை, மனிதர் யாராயினும் அவரவர் உயிர் அவரவர்கட்கு வெல்லம்தான். வாளை ஓங்கினால் மரம் செடிகள் கூட அஞ்சுகின்றனவாம். உலகமனைத்தும் தத்தம் உயிரைக் காக்கத்தான் பாடு படுகிறது. இதே போன்று பிற உயிர்களையும் கருதும் மனப்பான்மை நாட்டில் வளர வேண்டும். ஸப்தரிஷிகளின் போதனையை இக்குறள் படம் பிடித்துக் காட்டுகிறது. மேலும் தன் உயிரைத் துறக்க நேரிடினும் பிற உயிர் காத்தலைக் கடமையாகக் கொண்டால் இந்நிலமே சுவர்க்கம் ஆகுமன்றோ! நாட்டில் பலர் பிறரை ஏமாற்றியும், துன்புறுத்தியுமே பொருளை ஈட்டு கின்றனர். ஆனால் அவர்கள் தாம் கஷ்டப்படும்போது தாம் செய்த தவறுக்கு இத்துன்பம் தமக்கு நேரிட்டிருக்கிறது என்பதை உணர்வதில்லை.

''பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்'' குறள் - 319

ரிஷிகள் உணர்த்தியும், உண்மையை அவன் உணரவில்லை. அதோடு அவர்களையே கொள்ளை அடித்தான். அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களையும், பொன்னாடைகளையும் கவர்ந்தான். ரிஷிகள் சிறிதும் மனக் கலக்கமோ, சினமோ கொள்ளவில்லை. கருணை மழையைப் பொழிந்தனர். அவனோடு உரையாடி மெள்ள மெள்ள நல்வழிப்படுத்த முயன்றனர்.

ஸப்தரிஷிகள்: ''வேடுவா! இத்தகைய கொடிய ஈனத் தொழிலை ஏன் செய்கின்றாய்''?

வேடன்: ''வழிப்பறியையும், வேட்டையையும் தவிர வாழ்க்கையை நடத்திச் செல்ல எனக்கு வேறுவழியில்லையே. ''அப்யகார்ய ஶதம் க்ருத்வா பர்த்தவ்யோ மனுரப்ரவீத்''— அவரவர் தத்தம் குடும்பத்தினை எப்பாடு பட்டாயினும்—தகாதன செய்தாவது காப்பாற்ற வேண்டும் என்பார்களே. தனக்காகத் தீமை செய்தல் தீயது. தங்களைக் கொள்ளை அடிப்பது எனக்காக அன்று. என குடும்பத்தினருக்காகத்தானே''

ஸப்தரிஷிகள் : ''உம் மனைவி, மக்கள் சுற்றம் இவர்கட்காகத்தானே மாபெரும் பாதகச் செயல்களைப் புரிகின்றாய்?''

வேடன் : ''ஆம். அதில் ஐயம் ஏன்?''

ஸப்தரிஷிகள் : ''அப்படியாகில் இப்பாபங்களில் அவர்கட்கும் பங்கு உண்டல்லவா?''

வேடன் : ''கண்டிப்பாக உண்டு. என் பொருள்களில் பங்கு இருக்கும் பொழுது பாபங்களில் பங்கு இல்லாமல் போகுமா?''

ஸப்தரிஷிகள் : ''பாபபுண்ணியச் செயல் புரிபவன் ஒருவன். அவற்றின் பயனை நுகர்பவன் மற்றொருவனாக இருக்க முடியாது. ''ஆத்ம க்ருதானாம் ஹி தோஷாணாம் அனுபவிதவ்யம் பலம் ஆத்மனைவ''— தான் செய்த தவறுக்குத் தானே பயனை அனுபவிக்க வேண்டும். இதுதான் சாஸ்த்ரம்.''

இதைக் கேட்டதும் வேடன் நடுக்கம் உற்றான். ''சற்று இருங்கள். இதோ வந்துவிட்டேன்'' எனக்கூறி விரைந்து வீட்டிற்குச் சென்றான். வீட்டின் எதிரே ஒரு மரம். அதன் நிழலில் கிழவி தாய் அமர்ந்திருந்தாள். மகனைக் கண்டதும் பரிவுடன் அழைத்தாள். முதுகில் தடவிக் கொடுத்தாள். ''அப்பா! ஏன் இன்று இவ்வளவு நேரம்?

வேடன் : ''அது கிடக்கட்டும். நான் கேட்பதற்கு பதில் சொல். நான் செய்யும் பாபங்களில் உனக்கும் பங்கு உண்டல்லவா?'' என்றான்.

தாய், ''குழந்தாய்! தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறுதானே. அதேபோல் அவரவர்கள் செய்யும் பாபமும் புண்ணியமும்

வேறுதான். தாய், தான் பத்து மாதங்கள் சுமந்து குழந்தையைப் பெற்றுப் பாலூட்டிப் பாராட்டிச் சீராட்டி, வாயை அடக்கி, பசி பட்டினி கிடந்து, பத்தியம் இருந்து, பிறரிடம் கையேந்தி ஆளாக்குவதற்கு என்ன பாடுபடு கிறாள் தெரியுமா? இதற்குப் பரிசாக அவள் தன் தள்ளாத வயதில் மகனின் அன்பையும், அரவணைப்பையும், ஆதரவையும் பணிவான உபசரிப்பையும், இன் சொல்லையும் எதிர் பார்க்கிறாள். இதுவே உலக நியதி'' என்றாள். தாயிடம் விடைபெற்று வீட்டிற்குள் நுழைந்தான். வாயிற்கதவின் அருகில் வெற்றிலை பாக்கை சுவைத்துக் கொண்டு தந்தை படுத்திருந்தார். அவரிட மும் இக் கேள்வியைக் கேட்டான்.

பிதா: ''நான் ஈட்டிய பொருள்களை எல்லாம் உனக்காகச் செல விட்டேன். உயிர் கொடுத்த தந்தைக்கு நீ ஈட்டும் உடமைகளில் உரிமை யுண்டே ஒழிய உன் பாபங்களில் அன்று.''

வேடன் உள்ளே அடுக்களைக்குச் சென்றான். ''காலாகாலத்தில் பொருள் வந்தால் அல்லவா சமைக்கச் ஸௌகரியமாக இருக்கும்'' என்று முனகிக் கொண்டே அவன் கையிலுள்ள மூட்டையை வாங்கி முடிச்சை அவிழ்த்தாள் மனைவி. ஆச்சரியத்துடன் பளபளக்கும் நகைகளைக் கையில் எடுத்தாள். ''பூ இவ்வளவு தானா! பெண்கள் அணியக் கூடியது ஒன்றும் இல்லையே!'' என்றாள். அது கிடக்கட்டும். ''நான் நாள்தோறும் உயிரைப் புல்லாக மதித்து வேட்டையாடி நெற்றி வியர்வை நிலத்தில் விழ வெயிலிலும், பற்கள் கிட்டி உடல் நடுங்கக் குளிரிலும் உணவு சேகரித்துக் கொடுப்பதோடு, நீ விரும்பும் ஆடை அணிகளை அடி உதைகளைப் பொருட்படுத்தாது கொள்ளை அடித்துக் கொணர்ந்து உன்னை மகிழ்விக்கிறேன். நான் கொணர்வதில் பெரும் பகுதியை உனக்கே உரியதாக்கிக் கொள்ளுகிறாய், அதேபோல் உன்னை மகிழ்விப்பதற்காக நான் செய்யும் பாபச் செயல்களிலும் உனக்குப் பங்கு உண்டு அல்லவா?''.

மனைவி: ''என் ஆருயிரே! இப்பிறவியில் நான் உம்மைக் காதலித்து மணந்ததிலிருந்து என் சிரமத்தைப் பொருட்படுத்தாது உமது ஸுகத்திற் காகவே என்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன். நீர் மகிழ்வதற்காகவே நல்லாடைகளையும் நல்லணிகளையும் அணிகிறேன். கொள்ளை அடித்தோ, வேறு வழியிலோ எப்படி ஸம்பாதிக்கிறீர் என்பதில் எனக்கு அக்கரை யில்லை. தாங்கள் இன்புறவே நீங்கள் கொணரும் உயர்ந்த பொருள்களை எனது உடமையாக்கிக் கொள்ளுகிறேன். உணவுக்காக—உங்கள் மனைவி மக்கள் சுற்றத்தினைக் காப்பதற்காக வேட்டையாடுகிறீர்கள். அது உங்கள் கடமை. நீர் எதைக் கொணர்ந்தாலும் அதைச் சீர்படுத்திச் சுவையிட்டு நல்ல முறையில் சமைப்பது என் கடமை. அதை நாம் அனைவரும் சேர்ந்து அமர்ந்து உண்டு மகிழ்வது நம் கடமை. எனவே வேட்டையாடி உயிர்களைக் கொல்வதினால் வரும் பாபம் உங்களுடையது. அவற்றை அழகுற ருசி குன்றாது சமைத்து அனைவருக்கும் பரிமாறுவதினால் ஏற்படும் புண்ணியம் என்னுடையது'' என்றாள்.

வேடுவன்: ''என்ன? அப்படியா உன் தீர்ப்பு?''

மனைவி: ''ஆம். அதில் என்ன ஸந்தேஹம்? இப் பிறவியில் நாம் இருவரும் கணவன் மனைவியர். அடுத்த பிறவியிலே எப்படியோ?'' என்றாள்.

வேடன் மனம் வெறுத்து உணவு அருந்தாமலே வெளியில் வந்தான். அச்சமயம் அவனுடைய செல்வமகன் ஓடோடி வந்து காலைக் கட்டிக் கொண்டான்.

வேடன்: ''குழந்தாய்! உன் அம்மா பேசியதைக் கேட்டாயா?'' என்று அணைத்து முத்தமிட்டு, ''நீ சொல் பார்ப்போம். உனக்காகத்தானே நான் கொலை கொள்ளை செய்ய வேண்டி வருகிறது. அதனால் வரும் பாபத்தில் நீயும் பங்கு கொள்வாய் அல்லவா?'' என்றான்.

மகன்: ''அது போகட்டும் அப்பா! நீங்கள் எங்களைக் காப்பாற்றத் தானே திருடுவதாகச் சொல்கிறீர்கள். ஒரு வேளை அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டால் சிறை யாருக்கு?'' என்றான்.

வேடன்:''சிறையா, எனக்குத்தான்''.

வேடனின் மனம் பேசிற்று: ''நம்மை ஒருவரும் விரும்பவில்லை. நம்முடைய பாபங்களில் ஒருவரும் பங்குகொள்ள இசையவில்லை. ஆனால் நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தில், சொத்தில், இவற்றால் வரும் ஸுகத்தில் பங்குபெற அனைவரும் போட்டியிடுகிறார்கள்'' என்று.

வேடன் உடனே வெதும்பிய மனத்தனாய் ஓடோடியும் ரிஷிகளிடம் வந்தான். இவன் மனதில் தாம் இட்ட வித்து முளைத்து வளர்ந்ததா என்பதை அறிய ஸப்தரிஷிகள் காத்துக் கொண்டிருந்தார்கள். வந்தவன் ரிஷிகளின் திருவடிகளில் விழுந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கதறினான். தேம்பித் தேம்பி அழுதான். ''என்னை ஆட்கொண்டு அருளுங்கள் எனக் கெஞ்சினான்''. எழுந்து, அவர்களை வலம் வந்து, மீண்டும் காலில் விழுந் தான். அலறினான். கண்ணீரால் அவர்கள் திருவடிகட்கு மஞ்சனம் ஆட்டி னான். அவனது கண்ணீரே அவன் பாபங்களைக் கழுவியது, வேடன் புனிதன் ஆனான்.

வேடன் (ஹாரீதன்): ''பஶ்சாத் தப்தோஸ்மி அஹம் ப்ரஷ்ட:''— செய்த பாபங்களுக்காக வருந்துகிறேன்'' என்றான்.

ஸப்தர்ஷிகள்: ''உனக்கு ராம நாமத்தை உபதேசம் பண்ணுகிறோம். அதை ஜபம் செய்வாயாக'' என்றனர்.

ஹாரீதன்: ''மஹாபாபியான யான் அதை உபதேசம் பெறலாமோ?'' என்றான்.

पात्रापात्र विचारो न राम नाम्नां-प्रकीर्तने ।
श्रवणे च उपदेशे च तस्मात् तत्तोद्यतु क्षमम् ।

उत्तिष्ठ उत्तिष्ठ भद्रं ते सफलः सत्समागमः ।
राम नाम समुच्चार्य यस्मात् पापात् न मुच्यते ।
त्रैलोक्यां अस्ति तन्नैव सत्यमेतत् प्रकीर्तितम् ॥
जातः अद्यैव रघोः वंशे राम नाम वहन् हरिः ।
त्वं तत् आम्नाय भक्त्याद्य मोक्ष्यसे सर्व पातकैः ।

பாத்ராபாத்ர விசாரோ ந ராம நாம்னாம் ப்ரகீர்த்தனே ।
ச்ரவணே ச உபதேசே ச தஸ்மாத் தத்தோத்யது க்ஷமம் ॥
உத்திஷ்ட உத்திஷ்ட பத்ரம்தே ஸபல: ஸத்ஸமாகம: ॥
ராமநாம ஸமுச்சார்ய யஸ்மாத்பாபாத் ந முச்யதே ।
த்ரைலோக்யாம் அஸ்தி தந்நைவ ஸத்யம்ஏதத் ப்ரகீர்த்திதம் ॥
ஜாத: அத்யைவ ரகோர் வம்சே ராம நாம வஹன் ஹரி:
த்வம்: தத் ஆம்நாய பக்த்யாத்ய மோக்ஷ்யஸே ஸர்வபாதகை: ॥

''ராமநாமாவை ஜபம் செய்வதில் இவன் தான் உரியவன். இவன் உரியவன் அல்லன் என்று ஶாஸ்த்ரம் கூறவில்லை. எனவே ராம நாம மந்திரத்தைப் பாகுபாடின்றி அனைவரும் கேட்கலாம். உபதேசம் பெறலாம், ஜபிக்கலாம், ராமநாமாவை ஜபித்துப் பாபங்களினின்றும் விடுபடாதவன் இம்மூவுலகிலும் யாரும் இல்லை. இப்பொழுதுதான் அயோத்தியில் ரகு வம்சத்தில் ராம நாமம் பூண்டு ஸ்ரீமந் நாராயணன் அவதரித்திருக்கிறான். அவனை மனதில் நினைத்து பாதகங்களைப் போக்கிக் கொள்ள இதுவே தருணம். ஸத்ஸங்கத்தைப் பயன்படுத்திக்கொள். எழுந்திரு. அருகில் வா. க்ஷேமங்கள் உன்னை வந்து அடையக் காத்திருக்கின்றன. ராம நாம மந்திரத்தை எங்களிடம் உபதேசமாகப் பெற்றுக் கொள்'' எனக் கருணை ததும்பப் பேசினர் ஸப்தரிஷிகள்.

ஹாரீதன் உடனே ரிஷிகளை அடிபணிந்து, ''பெரியோர்களே! நீங்கள் உபதேசம் செய்யப் போவதோ உயர்ந்த மந்திரம். நானோ மஹா பாபீ. உபதேசத்தை யான் மறந்து விட்டால் யாது பயன்? மீண்டும் யான் யாரைத் தேடிச் சென்று மந்திரத்தைப் பெறமுடியும்? எனக்குப் பழக்கம் உள்ளதைத் தான் நான் மறக்காமல் மனதில் கொள்ள முடியும்'' எனக் கெஞ்சினான்.

முனிவர்கள் : ''ஆம் நீ சொல்வது உண்மைதான். இதோபார் ஓங்கி வளர்ந்து இருக்கிறதே, இது என்ன மரம்?'' என்றார்கள்.

ஹாரீதன் : ''இதுவா, நன்கு தெரியுமே, ''மராமரம்'' என்று நாங்கள் கூறுவோம்''.

एकाग्र मनसा अत्रैव मरेति जप सर्वदा ।

''ஏகாக்ர மனஸா அத்ரைவ மரேதி ஜப ஸர்வதா'' ॥

அத்யாத்ம ராமாயணம்

ரிஷிகள்: ''இந்த மரத்தின் பெயரையே ஜபித்துக் கொண்டிரு. அதுவே போதும்'', என்றனர். ஏன்? அப்பெயரின் நடுவில் ராமநாமம் இருக்கிற தல்லவா? அதுவே அவனை உய்விக்கட்டும் என்று அருளி விடைபெற்றனர்.

உடனே வேடன் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து ஆசார்யர்களாய் அமைந்த ஸப்தரிஷிகளை மனதால் நினைத்து, வணங்கி, ராமநாம ஜபம் செய்யத் தொடங்கினான். தன் உணர்வு கிடையாது. பசி, தாகங்களை வென்றான். பல்லாண்டுகள் தவம் புரிந்தான். அவன் இருந்த இடமே தெரிய வில்லை. கரையான்கள் உடல் மாமிசத்தைத் தின்றன. வெறும் எலும்புக் கூடாக ஆனான். பெரும் புற்று எழுந்தது.

ப்ரஹ்மா ''இந்நிலையில் நான் உம்மைத்தேடி அங்கு வந்தேன். ராமநாம ஜபத்தினால் உமது மஹா பாதகங்கள் எல்லாம் தவத்தீயில் பொசுங்கின. எனது கமண்டலு தீர்த்தத்தினால் ப்ரோக்ஷணம் செய்து உம்மை எழுப்பினேன்''.

राम नाम जपान्मुक्त पातकं त्वां विचिन्तयन् ।
अहं कमण्डलु जलैः अभ्युक्ष्य त्वां न्यबोधयम् ॥
स्व वृत्तिं अनुचिन्त्य त्वं यतः खिन्नः अभवः पुरा ।
अतीतानां विस्मरणं ततः अहं अददां तव ।
इदमेवं नवं जन्म तवकृत्वाहमाह्वयम् ।
वाल्मीक इति तेन त्वं ख्यातो नाम्नाऽमुनैव ते ।
ख्यातो लोके सर्वलोके रामनाम्नासि सम्मतः ॥
तस्मात् त्वं कुरु रामस्य चरितं काव्य रूपतः ॥

ராம நாம ஜபாத் முக்த பாதகம் த்வாம் விசிந்தயன் ।
அஹம் கமண்டலு ஜலை: அப்யுக்ஷ்ய த்வாம் ந்யபோதயம் ॥
ஸ்வ வ்ருத்திம் அனுசிந்த்ய த்வம் யத: கின்ன: அபவ:புரா ॥
அதீதானாம் விஸ்மரணம் தத: அஹம் அததாம் தவ ।
இதம் ஏவம் நவம் ஜன்ம தவ க்ருத்வாஹம் ஆஹ்வயம் ॥
வால்மீக இதி தேன த்வம் க்யாதோ நாம்னா முனைவதே ।
க்யாதோ லோகே ஸர்வலோகே ராமநாம்னா ஸி ஸம்மத: ॥
தஸ்மாத் த்வம் குரு ராமஸ்ய சரிதம் காவ்யரூபத:

ஸ்காந்த உபபுராணம்

''நீ கண் விழித்ததும் உனக்குப் பழைய நினைவு வந்துவிட்டது. பல ஈனச் செயல்களைப் புரிந்தோமே என வருந்தத் தலைப்பட்டாய். உடனே நான் ''நீ பழைய சம்பவங்கள் அனைத்தையும் மறக்கக்கடவது'' என அருளி, உனக்கு புதிய பிறவியை அளித்து உம்மை புற்றினின்றும் தோன்றியதையே

காரணமாகக் கொண்டு 'வால்மீகி' எனப்பெயரிட்டு அழைத்தேன். அது முதற்கொண்டு உம்மை எல்லா உலகினரும் வால்மீகி என்றே அழைக்க லாயினர். உம்மால் ராமநாமத்தின் பெருமை எங்கும் பரவியது. கூடவே நீரும் பெரும் புகழ் பெற்றீர். எனவே நீரே இராம காப்பியத்தைப் படைக்கத் தகுதியுற்றவர்'' என நான்முகன் கூறினார்.

எனவே இவ்வரலாற்றினின்றும் வால்மீகி முனிவரை நாம் நன்கு உணர்ந்தோமல்லவா!

வால்மீகி விடுத்த வினாக்கள்

ஸத்ஸமாகமம் *(பெரியோர்களின் சந்திப்பு)* எப்பொழுதும் நன்மை பயக்கவல்லது. இங்கு நாரதர் வால்மீகி இவர்களின் தொடர்பு மூவுல கினர்க்கும் க்ஷேமத்தை அளிக்கவல்ல ராமாயணம் தோன்றக் காரணமாயிற்று. இதைக் கூறும் முதல் ஸ்லோகம் ''தபஸ்வாத்யாய நிரதம்'' என்று ''த'' எழுத்தில் தொடங்குகிறது. ''தகாரோ விக்ன நாசக'', ''த காரஸ் ஸௌக்ய தாயக'' தகர எழுத்தில் தொடங்கும் காப்பியம் தான் இனிது முற்றுப் பெறுவதோடு படிப்போர்க்கும் இடையூறுகளான தீமைகளைக் களைந்து இன்பத்தைப் பயக்கவல்லது. அதோடு ''ந காயத்ர்யா: பரோ மந்த்ர:'' காயத்திரியை விஞ்சும் மந்திரமில்லை என்பதற்கேற்ப உயர்ந்த மந்திரத்தின் முதல் எழுத்து தகரம் என்பது நோக்கத்தக்கது.

''வால்மீகி: நாரதம் பரிபப்ரச்ச'' நாரத மஹர்ஷியை வால்மீகி முனிவர் உபசரித்து வணங்கித் தாம் கேட்கப் போவதை முன்னரே அறிந்திருந்தாலும் சிறப்பாக அறியக் கேட்டார். கேள்வியாவது :

१. कोन्वस्मिन् साम्प्रतं लोके गुणवान् कश्च वीर्यवान् ।
धर्मज्ञश्च कृतज्ञश्च सत्यवाक्यो दृढव्रतः ॥

२. चारित्रेण च को युक्तः सर्वभूतेषु को हितः ।
विद्वान् कः कः समर्थश्च कश्चैक प्रिय दर्शनः ॥

३. आत्मवान् को जित क्रोधः द्युतिमान् कोऽनसूयकः ।
कस्य बिभ्यति देवाश्च जातरोषस्य संयुगे ॥

४. एतदिच्छाम्यहं श्रोतुं परं कौतूहलं हि मे ।
महर्षे त्वं समर्थोऽसि ज्ञातुमेवंविधं नरम् ॥

1. கோன்வஸ்மின் ஸாம்ப்ரதம் லோகே குணவான் கஶ்ச வீர்யவான் ।
தர்மக்ஞஶ்ச க்ருதக்ஞஶ்ச ஸத்ய வாக்யோ த்ருட வ்ரத: ॥

2. சாரித்ரேண ச கோ யுக்த: ஸர்வபூதேஷு கோ ஹித: ।
வித்வான் க: க: ஸமர்த்தஶ்ச கஶ்சைக ப்ரிய தர்ஶன: ॥

3. ஆத்மவான் கோ ஜித க்ரோதோ த்யுதிமான் கோனஸூயக: ।
கஸ்ய பிப்யதி தேவாஶ்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே ।

4. ஏதத் இச்சாம்யஹம் ஶ்ரோதும் பரம் கௌதூஹலம் ஹி மே ।
மஹர்ஷே த்வம் ஸமர்த்தோஸி க்ஞாதும் ஏவம் விதம் நரம் ॥

வா.ரா. பாவ - 1

ஆசையோ பெரிது!

வால்மீகி முனிவருக்கு ஓர் ஆசை. தாம் தவம் செய்த காலத்தி லிருந்தே தொடரும் ஆசை. நாம் பேராசை என்போமே அத்தகையது அன்று. நம் பேராசையைப் போன்று பன்மடங்கு பெரியது. இதுவரை அதை வெளி யிடத்தக்கவர் கிடைக்கவில்லை. பொறுத்திருந்தார். இப்பொழுதோ நாரதர் கிடைத்து விட்டார். காற்று உள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டு மல்லவா? இதயத்தின் அடித்தளத்தில் அழுந்திக்கிடந்த மாபெரும் ஆசை பீறிட்டுக் கொண்டு சொல்லாகக் கிளம்பியது. அந்த ஆசையின் சொல் வடிவம் தான் மேற்கூறிய நான்கு ஶ்லோகங்களும்.

குணவான்: ''மஹர்ஷியே! நான் மிக உயர்ந்ததொரு மனிதனை அறிய விரும்புகிறேன். ஆனால் அவன் நம்மோடு உறவாட வேண்டும். கூடவே ஓடியாடிப் பழக வேண்டும். கல்யாண குணங்கள் எனும் அனைத்து நற்குண நற்பண்புகளும் ஒருங்கே அவனிடம் திகழ வேண்டும். அவன் எளியவர் களோடு மிக நெருங்கிப் பழகுவதைப் பார்த்துச் சான்றோர்கள் இத்தகு உயர்வுடையவன் ஈனர்களோடு இப்படித் தாழ்ந்து தன் பெருமை மறந்து பழகுகின்றானே என வியப்பில் மூழ்க வேண்டும். அது மட்டும் போதாது.''

உலகில் ஒருவரை உயர்ந்தவர் என்றோ, பிறருக்கு நன்மைகளையே செய்வதால் மங்களமானவர் என்றோ புகழ்கிறோம். ஏன்? அவரிடம் உயரிய, மங்களமான குணங்கள் குவிந்திருப்பதால் அங்ஙனம் புகழ்கிறோம். ஆனால், பகவானிடத்தில் இது தலைகீழாக மாறுபட்டுள்ளது. இக்குணங்கள் எல்லாம் தவங்கிடந்து அத்திகிரிமேல் நின்று அனைத்தும் காக்கின்ற பேரரு ளாளனை அடைந்ததால் மங்கள குணங்கள், திருக்கல்யாண குணங்கள் எனும் பெருஞ் சிறப்பைப் பெற்றனவென்பர்.

गुणायत्तं लोके गुणिषु हि मतं मङ्गल पदम्
विपर्यस्तं हस्ति क्षितिधरपते ! तत् त्वयि पुनः ।
गुणाः सत्यज्ञानप्रभृतयः उत त्वद्गततया
शुभीभूयं याता इति हि निरणैष्म श्रुतिवशात् ॥

குணாயத்தம் லோகே குணிஷு ஹி மதம் மங்கள பதம்
விபர்யஸ்தம் ஹஸ்தி க்ஷிதிதரபதே । தத் த்வயி புன:
குணா: ஸத்ய ஞான ப்ரப்ருதய: உத த்வத் கததயா
ஶுபீ பூயம் யாதா இதிஹி நிரணைஷ்ம ஶ்ருதிவஶாத்

கூரத்தாழ்வார், வரதராஜஸ்தவம் -11

''அவை போன்று நான் அறியவிரும்பும் மனிதனிடம் குடிகொண்டிருப் பதன் காரணமாக அவை திருக்கல்யாண குணங்கள் எனும் விருதைப் பெறு வனவாக இருக்க வேண்டும்.

வீர்யவான் : பொதுவாக உலகில் மனதைக் குரங்கு என்பர். குரங்கு ஒரு நொடி கூட சஞ்சலமின்றி இருக்காது. நம் மனமும் அத்தகையது. ஒரு பொருள் கிடைத்தால் மகிழும். கிடைக்காவிடில் வருந்தும். கிடைத்த பொருளை இழந்தால் அழும். அப்பொருளைக் கவர்ந்தவன் இன்னார் என அறிந்தால் சினங்கொண்டு சண்டையிடத் தூண்டும். பிறர் நிறையப் பொருள் ஈட்டி மகிழ்வுடன் வாழ்வதைக் கண்டால் பொறாது, பொறாமை கொள்ளும். பேராசை கொண்டு நிறையப் பொருள் ஈட்ட முயலத் தூண்டும். முயற்சி வெற்றி பெறாவிடில் சினம் கொள்ளும். ஆக இத்தகு மனம் தான் நம் குடியைக் கெடுத்து நம்மை வாட்டுகிறது. ஆனால் இன்ப துன்பங்களையும், லாப நஷ்டங்களையும், ஸமமாக பாவிக்கும்படி பழக்கிவிட்டால் அந்த மனமே அளவிலா ஆனந்தத்தையே நல்கும். எனவே, இன்ப துன்பங்கள் எது நேரிடினும் கலங்காத நெஞ்சுடையவனாயும், தன்னைக் கலங்கும்படிச் செய்ய விரும்புவோரைக் கலக்கி அழியச் செய்யும் திறனுடையவனுமான நரன் யார்?

தர்மக்ஞ: பேரின்பப் பேற்றை அளிக்கவல்ல பக்தி சரணாகதி ஆகிய ஸாமான்ய தர்மத்தையும் விசேஷ தர்மத்தையும் நன்கு உணர்ந்தவனாக இருக்க வேண்டும்.

க்ருதக்ஞ: தனக்குப் பிறர் எவ்வளவு அபகாரம் செய்யினும் மனதில் கொள்ளாது பெயரளவுக்குச் செய்த உபகாரத்தையே நினைத்து மகிழும் தன்மை வேண்டும். அவ்வளவு மட்டும் அன்றி பிறர் செய்யும் அப சாரங்களை அப்பொழுதே மறக்கும் தன்மையனாய்த் திகழ வேண்டும். க்ருதமேவ ஜானாதி (செய்ததையே அறிகிறவன்) என்பதில் இக்கருத்து வெளிப்படை. இதையே குறளும் விளக்குகின்றது.

நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. குறள் -108

மேலும், தனக்குத் துன்பம் நேர்ந்த காலத்தும் வாய்மை தவறாதவ னாயும். வாக்குப் பிறழாதவனும், தம் குலாசாரத்தினின்றும் வழுவாதவனும், உயிரினங்களுக்குப் பிழை செய்தவராயினும் அவர்க்கும் நன்மையே விளைவிப்பவனும், வேத சாஸ்த்ரங்களை நன்கு அறிந்தவனும், செயல் திறன் பெற்றவனும், ஸாக்ஷாத் மன்மத மன்மதனாய் பார்க்கப் பார்க்க கண் வாங்க மாட்டாத காட்சியுடையவனும், மனதை வென்றவனும், துணி வுடையவனும், காமம், கோபம், பேராசை, மோஹம், மத, மாச்சரியங் களாகிற உட்பகைகளை வென்றவனும், அஸூயை இல்லாதவனும் (பிறர் ஆக்கம் குணநலன்கள் கண்டு பொறாது குறை கூறும் தன்மையரும்,

லக்ஷ்மீகடாக்ஷ மின்றித் துன்புறுவர். செல்வம் நீங்கி வறுமையில் வாடி வேதனைப்படுவர்.

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். குறள் - 167

அஸூயைப்படுபவனைப் பார்த்து மனம் பொறுக்காமல் மஹா லக்ஷ்மீ அவனைத் தன் தமக்கைக்குக் காட்டிவிடுவாளாம்.)

''அஸுரர்களோடு போர் மூண்டால் கோபத்தோடு போரிடுவதைக் கண்டு தன் தரப்பிலுள்ள தேவர்கள் கூட அச்சமுற்று நடுங்குவார்களோ அத்தகையவனுமான நரனை அறிய விரும்புகிறேன். உபதேசியுங்கள்'' எனப் பிரார்த்தித்தார்.

இங்கு வால்மீகி முனிவர் ராமநாம தாரக மந்திரத்தைச் சொல்லித் தவம் புரிந்தார். எந்த மந்திரத்தை ஜபம் செய்கிறோமோ அதன் பொருளை, தேவதையை, அதன் குணவிசேஷங்களை தியானம் செய்து ஜபம் செய்ய வேண்டுமென்பது பொதுவிதி. எனவே எந்த தெய்வமான ராமனை மனதில் கண்டு களித்தாரோ, அதே ராம தெய்வத்தை நிஷ்டை கலைந்ததும் நரனாக (மனிதனாக) வெளியிலும் காணவிரும்பினார்.

திருமழிசை ஆழ்வாரும் நாராயணனைப் பரதத்வம் என்று ஒப்புக் கொள்ளாத விதண்டாவாதிகளின் வாயை அடக்க, ''எம்பெருமானே! என் இதயத்தாமரையில் சங்கசக்ர கதாபாணியாய் அமர்ந்து எனக்கு ஸேவை (காட்சி) ஸாதித்தீரே! அதே போன்று வெளியிலும் காட்சி அளிப்பீராகில் மிக்க உபயோகமாக இருக்குமே'' எனப் பிரார்த்திக்கிறார்.

''சக்கரங் கொள் கையனே! சடங்கர் வாய் அடங்கிட
உட்கிடந்த வண்ணமே, புறம்பு ஒசிந்து காட்டிடே''

திருமழிசையாழ்வார் - தனிப்பாடல்

என்று உள்ளத்தில் மட்டுமல்லாமல் உருவிலும் குணங்களிலும் பரமனைக் கண்டு களித்தவர் நாரதரைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்! நாரதர் என்ற பெயரே நற்கதியை (மோக்ஷத்தை) அளிக்கவல்ல ஜனார்தனனை நமக்கு அளிப்பவர் என்பதைக் காட்டுகிறதல்லவா?

மேலும் வால்மீகிக்கு ராமனைப் பற்றி நன்கு தெரியும். எனவே கேள்வி கேட்டதின் நோக்கம் அயோத்தியில் அவதரித்து நாட்டை ஆளும் சக்ரவர்த்தித் திருமகன் வேதாந்தங்களில் சொல்லப்படுகிற பரப்ரஹ்மத்தின் அவதாரமா? ப்ரஹ்ம ருத்ர இந்த்ராதி தேவதைகளின் அவதாரமா என்பதை நாரதர் வாயிலாக உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான், நிற்க. வால்மீகி முனிவர் நன்கு கற்றுத் தேர்ந்த அறிஞர். வேதங்களையும், வேதாந்தங்களான சாஸ்த்ரங்களையும் கற்றவர். தவத்தின் மூலம் இதயத்தில் பரப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரித்தவர். எனவே காரண காரியங்களைக் கொண்டு இராமபிரானை மறைகளில் ஓதப்படும் நாராயணன் அவதாரம்

தான் என அறிய வேண்டியிருக்க நாரதரைக் கேட்பானேன்? எனில் உண்மைதான். குருவை அடைந்து உபதேசத்தின் மூலம் தான் வேதாந்தத்தின் விழுப் பொருளை அறியவேண்டும். மேலும் இப்பரதத்வத்தையும், இதன் கல்யாண குணங்களையும் ஸூக்ஷ்மமாகத் தன்னகத்தே கொண்டு தன்னை ஜபித்துப் பாடி நினைக்கின்றவர்களைப் பாதுகாக்கின்ற இயல்புடைய மந்த்ரங்களையும் ஆசார்யனிடமிருந்து உபதேசம் பெற்றுத்தான் அறிய வேண்டும் என்று வேதம் விளம்புகிறது. அப்படியின்றி மந்த்ரங்களை முறை யின்றி காதால் கேட்டறிந்தோ, பிறருக்கு உபதேசிக்கும்போது மறைமுகமாக நின்று கேட்டோ, ஏதோ வ்யாஜம் கொண்டு அறிந்தோ, ஏமாற்றி அறிந்தோ, சுவடிகளில் பார்த்து அறிந்தோ ஜபம் செய்தால் பலன் கொடுக்காது. மாறாகத் தீமைகளையே விளைவிக்கும். எனவேதான் ஸ்ரீ வைஷ்ணவர்கள் மந்த்ரங் களை ஆசார்யனிடம் உபதேசம் பெறுவது போன்று மந்த்ரார்த்தங்களையும், பரப்ரம்மத்தையும் விளக்கும் நூல்களான ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம். கீதாபாஷ்யம், ஸ்ரீ பாஷ்யம், பகவத் விஷயம் எனும் நான்கையும் ஆசார்யனை அடிபணிந்து அமர்ந்து கேட்க வேண்டும் என வகுத்திருக்கிறார்கள்.

यदृच्छया श्रुतो मन्त्रः छन्नेन अथ छलेन वा ।
पत्रेक्षितो वा व्यर्थः स्यात् प्रत्युतानर्थदो भवेत् ॥

யத்ருச்சயா ஶ்ருதோ மந்த்ர: சன்னேன அத சலேநவா ।
பத்ரேக்ஷிதோ வா வ்யர்த்த: ஸ்யாத் ப்ரத்யுத அனர்த்ததோ பவேத் ॥

பாத்மஸம்ஹிதை - சார்யாபாதம், 23 - 31

நாரதர்: ''முனிவரே! நீர் கூறிய பதினாறு குணங்களும் ஒருவனிடம் இருப்பது மிகவும் அரிது. இல்லை, இல்லை, விஷ்ணு லோகத்திலுள்ள மஹாவிஷ்ணுவினிடம் இக்குணங்களை நான் நன்கு அனுபவித்திருக் கிறேன்.''

வால்மீகி: ''மஹர்ஷே! அத்தகையவரை நான் இப்பூவுலகில் அன்றோ காண ஆசைப்படுகிறேன்.''

நாரதர்: ''அப்படியாகில் தான் அளந்து இட்ட தூணை அவன் தட்ட, ஆங்கே வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க உருவாய் உரம் பற்றி, இரணியனை உகிர் நுதியால் ஒள்ளிய மார்பு உறைக்க ஊன்றி, சிரம் பற்றி, முடி இடிய, கண் பிதுங்க, வாய் அலர அவதரித்த அழகியானிடம் இக் கல்யாண குணங்கள் அனைத்தையும் நன்கு அனுபவிக்கலாமே.''

வால்மீகி: ''ஆம். என் சிங்கப் பிரானிடம் இப்பெருமை மிக்க கல்யாண குணங்களின் சீர்மையை ஆராய்ந்து அறியலாம். உண்மை. ஆனால் இவ்வுலகில் இப்பொழுது அன்றோ இத்தகையவனைக் காண என் மனமும் கண்களும் விழைகின்றன.''

நாரதர்: ''அப்படியா? சற்றுப் பொறும். நன்கு ஆராய்ந்து பார்த்துச் சொல்லுகிறேன். கேளும்'',

बहवो दुर्लभाः चैव ये त्वया कीर्तिताः गुणाः
मुने वक्ष्यामि अहं बुध्वा तैर्युक्तः श्रूयतां नरः ॥
इक्ष्वाकु वंशप्रभवः रामोनाम जनैः श्रुतः ।
नियतात्मा महावीर्यः द्युतिमान् धृतिमान् वशी ।
बुद्धिमान् नीतिमान् वाग्मी श्रीमान् शत्रुनिबर्हणः ॥
विपुलांसो महाबाहुः कम्बुग्रीवो महाहनुः ।
धर्मज्ञः सत्य सन्धश्च प्रजानां च हिते रतः ।
यशस्वी ज्ञान सम्पन्नः शुचिर्वश्यः समाधिमान् ॥
रक्षिता जीवलोकस्य धर्मस्य परिरक्षिता ।
रक्षिता स्वस्य धर्मस्य स्वजनस्य च रक्षिता ॥
स च सर्वगुणोपेतः कौसल्यानन्दवर्धनः ॥

பஹவோ துர்லபா: சைவ யே த்வயா கீர்த்திதா குணா: ।
முனே! வக்ஷ்யாமி அஹம் புத்வா தை: யுக்த: ஶ்ரூயதாம் நர: ॥
இக்ஷ்வாகுவம்ஶ ப்ரபவ: ராமோ நாம ஜனை: ஶ்ருத: ।
நியதாத்மா மஹாவீர்ய: த்யுதிமான் த்ருதிமான் வஶீ ॥
புத்திமான் நீதிமான் வாக்மீ ஸ்ரீமான் ஶத்ருநிபர்ஹண: ॥
விபுலாம்ஸோ மஹாபாஹு: கம்புக்ரீவோ மஹாஹனு: ।
தர்மஜ்ஞ: ஸத்யஸந்தஸ்ச ப்ரஜானாம் ச ஹிதே ரத: ।
யஶஸ்வீ ஜ்ஞான ஸம்பன்ன: ஶுசி: வச்ய: ஸமாதிமான் ॥
ரக்ஷிதா ஜீவலோகஸ்ய தர்மஸ்ய பரிரக்ஷிதா ।
ரக்ஷிதா ஸ்வஸ்ய தர்மஸ்ய ஸ்வஜனஸ்ய ச ரக்ஷிதா ।
ஸச ஸர்வகுணோ பேத: கௌஸல்யானந்த வர்தன: ॥

வா. ரா. பால - 1

''நீர் விரும்பும் பரமபுருஷன் அயோத்தியில் இக்ஷ்வாகுவம்சத்தில் அவதரித்திருக்கிறான். அவனுடைய கல்யாண குணங்கள் எல்லையற்றவை. அவன் ஸ்வபாவத்திலோ திருமேனியிலோ எவ்வித விகாரமும் இல்லாதவன், விசித்ரமான ஆற்றல் படைத்தவன். ஞான ஸ்வரூபமானவன், ஆனந்தமே வடிவு எடுத்தவன், அனைத்தையும் தன் வசத்தில் வைத்திருப்பவன். வேதங்கள் அனைத்தையும் உலகங்களைப் படைக்கும் போது உபதேசித்து பிரசாரம் செய்பவன். உபய விபூதி நாதன். தீயோர்களைக் களைவதற்காகவே அவதரிப்பவன், எடுப்பான தோள்களும், திரண்ட பருத்த முழங்கால்கள் வரை நீண்ட கைகளும், சங்கு போன்ற கழுத்தும், பார்வையான கன்னங் களும், அகன்ற மார்பும் உடையவன், சரணாகதரக்ஷகன், கொடுத்த வாக்கை

மீறாதவன்'', என்று இவ்வாறாக எல்லையற்ற பரமனுக்கே உரிய கல்யாண குணங்களையும், ஸாமுத்ரிகா லக்ஷணம் பொருந்திய திருமேனி அமைப்பையும் கூறி, சுருக்கமாக ராமாயணம் முழுவதையும் உபதேசித்தார். தற்கால ஆராய்ச்சியாளர்களில் சிலர் ராமாயணத்தை வெறும் சரித்திர நூலாகக் கருதுகின்றனர். ஆனால் உண்மை அதுவன்று. சரித்திரத்தை ஒரு வ்யாஜமாகக் கொண்டு மறைகளிலும் மறை முடிகளிலும் கூறப்படுகின்ற பரம் பொருளை நாராயண தத்வத்தை எளிய முறையிலே புகட்டும் ஒரு வேதாந்த நூலாகும். எனவேதான் பகவத் ராமானுஜர் ராமாயணத்தைத் தாமே படித்து அறியாது, திருமலை நம்பி என்ற ஆசார்யரிடம் அடிபணிந்து அமர்ந்து கேட்டதாக குருபரம்பரை கூறுகிறது. எனவேதான் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ராமாயணம், விஷ்ணுபுராணம், கீதை, ஸஹஸ்ர நாமம் முதலியவற்றை ஆசார்யனிடம் உபதேசம் பெற்றே பாராயணம் செய்ய வேண்டும் என்பதை ஸம்பிரதாயமாகக் கொண்டிருக்கிறார்கள்.

வால்மீகி முனிவர் ஆசார்யரான நாரதரிடம் ராமாயணத்தை உபதேசம் பெற்ற பிறகு, தன் சீடர்களைக் கொண்டும், தாமும் அவரை நன்கு உபசரித்து வழியனுப்பினார். நாரதரும் தக்க பாத்திரத்தில் உபதேசித்தோம். இனி ராமாயணம் பூவுலகில் நன்கு பரவி மக்கள் க்ஷேமத்தைப் பெறுவர் எனும் மகிழ்ச்சியுடன் விடை பெற்றுக் கொண்டு தேவலோகம் சென்றார்.

'சோகம், ச்லோகம்' ஆதல்

நாரத முனிவர் விடை பெற்று தேவலோகம் சென்ற ஸமயம் வால்மீகி முனிவருக்கு மாத்யான்ஹிக ஸ்நானத்திற்குரிய காலம் நெருங்கிவிட்டது. எனவே பரத்வாஜன் எனும் சிஷ்யனை அழைத்துக் கொண்டு நீராட்டத் திற்குப் புறப்பட்டார். தினந்தோறும் கங்கைக்குச் சென்று நீராடுவது வழக்கம். இன்றோ நாரதஸமாகமத்தினால் சிறிது தாமதம் ஏற்பட்டது. எனினும் அனுஷ்டானங்களை உரிய நேரத்தில் செய்ய வேண்டி கங்கைக்கு அருகிலுள்ள தமஸா நதியில் நீராட எண்ணினார். அந்தணன் ஸந்த்யா வந்தனங்கள் மூன்றையும் உரிய காலத்தில் செய்ய வேண்டும். ''காணாமல் கோணாமல் கண்டு கொடு'' என்பர். அதாவது காலையில் கதிரவன் தோன்று வதற்கு முன்னரே நீராடி அர்க்யம் கொடுக்க வேண்டும். மதியத்தில் சூரியன் உச்சியில் இருக்கும்பொழுதும், மாலையில் மறைவதற்கு முன்னரும் அர்க்யம் கொடுக்க வேண்டும். முனிவரின் செய்கை எவ்வளவு செயல்கள் இருப்பினும் அவற்றை அனுஷ்டானத்திற்கு இடையூறின்றி அமைத்துக் கொள்ள வேண்டும்'' என்பதை நமக்குப் படிப்பினையாக உணர்த்துகிறது.

தமஸா நதியின் கரையை அடைந்ததும் பரத்வாஜனைப் பார்த்துப் பேசலானார்.

अकर्दमं इदं तीर्थं भरद्वाज निशामय ।
रमणीयं प्रसन्नाम्बु सन्मनुष्यमनो यथा ।।

அகர்தமம் இதம் தீர்த்தம் பரத்வாஜ! நிசாமய ।
ரமணீயம் ப்ரஸன்னாம்பு ஸந்மனுஷ்யமனோ யதா ॥

வா.ரா. பால. - 2

''இதன் தீர்த்தத்தைப் பார்! எவ்வளவு தூய்மையாக இருக்கிறது! காட்டின் இடையே ஓடினாலும், தன்மீது விழும் தழைகளையும், தூசு களையும் அகற்றிக் கொண்டு எவ்வளவு தெளிவாகக் கண்ணாடிபோல் காட்சி யளிக்கிறது! இதன் தரைப் (அடிப்) பகுதியில் சிறிதும் சேறு இல்லை. நீரிலும் கலக்கமில்லை. இதைப் பார்க்கும் பொழுது நல்லோர்கள் அனைவரும் என் நினைவுக்கு வருகிறார்கள். எவ்வளவு இன்னல்கள் நேரிடினும் அவர்கள் மனம் கலக்கமுறாது. எதையும் தெளிவாகச் சிந்தித்துப் பதட்டமின்றி உண்மையையே கூறும்''.

துஷ்யந்தன் இந்நாட்டை ஆண்ட சரித்திர காலத்திய பேரரசன், காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். எதிர்பாராது கௌதம முனிவரின் ஆச்ரமத்திற்கு அருகில் சென்றபோது இயற்கையான அழகிற்கு நிலைக் களமாய்த் திகழ்ந்த ஓர் அணங்கைப் பார்க்கிறான். அரசனோ நன்நடத்தை யில்

மக்களுக்கு வழி காட்டியாய் உதாஹரணமாய்த் திகழ்பவன். ஆயினும் அப்பெண்ணின் அழகு இவன் மனதை ஈர்த்தது. ''அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்'', என்பான் கவிச்சக்ரவர்த்தி, எனினும் அரசன் அல்லவா! சற்று யோசித்தான். ''நாமோ அரசன், அரசன் வேட்டையாடச் சென்றான்; விலாஸமில்லாத ஒரு பெண்ணுடன் திரும்பினான்'' என சிற்றரசர்கள் ஏசுவர். மூலைக்கு மூலை கூடி மக்கள் பரிஹஸிப்பர். என் செய்வது? நொடிப் பொழுதில் விடை கண்டான். க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த நமக்கு இவள் மணம் கொள்ளத் தக்கவளே. இதில் ஐயப்பட என்ன இருக்கிறது? ஏனெனில் மனத்தாலும் வாக்காலும் மெய்யாலும் மாசு மறுவற்றுத் திகழ்ந்த நற்குடியில் தோன்றிய நம்முடைய மனம் சிறிதும் தயக்கம் இன்றி அவளை விரும்புகிறதே. எனவே அவளை மணப்பதில் தவறுக்கு என்ன இடமிருக்கிறது என்கிற முடிவுக்கு வந்தான். இங்கு தனது மனத்தினைக் குறிப்பிடும் போது ''ஆர்யம் மந:'' என்கிறான்.

''அதத்வேப்ய: ஆராத் தூராத் யாதா புத்தி: யஸ்ய'' என்று ஆர்ய எனும் சொல்லுக்குப் பொருள் காண்கிறார் நிகமாந்தகுரு. அதாவது உண்மைக்குப் புறம்பானவற்றினின்றும் ஒதுங்கிய அறிவையுடையது என்க. ஆக துஷ்யந்தன் தன் மனது உண்மைக்குப் புறம்பான, சான்றோர் உகக்காத ஒன்றில் ஈடுபடாது என உறுதியாக நம்பினான். இக் கருத்துக்குக் கவிஞனும் துணைபோகிறான்.

சான்றோர்கட்கு ஏதாவதொரு விஷயத்தில் (பொருளில்) ஐயம் ஏற்பட்டால் அவர்களுடைய பண்பட்ட மனம் எவ்வழியைச் சார்ந்து நிற்கிறதோ அதுவே நேரிய வழியாம், அதுவே அறத்தின் பாற்பட்டது, சாஸ்த்திர ஸம்மதமானது என்றவாறு. எனவே சகுந்தலையை மணந்ததில் துஷ்யந்தனுக்கு எத்தகைய அறப்பிழையும் இல்லை என்கிறான் மஹாகவி காளிதாஸன்.

असंशयं क्षत्र परिग्रहक्षमा यदार्य अस्यां अभिलाषि मे मनः ।
सतां हि सन्देहपदेषु चस्तुषु प्रमाणं अन्तः करण प्रवृत्तयः ॥

அஸம்ஶயம் க்ஷத்ர பரிக்ரஹக்ஷமா யத் ஆர்யம் அஸ்யாம்
அபிலாஷி மே மன: ।
ஸதாம்ஹி ஸந்தேஹபதேஷுவஸ்துஷு ப்ரமாணம் அந்த: கரண
ப்ரவ்ருத்தய: ॥

சாகுந்தலம்

எனவே ஸத்துக்களின் மனம் போன்று மாசு மறுவற்றுத் தெளிவான இத் தீர்த்தத்திலேயே இன்று நீராடுவோம் என்றார் வால்மீகி முனிவர். பின்னர் பரத்வாஜனிடமிருந்து ஸ்னானசாடியைப் பெற்றுக் கொண்டு நீராடச் சென்றவர் இங்கும் அங்குமாக உலவிய வண்ணம் அப்பரந்த காட்டுப் பகுதியை உற்று நோக்கினார். நாரதர் சந்திப்பினால் அனுஷ்டானத்திற்கு

தாமதமாகியிருந்தும், புலன்களை வென்றவரானபடியால் எதிலும் மனதைச் செலுத்தாது நீராட்டத்திற்காக விரைந்து வந்திருந்தும் அப்பரந்த காட்டுப் பகுதி முழுவதிலும் தம் கண்களைச் செலுத்தினார். தினந்தோறும் மூன்று வேளைகளிலும் நீராடச் சென்று மிகப் பழகிய காட்டுப் பகுதியை இன்று கூர்ந்து நோக்கியதில் ஏதோ பகவத் ஸங்கல்பம் இருக்க வேண்டுமென்பதை ''ஹ'' எனும் சொல் காட்டுவுதாகக் கொள்ளலாம்.

स शिष्यहस्तात् आदाय वल्कलं नियतेन्द्रियः ।
विचचार ह पश्यन् तत् सर्वतो विपुलं वनम् ॥
तस्य अभ्यासे तु मिथुनं चरन्तमनपायिनम् ।
ददर्श भगवान् तत्र क्रौञ्चयोः चारुनिस्वनम् ॥
तस्मात्तु मिथुनादेकं पुमांसं पापनिश्चयः ।
जघान वैर निलयः निषादः तस्य पश्यतः ॥
तं शोणित परीताङ्गं वेष्टमानं महीतले ।
भार्या तु निहतं दृष्ट्वा रुराव करुणां गिरम् ॥
ऋषेः धर्मात्मनः तस्य कारुण्यं समपद्यत ।
निशम्य रुदतीं क्रौञ्चीं इदं वचनमब्रवीत् ॥

ஸசிஷ்யஹஸ்தாத் ஆதாய வல்கலம் நியதேந்திரிய: ।
விசசார ஹ பச்யன் தத் ஸர்வதோ விபுலம் வநம் ॥
தஸ்ய அப்யாஸேது மிதுனம் சரந்தம் அனபாயினம் ।
ததர்ஶ பகவான் தத்ர க்ரௌஞ்சயோ: சாரு நிஸ்வனம் ॥
தஸ்மாத்து மிதுனாத்ஏகம் புமாம்ஸம் பாபநிஶ்சய : ।
ஜகான வைரநிலய: நிஷாத: தஸ்ய பஶ்யத :॥
தம் ஶோணிதபரீதாங்கம் வேஷ்டமானம் மஹீதலே ।
பார்யா து நிஹதம் த்ருஷ்ட்வா ருராவ கருணாம்கிரம் ॥
ரிஷே : தர்மாத்மன: தஸ்ய காருண்யம் ஸமபத்யத ।
நிஶம்ய ருததீம் க்ரௌஞ்சீம் இதம் வசனம் அப்ரவீத் ॥

வா. ரா. பால. - 2

வால்மீகி, அருகில் உள்ள ஒரு சிறு மரத்தில், இணை பிரியாது வாழும் தன்மையுடைய க்ரௌஞ்சப் பறவைகளின் ஜோடியைப் பார்த்தார். அவை அன்பின் மிகுதியினால் இணைந்து இன்புற்று, தங்கள் மொழியில் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தன.

க்ரௌஞ்சம் என்பதைத் தமிழில் அன்றில் பறவை என்பர். அவை எப்பொழுதும் ஆணும், பெண்ணுமாக இணைபிரியாது வாழும் தன்மை யுடையவை. கணப்பொழுதாகிலும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்தாலும்,

அப்பிரிவுத் துயரத்தைப் பொறாமல், ஒன்றை மற்றொன்று இரண்டு மூன்று தரம் அழைத்துக் கூவுமாம். அதன் பின்பும் தன் துணையோடு கூடாவிடின் உடனே இறந்துவிடுமாம். அவை இரவுப் பொழுதில் இணைபிரியாது நெருங்கி ஒன்றோடொன்று வாய் அலகைக் கோத்துக் கொண்டு உறங்குமாம். உறக்கத்தில் வாயலகு பிரிந்துவிட்டால் துயில் உணர்ந்து அந்நெகிழ்ச்சியைப் பொறாமல் மெலிந்து இரண்டும் சேரும் வரை கத்திக் கொண்டேயிருக்கு மாம். இக்குரல், பிரிந்த காதலர்கட்குத் துயரைத்தருமென வருணிப்பது கவிஞர் மரபு. இதில் ஆண் பறவையின் தலை தாமிரம் போன்று சிவந்து இருக்கும்.

இந்நிலையில் வால்மீகி முனிவர் அன்றில் தம்பதிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். முனிவர், ஒருவனை சபிக்கவோ, அனுக்ரஹிக்கவோ (வீழ்த்தவோ வாழ்த்தவோ) ஆற்றல் உடையவர். பொதுவாக ஈனச் செயலில் ஈடுபடும் கொடியோர்கள் ஸாதுக்களைக் கண்டால் தாம் செய்யும் கொடுந் தொழிலை அவர்கள் அகலும் வரையில் பொறுத்திருந்து செய்வர். ஏனெனில் நல்லோர்களின் ஶாபச் சொல் தமக்குத் தீங்கை விளைவிக்குமே என்கிற அச்சம். இவ்வாறு சிறிதும் அச்சமின்றி, ஒரு வேடுவன் வில்லில் நாணேற்றிக் கூரிய அம்பினால் இன்புற்றிருக்கும் பறவைகளுள் ஆண் பறவையை அடித்தான். உடனே கீழே விழுந்த அப்பறவை தன் ரத்தத்தில் மூழ்கி ஊஶலாடும் உயிருடன் புரண்டு புரண்டு தவித்துக் கொண்டிருந்தது. தன் கணவன் அடிபட்டுத் தவிப்பதைப் பொறாத பெண் பறவை ஈனக் குரலுடன் கூவி அழுது தவித்தது. இந் நிகழ்ச்சி அம்பினால் அடிபட்ட வாலியின் பிரிவினால் தாரையும், இராவணனின் பிரிவினால் மந்தோதரியும் பட்ட துயரைச் சித்தரிப்பது போல் இருந்ததெனலாம். துயருற்றுத் தவிக்கும் பெண் பறவையைப் பார்த்த பரம தார்மிகரான முனிவர் இரக்கம் மேலிட்டுக் கோபத்தினால் ஶபிப்பவர் போன்று தம்மையும் உணராதவராய்ப் பேச லானார்.

இங்கு ''விசசார ஹ'' என்று இடத்தில் ''ஹ'' எனும் சொல் பகவத் ஸங்கல்பத்தை (பகவல்லீலையை காட்டுவதாகக் கொள்ளலாம்.) அதைச் சித்தரிக்கிறது ஸ்காந்த உபபுராணம்.

ராவணவதமாகி அயோத்தியில் ராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆன பிறகு சின்னாட்கள் கழித்து பிரமன் அயோத்திக்கு வந்தார். இராமனும் பிரமனும் தனித்து ஏகாந்தமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ராமன்:

चतुरास्य तव इदानीं कार्यं किमपि गोपितम् ।
तत्ते कर्तव्यं अचिरात् मम प्रिय चिकीर्षया ।
संसार सिन्धुतरणं जनाः कर्तुं अनीश्वराः ।
मत्कथा संज्ञितां नावं प्राप्य नन्दन्तु निर्वृताः ॥

भोक्ष्ये त्वच्छापमित्येव भृगवेऽहं वरं ह्यदाम् ।
तदर्थं यत्नमास्थास्ये इति कार्यद्वयं मतम् ॥

சதுராஸ்ய! தவ இதானீம் கார்யம் கிமபி கோபிதம் ।
தத்தே கர்தவ்யம் அசிராத் மம ப்ரியசிகீர்ஷயா ॥
ஸம்ஸார ஸிந்துதரணம் ஜனா : கர்தும் அனீச்வரா : ।
மத்கதா ஸம்ஜ்ஞிதாம் நாவம் ப்ராப்ய நந்தந்து நிர்வ்ருதா : ॥
போக்ஷ்யே த்வச்சாபம் இத்யேவ ப்ருகவே(அ)ஹம் வரம் ஹ்யதாம் ।
ததர்தம் யத்னம் ஆஸ்தாஸ்யே இதிகார்யத்வயம் மதம் ॥

ஸ்காந்த உபபுராணம்

''நான்முகரே! எனக்காக நீர் செய்ய வேண்டியதாக இரண்டு கார்யங்கள் காத்திருக்கின்றன. அவற்றை நீர் ரஹஸ்யமாகச் செய்ய வேண்டும். இவை எனக்கு மிகப் பிரியமானவை. ஒன்று மக்கள் இப்பாவக் கடலைக் கடந்து மோக்ஷம் அடைய (அதாவது வைகுண்டத்திற்குச் செல்ல) உபாயத்தை அறியாது துன்புறுகின்றனர். அவர்கட்குத் தக்க எளிய வழியை நாம் காட்ட வேண்டியிருக்கிறது. அதற்கு எனது சரித்திரம் (ராமாயணமே) போதுமானது. இப்பாவக் கடலை சிரமமின்றி மகிழ்ச்சியுடன் கடக்க படகு போன்ற என் கதையைத் தொகுத்து இயற்றச் செய்ய வேண்டும். மற்றொன்று ப்ருகு மஹர்ஷியின் சாபத்தினால் நான் சிறிது காலம் பத்னீவியோகத்தை (ஸீதையை விட்டுப் பிரிந்து வாழ்வதை) அனுபவிக்க வேண்டும்.''

''இப்பொழுதுதான் வால்மீகி முனிவர் நாரதரிடமிருந்து ராமாயணத்தை உபதேசமாகப் பெற்றிருக்கிறார். மிக்க பக்தி உள்ளம் படைத்தவர். எனவே என் சரித்திரத்தை இயற்ற அவரே தகுதி உடையவர். நான் வனவாஸத்தின் பொழுது ஜனஸ்தானத்தில் கரதூஷணாதி பதினாலாயிரம் அரக்கர்களை ஸம்ஹாரம் பண்ணினேன் அல்லவா? அப்பொழுது சங்குகர்ணன் எனும் அரக்கன் பயந்து பெண் வேடத்தில் தப்பிச் சென்று விட்டான். அவன் தண்டகாரண்யத்தில் க்ரௌஞ்சப் பறவை உருவில் வாழ்ந்து கொண்டு மஹர்ஷிகளைத் துன்புறுத்தி வருகிறான். அவனையும் ஸம்ஹாரம் செய்ய வேண்டியிருக்கிறது. அவன் வால்மீகியின் அருகில் ஒரு மரத்தில் பெண் பறவையுடன் இன்புற்றிருக்கும் பொழுது நான் வேடுவனாக வந்து அவனைக் கொல்ல எண்ணியுள்ளேன். நீரும் தமஸா நதித்துறையருகில் பறவைகள் அமர்வதற்கு ஏற்ற சிறு மரமாகத் தோன்றுவீராக! பறவையைக் கொன்றதும் இளகிய மனமுடைய முனிவர் என்னை ''நீயும் மனைவியைப் பிரிந்து வாழக் கடவாய்'' என சபிப்பார். அந்த வாக் (சொல்) தோன்றியதிலிருந்து ஸரஸ்வதியின் தூண்டுதலினால் என் சரித்திரத்தை எழுதுவார். கடைசியில் அச் சரித்திரத்தை நானே கேட்டு மகிழ்வேன்.''

खरादि निधनाद्भीतः शङ्कुकर्णो निशाचरः ।
दण्डकारण्यगो भूत्वा क्रौञ्चरूपसमाश्रयः ॥
बाधतेऽद्यमुनिं तस्मात् तस्य कार्यो वधो मया ॥

கராதி நிதனாத் பீத: மங்குகர்ணோ நிமாசர: ।
தண்டகாரண்யகோ பூத்வா க்ரௌஞ்ச ரூபஸமாம்ரய: ॥
பாததே அத்ய முனிம் தஸ்மாத் தஸ்ய கார்யோ வதோ மயா ॥

ஸ்காந்த உபபுராணம்

எனவே ராமன் வேடனாகவும், பிரமன் சிறிய மரமாகவும், சங்கு கர்ணன் க்ரௌஞ்சப் பறவையாகவும் தோன்ற, வேடன் முனிவர் எதிரில் பறவையை அடிக்கக் கருணை மேலிட இளகிய மனத்தவரான முனிவரின் திருவாக்காக சோக: ச்லோகத்வமாகத:— சோகமே ச்லோகமாக ஆனது என்றபடி இந்த ம்லோகம் அவதரித்தது.

मानिषाद प्रतिष्ठां त्वं अगमः शाश्वतीः समाः ।
यत् क्रौञ्च मिथुनादेकं अवधीः काम मोहितम् ॥

மாநிஷாத! ப்ரதிஷ்டாம் த்வம் அகம: மாம்வதீ: ஸமா: ।
யத் க்ரௌஞ்ச மிதுனாத் ஏகம் அவதீ: காமமோஹிதம்: ॥

வா.ரா. பால. - 1

இச் ச்லோகம் தோன்றியதும் மறுகணத்தில் வேடுவனையும் காண வில்லை. க்ரௌஞ்ச (பெண்) பறவையோ அச்சிறு மரமோ தென்பட வில்லை. எல்லாம் திடீரென மறைந்தன. ''இது யாருடைய மாயையோ தெரியவில்லையே'' என முனிவர் வியப்பில் ஆழ்ந்தார்.

शपन् इति मुनिः क्रोधात् उत्तरक्षण एव हि ।
न अपश्यत निषादं तं तां क्रौञ्चीं तं च वृक्षकम् ॥

சபன் இதி முனி: க்ரோதாத் உத்தரக்ஷண ஏவஹி ।
நஅபச்யத நிஷாதம் தம் தாம் க்ரௌஞ்சீம் தம் ச வ்ருக்ஷகம் ॥

ஸ்காந்த உபபுராணம்

வால்மீகியின் முகத்தினின்றும் முதல் முதலாகத் தோன்றிய ச்லோகத் தின் கருத்துச் செறிவை சிறிது நுகர்வோம். வேடனுக்கு வேட்டையாடுவது தொழிலாயினும், பறவைகள் கூடி இன்பம் நுகரும் வேளையில் அடித்தது மஹா பாபமாகும். ரத்தம் பீறிட்டு ஆண்பறவை துடிப்பதையும். தனது இன்பத்திற்கு நிலைக்களமாய்த் திகழ்ந்த துணைவனை எதிர்பாராது இழந்து கதறும் பெண் பறவையையும் பார்க்கும் எவருக்குத்தான் கோபம் வராது? அதுவும் பறவைகளை உள்ளன்புடன் நேசித்து வளர்க்கும் மனப்பாங்

கினைப் பெற்ற முனிவருக்குக் கோபம் வராமலிருக்குமா? தம்மையுமறியாது திடீரென வாயில் வந்தது சாபம். ''வேடா! உன் வாழ் நாட்களில் எஞ்சியுள்ள பல்லாண்டு காலமும் நீ நல்லுறவைப் பெறமாட்டாய். உனது குற்றம் மன்னிக்கக்கூடியதன்று. இவ்வுலகில் மக்களும் எதைத் தம் வாழ்வில் உயரிய இன்பமாகக் கருதுகின்றார்களோ அத்தகைய இன்பத்தை மெய்ம்மறந்து துய்க்கும் நிலையில் அதைக் கொன்றாயே! அத்தகைய நீ எவ்வாறு நன்கு வாழ முடியும்? முடியாது. நீ வாழவே மாட்டாய்'' என்று சபித்தார்.

மாபெரும் நல்வாழ்வை நல்கும் பெருங்காப்பியத்தைப் படைக்க இருக்கும் ஆதிகவியின் வாயில் முதல்முதலாக அமங்கலச் சொல் எவ்வாறு தோன்றும்? அதுவும் உட்புலன் வெளிப்புலன்களை பட்டிமேயாது அடக்கி ஆளும் முனிவரின் உள்ளத்தினின்றும் கோபம் எழுமா? கண்டிப்பாக எழாது. அப்படியாகில் சபித்தாரே! ஏன் சபித்தார்? இல்லை. சபிக்கவில்லை. வேறு என்ன? வாழ்த்தினார். தன் இதயத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸீதா ராமனை வாழ்த்திப் பல்லாண்டு பாடினார். அடக்க முடியாத கோபத்தி னின்றும் எழுந்த சொல்லை இனி இயற்றப்பட இருக்கும் ராமாயணத்திற்கு வாழ்த்துப் பாவாக (மங்களாசரணமாக) ஆக்க முயற்சிப்பது எங்ஙனம்? அதுதான் நம் பூர்வாசார்யர்களின் திறன். ''மாநிஷாத'' என்ற ச்லோகம் எந்தச் சூழ்நிலையில் எழுந்தது என்பதில் கவனம் செலுத்துவோம். இது நாரதர் ராமாயணத்தை உபதேசித்துச் சென்ற சிறிது நேரத்தில் எழுந்தது. எனவே அவரது உள்ளத்திரையில் ராம காதை வண்ண ஒளிப்படமாக, ஓடிக் கொண்டிருக்கும். இங்கு க்ரௌஞ்ச வதம் நிகழ்ந்தது.

''ஏக ஸம்பந்தி ஞானம் அபரஸம்பந்தி ஸ்மாரகம்'' என்பர் கற்ற ஆன்றோர். அதாவது தொடர்புடைய ஒன்றைப் பற்றிய அறிவு, தொடர் புடைய அனைத்தையும் நினைவுக்குக் கொண்டு வரும் என்பது ஸம்ஸ் கிருதப் பழமொழி. எனவே வேடன் க்ரௌஞ்ச மிதுனத்தில் ஒன்றை அடிக்கவே, க்ரௌஞ்ச மிதுனங்களான வாலி - தாரா, ராவண - மந்தோதரீ இரட்டையர்களில் ஒருவரான வாலியையும், ராவணனையும் ராமன் மாய்த்தது நினைவிற்கு வந்துவிட்டது. அந்நிலையில் எழுந்த ''மாநிஷாத'' ஶ்லோகத்தின் பொருளைப் பார்ப்போம். அதோடு நாரதரும், பிரமனும் தம் குடிசைக்கு விஜயம் செய்யும் பெருமை பெற்ற முக்காலமும் உணர்ந்த மாமுனிவருக்கு இது பரம புருஷனான ராமனின் லீலை (ஸ்காந்தத்தில் எடுத்துக் காட்டியபடி) என்பதை உணர எவ்வளவு நேரமாகும்? இனி பொருளில் கவனம் செலுத்துவோம்.

''மாநிஷாத, ஸ்ரீநிவாஸ ஸீதாபதியே! பல்லாண்டு காலம் பெரும் புகழுடன் வாழ்வீராக. ''தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'' என்பதை உலகினருக்கு நடைமுறையில் எடுத்துக்காட்ட யௌவ ராஜ்ய பட்டாபி ஷேகத்தைத் துறந்து பதினான்கு ஆண்டு காலம் காட்டில் வாழ்ந்து மஹர்ஷிகளின் இடையூறுகளை அகற்றி அவர்கள் அச்சமின்றி வாழ வகை

செய்த பக்தவத்ஸலன் அல்லவா நீர்! அக்னி ஸாக்ஷிகமாக உம்முடன் நட்பு பூண்ட மஹா ராஜருக்கு இன்னல் செய்த வாலியை மாய்த்து நண்பனின் மனைவியான ருமையை மீட்டுக் கொடுத்த ஆபத்பந்துவே நீ வாழி! ஸீதா தேவியை ராவணன் பறித்துச் சென்றதினால் இக்கரையில் ராமனுடையவும் அக்கரையில் அசோகவனத்தில் ஸீதா தேவியினுடையவும் பிரிவாற்றாமையை உணரச் செய்து அனுமன் மூலமாக ஆண்களும், பெண்களும் கடைப்பிடிக்க வேண்டிய கற்புநெறியை உலகுக்கு காட்டிய சான்றோனே வாழி! நல்லோர்கட்கும் கற்பரசிகட்கும் தீங்கு இழைக்கும் அரக்கத் தன்மையுடைய எவனும் அதற்குரிய தண்டனையைப் பெறாது தப்ப முடியாது என்பதை ராவண ஸம்ஹாரத்தின் மூலம் உலகுக்கு உணர்த்திய அறவோனே வாழி! பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழி! வாழி!''

இவ்வாறாக இந்த ஶ்லோகம் பரந்த ஆலமரம் சிறு வித்தில் அடங்கியது போல் ராமாயணக் கதை முழுவதையும் உள்ளடக்கியது எனக்கண்டு மங்களா சாஸனபரமாக பூர்வாசார்யர்கள் பொருள் கொண்டது முற்றிலும் தக்கதே.

ப்ரஹ்மாவின் அருள்மொழி

வால்மீகி முனிவர் சிஷ்யனைப் பார்த்து, ''பரத்வாஜா! நான் சொன்ன சொற்களைக் கேட்ட நீ, அவற்றைச் சேர்த்து மீண்டும் நினைத்துப் பார்த்தாயா? அச்சொற்களை நினைக்க நினைக்க எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. அவை நான் அறியாமலே என் இதயத்தினின்றும் எழுந்தவை. இதில் ஒரு புதுமையைக் காண்கிறேன். இவை நாம் பேசுகின்ற வெறும் சொற்களின் திரள் அல்ல. இது ஒரு ஸ்லோகம். தவத்தின் பயனாக நம் மூலம் உலகில் முதன் முதலாகப் பரமன் இதை அறிமுகப்படுத்த விரும்புகிறான் போலும்! இதன் அழகைச் சொல்லுகிறேன் கேள். உலகில் ஒருவருக்கு கோபத்தினாலோ, இரக்கத்தினாலோ திடீரென வாயினின்றும் கிளம்பும் சொற்களில் தடுமாற்றத்தையும், பதட்டத்தையும் காண்கிறோம். அமைதி யான இயற்கைச் சூழ்நிலையில் வாழும் எனக்கு பெண் பறவைக்குப் பிரிவாற்றாமையினால் ஏற்பட்ட துயரத்தையும், வேடுவனின் இரக்கமற்ற கொடுஞ் செயலையும், ரத்தம் பீறிட்டுத் துடிக்கும் ஆண் பறவையின் நிலையையும் ஒரு சேரக் கண்டதும் மனம் நிலை கொள்ளவில்லை. கருணை பொங்கி எழுந்ததும் அதைச் செயற்படுத்த வாய்ப்பில்லை. குமுறிக் கிளம்பிய கோபக்கனல் கண்களிலேயே நீரினால் அவிந்தது. தடையின்றி வாயினின்றும் கிளம்பிய ஸ்லோகத்தில் இரக்கம், கோபம், கருணை முதலிய நவரஸங்களும் போட்டி யிடுகின்றன. இதில் செய்யுள் இலக்கணத்திற்கேற்ப நான்கு பாதங்கள் அமைந்துள்ளன. பாதங்களில் எழுத்துக்களின் எண்ணிக் கையும் சமமாக உள்ளது. ஸ்லோகத்தில் தொனிக்கும் கருத்துகட்கேற்ப வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களும் நிரவி அமைந்துள்ளன. பக்க வாத்யங்களுடன் வீணையில் மீட்டி வாசிப்பதற்கேற்ப ஸாஹித்யம் அமைந்துள்ளது. என்ன விந்தை! என்ன விந்தை!!'' என்று சொல்லி உள்ளம் பூரித்தார்.

வால்மீகி முனிவரைப் பாராட்டுகின்ற முறையில் ராமாயண பாராயணத்திற்கு முன்பு

कूजन्तं राम रामेति मधुरं मधुराक्षरम् ।
आरुह्यकविता शाखां वन्दे वाल्मीकिकोकिलम् ॥

கூஜந்தம் ராம ராமேதி மதுரம் மதுராக்ஷரம் ।
ஆருஹ்ய கவிதாஶாகாம் வந்தே வால்மீகி கோகிலம் ॥

எனும் ஸ்லோகத்தைப் பெரியோர்கள் அனுஸந்திப்பது வழக்கம். ''கவிதையாகிற மரக்கிளையில் அமர்ந்து இனிய எழுத்துக்களுடன் கூடிய ''ராம'' ''ராம'' என்கிற சொல்லை (இராமாயணத்தை) உள்ளம் மகிழும்படி செவிக்கு இனிதாகக் கூவும் வால்மீகியாகிற குயிலை (குயில் போன்று இனிய

குரலில் இராமாயணத்தைப் பாடி மனித இனத்தை உய்வித்து மகிழ்விக்கும் வால்மீகியை) வணங்குகின்றேன்'' என்று பொருள். எனவே இராமாயணம் முழுவதும் இசை வல்லுனர்களால் இசைப்பதற்கு உரியது என்பதை இதனால் அறிகிறோம்.

மேலும் ''மாநிஷாத'' எனும் இந்த ஸ்லோகம் சாஸ்த்ரங்கள் கற்ற மஹான்களின் பாராட்டுதலுக்குரிய ராமனைப் போற்றுகிறது. எனவே சோகத்தினால் துயருற்ற எனது நாவினின்றும் தோன்றிய இது இலக்கணக் கட்டமைப்புடன் கூடிய ஸ்லோகமேயன்றி வேறல்ல.

पाद पद्धोऽक्षरसमः तन्त्रीलय समन्वितः ।
शोकार्तस्य प्रवृत्तो मे श्लोकोभवतु नान्यथा ॥
सोऽभिषेकं ततः कृत्वा तीर्थे तस्मिन् यथाविधि ।
तमेव चिन्तयन् अर्थं उपावर्तत वै मुनिः ।

பாதபத்த: அக்ஷரஸம: தந்த்ரீலய ஸமந்வித:।
சோகார்த்தஸ்ய ப்ரவ்ருத்தோமே ஸ்லோகோ பவது நான்யதா ॥
ஸோபிஷேகம் தத: க்ருத்வா தீர்த்தே தஸ்மின் யதாவிதி ।
தமேவ சிந்தயன் அர்த்தம் உபாவர்த்தத வை முனி: ॥

வா.ரா. பால. - 2

பின்னர் முனிவர் தமஸா நதியில் விதிப்படி நீராடி, (அதாவது யானை முதலிய விலங்குகள் தண்ணீரில் விழுந்து வாரி இறைத்து விளையாடிக் கரையேறுவது போன்றல்லாமல் ஸங்கல்பம் செய்து, நீரில் கங்கையை ஆவாஹனம் செய்து, நம் பாபங்களைப் போக்கும் வேத மந்திரங்களைக் கூறி, ஸ்ரீமந் நாராயணனை தியானம் செய்து முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த முறை பிறழாது நீராடி) ஸ்லோகத்தில் தொனிக்கும் இராமனின் வரலாற்றையே நினைத்து மகிழ்ந்த உள்ளத்தராய் ஆஸ்ரமத்திற்குத் திரும்பினார். பரத்வாஜனும் தான் இதுவரை ஓதி வருகிற வேதத்தைப் போன்றும், ஆனால் ஸ்வரநியமம் (கட்டுப்பாடு) இன்றி எளிதில் சொல்லக் கூடியதாகவும், தன் அறிவுக்கேற்ப பல பொருள்களைத் தருகின்றதுமான ஸ்லோகத்தை மகிழ்வுடன் மனப்பாடம் செய்து கொண்டே முனிவரின் பகவதாராதனத்திற்கான தீர்த்தம் நிறைந்த கலசத்தை உள்ளங்கையில் ஏந்தியவனாய்ப் பின் தொடர்ந்தான்.

भरद्वाजः ततः शिष्यः विनीतः श्रुतवान् मुनिः ।
कलशं पूर्णमादाय पृष्ठतोऽनुजगामह ॥

பரத்வாஜ: தத: ஶிஷ்ய: வினீத: ஶ்ருதவான் முனி: ।
கலசம் பூர்ணம் ஆதாய ப்ருஷ்டதோனுஜகாம ஹ ॥

வா.ரா.பால.-2

இங்கு சீடனின் அடக்கத்தையும், பல கற்றும் கர்வம் கொள்ளாது ஆசாரியனுக்குப் பணிவிடை செய்வதையும், ஸம்ப்ரதாயம் அறிந்து குடத்தை இடுப்புக்குக் கீழ் தொங்கவிடாமல் ஏந்தித் தாங்கிவருவதையும் கண்ட நூலாசிரியரின் மகிழ்ச்சியை ''ஹ'' என்பது வெளியிடுவதாகக் கொள்ளலாம்.

ஆஶ்ரமத்தில் நித்ய கர்மானுஷ்டானங்களையும், பகவதாராதனத்தையும் செய்து முடித்து வால்மீகி, ஶ்லோகத்தின் சொல்லாட்சியையும், பொருட்செறிவையும் ஆராய்ந்து ஆராய்ந்து அறிந்து அவற்றை பரத்வாஜனுக்கு விளம்பியும், தான் அறிந்த கருத்துகட்கு வேதத்தோடும் புராணங்களோடும் ஒப்புமையைக் காட்டியும் மகிழ்ந்திருந்த நிலையில்,

आजगाम ततो ब्रह्मा लोककर्ता स्वयं प्रभुः
चतुर्मुखो महातेजाः द्रष्टुं तं मुनिपुङ्गवम्
वाल्मीकिः अथ तं दृष्ट्वा सहसा उत्थाय वाग्यतः ।
प्राञ्जलिः प्रयतो भूत्वा तस्थौ परमविस्मितः ॥

ஆஜகாம ததோ ப்ரஹ்மா லோககர்த்தாஸ்வயம் ப்ரபு: ।
சதுர்முகோ மஹாதேஜா: த்ரஷ்டும் தம் முனிபுங்கவம் ॥
வால்மீகி: அத தம் த்ருஷ்ட்வா ஸஹஸா உத்தாய வாக்யத: ।
ப்ராஞ்ஜலி: ப்ரயதோ பூத்வா தத்ஸ்தெள பரமவிஸ்மித: ॥

வா.ரா. பால. - 2

ஸத்ய லோகத்தினின்றும் ப்ரஹ்மா, இம் முனிவரைப் பார்க்க வந்தார். தனது குமாரன் நாரதன் மூலமாக இவர் பெருமையை நன்கு அறிந்தவரான படியால் நேரிலும் காண அவா போலும்! அதோடு தனது படைப்புக்குட்பட்டவை எல்லாம் தனக்குச் சொந்தம்தானே! எனவே சொந்த வீட்டில் பேரன் மாமுனிவனாகத் திகழ்வதையும், தான் நான்கு முகங்களாலும் ஓதி வருகின்ற நான்மறைகளின் விழுப்பொருளை தன் ஸந்ததியினர் எளிய முறையில் அறிய ராமாயணக் காப்பியமாகப் படைக்க இவருக்கு அருள் புரியக் கருதியும் முனிவரின் குடிசையுள் நுழைந்தார். முனிவருக்கு ஒரே திகைப்பு! பல்லாண்டுகள் தவம் இயற்றிப் பெற வேண்டிய ப்ரஹ்மதேஜஸ் நான்கு முகங்களிலும் ஒளிர்விட்டுப் பிரகாசிக்கிறது. ஏழையின் குடிசைக்கு அந்நாட்டு மன்னன் விஜயம் செய்தாலே மகிழ்ச்சியும் பெருமையும் பொங்கும். உலகு அனைத்தையும் படைக்கும் மஹா ப்ரபு வான பிதாமஹன் வந்தால் கேட்க வேண்டுமா? செய்வது அறியாது திகைக்கிறார். பரபரப்புடன் எழுந்து வாய்பொத்தி கைகளைக் கூப்பிய வண்ணம் உடலும் மனமும் ஒடுங்கியவராய் நின்றார். ஒருவாறாகச் சிறிது துணிவு பெற்று பரத்வாஜன் கொணர்ந்த தீர்த்தத்தினால் அர்க்யம் அளித்து, தம் இருகைகளாலும் திருவடிகளை அலம்பி, தர்ப்பாஸனம் அளித்து நான் முகனை அமரச் செய்து, தூமலர் தூவி உபசரித்து, ஸாஷ்டாங்கமாக விழுந்து விழுந்து வணங்கி, நல்வரவு கூறி யோக க்ஷேமங்களை விசாரித்தார். பின்னர் பிதாமஹன்,

எதிரேயுள்ள ஆஸனத்தைக் காட்டி முனிவரை அதில் வற்புறுத்தி அமரச் செய்தார்.

பெரியவர் ஒருவர் நம் இல்லத்திற்கு வருகை புரிந்தால் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை நாம் இங்கு அறிகிறோம். பெரியோரைக் கண்டால் நாம் அவரை வணங்குவதன்றித் தம் குழந்தைகள் முதலியோரை யும் வெட்கமின்றி தண்டனிடப் பழக்க வேண்டும். பெரியோருக்கு மரியாதை காட்டாது இருப்போமாகில் நம் உடலினின்றும் உயிர் (ப்ராணவாயு) வெளியே கிளம்பத் துவங்கும். நாம் எழுந்து வணங்கு வோமாகில் மீண்டும் பிராணவாயு உடலினுள் புகும் என அறநூல் பகரும்.

ऊर्ध्वं प्राणाः हि उत्क्रामन्ते यूनः स्थविर आगते ।
प्रत्युत्थानाभिवादाभ्यां पुनः तान् प्रतिपद्यते ॥

''ஊர்த்வம் ப்ராணா: ஹி உத்க்ராமந்தே யூன: ஸ்தவிர ஆகதே ।
ப்ரத்யுத்தானாபிவாதாப்யாம் புன: தான் ப்ரதிபத்யதே ॥''

எனவே நாம் அடக்கத்துடனும் பணிவுடனும் வாழப் பழக வேண்டும்.

''அடக்கம் அமரருள் உய்க்கும், அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்'' அன்றோ குறள் - 121

அமர்ந்த முனிவர், வேடன் அன்றிலைக் கொன்றதையும், பெண் பறவை கிளையிலிருந்தபோது அதனுடன் பிரேமையினால் கொஞ்சிக் குலாவிய இனிய குரலையும் அதற்கு நேர்ந்த நிலையையும் நினைத்து வருந்தி ''மாநிஷாத'' எனும் ஶ்லோகத்தை மனதினுள் பாடிக் கொண்டிருப்பதை அறிந்த பிரமன் பரிஹாஸச் சிரிப்புடன் ''முனிவரே! நீர் பாடியது ஏதோ சொற்களின் திரள் என நினைக்காதீர். அது அழகிய ஶ்லோகமாகும். அது எமது அருளினால் வந்த ஒரு சொல்லோவியமாகும். இதே போன்ற ஶ்லோகங் களினால் நாரதரிடம் சுருக்கமாகக் கேட்ட ராம சரித்திரத்தை விரிவான காப்பியமாகத் தொகுப்பீராக. ஒவ்வொரு பத்யமும் அனைவரும் விரும்பிக் கற்பதற்கேற்றதாக அமையும். மேலும் கற்போரின் பாவங்களைப் போக்கு வனவாகவும் அமையும்'' என அருளினார்.

मच्छन्दादेव ते ब्रह्मन् प्रवृत्तेयं सरस्वती ।
रामस्य चरितं कृत्स्नं कुरु त्वं ऋषिसत्तम ॥
सदृशैरेव सरसैः पद्यैः अन्यैश्च भूरिशः ॥

மச்சந்தாத் ஏவ தே ப்ரஹ்மன் ப்ரவ்ருத்தா இயம் ஸரஸ்வதீ ।
ராமஸ்ய சரிதம் க்ருத்ஸ்னம் குரு த்வம் ரிஷிஸத்தம ॥
ஸத்ருஶைரேவ ஸரஸை: பத்யை: அன்யைஶ்ச பூரிஶ: ॥

இதைச் செவியுற்ற முனிவர் மேலும் வியப்பில் ஆழ்ந்தார். ''ஒருவருடைய சரித்திரத்தை எழுதுவது எளிய செயலன்று. அதுவும் உயிரோடு வாழ்பவரின் சரித்திரத்தை எழுதுவது நகைப்பிற்கு இடமாகும். அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கண்ணால் காணாமலும், பேச்சுக்களைச் செவியால் கேளாமலும் நாமே நாரதரிடம் கேட்டதைக் கொண்டு விரித்து எழுதுவது (பாடுவது) எங்ஙனம்? கதாநாயகனே கேட்கும் சூழ்நிலை நேர்ந்தால் வெட்கித் தலைகுனிய வேண்டி வருமே! ஒருவர், தாமே சுயசரிதம் எழுதினால் கூட அது முழுமை பெறாதே! சிலவற்றை மறந்து விட்டு விடுவார். சில செய்திகளைப் பிறர் நகைப்பரே என்றெண்ணிக் கூறாது மறைத்துவிடுவார்'' எனச் சிந்தனையில் ஆழ்ந்தார். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் அல்லவா! இவர் கவலையை உணர்ந்த பிரமன் வரம் அருளலானார்.

रहस्यं च प्रकाशं च यद्वृत्तं तस्य धीमतः ।
रामस्य सह सौमित्रेः राक्षसानां च सर्वशः ॥
वैदेह्याश्च यद्वृत्तं प्रकाशं यदि वा रहः ।
तच्चाप्यविदितं सर्वं विदितं ते भविष्यति ॥
न ते वागनृता काव्ये काचिदत्र भविष्यति ।
कुरु रामकथां पुण्यांश्लोकबद्धां मनोरमाम् ॥
यावत्स्थास्यन्ति गिरयः सरितश्च महीतले ।
तावत् रामायण कथा लोकेषु प्रचलिष्यति ॥
इत्युक्त्वा भगवान् ब्रह्मा तत्रैवान्तरधीयत ॥

ரஹஸ்யம் ச ப்ரகாசம் ச யத்வ்ருத்தம் தஸ்ய தீமத: ।
ராமஸ்ய ஸஹஸௌமித்ரே: ராக்ஷஸானாம் ச ஸர்வச: ॥
வைதேஹ்யாஶ்ச யத் வ்ருத்தம் ப்ரகாஶம் யதிவா ரஹ: ।
தச்சாபி அவிதிதம் ஸர்வம் விதிதம் தே பவிஷ்யதி ॥
நதே வாக் அந்ருதா காவ்யே காசித்அத்ர பவிஷ்யதி ।
குரு ராமகதாம் புண்யாம் ஶ்லோகபத்தாம் மனோரமாம் ॥
யாவத் ஸ்தாஸ்யந்தி கிரய: ஸரிதஶ்ச மஹீதலே ।
தாவத் ராமாயணகதா லோகேஷு ப்ரசலிஷ்யதி ॥
இதிஉக்த்வா பகவான் ப்ரஹ்மா தத்ரைவ அந்தரதீயத ॥

வா. ரா. பால. - 2

''முனிவரே! ஆதிகாவ்யமான ராமாயணமாகிற மஹாகாவ்யத்தை இயற்றுவதற்குத் தேவையான அனைத்தையும் நீர் அறியக்கடவீர். ராம பிரான், இளைய பெருமாளோடும் பிராட்டி ஸீதையோடும் சேர்ந்து வாழ்ந்த

காலத்திய நிகழ்ச்சிகளும், அவர்கள் பிரிந்து இருந்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சி களும், தாடகை தொடங்கி ராவணன் ஈறான அரக்கர்கள் தொடர்பான அனைத்துச் செயல்களும், பரதன், சத்ருக்னன், மேலும் அயோத்தி மக்கள், மஹர்ஷிகள் தேவர்கள் ஆகிய அனைவருடைய செயல்களும் உள்ளங்கை நெல்லிக் கனி போல் உம்மால் நன்கு அறியப்படும். இவ்வனைவரின் செயல்கள் வெளிப்படையாக பிறர் அறியச் செய்தவைகளாயினும், பிறர் அறியாதபடி தனிமையில் இரகசியமாகச் செய்தவையாயினும், அவர்கள் தத்தம் மனதிலே எண்ணியவையாயினும், அவ்வனைத்தையும் நீர் அறியக் கடவீர்! ஆக நாரதர் வாயிலாகக் கேட்டவையன்றி கேட்கப்படாதன வற்றையும் நன்கு அறியும் வாய்ப்பினைப் பெறுவீராக'', என நான்முகன் அருளினார்.

முனிவர், ''பிரமனே! நான் எழுத வேண்டியது புருஷோத்தமனுடைய கதையாயிற்றே. உலகில் ''கச்சத: ஸ்கலனம் பவத்யேவ''—நடப்பவர்கட்கு இடறுவது இயற்கை என்பார்களே, ஏதாவது தவறுகள் நேர்ந்தால் பகவதப சாரமும், பாகவதாபசாரமும் என்னை அறியாது வந்துவிடுமே, என அஞ்சு கிறேன்'' என்றார்.

நான்முகன் ''முனிவரே! உமக்கு ஏன் இந்த அச்சம்? நீர் இயற்றப் போகும் இப்புனித காப்பியத்தில் ஒரு நிகழ்ச்சி கூடத் தவறாகவோ, பொய்யாகவோ அமையாது. அனைத்தும் முற்றிலும் உண்மையாகவே அமையும். அது மட்டுமா. பிழைபட்ட சொற்கள் கூட உமது படைப்பில் தலை காட்டாது. ஆம் ''அபாரே காவ்ய ஸம்ஸாரே கவி: ஏக: ப்ரஜாபதி:'' — இலக்கியம் என்ற உலகில் எல்லையற்ற காவ்யம் என்ற ஸம்ஸாரத்தில் (உலகில்) கவி என்பவன் ஒப்பற்ற படைப்புக் கடவுளாவான்.

''நான்முகனோ இவ்வுலகங்களையெல்லாம் படைக்கும் ப்ரஹ்மா வாகக் கருதப்படுகிறான். இவன் படைப்புக்கு அளவு உண்டு. ஆனால் கவிஞனோ, அளவே இல்லாத காப்பிய உலகைப் படைக்கும் ப்ரஹ்மா ஆயிற்றே! பிழைகள் எவ்வாறு புகும்? எனவே துணிந்து செயல்படலாம். மேலும் நீர் படைக்க இருக்கும் காப்பியத்தின் பெருமையை நீர் அறியீர் போலும்! சொல்லுகிறேன் கேளும். உமது காப்பியம் முற்றிலும் ஶ்லோகங் களால் அமைகிறது. படிப்பவர் எளிதில் மனதில் தரிப்பர். இது தன்னை மனப்பாடம் செய்பவர்களின் பாவங்களைப் போக்கி, விரும்பும் பல்வேறு நன்மைகளை அவர்கட்கு அளிக்கும். மேலும் சொல்லழகும் பொருளழகும் இதில் போட்டியிடும். எனவே அனைவரும் செவிகளாரக் கேட்டு மகிழ்வர். இதயத்திலே எண்ணி எண்ணி உவப்பர். இப் பெருமையின் காரணமாக இவ்வுலகில் மலைகள் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் வரையிலும், இவற்றி னின்றும் புண்ய நதிகள் பெருகி ஓடிக்கொண்டிருக்கும் வரையிலும் உமது காப்பியமான ஸ்ரீமத் ராமாயணம் நிலைத்து நிற்கும் என்பதில் தினையளவும் ஐயத்திற்கு இடமில்லை. எனவே இப்பூதவுடல் அழியினும் புகழுடலுடன் என்றும் சிரஞ்சீவியாக வாழ்வீர்'' எனப் பூர்ணமாக அனுக்ரஹித்தார்.

பின்னர் பிரமனின் நாவில் வீற்றிருக்கும் ஸரஸ்வதீ தேவியானவள்:

यथा यथाऽऽकर्षसि मां शब्दतश्चार्थतोऽपि वा ।
तथा तथाऽनुयास्ये त्वां त्वदाशयवशानुगा ॥
तवयत्नं विनैवाहं रसं भावं च पोषये ।
त्वन्मूलतः कृतार्था स्यां उक्त्वा राम कथां मुने ।

யதா யதா ஆகர்ஷஸிமாம் சப்ததஶ்ச அர்த்ததோபி வா।
ததா ததா அனுயாஸ்யே த்வாம் த்வதாஶய வஶானுகா ॥
தவயத்னம் வினைவாஹம் ரஸம் பாவஞ்ச போஷயே ।
த்வன்மூலத: க்ருதார்த்தா ஸ்யாம் உக்த்வா ராமகதாம் முனே ॥

ஸ்காந்த உபபுராணம்

''முனிவரே! உமக்கேன் கவலை நீர் புனையும் ஸ்லோகங்களில் எங்கெங்கு எந்த எந்த சொல் அமைந்தால் சொல்லழகும், சப்த சித்திரமும் அமையுமோ அந்த அந்த சொற்களை ஆங்காங்கு பொருந்தச் செய்வேன். கற்போர் ஒன்பான் சுவைகளில் எங்கு எந்த ரஸம் அமைந்தால் மகிழ்வரோ அத்தகைய சுவையை அனுபவிக்கச் செய்வேன். நீர் கட்டும் மனக் கோட்டையை உம் காவிய உலகில் கட்டிக் காட்டுவேன். உமது தீவிர முயற்சியின்றியே படிப்போர்களைத் தன்னகத்தே மூழ்கச் செய்யும் ரஸங் களும், உய்த்து உணரச் செய்யும் சிறந்த கருத்துக்களும், தொனிகளும் அணிகளும் காவியத்தில் போட்டியிடுவதை காணச் செய்வேன். உம்மை ஒரு எழுது கருவியாகக் கொண்டு இராமகாதையை அழகுறச் சமைத்து நான் பெற வேண்டிய பேறுகளை ஒருங்கே பெற்றவளாகக் கருதுவேன். ஸரஸ்வதீ என்றால் தடையற்ற சொற்பெருக்கை உடையவள் என்று பொருள். உம் மூலமாக நான் பொருளுள்ள பெயரைத் தாங்கியவள் எனும் பெருமையைப் பெறுவதோடு, அச்சொற்பெருக்கை, ராமனாக அவதரித்த பரம் பொரு ளுக்குக் காணிக்கையாக்கி மகிழ்வேன்'' என்றாள்.

பின்னர் ஸரஸ்வதியின் தோழியான ஸாவித்ரீதேவி, முனிவரை வாழ்த்தியவாறு, ''முனிவரே! நீர் இதயத்தில் எழும் இராமனைப் பற்றிய எண்ண அலைகட்குச் சொல் வடிவம் கொடுக்க முனைந்திருக்கிறீர். அச் சொல்லோவியம் கேட்போர் உள்ளத்தைக் கவர்ந்து மகிழ்விக்கப் போகிறது. மேலும் அவர்களின் தீவினைகளைக் கவர்ந்து வெளியேற்றும். இத்தகு பெருமை பெறும் ராமனைப் பற்றிய காப்பியம் இருபத்து நாலாயிரம் ஸ்லோகங்கள் கொண்டதாக அமையும். என்னை இருபத்து நான்கு எழுத்துக் களைக் கொண்ட காயத்ரீ என நீர் அறிவீர். என்னை இருபத்து நான்கு உறுப்புக்களாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு ஆயிரம் ஸ்லோகங்களின் முதலிலும் நான் வந்து அமர்வேன். உம்மால் நானும் ராமாயணத்தினுள் புகுந்து வாழும் பாக்கியம் பெறுவேன்'' என்றாள்.

मुने! रामकथां पुण्यां काव्यरूपां मनोरमाम् ।
प्रविष्टास्यां च ते काव्ये प्रतिश्लोक सहस्रकम् ।
विभक्तावयवा भूत्वा चतुर्विंशतिधाह्यहम् ॥

முனே! ராமகதாம் புண்யாம் காவ்யரூபாம் மனோரமாம் ।
ப்ரவிஷ்டா ஸ்யாம் ச தே காவ்யே ப்ரதி ஶ்லோக ஸஹஸ்ரகம் ॥
விபக்தாவயவா பூத்வா சதுர்விம்சதிதா ஹி அஹம் ॥

ஸ்காந்த உபபுராணம்

இவ்வாறு ஸரஸ்வதீ, ஸாவித்ரீ, காயத்ரீ தேவிகள் அனுக்ரஹித்ததும் பிரமன் தான் அமர்ந்திருந்த ஆஸனத்தினின்றும் மறைந்து ஸத்யலோகம் சென்றான்.

பின்னர் வால்மீகியின் சிஷ்யர்கள், பரத்வாஜனிடமிருந்து கேட்ட ஶ்லோகத்தை மகிழ்ச்சியுடன் தாங்கள் அறிந்த ராகத்தில் மெட்டமைத்துத் திரும்பத் திரும்பப் பாடினார்கள். ராமாயணத்திற்கு மூல மந்த்ரமாக அமைந்த ''மாநிஷாத'' ஶ்லோகம் ஆச்ரமத்தின் சுற்றுப்புறமெல்லாம் ஒலிக்க ஆரம்பித்தது. ''நம் ஆசிரியரின் இருக்கைக்கு நாரதர் வந்தார். பிதாமஹனான பிரமனும் வந்தார். இதற்கிடையே ஶ்லோகம் ஒன்று வெளிவந்தது. அதைப் பாடும் பாக்யம் பெற்றோம் நாம்'' என்றெண்ணிச் சீடர்கள் அனைவரும் வியப்பிலும், திகைப்பிலும், மகிழ்ச்சியிலும் மூழ்கினர்.

तस्यशिष्याः ततः सर्वे जगुःश्लोकमिमं पुनः ।
मुहुर्मुहुः प्रीयमाणाः प्राहुश्च भृशविस्मिताः ॥
सोऽनुव्याहरणाद्भूयः श्लोकः (शोकः) श्लोकत्वमागतः

தஸ்யசிஷ்யா: தத: ஸர்வே ஜகு: ஶ்லோகம் இமம்புன: ।
முஹு: முஹு: ப்ரீயமாணா: ப்ராஹுஶ்ச ப்ருஶவிஸ்மிதா: ॥
ஸ: அனுவ்யாஹரணாத்பூய: ஶோக: ஶ்லோகத்வம் ஆகத:

வா.ரா. பால. - 2

[''மாநிஷாத'' என்பது (1) செய்யுள் இலக்கணத்திற்கு ஒப்ப அமைந் திருந்ததாலும் (2) பெண் பறவையின் ஈன நிலையைப் பார்த்ததினால் வந்த சோகத்திற்குப் பிறகு வந்ததாலும் (3) சீடர்களால் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டதினாலும், ஶ்லோகம் எனப் பெயர் பெற்றது.]

வேத விழுப்பொருள்

ப்ரஹ்ம தேவனின் அருள்மொழி வீண் போகவில்லை. அது உடனே பயனை அளிக்கத் தொடங்கிவிட்டது. ஞானிகளின் வாக்கு அத்தகையது. உலகில் நம் போன்றவர்கள் பல பொருள்களைக் கண்களால் பார்க்கிறோம், காதுகளால் கேட்கிறோம், சில பொருள்களைத் தொட்டு உணர்கிறோம். இவ்வாறு கண்ட, கேட்ட, தொட்டுணர்ந்த பொருள்களைப் பற்றி பிறருக்கு உணர்த்தச் சொற்களைப் பயன்படுத்துகிறோம். அதாவது புலன்களால் அறிந்த வற்றுக்குச் சொல் வடிவம் கொடுத்து உரையாடுகிறோம். எனவே பொருளின்றி நமக்குச் சொல் எழாது. ஆனால் நாரதர் போன்ற மஹர்ஷி களும், நான்முகனை ஒத்த தேவர்களும் இத்தகையர் அல்லர். அவர்கள் வாயினின்று என்ன என்ன சொற்கள் எழுகின்றனவோ அச் சொற்களுக்குரிய பொருள்கள் உடனே தோன்றிவிடும். வஸிஷ்ட குமாரர்களைப் புலையர் களாக ஆகும்படி விஶ்வாமித்திரர் சபித்ததும் அவ்வாறே மாறினர். த்ரிஶங்குவை மேலுலகிலேயே நிறுத்தி ஒரு உலகைப் படைத்ததும் அவர் சொற்களே. எனவே வால்மீகியின் மனத்திரையிலே நாரதர் நான்முகன் அருளினாலே இராமாயண காவியம் தோன்றத் தொடங்கியது.

लौकिकानां हि साधूनां अर्थं वाक् अनुवर्तते ।
ऋषीणां पुनराद्यानां वाचमर्थोऽनुधावति ॥

லௌகிகானாம்ஹி ஸாதூனாம் அர்த்தம் வாக் அனுவர்த்ததே ।
ரிஷீணாம் புன: ஆத்யானாம் வாசம் அர்த்த: அனுதாவதி ॥

பவபூதி - உத்தரராமசரிதம்

உலகிலுள்ள மந்த்ர சக்தியற்ற ஸாதுக்களுக்குத் தாங்கள் அறியும் பொருளுக்கேற்ப சொல் எழும். சிறந்த தவமுடைய மஹர்ஷிகளுக்கோ அவர் தம் சொற்களைப் பின்பற்றிப் பொருட்கள் ஓடி வரும் என்பர்.

तस्य बुद्धिः इयं जाता वाल्मीकेः भावितात्मनः ।
कृत्स्नं रामायणं काव्यं ईदृशैः करवाण्यहम् ॥

தஸ்யபுத்தி: இயம் ஜாதா வால்மீகே: பாவிதாத்மன: ।
க்ருத்ஸ்னம் ராமாயணம் காவ்யம் ஈத்ருஶை: கரவாணி அஹம் ॥

வா.ரா. பால. - 2

வான்மீகியின் சீடர்கள் பலரும் சேர்ந்து ஒரே குரலில் ''மாநிஷாத'' எனும் ச்லோகத்தை அழகாகப் பாடிக் கொண்டிருந்தனர். இதைக் கேட்டதும்

வால்மீகி பரம புருஷனான ஸ்ரீராமனை மனதில் நன்கு தியானம் செய்த வண்ணம், இராமனின் சரித்திரம் முழுவதையும் கருணா ரஸம் ததும்பும்படி எழுதுவோம் என உறுதி பூண்டார்.

தாம் எழுதப் போகும் காவ்யம் பகவானின் அவதாரத்தைப் பற்றியது. வேதங்களின் உண்மைப் பொருளை விளக்குவது. அல்லலுறும் மக்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகைப் பயனையும் நல்கும் உதாரத் தன்மையுடையது ஆகிய, அமையப் போகும் பெருமைகளைக் கருதி இதுவும் ஒரு பகவதாராதனமானபடியால் சாஸ்த்ரங்களில் கூறிய முறையில் கால்களை அலம்பி, ஆசமனம் செய்து, கிழக்கு நுனியாக தர்பங்களைப் போட்டு அதில் அமர்ந்து, இரு கைகளையும் கூப்பி, குருவை வணங்கி, நாரதர் உபதேசித்த ராமாயணத்தின் பிரிவுகளை நான்முகனின் அனுக்ரஹத்தைத் துணையாகக் கொண்டு ஆராய்ந்து ஞானக் கண்களால் நேரில் பார்ப்பது போன்று பார்க்கத் தொடங்கினார்.

அயோத்தி நாடு, அதன் மக்கள், அரசரான தசரதர், தசரதரின் மனைவிகள், இவர்களின் புதல்வர்கள், குறிப்பாக ராமன், லக்ஷ்மணன், ஸீதை ஆகிய எல்லோருடைய பேச்சு, சிரிப்பு, நடைஉடை பாவனைகள், நாட்டிலும், காட்டிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், இராவணனோடும் பிறரோடும் நிகழ்ந்த போர்கள் ஆகிய அனைத்தையும் நேரில் ''உள்ளங்கை நெல்லிக் கனியைக் காண்பதுபோல்'' பார்த்தார்.

उपस्पृश्य उदकं सम्यक् मुनिः स्थित्वा कृताञ्जलिः ।
प्राचीनाग्रेषु दर्भेषु धर्मेण अन्वेषते गतिम् ॥
रामलक्ष्मण सीताभिः राज्ञा दशरथेन च ।
सभार्येण सराष्ट्रेण यत्प्राप्तं तत्र तत्वतः ॥
हसितं भाषितं चैव गतिर्या यश्च चेष्टितं ।
तत्सर्वं धर्मवीर्येण यथावत् सम्प्रपश्यति ॥
पुरा यत् तत्र निर्वृत्तं पाणौ आमलकं यथा ॥

உபஸ்ப்ருச்ய உதகம் ஸம்யக் முனி: ஸ்தித்வா க்ருதாஞ்ஜலி: ।
ப்ராசீனாக்ரேஷு தர்பேஷு தர்மேண அன்வேஷதே கதிம் ॥
ராமலக்ஷ்மண ஸீதாபி: ராக்ஞா தசரதேன ச ।
ஸபார்யேண ஸராஷ்ட்ரேண யத்ப்ராப்தம் தத்ர தத்வத : ॥
ஹஸிதம் பாஷிதம் சைவ கதி: யா யஸ்ச சேஷ்டிதம் ।
தத்ஸர்வம் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ரபஶ்யதி ॥
புரா யத் தத்ர நிர்வ்ருத்தம் பாணௌ ஆமலகம் யதா ॥

பின்னர் முனிவர் தம் அகக்கண்ணால் கண்ட ராமபிரானின் வரலாற்றினைத் தமது தவ வலிமையினாலும். நாரத மஹர்ஷியிடமுள்ள குரு பக்தியினாலும், பிரஹ்ம தேவனின் விசேஷ கடாக்ஷத்தினாலும் ஒரு பேரிலக்கியமாக மிக அழகிய முறையில் தொகுத்தார். இம்மஹா காவ்யம் இந்நிலவுலகில் அல்லலுறும் மக்களுக்கு ஒரு வரப்ரஸாதமாக அமைந்தது எனலாம். நாம் பெறக் கூடிய பேறுகளைத் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என நால்வகைப்படுத்தினர் முன்னோர். இவற்றுள் தர்மம் (அறம்), மோக்ஷத்தை (பேரின்பப் பெருவாழ்வை) அளிக்கவல்லது. அதோடு இவ் வுலகில் நல்வாழ்வினைப் பெறவும் உதவுவது. அர்த்தம் (பொருள்) நல்லறங் களைச் செய்ய உதவுவது. அதோடு காமத்தை, அதாவது இவ்வுலகில் சிற்றின்பங்களை, நுகரவும் உதவுகிறது. ஒருவன், தகாத வழியில் பொருளை ஈட்டிக் கூடாத அற்ப இன்பங்களில் ஈடுபடுவானேயாகில் தானும் கெட்டுப் பிறரையும் கெடுத்து உலக வாழ்வை நரக வாழ்வாக ஆக்கிவிடுவான். எனவே, அறம் பிறழாது நேரிய முறையில் பொருளை ஈட்டி, வாழ்க்கையில் பிழையற்ற இன்பங்களை நுகர்பவன் மறுமையில் பேரின்பப் பெரு வாழ்வைப் பெறுவது திண்ணம்.

இவ்வுண்மையை உலகினர்க்கு உணர்த்த எண்ணிய முனிவர் தமது காப்பியத்தில் பொருளுக்கும், சிற்றின்பத்திற்கும் முக்கியத்துவம் கொடுக் காமல் விடத்தக்க பேறுகளாகச் சித்தரித்திருப்பதுடன், தர்மத்தையும் மோக்ஷத்தையும் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கைக்கொள்ள வேண்டிய பேறுகளாகவும் இவற்றுக்கு உதவியாக, துணையாக, அர்த்த காமங்களை ஏற்கலாமென்பதையும் ஆங்காங்கு விளக்கியிருக்கிறார். ராவணன், வாலி முதலியோர் காமத்தினாலும், கைகேயி பொருளாசையினாலும் சீரழிந்ததை யும், தர்மத்தினால் பரதனும், மோக்ஷத்தில் ஆசையினால் விபீஷணனும் சீர்மை பெற்றதையும் இங்கு சான்றாகக் கொள்ளலாம். மேலும் பொருட் பேற்றைவிடப் காமப்பேறு மிகப் பயங்கரமானது, கொடியது. சிலர் காமத்தைக் காமத்தினால் வெல்லலாம் எனக் கருதுவர். நமக்கு ஏற்பட்ட ஆசையை நிறைவேற்றி விட்டால் பின்னர் ஆசை எழாது என்பர். ஆனால் உண்மை அதுவல்ல.

न जातु कामः कामानां उपभोगेन शाम्यति ।
हविषा कृष्णवर्त्मेव भूय एव अभिवर्धते ॥

நஜாது காம: காமானாம் உபபோகேன ஶாம்யதி ।
ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவ பூயஏவ அபிவர்த்ததே ॥

ஆசைக்குரிய பொருட்களை அனுபவிப்பதினால் ஆசை போகாது. விரும்பியது நிறைவேறியதும் அதையே மிகுதியாக அனுபவிக்க வேண்டு மென்றோ, அதைவிட உயர்ந்ததைத் துய்க்க வேண்டுமென்றோ, மேன் மேலும் ஆசைகளைத் தூண்டுமே ஒழிய அது அடங்காது. நெருப்பை

அணைக்க நெய்யை விட்டால் அந்நெருப்பு கொழுந்துவிட்டு எரியுமே ஒழிய தீ அடங்குமா? அறவழியிலே முறை தவறாது ஒழுகிய விஸ்வாமித்திரர் கூட ப்ரஹ்மர்ஷி பட்டத்தைப் பெற அயராது தவம்புரியினும் இடையிடையே காமவயப்பட்டு அல்லலுற்றதை எடுத்துக்காட்டிக் காமத்தை வெல்வதில் மிக எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியதை உணர்த்துகிறார். காமத்தை வெல்ல வைராக்யம் (அவாவறுத்தல்) ஒன்றே சிறந்தவழியென்பதை தண்டகாரண்ய முனிவர்களின் வாழ்க்கையில் எடுத்துக் காட்டுகிறார். இந்த வைராக்யத்தின் பெருமையைத் திருக்குறள் விளக்குவதாவது.

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டுஇல்லை
ஆண்டும் அஃதொப்பது இல். குறள் - 363

வைராக்யத்தைப் போன்ற சிறப்புடைய செல்வம் நாம் வாழ்கின்ற இவ்வுலகில் எங்கும் காண முடியாது. இவ்வுலகில் ஏன்? மேலுலகிலும் (சுவர்க்கத்திலும்), வைராக்யத்திலும் உயர்ந்ததைக் காணமுடியாது. ஏனெனில் நாம் மிக உயர்ந்தது என ஒரு பொருளைப் பெற்றதும் அதைவிட உயர்ந்தது நம் மனக் கண் முன் வந்து நிற்கிறது. உடனே அதைப் பெற மனம் விழைகிறது. பிறகு மற்றொன்றை உயர்ந்ததாகக் கருதுகிறது மனம். அதைப் பெற அவா. இவ்வாறு முடிவற்ற நிலை. ஆனால் மனமோ ஒரு நொடி கூட எதையும் நாடாமல் இருக்காது. இது உறுதியற்ற சஞ்சலமான ஸ்வபாவத்தை உடையது. இதன் போக்கை எப்படி அணைபோட்டுத் தடுப்பது? அதற்கு வழி ''பரமாத்மனி யோ ரக்த: விரக்த: அபரமாத்மனி''. இதற்கு மேல் உயர்வற்ற உயர் பொருளான சக்ரவர்த்தித் திருமகனிடத்தில் மனதைச் செலுத்துவோமாகில் பிற அற்பமான பொருள்களிடம் மனம் செல்லாது. இது நாளடைவில் மோக்ஷ (பேரின்ப)ப் பேற்றினைப் பெற வழிகாட்டும். இதை விளக்குவது ராமாயணம். மேலும், இக்காப்பியம் பெருங்கடலைப் போன்றது. அவரவர்கள் திறமைக்கேற்ப கடலில் மூழ்குபவர்கட்கு மிக உயரிய ரத்தினங்கள், முத்துக்கள், பவழங்கள் ஆகியவை கிடைப்பதுபோல் அவரவர் அறிவுக்கேற்பப் பெறத்தக்க மிகச் சிறந்த கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டது. இதிலுள்ள ஓசையின்பம் கேட்போரைப் பிணிக்கும் தகைமையது. கருத்தாழமோ, மனதைப் பறி கொடுக்கச் செய்யும். உபநிஷத்துக்களில் பொதிந்து கிடக்கும் தத்துவங்களைப் பற்றிய நுணுக்கங்களை எளிதாக நம் மனதில் பதியச் செய்யும் பெருமை பெற்றது. காப்பியங்களுக்கு அணி செய்யும் அணிகளையும் தொனிகளையும் தன்னகத்தே நிரம்பப் பெற்றது. இத்தகைய மஹாகாவ்யமாகிற ஆதிகாவ்யத்தை நாரதர் கூறியதற் கேற்ப வால்மீகி அழகுறப் படைக்க, ராமாயணம் பூவுலகில் அவதரித்தது.

कामार्थ गुण सम्युक्तं धर्मार्थ गुण विस्तरम् ।
समुद्रमिव रत्नाढयं सर्वश्रुति मनोहरम् ॥

स यथा कथितं पूर्वं नारदेन महर्षिणा ।
रघुवंशस्य चरितं चकार भगवान् ऋषिः ॥

காமார்த்த குண ஸம்யுக்தம் தர்மார்த்த குண விஸ்தரம் ।
ஸமுத்ரமிவ ரத்னாட்யம் ஸர்வஸ்ருதி மனோஹரம் ॥
ஸ யதா கதிதம் பூர்வம் நாரதேன மஹர்ஷிணா ।
ரகுவம்ஸஸ்ய சரிதம் சகார பகவான் ரிஷி: ॥

வா. ரா. பால. - 3

ராமாயண கானம்

चिन्तयामास कोन्वेतत् प्रयुञ्जीयात् इति प्रभुः ।
अगृह्णीतां ततः पादौ मुनिवेषौ कुशीलवौ ॥
कुशीलवौ च धर्मज्ञौ राजपुत्रौ यशस्विनौ ।
भ्रातरौ स्वरसम्पन्नौ ददर्शाश्रमवासिनौ ॥
स तु मेधाविनौ दृष्ट्वा वेदेषु परिनिष्ठितौ ।
वेदोपबृंहणार्थाय तौ अग्राहयत प्रभुः ॥
काव्यं रामायणं कृत्स्नं सीतायाः चरितं महत् ।
पौलस्त्यवधमित्येव चकार चरितव्रतः ॥
पाठ्ये गेये च मधुरं.... । तन्त्रीलय समन्वितम् ॥

சிந்தயாமாஸ கோந்வேதத் ப்ரயுஞ்ஜீயாத் இதி ப்ரபு: ।
அக்ருஹ்ணீதாம் தத: பாதௌ முனிவேஷௌ குசீலவௌ ॥
குசீலவௌ ச தர்மக்ஞௌ ராஜபுத்ரௌ யஸஸ்வினௌ ।
ப்ராதரௌ ஸ்வரஸம்பந்நௌ ததர்ச ஆச்ரம வாஸினௌ ॥
ஸ து மேதாவிநௌ த்ருஷ்ட்வா வேதேஷு பரிநிஷ்டிதௌ ।
வேதோபப்ரும்ஹணார்த்தாய தௌ அக்ராஹயதப்ரபு ::॥
காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்னம் ஸீதாயா: சரிதம் மஹத் ।
பௌலஸ்த்ய வதமித்யேவ சகார சரிதவ்ரத: ॥
பாட்யே கேயே ச மதுரம்...। ...தந்த்ரீலய ஸமந்விதம் ॥

வா.ரா. பால. - 4

வேதத்திற்கு ச்ருதி என்றும் எழுதாமறை என்றும் பெயரிட்டுப் பெரியோர் கூறுவர். ஓலையிலோ, காகிதத்திலோ எழுதப்படாமல் குருவினிடமிருந்து செவிவழிக்கேட்டே மனப்பாடம் செய்து வேதங்கள் நமது காலம் வரை

காப்பாற்றப் பட்டு வந்திருக்கின்றன. இதே போன்று மறைப்பொருளை விளக்கும் இராமாயணமும் வால்மீகியின் மனச் சுவரிலே எழுதப்பட்டுப் பின்னர் சீடர்களால் செவிவழிக்கேட்டுத் தரிக்கப்பட்டுப் பிறகாலத்தில் ஓலையிலும், காகிதத்திலும் எழுதப்பட்டு நமக்குப் புத்தக வடிவில் கிடைத்திருக்கிறது.

चतुर्विंशति सहस्राणि श्लोकानां उक्तवान् ऋषिः ।
तथा सर्ग शतान् पञ्च षट्काण्डानि तथोत्तरम् ॥

சதுர்விம்ஶதி ஸஹஸ்ராணி ஶ்லோகானாம் உக்தவான் ரிஷி: ।
ததா ஸர்க சதான் பஞ்ச ஷட்காண்டானி ததோத்தரம் ॥

வா. ரா. பால. - 4

என்றபடி இருபத்துநான்காயிரம் ச்லோகங்களும், ஐந்நூறு ஸர்கங்களும், ஏழு காண்டங்களும்—ராமாயணத்தில் அமைந்துள்ளன. இவ்வளவையும் மனதில் தரித்துக் கொள்ளும் ஆற்றல் மிக்க மாணவர் யார்? தம்மிடம் வேதங்களையும், சாஸ்த்ரங்களையும் கற்ற சீடர்களுள் முதன் முதலாக உபதேசிக்க யாரைத் தேர்ந்தெடுப்பது என்று ஆழ்ந்து சிந்திக்கலானார் முனிவர். எளிதாகவும் விரைவிலும் மனப்பாடம் செய்யக் கூடியவர்களா யிருந்தால் முனிவரின் கற்பிக்கும் பணியும் எளிதில் அமையும். இவருக்கு ஏன் இக்கவலை எனப் பரமன் எண்ணினான் போலும்! நம்பியவர்களைப் பரமன் கைவிட்டதாகச் சரித்திரமே கிடையாது. முனிவரோ முற்றிலும் இராமனை உபாஸிக்கிறவரல்லரோ?

இருவர் பாடிக் கொண்டே வந்தனர். பார்ப்பதற்கு முனி குமாரர்களைப் போன்ற ஜடை, மரவுரி தரித்திருந்தனர். அரசர்களுக்குரிய லக்ஷணம் பொருந்தியவர்கள். குருவினிடம் சீடர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை நன்கு அறிந்தவர்கள். சீடர்களுள் மதிநுட்பத்திலும், அடக்கத்திலும் பெரும் புகழ் பெற்றவர்கள். ஸஹோதரர்களாகிய இவ்விருவரும் இசைப்பதிலே நல்ல சாரீரம் படைத்தவர்கள். இணைந்த குரல் உடையவர்கள். இவர்கள் ஓடோடியும் வந்து முனிவரை வணங்கி இரு கைகளாலும் அவர் திருவடிகளை இறுகத் தழுவிக் கொண்டனர். அவர்கள் இருவரும் தம் ஆச்ரமத்திலேயே வசித்து வருகின்றவர்கள் என அறிந்ததும், முனிவருக்கு மகிழ்ச்சி பொங்கி எழுந்தது. இவ்விருவரும் ரிக், யஜுஸ், ஸாம, அதர்வண வேதங்கள் நான்கினையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள். மேலும் பலவற்றைக் கற்றுச் சிறிதும் மறப்பின்றி தரிக்கும் ஆற்றல் மிக்கவர்கள். இவர்கள் நாம் இயற்றும் ராமாயணத்தைத் தரித்துப் பிரசாரம் செய்ய வேண்டும் என்று எண்ணியே இராமபிரான் ஸீதையைக் காட்டுக்கு (நம் ஆச்ரமத்திற்கு) அனுப்பினார் போலும் என்கிற எண்ணமும் இவர் மகிழ்ச்சி யின் வளர்ச்சிக்குக் காரணம் போலும்.

''இதுவரை பல்லோருக்கு வேதங்களைக் கற்பித்தோம். தெளியாத மறைநிலங்களைத் தெளிவிக்க இராமாயணத்தை இயற்றினோம். இதன்மூலம் வேதங்களின் ஆதாரங்களையும், நுட்பமான தத்துவக் கருத்துக்களையும் உலகினர்க்கு விளக்க இவர்களே ஏற்றவர்கள்'' எனக் கருதிக் குசலவர்கட்குக் கற்பிக்கத் தொடங்கினார் அறிவதால் ஏற்படும் மகிழ்ச்சி எனலாம். மேலும் காப்பியத்தின் சிறப்பும் கவர்ச்சியும் காரணமாகலாம்.

அதாவது இலக்கியம் மூவகைப்படும். ஒன்று சொற்களையே பிரதான மாகக் கொண்டது. வேதங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றைப் ப்ரபு ஸம்மிதை என்பர். யஜமானனைப் போன்று தர்மத்தைச் செய், உண்மை யைப் பேசு, பிறரைத் துன்புறுத்தாதே என்று உத்தரவிடும் முறையில் அமைந் திருக்கும். மற்றொன்று, பொருளையே (அர்த்தத்தையே) முக்கியமாகக் கொண்டது. புராணங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றை ஸுஹ்ருத் ஸம்மிதை என்பர். நம்மோடு இணைந்து நெருங்கிப் பழகிய நண்பனைப் போன்று, கதை வடிவிலே நல்லறங்களை நமக்குப் புகட்டும். பிறிதொன்று, இங்கிதங்களை, தொனிகளைச் சிறப்புறக் கொண்டது. இதைக் காவ்யம் என்பர். இது சொற்களாலும், பொருளாலும், படிப்போரின் மனதைக் கவர்ந்து சொல்லாழத்திலும், பொருளாழத்திலும் மறைந்து பொதிந்து கிடக்கும் வ்யங்கியங்களைக் (தொனிகளை) கொண்டு நாம் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய தர்மங்களை உணர்த்தும். இது அவரவர் அன்புக்குரிய ப்ரியையான மனைவி தன் அன்புக்கு நிலைக்களமாய்த் திகழும் கொழுநனைக் கவர்ந்து ஜாடையாகவும், இங்கிதமாகவும் அழகாகப் பேசித் தன் கருத்தை உணர்த்துவது போல் நம் கடமைகளைப் புகட்டுவதால் இதை காந்தா ஸம்மிதை என்பர். இம் மூன்றினுள் இராமாயணத்தை ''காந்தா ஸம்மிதை'' எனலாம். எனவே இது படிப்போருக்கு அவரவர் கற்ற கல்வியின் தரத்திற்கும், தகுதிக்கும் ஏற்பத் தோண்டத் தோண்ட நீர் ஊறும் மணற் கேணிபோல சீரிய சுவைமிக்க அழகிய கருத்துக்கள் தோன்றச் செய்யும் சிறப்புடைய காப்பியமாகும்.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு. குறள் - 396

நாம் குழந்தைகட்கு மூன்று பெயரிடுவது போல் வால்மீகியும் இக் காப்பியத்திற்கு மூன்று பெயர்களை இடுகிறார். ஒன்று **இராமாயணம்**. இப் பெயர் காப்பிய நாயகனாகிய ராமனை மனதில் கொண்டது. ராமன் அனைத்தையும் (புற்பூண்டு உள்பட) மகிழ்விப்பவன். இவனைக் கண்டவர் கள் அனைவரின் மனத்திலும் எவ்விதக் காரணமும் இன்றி மகிழ்ச்சி பொங்கி எழுகிறது. உலகில் அனைவரையும் மகிழ்விக்கும் சான்றோர்களுள் ராமன் மிகச் சிறந்தவன். இத்தகைய உத்தம புருஷனை நாயகனாகக் கொண்ட படியால் ராமாயணம் என முதலில் கூறினார். மற்றொரு பெயர் **ஸீதா சரிதம்**.

காவ்யநாயகியான ராமனின் ஏகபத்தினியான ஸீதாப்பிராட்டியின் வரலாறு காவ்யத்தில் சிறப்பாக இடம் பெற்றிருப்பதால் இப்பெயரும் தகும். மூன்றாவது பெயர் **பௌலஸ்த்ய வதம்.** புலஸ்த்ய முனிவரின் மகன் பௌலஸ்த்யன் ராவணன். இவனுடைய வதமே முக்யமான பயனாக அமைந்திருக்கிறது இக்காவியத்தில். ஏனெனில் கீதையில் கண்ணன் தான் அவதரிப்பதற்குக் காரணங்களைக் கூறும்பொழுது :

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्म संस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

பரித்ராணாய ஸாதூனாம் வினாஶாயச துஷ்க்ருதாம் ।
தர்மஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே ॥

பகவத் கீதை - 4.8

நாட்டில், தர்மத்தினால் தான் மக்கள் க்ஷேமமாக வாழமுடியும். தர்மம் நிலைத்திருக்க வேண்டுமானால் தர்மங்களை (ஸந்த்யாவந்தனம் முதலிய கர்மாக்களை) அனுஷ்டிப்பவர்கள் தீங்கின்றி வாழ வேண்டும். நெற்பயிரைக் காக்கக் களைபிடுங்குவது போல் தர்மத்திற்கு இடையூறு செய்யும் கொடிய வர்களை அழிக்க வேண்டும். எனவே தர்ம ஸ்தாபனம் செய்ய தீயவர்களை அழிப்பது இன்றியமையாதது. இதற்காக யுகம் தோறும் பகவான் அவதரிக் கிறார். ஆக அறம்தலை நிற்கும் முனிவர்களையும் அரசர்களையும் துன்புறுத்திய ராவணனை மாய்த்தது காப்பியத்தின் முக்கிய பயனாக அமைந்துவிட்டது. எனவே பயனை மனதில் கொண்டு பௌலஸ்த்யவதம் (ராவணவதம்) என்றும் பெயரிட்டார். காப்பியத் தலைவன், காப்பியத் தலைவி, காப்பியத்தின் குறிக்கோள் ஆகிய மூன்று சிறந்த பொருட்களை மனதில் கொண்டு முனிவர் மூன்று பெயர்களைச் சூட்டியிருக்கிறார் இக்காவ்யத்திற்கு. மூன்றும் மிகப் பொருத்தமுடைய பெயர்கள் என்பதில் சிறிதும் ஐயத்திற்கு இடமில்லை. ஆயினும் வால்மீகிக்கு எந்தப் பெயரில் அதிக நோக்கு என்பதைச் சிறிது ஆராய்வோம்.

பெருங்காப்பியம்

மஹாகவி வால்மீகி இப்பெருங்காப்பியத்திற்கு மூன்று திருநாமங்களைச் சூட்டினார். ஆயினும் ராமன் ஸீதையைக் காட்டிற்கு அனுப்பியதிலிருந்து அவதாரபூர்த்தியை ஸங்கல்பித்துக் கொள்ளும் வரை அவள் வால்மீகியின் ஆச்ரமத்திலேயே வாழ்ந்தாள். எனவே பிராட்டியினிடம் பரிவும், பக்தியும் மிகுந்திருப்பது இயல்பு. எனவே ஸீதாசரிதம் என்பதி லேயே அதிக நோக்கு எனலாம். வீட்டின் ரேழியிலே விளக்கை வைத்தால் அதன் ஒளி வீட்டின் உள்ளேயும், வெளியிலும் பிரகாசிக்குமாப்போலே ஸீதை இராமனின் அவதாரகாரியமான ஸாது ரக்ஷணத்திற்கும், தீயோரைக் களைவதற்கும் உதவியவளானபடியால் இரு பெயர்களுக்கும் நடுவில் ஸீதாசரிதம் எனும் பெயரை அமைத்தார் போலும். பொற்கொல்லர்கள் அழகிய உயர்ந்த ஹாரத்தைச் செய்யும்பொழுது தம்மிடமுள்ள ரத்தினங்களுள் மிகச் சிறந்த ரத்தினத்தை நகையின் மையத்தில் பதிப்பார்கள். அதன் ஒளி ஆரத்தின் இரு பக்கங்களில் வீசுவதால் அணிகலனுக்கே சிறப்பைத் தரும். அதுபோலப் பிராட்டியும் பிரானின் கருணையும், பகைவனின் (ராவணனின்) வீரமும் பிரகாசிக்கக் காரணமானாள். எனவே மத்யமணி ந்யாயத்திற்கிணங்க ராமாயணம், ராவணவதம் எனும் பெயர்களின் மத்தியில் ஸீதா சரிதம் எனும் பெயரை அமைத்தார்.

यस्याः वीक्ष्यमुखं तदिङ्गित पराधीनः विधत्तेऽखिलम् ।

யஸ்யா: வீக்ஷ்யமுகம் ததிங்கித பராதீன: விதத்தே அகிலம் ॥

ஸ்ரீஸ்தவம்-1

என்று பிராட்டியின் பெருமையைப் பேசத் தொடங்கிய கூரத்தாழ்வான், எம்பெருமான் பிராட்டியின் செந்தாமரையினை ஒத்த திருமுகத்தை நோக்கு கிறான். அவள் கடைக்கண்கள் பெருமாளை நோக்குகின்றன. பரமனைக் கொண்டு பிரளயத்திற்குப் பிறகு பிரக்ருதியாகிற பாழிலே கிடந்து அல்ல லுறும் தம் மக்களுக்கு மோக்ஷத்தைப் பெற மீண்டும் வாய்ப்பு அளிக்க ஸ்ருஷ்டிக்கவும், ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்களுக்கு, நற்கதியைப் பெறுவதற் குரிய உபாயங்களை விளக்கும் வேத சாஸ்த்ரங்களை அளித்துக் காக்கவும், வழி தவறியவர்கள் மேன்மேலும் தீயவைகளைச் செய்து பாபங்களைச் சுமக்காமலிருக்க ஸம்ஹாரம் முதலிய பல கார்யங்களைச் செய்து முடிக்கவும் அவள் மனம் எண்ணுகிறது. ஆனால் வாய் பேசவில்லை. இதயத்தின் வாயிலாகிய கண்களே பேசுகின்றன. அக்கடைக்கண் பார்வையினின்றும் பிராட்டியின் கருத்தை அறிந்து அனைத்தையும் செய்கிறான் எம்பெருமான்.

எனவே இத்தகைய பெருமை வாய்ந்த பிராட்டியின் சரித்திரமே இக் காப்பியம்.

அனைவரையும் மகிழ்விப்பதினாலும், காண்போர் அனைவரும் இவனைக் கண்டதும், நினைத்ததுமே மகிழ்ச்சியைப் பெறுவதினாலும் சக்ரவர்த்தித் திருமகனை ராமன் என்கிறோம். இவன் இங்கு பேசப்படுவதால் காவ்யத்திற்கு ராமாயணம் எனப்பெயர் வந்தது என்பர். ஆனால் ரமா— மஹாலக்ஷ்மீ—ஸீதா, இவளோடு கூடியவன் ராமன் அதாவது ஸீதாராமன். எனவே ஸீதையை முன்னிட்டுக் கொண்டு ராம சரிதம் பேசப்படுவதாகப் பொருள் கொண்டால் இக் காவியத்தில் ஸீதையே பிரதானமாக ஆகிறாள் அல்லவா! இக்கருத்தை மனதிற் கொண்டுதான் கூரத்தாழ்வானின் திரு மகனாய் அவதரித்த பராசர பட்டர் எனும் ஆசார்யரும் கூறுவது.

श्रीमद्रामायणमपि परं प्राणिति त्वच्चरित्रे

ஸ்ரீமத் ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச் 'சரித்ரே'

ஸ்ரீ குணரத்நகோஶம் - 14

''பிராட்டியே! உன் சரித்திரத்தில்தான் ராமனின் சரித்திரமும் உயிர் வாழ்கிறது. ஆக ராமாயணத்திற்கு ஸீதா சரித்திரம் தான் ஜீவநாடி'' இதை வால்மீகியும் ''இராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயா: சரிதம்''— ராமாயணம் முழுவதும் ஸீதையின் சரித்திரமே என்றார். இது இராமனைப் பற்றிப் பேசுவதால் ராமாயண காவியமாகக் கருதப்பட்டது. பின்னர் காவியத்திற்குக் களைகட்டும் ஸீதையின் சரித்திரத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் ''காவ்யம் ஸீதாயா: சரிதம் மஹத்'' மஹாகாவ்யமாக, பேரிலக்கியமாகத் திகழ்கிறது என்றும் தெளிவாகக் கூறினார்.

இப்பாரத நாட்டிலே சீரும் சிறப்பும் பெற்றுத் திகழும் ஸம்ஸ்க்ருத மொழி மிகப் பழையது. தொன்மையும், தூய்மையும் பெற்றது. உலக மொழிகட்கெல்லாம் தாய் போன்றது. 18 புராணங்களையும், இரு பெரும் வரலாற்றுப் பேரிலக்கியங்களையும், இவையனைத்திற்கும் மூலமான நான்மறைகளையும், இவையனைத்தையும் வழி காட்டியாகக் கொண்ட பல்வகை நூல்களையும் கொண்டது. இத்தகைய பெருமை பெற்ற இம் மொழியில் ஒரு பழமொழி வழங்கப் பெற்று வருகிறது. அதாவது,

प्रातः द्यूत प्रसङ्गेन मध्याह्ने स्त्री प्रसङ्गतः ।
रात्रौ चोर प्रसङ्गेन कालो गच्छति धीमताम् ॥

ப்ராத: த்யூதப்ரஸங்கேன மத்யான்ஹே ஸ்த்ரீப்ரஸங்கத: ।
ராத்ரௌ சோரப்ரஸங்கேன காலோ கச்சதி தீமதாம் ॥

என்று. இதற்கு மேலெழுந்தவாரியாகப் பொருள் கொள்பவர்கள் ''அறிவாளிகள் காலையில் சதுரங்கம், சொக்கட்டான் போன்ற விளையாட்டுகளினாலும், நண்பகலில் பெண்ணினத்தோடு தொடர்பு கொண்டு பரிஹாஸமாகப்

பேசுவது, வம்பளப்பது போன்றவற்றிலும், இரவில் திருடுவது, திருடு வதற்குத் தேவையான வழி முறைகளைக் கூடி ஆராய்வது முதலியவற்றாலும் பொழுதைப் போக்குவார்கள்'' என்பர். ஆனால் இது உண்மையான பொருளன்று. இது நமது மதிப்புமிக்க நூல்களைப் பற்றியது. கௌரவர்களும் பாண்டவர்களும் சதுரங்கம் ஆடிப் பாண்டவர்கள் தோற்காவிடில் லக்ஷம் ஸ்லோகங்கள் கொண்ட மஹாபாரதம் சில ஆயிரம் ஸ்லோகங்களிலேயே முடிந்திருக்கும். மேலும் படிப்போரையும், கதை கேட்போரையும் மேலே வரும் நிகழ்ச்சிகளை ஆவலுடன் படிக்கவும், கேட்கவும் மனதைத் தூண்டி ரஸனையில் ஆழ்த்தும் மஹாபாரதம் நமக்குக் கிடைத்திருக்காது. எனவே த்யூதம் எனும் சொல் மஹாபாரதத்தைக் குறிக்கும்.

''நானும் காட்டிற்கு உடன் வரத்தான் வருவேன் எனப் பிடிவாதம் செய்து காட்டிற்கு வந்து, பொன்மானைப் பிடித்துத் தர ஸீதை வற்புறுத்தி யிராவிடில் ராமாயணக் கதை பஞ்சவடி வாஸத்திற்குப் பிறகு ஸீதாராம பட்டாபிஷேகத்தோடு முடிவுற்றிருக்கும். பறவைக்கும் மோக்ஷம் என்பதை அறியோம், கலியுக வரதனாய், மக்களின் பிணி தீர்த்தும், மனோரதத்தைப் பூர்த்தி செய்தும், கோவில்கள் தோறும் கம்பங்கள் தோறும் வடைமாலை களால் அர்ச்சிக்கப்பட்டு ஸேவை ஸாதித்தருளும் சிறிய திருவடியாம் ராமபக்த ஹனுமானுடைய மெய்சிலிர்க்கச் செய்யும் சரித்திரம் நமக்குக் கிடைத்திருக்காது. எத்தகைய பாபிகளாயினும் இறைவனிடம் சரணடைந்து முக்தியைப் பெறமுடியும் என நம்பிக்கையூட்டும் பிரபத்தி நெறியை அனுஷ்டித்துக் காட்டி நம்மனோரை வாழவைத்த விபீஷண சரணாகதி, த்ரிஜடா சரணாகதி சரித்திரம் நமக்குக் கிடைத்திருக்காது. ஒரு பெண்ணின் கற்பின் பெருமையைத் தெளிவாக நாம் அறிய வாய்ப்புக் கிடைத்திருக்காது. இவ்வளவையும் ஸ்த்ரீயான ஸீதையினாலன்றோ நாம் பெற்றோம். எனவே ''ஸ்த்ரீ ப்ரஸங்கத'' என்பது ஸ்ரீமத் ராமாயணத்தைக் குறிக்கிறது.

பொருள் அனைத்தும் நமக்குப் பரமனால் அளிக்கப்பட்டவை. அவற்றை நாம் அவனுக்கு அர்ப்பணம் செய்யாது அனுபவிப்பது திருட்டுத் தனமாகும். அக்குற்றத்தினின்றும் மீள நமக்கு வழி காட்டுவான் வேண்டி தானே நவனீத சோரம் செய்து கோபியர்களை வாழ்வித்த கண்ணபிரானின் சரித்திரத்தை விளக்கும் ஸ்ரீமத் பாகவதத்தைக் குறிக்கிறது ''சோரப் ப்ரஸங்கேன'' எனும் சொல்.

எனவே அறிவாளிகள் மஹாபாரத, ராமாயண, ஸ்ரீமத் பாகவத நூல்களைக் கற்று, ஆராய்ந்து பொழுதைப் போக்குகிறார்கள் என்பது இதன் கருத்து. இப்பழமொழியில் ''ஸ்த்ரீப்ரஸங்கத'' எனும் சொல்லால் பிராட்டி ஸீதையை முன்னிட்டு ராமாயண நூல் குறிக்கப்படுவதால் இக் காப்பியத்தின் பெயர் ''ஸீதா சரித்திரம்'' என்றே தொன்றுதொட்டு வழங்கப்படுவதாகக் கொள்வதே சீரியதாம்.

''ஸீதாயா: சரிதம் மஹத்'' என்று முனிவர் ஸீதையின் சரித்திரத்திற்கு ராம சரித்திரத்தைக் காட்டிலும் மஹத்துவத்தை—பெருமையை—உயர்வைப் பேசுகிறார். இம்மஹத்துவத்தை ஸ்ரீ பராசரபட்டர் ஸ்ரீகுணரத்ன கோசத்தில் மிகத் தெளிவாக வெளியிடுவதைப் பார்ப்போம்.

मातर्मैथिलि राक्षसी: त्वयितदैवआर्द्रापराधा: त्वया
रक्षन्त्या पवनात्मजात् लघुतरा रामस्य गोष्ठीकृता ।
काकं तं च विभीषणं शरणमिति उक्ति क्षमौरक्षत:
सा न:सान्द्र महागस: सुखयतु क्षान्तिस्तवाकस्मिकी ॥

மாத: மைதிலி ராக்ஷஸீ: த்வயிததைவ ஆர்த்ராபராதா: த்வயா
ரக்ஷந்த்யா பவனாத்மஜாத் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா ।
காகம் தம் ச விபீஷணம் ஶரணமிதி உக்திக்ஷமௌ ரக்ஷத:
ஸாந:ஸாந்த்ர மஹாகஸ: ஸுகயது க்ஷாந்தி: தவ ஆகஸ்மிகீ ॥

ஸ்ரீ குணரத்ன கோசம் - 50

சரணாகத ரக்ஷணம் எனும் தர்மத்தைப் பல எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவது இந்த ஆதிகாவ்யம். திவ்ய தம்பதிகளான ஸ்ரீ ஸீதா ராமர்கள் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என எவ்வித வேற்றுமையும் பாராட்டாது சரணாகதர்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள். ஆயினும் பட்டர் பக்தர்களை இருவகையாக ராம கோஷ்டீ, ஸீதா கோஷ்டி எனப் பிரித்து, தாய் (ஸீதா) கோஷ்டியே உயர்ந்தது என்கிறார். சிலர் குழந்தையைப் பார்த்து நீ அப்பா பிள்ளையா? அம்மா பிள்ளையா எனக் கேட்பார்கள். சிலர் என்ன! தாய், தந்தையர்களே தம் குழந்தைகளைப் பார்த்துக் கேட்பதைப் பார்த்திருக்கிறோம். குழந்தை சிறிது நேரம் என்ன பதில் சொல்வது எனத் திண்டாடும். பின்னர், யார் அச்சமயம் தின்பண்டங்களையோ வேறு விரும்பியவற்றையோ கொடுப்பாரோ அதை மனதில் கொண்டு அம்மாபிள்ளை / அப்பாபிள்ளை என்று பதில் கூறும். அதைக் கேட்டுத் தாய் தந்தையர் மகிழ்வதுபோல இங்கும் தண்டதரனான தந்தை ராமனைவிட, தண்டனைக்கு ஆளாகாமல் உரிய நேரத்தில் சிபாரிசு (புருஷகாரம்) செய்து நம்மைக் காப்பவள் அம்மா ஸீதைதானே. எனவே அம்மா கோஷ்டியில் இருப்பதே நமக்குச் சிறந்தது எனக் காரணத்துடன் முடிவு கட்டுகிறார். காகாஸுரன் உலகெலாம் சுற்றி எல்லோராலும் கைவிடப்பட்டு எத்திசையும் உழன்றோடி இளைத்து, வங்கத்தின் கூம்பேறும் பறவை போன்று ராமன் திருவடிவாரத்தில் வேறு கதியின்றி சரணம் என விழுந்ததால் காப்பாற்றினான், ராமன்.

இராவணனால் அவமதிக்கப்பட்டு மிகவும் நொந்த மனத்தனாய் விபீஷணாழ்வான் இராமன் இருக்குமிடம் தேடிவந்து சரணம், சரணம் எனக் கூறி, தொப்பெனத் திருவடிகளில் விழ, அவனைக் காத்தான். ஆக, ராமன் சரணம், சரணம் எனக் கூறித் தன் திருவடிவாரத்தில் விழுத்தவனைக்

காப்பாற்றினான். ஆனால் ஸீதாம்மாவோ அசோகவனத்தில் வெட்டுவேன், குத்துவேன், கடிப்பேன், விழுங்குவேன் எனப் பயமுறுத்திய வண்ணம் இருந்த அரக்கிகளை ஸ்ரீராமஜயம் சொல்ல வந்த ஹனுமான் காலால் தேய்த்துக் கசக்கிப், பொடித்து ஊத நினைத்தபொழுது, ராவணனிடம் அஞ்சிப் பயந்து கூலி வேலை செய்யும் இவ்வரக்கிகளைக் கொல்லலாகாது எனத் தடுத்து நிறுத்தி

''कार्यं करुणमार्येण न कश्चिन्नापराध्यति''

''கார்யம் கருணமார்யேண நகச்சித் நாபராத்யதி''

வா.ரா.யுத்த-113

''அனுமனே! கருணைகாட்டு, குற்றம் புரியாதார் உலகில் யாருளர்?'' எனக் கூறிச் சரணம் என வாயாலும் கூறாது, கைகளையும் கூப்பாது, காலிலும் விழாது, தீங்கிழைத்த வண்ணமே இருந்த அரக்கிகளையும் காப்பாற்றியவ ளல்லளோ?

काव्यं रामायणं कृत्स्नं सीतायाश्चरितं महत् ।
पौलस्त्यवधमित्येव चकार चरितव्रतः ॥

காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயா: சரிதம்மஹத் ।
பௌலஸ்த்ய வதமித்யேவ சகார சரிதவ்ரத: ॥

வா.ரா. பால. - 4

எனவே இத்தகைய பொறுமையும் கருணையுமே உருவாகப் பொலிந்து விளங்கும் மைதிலி அம்மா அல்லும் பகலும் பெருங்குற்றங்கள் புரிந்து நல்வாழ்வினைப் பெறாது திணறும் நமக்கு நன்மைகளை நல்கட்டும் எனப் பிரார்த்திக்கிறார். இக்காப்பியத்தின் குறிக்கோளாக அமைந்த சரணாகத ரக்ஷணத்திலும் ஸீதையின் கருணையே சிறப்புற்றிருப்பதைக் காண்கிறோம்.

அச்வமேத மஹாமண்டபத்திலே லவகுசர்கள் மூலமாக இக்கதையை ராமபிரான் கேட்கிறார். உத்தம புருஷன் தன் கதையைத் தானே ஸபையில் கேட்பது உசிதமன்று. ஆனால் ஸீதையைப் பிரிந்த நிலையில், விரஹ தாபம் உடையவர்கள் ஒருவர் மற்றவரின் செய்தியைக் கேட்டு மன ஆறுதல் பெறுவதும், மகிழ்வதும் இயல்பு. ஆனபடியால் மனைவியைப் பிரிந்து வாடும் ராமன் அவளைப் பற்றிய செய்திகளைக் கேட்டு மனதைத் தேற்றிக் கொள்வது உசிதமே.

காப்பியத்தின் பெயரைக் கூறும் இந்த ஶ்லோகத்திற்கு ''பௌல ஸ்த்யவதம் இத்யேவ''—ராவண வதத்தை வ்யாஜமாகக் கொண்டும் ''ராமாயணம்'' ராம சரித்திரத்தை முகவுரையாகக் கொண்டும் ''க்ருத்ஸனம்''

முழுமை பெற்ற ''ஸீதாயா: சரிதம்'' ஸீதையின் சரித்திரம் (வரலாறு) என்கிற ''மஹத் காவ்யம்'' பெருங்காப்பியத்தை ''சகார'' இயற்றினர் என்று பொருள் கொள்வதால் ஸீதையின் சரித்திரமே என்று முன்கூறியது உறுதிப்படுகிறது என்பர் சிலர்.

மேலும் ''ராமாயணம்'' என்பதற்கே, அனைவரையும் மகிழ்விக்கும் ராமனையும் மகிழ்விப்பவளான ஸீதையினுடைய சரித்திரம் என்றும் பொருள். கதிரவனின் கதிர்போலவும், மதியின் நிலவு போலவும் பெருமானைவிட்டுக் கண நேரமும் பிரியாத மஹாலக்ஷ்மியானவள் திருமால் அவதாரங்களை எடுக்கும் போதும் பிரியாது ராமாவதாரத்தில் ஸீதையாக வும், க்ருஷ்ணாவதாரத்தில் ருக்மிணியாகவும் அவதரிக்கிறாள்.

राघवत्वे अभवत् सीता रुक्मिणी कृष्णजन्मनि ।
सर्वेष्वप्यवतारेषु विष्णोरेषा अनपायिनी ॥

ராகவத்வே அபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜன்மனி ।
ஸர்வேஷ்வபி அவதாரேஷு விஷ்ணோ: ஏஷா அனபாயினீ ॥

விஷ்ணு புராணம்

என்று ப்ரமாணம் கூறுகிறபடியால் ரமா எனும் சொல் மஹாலக்ஷ்மியின் அவதாரமான ஸீதையைக் குறிக்கும். இந்த ரமையினுடைய சரித்திரம் ராமம். அது இந்நூலில் சொல்லப்படுவதால் ராமாயணம் எனப் பெயர் கொண்டது. ஆக மஹாலக்ஷ்மியின் அவதாரமான ஸீதையின் வரலாற்றினைக் கூறுவது என்று பொருள் கொள்வதும் உசிதமே.

ஸ்ரீமந் நாராயணனைத் தேச விசேஷத்தில் (ஸ்ரீ வைகுண்டத்தில்) சென்று அனுபவிக்க, அதாவது மோக்ஷம் பெற, உபாயத்தைச் செய்ய வேண்டும். உபாயம் பக்தி, இதைச் செய்யச் சக்தியற்றவர்கள், சரணாகதியை அனுஷ்டிக்க வேண்டும். நாம் அவனைச் சரணடைந்தால் பக்தி எனும் உபாய ஸ்தானத்தில் பகவான் தானே இருந்து நமக்கு முக்தியை நல்குகிறான். இப்பொழுது நாம் பெறும் மோக்ஷத்திற்குப் பகவானே உபாயமாகிறான். இந்நிலையிலுள்ள எம்பெருமானை ஸித்தோபாயம் என்பர். நாம் எல்லையற்ற பாபங்களைச் செய்திருக்கிறோம். எனவே நாம் பிரபத்தி செய்யும் பொழுது நமது பாபங்களை மனதில் கொண்டு பரமன் நம்மை ஏற்கத் தயங்கலாம்.

அச்சமயத்தில் கருணையே உருவமாய்த் திகழும் பிராட்டி ''உலகில் குற்றம் புரியாதார் யார், நம்மை தியானித்து, உமது திருவடி வாரத்தில் வந்து, தன்னைக் காப்பாற்றும்படிப் பிரார்த்திக்கிறானே, இதையே வியாஜமாகக் கொண்டு அனுக்ரஹித்துக் காப்பாற்றுங்கள்'' என்று பிரானிடம் சிபாரிசு செய்கிறாள். இதைக் கருதிப் பிராட்டியை 'புருஷகாரம்' என்பர்.

ஸித்தோபாயமான எம்பெருமான் இத்தகையன், இவ்வியல்பினன் என்று உபாய ஸ்வரூபத்தை மஹாபாரதம் விளக்குகிறது. புருஷகாரமான பிராட்டியின் ஸ்வரூபத்தை ராமாயணம் விளக்குகிறது என்பர் பூர்வர்கள். எனவே ராமாயணத்தில் பிராட்டியின் முக்கியத்துவம் அறியப்படுகிறது. இதை மனதில் கொண்டு பூர்வாசார்யர்கள் ''ராமாயணத்தில் சிறையிருந்தவள் (ஸீதையின்) ஏற்றம் என்றும், மஹாபாரதத்தில் தூது சென்றவனின் (கண்ணனின்) ஏற்றம்'' என்றும் பகர்வர்.

ஆக எப்படிப் பார்த்தாலும் ராமாயணம் ஸீதையின் சரித்திரத்தையே பிரதானமாகக் கொண்டு ஸீதாயனமாகவே திகழ்கிறது என்பதில் ஸந்தேஹமே இல்லை.

உலகில் சில பிள்ளைகளுக்குத் தந்தையினிடத்தில் பாசம் மிகுந் திருப்பதைக் காண்கிறோம். ''தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'' எனும், முதுமொழியே இதற்குச் சான்றாகலாம். பிள்ளைகட்கு தாய்ப்பாசமே நிலைத்திருக்கும். குழந்தை பிறப்பதற்கு முன்னரும், பிறந்த பின்னரும் தாய் செய்யும் உதவிக்கு எதுவும் ஈடாகாது. எனவே ''தாயிற் சிறந்தது ஒரு கோயிலும் இல்லை'' என்பர். கல்வியிற் சிறந்து விளங்கும் லவகுசர்கள் தம் தகப்பன் யார் என்பதையும், தந்தை, தாய்க்கு இழைத்த தீங்கையும் முனிவர்கள், முனிவர்களின் பத்தினிமார்கள் ஜாடையாகப் பேசும் பேச்சுக்களினின்றும் ஓரளவு அறிந்திருக்கலாம். எனவே தந்தையைக் காட்டிலும் மிகுதியான தாய்ப்பற்றின் காரணமாகத் தாயைப் பற்றிய இக்காப்பியத்தை மகிழ்ச்சியோடு மனப்பாடம் செய்து விட்டார்கள். பின்னர் ஒத்த குரலுடைய இருவரும் ராமாயணத்தைப் பாடத் தொடங்கினர்.

லவ குசர் வேள்விக்குச் செல்லல்

திருவயோத்தியில் அஸ்வமேத மஹாயாகம் நடக்கிறது. வால்மீகி முனிவருக்கும் அழைப்பு வந்தது. சீடர்களுடன் நகருக்கருகில் நடக்கும் வேள்விக்குப் போக வேண்டும் என ஆசை. ஏன்? பொதுவாக கவிஞர்கட்கு தாம் இயற்றிய மஹாகாவ்யத்தை பிரசாரம் செய்ய வேண்டுமென அவா எழும். நன்கு கற்றுத் தேர்ந்த அறிஞரைக் கொண்டு தம் காப்பியத்திற்கு உரை எழுதுவிக்க முயற்சிப்பது கவிஞர் வழக்கம்.

முற்காலத்தில் மல்லிநாதர் என சிறந்த வித்வான் இருந்தார். அவர் காளிதாஸனின் காவ்யங்களுக்குச் சிறந்த உரை எழுதியுள்ளார். அவரை அணுகி ஒரு கவிஞர் தனது காவியத்திற்கு உரை எழுதும்படி கேட்டதாகவும், அதற்கு அவர் ''மாகே மேகே கதம் வய:'' மாகன் எனும் கவியினால் இயற்றப்பட்ட சிசுபாலவதத்திலும், காளிதாஸனால் இயற்றப்பட்ட மேகஸந்தேசத்திலும் உரை கண்டதில் எனது வயது கழிந்தது என்றாராம்.

சிறந்த அறிஞரால் உரை எழுதப்பட்டால் விரைவில் காவ்யத்திற்கு பிரஸித்தி ஏற்படும். அல்லது அரசவையில் அரங்கேற்றம் செய்யப்பட்டு அவைப் புலவர்களால் பாராட்டப்பட்டு விட்டால், அக்காப்பியம் புகழேணி யில் ஏறி விரைவில் உச்சிக்கு வந்துவிடும். புகழை விரும்பாதார் யார்? அஸ்வமேத மஹா மண்டபத்தில் சக்ரவர்த்தியின் தலைமையில் பன்னாட்டு மன்னர்களும், அறிஞர்களும், புலவர்களும் குழுமியிருப்பர். அங்கு சென்றால் குழந்தைகளின் (லவ குசர்) மூலம் எளிதில் அரங்கேறிவிடும் என எண்ணியவராய் வேள்விக்குச் செல்லத் திட்டமிட்டார். ஆனால் முனிவரின் மனம் தடுக்கிறது. காரணத்தைப் பிராட்டி ஸீதையிடம் சொல்லு கிறார்.

उत्खात लोकत्रय कण्टकेऽपि सत्य प्रतिज्ञेऽपि अविकत्थनेऽपि ।
त्वांप्रत्यकस्मात् कलुषप्रवृत्तौ अस्त्येव मन्युः भरताग्रजेऽपि ॥

உத்காத லோகத்ரய கண்டகேபி ஸத்யபிரதிக்ஞேபி
அவிகத்தனேபி ।
த்வாம்ப்ரதி அகஸ்மாத் கலுஷப்ரவ்ருத்தெள அஸ்திஏவ மன்யுர்
பரதாக்ரஜேபி ॥

காளிதாஸன்

''சக்ரவர்த்தித் திருமகனைப் பற்றி நான் நன்கு அறிவேன். அவர் நல்லோர்கட்குத் தீமையை விளைவிக்கும் தீயோர்களுக்கு, மூவுலகிலும் இடமில்லாதபடி செய்தவர். சொன்னதை சொன்னபடி செய்து காட்டியவர். பெருமைக்குரிய பல பணிகளைச் செய்திருப்பினும் சிறிதும் தற்புகழ்ச்சி

இல்லாதவர். ஆயினும், நிரபராதியான உன்னை, அதிலும் கர்ப்பவதியாக இருக்கும்பொழுது பயங்கரமான இந்தக் காட்டில் விட்டுவிடும்படிச் செய்தாரே! அதை நினைக்கும் போது நான், கோபத்தை அடக்கிய முனிவராக இருப்பினும் எனக்கு அவர் மீது கோபம் பொங்கி எழத்தான் செய்கிறது. நீங்கள் சிறுவயதில் காட்டில் 14 ஆண்டுகள் வாஸம் செய்வதற்கு மந்தரையும், கைகேயியும் காரணமாக இருந்தும், அவர்களைத் தண்டிக்காமல் பெருந் தன்மையோடு நடந்து கொண்ட பரதனுக்கு அண்ணனாயிற்றே! தண்டிக்க வேண்டியவர்களை மன்னித்த பரதனைப் பார்த்தாவது குற்றமற்ற உன்னிடம் பரிவு காட்டியிருக்கக் கூடாதா? இதை நினைக்கும் பொழுது என் மனம் குமுறுகிறது'' என்கிறார்.

ஆனால் ஸீதைக்கோ குழந்தைகளை ராமன் பார்க்க வேண்டும் என விருப்பம். பெற்ற மக்களை உடையவனிடம் சேர்ப்பிக்க வேண்டும். இது தனது கடமை. தான் காட்டில் அவதியுற்றாலும் தன் மக்கள் தகப்பனை இன்னாரென அறிந்து க்ஷேமமாக வாழ வேண்டும். ஒரு ஸாம்ராஜ்யத்தை ஆளும் உரிமை பெற்றவர்கள் பரதேசியாகக் காட்டில் திரியத் தாய்ப்பாசம் இடம் கொடுக்கவில்லை. எனவே முனிவருக்குப் பலவாறாக ஸமாதானம் சொல்லி வேள்விக்குச் செல்லத் தூண்டுகிறாள்.

ஸீதையின் வேண்டு கோளுக்கு இணங்க முனிவரின் மனம் மாறுகிறது. கோபமும் தணிகிறது. ''ஸீதே! நீ சொல்வதும் ஓரளவு உண்மை தான். உனது பிரிவு உனக்கும் ராமனுக்கும் பெருமையைக் கூட்டுகிறது. இன்று ராமன் யாக சாலையில் இருக்கிறான். பத்தினியைப் பிரிந்து யாகம் செய்வதற்கு எவருக்கும் (சக்ரவர்த்தியாயினும்) உரிமை கிடையாது. ''ராஜான: பஹுவல்லபா:'' அரசர்கள் பல மனைவிகளைப் பெறத் தகுதி யுடையவர்கள் என்பது பழமொழி. எனவே யாகம் செய்யும் உரிமையைப் பெறுவதற்காகவாவது ஒருத்தியை மணம் செய்து கொண்டிருக்கலாமே. செய்து கொண்டானா? இல்லையே, உனது இவ்வுருவத்தைப் பிரிந்தானே யொழிய உன்னைப் பிரியவில்லை போலும்.

''நீ ராவணனோடு பேசும் பொழுது'' ஸூர்யனிட மிருந்து எவ்வாறு அதன் ஒளியைப் பிரிக்க முடியாதோ. அதே போன்று ராமனிடமிருந்து என்னைப் பிரிக்க முடியாது'' என்றாயே. அச்சொல் இப்பொழுது என் நினைவுக்கு வருகிறது. அது முற்றிலும் உண்மை. ஒரு ஸமயம் இலங்கையில் நீ தீயில் குதித்துக் குளித்து மாசு மறுவற்றவள் எனப் புடம் போட்டுக் காட்டினாயல்லவா? அதைப் போன்று ராமன் தன் இதயத்தில் கொழுந்து விட்டு மிளிரும் அன்புத் தீயில் உன்னைப் புடம் போட்டுப் பத்தரை மாற்றுத் தங்கமாகத் தங்க ஸீதையாக மிளிரும் உன்னை பக்கத்தில் வைத்துக் கொண்டு அல்லவா யாகம் செய்கிறான்! உண்மையை உணராது கோபப்பட்டேன். நீங்கள் ஆண் கற்பையும், பெண்கற்பையும் உலகினர்க்கு உணர்த்தவன்றோ இச்செயல் புரிந்தீர்கள்! ஆம். நீங்கள் அறிகின்றவர்கட்கு அறியப்படாதவர்

களாயும், அறியாதவர்கட்கு அறியப்படுகின்றவர்களாயும் இருப்பவர்களென உபநிஷத் கூறுவது முற்றிலும் உண்மையென இப்பொழுதுதான் புரிகிறது''.

श्लाघ्यः त्यागोऽपि वैदेह्याः पत्युः प्राग्वंश वासिनः ।
अनन्यजानेः सैवासीत् यस्माज्जाता हिरण्मयी ॥

ச்லாக்ய: த்யாகோபி வைதேஹ்யா: பத்யு: ப்ராக்வம்ச வாஸின: ।
அனன்யஜானே: ஸைவாஸீத் யஸ்மாத் ஜாதா ஹிரண்மயீ ॥

காளிதாஸன், ரகுவம்சம்-15

உடனே வால்மீகி சிஷ்யர்களுடன் யாகத்திற்குப் புறப்பட்டார். ஸீதையும் குசலவர்களை அழைத்துக் கட்டி அணைத்து உச்சி முகந்து முனிவருடன் அனுப்பினாள். வழியில் பல முனிவர்களும் அவர்களின் சீடர்களும் இவர்களோடு சேர்ந்து கொண்டார்கள்.

रसैःशृङ्गार कारुण्य हास्य वीर भयानकैः ।
रौद्रादिभिः च संयुक्तं काव्यमेतदगायताम् ।
रूपलक्षण संपन्नौ मधुर स्वर भाषिणौ ।
बिम्बादिवोत्थितौ बिम्बौ रामदेहात् तथाऽपरौ
तौराजपुत्रौ कात्स्न्र्येन धर्म्यमाख्यानमुत्तमम् ।
वाचोविधेयं तत्सर्वं कृत्वा काव्यमनिन्दितौ ॥
ऋषीणां च द्विजातीनां साधूनां च समागमे ।
यथोपदेशं तत्वज्ञौ जगतुः तौ समागतौ ॥

ரஸை: ச்ருங்கார காருண்ய ஹாஸ்ய வீர பயானகை: ।
ரௌத்ராதிபி: ச ஸம்யுக்தம் காவ்யம் ஏதத் அகாயதாம் ॥
ரூபலக்ஷண ஸம்பந்நௌ மதுரஸ்வர பாஷிணௌ ।
பிம்பாதிவ உத்திதௌ பிம்பௌ ராமதேஹாத் ததாபரௌ ॥
தௌ ராஜபுத்ரௌ கார்த்ஸ்ன்யேன தர்ம்யம் ஆக்யானம் உத்தமம் ।
வாசோவிதேயம் தத்ஸர்வம் க்ருத்வா காவ்யம் அநிந்திதௌ ॥
ரிஷீணாம்ச த்விஜாதீனாம் ஸாதூனாம் ச ஸமாகமே ।
யதோபதேசம் தத்வக்ஞௌ ஜகது: தௌ ஸமாஹிதௌ ॥

வா.ரா. பால. - 4

அனைவரும் காடுகளைக் கடந்தும் வழியிலுள்ள சிற்றாறுகளைத் தாண்டியும் செல்கின்றனர். கூட்டமாகச் சேர்ந்து சென்றால் தான் கொடிய வன விலங்குகளின் தொல்லைகட்கு ஆளாகாமலிருக்கலாம். எனவே, அனைவரும் சேர்ந்தே செல்வதும், சேர்ந்தே இளைப்பாறுவதும், சேர்ந்தே புசிப்பது

மாக வழியைக் கடக்கிறார்கள். குழந்தைகளை யாரும் நேசிப்பார்கள். அக்குழந்தைகளும் பார்வைக்கு அழகாகவும், எடுப்பான உறுப்புக்களுட னும் சிரித்த முகத்துடனும், மிடுக்கான பேச்சுடனும் இருந்துவிட்டால் கூட்டத்திலுள்ளவர்கள் அனைவரும் அவர்களையே பார்ப்பதும், தட்டிக் கொடுப்பதும், கட்டி அணைப்பதுமாக இருப்பது வழக்கம். இங்கு குசலவர் களில் ஒருவரைப் பார்த்தால் மற்றொருவரைப் பார்க்க வேண்டாம். இருவரும் ஒத்த உருவத்தினர். வேஷம்தான் முனிவர்களை ஒத்திருக்கிறது. உருவமோ ராஜ குமாரர்களைப் போன்றது. கவர்ச்சியான பேச்சு, இனியகுரல், பேச்சின் கருத்திற்கேற்ப நடை உடை பாவனைகள், நடிப்பு, ராமனைப் பார்த்திருந்த மஹர்ஷிகளுக்கு ராமனோ, அல்லது ராமபுத்திரர்களோ என வியப்பு. குழந்தைகள் ஒட்டு பொம்மை வாங்கி புத்தகத்தில் ஒட்டுவார்கள். அதே போன்று ராமனில் ஒத்தி எடுத்தவர்களோ என்னும்படியாக இருக்கிறார்கள். சூரியனைச் சிறிதும் மாறுபாடின்றி பிம்பமாகத் தண்ணீரில் பார்ப்பது போன்ற எண்ணம் பெரியோர்கட்கு. வால்மீகியின் சீடர்கள் அல்லவா! நல்ல படிப்பு, வேதங்களைப் போன்று ராமாயணத்தை ஒப்பிக்கும் திறன். நல்ல சாரீரம். இத்தகைய குழந்தைகளைப் பார்த்துவிட்டால் விடுவார்களா! சூழ்ந்து சூழ்ந்து வந்து பாடச் சொல்கிறார்கள். இசை என்றால் மயங்காதார் யார்?

“ஸிஶுர்வேத்தி பஶுர்வேத்தி வேத்தி கானரஸம் பணி.” இசையின் சுவையை, குழந்தைகள், விலங்குகள், ஸர்ப்பம் ஆகியவையும் கேட்டு மயங்கும். இசையின் ஓசையின்பத்திலேயே மயங்கும் என்றால் பொருட் சுவையும் சேர்ந்தால் கேட்கவா வேண்டும்? அதுவும் ராமாயணத்தில் நவரஸங்களும் போட்டியிடுகின்றன. இதை ராமகர்ணாம்ருதம் நன்கு எடுத்துக்காட்டுகிறது.

शृङ्गारं क्षिति नन्दिनी विहरणे, वीरं धनुर्भञ्जने
कारुण्यं बलि भोजने अद्भुतरसं सिन्धौ गिरिस्थापने ।
हास्यं शूर्पणखा मुखेभयमघे, भीभत्समन्यामुखे
रौद्रं रावणमर्दने मुनिजने शान्तं वपुः पातु नः ॥

ச்ருங்காரம் க்ஷிதி நந்தினீ விஹரணே, வீரம் தனுர் பஞ்ஜனே
காருண்யம் பலிபோஜனே, அத்புதரஸம் ஸிந்தௌ கிரிஸ்தாபனே ।
ஹாஸ்யம் சூர்பணகா முகேபயமகே, பீபத்ஸம் அன்யாமுகே
ரௌத்ரம் ராவணமர்தனே முனிஜனே சாந்தம் வபு: பாதுந: ॥

ஸீதா கல்யாணத்திற்குப் பிறகு பன்னிரண்டு வருஷ காலம் ஸீதாராம தம்பதிகள் அயோத்தியில் வாழ்ந்ததையும், பின்னர் காட்டில் மானைப் பின் தொடரும் வரையில் சேர்ந்து வாழ்ந்ததையும் வருணிக்கும் இடங்களில் ஸம்போக ச்ருங்கார ரஸத்தையும், பின்னர் அயோத்தி திரும்பும்வரை பிரிந்து விட்ட இருவரின் துயரங்களைக் கூறும் பகுதியில் வியோக (பிரிவு) ச்ருங்கார

ரஸத்தையும், தனுர்பங்கத்தின் போது வீரரஸத்தையும், சுற்றித் திரிந்து கதியின்றி விழுந்த காகத்தினிடமும், ராமனைப் பிரிந்த தசரதன்படும் துயரத்திலும் கருணாரஸத்தையும், ஸேதுபந்தனத்தின் போதும், விராத கபந்த வ்ருத்தாந்தங்களிலும் அத்புத (ஆச்சர்யம்) ரஸத்தையும், பஞ்சவடியில் சூர்பணகையின் செய்கையில் வயிறு வெடிக்கச் சிரிக்கச் செய்யும் ஹாஸ்ய ரஸத்தையும், பாபம் செய்வதில் பயரஸத்தையும், தாடகை மற்றும் அசோக வனத்தில் ஸீதையைச் சுற்றியுள்ள அரக்கிகள், இவர்கள் வர்ணனையில் பீபத்ஸ ரஸமும், ராவண ஸம்ஹாரத்தில் ரௌத்ரரஸமும், தண்டகாரண்ய ரிஷிகள் வர்ணனையில் சாந்திரஸத்தையும் கேட்டு அனுபவிக்கிறோம். இவ்வாறு நவரஸம் பொருந்திய ராமாயணத்தை லவகுசர்கள் பாடும்போது வீர முழக்கமும், ஹாஸ்யமும், கருணையும், வீரமும், ரௌத்ரமும், சாந்தியும் முகத்திலும், சொல்லிலும், செயலிலும் (நடிப்பு) வெளிப்படும்படி சிரித்தும், அழுதும், மகிழ்ந்தும், தளர்ந்தும், ஏங்கியும் பாடியதைக் கேட்டு அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதத்தனர்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு ஸ்ரீ பராசரபட்டர் உரையிட்டிருக் கிறார். அதில் 390-வது திருநாமத்தின் பாஷ்யத்தில் ''அத ம்ருத ஸஞ்ஜீவனம் ராம சரிதம்'' இனி ம்ருதஸஞ்ஜீவனமான (இறந்தோரையும் உயிர்ப்பிக்கின்ற) ராம வ்ருத்தாந்தம் பேசப்படுகிறது என்று மேலேவரும் ராமனின் திருநாமங் களுக்கு அவதாரிகை கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இறந்தோரையும் பிழைப்பிக்கவல்ல ராமாயணத்தைக் கேட்டதினால் முனிவர்களும், அவர் தம் குமாரர்களும், மற்றோரும் நடையினால் ஏற்படும் களைப்பும், பசியும், தாகமுமின்றி ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைத்தனர். ஆனந்தக் கண்ணீர் மல்க, ''ஆஹா! குழந்தைகளின் குரலிலே என்ன இனிமை! ஶ்லோகங்களிலே கேட்ட அளவில் ரஸிக்கக் கூடிய சொல்லாட்சியும் கருத்தாழமும் எத்தகை யவை! கேட்ட அளவிலே நம்மையும் கதாபாத்திரங்களோடு அழைத்துச் செல்லும் நாவன்மையை என்ன என்போம்! மெய் சிலிர்க்கச் செய்து நம்மை மெய் மறக்கச் செய்யும் இக்கதையை என்றும் கேட்டுக் கொண்டே இருக்கலாமே! இவ்வழகிய கதையை நாவன்மை படைத்த இக்குழந்தை களின் வாயிலாகக் கேட்க என்ன பாக்யம் செய்தோம்? புலன்களை அடக்கி, பசிதாகங்களை ஒழித்து, மூச்சடக்கி எந்தப் பரமனை நினைத்து நினைத்து அகக் கண்களால் கண்டுகளிக்க ஆசைப்பட்டுப் பல்லாண்டுகளாகத் தவ மியற்றி வந்தோமோ அத்தவப் பயனாம் பரமனை நம் புறக்கண் முன்னே நிறுத்திவிட்டார்களே இச்சிறுவர்கள்! இவர்கட்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்?''

साधु साध्विति ता ऊचुः परं विस्मयमागताः ।
अहो गीतस्य माधुर्यं श्लोकानां च विशेषतः ।
चिरनिर्वृत्तमपि एतत् प्रत्यक्षमिव दर्शितम् ॥

एवं प्रशस्यमानौ तौ तपश्श्लाघ्यैर्महात्मभिः ।
संरक्ततरमत्यर्थं मधुरं तौ अगायताम् ॥
प्रीतः कश्चिन्मुनिस्ताभ्यां संस्थितः कलशं ददौ ।
प्रसन्नो वल्कले कश्चित् ददौ ताभ्यां महायशाः ॥

ஸாது ஸாதுஇதி தாஊசு: பரம் விஸ்மயம் ஆகதா: ॥
அஹோ கீதஸ்ய மாதுர்யம் ஶ்லோகானாம் ச விசேஷத: ।
சிரநிர்வ்ருத்தமபி ஏதத் ப்ரத்யக்ஷமிவ தர்ஶிதம் ॥
ஏவம் ப்ரஶஸ்யமானௌ தௌ தபஶ் ஶ்லாக்யைர் மஹாத்மபி: ।
ஸம்ரக்த தரம் அத்யர்த்தம் மதுரம் தௌ அகாயதாம் ॥
ப்ரீத: கஶ்சித்முனி: தாப்யாம் ஸம்ஸ்தித: கலஶம் ததௌ ।
ப்ரஸன்னோ வல்கலே கஶ்சித் ததௌ தாப்யாம் மஹாயஶா: ॥

வா.ரா. பால. - 4

மஹர்ஷிகள், பல்லோரால் பாராட்டப்படுமளவுக்குக் கடுந்தவம் புரிந்தவர்கள். சிறுவர்களையும் குணம் கண்டு புகழும் தன்மை உடையவர்கள். பிறர் உயர்வு கண்டும் சிறிதும் பொறாமைப்படாதவர்கள். இசை நுட்பத்தையும் சொல்லமைப்பையும் தத்துவங்களையும் நன்கு உணர்ந்தவர்கள். இத்தகைய சான்றோர்களின் பாராட்டு வெறும் பாராட்டாக அமையாமல் உள்ளுணர்வோடு செய்யும் வாழ்த்தாக அமைந்தது எனலாம். பொதுவாக பிறர் பாராட்டப் பாராட்ட உத்ஸாஹம் மிகும். உத்ஸாஹம் மிகமிக, எடுத்த பணியைத் திறம்படச் செய்வார்கள். இங்கே லவகுசர்களுக்கோ பெரியோர்களின் பாராட்டினால் ஏற்பட்ட உத்ஸாஹத்தோடு வாழ்த்தும் போட்டியிட குசலவர்களின் கானம் குசல கானமாய் மெருகு கொடுத்தது. கூட்டத்திலிருந்த முனிவர் ஒருவர் தமது மகிழ்ச்சியை வெளியிட எழுந்து சென்று தன் கையிலிருந்த குடத்தைப் பரிசாக அளித்தார். மற்றொருவர் இரண்டு வல்கலங்களைக் (மரஉரி) கொடுத்தார். பின்னர் கேட்பானேன்? பரிசில்கள் வந்து குவியத் தொடங்கின. மான்தோல், பூணூல், கமண்டலு, முஞ்சப் புல்லினாலான ஒட்டியாணம், கௌபீனம், கிழங்குகளை வெட்ட உதவும் களைக்கொட்டு, விறகுவெட்டி, சிறிய கோடரி, விறகுகளைக் கட்டி வரக் கயிறு, விறகுக்கட்டு போன்ற முனிவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைப் பரிசாக வழங்கினர். ஒரு கிழவருக்குப் பரிசாக நிறைய ஏதாவது கொடுக்க வேண்டுமென்று ஆசை. உணர்ச்சியும், ப்ரீதியும் தள்ள விரைந்து குழந்தைகளிடம் சென்றார். கையிலோ ஒரு பொருளும் இல்லை. இவர் ஏன் அங்கு செல்கிறார் எனும் கேள்விக்குறி எல்லோர் முகத்திலும். அருகிற் சென்றதும் உச்சி முகர்ந்து, கைகளை அவர்கள் கன்னத்தில் வழித்துச் சொடுக்கி ''குழந்தைகளா! நீங்க க்ஷேமமா மஹாராஜனா இருக்கணும். பெரிய பெரிய ராஜ ஸபையிலே ராமாயணம் பாடணும்'' என வாழ்த்தினார்.

ராம கானம்

வால்மீகி முனிவரும் லவகுசர்களும் அயோத்திக்கு அருகில் யாகசாலை இருக்குமிடத்திற்குச் சென்றனர். முனிவர்கட்காகப் பர்ண சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு குடிசையில் வால்மீகி தங்கினார். மறுநாள் காலையில் லவகுசர் இருவரும் ஸமிதாதானம் செய்துவிட்டுக் கிளம்பினர். முனிவர் அவர்கட்கு ''நான் கற்பித்தபடி, பிழையறப் பாடுங்கள். நாமோ கனி கிழங்குகளைச் சாப்பிடுபவர்கள். நமக்கு தனம் தேவையில்லை. எனவே பணத்தில் ஆசை கொள்ளாதீர்கள். ஒரு வேளை ராம ராஜாவே உங்களைப் பார்த்துவிட்டு, ''நீங்கள் யாருடைய பிள்ளைகள்?'' என்று கேட்டால்; ''வால்மீகி முனிவருடைய சிஷ்யர்கள் என்று கூறுங்கள்'' என்று அறிவுரை கூறி அனுப்பினார்.

यदि पृच्छेत्सकाकुत्स्थः युवां कस्येति दारकौ ।
वाल्मीके रथशिष्यौ द्वौ ब्रूतमेवं नराधिपम् ॥।

யதி ப்ருச்சேத்ஸ காகுத்ஸ்த: யுவாம் கஸ்பேதி தாரகௌ
வால்மீகே: அதசிஷ்யௌ த்வௌ ப்ரூதம் ஏவம் நராதிபம்

பவபூதி, உத்தர ராமசரித்ரம் - 93

प्रशस्यमानौ सर्वत्र कदाचित्तत्र गायकौ ।
रथ्यासु राजमार्गेषु ददर्श भरताग्रजः ॥

ப்ரஶஸ்ய மானௌ ஸர்வத்ர கதாசித் தத்ர காயகௌ ।
ரத்யாஸு ராஜமார்கேஷு ததர்ச பரதாக்ரஜ: ॥

வா. ரா. பால. - 4

இருவரும் பாடிக் கொண்டே புறப்பட்டனர். கேட்பவர்கள் இவர்களைப் பாராட்டிக் கொண்டே கூடச் சென்றனர். அரசர்கள் தங்கியிருக்கும் இடம் நெருங்கிற்று. பரதனும் ராமனும் இவர்களைப் பார்த்தனர். அஶ்வமேத மஹா மண்டபத்திற்கு இவர்களை அழைத்துச் சென்ற ஸ்ரீராமன் அங்குக் குழுமியிருப்பவர்களிடம் இவர்களை அறிமுகப்படுத்திப் பேசி ஆயிற்று.

इमौ मुनी पार्थिव लक्षणान्वितौ
कुशीलवौ चैवमहातपस्विनौ ।
ममाऽपि तद्भूतिकरं प्रवक्ष्यते
महानुभावं चरितं निबोधत ॥

இமௌ முனீ பார்த்திவ லக்ஷணான்விதௌ
குசீலவௌ சைவ மஹாதபஸ்விநௌ ।
மமாபி தத்பூதிகரம் ப்ரவக்ஷ்யதே
மஹானுபாவம் சரிதம் நிபோதத ॥

வா. ரா. பால. - 4

''சபையோர்களே! இம்முனிவர்களைப் பாருங்கள். பார்ப்பதற்கு முனிவர் வேடம். ஆனால் அரசர்கட்குரிய லக்ஷணங்கள் நம்மை மயக்கு கின்றன. முழங்கால் வரை நீண்ட கைகள், எடுப்பான தோள்கள், அகன்ற மார்பு, மக்களைக் கவரும் முக அமைப்பு, கண்களில் கூரிய பார்வை, ஏன்? க்ஷத்திரியர்கட்குரிய ஸாமுத்ரிகா லக்ஷணங்கள் நிறைந்துள்ளன. அவர்கள் முகத்தில் தவழும் ப்ரஹ்மதேஜஸ்ஸைப் பாருங்கள். மஹாதபஸ்விகளாய்க் காண்கின்றனர். ஆனால் அவர்கள் இசையைக் கேட்கும்போது என்னே அவர்களின் இசையறிவு! என்னே அவர்கள் சாரீரம்! என்ன லாகவமாகப் பாடுகிறார்கள். நம் ஆஸ்தான இசை வல்லுனர்களே கேட்டுக் கேட்டுப் பரவஶமாகிறார்களே! பல்லாண்டுகள் பாடிப்பாடி தேர்ச்சி பெற்றவர்கள் என ஊஹிக்கவும் இடமில்லை. பால்வடியும் வதனம், பேச்சில் மழலை, மேனியில் இளமை, என்ன தவம் செய்தனரோ? என்ன வரம் பெற்றனரோ? என்ன ஆச்சரியம் பாருங்கள். இவர்கள் கானம் என்னையே கவர்ந்து தன்பால் ஈர்க்கிறதே! வீதியில் கேட்டதிலிருந்து இவர்கள் இசையைக் கேட்காவிட்டால் மனம் இருப்புக் கொள்ளவில்லையே. உபயவிபூதி நாயகனாய் பல்வேறு ஐஶ்வர்யங்களைப் பெற்றிருந்தும், எல்லா ஐஶ்வர்யங்களையும் இழந்தது போன்ற உணர்ச்சி என் மனதை வாட்டுகிறதே! இவர்களால் பாடப்படும் சரித்திரமோ பாவனமானது. கேட்கக் கேட்க அனைத்து நலன்களும் நமக்குத் திரண்டு வருவதுபோல் தோன்றுகிறதே! நீங்களும் கேட்டால் எல்லா நலன்களையும் பெறலாமே என இங்கு அழைத்து வந்தேன். ஆம். உண்மை, ஸீதையின் சரித்திரத்தையன்றோ பாடுகிறார்கள்.'' ஸீதையைப் பிரிந்த நாயகனுக்கு ப்ரியையின் பிரிவாற்றாமையால் நேர்ந்த தாபங்கள் அகன்று மகிழ்ச்சி மனதில் பொங்கி வழிகிறது. மக்களுக்கோ பிராட்டியின் சரித்திரத்தைக் கேட்பதனால் அவள் கடாக்ஷம் ஏற்பட்டுச் செல்வங்கள் குவியப் போட்டியிடுகின்றன.

यस्यां यस्यां दिशिविहरते देवि दृष्टिस्त्वदीया ।
तस्यां तस्यां अहमहमिकां तन्वते सम्पदोघा:

யஸ்யாம் யஸ்யாம் திசிவிஹரதே தேவி! த்ருஷ்டி: த்வதீயா
தஸ்யாம் தஸ்யாம் அஹமஹமிகாம் தன்வதே ஸம்பதோகா:

ஸ்வாமிதேசிகன், ஸ்ரீஸ்துதி - 15

நாமிருக்கும் திசையில் லக்ஷ்மீகடாக்ஷம் விழுமாகில் அங்குள்ளவர்களின் அனைத்தில்லத்திலும் செல்வங்கள் நான் முன்னே, நான் முன்னே என போட்டியிட்டு வருமாம்.

இவ்வாறு ராமன் கூறுவதற்கு முன்னரே அயோத்தி மக்கள் குசலவ கானத்தைக் கேட்பதற்காகவே அவையில் குழுமியிருக்கிறார்கள். இவர்களுள் சிலர், முன்னரே, முதல் நாளே அவர்கள் வரும் பொழுதே கானத்தை கேட்டவர்கள். பெரும்பாலோர் கேட்டவர்களின் சொல்லைக் கேட்டுக் குழுமியவர்கள். ஏன் அவர்களின் பேச்சு, அவர்களின் இசை அத்தகையது. ஆம் உயர்ந்த பேச்சு, உயர்ந்த இசையின் தன்மையே (இலக்கணமே) அதுதானே!

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். குறள் - 643

ஒருவர் பேச்சு, வழுவின்றியும், சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாயும் விழுப்பயன் தருவதோடு இனிதாகவும் இருக்க வேண்டும். ஒரு தடவை கேட்டவர்களை ஒதுங்கவிடாமல் பிணித்து தன்பால் ஈர்க்கும் தன்மையதாக இருக்க வேண்டும். கேளாதாரும், கேட்டவர்களின் மூலம் அறிந்து விரும்பித் தாங்களே வந்து கேட்கும்படியாக இருக்க வேண்டும். லவகுசர்களின் பேச்சும் இசையும் அத்தகையது.

ஸங்கீத வல்லுனர்களோ, தேர்ந்த சொற்பொழிவாளர்களோ அழகாகப் பாடிப் பேசி முதலில் அவையினரைத் தம்பால் ஈர்த்துக் கொண்டால்தான் கச்சேரி களை கட்டும். குசலவர்கட்கோ தொடங்குவதற்கு முன்னரே சபை பரவசமாயிற்று. இந்நிலை அமைந்தது அவர்கள் அதிருஷ்டம்தானே. இனிக் கச்சேரியைக் கேட்போம்.

அஶ்வமேத மஹா மண்டபம், யாகத்திற்காகப் புதிதாக அமைக்கப் பட்டது. எத்தனை பேர் திரண்டு வந்தாலும் அமர்வதற்கு இடம் உண்டு. நாட்டு மக்களால் மண்டபம் நிரம்பி வழிகிறது. நிஶப்தம் (ஓசையின்மை) நிலவுகிறது. பாடப்போகும் ராமாயணத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் போது ''மஹானுபாவம் சரிதம் நிபோதத'' என்றார். இங்கு ராமன் வாயிலாக ராமாயணத்தின் ஏற்றத்தை அறிகிறோம். உலகில் பெருந்தன்மையுடன் சிறு பிழைகளைப் பொருட்படுத்தாது பிறருக்கு உதவும் சான்றோர்களை மஹானுபாவர் என்பர். இங்கு கதாநாயகனும் நாயகியும் அத்தகையர். விபீஷணன், ராகவம் சரணம் கத: என்று வந்த பொழுது வானரர்கள் பல குற்றங்களைக் கூறித் தடுப்பினும் ''தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாம் ஏதத் அகர்ஹிதம்'' ஒரு வேளை விபீஷணனிடம் குற்றங்கள் இருப்பினும் பெரியோர்கள் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள் என்று கூறி அவனுக்கு வாழ்வளித்தவன் ராமன். கதாநாயகியோ தன்னை அல்லும் பகலும் இடைவிடாது துன்புறுத்தி வந்த அரக்கிகளை அனுமன் மாய்க்க எண்ணி அனுமதி கேட்டபோது ''நகஶ்சித் நாபராத்யதி''— உலகில் குற்றம் புரியாதார் யார்?

இவர்களை தண்டிப்பதாயின் உன்னையும் தண்டிக்க வேண்டி வருமே! எனும் கருத்துப்படக் கூறி அரக்கிகளையே காப்பாற்றினாள். இது மட்டுமா? இராவணன் சிறையில் தவிக்கும் கற்பரசிகளான தேவ மாதர்களைக் காக்கும் பொருட்டுத் தானே தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டாள். இத்தகையவர் களை நாயக நாயகியாகக் கொண்ட சரித்திரமும் மஹானுபாவமானது என்றார். இந்த ராமானுக்ரஹத்தினால் தான் ராமாயண பாராயணமும் அதைக் கேட்பதும் நமக்கு எல்லாப் பயன்களையும் நல்கி வருகிறது.

வென்றிசேர் இலங்கையானை வென்ற மால்வீரம் ஓத
நின்ற, ராமாயணத்தின் நிகழ்ந்திடு கதைகள் தம்மில்
ஒன்றினைப் படித்தோர் தாமும், உரைத்திடக் கேட்டோர் தாமும்
நன்று இது என்றோர் தாமும் நரகமது எய்திடாரே.

க.ரா.பால. - காப்பு

ராமாயணத்தில் வரும் ஏதாவதொரு கதையைப் படித்தோரும், பிறர் கூறக்கேட்டோரும், இக்கதை நல்லது எனப் பாராட்டுகின்றவர்களும் நரகத்தை (எவ்விதத் தீமைகளையும்) அடையார், நன்மைகளையே பெறுவர் என்பதை இச்செய்யுளும் விளக்கும்.

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடுஇயல் வழியது ஆக்கும் வேரிஅம் கமலைநோக்கும்.

க.ரா.பால. - நூற்பயன்

ராமாயண பாராயணம், வேண்டும் பொருளையும் தெளிவான அறிவையும், புகழையும், பேரின்பப் பேற்றினையும், இவற்றைப் பெறு வதற்குக் காரணமான லக்ஷ்மீ (ஸீதா) கடாக்ஷத்தையும் அளிக்குமென்பர். வால்மீகி மாமுனிவரும் இவ்வாதி காவ்யத்தின் பூர்த்தியில்

आयुष्यं आरोग्यकरं यशस्यं
सौभ्रातृकं बुद्धिकरं शुभं च ।
श्रोतव्यमेतत् नियमेन सद्भिः
आख्यानं ओजस्करं ऋद्धिकामैः ॥

ஆயுஷ்யம் ஆரோக்யகரம் யஶஸ்யம்
ஸௌப்ராத்ருகம் புத்திகரம் ஶுபம் ச ।
ஶ்ரோதவ்யம் ஏதத் நியமேன ஸத்பி:
ஆக்யானம் ஓஜஸ்கரம் ருத்திகாமை: ॥

வா. ரா. யுத்த. - 127

இவ்வுலகில் பிறப்பை எய்தியவர்களுள் இங்குள்ள வரை வளமான வாழ்வைப் பெற்று வாழ வேண்டும் என விரும்பாதார் எவருமிலர். எனவே

அனைவரும் இக் கதையைக் கட்டாயமாகக் கேட்டேயாக வேண்டும் என முனிவர் நமக்குக் கட்டளையிடுகிறார். அப்படிக் கேட்பவர்கள் நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும், புகழையும், ஸஹோதர ஒற்றுமையையும், நன்மைகட்கு வித்தான அறிவையும், குன்றாத குடும்ப பரம்பரையையும், தனதான்ய செல்வச் செழிப்பையும், பெண்ணின் நலத்தையும் பெற்று வாழ்வார்கள் எனத் தம் தவவலிமையினால் அனுக்ரஹிக்கிறார். மேலும் பேரின்ப வாழ்வை நாடுகின்றவர்கட்கு மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் இது நல்கும்.

இத்தகைய கைமேல் பலன் கொடுக்கும் ஸ்ரீமத் ராமாயணத்தைக் குசலவர்கள் பாடத் தொடங்கி விட்டனர். தம் நாட்டையும் தம் பேரரசினையும், தம்மோடு கலந்து பழகிய, சக்ரவர்த்தித் திருமகனையும் பற்றிப் பாடும் போது யார் தான் மகிழ்ந்து மயங்க மாட்டார்கள். தன்னைப் பற்றியே பாடினால் கேட்கவும் வேண்டுமோ?

''ஸ்தவ்ய: ஸ்தவப்ரிய:'' *(ஸஹஸ்ரநாம 73)* துதிப்பதற்கு உரியனாய் பிறர் துதிப்பதைக் கேட்டு மகிழும் பரப்ரஹ்மம் அல்லவா ராமன், அவன் அரியணையில் வீற்றிருந்தவாறே கேட்டு மகிழ்கிறான்.

वृत्तं रामस्य वाल्मीकेः कृतिः तौ किन्नर स्वनौ ।
किंतद्येन मनः हर्तुं अलं स्यातां न शृण्वतां ॥

வ்ருத்தம் ராமஸ்ய, வால்மீகே: க்ருதி: தௌ கிந்நர ஸ்வனௌ ।
கிம்தத்யேன மன: ஹர்தும் அலம் ஸ்யாதாம்ந க்ருண்வதாம் ॥

காளிதாஸன், ரகுவம்சம் - 15.64

சரித்திரமோ அழகன் ராமனுடையது. ஸாஹித்யமோ வால்மீகியினுடையது. பாடுகின்றவர்களோ இந்திர ஸபையிலுள்ள கின்னரர்களைப் போன்ற கண்டம்—குரல் உடையவர்கள். இவ்வாறு மூவகை உயர்வினைப் பெற்றிருக்கையில் கேட்போரின் மனதைக் கவர வேறு என்ன வேண்டும்?

तद्गीत श्रवणैकाग्रा संसद् अश्रुमुखी बभौ ।
हिमनिष्यन्दिनी प्रातः निवातेव वनस्थली ॥

தத்கீத ஶ்ரவணைகாக்ரா: ஸம்ஸத் அஶ்ருமுகீ பபௌ ।
ஹிம நிஷ்யந்தினீ ப்ராத: நிவாதேவ வனஸ்தலீ ॥

ரகுவம்சம் - 15.65

ராம சரித கீர்த்தனையைக் கேட்பதிலேயே முழுமையாக மனதைச் செலுத்திய சபையினரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர், முத்துக்கள் போன்று தளும்பி நிற்கிறது. கவிஞனுக்கு இதைக் கண்டதும் காடு நினைவுக்கு வருகிறது. பனிக்காலத்தில் காட்டிலுள்ள மரஞ்செடி கொடிகளில் பனி நிரம்பி நிற்கும், விடியற்காலையில் இலைகளின் நுனிகளில் முத்து முத்தாகக்

காட்சி அளிக்கும். காற்று இல்லாததினால் கிளைகளில் அசைவு ஏற்பட வில்லை. அசைவின்மையால் பனித்துளி கீழே விழாமல் காட்சியளிக்கும். இவ்வழகிய காட்சியை இச்சபையில் காண்கிறான் காளிதாஸன். காலை வேளையில் காற்றின்மையினால் அசையாத மரங்கள் போன்று சபையினர் பாடகர்களின் அழகிய உருவ அமைப்பில் கண்களையும், இசையில் காதுகளையும் பறிகொடுத்து மனம் ஒன்றிய நிலையில் அசையா மரங்கள் போன்றிருக்கிறார்களாம். இங்கு ஆனந்தக் கண்ணீரை குளிர்ந்த பனித் துளிக்கு ஒப்பிடுகிறான். (துக்கக் கண்ணீராயின் சுடும்.)

இந்நிலையில் ஆதிகவி, ராமனைப் பார்க்கிறார். ஸிம்ஹாஸனத்தில் இராமனைக் காணவில்லை. தேடிக் கண்டு பிடித்து மகிழ்ச்சி பொங்கக் காரணத்துடன் நமக்கு விளக்குகிறார்.

स चापि रामः परिषद्गतः शनैः । बुभूषयासक्तमनाः बभूवह ॥

ஸசாபி ராம: பரிஷத்கத: ஶனை: । புபூஷயா ஸக்த மனா: பபூவஹ ॥

வா.ரா. பால. - 4

அவைத் தலைவராய் ஸிம்ஹாஸனத்திலேயே அமர்ந்து கதையைக் கேட்க வேண்டியிருக்க மெள்ள மெள்ள அரியணையினின்றும் இறங்கி அவையினரோடு தாமும் ஒருவராக அமர்ந்து கதையை மகிழ்ச்சியோடு கேட்டு அனுபவித்தாராம் ராமன். ''ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத'' ஒருவனாக உயரிய இனிய பொருளை அனுபவிக்காதே (சாப்பிடாதே) என்பர் பெரியோர். மிக மிக உயர்ந்த பொருளாயினும் தனித்துத் துய்ப்பதில் ஆனந்தம் குறைவுதான். இது அனுபவத்தில் அவரவர் அறிந்த உண்மை. மேடை மீது பல படிக் கட்டுகளைக் கடந்து அமரும் ஆஸனம் உயரே இருப்பதால் தம் மக்களைப் பிரிந்த நிலையில் ஆனந்தானுபவம் குறைவுபடத்தான் செய்யும். அருகில் அமரவேண்டிய ஸீதையோ காட்டில். மெள்ள மெள்ள இறங்கா விடில், யாராவது ஒருவன் பார்த்துவிட்டால், மரியாதை காட்டுமுகமாக அவையே எழுந்து நிற்கும். ஒலிபெருக்கியில் கேட்பதற்கும், அருகில் அமர்ந்து கேட்பதற்கும் அனுபவத்தில் வேற்றுமை இருக்கத்தானே செய்கிறது!

ஸீதையின் பிரிவாற்றாமையினால் துன்புறும் ராமனுக்குத் தொலை வில் அமர்ந்து கேட்பதில் மனம் இருப்புக் கொள்ளவில்லை, எனவே கதையைக் கேட்பதினால் ஏற்படும் இன்ப நுகர்ச்சியினால் தன்னையே தாம் அறியாது மக்களோடு மக்களாய் அமர்ந்து கேட்டானாம். மக்களின் கண் களையும் மனதையும் குசலவர்கள் கவர்ந்து விட்டபடியால் எவரும் ராமனைப் பார்க்கவில்லை போலும்!

இங்கு ஸிம்ஹாஸனம் சூன்யமாக இருப்பதை யாராவது பார்த்து ராமனைத் தேட முற்படலாமே எனக் கேள்வி எழலாம். ஆனால் மக்கள் நுகர்வது செவிச் செல்வம், இது மிக உயரிய செல்வமாகும் எனவேதான் குறளாசிரியர் சொல்கிறார் :

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. குறள் - 411

இதுதான் மிக உயர்ந்தது எனக் காட்டும் முகமாக கேள்விச் செல்வத்தைச் சிறு குறளில் செல்வம், செல்வம், என ஐந்து தடவை கூறி இதுவே தலையாய செல்வம் என்கிறார். இவ்வளவு உயர்ந்த செல்வத்தைத் துய்ப்பதில் காதுகள் ஈடுபடும் போது கண்கள் ஏன்? மற்றப் புலன்களும் கூட தம் ஆற்றலை இழந்துவிடும். பசி தாகம் எதுவும் தெரியாது.

செவிக்கு உணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். குறள் - 412

''அஹோ கீதஸ்ய மாதுர்யம்'', ''பாட்யே கேயேச மதுரம்'', ''தந்த்ரீலய ஸமன்விதம்'' என்றபடி உயர்ந்த கதையைக் கேட்கும் போது கண் பார்க்காது, மூக்கு நுகராது, நாக்கு சுவையை அறியாது, உடல் உற்றது அறியாது. எனவே ராமன் இறங்கி மக்களோடு மக்களாக அமர்ந்ததை யாரும் பார்க்கவில்லை.

இக்கருத்தை ஈடு விளக்குவதை அதன் சொற்களாலேயே அனுபவித்து மகிழ்வோம். (திருவாய்மொழி 6-2-6 ஈடு, சக்ரவர்த்தித் திருமகன்) ''பேரறிவாளரான வித்வஜ் ஜனங்களும் தாமுமாகப் பேரோலக்க மிருந்து பிள்ளைகளைப் பாடவிட்டுத் தாம் ஸிம்ஹாஸனத்தராய் இருந்தார். இவர்கள் தாழ இருக்கத் தாம் உயரத்திலிருந்தவிடம் தமக்கு அனபிமதமாகையாலே ஸிம்ஹாஸனத்தினின்றும் மெள்ள இழிந்து, தெரியாதபடி இவர்கள் நடுவே புகுந்திருந்தார். அது என் என்னில்; ராஜா எழுந்திருந்தால் ஓலக்கம் (ஸபை) கிளம்புமிறே. தாம் எழுந்திருந்தவாறே ஓலக்கம் கிளம்புகிறதாகக் கருதி, மெள்ளப் புகுந்திருந்தார் என்கிறது. இங்ஙனம் வேண்டுவான் என்னென்னில் (1) அனுபுபூஷயா என்னுதல், (2) பவிதும் இச்சயா என்னுதல், (3) இவர்களோடே கூடியிருந்து அனுபவிக்கைக்காக என்னுதல், (4) தாம் உளராகைக்காக என்னுதல்''

(உளராகையாவது ஸீதையின் பிரிவினால் ஆத்மா தரிக்க மாட்டாத நிலைமாறி அவள் கதையைக் கேட்பதினால் ஓரளவு தரிக்கும் நிலையைப் பெறுவதாம்).

இங்கு முனிவர் ''பபூவஹ'' ''ஹ'' எனும் சொல்லால் கதாநாயகனே தாம் இயற்றியதைக் கேட்டு மகிழ்கிறாரே! என்று தன் வியப்பை வெளியிடுகிறார்.

இங்கு இராமனே ராமாயணத்தைக் கேட்பதினால் மாத்திரம் மகிழ்ச்சி இல்லை முனிவருக்கு. அயோத்தி மக்கள் அனைவருமே ஆனந்த பூர்ணர்களாய் சிரக்கம்பம் செய்து மகிழ்ந்ததையும் காட்டுகிறார், ''ஹ'' என்று, தலையை ஆட்டுதலில் இருவகை உண்டு. ஒன்று இரண்டு தோள்களின்

பக்கமாகத் தலையை ஆட்டுவது, இது அடங்காத மகிழ்ச்சியைத் தெரிவிக்கும். மற்றொன்று - முன்னும் பின்னும் ஆட்டுவது. இக் கதையைக் கேட்க அமர்ந்தவர்கள் தூக்கத்தினால் ஆடும் போது பார்த்து அறியலாம். குசலவ கானத்தின் போது தேவர்கள் கூட தாம் இருந்த இடத்திலிருந்தே கேட்டுத் தலையை அசைத்து மகிழ்ந்தார்களாம், தேவர்களிலும் ஒருவன் மாத்திரம் தலையை அசைக்காமல் இருந்தானாம். அவன் யார் தெரியுமா? அவன் தான் ஆதிசேஷன். அவனோ பூமியைத் தாங்குபவன், அவன் தலையை அசைத்தால் பூகம்பம் அல்லவா ஏற்படும்! மேலும் அவன் கட்செவியன், கண்களையே காதுகளாகக் கொண்டவன். பார்க்கும் போது கேட்க முடியாது, கேட்கும் போது பார்க்க முடியாது. அச் சமயம் சேஷன் எதையாவது பார்த்துக் கொண்டிருக்கலாமல்லவா? அல்லது காதால் கதை கேட்பவர்கட்குத் தானே தலை ஆடும், அவனோ கண்களால் அல்லவா கேட்கிறான்!

அயோத்தி மக்களைப் பற்றி முனிவர் கூறும்பொழுது நமக்கு ஓர் ஐயம் ஏற்படுகிறது. அவர்கட்கு மாத்திரம் ஏன் தூக்கம் வரவில்லை? நல்ல காற்று, சொகுசான படுக்கை, ஓசையற்ற இடம், இவ்வாறு சௌகரியமாகப் படுத்தாலும் நமக்குத் தூக்கம் வர மறுக்கிறது. ஆனால் ராமாயண கதை கேட்கச் சென்றால் அங்குள்ளவர்கள் நம் மீது தூங்கி விழுகிறார்கள். அப்படித் தூக்கம் வருகிறதே, ஏன்? அப்படியா! சொல்கிறேன் கேளுங்கள், அஸ்வமேத மஹா மண்டபத்தில் ராம கதையைக் கேட்டுக் கொண்டு அனைவரும் இன்புற்றிருக்க ஒருத்தி மாத்திரம் நதிக் கரைக்குச் சென்று தேம்பி தேம்பி அழுது கொண்டிருந்தாளாம். இதைச் சாரன் (உளவு அறிபவன்) மூலம் ராமன் அறிந்தானாம். கதை முடிந்ததும் நேராக நதிக் கரைக்குச் சென்று தேடினான். அங்கு பெண் அழுது கொண்டிருந்ததைப் பார்த்து விசாரித்தான். ''ஏனம்மா! அழுகிறாய்?'' ''நான் நல்லதொரு ஆச்ரயத்தைப் பெற்றிருந்தேன். நான் யாரைப் புகலாகப் பெற்றிருந்தேனோ, அவனைத் தான் தாங்கள் கொன்று விட்டீர்கள். அனாதையான நான் அழாமல் என்ன செய்வது?''

ராமன்: அப்படி யாரைக் கொன்றேன்! நினைவில்லையே. நீ யார்?

அவள்: நான் தான் நித்ராதேவி, கும்பகர்ணனைத் தாங்கள் கொல்ல வில்லையா!

ராமன்: ஆம் கொன்றேன், அவனுக்கும் உனக்கும் என்ன ஸம்பந்தம்?

நித்ராதேவி: அவர்தான் என்... புருஷன். எனக்கு இனி தாங்கள்தான் புகலிடம் அளிக்க வேண்டும்.

ராமன்: நான் என்ன கொடுப்பது! நீ தான் ஜபம் செய்கின்றவர்கள். வேதாத்யயனம் பண்ணுகிறவர்கள், ராமாயணம் முதலிய என் கதை களைக் கேட்பவர்கள் ஆகிய நல்லோர்களிடம் குடி புகுந்துவிட்டதாகக் கேள்விப் பட்டேனே! இனி என் ராஜ்யத்தில் அழாதே என்றாராம். (ஆனந்த ராமாயணம்)

அயோத்தி நகர்ச் செழிப்பு

कोसलो नाम मुदितः स्फीतो जनपदो महान् ।
निविष्टो सरयूतीरे प्रभूत धन धान्यवान् ॥
अयोध्या नाम नगरी तत्रासीत् लोकविश्रुता ।
मनुना मानवेन्द्रेण या पुरी निर्मिता स्वयम् ॥
आयता दश च द्वे च योजनानि महापुरी ।
श्रीमती त्रीणी विस्तीर्णा सुविभक्त महापथा ॥
मुक्तपुष्पावकीर्णेनजलसिक्तेन नित्यशः ॥

கோஸலோ நாம முதித: ஸ்பீதோ ஜனபதோ மஹான் ।
நிவிஷ்டோ ஸரயூதீரே ப்ரபூத தன தான்யவான் ॥
அயோத்யா நாம நகரீ தத்ர ஆஸீத் லோகவிஶ்ருதா ।
மனுநா மானவேந்த்ரேண யாபுரீ நிர்மிதா ஸ்வயம் ॥
ஆயதா தஶச த்வேச யோஜநானி மஹாபுரீ ।
ஸ்ரீமதீ த்ரீணி விஸ்தீர்ணா ஸுவிபக்த மஹாபதா ॥
முக்த புஷ்பாவகீர்ணேன ஜலஸிக்தேன நித்யஶ: ॥

வா.ரா. பால. - 5

ஸரயூ நதியின் இரு கரைகளிலும் அமைந்துள்ளது கோஸல நாடு. இது மிகப் பெரியது. மக்கள் வளமும், நில வளமும், நீர் வளமும், விளை பொருள் களும் மற்றைச் செல்வங்களும் நிறைந்தது.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. குறள் - 731

சோம்பலின்றி மேன்மேலும் விளை பொருள்களை விளைவிக்கும் உழவர் பெருமக்களும், தானியங்களை விளைவிப்பதற்குத் தேவையான, மாதம் மும்மாரி மழையைப் பெய்விக்கும் யாகாதி நற்கருமங்களையும், நற்றவங்களையும் புரியும் அறவோர், அந்தணர் பெருமக்களும், இவர்கள் புரியும் நல்லறங்களுக்குத் தேவைப்படும் செல்வத்தை வாரி வழங்கும் தனிகர்களும், ஒற்றுமையுடன் வாழும் இடமே நாடாகும். இத்தகு பெருஞ் சிறப்பினைப் பெற்றதாம் கோஸல நாடு. இதன் தலைநகர் அயோத்தி, இப்பெருநகர் தொண்ணூற்றாறு மைல்கள் நீளமும், இருபத்து நான்கு மைல்கள் அகலமும் கொண்டது. இத்தலைநகரிலிருந்து நாட்டில் பல பகுதி கட்குச் செல்வதற்குரிய நெடுஞ்சாலைகள் பல உள. இச்சாலைகளின் இரு

மருங்கிலும் நிழல், கனி தரும் மரங்கள் பல வளர்க்கப்பட்டு அழகாகக் காட்சியளிக்கின்றன. இந்நகரை அழகிய ராஜ வீதிகளும் அதன் இரு புறங்களிலும் உள்ள மாடமாளிகைகளும் அணி செய்கின்றன. 96 X 24 மைல்கள் நீள அகலமுள்ள இவ்வயோத்தி நகரை எத்தனைத் தொழிலாளர் கள் எத்தனை நாட்கள் அயராது பாடுபட்டுக் கட்டினார்களோ! கட்டடப் பொருள்களும் மலை மலையாகத் தேவைப்பட்டிருக்குமே என நமக்குப் பெரும் வியப்புத் தோன்றும். ஆனால் இதன் உண்மையை உணருங்கால் ஆச்சரியத்தின் எல்லையை எட்டி விடுவோம்.

நம் மனிதகுல முதல்வரான மனு மஹாராஜா, தாம் நினைத்த மாத்திரத்தில் இத்தகைய வியத்தகு நகரை ஸ்ருஷ்டி செய்தாராம். இவ்வாறு ஸ்ருஷ்டிக்கப்பட்ட அயோத்தி மிக அழகாகப் பராமரிக்கப்பட்டு வந்தது. தினந்தோறும் குப்பை கூளங்கள் அகற்றப்பட்டு தண்ணீர் தெளித்து நறுமணமுள்ள மலர்கள் தூவப்பட்டு வந்ததாம். நகரின் புகுமுக வாயில்கள் தோறும் நல்ல வேலைப்பாடுகள் அமைந்த மரங்களாலான அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பொருளுக்கும் ஒன்றோ டொன்று தொடர்பு இல்லாத விற்பனைக் கூடங்கள் அமைந்த கடை வீதிகள், அவற்றில் பல வகை ஆயனர், சிற்பிகளால் படைக்கப்பட்ட அழகுப் பொருள்கள், மனதைக் கவரும் ஓவியங்கள் நிறைந்திருந்தனவாம். ஆங்காங்கு அழகிய பொழுது போக்கு வதற்கான பூங்காக்கள் பல வகைப் பழங்களைத் தரும் தோப்புகள், நகரின் எல்லைகளில் படை வீடுகள், ஆயுதக் கிடங்குகள், அரண்கள், அகழிகள் ஆகியவை நகருக்குப் பாதுகாப்பை அளித்து வந்தன.

ஆஹிதாக்னிகளாய் நித்ய கர்மானுஷ்டானம் செய்கின்ற சமதமாதி நற்குண நற்பண்புகள் நிறைந்த அந்தணர்கள், மஹர்ஷிகள் போன்றோர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் நான்கு வேதங்களையும் ஆறு வேதாங்கங் களையும் கற்றறிந்தவர்களாகத் திகழ்ந்தனர். இத்தகைய மாபெரும் கோஸல நாட்டினை ஸ்வர்கலோகத்தைத் தேவேந்திரன் ஆள்வது போன்று அற வழியில் தசரதர் ஆண்டு வந்தார்.

வால்மீகியின் சொற்கள் கருத்தாழமும் வளமும் உடையன.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு. குறள் - 396

கோடையில் பருகு நீருக்காக ஆறுகளில் அதன் படுகைகளிலும் ஊற்றோ, கிணறோ தோண்டுகிறோம். தோண்டத் தோண்ட மணலில் நீர், கால்வாய் நீர் (இளநீர்) போன்ற தன்மையுடையதாய் சுரக்கிறது. ஆழமாகத் தோண்டத் தோண்ட அதன் அளவுக்கேற்ப நிறைய தண்ணீர் சுரக்கிறது. இது அனைவரும் அறிந்த உண்மை, இதே போன்ற அறிவும் கற்கக்கற்க வளர்கிறது. மேன்மேலும் கற்பவனின் அறிவு வளர்ச்சி, அளவிட முடியாதது. ''தாம் கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவு'' என்பர் பெரியோர்.

இவ்வாறு ஆழ்ந்தும், அகன்றும் பல நூல்களை (வேதங்கள், தர்ம சாஸ்த்ரங்கள்) கற்றவர்கட்கேற்ப பலப்பல கருத்துக்களைச் சுரக்கவல்லன வால்மீகியின் சொற்கள். அக்கருத்துக்களை எல்லாம் பாலேய் தமிழிலே வடித்துத் தருபவர் கம்பர். ராமாவதாரக் காப்பியத்தைப் படைப்பதற்கு முன்பு, பல்வேறு ராமாயணங்களையும், ஆழ்வார்களின் அமுத மொழி களையும் பல அறிஞர்களிடம் பல தடவை கற்றறிந்தவர் கம்பநாடர் எனப் பெரியோர் பகர்வர். அவரது நூல், வழிநூலாயினும் முதல் நூல் எனக் கருதும்படிக் காப்பியத்தை இயற்றியிருக்கிறார். தமிழ் நாட்டின் பழக்க வழக்கங்களுக்கேற்ப ஒரு சில இடங்களில் முனிவரோடு மாறுபட்டிருப் பினும் பெரும்பாலும் வான்மீகியின் சொல்லாழத்தில் மூழ்கித் திளைத்து, முத்துக்களை நமக்கு அள்ளித் தருவதை இரு மொழியையும் கற்ற புலவர்கள் நன்கு அறிவர். வான்மீகியிடம் கம்பருக்குள்ள பக்தியும் பெருமதிப்பும் அளவிடற்பாலது. முனிவரைப் பற்றி கம்பன் பேசுவதைப் பார்ப்போம்.

வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்
தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச்செய்தான்
ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசல் உற்றான் என்ன என் மொழியலுற்றேன்.

க.ரா. பால. - நாட்டு

''வான்மீகம் ஸ்லோகங்களால் ஆனது. ஒரு ஸ்லோகத்திற்கு நான்கு பாதங்கள் (அடிகள்), இதில் ஒரு சொல்லையோ ஒரு பாதத்தையோ எடுத்து விட்டு வேறு சொல்லையோ, பாதத்தையோ பிறர் புகுத்த முடியாதாம். அத்தகைய அமைப்புடையது ஒவ்வொரு சுலோகமும், இவருடைய இனிய கலையுடைய கவிதைகளை மண்ணவர் மாத்திரமன்றி விண்ணவரும் கேட்டு கவிதாரஸத்தைப் பருகிப் பருகி மகிழ்வராம். இவ்வாறு கவிதைகளால் முனிவர் புகழ்ந்த கோஸல நாட்டை அடியேன் சிற்றறிவினனாகியும், ராம பக்தியினால் தூண்டப் பெற்றவனாய் ஊமையன் பேசத் தொடங்குவதைப் போல ராமாயணத்தை மொழியலானேன்'' என்கிறார் கம்பர். மேலும்,

மாக்காதை செய்த செய்தவன் சொல் நின்ற தேயத்தே

க. ரா. பாயிரம் - 5

''மஹா தபஸ்வியாய் பகவானின் அனுக்ரஹம் பெற்ற வான்மீகியின் வரப்ரசாதமாய்த் திகழும் ராமாயணம் நிலை பெற்ற நாட்டிலேயே பொருட் செறிவற்ற நூலை நானும் இயற்றத் தொடங்கினேன். இது திருப்பாற்கடலை அடைந்து ஆசையால் அதன் பால் முழுவதையும் நக்கிப் பருக எண்ணிய பூனையின் செய்கை போன்றது'' என்கிறார்.

ஆதிகவியாம் மஹாகவியின் விளம்புதற்கரிய பெருமையை மனதிற் கொண்டு பேசினாராயினும், கம்பனின் புகழும் குறையுடையதன்று.

"இம்பர் நாட்டில் செல்வம் எல்லாம் எய்தி, அரசு ஆண்டு இருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா ஓங்கும் நீழல் இருந்தாலும்
செம்பொன் மேருஅனைய புறத்திறல்சேர் இராமன்திருக் காதையில்
கம்பநாடன் கவிதையில் போல், கற்றோர்க்கு இதயம் களியாதே.

க.ரா.பால. - காப்பு

என்று புலவர் பகர்வர்.

பொதுவாக மஹாகவிகள் புகழ் பெற்றவராயினும் அவையடக்க மாகத் தம்மைக் குறைத்து பேசிக் கொள்வது இயல்பு. ரகுவம்சத்தை எழுதத் தொடங்கிய காளிதாஸ மஹாகவி:

मन्दः कवियशः प्रार्थी गमिष्यामि अपहास्यताम् ।
प्रांशुलभ्ये फले लोभात् उद्बाहुरिववामनः ॥

மந்த: கவியஶ: ப்ரார்த்தீ கமிஷ்யாமி அபஹாஸ்யதாம் ।
ப்ராம்ஶுலப்யே பலே லோபாத் உத்பாஹுரிவ வாமன: ॥

"நானோ மூடன், ஆனால் கவிஞன் என்று பெயர் எடுக்க வேண்டு மென்கிற ஆசையோ காவ்யத்தை எழுத உந்தித் தள்ளுகிறது. என் செய்வேன்! உயரமான புருஷனால் எட்டிப் பறித்துச் சுவைக்கக் கூடிய பழத்தைப் பேராசையினால் ஒரு குள்ளன் கைகளை உயரத் தூக்கி எம்பிக் குதித்து பறிக்க முயல அவனைப் பிறர் பார்த்து நகைப்பது போல என்னையும் பரிஹ ஸிப்பார்களே" என்கிறான்.

எம்பெருமானின் பக்தி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்த ஆழ்வார் களும் தம் பெருமையை மறைப்பது மட்டுமன்றித் தம்மை மிகமிகக் குறைத்தும் பேசுவர்.

குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்
நலங்களாய நற்கலைகள் நாலிலும் நவின்றிலேன்
புலன்கள் ஐந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனித, நின்
இலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேன் எம்மீசனே!

திருமழிசை ஆழ்வார் - திருச்சந்த விருத்தம் - 90

திருமழிசையாழ்வார் ரிஷி புத்ரராய் அவதரித்தவர். ஆயினும் பிரம்பறுக்கும் குடியிலேயுள்ள திருவாளன் என்னும் வேளாளனால் வளர்க்கப் பெற்றவர். இவர் ஸ்ரீரங்கநாதனை ஸேவிக்கிறார். இங்கு ஆழ்வார் பாடலை ஓர் உரையாடலாக்கிச் சுவைப்போம்.

ஸ்ரீ ரங்கநாதன்: ஆழ்வாரே! நீர் நம்மைப் பெறுகைக்கு உம்மிடமுள்ள கைம் முதல் என்ன, ஏதாவது உபாயானுஷ்டானம் செய்திருக்கிறீரா?

ஆழ்வார்: பொறியிலேன், நான் புலன்கள் சென்றுழிச் செல்லும் தன்மையன்; ரூப, ரஸ, சப்தாதிகளால் கவரப்பட்டவன். இதுவே என் கைம்முதல்.

நம்பெருமாள்: ஐயோ! புலன்களைப் பட்டிமேய ஒட்டாதபடி அடக்கி ஆளக்கூடாதோ?

ஆழ்வார்: புலன்கள் ஐந்தும் வென்றிலேன். மனக்குரங்கை அடக்கினா லன்றோ வெளிப்புலன்களை அடக்க முடியும்? அதுதான் என்னால் முடியாதே.

நம்பெருமாள்: புலன்களை வெல்லும் வழி உபநிஷத்துக்களில் கூறப் பட்டுள்ளனவே. அவற்றைக் கற்பதற்கென்ன?

ஆழ்வார்: நலங்களாய நற்கலைகள் நாலிலும் நவின்றிலேன். வாழ்வில் நன்மை பயக்கும் நான்கு வேதங்களையும் கற்றேனல்லேன்.

நம்பெருமான் : ஏன் வேதாத்யயனம் பண்ணாமலிருந்தீர்? வேதங்களைக் கற்பது ஒவ்வொரு அந்தணனின் கடமையென வேதம் விதிக்கின்றதே.

ஆழ்வார் : ஆம் உண்மை. நானோ குலங்களாய ஈரிரண்டிலும் பிறந்திலேன். நான்கு வர்ணங்களில் எதிலும் பிறக்கவில்லை. பிரம்பறுக்கும் குடியிற் பிறந்தவன். வேதம் ஓத அதிகாரம் அற்றவன். எனவே அவற்றைக் கற்று, புலன்களை வெல்லும் வழியை அறியாதவன். புனித! புண்டரீகாக்ஷ னான உன்னை நினைத்தால் தூய்மையற்றவன் உள்ளும் புறமும் தூய்மை பெற்றவனாகிறானே, நீ உன்னை நினைப்பவனை பவித்ரம் ஆக்குபவன் ஆயிற்றே. ஏன் எப்படி? காரிருளையும் விளக்கொளி விரட்டுகிறதல்லவா? அது போல் ''இலங்குபாதம்'' சுடர்விட்டுப் பிரகாசிக்கும் உம் திருவடிகளே எமக்குச் சரண். சரணாகதி எல்லா தோஷங்களையும் போக்கும் உபாய மன்றோ; எனவே உம் திருவடி களிலே சரணடைகிறேன், இதைவிட வேறு பொறி (உபாயம்) எனக்கு எதற்கு? என்றார்.

இவ்வாறு ஆழ்வாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கவிஞர்களும் செருக்கறுத்துத் தம் தாழ்மையை வெளியிடுவது போன்று ஓரளவினதான அறிவைப் பெற்ற நாம் பெரியோர்களிடம் கர்வமின்றித் தாழ்மையுடன் பழகப் பயில வேண்டுமென்பதற்காகவே ஈண்டு இதை எடுத்துக் கூறினோம், நிற்க.

வான்மீகத்திலுள்ள சொற்களின்—சொற்றொடர்களின் கருத்துக் களை சுவைமிக எளிதாக எடுத்துக்காட்டும் கம்பரது பாக்களையும் ஆங்காங்கு சுவைப்போம்.

ஸரயூ நதி அயோத்தி நாட்டை வளம் கொழிக்கச் செய்கிறது. இது தாய் போன்றது, தாய்ப்பாலைப் பருகியே குழந்தைகள் நன்கு வளர்கின்றன.

இந்நதியின் நீரைப் பருகியும், இந்நீர் பாய்வதினால் வளர்ந்த பயிரின் விளை பொருள்களை உண்டும் மக்கள் வாழ்வதினால் ஸரயூ அனைவருக்கும் தாய் போன்றது. தாய்ப்பால் எவ்வளவு தூய்மையானதோ அதே போன்று நகரின் அருகில் ஓடும் ஸரயூவின் நீரும் தூய்மையானதாம். எனவே மக்கள் நதியைத் தாயாக பாவிப்பதினால் ஆற்றையோ, அதன் கரைகளையோ அசுத்தம் செய்வதற்கு அஞ்சுவர். நாட்டின் சுகாதாரமும் சீர்மை பெறும். இன்றும் மக்கள் நோயுற்று அவதியுறுவதற்குக் காரணம் ஆற்று நீரையும், குளத்து நீரையும் மாசுபடுத்துவது தான். இவ்வறிவுரையை நாம் மனம் சிணுங்காமல் ஒப்புக் கொள்ள வேண்டுமென்பதற்காக இக்கருத்தை அழகாகச் சித்தரிக்கிறார் கம்பர் :-

சரயு என்பது தாய்முலை அன்னது இவ்
உரவு நீர் நிலத்து ஓங்கும் உயிர்க்கெலாம்.

க. ரா.பால. - ஆற்று

ஸரயூ நதியில் எப்பொழுதும் தண்ணீர் ஓடுகிறது. கோடையில் இமயத்தில் மேகங்கள் பரந்து நின்று கார்காலத்தில் மழையைப் பொழிகின்றன. அந்த நீர் கங்கை முதலிய பல நதிகளாக ஓடுவது போல் ஸரயூவாகவும் ஓடுகிறது. இதைக் கம்பன் அழகாகச் சித்தரிப்பதைப் பார்ப்போம்.

பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்
அம்பின் ஆற்றுதும் என்று அகல் குன்றின்மேல்
இம்பர் வாரி எழுந்தது போன்றதே.

க.ரா. பால. - ஆற்று

பெண்கள் திருமணத்திற்குப் பிறகு அவ்வப்போது பிறந்தகத்திற்குச் செல்வது உண்டு. நதிகள் கடலையே சேர்வதால், அவற்றை ஸமுத்ரத்தின் மனைவிகளாகச் சொல்வது கவிஞர் மரபு. இந் நதிகள் பிறந்தகமே திரும்பாத கற்பரசிகளாம். கோடையில் கதிரவனின் கதிரின் வெப்பத்தினால் கடல் நீர் ஆவியாக மாறிக் காற்றினால் ஒன்று சேர்ந்து மலைகள் பக்கம் செல்ல அங்குள்ள குளிர்ந்த காற்றினால் வெண் மேகங்கள் கருமேகங்களாக மாறி மழையைப் பொழிகின்றன. கடலுக்கு நதிகள் மனைவிகளான படியால் இமயமலை கடலுக்கு மாமனார் ஆகிறது. (இமயத்தில் தோன்றிய மலைப் பெண்ணாகிய பார்வதியை சிவன் மணந்ததினால் சிவனுக்கு இமயம் மாமனார் ஆகிறது.) ஸமுத்ர ராஜன் மாமனாராகிய இமயம், சிவனுக்கும் மாமனாராயிற்றே. அவர் கோடையில் ஸூரியனின் கொடிய வெம்மையைத் தாங்க முடியாது அவதியுறுவதை அறிந்த ஸமுத்ர ராஜன் தன் நீரை மேகங்களாக அனுப்பி நீரைப் பொழியச் செய்து, மாமனாருக்கு உபசாரம் செய்கிறானாம். அம்மழை நீரே ஸரயுவாக ஓடிவந்து அயோத்தியை வளம் கொழிக்கச் செய்கிறது.

தாதுகு சோலைதோறும், சண்பகக் காடுதோறும்
போதவிழ் பொய்கைதோறும், புதுமணல் தடங்கள்தோறும்
மாதவிவேலிப் பூகவனம் தோறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே.

க. ரா. பால. - ஆற்று

ஸரயூ நதியின் நீர் வாய்க்கால்களின் வழியே சென்று அயோத்தி முழுவதும் பாய்கிறது. குறைவு இன்றி தண்ணீர் பாய்வதினால் மரங்கள் அடர்ந்து ஓங்கி வளர்ந்து பூத்துக் குலுங்கி மகரந்தப் பொடியை நிறைய உதிர்க்கின்றனவாம். சண்பகம் முதலிய நறுமலர் தரும் மரங்கள் காடுகளாகப் பரந்திருக்கின்றனவாம். தாமரை, அல்லி, செங்கழுநீர் முதலிய மலர்கள் குளங்களில் ஆழமாக நீர் தேங்கி இருப்பதால் நீண்ட பருத்த கொடிகளில் நன்கு மலர்ந்து நீர்நிலைகளை அழகுபடுத்துவதோடு விதவிதமான மணத்தைப் (வாஸனை) பரப்புகின்றனவாம். குருக்கத்தி, மல்லிகை முதலிய கொடிகளால் அமைந்த வேலிகளையுடைய தோட்டங்களில் கமுகு முதலிய பயன் தரும் மரங்கள் வளர்ந்து பசுமை மிகுந்த காட்சியைத் தருகின்றனவாம். உணவுப் பொருள்களை விளைவிக்கும் வயல்களில் குறைவின்றித் தேவை யான அளவு நீர் நிரம்பி நிற்கின்றதாம். கர்னாடகத்தி லுள்ள மைசூர் நகரைத் 'தோட்ட நகர்' (Garden City) என்பர். இதுபோல ஸரயூவினால் அயோத்தி சோலை நகராகக் காட்சி தருகிறது. உயிர் நமது உடல்களில் உறுப்புகள் தோறும் பரவி நின்று நம்மைப் பொலிவுடன் விளங்கச் செய்வது போல ஸரயூநீர் பாய்ந்து பரவி நின்று நாட்டை ஒளிபெறச் செய்கிறது. முன்பு கூறியது போலத் தாய்ப்பால் உயிரளித்து மக்களை வளர்ப்பது போன்று ஸரயூநீர் உயிராகப் பரவி அயோத்தியை வளர்த்து வளம் பெறச் செய்கிறது.

சேலுண்டஒண் கணாரில் திரிகின்ற செங்கால் அன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்று உள்ளி கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரை தாலாட்டும் பண்ணை.

க. ரா.பால. - நாட்டு

அயோத்தியின் செழிப்பைக் காண புறநகர்ப் பகுதியிலுள்ள வயல் களுக்கு நம்மைக் கவிஞன் அழைத்துச் செல்வதைக் காண்போம். பெண் களின் நடையழகிற்கு அன்னப் பறவைகளின் நடையை (ஹம்ஸகதியை) ஒப்பிட்டுப் பேசுவது வழக்கம். இங்கு இதை மாற்றி அமைக்கிறார் கம்பர். அயோத்தியில் வாழும் பெண்களின் நடை மிக அழகு வாய்ந்தது, ஒப்புமை யற்றது. எனவே, மானஸ ஸரஸ்ஸில் வாழும் ஹம்ஸங்கள் ஸரயூ நதியை வழிகாட்டியாகக் கொண்டு பறந்து அயோத்திக்கு வந்தனவாம். அயோத்திப் பெண்களிடம் நடையைப் பழகிக் கொள்வதற்காக வயல்களில் வாழத்

தொடங்கின. அங்கிருந்து தினந்தோறும் பறந்து நகருக்குச் சென்று நடை பழகி வயலுக்குத் திரும்பும். புறப்படும் போது வயல்களின் ஓரங்களில் மலர்ந்து நிற்கும் தாமரை மலர்களில் தத்தம் குஞ்சுகளைப் படுக்க வைத்து விட்டுச் செல்லும். காலையில் தம்மை விட்டுச் சென்ற தாய் அன்னம் திரும்பி வராத காலங்களில் குஞ்சுகட்குப் பசி எடுக்கும். வரப்பு ஓரங்களில் மேய்ந்து கொண்டே எருமைகள் வீடுகட்குத் திரும்பும், அப்பொழுது எருமைகட்கு வீடுகளிலுள்ள தத்தம் கன்றுகள் நினைவுக்கு வர அவை கனைத்து, கன்றுகளின்பால் உள்ள இரக்கம் காரணமாக மடிவழியே பாலைச் சொரியும். அப்பாலை அன்னக் குஞ்சுகள் வயிறு நிறையப் பருகும். இரவு வருவதால் அங்கு வயிறார உண்ட குஞ்சுகள் தூங்கத் தொடங்கும். தொட்டிலை ஆட்டுவது போல் இளங்காற்று மலர்களை ஆட்ட, நீரில் வாழும் பச்சைநிறத் தவளைகள் ஸ்ருதி கூட்டித் தாலாட்டுப்பாட, அன்னக் குஞ்சுகள் இனிது தூங்குமாம். இங்கு நீர் வளம், நிலவளம், பயிர் வளம், கனைத்து இளங்கற் றெருமை கன்றுக்கு இரங்கி, நினைத்து முலை வழியே நின்று பால் சோர வீடு திரும்பும் வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் எருமைகளின் பால் வளம், பெண்களின் கண்ணழகு, நடையழகு, மக்களின் கவலையற்ற வாழ்வு அனைத்தையும் ஒருங்கே காட்டியது கம்பனுக்கே உரிய திறமன்றோ!

शालि तण्डुल सम्पूर्ण इक्षुखण्ड रसोदकाम् ।

ஶாலி தண்டுவ ஸம்பூர்ண இக்ஷு கண்டரஸோதகாம் ॥


तामग्निमद्भिः गुणवद्भिः आवृतां
द्विजोत्तमैः वेदषडङ्गपारगैः ।
सहस्रदैः सत्यरतैः महात्मभिः
महर्षिकल्पैः, ऋषिभिश्च केवलैः ॥

தாம் அக்னிமத்பி: குணவத்பி: ஆவ்ருதாம்
த்விஜோத்தமை: வேதஷடங்கபாரகை: ।
ஸஹஸ்ரதை: ஸத்யரதை: மஹாத்மபி:
மஹர்ஷி கல்பை: ரிஷிபிஶ்ச கேவலை :॥

வா. ரா. பால. - 5

நாட்டிலே வெண்மதி போன்ற உயர் ரக அரிசி நிறைந்திருந்தது. கற்கண்டு, சர்க்கரை, வெல்லம் இவற்றை அளிக்கும் கருப்பஞ்சாறும், கருப்பஞ்சாற்றை ஒத்த இனிய நன்னீரும் நிறைந்திருந்தது. தாகத்தைத் தணிக்காத உப்பு நீரைக் காணமுடியாது. அயோத்தியில் வாழ்ந்த அந்தணர்கள் ஹோமங்களைச் செய்பவர்களாகவும், சமதமாதி நற்குண நற்பண்புகள் நிறைந்தவர்களாகவும், வேத வேதாந்தங்களை நன்கு கற்றவர்களாகவும்,

நூலின் ஆசிரியர்



ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆச்ரமத்தில் எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பறவாக்கோட்டை ஆண்டவன்
ஸ்ரீ கோபால தேசிக மஹாதேசிகன் -



‘எவன், இராமனைக் கண்களாரப் பருகவில்லையோ, எவன் மீது இராமனது கடைக்கண் பார்வை விழவில்லையோ அவனை உலகும், அவனது ஆத்மாவும் பழிக்கும்’...... எழிலரசனது அர்ச்சாவடிவம் தில்லைவிளாகத்தில்.

பிறருக்கு வாரிவழங்கும் தன்மையராகவும், உண்மையையே பேசுகின்றவர் களாகவும், நகரில் வாழ்கின்றவர்களாயினும் மஹர்ஷிகளைப் போன்று ஆசார அனுஷ்டானங்கள் உடையவர்களாகவும் வாழ்ந்தனராம்.

அகில் இடும் புகை, அட்டில் இடும் புகை
நகரின் ஆலை நறும் புகை, நான் மறை
புகலும் வேள்வியின் பூம்புகையொடு அளாய்
முகிலின் விம்மி முயங்கின எங்கணும்.

க. ரா. பால. - நாட்டு

அயோத்தி நகர் முழுவதும் மேகங்கள் மழை காலத்தில் சூழ்வது போல, எங்கும் புகை மண்டிக் கிடக்கிறதாம். புகை சூழ்ந்தால் மூச்சுத் திணறி மக்கள் அவதியுறுவார்களே, அவர்கள் வாழ்வது எங்ஙனம்? இதுதான் கவியின் சமத்காரம், அனைவரையும் வாழ்விக்கும் புகையே சூழ்ந்திருக் கிறதாம். வீடுகளில் நறுமணம் கமழ அகிற் கட்டைகளைக் கொளுத்தி வாசனைப் புகையை எழுப்புகிறார்கள். சமையற் கட்டினின்றும் புகை எழுகிறது. தம் வீட்டிற்கு வரும் ஏழைகளையும் விருந்தினரையும் வரவேற்று உபசரிக்கும் பண்பு பெண்டிருக்கு இருந்தது. கல்வியும் செல்வமும் பெற்றிருந்தமையால் அயோத்திப் பெண்கள் செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பார்களாம். எனவே சோம்பலின்றி உணவு சமைப்பதினால் புகை எழத்தானே செய்யும். இதையே கம்பர் தனித்தும் கூறுகிறார்.

பெருந்தடம் கண் பிறை நுதலார்க்குஎலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே.

கா. ரா. பால. - நாட்டு

கருப்பஞ்சாற்றைக் காய்ச்சும் ஆலைகளும் மலிந்திருந்தமையால் வெல்லப்பாகின் வாஸனையோடு புகையும் எழுந்ததாம். வேதம் ஓதும் அந்தணர்கள் நாடு நலம் பெற இயற்றும் வேள்விகளினின்றும் புகை உயரே எழும்ப, மேகங்கள் போன்றதொரு காட்சி வானத்தில். ஆக சமூஹ நலப் பணிகள் எப்பொழுதும் இயங்கி வந்தபடி.

நகரின் மாண்பு

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. குறள் - 731

நாட்டிலுள்ள மக்கள் பல்வகைப் பொருள்களை விளைவிக்க வேண்டும். விளைந்த பொருள்களுள் தேவை போக மிகுந்தவற்றை வாணிபம் செய்து செல்வத்தைப் பெருக்க வேண்டும். வெறும் செல்வமும் உணவும் இருந்தால் உடல் வளருமா? உடலில் உயிரோட்டம் இருந்தால் தானே அது வளரும்? உடலுக்கு உயிர் போன்று நாட்டிற்கு உயிர் தக்கார். அதாவது நாட்டிலுள்ள மக்கள் அறவோர்களாகச் சான்றோர்களாகத் திகழ வேண்டும். ஆகவே மக்களின் நற்குண நற்பண்புகளே நாட்டின் பெருமைக்கு அளவு கோலாகும். ஆக பொருளும் செல்வமும் அறத்தைச் சார்ந்திருக்க வேண்டும்.

धर्मो रक्षति रक्षितः ननु हतः हन्ति ध्रुवं प्राणिनः
हन्तव्यो न ततः स एव शरणं संसारिणां सर्वदा ।
धर्मः प्रापयतीह सम्पदमपि ध्यायन्ति तत् योगिनः
नो धर्मात् सुहृदस्ति नैव सुखिनः नो पण्डिताः धार्मिकात् ।

தர்மோ ரக்ஷதிரக்ஷித: நநுஹத: ஹந்தி த்ருவம் ப்ராணின:
ஹந்தவ்யோ ந தத: ஸஏவ சரணம் ஸம்ஸாரிணாம் ஸர்வதா ।
தர்ம: ப்ராபயதீஹ ஸம்பதமபி த்யாயந்தி தத் யோகின:
நோ தர்மாத் ஸுஹ்ருதஸ்தி நைவ ஸுகிந: நோ பண்டிதா:
தார்மிகாத் ॥

அறத்தை நாம் காப்பாற்றினால் அது நம்மை நிச்சயமாகக் காப்பாற்றும். தர்மத்தை நாம் கொல்வோமாகில் (கைவிடுவோமாகில்) அது நம்மைக் கட்டாயம் கொன்றே விடும். இவ்வுலகின்கண் வாழும் மாந்தர் அனைவருக்கும் அறமே அடைக்கலமாகும். எனவே எப்பொழுதும் எவ்வகையிலும் அதைக் கைவிடாது பின்பற்ற முயல வேண்டும். இவ்வற வழியைப் பின்பற்றினால் செல்வமும் பொருளும் போட்டியிட்டுக் கொண்டு நம்மைப் பின்தொடரும். அறத்தினால் மகிழும் ராமனையும் கண்ணனையும் அறத்தின் வடிவமாகவே சாஸ்த்ரம் பேசுகிறது. யோகிகள் ராமனை தர்ம ஸ்வரூபமாகவே தம் மனதில் தியானிக்கின்றனர். அறமே நமது உற்ற நண்பன். நிரம்பப் படித்தவர்களைவிட கற்றதற்கேற்ப அறவழி நிற்பவர்களே ஸுக வாழ்வினைப் பெறுவர். இதையே சுட்டுகிறது பின் வரும் குறட்பாவும்;

அறத்தான் வருவதே இன்பம் மற்றுஎல்லாம்
புறத்த புகழு மில. குறள் - 39

அறவழியல்லாது பாவ வழியில் வருவன சிற்சில ஸமயங்களில் இன்பமாகத் தோன்றினும் பின்னர் அவை துன்பமாய் விளைவதோடு வாழ்க்கையில் இகழ்ச்சியையே நல்குமாம்.

பல்வகையிலும் புகழினை விளைவிக்கும் அறவழி நின்றோர்களுக் கெல்லாம் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தனர் அயோத்தி நகர மக்கள் என்பதை வால்மீகியும் கம்பரும் நமக்கு விளக்கிக் கூறும் அழகைப் பார்த்து இனி மகிழ்வோம்.

तस्मिन् पुरवरे हृष्टाः धर्मात्मानो बहुश्रुताः ।
नरास्तुष्टाः ततैः स्वैः स्वैः अलुब्धाः सत्यवादिनः ।
नाल्पसन्निचयः कश्चित् आसीत् तस्मिन् पुरोत्तमे ।
कुटुम्बी यो हि असिद्धार्थः अगवाश्व धन धान्यवान् ।
कामी वा न कदर्यो वा नृशंसः पुरुषः क्वचित् ।
द्रष्टुं शक्यमयोध्यायां नाविद्वान् न च नास्तिकः ॥

தஸ்மின் புரவரே ஹ்ருஷ்டா: தர்மாத்மானோ பஹுஶ்ருதா: ।
நராஸ்துஷ்டா: ததை: ஸ்வை: ஸ்வை: அலுப்தா ஸத்யவாதின: ॥
நால்பஸந்நிசய: கஶ்சித் ஆஸீத் தஸ்மின் புரோத்தமே ।
குடும்பீ யோ ஹி அஸித்தார்த்த: அகவாஶ்வ தன தான்யவான் ॥
காமீ வா ந கதர்யோ வா ந்ருஶம்ஸ : புருஷ: க்வசித் ।
த்ரஷ்டும் ஶக்யம் அயோத்யாயாம் நாவித்வான் ந ச நாஸ்திக: ॥

வா. ரா. பால. - 6

அயோத்தி நகரில் மக்கள் அனைவரும் வஸிப்பதற்குத் தேவையான எல்லாப் பொருட்களும் எளிதாகக் கிடைத்தமையால் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். அவர்கள் கனவிலும் அற நெறி பிறழாதவர். அறநெறிகளைக் கூறும் சாஸ்த்ரங்களைப் பன்முறை கேட்டவர். பிறர் செல்வத்தைக் கவர விரும்பாததோடு தத் தமக்கு உரிய செல்வத்திலேயே போதுமெனும் மனப்பக்குவம் பெற்றவர். பிறர் அளிக்கும் நன்கொடைகளைப் பெறுவதில் ஆசையற்றவர். உண்மையே பேசுபவர். நகரில் வாழும் எந்தக் குடும்பத்தை யும் குறைந்த செல்வமுடையதாகவோ, நினைத்ததைப் பெறாததாகவோ, பசுக்கள், குதிரைகள், தான்யங்கள் இல்லாததாகவோ காண்பது அரிது (தான், தனது தாய் தந்தையர், இரு மருமக்கள், இரு புதல்வர்கள், ஒரு பெண், தன் மனைவி, ஒரு விருந்தினர் ஆக பதின்மரைக் கொண்டது ஒரு குடும்பமாக அக்காலத்தில் கருதப்பட்டது) கேவலம் காமத்திலேயே ஈடுபாடு உடைய வனையோ, மனைவி, மக்கள், உடன் பிறந்தவர்கள், தாய், தந்தையர்,

அறப்பணி இவற்றிற்குத் தீங்கு விளைவிப்பவனையோ நாட்டின் எந்த மூலையிலும் பார்க்க முடியாது.

இது மட்டுமல்ல. கல்லாதவ்னையோ, நாஸ்திகனையோ காண முடியாது. நாட்டில் அவித்வானோ நாஸ்திகனோ இல்லை என்பதற்கு பெரிய திருமொழி 8-1-1இல் பெரியவாச்சான் பிள்ளையின் உரை சுவைத்து மகிழத் தக்கது.

''அறுபதினாயிரம் ஆண்டு வன்னியம் அறுத்து, நன்மைகளை உண்டாக்கிப் போந்த (தசரத) சக்கரவர்த்திக்கும் இரண்டு பொருள் உண்டாக்கப் போச்சுதில்லை. அப் படைவீட்டிலுள்ளார் ''ராஜபுத்ரர்கள் ஆரேனும் ஒருவர் முடி சூடவமையாதோ'' என்றிருக்குமவர்களல்லர். எம்பெருமானே முடி சூடாவிடில்

इहैवनिधनं यामः महाप्रस्थानमेव वा ।
रामेण रहितानां च किमर्थं जीवितं हि नः ॥

இஹைவ நிதனம் யாம: மஹா ப்ரஸ்தானமே வ வா ।
ராமேண ரஹிதானாம் ச கிமர்த்தம் ஜீவிதம் ஹிந: ॥

வா. ரா. அயோத்யா - 4

என்று பெருமாள் அபிஷேகம் பண்ணாத படைவீட்டிலிருப்பதில்லை; விழுந்த இடமே சுடுகாடாகப் போக அமையும் என்றிருப்பர் புருஷர்களும் ஸ்த்ரீகளும்.

राममेव अनुगच्छध्वं अश्रुतिंवापि गच्छत ॥

ராமமேவ அனுகச்சத்வம் அஶ்ருதிம் வாபி கச்சத ॥

வா.ரா. அயோத்யா - 48

என்று பெருமாள் வழிமாறிப் போனார் என்று திறக்க அழைத்த பர்த்தாக்கள் முகம் பிளக்கத் தள்ளி கதவு அடைத்துக் கொள்ளுவார்கள். அதாவது,

தசரத சக்ரவர்த்தியால் ஸர்வ வல்லமை பெற்றிருந்தும் ஒரு படிக்காத வனையோ, வேதங்கள், கூறும் தத்வங்களையும் பரமாத்மாவையும் இல்லை யென்று மறுக்கும் நாஸ்திகனையோ உண்டு பண்ண முடியவில்லையாம்! அயோத்தியில் அனைவரும் கற்றவர்களாகவும் ஆஸ்திகர்களாகவும் இருந்தனர். மக்களின் ஆஸ்திக்யத்திலுள்ள உறுதிப் பாட்டை அழகாக எடுத்துக் காட்டு கிறார் உரையாசிரியர். யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய சக்ரவர்த்தி நினைத்த பொழுது மக்கள் அனைவரும் ஒரு முகமாக ராமனுக்கே முடி சூட்ட வேண்டும் என்றனராம். ஏன், ராமன் ஸ்ரீமன் நாராயணனின் அவதாரம். உலகம் முழுவதும் அவனுக்கு சரீரம். உலகு அவனது சொத்து என்கிற தத்வத்தை உணர்ந்திருந்த படியால் அவனுக்கே முடி சூட்ட வேண்டும் என்று கூறுகின்றனர்.

ராமன் காட்டுக்குப் போகும் போது, பெருமாள் (ராமன்) முடி சூடாவிடில் ''நாங்கள் அங்கேயே உயிரை விடுவோம். அல்லது வடக்கிருந்து (வட திசை நோக்கி அமர்ந்து உண்ணாது பருகாது) உயிர் விடுவோம். ராமனில்லாத வாழ்வு எதற்கு?'' என பரமனிடம் உள்ள பக்தியை வெளியிட்டனர்.

மேலும், பின்தொடர்ந்தவர்கள் கங்கைக் கரையில் துயிலும் பொழுது அவர்களை ஏமாற்றிவிட்டு காடு புகுந்தார் ராமன். வேறுவழியின்றி அனைவரும் தத்தம் வீடுகளுக்குத் திரும்பினர். தாளிட்டுக்கொண்டு வீட்டினுள் இருந்த அவரவர்களின் மனைவிமார்கள், கணவன்மார் கதவைத் தட்டியதும் சிறிது திறந்து பார்த்து ''ராமனைப் பின்தொடர்ந்து காடு செல்லுங்கள். அல்லது எங்கேயாவது செல்லுங்கள்'' என்று முகம் பிளக்க அவர்களை வெளியே தள்ளிக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே சென்றனராம். இங்கு ஆண்களை விட அயோத்திப் பெண்களின் ராமபக்திச் சிறப்பையும் ஆஸ்திக்யத்தையும் அறிகிறோம். இதனால் நகரில் மருந்துக்குக் கூட நாஸ்திகர் இல்லை என்பது சிறப்புற எடுத்துக் காட்டப்பட்டது.

सर्वे नराश्च नार्यश्च धर्मशीलाः सुसंयताः ।
उदिता शीलवृत्ताभ्यां महर्षय इवामलाः ॥
नाकुण्डली नामकुटी नास्रग्वी नाल्प भोगवान् ।
नामृष्टः नानुलिप्ताङ्गः नासुगन्धश्च विद्यते ॥
नामृष्टभोजीनादादा नाप्यनङ्गत निष्कधृक् ।
नाहस्ताभरणो वाऽपि दृश्यते नाप्यनात्मवान् ॥
नानाहिताग्निः नायज्वा न क्षुद्रो वा न तस्करः ।
नासूयको नवाऽशक्तः नाविद्वान् विद्यते नरः ॥

ஸர்வே நராஶ்ச நார்யஶ்ச தர்மஶீலா: ஸுஸம்யதா: ।
உதிதா: சீலவ்ருத்தாப்யாம் மஹர்ஷய இவாமலா: ॥
நாகுண்டலீ நாமகுட நாஸ்ரக்வீ நால்பபோகவான் ।
நாம்ருஷ்ட: நானுலிப்தாங்க: நாஸுகந்தஶ்ச வித்யதே ॥
நாம்ருஷ்ட போஜீ நாதாதா நாபி அநங்கத நிஷ்கத்ருக் ।
நாஹஸ்தாபரணோ வாஅபி த்ருஶ்யதே நாப்யனாத்மவான் ॥
நானாஹிதாக்நி: நாயஜ்வா நக்ஷுத்ரோ வா ந தஸ்கர: ।
நாஸூயகோ நவாஅசக்த: நாவித்வான் வித்யதே நர: ॥

வா.ரா. பால. - 6

அயோத்தி வாஸிகள் அனைவரும் அறப்பற்றும் நற்பண்பும் பொருந்தியவர். நல்லொழுக்கமுடையவர். நகர வாஸிகளாயினும் வனவாஸிகளான மஹர்ஷிகள் போன்று புலனடக்கமும், தூய மனமும் உடையவர் என்று

உள்ளத் தூய்மையைப் (ஆன்மாவை) பற்றிப் பேசி இப்பொழுது உடல் தூய்மையையும், அழகையும் பேசுகிறார். காதுகளில் குண்டலங்களும், தலையில் கிரீடமும், கழுத்தில் பூமாலையையும் பொன்மாலையையும் அணிந்திருப்பர். குறைவற்ற இன்பமுடையவர், ''சனி நீராடு'' என்ற முது மொழிக்கிணங்க தைல ஸ்னானம் செய்து மாசற்றிருப்பர். நறுமணம் வீசும் சந்தனம் பூசிக் கொள்வர். குறைவறத் தேவைக்கேற்ற அன்னம் புசிப்பர். வரும் விருந்தினருக்கு நல்லுணவு கொடுப்பர். மார்பிலும் கைகளிலும் பொன்னணிகளை அணிவர். ஆஹிதாக்னிகளாய் தினமும் அக்னி ஹோத்ரத்தையும், அவ்வப்பொழுது வேள்விகளையும் புரிவர். அந் நாட்டில் குறைந்த கல்வியும், குறைந்த செல்வமும் உடையவர் எவருமிலர். திருடு வதையும், பிறரைக் குறை கூறிப் பேசுவதையும், செயலாற்றல் அற்றவரையும் அங்கு காண்பதரிது.

இங்கு வால்மீகி முனிவர் அயோத்தி மக்களிடம் என்னென்ன உயர்வுகளைப் பேசினாரோ அவையனைத்தும் இல்லையென மறுத்துப் பேசுகிறார் கம்பர் தம் கவிதா சாதுர்யத்தினால். மறுப்பதன் கருத்தோ மறுக்கப்பட்டவைகள் மிக மிகுதியாக இருப்பதையே நன்கு உணர்த்துகிறது. இவ் வதிசயத்தை அவர் பாடல்களில் காண்போம்.

வண்மை இல்லை ஓர் வறுமை யின்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மையில்லை பொய்யுரை இலாமையால்
வெண்மை இல்லை பல கேள்வி மேவலால்.

க. ரா.பால.- நாட்டு

அயோத்தியில் வாரி வழங்கும் வள்ளல் பெருமக்களே கிடையாது. தர்மசாஸ்த்ரங்கள், நீதி நூல்கள் எல்லாம் கொடையை (தானத்தை) உயர்த்திப் பேசுகின்றன. ''ஐயமிட்டுண், ஈவது விலக்கேல்'', கொடையில் சிறந்தவன் கர்ணன், கொடிக்குத் தேரளித்த பாரி வள்ளல், முதலியவை கொடையையும், கொடையாளிகளையும் சிறப்பித்துப் பேசுகின்றன. அப்படியிருக்க கொடை எனும் சிறந்த பண்பை ஒரு புகழ் பெற்ற நகரில் இல்லையென எவ்வாறு மறுக்க முடியும்? ஏன் மறுக்க முடியாது? (தானம் ப்ரதிக்ரஹீத்ருவசம் என்பர். வாங்குபவர் இருந்தால் தானே ஒருவர் கொடுக்க முடியும்) வாங்குபவரை எங்கு காணலாம்? வறுமை, ஏழ்மை, தரித்திரம் எந்த நாட்டில் தாண்டவ மாடுகிறதோ அங்கு மக்கள் தம் தேவைகளைப் பூர்த்திசெய்ய, யார் கொடையாளி? யார் வள்ளல்? எனத் தேடி அலைந்து புகழ்பாடி, கொடுப் போரிடம் கையேந்தி ஏங்கி நிற்பர். அயோத்தியிலோ அனைவரும் சுயதேவை பூர்த்தியுடையவர். பிறரிடமுள்ளதைப் பார்த்து பேராசைப் படுபவருமல்லர். எனவே தானம் எனும் பண்பே அந்நாட்டில் கிடையாது. இதையே பிறி தோரிடத்தில் ''கொள்வாரிலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ'' என்றும் குறிப்பர்.

நேர் செறுனர் இன்மையால்—போர் செய்பவர் இல்லாமையால், திண்மை, பராக்ரமம் வீரம் இல்லை என்றார். வீண் சண்டைக்கோ, வீடு நிலம் செல்வம் காரணமாக வம்புக்கோ யாராவது வந்தால்தானே அவரை எதிர்த்துப் போரிட்டுத் தம் திறமையை வீரத்தைக் காட்ட முடியும்? எனவே நாட்டு மக்களும் ஒருவருக்கொருவர் பகைமை ஏற்பட்டாலன்றோ போர் மூளும்? கோபதாப உணர்ச்சிகளை வென்ற மக்களிடம் வீரத்தைக் காட்ட வாய்ப்பு ஏது?

உண்மையையே பேசு. அகத் தூய்மை வாய்மையாற் காணப்படும். ''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார், உள்ளத்துளெல்லாம் உளன்.'' வாய்மைக்காக அனைத்தையும் துறந்தவன் ஹரிச்சந்திரன். ஸத்யம் (உண்மை) உயர் பண்பாகப் பாராட்டப்படுகிறது. நம் அரசச் சின்னத்திலும் வாய்மையே வெல்லும் எனப் பொறிக்கப்பட்டிருக்கிறது. இச்சீரிய பண்பு அயோத்தி மக்களிடம் சிறிதும் கிடையாதாம்!

ஆம். நாட்டில் யாராவது பொய் பேசினால் இவன் பேசுவது பொய். அவன் உரைப்பது உண்மை எனப் பாகுபடுத்திக் கூற முடியும். உண்மை, பொய் ஒன்றுக்கொன்று எதிரானவை. ஒன்று இருந்தால் தானே மற்றொன்றை நாம் உணர முடிகிறது! பொய்மையே நாட்டில் இல்லையெனில் மெய்மை எனும் பண்பை எங்ஙனம் உணர முடியும்? எனவே இங்கு உண்மைப் பண்பே இல்லையென மறுத்தார்.

அந் நாட்டவரிடம் ஒண்மை (அறிவுடைமை) இல்லை. அங்குள்ளவர் பல்லோரிடம் பலவாறாகப் பல தட்வை கேட்டுக்கேட்டு அறிவின் முதிர்ச்சியைப் பெற்றவர்கள். அறியாதவர் ஒருவர் இருந்தால் மற்றவரை இவர் அறிவுடையவர் எனக் கூற முடியும். கல்லாதவர் இல்லாமையின் காரணத்தினால் தனி நபர் ஒருவரை இவர் கற்றவர், பேரறிஞர் எனச் சுட்டிக்காட்டுவதற்குரிய வாய்ப்பே இல்லாமல் போயிற்று. எனவே அந்நாட்டில் அறிவுடைமையே இல்லை என்றார். ஆக கொடை, வீரம், ஸத்யம், அறிவு ஆகிய நால்வகைப் பெருமைகளும் இந்நாட்டவருக்கு இல்லை என சமத்காரமாக உணர்த்தி நாட்டின் பெருமையை மிக மிக உயர்த்திக் காட்டியது கவிதையின் அழகாம்.

கல்வி, செல்வம், ஒழுக்கம்

அயோத்தி மக்கள், கல்வியிலும் பொருளாதாரத்திலும் பண்பிலும் மிகச் சிறந்தவர்களாகத் திகழ்ந்ததை கம்பன் வரிகளில் மூழ்கி மகிழ்வோம்.

கள்வார் இலாமைப் பொருள்காவலும் இல்லையாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ

க.ரா.பால. - நகரம்

அயோத்தி மக்கள் இரவிலும், வெளியிடங்களுக்குச் செல்லும் போதும் தம் வீடுகளைத் தாளிட்டுப் பூட்டிக் கொண்டு செல்வதில்லையாம். நாமோ ஒன்றுக்கு இரண்டாகப் பூட்டுகளைப் பூட்டுகிறோம். கோலிலுக்கோ, குளத்திற்கோ, ஆற்றுக்கோ, கடைகட்கோ, செல்லும்போதும் ஊர்திகளில் செல்லும் போதும் மனக் கவலையுடன் கையிலும் பைகளிலும் உள்ள பொருள்களைக் கூர்ந்து கவனித்துச் செல்கிறோம். ஆயினும் வீடு திரும்பிய தும் பல பொருட்கள் பறிபோனதை உணர்கிறோம். ஏன்? எங்கும் கள்வர்கள், எதிலும் கள்வர்கள், எப்பொழுதும் கள்வர்கள். காவல் நிலையங்களும், காவலர்களும் எத்தனை இருந்தால் என்ன? நம்மால் நிம்மதியாக வாழ முடிவதில்லை. எனவே களவு மிகுதியாக, காவலும் மிகுதியாகத் தேவைப் படுகிறது. கள்வரே இல்லாதபோது காவலுக்கு என்ன தேவை? அந்நாட்டில் எவருக்கும் பொருட் குறைவுமில்லை; எனவே பொருட் தேவையுமில்லை. கொடுக்கல் வாங்கல் பேச்சுக்கே இடமில்லாத போது கொடுப்பாரும், கொடுப்பதைப் பெறுவாரும் எங்ஙனம் இருக்க முடியும்?


கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்விமுற்ற
வல்லாரும் இல்லை அவைவல்லர் அல்லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ.

க.ரா.பால. - நகரம்

அந்நாட்டில் கற்பதற்குரிய நூல்களைக் கற்காமல் வீணே பொழுதைப் போக்கிக் கொண்டு சோம்பித்திரியும் மக்கள் எவருமிலர். எல்லோரும் நன்கு கற்றவர்களானபடியால் ஒரு சிலரைக் கல்வியில் தேர்ந்தவர் என்றும், பிறிதொருவரைக் கல்வியில் தேர்ந்தவர் அல்லர், என்றும் பாகுபடுத்திக் கூற வழியில்லை. இதே போன்று அனைவரும் பல்வகைச் செல்வங்களைப் பெற்றிருத்தலின் இவர் இல்லாதவர் ஏழை என்றோ, இவர் பெருஞ் செல்வத்தைப் பெற்றிருப்பவர் பணக்காரர் என்றோ பேச்சுக்காகச் சொல் வதற்குக் கூட அங்கு வழியில்லையாம்.



தாற்கிளந்தம்பிக் கரசீந்து, தண்டகம் நூற்றவள் சொற் கொண்டு போகி,
நுடங்கிடைச் சூர்ப்பணகாவைச் செவியொடு மூக்கு, அவள் ஆர்க்க அரிந்த
அழகரசன் வடுவூரில் ஸேவை ஸாதிக்கிறபடி.



ஸ்வாமி தேசிகன் அருளியபடி 'அத்திரவரக்கன் முடிபத்தும் ஒருகொத்தென உதிர்த்த திறலோனான' ராகவ ஸிம்ஹம் ஏரி உடைப்பைத் தடுத்து, லயோனல் ப்ளேஸ் என்ற கலெக்டருக்கு அற்புத ஸேவை ஸாதித்த ஸ்ரீ மதுராந்தகம்.

இங்கு வால்மீகியும் கம்பரும் கூறியதற்கு மாறாக நம் அனுபவம் இருக்கிறது. பெரும்பாலும் நன்கு கற்றவர்கள் ஏழைகளாகவே காணப் படுகின்றனர். வேதங்களை ஓதியதும் பல சாஸ்த்ரங்களைப் பயின்றதும் ஸ்ரீமான்களாக ஆவதற்குக் காரணமாக அமைவதில்லை. லௌகிக கல்வியிலும் பல தகுதிகளைப் பெற்றிருந்தும் பிழைப்பிற்கு வழியின்றி அல்லல் படுவதைப் பார்த்து வருகிறோம். மிகக் குறைந்த கல்வித் தகுதியுடையவனிடம் செல்வம் கொழிப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இந் நிலையை ஒரு கவிஞன் அழகாகப் புனைந்துரைப்பது (வர்ணனை செய்வது) நினைவுக்கு வருகிறது.

पद्मे मूढजने ददासि द्रविणं, विद्वत्सु किं मत्सरः?
नाहं मत्सरिणी नचापि चपला, नैवास्तिमूर्खे रतिः ।
मूर्खेभ्यः द्रविणं ददामि नितरां, तत्कारणं श्रूयतां
विद्वान् सर्वजनेषु पूजित तनुः मूर्खस्य नान्यागतिः ॥

பத்மே மூடஜனே ததாஸி த்ரவிணம், வித்வத்ஸு கிம் மத்ஸர:?
நாஹம் மத்ஸரிணீ, நசாபி சபலா நைவாஸ்தி மூர்க்கே ரதி: ।
மூர்க்கேப்ய: த்ரவிணம் ததாமி நிதராம் தத்காரணம் ஶ்ரூயதாம்
வித்வான் ஸர்வஜனேஷு பூஜிததனு: மூர்க்கஸ்ய நான்யாகதி:

ப்ரஸங்க ரத்நாவளி

ஓர் உரையாடல்

பக்தர்: தாயே! மஹாலக்ஷ்மி! அறிவிலியான மூடர்கட்கு நிறைய செல்வத்தை அளிக்கின்றாய். கற்றோர்களோ வறுமையில் வாடுகிறார்கள். இவர்கட்கு நீர் ஏன் சிறிதும் செல்வத்தை அளிப்பதில்லை. அறிவாளிகளிடம் உமக்கேன் வெறுப்பு?

மஹாலக்ஷ்மி: எனக்கு யாரிடத்திலும் விருப்பு வெறுப்பு கிடையாது. நான் யாரிடமும் பொறாமையோ, கோபமோ கொள்வதில்லை, முட்டாள் களிடம் எனக்கு புலவர்களைவிட அன்பும் கிடையாது.

பக்தன்: அப்படியாகில் அறிவிலிகட்குத்தானே நிரம்ப செல்வத்தை அளிக் கின்றீர். அது ஏன்?

மஹாலக்ஷ்மீ : அதுவா, நான் காரணத்தைச் சொல்லுகிறேன் கேள். நான் மக்கள் அனைவரையும் ஸமமாகத்தான் பாவிக்கிறேன். எல்லோரும் என் குழந்தைகளே. ஆனால் கல்லாதவர்கள் வெளியில் சென்று பொருள் ஈட்ட முடியாது. ''ஸ்வக்ருஹே பூஜ்யதே மூர்க்க:'' என்பர். அதாவது அறிவிலியை வெளியார் யாரும் மதிக்க மாட்டார்கள். தன் வீட்டிலுள்ளவர்கள் வேறு வழியின்றி ஓரளவு மதிப்பர். கற்றவர்

களையோ அனைவரும் மதிப்பர். ''கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு'' என்றும் ''வித்வான் ஸர்வத்ர பூஜ்யதே'' என்றும் பெரியோர் சொல்லக் கேட்டிருப்பாய், எனவே தன் வீடு, தன் ஊர், தன் நாடு, வெளி நாடு எனப்பாகுபாடின்றிப் படித்தவன் எங்கும் மதிப்புடன் வாழ்ந்து பொருளீட்ட முடியும். எனவே கதியற்றவர்கட்கு உதவுவது பெரியோர்களின் இயல்புதானே என்றாள்.

பக்தன்: அது சரி: இருந்தாலும் இக்காலத்தில் நன்கு வேதம் ஓதியவர்களும், சாஸ்த்ரங்களைக் கசடறக் கற்றவர்களும் வசதியின்றி சிரமப்படுவது ஏன்?

லக்ஷ்மீ: (சிறிது சாதுர்யமாக பதில் சொல்லுகிறாள்)

पीतः अगस्त्येन तातः चरणतलहतः वल्लाभोऽन्येन रोषात्
आबाल्यात् विप्रवर्यैः स्ववदनविवरे धारिता वैरिणी मे ।
गेहं मे छेदयन्ति प्रतिदिवसममी देव पूजा निमित्तं
तस्मात्खिन्ना सदाऽहं द्विजकुलसदनं भक्त! नित्यं त्यजामि

பீத: அகஸ்த்யேன தாத: சரணதலஹத: வல்லப:
அன்யேனரோஷாத்
ஆபால்யாத் விப்ரவர்யை: ஸ்வவதனவிவரே தாரிதா
வைரிணீ மே ।
கேஹம் மே சேதயந்தி ப்ரதிதிவஸம்அமீ தேவ பூஜா நிமித்தம்
தஸ்மாத் கின்னா ஸதாSஹம் த்விஜகுல ஸதனம் பக்த! நித்யம்
த்யஜாமி ॥

ப்ரஸங்க ரத்நாவளி

''பக்தா! அகஸ்த்யரைப் பற்றி உனக்குத் தெரியுமா? அவர் வேத சாஸ்த்ரங்கள் கற்றவர்களுள் ஒருவர். சிறந்த முனிவர். தபோ பலத்தினால் எதையும் செய்வதற்குரிய ஆற்றல் மிக்கவர். என் தகப்பனாரை ரொம்பக் கஷ்டப்படுத்திவிட்டார்.''

பக்தர்: உங்கள் தகப்பனாரையா? அவர் யார்?

லக்ஷ்மீ: ''அமிழ்தத்தைப் பருகும் ஆசையில் தேவர்களும் அஸுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்த போது நான் தோன்றினேன். எனவே கடல்தான் எனது தந்தை. அவர் அமுதில் வந்த அமுதாம் என்னைத் திருமாலுக்கு மணம் முடித்தார். ஒரு ஸமயம் கடற்கரையில் அகஸ்த்ய முனிவர் தவம் செய்து கொண்டிருந்தபோது ''கடலலைகள் நமக்கு ஊறு செய்கின்றனவே'' என வெகுண்டு கடல் நீரை முற்றிலும் பருகி விட்டார். உலகம் போற்றும் புருஷோத்தமனையே மணந்த பெருமை

பெற்ற எனது தந்தைக்குத் தீங்கு செய்த ஒருவரை நான் வெறுக்காமல் இருக்க முடியுமா?''

''ஒரு ஸமயம் த்ரிமூர்த்திகளில் உயர்ந்தவர் யார் என முனிவர் களிடையே விவாதம் நிகழ்ந்தது. அது போழ்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு வர்க்கு உயர்வு கூற, ப்ருகு முனிவர் நேரில் சோதனை செய்ய எண்ணி ஸத்ய லோகம், கைலாஸம் சென்று, அவ்விருவர்களின் செய்கையால் மனம் குன்றி ஸ்ரீ வைகுண்டலோகம் வந்தார். அப்பொழுது திருமால் யோக நித்திரையில் ஆழ்ந்திருப்பதைத் தூங்குவதாகக் கருதி, நான் நேசித்து உறையும் மார்பில் உதைத்தார். உடனே என் நாயகன் எழுந்து சிறிதும் வெகுளாமல் பக்தனின் காலில் நோவு ஏற்படுமே எனப் பிடித்துவிட்டார். அப்பொழுது ப்ருகு முனிவர் தம்மையும் அறியாது மெய்ம்மறந்து ''நீரே மூவருள் முதல்வன். அனைத்திற்கும் காரணப் பொருள், புருஷோத்தமன்'' என்றெல்லாம் என் புருஷனைத் துதித்தார். துதித்து என்ன பயன்? முன்னவர் நான் பிறந்த வீட்டிற்கு ஊறு செய்தார். பின்னவரோ என் வீட்டிற்கே''.

''இவ்விருவரின் இனத்தவர்கள் எப்பொழுதும் வேதம் ஓதிக்கொண்டு எனது சத்ருவான ஸரஸ்வதீ தேவியை தங்கள் வாயில் வைத்துப் புகழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் செய்யும் உபத்திரவங்களைத் தாங்காது எங்கேயாவது தனித்து வாழலாமென்று தடாகங்களின் நடுவே அலர்ந்த தாமரை மலர்களில் நிம்மதியாக வாழத் தலைப்பட்டேன். அங்கும் வந்து விட்டார்களே இவர்கள்! ஏன் என்று கேட்டால், ''எங்கள் தெய்வ வழி பாட்டிற்குத் தாமரை மலர் மிக உயர்ந்ததாயிற்றே, எனவே அம்மலர் களைக் கொய்ய வந்தோம்'' என்கின்றனர். இவ்வாறு எனக்கு உரிய இடங்களை யெல்லாம் தகர்க்கும் இவ்வந்தணர்களின் இல்லங்கட்கு இனி நாம் போகக் கூடாது எனும் முடிவுக்கு வந்திருக்கிறேன்''.

பக்தன்: ''ஜகன் மாதாவாகிய தாங்களே இப்படிச் செய்தால் உங்கள் குழந்தை களாகிய நாங்கள் தங்கள் கடாக்ஷமின்றி (லக்ஷ்மீ கடாக்ஷமின்றி) ஏழ்மையில் சிக்கித் தவிக்க வேண்டியதுதானா?''

மஹாலக்ஷ்மீ: ''பக்தா! உனக்கு ஏன் இந்தக் கவலை? எனது கடாக்ஷம் பெற்று நிறைந்த செல்வத்துடன் மக்கள் எங்கெல்லாம் இன்புற்று வாழ்வார்கள் என்பதைச் சொல்கிறேன். கேட்டு நீயும் அதன்படி நட''.

यत्राभ्यागत दानमान चरण प्रक्षालनं भोजनं
सत्सेवा पितृ देवतार्चनविधिः सत्यं गवां पालनं ।
धान्यानामपि संग्रहः न कलहः चित्तानुरूपाप्रिया
हृष्टा प्राह सखे वसामि कमला तस्मिन् गृहे निश्चला ॥

யத்ர அப்யாகத தானமான சரண ப்ரக்ஷாளனம் போஜனம்
ஸத்ஸேவா பித்ருதேவதார்ச்சனவிதி: ஸத்யம் கவாம் பாலனம் ।
தான்யானாமபி ஸங்க்ரஹ: ந கலஹ: சித்தானுரூபா ப்ரியா
ஹ்ருஷ்டா ப்ராஹ ஸகே! வஸாமி கமலா தஸ்மின்
க்ருஹே நிஸ்சலா ।।

ப்ரஸங்க ரத்நாவளி

வீட்டிற்கு அதிதிகள் (விருந்தினர்) வந்தால், அவர்களை வருக! வருக! என அன்புடன் அவர்கள் மனம் சுருங்காது இனிது நோக்கி வரவேற்று அவர்கள் கால்களை அலம்பத் தண்ணீர் கொடுத்து, உள்ளே அழைத்து, வரவேற்று, சென்று அமர்த்தி, உபசரித்து, உண்பித்துப் பின்னர் வந்த காரணத்தை அறிந்து, தம்மால் இயன்ற உதவியைச் செய்து பின்னர் விடை கொடுக்க வேண்டும். நம்மிடம் உணவுப் பொருள் இல்லாவிடினும் எவ்வகையிலாவது ஸம்பாதித்து (ஈட்டி) வந்த விருந்தினருக்கு உணவு அளிக்க வேண்டுமென மறை முறையிடுகிறது. நாம் எதிர்பாராது வரும் அதிதியை மஹா விஷ்ணுவாகப் பாவிக்க வேண்டுமெனப் பெரியோர் பணிப்பர். எனவே மஹாவிஷ்ணு எந்த க்ருஹத்தில் மனமுவந்து தங்கு கிறாரோ, அங்குதானே மஹாலக்ஷ்மியும் நிலையாகத் தங்குவது உசிதம்.

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். குறள் - 84

அறிவினாலும் ஒழுக்கத்தினாலும் சிறந்த விருந்தினரை முகம் இனியராய் குறைவற உபசரிக்கின்றவர்களின் வீடுகளில், ''தான் அருளும் செல்வம், நல்வழியில் செலவு ஆவதைக் கண்டு'' மனம் மகிழ்ந்து திருமகள் அங்கேயே வாழ விரும்புவாள். இங்கு கவிஞரின் இக்கூற்றும் அழகிய சான்றாக அமையும்.

மேலும் ஆத்ம தத்வஞானம் பெற்ற ஸத்துக்களுக்குச் ஸேவை செய்வது, நம் முன்னோர்களாகிய பித்ருக்களுக்குச் செய்ய வேண்டிய ஶ்ரார்த்தம் தர்ப்பணங்கள் முதலியவற்றை ஶ்ரத்தையுடன் உரிய காலங்களில் செய்வது, தாயும் தந்தையுமாய் நம் அனைவரையும் காத்தருளும் மாதவனைப் பக்தியுடன் ஆராதிப்பது, தேவர்கள் அனைவரையும் திருமகளையும் தன் மேனியில் கொண்ட ஆவினத்தை உரிய காலத்தில் தண்ணீர் காட்டி, தீனி போட்டு, குளிப்பாட்டி, காலார மேயவிட்டு நேசமுடன் வளர்ப்பது, தான்ய லக்ஷ்மீ என வழங்கப்படும் தானியங்களைக் கண்டபடி இறைத்து அலட்சிய மாகப் பாழாக்காமல் ஈரம் பதர் புழுதியின்றி களஞ்சியங்களில் பாதுகாப்பாக சேமித்து வைப்பது, கூடிவாழும் தங்களிடையே (குடும்பத்தில்) அடிக்கடி பயனற்ற சிறு பூசல்கள் சிறிதும் நிகழாமல் பார்த்துக் கொள்வது. எதிர்த்தும் அதிர்ந்தும் பேசாத மனத்திற் குகந்த இல்லாளுடன் வாழ்வது முதலியவை எந்த மாளிகையில் இயற்கையாக அமைந்திருக்கின்றனவோ அவையனைத்

தும் திருமகளின் திருமாளிகைகளாக அமையும். அதாவது அத்தகைய இல்லந்தோறும் இடைவிடாது நான் மன மகிழ்வுடன் வாழ்வேன் என்றாள் மஹாலக்ஷ்மீ.

மேற்கண்ட திருமகளின் கூற்றுக்கேற்பத் திருவயோத்தி அமைந்திருந்தபடியால் அங்கு செல்வமும், கல்வியும், ஒழுக்கமும் கை கோத்து நின்றதில் வியப்பில்லையன்றோ! இதையே கம்பர் அயோத்தியில்:

''எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும்'' எய்தலாலே
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லைமாதோ என்றார்.

க.ரா.பால.- நகர

தம் குழந்தைகள் நோய் நொடியின்றி நன்கு வாழ வேண்டும், கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகத் திகழ வேண்டும். பெருஞ் செல்வத்தை ஈட்ட வேண்டும். இவற்றைப் பெற தம்மக்கள் நீண்ட ஆயுளைப் பெற வேண்டும் என்கிற அவா இல்லாத பெற்றோர் நாட்டில் பெரும்பாலும் இலர் எனலாம். ஆனால் நாட்டில் ஏழ்மையும் நோயும், படிப்பின்மையும் மலிந்து கிடப்பதையே கண்கூடாகப் பார்த்து வருகிறோம். ஏன்? நாட்டில் தீவினைச் செயல்கள் மலிந்துவிட்டன. பெற்றோர்கள் அஞ்சாது பிறருக்குத் தீங்கிழைப்பதாலும், பிறர் உயர்வைக் கண்டு பொறாமைப்படுவதாலும், மனமறிந்து பொய் பேசுவதாலும் ஏற்படும் பாபச் செயல்கள் நம் குழந்தைகளைப் பாதிக்கின்றன. அகால மரணங்களும் நோய்களும் மலிகின்றன. அயோத்தி மக்களோ மாசுமறுவற்றவர்கள். எவ்வகைத் தீமையையும் மனதாலும் நினைக்காதவர். அங்கு தீச்செயலுக்கு இடமேது?

மனிதன் சிறிதும் கோபத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது. ''க்ருத்தோ ஹன்யாத் குரூனபி'' என்பர். கோபம் மிகுந்தால் மனிதர்களின் தரம் தெரியாது. கோபங் கொண்டவன் தனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியரைக் கூடக் கொன்று விடுவானாம் . இதை கீதாசார்யன் நமக்கு உபதேசிக்கிறார்.

ध्यायतो विषयान् पुंसः सङ्गस्तेषूपजायते ।
सङ्गात्संजायते कामः कामात्क्रोधोऽभि जायते ॥
क्रोधाद्भवति संमोहः संमोहात् स्मृति विभ्रमः ।
स्मृति भ्रंशात् बुद्धिनाशः बुद्धिनाशात् प्रणश्यति ॥

த்யாயதோ விஷயான் பும்ஸ: ஸங்கஸ்தேஷுஉபஜாயதே ।
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோத: அபிஜாயதே ॥
க்ரோதாத் பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதிவிப்ரம: ।
ஸ்மிருதி ப்ரம்ஶாத் புத்திநாஶ: புத்திநாஶாத் ப்ரணஶ்யதி ॥

பகவத்கீதை - 2.62,63

மனிதன் தன் தேவைகளைப் பெருக்கிக் கொள்ளக்கூடாது. தேவைகள் பெருகப்பெருகத் தேவைப்படும் பொருள்களை நினைக்கவும், அவற்றோடு தொடர்பு கொள்ளவும் தோன்றும், பல பொருட்களோடு தொடர்பு ஏற்பட அவற்றை எப்படியாவது பெற வேண்டும் என அவா மிகும். ஆசையோ பெருகிவிட்டது. ஆனால் ஆசைப்படும் பொருட்களோ கிட்டுவதாயில்லை. கிட்டாததற்குக் காரணம் அருகிலுள்ள அல்லது தொடர்புள்ள ஒரு சிலர் தான் என எண்ணத் தோன்றும். அந்நிலையில் அவர்களை நினைக்கும் போதும், பார்க்கும் போதும் எரிச்சலும் கோபமும் உண்டாகும். கோபம் தலைக்கேறினால் இது செய்யத்தகுந்தது. இது செய்யத் தகாதது எனும் பகுத்தறிவும், நல்லதை நினைக்கும் ஆற்றலும் குறையும். இம்மயக்கத்தினால் பல தீமைகளைச் செய்து அல்லல்படுவான். இத்தகைய அழிவுக்குக் காரணமாகிய கோபத்தை அயோத்தி மக்களிடம் பார்க்கவே முடியாதாம். எனவே அனைவரும் நல்லவை தீயவைகளை நன்கு ஆராய்ந்து செயல்படுவதால் இன்புற்று வாழ்கின்றனர். புகழோடு வாழ்கின்றனர், பழிப்பு இன்றி வாழ்கின்றனர். இதையே பொய்யா மொழியாரும் உணர்த்துகிறார்.

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார், இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர். குறள் - 240

ஆறறிவு பெற்றும் புகழின்றி வாழ்பவர் ஜடப்பொருளோடு ஒப்பர். இத்தகையோர் வாழ்ந்தும் வாழாப் பிணத்திற்குச் சமம் ஆவர்.

எனவே ''தோன்றிற் புகழோடு தோன்றுக'' பிறந்தால் புகழ் பெறுதற்குரிய நற்பண்புகளோடு பிறக்க வேண்டுமாம். இதற்குப் பெற்றோர்களின் நற்பண்புகளும் நற்செயல்களும் காரணமாகும் என்பது கருத்து.

அயோத்தி மக்கள் தீவினை புரியாது. சீற்றமின்றி ஆழ்ந்து சிந்தித்து சிறந்த தருமச் செயல்களையே புரிவதால் பழிப்பின்றி ஏற்றம் பெற்று வாழ்வதை கம்பரின் இக்கவிதை நமக்கு உணர்த்துகிறது.

கூற்றம் இல்லை ஓர்குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லை தம்சிந்தையில் செம்மையால்
ஆற்றல் நல்லறம் அல்லது இலாமையால்
ஏற்றம் இன்றி இழிதகவு இல்லையே.

க.ரா.பால. - நாட்டு

இவ்வளவு பெருமை பெற்ற நாட்டை ஆளும் பேரரசனை இனி அறிமுகம் செய்து கொள்வோம்.

மன்னர் மன்னன்

तस्यां पुर्यां अयोध्यायां वेदवित् सर्वसंग्रहः ।
दीर्घदर्शी महातेजाः पौरजानपद प्रियः ॥
इक्ष्वाकूणां अतिरथः यज्वा धर्मरतो वशी ।
महर्षिकल्पः राजर्षिः त्रिषु लोकेषु विश्रुतः ॥
तेनसत्याभिसन्धेन त्रिवर्गमनुतिष्ठता ।
पालिता सा पुरी श्रेष्ठा इन्द्रेणेवामरावती ।
राजा दशरथो महान् .... । ..... नक्षत्राणीव चन्द्रमाः ।
तां सत्यनामां दृढतोरणार्गलां
गृहैर्विचित्रैः उपशोभितां शिवाम् ।
पुरीमयोध्यां नृ सहस्र संकुलां
शशास वै शक्रसमो महीपतिः ॥

தஸ்யாம் புர்யாம் அயோத்யாயாம் வேதவித் ஸர்வஸங்க்ரஹ: ।
தீர்கதர்ஶீ மஹாதேஜா: பௌரஜானபத ப்ரிய: ॥
இக்ஷ்வாகூணாம் அதிரத: யஜ்வா தர்மரதோ வஶீ ।
மஹர்ஷிகல்ப: ராஜர்ஷி: த்ரிஷு லோகேஷு விஶ்ருத: ॥
தேன ஸத்யாபிஸந்தேன த்ரிவர்கம் அனுதிஷ்டதா ।
பாலிதா ஸா புரீ ஶ்ரேஷ்டா இந்த்ரேணேவ அமராவதீ ॥
ராஜா தஶரதோ மஹான்...।...நக்ஷத்ராணீவ சந்த்ரமா: ॥
தாம் ஸத்யநாமாம் த்ருடதோரணார்கலாம் க்ருஹை: விசித்ரை:
உபஶோபிதாம் ஶிவாம் ।
புரீம் அயோத்யாம் ந்ரு ஸஹஸ்ர ஸங்குலாம்
ஶஶாஸ வை ஶக்ரஸமோ மஹீபதி: ॥

வ.ரா. பால. - 6

அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு தசரதசக்ரவர்த்தி நாட்டை ஆண்டு வந்தான். எவ்விதப் பாகுபாடுமின்றி சந்திரன் இவ்வுலகிலுள்ள அனைவரையும் மகிழ்விப்பது போல் இவ்வரசனும் நாட்டு மக்கள் எவ்விதக் குறையும் இல்லாது, மகிழ்வுடன் வாழத் துணைபுரிவானாம்; பகைவர்களாலோ, மற்றவர்களாலோ இடையூறுகள் ஏற்படின் மக்கள் இனிது வாழ முடியுமா? எவ்வித இன்னல்களும் தலைகாட்ட முடியாதபடி தேவேந்திரனைப்

போன்று அவ்வப்பொழுது பகைவர்களை வீரத்தினாலும், ராஜ தந்திரத்தி னாலும் வென்று நாட்டைப் பாதுகாத்து வந்தானாம்; இதற்குத் தேவையான அறிவும் ஆற்றலும் சக்ரவர்த்தியிடம் நிரம்பியிருந்ததைக் கவிஞர் எடுத்துக் காட்டுகிறார்.

தசரத மன்னர் இளமையில் குலகுருவிடம் மறைகள் முழுவதையும் முறையாகப் பயின்று, அவற்றின் பொருளையும் நன்கு அறிந்தவர். கற்றோ ரையும், மற்றோரையும் செல்வத்தையோ, பரிசில்களையோ அளித்தும், ராஜ தந்திர முறையிலும் தம்பால் ஈர்க்கும் கவர்ச்சியைப் பெற்றிருந்தார். எதிர் காலத்தில் நிகழக் கூடியவற்றை முன்கூட்டியே உணர்ந்து, அதற்கேற்ப அரசுச் செயல் முறைகளை வகுத்துக் கொள்ளும் திறமையும் உள்ளவர். குடிசை வாழ் மக்களாலும், கிராம, நகர் வாழ் மக்களாலும் மிகவும் நேசிக்கப்பட்டு வந்தார். இக்ஷ்வாகு வம்சத்திலேயே சிறந்த போர் வீரர். அதாவது பத்தாயிரம் படைத் தலைவர்களை எதிர்த்து, துணையின்றி, போர் புரியும் வல்லமை யோடு விளங்கியவர். நாட்டின் நலனுக்காக விதிப்படி பல வேள்விகளைச் செய்தவர். பொதுமக்களின் நலன் பொருட்டு சாலைகள் அமைப்பது, மரங்களை வளர்ப்பது, குடி நீருக்காக கிணறுகள் தோண்டுவது, பல்வகைப் பயன் கருதி பெருங்குளங்களை வெட்டுவது போன்ற அறப் பணிகளில் இயற்கையாகவே விருப்பு உடையவர்.

மக்கள் அனைவரையும் அன்பினால் கவர்ந்து தன் வயப்படுத்தியவர். பேரரசராயினும் தம் புலன்களை பட்டி மேயவிடாது வனவாஸிகளான மஹர்ஷிகள் போன்று புலன்களை வென்று ராஜரிஷியாகத் தன்னை ஆக்கிக் கொண்டவர். எனவே கீழ் மேல் உலகங்களிலும் புகழ் பெற்றவர். தேர்ப் படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படைகளைப் பாங்குற அமைத்துக் காத்தலினாலும், நாடெங்கும் பல நண்பர்களைப் பெற்றிருந் தமையாலும், பகைவர்களை வென்று மீண்டும் அவர்களைத் தலையெடுக் காதபடி செய்தவர். நாட்டிலும், வீட்டிலும் ஸத்யம் தவறாது நன்னெறியில் நின்று அறம் பொருள் இன்பங்களை மக்களும் தாமும் பெற்று சுவர்க்கத்தில் உள்ள அமராவதி நகரை தலைநகராகக் கொண்டு தேவர்களை இந்திரன் மகிழ்வுடன் ஆளுவது போன்று, அவர் இப்பூவுலகை ஆட்சி செய்து வந்தார். இவர் ஆட்சியில் மக்களும், சிற்றரசர்களும் கல்வி கேள்விகளில் சிறந்தவர் களாய் அறப்பற்றுடன் ஸத்ய நெறியில் நின்று மகிழ்ந்த உள்ளத்தினராய் வாழ்ந்தனர் என்பதைக் கம்பரின் பாடல் விளக்குவதைப் பார்ப்போம்.

மன்னவர் தருதிறை அளக்கும் மண்டபம்
அன்னமென் நடையவர் ஆடும் மண்டபம்
உன்னஅரும் அருமறை ஓதும் மண்டபம்
பன்னஅருங் கலைதெரி பட்டி மண்டபம்

க. ரா. பால.- நகரம்

அயோத்தியில் ஆங்காங்கு பலப்பல பெரும் மண்டபங்கள் நிறைந் திருந்தன. அவற்றை அளக்கு மண்டபங்கள், ஆடு மண்டபங்கள், ஓது மண்டபங்கள், பட்டி மண்டபங்கள் என மக்கள் வழங்குவர். அளக்கு மண்டபங்களில் சிற்றரசர்கள் தத்தம் நாடுகளினின்றும் சக்ரவர்த்திக்கு அரசிறைப் பொருள்களாக (கப்பமாக) பவுன்களையும், உயர்ந்த விளை பொருள்களையும் கொண்டு வந்து கொடுப்பார்கள். அவற்றை அரசு அதிகாரிகள் அளந்து வாங்கிச் சேமித்து வைப்பார்கள். இவ்வாறு கருவூலங் களாகவும், கிடங்குகளாகவும் களஞ்சியங்களாகவும் பயன்படும் மண்டபங் களை அளக்கு மண்டபம் என்பர்.

மக்கள் மகிழ்ச்சியுடன் பொழுது போக்குவதற்காக கலையரங்குகள் தேவையான வசதிகளுடன் பல தெருக்கள் கூடுமிடங்களில் அமைக்கப் பட்டிருந்தன. அங்கு பரதக்கலை வல்லுனர்களான, அன்னம் போன்ற மெல்லிய நடையழகும், அழகிய உடற்கட்டமைப்பும் மிக்க மகளிர் திருமாலின் அவதார லீலைகளை பரத நாட்டியமாக ஆடி, காண்போர் மனதில் இறைப்பற்று சுரக்குமாறும், தீவினைகளை அகற்றி நற்கருமங் களைப் புரிவதில் உறுதி கொள்ளுமாறும் செய்வர். இவ்வாறு பரத நாட்டியம் நிகழும் இடங்களை ஆடுமண்டபங்கள் என்பர்.

அக்காலத்தில் உபநயனம் ஆனதும் குருகுல வாஸம் செய்து கொண்டு வேதாத்யயனம், செய்வதையே முதற் கடமையாகக் கொண்டிருந்தனர். இக்காலத்தைப் போன்று வேதங்கள் புத்தகவடிவில் அப்பொழுது கிடையா. கற்றவற்றை நன்கு உருப்போட்டு ஞாபகத்தினின்றும் சிறிதும் நழுவாது மனதில் கொள்வர். இவ்வேதங்களில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் ஸ்ரீமந் நாராயணனையே கூறும். எனவே இவ்வெழுத்துக்களை ஓதுகின்றவர் கட்கும், இதைக் கேட்போருக்கும், பாபங்களை அகற்றி நல்வாழ்வை அளிப்பதோடு நாட்டிற்கும் நலங்கள் பல விளைவிக்கும். கற்பதற்கும், நினைவில் கொள்வதற்கும் உரிய வேதங்களைக் கற்றவர்கள், தம் வாழ் நாளில் அவற்றை மறப்பரேல் பலப்பல துன்பங்களைக் கொடுக்கும் பாபங் களைச் செய்தவர் ஆவர் என அறநூல் பகரும். எனவே இளமையில் ஓதியதை முதுமை வரை மறக்காதிருக்கவும், நாடும் மக்களும் நலம் பெறவும் வேதங்களைக் கோயில்களிலும், பொது இடங்களிலும் பாராயணம் செய்து வந்தனர். இத்தகைய இடங்களை ஓதுமண்டபங்கள் என்பர்.

குருமுகமாக ஓதியுணர்ந்த வேதங்களின் பொருளை நன்கறிய உதவுபவை வேதாங்கங்கள்.

शिक्षा व्याकरणं छन्दः निरुक्तं ज्योतिषं तथा ।

कल्पश्चेति षडङ्गानि

சிக்ஷா வ்யாகரணம் சந்த: நிருக்தம் ஜ்யோதிஷம் ததா ।
கல்பஸ்சேதி ஷடங்கானி ॥

அமரகோசம்

இவை ஶிகைஷ, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிடம், கல்பம் என ஆறுவகைப்படும். இவற்றையும், இவற்றைக் கொண்டு மறைகளையும் அறிஞர்கள் கூடி ஆராய்ந்து முடிவு காண்பதற்குரிய இடங்களை பட்டி மண்டபங்கள் என்பர். தசரதரின் ஆட்சியில் நாட்டு மக்கள் செல்வத்தி னாலும், கல்வியினாலும் சிறப்புற்று வாழ்ந்தனர் என்றும் நேரிய முறையில் பொழுதைப் போக்கினர் என்றும் அறிகிறோம்.

தசரதர் மாத்திரம் அல்லாமல் இவருடைய முன்னோர்களின் ஆட்சி முறையும் மிகச் சீரியது என்பதை மஹாகவி காளிதாஸன் அழகுற வருணிப்பதைப் பார்ப்போம்.

प्रजानामेव भूत्यर्थं स ताभ्यः बलिमग्रहीत् ।
सहस्रगुणमुत्सृष्टं आधत्ते हिं रसं रविः ॥

ப்ரஜானாமேவ பூத்யர்த்தம் ஸ: தாப்ய: பலிம் அக்ரஹீத் ।
ஸஹஸ்ரகுணம் உத்ஸ்ரஷ்டும் ஆதத்தே ஹி ரஸம் ரவி: ॥

காளிதாஸன், ரகுவம்சம் - 1.18

அயோத்தி நாட்டிலும் வரி வசூல் உண்டு. ஆனால் அதை சுயநலத்திற்குப் பயன்படுத்தாது மக்களது நலனுக்காகவே பயன்படுத்து வார்களாம். அதிலும் வசூலிக்கப்பட்டதைவிட பன்மடங்கு பொதுநலப் பணிகளில் செலவு செய்வார்களாம். இப்படியும் உண்டோ! எனில் அதை ஒரு உவமையின் மூலம் அழகாக விளக்குகிறார். கோடையில் கதிரவனின் கதிர்களின் வெம்மையை நம்மால் தாங்க முடிவதில்லை. இவ்வெப்பம் கடல்களினின்றும் நீரை ஆவியாக எடுத்துச் சென்று மேகங்களாக மாற்றிப் பன்மடங்காக பூமியில் நிறைய மழை பொழிய உதவுகிறது. இவ்வரசர்களும் ஸூர்ய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா? எனவே தம்குல முதல்வனைப் போன்றே பன்மடங்காக மக்களுக்கு உதவ, பெயரளவுக்கு அதாவது ஆறில் ஒரு பங்கு வரி வசூல் செய்கிறார்களாம்.

அயோத்தி அரசரின் அரசியல் தீர்வுகளும், சிந்தனைகளும் மிக உயர்ந்தவையாம். மேம்பட்ட, ஒழுக்கமுள்ள அரசியலுக்கு மூலமானது மந்த்ரமாகும். அதாவது ஆலோசனை, நாட்டில் செய்ய வேண்டியவை எவை? எவற்றை முன்பு தொடங்க வேண்டும், எவற்றை பின்னர், எப்பொழுது எவ்வாறு செய்ய வேண்டும்? மேற்கொள்ளும் பணியின் தன்மை, இதை யார் நன்கு முடிப்பார்? என்றவாறு கேள்விகளை எழுப்பி தனிமையிலும், தொடங்கும் பணிகளில் அனுபவமுள்ள நிபுணர்களோடும் நன்கு ஆராய

வேண்டும். கூடி ஆராயும் காலத்தில் தமது கருத்தை அவர்கள் அறியாதவாறு நடந்துகொள்ள வேண்டும். ஒருவனின் புருவ நெறிப்பு, முகத்தில் வேதனை, வருத்தம், மகிழ்ச்சி இவைகளால் ஏற்படும் மாறுதல், தோற்றம் இவற்றைக் கொண்டு அவன் எண்ணத்தை பிறர் அறிய முடியும். அதற்கு அரசர் இடம் தரலாகாது. வல்லுனர்களின் கருத்துக்களை அறிந்து, அவற்றைச் சீர்தூக்கி ஆராய்ந்து தக்க முடிவிற்கு வந்து உத்தரவிட வேண்டும் இதையே,

> **இதனை இதனால்இவன் முடிக்கும் என்று ஆய்ந்து**
> **அதனை அவன்கண் விடல்** குறள் - 517

எனும் குறட்பா வலியுறுத்தும்.

அரசாங்க முடிவுகள் எப்பொழுதும் ரஹஸ்யமாக இருக்க வேண்டும். முன்கூட்டியே தெரிந்துவிட்டால் குறிப்பிட்ட பணி நிறைவேறாதபடி பல இடையூறுகள் நேர்ந்துவிடும். பட்ஜட் ரஹஸ்யம் முன்கூட்டியே அறியப் படுமானால் அதிக வரி விதிப்புக்குரிய பொருட்கள் வணிகர்களால் மறைக்கப்பட்டு கிடைக்காமலும் பன்மடங்கு விலையுள்ளதாகவும் ஆவதை நாமும் கண்டிருக்கிறோம்.

मन्त्रमूलं यतो राज्यं अतो मन्त्रं सुरक्षितम् ।
कुर्याद्यथा तन्नविदुः कर्मणां आफलोदयात् ॥

மந்த்ரமூலம் யத: ராஜ்யம் அத: மந்த்ரம் ஸுரக்ஷிதம் ।
குர்யாத் யதா தத் ந விது: கர்மணாம் ஆபலோதயாத் ॥

அரசு ரஹஸ்யமான முடிவுகளை ஆதாரமாகக் கொண்டது. எனவே இன்றியமையாத ரஹஸ்யமான முடிவுகள் நிறைவேற்றப்படும்வரை வெளியில் தெரியக்கூடாது. திட்டம் நிறைவேறிய பிறகு அதனால் கிடைத்த நற்பயன்களைக் கொண்டே மக்கள் அதன் காரணத்தை ஊஹித்து அறிய வேண்டும் என யாஜ்ஞவல்கிய முனிவர் கூறுவார்.

நாம் இப்பிறவியில் பல இன்ப துன்பங்களை அனுபவித்து வருகிறோம். ஸுகமோ துக்கமோ வருவதற்கு என்ன காரணம் என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால் அறநூல்களிலிருந்து இன்ன இன்ன இன்ப துன்பங்களை நாம் செய்த நல்ல அல்லது தீய செயல்கட்கு பயன்களாக அனுபவிக்க வேண்டி வரும் என அறிகிறோம். நாம் செய்யும் செயல்கட்கு முற்பிறவியில் நாம் செய்த பாப புண்ணியச் செயல்களினால் ஏற்பட்ட ஸம்ஸ்காரங்களே (வாஸனைகளே) காரணம் என, பலனை அனுபவிக்கும் போது அறிவது போல, அரசியலிலும் பின் விளைவுகளைக் கொண்டே அரசியலில் முன் முயற்சிகளை ஊஹித்து அறிய வேண்டுமாம். இக்காலத்தி லும் அமைச்சர்கள் போன்றோர் ரகசியக் காப்பு பிரமாணம் எடுத்துக்

கொள்வதை நாம் அறிவோம். இதனால் அயோத்தி மன்னர்களின் ஆட்சி சிறப்புற்றிருந்ததாம். இதை விளக்குகிறான் ரகுவம்சத்திலே.

तस्य संवृतमन्त्रस्य गूढाकारेंगितस्य च ।
फलानुमेयाः प्रारम्भाः संस्काराः प्राक्तना इव ॥

தஸ்ய ஸம்வ்ருதமந்த்ரஸ்ய கூடாகாரேங்கிதஸ்ய ச ।
பலானுமேயா: ப்ராரம்பா: ஸம்ஸ்காரா: ப்ராக்தனா இவ ॥

மேலும் அயோத்தி மன்னர் நாட்டு மக்களுக்கு ஆட்சி செலுத்தும் அரசராக மட்டுமன்றி தந்தையாகவும் திகழ்ந்தாராம்.

प्रजानां विनयादानात् रक्षणात् भरणादपि ।
स पिता पितरस्तासां केवलं जन्महेतवः ॥

ப்ரஜானாம் விநயாதானாத் ரக்ஷணாத் பரணாதபி ।
ஸ பிதா பிதர: தாஸாம் கேவலம் ஜன்மஹேதவ: ॥

காளிதாஸன், ரகுவம்சம் - 1 - 24

ஒருவனுக்கு யார் பிறப்பை அளிக்கிறாரோ (பெற்றெடுத்தாரோ) அவர்தானே அவனுக்குத் தந்தையாக முடியும். நாட்டை ஆளும் அரசன் எவ்வாறு ஒருவனுக்குத் தந்தையாக முடியும்? ஆம். உண்மை. ஆயினும் அறநூல் ஐவரை ஒருவனுக்குத் தந்தையாகக் கூறுகிறது.

जनिता च उपनेता च यश्च विद्यां प्रयच्छति ।
अन्न दाता भयत्राता पञ्चैते पितरः स्मृताः ॥

ஜனிதாச உபநேதாச யச்ச வித்யாம் ப்ரயச்சதீ ।
அன்ன தாதா பயத்ராதா பஞ்ச ஏதே பிதர: ஸ்ம்ருதா: ॥

நீதி ஸ்லோகம்

தன்னைப் பெற்றெடுத்தவன், உபநயனம் செய்விப்பவன், கல்வியை அளிப்பவன், உணவு அளிப்பவன், ஆபத்தினின்றும் காப்பவன், ஆகிய இவ்வைவரும் தந்தைகளாகக் கருதப்பட வேண்டியவர்கள் என அறநூல் கூறுகிறது.

இங்கு தசரதர் நாட்டு மக்களுக்கு உரிய வயதில் கல்வியைக் கற்பித்து, அவர்களை நன்னெறியில் நிற்கச் செய்து ஸபையில் சான்றோனாகத் திகழச் செய்கிறார். அவர்களின் வாழ்வில் ஏற்படும் அச்சத்தைப் போக்கி விபத்துக் களினின்றும் பாதுகாக்கிறார். மேலும் உடுக்க உடையும், உண்ண உணவும், இருக்க இடமும், பருக நீரும் கிடைக்கச் செய்து நன்கு வாழ வழி காட்டு கிறார். எனவே இம் மூன்று வகையினாலும் அரசர் தந்தையாகக் கருதப்பட

வேண்டியவராகிறார். சொந்த தந்தையோ பெற்றதினால் மாத்திரம் தந்தை யாகிறார்.

அரசனுக்கு இலக்கணம் கூறுவான் மஹாகவி காளிதாஸன் ''ராஜா ப்ரக்ருதி ரஞ்ஜனாத்'' என்று. மக்களை மகிழ்விப்பதினால் ராஜா (அரசன்) ஆகிறான். மக்கட்கு கீழ்க்கூறிய முறையில் தந்தை போன்று பல்வகை நன்மைகளையும் கிடைக்கும்படி செய்தால்தான் மகிழ்ச்சி உண்டாகும். வேண்டியவன் வேண்டாதவன் என்று பாகுபடுத்திப் பார்க்கும் தன்மை கூடாது. சட்டத்திற்கு எதிரில் அனைவரும் ஸமம் என்கிற நிலை கடைப் பிடிக்கப்பட வேண்டும். அரசுப் பணிகளிலும், கல்வியிலும் தகுதி அடிப்படையில் ஸமவாய்ப்பு கிடைக்க வேண்டும். இந்நிலையை அயோத்தி மன்னனிடம் காணலாம்.

द्वेष्यः अपि सम्मतः शिष्टः तस्यार्तस्य यथौषधम् ।
त्याज्यः दुष्टः प्रियः अप्यासीत् अङ्गुलीवोरगक्षता ॥

த்வேஷ்ய: அபி ஸம்மத: சிஷ்ட: தஸ்ய ஆர்தஸ்ய யதா ஔஷதம் ।
த்யாஜ்ய: துஷ்ட: ப்ரிய: அபிஆஸீத் அங்குலீவ உரக க்ஷதா ॥

மருத்துவர் அளிக்கும் மருந்து, கசப்பாயினும் உடல நலம்பெறும் பொருட்டு நோயாளி அதை ஏற்பது போல, கல்விகற்றுச் சான்றோனாய்த் திகழும் குடிமகன் தனிப்பட்ட முறையில் பகைவனாயினும் அரசனுக்கு ஏற்புடையவனாவான். ஸர்ப்பத்தினால் தீண்டப்பட்டு விஷத்தோடுகூடிய நமது கை விரல், உயிருக்கு ஆபத்து ஏற்படாமலிருக்க உடனே வெட்டி எறியப்படுவது போல, நாட்டிற்குத் தீமையை (ஆபத்தை) விளைவிக்கும் கொடியோனாகிய ஒருவன் அரசனின் அன்புக்குப் பாத்திரமாய்த் திகழினும் நாட்டினின்றும் விலக்கத் தக்கவனாக ஆவானாம். எனவே நீதி நெறியி னின்றும் சிறிதும் வழுவாது கோலோச்சினான் தசரதன் என்பது தெளிவு.

அரசனும் மக்களும் அல்லது ஆட்சியாளரும் மக்களும் உயிரும் உடலும் போன்று இருக்க வேண்டும். உயிர் இன்றேல் உடல் இல்லை. உடலின்றேல் உயிரும் இல்லை. ஒன்றை விட்டு ஒன்று தனித்திருக்க முடியாது, (தனித்து இருந்தால் பேயாகவும் பிணமாகவும் காட்சி அளிக்கும்) உடலுக்குப் பிணி மூப்புகள் இல்லாதபோது உயிர் தன்னை ஸுகமாக மகிழ்ச்சியாக இருப்பதாகக் கருதுகிறது. அதுபோல மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தால் அரசனுக்கும் வாழ்வு. இன்றேல் தாழ்வு என்ற நிலை அரசியலில் இருந்து வந்தது.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

அதனால் யான் உயிர் என்பது அறிகை
வேல்மிகுதானை வேந்தற்குக் கடனே.

மோசிகீரனார்

நெல்லும் (உணவும்) நீரும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதவை. இவை மட்டும் இருந்தால் வாழ்வு மலராது. இவைகளை பகுத்துக் கொடுத்து அனைவருக்கும் கிடைக்கும்படிச் செய்பவனும், மக்களைப் பகையின்றி வாழச் செய்பவனுமாகிய அரசனே உயிராகக் கருதப்படுகிறான். எனவே மன்னன், உயிர் போல் இயங்கி மக்களாகிய உடலைக் காக்க வேண்டும்.

மன்னனை சித்தரிக்கிறது மேல்வரும் பாடல் :

வய்யம் மன்னுயிராக, அம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னனுக்கு
அய்யம் இன்றி அறம்கடவாது, அருள்
மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ!

உலகம் (மக்கள்) உயிராகவும், இவ்வுயிராகிய மக்களைத் தாங்கும் உடலாகவும் தன்னைக் கருதும் அரசனுக்கு எப்பொழுதும் அறம் துணை யாக நிற்கும். இவ்வரசன் ஸத்யமார்க்கத்தினின்றும் சிறிதும் வழுவாது இரக்கத்தைத் (ஸர்வபூததயை) துணையாகக் கொண்டு ஆட்சி புரிவானா யின், இதுவே நாட்டு நலனுக்குச் செய்யப்படும் வேள்வியாக அமையும். இத்தகைய அரசனுக்குத் தனியாகவும், மக்களின் சேம நலனுக்காகவும் பிற வேள்விகளைச் செய்ய வேண்டிய தேவையே இராது.

ஆக இப்பழம்பெரும் பாடல்கள் அரசனை, உயிரெலாம் உறையும் உடம்பாகவும், உடலைத் தாங்கும் உயிராகவும் சித்தரிக்கின்றன. ஆக மக்களும் அரசனும் நாட்டின் ஸமமான இருகூறுகள். இரண்டும் இணைந்து செயல்படுவதில் தான் நாட்டு நலன் மேம்படுகிறது. இதில் அரசனின் பங்கு மிகுதியானது. இவ்வுண்மையை உணர்ந்து செயலாற்றுபவர் தசரத சக்ரவர்த்தி. இதை கம்பரும்:

உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான் என்பர்.

நன்னெறி வழுவா அரசன்

தேவருலகில் கற்பகம் என ஒரு மரம் இருப்பதாகச் சொல்வதுண்டு. அது தன்னை அணுகி யார் யார் எந்த எந்தப் பொருளை விரும்பிக் கேட்கின்றனரோ அவை அனைத்தையும் சோர்வின்றி வழங்கிக் கொண்டிருக்கும். அதே போன்று காமதேனு எனும் பசுவும் பக்தர்கள் விரும்புவதையெல்லாம் வாரி வழங்கும். சிந்தாமணியும் இத் தன்மையது என்பர். அப்படியானால் இம் மூன்றையுமே பெற்றுவிட்டால் நாம் எவ்விதக் குறையுமின்றி சுகமாக வாழலாமே என நம் மனம் எண்ணுகிறது. ஆம் உண்மைதான். இவற்றை நாமும் பெறலாம். ஆனால் இங்கு இப்பொழுது முடியாது. நிறையப் புண்ணியச் செயல் புரிந்து இவ்வுடலை நீத்து மேலுலகில் தேவப் பிறவியை எய்தினால் இம்மூன்றையும் பெற்று இன்பமாக வாழலாம்.

அப்படியானால் மனிதனாகப் பிறந்த நாம் இவற்றை நினைத்து ஏங்கி மனம் குமுறித் துன்புற வேண்டியதுதானா? வேண்டாம்; இம்மூன்றும் சேர்ந்து ஒரே பொருளாக நமக்குத்தான் கிடைத்திருக்கிறதே! அதுதான் இப்பூவுலகு. இதில் கிடைக்காதது எது? இதில் நமக்குத் தேவையான பல்வகை உணவுப் பொருள்கள் விளைகின்றன. பொன், வெள்ளி, இரும்பு போன்ற பல்வேறு உலோகங்கள் தோண்டி எடுக்கப்படுகின்றன. விதவித மாக நாம் அணிவதற்காக ஆடைகளைத் தயாரிக்க உதவும் பொருள்களும் மிகுதியாக கிடைக்கின்றன. எல்லாம் இருந்தும் நம்மால் நிம்மதியாக ஸுகமாக வாழ முடிய வில்லையே! ஏன்? சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தால் நமக்கே நன்கு விளங்கும்.

நம்மிடையே ஒற்றுமை கிடையாது. நற்பண்புகள் கிடையா, பொறுமை இல்லை. ஆத்ம குணங்களை விலைக்குத்தான் வாங்க வேண்டும். மாறாக நம்மிடையே பொறாமையும், வறட்டு ஜம்பமும், பேராசையும், பகைமையும், செருக்கும், சுயநலமும், கோபமுமே மண்டிக் கிடக்கின்றன. இதனால் நம்மிடையே சண்டைகளும், சச்சரவுகளும் மல்கிப் பெருகியிருப்பதைக் காண்கிறோம். நம்மிடையே சண்டை, நம் வீட்டுக்கும், எதிர் வீட்டுக்கும் சண்டை. நம் கிராமத்திற்கும், பக்கத்து கிராமத்திற்கும் சண்டை, மாவட்டங்களிடையே தகராறு, மாநிலங்களிடையே குழப்பம், நாடுகளிடையே போர், இதற்காக ஆயுதப் பட்டறைகள், தளவாடச்சாலைகள் மனிதனை மனிதன் அழிக்க உயர்ரக ஆயுதக் கண்டுபிடிப்புகள், உயிரை வதைத்துச் சித்ரவதை செய்யும் விஷக்கிருமிகள், விஷவாயுக்கள் என்ற நிலையிலுள்ளது இன்றைய உலகம். மனிதனின் நுண்ணறிவும், பேராற்றலும் பிறரை அழிப்பதில் போட்டியிடுகின்றன.

இதற்காகவா பரமன் நம்மைப் படைத்தான்? இல்லை. நிச்சயமாக இல்லை. பின் எதற்கு? ''வஸுதைவ குடும்பகம்''' ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' ''லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து'' உலகம் அனைத்தும் ஒரே குடும்பம். எல்லா ஊர்களும் நமது சொந்த ஊர்கள், உலகில் எல்லா மக்களும் ஸுகமாக வாழ வேண்டு மென்பதையே நமது குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். ''ஸர்வேஷாமேவ லோகானாம் பிதா மாதாச மாதவ:'' நம் அனைவருக்கும் தாயும் தந்தையுமாகத் திகழ்பவன் ஸ்ரீமந் நாராயணன். அப்படியானால் நாம் அனைவரும் ஸஹோதர ஸஹோதரிகள் ஆவோம். எனவே நமது அறிவும், ஆற்றலும் நம்மிடையே பரிவையும், அன்பையும், பொறுமையையும், உதவும் பண்பையும் வளர்க்கப் பயன்பட வேண்டும். முக்யமாக நாட்டை ஆள்பவர்கட்கு (மன்னர்கட்கு) இப்பண்பு நிறைந்திருக்க வேண்டும். ''யதா ராஜா ததா ப்ரஜா:'';''மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி'' என்பர். இப்பண்புகள் அயோத்தி மன்னனிடம் அமைந்திருந்தன. இவை ஆட்சியாளர்களிடம் இருந்தால்தான் மக்களிடம் அமைதியையும், பண்பையும் நாம் எதிர்பார்க்க முடியும்.

எய்என எழுபகை எங்கும் இன்மையான்
மொய் பெறாத்தினவுஉறு முழவுத் தோளினான்
வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும்ஓர்
செய்எனக் காத்து இனிது அரசு செய்கின்றான்.

க. ரா. பால. - அரசியல்

தசரதன் எல்லாத் திசைகளிலும் தேரைச் செலுத்தும் வல்லமை பெற்றிருந்ததின் காரணமாக உலகம் முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் வைத்திருந்தான். நாட்டின் எப்பகுதிக்கும் நேரில் சென்று மக்களின் அல்லலைத் தீர்க்கும் திறன் பெற்றிருந்தான். எனவே ''வாளேந்தித் திறன் இருந்தால் என்னோடு போருக்கு வருக'' என வீரவாதம் கூறி (சூளுரைத்து) அவனைச் சண்டைக்கு அழைக்கும் வீரம் உடையவன் நாட்டில் எங்கும் இல்லை. சக்ரவர்த்தியினுடைய தோள்களே குன்றுபோன்றும் மத்தளம் போன்றும் வலிமைமிக்கவை; உருண்டு திரண்டவை. போரிடும் வாய்ப்பே நாட்டில் கிட்டாததால் தினவு உண்டாகிறதாம். எனவே போரிட்டு அடக்க வேண்டிய பகையே நாட்டில் கிடையாதாம்.

''நின்றுநின்று உயிர்தொறும் நெடிது காக்குமே''

க. ரா. பால. - அரசியல்

நாட்டிலுள்ள மக்கள் அனைவரையும் அதாவது ஒவ்வொரு நபரையும் தனிப்பட்ட முறையில் அறிந்து அவரவர் தேவையைப் பூர்த்தி செய்து கொடுக்கும் தன்மையுடையவன். இதைக் கம்பன் அழகியதொரு உவமை யினால் காட்டுகிறார்.

ஒரு பரம ஏழை. ஒரு காணி நிலம் உண்டு. வேறு வகையான சொத்து எதுவும் கிடையாது. பிறரை இரந்து பிழைக்கும் தன்மையற்றவன். எனவே தன் காணி நிலத்தில் மூன்று போகம் விளைவிப்பான். ஆழ உழுவான். நிறைய தழை உரமும், தொழு உரமும் இடுவான். முளைக்கும் களைகளை உடனுக்குடன் அகற்றுவான். உரிய காலத்தில் தவறாது தண்ணீர் பாய்ச்சு வான். அடியுரமாக வேம்பின் பிண்ணாக்கை இட்டும், வேப்பெண்ணெயை நீரில் கலந்து பயிர்களின் மீது தெளித்தும் தன் வயலில் எவ்விதப் பூச்சிகளும் நோயும் அண்டாமல் பாதுகாப்பான். ஆடு மாடுகள் நுழையாமல் வேலி கட்டுவான். பக்குவ நிலையில் கதிரறுத்து ஈரம் பதர் புழுதியின்றி சேமித்து வைப்பான். அதன் வரப்புகளில் பருப்புவகை விதைகளைத் தெளித்து அறுவடை செய்து சேமிப்பான். இவ்வளவு கவனத்துடன் வேளாண்மை செய்வதால் உணவுப் பொருளில் தேவை பூர்த்தி பெற்று இனிது வாழ்வான். இவ்வாறு ஏழைக் குடிமகன் சிறு நிலத்தைக் கண்ணும் கருத்துமாகப் பாது காப்பதுபோல் தசரதனும் உலகம் முழுவதிலுமுள்ள ஒவ்வொரு குடிமகனை யும் நன்கு பாதுகாத்து வந்தானாம். அதுவும் கடமைக்காக மட்டுமன்றி அன்புப் பிணைப்புடன் செய்தானாம்.

தாயொக்கும் அன்பில் தவம் ஒக்கும் நலம் பயப்பில்
சேய் ஒக்கும் முன்நின்று ஒருசொல் கதிஉயர்க்கும் நீரால்
நோய் ஒக்கும் என்னில் மருந்து ஒக்கும் நுணங்கு கேள்வி
ஆயப்புகுங் கால் அறிவு ஒக்கும் எவர்க்கும் அன்னான்.

க.ரா. பால. - அரசியல்

தசரதன் நாட்டிலுள்ள மக்கள் அனைவரிடமும் தாய் போன்ற அன்புள்ளவன். மக்களைப் பரிவுடனும் பாசத்துடனும் வளர்ப்பதில் தாய்க்கு நிகர் உண்டோ? மேலும் தவத்தினைப் போன்று வள்ளல் என்பர். தவம் ப்ரஹ்மத்தை அறிய உதவும் தன்மையுடையது. தவம் இம்மைப் பயன் களையும், மறுமைப் பயனையும் அளிக்கவல்லது. இதைப் போன்றே இவ்வரசனும் மக்களுக்கு பற்பல நன்மைகளைச் செய்து வருபவன்.

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். குறள் - 265

நமக்கு வேண்டியவற்றை விரும்பியபடியே பெறுவதற்குத் தவம் உறுதுணையாகிறது. தசரதன் தவத்தினைப் போன்று மக்களுக்கு நல்லவை செய் வதையே கடமையாகக் கொண்டவன். மகனைப் புத்ரன் என்பர். புத் எனும் நரகத்தினின்றும் பெற்றோரைக் காப்பவன் மகன். மக்கட்பேற்றைப் பெறுவ தால் பித்ருக்களுக்குரிய கடனினின்றும் விடுபடுகிறான். காசியில் மரிப் பவனுக்கு சிவனார் ராமதாரக மந்திரத்தை உபதேசிப்பதால் மோக்ஷம் கிட்டுகிறது. மகனின் மடியில் படுத்த வண்ணம் உயிர் துறப்பதாலும் நற்கதி கிடைக்கும்.

काश्यां तु मरणान्मुक्तिः अथवा पुत्रसन्निधौ

''காஶ்யாம் து மரணாத் முக்தி: அதவா புத்ரஸந்நிதௌ''

என்பர். மக்களைத் தானே முன் நின்று நற்கதியைப் பெறுவதற்குரிய நல் வழியில் செலுத்துதலான் மகனுக்கு ஒப்பாவான் தசரதன்.

தீவினை புரிந்தவர்களைத் தண்டிப்பதற்காக நோய் வருகிறது. நோய் போன்று அரசனும் எவ்விதப் பாகுபாடுமின்றி நோய் போல் குற்றம் புரிந்தவர் களைத் தண்டிக்கிறான். அதே நேரத்தில் மக்கள் தம் குற்றம் உணர்ந்து பணிந்து மன்னிப்புக் கேட்பார்களாகில், மருந்து நோயைப் போக்குவது போல் அரசனும் கருணையினால் அவர்களை மன்னித்து தண்டனையினின்றும் விடுபடச் செய்கிறான். தீயவர் யாராவது நோய் போன்று நன் மக்களைத் துன்புறுத்துவாராயின் இவன் மருந்து போன்று தீயவரை அழித்து நல்லோர்க்கு நல்லவை செய்வான்.

தர்ம சாஸ்த்ரங்களிலோ (சட்டங்களிலோ), ராஜ தந்த்ரத்திலோ எது சரி என்பதை விரைவில் முடிவு செய்வதில் நுண்ணறிவைப் பெற்றவன். ஆக இப்பேரரசன் மக்களுக்குத் தாயாகவும், மகனாகவும் தவமாகவும், (சட்ட) அறிஞனாகவும், தீயோருக்கு நோயாகவும் நல்லோருக்கு மருந்தாகவும் உதவுகிறான்.

இக் கருத்துக்கு வழிகாட்டியாகக் காளிதாஸன் கூறியதை நினைவில் கொள்ளலாம், சாகுந்தலத்தில் :

येन येन वियुज्यन्ते प्रजाः स्निग्धेन बन्धुना ।
स स पापादृते तासां दुष्यन्त इति घष्यताम् ॥

யேன யேன வியுஜ்யந்தே ப்ரஜா: ஸ்நிக்தேன பந்துனா ।
ஸ ஸ பாபாத்ருதே தாஸாம் துஷ்யந்த இதி குஷ்யதாம் ॥

மக்கள் எந்த எந்த உறவினரைப் பிரிந்து துயருறுவார்களோ அவர்கட்கு ப்ரியமான அந்த உறவினராகத் தன்னைக் கொள்ளும்படி துஷ்யந்தன் நாட்டின் பறைசாற்றச் சொல்லுகிறான். தாய், தந்தை, தாத்தா, பாட்டி, ஸஹோதரன், ஸஹோதரீ, மாமா, மாமி, மைத்துனி முதலிய உறவினர்களுள் யாரைப் பிரிந்தாலும் அந்த உறவினர் செய்யக் கூடியவைகளைத் தான் செய்து உதவுவதாக வாக்களிக்கிறான். இதனால் அன்பான உறவினர்களை இழந்த துன்பம் மறைய அரசன் உதவுகிறான். ஆனால் கணவனை இழந்தவர்கட்கு கணவனாக மாட்டான். ஏன்? அது பாப ஸம்பந்தமுடையது. அரசன் பரம தார்மிகன் அல்லனோ!

மேற்கூறியபடித் தம் மக்கட்கு உதவுவதற்கேற்ற நற்குண நற்பண்புகள் அமைந்தவன் தசரதன். இவையில்லாவிடில் எவ்வளவு உதவினாலும் அது பயனற்றதாகிவிடும்.

இனிய சொல்லினன், ஈகையன், எண்ணினன்
வினையன், தூயன், விழுமியன், வென்றியன்
நினையும் நீதி நெறி கடவான் எனில்
அனைய மன்னற்கு அழிவும் உண்டாம் கொலோ.

க.ரா.பால.-மந்தரை

தசரதன், முகத்தில் புன்னகை தவழ இனிதாகப் பேசி வந்தவர்களை மகிழ்விப்பவன், மீண்டும் இரக்காதவாறு வாரி வழங்குபவன்; எதையும் ஆழ்ந்து சிந்தித்துச் செயலாற்றுபவன்; அகத் தூய்மையும், புறத்தூய்மையும் உடையவன்; (உள்ளத்தால் பொய்யாது ஒழுகுபவன்) சிறந்த ஆத்ம குணம் அமைந்தவன்; தன் வாழ்க்கையில் தோல்வியைக் காணாத வீரன், குலமுதல்வனாம் மனுவின் ஸ்மிருதியில் கூறிய நீதி நெறியினின்றும் வழுவாதவன். இத்தகு பண்புமிக்க அரசனின் ஆட்சியில் மக்களும் மன்னனும் நல்வாழ்வினைப் பெறுவார்களே ஒழிய அழிவுக்கு இடமேது?

சக்கரவர்த்தியின் இயற்பெயர்

அயோத்தி அரசனைத் தசரதன் என்று அறிமுகப்படுத்துகிறார் வால்மீகி. நான்கு திசைகள், நான்கு திசை மூலைகள், மேல், கீழ் எனும் பத்து திசைகளிலும் தேரில் செல்ல வல்லவர் என்பது இதன் பொருள். ஆகவே தசரதர் என்பது காரணப் பெயராகும். அரசரின் இயற்பெயர் அதாவது நாமகரண காலத்தில் இட்ட பெயர் என்ன என்பது கேள்வியாகும். இங்கு ஒரு கதை சொல்வதுண்டு.

ஒரு நகரில் பெரும் பணக்காரர் வாழ்ந்து வந்தார். அவர் தம்மிடம் வரும் அறிஞர்கட்குப் பரிசிலாகப் பண உதவி செய்து வந்தார். இதையறிந்த புலவர்கள் பலர் நாள்தோறும் வர ஆரம்பித்தனர். தனிகருக்கு இது பெரும் சங்கடமாகிவிட்டது. அவர்களைத் திருப்பி அனுப்புவதற்கு ஒரு தந்திரம் செய்தார். வாயிற்காவலனிடம் இனி வித்வான்கள் வந்தால் ''இராமனின் தந்தை யார்? எனக் கேள்வி கேள். தசரதர் என விடை கூறுவர். இவர் தந்தை யார்? எனக் கேள். பதில் சொல்லாதவர்களைத் திருப்பி அனுப்பிவிடு. பதில் சொன்னால் அவர் தந்தை யார்? எனக்கேள். இப்படியே கேட்டுக் கொண்டிருந்தால் நான்கு சாஸ்த்ரங்களைக் கற்றவன் கூடப் பதில் சொல்ல முடியாது. அனைவரும் திரும்பிச் சென்றுவிடுவர். நமக்கும் பணச் செலவு ஆகாது'' என்றார். இம்முறையில் வந்தவர்கள் எல்லோரும் பதில் சொல்ல முடியாமல் திரும்பினர். இதைக் கேட்ட தெனாலிராமன் அவர் வீட்டிற்கு வந்தான். பிறரைக் கேட்டதுபோல காவலன் இவனையும் கேள்வி கேட்டான். அதற்குத் தெனாலிராமன் தக்க பதிலளித்தான். தசரதன் தந்தை ஏகாதசரதன். அவன் தந்தை த்வாதசரதன். அவன் தந்தை யார்? த்ரயோதசரதன் இவ்வாறு

சொல்லிக் கொண்டு வரவே காவலன் ஆச்சரியப்பட்டு நன்கு விடையளிப்ப தாகத் தனிகரிடம் சொல்லவே அவர் பொற்காசுகளைக் கொடுத்து, இவ் விடையை வேறு யாருக்கும் சொல்லக் கூடாதெனக்கூறி அவரை அனுப்பி வைத்தார். மறுநாள் இதை அறிந்த அறிஞர்கள் பலர் வந்தனர். அவரிடம் கேள்வியை மாற்றிக் கேட்டார். தசரதருக்கு பெரியோர்கள் இட்ட பெயர் யாது? என வினவினார். இதற்கு பதிலளிக்க முடியாமல் பலர் வீடு திரும்பினர். இதைக் கம்பன் ஒரு செய்யுளில் அழகாக எடுத்துக் கூறுகிறான்.

அம்மாண் நகருக்கு அரசன் அரசர்க்கு அரசன்
செம்மாண் தனிக்கோல் உலகேழினும் செல்ல நின்றான்
இம்மாண் கதைக்கு ஓர் இறையாய இராமன் என்னும்
மொய்ம்மாண் கழலோன் தருநல்லற மூர்த்தி அன்னான்.

க. ரா. பால. - அரசியல்

ஏழு உலகங்களிலும் (பத்து திசைகளிலும்) மாட்சிமை பொருந்திய —நீதி தவறாத—நிகரற்ற ஆட்சியையளித்து வந்த மாமன்னான அயோத்தி மன்னன், தன்னை—ராமாயணத்தை பாராயணம் செய்பவர்க்கும் தர்ம, அர்த்த, காம, மோக்ஷமெனும் நால்வகைப் புருஷார்த்தங்களையும் அளிக்கும் மாண்புடைய ராமாயணத்தின் ஒப்பற்ற நாயகனும், வீரக்கழலணிந்தவனு மான ஸ்ரீராமபிரானைப் பயந்த தசரதனை, பத்துத் திசைகளிலும் தடையின்றி தேரைச் செலுத்துபவனை குறிப்பிடும் போது அவனது இயற்பெயரைக் கம்பர் தர்மராஜன் (நல்லற மூர்த்தி) எனக் குறிப்பிடுகிறார்.

தர்மராஜர் எனும் பெயரை வால்மீகத்தைப் பிரமாணமாகக் கொண்டே கம்பரும் கூறுகிறார் :

ராமன் காட்டிற்குச் செல்வதற்கு முன் தாயாரிடம் (கௌஸல்யை யிடம்) விடை பெறச் செல்கிறான். தாயும் காட்டிற்கு வருவதாக வற்புறுத்தும் போது,

तस्मिन्पुन जीवति धर्मराजे विशेषतः स्वे पथि वर्तमाने ।
देवी मयासार्धं इतोऽपगच्छेत् कथंस्विदन्या विधवेवनारी ॥

தஸ்மின் புனர்ஜீவதி தர்மராஜே விசேஷத: ஸ்வே பதி
வர்த்தமானே ।
தேவீமயா ஸார்தம் இதோஅபகச்சேத் கதம்ஸ்வித் அன்யா
விதவேவநாரீ ॥

வா. ரா. அயோத்யா- 21

ஸத்ய மார்க்கத்தினின்றும் பிறழாது நிற்கும் தர்மராஜன் உயிருடன் இருக்கும் பொழுது பட்ட மஹிஷியானவள் மகனான என்னுடன் எவ்வாறு

காடு செல்ல முடியும்? கணவனை இழந்தவள் தான், மகனோடு வேறிடம் செல்வதற்கு உரியவள் என்று ராமன் தாயை ஸமாதானப்படுத்துகிறான்.

உலகில் ஒருவருக்குக் கோபம் மிகும் பொழுதோ, மனவருத்தம் பீறிட்டு எழும்போதோ பெருத்த விவாதம் நேரிடும்போதோ அதுவரை பெரியோர்களின் பெயரைச் சொல்லாதவர்கள் பெயரைக் கூறிப் பேசுவது வழக்கம். எனவே இங்கு தசரதரைத் தந்தை எனக் குறிப்பிடாமல் தர்மராஜர் என்று பெயரைக் குறிப்பிட்டு, அவர் ஜீவதசையில் இருக்கும்பொழுது ஸஹதர்மசாரிணியான பட்டமஹிஷீ, புத்ரனோடு அவரைவிட்டு அகல்வது உசிதமன்று என வாதாடிப் பேசுகிறான் ராமன்.

மாண்புமிகு மந்திரிகள்

धृष्टिः जयन्तः विजयः सिद्धार्थः हि अर्थसाधकः ।
अशोकः मन्त्रपालश्च सुमन्त्रश्चाष्टमोऽ भवत् ॥
ऋत्विजौ द्वौ अभिमतौ तस्यास्तां ऋषिसत्तमौ ।
वसिष्ठो वामदेवश्च मन्त्रिणश्च तथाऽपरे ।

த்ருஷ்டி: ஜயந்த: விஜய: ஸித்தார்த்த: ஹி அர்த்தஸாதக: ।
அசோக: மந்த்ரபால: ச ஸுமந்த்ர: ச அஷ்டம: அபவத் ॥
ரித்விஜௌ த்வௌ அபிமதௌ தஸ்ய ஆஸ்தாம் ரிஷிஸத்தமௌ ।
வஸிஷ்ட: வாமதேவ: ச மந்த்ரிண: ச ததா அபரே ॥

வா.ரா. பால.- 7

பாராளும் சக்ரவர்த்தி தமக்கு உதவியாக மிகச் சிறியதொரு அமைச்சர வையை அமைத்துக் கொண்டிருந்தார். எதிர்பாராத வகையில் நாட்டில் ஏற்படக் கூடிய தைவிக பௌதிகங்களான வெள்ளம், தீ, புயல், நிலநடுக்கம், வறட்சி, நோய் போன்றவைகளை முன் கூட்டியே க்ரஹ அமைப்பைக் கொண்டும், தவத்தின் வலிமையைக் கொண்டும் தாம் அறிந்து, அவற்றைத் தடுப்பதற்குரிய வழி வகைகளையும், அவற்றுள் விரைவில் பயனளிக்க வல்ல வேள்விகளையும் செய்யும்படி உரிய நேரத்தில் அரசனுக்கும் அமைச்சர்கட்கும் ஆலோசனை கூறும் மஹர்ஷிகளான புரோஹிதர்களையும் அமைத்துக் கொண்டிருந்தார். இதில் அமைச்சர்கள் எண்மரும், புரோஹிதர் கள் இருவரும் மிக முக்கியமானவர்கள்.

த்ருஷ்டி, ஜயந்தன், விஜயன், ஸித்தார்த்தன், அர்த்த ஸாதகன், அசோகன், மந்த்ரபாலன், ஸுமந்த்ரன் ஆகிய எண்மரும் அமைச்சராவர். புரோஹிதர்களுள் மிக முக்யமானவர்கள் வஸிஷ்டரும் வாமதேவரும் ஆவர். இவர்களைத் தவிர சில மந்திரிகளும் புரோஹிதர்களும் உண்டு. இங்கு அமைச்சர்களின் பெயர்களே அவர்கள் எவற்றில் வல்லுனர் என்பதைக் காட்டுகிறதெனலாம். அதாவது, 1. எது நேரினும் அஞ்சாது துணிவுடன் செயல்படுபவர், 2. கிடைத்த வெற்றியை மேலும் விஸ்தரிப்பவர், 3. எதிலும் வெல்லும் தன்மையர், 4. தேவையனைத்தையும் பெற்றவர், 5. எதையும் ஸாதிக்க வல்லவர், 6. மனக் கவலையற்றவர், 7. ரஹஸ்யங்களைக் காப்பவர், 8. இடம் பொருள் ஏவல் அறிந்து ஆலோசனை கூறுபவர், நாட்டின் ஆட்சிக்கு மிகத் தேவையான நற்குண நற்பண்புகளைப் பெற்றவரென அவர்களின் பெயர்களைக் கொண்டே நாம் அறிய முடிகிறது. மேலும் அமாத்ய: என்னும்

சொல்லே திரிந்து அமைச்சர் என ஆகியது. இதற்கு ''அரசன் ஆட்சி செலுத்துவதற்குத் தேவையான பணிகள் அனைத்திலும் அரசனின் அருகில் இருந்து ஒத்துழைப்பவர்'' எனப் பொருள் கூறுவர். இவ்வெண்மரைத் தவிர வேறு சில மந்திரிகளும் இருந்தனர். இவர்கள் அரசின் பல்வேறு துறைகட்கு (இலாகாக்களுக்கு) உரிய காலத்தில் தேவையான ஆலோசனைகளை வழங்குவர். இவர்களைத் தவிர புரோஹிதர்கட்கும் ஆட்சியில் பங்கு உண்டு. இவர்கள் நாட்டின் ஆட்சி, அரசனின் குலமுதல்வனாம் மனு வகுத்தளித்த சட்டத்தினின்றும் வழுவாது ஸனாதன நெறியில் நடத்தப்படுகிறதா எனக் கண்காணிப்பர். விசேஷ காலங்களில் நாட்டில் குழப்பம் ஏற்படாதிருக்க அரசியலில் தலையிட்டு ஆட்சியைச் சீர்படுத்து மளவிற்கு அதிகாரம் பெற்றிருப்பர். இவர்கள் அரசனின் விசேஷ ஆலோசகர் களாகவும் அரசனைத் திருத்திப் பணிகொள்ளும் குருமார்களாகவும் இருந்தனர்.

அமைச்சர்களின் தகுதி

मन्त्रज्ञाश्चेङ्गितज्ञाश्च नित्यं प्रियहितेरताः ।
शुचयश्चानुरक्ताश्च राजकृत्येषु नित्यशः ॥
विद्याविनीताः ह्रीमन्तः कुशलाः नियतेन्द्रियाः ।
परस्परानुरक्ताश्च नीतिमन्तो बहुश्रुताः ॥
श्रीमन्तश्च महात्मानः शास्त्रज्ञाः दृढविक्रमाः ।
कीर्तिमन्तः प्रणिहिताः यथावचन कारिणः ॥
तेजः क्षमा यशः प्राप्ताः स्मित पूर्वाभिभाषिणः ।
क्रोधात् कामार्थ हेतोर्वा न ब्रूयुः अनृतं वचः ॥
तेषामविदितं किंचित् स्वेषु नास्ति परेषु वा ।
क्रियमाणं कृतं वाऽपि चारेणापि चिकीर्षितम् ॥
कुशलाः व्यवहारेषु सौहृदेषु परीक्षिताः ।
प्राप्तकालं तु ते दण्डं धारयेयुः सुतेष्वपि ॥
अहितं वापि पुरुषं न विहिंस्युः अदूषकम् ।
सुवाससः सुवेषाश्च ते च सर्वे सुशीलिनः ॥
हितार्थं च नरेन्द्रस्य जाग्रतो नय चक्षुषा ।
गुरौ गुण गृहीताश्च प्रख्याताश्च पराक्रमे ॥
विदेशेष्वपि विख्याताः सर्वतो बुद्धिनिश्चयात् ।

नीति शास्त्र विशेषज्ञाः सततं प्रियवादिनः ॥
ईदृशैस्तैरमात्यैश्च राजा दशरथोऽनघः ॥

மந்த்ரக்ஞா: ச இங்கிதக்ஞா: ச நித்யம் ப்ரியஹிதே ரதா: ॥
ஶுசய: ச அனுரக்தா: ச ராஜ க்ருத்யேஷு நித்யஶ:
வித்யா விநீதா: ஹ்ரீமந்த: குஶலா: நியதேந்த்ரியா: ।
பரஸ்பரானுரக்தா: ச நீதிமந்தோ பஹுஶ்ருதா: ॥
ஸ்ரீமந்த: ச மஹாத்மான: ஶாஸ்த்ரக்ஞா: த்ருடவிக்ரமா: ॥
கீர்த்திமந்த: ப்ரணிஹிதா: யதாவசன காரிண: ।
தேஜ: க்ஷமா யஶ: ப்ராப்தா: ஸ்மித பூர்வாபி பாஷிண: ।
க்ரோதாத் காமார்த்த ஹேதோ: வா ந ப்ரூயு: அன்ருதம் வச: ॥
தேஷாம் அவிதிதம் கிஞ்சித் ஸ்வேஷு நாஸ்தி பரேஷுவா ।
க்ரியமாணம் க்ருதம் வாஅபி சாரேணாபி சிகீர்ஷிதம் ॥
குஶலா: வ்யவஹாரேஷு ஸௌஹ்ருதேஷு பரீக்ஷிதா: ।
ப்ராப்த காலம் து தே தண்டம் தாரயேயு: ஸுதேஷுஅபி ॥
அஹிதம் வா அபி புருஷம் ந விஹிம்ஸ்யு: அதூஷகம் ॥
ஸுவாஸஸ: ஸுவேஷா: ச தே ச ஸர்வே ஸுஶீலின: ।
ஹிதார்த்தம் ச நரேந்த்ரஸ்ய ஜாக்ரதோ நய சக்ஷுஷா ॥
குரௌள குண க்ரஹீதா: ச ப்ரக்யாதா: ச பராக்ரமே ।
விதேசேஷு அபி விக்யாதா: ஸர்வதோ புத்தி நிஶ்சயாத் ॥
நீதி ஶாஸ்த்ர விசேஷக்ஞா: ஸததம் ப்ரியவாதின: ।
ஈத்ருஶை: தை: அமாத்யை: ச ராஜா தஶரத: அனக: ॥

வா.ரா. பால.- 7

தசரத சக்ரவர்த்தி சிறந்த அறிஞர், அவருக்கு ஏற்ப அமைச்சர்களும் சிறந்த அறிவாளிகள், எதையும் செய்வதற்கு முன் நன்கு விசாரித்துச் செயல்படும் தன்மையர். பிறர் அபிப்பிராயங்களை (உள்ளக் கிடக்கையை) அவர்களோடு பேசும்பொழுதே முகத்தின் பொலிவு, சுருக்கம், வ்யங்கியமான பேச்சு ஆகியவற்றின் மூலம் அறிந்து அதற்கேற்ப செயல்படுபவர். அரசனுக்கு சிறிதும் தீங்கு எண்ணாதவர், சலிப்பின்றி அரசுப் பணிகளில் ஈடுபாடுடையவர்; அரசியலுக்குத் தேவையான கல்வியை நன்கு கற்றவர்; தகாத செயல்களைச் செய்வதில் வெட்கமும் கூச்சமும் உடையவர். எனவே பழி, பாவம், கேடுகள் நேரும் செயல்களில் அஞ்சும் தன்மையர். ஆட்சியில் இருப்பவர்கட்குத் துணிவு மிகத் தேவைதான் எனினும் தகாத செயல்களைப் புரிய அஞ்சுவதே துணிவினும் மிகவும் உயரிய பண்பாம்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை, அஞ்சுவது
அஞ்சல், அறிவார் தொழில். குறள்-428

என்பர். மக்களுக்கு நீதி வழங்குவதில் உறுதி மிக்கவர்; தகாத விஷயங்களில் மனம் செல்லாதவாறு புலன்களை அடக்கியவர். அமைச்சர் யாவரும் ஒருவருக்கொருவர் பொறாமையின்றி அன்போடு பழகினர். அன்பின் மிகுதியால் ஆர்வம் மிக அனைவரும் உற்ற நண்பர்களாய் பழகினர். எனவே தத்தமக்கு அளிக்கப்பட்ட இலாக்காக்களில் உயர்வு தாழ்வு மனப்பான்மை கொள்ளாது ஒற்றுமையுடன் மக்கள் நலனைப் பேணினர். அனைவரும் பெருஞ் செல்வம் பெற்றவர். எனவே அரசில் சிறு தொகையையும் ஊதிய மாகப் பெற விரும்பாதவர். எனவே அரசு ஊழியர்களைக் கண்காணிப் பதிலும், அரசு அளிக்கும் நல்லுதவிகளை மக்கள் பெறச் செய்வதிலும் எவ்வித இடையூறுமின்றி அரசு இயந்திரத்தை இயக்கி வந்தனர். அனைவரும் மஹாபுத்திசாலிகள், அதாவது ஸமயோசித புத்தியை உடையவர்கள். (Presence of mind)

வெள்ளையர்களின் ஆட்சியின் மத்ய காலம். முக்யமான பதவிகளில் வெள்ளையர்களே இருந்தனர். டில்லியிலிருந்து ஒரு மேல் அதிகாரி தென்னாட்டிற்கு அரசுப் பணியாக வந்திருந்தாராம். அவர் குதிரை வண்டியில் சென்று கொண்டிருக்கும் பொழுது ஒரு ஊரில் கோயிலில் ஸம்ப்ரோக்ஷணம் நடந்து கொண்டிருந்தது. இதுவரை தாம் காணாத காட்சியாக இருந்தபடியால் வண்டியினின்றும் இறங்கிக் கோயிலருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். பட்டாசாரியர்கள் தலையில் குடத்தைத் தாங்கிக் கொண்டு மேலே சென்று விமானத்திலுள்ள கும்பத்திற்கு அபிஷேகம் செய்தனர். இதைக் கண்ணுற்ற பறங்கியர் 'இது என்ன? ஏன் இப்படி தண்ணீரைக் கொட்டுகிறார்கள்' எனக் கேட்டார், இதற்கு நம்மவரான தாசில்தார் விளக்கம் கொடுத்தார்.

அதாவது ''குடங்களில் தீர்த்தத்தை வைத்து அலங்காரம் செய்து தெய்வத்தை அவற்றில் ஆவாஹனம் செய்து வேத மந்திரங்களை ஓதுவார் கள். இதனால் தெய்வம் குடத்திலுள்ள தண்ணீருக்கு வந்துவிடும். அதை விமானத்தில் கொட்டுவ தால் தெய்வம் விமானத்தில் புகுந்துவிடும்'' என்று, இதைக் கேட்டதும் வெள்ளையர் முகத்தில் வருத்தம் தோய 'எல்லா மதங்களிலும் சாமிகளுக்குக் கஷ்டம்தான் போலிருக்கிறது. உங்கள் மதத்தில் சாமி குடத்திலிருந்து தலைகீழாகப் புகுந்து விமானத்திலும் தலைகீழாகத் தங்கி (த்ரிசங்கு போல) அவஸ்தைப்படுகிறது (திண்டாடுகிறது). எங்கள் சாமியோ சிலுவையில் அறையப்பட்டுத் தவிக்கிறது' என்றாராம்.

இதைக் கேட்ட ஒரு பட்டாசாரியர் எங்கள் சாமிக்கு அத்தகைய கஷ்டம் கிடையாது. சாமி நேராகவே இருப்பார் என்று சடக்கென மறுத்துக் கூறினார். முடியவே முடியாது. குடத்தைக் கவிழ்க்கும்போது விமானத்தில் புகுந்த சாமி தலைகீழாகத்தானே இருக்க முடியும் என வன்மையாக மறுத்தார் வெள்ளையர். உடனே பட்டருக்கு ஒரு யோசனை தோன்றியது. அருகிலிருந்த வனிடமிருந்த தீவட்டியை வேகமாகப் பிடுங்கித் தலைகீழாக அவர்கள் முன் பிடித்தார். பின்னர் நிமிர்த்தி, மீண்டும் தலைகீழாகவும் நிமிர்த்தியும்

பிடித்துக் காட்டி, ''பார்த்தீர்களா? தெய்வத்தினால் படைக்கப் பட்டதையே கவிழ்த்தால் நிமிர்ந்து கொள்ளுகிறதே! அப்படியிருக்க நம் சாமிக்கு அந்த சக்தி இல்லையென்று சொல்ல முடியுமா? முடியாதே. எனவே எங்கள் சாமிக்கு எவ்வித கஷ்டமும் கிடையாது'' என ஸமயோசிதமாக, பொருத்த மாகப் பதில் சொன்னார். இத்தகைய நுண்ணறிவு பெற்றவர்களாம் அயோத்தி அமைச்சர்கள்.

மேலும் தசரதனுடைய அமைச்சர்கள் தனுர்வித்யையை நன்கு கற்றவர்கள்; உறுதியான தடையற்ற திறன் பெற்றவர்கள்; வீரம் மிக்கவ ராயினும் பொறுமையைச் சிறிதும் இழக்காதவர். இதனால் பொதுமக்களின் பாராட்டைப் பெற்றவர்; கவனக் குறைவின்றி அரசுப் பணிகளில் ஈடுபாடு உடையவர்; மக்களுக்கு வாக்களித்தபடி உதவும் மனப்பாங்கினை உடையவர்.

मनस्यन्यत् वचस्यन्यत् कर्मण्यन्यत् दुरात्मनाम् ।
मनस्येकं वचस्येकं कर्मण्येकं महात्मनाम् ॥

மனஸி அன்யத் வசஸி அன்யத் கர்மணி அன்யத் துராத்மனாம் ।
மனஸிஏகம் வசஸிஏகம் கர்மணி ஏகம் மகாத்மனாம் ॥

மனதில் நினைப்பது ஒன்று, வாயால் பேசுவது மற்றொன்று, செய்வது வேறொன்று இத்தகையவரை துராத்மாக்கள் என்று அழைப்பர். மனதில் நினைப்பதையே மறைக்காமல் பேசுவதும், சொன்ன வண்ணமே செயலில் காட்டுவதும் மஹாத்மாக்களின் இயல்பு. ஆக இவ்வமைச்சர்கள் அனை வரும் மக்களால் மஹாத்மாக்களாகக் கருதப்பட்டனர். பேராற்றலும் பெரும் புகழும் பெற்றவராயினும் சிறிதும் இறுமாப்புறாது அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் புன்முறுவலுடன் தாமே அருகில் சென்று பேசும் பண்புடையவர். எனவே எவரிடமும் பகைமை உணர்வு அற்றவராம். கோபத்தினாலோ, காமத்தினாலோ, பொருளாசையினாலோ மனிதன் தன்னையறியாது பொய் பேசுவது இயல்பு ஆயினும் இந்நிலைகளிலும் கூட இவர்கள் பொய் பேசாதவர்கள். தம் நாட்டிலும் பிறநாட்டிலும் நிகழ் கின்றவைகளையும், நிகழ்ந்தவைகளையும், நிகழ இருப்பவைகளையும் நேரிலோ, ஒற்றர் மூலமாகவோ நன்கு அறிந்திருப்பர்.

गावः गन्धेन पश्यन्ति वेदेनैव द्विजातयः ।
चारैः पश्यन्ति राजानः चक्षुर्भ्यां इतरे जनाः ॥

காவ: கந்தேன் பச்யந்தி வேதேனைவ த்விஜாதய: ।
சாரை: பச்யந்தி ராஜான: சக்ஷுர்ப்யாம் இதரே ஜநா: ॥

பசுக்கள் மணத்தினால் அறிகின்றன. அந்தணர்கள் மறைகளைக் (சாஸ்த்ரங்களை) கொண்டு விஷயங்களை அறிகின்றனர். ஒற்றர்கள் மூலம் நாட்டு நடப்புகளை அரசர்கள் அறிகிறார்கள். மற்றவர்களோ தம் கண்களால்

பார்க்கப்படுவனவற்றையே அறிவார்கள். இம் மூதுரைக்கிணங்க ஆட்சி யாளர்கட்கு ஒற்றர்கள் தாமே கண்கள். இவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் நிபுணர்கள், அரசரால் ரஹஸ்யமாகச் செய்யப்படும் பல்வேறு பரிசோதனை களின் மூலம் அமைச்சில் பங்கு பெறச் சிறந்தவர்களெனத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்.

பண்புள்ள வணிகர்கள் தராசைத் தூக்கி நிறுத்தி அதன் முள் ஒரு பக்கமும் சாயாமல் இருக்கிறதா என முதலில் தூக்கிப் பார்த்துப் பின்னர் ஒரு தட்டில் பொருளையும் மற்றொன்றில் எடைக் கல்லையும் போட்டு முள் சாயாமல் இருக்கிறதா எனப் பார்த்துப் பொருளை வழங்குவர். இங்கு துலாக்கோல் முதலில் ஒரு பக்கமும் சாயாமல் தான் சமனாக நின்று, பிறகு தன் கண் வைத்த பொருளை நிறுப்பது போல் தசரதரின் அமைச்சர்கள் நீதி வழங்கும் போது இரு தரப்புவாதங்களைக் கேட்டு அவை உண்மையா என சீர் தூக்கி ஆராய்ந்து குறைகள் கண்ட நபருக்கு உரிய தண்டனையை வழங்குவர், வாதி பிரதி வாதிகளிடம் தமக்குள்ள முன் பகையையோ, முன் நட்பையோ மனதில் கொண்டு தீர்ப்பு வழங்கார். குற்றவாளி தமது அன்பு மகனாயினும் அவனுக்கும் தண்டனை வழங்குவர், தண்டனையைப் பகை யின் காரணமாகவோ, அன்புப் பிணைப்பின் காரணமாகவோ கூட்டியோ, குறைத்தோ செய்யாமல் உரிய தண்டனையை உரிய காலத்தில் விதிப்பர்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி. குறள் - 118

என்றபடி சிறந்த சான்றோர்களாக விளங்கினர்.

தங்களுக்கு நேர் சத்ருவாயினும் உண்மையில் குற்றம் புரியாதவர் களை ஏதாவதொரு காரணத்தைக் கற்பித்துத் தண்டிக்கலாமாயினும் தண்டிக்க மாட்டார்களாம். தூய வெண்ணிற ஆடைகளையே அணிவர். அமைச்சுப் பதவிக்கேற்ப கண்ணியமான அலங்காரங்களைச் செய்து கொள்வர். நடத்தையில் கவனம் மிக்கவர், நாட்டினரின் நடத்தையை மேம் படுத்துவதில் விழிப்புடன் செயலாற்றுபவர். அறியாமையாம் இருளை அகற்றும் ஆசிரியப் பெருமக்களிடம் உள்ள நற்பண்புகளைக் கண்டு அவற்றைக் கைக்கொள்வரே ஒழிய ஒரு சில குறைகளைக் கண்ணெடுத்தும் பாரார். அயோத்தியிலும், பிறநாடுகளிலும், பராக்ரமத்திலும், நுண்ணறி விலும், சிக்கலான பிரச்சனைகளில் தக்க முடிவு எடுப்பதிலும் சிறந்தவர் கள் எனப் பாராட்டப்பட்டனர்.

நன்னெறிமுறை வழுவாது ஆட்சி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டவர்; மக்களோடும், மன்னனோடும் எந்நிலையிலும் இனிதாகவே பேசும் தன்மையர்.

இனிய உளவாக இன்னாதகூறல் கனிஇருப்பக்
காய் கவர்ந்து அற்று. குறள் - 100

நன்மைபயக்கும் இனிய சொற்களைக் கொண்டு பேசும் ஆற்றலைப் பெற்றிருக்கும் பொழுது தீமையை விளைவிக்கும் இன்னாத (பிறர் மனதை உவப்பிக்காத) சொற்களைக் கையாண்டு பேசுவது சால்பு அன்று. அமிழ்தம் போன்று சுவைமிக்க நற்கனிகள் தம்வசம் இருக்கும் பொழுது அவற்றைக் கைவிட்டு, உயிரைமாய்க்கும் தன்மையுடைய விஷம் மிகுந்த எட்டிக்காய் களைத் தேடிப்பெற்று நுகர்வரோ?

सत्यं ब्रूयात् प्रियं ब्रूयात् न ब्रूयात् सत्यमप्रियम् ।

ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யம் அப்ரியம்

உண்மையே பேசவேண்டும். அதிலும் ப்ரியமானதையே அதாவது பிறரை உவப்பிக்கும் சொல்லையே பேசவேண்டும். உண்மையாயினும் பிறர் மனம் புண்பட பேசக்கூடாது. இவ்வாறு பிறர் விரும்பிப் பின்பற்றும் பண்பினைப் பெற்றிருந்தனர்.

காலமும் இடனும் ஏற்ற கருவியும், தெரிந்து கற்ற
நூலுற நோக்கித், தெய்வம் நுணித்தறங் குணித்த மேவோர்
சீலமும் புகழ்க்கு வேண்டும் செய்கையும் தெரிந்து கொண்டு
பால்வரும் உறுதி யாவும் தலைவற்குப் பயக்கு நீரார்.

க.ரா.அயோத்தி. - மந்திரம்

அமையப்போகும் ராமராஜ்யத்திற்கு முன்னோடியாக தசரத ராஜ்யம் அமைந்ததாம். இதற்குக் காரணம் அமைச்சர்கள் அரசியல் கல்வியைக் கசடறக் கற்றவர்கள்; ஒவ்வொரு பணியையும் செய்யும்பொழுது தாம் கற்ற கல்வியைத் துணையாகக் கொண்டு, உரியகாலம், தக்க இடம், பயனை யளிக்கும் உபாயம் ஆகிய இவற்றை நன்கு ஆய்ந்து செயல்படுவாராம். மேலும் அறநெறி தவறாதவராம், இவையனைத்தையும்விட ஆட்சியின் வெற்றிக்கு அமைச்சர்களின் தெய்வபக்தியே காரணமாம். எச்செயலையும் தெய்வத்தின் துணை கொண்டே துவக்குவார்களாம். இது கம்பனின் தீர்ப்பு.

உற்றது கொண்டு மேல்வந்து உறுபொருள் உணரும் கோளார்
மற்றது வினையின் வந்ததாயினும் மாற்றல் ஆற்றும்
பெற்றியர், பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரிய நூலும்
கற்றவர், மானம் நோக்கின் கவரிமான் அனைய நீரார்.

க.ரா. அயோத்தி - மந்திரம்

இவ்வமைச்சர்கள் நாட்டில் நிகழ்ந்தவைகளைக் கொண்டு பின்னர் நடக்கப் போவதை முன்கூட்டியே ஊஹித்தறிந்து, பிற்காலத்தில் நாட்டு மக்களுக்கு எவ்விதத் தீங்கும் நேராவண்ணம் பரிஹாரங்களைச் செய்வர்.

ஊழிற் பெருவலி யாவுள, மற்றொன்று
சூழினும் தான் முந்துறும். குறள் - 380

முன் வினையின் காரணமாக வரும் இன்னல்களைக் களையப் பல்வகை பரிஹாரங்களை (உபாயங்களை) நாம் மேற்கொண்டாலும், அவற்றை ஒதுக்கித்தள்ளினாலும், ஊழ்தான் முறப்பட்டு நின்று தன் பயனையே அளிக்கும். எனவே, ஊழ் அனைத்திலும் மிக்க வலிமையுடையது. இத்தகைய ஊழையும் சிறிதும் சலிப்பின்றி மனம் தளராது மீண்டும் மீண்டும் முயன்று மாற்றி அமைக்கும் பெருமை பெற்றவர். இக்கருத்தை மனுஸ்ம்ருதியும் குறளும் உறுதி செய்கின்றன.

आरभेतैव कर्माणि श्रान्तः श्रान्तः पुनः पुनः ।
कर्माण्यारभमाणं हि पुरुषं श्रीर्निषेवते ॥

ஆரபேதைவ கர்மாணி ஶ்ராந்த: ஶ்ராந்த: புன: புன: ।
கர்மாணி ஆரபமாணம் ஹி புருஷம் ஸ்ரீ: நிஷேவதே ॥

மனு - 9.300

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர். குறள் - 620

அமைச்சர்களின் இச் சிறப்புக்குக் காரணம் அவர்கள் அனைவரும் நற்குண நற்பண்புகள் அமைந்த நற்குடியில் பிறந்தவர்களாம். மேலும் மிகச் சிறந்த நூல்களைக் கற்றுப் போற்றுதற்குரிய தெள்ளிய அறிவினைப் பெற்றவர்கள். தம் உயிரைவிட அவர்கள் தன்மானத்தையே பெரிதும் மதிப்பவர்கள். சமரம் (கவரிமா) என்னும் கவரிமானுக்கு வால் மயிர் திரளாகவும், நீண்டும் அழகாகவும் இருக்கும். காட்டில் துள்ளிக் குதித்து ஓடும்போது மயிர் முள்ளில் சிக்கிவிடும். ஒரு மயிரைக்கூட அறுந்துபோக அனுமதிக்காது. மெள்ள மெள்ள வாலை ஆட்டி சிக்கல் அவிழ முயற்சிக்கும். மயிர் சிக்கலினின்று விடுபடும்வரை பட்டினியோடு புல் மேயாது காத்திருக்குமே ஒழிய, மேய்ந்து உயிரைக் காப்பதற்காக மயிரை அறுத்துக் கொண்டு செல்லாது. ஒரு மயிர் போவதைக்கூட தனக்கு நேர்ந்த பெரும் அவமதிப்பாகக் கருதிக் காத்திருந்து மேயாது பட்டினியால் உயிர் துறக்குமாம்.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம்வரின். குறள் - 969

கவரிமான் போன்றே நற்குடியில் தோன்றிய இவ்வமைச்சர்கள் உயிர் போகினும் மானம்போக (தன்மானத்தை இழக்க) சிறிதும் இசையார்கள். எனவே தம் புகழுக்கு இழுக்கு நிகழாதபடி நாட்டுத் தொண்டிலேயே மனம் செலுத்துவர். மேலும்,

தம் உயிர்க்கு இறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதிவிடாது நின்று உரைக்கும் வீரர்

செம்மையின் திறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியும் காலம்
மும்மையும் உணரவல்லார்; ஒருமையே மொழியும் நீரார்.

க.ரா.அயோத்தி - மந்திர

தம்முடையவும், தம்மை அண்டியவருடையவும் உயிரைக் காப்பதிலோ நன்மையைச் செய்து கொள்வதிலோ, நாட்டம் கொள்ளாமல் பொது நலனைப் பேணுவதிலே நாட்டம் கொள்வர். சில ஸமயங்களில் தலைவரின் (சக்ரவர்த்தியின்) கோபத்திற்கு உள்ளாக நேரிடலாம். அப்பொழுது தாமும் வெகுண்டு அமைச்சரவையினின்றும் வெளியேறி அரசனுக்குத் தீங்கிழைக்க எண்ணார். அச்சமயங்களில் அரசனிடம் தமக்கு ஏற்பட்ட அவமதிப்பைப் பொறுத்து நின்று, தலைமையின் கோபத்திற்குக் காரணத்தை ஆராய்ந்து நீதியை அரசனுக்குச் சான்றுகளுடன் உணர்த்திக் கோபத்தைக் களைந்து தம் வழியில் பணிகளைச் செய்ய முற்படுபவர். ஏனெனில் அரசனோடு இவர்களுக்குள்ள நட்பு அத்தகையது.

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு. குறள் - 784

நட்பு (ஸ்னேஹம்) என்பது ஒருவருக்கொருவர் உரையாடிச் சிரித்து மகிழ்வதும், சேர்ந்து உண்டு மகிழ்வதும் மாத்திரம் அன்று. தம்மில் ஒருவர்க்கு விரும்பத்தகாத தீமைகள் நேர்ந்த பொழுது தகாத செயல்களை அஞ்சாது கண்டித்து இடித்துக் கூறி உண்மை நீதியை விளக்கி நண்பனை நேர்வழிப்படுத்துவது மற்றொரு நண்பனின் செய்கையாம். எனவே தசரதர் உண்மை உணராது வெகுண்டபோதும் விலகிச் செல்லாது, தக்கவை கூறித் திருத்தும் மாண்புடையர் அமைச்சர்கள்.

அயோத்தியின் அரசர், சக்ரவர்த்தியாயினும், சிவனையும், திருமாலையும், நான்முகனையும் ஒத்த தோள்வலியைப் பெற்றவராயினும், ஆட்சியிலே ஊறித் திளைத்து அனுபவம் மிக்க தம் அமைச்சர்கள் ஆராய்ந்து செய்த முடிவை ஏற்று, அவர்கள் சொற்படியே பணிகளைச் செய்ய உத்தரவு அளிப்பதையே தம் கடமையாகக் கொண்டவர். எனவே அமைச்சர்கள் அரசனால் மரியாதையோடு மதிக்கப்படும் பெருமை பெற்றவர். இதையே

ईदृशैस्तैः अमात्यैश्च राजा दशरथ अनघः ॥

ஈத்ருஶை: தை: அமாத்யைஶ்ச ராஜா தசரத: அனக: ॥

வா.ரா.பால. - 7

என்று உணர்த்துவர். இத்தகைய அமைச்சர்களைப் பெற்றிருந்தமையால் தசரதர் கவலையற்று இருந்தாராம். அரசரென்ன, மக்களும் கவலையற்றிருந்தனர்.

பிசிர் என்ற ஊரில் ஆந்தையார் என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் நல்லொழுக்கமும் புலமையும், ஒருங்கே பெற்றவர். வயதில் முதியவர்

ஆயினும் இளமை குன்றாதவர். இவரைக் கண்டவர்கள் எல்லோரும் ஆச்சரியப்படுவர். ஏன்? முதுமைக்குரிய தளர்ச்சியோ, மயிர் நரைத்தலோ இவரிடம் காணமுடியாது. இவரை அணுகிப் பலர் கேட்டனர். ''ஆந்தையாரே, வணக்கம். உங்களை ஒரு கேள்வி கேட்க பல நாட்களாக எண்ணினோம். இப்பொழுதுதான் வாய்ப்பு கிட்டியது.''

ஆந்தையார், ''கேட்கலாமே. ஐயத்தைப் போக்குவதுதானே புலவர் கடமை''. ''உமது தலைமயிர் இம்முதுமையிலும் வெளுக்க (நரைக்க) வில்லையே, ஏன்? என்று வினவினர்.'' ''என்வீடு, அதாவது என் மனைவி, மக்கள் ஏவலர் அனைவரும் என் கருத்துக்கேற்ப மனம் கோணாது நடப்பர். என் ஊர் அதாவது நான் வாழும் ஊரில் உள்ள மக்கள் அனைவரும் பண்புடைய சான்றோர். என்நாடு செங்கோல் ஓச்சும் நல்லரசனால் ஆளப்படு கிறது. சட்டம், ஒழுங்கு நன்கு பராமரிக்கப்படுகிறது. ஆக வீடும், ஊரும், நாடும் நன்கு அமையப்பெற்றால் மனிதன் இன்ப வாழ்வு பெறலாம். ஒருவனுக்கு வீட்டிலும், ஊரிலும் நாட்டிலும் நல்வாழ்வு கிட்டுமாகில் கவலைக்கு இடமேது? கவலையற்றவனுக்குத் தலைமயிர் நரைக்காது உடலும் இளைக்காது'' என்றார் பிசிராந்தையார். (புறநானூறில்)

மாமன்னனின் குறை

तस्यत्वेवं, प्रभावस्य धर्मज्ञस्य महात्मनः ।
सुतार्थं तप्यमानस्य नासीत् वंशकरस्सुतः ॥
चिन्तयानस्य तस्यैवं बुद्धिरासीन्महात्मनः ॥
सुतार्थी वाजिमेधेन किमर्थं न यजाम्यहम् ॥
ततः सुमन्त्रः त्वरितं गत्वा त्वरित विक्रमः ॥
समानयत् तान् सर्वान् समस्तान् वेदपारगान् ॥
सुयज्ञंवामदेवं च जाबालिमथ काश्यपम् ।
पुरोहितं वसिष्ठं च ये चान्ये द्विजसत्तमाः ॥
मम लालप्यमानस्य पुत्रार्थं नास्ति वै सुखम् ।
तदर्थं हयमेधेन यक्ष्यामि इति मतिर्मम ॥

தஸ்யது ஏவம் ப்ரபாவஸ்ய தர்மக்ஞஸ்ய மஹாத்மன: ।
ஸுதார்த்தம் தப்யமானஸ்ய நாஸீத் வம்சகர: ஸுத: ॥
சிந்தயானஸ்ய தஸ்ய ஏவம் புத்தி: ஆஸீத் மஹாத்மன: ।
ஸுதார்த்தீ வாஜிமேதேன கிமர்த்தம் ந யஜாம் யஹம் ॥
தத: ஸுமந்த்ர: த்வரிதம் கத்வா த்வரித விக்ரம: ।
ஸமானயத் தான் ஸர்வான் ஸமஸ்தான் வேதபாரகான் ॥
ஸுயக்ஞம் வாமதேவம் ச ஜாபாலிம் அத காச்யபம் ।
புரோஹிதம் வஸிஷ்டம்ச யே ச அன்யே த்விஜஸத்தமா: ॥
மம லாலப்யமானஸ்ய புத்ரார்த்தம் நாஸ்தி வை ஸுகம் ।
ததர்த்தம் ஹயமேதேன யக்ஷ்யாமி இதி மதி: மம ॥

வ.ரா. பால. - 8

பரந்தநாடு, நன்மக்கள் மிகுந்த நாடு, திறமை மிக்க இணக்கமான அமைச்சரவை, கசடறக்கற்ற சான்றோர்களாகிய ஆலோசகர்கள், சிக்கலின்றி ஆட்சியை நடத்துவதற்குத் தேவையான வசதிகள், இவை அனைத்தையும் பெற்றிருந்தும் தசரத சக்ரவர்த்தியின் வாழ்க்கையில் நிம்மதி இல்லை. இன்பமில்லை, பெறுமவற்றுள் ஒன்றைப் பெறாத மனக்குறை. பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க எனப் பெரியோர் வாழ்த்துவர். இதற்குச் சிலர் 16 குழந்தைகளைப் பெற்றெடுத்து அவர் தம்மோடு வாழ்வதைப் பெரு வாழ்வு என்பர். இதன்று அதன் கருத்து.

துதி வாணீ வீரம் விசயம் சந்தானம் துணிவு தனம்
மதி தானியம் சௌபாக்கியம் போகம் அறிவு அழகு
புதிதாம் பெருமை அறம்குலம் நோவகல்பூண்வயது
பதினாறுபேறும் தருவாய் யமுனைத் துறைவனேயோ.

புகழ், கல்வி, மனஉறுதி, வெற்றி, புத்ரஸந்ததி, துணிவு, செல்வம், விரும்பிய தானியம், ஸௌபாக்யம், ஸுகானுபவம், அறிவு, பெருமை, நற்குடிப்பிறப்பு, நோயற்ற வாழ்வு, நீண்ட ஆயுள் ஆகிய இவைகளே 16 பேறுகளாம். இவற்றுள் புத்ர ஸந்ததியைத் தவிர மற்ற 15 பேறுகளையும் குறைவறப் பெற்றிருந்தாலும் மக்கட்பேறு இல்லாத குறை தசரதரைப் பெரிதும் வாட்டுகிறது. ''ப்ரஜாயை க்ருஹமேதினாம்'' — இல்லற வாழ்வைத் துவக்குவது வம்சத்தை விளங்க வைக்கும் நற்புதல்வனைப் பெறத்தானே என்பர் காளிதாஸரும். தசரதர் தர்மங்களை முற்றும் அறிந்தவர், புத்திர பாக்யத்தைப் பெறுவதற்கான தவத்தினை மேற்கொண்டவர் தான். தவத்தினை உறுதியாகப் பற்றுவதற்குரிய ஆத்ம பலத்தைப் பெற்றவர்தான். ராஜவம்சத்தை விளங்க வைக்கும் மழலையைப் பெறாத குறை பெரிதன்றோ? ஆயினும் இல்லாததை நினைத்து வருந்துவதைவிட அதைப் பெறுவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து அதைச் செயல்படுத்துவது தானே புத்திசாலித்தனம்! எனவே தாமே ஆய்ந்து ஒரு முடிவுக்கு வந்தார். நாம் எத்தனையோ வேள்விகளைச் செய்திருக்கிறோம். மிக உயர்வினைப் பெறவும், நாட்டு நலனுக்காகவும் அஸ்வமேத வேள்வியை பல தடவை செய்திருக்கிறோம். ஆனால் மக்கட் பேற்றைப் பெறுவதற்காக, என ஸங்கல்பித்துக் கொண்டு அஸ்வமேதம் செய்யவில்லை. இப்பொழுது மக்கட் பேற்றைப் பெறும் நோக்கோடு அஸ்வமேத வேள்வியைச் செய்தால் பட்டத்து ராணிகள் மூவருள் யாரிடமாவது புத்ர ஸந்தானம் ஏற்படாதா என ஏங்கினார். ஆண்டியாயினும் அரசனாயினும் மக்கட் பேற்றைப் பெறாராயின் தவித்துத் தவித்து ஏங்குவதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். மக்களைப் பெற்றவர்கள் இக் குறையினால் ஏற்படும் ஏக்கத்தை உணர்வது அரிது. இதை வரலாறு, அறநூல்கள் வாயிலாகவே உணர முடியும்.

இதை மஹாகவி காளிதாஸன் தனது சாகுந்தல நாடகத்தில் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறான்.

துஷ்யந்தன் இந்திரலோகம் சென்று போரில் இந்திரனுக்கு உதவி செய்து பூலோகம் திரும்புகிறான். மாரீச மஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு அருகில் தேரை நிறுத்துகிறான் மாதலி. தேரினின்றும் இறங்கிய துஷ்யந்தன் முனிவரை வணங்க ஆச்ரமத்தை நோக்கிச் செல்கிறான். அங்கு மனதைக் கவரும் அழகு மிளிரும் இயற்கைக் காட்சிகளினிடையே ஒரு குழந்தையின் காட்சி அரசனை மெய்சிலிர்க்கச் செய்கிறது.

குழந்தை ஸர்வதமனன் சிங்கக் குட்டியுடன் விளையாடுகிறான். குட்டி கொட்டாவி விடுகிறது. அப்பொழுது குழந்தை அதன் பற்களை எண்ண முயல்கிறது. அக்காட்சியைப் பார்த்து ரஸிக்கும் அரசனின் மனம் மயங்குகிறது.

किंनु खलु बाले अस्मिन् औरस इव पुत्रे -
स्निह्यति मे मनः, नूनं अनपत्यता एवं वत्सलयति ॥

கிம் நு கலு பாலே அஸ்மின் ஔரஸ இவ புத்ரே
ஸ்நிஹ்யதி மே மன: நூனம் அனபத்யதா ஏவம் வத்ஸலயதி ।

''என் மனம் ஏன் இக் குழந்தையை இவ்வளவு நேசிக்கிறது. பொதுவாக மக்கள் தாம் பெற்று வளர்க்கும் குழந்தையிடம் மிகுதியாகப் பாசத்துடன் நேசம் கொள்வதைப் பார்த்திருக்கிறேன். அதே போல என் மனம் என் மகனோ என்னும்படி இக்குழந்தையிடம் பாசப் பிணைப்பில் சிக்கி மயங்குகிறது ஏன்? ஒருவேளை நாம் மக்கட்பேற்றைப் பெறாததினால் மனம் அன்பு வெள்ளத்தில் மூழ்கி மயங்குகிறது போலும்'', என நினைக்கிறான்.

மேலும் ஸர்வதமனனை உற்று நோக்குகிறான். ஒரு காரணமும் இன்றி அதன் அதரங்களில் புன்னகை தவழ்கிறது, முல்லை மொட்டுகள் போன்று சின்னஞ்சிறு பற்கள் தெரிகின்றன. அவற்றின் வெண்ணிற ஒளி, இதழ்களின் செந்நிறத்தினிடையே பீறிட்டு வீசுகிறது. கவடு சூதற்ற புன்னகை தவழும் முகப் பொலிவில் தன்னையே பறிகொடுக்கிறான். இந்நிலையில் குழந்தை இதுவரை பழக்கமில்லாத புதியதோர் உருவத்தைப் பார்த்ததும் பேச முயற்சிக்கிறது. ஆனால் பேச்சு முழுமை பெறவில்லை. எழுத்துக்களின் உச்சரிப்பும் தெளிவாக இல்லை. அது குழந்தைகட்கே உரிய மழலை மொழி. அதைப் புரிந்து கொள்ள தாய் ஒருத்தியினால் தான் முடியும். இவன் தந்தை இப்பொழுதிருந்தால் த்ருஷ்டி விழுமே என அஞ்சி இருகைகளாலும் தாவி எடுத்து தன் மார்போடு இறுகத் தழுவி மாற்றி மாற்றி இரு கன்னங்களிலும் முத்தமிட்டு உச்சி முகந்து தன் மடியிலிட்டு பட்டாடையினால் கடைவாய் வழிசோரும் நீரைத் துடைத்து தானும் மழலையில் அதோட பேச முயலுவான். தன் ஆடையும் உடலும் அழுக்காவதையே பெரும் பேறாக— பாக்யமாகக் கொண்டு மகிழ்ந்து இன்புறும் பெற்றோர்களை நினைத்து என்ன தவம் செய்தார்களோ அவர்களென பெருமூச்சுவிட்டுப் பேசுகிறான் அரசன்

आलक्ष्य दन्तमुकुलान् अनिमित्त हासैः
अव्यक्त वर्ण रमणीय वचः प्रवृत्तीन् ।
अंकाश्रय प्रणयिनः तनयान् वहन्तः
धन्याः तदङ्ग रजसा मलिनी भवन्ति ॥

अनेन कस्यापि कुलांकुरेण
स्पृष्टस्य गात्रेषु सुखं ममैवम् ।
कां निर्वृतिं तस्य जनस्य कुर्यात्
यस्यायमङ्गात् कृतिनः प्ररूढः ॥

ஆலக்ஷ்ய தந்த முகுளான் அநிமித்த ஹாஸை:
அவ்யக்த வர்ண ரமணீய வச: ப்ரவ்ருத்தீன் ।
அங்காஶ்ரய ப்ரணயின: தனயான் வஹந்த:
தன்யா: ததங்க ரஜஸா மலீனீபவந்தி ॥

அனேன கஸ்யாபி குலாங்குரேண
ஸ்ப்ருஷ்டஸ்ய காத்ரேஷு ஸுகம் மமைவம்
காம் நிர்வ்ருதிம் தஸ்ய ஜனஸ்ய குர்யாத்
யஸ்யஅயம் அங்காத் க்ருதின: ப்ரரூட: ॥

சாகுந்தலம்

குழந்தை சிங்கக்குட்டியை இறுகப் பிடிக்க, அது பிடியினின்றும் தப்ப முடியாமல் திணறுவதைக் கண்ட தவமாது அரசனை விடுவிக்கும்படி வேண்டுகிறாள். உடனே விரைந்து சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டதும் உணர்ச்சி வசப்பட்டுத் தனக்குள் பேசுகிறான்: ''இக் குழந்தை ஏதோ ஒரு குலத்தை வாழ வைக்க முளைத்திருக்கிறது. அக்குலக்கொழுந்துக்கும் எனக்கும் தொடர்பு ஏது? ஆயினும் தொட்ட மாத்திரத்திலேயே என் மனம், ஆனந்த வெள்ளத்தில் பொங்கி எழுகிறதே! எனக்கே இப்படியாயின் இதைப் பெற்றெடுத்தவர் எத்தகைய இன்பத்தை நுகர்வர்'' என்கிறான்.* இங்கு இச் சுலோகத்திற்கு உரையாசிரியர் உரையிட சொற்கள் கிடைக்காது இதன் கருத்தை அவரவர் அனுபவத்தினாலேயே அறியக் கூடும் என்கிறார்.

இதே போன்று மழலை இன்பத்தைப் பெறாத குறை தசரதனை வாட்டத்தானே செய்யும்? மேலும் ஒரு குழந்தையைக் கூடப் பெறாத வீடு ஒரு வீடாகுமா? அது எப்படி இருக்கும் தெரியுமா? கேளுங்கள்

பண் இலா பாடல் போலும், பரிவு இலா நட்பு போலும்
உண்ணில் ஆநெய் இலாமல் உண்டிடும் அடிசில் போலும்

குறிப்பு: துஷ்யந்தன் காந்தர்வ விவாஹ முறைப்படி கண்வர் ஆச்ரமத்தில் சகுந்தலையை மணந்தவன். பின்னர் இவள் அரண்மனைக்கு வந்த போது சாபம் காரணமாக இவளை மணந்ததை மறந்து ஏற்க மறுத்து விட்டான். எனவே அவள் மாரீச மஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு வந்து தங்கினாள். இக்குழந்தை துஷ்யந்தனுடையதே.

பெண்ணிலாச் சயனம் போலும் பெயரிலா வாழ்க்கை போலும்
கண்ணிலா வதனம் போலும் கான்முளை இல்லா இன்பம்.

பழம்பாடல்

பாடல் என்றால் சிறந்த பண்ணில் (ராகத்தில்) பாடத் தகுதியுடைய தாய், செவியமிழ்தமாய், மனதைக் கவரும் தன்மையதாய் இருக்க வேண்டும். அப்படியின்றி எந்த ராகத்திலும் மெட்டமைத்து ஸ்வரப்படுத்த முடியாதபடி பாட்டு (ஸாஹித்யம்) அமைந்திருந்தால் என்ன பயன், டப்பா ஸங்கீதத்திற்கும் தகுதியற்றிருந்தால் எந்த இசைஞர் தான் அதைப்பாட முற்படுவர்? ஆக கருத்தாழம் செறிந்திருப்பினும் பண் அமைத்துப் பாட முடியாத பாடல் பயனற்றதாம்.

நம்மோடு பலர் நண்பர்களாக உறவாடுவர். ஏன் தெரியுமா? தமக்கு ஏதாவது தேவை ஏற்படும்போது நம்மை இணங்கச் செய்து தேவையைப் பறித்துச் செல்ல, அல்லது நம் பெயரைச் சொல்லிக் கொண்டு நமக்குச் செல்வாக்கு உள்ள இடங்களினின்றும் தமக்கு வேண்டும் பொருளைப் பறித்துச் செல்ல! இதுவன்று நட்பு. நண்பன் எனில் பரிவு வேண்டும் அதாவது.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. குறள் - 787

சிற்சில சமயங்களில் பல்லோர் இருக்குமிடத்தில் இடுப்பினின்றும் நம் ஆடை அவிழ்ந்து பெரும் அவமதிப்புக்கு உள்ளாக நேரிடும். அப்பொழுது கை தானாகவே விரைந்து சென்று அவிழும் ஆடையை இடுப்பில் இறுக்கி விடும். அதுபோல துன்பம் நேரும் காலத்தில் நாம் கோராமலே அதைக் களைய முற்படுவது தான் நட்பாகும். இத்தகு பரிவுதான் நட்புக்குச் சிறப்பைத் தரும்.

இதை ஒரு கவிஞன் இயற்கைச் செயலிலே அழகாக எடுத்துக் காட்டுகிறான்.

क्षीरेणात्मगतोदकाय हि गुणाः दत्ताः पुरा तेऽखिलाः
क्षीरे तापमवेक्ष्य तेन पयसा ह्यात्मा कृशानौ हुतः ॥
गन्तुं पावकमुन्मनः तदभवत् दृष्ट्वा तु मित्रापदं
युक्तं तेन जलेन शाम्यति सतां मैत्री पुनस्त्वीदृशी ॥

க்ஷீரேண ஆத்ம கதோதகாய ஹி குணா: தத்தா: புரா தே அகிலா:
க்ஷீரே தாபம் அவேக்ஷ்ய தேன பயஸா ஹிஆத்மா
க்ருஶானௌ ஹுத: ।
கந்தும் பாவகம் உன்மந: தத் அபவத் த்ரஷ்ட்வாது மித்ராபதம்
யுக்தம் தேன ஜலேன ஶாம்யதி ஸதாம் மைத்ரீ புன: து ஈத்ருசீ ॥

பர்த்ருஹரி

பாலுக்குத் தீயினால் உண்டாகும் துன்பத்தைப் போக்க நீர் பொங்கி விழுந்து தீயை அணைத்துவிடுகிறது. பாலில் நீரைக் கலக்கிறோம். பால் தனக்கு ஒவ்வாத தன்மையை உடைய நீரை தம்மோடு இணைக்கிறார்களே எனக் கோபிப்பதில்லை. மாறாக நீரை தன் தோழனாக ஏற்று தனது வெண்மை, இனிப்பு முதலிய வைகளை அதற்கும் அளித்து தன்னிடமிருந்து தோழனைப் பிரிக்க முடியாதபடி ஒத்து வாழ்கிறது. பாலைக் கவனமாக அடுப்பில் ஏற்றிக் காய்ச்சுபவர்கள் பொங்கி வழியாதபடி காய்ச்சுவர். அப்பொழுது பாலோடு கலந்த நீர்தான் சுண்டும். ஏன் தெரியுமா? தோழனாகிய நீர் தீயின் வெம்மையைத் தான் ஏற்றுப் பரிவுடன் தோழனாகிற பாலைப் பாது காக்கிறது. ஆயினும் சில ஸமயங்களில் நமது கவனம் வேறிடத்தில் செல்லும் போது மீண்டும் பால் பொங்கி வழியத் துடிக்கிறது. காரணம் தனது உற்ற தோழனான நீர் நமக்காக கொடிய வெப்பத்தினால் சுண்டி இளைத்துப் போகிறதே என வருந்தி (பால்) தான் தீயில் குதிக்கத் துடிக்கிறது. இதைக் கண்ட நீர் உற்ற தோழனாகிய பாலைத் தீயில் விழாமல் தடுக்க, தான் பாலோடு மீண்டும் சேர்ந்து கொள்கிறது. அதாவது மீண்டும் பால் பொங்கும்போது மேல் மூடியை மெதுவாக எடுக்கிறோம். அப்பொழுது வெளிக்காற்று மூடியின் உட்புறத்தில் படுகிறது. மூடியில் படர்ந்திருந்த நீராவி தண்ணீராக மாறி பாலில் விழுகிறது. அல்லது நாம் பாலில் தண்ணீரைத் தெளிக்கிறோம்; பொங்குதல் அடங்கிவிடுகிறது. எனவே பரிவில்லாத நட்பு பயனற்றதாகும்.

(இங்கு பாலும் தண்ணீரும் ஒன்றை மற்றொன்று காக்கப்பரிவுடன் போட்டியிடுவதாக எடுத்துக்காட்டிய கவிஞனின் வர்ணனைத் திறன் மிகமிக மெச்சத்தக்கது.)

வந்த விருந்தினரை உபசரித்து அறுசுவை உண்டி அளிக்கிறோம். திருவிழா, பிறந்தநாள், திருமணம் போன்ற நாட்களிலும் சான்றோர்கட்கு, நண்பர்கட்கு பல்வகை இனிப்புகளுடன் விருந்து அளிக்கிறோம். எத்துணை பண்டங்களைப் பரிமாறினாலும் அன்னத்திற்கு முதலில் நெய் இல்லாவிடில் அந்த சாப்பாடு ரஸிக்குமா, கமகம என நறுமணம் வீசும் நெய் தானே சாப்பாட்டில் நம்மை ஈர்க்கிறது. அதிலும் ஆவின் நெய்யின் நறுமணமே நம்மைச் சாப்பாட்டிற்கு அழைக்குமே! எனவே பருப்பு, பல்வகை பக்ஷணங்கள், பல்வகைப் பச்சடிகள், சாற்றமுது, பாயஸம், பல்வகைக் கரியமுதுகள் முதலானவற்றோடு கூடின உயர்ரகச் சாப்பாடாயினும் அன்னத்தில் பசு நெய் பரிமாறா விட்டால் அவ்வுண்டி மேன்மையுடைய தாகாது; மேலும் பரிசுத்தமும் ஆகாது. நமக்கு சாப்பாடும் ஒரு வைதிக கர்மாவாகும். அதைப் ப்ராணாக்நிஹோத்ரம் என்பர். அன்னத்தில் நெய் வார்த்த பிறகுதான் இதைச் செய்ய முடியும். நெய்யை அன்ன சுத்தி என்றும் கூறுவர். ஆக நெய் உணவுக்கு, உண்ணத் தகுதியையும், நறுமணத்தையும் அளித்து சாப்பாட்டைச் சிறப்பிக்கிறது. அடிசிலுக்கு நெய்யில்லாத குறைவு

போல் மன்னனுக்கு மக்கட் பேறற்ற பிறபேறுகள் மகிழ்வை அளிக்கவில்லை.

மனைவியை இழந்தவனுக்கு படுக்கை பல்வகை வசதிகளோடு கூடியதாயினும் இன்பத்தை நல்குமா? மாறாக அது வருத்துமேயொழிய மகிழ்விக்காது.

ஒருவன் தன் வாழ்க்கையின் பல செயல்களைச் செய்தாலும் பெரும் பொருளை ஈட்டினாலும் புகழில்லாத வாழ்க்கை பயனற்றதாகும்.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. குறள் - 236

மக்களாகப் பிறப்பவர்கள் புகழ் பெறுதற்குக் காரணமான நற்குண நற்பண்புகளோடு பிறத்தல் வேண்டும். இத்தகு பெருமை சேர்க்கும் குணங் களைப் பெறாதவர் பிறக்காமல் இருப்பதே நன்று அல்லது விலங்காகப் பிறப்பதே நன்று. மேலும் பழியின்றி வாழ வேண்டும். அதுவே வாழ்க்கைக்குப் பெயரை (புகழை) நல்கும்.

வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். குறள் - 240

வாழ்வில் சிறிதும் பழியேற்பட இடம் தரலாகாது. பழியேற்பட்டுப் புகழ் குன்றிய வாழ்க்கை பயனற்றதாம்.

வாழ்வில் புகழைப் பெற வறிஞர்கட்கு ஈவது, பிறரை மதித்து நடப்பது, கசடறக் கல்வியைக் கற்பது, கற்றதற்கேற்ப நடந்து கொள்வது ஆகியவை தேவை.

ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. குறள் - 231

ஏழைகட்கு உண்டி முதலியன கொடுக்க வேண்டும். அதனால் புகழொடு வாழ்வோம். வாழ்க்கையில் இப்புகழைத் தவிர நாம் பெறும் பயன் ஏதுமில்லை. உலகில் பிறருக்குக் கொடுத்து வாழும் தன்மையர் மிகக் குறைவு.

மக்களுள் நூறில் ஒருவன் சூரனாகவும். ஆயிரத்தில் ஒருவன் அறிஞனாகவும், பத்தாயிரத்தில் ஒருவன் பேச்சாளனாகவும் இருப்பான். ஆனால் கொடையாளியாக ஒருவன் தோன்றுவது அரிது.

शतेषु जायते शूरः सहस्रेषु च पण्डितः ।
वक्ता शतसहस्रेषु दाता भवति वा न वा ॥

ஶதேஷு ஜாயதே ஶூர: ஸஹஸ்ரேஷு ச பண்டித: ।
வக்தா ஶதஸஹஸ்ரேஷு தாதா பவதிவா ந வா ॥

எனவே இவ்வளவு அரிதான கொடைப் பண்பு வாழ்க்கையில் நற்பெயரை, புகழை அளிக்கும். இத்தகைய மிக அரிதான கொடுத்தலெனும் பண்பில்லாத வாழ்க்கை போன்றதாயிற்று மக்கட்பேரற்ற அரசரின் வாழ்வு.

மனிதனின் உறுப்புகளுள் தலை, சிறந்தது. இதை உத்தமாங்கம் என்பர். அதோடு அறிவுப் புலன்கள் அனைத்தும் அங்குதான் இருக்கின்றன. அவற்றுள் கண்கள் மிக முக்கியமானவை. முகத்திற்கு அழகு கண்களால் தான். கண்களில் பூ விழுந்திருந்தாலோ, பூனைக் கண்களாக இருந்தாலோ, பொட்டைகளாயிருந்தாலோ முகம் எப்படி இருக்கும்? மற்றைப் புலன்கள் இருப்பினும் கண் இலாமையால் முகம் பொலிவிழந்து அழகிழந்து காண்பது போல தசரதன் மக்கட் பேறின்மையால் அனைத்தையும் இழந்தவன் போல் வருந்துகிறான்.

ரஸிகனான தகப்பன் குழவியின் மழலையில் மூழ்கி மகிழும் போது குழலோசையையோ, யாழின் இசையையோ பொருட்படுத்தமாட்டான். அதன் பேச்சைக் கேட்டுக் கொண்டே எடுத்து மார்போடு அணைத்துக் கொஞ்சும்போது மயிர்க் கூச்சலிட்டு மெய்மறந்து நிற்பான். தான் உணவு உண்ணும்பொழுது குழந்தை தவழ்ந்து வந்து கைகளால் அளாவிய அடிசிலை அமிழ்தமெனப் புசிப்பான். இத்தகைய பாக்கியத்தைப் பெற்ற பெற்றோர் களை நினைக்கும் போது மன்னனின் மனம் குமுறாமல் என்ன செய்யும்? இதைச் சித்தரிக்கும் குறள் ஓவியங்களைப் பார்ப்போம்.

குழல்இனிது யாழ்இனிது என்ப தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்.
மக்கள்மெய் தீண்டல்உடற்கு இன்பம்மற்று அவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.
அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ். குறள் - 66, 65, 64.

படித்ததும் நம்மையே மயக்கும் ஒரு புறநானூற்றுப் பாடலையும் கேளுங்கள்.

படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே.

பாண்டியன் அறிவுடைநம்பி

இட்டும்: பரிமாறியும், துழந்தும்: துழாவியும், விதிர்த்தும்: அசைத்தும், பயக்குறை: பயன்தரும் செயல்.

சித்ரகேது ஒரு பேரரசன், பூ மண்டலம் முழுவதையும் ஆண்டு வருகிறான். அத்தகைய பரந்த ஸாம்ராஜ்யம். அரண்மனையில் பல்வகை ஐச்வர்யங்களும் நிரம்பிக் கிடக்கின்றன. ராஜ போகங்கள் எவற்றிலும் குறையில்லை. ஒரு ஸமயம் தனது மாளிகைக்கு வந்த அங்கிரஸ முனிவரைப் பார்த்துப் பேசுகிறான்:

''முனிவரே! ஒருவனுக்கு நல்ல பசி வயிற்றைக் கிள்ளுகிறது. அதோடு தாகம் நாவினை வருத்துகிறது. நாவறட்சியினால் எதையும் பேசக்கூட முடியவில்லை. இத்தகையவனுக்கு மார்பில் நறுமணமுள்ள சந்தனத்தைப் பூசிப் பரிமளம் மிகுந்த அழகிய மலர் மாலையைச் சூட்டுகிறோம். இவன் இவ்வுபசாரங்களைப் பெற்று மகிழ்வானா? தாகத்தைத் தணிக்க தண்ணீரும் பசியைத் தணிக்க அன்னமும் அன்றோ அவனால் வேண்டப்படும்? அதுபோல ஆட்சியும் ஐச்வர்யங்களும், ஸுகபோகங்களும் நன்மக்கட் பேற்றைப் பெறாத என்னை மகிழ்விக்கவில்லை. ஒரு மகனைப் பெறாத குறையே—ஏக்கமே என் முன் நிற்கிறது'' என்றான்.

இம்மக்கட்பேறு இவ்வுலகில் மாத்திரம் மகிழ்ச்சியை அளிப்பது என்பதில்லை. மேலுலகிலும் ஸுகத்தை நல்குகிறது. மனு தமது ஸ்ம்ருதியில் கூறுவார்:

ऋणानि त्रीणि अपाकृत्य मनः मोक्षे निवेशयेत् ।
अनपाकृत्यमोक्षं तु सेवमानः व्रजत्यधः

ருணானி த்ரீணி அபாக்ருத்ய மன: மோக்ஷே நிவேபயேத் ।
அனபாக்ருத்ய மோக்ஷம் து ஸேவமான: வ்ரஜதி அத: ॥

மனு.- 6.35

जायमानो वै ब्राह्मणः त्रिभिः अनृणवान् जायते ।
ब्रह्मचर्येणऋषिभ्यः यज्ञेन देवेभ्यः प्रजया पितृभ्यः
एषवा अनृणः यः पुत्री, यज्वा ब्रह्मचारी वाऽस्ति ॥

ஜாயாமானோவை ப்ராஹ்மண: த்ரிபி: அந்ருணவான் ஜாயதே ।
ப்ரஹ்மசர்யேண ரிஷிப்ய: யஜ்ஞேன தேவேப்ய: ப்ரஜயா பித்ருப்ய: ।
ஏஷ வா அந்ருண: ய: புத்ரீ, யஜ்வா, ப்ரஹ்ம சாரீ வாஸ்தி ॥

ச்ருதி

மூன்று கடன்களைப் போக்கிவிட்டு மோக்ஷத்தைப் பெறுவதில் மனதைச் செலுத்த வேண்டும். இம் மூன்று கடன்களையும் தீர்க்காமல் மோக்ஷத்தைப் பெற விரும்புபவன் ஸம்ஸாரமாகிய குழியிலேயே விழு கிறான்.

மனு இப்படிக் கூறுவதற்கு ஆதாரம் வேதமாகும். வேதம் கூறுவ தாவது ''பிறக்கின்ற ஒவ்வொரு அந்தணனும் மூன்று செயல்களினால்

கடன்கள் அற்றவனாக ஆகிறான். 1. வேதாத்யயனம் செய்வதினால் ரிஷி களுக்கான கடனினின்றும் விடுபடுகிறான், 2. வேள்வியைச் செய்வதினால் தேவர்களுக்குரிய கடனைத் தீர்க்கிறான், 3. நன்மகனைப் பெறுவதினால் பித்ருக்களுக்குச் செலுத்த வேண்டிய கடனின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளுகிறான். எவனொருவன் புத்ரனைப் பெற்றவனாகவும், யாகத்தைச் செய்கிறவனாகவும், மறைகளை முறைப்பட ஓதுகின்றவனாகவும் இருக் கிறானோ அவனே கடன்கள் அற்றவன்'' என வேதம் பகரும். ''ப்ரஜயா ஹி மனுஷ்ய: பூர்ண:'' (வேதம்) மக்கட் பேற்றாலேயே மனித வாழ்வு நிறைவடைகிறது.

எனவே மக்கட்பேற்றைப் பெற்றவனே பித்ருக்களுக்கான கடனின் றும் விடுபட்டு மோக்ஷத்தைப் பெறுகிறான். இதை பாகவதத்திலுள்ள ப்ரஹ்லாத ந்ருஸிம்ஹ ஸம்வாதம் உறுதிப்படுத்துகிறது.

तस्मात् पिता मे पूयेत दुरन्तात् दुस्तरात् अघात् ।
पूतस्ते शान्तया दृष्ट्या दृष्टः कृपणवत्सल ॥

தஸ்மாத் பிதாமே பூயேத துரந்தாத் துஸ்தராத் அகாத் ।
பூதஸ்தே சாந்தயா த்ருஷ்ட்யா த்ருஷ்ட: க்ருபணவத்ஸல! ॥

பாகவதம் - 7.10.17

ஹிரண்ய வதத்திற்குப் பிறகு அவனது ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்த நரஸிம்ஹன் பக்த பிரஹ்லாதனைத் தேவையான வரனைப் பெற்றுக் கொள்ளும்படி மீண்டும் மீண்டும் வற்புறுத்தவே ஒரு வரத்தைக் கேட்டான்.

''என் தந்தை எண்ணற்ற பாவங்களைச் செய்தவர். அப் பாபங்களுக்கு முடிவே கிடையாது. பிராயச்சித்தங்கள் செய்தும் தீர்க்க முடியாது. இத்தகை யோரிடமும் வாத்ஸல்யமுடைய தேவரீர் உமது கோபம் நீங்கிய கருணை மிகும் அருட்பார்வையினால் என் தந்தையைத் தூய்மை பெற்றவராக (பாபங்கள் அனைத்தும் நீங்கியவராக) ஆக்க வேண்டும்'' என வரம் வேண்டினான்.

त्रिः सप्तभिः पिता पूतः पितृभिः सह ते अनघ ।
यः साधो अस्यकुले जातः भवान् वै कुलपावनः ॥

த்ரி: ஸப்தபி: பிதா பூத: பித்ருபி: ஸஹ தே அனக ! ।
ய: ஸாதோ அஸ்ய குலே ஜாத: பவான் வை குலபாவன: ॥

பாகவதம் - 7.10.18

ந்ருஸிம்ஹன்: ''பக்தா! உன் தந்தைக்கு எத்தகைய பாபங்களும் இப்பொழு தில்லையே; நான் எதைப் போக்குவது?''

பிரஹ்லாதன்: ''என் சொல்லைக் காக்க அவதரித்த எம்பெருமானே! எனது பிதா பரம நாஸ்திகன். அவர் செய்யாத பாபங்களே கிடையாதே! உமது அனுக்ரஹத்தினால் தானே அவற்றை அழிக்க முடியும்?''

ந்ருஸிம்ஹன்: ''பக்தனின் அனுக்ரஹத்தினாலும், அவன் தொடர்பினாலும் கூட அவை அழியும்; (எனவே) பரமபக்தனாகிய நீ ஹிரண்ய னுக்குத் தவப் புதல்வனாய்ப் பிறந்தாய், அதனால் உன் தந்தை எல்லாப் பாபங் களினின்றும் விடுபட்டு என் கருணைக்குப் பாத்ரமாகிவிட்டான். நீ வரமாக இதைக் கேட்டிருந்தால் ஹிரண்யனுக்கு மாத்திரம் பாபவிமோசனம் கிடைத்திருக்கும். ஆனால் நீ பிறந்ததினால் உனது தந்தைக்கு முன்னுள்ள 21 தலை முறையினர் பாபவிமோசனம் பெற்று முக்தர்களாகி விட்டார்கள். நீ அத்தகைய குலபாவனனான ஸாது ஆவாய்.'' இங்கு மக்கட்பேறு பல்லோருக்குப் பாபவிமோசனம் அளித்தது. மேலும் புத் எனும் ஒருவகை நரகத்தில் விழுந்து துன்புறாமல் பாதுகாப்பதால் மகன் புத்ரன் என வழங்கப் படுகிறான்.

ஆகவே மக்கட்பேறு இவ்வுலகில் வாழுங் காலத்திலும், இறந்த பிறகு மேலுலகிலும் இன்பத்தையளிப்பதால் அதைப் பெறாத குறை மன்னனை வாட்டத்தானே செய்யும்?

இதற்காக அஶ்வமேத வேள்வியைச் செய்யும் முடிவுக்கு வந்தார் தசரதர். மன்னன் கருத்தையறிந்த ஸுமந்திரர் விரைந்து சென்று வேதம் வல்லார்களான ஸுயக்ஞர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், குல புரோஹிதரான வஸிஷ்டர் மற்றும் கல்வி கேள்விகளிலும் தவத்திலும் மிகச் சிறந்த அந்தணர்கள் அனைவரையும் அழைத்துவந்தார்.

அரசர் அவர்கள் அனைவரையும் உரிய முறையில் உபசரித்து ''சான்றோர்களே! நான் நன்மகனைப் பெறாத காரணத்தினால் சிறிதளவு கூட மகிழ்ச்சியைப் பெறாது வாழ்க்கையை வெறுத்துப் புலம்பிய வண்ணம் இருக்கிறேன். அதற்காக அஶ்வமேத யாகத்தைச் செய்ய எண்ணி யிருக்கிறேன். காம்ய கர்மாவாகச் செய்வதால் சாஸ்த்ர விதிப்படி சிறிதும் பிழையின்றி அனுஷ்டிக்க வேண்டும். அதைத் தாங்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பினை நல்கிப் பாங்குற நடத்திக் கொடுத்துப் பூர்த்தி பெறச் செய்தல் வேண்டும்'' என்று வேண்டினார்.

அஸ்வமேத மஹாயாகம்

ततः साध्विति तद्वाक्यं ब्राह्मणाः प्रत्यपूजयन् ।
संभाराः संभ्रियन्तां ते तुरगश्च विमुच्यताम् ॥
सर्वथा प्राप्स्यसेपुत्रान् अभिप्रेतांश्च पार्थिव ।

தத: ஸாது இதி தத் வாக்யம் ப்ராஹ்மணா: ப்ரத்யபூஜயன் ॥
ஸம்பாரா: ஸம்ப்ரியந்தாம் தே துரகஸ்ச விமுச்யதாம் ॥
ஸர்வதா ப்ராப்ஸ்யஸே புத்ரான் அபிப்ரேதான் ச பார்த்திவ ॥

வா.ரா. பால. - 8

அஸ்வமேதம் எனும் யாகத்தை, தங்கு தடையற்ற செல்வமும் அதிகாரமும் உடையவர்கள் தான் செய்ய முடியும். குறுநில மன்னர்களால் செய்ய முடியாது. வேள்வியைத் தொடங்குவதற்கு முன் ஒரு குதிரையை நாடு முழுவதும் சுற்றவிடுவார்கள். அதற்குப் பாதுகாப்பாகப் பெரும் படையும் உடன் செல்லும். எந்த அரசனாவது குதிரையைப் பிடித்துக் கட்டிவிட்டால் அவன் வேள்வி புரியும் அரசனின் மேலதிகாரத்தை ஒப்புக் கொள்ளாதவன் ஆவான். எனவே அந்த அரசனோடு பின் தொடர்ந்து வரும் படையினர் போரிட்டு அந்நாட்டை வென்று குதிரையை விடுவித்து மேலே செல்ல விடுவர். இவ்வாறு நாடு முழுவதும் சென்று எதிரிகளை வீழ்த்தி வாகை சூடி வந்த பிறகே அஸ்வமேதப் பெருவேள்வியைத் தொடங்குவர். எனவே மன்னர் மன்னனாய்த் திகழும் பேரரசரே இவ் வேள்வியைச் செய்ய இயலும். தசரதரோ மாமன்னரானபடியால் இதைச் செய்ய எண்ணினார்.

வீரமும் அதிகாரமும் படைத்த சக்கரவர்த்திகள் பெரும்பாலும் அதிகாரவர்க்கத்தினர் மூலமாகவே தம் பணிகளை நடத்திக் கொள்வர். அப்படியிருக்க தம்மை நேரில் அழைத்து கௌரவித்து யாகத்தை நடத்திக் கொடுக்கும்படி அரசரே வேண்டுகிறாரே என மகிழ்ந்த மஹர்ஷிகள், ''அரசே தாங்கள் நன்மக்களைப் பெற அஸ்வமேதம் செய்வது மிகப் பொருத்தமான செயல்'' எனப் புகழ்ந்து பேசினர்.

(நாம் நமது முக்தி பெற்ற தாய் தந்தையருக்கு ஆண்டுதோறும் சிரத்தையுடன் செய்ய வேண்டிய சிராத்தத்திற்கே ஸ்வாமிகளை (அந்தணர் களை) முறைப்படி நேரில் சென்று தண்டனிட்டு போஜனத்திற்கு எழுந் தருளும்படி பிரார்த்திப்பதில்லை! போற்றப்பட வேண்டிய ப்ருஹஸ்பதி களின் மூலமாகவே அனைத்தையும் செய்து முடிக்கிறோம். கடமையை ஆற்றுவதில் நமக்குக் கண்ணும் கிடையாது, கருத்தும் கிடையாது, தசரதரின்

பண்பையும் கடமையுணர்ச்சியையும் இங்கு நாம் நினைவில் கொண்டு திருந்த முயலவேண்டும்).

மேலும் மஹர்ஷிகள் அரசனை நோக்கி ''அரசே! வேள்விக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் விரைவில் திரட்டுங்கள். திக் விஜயத்திற்கான குதிரையை நாட்டில் சுற்ற விடுங்கள். உமது விருப்பத்திற் கேற்ப நன்மக்களைப் பெற்று மகிழ்வீராக'' என்று ஆசீர்வதித்தனர்.

सरय्वाः च उत्तरे तीरे यज्ञ भूमिः विधीयताम् ।
शान्तय श्चाभिवर्धन्तां यथाकल्पं यथाविधि ।
छिद्रंहि मृगयन्तेऽत्र विद्वांसः ब्रह्मराक्षसाः ।
निहतस्य च यज्ञस्य सद्यः कर्ता विनश्यति ॥
ऋत्विग्भिः उपदिष्टोऽयं यथावत्क्रतुराप्यताम् ।

ஸரய்வா: ச உத்தரேதீரே யக்ஞபூமி: விதீயதாம் ।
சாந்தய: ச அபிவர்த்தந்தாம் யதா கல்பம் யதாவிதி ॥
சித்ரம்ஹி ம்ருகயந்தே அத்ர வித்வாம்ஸ: ப்ரஹ்ம ராக்ஷஸா: ।
நிஹதஸ்ய ச யக்ஞஸ்ய ஸத்ய: கர்த்தா வினஶ்யதி ॥
ரித்விக்பி: உபதிஷ்ட: அயம் யதாவத் க்ரது: ஆப்யதாம் ॥

வா.ரா. பால. - 8

பிராஹ்மணர்களின் அனுக்ரஹத்தைப் பெற்ற பிறகு, அரசர் தமது அமைச்சர்களுக்குத் தேவையான ஆணைகளைப் பிறப்பித்தார். ஸரயூ நதியின் தென்பகுதியில் அயோத்தி இருப்பதால், மக்கள்புழக்கமற்ற வட பகுதி தூய்மையாக இருக்கும். அங்கு வேள்வி செய்வதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு ரித்விக்குகளைக் கொண்டு அனுஷ்டிக்க இருக்கும் வேள்விக்கு எவ்வித இடையூறுகளும் நேராவண்ணம் சாந்தி கர்மாக்களைப் பிழையற நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

(வேத மந்திரங்களைச் சொல்லி, நாம் செய்யும் எந்த கர்மாவாயினும் சிராத்தமாயினும் எழுத்துப்பிழை, எழுத்தைச் சொல்வதில் ஏற்படும் பிழை, ஸ்வரப் பிழைகள் ஏற்படலாம். இதனால் நமக்குத் தீங்குகள் நிகழாவண்ணம் பிராயஶ்சித்த ஹோமங்களைக் கடைசியில் செய்வது வழக்கம். அதிலும் கவனக் குறைவினால் தவறுகள் நேரிடின் பல இன்னல்களுக்கு ஆட்படு வதைத் தவிர வேறு வழியில்லை. எனவேதான், முதலில் செய்யும் சாந்தி கர்மாக்களை சாஸ்த்ரம் வகுத்த வழியில் முறை பிறழாது நடக்க சிறிதும் கவனக் குறைவின்றி கண்காணிக்கும்படி அமைச்சர்களை எச்சரிக்கிறார்.)

''தாம் செய்யும் யாகாதி கர்மாக்களில் பிராயஶ்சித்த ஹோமங்களைச் செய்யாதவர்களும், தானம் வாங்கக்கூடாத மனிதரிடம் தானம் வாங்கியவர்

களும், தகாதவர்கட்குப் புரோஹிதராக இருந்து யாகாதிகளைச் செய்து வைத்தவர்களுமான அந்தணர்கள் ப்ரஹ்மராக்ஷஸர்கள் எனும் பேயாகப் பிறப்பார்கள். சிறந்த அறிஞர்களாயிருந்து பாபங்களைச் செய்தவர்கள் ஆனபடியால் அத்தகையோர் நமது யாகங்களை விழிப்புடன் கவனித்துப் பிழைகள் இருப்பின் யாகத்தை அழித்துவிடுவார்கள். யாகம் செய்பவனும் (கர்த்தாவும்) அழிந்து விடுவான். எனவே நிபுணர்களாகிய நீங்கள், சிறந்த ரித்விக்குகளைக் கொண்டு வேள்வி இனிது முழுமைபெறச் செய்ய வேண்டும்'', எனக் கூறி விடைபெற்றார்.

ततस्स गत्वा ताः पत्नीः नरेन्द्रः हृदयप्रियाः ।
उवाच दीक्षां विशत यक्ष्येऽहं सुतकारणात् ॥
तासां ते नातिकान्तेन वचनेन सुवर्चसाम् ।
मुखपद्मान्यशोभन्त पद्मातीव हिमात्यये ॥

தத: ஸ கத்வா தா: பத்னீ: நரேந்த்ர: ஹ்ருதய ப்ரியா: ।
உவாச தீக்ஷாம் விசத யக்ஷ்யே அஹம் ஸுதகாரணாத் ॥
தாஸாம் தேன அதிகாந்தேன வசனேன ஸுவர்ச்சஸாம் ।
முகபத்மானி அஸோபந்த பத்மானி இவ ஹிமாத்யயே ॥

வா.ரா. பால. - 8.

தசரதர் உடனே நேராகத் தம் அரண்மனைக்குச் சென்றார். தாம் நினைத்தபடி அழைக்கப்பட்ட வஸிஷ்டர் முதலிய பரம பூஜ்யர்களான மஹர்ஷிகள் அனைவரும் குறித்த நேரத்தில் வந்து தம் எண்ணத்தை நிறைவேற்றி வைப்பதாக வாக்களித்து ஆசி கூறியதை நினைத்து மகிழ்ந்த உள்ளத்தராய்ச் சென்றார். எதைத் தொடங்கினாலும் ஆரம்பத்தில் தடை ஏற்படாமல் இருக்க வேண்டும். முதற் கோணல் முற்றும் கோணலாக முடியும். இங்கு அரசருக்குத் தடை (ஆக்ஷேபம்) இல்லாதது மட்டுமன்றி மஹான்களின் ஆசீர்வாதம் நல்ல சகுனமாக அமைந்தது, ஸபா மண்டபத்தில் மந்த்ராலோசனை நடப்பதையும், எதற்காக நடக்கிறது என்பதையும் ஓரளவு தாதியர் மூலம் அறிந்த தேவியர் மூவரும் அரசரின் அரண்மனைக்கு வந்திருந்தனர். தம் மாளிகையிலேயே கௌஸல்யை, ஸுமித்ரை, கைகேயீ ஆகிய மனைவியர் மூவரையும் ஒருங்கே பார்த்ததும் இதயத்தில் மகிழ்ச்சி பொங்கியது. அவர்களை அழைப்பித்தோ, தாம் அவர்கள் அரண்மனைக்குச் சென்றோ சொல்ல வேண்டிய நிலை தவிர்ந்ததும் ஒரு சகுனம் போலும்!

''நாம் புத்ர பாக்யத்தைப் பெற வேண்டி அஸ்வமேத மஹாயாகத்தைச் செய்யத் தீர்மானித்துள்ளோம். நீங்கள் மூவரும் என்னுடன் யஜமான தீக்ஷை பெற வேண்டும்'' என்றார். இவ்வார்த்தையைக் கேட்டதும் அவர்கள் இருந்த இருப்பைப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர்.

ராணிகள் மூவருமே இயற்கையாகவே அழகு ராணிகள். அவர்கள் திருமுகங்களோ பனியற்ற காலத்தில் கதிரவனின் கதிர்களால் அலர்ந்து அகன்ற தாமரை மலர்கள் போன்றவை. கேட்ட சொற்களோ அமிழ்தம் போன்றவை. இதுவரை அவர்கள் முகத்தில் பனிப்படலம் போன்ற மக்க ளில்லாத குறை தவழ்ந்திருந்தது போலும்! இச்சொல்லமிழ்து அதை அகற்றி அவர்கள் முகங்களில் பேரழகையும், பொலிவையும், மகிழ்ச்சியையும் பன்மடங்கு தவழச் செய்தது.

एतच्छ्रुत्वा रहःसूतः राजानमिदमब्रवीत् ।
ऋत्विग्भिः उपतिष्ठोऽयं पुरावृत्तः मया श्रुतः ॥
सनत्कुमारो भगवान् पूर्वं कथितवान् कथाम् ।
ऋषीणां सन्निधौ राजन् तव पुत्रागमं प्रति ॥
कश्यपस्य तु पुत्रोस्ति विभण्डक इति श्रुतः
ऋश्यशृङ्ग इति ख्यातः तस्य पुत्रो भविष्यति ।
स वने नित्य संवृद्ध मुनिः वनचरः सदा ।
नान्यं जानाति विप्रेन्द्रः नित्यं पित्रनुवर्तनात् ॥

ஏதத் ச்ருத்வா ரஹ: ஸூத: ராஜானம் இதம் அப்ரவீத் ।
ரித்விக்பி: உபதிஷ்ட: அயம் புராவ்ருத்த: மயா ஶ்ருத: ॥
ஸனத்குமார: பகவான் பூர்வம் கதிதவான் கதாம் ।
ரிஷீணாம் ஸந்நிதௌ ராஜன் தவ புத்ராகமம்ப்ரதி ॥
கச்யபஸ்யது புத்ர: அஸ்தி விபண்டக: இதிஶ்ருத: ।
ரிஶ்ய ஶ்ருங்க: இதி க்யாத: தஸ்ய புத்ரோ பவிஷ்யதி ॥
ஸவனே நித்ய ஸம்வ்ருத்த: முனி வனசர: ஸதா ।
ந அன்யம் ஜானாதி விப்ரேந்த்ர: நித்யம் பித்ரனுவர்த்தனாத் ॥

வா.ரா.பால. - 9.

இந்த ஸந்தர்பத்தில் ஸுமந்த்ரர் அங்கு வந்து சேர்ந்தார். இவர் தசரதருக்கு மந்திரியாகவும், தேரோட்டியாகவும் இருப்பவர். எனவே எப்பொழுதும் அரசரோடேயே இருக்கும் வாய்ப்பு உண்டு. அந்தப்புரத்தில் தனிமையில் பழைய நிகழ்ச்சி ஒன்றை விண்ணப்பிக்கலானார். ''ஸனத் குமாரர் எதிர்கால விளைவுகளை நன்கு அறிந்தவர். மஹர்ஷிகள் பலரோடு பேசிக் கொண்டிருக்கும் பொழுது ''புத்ர பாக்யம் தசரதருக்கு உண்டு; அது ரிஶ்யஶ்ருங்க முனிவரின் அனுக்ரஹத்தினால் கிட்டும்'' என்று கூறினாராம். அதை நம் வஸிஷ்டர் சொல்ல நான் கேட்டதுண்டு, என்றார். அரசர் மிக்க ஆர்வத்துடன் கேட்கவே மேலும் கூறலானார். ''கஶ்யப முனிவருக்கு ஒரு குமாரர் உண்டு. அவர் பெயர் விபண்டகர். இவர் பிள்ளை ரிஶ்யஶ்ருங்கர் உலகில் பெரும் புகழை எய்துவார்.''

இங்கு வால்மீகி கஶ்யப முனிவரைக் குறிப்பிடும் பொழுது கஶ்யபஸ்ய து என்று ''து'' சப்தத்தை உபயோகிக்கிறார். செய்யுளையோ, ச்லோகத்தையோ பூர்த்தி செய்ய சிலர் அசைச் சொற்களை—அவ்யயத்தை உபயோகிப்பர். வால்மீகி ஆதிகவியும் பேரறிஞருமல்லரோ! ஶ்லோக பூர்த்திக்காக ச, து, ஹ முதலியவற்றைத் தேவையின்றி உபயோகிப்பவரல்லர். ''பேதே அவதாரணே து ஸ்யாத்'' எனும் நிகண்டுப்படி அவதாரணாம்சமாக கஶ்யபருக்குத் தனிச்சிறப்பை அளிக்கும் அடைமொழியாகப் பயன்படுத்தியிருக்கிறார். கஶ்யப ப்ரஜாபதிக்கு அதிதி, திதி என இரு மனைவிகள், இவர்கள் மூலமாக தேவர்களையும், அஸுரர்களையும், படைத்தவர். ப்ரஜாபதிகள் எழுவர். இவர்களுள் கஶ்யபருக்குள்ள சிறப்பு மற்றவர்கட்குக் கிடையாது. பூ மண்டலம் முழுவதும் கஶ்யபருக்கு சொந்தம், இச்சிறப்பை எடுத்துக் காட்டவே ''து'' வை உபயோகித்துள்ளார். இந்த ஓரெழுத்தின் கருத்தைக் கம்பர் அழகாக வெளியிடுகிறார் :-

மாசறு சுரர்களோடு, மற்றுளோர் தமையும் ஈன்ற
காசிபன் அருளும் மைந்தன் விபண்டகன், கங்கை சூடும்
ஈசனும் புகழ்தற்கு ஒத்தோன் இருங்கலை பிறவும் எண்ணில்
தேசுடைத் தந்தை ஒப்பான் திருவருள் புனைந்த மைந்தன்.

க.ரா.பால. - திருவவதாரம்

''காஶ்யபர் குற்றமற்ற தேவர்களையும், மற்றுமுள்ள அஸுரர்களையும் படைத்த பெருமையை உடையவர். இவர் மகன் விபண்டகரோ ஸர்வக்ஞரான சிவனாலும் புகழ்தற்குரிய பல பெருமைகளைப் பெற்றவர். மேலும் நான்கு வேதங்களிலும், பிற சாஸ்த்ரங்களிலும், அறிவு, ஒழுக்கம், அடக்கம் முதலியவற்றிலும் ''பிது: சதகுணம் புத்ர:'' தந்தையைவிட தனயன் நூறு மடங்கு பெருமை உடையவன் என்பதற்கேற்ப காஶ்யப முனிவருக்கு ஒப்பான தேஜஸ்ஸை உடையவர் என்கிறார். இங்கு ''அருளும் மைந்தன்'' என்பதால் தேவர்களும் அஸுரர்களுமாக எவ்வளவோ புதல்வர்கள் இருந்தும் விபண்டகரையே தம் புதல்வன் எனப் பாராட்டுவாராம். இத்தகைய விபண்டகருக்கு ரிஶ்யஶ்ருங்கர் எனும் புதல்வர் உண்டு. அவர் பிதா, பிதாமஹர்களைக் காட்டிலும் புகழ்பெறப் போகிறார்'' என ஸனத்குமாரர் கூறினாராம்.

ரிஶ்யஶ்ருங்கர் காட்டிலேயே எப்பொழுதும் வளர்பவர்; பரமனையே நினைத்து உருகும் தன்மையர்; எங்கு சென்றாலும் காட்டிற்குள்ளேயே நடமாடுவார். தந்தையின் சொல்லையே மந்திரமாக நினைத்து ஒழுகுபவர். காட்டை அடுத்துள்ள கிராமங்களையும் கிராமத்தினரையும் அறியார்.

एतस्मिन् एव काले तु रोमपादः प्रतापवान् ।
अङ्गेषु प्रथितो राजा भविष्यति महाबलः ॥

तस्य व्यतिक्रमात् राज्ञः भविष्यति सुदारुणा ।
अनावृष्टिः सुघोरा वै सर्वभूत भयावहा ॥
ब्राह्मणान् श्रुत वृद्धांश्च समानीय प्रवक्ष्यति ।
समादिशन्तु नियमं प्रायश्चित्तं यथा भवेत् ॥
विभण्डक सुतं राजन् सर्वोपायैरिहानय ।
प्रयच्छ कन्यां शान्तां वै विधिना सुसमाहितः ।
ततो राजा विनिश्चित्य सहमन्त्रिभिरात्मवान्
पुरोहितं अमात्यांश्च ततः प्रेषयिष्यति सत्कृतान् ।
ते तु राज्ञो वचः श्रुत्वा व्यथिता विनताननाः ।
न गच्छेम ऋषेः भीताः अनुनेष्यन्ति तं नृपम् ॥

ஏதஸ்மின் ஏவ காலே து ரோமபாத: ப்ரதாபவான் ।
அங்கேஷு ப்ரதித: ராஜா பவிஷ்யதி மஹா பல: ॥
தஸ்ய வ்யதிக்ரமாத் ராக்ஞ: பவிஷ்யதி ஸுதாருணா ।
அநாவ்ருஷ்டி: ஸுகோராவை ஸர்வபூத பயாவஹா ॥
ப்ராஹ்மணான் ச்ருத வ்ருத்தான் ச ஸமானீய ப்ரவக்ஷ்யதி ॥
ஸமாதிசந்து நியமம் ப்ராயஶ்சித்தம் யதா பவேத் ॥
விபண்டகஸுதம் ராஜன் ஸர்வோபாயை: இஹானய ॥
ப்ரயச்ச கன்யாம் ஶாந்தாம்வை விதினா ஸுஸமாஹித: ॥
தத: ராஜா விநிஶ்சித்ய ஸஹமந்த்ரிபி: ஆத்மவான் ।
புரோஹிதம் அமாத்யாந்ஶ்ச தத: ப்ரேஷயிஷ்யதி ஸத்க்ருதான் ॥
தேதுராக்ஞோ வச: ஶ்ருத்வா வ்யதிதா விநதாநநா: ।
ந கச்சேம ரிஷேர்பீதா: அநுநேஷ்யந்தி தம் ந்ருபம் ॥

வ.ரா. பால. - 9

ரிஶ்யஶ்ருங்கர் விதிமுறைகள் தவறாது ப்ரஹ்மசர்ய வ்ரதங்களை அனுஷ்டித்து வந்த காலம். அங்க தேசத்தில் தனது வீர பராக்ரமத்தினாலும் உடல் வலிமையினாலும், படை பலத்தினாலும் புகழ் பெற்ற அரசன் வாழ்ந்து வருவான். அவனை ரோமபாதர் என்று அழைப்பர். அவ்வரசனின் நெறிதவறிய செயலாலும் ஆட்சியாலும் நீண்ட காலமாக நாடு முழுவதும் வறட்சி ஏற்படும். எங்கும் மழையில்லை. பருகுவதற்கே நீர் கிடையாது. புல் பூண்டு கள் இன்றி விலங்கினங்கள் வாடிவதங்கும்.

கொலை மேற்கொண்டாரின் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து. குறள் - 551

பொருள் ஆசையினால் தகாதவற்றைச் செய்து குடிமக்களை துன்புறுத்தும் கொடுங்கோல் அரசன் கொலையாளியை விடக் கொடியனாம். கொலையாளி செய்யும் துன்பம் அப்பொழுதே முடிந்துவிடுகிறது. அரசன் செய்யும் கொடுமையோ வாழ்நாள் முழுவதும் நீடிக்கிறது. ரோமபாதனின் கொடுங்கோல் ஆட்சியினால் நாடு மழையின்றி வறண்டது. எனவே அரசன் அமைச்சர்களையும், அறநூல் வல்லுனர்களான அந்தணர்களையும் அழைப் பித்து வறட்சியைப் போக்க பிராயஸ்சித்தம் கூறும்படி வேண்டினான். அவர்கள் நன்கு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது ''விபண்டக மஹர்ஷியின் குமாரரான ரிஸ்யஸ்ருங்க முனிவரை எப்படியாவது அழைத்து வந்து உமது குமாரத்தியான சாந்தாவை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்தால் நிச்சயமாக நாடெங்கிலும் மழை பெய்யும். வறட்சி நீங்கி ஸுபிக்ஷம் ஏற்படும்'' என்றனர். உடனே அரசரும் மந்திரி ஸபையைக் கூட்டி ஆலோசித்து, அந்தணரை அழைத்து வர அந்தணர்களை அனுப்புவதே உசிதமென முடிவுக்கு வந்தார். பின்னர் புரோஹிதரையும், சில அமைச்சர் களையும் அழைத்து கௌரவித்து தாங்கள்தான் நாட்டு நலனை முன்னிட்டு காடு சென்று ரிஸ்யஸ்ருங்கரை அழைத்து வரவேண்டும் என வேண்டினார். இதைக் கேட்டதும் அவர்கள் மனம் நொந்தவர்களாய் நடுக்கத்துடன் தலை குனிந்து ''நாங்கள் போவதற்கில்லை. மஹர்ஷி எங்களைச் சபித்து விடுவார்'' எனக் கூறி மறுத்து விட்டனர்.

ரோமபாதன் அங்கதேசத்தின் வறட்சியைப் போக்க ரிஸ்யஸ்ருங்க முனிவரை எப்படியாவது அழைத்து வந்து தனது செல்வக் குமாரியாகிய சாந்தாவை மணம் செய்து கொடுத்து, அவரைத் தம் நாட்டிலேயே வாழ்ந்து வரும்படி செய்துவிட வேண்டும் என உறுதிபூண்டார். அமைச்சர்களோ புரோஹிதர்களோ பெரிய முனிவரிடம் உள்ள அச்சத்தினால் காடு செல்ல மறுத்துவிட்டார்கள். ஆயினும் அரசன் மனம் தளரவில்லை. எண்ணியதை நிறைவேற்ற மனத்திண்மை பெற்றிருந்தான். எனவே அரண்மனை தேவ தாஸிகளை அழைத்து, நாட்டின் நலன் கருதி இப்பணியைச் செய்திட வேண்டும் எனக் கட்டளையிட்டான்.

गणिकाः तत्र गच्छन्तु रूपवत्यः स्वलङ्कृताः ।
प्रलोभ्य विविधोपायैः आनयिष्यन्ति सत्कृताः ॥
न तेन जन्मप्रभृति दृष्टपूर्वं तपस्विना ।
स्त्रीवा पुमान्वा यच्चान्यत् सर्वं नगर राष्ट्रजम् ॥
ताः चित्र वेषाः प्रमदाः गायन्त्यः मधुरैः स्वरैः ।
ऋषिपुत्रं उपागम्य सर्वाः वचनं अब्रुवन् ॥
कः त्वं किं वर्तसे ब्रह्मन् ज्ञातुमिच्छामहे वयम् ।
एकः त्वं विजने घोरे वने चरसि शंस नः ॥

கணிகா: தத்ர கச்சந்து ரூபவத்ய: ஸ்வலங்க்ருதா: ।
ப்ரலோப்ய விவிதோபாயை: ஆனயிஷ்யந்தி ஸத்க்ருதா: ॥
ந தேன ஜன்ம ப்ரப்ருதி த்ருஷ்ட பூர்வம் தபஸ்வினா ।
ஸ்த்ரீவா புமான்வா யச்ச அன்யத் ஸர்வம் நகர ராஷ்ட்ரஜம் ॥
தா சித்ரவேஷா: ப்ரமதா: காயந்த்ய: மதுரை: ஸ்வரை: ।
ரிஷி புத்ரம் உபாகம்ய ஸர்வா: வசனம் அப்ருவன் ॥
க: த்வம்கிம் வர்த்தஸே ப்ரம்ஹன் ஞாதும் இச்சாமஹே வயம் ।
ஏக: த்வம் விஜனே கோரே வனேசரஸி ஶம்ஸ ந: ॥

வா.ரா. பால.- 10.

தேவதாஸிகட்கு மட்டற்ற மகிழ்ச்சி, ஏன்? ஆடவர்களால் செய்ய முடியாதெனக் கைவிட்ட பணியை அரசர் தம்மிடம் ஒப்படைத்திருக்கிறார் என. இம்மகிழ்ச்சியை மேலும் வளர்க்கும் முறையில் பேசினான் அரசன். ''தேவதாஸிகளே! நீங்கள் இயற்கையிலேயே அழகியர். ஆயினும் உங்களிடம் ஒப்படைத்த பணி மிகப் பெரியது. எனவே உங்களுள் கட்டழகிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் காட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள். செயற்கை யாகவும் அழகூட்டிக் கொள்ளுங்கள். ரிஶ்யஶ்ருங்கரை அழகினாலோ, பெண்மையினாலோ மாத்திரம் வசப்படுத்திவிட முடியாது. அம் முனி குமாரர் பிறவி முதற்கொண்டே உலகை அறியாதவர். இவர் ஆண், இவர் பெண் என்றோ, இவர் காட்டுவாசி, இவர் நகரவாசி என்றோ, எத்தகைய பாகுபாட்டையும் அறியாதவர். தவம் புரிவதைத் தவிர மற்ற செயல்களையும் அறியாதவர். எனவே உங்கள் மதி நுட்பத்தைப் பயன்படுத்தி, பல்வகை உபாயங்களினால் வயப்படுத்தி அழைத்து வரவேண்டும். உங்களைக் கண்டதும் ஒதுங்கிச் செல்லாமல் வரவேற்று அவர் உபசரிக்கும் படியாக நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்'' என்றான்.

அரசனின் அறிவுரையை அகத்தில் கொண்டு அவர்கள் தேரில் காட்டிற்கு விரைந்தனர். ரிஶ்யஶ்ருங்கர் நீராட, சுள்ளிகள் ஒடிக்க, காய்கனி கிழங்கு களைத் தேட, பகவதாராதனத்திற்கான துழாய் மலர்கள் கொய்ய வரும் இடங்களைத் தேடி அறிந்து அங்கங்கு உலவிய வண்ணம் இருந்தனர். அழகிய பல வேடங்கள் புனைந்து இனிய குரலில் நல்லிசைகளை இசைத்துக் கொண்டிருந்தனர்.

ततः कदाचित् तं देशं आजगाम यदृच्छया ।
विभण्डकसुतः तत्र ताश्चापश्यद्वराङ्गनाः ॥

தத: கதாசித் தம்தேசம் ஆஜகாம யத்ருச்சயா ।
விபண்டகஸுத: தத்ர தா: ச அபஶ்யத் வராங்கனா: ॥

வா.ரா. பால. - 10

ஒருநாள் எதிர்பாராத வண்ணம்* இவர்கள் பாடும் இடத்திற்கு முனி குமாரர் வந்தார். இவர்கள் யாரோ புதிதாக இருக்கின்றனரே என எண்ணி உற்று நோக்கினார். தேவதாஸிகளும் மிக மகிழ்ந்து அவர் அருகில் சென்று பேசலாயினர்.

''பெரியோரே! நீர் யார்? உம்மிடம் ப்ரஹ்மதேஜஸ்ஸின் பொலிவைக் காண்கிறோம். நீர் யாருடைய புதல்வர்? உமது பெயர் என்ன? இந்த கோரமான காட்டில் ஏன் தனிமையாக இருக்கிறீர்? துணையின்றி இங்கு ஏன் நடமாடுகிறீர்? இதை அறிய விரும்புகிறோம்'' என்றனர்.

पिता विभण्डकोऽस्माकं तस्याऽहं सुत औरसः ।
ऋश्यशृङ्ग इति ख्यातं नाम कर्म च मे भुवि ।
इहाश्रमपदोऽस्माकं समीपे शुभदर्शनाः
करिष्येवाऽत्र पूजां वै सर्वेषां विधि पूर्वकम् ।
तदाश्रमपदं द्रष्टुं जग्मुः सर्वाः च तेन ताः ।
इदं अर्ध्यं इदं पाद्यं इदं मूलं इदं फलम् ।
प्रतिगृह्यतु तां पूजां सर्वा एव समुत्सुकाः ।
ऋषेः भीताश्च शीघ्रंताः गमनाय मतिं ददुः ।

பிதா விபண்டக: அஸ்மாகம் தஸ்ய அஹம் ஸுத: ஔரஸ: ।
ரிஷ்யச்ருங்க: இதி க்யாதம் நாம கர்ம ச மே புவி: ॥
இஹ ஆஶ்ரம பத: அஸ்மாகம் ஸமீபே சுபதர்சனா: ।
கரிஷ்யே வ: அத்ர பூஜாம்வை ஸர்வேஷாம் விதிபூர்வகம் ॥
ததாச்ரமபதம் த்ரஷ்டும் ஜக்மு: ஸர்வா: ச தேன தா: ।

குறிப்பு: தேவதாஸிகள் ரிஶ்யஶ்ருங்கரை சந்திக்காது போனால் ராமாவதாரம் இல்லை. மந்தரை மாடி மேல் ஏறாது போனால் ராமனுக்கு வனவாசம் இல்லை. பஞ்சவடியில் சூர்ப்பணகை வராது போனால் மேல் மூன்று காண்டங்களின் கதை இருக்காது. 14 ஆண்டுகட்குப் பிறகு ராமன் அயோத்தி திரும்பியிருப்பார். வால்மீகி இச்சரித்திரத்தை நீட்டிச் செல்ல வாசகர்களின் ரஸமும் ஆர்வமும் தடையுறாதபடி, சரித்திரப் போக்கு தேங்கி நிற்காதபடி மூன்று திருப்புமுனைகளை அழகாக அமைத்து கதை தேக்க முறாதபடி தம் கவித்திறனைக் காட்டியிருக்கிறார். ஆதி காவியம் படைத்த மஹா கவியல்லவா! மும்முனை களிலும் ''யத்ருச்சயா'' எனும் ஒரே சொல்லை அவர் உபயோகித் திருக்கிறார். ரிஶ்யஶ்ருங்கர் ''ஆஜகாம யத்ருச்சயா'' மந்தரை கூனி ''ஆருரோஹ யத்ருச்சயா'', சூர்பணகை ''ஆஜகாம யத்ருச்சயா'' என்று. இது ரஸிக்கத்தக்கது அன்றோ?

இதம் அர்க்யம் இதம்பாத்யம் இதம் மூலம் இதம் பலம் ॥
ப்ரதி க்ருஹ்யது தாம்பூஜாம் ஸர்வா ஏவ ஸமுத்ஸுகா: ।
ரிஷே: பீதா: து சீக்ரம் தா: கமனாய மதிம் தது: ॥

வா.ரா. பால. - 10.

ரிஸ்யஸ்ருங்கர், எல்லோராலும் விரும்பப்படும் அழகிய உருவம் படைத்த அவர்களைப் பார்த்துப் பார்த்து பழகியதினால் உண்டான அன்பின் காரணத்தினால் பதிலளிக்கலானார். ''நான் விபண்டக மஹர்ஷியின் ஔரஸ புதல்வன். என்னை ரிஸ்யஸ்ருங்கர் என அழைப்பர்.''

ஒரு ஸமயம் விபண்டகர் மஹாபூதம் எனும் குளக்கரையில் ஊர்வசியைப் பார்த்தார். அப்பொழுது நழுவிய ரேதஸ்ஸை தாகத்தினால் அங்கு வந்த பெண் மான் நீரோடு சேர்த்துப் பருகிற்று. பின்னர் கருத்தரித்த இம் மானுக்குப் பிறந்தவர் இவர். குழந்தையின் தலையில் ரிஸ்யம் எனும் மானின் வகைக்குரியன போன்ற கொம்புகள் இருந்தமையால் ரிஸ்ய ஸ்ருங்கர் எனப் பெயரிட்டு அழைத்தனர்.

''என் பெயரும், தவமும் காட்டில் பிரஸித்தி பெற்றவை. இங்கு அருகிலேயே எனது ஆஸ்ரமம் இருக்கிறது. அனைவரும் அங்கு வாருங்கள். முறைப்படியான விருந்தோம்பலைச் செய்ய விரும்புகிறேன்'' என்று முனிவர் அழைத்ததும் அவ்வாஸ்ரமச் சூழ்நிலையைக் கண்டு மகிழ அவருடன் கூடவே சென்றனர்.

வந்த அதிதிகளை ''விலங்கு எனப் புரிந்து, இருந்தவர் இவரென இனைய செய்தனன்'' (கம்பன்) நாகரிக மக்களை தான் விலங்காக பாவிப்பது போல் இவர்களும் நம்மைப்போன்று நகரவாஸிகளை வெறுக்கும் விரக்தி மனப்பான்மையுடைய முனிவர்கள் எனக் கருதி, இது அர்க்யம், இது பாத்யம், இது கிழங்கு, இது பலம் என்று கொடுத்து உபசரித்தார். அதாவது முதலில் கைகளை அலம்ப தண்ணீர் கொடுத்துப் பிறகு கால்களைச் சுத்தம் செய்து கொள்ளத் தண்ணீர் கொடுத்து ஆச்ரமத்தில் அமரச் செய்து முன்னரே கொணர்ந்து வைத்திருந்த கிழங்குகளையும், கனிகளையும் கொடுத்துப் புசிக்கச் செய்தார். தேவதாஸிகளும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு புசித்துக் கொண்டே அவருடன் உரையாடி அவர் மனநிலையை மாற்ற விரும்பினர். ஆயினும் திடீரென எதிர்பாராது விபண்டக முனிவர் வந்துவிடுவாரோ? என அச்சமும் அவர் களை ஆட்கொண்டது. எனவே விரைவில் அங்கிருந்து புறப்பட எண்ணினார்.

अस्माकमपिमुख्यानि फलानीमानि वै द्विज ।
गृहाण प्रतिभद्रंते भक्षयस्वच माचिरम् ॥
ततः ताः तं समालिङ्ग्य सर्वाः हर्षसमन्विताः ।

मोदकान् प्रददुः तस्मै भक्ष्यांश्च विविधान् बहून् ।
तानि आस्वाद्य तेजस्वी फलानीतिस्ममन्यते ।
अनास्वादित पूर्वाणि वने नित्य निवासिनम् ।
आपृच्छ्य तु तथा विप्रं व्रतचर्यां निवेद्य च ।
गच्छन्तिस्मापदेशात्ताः भीतास्तस्य पितुस्त्रियः ।
गतासु तासु सर्वासु काश्यपस्यात्मजः द्विजः ।
अस्वस्थ हृदयश्चासीत् दुःखं स्म परिवर्तते ।

அஸ்மாகம் அபி முக்யானி பலானி இமானிவை த்விஜ ।
க்ருஹாண ப்ரதி பத்ரம் தே பக்ஷயஸ்வ மா சிரம் ॥
தத: தா: தம் ஸமாலிங்க்ய ஸர்வா: ஹர்ஷஸமன்விதா: ॥।
மோதகான் ப்ரதது: தஸ்மை பக்ஷியான் ச விவிதான் பஹூந் ॥
தானி ஆஸ்வாத்ய தேஜஸ்வீ பலானி இதிஸ்ம மன்யதே ।
அனாஸ்வாதித பூர்வாணி வனே நித்ய நிவாஸினம் ॥
ஆப்ருச்ச்ய து ததா விப்ரம் வ்ரதசர்யாம் நிவேத்யச ।
கச்சந்திஸ்ம அபதேசாத்தா: பீதா: தஸ்ய பிது: ஸ்த்ரிய: ॥
கதாஸு தாஸு ஸர்வாஸு காச்யபஸ்ய ஆத்மஜ: த்விஜ:
அஸ்வஸ்த ஹ்ருதய: ச ஆஸீத் துக்கம் ஸ்ம பரிவர்த்ததே: ॥

வா.ரா. பால.-10

தாஸிகள்: ''முனிவரே! நீங்கள் அன்புடன் எங்களை உபசரித்து அளித்த பழம் முதலியவற்றை நாங்கள் புசித்து மிக மகிழ்ந்தோம். அதே போன்று நாங்கள் தங்கட்கு அளிக்கும் உபசரிப்பை தேவரீர் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' எனக் கூறி மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஒவ்வொருவரும் முனிவரை இறுகத் தழுவினர். (முனிவர் மிக்க அருவருப்புடன் ஒதுங்கி நின்றார்.) ''தாங்கள் ஏன் ஒதுங்குகின்றீர். நாங்களும் தங்களைப் போன்று வேதம் ஓதும் ப்ரஹ்ம சாரிகளே. எங்கள் ஊரில் ப்ரஹ்மசாரிகளின் வேஷம் இப்படித்தான் இருக்கும்.'' முனிவர் தம் மரவுரியையும் அவர்கள் புடவைகளையும் உற்று கவனித்தார்.

தாஸிகள்: ''தங்களுக்கு என்ன ஸந்தேஹம்? எங்கள் கிராமத்திற்கு அருகிலுள்ள காடுகளில் மரவுரிகள் விதவிதமாக கிடைக்குமே'' எனக் கூறி தாங்கள் கொணர்ந்த நறுமணம் மிக்க சந்தனத்தைப் பூசி வாசனைப் பொடிகளையும் தூவினர். ''இதை ஏன் வெறுக்கிறீர்கள். பாகவதோத்தமர் களின் ஸ்ரீபாத ரேணுவினால் தயாரித்த சந்தனக் குழம்பும், பொடிகளுமே இவை. மேலும் தாங்கள் கொணர்ந்த நறுமண மாலைகளை—பகவத் ப்ரஸாதத்தை வெறுப்பது அபசாரம். இதை சிரஸா வஹிக்கவேணும்'' என்றனர்.

பின்னர் அவர் கையில் லட்டு, ஜிலேபி, மோதகம் முதலிய பல உயர்ரக பக்ஷணங்களைக் கொடுத்தனர். எல்லாம் அரண்மனையில் பசு நெய்யில் தயாரிக்கப்பட்டவை. இவற்றை என்ன செய்வது? வாஸனையே கமகம வென வீசுகிறது. இதெல்லாம் ''யாகத்தின் சேஷ ப்ரஸாதம் சரு, புரோடாசம்'' என்றும் சிலவற்றை ''எங்களூர் மாம்பழம்'' என்றும் கூறினர். நாமிருக்கும் காட்டில் மரங்களில் இத்தகைய பழங்கள் தென்படவில்லையே என முணு முணுத்துக் கொண்டே அனைத்தையும் சாப்பிட்டு வைத்தார். இவற்றைச் சாப்பிட்டதும் தாஸிகளின் முகத்தில் நம்பிக்கை ஒளி வீசிற்று. நம் கார்யம் ஜயம் எனப் பேசிக் கொண்டனர். மகிழ்ச்சியின் இடையே அச்சம் அவர் களைத் தழுவியது. ஏன்? பெரியரிஷி விபண்டகர் ஆச்ரமம் நோக்கி விரைவில் வரலாம் என்கிற எண்ணம். ''எங்களுக்கு அனுஷ்டானங்கள் முடியவில்லை. சில கர்மாக்களை விதிப்படி அனுஷ்டிக்க வேண்டியிருக் கிறது. அவற்றை முடித்துக் கொண்டு மீண்டும் வருகிறோம்'' எனக் கூறி விடை பெற்றுக் கொண்டு மரப் பொந்துகளிலும் புதர்களிலும் விரைந்தோடி மறைந்த வண்ணம் சென்றனர்.

இவர் சாப்பிட்டவை அனைத்தும் இதற்கு முன்பு சாப்பிட்டு அறியப் படாதவை. அறியப்படாத பொருளைச்சாப்பிடுவது தவறு. பகவத் ப்ரஸாதம், யாக சேஷம் என ஏமாந்து சாப்பிட்டு விட்டார். உள்ளே போன பக்ஷயங்கள் வேலை செய்ய ஆரம்பித்தன. மனதில் நிம்மதியில்லை. முன்பிருந்த தெளிவு இல்லை. அவர்களின் ஸ்பர்சமும், அணைப்பும், மயக்கும் பார்வைகளும், மெல்லிய வக்ர நடைகளும் மாறி மாறி இவர் மனதை ஆட்கொண்டு அலட்டின. மீண்டும் அவர்களைக் காணவேண்டும் என ஏக்கம் துன் புறுத்தியது.

ततः परेद्युः तं देशं आजगाम स वीर्यवान् ।
मनोज्ञाः यत्र ता दृष्टाः वारमुख्याः स्वलंकृताः ॥
दृष्ट्वैव च तथा विप्रं आयान्तं हृष्टमानसाः ।
उपसृत्य ततः सर्वाः तमूचुः इदं वचः ॥
एह्याश्रम पदं सौम्य ह्यस्माक मितिचाब्रुवन् ।
तत्राप्येषविधिः श्रीमान् विशेषेण भविष्यति ॥

தத: ப்ரேத்யு: தம்தேசம் ஆஜகாம ஸ வீர்யவான் ।
மனோக்ஞா: யத்ர தா: த்ருஷ்டா: வாரமுக்யா: ஸ்வலங்க்ருதா: ॥
த்ருஷ்ட்வைவ ச ததா விப்ரம் ஆயாந்தம் ஹ்ருஷ்டமானஸா: ।
ஏஹி ஆச்ரம பதம் ஸௌம்ய ஹி அஸ்மாகம் இதிச அப்ருவன் ।
தத்ரஅபி ஏஷ: விதி: ஸ்ரீமான் விஶேஷேண பவிஷ்யதி ॥

தம்மைச் சந்தித்து உயர்ரக கனிகளையும், யாகசேஷ ப்ரஸாதங் களையும் அளித்த வெளியூர் ப்ரஹ்மசாரிகளை மீண்டும் சந்திக்க வேண்டும் என அவா தூண்டியது. அவர்களின் அழகு, இனிய பேச்சு, கண்ணழகு, கவரும் மிடுக்கான பார்வை, அவர்கள் செய்து கொண்டிருந்த ஒப்பனை எல்லாம் சேர்ந்து இவரை இழுக்க, ஆச்ரமத்தைவிட்டு அவர்களைச் சந்தித்த இடத்திற்கு வந்தார். புலன்களை அடக்கி ஆளும் வல்லமையை (வீர்யத்தைப்) பெற்றிருந்தாலும் சூழ்நிலை கெடுத்துவிடும் என்பதை வீர்யவான் எனும் சொல்லால் வால்மீகி உணர்த்துகிறார். தன் ஆச்ரமத்தை விட்டு தாஸிகள் இருந்த இடத்தையே தமது சொந்த இடமாகக் கருதும் அளவிற்கு மனம் மாறிவிட்டது என்பதை "ஆஜகாம" (வந்தார்) எனும் சொல்லால் உணர்த்துகிறார். ரிஸ்யஸ்ருங்கர் தங்களைத் தான் தேடி வருகிறார் என்பதை உணர்ந்த தாஸிகள் அவரை எதிர் கொண்டு, அணுகி மகிழ்ந்து "வருக! வருக! எங்கள் ஆச்ரமத்திற்கு வருகை தருக! தங்களுக்கு இங்கு நாங்கள் செய்ததைவிட சிறந்த வரவேற்பும், உபசரிப்பும் காத்திருக்கிறது" என்றனர்.

श्रुत्वा च वचनं तासां सर्वासां हृदयङ्गमम् ।
गमनाय मतिं चक्रे तंच निन्युः तथा स्त्रियः ॥

ச்ருத்வா ச வசனம் தாஸாம் ஸர்வாஸாம் ஹ்ருதயங்கமம் ।
கமனாய மதிம் சக்ரே தம்ச நின்யு: ததா ஸ்த்ரிய: ॥

வா.ரா.பால. - 10

ரிஸ்யஸ்ருங்கர் தம் ஆசிரமத்திலிருந்து தாஸிகள் இருக்குமிடத்திற்கு வந்ததும் அவர்கள் ஒவ்வொருவரும் பேசிய ஒவ்வொரு பேச்சும் அவர்களை விட்டுச் சிறிதும் பிரிந்து செல்ல முடியாத நிலையைத் தோற்றுவித்தது. தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார் முனிகுமாரர். அவர்கள் எதைச் சொன்னாலும் அதைச் செய்து முடிக்கும் அளவுக்கு மனம் மயங்கியது. அவர்கள் புறப்பட இவரும் பின் தொடரலானார். முனிகுமாரரின் மனமாற்றத்தை அறிந்த மங்கையர் உடனே கைபிடித்துத் தேரின் மீது ஏற்றி அவரைத் தங்கள் அருகில் அமரச் செய்ததும் ரதம் நகரை நோக்கிப் பறந்தது.

यथा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यः तस्य प्रज्ञा प्रतिष्ठिता ।

யதா ஸம்ஹரதே சாயம் கூர்ம: அங்கானீவ ஸர்வச: ।
இந்த்ரியாணி இந்த்ரியார்த்தேப்ய: தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா ॥

பகவத் கீதை. 2-58

ஆமை இரை தேடி மறைவிடங்களில் ஸஞ்சரிக்கும். ஏதாவது ஓசை கேட்டால் தனக்கு ஆபத்து வருமோ என அஞ்சி தன் முகத்தையும் நான்கு

கால்களையும் முதுகு ஓட்டிற்குள் இழுத்து மறைத்துக் கொண்டுவிடும். அதே போன்று ஸ்திதப்ரஜ்ஞன் தனது ஐம்புலன்களையும் அதற்குரிய வெளிப் பொருள்களில் செல்லவிடாது தடுத்து விடுவான். அப்பொழுது அவனுடைய மனம் ஆத்ம விஷயத்தில் உறுதியாக நிற்கும் என்று கீதையில் கூறியபடி வெளிப்புலன்களை அடக்கி உட்புலனாகிய மனதை ஆத்மாவில் ஈடு படுத்திய இத்தகைய ஒரு மாமுனிவர் விலை மாதரின் சொற்படி நடக்கக் காரணம் ஏன்? என சற்று ஆராய்வோம்.

आहार शुद्धौ सत्व शुद्धिः, सत्व शुद्धौ ध्रुवा स्मृतिः ।

''ஆஹார சுத்தௌ ஸத்வ சுத்தி: ஸத்வ சுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:''

சாந்தோக்ய உபநிஷத்-7.26.2

நம்மை ஸத்வம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணங்கள் பற்றி நிற்கின்றன. இவற்றில் ரஜோ குணமும் தமோ குணமும் ஆசை, கோபம் முதலிய தீயகுணங்களைத் தூண்டிவிட்டு நம்மைப் படுகுழியில் தள்ளும். ஸத்வகுணமோ நன்நெறியில் செலுத்தி நம்மை உய்விக்கும். இக்குணங்கள் தோன்றி வளர நாம் உட்கொள்ளும் உணவே காரணமாகும். இனிய சுவையும், எண்ணெய், நெய்ப்பசையுடையதும், மனதிற்குகந்த அமைப்பு உடையதுமான பொருட்கள் ஸாத்விகமானவை. இத்தகைய உணவு அறிவின் வளர்ச்சி, பலம், ஆரோக்கியம், இன்பம், அன்பு இவைகளைக் கொடுக்கும். அதிக காரம், அதிக புளிப்பு, அதிக உப்பு, அதிக உஷ்ணம், வறட்சி, அதிக வெம்மை, அதிக குளிர்ச்சி உடையவை ராஜஸமானவை. இவை துக்கம், சோகம், வியாதிகளை அளிப்பவை. நீண்ட நாளானவை, ஊசியவை, கெட்ட மணமுடையவை, ருசி மாறியவை, எச்சிலானவை, நிவேதனம் செய்யப்படாதவை முதலியன தாமஸப் பொருட்களாம். இவை நம்மைப் பிறர் அவமதிக்கும் நிலையைத் தோற்றுவிக்கும். இவ்வாறு கீதை நமக்கு உபதேசிக்கிறது. ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனின் ஆஹாரநியமம் எனும் தமிழ்ப் பிரபந்தத்தைக் கற்றறிந்து அதன்படி நடக்க முயல்வது ஆரோக்யத்தைத் தரவல்லது. குறிப்பாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் முருங்கைக் காய், வெங்காயம் போன்றவைகளை ஒதுக்குவது நல்லது. தகாத உணவு ஸத்வ குணத்தைக் குறைத்து, புத்தியைக் கெடுத்துவிடும்.

தூர்வாஸ மஹர்ஷி ஒரு சமயம் துர்யோதனனைப் பார்க்க வந்தார். உயர்ந்த வரவேற்பு. ஆதித்யமும் (விருந்தோம்பலும்) மிகப் பிரமாதம். அறுசுவை உணவு, உயரிய பக்ஷணங்கள், அரண்மனையில் உபசரிப்புக்குக் கேட்பானேன்? மிக மகிழ்ந்து பாராட்டினார் முனிவர். அடிபணிந்து முனிவரை வேண்டினான் துர்யோதனன். முனிவரே அடியேனுக்கு அரிய பாக்யம் கிடைத்தது இன்று. என்னை விட என் சித்தப்பா பிள்ளை தங்களை வரவேற்று உபசரிப்பதில் மிகவும் ஸந்தோஷப்படுவார். எனவே தாங்கள் நூற்றுக்க்ணக்கான சீடர்களுடன் தர்மபுத்திரர் இருக்குமிடம் செல்ல

வேண்டும். அவர்கள் சாப்பிட்டு முடிந்த பிறகு சுமார் பிற்பகல் 3 மணிக்குச் செல்வது நல்லது என மீண்டும் வணங்கி வேண்டினான். ''ததாஸ்து'' அப்படியே ஆகட்டும் எனக் கூறி முனிவர் விடைபெற்றார்.

துர்வாஸர் மஹா கோபக்காரர், பாண்டவர்களுக்கு காட்டில் தங்கள் சாப்பாட்டிற்கே திண்டாட்டம். சிஷ்யர்களுடன் வந்த முனிவரை உபசரிக்க முடியாமல் திணறுவார்கள். முனிவர் கோபத்தினால் அவர்களைச் சபிப்பது உறுதி, படைபலமின்றி தந்திரத்தினால் எதிரிகளை வீழ்த்திய பெருமை நம்மைச் சாரும் என மகிழ்ந்தான் துர்யோதனன்.

பின்னர் முனிவர் நேராகக் காட்டிற்குச் சென்று தேடி அலைந்து பாண்டவர்கள் இருக்குமிடம் சென்றார். இவரைக் கண்டதும் பாண்டவர்கள் பயந்து நடுங்கி ஓடிவந்து வரவேற்பு அளித்தனர். துர்யோதனன் சொன்னதை நினைவில் கொண்டு பேசலானார். பாண்டவர்களே ''பவதி பிக்ஷாம் தேஹி'' எங்களுக்கு நல்ல பசி, நீண்ட தூரம் நடந்து வந்ததால் களைப்பு, எனவே விரைவில் அமுது உண்டால் எல்லாம் சௌகரியமாகிவிடும், என்றார்.

தர்மபுத்ரர்: ''முனிவரே! அப்படியே ஆகட்டும். தாங்களும் சீடர்களும் அருகில் பெருகும் ஆற்றுக்குச் சென்று நீராடி அனுஷ்டானத்தை முடித்துக் கொண்டு வாருங்கள்'' என விடை கொடுத்துவிட்டு உள்ளே சென்று திரௌபதியிடம் விஷயத்தைச் சொன்னார். முனிவர் பெயரைக் கேட்டதுமே பகீர் என்றது. ''ஆஹா! இப்பொழுது தானே அக்ஷய பாத்திரத்தைச் சுத்தம் செய்து கவிழ்த்தேன்'' என வருந்தினாள்.

அக்ஷய பாத்திரம் ஒரு நாளைக்கு ஒரு தடவை தேவையான உணவு வகைகளை அளிக்கவல்லது. அன்று நடுப்பகல் சாப்பாடு ஆகிவிட்டது. மறுமுறை ஒரே நாளில் அது உணவை அளிக்காது. இதையறிந்து தான் துர்யோதனன் சாப்பாட்டிற்குப் பிறகு போகும்படி வேண்டினான். (அக்ஷய பாத்திரம் ஸூர்ய பகவானால் அனுக்ரஹிக்கப் பெற்றது).

திரௌபதி கண்ணனிடம் பக்தி செலுத்தி வருபவள், ஆபத் காலத்தில் பகவத் தியானம் துணை நிற்கும். கண்ணனை மனதில் தியானித்தாள். ''கண்ணா! வாஸுதேவா! இது என்ன சோதனை? மஹர்ஷிகளுக்கு அன்னமிடா விட்டால் பாபம் சூழுமே! வந்தவரோ துர்வாஸராயிற்றே! மஹா கோபக்காரர் உடனே சபித்து விடுவாரே! என் செய்வேன்?'' எனக் கண்ணனை நினைத்து மனதிற்குள் புலம்பினாள். இச்சமயம்தான் கண்ணன் ருக்மிணியின் க்ரஹத்தில் சாப்பிட அமர்ந்தார். அன்னம் பரிமாறியாகி விட்டது. இலையில் வைத்த கையை உதறிவிட்டு எழுந்தார். ருக்மணி பரமன் எழுவதைப் பார்த்து காரணம் விளங்காது திகைத்தாள்.

கண்ணன் ''காட்டில் திரௌபதிக்கு என்ன கஷ்டமோ என்னை நினைக்கிறான்'' என்று சொல்லிவிட்டுச் சாப்பிடாமலேயே காட்டிற்கு வந்துவிட்டார். பாண்டவர்களின் குடிசையில் நுழைந்ததும் திரௌபதியைப்

பார்த்து ''சாப்பாட்டு வேளையில் ஏன் அழைத்தாய்?, எனக்கு ரொம்ப பசி, இலையைப் போடு'' என்றார்.

திரௌபதி: ''கண்ணா என் செய்வேன். ஒரு பிடி சாதம்கூட கைவசம் இல்லையே!''

கண்ணன்: ''கொஞ்சம் கூட இல்லையா? அக்ஷய பாத்திரத்தைக் கொண்டு வா பார்ப்போம்'' என்றார். கொணர்ந்ததும் அதை உள்ளும் புறமும் கவனித்துப் பார்த்ததில் ஒரு ஓரத்தில் சிறிது கீரை ஒட்டிக் கொண்டிருந்தது. அதை எடுத்துப் புசித்து ஏப்பம் விட்டார். கண்ணன் வயிறு நிரம்பியதும் நதிக்கரையில் அனுஷ்டானம் செய்து கொண்டிருக்கும் துர்வாஸருடையவும், சீடர்களுடையவும் வயிறுகள் வெடிக்குமளவிற்கு நிரம்பி விட்டன. மஹர்ஷிகள் ஞான த்ருஷ்டியால் விஷயத்தை அறிந்து பாண்டவர்கள் குடிலுக்கு வராமலேயே சென்றுவிட்டனர்.

இங்கு, தூர்வாஸர் மஹர்ஷியல்லரோ? தபோதனராயிற்றே! துர்யோதனின் வார்த்தையைக் கேட்டுப் பாண்டவர்கட்குச் சாபமிட ஸம்மதிக்கலாமா? ஏன் ஸம்மதித்தார்.

यस्यान्नं यस्य जठरे तस्य बुद्धिस्तु तादृशी ।

யஸ்ய அன்னம் யஸ்ய ஜடரே தஸ்ய புத்தி: து தாத்ருசீ ॥

எவன் இட்ட அன்னத்தை புசிக்கிறோமோ அவன் புத்தியே வருமாம். தீயவனான துர்யோதனனுடைய அன்னத்தைப் புசித்ததால் அவன் சொற்படி பாண்டவர்களைச் சாபமிட்டுக் கெடுக்க வந்தார். நல்லோருடைய நல்ல (ஸாத்விகமான) அன்னத்தைப் புசித்தால் ஸத்வகுணம் மேலிட்டு நல்லறிவு உண்டாகும். தாஸிகள் அளித்த பக்ஷ்யங்களை உண்டதால் ரிஶ்யஶ்ருங்கரின் மனம் மாறி அவர்களுடன் நகருக்குப் புறப்பட்டார்.

तत्रचानीयमाने तु विप्रे तस्मिन् महात्मनि ।
ववर्ष सहसा देवो जगत् प्रह्लादयन् तथा ॥

தத்ரச அநீயமானேது விப்ரே தஸ்மின் மஹாத்மநி ।
வவர்ஷ ஸஹஸா தேவோ ஜகத் ப்ரஹ்லாதயந் ததா ॥

வா.ரா. பால. - 10.

வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருகி வான் முகில்
சள சள வென மழைத் தாரை கான்றன
குளனோடு நதிகள் தம் குறைகள் தீரவே.

க.ரா.பால. - திருவவதாரம்

ரிஸ்யஸ்ருங்கர் அங்க தேசத்தின் எல்லையை அடைந்ததுமே அவர் தம் தவ வலிமையினால் வெண்மேகங்கள் அனைத்தும் ஒருங்கே திரண்டு நீலகண்டன் கழுத்தில் தங்கிய கரிய விஷம் போன்று கருத்து, சள சள எனும் ஓசையுடன் தாரை தாரையாக மழைநீரைப் பொழிய, குளங்கள் நிரம்பி வழிய, ஆறுகள் இருகரைகளையும் தடவிய வண்ணம் பெருக்கெடுத்து ஓட, மக்களும் மன்னனும் குறைகள் நீங்கி மகிழ்ந்தனர்.

हर्षेणैवागतं विप्रं विषयं स्वं नराधिपः ।
प्रत्युद्गम्य मुनिं प्रह्वः शिरसा च महीं गतः ॥

ஹர்ஷேணைவ ஆகதம் விப்ரம் விஷயம் ஸ்வம் நராதிப: ।
ப்ரத்யுத்கம்ய முனிம் ப்ரஹ்வ: சிரஸாச மஹீம் கத: ॥

வா.ரா. பால. - 10.

அரசனும் முனிவரும் அடைந்த ஆயிடை
வரன் முனி வஞ்சம் என்றுணர்ந்த மாலை வாய்
வெருவினர் விண்ணவர் வேந்தன் வேண்டலால்
கரை எறியாது அலை கடலும் போன்றதே.

கா.ரா.பால. - திருவவதாரம்

अर्घ्यं प्रददौ तस्मै न्यायतः सुसमाहितः ।
वव्रे प्रसादं विप्रेन्द्रात् मा विप्रं मन्युराविशेत् ॥

அர்க்யம் ப்ரததௌ தஸ்மை ந்யாயத: ஸுஸமாஹித:
வவ்ரே ப்ரஸாதம் விப்ரேந்த்ராத் மாவிப்ரம் மன்யு: ஆவிசேத்

வா.ரா. பால. - 10

அரசன் ரோமபாதனின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தன்னைப் பார்க்க வந்த முனிவர்கள் அனைவரையும் உடன் அழைத்துக் கொண்டு ரிஸ்யஸ்ருங்கரை எதிர் கொள்ள வந்தான். ரதத்தினின்றும் இறங்கியதும் மிக்க வணக்கத்துடனும் பணிவுடனும் வரவேற்று பூமியில் ஸாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். பூர்ணகும்ப மரியாதைகளைச் செய்து அர்க்யம் அளித்து க்ருதார்த்தானான். ஆனால் முனிவருக்கு ''நம்மை ஏமாற்றி அழைத்து வந்துவிட்டார்களே! நாமும் ஏமாற்றம் அடைந்தோமே'' என எண்ணிய பொழுது கோபம் பொங்கி எழுந்தது. ஆனால் ரோமபாதனின் ப்ரணாமத்தினால் கடலில் பௌர்ணமியன்று பொங்கி எழும் அலைகள் கரையைத் தாண்டாது கடலுக்குள்ளேயே மடிவது போல முனிவரின் கோபமும் உள்ளத்திலேயே அடங்கியது. அப்பொழுது வானத்திலிருந்த தேவர்களும் ஒருவாறு நிம்மதி அடைந்தனர். அரசன் சாஸ்த்ர முறை வழுவாது அர்க்யம் முதலிய உபசாரங்களைச் செய்து வேண்டினான்.

''முனிவரே! அரண்மனை தாஸிகள் நாட்டு நலன் பொருட்டு தங்களை இங்கு அழைத்து வந்தது உண்மை. தங்கள் தவம் பொது மக்கள் அனைவரையும் என்னையும் வாழ வைத்தது. பருகு நீரும், புசிக்க உணவுப் பொருட்களும் இன்றுமுதல் எங்கட்குக் கிடைக்கத் தொடங்கிவிட்டன. காலத்தினாற் செய்த இவ்வுதவி ஸாதாரணமானது அன்று. இம்மாபெரும் ஞாலத்தினும் மாணப்பெரிதாகும். இதை நினைத்து எங்கள் மீதுள்ள கோபத்தை அறவே விடவேண்டும். இதே போன்று தங்களைக் காணாத தங்கள் திருத்தகப்பனார் ஞான த்ருஷ்டியால் நிகழ்ந்ததை அறிந்து கோபத்தி னால் எங்களைச் சபிக்காமல் இருக்க வேண்டும். ஆக தங்கள் தபோபலம் உங்கள் கோபத்தையும், தந்தையின் கோபத்தையும் போக்கி எங்களை அருளும் என நம்புகிறோம்'' என்றான்.

अन्तः पुरं प्रविश्यास्मै कन्यां दत्वा यथाविधि ।
शान्तां शान्तेन मनसा राजा हर्षं अवाप सः ।
एवं स न्यवसत्तत्र सर्वकामैः सुपूजितः ॥

அந்த: புரம் ப்ரவிஶ்ய அஸ்மை கன்யாம் தத்வா யதாவிதி ।
ஶாந்தாம் ஶாந்தேன மனஸா ராஜா ஹர்ஷம் அவாப ஸ: ॥
ஏவம் ஸ: ந்யவஸத்தத்ர ஸர்வகாமை: ஸுபூஜித: ॥

வா.ரா. பால. - 10.

ஶாந்தரான முனிவரை ராஜ மரியாதையுடன் அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்று,

''மடங்கலாதனத்திடை முனியை வைத்தனன்'' தங்க ஸிம்ஹா ஸனத்தில் அமர்த்தி,

அருக்கிய முதலிய கடன்கள் ஆற்றி, வேறு
உரைக்குவது இலது என உவந்து, தான் அருள்
முருக்கிதழ் இளமுலை முகநலாள் தனை
இருக்கொடு விதிமுறை இனிதின் ஈந்தனன்.

வா.ரா. பால. - திருவவதாரம்

விவாஹ காலத்தில் மாப்பிள்ளைக்குச் செய்ய வேண்டிய மரியாதை களையும், சாஸ்த்ரப்படி செய்ய வேண்டிய ஶுபகர்மாக்களையும், செய்து உரிய மந்திரங்களுடன் கட்டழகியான ஶாந்தாவை ரோமபாதன் மிக மகிழ்வுடன் கன்யகாதானம் செய்து கொடுக்க, ரிஶ்யஶ்ருங்க முனிவர் ஶாந்தாவைக் கைப்பிடித்து ஏற்று அரண்மனையிலேயே அன்றாடம் அவ்வப் பொழுது தேவையான ராஜோபசாரங்களைப் பெற்று வாழ்ந்துவருகிறார் என வஸிஷ்டர் தசரதருக்குக் கூறினார்.

தபஸ்வியான ரிஸ்யஸ்ருங்கர் அங்க நாட்டில் நுழைந்ததும் மழை பொழிந்து வறட்சி நீங்கி ஸுபிக்ஷம் ஏற்பட்டது என்பது உண்மையே. ஆயினும் இதை எப்படி நம்புவது? முனிவரை தாஸிகள் கட்டி அணைத்தனர். அவர்கள் கொடுத்த பழங்களையும், தின்பண்ட வகைகளையும் முனிவர் புசித்தார். இதனால் ரஜோ குணமும், தமோ குணமும் தலை நிமிர, தவத்தின் தொடர்ச்சி தடைப்படுமல்லவா? தகாத செய்கையினால் முற்செய்த தவமும் அழிந்திருக்குமே! தவவலிமை குன்றியவர் வர, மழை எப்படிப் பெய்யும்? வேத சாஸ்த்ரங்களைக் கசடறக் கற்று, அதில் கூறியபடி ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை மேற்கொண்டவருக்கு, அவர்களைப் பெண்கள் என அறியாதவர் என்றும், ப்ரஹ்மசர்யத்தில் பெண்களின் தொடர்பை விலக்க வேண்டு மென்பதை மறந்தார் என்றும் சொல்வது தக்க விடையாகுமா? காட்டிலும் ஆஸ்ரமங்களிலும் பெண்கள் வசிப்பதை அவர் அறிந்தவர் தானே! எனில், இவ்வாதம் அனைவரிடமும் பொருந்துவது அன்று. இவர் முற்றிலும் தூயவர், உண்மையான ப்ரஹ்மசர்யத்தை ஏற்றவர். தத்வஞானி, அனைத்துப் பொருள்களிலும் பரமனையே பார்ப்பவர். எனவே ஸர்வ பூதங்களையும் கருணையோடு நேசிப்பவர். உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எனக் கருதுபவர். ஊழ் வினையின் பயனாய் தனக்கு க்ஷத்திரியப் பெண்ணான சாந்தாவோடு திருமணம் நிகழப் போவதையும், புத்ர காமேஷ்டி வேள்வியைச் செய் விப்பதின் வியாஜமாக ராமாவதாரம் நிகழப்போவதையும் உணர்ந்தவரான படியால் அதற்கேற்ப நடந்து கொண்டார் என்றே கொள்ளவேண்டும். இங்கு

ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்'' குறள் - 380

எனும் குறட்பாவினை நினைக்க.

இவ்வாறன்றேல் இவரது தந்தையான மாமுனிவர் விபண்டகர், ஞான த்ருஷ்டியினால் உண்மையை உணர்ந்தவர், தாஸிகளையும், அரசனையும் சபித்திருப் பாரன்றோ?

भूय एव हि राजेन्द्र शृणु मे वचनं हितम् ।
अङ्गराजं दशरथः गमिष्यति महायशाः ।
अनपत्योऽस्मि धर्मात्मन् शान्ताभर्ता मम क्रतुम् ।
आहरेत त्वयाज्ञप्तः सन्तानार्थं कुलस्य च ।
यज्ञार्थं प्रसवार्थं च स्वर्गार्थं च जनेश्वर ।।
लभते च स तं कामं विप्रमुख्यात् विशांपतिः ।
पुत्राश्चास्य भविष्यन्ति चत्वारः अमित विक्रमाः ।।
वंश प्रतिष्ठानकराः सर्वलोकेषु विश्रुताः ।।

பூய: ஏவஹிராஜேந்த்ர! ஶ்ருணுமே வசனம் ஹிதம் ॥
அங்கராஜம் தஶரத: கமிஷ்யதி மஹாயசா: ।
அனபத்ய: அஸ்மி தர்மாத்மன்! ஶாந்தா பர்த்தா மமக்ரதும் ।
ஆஹரேத த்வயாக்ஞப்த: ஸந்தானார்த்தம் குலஸ்யச ॥
யக்ஞார்த்தம் ப்ரஸவார்த்தம் ச ஸ்வர்கார்த்தம் ச ஜனேச்வர ।
லபதே ச ஸதம் காமம் விப்ர முக்யாத் விஶாம்பதி: ॥
புத்ரா: சாஸ்ய பவிஷ்யந்தி சத்வார: அமிதவிக்ரமா: ।
வம்ஶ ப்ரதிஷ்டானகரா: ஸர்வலோகேஷு விஸ்ருதா: ॥

வா.ரா. பால - 11.

ஸுமந்த்ரர் தசரதனை நோக்கி ''பேரரசே! உமக்கு நன்மைகள் பல நிகழப்போவது பற்றி ஸனத் குமாரர் கூறியதை மேலும் சொல்கிறேன் கேளுங்கள். இக்ஷ்வாகுகுலத் தோன்றலும், அறவோனும் வாய்மை பிறழாதவனுமான தசரதன் எனும் அரசன் அங்க நாட்டரசனை அணுகி ''தர்மாத்மாவே! யான் மக்கட்பேறு அற்றவன்; உமது மகளாகிய சாந்தாவின் கணவர் என் குலம் தழைக்க அயோத்தியில் புத்ரகாமேஷ்டி யாகத்தைச் செய்து உதவ வேண்டும். அவர் இயற்றும் வேள்வி எனக்கு புத்ரபாக்யத்தை யும், கடைசியில் ஸுவர்க்கத்தையும் அருளும். எனவே இருவரையும் அனுப்பும்' என வேண்டுவார். அங்கராஜனும் அவர்களை அனுப்ப, வேள்வியின் காரணமாக தசரதருக்கு நான்கு குமாரர்கள் தோன்றுவர். அவர்கள் உலகில் புகழ் பெற்றவர்களாய், இக்ஷ்வாகு குல விளக்காய், எல்லையற்ற வீரபராக்ரமம் உடையவர்களாய்த் திகழ்வர் என்பது ஸநத்குமாரர் வாக்காகும்'' என்றார்.

अनुमान्य वसिष्ठं च सूतवाक्यं निशम्य च ।
सान्तःपुरस्सहामात्यः प्रययौ यत्र सद्विजः ॥
शान्ता तव सुता राजन् सहभर्त्रा विशांपते ।
मदीयं नग़रं यातु कार्यं हि महदुद्यतम् ॥

அனுமான்ய வஸிஷ்டம் ச ஸூதவாக்யம் நிஶம்ய ச ॥
ஸாந்த: புர: ஸஹாமாத்ய: ப்ரயயௌ யத்ர ஸத்விஜ: ।
சாந்தா தவ ஸுதா ராஜன் ஸஹ பர்த்ரா விசாம்பதே ।
மதீயம் நகரம் யாது கார்யம் ஹி மஹத் உத்யதம் ॥

வா.ரா. பால. - 11.

நாம் நல்லதும் அல்லதுமான அனைத்துக் கர்மாக்களையும் குல ப்ருஹஸ்பதியைக் கொண்டே செய்து வருகிறோம். அவர் இருக்கும் போது மற்றொரு ப்ருஹஸ்பதியை அழைத்துச் செய்வதில்லை. பரம்பரையாக உள்ள ப்ருஹஸ்பதியை விடுத்து மற்றொருவரை அழைப்பதும், குலகுருவாக

உள்ளவரை விடுத்து வேறு குருவை நாடுவதும் தவறாகும். இவ்வாறு செய்வது நமக்குக் கேட்டையே விளைவிக்கும். எனவே குலகுருவாகவும் குலப் புரோஹிதராயும் உள்ள வஸிஷ்ட மஹர்ஷியை விட்டுவிட்டு ரிஶ்யஶ்ருங்க மஹர்ஷியைக் கொண்டு யாகங்களை நடத்த முற்படுவது பெரும் அபசாரமாகும். இது நேர் எதிரான பலன்களையே விளைவிக்கும். இதை உணர்ந்த தசரதர் வஸிஷ்டரை அழைத்து, ஸுமந்த்ரரின் கூற்றுக்களை விண்ணப்பித்து, குருவின் அனுமதியைப் பெற்று அங்க நாட்டிற்குத் தம் மனைவியருடன் புறப்பட்டுச் சென்றார். அமைச்சர்களும், மற்ற பரிவாரங் களும் உடன் சென்றனர். ரோமபாதரும் ''யான் செய்த மாதவமோ இவ்வுலகம் செய்தவமோ யாதோ'' என மகிழ்ந்து வரவேற்று, தம் நண்பராகிய தசரத மன்னரை மிக்கப் பரிவுடன் உபசரித்தார். ஏழெட்டு நாட்கள் அங்கு தங்கித் தம் விருப்பத்தை விளம்பினார்.

''அரசே! யான் பெரியதொரு செயலில் ஈடுபட்டிருக்கிறேன். அதற் காகத் தங்கள் புதல்வியான சாந்தா அவஶ்யம் அயோத்தி நகருக்கு வர வேண்டும். அவளோடு அவள் கணவரான ரிஶ்யஶ்ருங்கரையும் அனுப்பி வைக்க வேண்டும்.'' (இங்கு ரிஶ்யஶ்ருங்கரை முதலில் கூறவேண்டியிருக்க ஶாந்தாவுக்குச் சிறப்பு அளித்துப் பேசியது எண்ணியதை முடிக்கும் பேச்சுத் திறனைக் காட்டும் என்பர்.)

உடனே ரோமபாதர் ரிஶ்யஶ்ருங்கரை வேண்ட, அவரும் ஶாந்தா வுடன் அயோத்திக்குப் புறப்பட்டார். மாப்பிள்ளைக்கு (மருமகனுக்கு) விருப்பு இல்லையெனில் அயோத்தி செல்லும்படி மாமனாரால் வற்புறுத்த முடியுமா? கோரிக்கையை முனிவர் ஏற்றதில் இரு அரசர்கட்கும் அளவிலா மகிழ்ச்சி, இருவரும் ஒருவருக்கொருவர் அஞ்சலி செய்து மார்புறத் தழுவி மகிழ்ந்தனர். அப்பொழுது தேவர்கள்

அந்தர துந்துபி முழக்கி ஆய்மலர்
சிந்தினர் களித்தனர் அறமும் தேவரும்
வெந்து எழுகொடுவினை வீட்டும் மெய்ம்முதல்
வந்துஎழ அருள் தருவான் என்று எண்ணியே.

க.ரா.பால. - திருவவதாரம்

முனிவர் மகிழ்வுடன் அயோத்திக்குப் புறப்பட்டதும் வானத்தில் தேவர்கள் துந்துபி வாத்யத்தை அடித்து முழக்குவதும், கற்பகத்தின் நறுமண மலர்களைத் தூவுவதுமாய் மகிழ்ந்து ஆரவாரம் செய்தனராம். ஏன்? நெருப்புப் போலச் சுடர்விடும் தீவினையாம் அரக்கர்களை வீழ்த்த மெய்ம் முதற்கடவுளாம் திருமால் அவதரித்தருளுவர் எனும் நம்பிக்கை யமன் இந்திரன் முதலிய தேவர்கட்கு ஏற்பட்டதாம்.

நகரை அழகுபடுத்தும்படி மக்களுக்குத் தெரிவிக்க, தூதுவரை அனுப்பிவிட்டு தசரதராஜனும், முனிராஜனும் தேர் ஏறி அயோத்திக்குப் புறப்பட்டனர். நகரவாயிலில் பற்பல வாத்யங்கள் முழங்க மக்கள் அணி அணியாகத் திரண்டு வந்து தம் அரசனையும் முனிவர் அரசனையும் வரவேற்றனர்.

अन्तः पुरस्त्रियः सर्वाः शान्तां दृष्ट्वा तथाऽऽगताम् ।
सह भर्त्रा विशालाक्षीं प्रीत्यानन्दमुपागमन् ॥

அந்த: புர ஸ்த்ரிய: ஸர்வா: சாந்தாம் த்ருஷ்ட்வா ததா ஆகதாம் ।
ஸஹ பர்த்ரா விசாலாக்ஷீம் ப்ரீத்யா ஆனந்தம் உபாகமன் ॥

வா.ரா. பால. - 11.

சக்ரவர்த்தி நேராக சாந்தாவையும், முனிவரையும் அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றார். கன்னிப் பருவத்தில் இங்கு வந்தபோது பார்த்துப் பழகிய அரசரின் பிற மனைவியர் திருமணமான பிறகு சாந்தாவைப் பார்த்ததில் மிக மகிழ்வெய்தினர். மேலும் கணவனோடு வந்ததில் அளவற்ற மகிழ்ச்சி, சாந்தாவும் இவர்களைப் பார்த்துப் பல்லாண்டுகளாயினும் உற்று நோக்கி அனைவரையும் அடையாளம் கொண்டு அறிமுகப்படுத்திக் கொண்டாள். (இதை ''விசாலாக்ஷி'' எனும் சொல்லால் வால்மீகி உணர்த்துகிறார்.)

பின்னர் ஒரு வஸந்த ருதுவில் சைத்ரமாதத்தில் பௌர்ணமி அன்று அஶ்வமேதயாகத்தைச் செய்ய எண்ணியவராய் ரிஶ்யஶ்ருங்க முனிவரைப் பிரார்த்திக்க அவரும் மனம் உவந்து தக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி அருளினார்.

ततो राजा अब्रवीत् वाक्यं सुमन्त्रं मन्त्रिसत्तमम् ।
सुमन्त्रावाहय क्षिप्रं ऋत्विजः ब्रह्मवादिनः ।
सुयज्ञं वामदेवं च जाबालिमथ काश्यपम् ।
पुरोहितं वसिष्ठं च ये चाप्यन्ये द्विजातयः ।

தத: ராஜா அப்ரவீத்வாக்யம் ஸுமந்த்ரம் மந்த்ரிஸத்தமம் ।
ஸுமந்த்ர! ஆவாஹய க்ஷிப்ரம் ரித்விஜ: ப்ரஹ்மவாதின: ॥
ஸுயக்ஞம் வாமதேவம் ச ஜாபாலிம் அத காஶ்யபம் ।
புரோஹிதம் வஸிஷ்டம் ச யே சாபி அன்யே த்விஜாதய: ॥

வா.ரா. பால. - 12.

தசரதர் உடனே தமக்கு மிக அந்தரங்கராயும், வைதிக லௌகிக கார்யங்களைச் செய்வதில் அனுபவம் உள்ளவருமான ஸுமந்திரரை

அழைத்து வேதமோதியவர்களும் ரிதுக்களில் பர்வ காலங்களில் யாகம் செய்பவர்களுமான அந்தணர்களை விரைவில் அழைத்து வரும்படி உத்தர விட்டார். இவர்களுள் முக்யமாக ஸுயக்ஞர், வாமதேவர், ஜாபாலி, காஸ்யபர், நம் குலத்தின் நன்மையைக் கருதி வரும் வஸிஷ்டர் முதலி யோரைத் தவறாமல் அழைத்து வருவீராக'' என்றார்.

அரசரின் கட்டளையைத் தலையாலே ஏற்று அனைவரையும் அரண்மனைக்கு அழைத்து வந்தார் ஸுமந்த்ரர். அனைவரையும் சக்ரவர்த்தி தாமே நேரில் வரவேற்று உபசரித்து ஆஸனங்களில் அமர்த்தி இனிதாகப் பேசினார்.

मम लालप्यमानस्य पुत्रार्थं नास्ति वैसुखम् ।
तदर्थं हयमेधेन यक्ष्यामीति मतिर्मम ॥
ततः साध्विति तद्वाक्यं ब्राह्मणाः प्रत्यपूजयन् ॥
सम्भाराः संभ्रियन्तां ते तुरगश्च विमुच्यताम् ॥
सर्वथा प्राप्स्यसे पुत्रान् चक्षुः अमित विक्रमान् ॥

மம லாலப்யமானஸ்ய புத்ரார்த்தம் நாஸ்தி வை ஸுகம் ।
ததர்த்தம் ஹயமேதேன யக்ஷ்யாமீதி மதிர்மம ॥
தத: ஸாத்விதி தத்வாக்யம் ப்ராஹ்மணா: ப்ரத்யபூஜயன் ॥
ஸம்பாரா: ஸம்ப்ரியந்தாம் தே துரக: ச விமுச்யதாம் ॥
ஸர்வதா ப்ராப்ஸ்யஸே புத்ரான் சக்ஷு: அமிதவிக்ரமான் ॥

வா.ரா. பால. - 12.

''வேதம் வல்லோர்களே! வெண்கொற்றக் குடையின் நிழலில் அரியாஸனத்தில் அமர்ந்து நாடுகள் அனைத்திலும் செங்கோல் செலுத்திச் செல்வமும் புகழும் பெற்றிருந்தாலும் மக்கட்பேறு இல்லாத குறை என்னை எப்பொழுதும் வாட்டி வருகின்றது. அதற்காக அஸ்வமேத மஹாயாகத்தைச் செய்ய எண்ணியுள்ளேன். தங்களுடையவும் ரிஸ்யஸ்ருங்க முனிவருடைய வும் ஆசியினால் என் எண்ணம் நிறைவேறியே தீரும் என உறுதியாக நம்புகிறேன்'' என்றார். மேலும்

உலப்பு இல் பல்லாண்டு எலாம் உறுகண் இன்றியே
தலம்பொறை ஆற்றினென் தனயர் வந்திலர்
அலம்புநீர் உடுத்தபார் அளிக்கும் மைந்தரை
நலம் புகழ்பெற இனி நல்கவேண்டுமால்

க.ரா.பால. - திருவவதாரம்

''முடிவின்றி பல்லாண்டு காலம் நாட்டில் எவருக்கும் எவ்விதத் தீங்கும் மனத்துயரமும் ஏற்படாது பூமிபாரத்தைத் தாங்கி நின்றேன். என்

காலத்திற்குப் பிறகு வையகத்தை வாழ்விக்க மனம் சலியாது இப் பூமிபாரத்தைத் தாங்கிட புத்திரர்கள் பிறந்தாரிலர்''.

''கடல் சூழ்ந்த அவனி முழுவதையும் புரக்கும் மைந்தர்களைப் பெறவும், ஸத்புத்ரர்களால் யான் பெரும் புகழ் பெறவும் தாங்கள் அருள் புரிதல் வேண்டும்.''

(இங்கு 'தனி மரம் தோப்பாகாது', 'தனிப் பிள்ளை பிள்ளையாகாது' எனும் பழமொழியை மனதில் கொண்டு புதல்வர்களை (பன்மையில்) வேண்டினார் போலும்.)

இதைக் கேட்டதும் அந்தணர்கள் அனைவரும் ஒருமுகமாக வஸிஷ்டரையும், ரிஶ்யஶ்ருங்கரையும் முன்னிலைப்படுத்திக் கொண்டு ''நல்லது நல்லது, எல்லையற்ற பராக்ரமம் உடைய நான்கு புதல்வர்களைப் பெறப்போகிறீர்! இது உறுதி. வேள்விக்குத் தேவையானவற்றைத் திரட்டி, நாட்டைச் சுற்றி வர குதிரையை அவிழ்த்துவிடுங்கள்'' என அருளாசி வழங்கினார்.

ऋषीणां पुनराद्यानां वाचं अर्थः अनुधावति ॥

ரிஷீணாம் புன: ஆத்யானாம் வாசம் அர்த்த: அனுதாவதி ॥

பவபூதி

கர்மானுஷ்டானபரர்களான பெரியோர்களின் அருள்வாக்கைப் பொருள்கள் பின்தொடரும் என்பது மூதுரை. அதாவது நான்கு புதல்வர்கள் முற்கூறிய வாக்குப்படி தோன்றியே தீர்வர் என்பதாம்.

अमात्यान् च अब्रवीत् राजा हर्षेणेदं शुभाक्षरम् ।
गुरूणां वचनात् शीघ्रं संभाराः संभ्रियन्तु मे ।
सरय्वाश्चोत्तरे तीरे यज्ञभूमिर्विधीयताम् ॥
शान्तयश्चाभिवर्धन्तां यथा कल्पं यथा विधि ।
छिद्रं हि मृगयन्तेऽत्र विद्वांसः ब्रह्मराक्षसाः ॥
विघ्नितस्य हि यज्ञस्य सद्यः कर्ताविनश्यति ॥

அமாத்யான் ச அப்ரவீத் ராஜாஹர்ஷேணேதம் சுபாக்ஷரம் ॥
குரூணாம் வசனாத்ஸீக்ரம் ஸம்பாரா: ஸம்ப்ரியந்து மே ॥
ஸரய்வா: ச உத்தரேதீரே யக்ஞபூமி: விதீயதாம் ।
சாந்தய: ச அபிவர்த்தந்தாம் யதா கல்பம் யதா விதி ॥
சித்ரம் ஹி ம்ருகயந்தே அத்ர வித்வாம்ஸ: ப்ரஹ்மராக்ஷஸா: ।
விக்னிதஸ்ய ஹி யக்ஞஸ்ய ஸத்ய: கர்த்தா வினஶ்யதி ॥

வா.ரா. பால. - 12.

அரசருக்குத் தாம் எதிர்பார்த்தபடி திறம்பட யாகத்தை நடத்தி வைக்கக் கூடிய தக்கோரும் சான்றோர்களுமான மஹர்ஷிகள் அனைவரும் வந்ததும், எண்ணியபடி இம் மஹாயாகத்தை நடத்தி வைக்க இசைந்ததும், எதிர் பார்க்கும் பயனைப் பெறுவதை உறுதி செய்யும் அருளாசியைக் கூறியதும் பெரும் மகிழ்ச்சியை விளைவித்தன. எனவே உடனே அமைச்சர்கள் அனைவரையும் பார்த்துக் கட்டளையிட்டார். ''இப்பெரியோர்களின் கூற்றுக் கிணங்க அஸ்வமேத வேள்விக் குதிரையைச் செய்வன செய்து சுற்றிவர விடுங்கள். வேள்விக்குத் தேவையானவை யாவையும் சேகரித்து வையுங்கள். ஸரயூவின் வடகரையில் யாகசாலையை அமையுங்கள். அஸ்வமேத யாகத்தை அரசர்கள் அனைவரும் செய்யலாம். ஆனால் அதைப் பிழையறச் செய்து முடிப்பவர் ஒரு சிலரேயாம். வேதங்களைக் கற்று அதை முறைப்படி ஓதாது எழுத்துப் பிழை, ஸ்வரப் பிழைகளுடன் ஓதியவர்கள் மறு பிறவியில் ப்ரஹ்ம ராக்ஷஸர்களாகப் பிறப்பார்கள். அவர்கள் நாம் செய்யும் வேத பாராயணத்திலும், வேள்விகளிலும் நிகழும் பிழைகளை எதிர்பார்ப்புடன் தேடி வருவார்கள். பிழையிருப்பின் வேள்வியைக் கெடுத்து அழித்துவிடுவர். இதனால் பெரும் பயனைப் பெற விரும்பி பெரு முயற்சி செய்து மாபெரும் வேள்வியை வேட்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்த யஜமானன் அழிந்து விடுவான். எனவே வேத நெறி சிறிதும் வழுவாது மிக்க கவனத்துடன் செயல்பட வேண்டும்'' என்றார்.

உடனே அமைச்சர்கள் வேள்விக்குரிய குதிரையைத் தேர்ந்தெடுத்து, அதை நன்கு அலங்கரித்து ரித்விக்குகளுடனும், பாதுகாப்புக்குத் தேவையான படைகளுடனும் நாட்டைச் சுற்றிவர அனுப்பினர்.

அழைப்பும், உபசரிப்பும்

पुनः प्राप्ते वसन्ते तु पूर्णः सवत्सरोऽ भवत् ।
प्रसवार्थं गतः यष्टुं हयमेधेन वीर्यवान् ॥
अभिवाद्य वसिष्ठं च न्यायतः प्रति पूज्य च ।
अब्रवीत् प्रश्रितं वाक्यं प्रसवार्थं द्विजोत्तमम् ॥
भवान् स्निग्धः सुहृन्मह्यं गुरुश्च परमो महान् ।
वोढव्यो भवता चैव भारो यज्ञस्य चोद्यतः ।
तथेति च स राजानमब्रवीत् द्विजसत्तमः ।

புன: ப்ராப்தே வஸந்தே து பூர்ண: ஸம்வத்ஸர: அபவத் ।
ப்ரஸவார்த்தம் கத: யஷ்டும் ஹயமேதேன வீர்யவான் ॥
அபிவாத்ய வஸிஷ்டம் ச ந்யாயத: ப்ரதி பூஜ்ய ச ।
அப்ரவீத் ப்ரச்ரிதம் வாக்யம் ப்ரஸவார்த்தம் த்விஜோத்தமம் ॥
பவான் ஸ்நிக்த: ஸுஹ்ருத் மஹ்யம் குருஶ்ச பரமோமஹான் ।
வோடவ்ய: பவதா சைவ பார: யக்ஞஸ்ய ச உத்யத: ॥
ததா இதிச ஸ ராஜானம் அப்ரவீத் த்விஜ ஸத்தம: ॥

வா.ரா. பால. - 13.

வேள்விக்காகக் குதிரையைச் சுற்றவிட்டு ஓர் ஆண்டு நிறைவு பெற்றது. அஸ்வமேத வேள்விக்காகப் பூர்வாங்கமாகச் செய்ய வேண்டிய சில கர்மாக்களைச் செய்வதற்காகத் தமது பூஜா க்ருஹத்திற்குச் சென்றார் தசரதர். அங்கு வஸிஷ்ட முனிவரை வரவேற்று முறைப்படி வணங்கிப் பூஜித்து உபசரித்து ஆஸனத்தில் அமரச் செய்து மிக்க வினயத்துடன் பேசலானார்.

''ப்ராஹ்மண ச்ரேஷ்டரே! தாங்கள் அடியேனிடம் இன்று வரை மாறாத பேரன்புடையவர், எனது நலனில் அக்கரை கொண்டவர். மற்றோரை விட மிகச் சிறந்த குரு. எனவே நாம் தொடங்கவிருக்கும் அஸ்வமேத மஹா யாகத்தின் பெரும் சுமையை—பொறுப்பைத் தாங்களே ஏற்று நடத்த வேண்டும்'' என வேண்டினார். அதாவது லௌகிக கார்யங்களில் அரசருக்குப் பிரதிநிதியாகவும், வைதிக கார்யங்களில் யாகத்தின் பெரும் பொறுப்பை ஏற்கும் அத்வர்யுவாகவும் இருந்து, இம்மாபெரும் வேள்வியைக் குறைவற பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்றார் தசரதர். யஜமான தீக்ஷையைப் பெற்ற பிறகு வேள்வி முடியும் வரை, அதற்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்குச் சிறிதும் சுதந்திரம் கிடையாது என விதிக்கப்

பட்டிருக்கிறது. எனவே நம்பிக்கைக்குரிய வஸிஷ்டரிடம் அனைத்துப் பொறுப்பையும் ஒப்படைத்தார். முனிவரும் ''அவ்வாறே ஆகுக'' என ஒப்புக் கொண்டார்.

இவ்வேள்வியைச் செய்யும் போது நாட்டிலுள்ள அரசர்களும் மக்களும் தசரதரின் ஆட்சியுரிமையை ஒப்புக் கொண்டவர்களாகிறார்கள். எனவே நாட்டிலுள்ள அரசர்களும், அந்தணர்களும், காட்டிலுள்ள முனிவர் களும் மற்றுமுள்ள பிரஜைகளும் வேள்வியைக் கண்டு நன்மை பெற ஸரயூ நதிக்கரையில் அணி அணியாகத் திரண்டு வருவர். அவரவர்களின் வாழ்க்கைத் தரத்திற்கேற்ப, நடை உடை பாவனைகளுக்கேற்ப, ஆசார அனுஷ்டானங்கட்கேற்ப, தங்க, குளிக்க, உடுக்க, உண்ண, பொழுது போக்கத் தேவையானவற்றைக் குறைவற ஏற்பாடு செய்யும்படி குலாலர், சிற்பிகள், தச்சர், தோண்டுபவர், ஜோதிடர், எழுத்தர், ஓவியர், நடிகர், நடிகைகள், சாஸ்த்ரம் கற்றவர், கலை நிபுணர்கள் அனைவரையும் அழைத்து அவரவர்கட்குரிய பணிகளை நிறைவேற்றும்படி வஸிஷ்டர், மன்னரின் பெயரில் கட்டளைகளைப் பிறப்பித்த வண்ணமிருந்தார்.

इष्टका बहु साहस्री शीघ्रमानीयतामिति ।
औपकार्याः क्रियन्तां च राज्ञां बहुगुणान्विताः ।
ब्राह्मणावसथाश्चैव कर्तव्याः शतशः शुभाः ।
तथा पौर जनस्यापि कर्तव्याः बहु विस्तराः ॥
आवासाः बहु कक्ष्या वै सर्वकामैरुपस्थिताः ।
दातव्यं अन्नं विधिवत् सत्कृत्य न तु लीलया ।
सर्व वर्णाः यथा पूजां प्राप्नुवन्ति सुसत्कृताः ।
न च अवज्ञा प्रयोक्तव्या काम क्रोध वशादपि ।
यज्ञकर्मणि ये व्यग्राः पुरुषाः शिल्पिनः तथा ।
तेषामपि विशेषेण पूजा कार्या यथा क्रमम् ।

இஷ்டகா பஹு ஸாஹஸ்ரீ சீக்ரம் ஆனீயதாம்இதி ।
ஒளபகார்யா: க்ரியந்தாம் ச ராக்ஞாம் பஹுகுணான்விதா: ॥
ப்ராஹ்மணாவஸதா: சைவ கர்த்தவ்யா: சதச: சுபா: ।
ததா பௌர ஜனஸ்யாபி கர்த்தவ்யா: பஹு விஸ்தரா: ॥
ஆவாஸா: பஹு கக்ஷ்யா: வை ஸர்வகாமை: உபஸ்திதா: ।
தாதவ்யம் அன்னம் விதிவத் ஸத்க்ருத்ய ந து லீலயா ॥
ஸர்வ வர்ணா: யதா பூஜாம் ப்ராப்னுவந்தி ஸுஸத்க்ருதா: ।
ந ச அவக்ஞா ப்ரயோக்தவ்யா காம க்ரோத வஶாதபி ॥

யக்ஞகர்மணி யே வ்யக்ரா: புருஷா: சில்பின: ததா ।
தேஷாமபி விசேஷேண பூஜா கார்யா யதா க்ரமம் ॥

வா.ரா.பால. - 13.

''யாக வேதிகளுக்கும், புதிதாக அமைக்கப்படும் வீடுகட்கும் தேவை யான கற்களை விரைவில் கொண்டு வந்து சேருங்கள். வருகின்ற அரசர்கள் சௌகர்யமாக தங்குவதற்குரிய உயரமும், அகலமும், காற்றோட்டமும், பிற வசதிகளும் நிறைந்த அரண்மனைகளைச் சமையுங்கள். ஆஹிதாக்னிகளான அந்தணர்கட்கு அக்னி ஹோத்ரம் இஷ்டி முதலான வைதிக கர்மாக்களை அனுஷ்டிப்பதற்குரிய வசதி படைத்த நாட்டுக்கு நலனை அளிக்கும் பலப்பல திருமாளிகைகளை விரைந்து கட்டுங்கள். நகர மக்களும் கிராம மக்களும் தங்குவதற்கேற்ற உறைவிடங்களையும் விரைவில் அமைப்பீர்களாக. திடீரெனத் தோன்றும் புயலினாலோ பெரு மழையினாலோ கேடுறா வண்ணம் அனைத்தும் அமைக்கப்பட வேண்டும். அந்தந்த நாட்டு மக்கள் விரும்பி மகிழ்வுடன் உண்பதற்குரிய உணவு வகைகள் தங்குமிடங்கள் தோறும் நிறைந்திருக்க வேண்டும். ஒவ்வொருவரையும் வரவேற்று உபசரித்து உணவு பரிமாற வேண்டும். பரிமாறும்போது விளையாட்டாகவும் மரியாதைக் குறைவாகவும் நடந்து கொள்ளக் கூடாது.

மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. குறள் - 90

''இல்லத்திற்கு வரும் விருந்தினரைக் கண்டதும் இனிய முகம் காட்டி அவர் கிட்டியதும் இனிதாகப் பேசி வீட்டினுள் நுழைந்ததும் நன்கு உபசரித்துப் பின்னர் விடை கொடுக்க வேண்டும். அவ்வாறின்றி முதலில் கண்டதுமே இன்முகம் காட்டாது முகம் சுளிப்போமேயாகில் விருந்தினர் வாடிய முகத்துடன் திரும்புவர். அனிச்ச மலரைக் கையிலெடுத்து மோந்து பார்த்தால் அது வாடிவிடும். அம்மலர் அவ்வளவு மெல்லியதாம். ஆனால் விருந்தினரை தூரத்திலிருந்தே முகம் சுளித்துப் பார்ப்போமாகில் அவர் முகம் வாடித் திரும்புவர்.

''எனவே வேள்விக்கு வரும் ஒவ்வொருவரையும் அவர்தம் முகம் குழையாதவாறு உபசரிக்க வேண்டும். வரும் விருந்தினரை உபசரிப்பதில் இனியவர், இன்னாதவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், கற்றவர், கல்லாதவர், தென்னவர், வடவர், மேற்கத்தியர், கிழக்கத்தியர் ஆகிய எவ்வித வேற்றுமை யையும் பாராட்டுதல் கூடாது. நட்பினாலோ பகைமையினாலோ எவரையும் சிறிதும் அவமதிக்கக் கூடாது. மேலும் குறிப்பாகப் பசி பட்டினி பாராது இரவு பகலாக உழைத்து தக்க ஏற்பாடுகளைச் செய்பவர்களையும், யாகத்தில் ரித்விக்குகளாகப் பங்கு கொண்டு ஹோமம் முதலிய வேள்விப் பணிகளை நியமத்துடன் செய்கின்றவர்களையும் மிகச் சிறப்பாக அதாவது உணவினா லும், பொருள்களினாலும், தனத்தினாலும் உபசரிக்க வேண்டும்''.

இவ்வாறு அந்த அந்த அமைச்சுக்கும் அரசு அலுவலர்க்கும் வஸிஷ்டர் உத்தரவிட்டார்.

ततः सर्वे समागम्य वसिष्ठमिदमब्रुवन् ।
यथोक्तंतत्सुविहितं न किंचित् परिहीयते ॥

தத: ஸர்வே ஸமாகம்ய வஸிஷ்டம் இதம் அப்ருவன் ।
யதோக்தம் தத்ஸுவிஹிதம் நகிஞ்சித் பரிஹீயதே ॥

வா.ரா. பால. - 13.

பின்னர் ஒரு சில நாட்களுக்குப் பிறகு அனைவரும் வஸிஷ்ட முனிவரை அணுகி ''தங்கள் ஆணைக்கேற்ப எதிலும் எவ்விதக் குறைவு மின்றி மன்னரிடம் தமக்குள்ள பரிவினால் செய்து முடிக்கப்பட்டது. இனியும் ஒரு குறையும் ஏற்படாவண்ணம் கவனமாக இருப்போம்'' என்று விண்ணப்பித்தனர்.

ततः सुमन्त्रमानीय वसिष्ठो वाक्यमब्रवीत् ।
निमन्त्रयस्व पतीन् पृथिव्यां येच धार्मिकाः ।
समानयस्व सत्कृत्य सर्वदेशेषु मानवान् ।
मिथिलाधिपतिं शूरं जनकं सत्य विक्रमम् ।
निष्ठितं सर्वशास्त्रेषु तथा वेदेषु निष्ठितम् ।
तमानय महाभागं स्वयमेव सुसत्कृतम् ।
पूर्व सम्बन्धिनं ज्ञात्वा ततः पूर्वं ब्रवीमि ते ।
ततः काशीपतिं स्निग्धं सततं प्रिय वादिनम् ।
वयस्यं राजसिंहस्य स्वयमेवानयस्व ह ।
तथा केकय राजानं वृद्धं परम धार्मिकम् ।
अङ्गेश्वरं महा भागं रोमपादं सुसत्कृतम् ॥
प्राचीनान् सिन्धु सौवीरान् सौराष्ट्रेयाँश्च पार्थिवान् ।
दाक्षिणात्यान् नरेन्द्रांश्च समस्तान् आनयस्व ह ।

தத: ஸுமந்த்ரம் ஆனீய வஸிஷ்டோ வாக்யம் அப்ரவீத் ।
நிமந்த்ரயஸ்வ ந்ருபதீன் ப்ருதிவ்யாம் யேச தார்மிகா: ॥
ஸமானயஸ்வ ஸத்க்ருத்ய ஸர்வதேஶேஷு மானவான் ॥
மிதிலாதிபதிம் ஶூரம் ஜனகம் ஸத்ய விக்ரமம் ।
நிஷ்டிதம் ஸர்வசாஸ்த்ரேஷு ததா வேதேஷு நிஷ்டிதம் ॥
தம்ஆனய மஹாபாகம் ஸ்வயமேவ ஸுஸத்க்ருதம் ।

பூர்வஸம்பந்தினம் ஞாத்வா தத: பூர்வம் ப்ரவீமி தே ॥
தத: காஸீபதிம் ஸ்நிக்தம் ஸததம் ப்ரிய வாதினம் ।
வயஸ்யம் ராஜஸிம்ஹஸ்ய ஸ்வயமேவ ஆனயஸ்வஹ: ॥
ததா கேகய ராஜானம் வ்ருத்தம் பரமதார்மிகம் ।
அங்கேச்வரம் மஹா பாகம் ரோமபாதம் ஸுஸத்க்ருதம் ॥
ப்ராசீனான் ஸிந்து ஸௌவீரான் ஸௌராஷ்ட்ரேயான் ச
பார்த்திவான் ।
தாக்ஷிணாத்யான் நரேந்த்ரான் ச ஸமஸ்தான் ஆனயஸ்வஹ ॥

வா.ரா. பால. - 13.

முன்னேற்பாடுகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டதோடு, ஊழியர்களும் கண்காணிப்பவர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டனர். பின்னர் அழைப்பு விடுக்கும் பணியில் வஸிஷ்டர் கவனமாக ஈடுபட்டார். மூத்த அமைச்சரும் அரசனுக்கு நண்பருமான ஸுமந்த்ரரை அழைத்துக் கூறலானார்.

''ஸுமந்த்ரரே! இப்புவியில் பரம தார்மிகர்களாகிய அரசர்கள் அனைவருக்கும் வேள்விக்கு வரும்படி அழைப்பு அனுப்புவீர். ப்ராம்ஹணர் முதலிய எல்லா வர்ணத்தினரையும் நாடு முழுவதினின்றும் ஆயிரக்கணக்கில் வரும்படி கௌரவித்து அழைப்புவிடுப்பீராக. மிதிலையின் அரசரான ஜனகர் உண்மையான பராக்ரமம் உடையவர்; எதையும் முடிக்கும் திறனுடையவர்; வேதங்களையும் கசடறக் கற்று அதன்படி ஒழுகுபவர்; சிறந்த கர்மானுஷ்டானபரர் என வேதமே அவரைப் புகழ்கிறது. அவரை அரசமரியாதையுடன் நேரில் சென்று நீரே பத்திரிகையை அளித்து முதலில் அழைக்க வேண்டும். ஏனெனில் அவதரிக்கப் போகும் சக்ரவர்த்தித் திருமகனுக்குத் தம் பெண்ணைத் திருமணம் செய்வித்து ஸம்பந்தியாகப் போகிறார் என்பதை நான், யோகத்தினால் அறிந்துவைத்திருக்கிறேன். எனவே அவரை முதலில் சொன்னேன். அடுத்தபடியாக காசிராஜனையும் நீரே நேரில் சென்று அழைக்க வேண்டும். காசிராஜன் தசரதருக்கு ஸமமான வயதுடையவர்; சிறந்த நண்பர்; எப்பொழுதும் இனிமையாகப் பேசுபவர். உற்ற நண்பரை நேரில் அழைத்து யாகத்திற்கு வரும்படிச் செய்தால் நம் அரசர் மிக மகிழ்வார். பரம தார்மிகராயும், வயோவ்ருத்தராயும், நமது சக்ரவர்த்திக்கு மாமனாரு மான கேகய நாட்டரசரையும், மைத்துனரான கேகய நாட்டு இளவரசரையும், புகழ் பெற்ற அங்க நாட்டரசரையும் நேரில் அழைப்பீராக; இருவரும் நம் நாட்டுக்கு உற்ற நண்பராவர். நமக்கு கீழ்த்திசையிலுள்ள ஸிந்து, ஸௌ வீரம், மற்றும் ஸௌராஷ்ட்ரம், தக்ஷிணம் ஆகிய நாட்டு அதிபர்களையும் தூதர்களை அனுப்பி அழைத்துவரச் செய்யவும். இவ்வாறு எல்லா அரசர்களையும் அவர்தம் பரிவாரங்களுடனும், உறவினர்களுடனும் விரைவில் அழைக்கச் செய்வீர்'' என்றார்.

வஸிஷ்டரின் உத்தரவை தலைமேற் கொண்டு ஸுமந்த்ரரும் மற்ற அமைச்சர்களும், அலுவலர்களும் அனைத்தையும் பாங்குறச் செய்து முடித்தனர். அரசர்களும் முனிவர்களும் மற்றோரும் வந்து குவிந்தனர்.

अवज्ञया न दातव्यं कस्यचित् लीलयाऽपि वा ।
अवज्ञया कृतं हन्यात् दातारं नाऽत्र संशयः ॥

அவக்ஞயா ந தாதவ்யம் கஸ்யசித் லீலயாபி வா ।
அவக்ஞயா க்ருதம் ஹன்யாத் தாதாரம் நாத்ர ஸம்ஶய: ॥

வா.ரா.பால. - 18

''யாராயினும் உயர்வு தாழ்வு பாராமல் அவமதிப்பாகவோ, வேடிக்கை யாகவோ அல்லாமல் உபசரித்து தேவையானவற்றை வழங்க வேண்டும். கொடுப்போர் சிறிது அவமதிப்பு காட்டினாலும் அது அந்த தானம் கொடுப் போரையே கொன்றுவிடும்,'' என அடிக்கடி வஸிஷ்டர் ஊழியர்களை எச்சரிக்கை செய்திருந்தபடியால் பயபக்தியுடன் வந்தவர்களை உபசரித்தனர். அல்லும் பகலும் வந்த வண்ணம் இருந்த அரசர்கள் வேள்விக்காக தசரதருக்கு ரத்னங்களைக் காணிக்கையாகக் கொடுத்த வண்ணம் இருந்தனர்.

வஸிஷ்டர் தசரதரிடம் சென்று ''அரசே! எல்லா ஏற்பாடுகளும் மானஸிக ஸ்ருஷ்டி போன்று மிக அழகாக நடந்தேறின. வரவேண்டியவர்கள் அனைவரும் வந்து சேர்ந்தனர். ஸரயூ நதிக்கரை முற்றிலும் திருவிழாக் கோலம் பூண்டு விளங்குகிறது. அனைத்தையும் பார்வையிட்ட வண்ணம் யாக சாலைக்கு எழுந்தருளலாம்'' என விண்ணப்பித்தார்.

ரிஶ்யஶ்ருங்கரும் தசரதனை நோக்கி ''உலகம் ஈரேழும் ஓம்பிடும் வல் திறல் மைந்தரை அளிக்கும் மாமகம் இன்று நீ இயற்றுதற்கு எழுக ஈண்டு'' என்றான்.

तदा वसिष्ठ वचनात् ऋश्यशृङ्गस्यचोभयोः ।
शुभे दिवस नक्षत्रे निर्यातो जगतीपतिः ॥

ததா வஸிஷ்டவசனாத் ரிஶ்யஶ்ருங்கஸ்ய ச உபயோ: ।
ஶுபே திவஸ நக்ஷத்ரே நிர்யாத: ஜகதீபதி: ॥

ரா. பால. 13.19

குலகுரு வஸிஷ்டர், ரிஶ்யஶ்ருங்கர் இவ்விரு முனிவர்களின் சொற்படி சுபயோக, சுபகரண, சுப நக்ஷத்ரங்களோடு கூடின நன்னாளில் யாக சாலைக்கு அரண்மனையினின்றும் தசரதர் புறப்பட்டார்.

शंख दुन्दुभि मृदङ्ग वादनैः मंगलैः पटह काहलादिभिः ।
स्वस्तिवाद मुखरैः मखक्षितिं ब्राह्मणैश्च सह संप्रपद्यते ॥

சங்க துந்துபி ம்ருதங்கவாதனை: மங்களை: படஹ காஹலாதிபி: ॥
ஸ்வஸ்திவாத முகரை: மகக்ஷிதிம் ப்ரஹ்மணைச்ச ஸஹ
ஸம்ப்ரபத்யதே ॥

சங்கு, துந்துபி, ம்ருதங்கம், படஹம், காஹலம் முதலிய மங்கள வாத்யங்கள் முன்னே முழங்க, ஸ்வஸ்தி வாசன வேதங்களை அந்தணர்கள் உடன் ஓத, அரசர்கள் பின் தொடர யாக சாலைக்குச் சென்றார் சக்ரவர்த்தி.

அஸ்வமேதமும் அன்னதானமும்

ततः वसिष्ठ प्रमुखाः सर्वे एव द्विजोत्तमाः ।
ऋश्यशृङ्गं पुरस्कृत्य यज्ञ कर्मारभंस्तदा ॥
नचाहुतमभूत्तत्र स्खलितं वापि किंचन ।
दृश्यते ब्रह्मवत्सर्वं क्षेमयुक्तं हि चक्रिरे ॥
न तेषु अहस्सु श्रान्तः वा क्षुधितो वाऽपि दृश्यते ।
नाविद्वान् ब्राह्मणस्तत्र नाशतानुचरस्तदा ।
ब्राह्मणाः भुञ्जते नित्यं नाथवन्तश्च भुञ्जते ॥
तापसाः भुञ्जते चापि श्रमणाः भुञ्जते तथा ।
वृद्धाश्च व्याधिताश्चैव स्त्रियो बालास्तथैव च ॥
अनिशं भुञ्जमानानां न तृप्तिरुपलभ्यते ।
अन्नकूटाश्च बहवः दृश्यन्ते पर्वतोपमाः ॥
दिवसे दिवसे तत्र सिद्धस्य विधिवत्तदा ॥
अन्नं हि विधिवत्स्वादु प्रशंसन्ति द्विजर्षभाः ।
अहो तृप्तास्स्म भद्रं ते इति शुश्राव राघवः ।
स्वलंकृताश्च पुरुषाः ब्राह्मणान् पर्यवेषयन् ॥
उपासते च तानन्ये सुमृष्ट मणिकुण्डलाः ।

தத: வஸிஷ்ட ப்ரமுகா: ஸர்வே ஏவ த்விஜோத்தமா: ।
ரிஶ்யஶ்ருங்கம் புரஸ்க்ருத்ய யக்ஞ கர்ம ஆரபன் ததா ॥
நசா ஹுதம் அபூத் தத்ர ஸ்கலிதம் வாபி கிஞ்சன ।
த்ருஶ்யதே ப்ரஹ்மவத் ஸர்வம் க்ஷேமயுக்தம் ஹி சக்ரிரே ॥
ந தேஷு அஹஸ்ஸு ஶ்ராந்த: வா க்ஷுதித: வாஅபி த்ருச்யதே ।
நாவித்வான் ப்ராஹ்மண: தத்ர ந அஶதானுசர: ததா ॥
ப்ராஹ்மணா: புஞ்ஜதே நித்யம் நாதவந்த: ச புஞ்ஜதே ।
தாபஸா: புஞ்ஜதே சாபி ஶ்ரமணா: புஞ்ஜதே ததா ॥
வ்ருத்தாஶ்ச வ்யாதிதா: சைவ ஸ்த்ரிய: பாலா: ததைவ ச ।
அனிசம் புஞ்ஜமானானாம் ந த்ருப்தி: உபலப்யதே ॥
அன்னகூடா: ச பஹவ: த்ருஶ்யந்தே பர்வதோபமா: ।
திவஸே திவஸே தத்ர ஸித்தஸ்ய விதிவத் ததா ॥

அன்னம் ஹி விதிவத் ஸ்வாது ப்ரஶம்ஸந்தி த்விஜர்ஷபா: ।
அஹோ த்ருப்தா: ஸ்ம பத்ரம் தே இதி ஶுச்ராவ ராகவ: ॥
ஸ்வலங்க்ருதா: ச புருஷா: ப்ராஹ்மணான் பர்யவேஷயன் ।
உபாஸதே ச தான் அன்யே ஸும்ருஷ்ட மணிகுண்டலா: ॥

வா.ரா. பால.- 14.

அரசர் யாகசாலைக்கு வந்ததும் அஶ்வமேதப் பெருவேள்வி தொடங்கியது. குலகுருவான வஸிஷ்டர் ரிஶ்யச்ருங்கரை முன்னிட்டுக் கொண்டு வேள்வியைத் தொடங்கச் செய்தார். ரித்விக்குகள் அவரவர்கட்கு அளிக்கப் பட்ட ஹோம குண்டங்களில் ஹோமங்களைச் செய்யத் தொடங்கினர். ரிஶ்யஶ்ருங்கர் ப்ரஹ்மாவாக இருந்து கண்காணித்து வந்தார். வேதத்தில் கூறப்பட்டபடி எவ்விதக் குறைபாடுகளுமின்றி கல்ப ஸூத்திரங்களில் வகுத்தளித்த முறைகளினின்றும் சிறிதும் வழுவாதபடி ஹோமங்கள் நடைபெற்றன. ரித்விக்குகள் அனைவரும் நன்கு வேதம் ஓதியவர்களான படியாலும் ஶ்ரௌத ஸ்மார்த்த ப்ரயோகங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர் களான படியாலும் வேத மந்த்ரங்களில் ஸ்வரப்பிழையோ, தடுமாற்றமோ, வேகத்தில் சில ஹோமங்கள் விடப்படுவதோ இன்றி அனைத்தையும் மங்களமாகப் பாங்குற நடத்தினர். இவ்வாறு ஹோமங்கள் ஏழுநாட்கள் நடந்தன.

அம்மஹா யாகத்திற்கு பரத கண்டமே திரண்டு வந்திருந்தது. வந்தவர் களுள் ஒருவர் கூட பசியினாலோ, தாகத்தினாலோ வருந்தியதில்லை. வந்த அந்தணர்கள் அனைவரும் மறைகளை ஓதியதோடு வேதாங்கங்களான சாஸ்த்ரங்களை நன்கு கற்றவர்கள், அவர்களுள் ஒவ்வொருவரிடமும் நூற்றுக்குக் குறையாத மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர். அவர்களும் யாகத்திற்கு வந்திருக்கிறார்கள்.

(அக்காலத்திய குருகுலக் கல்வி முறை இத்தகையது. குரு வெளியூர் சென்றால் சீடர்களும் பின் தொடருவார்கள். வழிநடையிலும் கற்பார்கள். கற்ற விஷயங்களை ஆராய்வார்கள். ஒவ்வொரு முனிவரும் குலபதியாவார். முனிவர்களின் ஆஶ்ரமங்களும் பல்கலைக் கழகங்களாகத் திகழ்ந்தன.)

இவ்வேழு நாட்களிலும் அந்தணர்கள், ஊழியர்கள், ஸந்யாஸிகள், திகம்பரர்கள், தபஸ்விகள், கிழவர்கள், நோயுற்றவர்கள், பெண்கள், சிறுமிகள், சிறுவர்கள், இவ்வாறு பல்வகைப் பிரிவினருக்கும் தேவையான, பிடித்தமான, வேண்டிய அளவினவான பல்வகை அன்னங்கள், பக்ஷ்யங்கள் நிறைந்த அறுசுவை உண்டிகள் உபசரித்து அளிக்கப்பட்டன. தடையின்றி அளிப்பதால் சிலர் அடிக்கடி விரும்பியவற்றை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே இருந்தார்களாம். உணவு வகைகள் அனைத்தும் அவ்வளவு சுவைமிக்கவை. எனவே எவருக்கும் சாப்பிட்டது போதும் எனத் திருப்தி ஏற்படவில்லை. கண்காணிக்க வரும் அலுவலர்களோ ''நிறைய அள்ளிக்

கொடுங்கள். பல்வகையான வஸ்த்ரங்களையும் புடவைகளையும் கொணர்ந்து குவித்துக் கொடுங்கள், கொடுங்கள்'' எனத் தூண்டிய வண்ணமிருந்தனர். மேன்மேலும் வந்து கொண்டே இருக்கின்ற மக்கள் திரளுக்கு அளிக்க வேண்டி மலை போன்று அன்னத்தை வடித்துக் குவித்துக் கொண்டே இருந்தனர். இதற்கேற்ப பக்ஷண வகைகள், தொட்டுக் கொள்ள தேவை யானவை, உறிஞ்சியும் நக்கியும் சாப்பிடக் கூடியவை, அனைத்தும் அளவி லடங்கா.

இதில் ஓர் அதிசயம்! எல்லாம் சாஸ்த்ரங்களில் கூறிய ஆசாரப்படியும், சுகாதார முறைப் படியும் தயாரிக்கப்பட்டவை. இங்கு பெரியோர்கள் கூறுவது ஒன்று உண்டு. அதாவது கோயில் மடப்பள்ளியின் உள்ளேயோ, விவாஹ, உத்ஸவ காலங்களில் மிகுதியாக உணவு தயாரிக்கும் அன்ன சாலைக்குள்ளோ, பிறர் சென்று பார்க்கக் கூடாதென்பர். ஏன்? அங்கு வேறு வழியின்றி நிகழக்கூடிய சுகாதாரக் கேடுகளும், ஆசாரக் கேடுகளும் நமக்கு வெறுப்பைத் தூண்டி விடும் போலும்! ஆனால் அஸ்வமேத வேள்வியின் அன்ன சாலைகளில் நம்மை அறியாமல் நிகழக் கூடிய எத்தகைய சீர்கேடு களும் இன்றி, அதிலும் பழைய அமுது, பழைய குழம்பு என்று சொல்வதற்கு இடமின்றி நாள்தோறும் சமைக்கப்பட்ட சூடான உணவுப் பொருள்களே வழங்கப்பட்டன என்றால் சமையற்காரர்களின் நேர்மை, மேற்பார்வையாளர் களின் சலிப்பற்ற சேவை. தசரதரின் ஆட்சித் திறன், வஸிஷ்ட முனிவரின் கண்டிப்பு ஆகிய பெருமைமிகு நிர்வாஹத் திறனை நம்மால் ஊஹித்துத்தான் பார்க்க முடியுமோ! இதைக்கூறி நமக்கு வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியைப் பற்றியும் பாடம் கற்பிக்கிறார் முனிவர் வால்மீகி.

स्वलंकृताश्च पुरुषाः ब्राह्मणान् पर्यवेषयन् ।
उपासते च तानन्ये सुमृष्ट मणिकुण्डलाः ॥

ஸ்வலங்க்ருதா: ச புருஷா: ப்ராஹ்மணான் பர்யவேஷயன் ।
உபாஸதே ச தான் அன்யே ஸும்ருஷ்ட மணிகுண்டலா: ॥

வா.ரா. பால. - 14

நிறைய உணவுப் பொருட்களைத் தயாரித்துவிடலாம். அவற்றைப் பரிமாறுவது என்பது ஒருபெருங் கலையாகும். உள்ளே அடுப்படியில் வெந்து கொண்டிருப்பவர்களை பரிமாறுவதற்கு அனுமதிக்கக்கூடாது. அவர்களைப் பார்த்தமாத்திரத்தில் சிலருக்கு குமட்டல் ஏற்படும். சிலர் முகத்தைச் சுளித்துக் கொள்வர். சிலருக்குச் சாப்பிட்டவை வெளியே எட்டிப் பார்க்கும். அவர்கள் வியர்வை, பொருளில் கலப்பதைக் கண்டுவிட்டால் ஒரு வாரத்திற்குச் சாப்பாடே வேண்டியிருக்காது. எப்படிப் பரிமாற வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறார் முனிவர். இவ் வேள்வியின் விருந்தில் காண்போர் கண்களைக் கவரும் வண்ணம் நன்னீராடி, நல்லாடை உடுத்தி, ஊர்த்வ புண்ட்ரங்களைத் தாங்கி, கேசங்கள் கலையாது நன்கு சீவிமுடித்து எண்ணெய்

இறங்கி ஒளிமங்காது தன்னொளியால் முகத்திற்கு அழகையும், கவர்ச்சியையும் அளிக்கும் மணிகுண்டலங்களைக் காதுகளில் அணிந்த புருஷர்கள் பரிமாறினார்கள். இவர்களில் சிலர் உணவுப் பொருள்களைப் பரிமாறுகின்றவர்கட்குத் திருமடப்பள்ளியினின்றும் கொணர்ந்து கொடுத்தனராம். ஆக அரசர், கடைநிலை ஊழியர் உள்பட அனைத்து ஊழியர்களையும் போற்றி, மதித்து, ஆதரித்து வந்தார் என்பதை அறிகிறோம். இல்லாவிடில் இவ்வளவு கவனத்துடனும் பரிவுடனும் பணிபுரியத் தோன்றுமா?

அன்றாடம் ஹோமாதிகள் பூர்த்தியானதும் சக்ரவர்த்தி தமக்குரிய மாளிகையில் இளைப்பாறுவது வழக்கம். அவ்வழியே சாப்பிட்டவர்கள் சாலையில் செல்லும்போது தங்களுக்குள் உரையாடிக் கொண்டே செல்கின்றார்கள். ''இத்தகைய ததீயாராதனத்தை நாம் எங்கு பார்க்க முடியும்? எனக்குத் தொண்ணூறு வயதாகிறது. இதுவரை யான் கண்டதில்லை.'' மற்றொருவர்: ''எதைச் சாப்பிடுவது? எதை எறிவது? எல்லாம் ஒன்றுபோல் மற்றொன்றும் சுவைமிக்கதாகவே இருக்கிறது''. வேறொருவர்: ''அது போகட்டும், பந்தி வஞ்சனையின்றி எல்லா பக்ஷ்யங்களையும் வேண்டியவர் வேண்டாதவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் எனப் பாகுபடுத்திப் பார்க்காமல் அனைவருக்கும் அனைத்தையும் உபசரித்துப் பரிமாறிய அழகை என்னவென்று சொல்வது! இவ்வாறு உணவளித்த நம் சக்ரவர்த்தி பல்லாண்டு வாழணும். நிறைய குமாரர்களைப் பெற்று நல் வாழ்வு வாழணும்'', எனப் பலபடி புகழ்ந்த பேச்சுக்களை எல்லாம் கேட்டுக் கேட்டு மனதிற்குள் மகிழ்ந்தார் தசரதர்.

அயோத்தி ஸாம்ராஜ்யத்தில் பசி, பட்டினி என்ற பேச்சுக்கே இடமில்லை. எனவே ஸரயு நதிக்கரையில் பத்து நாட்கள் தங்கி ஸுகமாக சாப்பிட்டுப் பொழுது போக்குவதற்காக யாரும் வரவில்லை. கிழவர்கள் ஸ்த்ரீகள் வழிநடைப் பயணத்தில் ஏற்படும் ஶ்ரமங்களைப் பொறுத்துக் கொண்டு வரத் தேவையில்லை. இந்நிலையில் அணி அணியாகத் திரண்டு ஏன் வரவேண்டும்? எனில் இத்தகு வேள்விகள் நம்மால் அனுஷ்டிக்கப்பட முடியாதவை. நடக்குமிடம் சென்று கண்களால் தர்சனம் செய்தால் பாபங்கள் தொலையும், புண்ணியங்கள் சேரும். முடிந்த அளவு நாம் ஈட்டிய செல்வத்தையோ, பிற பொருள்களையோ வேள்விக்குக் காணிக்கையாகக் கொண்டு ஸமர்ப்பிப்பது ஜன்ம ஸாபல்யத்தை (பிறவிப்பயனை) அளிக்கும். இதற்காகவே மக்கள் இங்கு திரண்டனர். எனவே நாமும் இக்காலத்தில் எங்கு யாகம் நடந்தாலும் நேரில் சென்று, முடிந்த காணிக்கையை ஸமர்ப்பித்து பார்த்து வருவது நமக்கு நன்மையை விளைவிக்கும். ''அனாஹூதோ அத்வரம் கச்சேத்'' அழைக்காமலே வேள்விக்குச் செல்ல வேண்டும் என்பது விதி.

இங்கு வால்மீகி அன்னதானத்தை அழகுறச் சித்தரித்துக் காட்டியது அதன் பெருமையை விளக்கவேயாகும்.

तुरग शत सहस्रं गो गजानां च लक्षं
कनक रजत पात्रं मेदिनीं सागरान्ताम् ।
विमलकुल वधूनां कोटि कन्याः च दद्यात्
नहि नहि सममेतैः अन्नदानं प्रधानम् ॥

துரக ஶதஸஹஸ்ரம் கோ கஜானாம் ச லக்ஷம்
கனக ரஜத பாத்ரம் மேதினீம் ஸாகராந்தாம் ।
விமலகுல வதூநாம் கோடி கந்யா: ச தத்யாத்
நஹி நஹி ஸமம் ஏதை: அன்னதானம் ப்ரதானம் ॥

ச்ரோத்திரியர்கட்கு நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் சிறந்த குதிரைகளை தானம் பண்ணினாலும், லக்ஷம் பசுக்களையோ, யானை களையோ தானம் பண்ணினாலும், தங்கப் பாத்திரங்களையோ, வெள்ளிப் பாத்திரங்களையோ, கடலை எல்லையாகக் கொண்ட பூமியையோ தானம் பண்ணினாலும், இந்த தானங்கள் அன்னதானத்திற்குச் சமம் ஆகா. அன்னதானமே அனைத்திலும் சிறந்தது, பிரதானமானது. எனவே தான் நம் பூர்வர்களான ஸூத்ரகாரர்கள் மஹான்களின் ஆசீர்வாதத்தைப் பெற உபநயன, விவாஹ, ஸீமந்தங்கட்கு முன்னதாகத் ததீயாராதனம் செய்வதை நடைமுறைப் படுத்தி வந்திருக்கிறார்கள். இங்கு இவ்வன்னதானத்தின் சிறப்பைப் பற்றிய ஒரு சிறு கதையைக் கூறலாமென எண்ணுகிறோம்.

ஒருவருக்குக் குடும்பச் செலவுக்குத் தேவையான அளவு நிலம் இருந்தது. அவருக்கு ஒரே பிள்ளை, அவனைவிட்டுப் பிரிய மனம் இல்லாது மேலுலகு எய்தினார். பிள்ளையை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு தாய்க்கு ஏற்பட்டது. அவள் ''தர்மம் தலைகாக்கும்'' ஊரார் பிள்ளையை வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் எனும் கொள்கை (நம்பிக்கை) உடையவள், தன் வீட்டை நாடி வருபவர்கட்கு இல்லையென்னாது அன்னமிட்டு உபசரித்து வந்தாள். பொதுவாக அனைவரும் அவளை தர்மிஷ்டை, பரோபகாரி எனப் பேசி வந்தனர். இப்புகழைக் கண்டு பொறாது உறவினர் களும், சில ஊராரும் பொறாமையினால் பொருமிக் கொண்டிருந்தனர். தர்மிஷ்டையின் மகனை குளத்தில், கோயிலில், கடையில் சந்திக்கும் பொழுதெல்லாம் ''கோவிந்தா! நீ சிறு பிள்ளை. நல்லது, கெட்டது அறியாய், உன் அம்மா அன்னதானம் புண்யமானது என நினைத்து வீட்டிற்கு வருவோர் போவோருக்கெல்லாம் உணவு அளித்து வருகிறாள். இருபது ஏக்கர் நிலத்தையும் உணவிட்டு உணவிட்டு தொலைத்து, உன் தலை மேல் கடனையும் சுமத்திவிட்டு வாயைப் பிளந்து விடுவாள். பின்னர் நீதான் சோற்றுக்கு அலையணும், ஆமாம், ஜாக்கிரதை; வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும். அம்மா கண்டபடி செலவு செய்வதையெல்லாம் கட்டுப் படுத்து'', என்று அடிக்கடி எச்சரித்தனர். அடிமேல் அடி அடித்தால் அம்மியும்

நகருமல்லவா, கோவிந்தனின் மனம் மாறியது. அம்மாவிடம் அடிக்கடி தகராறு, அவள் செய்யும் நல்ல காரியங்களையெல்லாம் தடுத்தான்.

அம்மா மகனிடம், ''யாரடா உன் புத்தியைக் கெடுத்தது, ''தர்மோ ரக்ஷதி ரக்ஷித'' நாம் தர்மத்தைக் காப்பாற்றினால் அது நம்மையும் நம் தலைமுறையினரையும் நன்கு பாதுகாக்கும். அன்னமிடுவதால் நம் சொத்துக்குச் சிறிதும் குறைவு வராது. சொத்து மேலும் வளரும். என் வார்த்தையை நம்பாவிடில் நம்மூருக்கு அருகிலுள்ள காட்டில் வாழும் தவமுனிவர்களைக் கண்டு அடிபணிந்து கேட்டுப்பார். அன்னதானத்தின் பெருமையை என்னை விட நன்கு விளக்கிக் கூறுவர்'' என்றாள்.

தாயுரை கேட்ட மகன் மாலைப்பொழுது மணி நான்குக்கு விரைந்து நடந்து மணி ஆறுக்குக் காட்டினுள் நுழைந்தான். பக்த த்ருவனைப் போன்று கருமமே கண்ணாய் ஆச்ரமத்தைத் தேடிச் சென்றான். க்ருஷ்ண பக்ஷம், நக்ஷத்திரங்களின் ஒளியை மரங்களின் அடர்த்தி மறைந்தது, காட்டின் நடுப்பகுதி, காரிருள், எங்கு செல்வது, எப்பக்கம் திரும்புவது, ஒன்றுமே புரியவில்லை. தாயை மனதில் எண்ணி அச்சம் நீங்கியவனாய் மன உறுதியுடன் மேலே செல்லத் தொடங்கினான். ''போதும் நில்'' எனக் குரல் கேட்டது. ஒரு வேடன் அருகில் வந்தான். ''குழந்தாய்! எங்கே செல்கிறாய்?''

கோவிந்தன்: ''முனிவரிடம் அன்னதான மஹிமையைக் கேட்க.''

வேடன்: ''அப்பா! ஆச்ரமம் இன்னும் 2 மைல் இருக்கிறது. வழி நெடுகப் புதர்கள். அவற்றில் பதுங்கிய புலி, கரடிகள் உன்னையே உணவாக்கிக் கொண்டுவிடும். எனவே இரவை என்னோடு கழி. விடிந்ததும் செல்'' என்றான். அவன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். தன் மனைவியிடம் ''புது விருந்து வந்திருக்கிறது'' என்றான்.

வேடன் மனைவி: ''நன்றாயிருக்கு. இன்று நல்ல வேட்டையும் இல்லை. என் கைக்காசைக் கொடுத்து கிராமத்து அம்மையாரிடம் 2 பட்டை சோறுதான் வாங்கி வந்தேன். நாளை கொடுப்பதாகச் சொல்லி கொஞ்சம் சாம்பாரும் வாங்கினேன். எனவே விருந்துக்கு சோறு ஏது?'' என்றாள்.

வேடன்: ''அப்படியானால் நம் பங்குகளில் தலைக்குச் சிறிது கொடுப்போமே'' என்றான். அவள் உடன்படவில்லை. வேடன் தன் பங்கு சோற்றையும், சில கனிகளையும் கொடுத்து சிறுவனை சாப்பிடச் செய்தான். பிறகு படுக்கச் சென்றார்கள். எங்கே? சிங்கம், புலி, கரடிகள், உள்ளதால் மரத்தின் உயரே பரண்கட்டி அதில்தான் படுக்கை, மூவரும் மேலே ஏறி பரணுக்குச் சென்றார்கள். வேடன் மனைவியைப் பார்த்து, ''இவனோ சிறுவன், தூங்கும் பொழுது புரண்டு கீழே விழுந்துவிடுவான். அவனை நடுவில் விட்டுப் படுப்போம்'' என்றான். அவள் இதற்கும் இசையவில்லை. என் செய்வான்! வேறு வழியின்றி பையனை ஓரத்தில் படுக்கச் சொன்னான். நள்ளிரவு, மணி பன்னிரண்டு. எழுந்து பார்த்தான். மனைவி குறட்டை விட்டுத் தூங்கினாள்.

அவளை மெதுவாகச் சிறிது நகர்த்தி, பையனை நடுவில் புரட்டிவிட்டு, தான் மறு ஓரத்தில் படுத்து அயர்ந்து தூங்கினான். மணி மூன்று. மனைவிக்குத் தூக்கம் கலைந்தது. இடம் ரொம்ப நெருக்கமாக இருந்தது. கண்களை விழித்துப் பாராமல் கடைசியில் பையன்தானே படுத்திருக்கிறான் என எண்ணி, மெதுவாக அவனைக் கீழே தள்ளிவிட்டுத் தாராளமாகப் புரண்டு தூங்கினாள். விழுந்த வேடுவனைச் சிங்கம் கடித்து குஹைக்கு இழுத்துச் சென்றுவிட்டது. காலையில் விழித்ததும் தன் அணைப்பில் கணவனைக் காணவில்லை. ''என்னே! அறியாமல் புருஷனை யன்றோ தள்ளிவிட்டேன். தூக்கம் பொல்லாதது. இனி என் செய்வேன்?'' எனக் கதறி அழுதாள்.

கோவிந்தன் நடந்ததை அறிந்து, ''இவள் நம்மை என் செய்வாளோ'' என பயந்து மெதுவாக மரத்தின் பரணிலிருந்து இறங்கி வேகமாக முனிவர் ஆச்ரமத்தை அடைந்தான். அங்கு முனிவரை வணங்கிக் கைகளைக் கூப்பி, வாய் பொத்தி நின்று அன்னதான மஹிமையைச் சொல்லியருள வேண்டினான்.

முனிவர் நிகழ்ந்தவற்றை ஞானத்ருஷ்டியினால் உணர்ந்து, ''சிறுவா! உன் தாய் செய்த அன்னதானத்தினால் நேற்று இரவு நீ சிங்கத்தின் வாயினின்றும் தப்பினாய். நிற்க. நீ நேராக காசிக்குப் போ. இன்றைய தினத்திலிருந்து பத்தாவது மாதத்தில் சுக்லபக்ஷத்தில் வெள்ளிக்கிழமையன்று வ்ருஷப லக்னத்தில் காசி ராஜனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும். அதைத் தங்கத்தட்டில் ஏந்திவரச் செய்து, அதைக் கேட்பாயாகில் அன்னதானத்தின் சிறப்பை அது சொல்லும்'' என்றார். உடனே கோவிந்தனும் காசி சென்று அரசனை பேட்டி கண்டு விண்ணப்பித்தான்.

காசி ராஜன்: ''சிறுவா! நான் எத்தனையோ யாகங்களையும் புத்ர காமேஷ்டியையும் செய்தும் மக்கட்பேற்றை பெறவில்லை. நீ நல்ல செய்தியை முனிவர் வாக்காகக் கொணர்ந்தாய்'' என்று மகிழ்வுடன் கூறினார்.

சிறுவன்: ''இம்மாதத்திலிருந்து பத்தாவது மாதம் சுக்லபக்ஷம் வெள்ளிக் கிழமை வ்ருஷப லக்னத்தில் பிறக்கும் உம் குழந்தையை தரையில் விழாது தங்கத்தட்டில் ஏந்தி எனக்குக் காட்ட வேண்டும்'' என்றான்.

அரசன் அவனை மகிழ்ச்சியுடன் அணைத்து அரண்மனையிலேயே தங்கச் செய்து உபசரித்து வந்தான். நல்ல சாப்பாடு, கங்கா ஸ்நானம் எல்லாம் கிடைத்தது. மஹாராணியும் கருவுற்று குறித்த நேரத்தில் ப்ரஸவித்தாள். தங்கத் தட்டில் ஏந்தி வந்த குழந்தையைப் பார்த்துக் கேட்டான். ''குழந்தாய்! அன்னதான மஹிமையைக் கூறுவாய்'' என்றான்.

குழந்தை: ''அப்பா! பத்து மாதத்திற்கு முன்பு காட்டில் என் பங்கான ஒரு பட்டைச் சோற்றையும், பரணில் படுக்க இடமும் கொடுத்தேனே! நினைவு இருக்கிறதா? அன்று உனக்கு என் பங்கு சாதத்தை அளித்ததின் பயனே இன்று ராஜகுமாரனாக, அதிலும் மண்ணவர் போற்றும் காசி க்ஷேத்திரத்தில் யான் பிறந்தேன்'' என்றது.

அதிதியை—விருந்தினரைத் தெய்வமாகப் போற்று. ''நீ அதிதி தேவனாக இரு. அதற்காக எம்முறையினாலாவது நிறைய அன்னத்தைப் பெற முயற்சிப்பாய்'' என்றது உபநிஷத்.

இனைத் துணைத்து என்பதொன்றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். குறள் - 87

விருந்தோம்புதலாகிய வேள்விப் பயன் இத்தகையது என்று கூறத் தக்கது அன்று. அது விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவினதாகும்!

யாக பூர்த்தியும் தக்ஷிணையும்

कर्मान्तरे तथा विप्राः हेतुवादान् बहूनपि ।
प्राहुस्स्म वाग्मिनः धीराः परस्पर जिगीषया ॥
नाष्टाङ्गवेदविदत्रासीत् नाव्रतः नाबहुश्रुतः ।
सदस्याः तस्य वै राज्ञः नावादकुशलाः द्विजाः ॥

கர்மாந்தரே ததா விப்ரா: ஹேதுவாதான் பஹூன் அபி ।
ப்ராஹு: ஸ்ம வாக்மிந: தீரா: பரஸ்பர ஜிகீஷயா ॥
ந அஷ்டாங்கவேதவித் அத்ரஆஸீத் நஅவ்ரத: நஅபஹுஶ்ருத: ।
ஸதஸ்யா: தஸ்யவை ராக்ஞ: ந அவாதகுசலா: த்விஜா: ॥

வா.ரா.பால. - 14

ப்ரதான யாகமும் பல்வகை அங்கயாகங்களும் நடந்து வந்தன. யாகத்தில் தொடர்புடையவர்கள் அனைவரும் தேர்ந்த அறிவாளிகள், பேச்சாற்றல் படைத்தவர்கள். வேதாங்கங்கள் ஆறையும் முறைப்படி கற்றவர்கள். ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்ட உபவாஸாதி வ்ரதங்களை ஆர்வத்தோடு அனுஷ்டிப்பவர்கள். பல்லோரிடம் பலவாறாக ஶாஸ்த்ர நுணுக்கங்களைக் கேட்டறிந்தவர்கள். கற்றது அனைத்திலுமுள்ள உண்மைகளை நிலைநாட்டும் வாதத்திறன் படைத்தவர்கள். இத்தகையோர் பலர் ஒருங்கே கூடினால் கேட்கவும் வேண்டுமோ! கர்மாக்களின் இடையே ஏற்படும் ஓய்வு காலங்களில் வேதாந்த விசாரம், வாக்யார்த்தங்கள் நடைபெறும். தக்க சான்றுகளுடன் ஒருவரை ஒருவர் வெல்லும் நோக்கில் பேசுவர். ப்ரஹ்ம விசாரத்தில் ஏற்படும் ஆனந்தானுபவத்திற்குத் தான் எல்லையும் உண்டோ? இவ்வாறாக யாகமும் இனிது பூர்த்தியைப் பெற்றது. அவப்ருத ஸ்நானமும் பாங்குற நிகழ்ந்தது. ஸம்பாவனை ஸதஸ் கூடிற்று.

प्राचीं होत्रे ददौ राजा दिशं स्वकुल वर्धनः ।
अध्वर्यवे प्रतीचीं तु ब्रह्मणः दक्षिणां दिशम् ।

उद्गात्रे वै तथा उदीचीं दक्षिणैषा विनिर्मिता
भवानेवहि महीं कृत्स्नां एको रक्षितुमर्हति ।
न भूम्या कार्यमस्माकं नहि शक्तास्स्म पालने ।
रता: स्वाध्याय करणे वयं नित्यं हि भूमिप ।
निष्क्रियं किंचिदेवेह प्रयच्छतु भवानिति ।
मणिरत्नं सुवर्णं वा गाव: यद्वा समुद्यतम् ।

ப்ராசீம் ஹோத்ரே ததௌ ராஜா திசம் ஸ்வகுல வர்தன: ।
அத்வர்யவே ப்ரதீசீம் து ப்ரஹ்மண: தக்ஷிணாம் திசம் ॥
உத்காத்ரே வை ததா உதிசீம் தக்ஷிணைஷா விநிர்மிதா ॥
பவான் ஏவஹி மஹீம் க்ருத்ஸ்நாம் ஏக: ரக்ஷிதும் அர்ஹதி ॥
ந பூம்யா கார்யம் அஸ்மாகம் நஹிசக்தாஸ்ம பாலனே ॥
ரதா: ஸ்வாத்யாயகரணே வயம் நித்யம் ஹி பூமிப ॥
நிஷ்க்ரியம் கிஞ்சித் ஏவஇஹ ப்ரயச்சது பவான் இதி ॥
மணிரத்னம் ஸுவர்ணம் வா காவ: யத்வா ஸமுத்யதம் ॥

வா.ரா.பால. - 14

எவ்வித இடையூறுமின்றி அஸ்வமேத மஹாயாகம் பூர்த்தி பெற்றது பற்றி சக்ரவர்த்தி மட்டற்ற மகிழ்ச்சியை எய்தினார். யாகம் முதலிய வைதிக கர்மாக்கள் நமக்குக் கோரிய பலனை அளிக்க வேண்டுமானால் அதை நடத்திக் கொடுத்த ரித்விக்குகள் பூர்ண த்ருப்தியை அடைய வேண்டும். தக்ஷிணை கொடுப்பதையும் கர்மாங்கமான செயலாக வேத சாஸ்த்ரம் கூறுகிறது. எனவே தசரதர் தக்ஷிணை கொடுக்கத் தொடங்கினார். ஹோதா வுக்குத் தம் நாட்டின் கிழக்கிலுள்ள நிலப்பகுதியையும், அத்வர்யுவுக்கு மேற்கு திசையிலுள்ள பகுதியையும், ப்ரஹ்மாவுக்குத் தென் திசையையும், உத்காதாவுக்கு வடதிசைப் பகுதியையும் தக்ஷிணையாகக் கொடுத்தார். இந்த தக்ஷிணையைப் பெற்றுக் கொண்டால் இந்த நால்வருமே நாட்டிற்கு யஜமானர்களாக (ஆட்சியாளர்களாக) ஆவர். ஆனால் பூமண்டலத்தை தக்ஷிணையாக ஏற்க நால்வரும் உடன்படவில்லை. அரசரைப் பார்த்துக் கூறினர்.

''அரசே! தாங்கள் ஒருவர் தான் இம் மாபெரும் நாட்டை ஆளத் தகுதியுடையவர். எங்களுக்கு ஆளும் தகுதியும் கிடையாது. இதை ஏற்றால் இதனால் எவ்விதப் பயனுமில்லை. மாறாக எல்லையற்ற துன்பத்தை விலைக்கு வாங்கியதாக ஆகும். எங்களுக்கு விதிக்கப்பட்ட வேதாத்ய யனத்தைச் செய்யவே அல்லும் பகலும் போதவில்லை. அத்யயனம் செய்வதினால் ஏற்படும் ஆத்ம த்ருப்தி உயர்ந்த பொருளைப் பெறுவதினால்

ஏற்படுவதில்லை. ''அஸந்துஷ்ட: த்விஜ: நஷ்ட:'' வாழ்க்கைக்குப் போதுமான பொருளை மட்டும் பெற்று மகிழாத அந்தணன் அழிந்தவனாகிறான். நாங்கள் உங்களுக்காக யாகத்தைச் செய்தோம். அதன் பயன் தங்களுக்கே உரித்தாக வேண்டும். அதற்காகத் தாங்கள் ஏதோ சிறிதளவு பிரத்யுபகாரமாக (மாற்றாக) பொருளை அளித்தால் போதுமானது. எனவே இங்கு தங்களிடமுள்ள ரத்னமோ, தங்கக் காசுகளோ, பசுக்களோ ஏதாவது கொடுத்தாலும் போதுமானது'' என்றார்கள். அரசரும் அதை ஏற்று அவர்கட்குப் பொன்னையும் பசுக்களையும் தக்ஷிணையாகக் கொடுத்து மகிழ்ந்தார்.

ஒரு யாகத்தை எவ்வளவு சிறப்பாகச் செய்தாலும் அதாவது மந்த்ரலோபம், க்ரியாலோபம், பக்திலோபம், த்ரவ்யலோபம் இல்லாது மஹர்ஷிகளையே ரித்விக்குகளாகக் கொண்டு நடத்தினாலும் தக்ஷிணை அளிக்காவிடில் அந்த யாகம் யஜமானனுக்கு எவ்விதப் பலனையும் கொடுக்காது. எனவே வைதிக கர்மாக்கள் அனைத்திலும் முக்யமான, சிறப்பான அங்கம் நம்மால் கொடுக்கப்படும் தக்ஷிணையே. எனவே தக்ஷிணையைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

கண்ணபிரான் ஒரு சமயம், பலராமனுடனும், ஸாத்யகியுடனும் துவாரகையில் எழுந்தருளியிருக்கும் ஆஶ்சரியமான, வைபவத்தை கேட்டு துர்யோதனாதிகளும், பாண்டவர்களும் மற்ற அரசர்களும் நேரில் காண துவாரகை வந்தனர். அங்கு கண்ணனால் நன்கு உபசரிக்கப்பட்டு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அச்சமயம் நாரதர் அங்கு வந்து கண்ணனை தண்டனிட்டுப் பேசலானார்.

आश्चर्यः खलु देवानां एकस्त्वं पुरुषोत्तम ।
धन्यश्चासि महाबाहो लोके नान्योऽस्ति कश्चन ॥

''ஆஶ்சர்ய: கலு தேவானாம் ஏக: த்வம் புருஷோத்தம ।
தன்ய: ச அஸி மஹாபாஹோ! லோகே ந அன்ய: அஸ்தி கச்சன''

''புருஷோத்தம! தேவர்களுள் நீர் ஒருவரே ஆச்சர்யமானவரும் தன்யரும் ஆவீர். இத்தகையவர் உலகில் வேறு யாரும் இலர்'' என்றார். அதற்குக் கண்ணன் நாரதரை நோக்கி,

एवमुक्तः स्मितं कृत्वा प्रत्युवाच मुनिं प्रभुः ।
आश्चर्यश्चैव धन्यश्च दक्षिणाभिः सह ईरितः ॥

ஏவம்உக்த: ஸ்மிதம் க்ருத்வா ப்ரத்யுவாச முனிம்ப்ரபு: ।
ஆஶ்சர்ய: சஏவதன்ய: ச தக்ஷிணாபி: ஸஹ ஈரித: ॥

மந்தஹாஸத்துடன் ''ஆம், நானே தக்ஷிணையோடு ஆச்சரியனும் தன்யனும் ஆவேன்'' என்று பதிலுரைத்தார்.

அங்குள்ளவர்கட்கு கேள்வியும் விடையும் சிறிதும் புரியவில்லை. எல்லோரும் கண்ணனைக் கேட்க, அவர் நாரதரைக் கூறும்படி நியமித்தார்.

நாரதர்: நாம் கங்கையில் நீராடும் பொழுது ஒரு பெரிய கூர்மத்தை (ஆமையை)க் கண்டு, ''நீ பெரிய ஓட்டினால் மூடப்பட்டு பயமின்றியும் கவலையின்றியும் இருக்கிறாய். (ஆமையை யாராவது அடித்தால் கால் களையும், தலையையும் ஓட்டினுள் இழுத்துக் கொண்டு அச்சமின்றி இருக்கும்) ஆகையால் உலகில் நீயே ஆச்சரியனும் தன்யனும் ஆவாய்'' என்றேன்.

ஆமை: ''என் போன்ற பதினாயிரக் கணக்கான பல்வகை ஜந்துக் களைக் கொண்ட கங்கையே ஆச்சரிய பூதமும் தன்யமும் ஆகும்''.

நாரதர்: உடனே கங்கையைப் பார்த்து ''கங்கையே! நீயே உலகில் ஆச்சரியமும் தன்யமும் ஆவாய்''.

கங்கை: ''என் போன்ற பல ஜீவநதிகள் போய்ச்சேரும் ஸமுத்திரமே அத்தகையது''.

நாரதர் ஸமுத்திரத்தை வினவ அது நான் பூமியில் அல்லவா இருக்கிறேன். எனவே பூமிக்கே அப்பெருமை என்றது.

பூமி: (இதை நாரதர் கேட்க) ''என்னைத் தாங்கி நிற்கும் மலைகளே சீரியவை'' என்றது.

''இவ்வாறு மலைகள் தங்களைப் படைத்த நான்முகனையும், நான் முகன் தான் ஸ்ருஷ்டிப்பதற்கு உறுதுணையாகத் தனது 4 முகங்களிலிருக்கும் வேதங்களைச் சொல்ல, வேதங்கள் தமக்குப் பொருளான யக்ஞங்களைக் கூற, வேள்வி தன்னால் ஆராதிக்கப்படும் மஹாவிஷ்ணுவே ஆச்சர்ய பூதனும் தன்யனும் ஆவான் என்றன. அதை நேரிலேயே உம்மிடம் வந்து கேட்டேன். யாகங் களுக்குப் பெருமையையும் வீர்யத்தையும் கொடுப்பது தக்ஷிணை. யாகம் செய்யும் பொழுது வந்தவர்கட்கு தக்ஷிணை கொடுக்கா விட்டால் பாபம் வரும். ஆகையால் தாங்கள் ''தக்ஷிணைகளோடு நான் ஆச்சர்யபூதனும் தன்யனும் ஆவேன்'' என்றீர்கள். ''யாகத்திற்கு நான் எப்படி முக்யமோ அதே போன்று தக்ஷிணையும் முக்யமானது.'' ஆக எம்பெருமான் கூர்மம் முதலிய வற்றிலும், தமது சுத்த ஸ்வரூபத்திலும் நின்று ஆச்சர்யனுமாய் தன்யனுமாய் தக்ஷிணையாகவும் இருக்கிறான் என்ற உண்மை நிலையை அறிந்தேன் என்றார்'' நாரதர் அங்கிருந்தவர்கட்கு. (ஹரி வம்சம் 159-வது அத்யாயம்)

ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலாய் அவனியாய்
அருவரைகளாய்
நான்முகனாய் நான் மறையாய் வேள்வியாய்த்
தக்கணையாய்த் தானும் ஆனான்

சேமம்உடை நாரதனார் சென்று சென்று துதித்து இறைஞ்சக்
கிடந்தான் கோயில்
பூ மருவிப் புள்ளினங்கள் புள்ளரையன் புகழ் குழறும்
புனலரங்கமே

பெரியாழ்வார் திருமொழி - 4.9.5

நாரதர் ஆமை முதலியோரிடம் சென்று கண்ணனே ஆச்சரிய மான பரதத்வம் எனத் தீர்ப்பு வழங்கியது போல் அரங்கனிடமும் சென்று முன்பு நிகழ்ந்ததைக் கூறித் துதிக்கிறார். அங்குள்ள பறவைகளும் வேத ஸ்வரூபனான—தம் இனத் தலைவனான கருடனைப் புகழும் வ்யாஜத்தில் வேத வேத்யமாய் ஆச்சர்யமாய்த் தன்யமாய்த் திகழும் பரதத்வம் அரங்கனாம் கண்ணனே எனத் தம் குழறும் மழலைப் பேச்சுக்களால் அறிவிக்கின்றனவாம்.

ஆக ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு ஸமமான உயர்வுடையது தக்ஷிணை, அதைக் குறைவற வாரி வழங்கி அஶ்வமேதப் பெருவேள்வியை பாங்குறச் செய்து முடித்தார் தசரத மாமன்னர். இங்கு தக்ஷிணையாகப் பத்து லக்ஷம் பசுக்களையும், பத்து கோடி ஸுவர்ணத்தையும் (ஸுவர்ணம் என்பது 16 உளுந்து எடையுள்ள தங்கம்) 40 கோடி வெள்ளியையும் அளித்தார். அதை ரித்விக்குகள் வஸிஷ்டரிடமும் ரிஶ்யச்ருங்கரிடமும் அளித்தனர். இவ்விருவரும் தகுதிக்கேற்ப அனைத்தையும் பிரித்து அனைவருக்கும் வழங்கினராம். பின்னர் அரசர், அந்தணர்களை வணங்க அவர்களும் மகிழ்வோடு ஆசீர்வாதம் செய்தனர்.

ततः प्रीतमनाः राजा प्राप्य यज्ञं अनुत्तमम् ।
पापापहं स्वर्नयनं दुःष्करं पार्थिवर्षभैः ।

தத: ப்ரீதமனா: ராஜா ப்ராப்ய யக்ஞம் அனுத்தமம் ।
பாபாபஹம் ஸ்வர்நயனம் துஷ்கரம் பார்த்திவர்ஷபை: ॥

வா.ரா. பால. - 14

பேரரசர்களாலும் அனுஷ்டிப்பதற்கு அரிதானதும், மக்கட்பேற்றுக்கு இடையூறான பாபங்களைப் போக்கவல்லதும், புத் என்னும் நரகத்தினின்றும் பெற்றோரைக் காக்கும் மக்கட்பேற்றை அளித்துப் பின்னர் ஸ்வர்க்கத்தை அளிக்கவல்லதுமான அஶ்வமேதத்தை தசரதர், மஹான்களின் ஆசியால் அனுஷ்டித்து மகிழ்ந்த உள்ளத்தராய் விளங்கினார். தம் நாட்டை ஆள யுவராஜன் அவதரிப்பான் என மகிழ்வுடன் பெரும்பாலோர் விடை பெற்றனர்.

ततोऽब्रवीत् ऋश्यशृङ्गं राजा दशरथः तथा ।
कुलस्य वर्धनं त्वं तु कर्तुमर्हसि सुव्रत ॥

தத: அப்ரவீத் ரிஸ்யஸ்ருங்கம் ராஜா தசரத: ததா ।
குலஸ்ய வர்த்தனம் த்வம்து கர்தும் அர்ஹஸி ஸுவ்ரத ॥

வா.ரா. பால. - 14

தசரதர், ஸுமந்த்ரர் தனிமையில் முன்பு கூறிய வார்த்தைகளை நினைவில் கொண்டு கலைக்கோட்டு முனிவரை வணங்கி ''நன் மக்களை அளித்துத் தம் இக்ஷ்வாகு குலத்தை வளர்க்கவல்ல யாகத்தைச் செய்யக் கடவீர்'' என ப்ரார்த்திக்க, முனிவரும் எதைச் செய்யலாம் என த்யானத்தில் ஆழ்ந்தார். மறுகணமே நினைவாற்றலைப் பெற்று அரசனை நோக்கிக் கூறலானார்.

भविष्यन्ति सुताः राजन् चत्वारः ते कुलोद्वहाः ।
इष्टिं ते ऽहं करिष्यामि पुत्रीयां पुत्रकारणात् ॥

பவிஷ்யந்தி ஸுதா: ராஜன் சத்வார: தே குலோத்வஹா : ॥
இஷ்டிம் தேஹம் கரிஷ்யாமி புத்ரீயாம் புத்ரகாரணாத் ॥

வா.ரா.பால. - 14, 15

''அரசே! உங்கள் குலவிளக்காக நான்கு குமாரர்கள் அவதரிக்கப் போகிறார்கள். அதற்காக யான் அதர்வணவேதத்தில் கூறியபடி மக்களைத் தோற்றுவிக்கும் இஷ்டியை இதோ செய்யப் போகிறேன்'' என்று கூறி இஷ்டியைத் துவக்கினார். பின்னொருநாள் செய்வதாயிருந்தால் ரித்விக்குகளை அழைப்பது, தேவையான பொருட்களைச் சேமிப்பது எல்லாம் தாமதமாகும். இப்பொழுதோ அஸ்வமேதம் செய்திருந்தபடியால் தேவையானவை அனைத்தும் தயாராய் இருக்கின்றன; எனவே புத்ரகாமேஷ்டி துவங்கியது.

'அவன் ஒருவனே கதி'

ततो देवाः सगन्धर्वाः सिद्धाश्च परमर्षयः ।
भाग प्रतिग्रहार्थं वै समवेताः यथाविधि ॥
ताः समेत्य यथान्यायं तस्मिन् सदसि देवताः ।
अब्रुवन् लोककर्तारं ब्रह्माणं वचनं महत् ।
भगवन् त्वत्प्रसादेन रावणो नाम राक्षसः ।
सर्वान् नः बाधते वीर्यात् शासितुं तं नःशक्नुमः ॥
त्वया तस्मै वरो दत्तः प्रीतेन भगवन् पुरा ।
मानयन्तश्च तं नित्यं सर्वं तस्यक्षमामहे ॥
नैनं सूर्यः प्रतपति पार्श्वे वाति न मारुतः ।
चलोर्मि माली तं दृष्ट्वा समुद्रोऽपि न कम्पते ॥
तन्महन्नो भयं तस्मात् राक्षसात् घोरदर्शनात् ।
वधार्थं तस्य भगवन् उपायं कर्तुं अर्हसि ॥

தத: தேவா: ஸகந்தர்வா: ஸித்தா: ச பரமர்ஷய : ।
பாக ப்ரதிக்ரஹார்த்தம் வை ஸமவேதா: யதாவிதி ॥
தா: ஸமேத்ய யதாந்யாயம் தஸ்மின் ஸதஸி தேவதா: ।
அப்ருவன் லோக கர்த்தாரம் ப்ரஹ்மாணம் வசனம் மஹத் ॥
பகவன்! த்வத்பரஸாதேன ராவண: நாம ராக்ஷஸ: ।
ஸர்வான் ந: பாததே வீர்யாத் ஶாஸிதும் தம் நஶக்னும : ॥
த்வயா தஸ்மை வர: தத்த: ப்ரீதேன பகவன் புரா ।
மானயந்த: ச தம் நித்யம் ஸர்வம் தஸ்ய க்ஷமாமஹே ॥
ந ஏனம் ஸூர்ய: ப்ரதபதி பார்ஶ்வே வாதி நமாருத: ।
சலோர்மி மா்லீ தம் த்ருஷ்ட்வா ஸமுத்ர: அபி ந கம்பதே ॥
தத் மஹத் ந: பயம் தஸ்மாத் ராக்ஷஸாத் கோரதர்ஶனாத் ।
வதார்த்தம் தஸ்ய பகவன் உபாயம் கர்த்தும் அர்ஹஸி ॥

வா.ரா. பால. - 15

ருஶ்யஶ்ருங்க முனிவர், தஶரதருக்குப் பிள்ளைப் பேற்றுக்காக புத்ர காமேஷ்டி தொடங்கப்போகும் செய்தி உடனே தேவர்கட்கு எட்டியது. அஶ்வமேத யாகத்தை அனுஷ்டிப்பது கடினம். அதைச் செய்ய நினைப்பதே அரிது, துணிந்து செய்பவர் எப்பொழுதோ எவரோ ஒருவர். இந்நிலையில் ஒரு

சக்ரவர்த்தி மிக உயர்ந்த தரத்தில் செய்கிறார் என்பதை அறிந்ததுமே தேவர்கள் அனைவரும் தத்தம் ஹவிர்பாகத்தை நேரிலேயே பெற அயோத்தியில் குழுமினர், ஹவிர்பாகத்தைப் பெற்று மனமகிழ்வுடன் தேவருலகுக்குத் திரும்பும் வேளையில் புத்ரகாமேஷ்டி என மற்றொரு வேள்வி தொடங்கு வதை அறிந்து புறப்படுதலை ஒத்திப் போட்டனர்.

தேவர்கள் மஹாநாடு

இங்கு தேவர்களும், கந்தர்வர்களும், தேவரிஷிகளும் தத்தம் லோகத்திற்குத் திரும்பினால் அங்கு ஏற்படும் தொல்லைகளை நினைத்தனர். அக்கஷ்டங் களைப் போக்கிக் கொள்ள எல்லோரும் திரண்டு ப்ரஹ்மலோகம் சென்று தங்கள் தலைவரான நான்முக தேவனிடம் முறையிட எண்ணியிருந்தனர். இதுவரை அதற்கு வாய்ப்பே கிட்டவில்லை. இவ்வேள்வி நமக்கு அரிய தொரு வாய்ப்பை நல்கியிருக்கிறது. நம் தலைவரும் தம் குழாத்துடன் இங்கு முகாமிட்டிருக்கிறார். எனவே திரண்டு சென்று நம் இன்னல்களைக் கூறி கோரிக்கைகளை வற்புறுத்தலாமென்று எண்ணினர். (நம் ஊரில் மேலதி காரிகள் முகாம் இட்டால் அவர்களை எளிதாகச் சந்தித்து நம் கார்யத்தைச் ஸாதித்துக் கொள்வதில்லையா? அது போல)

வானத்தில் உடனே தேவர்கள் மஹாநாடு கூடியது, சதுர்முக ப்ரஹ்மா தலைமை தாங்கினார். அவரவர்கள் தத்தம் குறைகளையும் கஷ்டங் களையும் எடுத்தியம்பினர்:

''நான்முகத்தேவா! ராவணன் எனும் அரக்கன் (ராக்ஷஸன்) தவம் புரிந்து உமது அருளைப் பெற்றவன்....''

நான்முகன்: ''ராவணனா? அவன் யார்?''

தேவர்கள்: ''தங்களைப் போன்ற ஒரு ப்ரஜாபதியின் குமாரர் புலஸ்த்யர். புலஸ்தியரின் குமாரர் விச்ரவஸ். விச்ரவஸ்ஸிற்கு கைகஸீ என்பவளிடம் பிறந்தவன் ராவணன் (இவனுக்கு உடன் பிறந்தவர்கள் கும்பகர்ணனும் விபீஷணனும், விச்ரவஸ்ஸிற்கு இளபிளா என்பவளிடம் பிறந்தவன் குபேரன்) இவன் பத்து தலைகளையுடையவன், இவன் பதினாயிரம் ஆண்டு தவம் புரிந்து தன் தலைகளையே ஹோமம் செய்தவன். தாங்கள் அதற்கு மகிழ்ந்து ப்ரத்யக்ஷமாகி மனிதர்களைத் தவிர பிறரால் கொல்லப்படாமை யையும், தலைகள் துண்டிக்கப்பட்டால் மீண்டும் முளைக்கவும், விரும்பிய உருவத்தை எடுத்துக் கொள்ளும் சக்தியையும் அளித்தீர். இந்த வரபலங் களைக் கொண்டு எங்களைத் துன்புறுத்துகிறான். எங்களால் அவனை எதுவும் செய்ய முடியவில்லை. '

பிரஹ்மா: ''ஏன் தாங்கள்தான் தேவர்களாயிற்றே. அவனை அடக்க முடியவில்லையா?''

தேவர்கள்: ''பிரம்மனே! தாங்கள்தான் எங்களைப் படைத்த தெய்வமும் தந்தையுமாயிற்றே. தாங்கள் கொடுத்த வரத்திற்கு எதிராக செயல்பட முடியுமா? அப்படிச் செய்தால் தங்களையே அவமதித்ததாகுமே.''

ஸூர்யன்: ''தந்தையே! எனது வெங்கதிர்களாலே உலகையே சுட்டெரிக்க முடியும். ஆயினும் ராவணனை என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. தங்களுக்காக அற்பனிடமும் அஞ்ச வேண்டியிருக்கிறதே.''

வாயு: ''நான் நினைத்தால் உலகு அனைத்தையும் மூச்சு திணற அடித்து சாகடிக்க முடியும். அல்லது அனைவரையும் முடமாக்க முடியும் ஆனால் அக்கொடியனைக் கண்டாலே நடுங்க வேண்டியிருக்கிறதே. அவனருகில் கூடச் செல்ல முடியவில்லையே.''

வருணன்: ''எனது ஸமுத்ரம் எப்பொழுதும் அலைகளை வீசிக் கொண்டிருக்குமே: அசையாமல் அதை யாரும் பார்த்ததே இல்லையே. அத்தகைய கடல் அவனைக் கண்டால் சிறிதும் அசைவதில்லையே. அப்படி நடுங்குகிறதே, பஞ்ச பூதங்களும் தத்தம் இயற்கைத் தன்மையைக் கூட இழந்து நிற்கின்றனவே.''

தேவர்கள்: ''ராவணனுக்கு வரத்தைக் கொடுத்து வளர்த்து விட்டீர்கள், வளர்த்த கடா நம்மீதே பாய்கிறது. எப்படியாவது அவனைக் கொல்லும் உபாயத்தைத் தேடுவீர்'' என அனைவரும் ஒரே குரலாக அடிபணிந்து வேண்டினர்.

ராவணன் நன்கு கற்றவன், வேதம் ஓதியவன், தவம் புரிந்தவன், அந்தணன் இத்தகையோனை ராக்ஷஸன் எனக் கூறுவானேன்?

साक्षरा: अक्षरविपरीतश्चेत् राक्षसा एव केवलम् ।

ஸாக்ஷரா, அக்ஷரவிபரீத: சேத் ராக்ஷஸா: ஏவகேவலம் ।

நன்கு படித்தவர்களாயினும் கற்றதற்கு நேர் எதிராக, தர்ம சாஸ்த்ராதிகட்கு விருத்தமாக, கொலை, கொள்ளை, மத்யபானம் முதலியவற்றில் ஈடுபாடு கொண்டால் ராக்ஷஸர் என்கிறோம். ஸாக்ஷரா (எழுத்தை அறிந்தவர்கள்) மூன்று எழுத்துக்களையும் தலைகீழாகப் படியுங்கள், ராக்ஷஸா என வரும்.

एवमुक्तः सुरैः सर्वैः चिन्तयित्वा ततोऽब्रवीत् ।
हन्तायं विदितः तस्य वधोपायः दुरात्मनः ॥
तेनगन्धर्वयक्षाणां देव दानव रक्षसां ।
अवध्योऽस्मि इति वागुक्ता तथेत्युक्तं च तन्मया ॥
नाकीर्तयदवज्ञानात् तद्रक्षः मानुषान् तदा ।
तस्मात्स मानुषाद्वध्यः मृत्युरन्योस्य विद्यते ॥

ஏவம் உக்த: ஸூரை: ஸர்வை: சிந்தயித்வா தத: அப்ரவீத் ।
ஹந்த அயம் விதித: தஸ்ய வதோபாய: துராத்மன: ॥
தேன கந்தர்வயக்ஷாணாம் தேவ தானவ ரக்ஷஸாம் ।
அவத்ய: அஸ்மி இதி வாக் உக்தா ததா இதி உக்தம் ச தத் மயா ॥
ந அகீர்தயத் அவக்ஞானாத் தத்ரக்ஷ: மானுஷான் ததா ।
தஸ்மாத் ஸ: மானுஷாத் வத்ய: ம்ருத்யு: அன்ய: அஸ்யவித்யதே ॥

வா. ரா. பால. - 15

ஸூரியன் முதலிய தேவர்கள் ஒவ்வொருவராகக் கூறியது அனைத்தையும் பிரமன் பொறுமையுடனும், அனுதாபத்துடனும் கேட்டார். உடனே சிந்தனையில் ஆழ்ந்தார். தவம் புரிபவர்க்கு வரமளிப்பது நமது கடமை. இதனால் அல்லலுறும் நம்மவர்கள் முறையிடுவதும் நியாயமே. அன்று ராவணன் ''எவரிடமிருந்தும் எனக்கு மரணம் நேரிடக் கூடாது. உலகில் பிறந்தவனுக்கு மரணம் ஒன்றுதான் பயங்கரமாக எதிரே நிற்கிறது. அதுவும் எதிர்பாராத வேளையில் திடீரென நேர்கிறது'' என வரம் கேட்டான். நாம் அதற்கு ''பிறந்தவன் இறந்தேயாக வேண்டும். எனவே வேறு வரம் கேள்'' என்றோம். ''நாகர், யக்ஷர், தேவர், ஸூபர்ணர் இவர்களால் மரணம் கூடாது. மனிதர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அவர்களை துரும்புக்குச் சமமாக மதிக்கிறேன்'' என்றல்லவோ கூறினான்.

भगवन् प्राणिनां नित्यं नान्यत्रमरणात् भयम् ।
नास्ति मृत्युसमः शत्रुः अमरत्वमहं वृणे ।
नास्ति सर्वामरत्वं ते वरमन्यं वृणीष्व मे ॥
सुपर्णनाग यक्षाणां दैत्य दानव रक्षसाम् ।
अवध्योऽहं प्रजाध्यक्षः देवतानां च शाश्वतः ॥
नहि चिन्ता ममान्येषु प्राणिष्वमर पूजित ।
तृणभूताहि ते मन्ये प्राणिनः मानुषादयः ॥

பகவன் ப்ராணினாம் நித்யம் ந அன்யத்ர மரணாத் பயம் ।
ந அஸ்தி ம்ருத்யுஸம: ஶத்ரு: அமரத்வம் அஹம் வ்ருணே ॥
ந அஸ்தி ஸர்வாமரத்வம் தே வரம் அன்யம் வ்ருணீஷ்வ மே ॥
ஸூபர்ண நாக யக்ஷாணாம் தைத்ய தாநவ ரக்ஷஸாம் ।
அவத்ய: அஹம் ப்ரஜாத்யக்ஷ: தேவதானாம் ச ஶாஶ்வத: ।
நஹி சிந்தா மம அன்யேஷு ப்ராணிஷு அமரபூஜித ।
த்ருண பூதா: ஹி தே மன்யே ப்ராணின: மானுஷாதய: ॥

வா.ரா. உத்தரகாண்டம் - 10

என்று அன்றைய நிகழ்ச்சிகள் நினைவுக்கு வரவே மனதில் மகிழ்ச்சி

தோன்றியது. அவன் அலக்ஷ்யமாக மனிதனை விட்டான் அல்லவா. அதுவே நமக்குச் சிறந்த வழியைக் காட்டுகிறதே. மனிதனைக் கொண்டே இவனை முடித்து விடலாம் எனத் தன் முடிவை வெளியிட்டு ''தேவர்களே கவலை வேண்டாம்'' என அபயம் அளித்தார் நான்முகன். ஆயினும் கலக்கம் தீரவில்லை. மனிதனைக் கொண்டு ராவணனைக் கொல்லலாம் என ஒரு உபாயம் பிறந்தது மனதில்; அவ்வளவு தானே, ''தேவர்களாகிய நம்மாலேயே அவனை ஒன்றும் செய்ய முடியவில்லையே. ஒரு மனிதன் அவன் அருகிற்கூட நெருங்க முடியாதே'' என மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தனர்.

அத்புதம், ஆச்சரியம், எல்லோரும் ''அதோ! அதோ! அதோ பார்'' என்றனர். அனைவரும் உயரே பார்க்கின்றனர். அவர்களை அறியாமலேயே கைகள் குவிகின்றன. அவர்கள் இதயம் குளிர்கிறது.

अभिजग्मु: निदाघार्ता: छायावृक्षमिवाध्वगा:

அபிஜக்மு: நிதாகார்த்தா: சாயாவ்ருக்ஷம் இவ அத்வகா: ॥

ரகுவம்சம் - 10 - 5

வழிப்போக்கன் தன் ஊர் செல்ல விரைகிறான். வழியில் நிழல் இல்லை. தாகத்தைத் தணிக்கத் தண்ணீர் இல்லை. கடும் கோடை, நாவில் வறட்சி, தொலைவில் நீரைக்கண்டு ஓடுகிறான். ஆனால் அங்கு தண்ணீர் இல்லை. வெங்கானல், மேலும் வருத்துகிறது. நடக்க கால்கள் மறுக்கின்றன. கீழே தரையின் வெம்மை, மேலே வெயிலின் வெம்மை, உள்ளே ஜாட ராக்னியின் வெம்மை, என் செய்வான்? கதறி அழுகிறான், கேட்டு உதவிக்கு வருவார் எவருமிலர். மறுபக்கம் திரும்புகிறான். சிறிது தூரத்தில் அடர்ந்த பெரிய ஒட்டு மாமரம், விரைந்து அதை அடைகிறான். அடர்ந்த நிழலும், குளிர்ந்த காற்றும் ஓரளவு இவன் சோர்வைப் போக்குகின்றன. மேலேயிருந்து தொப்பென ஏதோ அருகில் விழுகிறது. நடுங்கித் திரும்புகிறான். கிளி கடித்த சுவையுள்ள மாம்பழம். அதன் இனிய சாற்றை உறிஞ்சி உறிஞ்சிப் பருகுகிறான். வெம்மையெல்லாம் தணிந்தது. மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.

இதே போல இங்கும் ராவணன் வந்து விடுவானோ என நடுங்கிய தேவர்கட்கு உயரே பார்த்ததும் நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் அழகிய காட்சி.

கரு முகில் தாமரைக் காடு பூத்துநீடு
இரு சுடர் இருபுறத்து ஏந்தி ஏடுஅவிழ்
திருவொடும் பொலிய ஓர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன் மேல் வந்து தோன்றினான்.

க.ரா.பால. - அவாதரம்

மஹாமேருமலை செம்பொன்னாலானது. அதன் மீது நீருண்ட நீலமேகம், மேகத்தின் இருபுறத்திலும் ஸூர்ய சந்திரர்கள், அம்மேகத்தி

னிடையே அழகிய தாமரை மலர்க்காடு, இத்தகையதோர் அழகிய காட்சி தேவர்களின் மனதைக் கவர்கிறது. கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். பார்க்கப் பார்க்கக் காட்சி மாறுகிறது. ''மஹாமேரு மலையன்று அது. நம் வினதையின் குமாரனான கருடனே பேருருவம் கொண்டு வருவதாகத் தெரிகிறது'' என்றார் ஒருவர். ''ஆம் உண்மைதான் அது மேகமல்ல; நீலமேக ச்யாமளனான நாராயணனே கருடாரூடனாக வருகிறான்'' என்றார். மற்றொருவர்; ''ஸந்தேகமே இல்லை. திருமார்பில் மகாலக்ஷ்மி பொலியும் போது வேறு யாராக இருக்க முடியும்'' என அடித்துப் பேசுகிறார் பிறிதொரு தேவர். தூரம் குறையக் குறைய நன்கு பார்க்க முடிகிறது. சங்கு சக்கரங்களைக் கையில் ஏந்தி நம்மைக் காக்கவே நாராயணன் வருகிறான் போலும். அவன் பக்த ரக்ஷகன், ஆபத்பாந்தவன் அல்லனோ! அவன் மேனி கரியதாக இருந்தாலும் திருமுகம், திருக்கைகள், திருவடிகள், திருமார்பி லுறையும் திரு எல்லாம் அலர்ந்த தாமரை மலர் போன்றவைதானே. (அர்ஜுனனுக்கு நம்பிக்கை ஏற்பட விச்வ ரூபம் காட்டியது போல் அவர்களுக்காக விச்வ ரூபம் எடுத்து வருகிறார் போலும்) எனவே ஆயிரம் கைகள், ஆயிரம் பாதங்கள் எல்லாம் தாமரை மலர்க் காடாக நமக்குக் காட்சி யளிக்கிறது போலும். (''பொன்மலை மேலெழுந்த மாமுகில் போன்றுளர் வந்து காணீர், அஞ்சிறைப் புள்ளும் ஒன்றேறி வந்தார்'' பெரிய திருமொழி 9. 2 - 8. எனும் திருமங்கையாழ்வாரின் ஸ்ரீ ஸூக்திக்கு விரிவு காண்கிறார் கம்பர்.)

இதையெல்லாம் கேட்டு மௌனமாக இருந்த ஒரு தேவர் ''உங்கள் பேச்சில் எனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. அல்லும் பகலும் அவனையே த்யானம் செய்தும் அவனையே பேசியும் ஏங்கித் தவிக்கும் மஹர்ஷிகளும் முனிவர்களும் காணமுடியாத போது உல்லாஸ வாழ்வு வாழும் நாம் அவனை எங்ஙனம் காணக்கூடும்'' என்றார்.

மற்றொருவர் ''அல்லலுறும் பக்தன் யாராயிருந்தாலும் அவனைக் காக்க நாராயணன் நிச்சயமாக வருவான்'' கேளுங்கள் :

प्रह्लादस्य व्यसनममितं दैत्यवर्गस्य दम्भं
स्तम्भं वक्षस्थलमपि रिपोः यौगपद्येन भेत्तुं ।
बद्धश्रद्धं पुरुषवपुषा मिश्रिते विश्वदृष्टे
दंष्ट्रारोचिः विशद भुवने रंहसा सिंह वेषे ॥

ப்ரஹ்லாதஸ்ய வ்யஸனம் அமிதம், தைத்யவர்கஸ்ய தம்பம்,
ஸ்தம்பம், வக்ஷ: ஸ்தலம் அபி ரிபோ: யௌகபத்யேன பேத்தும் ।
பத்த ஶ்ரத்தம் புருஷவபுஷா மிஶ்ரிதே விஶ்வ த்ருஷ்டே
தம்ஷ்ட்ராரோசிர் விசத புவனே ரம்ஹஸா ஸிம்ஹவேஷே ॥

சம்பூ ராமாயணம்

ஹிரண்யகசிபு, மகன் ப்ரஹ்லாதனை ''நீ சொல்லும் நாராயணன் எங்கும் இருக்கிறான் என்கிறாயே ''கஸ்மாத் ஸ்தம்பேந'' ஏன் இந்தத் தூணில் இல்லை?'' எனக்கேட்க, ''த்ருச்யதே'' இதோ தூணில் அவனை நான் காண்கிறேனே'' என்றதும், பக்த பிரஹ்லாதனின் வார்த்தையை மெய்யாக்கி அவன் துன்பத்தைத் துடைக்கவும், ஹிரண்யன் மற்றும் அவனைச் சார்ந்த அஸுரர்களின் கொட்டத்தை அடக்கவும், அவனே அளந்திட்டு கட்டிய அத்தூணையும், அவன் மார்பையும் பிளந்தெறிய ஆர்வம் கொண்டு மனித உடலோடு கூடின சிங்கமாய் தன் கோரைப் பற்களின் ஒளியால் உலகு அனைத்தும் பளிச்சிடும்படி கண நேரத்தில் விரைந்து அவதாரம் செய்ததை நீங்கள் கேட்டதில்லையா?

முன்பொரு சமயம் பலி என்பவன் மூவுலகங்களையும் ஜயித்து தானே சக்ரவர்த்தியாகி நமதரசன் இந்திரனை நாடு இழக்கும்படி செய்து, தேவர்களாகிய நம்மனைவரையும் அல்லலுறச் செய்த போது

स्वस्ति, स्वागतं, अर्थी अहं, वदविभो किं दीयताम्,
मेदिनी का मात्रा? मम विक्रमत्रयपदं दत्तं जलं दीयताम् ।
मा देहि इति उशनाः अब्रवीत् हरिः अयं पात्रं अस्मात्परं
चेद्येवं बलिनार्चितः मखमुखे पापात् स वः पावनः ॥

ஸ்வஸ்தி, ஸ்வாகதம், அர்த்தி அஹம், வத விபோ! கிம்தீயதாம்?
மேதினீ கா மாத்ரா? மம விக்ரமத்ரயபதம், தத்தம் ஜலம் தீயதாம் ।
மா தேஹி இதி உஶனா: அப்ரவீத் ஹரி, அயம், பாத்ரம்கிம் அஸ்மாத்பரம்
சேத்யேவம் பலினா அர்ச்சித: மகமுகே பாபாத்ஸவ: பாவன: ॥

ஸ்ரீமந் நாராயணன் வாமனனாக அவதரித்து பலிச் சக்கரவர்த்தியின் யாகசாலைக்குச் சென்று தாம் அந்தணரானபடியால் 'மங்களம்' என்று கூற பலி-'ஸ்வாகதம்' (நல் வரவு ஆகுக) எனக்கூறி வரவேற்க, யாசகன்—உன் கொடையை (தானத்தை) எதிர்பார்த்து வந்திருக்கிறேன் என்றார்.

பலி: தங்களுக்கு என்ன தேவை? எதைக் கொடுக்க வேண்டும்?

வாமனன்: சிறிது பூமி வேண்டும்.

பலி எவ்வளவு வேண்டும்?

வாமனன்: என் காலால் மூன்றடி போதும்.

பலி: இதோ கொடுத்தேன்.

வாமனன்: தீர்த்தத்தினால் தாரை வார்த்துக் கொடுப்பது நல்லது.

சுக்ராச்சாரியார்: இவருக்கு பூமிதானம் செய்யாதே. இவர் யாசகர் இல்லை. ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே இவர்.

பலி: ''அப்படியா! ரொம்ப ஸந்தோஷம், தானத்திற்கு விஷ்ணுவை

விட தகுந்த பாத்ரம் வேறு யார்?'' என்று கூறி தாரை வார்த்து தானம் பண்ண, நம் வாமனன் த்ரிவிக்ரமனாக ஓங்கி உலகு அளந்து ஓரடியால் பலியை பாதாளத்தில் அமிழ்த்தி நம் இந்திரனை த்ரிலோகாதிபதியாக்கி நம்மை வாழ்வித்ததை மறந்தீரோ?

மேலும் நாராயணன், பக்தர்கள் படும் துன்பத்தைக் காண ஸஹிக்க மாட்டான். ஒரு விலங்கு படும் துயரத்தைப் பொறாது அதை மீட்க எவ்வளவு வேகத்தில் ஓடி வந்தான் தெரியுமா!

ஆச்சரியம், கேளுங்கள்.

लीला लोलतमां रमां अगणयन् नीलां अनालोकयन्
मुञ्चन् किंच महीं अहीश्वरमयं मञ्चं हटात् वञ्चयन् ।
आकर्षन् द्विजराजमपि अतिजवात् हाहन्त लोकान्तरात्
गोप्तुं शौरिः उदित्वरत्वरः उदैत् ग्राहग्रहार्थं गजम् ॥

லீலா லோலதமாம் ரமாம் அகணயன், நீளாம் அனாலோகயன்
முஞ்சன் கிஞ்ச மஹீம், அஹீஸ்வரமயம் மஞ்சம் ஹடாத் வஞ்சயன்।
ஆகர்ஷன் த்விஜராஜமபி அதிஜவாத் ஹாஹந்த லோகாந்தராத்
கோப்தும் சௌரி: உதித்வரத்வர: உதைத் க்ராஹக்ரஹார்த்தம் கஜம்

விச்வகுணாதர்சம்

பரமனை அர்ச்சிக்கத் தாமரைப் பொய்கையினின்றும் தாமரை மலர் களைக் கொணரத் தடாகத்தில் இறங்கியது யானை, மலர்களைக் கொய்து கொண்டு கரையேறும் போது, முதலை அதன் காலை இறுகக் கவ்வியது. தன் முழு வலிமையைத் திரட்டி முயன்றும் யானையால் தன் காலை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அது யானைகட்கெல்லாம் அரசனான படியால் காட்டிலுள்ள யானைகள் அனைத்தும் திரண்டு வந்து சங்கிலித் தொடர்போல இணைந்து நின்று இழுத்து இழுத்து முயன்றும் கஜராஜனைக் கரையேற்ற முடியாது சோர்ந்து தவித்தன.

இந்நிலையில் கதியற்று ஏங்கிய யானை ''ஆதி மூலமே''! என உரக்கக் கத்திற்று. ''நாராயணாவோ! மணிவண்ணா! நாகணையாய் வாராய், என் ஆரிடரை நீக்காய்'' என ஆர்த்தத்வனியில் பிளிறிப்பிளிறி அழைத்தது. இந்த ஈனக் குரலை ஸ்ரீ வைகுண்டலோகத்தில் ஆதிசேஷனாம் மெல்லணையில் நீளாதேவியும், பூதேவியும் திருவடிகளை வருட, பெரிய பிராட்டியாருடன் இனிதாகப் பேசி மகிழ்ந்திருக்கும் நிலையில் செவிமடுத்துக் கவனமாகக் கேட்டான் நாராயணன். உடனே நாம் பூலோகம் சேர்வதற்குள் யானைக்கு என்ன நேருமோ என அஞ்சி விரைந்தான். புறப்படும் போது லக்ஷ்மீ தேவி யிடம் கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. நீளையைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ஸ்ரீதேவி அருகில் இருப்பதாகக் கூடக் கருதவில்லை.

மெல்லணையான ஆதிசேஷனுக்கு இவர் எழுந்ததே தெரியாது. கருடாழ்வான் மாத்திரம் வாஹனமாக வாயிலில் தயாராக நின்றார். அவர் மீது ஏறி விரைந்தார். வேகம் போதவில்லை. பக்ஷிராஜனை திருவடிகளால் இடுக்கிக் கொண்டு விரைந்தோடி வந்து சக்ராயுதத்தால் முதலையை ஸம்ஹரித்து கஜேந்த்ராழ்வானைக் காப்பாற்றியதை மறந்தீர்களோ'' என்றார் ஒருவர்.

உடனே தேவர்கள் அனைவரும் மீண்டும் உயரே பார்த்தனர். தூரம் குறையவே உற்று நோக்கி ''ஆம் பரமனே நம்மைக் காக்க வந்துவிட்டார். இவர் சொன்னதெல்லாம் உண்மையே'' என ஆனந்தக் கூத்தாடினர்.

एतस्मिन्नन्तरे विष्णुः उपयातः महाद्युतिः ।
शंख चक्रगदापाणिः पीतवासा जगत्पतिः ॥

ஏதஸ்மின் அந்தரே விஷ்ணு: உபயாத: மஹாத்யுதி: ।
சங்க சக்ர கதாபாணி: பீதவாஸா: ஜகத்பதி: ॥

வா.ரா. பால. - 15

ப்ரஹ்ம ருத்ராதி தேவர்கள் அனைவரும் ''ராவண பயத்தைப் போக்கிக் கொள்ள நாராயணனை விட்டால் நமக்கு வேறு வழியில்லை. எனவே அப்பரமனை அணுகி வேண்டுவதே தகுந்த உபாயமாகும். விரைவிற் சென்று அவனையே சரணடைவோம்'' என்ற முடிவுக்கு வந்தபொழுது ஸர்வக்ஞனான ஸர்வேச்வரன் ஶரணடைந்தவர்களைக் காக்கும் தன் கடமையை உணர்ந்து, தேவர்கள் தன்னைத் தேடி வருவதற்குள் தாமதமின்றி தானே விரைந்தோடி வந்தான். தாமதித்தால் வேறுயாரையாவது தங்களுக்கு ரக்ஷகனாகக் கருதி அங்கு சென்று ஏமாறலாம். அந்தக் கஷ்டங்கள் தம் பக்தர்கட்குக் கூடாதென்பதற்காக தாமதத்தைத் தவிர்த்தானாம், அப்படியாகில் தேவர்கள் மாநாட்டின் தீர்மானம் முடிவு ஆவதற்குள்ளேயே வந்திருக்கலாமே எனில், முன்பே வராததற்குத் தகுந்த காரணம் உண்டு. அதாவது

सर्वज्ञोऽपि हि देवेशः सदा कारुणिकोऽपि सन् ।
संसार तन्त्र वाहित्वात् रक्षापेक्षां प्रतीक्षते ॥

ஸர்வக்ஞோபி ஹி தேவேச: ஸதா காருணிகோபி ஸன் ।
ஸம்ஸார தந்த்ர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் பரதீக்ஷதே ॥

லக்ஷ்மீ தந்த்ரம் - 17.78

எம்பெருமான் அனைத்தையும் அறிந்தவன், தேவர்களின் துயரத்தை நன்கு உணர்ந்தவனே. அதோடு துன்புறுவோரிடம் கருணை மிகுந்தவன். ஆயினும் தன்னைக் காக்கும்படி சரணடைந்து எவன் வேண்டுகிறானோ அவனையே காப்பான். இல்லாவிடில் துன்புறும் ஜீவராசிகள் அனைத்தையுமே ரக்ஷிக்க வேண்டியிருக்கும். அப்போது துக்கமயமான ஸம்ஸாரத்தில்

சிக்கித் தவிக்கும் அனைவரும் இன்னல் தரும் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலை பெற்று மோக்ஷத்தை அடைந்திருப்பார்கள். அப்பொழுது ஸ்ருஷ் டிக்கே (படைப்பிற்கே) ப்ரஸக்தி (ஸந்தர்ப்பம்) இருக்காது. ஆக நாமே பிறந்திருக்க மாட்டோம். ஆனால் பிறந்து அல்லல்படுகிறோமே. ஏன் இன்று வரை நாம் பரமனைச் சரணடைந்து துயர் அனைத்தையும் போக்கும் படி வேண்டவில்லை. தேவர்கள் பல காலம் ராவணனால் துன்புற்று இப்பொழுது தான் பரமனைச் சரணடைந்து வேண்ட புத்தி வந்தது. வேண்டத் தொடங்கி யதும் விரைந்து வந்தான்.

ஒன்றும் அறியாத ஊமர்காள் தென்னரங்கர்
இன்று திருத்தேரில் ஏறினார் – நின்று
வடம் பிடிக்க வாருங்கள், வைகுந்த நாட்டில்
இடம் பிடிக்க வேண்டும் என்றக்கால்

திவ்யகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

ஸேது கட்ட அணில் உதவியது போல் அரங்கனின் தேரை வடம் பிடித்து இழுக்கும் சிறு கைங்கர்யத்தைச் செய்தாலும் அது நம்மை மோக்ஷோ பாயத்தைச் செய்யச் செய்து வைகுந்தத்தைக் கொடுக்கும்.

கருடன் மீதமர்ந்து திவ்யதம்பதிகள் (பெருமாளும் பிராட்டியும்) வான வீதியில் சென்று கொண்டிருந்தார்கள். பிராட்டி கீழே உற்று நோக்கினாள். பூமியில் ஒருவன் மரம் ஏறத் தெரியாதவன் தென்னை மரத்தின் மீது எப்படியோ ஏறிவிட்டான். இறங்கத் தெரியவில்லை. கைக்கு எட்டிய மட்டையைப் பிடித்தான். கால்கள் மரத்தினின்றும் நழுவின; மட்டையில் தொங்கினான். மட்டையும் இவனைத் தாங்காது பாரம் அழுத்த பிய்த்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் ''நாதா! கீழே பாருங்கள் நம் குழந்தை தொங்குவதை, கீழே விழுந்தால் சிதறிப் போய்விடுவான். விரைவில் காப்பாற்றுங்கள்'' என்றாள் மஹாலக்ஷ்மி. பரமனோ ''சற்றுப்பொறு, அவன் உதவும்படி நம்மை அழைத்தால் காப்பாற்றலாம்.''

லக்ஷ்மீ: பாவம், அவன் நம் பெயர்களை அறியாத அப்பாவி.

பரமன்: ''அவன் தன் தாய் தந்தையர்களை 'அம்மா அப்பா' என்று அழைக்கத் தெரிந்து கொண்டிருக்க மாட்டானா? அம்மா என அழைத்தால் நீ காப்பாற்று. அப்பா என அழைத்தால் நான் காப்பாற்றுகிறேன்'' என்றார். அவன் வாயிலோ ஐயோ என்றுதான் வந்தது. எனவே காக்கும்படி வேண்டு கின்றவனைத்தான் பரமன் காப்பாற்றுவான்.

நமக்கு ஒருவர் மூலம் ஒரு கார்யம் ஆகவேண்டுமென்றால் நாம் தான் அவரைப் பார்க்கப் பல முறை அவர் வீட்டுக்குச் சென்று பிரார்த்திப்போம். இங்கு தேவர்கட்கு ராவணபயம் நீங்க வேண்டும். அதற்காகப் பரமனிடம் நேரில் விண்ணப்பித்துப் பிரார்த்திக்க தேவர்கள் தான் திருப்பாற்கடலுக்குச்

சென்று முறையிட வேண்டும். அப்படியிருக்க தேவர்கள் குழுமியிருக்கும் அயோத்திக்குப் பரமன் வருவானே எனில் புத்ர காமேஷ்டியில் ஹவிஸ்ஸைப் பெறத் தேவர்கள் திரண்டிருப்பது அறிந்து ராவணன் அயோத்தி வந்து அவர் களைத் துன்புறுத்தலாம் அல்லவா. அதை எண்ணியே ஆஶ்ரிதரக்ஷகனான நாராயணன் தானே தேவர்கள் தன்னை வந்து பார்ப்பதற்குள் விரைந்து வந்தானாம்.

இங்கு வால்மீகி விஷ்ணு வந்ததாகக் குறிப்பிடுகிறார். விஷ்ணு என்றால் எங்கும் நிறைந்திருப்பவர் என்று பொருள். அந்தர்யாமியாய் எங்கும் நிறைந்திருக்கும் பரமன் தேவர்கள் அருகிலும் இருப்பவன் தானே, அப்படி யிருக்க இந்த ஸமயத்தில் வந்தார் என எப்படிக் கூற முடியும் என ஐயம் எழும். அதன் கருத்தாவது—எங்கும் நிறைந்திருப்பவனுக்குத் திவ்ய மங்கள விக்ரஹம் (திருமேனி) கிடையாது. இப்பொழுதோ திவ்ய மங்கள விக்ரஹத் தோடு (திருமுடி, மேனி, கைகள், திருவடிகள் இவற்றோடு) வந்தானாம். ஸர்வேச்வரனாயிலும் அடியார்க்கு எளியன். எனவே வந்தான்.

எங்கும் இருக்கும் பரமனுக்கு கோயில் ஏன்? தண்ணீர் எங்கும் பூமியில் இருக்கிறது. குழாய் இறக்கினால் எந்த இடத்திலும் தண்ணீர் கிடைக்கிறது. ஆனால் வீட்டில் குறிப்பிட்ட இடத்தில் கிணறு வெட்டி அதிலிருந்து தான் தண்ணீர் எடுத்துக் கொள்ளுகிறோம். அது போல அவனை வழிபட, தியானிக்க, அர்ச்சிக்க, மனதில் நிலைநிறுத்த எங்கும் நிறைந்த வனுக்கு ஒரு கோயில் வேண்டியிருக்கிறது. அங்கு வேத மந்திரங்களின் சக்தியினால் அர்ச்சா மூர்த்தியாய் திவ்ய மங்கள விக்ரஹத்தோடு ஸேவை கொடுக்கிறான். கிணற்றில் பருகுவதற்கு உரியதாய் குளிர்ச்சியுடன் தூய நீர் இருப்பது போல பரமன் பக்தர்களோடு அளவளாவிப் பேசி, ஆறுதல் கூறி மன நிம்மதியை அளிக்க திவ்ய மங்கள விக்ரஹத்தோடு அயோத்தியின் வானத்தில் தோன்றினான்.

கருணாகரனின் வருகை

नक्राक्रान्ते करीन्द्रे मुकुलित नयने मूलमूलेति खिन्ने
नाहं नाहं नचाहं न च भवति पुनः तादृशो मादृशेषु ।
इत्येवं त्यक्त हस्ते सपदि सुरगणे भाव शून्ये समस्ते
मूलं यत्प्रादुरासीत् स दिशतु भगवान् मंगलं सन्ततं नः ॥

நக்ராக்ராந்தே கரீந்த்ரே முகுளிதநயனே மூலமூல இதி கின்னே
நாஹம் நாஹம் நசாஹம் நச பவதி புன: தாத்ருச: மாத்ருசேஷு ।
இத்யேவம் த்யக்தஹஸ்தே ஸபதி ஸுரகணே பாவ ஶூன்யே
ஸமஸ்தே
மூலம் யத் ப்ராதுராஸீத் ஸ திசது பகவான் மங்கள் ஸந்ததம் ந: ॥

இந்த ஸ்லோகத்தைச் சொல்லிக் கொண்டே பெரியோர்கள் துயில் எழுவது வழக்கம். இது முன்பு கூறிய கஜேந்த்ரமோக்ஷத்தைப் பற்றியது. பக்த ரக்ஷணத்தைத் தன் கடமையாகக் கொண்டவன் பரமன். பக்தர்களைக் கண்டிப்பாகக் காப்பாற்றியே தீர்வன் எனும் மஹாவிஸ்வாஸத்தை (பெரு நம்பிக்கையை) உண்டாக்கி நம் கவலையைப் போக்குகிறது இந்நிகழ்ச்சி. யானை தன்னைக் காப்பாற்ற உலகு அனைத்திற்கும் காரணமாய்த் திகழும் மூலப் பொருளை ''ஆதிமூலமே'' என அழைத்தது. இக்குரலோசை தேவர்கள் அனைவரின் காதுகளிலும் விழுந்தது. ஒருவர் இந்திரனைப் பார்த்து ''த்ரிலோகாதிபதியான உம்மைத்தான் அழைக்கிறது'' என்றார். இந்திரன் ''நான் ஆதிமூலம் இல்லை. கஜேந்த்ராழ்வானைக் காக்கும் ஆற்றலும் எனக் கில்லை'' என்றான். சங்கரனிடம் சிலர் ஓடிச் சென்று யானை தவிக்கிறது. அதைக் காப்பாற்ற வேண்டும் என முறையிட்டார்கள். ''யானை முழு முதற் காரணப் பொருளான நாராயணனை அன்றோ அழைக்கிறது. நான் ஆதிமூல மில்லையே'' என்றான். பிரமனிடம் சென்று ''நீர் எங்கள் அனைவரையும் படைக்கிறீர். உம்மைத் தான் ஆதிமூலமெனக் கதறி அழைக்கிறது. விரைந்து சென்று காப்பாற்ற வேண்டும். காக்காவிடில் நம்மை யாரும் மதிக்க மாட்டார் கள். விரும்பிய பலனைப் பெற வேள்விகளைச் செய்ய மாட்டார்கள். அவியுணவினராகிய நாம் பட்டினி கிடக்க நேரிடும்'' என்றனர்.

''மோக்ஷத்தை வேண்டி அழைக்கிறான். அதையளிப்பவன் ஜனார்தனன் ஒருவனே. அவனுதவி கொண்டே நான் உங்களைப் படைக் கிறேன், நாராயணனின் நாபிக் கமலமே என்னைப் படைத்த முதற்கிழங்கு'' என்றான் பிரமன். ''அவனை எளிதில் பார்க்க முடியாதே என் செய்வது?'' இவ்வாறு தேவர்கள் கரியைக் காக்கும் வழியறியாது திகைத்திருக்க ஆதிமூலமே பக்தனைக் காக்கப் புறப்பட்டான்.

மஹாத்யுதி: தேவர்கள் அனைவராலும் கைவிடப்பட்டவனைக் காக்க வருகின்றவனின் ஆற்றல் அளவிடற்கரியதாக அல்லவா இருக்க வேண்டும். ஆம்

दिवि सूर्य सहस्रस्य भवेद्युगपदुत्थिता ।
यदि भाः सदृशी सा स्यात् भासस्तस्य महात्मनः ॥

திவி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய பவேத் யுகபத்உத்திதா ।
யதி பா: ஸத்ருஶீ ஸா ஸ்யாத் பாஸ: தஸ்ய மஹாத்மன: ॥

ஜீவ கோடிகள் அனைவரும் ஆத்மா. அவனோ மஹாத்மா, அவனுடைய தேஜஸ்ஸோ வானில் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான ஸூர்யர்கள் தோன்றினால் எப்படி இருக்குமோ, அத்தகையது, அவன் தேஜஸ்ஸே எதிரிகளை வீழ்த்தி விடுமே. ப்ரஹ்மருத்ராதிகளைப் போன்று ''நாஹம் நாஹம் நசாஹம்'' நான் இல்லை நானில்லை (ஆதிமூலம்) நானில்லை என்று பின் வாங்காது, தன் தேஜஸ்ஸை (ஒளிக்கதிர்களை)

முன்னே அனுப்பி பின்னே தான் வந்து கொண்டிருப்பதை, முன்னே வரும் மணியோசை பின்னே யானை வருவதை அறிவிப்பது போலவும், தீயணைக்கும் வண்டி பின்னால் விரைந்து வருவதை எச்சரிப்பது போலவும் அறிவிக்கிறான் போலும். இதைப் பார்த்த அனைவரின் உள்ளமும் ரக்ஷகன் வந்துவிட்டான் என மகிழ்கிறது. இதே போன்று பரமனும் நமக்கு தேவர்களைக் காக்கும் வாய்ப்பு கிட்டியதே என மனமகிழ்ச்சியுடன் வருகிறான். பொலிவினால் ஏற்பட்ட அவன் முககாந்தி முன்னே ஒளிர்கிறது போலும். மேலும் அவன் சங்கசக்ர கதாபாணியாய் வருகிறான். கருணைக் கடலாயினும் தீயோர்களைக் களையாவிடில் பக்தர்களிடம் கருணை காட்டுவது பயனற்றதாகி விடுமே. எனவே எப்பொழுதும் எல்லா ஆயுதங் களையும் கைகளில் ஏந்தியவாறே வருகிறான். ஏனெனில் சூழ்நிலை அத்தகையது. தற்சமயம் அயோத்தி வானில் தங்கள் வலிமையைக் காட்ட முடியாமல் இராவணனிடம் அஞ்சிய தேவர்கள் தம் தேகம் அழிந்தவர்களாய் அரக்கனை அழிக்கும் உபாயத்தைப் பற்றி ஆலோசனை செய்கிறார்கள். இந்நேரத்தில் ஒருவேளை ராவணனே அங்கு வந்துவிட்டால் தேவர்களின் தலைகளைக் கொய்து விடுவானே, அப்பொழுது நமது ஸர்வலோக சரண்யத்வத்தை (அனைவருக்கும் புகலிடமாயிருந்து காக்கும் தன்மையை) இழந்து விடவேண்டி வருமே என அஞ்சிப் போர் வீரன் போன்று யுத்தத்திற்குத் தேவையான ஆயுதங்களோடு வருகிறான். யாகத்தில் ஹவிஸ்ஸைப் பெற்று சாப்பிடுவதற்குரிய வேஷத்தில் வரவில்லை. அவன் ஹவிர் புக் ஆனபடியால் எங்கிருந்தாலும் அவியுணவு தானே வந்து சேரு மன்றோ!

அர்ச்சாவதாரத்திலும் கூட ஸ்ரீ ரங்கநாதன்

पातु प्रणत रक्षायां विलम्बमसहन्निव ।
सदा पञ्चायुधीं बिभ्रत् स नः श्रीरङ्गनायकः ॥

பாது ப்ரணத ரக்ஷாயாம் விலம்பம் அஸஹன் இவ ।
ஸதா பஞ்சாயுதீம் பிப்ரத் ஸ: ந: ஸ்ரீரங்கநாயக: ॥

ரங்கநாதன் தன் திருவடிகளில் சரணம் என வணங்கியவர்களைக் காப்பதில் விளம்பம் கூடாதென்பதற்காக எப்பொழுதுமே சக்ரம், சங்கு, கதை, சார்ங்கம், கட்கம் ஆகிய பஞ்சாயுதங்களையும் தாங்கிய வண்ணம் பக்தர்கட்கு ஸேவை ஸாதிக்கிறானாம். ''பீதவாஸா: ஜகத்பதி:'' அனைவரும் தம் மக்களானபடியால் அவர்கட்கு எவ்விதத் தீங்கும் அவமதிப்பும் கூடா தென்பதற்காக ஆடைகளை வரிந்து கட்டிக் கொண்டு தயார் நிலையில் விரைந்து வந்து சேர்ந்தான்.

ब्राह्मणाश्च समागम्य तत्र तस्थौ समाहितः ।
तमब्रुवन् सुराः सर्वे समभिष्टूय सन्नताः ॥

नारायणाय नलिनायत लोचनाय
नामावशेषित महाबलि वैभवाय ।
नानाचराचर विधायक जन्मदेश
नाभीपुटाय पुरुषाय नमः परस्मै ।।

ப்ராஹ்மணா: ச ஸமாகம்ய தத்ர தஸ்தௌ ஸமாஹித: ।
தம் அப்ருவன் ஸுரா: ஸர்வே ஸமபிஷ்டூய ஸந்நதா: ॥

நாராயணாய நளினாயத லோசனாய
நாமாவசேஷித மஹா பலி வைபவாய ।
நாநா சராசர விதாயக ஜன்மதேச
நாபீபுடாய புருஷாய நம: பரஸ்மை

போஜன் சம்பூ

जितं ते पुण्डरीकाक्ष नमस्ते विश्वभावन! ।
नमस्तेऽस्तु हृषीकेश महापुरुष पूर्वज ! (जितन्ता)
हे गोपालक ! हेकृपाजलनिधे ! हेसिन्धुकन्यापते !
हे कंसान्तक हे गजेन्द्रकरुणा पारीण ! हे माधव !
हे रामानुज हे जगत्त्रयगुरो हे पुण्डरीकाक्ष मां
हे गोपी जन नाथ पालय परं जानामि नत्वांविना

ஜிதம்தே புண்டரீகாக்ஷ! நமஸ்தே விச்வ பாவன!
நமஸ்தே அஸ்து ஹ்ருஷீகேச! மஹாபுருஷ! பூர்வஜ! (ஜிதந்தா)
ஹே கோபாலக! ஹே க்ருபாஜலநிதே! ஹே ஸிந்து கன்யாபதே!
ஹே கம்ஸாந்தக! ஹே கஜேந்த்ர கருணா பாரீண! ஹே மாதவ!
ஹே ராமானுஜ! ஹே ஜகத்த்ரயகுரோ! ஹே புண்டரீகாக்ஷ! மாம்
ஹே கோபீ ஜன நாத! பாலய பரம் ஜானாமி நத்வாம் வினா

குலசேகராழ்வார் - முகந்தமாலை

त्वमेव माता च पितात्वमेव
त्वमेव बन्धुश्च सखा त्वमेव ।
त्वमेव विद्या द्रविणं त्वमेव
त्वमेव सर्वं मम देवदेव ।

காந்தாரீவாக்யம்

नमो नमस्तेऽस्तु सहस्रकृत्वः
पुनश्च भूयोऽपि नमो नमस्ते ।

नमः पुरस्तात् अथ पृष्ठतस्ते
 नमोऽस्तु ते सर्वत एव सर्व ॥

த்வமேவ மாதா சபிதா த்வமேவ
 த்வமேவ பந்துஶ்ச குரு: த்வமேவ ।
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
 த்வமேவ ஸர்வம் மம தேவதேவ ।
நமோ நமஸ்தே அஸ்து ஸஹஸ்ரக்ருத்வ:
 புனஶ்ச பூயோபி நமோ நமஸ்தே
நம: புரஸ்தாத் அத ப்ருஷ்டத: தே ।
 நமோஸ்து தே ஸர்வத: ஏவ ஸர்வ ॥

பகவத்கீதை

பரமனைக் கண்டதும் மகிழ்ச்சி வெள்ளத்தில் செய்வதறியாது திகைத்தனர், ஏன்?

अव्याक्षेपः भविष्यन्त्याः कार्यसिद्धेर्हि लक्षणम् ॥

அவ்யாக்ஷேப: பவிஷ்யந்த்யா: கார்யஸித்தே: ஹி லக்ஷணம் ॥

காளிதாஸன்

கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது என்பர். அதுபோலத் தேடிச்சென்று தம் இன்னல்களை முறையிட எண்ணியவர்கட்கு கருணாகரன் நேரில் வந்தது ராவண ஸம்ஹாரத்தை உறுதிப்படுத்தி விட்டது. இனி மகிழ்ச்சிக்கு அளவேது? உள்ளத்தில் உள்ள மகிழ்ச்சி வெள்ளம் பீறிட்டுக் கொண்டு சொற்களின் வெள்ளமாக மாறியது. கருணாகரனுக்கு ஜே. புண்டரீ காக்ஷனுக்கு ஜே. நாராயணனுக்கு ஜே, ஒரு காலத்தில் மஹாபலியின் கொட்டத்தை அடக்கி மூவுலகங்களையும் மீட்டுதவிய வாமனனே! வணக்கம். ''மஹாப்ரளயத்திற்குப் பிறகு ஜங்கமஸ்தாவரங்களையும் குறிப்பாக எங்களையும் படைக்கும் திருவுந்தியானே! வணக்கம். பரம புருஷா! மஹாபுருஷா! காரண புருஷா! வணக்கம். வணக்கம். எம் தாயே! வணக்கம் எம் தந்தையே! வணக்கம். எம் குருவே! எம்முயிரே! வணக்கம்.'' இவ்வாறு மனத்தால் எண்ணி வாயால் சொன்னால் போதுமா, திருப்தி ஏற்படவில்லை. ஸாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிக் கொண்டே பிரதக்ஷிண மாகச் சுற்றி சுற்றி வருகிறார்கள். பின்னர் எதிரே நின்று கை கட்டி வாய் பொத்தி ராவணனிழைத்த கொடுமைகளின் நினைவினால் ஒரு கண்ணில் சோகக் கண்ணீரும், ஒரு கண்ணில் கருணைக் கடலின் வருகையினால் ஆனந்தக் கண்ணீரும் பொங்கி வழியப் பரமனைப் பார்த்து விண்ணப்பித்தனர்.

தேவர்களின் சரணாகதி

त्वां नियोक्ष्यामहे विष्णो लोकानां हितकाम्यया ।
राज्ञः दशरथस्य त्वं अयोध्याधिपतेः प्रभो ।
तस्य भार्यासु तिसृषु ह्री श्री कीर्त्युपमासु च ।
विष्णो पुत्रत्वमागच्छ कृत्वात्मानं चतुर्विधम् ॥
राक्षसो रावणोमूर्खः वीर्योत्सेकेन बाधते ।
ऋषयस्तु ततस्तेन गन्धर्वाप्सरसस्तथा ॥
क्रीडन्तो नन्दन वने क्रूरेण किल हिंसिताः ।
वधार्थं वयमायाताः तस्य वै मुनिभिस्सह ॥
सिद्धगन्धर्व यक्षाश्च ततस्त्वां शरणं गताः ।
त्वं गतिः परमादेव सर्वेषां नः परन्तप ॥
वधाय देव शत्रूणां नृणां लोके मनः कुरु ।

த்வாம் நியோக்ஷ்யாமஹே விஷ்ணோ! லோகானாம் ஹிதகாம்யயா ॥
ராக்ஞ: தசரதஸ்ய த்வம் அயோத்யாதிபதே: ப்ரபோ! ॥
தஸ்ய பார்யாஸு திஸ்ருஷு ஹ்ரீ ஸ்ரீ கீர்த்யுபமாஸு ச ।
விஷ்ணோ! புத்ரத்வம் ஆகச்ச க்ருத்வா ஆத்மானம் சதுர்விதம் ॥
ராக்ஷஸ: ராவண: மூர்க்க: வீர்யோத்ஸேகேன பாததே ॥
ரிஷய: து தத: தேன கந்தர்வாப்ஸரஸ: ததா ।
க்ரீடந்த: நந்தனவனே க்ரூரேண கில ஹிம்ஸிதா:
வதார்த்தம் வயம் ஆயாதா: தஸ்ய வை முனிபி: ஸஹ ।
ஸித்த கந்தர்வ யக்ஷா: ச தத: த்வாம் சரணம் கதா: ॥
த்வம் கதி: பரமாதேவ! ஸர்வேஷாம் ந: பரந்தப! ।
வதாய தேவசத்ருணாம் ந்ருணாம் லோகே மன: குரு ।

வா, ரா. பால. - 15

न्यस्याम्यकिञ्चनः श्रीमन् अनुकूलोऽन्यवर्जितः ।
विश्वास प्रार्थनापूर्वं आत्म रक्षाभरं त्वयि ॥

ந்யஸ்யாமி அகிஞ்சன: ஸ்ரீமன்! அனுகூல: அன்ய வர்ஜித: ।
விஸ்வாஸ ப்ரார்த்தனா பூர்வம் ஆத்ம ரக்ஷாபரம் த்வயி ॥

வேதாந்த தேசிகர் - ந்யாஸதசகம்

''ப்ரபோ! ராவணன் மிகக் கொடியவன், மூவுலகிலும் வலிமை மிக்கவன் நான் ஒருவனே என இறுமாப்பு உடையவன். தேவர், கந்தர்வர், ஸித்தர், அப்ஸரஸ் ஆகிய நாங்கள் ஒரு ஸமயம் எங்கள் நந்தனம் எனும் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தோம். அவ்வழியே வந்த இவ்வரக்கன் எங்களைப் படாதபாடு படுத்தியதை நினைக்கக் கூட மனம் அஞ்சுகிறது. அங்கு ஏதோ ஒரு மூலையில் மரத்தடியில் தம் புலன்களைப் பட்டி மேய விடாது அடக்கி ஒருமுகப்படுத்தி தம் இதயத்தாமரையில் ஶ்ரிய:பதியான தங்களையே தியானித்து மகிழ்ந்திருந்த ஞானிகளையும் அவன் விட்டு வைக்கவில்லையே! அவர்களையும் கடித்தும் அடித்தும் தேய்த்தும் துன்புறுத்துகிறான். பாவம், மஹர்ஷிகள் என் செய்வர்!''

ஐ இரு தலையினோன் அனுசர் ஆதிஆம்
மெய்வலி அரக்கரால் விண்ணும் மண்ணுமே
செய்தவம் இழந்தன திருவின் நாயக!
உய்திறன் இல்லை என்று உயிர்ப்பு வீங்கினார்.

க.ரா. பால. - திருஅவதாரம்

''திருமகள் நாயகனே! ஶ்ரிய: பதியே! பத்துத் தலையனான இராவணனும் அவன் உடன் பிறந்த கும்பகர்ணனும், ஒன்றுவிட்ட தம்பி களான கரன் முதலிய உடல் வலிமையுடைய அரக்கர்களும் செய்யும் கொடுமையினால் விண்ணவரும், மண்ணவரும், கர்மானுஷ்டானம், தானம், தவம் முதலிய நற்கருமங்களைச் செய்ய இயலாது தவிக்கின்றனர்'' எனத் துயரம் தாளாது பெருமூச்சுவிட்டவாறு விண்ணப்பித்தனர்.

தேவர்களின் விண்ணப்பத்தைக் கேட்ட திருமால் ''ப்ரஹ்மாதி தேவர் களே! இத்துணைத் துயர்வரக் காரணம் என்ன?'' என்று வினவினார்.

எங்கள் நீள் வரங்களால் அரக்கர் என்றுளார்
பொங்கு மூவுலகையும் புடைத்து அழித்தனர்
செங்கண் நாயக! இது தீர்த்தல் இல்லையேல்
நுங்குவர் உலகை ஓர் நொடியில் என்றனர்.

க.ரா. பால.- திருவவதாரம்

''அன்றலர்ந்த செவ்விய தாமரை மலர்களையொத்த திருக்கண்களை யுடைய தலைவ! பிரமனாகிய நான் (நரனைத் தவிர) மற்றவர்களால் மரணமில்லை எனும் வரத்தைக் கொடுத்து ஏமாந்தேன். அவ்வர பலத்தினால் அவன் மூவுலகினரையும் அடித்து அழிக்கும்போது நம்மவரைக் காக்க மாற்று வழியின்றித் திணறுகிறேன். நீர் அவர்களை வதைத்து எங்களைக் காக்காவிடில் அவ்வரக்கர்கள் நொடிப்பொழுதில் அனைத்தையும் அழித்து விடுவர்.''



மின்னின் நுண்ணிடை மடக்கொடி காரணம் விலங்கலின் மிசையிலங்கை மன்னன் நீண்முடி பொடி செய்த மைந்தன திடம்.......... **திருவயிந்திரபுரத்தில்** ஸ்வாமி தேசிகனுக்கு அநவரதமும் அருள்புரியும் அழகன்.



நெல்லில் குவளை கண்காட்ட........... கழனியழுந்தூரில் இலங்கை வேந்தன் அந்தமில்திண் கரம் சிரங்கள் புரண்டு வீழ, அடுகணையால் எய்துகந்த அம்மானை கம்பன் அவதார ஸ்தலமான தேரழுந்தூரில் காண்மின்.

''எனவே எங்கள் அனைவரின் நன்மையின் பொருட்டு தேவரீர் ஒரு முறை அவதரித்தே ஆகவேண்டும், அதுவும் மானுடனாக, அயோத்தி மன்னராகிய தசரதர் பெரும் புகழ் பெற்றவர்; தர்ம ஸூக்ஷ்மம் அறிந்தவர்; அல்லலுறும் மனிதர்கட்கும், தேவர்கட்கும் ஸமயத்தில் உதவியவர்; மன்னராயினும் மஹர்ஷிகட்கு நிகரான ப்ரஹ்ம தேஜஸ்ஸை உடையவர். இதோ கீழே யஜமான தீக்ஷை பெற்று அமர்ந்திருக்கிறாரே அவர்தான் தசரதர். அவருக்கு பட்டமஹிஷிகள் மூவர். நம் தக்ஷ ப்ரஜாபதியின் புதல்விகளான ஹ்ரி, ஸ்ரீ, கீர்த்திகள் போன்ற பெருமையுடையவர்கள். அம்மூவரிடமும் நான்கு புதல்வர்களாக அவதரிக்க வேண்டும். (இராவணன், இந்த்ரஜித், லவணாஸுரன், கந்தர்வன் இந்நால்வரை ஸம்ஹரிக்க). இவ்வாறு மானுடராய்த் தோன்றி, நாள்தோறும் வளர்ந்து வரும் தீமைகளை அகற்ற எங்களால் கொல்ல முடியாத இராவணனைப் போரில் மாய்க்க வேண்டும்'' என்றனன்.

பரமன்: ''இதைக் கேட்க நன்றாக இருக்கிறது. கடாவை மாற்றி மாற்றி தீனி போட்டு நன்கு வளர்த்துவிட்டு, அது மார்பில் பாயும் போது என்னிடம் சொல்கிறீர்களே!''

पयः पानं भुजङ्गानां केवलं विषवर्धनम् ।

பய: பானம் புஜங்கானாம் கேவலம் விஷவர்த்தனம் ॥

''பாம்பிற்குப் பாலூட்டுவது விஷத்தை வளர்க்கும் என்பார்களே. அறியீரோ?''

தேவர்கள்: ''நாராயணா! அறியாமல் தவறு செய்துவிட்டோம். நன்கு ஆராயாமல் வரம் கொடுத்தபடியால் தாங்கள் மனிதனாக அவதரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. இல்லாவிடில் ஸங்கல்ப மாத்திரத்தி னாலேயே இராவண ஸம்ஹாரம் செய்து எங்களைக் காப்பாற்ற முடியும்.''

यश्च अपराधं कृतवान् अज्ञानात् पुरुषोत्तम ।
मद्भक्तः इति देवेश तत्सर्वं क्षन्तुमर्हसि ॥

யஶ்ச அபராதம் க்ருதவான் அக்ஞானாத் புருஷோத்தம!
மத் பக்த: இதிதேவேஶ! தத்ஸர்வம் க்ஷந்தும் அர்ஹஸி ॥

ஜிதந்தா - 15

''புருஷோத்தம! எம் தலைவா! அடியார்கள் அறியாமையினால் செய்த தவறு அனைத்தையும் க்ஷமித்து பக்தர்களாகிய எங்களைக் காக்க வேண்டும். நாங்கள் அனைவரும் தங்கள் திருவடிகளில் சரணடைகிறோம். நாங்கள் வேறு வழியற்றவர்கள்; தங்களையே கதியாக உபாயமாக வரிக்கிறோம். இனி தங்களுக்கு இன்னல் தரும் எதையும் செய்யோம். தாங்கள் உகந்தவற்றையே, அனுகூலமானவற்றையே செய்வோம். நிச்சயமாக எம்மைக் காத்தருள்வீர் எனும் முழு நம்பிக்கையோடு தங்களையே ரக்ஷக னாக காப்பவனாக

ஏற்றிருக்கிறோம். எனவே (எங்கள் ரக்ஷணபரத்தை) எங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சுமையை (பொறுப்பை) தங்கள் திருவடிகளில் ஸமர்ப்பிக் கிறோம். இக்கணத்திலிருந்து எங்கள் கவலை நீங்கியது. நாங்கள் செய்த பாக்யம் நேரிலேயே தங்கள் திருவடிகளில் சரணா கதி செய்ய வாய்ப்பு கிட்டியது.''

இவ்வாறாக தேவர்கள் பரமனிடம் ஐந்து அங்கங்களோடு கூடிய பிரபத்தியை—ஶரணாகதியைச் செய்து வணங்கினர்.

அபயப்ரதானம்

வெஞ்சொலாளர் காலதூதர் (ராவணாதி) வீசபாசம்
வந்து எம்மேல்
விழுந்து அழுந்தி யாம் அயர்ந்து வீழ்வதற்கு முன்னம் நீ
அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்று அளிக்க வேண்டும் அச்சுதா!

தேசிகப்ரபந்தம் - நவமணி மாலை - 8

''அச்யுதா! வாஸுதேவா! தெய்வநாயகா! அடியவர்க்கு மெய்யனே! இராவணனும் அவனைச் சேர்ந்தோரும் யமனும் யம தூதர்களும் போன்று ஓடி வந்து வெட்டு, குத்து, பிடி என்று பாசத்தை எங்கள் மீது வீசி, அதில் நாங்கள் அழுந்தி மயங்கி வீழ்வதற்கு முன்னமே தாங்கள் அஞ்சாதே அஞ்சாதே அஞ்சாதே எனக் கூவிக் கொண்டே ஓடோடியும் வந்து காத்தருள வேண்டும்'' என வேண்டி நின்றனர்.

ப்ரபன்னர்களான தேவர்கள் கார்முகில் வண்ணனை—கருணாகரனை ஆராத அருளமுதத்தைப் பார்த்து இறைஞ்சுகின்றனர்.

ஒருக்காலே சரணாக அடைகின்றார்க்கும்
உனக்கடிமை யாகின்றேன் என்கின்றார்க்கும்
அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும்
அஞ்சேல் என்று அருள்கொடுப்பன் இதுதான் ஓதும்
இருக்காலும் எழில்முனிவர் நினைவினாலும்
இவை அறியார் செயலுடன் என் இசைவினாலும்
நெருங்காத நீள்விரதமெனக் கொன்றன்னும்
நெறியுரைத்தார் நிலையுணர்ந்து நிலை பெற்றோமே!

தேசிகப் பிரபந்தம், அம்ருதாஸ்வாதினீ - 16

''ஒருமுறை என் திருவடிகளில் சரணம் என சரணாகதி செய்பவனை யும், நான் உன்னைச் சேர்ந்தவன். உனக்கே தாஸன் என உளமார உரைக் கின்றவனையும் அபயமளித்துக் காப்பேன். அவனை இன்னாதான் இனியன் எனப் பாகுபடுத்திப் பார்க்காது யாராயிருப்பினும் காப்பேன். அவனுக்கு

ப்ரஹ்ம ருத்ராதிகளிடமிருந்தோ அரக்கர்களிடமிருந்தோ மற்று யாரிட மிருந்தோ ஆபத்து வந்தாலும் காப்பேன். இந்த ஶரணாகதரக்ஷணம் மறை களால் மறைக்காமல் தெளிவாக ஓதப்பட்டது. முனிவர்களால் தம் ஸ்ம்ருதி நூல்களில் சிறந்த தர்மமாகக் கூறப்பட்டது. நமது முன்னோர்களான பெரியோர் களால் நடைமுறையில் அனுஷ்டித்துக் காட்டப்பட்டது. எனக்கும் இது மிக உகப்பிற்குரிய சிறந்த தர்மமாகும். எனவே சரண் புகுந்தவரைக் காப்பதையே எனது விரதமாகக் கொண்டுள்ளேன்.''

भयं त्यजत भद्रं वः हितार्थं युधि रावणम् ।
सपुत्र पौत्रं सामात्यं समित्र ज्ञाति बान्धवम् ॥
हत्वा क्रूरं दुरात्मानं देवर्षीणां भयावहम् ।
दश वर्षसहस्राणि दश वर्ष शतानि च ॥
वत्स्यामि मानुषे लोके पालयन् पृथिवीमिमाम् ।
ततः पद्म पलाशाक्षः कृत्वात्मानं चतुर्विधम् ।
पितरं रोचयामास तथा दशरथं नृपम् ॥

பயம் த்யஜத பத்ரம் வ: ஹிதார்த்தம் யுதி ராவணம் ।
ஸபுத்ர பௌத்ரம் ஸாமாத்யம் ஸமித்ர க்ஞாதி பாந்தவம் ॥
ஹத்வா க்ரூரம் துராத்மானம் தேவர்ஷீணாம் பயாவஹம் ।
தச வர்ஷ ஸஹஸ்ராணி தச வர்ஷ சதானிச ॥
வத்ஸ்யசமி மானுஷே லோகே பாலயன் ப்ருதிவீம் இமாம் ॥
தத: பத்ம பலாசாக்ஷ: க்ருத்வா ஆத்மானம் சதுர்விதம் ।
பிதரம் ரோசயாமாஸ ததா தசரதம் ந்ருபம் ॥

வா.ரா.பால.-15

தேவர்கள் வேண்டியபடியே விஷ்ணுவும் ''அஞ்சேல், அஞ்சேல், அஞ்சேல்'' எனப் பேசத் தொடங்கும்போதே அபயப்ரதானம் பண்ணினான். மேலும் ''உங்கட்கு நலன்கள் உண்டாகுக, வளமொடு வாழ்க. உங்கள் க்ஷேமத்தின் பொருட்டு போரில் ராவணனைக் கொல்வோம்'' என்றார். ''நம்மை வென்ற மேகநாதன் ஒருவனே நம் அனைவரின் கண்களில் விரலை விட்டு ஆட்டுவானே'' என இந்திரன் சொல்ல நினைத்தான். ருத்ரன், வாயு, ஸூர்யன், அக்னி முதலியோர் ''ப்ரஹஸ்தன், அக்ஷன், கும்பகர்ணன் முதலி யோரைக் கொல்லாவிட்டால் எங்கள் கதி அதோகதி தான்'' என முணு முணுத்தனர். ப்ரஹ்ம, ருத்ர, இந்த்ராதிகளின் முகத்தில் அச்சம் நீங்கிய பொலிவு இல்லை. இதைக் கண்ணுற்ற பரமன் மேலும் பேசலானார்.

''தேவர்களே உங்களுக்கு இன்னல் இழைத்தவர், இழைப்பவர் யாராயினும் அவர்களைக் கொன்று உங்கள் வாழ்வை மலரச் செய்கின்றேன்.

ராவணனின் பிள்ளைகள், பேரன்கள், அமைச்சர்கள், நண்பர்கள் (வாலி) க்ஞாதிகள், மற்றும் உறவினர்கள் அனைவரையும் கொன்று மஹர்ஷி களையும், உங்களையும் அச்சமின்றி தர்மங்களை அனுஷ்டிக்கச் செய் கிறேன். மீண்டும் தானதர்மங்கள், வேள்விகள் தழைத்தோங்க பதினோ ராயிரம் ஆண்டுகள் பூமியில் நான் அவதரித்து ஆட்சி செய்கிறேன்'' என்றார்.

திருமால் உடனே எங்கு பிறப்பது? எந்தக் குடியில் பிறப்பது? என யோசனை செய்தார். சக்ரவர்த்தியின் குடியில் பிறந்தால் தான் நாட்டை ஆளமுடியும். ஆட்சியினால் தான் தீயோரைக் களைந்து நல்லோரை வாழ வைக்க முடியும். அறப் பணிகளும் தளிர்க்கும். இக்ஷ்வாகு வம்சம் தான் சிறந்தது. தசரதனும் புதல்வர்களை வேண்டி இஷ்டியும் செய்கிறான். எனவே அன்னாருக்கு நான்கு புதல்வர்களாக அவதரிப்போம் எனத் தீர்மானித்தார். உடனே உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளமிட்டது. இதயத்தின் வாயில்களான திருக்கண்களும் மலர்ந்தன. அன்றலர்ந்த செந்தாமரையை ஒத்த அழகும் கவர்ச்சியும் அகலமும், பலாசமலரை ஒத்த நீளமும் திருமுகத்தின் செவ்வியை மிகுதியாக்கியது. இவ்வழகைப் பருகிய தேவர்கள் மகிழ்ந்து கவலை நீங்கி நிம்மதியடைந்தனர். ஏன்? பரமனால் தந்தையாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் தசரதர்.

அவரது ஆட்சித் திறன், செயல்திறன், ஆத்ம குணங்கள், நற்பண்புகள் இவற்றை நினைத்ததுமே பரமனது முகத்தில் பொலிவு ஏற்பட்டிருக்க வேண்டும். பரமன் மன்மத மன்மதனாக எல்லோராலும் விரும்பப் படுவதற்குக் காரணம் முகத்தின் அழகும் கவர்ச்சியுமாகும். இப்பொழுது இவர் தசரத மன்னனை விரும்புவதால் அதன் கவர்ச்சியும் அழகும் முன்னிலும் மிகுந்ததாம். ஏன்? அவதரிக்கத் தகுந்த இடம் கிடைத்த தல்லவா? மேலும் உலகில் அனைவரும் கிடைத்தற்கரிதான பொருளையே விரும்புவர். மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கும் நமக்குப் ''பிறவாமையே'' கிடைத்தற்கரியது. எனவே அதை வேண்டி பக்தி ப்ரபத்திகளைச் செய் கிறோம். பரமனோ பிறப்பில்லாதவன். அவனுக்குப் பிறப்பு பெறுதற்கரிது. அதை தசரதனிடத்தில் வேண்டுகிறான். அது விரைவில் கிடைக்க இருக்கிறது. கிட்டாதது கிட்டுவதால் முகப்பொலிவு இரட்டிப்பாயிருக்கும். எனவே கண்ணழகைக் கொண்டு பகவத் ஸங்கல் புத்தை (தமக்காக அவதரிக்கப் போகும் எண்ணத்தை) அறிந்த படியால் தேவர்கட்கு மகிழ்ச்சியும் நிம்மதியும். இக்கருத்துக்கள் 'பத்மபத்ர விசாலாக்ஷ:' எனும் வால்மீகியின் சொல்லோவியத்தினால் விளக்கமுறுகிறது.

பரமன் பல அவதாரங்களை எடுத்திருக்கிறான். ஒவ்வொரு தடவை யிலும் அவதரிக்கத் தகுந்த காரணங்கள் உண்டு. யோசிக்க அவகாசமும் கிடையாது. ஆனால் ராவண ஸம்ஹாரத்திற்காக எங்கே எப்படி அவதரிப்பது என்பதை நிச்சயிக்க பல நாட்கள் ஆகிவிட்டன. இதை '' பிதரம் ரோசயமாஸ'' என்றார். ஸர்வலோக பிதாவாக இருப்பவன் தன் புதல்வனையே தனக்குப் பிதாவாக ஆக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதற்காகப்

பல நாள் யோசித்தான் போலும் இதை வேதம் ''பிதா புத்ரேண பித்ருமான்'' தந்தை புதல்வனால் தந்தை உடையவனாகிறான் என்கிறது.

திருமால் அவதரிப்பது உறுதியானதும் தேவர்கள்

ஆடினர் பாடினர் அங்கும் இங்குமாய்
ஓடினர் உவகை மாநறவு உண்டு ஓர்கிலார்
வீடினர் அரக்கர் என்று உவக்கும் விம்மலால்
குடினர் முறைமுறை துளவத்தாள் மலர்

கா.ரா. பால. - அவதாரம்

ஸ்ரீமதி விவாஹம்

த்ரிசங்குவின் மனைவிக்கு ரொம்ப நாட்களாக மக்கட்பேறு இல்லை. அதற்காக அவள் த்வாதசீவ்ரதம் இருந்து பகவானை அர்ச்சித்து வந்தாள். ஒரு நாள் த்வாதசியன்று கவனக் குறைவினால் வ்ரத நியமங்கட்கு விரோதமாக கணவனோடு தூங்கிவிட்டாள். ஆயினும் அன்று ஸ்ரீமந் நாராயணன் கனவில் தோன்றி ஒரு பழத்தைக் கொடுத்துச் சாப்பிடு. ''என்னிடம் பக்தியுள்ள புதல்வன் பிறப்பான். அவன் ஸார்வபௌமனாக (சக்ரவர்த்தியாக) விளங்கு வான்'', என அருளினார். அவன்தான் அம்பரீஷன். அவனும் பல்லாண்டுகள் தவம் புரிந்தான். ஒரு நாள் நாராயணன் இந்திரன் வேடம் தரித்து ஐராவதத்தின் மீதேறி அவன் எதிரே தோன்றி ''அம்பரீஷா! நான் இந்திரன். நீ விரும்பிய வரனைக் கேள் கொடுக்கிறேன்'' என்றார். அம்பரீஷனோ பரமைகாந்தி பிற தெய்வங்களை நாடான். எனவே ''நான் நாராயணனைத் தவிர வேறு யாரிடமும் வரம் கேட்க மாட்டேன்'' என்றான். அவனது விஷ்ணு பக்தியை மெச்சி கருடாரூடனாக (கருடன் மீதேறி) நாராயணனாக ஸேவை தந்தான். உடனே பரமனைத் துதிக்கலானான். பரமன் தனது சக்ராயுதத்தை அம்பரீஷனுக்கு அளித்து, ''இது உன்னைப் பாதுகாக்கும்'' எனக் கூறி மறைந்தார்.

स वै महात्मा सततं च रक्षितः ।
सुदर्शनेन अतिसुदर्शनेन ॥

ஸ வை மஹாத்மா ஸததம் ச ரக்ஷித: ।
ஸுதர்சனேன அதிஸுதர்சனேன ॥

அந்த சக்ரத்தாழ்வான் ஆபத் காலங்களில் அரசனைக் காப்பாற்றி வந்தார்.

அம்பரீஷ சக்ரவர்த்திக்கு ஒரு பெண் உண்டு. அவள் பெயர் ஸ்ரீமதீ. நல்ல உடற்கட்டும் பேரழகும் வாய்ந்தவள். ஒரு நாள் நாரத முனிவரும், பர்வத முனிவரும் அரண்மனைக்கு மாறி மாறி வந்து ஸ்ரீமதியை மணக்க

விரும்புவதாகக் கூறினர். இரு முனிவர்களும் சிறந்த விஷ்ணு பக்தர்கள். மறுத்துப் பேச முடியவில்லை. எனவே ''நாளை ஸ்வயம்வரம் வைத்து விடுகிறேன். அவள் யாருக்கு மாலையிடுகிறாளோ அவருக்கு மணம் முடித்து விடுகிறேன்'' என்றார். நாரதருக்கு ஸந்தேஹம். ஸ்வயம்வரத்தில் ஸ்ரீமதி நம்மை ஏற்காவிட்டால் என்ன செய்வது? ஒரு உபாயம் செய்தார். நேரே விஷ்ணு லோகம் சென்றார். வணங்கிப் பிரார்த்தித்தார். ''நாளை ஸ்ரீமதி ஸ்வயம்வரம். என்னோடு பர்வத முனிவர் போட்டியிடுகிறார். அவருக்கு அவள் மாலையிடக் கூடாது. ஸ்வயம்வர மண்டபத்தில் பர்வத முனிவரின் முகம் குரங்கின் முகம் போன்று ஸ்ரீமதிக்குக் காட்சி அளிக்க வேண்டும்'' என வரம் கேட்டார். திருமால் ''அப்படியே ஆகுக'' என வரம் அளித்தார். சிறிது நேரம் கழித்து பர்வத முனிவர் விஷ்ணு லோகம் வந்து வழிபட்டார். ''நாளை ஸ்வயம்வரத்தில் ஸ்ரீமதிக்கு நாரதரின் முகம் கோலாங்கூலம் (பசுவினுடையது போன்று வாலுடைய குரங்கு) போன்று முகம் கரியதாகக் காட்சி அளிக்க வேண்டும்'' என வேண்ட பர்வதருக்கும் ததாஸ்து என வரமளித்தார்.

மறுநாள் ஸ்வயம்வர மண்டபத்திற்கு கையில் மாலையுடன் ஸ்ரீமதி நுழைந்தாள். சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு, தந்தையை நோக்கி, ''அப்பா! நேற்று வந்த முனிவர்களையே காணோமே. இரு குரங்குகளையும் அவைகளின் நடுவில் ஒரு கட்டழகனையும் தான் பார்க்கிறேன்'' என்றாள்.

कियन्त: बाहव: तस्य कन्ये वद यथातथम् ।

கியந்த: பாஹவ: தஸ்ய கன்யே! வத யதாததம் ॥

அம்பரீஷன்: ''பெண்ணே! அவனுக்கு எத்தனை கைகள் இருக்கின்றன? உள்ள படியே சொல்.''

बाहुद्वयं च पश्यामि इत्याह कन्या शुचिस्मिता ।

பாஹுத்வயம் ச பஶ்யாமி இத்யாஹ கன்யா ஶுசிஸ்மிதா ॥

ஸ்ரீமதி புன்னகை பூத்தவளாய் ''இருகைகளைத் தான் பார்க்கிறேன்.''

அம்பரீஷன், ''அவன் மார்பிலும் கைகளிலும் என்ன இருக்கின்றன?''

वक्षसि बनमालाच करे कार्मुक सायकौ

வக்ஷஸி வநமாலாச கரே கார்முக ஸாயகௌ.

ஸ்ரீமதி: ''மார்பில் துளசி மாலையும் கையில் வில்லும் அம்பும்'' என்றாள்.

அம்பரீஷன்: ''முனிவர்களே! ஏன் எங்களை மயக்குகிறீர்கள்?''

முனிவர்கள்: ''நாங்கள் மயக்கவில்லை. உமது பெண்தான் மயங்குகிறாள். எங்கள் இருவருள் ஒருவருக்கு மாலையிடட்டுமே.''

அம்பரீஷன்: ''ஸ்ரீமதி! உன்னிஷ்டப்படி மாலையிடலாமே.''

ஸ்ரீமதி நடுவிலுள்ள அழகனுக்கு மாலையிட்டாள். ஆனால் அவன் பிறர் கண்ணில்படவில்லை. அதோடு மட்டுமா!

अनन्तरं च सा कन्या दृष्टा न मनुजैः पुरः ।

அனந்தரம் ச ஸா கன்யா த்ருஷ்டா ந மனுஜை: புர: ॥

மாலையிட்டதும் அவள் பிறர் கண்ணில்படவில்லை. எல்லோரும் வியப்பில் ஆழ்ந்தனர். ஸ்ரீமதியோ தான் செய்த தவத்திற்கேற்ப மஹா விஷ்ணுவையே கணவனாக அடைந்தாள். உடனே ஏமாந்த இருவரும் விஷ்ணுவிடம் சென்றனர். இவர்களைக் கண்டதும் விஷ்ணுவின் ஜாடையி னால் ஸ்ரீமதி தன்னை மறைத்துக் கொண்டாள். இருவரும் 'ப்ரபுவே! நீர் எங்களை ஏன் குரங்கு முகமாக்கினீர் !' என்றனர்.

यथा भवान् तथा सोऽपि प्रार्थयामास निर्जने ।
मामेवं भक्ति वशगः तथास्मि अकरवं मुने ।
याचते यच्च यश्चैव तच्च तस्य ददाम्यहम् ॥

யதா பவான் ததா ஸோபி ப்ரார்த்தயாமாஸ நிர்ஜனே ।
மாமேவம், பக்திவசக: ததாஸ்மி அகரவம் முனே! ।
யாசதே யச்ச யஶ்சைவ தச்ச தஸ்ய ததாம்யஹம் ॥

விஷ்ணு: ''நீங்கள் இருவரும் தனிமையில் வந்து அவ்வாறு கேட்டீர் கள். நானோ பக்தபராதீனன். அப்படியே வரமளித்தேன். யார் எதைக் கேட் கிறார்களோ அதை அளிப்பது என் ஸ்வபாவம். எனவே நீங்கள் இருவருமே ஸ்ரீமதிக்கு குரங்கு முகமாகக் காட்சியளித்திருக்கிறீர்கள்.''

நாரதன்: ''அது இருக்கட்டும் எங்கள் நடுவில்.''

धनुष्मान् द्विभुजः कोनु तां हृत्वा गतवान् किल

தனுஷ்மான் த்விபுஜ: கோநு தாம் ஹ்ருத்வா கதவான் கில ॥

''இருகைகள் உள்ள வில்லாளி ஒருவன் அவளைப் பறித்துச் சென் றானே; அவன் யார்?''

मायाविनः महात्मानः बहवः सन्ति सत्तमौ ।
तत्र सा श्रीमती देवी हृता केनाऽपि सुव्रतौ ।
चक्रपाणिरहं नित्यं चतुर्बाहुरिति स्थितिः ।

மாயாவின: மஹாத்மான: பஹவ: ஸந்தி ஸத்தமௌ ।
தத்ரஸா ஸ்ரீமதி தேவீ ஹ்ருதா கேனாபி ஸுவ்ரதௌ ॥
சக்ரபாணி: அஹம்நித்யம் சதுர்பாஹுரிதி ஸ்திதி: ॥

விஷ்ணு: ''ஸாதுக்களே! மாயாவிகளான மஹாத்மாக்கள் பலர் உளர். யாராவது ஸ்ரீமதியைப் பறித்துச் சென்றிருக்கலாம். எனக்கோ நான்கு கைகள். எப்பொழுதும் என் கையில் சக்கரம் இருக்கும். இது உங்களுக்குத் தெரிந்தது தானே! யார் அபஹரித்தார்களோ, யார் அறிவார்,'' என்றார்.

உடனே முனிவர்கள் அம்பரீஷனிடம் ஓடி வந்து கேட்டனர்.

आहूय पश्चादन्यस्मै कन्यां त्वं दत्तवानसि ।
माया योगेन तस्मात्वां तमोऽज्ञ अभिभविष्यति ॥

ஆஹூய பச்சாத் அன்யஸ்மை கன்யாம் த்வம் தத்தவான் அஸி ।
மாயா யோகேன தஸ்மாத் த்வாம் தமோ க்ஞ! அபிபவிஷ்யதி ॥

''அரசே எங்களை ஸ்வயம்வரத்திற்காக அழைத்துவிட்டு மற்றொருவருக்குப் பெண்ணை மாலையிடச் செய்து விட்டீர். அதுவும் அவனை மாயையினால் மறைத்து எங்களிடையே அமரச் செய்துவிட்டீர். எனவே முட்டாளே! நாங்கள் ஏவும் தமோராசியானது பின் தொடர்ந்து உன்னை துன்புறுத்தட்டும்'' என சபித்தனர். உடனே தமோராசியானது அம்பரீஷ மஹா ராஜாவைத் துரத்தத் தொடங்கியது. அப்பொழுது விஷ்ணு சக்கரம் அம்பரீஷனைக் காத்துத் தமோராசியைத் துரத்திற்று. ஆக சக்ரம், தமஸ் இரண்டும் முனிவர்களைத் துரத்த உலக மூலைகளுக்கெல்லாம் பயந்து ஓடியும் அவை இவர்களை விடவில்லை.

त्राहि त्राहि इति गोविन्दं भाषमाणौ भयार्दितौ ॥

த்ராஹி த்ராஹி இதி கோவிந்தம் பாஷமாணௌ பயார்திதௌ ॥


''எங்களைக் காக்க, எங்களைக் காக்க'' என அலறிக் கொண்டு முனிவர்கள் விஷ்ணு லோகம் சென்று விஷ்ணுவைச் சரணடைந்தனர்.

निवार्य चक्रं ध्वान्तं च भक्तानुग्रह काम्यया ।
अम्बरीषश्च मद्भक्तः तथेमौ मुनिसत्तमौ ॥


நிவார்ய சக்ரம் த்வாந்தம்ச பக்தானுக்ரஹ காம்யயா ॥
அம்பரீஷஶ்ச மத்பக்த: ததேமௌ முனிஸத்தமௌ ॥

விஷ்ணு தன் சக்ரத்தையும் தமஸ்ஸையும் தடுத்து நிறுத்தி, ''முனிவர்களே! நான் என்ன செய்ய முடியும்? அம்பரீஷன் என் பக்தன், நீங்களும் என் பக்தர்கள்'' என்றார். இதைக் கேட்ட முனிவர்கள் மஹா விஷ்ணுவை சபித்தனர்.

श्रीमती हरणं विष्णोः यत्कृतं छद्मना त्वया ।
यया मूर्त्या तथैव त्वं जायेथाः मधुसूदन ।
अम्बरीषस्यान्ववाये राज्ञः दशरथस्य हि ।



வெள் எருக்கருஞ்சடை முடியான் வெற்பெடுத்தவன் .... உயிர் இருக்கும் இடம் நாடி வாளியிழைத்தவன் என்று மந்தோதரி வியக்கும் அண்ணல் சதுர்புஜராமனாக செங்கற்பட்டு அருகில் **பொன்பதிர் கூட்டத்தில்** காட்சி தருகிறான்



'ஸர்வகர்ம ஸமாராத்யன்' என்று ஸ்வாமி தேசிகன் தொழும் வீரன். சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தையில் (கும்பகோணத்தில்) தனிக்கோயில் கொண்டு உறைகிறான்.

पुत्रत्वं भविता, पुत्री श्रीमती धरणि प्रजा ॥
राक्षसापसदः कश्चित्तां ते भार्यां हरिष्यति ।
यतः राक्षसधर्मेण हृता च श्रीमती शुभा ।
हाहेति रुदता लभ्यं तथा दुःखं च तत्कृते ॥

ஸ்ரீமதீ ஹரணம் விஷ்ணோ: யத்க்ருதம் சத்மனா த்வயா ।
யயா மூர்த்யா ததைவ த்வம் ஜாயேதா: மதுஸூதன! ॥
அம்பரீஷஸ்ய அன்வவாயே ராக்ஞ: தசரதஸ்ய ஹி ।
புத்ர: த்வம் பவிதா, புத்ரீ ஸ்ரீமதீ தரணிப்ரஜா ॥
ராக்ஷஸாபஸத: கஶ்சித் தாம் தேபார்யாம் ஹரிஷ்யதி ।
யத: ராக்ஷஸதர்மேண ஹ்ருதா ச ஸ்ரீமதி சுபா ॥
ஹா ஹா இதி ருததா லப்யம் ததா துக்கம் ச தத்க்ருதே ॥

''விஷ்ணுவே! எங்களை ஏமாற்றி மாயையினால் ஸ்ரீமதியை அபஹரித்து வந்தீர். அப்பொழுது இரண்டு கைகளும் வில்லும் அம்புமாக இருந்தீர். இவ்வாறே அம்பரீஷன் வம்சத்தில் தசரதனுக்குப் புத்ரனாக அவதரிப்பீர். ஸ்ரீமதியும் பூதேவிக்கு புத்ரியாக அவதரிப்பாள். மூர்க்கனான ராக்ஷஸன் (ராவணன்) உம் மனைவியைக் கபடமான முறையில் பறித்துச் செல்வான். அப்பொழுது மனைவியை இழந்த நீர் எங்களைப் போன்று அலறி அலறித் துன்புறுவீர்'' எனச் சபித்தனர்.

तत्र मे दक्षिणो बाहुः भरतः भविता किल ।
शत्रुघ्नः वामबाहुश्च शेषोऽसौ लक्ष्मणस्स्वयम् ॥

தத்ரமே தக்ஷிண: பாஹு: பரத: பவிதா கில ।
சத்ருக்ன: வாமபாஹுஸ்ச சேஷ: அஸௌ லக்ஷ்மண: ஸ்வயம் ॥

அந்த சாபத்தை ஏற்று மஹாவிஷ்ணு கூறியதாவது: ''நான் தசரதருக்குத் திருமகனாக ராமனாக அவதரிப்பேன். எனது வலதுகை(யாக) பரதனாகவும், இடதுகை(யாக) சத்ருக்னனாகவும், இந்த ஆதிசேஷன் லக்ஷ்மணனாகவும் அவதரிப்பர். ஏ தமோராசியே! அப்பொழுது நீ வா. என்னையும் முனிவர் களையும் விட்டுவிடு. ராமாவதாரத்தில் ஸத்வத்தை சிறிது குறைத்துக் கொண்டு உன்னை (தமஸ்ஸை) ஏற்றுக் கொள்ளுகிறேன்.''

முனிவர்களும் (நாரதர், பர்வதர்) தாங்கள் இனி மணம் செய்து கொள்வதில்லை என்றார்கள். பக்தர்களாயினும் விபரீதமான தகாத கோரிக்கைகளைச் செய்தால் தாம் தொழும் பகவானிடமே அபசாரப்படும் படி நேரிடுகிறது.

''பிதரம் ரோசயாமாஸ'' *மற்ற அவதாரங்களைக் காட்டிலும் (ராவணாதி களின் கொடுமை நெடுநாட்களாக இருந்த போதிலும்) ராமாவதாரத்திற்கு*

பெருமாள் பழைய நிகழ்ச்சிகளை மனதில் கொண்டு நீண்டநாள் யோசிக்க வேண்டியதாயிற்று என்பர்.

மேலும் அவதரிக்க தாமதித்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. மக்கட்பேறு இல்லாதவர்கள் பரிஹாரம் செய்ய ப்ருஹஸ்பதியைக் கேட்டால் அவர் ஸர்ப்பஹத்தி, ம்ருக சாபஹத்தி, மித்ரத்ரோஹ, கவ்ய விக்ரய, அண்டபேதன, பாலதாடன, சிவ, விஷ்ணு ஸ்வாபஹரண, கர்பத்வம்ஸன, ஆதித்யாதி நவக்ரஹ தோஷாதி சாந்திகளைச் செய்ய வேண்டும் என்பார். ஆனால் தசரதருக்கோ மேற்கூறிய பாபங்களைச் செய்ததினால் பிள்ளைகள் பிறக்கவில்லை என்று சொல்ல முடியாது. வேறு காரணமும் உண்டோ எனில் உண்டு. அவர் அடுக்கடுக்காக மேன்மேலும் பற்பல புண்ய கர்மாக்களைச் செய்து கொண்டே இருந்ததினால் மக்கட்பேறு கிட்டவில்லை. அப்படியாகில் புண்ய கர்மானுஷ்டானங்களும் புத்ர பாக்கியத்தைப் பெறத் தடையாகுமோ? எனில் தடையாகாது; ஆனால் தாமதிக்கச் செய்யும், தசரதர் பட்ட மஹிஷிகளை மணக்கும் பொழுது ''க்ருஹ்ணாமிதே ஸுப்ரஜா ஸ்த்வாய'' நன்மக்களைப் பெற கையைப் பிடிக்கிறேன் என்ற மந்திரத்தை முறைப்படி சொல்லிக் கைப்பிடித்தார். இவர் புண்ணியங்களைச் செய்யச் செய்ய இன்னும் நல்ல பிள்ளையாகக் கொடுக்க வேண்டுமென்று எண்ணிய பகவான் பிறரைக் கொடுக்க முடியாமல், தானே பிள்ளையாய் அவதரிக்க நிச்சயிப்பதற்குள் பதினாயிரம் வருஷங்கள் ஓடிவிட்டனவாம்.

ப்ருகுசாபம்

दैत्याः सुरैः भर्त्स्यमानाः भृगुपत्नीं समाश्रिताः ।
तया दत्ताभयाः तत्र न्यवसन् अभयास्तदा ॥
तया परिगृहीतान् तान् दृष्ट्वा क्रुद्धः सुरेश्वरः ।
चक्रेण शितधारेण भृगुपत्न्याः शिरोऽहरत् ।
ततस्तां निहतां दृष्ट्वा पत्नीं भृगुकुलोद्वहः ।
शशाप सहसा क्रुद्धः विष्णुं रिपुकुलार्दनम् ।
तस्मात्त्वं मानुषे लोके जनिष्यसि जनार्दन ।
तत्र पत्नीवियोगं त्वं प्राप्स्यते बहुवार्षिकम् ।
शापाभिहत चेतास्सः स्वात्मना भावितः अभवत् ।
भृगुणा आराधितो विष्णुः आगतः प्राह तं भृगुम् ।
मा भैः भृगो अनृतं वाक्यं न भविष्यति ते द्विज ।
लोकानां संप्रियार्थंतु तंशापं ग्राह्यं उक्तवान् ।

தைத்யா: ஸுரை: பர்த்ஸ்யமானா: ப்ருகுபத்னீம் ஸமாஶ்ரிதா: ॥
தயா தத்தாபயா: தத்ர ந்யவஸன் அபயா: ததா ॥
தயா பரிக்ருஹீதான் தான் த்ருஷ்ட்வா க்ருத்த: ஸுரேச்வர: ।
சக்ரேண ஶிததாரேண ப்ருகுபத்ன்யா: ஶிர: அஹரத் ॥
தத: தாம் நிஹதாம் த்ருஷ்ட்வா பத்னீம் ப்ருகுகுலோத்வஹ : ।
ஶஶாப ஸஹஸா க்ருத்த: விஷ்ணும் ரிபுகுலார்தனம் ॥
தஸ்மாத் த்வம் மானுஷேலோகே ஜனிஷ்யஸி ஜனார்த்தன ॥
தத்ர பத்னீவியோகம் த்வம் பராப்ஸ்யதே பஹுவார் ஷிகம் ॥
ஶாபா பிஹத சேதா: ஸ: ஸ்வாத்மனா பாவித: அபவத் ॥
ப்ருகுணா ஆராதித: விஷ்ணு: ஆகத: ப்ராஹ தம் ப்ருகும் ॥
மா பை: ப்ருகோ! அன்ருதம் வாக்யம்நபவிஷ்யதி தே த்விஜ ॥
லோகானாம் ஸம்ப்ரியார்த்து ஶாபம் க்ராஹ்யம் உக்தவான் ॥

வா.ரா. உத்தர. - 51

ஸுமந்த்ரர் ஸீதையைக் காட்டில் விட்டு வந்ததை நினைத்து வருந்தும் லக்ஷ்மணனுக்குப் பழைய நிகழ்ச்சியைக் கூறி ஆறுதல் சொல்கிறார்.

ஒரு சமயம் குல குருவான வசிஷ்டரை வணங்க அவர் ஆச்ரமத்திற்கு தசரதர் சென்றார். அங்கு வஸிஷ்டருடன் அத்ரியின் குமாரரான துர்வாஸர் வ்ரதானுஷ்டானத்திற்காக வந்திருந்தார். அவரை அணுகி தன் பிள்ளைகளின் எதிர் காலத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு துர்வாஸர் கூறியது:

''தேவர்கள் அஸுரர்களைத் துன்புறுத்தியும் மிரட்டியும் வந்தனர். அஸுரர்கள் தம் குல குருவான சுக்ராசார்யரின் அம்மாவான ப்ருகு மஹர்ஷியின் மனைவியை அணுகிக் காக்கும்படி வேண்டினர். அவள் அபயம் அளித்து அவர்களைத் தன் தபோபலத்தினால் அடைக்கலமாக ஏற்றுக் கொண்டாள். தேவபக்ஷபாதியான மஹாவிஷ்ணு தமது சக்ராயுதத்தினால் தலையைக் கொய்து அவளைக் கொன்றார். மனைவியை இழந்த ப்ருகு முனிவர் அடங்காத கோபத்தினால் விஷ்ணுவை சபித்தார். 'விஷ்ணுவே! நீர் என் மனைவியை பெண் என்றும் பாராமல், ஒரு முனிவரின் மனைவி என்பதையும் மனதில் கொள்ளாமல் எனக்கு பிரிவுத்துயரத்தை அளித்தீர். எனவே என் போன்று நீரும் மானுட உலகில் மனிதனாகத் தோன்றி மனைவியைப் பிரிந்து பல்லாண்டு காலம் வருந்துவீராக'' என்று.

பின்னர் ப்ருகு, பரமனைச் சபித்ததினால் தபோபலத்தை இழந்தார். தாம் போற்றி வணங்கி வழிபடும் தெய்வத்தைச் சபித்தோமே என ஏங்கினார். தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும், பிற உயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமல் இருப்பதும் அன்றோ தவம்! அதன் வலிமை குன்றியதே!

உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு. குறள் - 261

''பிறவித் துயரை நீக்கிக் கொள்ள, அளவோடு உண்டு, அளவோடு தூங்கி, காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யங்களை அடக்கி, எப் பொருளை மனதில் இருத்தி இன்ப வாழ்வு வாழ்ந்தோமோ அப்பொருளின் அருளை ஒரு கணத்தில் இழந்தோமோ! கோபம் பொல்லாதது. அது நாம் எப்பொழுது ஏமாறுவோம் எனக் காத்திருந்தது போலும். அறம் வளர்க்கும்—நல்லோரைக் காக்கும் இயல்பினனான விஷ்ணுவை பெண்ணாசையினால் சபித்தோமே'' என பரிதாபப்பட்டார். ஆம் ''க்ருத்தோ ஹன்யாத் குரூநபி'' கோபங்கொண்டவன் தன் குருவையும் கொன்று விடுவானாம்.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். குறள் - 305

''சிற்றின்பத்தைத் துறந்து பேரின்பத்தைப் பெறுவதற்காகச் செய்த தபஸ்ஸைப் பிறரைச் சபிப்பதற்காகப் பயன்படுத்தினால் தவத்தை இழப்பதோடு உடன் பிறந்த பிறவித்துயர்களும் நம்மைச் சூழுமே, என் செய்ய?'' எனக் கலங்கினார். அப்பொழுது அங்கு வந்த ஸப்தர்ஷிகள் நல்வழியை உபதேசிக்க, அதன்படி மஹாவிஷ்ணுவையே சரண் அடைந்தார். பரமனும் நேரில் தோன்றிப் பேசலானார்.

''முனிவரே! அஞ்சாதீர், உமது சாபம் வீண்போகாதது. உலகினரின் நன்மைகளுக்காக நாம் அதை ஏற்றுக் கொள்கிறோம்'' என்றார். ஆக ப்ருகு முனிவரின் சாபத்தை ஏற்ற பரமன் உமக்கு மகனாகப் பிறந்திருக்கிறான். ஒரு காலத்தில் பத்னீ வியோகம் ஏற்படும் என துர்வாஸ முனிவர் தசரதருக்குக் கூறியதை ஸுமந்த்ரர் இளையபெருமாளுக்குக் கூறி சோகத்தை ஆற்றினார். எனவே ப்ருகுமஹர்ஷியின் சாபமும் ராமாவதாரத்திற்குக் காரணமாகிறது. பரமன் பக்தவத்ஸலனும் பக்தபராதீனனும் அல்லனோ! எனவே சாபத்தை ஏற்று மனிதனாக—ராமனாக அவதரித்தான்.

புத்ரகாமேஷ்டி

सचाप्यपुत्रः नृपतिः तस्मिन् काले महाद्युतिः ।
अयजत् पुत्रियां इष्टिं पुत्रेप्सुररिसूदनः ।
ततो वै यजमानस्य पावकादतुलप्रभम् ।
प्रादुर्भूतं महद्भूतं महावीर्यं महाबलम् ।
तप्त जाम्बूनदमयीं राजतान्त परिच्छदाम् ।
दिव्य पायस सम्पूर्णां पात्रीं पत्नीमिव प्रियाम् ।
प्रगृह्य विपुलां दोर्भ्यां स्वयं मायामयीमिव ।

ஸச அபி அபுத்ர: ந்ருபதி: தஸ்மின் காலே மஹாத்யுதி: ।
அயஜத் புத்ரியாம் இஷ்டிம் புத்ரேப்ஸு: அரிஸூதன: ॥
தத: வை யஜமானஸ்ய பாவகாத் அதுல ப்ரபம் ।
ப்ராதுர்பூதம் மஹத் பூதம் மஹாவீர்யம் மஹாபலம் ॥
தப்த ஜாம்பூநதமயீம் ராஜதாந்த பரிச்சதாம் ।
திவ்ய பாயஸ ஸம்பூர்ணாம் பாத்ரீம் பத்னீமிவ ப்ரியாம் ॥
ப்ரக்ருஹ்ய விபுலாம் தோர்ப்யாம் ஸ்வயம் மாயாமயீமிவ ॥

வா.ரா.பால. - 16

தசரதர் புத்ர காமேஷ்டி யாகத்தைச் செய்தார். யாகம் செய்யும் பொழுது அவர் மனதில் பல்வகை எண்ணங்கள் குழுமிக் கொண்டிருந்தன. இவ்வளவு நாட்களாக இவ்வேள்வியைச் செய்யாமலிருந்து விட்டோம். இப்பொழு தாவது மக்கட்பேறு கிட்ட வேண்டுமே. பிறக்கும் குழந்தைகள் என்னைப் போன்று நாடாளும் திறன் பெற்றிருக்க வேண்டும். பத்து திசைகளிலும் பகையை அடக்கும் வீரம் பெற்றிருக்க வேண்டும். என்போன்று பன்னாட்கள் மக்கட்பேறின்றி மனம் குன்றாமல் உரிய காலத்தில் நன் மக்களைப் பெற்று மகிழ வேண்டும் என்கிற எதிர் கால நினைவினால் முகத்தில் மகிழ்ச்சி அலைமோத புத்ர காமேஷ்டியைச் செய்து முடித்தார்.

உடனே ஆஹவனீயாக்னியிலிருந்து ஒரு புருஷன் மேலே எழுந்தான். அவன் ஜோதிமயமாய்த் தோன்றியதால் யாகசாலையிலுள்ளோர் கண்களால் விழித்துப் பார்த்து இன்னார் என அறிய முடியவில்லை. அவ்வாறு கண்கள் கூசினவாம். அவன் பளபள வென்று மாசு மறுவற்ற பத்தரை மாற்றுத் தங்கத்தாலான—இதுவரை யாரும் பார்த்திராத—பார்ப்போருக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவல்ல அமைப்புடைய ஒரு பாத்திரத்தை இரு கைகளாலும்

தன் மார்போடு இறுகத் தழுவிக் கொண்டிருக்கிறான். பார்ப்பதற்குப் பயில் வான் போன்று வீரமும் வலுவும் பெற்றிருக்கிறான். ஏன்? அப்பாத்திரம் மூச்சடக்கி முழு வலிமையையும் ஒருங்கே திரட்டித் தூக்க வேண்டிய கனம் உடையதாக இருக்கிறது போலும்! கரிய மேனி, இடுப்பில் சிவந்த ஆடை, சிவந்த கண்கள், துந்துபி வாத்யத்தினுடையது போன்ற கம்பீரமான குரல், ஸிம்ஹத்தின் விழிகளை ஒத்த நிறங்கொண்ட ரோமங்கள். மீசைகள், தலை மயிர்கள் எண்ணெய் தடவி வாரிவிட்டவை போன்று காட்சியளிக்கின்றன. ஸாமுத்ரிகா லக்ஷணங்கள் கொண்ட அழகிய உடலமைப்பு, அவ்வவ் உறுப்புக்களுக்குரிய ஆபரணங்கள் உடலுக்கு மேலும் அழகூட்டின. மலைச்சிகரம் போன்ற உயர்ந்த மேனி, திமிர் கொண்ட புலியை ஒத்த பராக்ரமம். அவனைச் சுற்றிக் கதிரவனுடையது போன்ற ஒளி மண்டலம். கொழுந்துவிட்டு எரியும் அக்னியினுடையது போன்ற வெம்மை, அத் தங்கப் பாத்திரத்திற்கு வெள்ளியினாலான மூடி. உள்ளே இருப்பது திவ்யமான பாயஸம். அன்பிற்குரிய மனைவியைப் போன்று பாயஸ பாத்திரத்தை இரு கைகளாலும் அணைத்து எடுத்து வருகிறான்.

இங்கு வெள்ளி மூடியும் தங்கப் பாத்திரமும் தமோ குணத்தையும் ரஜோ குணத்தையும் சுட்டுகின்றன. உள்ளிருக்கும் பாயஸம் ஸத்வ குணத்தைக் காட்டுகிறது. சுத்த ஸத்வமயமான எம்பெருமான் தன்னை பாயஸமாக ஆக்கிக் கொண்டிருக்கிறான். அவன் அவதரித்த பிறகு ரஜோ குண, தமோகுணச் செயல்களைச் செய்ய வேண்டியிருப்பதை இது உணர்த்து கிறது. பரமனே பாயஸ உருவில் இருப்பதால் தன்னைப் பிறர் தாங்க முடியாதே! ஏனெனில் அவன் 14 உலகங்களையும் தன் வயிற்றில் வைத்துக் காப்பவனாயிற்றே! எனவே தன்னை (பாயஸத்தை) தாங்கி எடுத்துவர, தானே ஸங்கல்ப விசேஷத்தினால் அக்னியில் தோன்றும் திவ்ய புருஷனாக வும் ஆனான் போலும்! எனவேதான் வால்மீகியும் திவ்ய புருஷனிடம் பரம புருஷனுக்குரிய இலக்கணங்களைக் கூறியதோடு அவனைச் சுட்டும் போது 'மஹத்பூதம்' என்கிறார். 'ஏக: விஷ்ணு: மஹத்பூதம்' என்று விஷ்ணுவை மஹத்பூதம் என ப்ரமாணம் கூறுகிறது. இக்கருத்தை மஹா கவியான காளி தாஸனும் உறுதிப்படுத்துகிறான்.

हेम पात्र गतं दोर्भ्यां आददानः पयश्चरुम् ।
अनुप्रवेशादाद्यस्य पुंसस्तेनापि दुर्वहम् ॥

ஹேம பாத்ர கதம் தோர்ப்யாம் ஆததான: பயஸ்சரும் ।
அனுப்ரவேஶாத் ஆத்யஸ்ய பும்ஸ: தேன அபி துர்வஹம் ॥

ஆதி புருஷனாகிய நாராயணன் தங்கப்பாத்திரத்தினுள் இருக்கும் பாயஸத்தில் புகுந்து கலந்திருப்பதால் உலகங்கள் அனைத்தையும் தன் னகத்தே கொண்ட அவனை ஒரு கையால் தாங்க முடியாமல் இரு கை களாலும் மார்போடு அணைத்துக் கொண்டு மேலே எழுந்தானாம்! ஒரு

காலத்தில் தேவாஸுரர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது திரண்டு வந்த அமிழ்தத்தைத் தட்டிப் பறித்துச் செல்ல அஸுரர்கள் பூசலிட்டபொழுது பகவான் மோஹினி அவதாரம் எடுக்க வேண்டியதாயிற்றே! அதுபோல தற் சமயம் புத்ரகாமேஷ்டி நடப்பதை அறிந்து ராவணன் தன் படையுடன் வானத்தில் மறைந்து நின்று பாயஸ பாத்ரத்தைப் பிடுங்கிச் சென்றுவிடலா மல்லவா? அதைத் தடுக்க ஒரு அவதாரம் எடுக்க வேண்டிவரும்; அல்லது பிடுங்கி ராவணன் எடுத்துச் சென்றுவிட்டால் அப்பாயஸத்தைப் பருகும் ராக்ஷஸர்களிடம் பக்த ப்ரஹ்லாதனைப் போல நாமும் பிறக்க வேண்டி வரும். தேவர்கட்கு வாக்களித்தபடி தசரதருக்கு மன்னுபுகழ் கோஸலையிடம் அவதரிப்பேன் என்பது பொய்யாகிவிடும். அதற்காகவே தம்மிடமிருந்து பிறர் கவர முடியாதபடி ''மஹாவீர்யம் மஹாபலம்'' என்றபடி சிறப்பிக்கத் தக்க புஜபல பராக்ரமத்தோடு திவ்ய புருஷன் தோன்றியதாக வால்மீகி கூறுகிறார்.

இங்கு பாயஸ பாத்ரம் தங்கமாகவும், மூடி வெள்ளியாகவும் இருந்ததற்கு மற்றொரு கருத்தும் கூறுவதுண்டு. தசரதன் தனக்கு மக்கட்பேறு உண்டானால் பித்ரு ருணம் (பித்ருக்களுக்குரிய கடன்) தீரும் என நினைத் தான். தேவர்கள் ராவண பயம் நீங்க வேண்டும், என நினைத்தனர். இந்த பித்ரு கார்யம் தேவகார்யம் இரண்டும் நிறைவேறப்போவதை முன்கூட்டியே பாத்திரமும் மூடியும் அறிவிக்கின்றனவாம். எவ்வாறு? தேவர்கட்குத் தங்கப்பாத்ரமும் பித்ருக்களுக்கு வெள்ளிப் பாத்ரமும் கொடுக்க வேண்டும் என்பது விதி.

'தேவானாம்ஹிரண்யம் பித்ரூணாம்ரஜதம்' ச்ராத்தத்தில் அன்னத்தை தத்தம் பண்ணும் பொழுது விச்வே தேவர்க்கு ''இதம் ச பாத்ரம் ஸ்வர்ண மயம்'' என்றும், பித்ருக்களுக்கு தத்தம் பண்ணும் பொழுது ''இதம் ச பாத்ரம் ரஜதமயம்'' என்று சொல்வதை அனைவரும் அறிவர்.

समवेक्ष्याब्रवीत् वाक्यं इदं दशरथं नृपम् ।
प्राजापत्यं नरं विद्धि मामिहाभ्यागतं नृप ॥
भगवन् स्वागतं तेऽस्तु किमहं करवाणि ते ।
राजन् अर्चयता देवान् अद्य प्राप्तमिदं त्वया ।
इदं तु नर शार्दूल पायसं देवनिर्मितम् ।
प्रजाकरं गृहाण त्वं धन्य मारोग्य वर्धनम् ।
भार्याणां अनुरूपाणां अश्नीतेति प्रयच्छ वै ।
तासु त्वं लप्स्यसे पुत्रान् यदर्थं यजसे नृप ॥
तथेति नृपतिः प्रीतः शिरसा प्रतिगृह्य ताम् ।
अभिवाद्य च तत् भूतं अद्भुतं प्रिय दर्शनम् ॥

मुदा परमयायुक्तः चकाराभिप्रदक्षिणम् ।
बभूव परम प्रीतः प्राप्य वित्तमिवाधनः ॥

ஸமவேக்ஷ்ய அப்ரவீத் வாக்யம் இதம் தசரதம் ந்ருபம் ।
ப்ராஜா பத்யம் நரம் வித்தி மாம் இஹ அப்யாகதம் ந்ருப ॥
பகவன் ஸ்வாகதம் தே அஸ்து கிம் அஹம் கரவாணி தே ॥
ராஜன் அர்ச்சயதா தேவான் அத்ய ப்ராப்தம் இதம் த்வயா ॥
இதம் து நரஶார் தூல பாயஸம் தேவநிர்மிதம் ।
ப்ரஜா கரம் க்ருஹாண த்வம் தன்யம் ஆரோக்ய வர்த்தனம் ॥
பார்யாணாம் அனுரூபாணாம் அச்னீத இதி ப்ரயச்ச வை
தாஸு த்வம் லப்ஸ்யஸே புத்ரான் யதர்த்தம் யஜஸே ந்ருப ॥
ததா இதி ந்ருபதி: ப்ரீத: ஶிரஸா ப்ரதிக்ருஹ்ய தாம் ॥
அபிவாத்ய ச தத் பூதம் அத்புதம் ப்ரிய தர்ஶனம் ।
முதாபரமயா யுக்த: சகார அபிப்ரதக்ஷிணம் ॥
பபூவ பரம ப்ரீத: ப்ராப்ய வித்தம் இவ அதன: ॥

வா.ரா. பால. - 16

தசரதர் எத்தனையோ வேள்விகளைச் செய்திருக்கிறார். ஹோமாக்னியிலிருந்து ஜ்வாலைகளைத் தவிர வேறு எதுவும் எழும்பியதைப் பார்த்ததில்லை. அதுவும் புருஷ உருவம், ஆச்சரியப்படத் தக்க உடலமைப்பைக் கொண்ட உருவம், அதிலிருந்து எழும் கதிர் வீச்சும் வெப்பமும் அருகில் நெருங்க முடியாததோடு அச்சத்தையும் விளைவிக்கிறது. இதுவரை கண்டிராததைக் கண்டால் எவரும் நடுங்கத்தானே செய்வர்! இது என்ன செய்யுமோ என அஞ்சி ஒதுங்க எண்ணியபொழுது அவ்வுருவம் தசரதரை விளித்து, உற்று நோக்கியது. இந்நிலையில் ஒருவர் என்ன செய்வார்? அலறி ஓடத்தானே செய்வார்! ஆனால் அதற்குள் அவ்வுருவம் தெளிவாகப் பேசிற்று. ''உன்னைத் தேடி வந்த என்னை ப்ரஜாபதியிடமிருந்து வந்த புருஷனாக அறிவாயாக'' என உணர்த்தியதும் அரசர்க்கும் பயம் தெளிந்து மகிழ்ச்சியும் ஏற்பட்டது. உடனே இருகைகளையும் கூப்பிய வண்ணம் ''வருக! வருக!'' என வரவேற்று ''பூஜ்யரே! தாஸன் தங்கட்கு என்ன செய்ய வேண்டும்? காத்திருக் கிறேன்'' எனப் பணிவுடன் கேட்டார்.

''அரசே! தாங்கள் அஶ்வமேதத்தினாலும் புத்ரகாமேஷ்டியினாலும் தேவர்களை அர்ச்சித்து மகிழ்வித்தீர். அதன் பயனாக இதைப் பெற்றுக் கொள்ளும். இது சக்ரவர்த்திக்காக மஹாவிஷ்ணுவினால் தயாரிக்கப்பட்ட பாயஸம். இது உமக்கு நன்மக்களை அளிக்கும், ஐஶ்வர்யத்தை நல்கும். இவற்றை அனுபவிக்க ஆரோக்கியத்தையும் கொடுக்கும். இதைப் பெற்றுச் சென்று உ.ம் மனைவியருக்குக் கொடுத்து சாப்பிடச் செய்யும், அவர்களிடம் இஷ்டியின் பயனாக புதல்வர்களைப் பெறுவீர்'' என அருள, தசரதரும்

மகிழ்வுடன் சிரம் தாழ்த்தி வணங்கி திவ்யமான பாயஸம் நிறைந்ததும் தேவர்களால் அனுக்ரஹிக்கப்பட்டதுமான தங்கப் பாத்திரத்தைப் பெற்றுக் கொண்டு மீண்டும் வணங்கி, அனைவரும் காணவேண்டிய அழகு படைத்த ஆச்சரியப்படத்தக்க தோற்றமுள்ள அப்புருஷனை அளவு கடந்து பொங்கி எழும் மகிழ்ச்சியுடன் ப்ரதக்ஷிணம் செய்தார். அரசனின் மகிழ்ச்சி பரம ஏழை புதையலைப் பெற்றதை ஒக்குமென்பார் வால்மீகி. வந்த காரியம் நிறைவேற புருஷனும் மறைந்தான்.

பாயஸதானம்

सोऽन्तःपुरं प्रविश्यैव कौसल्यांइदमब्रवीत् ।
पायसं प्रतिगृह्णीष्व पुत्रीयन्त्विदमात्मनः ॥
कौसल्यायै नरपतिः पायसार्धं ददौ तदा ।
अर्धादर्धं ददौ चापि सुमित्रायै नराधिपः ॥
कैकेय्यैचावशिष्टार्धं ददौ पुत्रार्थकारणात् ।
प्रददौचावशिष्टार्धं पायसस्यामृतोपमम् ॥
अनुचिन्त्य सुमित्रायै पुनरेव महीपतिः ।
एवं तासां ददौ राजा भार्याणां पायसं पृथक् ॥
तास्त्वेतत् पायसं प्राप्य नरेन्द्रस्योत्तमाः स्त्रियः ।
सम्मानं मेनिरे सर्वाः प्रहर्षोदित चेतसः ॥

ஸ: அந்த: புரம் ப்ரவிஶ்யைவ கௌஸல்யாம் இதம் அப்ரவீத் ।
பாயஸம் ப்ரதிக்ருஹ்ணீஷ்வ புத்ரீயம் து இதம் ஆத்மன: ॥
கௌஸல்யாயை நரபதி: பாயஸார்த்தம் ததௌ ததா ।
அர்த்தாத் அர்த்தம் ததௌ சாபி ஸுமித்ராயை நராதிப: ॥
கைகேய்யை ச அவசிஷ்டார்த்தம் ததௌ புத்ரார்த்த காரணாத் ॥
ப்ரததௌ ச அவசிஷ்டார்த்தம் பாயஸஸ்ய அம்ருதோபமம் ।
அனுசிந்த்ய ஸுமித்ராயை புனரேவ மஹீபதி: ॥
ஏவம் தாஸாம் ததௌ ராஜா பார்யாணாம் பாயஸம் ப்ருதக் ॥
தாஸ்து ஏதத் பாயஸம் ப்ராப்ய நரேந்த்ரஸ்ய உத்தமா: ஸ்த்ரிய: ।
ஸம்மானம் மேனிரே ஸர்வா: ப்ரஹர்ஷோதித சேதஸ: ॥

வா.ரா. பால. - 16

அச்வமேதம், புத்ரகாமேஷ்டி ஆகிய இருவேள்விகள் நடைபெற்றன. யாக சாலையில் யஜமான பத்னிகள் தங்குவதற்குத் தனி இடமுண்டு. அரசனின் மனைவி தங்குமிடத்தை அந்தப்புரம் என்பர். இங்கு அந்தப்புரத்தில்

கௌஸல்யை, ஸுமித்ரை, கைகேயி ஆகிய பட்ட மஹிஷிகள் இருந்தனர். பாயஸ பாத்ரத்தை எடுத்துக் கொண்டு அந்தப்புரம் சென்றார் தசரதர். பாயஸத்தில் சரிபாதி பாகத்தை கௌஸல்யைக்கு அளித்தார். மூத்தவளான படியால் முதலில், பிறரைவிட அதிகமாகவும் கிடைத்தது. அமிழ்தம் போன்ற அப்பாயஸத்தை மகனைப் பெறும் மகிழ்ச்சியினால் உடனே பருகிவிட்டாள். யாக புருஷன் கொடுத்த பாயஸத்தில் பாதி மீதியிருந்தது. அதில் பாதியை ஸுமித்திரைக்கு அளித்தார். கையில் இருந்ததை அப்படியே கைகேயிக்குக் கொடுக்காமல் அதில் பாதியை மாத்திரமே கைகேயிக்குக் கொடுத்தார். ஆக பாயஸத்தில் 8-ல் 4 பாகம் கௌஸல்யைக்கும், 8-ல் 2 பாகம் ஸுமித்திரைக்கும் 8-ல் ஒரு பாகம் கைகேயிக்கும் கொடுத்தாகிவிட்டது. ஒரு பாகம் மீதம் உள்ளது. இதை யாருக்குக் கொடுப்பது என்பது பற்றி ஆழ்ந்து சிந்தித்தார்.

முன்பே ஸுமந்த்ரர் வாயிலாகத் தனக்கு நான்கு குமாரர்கள் அவதரிக்கப் போவதாக அறிந்திருந்தார். எனவே இந்த பாகத்தைச் சாப்பிடுபவருக்கு இரண்டு குமாரர்கள் பிறப்பர். இந்த வாய்ப்பை யாருக்கு அளிக்கலாமென்பதை ஆலோசித்தார். மேலும் கைகேயிக்கு அளித்தால் ஸுமித்ரைக்கும் கைகேயிக்கும் பங்கு ஸமமாகிவிடும். இது உசிதமில்லை. சிறியவளான கைகேயியைவிட பெரியவளான ஸுமித்ரைக்கு அதிக பங்கு கொடுப்பதே நீதியாகும். மூத்தவளான கௌஸல்யைக்கே கொடுத்தால் அவளுக்கு ஐந்து பங்கு ஆகிவிடும். அப்பொழுது மற்ற இருவரும் மூத்தவளிடம் பொறாமைப் பட ஏதுவாகும்.

கௌஸல்யை கைகேயியைப் பற்றியும் கைகேயி கௌஸல்யையைப் பற்றியும் ஸுமித்ரையிடம் முறையிடுவது வழக்கம். ஸுமித்ரை தன் பெயருக்கேற்ப இருவரிடமும் நட்புடன் பழகுபவள். எனவே இவற்றை எல்லாம் ஆலோசித்து ஸுமித்ரைக்கே கடைசி பாகத்தைக் கொடுத்தார். முதலில் தனக்குப் பாயஸம் கொடுக்கும் போது தசரதர் முகத்தில் கேள்விக் குறியைக் கண்ட ஸுமித்ரை சக்ரவர்த்தி கையிலுள்ளதை யாருக்கு கொடுக்கிறார் என்பதை அறியும் ஆவலினால் சாப்பிடாமலிருந் தாள். கைகேயி உடனே சாப்பிட்டுவிட்டாள். பின்னர் ஸுமித்ரை பாகத்தைச் சாப்பிட்டாள்.

ஆக சாப்பிட்டவர்களின் வரிசைப் படி கௌஸல்யை, கைகேயி, ஸுமித்ரை மக்களைப் பெற்றனர். கோஸலைக்களித்த பாயஸத்தை அடுத்த பாயஸாம்சமான லக்ஷ்மணன் கோஸலை மகன் ராமனையும், கைகேயிக்கு அளித்த பாயஸத்தை அடுத்த பாயஸாம்சமான சத்ருக்னன் கைகேயி மகன் பரதனையும் சார்ந்து வளர இது காரணமாயிற்று. இதனால் ஸுமித்திரையிடம் ''உன் பிள்ளையை கௌஸல்யை அரண்மனைக்கு அனுப்புவாய், என்னிடம் அனுப்புவாயா? நான் இளப்பம் தானே'' எனக் கைகேயியும், ''உன் பிள்ளை பரதனோடு தான் விளையாடப்போவான். என் பிள்ளை ராமனைக் கண்டால் பிடிக்கவில்லை போலும். ஏனோ இந்த ஓரவஞ்சனை'' எனக் கோஸலையையும் ஏசிப் பேச வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இதை

யெல்லாம் ஆலோசித்துத்தான் ஸாதுவான ஸுமித்திரைக்குக் கஷ்டம் நீங்கட்டுமென மீண்டும் பாயஸ பாகத்தைக் கொடுத்தார்.

சிலருக்கு ஒழுங்காக வினியோகம் பண்ணத் (கொடுக்க) தெரியாது. முன்னாடி இருப்பவர்கட்கு சுண்டலை நிறைய அள்ளி வீசிவிட்டுக் கடைசியில் அக்ஷதை போடுவதுபோல் தூவி விட்டுப் பாத்திரத்தைக் கவிழ்த்துக் காட்ட ஆரம்பித்து விடுவார்கள். அப்படியல்ல தசரதர். பகவத் ஸங்கல்பம் அறிந்து பாயஸ வினியோகம் செய்தார். இதன்படி ராமன் விஷ்ணுவின் பாதி அம்சமாகவும், லக்ஷ்மணன் கால் அம்சமாகவும், பரதனும் சத்ருக்னனும் அரைக்கால் அரைக்கால் அம்சமாகவும் அவதரித்தனர் என்பர். சாப்பிட்ட முறைக்கேற்ப ராமன் எல்லோரினும் மூத்தவனாகவும், பரதன் மற்ற இருவரையும் விட மூத்தவனாகவும் ஆனான்.

இங்கு திலகர் உரையில் பாயஸ தானம் வேறு வகையில் கூறப்படு கிறது. அரசர் பாயஸத்தை இருகூறாக்கி கௌஸல்யைக்குப் பாதியைக் கொடுத்து அவளை ஸுமித்ரைக்கு அதில் பாதியைக் கொடுக்கும்படியும். தன் கையிலுள்ள மற்றொரு பாதியை கைகேயிக்குக் கொடுத்து அதில் பாதியை ஸுமித்ரைக்குக் கொடுக்கும்படியும் சொன்னாராம். இதைக் காளிதாஸர்.

अर्चिता तस्य कौसल्या प्रिया केकय वंशजा ।
अतः सम्भावितां ताभ्यां सुमित्रां ऐच्छदीश्वरः ॥

அர்சிதா தஸ்ய கௌஸல்யா ப்ரியாகேகய வம்சஜா ।
அத: ஸம்பாவிதாம் தாப்யாம் ஸுமித்ராம் ஐச்சத் ஈச்வர: ॥

மூத்தவளை கௌரவிக்கும் வகையில் முதலில் கௌஸல்யைக்கும், அன்பிற்குரியவள் என்ற வகையில் கைகேயிக்கும் பாதிப் பாதி கொடுத்து அவ்விருவரையும் தம்தம் பங்கிலிருந்து ஸுமித்திரைக்குக் கொடுக்கச் சொல்லி அவ்விருவரால் ஸுமித்திரை கௌரவிக்கப்படும்படி செய்தாராம். இதனால் மூவரிடமும் ஸௌஜன்யம் (நட்பு) நிலவும் எனக் கருதினார் போலும்.

ते पिण्ड प्राशने काले सुमित्रायै महीपतेः
पिण्डाभ्यां अल्पमल्पं तु स्व भगिन्यै प्रयच्छतः ।

தே பிண்ட ப்ராசனே காலே ஸுமித்ராயை மஹீபதே: ।
பிண்டாப்யாம் அல்பம் அல்பம் து ஸ்வபகின்யை ப்ரயச்சத: ॥

கோஸலையும், கைகேயியும் தங்களுக்கு அளித்த பாயஸத்தைச் சாப்பிடும்பொழுது தம் பாகங்களினின்றும் சிறிதளவு தம் தங்கையான ஸுமித்திரைக்குக் கொடுத்தார்கள் என நாரதீயம் கூறும். இவ்வாறு கொடுத்ததினால் கோஸலை கொடுத்த பங்கிலிருந்து ஸுமித்திரைக்குப்

பிறந்த லக்ஷ்மணன் கோஸலை மகன் ராமனோடும், கைகேயி கொடுத்த பங்கிலிருந்து அவதரித்த சத்ருக்னன் கைகேயி மகன் பரதனோடும் அதிகத் தோழமை பூண்டு வாழ்ந்தார்கள் என பாத்மம் கூறுகிறது.

சிரோமணி என்பவரின் உரையில் பாயஸத்தை எட்டு பாகமாகக் கொண்டு 5 பாகத்தைக் கோஸலைக்கு அளித்து அதில் ஒன்றரை பாகத்தை ஸுமித்ரைக்குக் கொடுக்கச் செய்தார். கையிலுள்ள மூன்று பாகத்தை கைகேயிக்குக் கொடுத்து அதிலிருந்து ஒன்றரை பாகத்தை ஸுமித்திரைக்குக் கொடுக்கச் சொன்னார். ஆக கௌஸல்யை 3 1/2 பாகமும், ஸுமித்திரை 3 பாகமும் கைகேயி 1½ பாகமும் பெற்றார்கள்.

இந்த பாயஸப் பங்கீட்டில் மனைவிகள் மூவரும் தம்மிடம் குறை காணாது அன்புடன் இருக்க வேண்டும் என்பதிலும், மூவரும் தங்களுக்குள் நேசத்துடன் பழக வேண்டும் என்பதிலும், வீட்டிலும் நாட்டிலும் அரசன் என்ற முறையில் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதிலும் தசரதர் மிக்க கவனம் செலுத்தியிருக்கிறார் என்பதை நாம் அறிய முடிகிறது.

செய்ம் முறை கடன்முறை திறம்பல் இன்றியே
மெய்ம் முறை கடவுளுக்கு ஈந்து, விண்ணுளோர்க்கு
அம்முறை அளித்து நீடு அந்தணாளர்க்கும்
கைம்முறை அளித்தனன் கனக மாரியே.

க.ரா. பால.- திருவவதாரம்

தசரதன் தான் செய்த யாகங்களில் மஹாவிஷ்ணுவுக்கும், அவி யுணவினரான தேவர்கட்கும் யாக ப்ரயோகங்களில் கூறியபடியே ஹவிர் பாகத்தை அளித்து அவர்களை மகிழ்வித்தான். ப்ரஸன்னர்களான தேவர் களும் தேவதேவனான ஸ்ரீமந் நாராயணனும் மன்னன் கோரிய நற்புதல்வர் களைப் பெற அருள்பாலித்தனர்.

தேவர்கள் தசரதனுக்குப் புதல்வர்களாக அவதரிக்க வேண்டுமென ஸ்ரிய: பதியை வேண்டியபடியாலும், தசரதன் குலத்தோனான இக்ஷ்வாகு மன்னன் தவம் புரிந்து பிரமனிடமிருந்து திருவரங்கனை அர்ச்சாமூர்த்தியாகப் பெற்று இன்றுவரை குறைவறத் தலைமுறை தலைமுறையாக ஆராதித்து வருகின்றபடியாலும் ஏற்பட்ட பரம க்ருபையினால் திருமால் பாயஸ உருவில் மன்னன் மனைவியரை அடைந்ததினால் மன்னன் கோரிய பயன் கிடைப்பது உறுதியாயிற்று. எனவே அரசனின் மகிழ்ச்சி அளத்தற்கு அரியதாயிற்று. இப்பேற்றைப் பெறுதற்கு உதவியவர்கள் வேள்வியின் போது இடைவிடாது வேதமோதிய அந்தணர்களும், வேள்விகளை நடத்திக் கொடுத்த ரித்விக்கு களுமாம். எனவே சான்றோர்களாகிய அவர்கட்கு வானம் நீரைப் பொழிவது போன்று தன் இருகைகளாலும் தசரதன் பொன்மாரி பொழிந்தான். வேள்வி களும் வைதிக கர்மாக்களும், வேதம் ஓதியவர்களும், ப்ரஹ்ம வித்துக்களு

மான (மெய்ப்பொருளறிந்தவர்) அந்தணர்கட்கு தக்ஷிணையைக் குறைவற அளிப்பதினாலேயே பூர்த்தியைப் பெறுகிறது.

(தர்ம சாஸ்த்ரங்கள் நமக்குப் பிறவி முதல் இறக்கும் வரையிலும், இறந்த பிறகும் வைதிக ஸம்ஸ்காரங்களைச் சொல்லியிருக்கின்றன. உப நயன விவாஹாதிகளும் ஸம்ஸ்காரங்களே. இவற்றை ஒரு குடும்ப விழாவாக நடத்தி வருகிறோம். ப்ருஹஸ்பதியிடம், வைதிக கார்யத்தை நடத்தி முடிக்க மொத்தமாக ஒரு தொகையைப் பேசிக் கொடுத்துவிட்டு நம்மிஷ்டப்படி கச்சேரி டான்ஸ் முதலியவைகளில் ஏராளமாக செலவு செய்கிறோம். முறை யான ஸ்னான ஸந்த்யாவந்தனாதிகள் கிடையாது. பெரும்பாலான வரன்கள் (மணமக்கள்) மந்த்ரங்களைச் சொல்வது கிடையாது. யஜமானனும் அந்தந்த ஸந்தர்ப்பங்களில் கொடுக்க வேண்டிய தக்ஷிணைகளைக் கொடுப்பது இல்லை. மந்த்ரங்களும் தக்ஷிணைகளும் புதுமண தம்பதிகளின் நல்வாழ்வுக் காகவே ஏற்பட்டன. எனவே தசரதரைப் போன்று வைதிக கார்யங்களைச் சிரத்தையுடன் செய்வதில் நம்மவர்கட்கு ஆர்வம் தேவை).

வேந்தர்கட்கு அரசொடு வெறுக்கை தேர் பரி
வாய்ந்தநல் துகிலொடு வரிசைக்கு ஏற்பன
ஈந்தனன், பல்லியம் துவைப்ப ஏகி நீர்
தோய்ந்தனன் ஸரயு நல் துறைக்கண் எய்தியே.

க.ரா.பால. - திருவவதாரம்

மேலும் வேள்விகளில் பங்கு கொள்வதற்கென வந்திருந்த அரசர்கட்கு தசரதன், ரத்னங்கள், தேர்கள், குதிரைகள் அழகிய பட்டாடைகள் ஆகிய வற்றை அவரவர் தகுதிக்கேற்ப அளித்து கௌரவப்படுத்தினான். சிற்றரசர் கட்கு அந்தந்த நாட்டை மீண்டும் ஆண்டுவர உரிமை அளித்தான். பின்னர் பல்வகை வாத்யங்கள் முழங்க ரித்விக்குகளோடும் நாட்டு மக்களோடும் ஸரயூ நதிக்குச் சென்று (வேள்விகள், உத்ஸவங்கள், முடிந்தவுடன் செய்யும் நீராடல்) சான்றோர்கள் நீராடும் துறையில் இறங்கி அவப்ருதஸ்னானம் செய்தான்.

अनाहूतोऽध्वरं गच्छेत् आहूतः स्मार्तकर्मसु ॥

அனாஹூத: அத்வரம் கச்சேத் ஆஹூத: ஸ்மார்த்த கர்மஸு ॥

அழையாமலே (அழைக்காவிடினும்) வேள்விகளுக்குச் செல்ல வேண்டும் என சாஸ்த்ரம் விதிக்கிறது. யக்ஞதர்சனமும், கடைசியில் யஜமானனோடு அவப்ருதஸ்னானம் செய்வதும், யாகத்திற்குத் தேவையான பொருள்களை தங்களாலான வரை அளித்து உதவுவதும் மிகுந்த புண்யத்தை அளிக்க வல்லது. ஸ்மார்த்த கர்மாக்களுக்குத்தான் (ஸ்வாஹாதிகளுக்கு) அழையாமல் போவதில்லை.

முரசு இனம் கறங்கிட, முத்த வெண் குடை
விரசி மேல் நிழற்றிட, வேந்தர் சூழ்தர,
அரசவை அடைந்துழி அயனும் நாணுற
உரை செறி முனிவன்தாள் வணங்கி ஓங்கினான்.

க.ரா.பால. - திருவவதாரம்

தசரதன் அவபிருத ஸ்நானத்தை முடித்துக் கொண்டு மீண்டும் ராஜ சபைக்குப் புறப்பட்டான். முரசு, மத்தளம் முதலிய வாக்யங்கள் மங்கள ஒலியை எழுப்ப, வெண் முத்துக்களிலான வெண்கொற்றக் குடை நிழல்தர, அரசர் குழாம் சூழ்ந்துவர, அவையை அடைந்தான். அங்கு நினைத்தபடி நடத்தும் சொல்வன்மையை உடையவரும் (நான்கு நாக்குகளைப் பெற்ற பிரமனே வெட்கும்படி) வேதங்களையே எப்பொழுதும் கூறும் நா படைத்தவரும், தன் குலகுருவுமான வஸிஷ்ட முனிவரின் திருவடிகளில் பணிந்து வணங்கி ஆசி பெற்றான். பின்னர் வஸிஷ்டரின் ஆணைக்கிணங்க தனக்கு புத்ரகாமேஷ்டி யாகத்தை முன் நின்று நடத்திக் கொடுத்த ரிஸ்யஸ்ருங்க முனிவரையும் வணங்கி ஆசி பெற்றுப் பரிவாரங்களுடன் நகருக்குச் சென்றான்.

ततस्तु राजा प्रतिवीक्ष्य ताः स्त्रियः
प्ररूढगर्भाः प्रतिलब्ध मानसः ॥

ததஸ்து ராஜா ப்ரதிவீக்ஷ்ய தா: ஸ்த்ரிய:
ப்ரரூடகர்பா: ப்ரதிலப்தமானஸ: ॥

வா.ரா.பால.-16

ராஜ மஹிஷிகள் பருகிய பாயஸம் திவ்யமானது. பரமன் தன்னையே பாயஸமாக ஆக்கிக் கொண்ட பாயஸம். அக்னி புருஷனால் நேராகக் கொடுக்கப்பட்டது. மஹர்ஷிகளாலும் தேவர்களாலும் அனுக்ரஹிக்கப் பட்டது. எனவே அதைப் பருகியதும் மனைவியர் கருவுற்றனர். அவர்களைப் பார்த்த அளவிலேயே கருவுற்றிருப்பதை தசரதன் உணர்ந்தான். மசக்கை யினால் வருந்துவதையும், உடல் வெளுத்திருப்பதையும், கண்கள் குழிந் திருந்ததையும், கண்ட அரசனுக்கு மன நிம்மதியும் மகிழ்ச்சியும் உண்டான தில் வியப்பென்ன? மேலும் அவர்கள் கூறும் கனவுகளைப் பற்றிய கூற்றும் பரமனே தனக்கு மகனாகப் பிறக்க இருக்கிறான் என்பதை உறுதிப்படுத்திற்று.

ராணிகளின் கனவுகள்

गुप्तं ददृशुरात्मानं सर्वाः स्वप्नेषु वामनैः ।
जलज असि गदा शार्ङ्ग चक्र लांछित मूर्तिभिः ।

हेम पक्ष्म प्रभाजालं गगने च वितन्वता ।
उह्यन्ते स्म सुपर्णेन वेगाकृष्ट पयोमुचा ॥
पर्युपास्यन्त लक्ष्म्या च पद्मव्यजनहस्तया
कृताभिषेकैः दिव्यायां त्रिस्रोतसि च सप्तभिः
ब्रह्मर्षिभिः परं ब्रह्म गृणद्भिः उपतस्थिरे ।
ताभ्यः तथाविधान् स्वप्नान् श्रुत्वा प्रीतोऽथ पार्थिवः ।
मेने पारार्थ्यमात्मात्मानं गुरुत्वेन जगद्गुरोः ।
विभक्तात्मा विभुः तासां एकः कुक्षिष्वनेकधा ।
उवास प्रतिमा चन्द्रः प्रसन्नानां अपामिव ॥

குப்தம் தத்ருஶு: ஆத்மானம் ஸர்வா: ஸ்வப்னேஷு வாமனை: ।
ஜலஜ அஸி கதா ஶார்ங்க சக்ர லாஞ்சித மூர்த்திபி: ॥
ஹேம பக்ஷ்ம ப்ரபா ஜாலம் ககனே ச விதன்வதா ।
உஹ்யந்தே ஸ்ம ஸுபர்ணேன வேகாக்ருஷ்ட பயோமுசா ॥
பர்யுபாஸ்யந்த லக்ஷ்ம்யா ச பத்ம வ்யஜன ஹஸ்தயா ॥
க்ருதாபிஷேகை: திவ்யாயாம் த்ரிஸ்ரோதஸி ச ஸப்தபி: ।
ப்ரஹ்மர்ஷிபி: பரம் ப்ரஹ்ம க்ருணத்பி: உபதஸ்த்திரே ॥
தாப்ய: ததாவிதான் ஸ்வப்னான் ஶ்ருத்வா ப்ரீதோஅதபார்த்திவ: ।
மேனே பாரார்த்யம் ஆத்மானம் குருத்வேன ஜகத்குரோ: ॥
விபக்தாத்மா விபு: தாஸாம் ஏக: குக்ஷிஷு அனேகதா ।
உவாஸ ப்ரதிமா சந்த்ர: ப்ரஸன்னானாம் அபாம் இவ ॥

ரகுவம்சம் - 10. 61

மூவரும் கருத்தரித்த பிறகு சங்கம், சக்ரம், கதை, ஶார்ங்கம், கட்கம் ஆகிய திவ்யாயுதங்களைக் கைகளிலேந்தியவரும், குள்ளமான உருவத்தினருமான புருஷர்கள் தங்களைப் பாதுகாத்து வந்தனராம். நாராயணனே இவர்களின் திருவயிற்றுக்கு எழுந்தருளின படியால் ஸ்ரீ வைகுண்ட காவலர்களும் உடன் வந்தனர் போலும். ஒரு நாள் வேத ஸ்வரூபனான கருடாழ்வான் ஓடோடியும் வந்து இம்மூவரையும் தன் முதுகின் மீது ஏற்றிக் கொண்டு தனது நீண்டு அகன்ற பொன்மயமான சிறகுகளை விரித்து வானவீதியில் விரைந்து சென்றானாம். இறக்கைகளின் பொன்னிறக் கதிர்கள் எங்கும் பரவியதால் வானமே தங்கமயமாகக் காட்சியளித்தது. கருத்மானின் வேகத்தினால் எழும்பிய காற்று இழுக்க நீருண்ட மேகங்கள் பின் தொடர்ந்தனவாம். மேகங்களின் கருமை, சிறகுகளின் பொன்னிறம், கருட மூர்த்தியின் வெண்மை, இவற்றின் நடுவே ராணிகள் எல்லாம் சேர்ந்த அரியதோர் அற்புதக் காட்சி வானத்தில் உருவாகியது.

மற்றொரு நாள் மஹாலக்ஷ்மி ஸர்வாபரண பூஷிதையாய் ராணிகளின் அருகில் வந்து நன்கு அகன்று அலர்ந்த தாமரைப் பூவையே விசிறியாகக் கொண்டு விசிறினாள். உண்மை. இவர்கள் திருவயிற்றில் நாராயணன் குடி புகுந்திருப்பதைத் தேடி வந்து அவருக்கு விசிறியினால் சைத்யோபசாரம் பண்ணினாள் போலும்.

ஒருநாள் ப்ரஹ்மர்ஷிகளான அத்ரி, ப்ருகு, குத்ஸர், கபிலர், கௌதமர், கஶ்யபர், ஆங்கிரஸ் ஆகிய எழுவரும் ஆகாச கங்கையில் நீராடித் தூய்மை யுடன் ராணிகளின் அருகில் வந்து வணங்கி அமர்ந்து வேதாந்த விசாரம் பண்ணிக் கொண்டிருந்தனர். மற்றொரு ஸமயம் மரீசி, அங்கிரஸ், அத்ரி, புலஸ்த்யர், புலஹர், க்ரது, வஸிஷ்டர் ஆகிய ஸப்தர்ஷிகள் ஆகாச கங்கையில் ஸ்னானம் செய்து நேராக தசரதரின் அரண்மனைக்கு எழுந்தருளி வேத பாராயணம் செய்து கொண்டிருந்தனர். (தினந்தோறும் கோயிலுக்குச் சென்று வேதபாராயணம் செய்வதோ, வேதங்களைக் கற்காவிடில் விஷ்ணு ஸஹஸ்ர நாமங்களைப் பாராயணம் செய்வதோ நமது தலையாய கடமையாகும். பரமன் இருக்கும் இடம் தானே கோயில். பரமன் ராணிகளின் மணிவயிற்றில் இருப்பதால் அவர்களே கோயில்களாவர். எனவே மஹர்ஷிகள் அங்கு வரத் தொடங்கினர் போலும்.)

தன் மனைவியர் ஆச்சரியமான கனவுகளைத் தினந்தோறும் சொல் வதைக் கேட்ட தசரதர் தன்னை அனைவரினும் மிகமிக உயர்ந்தவ னாகக் கருதி மகிழ்ந்தானாம். பரமன் நமக்கெல்லாம் குரு. இத்தகைய குருவுக்கும் குருவானபடியால் தன்னை உயர்ந்தவனாகக் கருதுவதில் தவறில்லையே! குரு என்றால் ஆசாரியனுக்கும் பெயர். தந்தைக்கும் பெயர். தசரதன் இப்பொழுது பரமனுக்கும் தகப்பன் ஆகிவிட்டான் அல்லவா?

பரதத்வமான ஸ்ரீமன் நாராயணன் ஒருவனே. அவனோ விபுவானவன். அதாவது எங்கும் பரவி இருப்பவன். அவன் இல்லாத இடமே கிடையாது. எங்கும் இருப்பினும் தாமரை இலையில் நீர் ஒட்டாதது போல் உலகிலுள்ள தோஷங்கள் அவன் மீது ஒட்டாது. அவனை ஹேயப்ரதிபடன் என்று வேதாந்தம் கூறும். அனைத்துக் கல்யாண குணங்களோடு கூடியவன். பரத்வம் எனும் உயர்வு அவனிடம் இருப்பினும் ஸௌலப்யம் எனும் எளிமையும் அவனிடம் குடி கொண்டிருப்பதால் நல்லோர்கட்கு நலம் செய்யவே நம் போன்றவர் வாழ வேண்டிய பெண்கள் வயிறுகளில் வாழ்ந்து அவதரிக்கத் தலைப்பட்டான். ஆயினும் அவன் மீது எவ்வித மாசும் ஒட்டாது. புருஷோத்தமனோ ஒருவன், அவன் எவ்வாறு மூவரிடமும் தங்கினான்? எனில் காளிதாஸன் எளிதாக அதை விளக்குகிறான். குளத்தில் தெளிந்த தூயநீர். அதில் ஒரு கல்லை எறிந்தால் அலைபடர்கிறது. அப்பொழுது முதலில் குளத்தில் நாம் பார்த்த பௌர்ணமி சந்திரன் ஒருவனே பலவாகக் காட்சி அளிப்பதில்லையா? அதே போன்று நாராயணன் ஒருவனே ராணிகள்

மூவரின் வயிறுகளிலும் தோன்றியிருக்கிறான். பரமன் ஒருவனே, அவன் திருமேனிகளோ (சரீரமோ) பலப்பல. எங்கும் பரவியவன் மூவரிடமும் வெவ்வேறு சரீரத்தோடு காட்சி அளிக்கிறான். அவனுக்கு நம்மிடமுள்ள வாத்ஸல்யமும் (பாசமும்) கருணையும், உயர்வு தாழ்வு பாராட்டாது அனைவரோடும் கலந்து பழகும் சால்பும்தான் மனித வயிறில் அவனைத் தங்கும்படி செய்துவிட்டது எனலாம்.

பிறப்பு சேவைக்காகவே

पुत्रत्वं तु गते विष्णौ राज्ञस्तस्य महात्मनः ।
उवाच देवताः सर्वाः स्वयंभूः भगवानिदम् ।
सत्यसन्धस्य वीरस्य सर्वेषां नः हितैषिणः ।
विष्णोः सहायान् बलिनः सृजध्वं कामरूपिणः ।
मायाविदश्च शूराश्च वायुवेग समान् जवे ।
नयज्ञान् बुद्धिसम्पन्नान् विष्णु तुल्यपराक्रमान् ।
अप्सरस्सु च मुख्यासु गन्धर्वीणां तनूषु च ।
यक्षपन्नग कन्यासु ऋक्ष विद्याधरीषु च ।
पूर्वमेव मयासृष्टः जाम्बवानृक्षपुङ्गवः ।
जृम्भमाणस्य सहसा ममवक्त्रा दजायत ।

புத்ரத்வம் து கதே விஷ்ணௌ ராக்ஞ: தஸ்ய மஹாத்மன: ।
உவாச தேவதா: ஸர்வா: ஸ்வயம்பூ: பகவான் இதம் ॥
ஸத்ய ஸந்தஸ்ய வீரஸ்ய ஸர்வேஷாம் ந: ஹிதைஷிண: ।
விஷ்ணோ: ஸஹாயான் பலின: ஸ்ருஜத்வம் காமரூபிண: ॥
மாயாவித: ச சூரா: ச வாயுவேகஸமான் ஜவே ।
நயக்ஞான் புத்திஸம்பன்னான் விஷ்ணுதுல்ய பராக்ரமான் ॥
அப்ஸரஸ்ஸு ச முக்யாஸு கந்தர்வீணாம் தனூஷு ச ।
யக்ஷ பன்னக கன்யாஸு ரிக்ஷ வித்யா தரீஷுச ॥
ஜ்ரும்பமாணஸ்ய ஸஹஸா மம வக்த்ராத் அஜாயத ॥

வா. ரா. பால. - 17.

வானுளோர் அனைவரும் வானரங்களாக்
கானினும் வரையினும் கடி தடத்தினும்
சேனையோடு அவதரித்திடுமின் சென்றுஎன
ஆனனம் மலர்ந்தனன் அருளின் ஆழியான்

க.ரா.பால. திருவவதாரம்

நாராயணன், தான் தசரதபுத்ரனாக அவதரிப்பதாக உறுதி கூறி மறைந்த தாக முன்பு கூறினோம். மறைவதற்கு முன் பரமன் தேவர்களை நோக்கி அருளியதாவது :- ''விண்ணுலகினராகிய நீங்கள் அனைவரும் எனக்கு உதவு வதற்காக பூவுலகிலுள்ள காடுகளிலும், மலைகளிலும், சோலைகளிலும் பிறந்து வாழ வேண்டும்'' என்று. பின்னர் பரமன், திவ்ய பாயஸத்தின் மூலமாக தயரதனின் தேவியரின் கருவில் தங்கினான். இதை அறிந்த நான்முகன் தேவர்களை நோக்கி ''தேவர்களே! பிறப்பிலியான பரமன் நம் அனைவருடைய நன்மையை விரும்பி கர்பவாஸம் செய்யத் தொடங்கி விட்டான். அவன் சொன்ன சொல் தவறாதவன். நாமும் அவன் உத்தரவுப்படி பூமியில் பிறக்க வேண்டும். அவனோ விஷ்ணு; எங்கும் பரவி வாழ்ந்து வருபவன். அவனுக்கு எங்கெங்கு உதவி தேவையோ அங்கெல்லாம் நாம் தயாராக இருக்க வேண்டும். மேடு, பள்ளம், மலை, குஹை, சோலை என்கிற வேற்றுமை பாராட்டாது நாம் வாழ்வதற்குச் சிறிதும் ஏற்புடையதாக இல்லாதிருப்பினும் ஆங்காங்கு தங்கிப் பரமனுக்கு உதவ வேண்டும். மேலும் நினைத்த உருவத்தை எடுத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். செயலில் ஆச்சரியமான அதாவது வியக்கத்தக்க ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். பணியாற்றுவதில் வாயுவைப் போன்ற வேகமும், அதற்கேற்ற நீதியும், அறிவுத் திறனும் மஹாவிஷ்ணுவைப் போன்ற பேராற்றலும் மஹேந்த்ர மலையைப் போன்ற உடல் வலியும் பெற்றிருக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டான்.

நான்முகன் மேலும் தேவர்களை நோக்கி ''ஒரு ஸமயம் இராவணன் கைலாஸத்திற்குச் சென்ற போது வழியில் சிவனின் தாஸனான குரங்கு முகமுடைய நந்தியைப் பார்த்துப் பரிஹாஸம் செய்தான்.

तस्मात् मद्रूप संयुक्ताः मद्वीर्य समतेजसः ।
उत्पत्स्यन्ति वधार्थं हि कुलस्य तव वानराः ॥

தஸ்மாத் மத்ரூப ஸம்யுக்தா: மத்வீர்ய ஸமதேஜஸ: ।
உத்பத்ஸ்யந்தி வதார்த்தம் ஹி குலஸ்ய தவ வானரா: ॥

வா.ரா. உத்தர. - 16

அப்பொழுது நந்தி தேவர், 'ராவணா! நீ என்னை குரங்கு முகமென இகழ்ந்து பேசிய படியால் என் போன்றவர்களும், எனக்கு நிகரான வீர்யமும் பராக்ரமமும் உடையவர்களுமான வானரங்கள் உன்னையும் உன் குலத்தினரையும் அழிக்கப் பிறக்கப் போகிறார்கள்' என சபித்திருக்கிறார். (எவ்வளவோ புண்யங்களைச் செய்து சுவர்க்கத்தில் தேவர்களாகத் தோன்றிய நாம் மீண்டும் பூவுலகிற்கு செல்வதும், அங்கு குரங்குளாகப் பிறப்பதும் விரும்பத்தகாததாயிற்றே. மேலும் பார்வதியின் சாபத்தினால் தம் தம் மனைவிமாரிடம் தேவர்களாகிய நமக்கு மக்கட்பேறு கிடையாதே எனத்

தேவர்கள் நினைக்க ''நந்திதேவரின் சாபத்தினால் குரங்குகளாகவோ கரடி களாகவோ பிறந்தால்தான் நம் பகையை ஒழிக்க முடியும். தம் மனைவி யரிடம் பிறப்பிக்க முடியாது போனால் பிற தேவஸ்த்ரீகளின் மூலமாகப் பிறப்பிக்கலாம். அதாவது நீங்களும் ஆற்றல் மிக்க அப்ஸரஸ்ஸுகளிடமோ கந்தர்வ பெண்களிடமோ, யக்ஷர், பன்னகர், வித்யாதரர் போன்ற தேவ கன்னிகைகளிடமோ பிறக்க வேண்டும். நான் கூட ஒரு ஸமயம் கொட்டாவி விடும்பொழுது எனது வாயினின்றும் ஜாம்பவான் எனும் கரடியைப் பிறப்பித்திருக்கிறேன்'' என்றார்.

நான்முகனின் ஆணைக்கிணங்க இந்திரன் வாலியையும்,* ஸூரியன் ஸுக்ரீவனையும், தேவ குருவான பிருஹஸ்பதி தாரனையும், குபேரன் கந்தமாதனனையும், விஸ்வகர்மா நளனையும், அக்னிதேவன் நீலனையும், அச்வினீ குமாரர்கள் மைந்தனையும் த்விவிதனையும், வருணன் ஸுஷேண னையும், பர்ஜன்ய தேவதை சரபனையும், வாயுதேவன் ஹனுமானையும், மற்றுமுள்ள தேவர்கள் ஏராளமான வானரங்களையும் கரடிகளையும் பிறப்பித்தார்கள்.

இங்கு ஹனுமானைக் குறிப்பிடும் போது வால்மீகி ''மாருதஸ்ய ஆத்மஜ: ஸ்ரீமான்'' ஸ்ரீமான் எனக் குறிப்பிட்டு அவருக்குப் பிராட்டியின்

குறிப்பு: இங்கு இந்திர குமாரனான வாலீ எவ்வகையிலும் ராமனுக்கு உதவவில்லையென்பது ராமாயணத்தின் மூலம் யாவரும் அறிந்த உண்மை. மாறாக ராம விரோதியான இராவணனோடு அக்னியை ஸாக்ஷி யாகக் கொண்டு நட்பு பூண்டவன். இதன் காரணமாக ராமனால் கொல்லப்பட்டவன் கூட. எனவே தேவேந்திரன், நான்முகன் ஆணைக்குக் கீழ்ப்படிந்த தாகத் தெரியவில்லையே என ஐயம் எழுகிறது.

விடை: வாலீ தான் நேரிடையாக உதவாவிடினும், ஆற்றல் மிக்க, தனது மகன் அங்கதனை ராமனிடத்தில் ஒப்படைத்து உதவியிருக்கிறான். மேலும் வாலீ தோன்றியிராவிடில் மற்ற வானரங்களின் உதவி ராமனுக்குக் கிடைக்க வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும். வாலீ ஸுக்ரீவனைத் துன்புறுத்தியதால் தன் தம்பிக்குப் பகையானான். இதனால் ஸுக்ரீவன் பிறர் உதவியை நாட வேண்டியதாயிற்று. இராமனுக்கும் ஸுக்ரீவ னோடு நட்பு ஏற்பட வானரங்களின் உதவி கிட்டியது. வாலியோடு ராமன் நட்பு பூண்டிருந்தால் வானரங்களின் உதவி ராமனுக்குக் கிட்ட வாய்ப்பே இராது. ஏனெனில் வாலீ தன் நண்பன் இராவணனை உடனே ஸீதையை ஒப்படைக்கும்படி செய் திருப்பான். ராவண ஸம்ஹாரம் நிகழ்ந்திருக்காது. இதனால் துஷ்ட நிக்ரஹமாகிற அவதாரத்தின் குறிக்கோள் நிறைவேற்றப்படாததாகி விடும்.

பரிபூர்ண கடாக்ஷம் ஏற்படப் போவதை முன் கூட்டியே தெரிவிக்கிறார் போலும்.

ते ताक्ष्य बल सम्पन्नाः सर्वे युद्ध विशारदाः ।
विचरन्तः अर्दयन् दर्पात् सिंहव्याघ्र महोरगान् ।
तान् च सर्वान् महाबाहुः वालीविपुल विक्रमः ।
जुगोप भुज वीर्येण ऋक्षगोपुच्छ वानरान् ॥

தே தார்க்ஷ்ய பல ஸம்பந்நா: ஸர்வே யுத்த விசாரதா: ।
விசரந்த: அர்தயன் தர்பாத் ஸிம்ஹவ்யாக்ர மஹோரகான் ॥
தான் ச ஸர்வான் மஹாபாஹு: வாலீ விபுல விக்ரம:
ஜுகோப புஜவீர்யேண ரிக்ஷ கோபுச்ச வானரான் ॥

வா. ரா. பால. - 17

இந்த வானரங்கள், கரடிகள் ஆகியோருக்கு முகத்தைத் தவிர மற்ற உடற் பகுதிகள் தேவர்களைப் போன்றே இருந்தன. இவர்கள் தங்கள் நகங்களையும், பற்களையும், கற்களையும், மரங்களையும் ஆயுதமாகக் கொண்டனர். இவர்கள் மலைகளை ஆட்டிப்பிடுங்கவும், பல கூறுகளாகப் பிளக்கவும், ஆழமுள்ள கடல்களைக் கலக்கவும், தாண்டவும், பூமியைப் பிளக்கவும், வானத்தில் பறந்து சென்று மேகங்களைப் பிடிக்கவும், மதம் பிடித்த யானைகளை எதிர்த்து அடக்கவும் ஆற்றல் பெற்றிருந்தனர். மேலும் கருடனை ஒத்த வலிமையும் போர்த் திறனையும் பெற்றிருந்தனர். இவர்கள் அனைவரையும் வாலீ அரசனாகவும், ஸுக்ரீவன் யுவராஜாவாகவும் இருந்து காத்து வந்தனர். பூமண்டலம் முழுவதும் வானரர்கள் பரந்து வாழ்ந்து வந்தனர்.

ततो यज्ञे समाप्ते तु ऋतूनां षट् समत्ययुः ॥

தத: யக்ஞே ஸமாப்தே து ரிதூனாம் ஷட் ஸமத்யயு: ॥

வா.ரா. பால. - 18

தசரதர் புத்ரகாமேஷ்டி யாகம் செய்தார். திவ்ய பாயஸத்தைப் பெற்று அதைப் பட்ட மஹிஷிகட்குப் பகிர்ந்து அளித்தார். அதைப் பருகிய ராணிகள் கருவுற்றனர். அவர்கள் கருவுற்று ஆறு ரிதுக்கள் அதாவது பன்னிரண்டு மாதங்கள் ஓடின. நம்மவர்கட்கோ கருவுற்று பத்து மாதங்கள் ஆகியும் பிரஸவிக்கா விட்டால் வயிற்றைக் கிழித்தாவது குழந்தையை வெளியில் எடுத்து விடுவார்கள். அரண்மனையில் மருத்துவர்கட்கு குறைவு இல்லை. ஆயினும் கிழித்தெடுக்க தசரதன் விரும்பவில்லை. ஏன்? பகவத் ஸங்கல்பத்தை அறிந்தவன் ஆனபடியால் அவதார காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். பரமன் அவதரிக்கத் தாமதிப்பதற்கு இதுவும் ஒரு காரண

மாகலாம். அவன் நிம்மதியாக சில நாட்களையாவது கழிக்க எண்ணி யிருப்பான் போலும். ஸ்ரீ வைகுண்டத்தில் அவனுக்குச் சிறிதும் நிம்மதி யில்லை. ஸனகாதி மஹர்ஷிகளும், மற்றோரும் ஏதாவது முறையிட அடிக்கடி வந்து விடுகிறார்கள். திருப்பாற்கடலில் துயில எண்ணி ஶயனித் தாலும் தேடி வந்து அதன் கரையில் நின்று உரக்கத் துதித்துத் துதித்து தேவர்கள் எழுப்பி விடுகிறார்கள்.

மஹாப்ரளயத்தைச் செய்து இனி ஒரு பிடுங்கலும் இராது என நினைத்து ஆலின் இலையின் மீது ஒரு பாலகனாய் வடபத்ரஶாயியாய் மகிழ்ந்திருக்கும் பொழுதும் இவனைக் கண்டு களித்துத் துதிக்க மார்க் கண்டேயர் வந்து விடுகிறார். வாமனாவதாரத்திற்காக அதிதியின் வயிற்றில் தங்கியபோதும் பிரமன் முதலிய தேவர்கள் துதிக்க வந்துவிட்டனர். எனவே கௌஸல்யையின் கர்ப்பத்தில் நிம்மதியாக இருக்க எண்ணி பன்னிரண்டு மாதம் தங்கினார் போலும். இப்பொழுது தசரதர் வல்லவரான படியால் பத்தாம் மாதத்தில் பிரஸவம் ஆகாததைக் கண்டதும் காவலை ஏற்பாடு செய்து விட்டார். மருத்துவர்களைத் தவிர யாரும் உள்ளே நுழைய முடியாது. அதுவும் தேவைப்பட்டால் தான். இவரை மீறி அரண்மனையுள் நுழைய எந்தத் தேவர்கட்கும் துணிவு கிடையாது. எனவே ஸ்ரீமந் நாராயணனுக்கு ஓராண்டு நிம்மதியுடன் இருக்க ஸந்தர்பம் கிடைத்தது போலும். அல்லது,

பத்தும் இரண்டும் பன்னிரண்டு. பத்து பக்தி, இரண்டு கர்மானுஷ் டானமும், ஞானமும். ஆக ஸந்த்யாவந்தனாதி கர்மாக்களைக் குறைவற அனுஷ்டித்து, ஸ்வரூப ஞானமும் ப்ரஹ்ம ஞானமும் உண்டாகி எவன் என்னிடம் பக்தி செய்கிறானோ அவன் தான் என்னைக் காண (அடைய) முடியுமென்பதை பன்னிரண்டாம் மாதத்தில் அவதரித்து ராமன் நமக்கு உணர்த்தியதாகக் கொள்ளலாம்.

மேலும் பரமன் ஏன் பூமியில் அவதரிக்கிறான் என்பதை நம்மாழ் வாரின் ஸ்ரீ ஸூக்தியில் பார்ப்போம்.

> **நின்று நின்று பல நாள் உய்க்கும் இவ்வுடல் நீங்கிப் போய்ச்**
> **சென்று சென்றாகிலும் கண்டு சன்மம் கழிப்பான் எண்ணி**
> **ஒன்றி ஒன்றி உலகம் படைத்தான்.**

திருவாய்மொழி - 3-9-10

இந்த ஸம்ஸாரமாகிற கடலைக் கடக்கவே நமக்குப் பரமன் இவ் வுடலை அளித்திருக்கிறான். இவ்வுடலை ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டும் தெப்ப மாக நாம் உபயோகித்துக் கொள்ளவேண்டும். அதாவது இவ்வுடலில் உயிருள்ளபோதே நற்கருமங்களைப் புரிந்து அவனைச் சரணடைந்தோ, பக்தி செய்தோ புண்ய பாபங்களாகிற விலங்குகளினின்றும் விடுபட்டுப் பரமனை அடைய முயற்சிக்க வேண்டும். நாம் அனாதிகாலமாக பல்வேறு சரீரங்

களைப் பெற்றிருக்கிறோம். இச்சரீரங்கள் இன்று வரை நம்மை அழிவுப் பாதைகளிலேயே செலுத்தி வந்திருக்கின்றன. எனவே நமது சரீரம் நமக்குக் கூற்றுவன் போன்று பயங்கரமாக இருந்து வந்திருக்கிறது. பரமனோ நமக்குப் பல ஜன்மங்களைக் கொடுத்து ஏதாவதொரு ஜன்மத்திலாவது இவன் நம்மைக் கண்டு நமது சரணாரவிந்தத்தைப் பற்றி இவ்வுடலை நீத்து மீண்டும் இங்கு பிறவாதபடி பண்ண வேண்டுமென எண்ணியே சோம்பாது மீண்டும் மீண்டும் நம்மை ஸ்ருஷ்டித்தலைச் செய்து வருகிறான். ''சோம்பாது இப் பல்லுருவையெல்லாம் படர்வித்த வித்தா'' (பெரியதிருவந்தாதி - 18) என்கிற படியே ஒருகால் ஸ்ருஷ்டித்துப் பலிக்கா விட்டால் சோம்பிக் கைவாங்காதே ஒருப்பட்டு ஒருப்பட்டு உலகங்களைப் (நம்மை) படைக்கிறான். அதாவது உழவன் ஒரு தடவை பயிர் செய்தது பயனற்றுப் போனாலும் அதைக் கைவிடாது மீண்டும் மீண்டும் உழுது பயிரிடுகிறான். ஏதாவதொரு தடவையில் அவனுக்குப் பயன் கிட்டுகிறது. அது போன்றே பரமனும் பல தடவை ஸ்ருஷ்டித்தும், ஸௌலப்யத்தினால் தன்னை அவதரிப்பித்துக் காட்டியும் நம்மை உய்விக்க விரும்புகிறான்.

பேரின்பப்பேற்றைப் (மோக்ஷத்தை) பெறுவதில் விமுகர்களாய் (உதா ஸீனர்களாய்) அழிந்து வரும் சேதனர்களைக் கண்டு இரக்கங் கொண்டு கருணைக் கடலான எம்பெருமான், தன் ஆணை செல்லாத இடங்களில் அரசன் தானே நேரிற் சென்று குற்றம் புரிந்தவர்களைத் தண்டிப்பது போலவும், கிணற்றினுள் வீழ்ந்த குழந்தையை எடுக்கத் தாயும் தகப்பனும் விரைந்து அதில் குதிப்பது போலவும், உலகிற்கெல்லாம் தாயும் தந்தையு மான படியால் தானே ராமகிருஷ்ணாதி ரூபத்தாலே ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்து இங்குப் பிறந்து தம் எளிமைய்யைக் காட்டி நம்மைத் திருத்தி ஆட்கொள்ளுகிறான்.

இதையே கண்ணனாக—கீதாசார்யனாக அவதரித்தபொழுது தெளிவு படுத்தினான்.

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥
परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्म संस्थापनार्थाय सम्भवामि युगे युगे ॥

யதா யதாஹி தர்மஸ்ய க்லானி: பவதி பாரத ।
அப்யுத்தானம் அதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாமி அஹம் ॥
பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் ।
தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே ॥

பகவத்கீதா. 4:7 - 8.

''எவ்வெப்பொழுது தர்மம் வாட்டமுற்று அதர்மம் தலை தூக்கு கிறதோ அவ்வப்பொழுது தீயோர்களைக் களைந்து நல்லோர்களைக் காத்து தர்மத்தை நன்கு வேரூன்றச் செய்ய யுகங்களின் வேறுபாட்டை மனதில் கொள்ளாது என்னைப் படைத்துக் கொள்ளுகிறேன்'' என்றான் கண்ணன். இதையே கம்பர் விரிவாக நமக்கு உணர்த்துகிறார்.

'அறம் தலை நிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்து, உலகம் பூணச் செந்நெறி செலுத்தி, தீயோர்
இறந்துக நூறித், தக்கோர் இடர் தவிர்த்து ஏக ஈண்டுப்
பிறந்தனன். தன் பொற்பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான்.'

க.ரா. ஸுந்தர. - பிணி வீட்டு

பயிர் வளரக் களை பிடுங்குவது போல தீயோர்களைக் களைந்து இடரின்றிப் பகவச் சரணாரவிந்தங்களை ஏத்துவதற்குரிய சூழ்நிலையையும், பரமனை வழிபடுவதற்குத் தேவையான தூய மனத்தினைப் பெறக் காரணமான வேதங்களில் கூறப்பட்ட வேள்விகளைச் செய்வதற்குரிய சூழ்நிலையையும் தோற்றுவித்து, இவற்றின் பயனாய் மக்கள் மீண்டும் மீண்டும் பிறத்தலின்றிப் பெரும் மோக்ஷானந்தத்தை அளிக்கவே இராமன் அவதரித்தான்.

இராமாவதாரம்

ततश्च द्वादशे मासे चैत्रे नावमिके तिथौ ।
नक्षत्रे अदिति दैवत्ये स्वोच्च संस्थेषु पंचसु ॥
ग्रहेषु कर्कटे लग्ने वाक्पताविन्दुना सह ।
प्रोद्यमाने जगन्नाथं सर्वलोक नमस्कृतम् ॥
कौसल्या अजनयद्रामं सर्वलक्षण संयुतम् ।
विष्णोरर्धं महाभागं पुत्रमैक्ष्वाकु वर्धनम् ।
कौसल्या शुशुभे तेन पुत्रेणामिततेजसा ।
यथा वरेण देवानां अदितिः वज्रपाणिना ॥

தத: ச த்வாதஶே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ ।
நக்ஷத்ரே அதிதிதைவத்யே ஸ்வோச்ச ஸம்ஸ்தேஷு பஞ்சஸு ॥
க்ரஹேஷு கர்கடே லக்னே வாக்பதௌ இந்துனா ஸஹ ।
ப்ரோத்யமானே ஜகந்நாதம் ஸர்வலோக நமஸ்க்ருதம் ॥
கௌஸல்யா அஜனயத் ராமம் ஸர்வலக்ஷண ஸம்யுதம் ।
விஷ்ணோ: அர்தம் மஹாபாகம் புத்ரம் ஐக்ஷ்வாகுவர்தனம் ॥
கௌஸல்யா ஶுஶுபே தேன புத்ரேண அமிததேஜஸா ॥
யதா வரேண தேவானாம் அதிதி: வஜ்ரபாணினா ॥

வா. ரா. பால. - 18

மன்னுபுகழ் கோஸலை, கருவுற்று பன்னிரண்டாம் மாதமான சித்திரையில் சுக்லபக்ஷத்தில் நவமி திதியில் புனர்வஸு நக்ஷத்திரம் கர்கடக லக்னம் கூடிய சுபதினத்தில் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். குழந்தை பிறந்த லக்ன காலத்தில் ஐந்து க்ரஹங்கள் அதாவது, ஸூர்யன், குரு, சுக்ரன், செவ்வாய், சனி இவர்கள் தத்தமது உச்சஸ்தானத்தில் இருந்தனர். பிருஹஸ்பதியும் சந்திரனோடு அப்பொழுது உதயமானார். இவ்வாறு மாதம் திதி நக்ஷத்ரம் கிரஹங்கள் லக்னம் எல்லாம் சேர்ந்த நாளுக்காகவே 12 மாதம் அவதரிக்கக் காத்திருந்தார் போலும். "பஞ்சோச்சே லோகநாயக:" என்ற ஜோதிஷ வாக்யத்தின்படி இக்குழந்தை லோகநாயகனாய், அகிலாண்ட கோடி ப்ரஹ்மாண்ட நாயகனாய் உபய விபூதி நாயகனாய்த் திகழ்வான். இந்த க்ரஹங்களின் அமைப்பினாலும் புத்ரகாமேஷ்டியில் பரமனே பாயஸ உருவில் தோன்றியபடியாலும், தேவர்கள், மஹர்ஷிகள் வாக்கினாலும் இது நம்மைப் போன்று ஸாதாரணமான குழந்தையன்று. நம்மைப்போன்று பிறக்கவுமில்லை. ஸ்ரீமந் நாராயணனே தோன்றியிருக்கிறான் - அவதரித்திருக்கிறான்.

ஆக பரமனே ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து கௌஸல்யையின் கர்ப்பம் என்கிற ஒரு வியாஜத்தைக் கொண்டு மேலிருந்து கீழே இறங்கி வந்திருக்கிறான். இக்கருத்தையே வால்மீகி ஜகன்னாதம், ஸர்வலோக நமஸ்க்ருதம், உலகிற் கெல்லாம் நாயகன், உலகினர் அனைவராலும் வணங்கப்படுபவன் என்றார். குழந்தை பிறந்ததும் கருப்பா? சேப்பா? எனக் கேட்பர். ''ராமம்'' கரிய மேனிதான் ஆனால் பார்ப்போர் மனதைக் கவரும் நீருண்ட மேகம் போன்றது. உடலமைப்பு அதாவது கை, கால், கண் மூக்கு முதலிய ஒவ்வொரு உறுப்பும் எப்படி இருக்க வேண்டுமென்று ஸாமுத்ரிகா சொல்கிறதோ அதன்படி இருக்கிறதாம். மூக்கும் முழியும் எல்லாம் எடுப்பாக இருக்கின்றனவாம். பரமனே உருவான பாயஸத்தில் பாதி பாகத்தை கௌஸல்யை பருகிய படியால் அதன் பரிணாமமாக அமைந்துள்ளது குழந்தை. 'மஹாபாகம், பெரும் பாக்யசாலீ. பிரஸவ அறையே பளீச்சிடும் படியான காந்தியோடு கூடியிருக்கிறது. இதை காளிதாஸன்:

रघुवंश प्रदीपेन तेन अप्रतिमतेजसा ।

रक्षागृह गताः दीपाः प्रत्यादिष्टा इवाभवन् ।

ரகுவம்ச ப்ரதிபேன தேன அப்ரதிமதேஜஸா ।

ரக்ஷாக்ருஹ கதா: தீபா: ப்ரத்யாதிஷ்டா இவ அபவன் ॥

ரகுவம்சம்

இவனே ஒரு விளக்கு. ரகுவம்சத்தின் ஸந்ததியை விளங்க வைக்கும் ஒரு குலவிளக்கு. இவன் திருமேனியின் ஒளியோ நிகரற்றது. எனவே ப்ரஸவ அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்குகள் எல்லாம் இவன் உடல் ஒளியினால் மங்கிவிட்டனவாம். அவதரித்தவன் பரமன் எனவே இவனிட மிருந்து தான் ப்ரஹ்மா, ருத்ரன், இந்திரன் முதலியோர் அதிகாரம் பெற்று விளங்குகின்றபடி, இவனே பக்தர்களையும் ப்ரபன்னர்களையும் ஒரே தேஜோமயமான (சுத்த ஸத்வமயமான) ஸ்ரீ வைகுண்டத்தை அடைவிப்ப வனும் ஆவான். பல்லாயிரம் ஆண்டுகளாக மக்கட்பேற்றைப் பெறாததால் தடையுற்ற தசரத வம்சம் தழைத்தோங்கக் காரணமானவன். அதிதி தேவீ தவம்புரிந்து பயோவ்ரதத்தினால் உபேந்திரனான ஓங்கி உலகளந்த உத்தமனைப் பெற்றெடுத்தது போல் கோஸலையின் தவப் பயனாய் அவதரித் தானாம். எனவே தன் எண்ணம் நிறைவேறியதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியின் காரணமாக கோஸலை மிகப்பொலிவுடன் விளங்கினாளாம்.

ஒருவனுடைய உள்ளத்தில் துன்பம் நிறைந்திருந்தால் அவன் அழகுள்ளவனாயினும் முகத்தில் பொலிவு இருக்காது. உள்ளத்தில் மகிழ்ச்சி இருப்பின் அவன் அழகற்றவனாயினும் முகம் களையுடன் விளங்கும். கௌஸல்யைக்கு மக்கட்பேறு இல்லாத குறை நீண்ட நாட்களாக உண்டு. இப்பொழுது அக்குறை நீங்கிவிட்டபடியால் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. கோஸலை உண்மையில் நல்ல அழகி, இப்பொழுது முகப்பொலிவுக்குக்

கேட்பானேன். அதோடு கட்டழகுவாய்ந்த குழந்தை அங்கு இருப்பதால் அதன் தேஜஸ்ஸும் சேர்ந்தது. இதை "கௌஸல்யாஶுஶுபே தேன" என முனிவர் நமக்கு எடுத்துக் காட்டுகின்றார்.

எனவே புத்ர காமேஷ்டியினால் ராமன் அவதரித்தான் என்று சொல்வதைவிட கோஸலையின் தவப் பயனாய் அவதரித்தான் என்பதே சாலப் பொருந்தும் என்பது முனிவர் கருத்து. எனவேதான் விஶ்வாமித்ரரும் "கௌஸல்யா ஸுப்ரஜா ராம!" ராமனைப் பெற்றெடுக்க கோஸலை என்ன பேறுபெற்றாளோ என வயிறு பிடிக்கிறார்.

ஆழ்வாரும் ராமன் கோஸலை வயிற்றிலிருந்து அவதரிக்கும் பாக்யத்தைப் பெற்றதாக வியக்கிறார். முன் அவதாரங்கள் மத்ஸ்ய கூர்ம, வராஹ நரஸிம்ஹங்கள். இவைபோன்று மீனாகவும், ஆமையாகவும், பன்றியாகவும், அரைகுறை மனிதனாகவும் ஜலத்திலும், காட்டிலும், தூணிலும் அவதரிக்காமல் அரண்மனையில் வேண்டித் தவங்கிடந்தவள் வயிற்றிலிருந்து அவதரித்தது ராமனுக்கு பாக்யந்தானே! எனவேதான் கோஸலையை மன்னுபுகழ் கோஸலை என்றும், அவள் வயிற்றை மணி வயிறு என்றும், ராமனுக்கு அவன் அவாப்த ஸமஸ்தகாமனாயினும் இது கிடைத்தற்கரிய — முன் கிடைத்திராத வாய்ப்பு என்றும் கூறி பரவசப்படு கிறார்.

அவதாரம் புனர்வஸு நக்ஷத்தில் என்றார் முனிவர். முன் அவதாரம் ந்ருஸிம்ஹாவதாரம் ஸ்வாதியில், ஸ்வாதி புனர்வஸு நக்ஷத்ரங்களுக்கு அவை எந்தக் கிழமையில் வந்தாலும் மரண யோகம் கிடையாது. வனவாஸத்தின் பொழுது ராமன் அஹோபிலத்தில் நரஸிம்ஹனை ஆராதித்தாராம். ஆராதகனான ராமனுக்கும், ஆராத்யரான ந்ருஸிம்ஹருக்கும் மரணயோகமே கிடையாது. திதி நவமி. அஷ்டமீ நவமிகளில் நாம் எந்தக் காரியத்தையும் தொடங்குவதில்லை. அந்நாளை ஒதுக்கி விடுகிறோம். நவமியில் க்ஷௌரம் கூடாது. அது தன தான்ய நாசத்தை விளைவிக்குமாம். ஆயினும் ராமன் அவதரித்ததினால் இந்தத் திதி உயர்ந்ததாக உபவாஸத்திற் குரிய வ்ரத தினமாக ஆகிவிட்டது. அது மாத்திரமன்று, உபவாஸ தினமான ஏகாதசியையும் விட மிக உயர்ந்துவிட்டது.

यस्तु राम नवम्यां तु दद्यात् वित्तानु सारतः ।
यत्किंचिदपि तत्सर्वं महादान समं भवेत् ।
श्रीरामनवमीं मत्या उपोष्य श्रद्धया सह
एकादशी शतेन आप्यं लभते मानवः फलम् ॥

ய: து ராமநவம்யாம் து தத்யாத் வித்தானு ஸாரத: ।
யத் கிஞ்சிதபி தத்ஸர்வம் மஹாதான ஸமம் பவேத் ॥
ஸ்ரீ ராமநவமீம் மத்யா உபோஷ்ய ஶ்ரத்தயா ஸஹ ।
ஏகாதஶீ ஶதேன ஆப்யம் லபதே மானவ: பலம் ॥

கலிஸந்தாரணோபநிஷத்

ஒருவன் ஸ்ரீ ராமநவமியன்று தனது வசதிக்கேற்ப சிறிது தானம் பண்ணினாலும் அது உயர்ந்த கோதானம், அன்னதானம் முதலியவற்றை விட உயர்ந்ததாக மஹாதானமாக கருதப்படும். அன்று சிரத்தையோடு உபவாஸம் இருந்தால் அது நூறு ஏகாதசிகளின் உபவாசத்திற்குச் சமமாகும். எனவே ஸ்ரீ ராமநவமி உபவாஸம் (உண்ணாநோன்பு) நூறு ஏகாதசி உபவாஸத்தின் பலனை அளிக்கிறது என இதைச் சிறப்பாகச் சொல்லுவர்.

இராமபிரானின் ஜாதகம்

மேடம் ஆம் மதி, திதி நவமீ, மீன் கழை,
நீடுறுமாலை கர்கடகம், நீதிசேர்
ஓடை மாகளிறு அனான் உதயராசி கோள்
நாடின் ஏகாதசர் நால்வர் உச்சரே

க.ரா.பால - திருவவதாரம்

மதி: மாதம், கழை: புன்ர்வஸு, மாலை: லக்னம்

நெற்றிப்பட்டத்தோடு கூடிய ஆண் யானையைப் போன்று கம்பீரமான தோற்றத்தையுடைய ஸ்ரீ ராமபிரான் ஸ்வஸ்திஸ்ரீ ஸுபானு வருஷம் சித்திரை மாதம் சுக்லபக்ஷம் நவமி திதி புதன்கிழமை புனர்வஸு நக்ஷத்திரம் (நான்காம் பாதம்) கூடிய சுபதினத்தில் கர்கடக லக்னத்தில் முற்பகல் சுபாவதாரம்.

(செவ்வாய்க் கிழமையில் ராமாவதாரம் என்பர் சிலர்.)

சுக்ரன்	சூரியன் புதன்		கேது
	இராசி சக்ரம்		ல / குரு, சந்திரன்
செவ்வாய்			
ராஹு		சனி	

भरतोनाम कैकेय्यां जज्ञे सत्य पराक्रमः ।
साक्षा द्विष्णोः चतुर्भागः सर्वैः समुदितो गुणैः ॥

अथ लक्ष्मण शत्रुघ्नौ सुमित्रा अजनयत् सुतौ ।
सर्वास्त्र कुशलौ वीरौ विष्णोः अर्धसमन्वितौ ॥
पुष्ये जातस्तु भरतः मीन लग्ने प्रसन्नधीः ।
सार्पे जातौ च सौमित्री कुलीरेऽभ्युदितेरवौ ॥

பரத: நாம கைகேய்யாம் ஜக்ஞே ஸத்யபராக்ரம: ।
ஸாக்ஷாத் விஷ்ணோ: சதுர்பாக: ஸர்வை: ஸமுதித: குணை: ॥
அத லக்ஷ்மண சத்ருக்னௌ ஸுமித்ரா அஜனயத் ஸுதௌ ।
ஸர்வாஸ்த்ர குஶலௌ வீரௌ விஷ்ணோ: அர்தஸமன்விதௌ ॥
புஷ்யே ஜாத: து பரத: மீனலக்னே ப்ரஸன்னதீ :
ஸார்ப்பே ஜாதௌ ச ஸௌமித்ரீ குலீரே அப்யுதிதேரவௌ

வா.ரா. பால. - 18.

கோஸலைக்குப் பிறகு பாயஸத்தைப் பருகியவள் கைகேயீ, எனவே ராமாவதாரத்திற்குப் பிறகு கைகேயீ பரதனைப் பெற்றெடுத்தாள். இவன் மஹாவிஷ்ணுவின் எட்டில் ஒரு பாகம் ஆவான். இக் குழந்தையை ''ஸத்ய பராக்ரமன்'' என்கிறார் முனிவர். ஸத்யா என அயோத்திக்குப் பெயர். அதை ஆள வாரிசாகப் பிறந்தவன் ராமன். அவனைப் போன்ற பராக்ரமத்தை ஆற்றலைப் பெற்றிருப்பானாம். அல்லது ராமனுடைய உத்தரவுக்குப் பணிந்து ஒரு ஸமயம் அயோத்தியை ஆளவும் செய்வானாம். இவனும் ராமனுக்குரிய கல்யாண குணங்களோடு இருப்பான். இது நீதி, இது முறை, என்பதைத் தெளிவாக அறியும் வல்லமையும் பெற்றிருப்பனாம்.

பின்னர் ஸுமித்திரை இரட்டையரைப் பெற்றெடுத்தாள். அவர்கள் தான் லக்ஷ்மணனும் சத்ருக்னனும். இவர்கள் முறையே விஷ்ணுவின் நாலில் ஒரு பாகமும் எட்டில் ஒரு பாகமும் ஆவர். இவர்கள் எல்லா அஸ்த்ரங் களையும் பிரயோகம் செய்வதிலும் (விடுவதிலும்) அவற்றைத் திரும்பப் பெறுவதிலும் வல்லவர்கள்.

குழந்தைகளின் முகத் தோற்றங்களைக் கொண்டும், அவதரித்த காலத்தைக் கொண்டும் அவர்களின் குண நலன்களை அறிந்து முன்னதாகக் கூறினார் முனிவர்.

ஸ்ரீராமன் நவமியில் புனர்வஸு நக்ஷத்திரம் கூடிய கர்கடக லக்னத்தில் அவதரித்தான். ஸ்ரீ பரதாழ்வான் தசமியில் புஷ்ய நக்ஷத்திரம் கூடிய மீன லக்னத்தில் அவதரித்தான். ஸ்ரீ லக்ஷ்மணனும் ஸ்ரீ சத்ருக்னனும் தசமியில் ஆயில்யம் நக்ஷத்திரம் கூடிய கர்கடக லக்னத்தில் அவதரித்தனர்.

राज्ञः पुत्राः महात्मानः चत्वारः जज्ञिरे पृथक् ।
गुणवन्तः अनुरूपाश्च रुच्या प्रोष्ठपदोपमाः ।

ராக்ஞ: புத்ரா: மஹாத்மான: சத்வார: ஜக்ஞிரே ப்ருதக் ।
குணவந்த: அனுரூபா: ச ருச்யா ப்ரோஷ்ட பதோபமா: ॥

வா.ரா. பால. - 18.

எம்பெருமான் ஒருவனாயினும் தசரதருக்குத் தனித்தனியான நான்கு குமாரர்களாகத் தோன்றினான். நால்வரும் நற்பண்புகளாலும், அழகிய உருவ அமைப்பினாலும் பசுவின் கால்கள் போன்று ஒத்தவர்களாகவும் திகழ்ந்தனர். மஹாவிஷ்ணு ஒருவர் நால்வராகத் தோன்றியதற்கு ஒரு பசுவின் நான்கு கால்களை உவமையாகக் கூறினார். அல்லது; பூர்வ ப்ரோஷ்டபதம் உத்தர ப்ரோஷ்டபதம் என்று பூரட்டாதி உத்ரட்டாதி நக்ஷத்திரங்களுக்குப் பெயர். இவை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு நக்ஷத்திரங்கள். இவை போல நால்வரும் இரண்டு அணிகளாகத் திகழ்ந்தனர் எனலாம். பசுவின் குளம்புகள் போல இருவர் இருவராகச் சேர்ந்து வாழ்ந்தனர். இங்கு "ப்ருதக் குணவந்த:" தனித்தனியாக ஒவ்வொருவருக்குமே உரிய குணங்களை உடையவர்களாக இருந்தனர் என்றும் பொருள் கூறலாம். அதாவது, ஸ்ரீராமன் நல்லோர்களைக் காத்தல், தீயோர்களைக் களைதல், வாய்மை, தந்தை சொல்லை மந்திரமாகக் கொள்வது, ஏகபத்னீ வ்ரதம், அபவாதங்களுக்கு அஞ்சுதல் போன்ற ஸாமான்ய தர்மங்களையும், சரணாகத ரக்ஷணம் ஆகிய விசேஷ தர்மத்தையும் பெற்றிருந்தான்.

லக்ஷ்மணன் தான் சேஷன், எம்பெருமான் சேஷீ எனும் ராமனுக்கும் தனக்கும் உடைய சேஷசேஷீ பாவ ஸம்பந்தத்தில் ஊற்றமுடையவனாக இருந்தான். பரதன் நாம் பகவானுக்குப் பரதந்த்ரன். ராமன் சொல்வது எதுவாயினும் அவ்வுத்திரவுக்குக் கீழ்ப்படிய வேண்டுமெனும் பாரதந்த்ரியத்தைக் கொண்டிருந்தான். சத்ருக்னன் பாகவதபாரதந்த்ரியத்தை அதாவது பெருமாளிடம் பக்தி கொண்ட பரதன் சொற்படியே நடப்பதையே தன் குறிக்கோளாகக் கொண்டிருந்தான்.

धर्मार्थ काम मोक्षाणां अवतार इवाङ्गवान् ।

தர்மார்த்த காம மோக்ஷாணாம் அவதார இவாங்கவான் ॥

காளிதாஸன், ரகுவம்சம் - 10 - 84

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருஷார்த்தங்களும் உருவம் பெற்று வந்தனவோ என்னும்படி இருந்தனராம். தசரதர் இந்நான்கு குமாரர்களைப் பெற்றதால் இம்மைப் பயன்களும் மறுமைப் பயனுமாகிய நான்கு வகைப் பயன்களையும் ஒருங்கே பெற்றவராக ஆனார்.

जगुः कलं च गन्धर्वाः ननृतुश्चाप्सरो गणाः ।
देव दुन्दुभयो नेदुः पुष्पवृष्टिश्च खाच्युता ।
उत्सवश्चमहानासीत् अयोध्यायां जनाकुलः ॥

ஜகு: கலம் ச கந்தர்வா: நந்ருது: ச அப்ஸரோகணா : ।
தேவதுந்துபய: நேது: புஷ்பவ்ருஷ்டி: ச காத்ச்யுதா ॥
உத்ஸவ: ச மஹான் ஆஸீத் அயோத்யாயாம் ஜனாகுல: ॥

வா.ரா. பால. - 18.

தேவர்கள் தங்களுடைய ராவண பயத்தைப் போக்க, வாக்களித்த படியே பகவான் அவதரித்தது கண்டு மகிழ்ந்தனர். தேவருலகப் பாடகர்களான, கந்தர்வர்கள் வானத்திலே இன்னிசைபாடி அவதாரோத்ஸவத்தைக் கொண்டாடினர். அப்ஸரஸ்ஸுக்கள் நாட்டியமாடிக் களித்தனர். சிலர் துந்துபி வாத்யத்தை அடித்து மகிழ்ந்தனர். சிலர் கற்பக மலர்களைத் தூவிக் களிப் பெய்தினர். அயோத்தி நாடு முழுவதிலும் மக்கள், தமக்கு இளவரசு பிறந்திருப்பதை ஆங்காங்குக் கூட்டம் கூட்டமாக கூடி விழாக் கொண்டாடினர். எங்கு பார்த்தாலும் நாட்டியக் கச்சேரிகளும், பாட்டுக் கச்சேரிகளும், மேளக் கச்சேரிகளும் நிகழத் தொடங்கின. குழந்தை பிறந்ததும் அயோத்தி மக்கள் தம்தம் இல்லங்கள் தோறும் விழாக் கொண்டாடி மகிழ்ந்தனராம்.

ஆடினர் அரம்பையர், அமுத ஏழிசை
பாடினர் கின்னரர், துவைத்த பல்லியம்
வீடினர் அரக்கர் என்று உவக்கும் விம்மலால்
ஓடினர் உலவினர் உம்பர் முற்றுமே

க.ரா. பால.- திருவவதாரம்

तस्योदये चतुर्मूर्तेः पौलस्त्य चकितेश्वराः ।
विरजस्कैः नभस्वद्भिः दिशः उच्छ्वसिता इव ॥
कृशानुः अपधूमत्वात् प्रसन्नत्वात् प्रभाकरः ।
रक्षो विप्रकृतौ आस्तां अपविद्ध शुचौ इव ॥
दशानन किरीटेभ्यः तत्क्षणं राक्षसश्रियः ।
मणि व्याजेनपर्यस्ताः पृथिव्यां अश्रुबिन्दवः

தஸ்ய உதயே சதுர்முர்தே: பௌலஸ்த்ய சகிதேஸ்வரா: ।
விரஜஸ்கை: நபஸ்வத்பி: திச உச்ச்வஸிதா: இவ ॥
க்ருசானு: அபதூமத்வாத் ப்ரஸன்னத்வாத் ப்ரபாகர: ।
ரக்ஷோ விப்ரக்ருதௌ ஆஸ்தாம் அபவித்த ஶுசௌ இவ ॥
தசானன கிரீடேப்ய: தத்க்ஷணம் ராக்ஷஸஶ்ரிய: ।
மணிவ்யாஜேன பர்யஸ்தா: ப்ருதிவ்யாம் அஶ்ருபிந்தவ: ॥

ரகுவம்சம் - 10 - 73, 74, 75

प्रदेयांश्च ददौ राजा सूत मागध वन्दिनाम् ।
ब्राह्मणेभ्यो ददौ वित्तं गोधनानि सहस्रशः ॥

ப்ரதேயான் ச ததௌ ராஜா ஸூத மாகத வந்திநாம் ।
ப்ராஹ்மணேப்ய: ததௌ வித்தம் கோதனானி ஸஹஸ்ரச: ।।

வா.ரா.பால. - 18

பகவான் அவதரிக்கும் பொழுதும் மஹான்கள் பிறவி எடுக்கும் பொழுதும் இயற்கையில் சில மாறுதல்கள் சுபசகுனங்களாக அமைவது வழக்கம். இம்மாறுதல்களை ஸ்ரீமத் பாகவதம் கண்ணனுடைய அவதார காலத்தில் விரிவாக எடுத்துக் காட்டுகிறது. அவற்றை ராமாவதாரத்தில் அழகாக எடுத்தக் காட்டுகிறான் மஹாகவி.

ராமாவதார காலத்தில் அவன் அவதாரத்தை மக்களுக்கு உணர்த்தவும், நாம் போற்றும் தெய்வத்தை வரவேற்கவும் தென்றல் காற்று சுகமாக வீசிற்று. வானம் நிர்மலமாகப் பளிச்சிட்டது. நாடெங்கிலுமுள்ள தண்ணீர் நிலைகள் தெளிந்து காணப்பட்டன. வீட்டிலும் வேள்விச் சாலைகளிலும் தீ, புகையின்றி ஜொலித்தது. கதிரவன் மேகங்களினால் மறைக்கப்படாமல் ஒளிவிட்டுப் பிரகாசித்தது. திசைகட்கு அபிமானி தேவதைகள் ராவணனைக் கண்டு அச்சமுற்று பயந்து மறைந்து வாழ்ந்தனர். அவர்கள் ராமன் அவதரித்ததும் இனி நமக்குக் கவலையில்லை. இன்னும் சின்னாட்களில் ராவணன் ஒழிந்து விடுவான் எனப் பெருமூச்சு விட்டனர். நாமும் நமக்குள்ள இன்னல்கள் நீங்கினால் அப்பாடா எனப் பெருமூச்சு விடுகிறோமல்லவா! இங்கு மஹா விஷ்ணு ஒருவனாக அவதரிக்கவில்லை. ஒன்றுக்கு நான்காக அவதரித்திருக் கிறான். இனி அவர்கட்கு பயமேது?

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு திசைகட்குத் தலைவர்கள் முறையே இந்திரன், யமன், வருணன், குபேரன் ஆகிய தேவர்கள். இங்கு திச: எனப் பெண்பாலைப் பயன்படுத்தியதால் திசை தேவதைகளின், பதிவ்ரதைகளான மனைவிமார்கள், கணவன்மார்கட்கு வந்த துன்பம் நீங்கியதால் அப்பாடா, தொல்லை நீங்கியது, எனப் பெருமூச்சு விட்டார்களாம்.

இலங்கையில் அக்னி தேவையான அளவுதான் வெப்பத்தைக் கொடுக்க வேண்டும். ஸூரியன் தேவைக்கேற்ற ஒளியுடன் தேவைப்பட்ட பொழுதெல்லாம் பிரகாசமாகவும், மங்கலாகவும் ஒளியைக் கொடுக்க வேண்டும். இல்லாவிடில் ராவணனின் தண்டனை காத்திருக்கும். இந்நிலை ராமர் தோன்றியதும் விலகியதாம். எனவே அச்சமின்றி இருவரும் பிரகாசித்தனராம். இவை மக்களுக்குச் ஶுப ஸூசகங்களாம்.

இதே ஸமயத்தில் இலங்கையில் பத்துத் தலை ராவணன், தர்பாரில் ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்து மந்திரிகட்கும் மற்றோருக்கும் உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு கீழே இறங்கிச் செல்லத் தொடங்கினான். அப்பொழுது அவன் தலைகளிலிருந்து கிரீடங்களில் பதிக்கப்பட்ட ரத்னஙர்கள் சில கீழே உதிர்ந்தனவாம். இது அரக்கர்களின் ஸாம்ராஜ்ய மஹா லக்ஷ்மியானவள்

''இனி நாம் அழிந்துவிடுவோம்'' எனக் கண்ணீர் சிந்துவது போல் இருந்த தாம். இது ராமன் அவதரித்த நேரத்தில் நிகழ்ந்ததாம், ஆக நல்லோர்க்கு சுபத்தையும், தீயோர்க்கு அசுபத்தையும் இயற்கை காட்டியதாம்.

நாட்டில் நல்லொழுக்கமும் தர்மமும் வளரப் பாடுபடும் பௌராணி கர்கட்கும், வம்சாவளியை எடுத்துக் கூறும் மாகதர்கட்கும், அரசனின் கடமையை உணர்த்தும் நோக்கத்தில் புகழ்பாடும் வந்திகட்கும், வேதம் ஓதும் அந்தணர்கட்கும் அவரவர் தகுதிகட்கேற்ப கொடுக்கக் கூடியவை அனைத்தையும் கொடுத்தாராம் தசரதர். ஸுவர்ணம், பசுக்கள் ஆகியவற்றை யும் தானம் செய்தார்.

அயோத்தி மக்களோ மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். நாடு முழு வதும் நீர் தெளிக்கப்பட்டு கோலமிடப்பட்டதாம். தத்தம் வீடுகளை புஷ்பங் களாலும் மாவிலைத் தோரணங்களாலும் அழகு செய்தனர். ஆங்காங்கு கூடும் மக்கள் மீது நறுமணமுள்ள பன்னீர்களைத் தெளித்தனர். தேவர்கள் கற்பக மலர்களைத் தூவினர்.

ஆலயம் புதுக்குக, அந்தணாளர் தம்
சாலையும், சதுக்கமும் சமைக்க, சந்தியும்
காலையும் மாலையும் கடவுளர்க்கு அணி -
மாலையும், தீபமும் வழங்குக என்றனன்.

இறை தவிர்ந்திடுக பார் ஆண்டு ஓர் ஏழ், நிதி
நிறைதருசாலை தாள் நீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்து கொள்க என
அறைபறை என்றனன் அரசர் கோமகன்.

க.ரா. பால. - திருவவதாரம்.

நாட்டிலுள்ள திருக்கோயில்கள் அனைத்தையும் புதுப்பிக்கும்படியும், அக்ரஹாரங்களையும், தெருக்கள் கூடுமிடங்களையும் ஆங்காங்கு தூய்மை செய்யவும், பகவத் ஸந்நிதிகளில் அர்ச்சா மூர்த்திகட்கு அழகிய மாலைகளை ஸமர்ப்பிக்கும்படியும், காலை மாலைகளில் விளக்குகளை ஏற்றிவைக்கும் படியும் சக்ரவர்த்தி உத்தரவிட்டார்.

மேலும் நாடு முழுவதும் ஏழு ஆண்டுகட்கு வரி வசூலை நிறுத்தி அவற்றைத் தள்ளுபடி செய்யும்படியும், நாட்டிலுள்ள கருவூலங்களின் பூட்டு களைத் திறந்துவிட்டு ஏழைகள் தத்தமக்கு வேண்டிய பொருள்களை எடுத்து செல்லும்படியும் உத்தரவிட்டு பறைசாற்றச் செய்தான்.

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை: மற்றுஎல்லாம்
குறிஎதிர்ப்பை நீரது உடைத்து. குறள் - 221

கொடை—தானம் என்றால் இல்லாதவர்கட்குக் கொடுப்பதாம். மற்றோருக்கு நாம் செய்வதெல்லாம் குறிப்பிட்ட எதிர் உதவியைப் பெறுவதற்காகவே அமையும். (இக்காலத்தில் பெரும்பாலும் திருவிழாக் காலங்களிலும் திருமண நாட்களிலும் ஏழைகட்கு விருந்திடுவது அரிதாகிவிட்டது.)

நாமகரணம்

अतीत्यैकादशाहन्तु नाम कर्म तथाऽकरोत् ।
ज्येष्ठं रामं महात्मानं भरतं कैकयीसुतम् ।
सौमित्रिं लक्ष्मण इति शत्रुघ्नमपरं तथा ।
वसिष्ठः परमः प्रीतः नामानि कृतवान् तदा ॥
ब्राह्मणान् भोजयामास पौरजानपदानपि ।
अददत् ब्राह्मणानां तु रत्नौघममितं बहु ॥
तेषां जन्मक्रियादीनि सर्वकर्माण्यकारयत् ।

அதீத்ய ஏகாதசாஹம்து நாம கர்ம ததா அகரோத் ॥
ஜ்யேஷ்டம் ராமம் மஹாத்மானம் பரதம் கைகயீஸுதம் ।
ஸௌமித்ரிம் லக்ஷ்மண: இதி சத்ருக்னம் அபரம் ததா ।
வஸிஷ்ட: பரமப்ரீத: நாமானி க்ருதவான் ததா ॥
ப்ராஹ்மணான் போஜயாமாஸ பௌரஜானபதான் அபி ।
அததத் ப்ராஹ்மணானாம்து ரத்னௌகம் அமிதம் பஹு ॥
தேஷாம் ஜன்மக்ரியாதீனி ஸர்வகர்மாணி அகாரயத் ॥

வா.ரா. பால. - 18.

க்ஷத்திரியர்கட்குப் பன்னிரண்டு நாட்கள் பிரஸவத் தீட்டு உண்டு. லக்ஷ்மணன் பிறந்த பதினோரு நாட்களானாலும், ராமன் அவதரித்துப் பன்னிரண்டு நாட்களாகிவிட்டன. எனவே பதின்மூன்றாம் நாள் குலகுருவான வஸிஷ்டரை முன்னிட்டுக் கொண்டு குழந்தைகட்குப் பெயர்களைச் சூட்டினார். வஸிஷ்டர் ஆழ்ந்து சிந்தித்து குழந்தைகட்குச் சூட்ட வேண்டிய பெயர்களைத் தேர்ந்தெடுத்தார். பெரிடுவதிலே வஸிஷ்டருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. ஏன்? ராமாவதாரத்திற்காக ரகு குலத்தில் புரோஹிதராக பல தலைமுறைகள் காத்துக் கொண்டிருந்தவர். ராமாவதாரமும் ஆகி அவருக்குப் பெயரிடுவதும் தன்னிடமே வந்தது. மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்! நமக்கெல்லாம் பெயரிடுவதாயிருந்தால் பெரியோர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள். ஆண் பிரஜைக்கு இரட்டைப்படை எழுத்துக்களைக் கொண்டவையும், பெண் பிரஜையாயிருந்தால் ஒற்றைப்படை எழுத்துக்களைக் கொண்டவையு

மான பெயர்களைச் சூட்ட வேண்டும். அப்பெயர்களும் எம்பெருமானுடைய திருநாமமாக இருக்க வேண்டும். கண்டவர் பெயரை இடக்கூடாது.

காசும் கறையுடைக் கூறைக்கும் அங்கோர் கற்றைக்கும்
ஆசையினால், அங்கு அவத்தப் பேரிடும் ஆதர்காள்,
கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித்து இருமினோ
நாயகன் நாரணன் தம் அன்னை நரகம்புகாள்

பிச்சை புக்காகிலும் எம்பிரான் திருநாமமே, நச்சுமின்

நாடும் நகரும் அறிய மானிடப்பேரிட்டு
கூடி அழுங்கிக் குழியில் வீழ்ந்து வழுக்காதே
சாடு இறப் பாய்ந்த தலைவா! தாமோதரா என்று நாடுமின்

மண்ணில் பிறந்து மண்ணாகும் மானிடப் பேரிட்டு அங்கு
எண்ணம் ஒன்றின்றி இருக்கும் ஏழை மனிசர்காள்
கண்ணுக்கு இனிய கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின்

பெரியாழ்வார் திருமொழி - 4ப. 6தி.

பெரியாழ்வார் பொதுமக்களை நோக்கி உபதேசிக்கிறார்: ''ஊரிலுள்ள செல்வரின் பெயரை நம் குழந்தைக்குச் சூட்டினால் அவர் அன்பு கொண்டு நமக்குப் பணமும், நல்லாடைகளையும், மற்றைப் பொருள்களையும் அளிப்பர் என்று எண்ணி அபத்தமான மானிட சாதியின் பெயர்களைச் சூட்டாதீர்கள். அது நம்மை நரகக் குழியிலே ஆழ்த்திவிடும். மானிடப்பேர் மண்ணில் பிறந்த நம்மை மண்ணாக்கிவிடும். நாராயணனின் பெயர்களை ஸ்ரீதரன், கேசவன், மாதவன், கோவிந்தன், தாமோதரன், தாமரைக்கண்ணன், கருமுகில் வண்ணன் முதலிய பெயர்களை இட்டு அழையுங்கள். எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். 'பகவன்நாமாவை இட்டு அழைப்பவர்கட்கு மறுமையில் நரகத் துன்பங்கள் அணுகா. குழந்தையின் பெயரைச் சொல்வது பகவன் நாமஸங்கீர்த்தனமாகிவிடும். அஜாமிளன் மரிக்கும் காலத்தில் நாராயணா என, தனது செல்லப் பிள்ளையைத் தான் அழைத்தான். ஆனால் அதுவே அவன் பாபங்களைப் போக்கிற்று. எனவே நரகத்திற்கு இழுத்துச் செல்ல வந்த ய்மபடர்கள் ஒதுங்கினர். நாராயண நாமத்தைக் கேட்ட விஷ்ணுதூதர்கள் அஜாமிளனை யமதூதர்களிடம் சிக்க விடாமல் செய்ததோடு மேளதாளத்துடன் ஸ்ரீ வைகுண்டத்திற்கு அழைத்துச் சென்றனர்.

य इदंशृणुयात् नित्यं यश्चापि परिकीर्तयेत् ।
नाशुभं प्राप्नुयात् किंचित् सोऽमुत्रेह च मानवः ॥

ய: இதம் ஶ்ருணுயாத் நித்யம் ய: ச அபி பரிகீர்த்தயேத் ।
ந அசுபம் ப்ராப்னுயாத் கிஞ்சித் ஸ: அமுத்ர இஹ ச மானவ: ॥

விஷ்ணு ஸஹஸ்ர நாமம்

''பகவன் நாமாக்களைக் கேட்பவனும், சொல்பவனும் இங்கும் அங்கும் எத்துணைத் துயர்களையும் (அசுபங்களையும்) சிறிதும் பெறான்'' என்பர் பீஷ்மாசாரியர்.

எனவே தம் குழந்தைகளை அன்பு மேலீட்டால் செல்லமாக அழைக்கக்கருதி அபத்தப் பெயரிட்டு அழைக்காதீர்கள் எனத் தாய்மார் களுக்கு அறிவுறுத்துகிறார் பெரியாழ்வார். (நமோ நாராயணனின் அழகிய திருநாமங்களை நாமகரண காலத்தில் சூட்டிவிட்டுப் பின்னர், நாணு, கிட்டு, வெங்குட்டு, சீசு, சிமாச்சு, சீனு, கோபு, ஸூதர், ஜகா, எச்சு, பிச்சு என அழைக்கத் தலைப்படுகிறோம். இத்தவறைத் திருத்திக் கொள்ள இனி முயற்சிப்போம்). நமக்குப் பெயரிட வழி காட்டினர் ஆழ்வாராதிகளான ஆசார்யர்கள். இப்பொழுதோ பரமனுக்கே பெயரிட வேண்டிய சூழ்நிலை. பரமனும் மனிதனாகப் பிறந்திருக்கிறான். என்ன பெயர் சூட்டுவது வஸிஷ்டர். யோகக் கண்ணால் குழந்தையின் எதிர்காலத்தை அறிந்தார்.

இம் மூத்த குழந்தையினிடம் மக்கள் அனைவரும் நற்குண நற்பண்புகளைக் கண்டு மகிழப் போவதை அறிந்து ராமன் என்று திருநாமம் சூட்டினார்.

கைகேயியின் குழந்தை பின்னொரு ஸமயம் தசரதர் மரிக்க 'ராமனும் காட்டிற்கு ஏக' அராஜகமான அயோத்தி ஸாம்ராஜ்யத்தைக் காப்பாற்றப் போவதை அறிந்து அதற்கு பரதன் எனப் பெயரிட்டார். ஸூமித்திரையின் குமாரன் ராமனுக்குத் தொண்டு செய்வதையே தன் செல்வமாகக் கருதப் போவதை உணர்ந்து அவனுக்கு லக்ஷ்மணன் (கைங்கர்ய லக்ஷ்மியை உடையவன்) என்று நாமகரணம் செய்தார். மற்றொரு குமாரனுக்கு சத்ருக்னன் எனத் திருநாமம் சூட்டப்பட்டது. இதற்குப் பகைவர்களை அழிப்பவன் என்று பொருள். வெளிப்பகையை அடக்குவது மட்டுமன்றி உட்பகையாகிய தமது புலன்களான நித்ய சத்ருக்களையும் அடக்கி ஆளப்போவதை முன் கூட்டியே ஞான த்ருஷ்டியால் அறிந்தார் போலும். பெயர்கள் அனைத்தும் காரணப் பெயர்களாக அமைந்தன. இவற்றுள் ராம என்பது மிகமிகச் சிறப்புடைத்து. இதற்கு பௌராணிகர் ஒரு வரலாற்றைக் கூறுவர்.

இராம நாமச் சிறப்பு

ராமாயணம் முதன்முதலில் சதுர்முக ப்ரஹ்மாவினால் இயற்றப் பட்டதாம். அதை ''ஶதகோடி ப்ரவிஸ்தரம்'' என்பர். நூறு கோடி ஸ்லோகங்களைக் கொண்டதாம். இதை தன் புத்ரனாகிய நாரத மஹர்ஷிக்கு உபதேசித்தாராம். இதைத் தான் நாரதர் சுருக்கி ஸம்க்ஷேப ராமாயணமாக வால்மீகி முனிவருக்கு உபதேசித்தாராம். நான்முகன் தன் ராமாயணத்தைத் தானே ப்ரவசனம் செய்ய (சொற் பொழிவாற்ற) விரும்பினாராம். ராமாயண உபன்யாஸம் ஸத்ய லோகத்தில் தொடங்கிற்று. ஸத்ய லோக வாஸிகளோடு வைகுண்ட வாஸிகளும் கைலாஸ வாஸிகளும் சேர்ந்து கொண்டனர். கதை கேட்கக் கேட்க மிக ஆனந்தமாயிருந்தது. பின்னர் எல்லோருக்கும், ''அந்த ஸ்ரீ கோசத்தை வாங்கிச் சென்றால் நம் ஊரில் நாமே அவ்வப்பொழுது படித்து இன்புறலாமே'' என எண்ணம் தோன்றியது.

இதைக் கேட்க நான்முகனுக்கு ரொம்ப ஸந்தோஷம். நாம் இயற்றியதை யாரும் கேட்பாரில்லாமல் இருந்த நிலை மாறி மூவுலகினரும் கேட்கிறார்களே என்று கூடவே ஒரு கவலை. இருப்பதோ ஒரே ஸ்ரீகோசம். இதை எப்படி மூன்றாகப் பிரிப்பது. அதோடு பங்கு பிரிப்பவர் தனக்கு பங்கு கேட்காமலிருக்க வேண்டுமே! தாய விபாகம் என்பது மிகக் கடினமான வேலை. ''இந்த அம்மியில் ஸூரஸம் அரைத்துச் சாப்பிட்டால் எந்த வியாதியும் தீரும், ஆகிவந்தது, எனக்குத் தேவை. இந்தப் பெட்டியில் பணம் வைத்தால் வளர்ந்து கொண்டே இருக்கும், இது எனக்குத் தான். இப் போட்டிக்கு ஈடு கொடுக்க முடியாமல் இரண்டாக உடைத்துப் பிரிப்பதைப் பார்த்திருக்கிறோம். என் செய்ய?'' என பிரமன் எண்ணும்போது அங்கு வந்த சிவபிரான் பங்கு பிரிக்கும் வேலையை ஒப்புக் கொண்டார்.

ஸ்லோகங்கள் நூறு கோடியல்லவா. மூன்றாகப் பிரித்து 33 கோடியாக மூவருக்கும் கொடுத்தார். மீதி ஒரு கோடியை 33 லக்ஷமாகப் பிரித்தார். ஒரு லக்ஷம் மீதி. அதை மூன்று 33 ஆயிரமாகப் பிரிக்க ஆயிரம் மிகுதி. அதை மூன்று நூறாகப் பிரிக்க ஒரு நூறு மீற, மூன்று முப்பதாகப் பிரிக்க ஒரு பத்து மீற, அதையும் மூன்றாகப் பிரித்ததில் 33 கோடியே 33 லக்ஷத்து 33 ஆயிரத்து 333 ஆகப் பாகம் பிரித்தில் 99 கோடியே 99 லக்ஷத்து 99 ஆயிரத்து 999 ஸ்லோகங் களை பங்கு போட்டாயிற்று. ஒரு ஸ்லோகம் மிச்சம். மூவருக்கும் அதையும் பிரிக்கட்டுமே எனும் எண்ணம் இருப்பதை அவர்களின் முகத்தோற்றம் காட்டியது. சிவபிரானுக்கோ மீதி இருப்பதோ ஒரே ச்லோகம். அதை எப்படி பிரிப்பது? இதன் எழுத்துக்கள் 32. பிரித்தார். ஒவ்வொரு தரப்பினருக்கும் பத்து பத்து எழுத்துக்கள் கிடைத்தன. அப்படியும் 2 எழுத்துக்கள் மீந்தன.

அதையும் பிரிக்கலாம் என்றால் முடியாதே; என்ன செய்வது? அதோடு பங்கு பிரித்தவருக்கும் அதில் ஒரு கண். இதை அறிந்த தேவர்கள் அனைவரும் ப்ரஹ்மாவின் சிபாரிசின்படி கஷ்டப்பட்டு பங்கு பிரித்த சிவனுக்கே கொடுக்க ஸம்மதித்தார்கள்.

அவ்விரண்டு எழுத்துக் களும் எவை தெரியுமா? அவைதான் ''ராம'' என்பது. இதைப் பெற்றுக் கொண்ட சிவன் மேலுலகிலிருந்து இறங்கி காசி க்ஷேத்ரத்தில் கங்கை நதிக் கரையில் வாஸம் பண்ணினார். அங்கு தன்னை அணுகும் பக்தர்கள் ஸம்ஸாரம் நீங்கி மோக்ஷம் பெற வேண்டுமென எண்ணினார். ''மோக்ஷம் இச்சேத் ஜனார்தனாத்'' மீண்டும் பிறவாமை யாகிற முக்தியை அளிக்க வல்லவர் நாராயணனாயிற்றே. அதற்காக தன் பக்தர்களை விஷ்ணு பக்தர்களாக்கி மோக்ஷம் கிடைக்கச் செய்யத் திட்டமிட்டு, அன்று முதல் காசியில் மரிப்பவர்களின் காதில் ஆவி பிரிவதற்கு முன் ராம தாரக மந்த்ரத்தை உபதேசிக்கலானார். அவர்களும் தம் வாழ்நாள் முழுவதும் சிவநாம ஜபம் செய்து வந்ததின் பயனாய் சிவபிரான் ஆசார்யனாகத் தோன்றி தாரகமந்திரத்தை உபதேசித்தபடியால் ''ராம ராம'' என ஜபித்துக் கொண்டே ஆவியைத் துறந்தனர். ராமனைக் கடைசியில் நினைத்த படியால் விஷ்ணு தூதர் வந்து ஸ்ரீ வைகுண்டத்திற்கு இன்றும் அழைத்துச் செல்கின்றனர்.

यदा अवर्णयत् कर्णमूले अन्तकाले
शिवः राम रामेति रामेति काश्यां ।
तदेकं परं तारक ब्रह्मरूपं
भजेऽहं भजेऽहं भजेऽहं भजेऽहम् ॥

யதா அவர்ணயத் கர்ணமூலே அந்தகாலே
சிவ:, ராம ராமேதி ராமேதி காச்யாம் ।
தத்ஏகம் பரம் தாரகப்ரஹ்மரூபம்
பஜேஹம் பஜேஅஹம் பஜேஅஹம் பஜேஅஹம் ॥

தென்னாட்டிலும் தக்ஷிண காசீ என ஒரு சிவக்ஷேத்ரம் உண்டு. அதை வ்ருத்தாசலம் என அழைப்பர். அவ்வூரிலும் சிவ பக்தர்களின் ஆவி பிரியும்போது வ்ருத்தாம்பிகை அவர்களைத் தன் மடியில் அமர்த்தி புடவைத் தலைப்பினால் விசிறி மரணவலி இல்லாமல் செய்ய, வ்ருத்தாசலேச்வரனான சிவன் ராம தாரக மந்த்ரத்தைக் காதில் உபதேசம் செய்து மோக்ஷம் கிடைக்கச் செய்கிறான் என்று கூறுவர்.

ஒரு ஸமயம் பார்வதிதேவியை நீலகண்டர் அவசரமாக அழைத் தாராம். அதற்குப் பார்வதி (விஷ்ணு) ஸஹஸ்ரநாமத்தைச் சொல்லிவிட்டு

வருகிறேன். இல்லாவிடில் அதை விரைவில் சொல்லி முடிக்க ஏதாவது குறுக்கு வழி உண்டோ என்றாளாம். அதற்கு சிவன் ராமநாமாவை ராம ராம ராம என மூன்று தடவை சொல்லிவிட்டு வா என்றாராம். ராம நாமாவை மூன்று முறை சொன்னால் அது நாராயணனின் ஆயிர நாமத்திற்கு ஸமானம். என்னே இவ்வீரெழுத்தின் பெருமை!

பார்வதி :

केनोपायेन लघुना विष्णोर्नाम सहस्रकम् ।
पठ्यते पण्डितैर्नित्यं श्रोतुमिच्छाम्यहं प्रभो ।

கேன உபாயேன லகுனா விஷ்ணோ: நாமஸஹஸ்ரகம் ।
பட்யதே பண்டிதை: நித்யம் ஶ்ரோதும் இச்சாமி அஹம்ப்ரபோ! ॥

ஈச்வரன் :

श्री राम राम रामेति रमेरामे मनोरमे ।
सहस्र नाम तत्तुल्यं राम नाम वरानने ॥

ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே।
ஸஹஸ்ர நாம தத் துல்யம் ராம நாம வரானனே! ॥

இங்கு மூன்று எனும் எண் ஆயிரம் ஆவதில் ஒரு கணித விஞ்ஞானம் உண்டு. ஜோதிடத்தைச் சேர்ந்த லீலாவதி கணிதத்தில் எழுத்துக்களைக் கொண்டே கணக்கிடும் முறை ஒன்று உண்டு. ''காதி நவ, பாதி பஞ்ச, யாத்யஷ்டௌ'' ஸம்ஸ்கிருதத்தில் ''க''விலிருந்து 9 எழுத்துக்களையும், ''ப'' விலிருந்து 5 எழுத்துக்களையும், ''ய''விலிருந்து 8 எழுத்துக்களையும் கொண்டு எண்களைக் கூறுவர். அதன்படி ''ரா'' எனும் எழுத்து ய, ர, ல, வ என்ற வரிசையில் இரண்டாவதாக இருக்கிறது. அது 2 எண்ணைக் குறிக்கும். ''ம'' என்பது ப வரிசையில் ஐந்தாவது எழுத்தாகும். இது 5 எண்ணைக் குறிக்கும். இரண்டையும் பெருக்கினால் 2 x 5 = 10 பத்தாகும். மூன்று ராம சப்தத்தைப் பெருக்கினால் 10 x 10 x 10 = 1000, ஆயிரம் ஆகும் என்பர்.

कल्याणानां निधानं कलिमल मथनं पावनं पावनानां,
पाथेयं यन्मुमुक्षोः सपदिपरपद प्राप्तये प्रस्थितस्य ।
विश्रामस्थानमेकं कविवर वचसां जीवितं सज्जनानां
बीजं धर्म द्रुमस्य प्रभवतु भवतां भूतये राम नाम ॥

கல்யாணானாம் நிதானம், கலி மல மதனம், பாவனம் பாவனானாம் ।
பாதேயம் யத் முமுக்ஷோ, ஸபதி பரபத ப்ராப்தயே ப்ரஸ்திதஸ்ய

விஸ்ராம ஸ்தானம் ஏகம் கவிவர வசஸாம் ஜீவிதம் ஸஜ்ஜனானாம்
பீஜம் தர்ம த்ருமஸ்ய ப்ரபவது பவதாம் பூதயே ராமநாம ॥

சங்கராசாரியார் - ராமகர்ணாம்ருதம்

மங்களங்களுக்கு நிலைக்களமாயும், கலியினால் ஏற்படும் பாபங் களைப் போக்குவதாயும், நம்மைத் தூய்மைப்படுத்துபவற்றுள் சிறந்த தாயும், பரமபதத்தைப் பெறப் புறப்பட்டவனுக்கு வழியில் பயன்படும் கட்டுச்சோறு போன்றதாயும், கவிகளின் வர்ணனைகட்கு எல்லை நிலமாயும், நல்லோர்கட்கு நல்வாழ்வை அளிப்பதாயும், தர்ம வ்ருக்ஷத்தின் விதை போன்றதாயுமுள்ள ராம நாமாவானது உங்களுக்கு மங்களங்களை அளிக்க வல்லதாக ஆகட்டும்.

रामः सर्वाभिरामत्वात् आत्मारामत्वतोऽपि वा ।
देवः मरकतश्यामः इति वा राम नामकः ॥
नित्यं रमाभिसम्बन्धात् दानं श्रीः तस्य हेतिवा ॥
रामाणां हृद्यभावत्वात् रामं तं सज्जनाः विदुः ॥

ராம: ஸர்வாபிராமத்வாத் ஆத்மாராமத்வத: அபிவா ।
தேவ: மரகதஶ்யாம: இதிவா ராம நாமக: ॥
நித்யம் ரமாபிஸம்பந்தாத் தானம் ஸ்ரீ: தஸ்யஹ இதிவா ।
ராமாணாம் ஹ்ருத்ய பாவத்வாத் ராமம் தம் ஸஜ்ஜனா: விது: ॥

ராமகர்ணாம்ருதம்

நாராயண பண்டிதாசார் ஸ்ரீமத் மத்வாசார்யருடைய சிஷ்யர்களில் ஒருவர். இவர் தாம் இயற்றிய ஸங்க்ரஹ ராமாயணத்தில் ராமன் எனப் பெயரிட்டதற்கு ஆறு காரணங்களைக் கூறுகிறார்.

1. பிறந்த குழந்தைகளைப் பார்த்துவிட்டு வருவது இயல்பு. நாட்டி லுள்ள ஒவ்வொருவரும் எத்தனையோ குழந்தைகளைப் பார்த்திருக் கிறார்கள். அவற்றுள் பல மிக அழகு வாய்ந்தவை. இருப்பினும் இக் குழந்தையினிடம் காணும் பேரழகை—அழகுக் கடலை எங்கும் கண்ட தில்லையாம். எனவே கட்டழகனாய், ஸர்வாபிராமனாய், லோகாபி ராமனாய்த் திகழ்வதால் ராமன் என்னும் பெயர் மிகப் பொருந்துவதாம்.

2. ஆனந்தமயமான ஸாக்ஷாத் பரப்ரஹ்மமே அவதரித்திருப்பதால் குழந்தை ஆத்மா ராமனாய் முகத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கக் காட்சியளிக்கிறது. மற்ற குழந்தைகள் பிறந்ததும் அழாவிடில் நாம் கவலைப் படுவோம். அழுகிறதா? என ஊசியினால் குத்திப் பார்ப்பார்கள். தேவர்கட்கு வாக்களித்தபடி அவதரித்து விட்டோமே என இக்குழந்தை புன்னகை பூக்கின்றது போலும்.

3. மரகதமணி போன்று கண்ணைக் கவரும் கரிய திருமேனியோடு காட்சியளிப்பதால் ராமன் என்பர். (ராம எனும் சொல்லுக்கு ஶ்யாமளம் கருமை என்றும் பொருள் உண்டு). இவன் கடல் வண்ணன், நீருண்ட மேகஶ்யாமளன் அல்லவா!

4. ''அகலகில்லேன் இறையும் என்று அலர் மேல் மங்கை உறை மார்பர்'' ''அனந்யா ராகவேண அஹம் பாஸ்கரஸ்ய ப்ரபாயதா'' ஸீதை யாகிய நான் வெளித்தோற்றத்திற்கு ராகவனை விட்டுப் பிரிந்திருப்பவள் போன்று தோன்றினாலும் கதிரவனின் கதிரைப் போன்று என்றும் பிரியாதவள். வேதமும், விஷ்ணுவினிடமிருந்து மஹாலக்ஷ்மீ என்றும் பிரியாதவள் என்கிறது. ஆகப் பிரமாணங்களின்படி ரமா (மஹாலக்ஷ்மீ) இவனை (பரமனை) விட்டு என்றும் பிரியாதவளாய் இருப்பது பற்றி ராமன் எனப் பெயரிடப்பட்டதாம்.

5. 'ரா தானே' எனும் வினையினின்றும் ரா எனும் ஓரெழுத்துச் சொல் தோன்றியது. அதற்கு தானம் (கொடை) என்பது பொருள். மா எனும் ஓரெழுத்துச் சொல் திருமகளைக் குறிக்கும். எவனுக்கு (மா) மஹாலக்ஷ்மீ (ரா) தானமாக கொடையாகக் கிடைத்தாளோ அவன் ராமன். லக்ஷ்மீ கல்யாணம், ஸீதா கல்யாணம், ருக்மிணீ கல்யாணம் திருக்கோயில்களில் கல்யாணோத்ஸவம் ஆகியவற்றில் கன்யாதானம் செய்து கொடுப்பது பற்றி ராமன் எனப் பெயரிட்டார் போலும். ஸீதாபதி, ருக்மிணீபதி என்று தானே பிறந்த ஊரில் மருமகனைப் பேசுவார்கள்.

6. ராமா: என்றால் அழகிகளான பெண்கள். இவர்களின் மனத்திற்கு மிகவும் உகந்தவனாயிருந்தபடியால் ராமன் எனும் பெயர் மிகப் பொருத்தமே. ராமன் அழகுக் களஞ்சியமாயிற்றே. ''பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்'' தன் அழகினால் ஆடவர்களின் கண்களையும் மனதை யும் கவரும் தன்மையன் அல்லவா இவன்! ''தத்ருஶு: விஸ்மிதா காரா: ராமஸ்ய வனசாரிண:'' ராமன் தண்டகையில் நுழையும்போது அங்குள்ள மஹர்ஷிகளும் பறவைகளும், விலங்குகளும் இவன் அழகில் மயங்கி கண்களாரப் பருகினராம். இவர்களின் உள்ளக்கிடக்கையை உணர்ந்த ராமன் த்வாபரயுகத்தில் தான் கண்ணனாகத் தோன்றி இவர்களை ஆய்ச்சிகளாகப் பிறக்கச் செய்து அருள்பாலித்தபடி.

रामइत्यभिरामेण वपुषा तस्य चोदितः ।
नामधेयं गुरुः चक्रे जगत् प्रथम मङ्गलम् ॥
ओंकारश्चाथशब्दश्च द्वौ एतौ ब्रह्मणः पुरा ।
कण्ठं भित्वाविनिर्यातौ तस्मात् माङ्गलिकौ उभौ ॥

ராம இதி அபிராமேண வபுஷா தஸ்ய சோதித: ।
நாமதேயம் குரு: சக்ரே ஜகத் ப்ரதம மங்களம் ॥

ஓங்காரஶ்ச அத சப்தஶ்ச த்வௌ ஏதௌ ப்ரஹ்மண: புரா ।
கண்டம் பித்வா விநிர்யாதௌ தஸ்மாத் மாங்கலிகௌ உபௌ ॥

காளிதாஸன்

வஸிஷ்டரும் தசரதரும் குழந்தையைப் பார்த்தனர். உடலமைப்பை உற்று நோக்கினர். 32 விதமான ஸாமுத்ரிகா லக்ஷணம் பொருந்தியிருப்பதையும், அழகையும் வைத்த கண் வாங்காது பார்த்துச் சொக்கிப் போயினர். ''அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்'' என்பர் கம்பர். என்னே இவன் அழகு, இவனல்லனோ அழகன் என வாய் முணுமுணுக்கச் செய்தது குழவியின் திருமேனி. அதையே அழகன் ராமன் எனப் பெயரிட்டனராம். இப் பெயரே உலகில் முதல் மங்களமான, மங்களங்களை விளைவிப்பதாக ஆயிற்று என்பர் காளிதாஸர். மற்ற மங்கலப் பொருள்களை அதாவது மஞ்சள், வலம்புரிச் சங்கு, பசு, நெற்களஞ்சியம் ஆகியவற்றைத் தேடி அலைந்து ஸம்பாதித்து வீட்டில் வைத்தால் அவை மங்களத்தை நன்மையை விளைவிக்கும் என்பர். ஆனால் வாயால் ராம என்று பெயரைச் சொன்னாலே உலகினர் அனைவரும் மங்களத்தைப் பெறுவர் என்கிறார் மஹாகவி. ஏன்? ராமதாபனீயம் எனும் உபநிஷத் ராம எனும் சொல் ப்ரணவத்திற்குச் சமம் என்று ஓதுகிறது. பிரணவமும் அத எனும் சொல்லும் அனைத்தையும் படைக்கும் நான்முகனின் வாயினின்றும் முதன் முதல் தோன்றினவாம். முதன் முதலாகப் படைக்கப் பெற்றபடியால் மங்களத்தை விளைவிப்பவை. இத்தகைய ப்ரணவத்திற்குச் சமமான படியால் ராம சப்தமும் நமக்கு நன்மையை விளைவிக்கிறது.

இக்கருத்தையே மற்றொரு வகையில் விளக்குகிறார் துளஸீதாஸர்.

तुलसी राम सनेहि करु त्यागि सकल उपचार ।
जैसे घटत न अङ्कनौ नौके लिखत फहार ॥

துளஸீ ராம் ஸனேஹி கரு த்யாகி ஸகல் உபசார் ।
ஜைஸே கடத் ந அங்க் நௌ நௌகே லிகத் பஹார் ॥

.ராம நாமம் நமக்கு ராம பக்தியைத் தூண்டி நன்மையை விளைவிக்கும். ஒரு மனிதன் எந்நிலையிலும் ராம பக்தியைக் கைவிடலாகாது. ராமனிடத்தில் திடபக்தி இருந்தாலே போதும். மற்ற எம் முயற்சிகளும் தேவையில்லையாம். நம்மிடம் ராம பக்தி ஒன்பதாம் வாய்ப் பாட்டைப் போல் இருக்க வேண்டும். அந்த வாய்ப்பாட்டில் முக்யமான எண் ஒன்பது. அதைக் கொண்டு எப்படியெல்லாம் பெருக்கினாலும் மூல எண்ணான 9 தன் நிலையை மாற்றிக் கொள்வதில்லை. அதே போன்று நாமும் நம்மிடையே ராம பக்தியை நிலைகுலையாது பாதுகாப்போமாகில் நன்மைகட்கு குறைவு ஏது? 9 x 2 = 18. இதை 1 + 8 = 9 என கூட்டினால் அதே எண் ஒன்பது வந்துவிடும். 9 x 13 = 117. 1 + 1 + 7 கூட்டினால் 9 வந்துவிடும். ஒன்பதாம் வாய்பாட்டை உவமையிட்டுக் கூறியதற்கு மற்றொரு கருத்தும் உண்டு.

அதாவது "9" எண்ணை முற்றிலும் குறைகள் நிறைந்த மனிதனாக வைத்துக் கொள்வோம். அவன் தன் தகுதிகளையும், தான் ஆற்றும் நற்செயல் களையும் கொண்டு பெருக்கிக் கழித்துப் பார்த்துத் தனது குணநிறைவையும், குணக்குறைவையும் ஆராய்கிறான். திடீரென ஒருவன் குணக் குன்றாக ஆகிவிட முடியாதல்லவா? சிறிது சிறிதாக முயன்று தானே முன்னேற வேண்டும். சிறிது சிறிதாக தீச்செயல்களைக் குறைத்து நல்ல வற்றைக் கைக் கொள்ள வேண்டும். அப்பொழுது சோதனை செய்து பார்த்துக் கொண்டால் படிப்படியாக நாம் முன்னேறுவது விளங்கும்.

9 x 1 = 9 முதலில் மாற்றமில்லை. முற்றிலும் குறையுடையவனாக இருக்கிறான்.

9 x 2 = 18 ராம நாமாவைச் சொல்வதினால் குணம் 1 குறை 8.

9 x 3 = 27 ராம நாமம் ராம பக்தியை தோற்றுவிக்கிறது. எனவே குணம் 2 குறை 7.

மேலும் இவ்வாறே -

9 x 9 = 81 பக்தி வளர வளர குணம் மிகுந்து குறைகள் தேய்கின்றன. இப்பொழுது குணம் எட்டு மடங்கு வளர்ந்து குறை ஒன்றாகக் குறைகிறது *8 - 1*.

9 x 10 = 90 இங்கு ராம பக்தி இவனை குணக் குன்றாகச் சிறிதும் குற்றமற்றவனாக ஆக்குகிறது. ஆக நவமியில் அவதரித்ததைக் கொண்டு சிறுவர்களும் அறியும்படி ராம நாம மஹிமையை துளஸீதாஸர் விளக்கினார்.

வஸிஷ்டர் தேர்ந்தெடுத்த பெயரே மிகச் சிறந்தது ஒப்புயர்வு அற்றது, மாற்ற முடியாதது என்பதற்கு இங்கு ஒரு அகச் சான்றையும் குறிப்பிடு கிறோம்.

விஶ்வாமித்ரர் தமது வேள்வியைக் காப்பதற்காக நகரினின்றும் ராமனைக் காட்டுக்கு அழைத்துச் செல்கிறார். முனிவர் முன்னே செல்கிறார். முனிவர் முன்னே செல்ல ராமனும் லக்ஷ்மணனும் பின் தொடர்கிறார்கள். இவர்கள் வருகிறார்களா? என்பதை அறிவதற்காகக் கூட முனிவர் திரும்பிப் பார்க்கவில்லை. நகரைக் கடந்து ஸரயூ நதியின் தென் கரையை அடைந்ததும் சக்கரவர்த்தித் திருமகனை ராமா என்று அழைத்துப் பேசத் தொடங்கினார்.

अध्यर्ध योजनं गत्वा सरय्वाः दक्षिणे तटे ।
रामेति मधुरां वाणीं विश्वामित्रोऽभ्यभाषत ।

அத்யர்த்த யோஜனாம் கத்வா ஸரய்வா: தக்ஷிணே தடே ।
ராமேதி மதுராம் வாணீம் விஶ்வாமித்ர: அப்யபாஷத ॥

வா.ரா. பால. - 22.

இங்கு வால்மீகி முனிவர், ராம எனும் இனிய (மதுரமான) சொல்லைப் பேசினார் விஸ்வாமித்ரர் (சொன்னார்) என்கிறார். ராம என்று அழைத்தார் எனக் கூறவில்லை. நகரத்தின் எல்லையை அடையும்வரை பேசாமல் சென்றதின் காரணத்தை நன்கு ஊஹிக்கலாம். இக்ஷ்வாகு குல குருவான வஸிஷ்டரால் இடப்பட்ட பெயர் இது. நம் பகைவரால் இடப்பட்ட பெயரைக் கொண்டு அழைக்க இஷ்டமில்லை. இதைவிட அழகான இனிதான பெயரைச் சூட்டி அழைக்க விரும்பினார். ஸஹஸ்ர நாமங் களையும் சொல்லிப் பார்த்தார். வேதபுராண இதிஹாஸங்களையெல்லாம் நினைவில் கொணர்ந்து ஆராய்ந்து பார்த்தார். கருத்ததும் சொல்லினி மையும் கொண்ட பெயரைக் கொண்டே ராம என அழைத்தாராம். எனவே ராம நாமம் விஸ்வாமித்ர முனிவராலும் போற்றப் பெற்றது.

குழந்தைகட்கு நாமகரணம் செய்தவன்று நாட்டு மக்கள் அனை வருக்கும் விருந்தளித்தானாம் அரசன். அந்தணர்கட்கு அளவு கடந்த செல்வங் களையும் வழங்கினானாம்.

பொய்வழி இல்முனி புகல்தரு மறையால்
இவ்வழி பெயர்கள் இசைத்த உழி இறைவன்
கைவழி நிதிஎனும் நதி கலைமறையோர்
மெய்வழி உவரி நிறைத்தன மெல்மேல்.

க.ரா. பால. - திருவவதாரம்

உவரி: கடல்

குலப்புரோஹிதரான வஸிஷ்டர், குழந்தைகட்கு நன்மையைக் கொடுக்கக்கூடிய சிறந்த வேத மந்திரங்களை ஜபித்துக் கொண்டே பெயர் சூட்டினாராம். வேத மந்திரங்கள் நமக்கு உயர்வையும், தூய்மையையும், விரும்பிய பயன்களையும் அளிக்கக் கூடியவை. எனவே வேத மந்திரங்கள் இன்றி எந்த கர்மாவையும் செய்யக் கூடாது. பிறப்பு தொடங்கி இறப்பு வரையும் அதற்குப் பிறகும் வேத மந்திரங்களைக் கொண்டே அனைத்தை யும் செய்ய வேண்டும். மந்திரத்தைச் சொல்லும் கர்த்தாவும், அதைச் சொல்லி வைக்கும் ப்ருஹஸ்பதியும் எப்படி இருந்தால் மந்திரம் நமக்குப் பயனை அளிக்கும் என்பதைக் கம்பர் உணர்த்துகிறார் : ''பொய்வழி இல்முனி புகல்தரு மறையால்'' என்று, தீ நெறியில் செல்பவர்கள், பொய் பேசுபவர்கள், எழுத்துப் பிழை, ஸ்வரப் பிழைகளுடன் தவறாகச் சொல் பவர்கள் மந்திரங்களினால் ஏற்படும் நன்மைகளைப் பெறமுடியாதாம். அறவழி நின்று, வாய்மை காத்து, ஸ்வக்ஷரமாய் ஸுஸ்வரமாய் ஓதும் மந்திரங்களே நன்மைகளை நல்குமாம்.

வேத மந்திரங்களை ஞானதிருஷ்டியால் கண்டறிந்து நமக்குக் கொடுத்த வஸிஷ்டரே புரோஹிதராய் இருந்து செய்தபடியால் தசரதருக்கு

எல்லையற்ற மகிழ்ச்சி. அன்னதானத்தோடு, வேதசாஸ்த்ரங்களைக் கசடறக் கற்ற அந்தணர்கட்குப் பொருளையும் வாரி வழங்கினாராம். நிதியாகிற ஆறு அவர் கையினின்றும் பெருகினவாம். நிதிகளை நீர்வார்த்துக் கொடுத்தமை யால் அந்நீர்களும் நதி போன்று பெருகினவாம். தானத்தைப் பெறுவோரும் கடலலைகள் போல் திரண்டு வந்தனராம். இங்கு கம்பர், தசரதருக்குள்ள அனுஷ்டானப் பற்றையும், வள்ளல் தன்மையையும், கற்றோரை மகிழ் விக்கும் பாங்கையும், வைராக்யத்தையும், பெருந்தன்மையையும் அழகுறச் சித்தரிப்பது ரஸித்து இன்புறக் கூடியது.

कुमाराः कृत संस्काराः ते धात्री स्तन्य पायिनः ।
आनन्देनाग्रजेनेव समं ववृधिरे पितुः ॥

குமாரா: க்ருதஸம்ஸ்காரா: தே தாத்ரீஸ்தன்ய பாயின: ।
ஆனந்தேந அக்ரஜேந இவஸமம் வவ்ருதிரே பிது: ॥

காளிதாஸன்

அமிர்துஉகு குதலையொடு அணிநடை பயிலாத்
திமிரம்அது அற வருதினகரன் எனவும்
தமரம்அது உடன்வளர் சதுமறை எனவும்
குமரர்கள் நிலமகள் குறைவு அறவளர் நாள்.

க.ரா. பால. - திருவவதாரம்

குதலை: மழலை, திமிரம்: இருள், தமரம் : ஸ்வரத்தின் ஓசை

குமாரர்கள் நால்வருக்கும் ஜாதகர்மம் நாமகரணம் ஆகிய வைதிக ஸம்ஸ்காரங்கள் நடந்தன. மாற்றுத் தாய்மார்கள் பால் கொடுத்து வந்தனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் குழந்தைகள் வளர்ந் தனர். நால்வருக்கும் மூத்ததாகிய ஆனந்தத்தைப் போன்று வளர்ந்தார்கள் என்றார் மஹாகவி. இந்நால்வருக்கும் ஆனந்தம் எவ்வாறு மூத்ததாயிற்று; அது எப்படி நாள்தோறும் வளர்ந்தது? பல்லாண்டுகள் மக்கட்பேறு இன்மை யால் இதயத்தில் துன்பம் குடி கொண்டிருந்தது. முதலில் ஸுமந்த்ரர் வார்த்தையைக் கேட்டதும் தமக்கும் புத்ரபாக்யம் உண்டு போலும் என ஆனந்தம் பிறந்தது.(ஏற்பட்டது) ரிஶ்யஶ்ருங்கர் வந்தபோதும், புத்ர காமேஷ்டியில் திவ்ய புருஷன் பாயஸம் கொடுத்த போதும் மனைவியர் கருவுற்றதும், அவர்களின் மசக்கை, கனவுகளைக் கேட்ட போதும், படிப் படியாக அவருடைய ஆனந்தம் (மகிழ்ச்சி) வளர்ந்து கொண்டே வந்தது. பிரஸவித்ததும் கடல் போல் பொங்கி, நாம கரணம் ஆனபொழுது இதயத்தி னின்றும் பீறிட்டு வெளியில் அலைவீசியது. இங்கு தசரதருக்கு இந்நான்கு குமாரர்கள் பிறப்பதற்கு முன்னரே அவருக்கு மகிழ்ச்சி (ஆனந்தம்) பிறந்ததல்லவா? எனவே ஆனந்தம் மூத்தது. குமாரர்கள் இளையவர்க

ளாயினர். முதலில் தோன்றிய ஆனந்தம் சிறிது சிறிதாக படிப்படியாக வளர்ந்தது போல் பின்னால் தோன்றிய புதல்வர்களும் வளர்ந்தனராம். குழந்தைகளின் மழலை மொழிகளைக் கேட்டு இன்புற்றனர். பிறர் குழந்தை களின் மழலையைக் கேட்டாலே அமிழ்தூறும். தம் குழந்தைகள் அதிலும் ஏங்கி ஏங்கி பல்லாண்டுகட்குப் பிறகு கிடைத்த குழந்தைகளின் மழலை யைப் பற்றிக் கேட்பானேன்?

குழல்இனிது யாழ்இனிது என்ப தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர். குறள் - 66

இவ்வாறு மழலை பேசி, அழகிய தளர்நடை போட்டு மகிழ்வித்தனர். நால்வரும் நான்கு வேதங்களை ஒத்தவர்கள். வேதங்கள் உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் எனும் நால்வகை ஸ்வரங்களின் ஒலிகளால் வளர்ச்சி அடைகின்றன. அவை போன்று குழந்தைகள் வளர்ந்தனராம். வேதங்களை ஸ்வரங்களின் பிழையின்றி உரக்கக் கூறுவதால் நாடு நலம் பெறுகிறது. இவர்களின் அவதார வளர்ச்சியால் நாடு நலம் பெறத் தொடங்கியதாம். மேலும் கதிரவன், தன் கதிர்களை வீசி உலகம் முழுவதும் சூழ்ந்த காரிருளை அகற்றிக் கொண்டே வானில் விரைந்து வளர்வது போன்று நால்வரும் வளர்ந்தனர். இவர்களின் வளர்ச்சி இருள் போன்ற மக்களைச் சூழும் தீமைகளை அகற்றத் தொடங்கியது. ஆம். இவர்களின் அவதாரம் தீயோரை அகற்றி அறம் வளர்த்து நன்மைகளை அளிக்கத்தானே!

பாகவதத்தில் சுகர் கண்ணனின் பால லீலைகளை வர்ணனை செய்து நம்மைப் பரவசப்படுத்துகிறார். இதை அத்யாத்ம ராமாயணத்தில் காண் கிறோம்.

नीलोत्पलदल श्यामः पीत वासाः चतुर्भुजः ।
शङ्ख चक्र गदा पद्म वनमाला विराजितः ॥
अनुग्रहाख्य हृत्स्थेन्दु सूचकः स्मित चन्द्रिकः ।
करुणारस सम्पूर्ण विशालोत्पल लोचनः ॥

நீலோத்பல தளஶ்யாம: பீதாவாஸா: சதுர் புஜ: ।
ஶங்க சக்ர கதா பத்ம வனமாலா விராஜித: ॥
அனுக்ரஹாக்ய ஹ்ருத்ஸ்தேந்து ஸூசக: ஸ்மித சந்த்ரிக: ।
கருணாரஸ ஸம்பூர்ண விஶாலோத்பல லோசன: ॥

கௌஸல்யா :

देव देव नमस्तेऽस्तु शङ्ख चक्र गदाधर ! ।
उपसंहर विश्वात्मन् अदोरूपमलौकिकम् ।
दर्शयस्व महानन्द बाल भावं सुकोमलम् ।

दृष्ट्वा दशरथो राजा कौसल्या मुमुदे तदा
भोक्ष्यमाणः दशरथः राममेहि इति चासकृत्
आह्वयति अतिहर्षेण प्रेम्णा नायाति लीलया।
आनयेति च कौसल्यां आह सा सस्मिता सुतम्।
प्रहसन् स्वयमायाति कर्दमाङ्कित पाणिना।
किंचित् गृहीत्वा कबलं पुनरेव पलायते।
भोजनं देहि मे मातः न श्रुतं कार्य सक्तया।
ततः क्रोधेन भाण्डानि लगुडेनाहनत्तदा।
शिक्यस्तं पातयामास गव्यं च नवनीतकम्।
लक्ष्मणाय ददौ रामः भरताय यथाक्रमम्॥
सूतेन कथिते मात्रे हासं कृत्वा प्रधावति।
कौसल्याधावमानाऽपि प्रस्खलन्ती पदे पदे।
रघुनाथं करे धृत्वा किंचिन्नोवाच भामिनी।
बालभावं समाश्रित्य मन्दं मन्दं रुरोद ह।
ते सर्वे लालिता मात्रा गाढमालिंग्य यत्नतः॥

தேவ தேவ நமஸ்தே அஸ்து ஶங்க சக்ர கதாதர!
உபஸம்ஹர விஶ்வாத்மன் அதோருபம் அலௌகிகம் ।
தர்ஶயஸ்வ மஹானந்த பால பாவம் ஸுகோமளம் ॥
த்ருஷ்ட்வா தசரத: ராஜா கௌஸல்யா முமுதே ததா ।
போக்ஷ்யமாண: தசரத: ராமம் ஏஹி இதிச அஸக்ருத் ॥
ஆஹ்வயதி அதிஹர்ஷேண ப்ரேம்ணா நாயாதி லீலயா ॥
ஆனயஇதிச கௌஸல்யாம் ஆஹஸா ஸஸ்மிதா ஸுதம் ॥
ப்ரஹஸன் ஸ்வயம் ஆயாதி கர்தமாங்கித பாணினா ॥
கிஞ்சித் க்ருஹீத்வா கபலம் புனரேவ பலாயதே ॥
போஜனம் தேஹிமே மாத; ந ஶ்ருதம் கார்ய ஸக்தயா ।
தத: க்ரோதேன பாண்டானி லகுடேன அஹனத்ததா ॥
சிக்யஸ்தம் பாதயாமாஸ கவ்யம் ச நவநீதகம் ॥
லக்ஷ்மணாய ததௌராம: பரதாய யதாக்ரமம் ।
ஸூதேன கதிதே மாத்ரே ஹாஸ்யம் க்ருத்வா ப்ரதாவதி ॥
கௌஸல்யா தாவமானாபி ப்ரஸ்கலந்தீ பதேபதே ।
ரகுநாதம் கரேத்ருத்வா கிஞ்சித் நோவாச பாமினீ ॥
பால பாவம் ஸமாஶ்ரித்ய மந்தம் மந்தம் ருரோதஹ ।

தே ஸர்வே லாலிதா மாத்ரா காடம் ஆலிங்க்ய யத்னத: ॥

परिवृत्य स्वयं रामः करेण मृदुळेन च ।
कौसल्यास्ये नृपास्येऽपि कबलौ अकरोन्मुदा ।

பரிவ்ருத்ய ஸ்வயம் ராம: கரேண ம்ருதுலேன ச ।
கௌஸல்யாஸ்யே ந்ருபாஸ்யேபி கபளௌ அகரோத்முதா ॥

ஆனந்த ராமாயணம்

ராமன் அவதரிக்கும் பொழுது கரு நெய்தல் மலரின் இதழ் போன்று அழகிய கருநிறம் கொண்ட திருமேனியோடும், சங்கு, சக்ரம், கதை, பத்மம் இவற்றை ஏந்திய நான்கு கைகளோடும், திருமார்பில் காட்டுத் துளஸி மாலையோடும் விளங்கினானாம். அவனுடைய புன்னகையாம் நிலவு, உள்ளே உள்ள அருள் வடிவாம் இதய சந்திரனைக் காட்டிற்றாம். நீண்டு அகன்ற கண்களில் தயாரஸம் தேங்கி இருந்ததாம். இதைக் கண்ட கௌஸல்யை சங்க சக்ர கதைகளை ஏந்திய திருக்கைகளை மறைத்துக் கொண்டு இப்பூவுலகுக்கு ஏற்ற குழந்தை வடிவத்தை காண்பிக்குமாறு வேண்டி வணங்கினாளாம். சக்ரவர்த்தியும் கௌஸல்யையும் குழந்தையை விட்டுச் சிறிதும் பிரியாது பார்த்துப் பார்த்து மகிழ்ந்து வந்தனர். தான் சாப்பிடும் பொழுது ''ராமா! வா வா'' என அடிக்கடி தசரதர் எல்லையற்ற மகிழ்ச்சியும் அன்பும் ததும்ப குழந்தையை அழைப்பார். குழந்தைக்கோ விளையாட்டிலேயே நோக்கு. அருகில் வராது. உடனே கௌஸல்யையை அழைத்து ''நீ போய் குழந்தையை அழைத்து வா'' என்பர். அவளோ ''வாடா கண்ணு. அப்பா கூப்பிடுகிறார்'' என புன்னகையோடு பிள்ளையை அழைப்பாள் கைகளை நீட்டிய வண்ணம், அவனும் நன்கு சிரித்துக் கொண்டே அழுக்கில் அளைந்த கைகளோடு ஓடி வருவான். வாயில் சிறிது சாதத்தை ஊட்டுவார். அதை மென்று கொண்டே பறந்தோடி விடுவான்.

ஒருநாள் ''அம்மா! சாதம் போடு'', என சொல்லிக் கொண்டே வந்தான். கோஸலை வீட்டு வேலையில் ஈடுபட்டிருந்தாள். குழந்தை சொன்னது காதில் விழவில்லை. குழந்தைகட்கு தான் வரும் போது அம்மா தூக்கிக் கொள்ளவில்லை என்றால் கோபம் வருவது இயற்கை. இப் பொழுதோ அதற்குப் பசி, கேட்பானேன். உடனே கோபம் பொங்கியது. அருகிலிருந்த தடியை எடுத்தான். பாத்திரங்களையெல்லாம் அடித்துக் கீழே தள்ளினான். உயரே நோக்கினான். அன்று கடைந்தெடுத்த வெண்ணெயும் தயிரும் உறியில் இருந்தன. அதைக் கம்பால் குத்திக் கீழே தள்ளினான். வெண்ணெயை அள்ளி எடுத்து லக்ஷ்மணனுக்கும் பரதனுக்கும் கொடுத் தான். தானும் வாயில் போட்டுக் கொண்டான். இதைச் சமையற்காரர் பார்த்து விட்டார். உடனே அம்மாவிடம் ''சற்று திரும்பிப் பாருங்கள்'' என்றதும் உரக்கச் சிரித்துக் கொண்டே ஓட ஆரம்பித்தான். கோஸலையும் தடுமாறி ஓடிப்பிடித்து விட்டாள். குழந்தை மெள்ள மெள்ள அழ ஆரம்பித்தது.

மார்போடு இறுக அணைத்துத் தழுவித் தாலாட்டி கொஞ்சி முத்தமிட்டு ஸமாதானப் படுத்தினாள்.

மக்கள் மெய்தீண்டல் உடற்குஇன்பம் மற்றுஅவர்
சொல்கேட்டல் இன்பம் செவிக்கு குறள் - 65

ஒரு ஸமயம் தங்கக் கிண்ணியில் சாதத்தை வைத்துக் கொண்டு ஊட்டினாள். தசரதரும் அருகில் இருந்து மகிழ்ந்தார். குழந்தை கிண்ணியிலிருந்து சாதத்தை எடுத்து அப்பா வாயிலும் அம்மா வாயிலும் சுற்றி சுற்றி வந்து ஊட்டினானாம். இதைவிட வேறு அமிழ்தமும் வேண்டுமோ அவர்கட்கு.

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ். குறள் - 64

இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யிடை அடிசில் மெய் படவிதிர்த்தும்
புறநானூறு - 188

ஆகிய செயல்களே தாய் தந்தையருக்கு மகிழ்வினை ஊட்டுவன அன்றோ!

चक्रायुधस्य यच्चक्रं दैत्यचक्र विदारणम् ।
तत् काम रूपं कैकेय्याः पुष्ये पुत्रत्वमाययौ ॥
देव त्विड् जन जन्यघ्नः पाञ्चजन्यः व्यजायत ।
सुमित्रायाः सुतत्वेन स्वामिनः सेवनेच्छया ॥

சக்ராயுதஸ்ய யத் சக்ரம் தைத்ய சக்ர விதாரணம் ।
தத் காம ரூபம் கைகேய்யா: புஷ்யே புத்ரத்வம் ஆயயௌ ॥
தேவ த்விட் ஜன ஜன்யக்ன: பாஞ்சஜன்ய: வ்யஜாயத ।
ஸுமித்ராயா: ஸுதத்வேன ஸ்வாமின: ஸேவனேச்சயா ॥

நாராயண பண்டிதாசார்யர் - ஸங்க்ரஹ ராமாயாணம்

எம்பெருமான் ராமனாக அவதரித்தது போல அஸுரக் கூட்டங்களைப் பிளந்து அழிக்குந் தன்மையை உடைய சக்ரத்தாழ்வன் பரதனாகவும், தன் ஓசையினாலேயே தேவ சத்ருக்களை விரட்டி அழிக்கும் பாஞ்சஜன் யாழ்வான் சத்ருக்னனாகவும் ''சென்றால் குடையாம்'' என்றபடி ஸர்வதேச ஸர்வகால ஸர்வ நிலைகளிலும் பரமனை விட்டுப் பிரியாது தொண்டு புரியும் திருவனந்தாழ்வான் லக்ஷ்மணனாகவும் அவதரித்தனர் என்றும்.

வாஸுதேவன் ராமனாகவும், ஸங்கர்ஷணர் லக்ஷ்மணனாகவும், ப்ரத்யும்னர் பரதனாகவும் அனிருத்தர் சத்ருக்னராகவும் அவதரித்தனர். அதாவது வ்யூஹாவதாரப் பெருமாள்களே விபவத்தில் தோன்றினர் என்றும் ஸங்க்ரஹ ராமாயணம் கூறும்.

தாலாட்டு

இத்தகைய பெருமை சான்ற குழந்தைகளை வளர்ப்பதில் அரண்மனையிலுள்ள மாற்றாந்தாய்மார்கள் போட்டியிட்டுப் பணியாற்றினராம். இக்குழந்தைகளின் அவதார கார்யங்களை அரண்மனைக்கு வரும் மஹர்ஷிகளின் மூலமாக அறிந்த தாதிமார்கள் ராமனைத் தொட்டிலிட்டுத் தாலாட்டுகின்றனர். இதை ராம பக்தி மிக்க குலசேகராழ்வார் பாடிப்பாடி இன்புறுகிறார்.

மன்னுபுகழ் கோஸலை தன் மணிவயிறு வாய்த்தவனே !
தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய்
செம்பொன்சேர் !
கன்னி நன் மாமதிள் புடைசூழ் கணபுரத்து என் கருமணியே !
என்னுடைய இன்னமுதே! இராகவனே ! தாலேலோ.

கன்னி: அழிவில்லாத.

பாராளும் படர்செல்வம் பரதநம்பிக்கே அருளி
ஆராவன்பு இளையவனோடு அருங்கானம் அடைந்தவனே !
சீராளும் வரைமார்பா! திருக்கண்ணபுரத்தரசே !
தாராளும் நீள்முடி என் தாசரதீ! தாலேலோ!

தார்: பூமாலை.

ஆலினிலைப் பாலகனாய் அன்று உலகம் உண்டவனே!
வாலியைக் கொன்று அரச இளையவானரத்துக்கு
அளித்தவனே !
காலின் மணி கரை அலைக்கும் கணபுரத்து என் கருமணியே!
ஆலி நகர்க்கு அதிபதியே! அயோத்திமனே! தாலேலோ.

காலின் மணி கரை அலைக்கும்: வாய்க்காலின் ரத்னங்களை கரையிலே கொண்டு கொழிக்கப் பெற்ற.

இளையவர்கட்கு அருளுடையாய் ! இராகவனே! தாலேலோ.
எண்டிசையும் ஆளுடையாய் ! இராகவனே! தாலேலோ.
கொங்குமலி கருங்குழலாள் கௌசலைதன் குலமதலாய் !
எங்கள்குலத்து இன்னமுதே ! இராகவனே ! தாலேலோ !

கொங்குமலி: நறுமணம் நிறைந்த.

சுற்றமெல்லாம் பின் தொடரத் தொல்கானம் அடைந்தவனே!
அற்றவர்கட்கு அருமருந்தே! அயோத்தி நகர்க்கு அதிபதியே!
கற்றவர்கள் தாம் வாழும் கணபுரத்து என் கருமணியே !
சிற்றவை தன் சொற்கொண்ட சீ ராமா! தாலேலோ.

அற்றவர்: பற்றற்றவர்

மலையதனால் அணைகட்டி மதிளிலங்கை அழித்தவனே !
அலை கடலைக் கடைந்து அமரருக்கு அமுதருளிச்
செய்தவனே !
சிலைவலவா! சேகவனே ! சீராமா ! தாலேலோ.

பெருமாள் திருமொழி.

சேவகன்: வீரன்

சௌளம் உபநயனம்

இவ்வாறு தாலாட்டிச் சீராட்டிச் செல்வமாக வளர்ந்த குழந்தைகட்கு 6-ஆம் மாதம் அன்னப்ராசனத்தை (சாதமூட்டும் கர்மாவைச்) செய்து வைத்தனர். பின்னர் சௌளம் உபநயனம் ஆகியவைகளும் முறைப்படி நடந்தன. இதை வால்மீகி ''தேஷாம் ஜன்ம க்ரியாதீனி'' ஜாத கர்மம் முதலியன எனச் சுருக்கிக் கூறிடினும் அதன் கருத்தை அழகுற விளக்குவர் கம்பர்.

சவுளமொடு உபநயம் விதிமுறை தருகுற்று
இஅளவது என ஒரு கரை பிறிது இலவா
உவள் அரு மறையினொடு ஒழிவு அறு கலையும்
தவள் மதி புனை அரன் நிகர் முனி தரவே.

க.ரா. பால. - திருவவதாரம்

தருகுற்று: செய்வித்து, கரை: எல்லை, உவள் அரு: அழிவில்லாத, ஒழிவு அறு: கேடில்லாத

ஆண் குழந்தைகட்கு மூன்று அல்லது ஐந்தாம் ஆண்டில் செய்யும் வைதிக ஸம்ஸ்காரம்—குடுமி வைப்பது. (இது ஆங்கில கலாசாரம் நாட்டில் ஆட்சி செய்ததின் காரணமாக சிறிது சிறிதாக மறைந்து வருகிறது. நம்மவர், வாயால் சுதந்திரம் பேசித் திரிவர். ஆனால் எண்ணத்தாலும் நடை உடை செயல்களாலும், வேஷத்தாலும் ஆங்கிலக் கலாசாரத்திற்கு அடிமையாவர். தமிழ்நாட்டில் சங்க காலத்திலும் குடுமி வைத்துக் கொள்வது மரபு. ஒரு தலைவி, மூத்த மகன்களை போரிலிழந்தாலும் நாட்டுப் பற்றின் காரணமாக வீட்டிலுள்ள கடைசி மகனையும் போர்க்களத்திற்கு அனுப்புகிறாளாம். அப்பொழுது அவன் குடுமியை நன்கு வாரி முடித்து உச்சி முகந்து அனுப்பினாள் எனப் புறநானூற்றுச் செய்யுள் கூறும். இதை நாமும் பின்பற்ற வேண்டும். இதற்குச் சிறிது மனோ திடமும் சீக்கியர்களைப் போன்ற மதப் பற்றும் வேண்டும். இதைச் ''சவுளமொடு'' எனக் கம்பர் வலியுறுத்துகிறார்.)

வஸிஷ்டர், தசரத ராஜ குமாரர்கட்கு சவுளம் எனும் ஸம்ஸ்காரத்தை உரிய காலத்தில் முறை பிறழாது நடத்தி வைத்தாராம்.

அடுத்த ஸம்ஸ்காரம் உபநயனம். பூணூல் அணிவித்துக் கல்வி கற்பதற்காக குருகுலத்தில் ஒப்படைப்பது. முதல் மூன்று வர்ணத்தாருக்கும் உப

நயனம் உண்டு. ''அஷ்டவர்ஷம் ப்ராஹ்மணம் உபநயீத'' கர்பாஷ்டமத்தில் ப்ராம்மணனுக்கு உபநயனம் செய்விக்க வேண்டும் என்பது விதி. அதாவது பிறந்த ஏழாவது வயதில் உபநயனம் பண்ண வேண்டும். அதுவும் 15 வயதிற்குள் தான். அதற்கு மேல் காயத்ரீ மந்த்ரோபதேசம் பயனற்றது. ''ஆஷோடசாத் ப்ராஹ்மணஸ்ய ஆபதிதா ஸாவித்ரீ'' என்பது கௌதம தர்ம ஸூத்ரம். ''பஞ்சமே வயஸி ப்ரஹ்மவர்ச்சஸ காம:'' நிலைத்த ப்ரஹ்ம தேஜஸ் குழந்தைக்குத் தேவை என விரும்புபவர். 5-வது வயதிலேயே உபநயனம் செய்விப்பர். சிறுவயதில் மந்த்ரோபதேசம் செய்விப்பதில் நல்ல பயன் உண்டு. ஶ்ரத்தையுடனும் ஆர்வத்துடனும் தாமே முக்காலமும் ஸந்த்யாவந்தனத்தை அனுஷ்டிப்பர். வயது ஆக ஆக ஶ்ரத்தை குறையும். சிலர் பெண்ணின் திருமணத்தோடு உபநயனம் செய்யலாமென்று எண்ணி 15, 16 வயதிலும், அதற்கு மேலும் பூணூல் போடுகிறார்கள். அவர்கள் முறைப் படி த்ரிகால ஸந்த்யாவந்தனங்களைச் செய்வதில்லை. பெற்றோர்களில் சிலர் அவர்களைக் கடிந்து நல்வழிக்குக் கொண்டுவர முயற்சிப்பதுமில்லை. முயற்சித்தாலும் பயனில்லை. ''ப்ராப்தே து ஷோடசே வர்ஷே புத்ரம் மித்ரவத் ஆசரேத்''; பதினாறு வயதை அடைந்த குமாரனிடம் நண்பனாக பாவித்துப் பழக வேண்டும் என்பது முதியோர் வாக்கு. சிறுவயதில் ஒழுக்கமும் நற்பண்புகளும் நன்கு வளரும்படி பெற்றோர்கள் சிறுவர்களை இடையறாது கண்காணித்து வளர்க்க வேண்டும். இவ்வாறு வளர்க்கப் பட்டாலும் கூட உபநயனத்தைச் சிறுவயதில் செய்யாவிடில் ஸந்த்யாவந்தன அனுஷ்டானத்தில் ஆர்வமிருக்காது.

सन्ध्या वन्दन हीनोऽयं अनर्हस्सर्व कर्मसु ।
यदन्यत्कुरुते कर्म न तस्य फलभाग्भवेत् ।

ஸந்த்யா வந்தன ஹீனோயம் அனர்ஹஸ் ஸர்வ கர்மஸு ।
யதன்யத் குருதே கர்ம ந தஸ்ய பலபாக்பவேத் ॥

உபநயனமாகாமலோ, உபநயனமாகியும் முக்காலமும் ஒருவேளை கூட விடாமல் ஸந்த்யாவந்தனத்தைச் செய்யாவிட்டாலோ அவன் மற்ற கர்மாக்களைச் செய்வதற்குச் சிறிதும் தகுதியற்றவனாகிறான். அவன் பிற கர்மாவைச் செய்தால் அதன் பயன் அவனுக்குக் கிட்டாது. எனவே சந்தி செய்யாதவன் ஸஹஸ்ரநாமம், லக்ஷ்மீ ஸ்தோத்ரம் முதலிய ஸ்தோத்ரங் களைச் சொல்வதற்கும், புண்ய நதிகளில், ஸமுத்ரத்தில் நீராடுவதற்கும், கோயில் சென்று பகவானை வழிபடுவதற்கும் அர்ச்சனை, மண்டகப்படி செய்விப்பதற்கும் கூட தகுதி அற்றவனாகிறான். செய்தாலும் விழலுக்கு இறைத்த நீர் போன்று பயனற்றதாகிறது. அவனை கர்ம சண்டாளன் என சாஸ்த்ரம் இகழ்ந்து பேசும்.

சிலர் முன் பின் செய்ய வேண்டியவைகளைச் செய்யாது காயத்ரீ மந்திரத்தை மாத்திரம் ஜபம் செய்து வருவதாகச் சொல்கிறார்கள். இது மிகத்

தவறான செயல். காயத்ரீ மஹா மந்த்ரம், சுத்த வைதிக மந்த்ரம், காயத்ரீ தேவதையை ஆவாஹனம் செய்து, துதித்து ஜபம் செய்கிறோம். இதற்கு முன் மந்த்ரங்களினால் ப்ரோக்ஷணம், தீர்த்த ப்ராசனம் முதலியவை நம்மைத் தூய்மைப்படுத்தி ஜபம் செய்யத் தகுதியுடையவனாக்குகிறது. பின்னர் தேவதையை உத்வாஸனம் பண்ணி உபஸ்தானம் செய்கிறோம். பெரியோர் கள் செய்து வருகிற இந்த நடைமுறை வரிசையை மாற்றுவது தீங்கு விளை விக்கவல்லது.

கல்வி கற்றல்

க்ஷத்திரியர்கட்குப் பத்தாம் வயதில் உபநயனம் செய்ய வேண்டும். வேதநெறி பிறழாது தசரதர் குமாரர்கள் நால்வருக்கும் உரிய வயதில் வஸிஷ்டரைக் கொண்டு உபநயன ஸம்ஸ்காரத்தைச் செய்வித்து, கல்வி பயில குருகுல வாஸம் செய்ய நால்வரையும் வஸிஷ்டர் ஆச்ரமத்திற்கு அனுப்பினார். ''ஞானம் மஹேஸ்வராத் இச்சேத்'' அறிவைச் சிவனிடம் விரும்பு என்பர். நம் ஸ்வாமி தேசிகனும் ''ஸர்வக்ஞனான ருத்ரன் தானே சொன்னான்'' என ஸாதிக்கும்படி, எனவே அறிவில் வெண்ணிற சந்திரனின் கலையை முடியில் சூடும் சிவபிரானை ஒத்தவர் வஸிஷ்டர். அவர் வேதங்களையும், வேதாங்கங்களையும் கற்பித்தாராம். வேதங்களையோ, சாஸ்த்ரங்களையோ இவ்வளவு தான் என எல்லை கட்டிப் பேசமுடியாது. அவை எல்லை யில்லாதவை; அழிவு இல்லாதவை; கற்கக் கற்க நன்மை பயப்பவை. இவை அனைத்தையும் வேத ப்ரதிபாத்யனாய் வேதங்களின் உட்பொருளாய்த் திகழும் ராமனுக்கும் மற்றோருக்கும் முனிவர் உற்பித்தாராம்.

> सर्वे वेदविदः शूराः सर्वे लोक हिते रताः ।
> सर्वे ज्ञानोपपन्नाश्च सर्वैः समुदिता गुणैः ॥
> ஸர்வே வேதவித: ஶூரா: ஸர்வே லோகஹிதே ரதா: ।
> ஸர்வே க்ஞானோபபந்நா: ச ஸர்வை ஸமுதிதா குணை: ॥

வா. ரா. பால. - 18.

இவ்வாறு குருகுலத்தில் நால்வரும் நான்கு வேதங்களையும் கசடறக் கற்றனர். தனுர் வேதத்தையும் கற்று, அம்பெய்யும் முறைகளையும் அறிந்தனர். படைக்கலங்களைக் கையாளும் திறன் பெற்றமையால் நாட்டு மக்களுக்குப் பிறரால் ஏற்படும் தீங்குகளைக் களைய வல்லவராயினர். மறைகளின் பொருள்களை நன்கு உணர்ந்தவர்களாதலின், அறிவுக்கேற்ற ஆத்ம குணங்களையும் பெற்றிருந்தனர்.

> गजस्कन्धेऽश्वपृष्ठेच रथचर्यासु सम्मतः ।
> धनुर्वेदेच निरतः पितृ शुश्रूषणे रतः ॥

கஜஸ்கந்தே அஸ்வப்ருஷ்டே ச ரதசர்யாஸு ஸம்மத: ।
தனுர் வேதே ச நிரத: பித்ரு ஶுஶ்ருஷணே ரத: ॥

வா.ரா. பால. - 18.

யானையும் இரதமும் இவுளியும் முதலா
ஏனைய பிறவும் அவ்வியல்பினின் அடையுற்று
ஊனுறு படைபல சிலையொடு பயிலா
வானவர் தனிமுதல் கிளையொடு வளர.

க.ரா.பால. - திருவவதாரம்

இவர்களுள் இராமன் யானையேற்றம், குதிரையேற்றம், தேரை நடத்திச் செல்லுதல் மற்றும் க்ஷத்திரியர்கட்குத் தேவையான பிற தொழில்களையும் கற்று அந்த அந்தத் தொழில் வல்லுனர்களால் பாராட்டப்படும் நிலையில் இருந்தானாம். குறி தவறாது அம்பெய்து சத்ருக்களை அழிக்கும் திறனையும் பெற்று விளங்கினானாம். இத்தகு பெருமை பெற்றிருந்தும் தாய் தந்தையர்கட்கு ஆற்றவேண்டிய கடமையில் சிறிதும் பிறழாதிருந்தானாம். இவ்வாறு தன் தம்பியருடன் தேவாதி ராஜனாகிய ராமன் வளர்ந்து வந்தான்.

ஸஹோதர பாஶம்

बाल्यात्प्रभृति सुस्निग्धः लक्ष्मणो लक्ष्मिवर्धनः ।
रामस्य लोक रामस्य भ्रातुर्ज्येष्ठस्य नित्यशः ॥
सर्वप्रियकरस्तस्य रामस्यापि शरीरतः ।
लक्ष्मणो लक्ष्मि सम्पन्नः बहिः प्राण इवापरः ॥
न च तेन विना निद्रां लभते पुरुषोत्तमः ।
मृष्टमन्नमुपानीतं अश्नाति नहि तं विना ॥
यदा हि हयमारुह्य मृगयां याति राघवः ।
तदैनं पृष्ठतोऽन्वेति सधनुः परिपालयन् ॥
भरतस्यापि शत्रुघ्नः लक्ष्मणावरजो हि सः ।
प्राणैः प्रियतरो नित्यं तस्य चासीत् तथा प्रियः ॥

பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த: லக்ஷ்மணோ லக்ஷ்மிவர்தன: ।
ராமஸ்ய லோக ராமஸ்ய ப்ராது: ஜ்யேஷ்டஸ்ய நித்யஶ: ॥
ஸர்வப்ரிய கர: தஸ்ய ராமஸ்யாபி ஶரீரத: ।
லக்ஷ்மண: லக்ஷ்மி ஸம்பந்த: பஹி: ப்ராண இவாபர: ॥
ந ச தேன விநா நித்ராம் லபதே புருஷோத்தம: ।
ம்ருஷ்டம் அன்னம் உபானீதம் அஶ்நாதி ந ஹி தம் விநா ॥
யதாஹி ஹயம் ஆருஹ்ய ம்ருகயாம் யாதி ராகவ: ॥
ததா ஏனம் ப்ருஷ்டத: அந்வேதி ஸதனு: பரிபாலயன் ॥
பரதஸ்யாபி சத்ருக்ன: லக்ஷ்மணாவரஜ: ஹி ஸ: ।
ப்ராணை: ப்ரியதர: நித்யம் தஸ்ய ச ஆஸீத் ததா ப்ரிய: ॥

வா.ரா. பால. - 18

ஒரு வீட்டில் நான்கு ஸஹோதரர்கள் சேர்ந்து வாழ்வாராயின் ஒற்றுமையுடன் வாழ்வது அரிது. சாப்பிடும் பொழுதோ, குளிக்கும் பொழுதோ, கல்வி கற்கச் செல்லும் பொழுதோ சிறு பூசல்கள் தோன்றுவது இயற்கை. சில ஸமயம் அவை முற்றிக் கைகள் கலக்கும்படியும் செய்துவிடும். ஆனால் இந் நால்வரும் அத்தன்மையர் அல்லர். சகோதர வாழ்வுக்கு இலக்கணம் வகுத்து அதற்கு எடுத்துக்காட்டாக அவதரித்தவர்கள். ராஜ வம்சத்தில் மூத்தவனுக்கே அரசுரிமை, எனவே தம்பியர் ஆட்சியுரிமை நமக்கு இல்லையே என ஏங்குவதும், பொறாமைப்படுவதும் இயல்பு. கௌரவர்களும், பாண்டவர் களும் இளமையில் சேர்ந்து வாழும் பொழுது துரியோதனனின் கெட்ட

எண்ணத்தை அறிந்த பீமன், மாலையில் விளையாடும் பொழுது, ''துரியோதனா! நீ பட்டாபிஷேகம் செய்து கொள்ள விரும்புகிறாயல்லவா? அது பின்னர், ஆனால் இப்பொழுது நான் உனக்குக் குட்டாபிஷேகம் செய்கிறேன்.'' என்று கூறி பீமன் அவன் தலையில் நறுக்நறுக் எனக் குட்டுவானாம்.

पट्टाभिषेकं अभिलष्यति फालदेशो
कुट्टाक भाव कुतुकं कुरुते स्म भीमः ।

பட்டாபிஷேகம் அபிலஷ்யதி பாலதேசே
குட்டாக பாவ குதுகம் குருதேஸ்ம பீம: ।

அநந்த பட்டரின் சம்பூபாரதம்

துர்யோதனனும், ''பீமன் இருந்தால் நமக்கு அரசுரிமை கிட்டாது'' என்றெண்ணி பிறரைக் கொண்டு பீமன் தூங்கும் பொழுது பாம்புகளைக் கடிக்க விடுவதும், கூரிய சூலங்களை கங்கையில் பதிக்கச் செய்து அதில் தூக்கி எறிவதுமான தீச்செயல் புரிந்து கொல்ல முயற்சித்தான்.

தசரத்குமாரர்களோ இதற்கு நேர்மாறானவர்கள். இளமையிலேயே பாசமும், பரிவும் மிக்கவராய் வளர்ந்தனர். நால்வரும் நெருங்கிய நட்புடைய வராயினும் ராமனிடம் லக்ஷ்மணனுக்கும், பரதனிடம் சத்ருக்னனுக்கும் பற்று மிகுந்து வளர்ந்தது. லக்ஷ்மணன், ராமனுக்குப் பல்வகைத் தொண்டுகளை மேன்மேலும் செய்து கொண்டே வாழ்வதைத் தன் ஸ்வரூபமாகக் கருதினான். திருத்துழாயும், மருவும் முளைக்கும் பொழுதே நறுமணம் வீசும். அதுபோன்று பிறக்கும் பொழுதே ராம பக்தியுடன் பிறந்தவன். தந்தை யிடம் காட்ட வேண்டிய அன்பும் மரியாதையும் அவனுக்கு ராமனிடமே இருந்தன. ஏன்? ''ஜ்யேஷ்ட ப்ராதா பித்ருஸம:'' மூத்த ஸஹோதரன் தந்தைக்கு ஸமமானவன் என சாஸ்த்ரம் அன்றோ விதிக்கிறது!

குழந்தைப் பருவத்தில் ராமனையும் லக்ஷ்மணனையும் தனித்தனித் தொட்டில்களிலே தூங்கப்பண்ணுவார்கள். இரு தொட்டில்களும் அருகருகே இருக்க வேண்டும். என்றாவது சிறிது ஒதுங்கி இருந்தாலோ குழந்தை அன்று தூங்கவே தூங்காதாம். இருவரின் பிணைப்பு அத்தகையது. ராமனோ, ''லோகராமன்'' என்கிறார் வால்மீகி. அதாவது ராமன் உலகினர் அனைவரை யும் மகிழ்விப்பவன். விலங்குகளையும் பறவைகளையும் கூட. ஆக அனைவரையும் அனைத்தையும் மகிழ்விக்கும் ராமனை மகிழ்விக்க யாரும் இல்லையே என கவலைப்படாதீர் என்கிறார் மஹாகவி. அது யார் தெரியுமா? ''லக்ஷ்மணோ லக்ஷ்மிவர்த்தன:'' ராமன் இயற்கையாகவே மகிழ்ச்சியுடைய வன். ஆனந்த ஸ்வரூபமாயிருப்பவன். எப்பொழுதும் புன்னகை பூக்கும் முகத்தன். தன்னுடைய சேஷ வ்ருத்தியினாலே - தொண்டினாலே மேலும் ஆனந்தத்தை வளர்ப்பவன் இளையவன். ஆக லக்ஷ்மணன் தன் ஸ்வரூபத்தி னாலும், அவதாரத்தினாலும் (பிறவியினாலும்), ராம குணத்தினாலும்

பெருமை மிகுந்த தொண்டனாகத் திகழ்ந்தான். ஹனுமானிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் பொழுது ''குணைர் தாஸ்யம் உபாகத'' அண்ணனின் குணங்களைக் கண்டு (அனுபவித்து) அவனுக்கே தொண்ட னானேன், என ஸுந்தரத்தில் சொல்லப் போகிறார். இக்கருத்தை நமக்கு நன்கு நல்கியவர் நம் பரமாசார்யனான ஆளவந்தார்.

निवास शय्यासन पादुकांशुकोऽपधान वर्षातपवारणादिभिः ।
शरीर भैदैः तवशेषतां गतैः यथोचितं शेषइतीरिते जनैः ॥

நிவாஸ ஶய்யா ஆஸனபாதுகா அம்சுக உபதான வர்ஷா
ஆதபவாரணாதிபி: ।
சரீரபேதை: தவசேஷதாம் கதை: யதோசிதம் சேஷ: இதி
ஈரிதேஜனை: ॥

ஸ்தோத்ராத்ரம் - 40

''ஆதிசேஷன் எம்பெருமானுக்கு பல்வகை கைங்கர்யங்களைச் செய் வதற்கு ஏற்றதான பல்வகை சரீரங்களை ஏற்றுத் தொண்டு புரிகிறான். பரமனுக்கு, வஸிப்பதற்கு தங்குமிடமாகவும், யோக நித்திரை புரியும் பொழுது படுக்கையாகவும், அமர்வதற்குச் சீரிய ஸிம்ஹாஸனமாகவும், நடக்கும் பொழுது பாதுகைகளாகவும், அரையில் உடுத்துவதற்குப் பீதாம்பர மாகவும், படுக்கும் பொழுதும், சாய்ந்து அமரும் பொழுதும் தலைக்கும் திருவடிகட்கும் தலையணையாகவும் திண்டாகவும், மழையிலோ, வெய்யி லிலோ செல்லும் பொழுது குடையாகவும், சரீரம் எடுத்துப் பணிவிடை செய்கின்றானாம். எனவே தேசம், காலம், நிலைமை எனும் வேறுபாடின்றி எல்லா தேசங்களிலும், எல்லாக் காலங்களிலும், எல்லா நிலைகளிலும் பிறர்க்கின்றிப் பரம புருஷனுக்கே உதவும் ஸ்வரூபத்தை உடையவனான படியால் சேஷன் என்றும் இவ்வவதாரத்தில் லக்ஷ்மணன் என்றும், பெயர் பெற்றபடி.'' நம்முடைய ஸ்வரூபமும் எம்பெருமானுக்கே உதவுவதற்குரிய (கைங்கர்யம் பண்ணுவதற்குரிய) தன்மையை உடையதே. ஆயினும் மனிதர்களாகிய நாம் அச்சேஷ வ்ருத்தியை மறந்தோம், அப்பாக்கியத்தை இழந்தோம். அதை நினைவுபடுத்திப் பரமனுக்குத் தொண்டு பூணும் பாக்யத்தைப் பெற நம்மை வழி நடத்த அவதரித்தவர் இளையபெருமாள்.

ஒவ்வொரு நாளும் துயிலெழுந்ததும் லக்ஷ்மணன் தனது சரீரத்தாலும், மனதாலும், சொல்லாலும் அண்ணனாகிய ராமன் எதை இப்பொழுது விரும்புவார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதையே பேசி மிகப் ப்ரியமான வற்றைச் செய்த வருவானாம்.

सर्वोऽपि प्रातरुत्थाय सर्वकार्याणिकुरुते ।
ततः सुहृदां ततः सम्बन्धिनां

''ஸர்வ: அபி ப்ராத: உத்தாய ஸ்வகார்யாணி குருதே,
தத: ஸுஹ்ருத்ாம் தத: ஸம்பந்தினாம்'' ॥

பதஞ்சலி - மஹாபாஷ்யம்

ஒவ்வொருவனும் காலையில் எழுந்ததும் தனக்குத் தேவையான வற்றையே முதலில் செய்து முடிப்பான். பின்னரே நண்பர்களின் கார்யங் களைச் செய்வான். அதற்குப் பிறகே ஸம்பந்திகளுடைய—அதாவது தொடர் புடைய பந்துக்களுடைய வேலைகளைச் செய்வான் என்று மனிதனின் இயல்பு பற்றிக் கூறுவார் பதஞ்சலி முனிவர் மஹா பாஷ்யத்தில். அவ்வாறு மனித இயல்பின்படிப் பார்க்கும் பொழுது லக்ஷ்மணன் காலையில் எழுந்ததும் தன் தேவைகளை முடித்துக் கொண்டுதான், ராமனுக்கு ஸேவை செய்ய எண்ணுவதும் செய்வதும் உசிதமாகும். ஆனால் லக்ஷ்மணன் துயில் எழுந்ததும் ராமனுக்குத் தொண்டு செய்வதையே தன் தொண்டாகக் கருதியவன் என்பதைக் கவியின் ''ராமஸ்யாபி ஶரீரத'' எனும் சொல் லமைப்பு நமக்கு உணர்த்துகிறது. இத்தகைய தம்பியை ராமன் தனது உயிராக் கருதினானாம். ராமனின் உயிர் ப்ராணவாயு, நம்மைப் போன்று இதயத்தின் உள்ளே மாத்திரம் இருப்பதன்று. உள்ளும் புறமும் இருக்குமாம். புறத்தே உள்ள ப்ராணவாயுதான் லக்ஷ்மணன். உயிரின்றி யார் தான் வாழ முடியும்? எனவேதான் லக்ஷ்மணன் பக்கத்தில் இல்லாவிடில் ராமனுக்குத் தூக்கமே வராதாம்.

ஒரு நாள் குழந்தைப் பருவத்தில் ராமன் தூங்கவேயில்லை. ஒரே அழுகை. இளங்குழந்தை அழுதால் காரணத்தை எவ்வாறு அறிய முடியும்? பசியாயிருக்குமெனப் பாலாடையில் பாலை எடுத்துப் புகட்டினார்கள். நன்கு பருகிய பின்னும் மீண்டும் அழ ஆரம்பித்தது. தூக்கவேளை என நினைத்துத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுப் பாடினார்கள். பயனில்லை. மருத்துவர்களும் நன்கு பரிசோதித்து மருந்து கொடுத்தார்கள். அழுகை அதிக மாயிற்று. குழந்தை வைத்திய நிபுணையான 90 வயது கிழவி அழைக்கப் பட்டாள். குடல் தட்டினாள். அழுகை ஓயவில்லை. ஸுமந்த்ரருக்குத் தகவல் அனுப்பினார்கள். பல மாந்த்ரீகர்கள் ஓடோடியும் வந்து மந்திரித்தார்கள். பலர் ஜபித்தார்கள். ஊரிலுள்ள கோவில்களில் எல்லாம் அர்ச்சனை நடத்தினர். எவராலும் குழந்தை அழுவதின் காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஸுமந்த்ரர் வந்தார். தொட்டுப் பார்த்தார். தடவிப் பார்த்தார். சாய்த்துப் படுக்க வைத்தார். அழுகை குறைய வில்லை.

''வஸிஷ்ட முனிவருக்கு அறிவித்தீரோ?'' என்று கேட்டார் ஸுமந்த்ரர். இல்லை என்று பதில் வந்தது. ''ஏன்? முதலில் அவர் காதில் அல்லவா போட வேண்டும்'' என்று கூறி உடனே தேரைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார். அதில் ஏறி விரைந்து வஸிஷ்டரின் ஆஶ்ரமத்திற்குச் சென்றார். விபரத்தை விண்ணப்பித்தார். முனிவரும் சற்று யோசித்துவிட்டுக் கேட்டார். ''ராமனை எங்கு படுக்க விட்டார்கள்?'' தொட்டிலில்! ''லக்ஷ்மணனை?'' ''தொட்டிலில்

தான்''. ''அது சரி, எந்த இடத்தில்?'' ''பக்கத்து அறையில்''. ''அழுகையின் காரணம் நன்கு புரிகிறது. நீர் விரைவில் சென்று லக்ஷ்மணனை ராமன் தொட்டிலிலேயே விடச் சொல்லும்'' என்றார். முனிவரை அடிபணிந்து விடை பெற்று அரண்மனை சென்று, ஸௌமித்ரியை ராமன் அருகில் எடுத்துவிடச் செய்தார். அவ்வளவுதான். அழுகை ஓய்ந்தது. இரு குழவிகளும் புன்னகை பூத்த வண்ணம் தூங்கத் தொடங்கின. இந்த ஆச்சரியத்தைச் சொல்லிச் சொல்லி வியந்தனர் அரண்மனையிலுள்ளோர்.

கோஸலை உயரிய தின்பண்டங்களை (பக்ஷணங்களை) தயாரித்துத் தங்கத் தட்டிலே கொணர்ந்து கொடுப்பாள். அரண்மனைக்கு வரும் உயரிய சுவைமிக்க கனிகளைத் தோலை நீக்கிக் கொட்டைகளை எடுத்துப் பக்குவ நிலையில் கொடுத்துச் சாப்பிடச் சொல்வாள். என்ன கெஞ்சியும் ராமன் சாப்பிடமாட்டான். ''சற்றுப் பொறு அம்மா! லக்ஷ்மணன் வந்துவிடுவான். சேர்ந்து சாப்பிடுகிறோம்'' என்பான். ''ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத'' சுவைமிக்க உயர்ந்த பொருளைத் தனிமையில் ஒருவனாக சாப்பிடாதே என்பது விதியாகும்.

இப்பொழுது இவர்கள் கற்றுத் தேர்ந்தவர்களாயினும் சேர்ந்தே தூங்குவர்; சேர்ந்தே எழுவர். ராமன் குதிரையின் மீதேறிக் காட்டிற்கு வேட்டையாடச் செல்வான். மற்றொரு குதிரையின் கையில் வில்லேந்திய வனாய் இளவலும் பின் தொடர்வான். காட்டில் ராமனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் என் செய்வது? யார் காப்பார்? ஸர்வ ஜகத் ரக்ஷகனையும் காக்க மற்றொருவர் தேவை போலும்! ராமனுடைய வீரமும் ஆற்றலும் தம்பிக்குத் தெரியாதா? தெரியும். ஆயினும் ''அதிஸ்னேஹ: பாபஶங்கீ'' குழந்தை யிடமோ மற்றவரிடமோ அதிக அன்பு வைத்துவிட்டால் அவர்கட்கு என்ன ஆபத்து நேருமோ! ஆபத்தோ கஷ்டங்களோ வந்தால் என்ன செய்வது? தலைவலி வயிற்றுவலி வந்தால் கூட உயிருக்கு ஆபத்து நேருமோ என அஞ்சி நடுங்குவர். இது உலக இயற்கை.

மாலையில் காற்றாடத் திறந்த வெளியில் உலாவச் செல்லும் போதும் இணைபிரியார்கள். இருவரும் சேர்ந்தே செல்லுவர் என்பர் கம்பர்.

ஐயனும் இளவலும் அணி நிலமகள் தன்
செய்தவம் உடைமைகள் தெரிதர நதியும்
மைதவழ் பொழில்களும் வாவியும் மருவி
நெய் குழலுறும் இழையென நிலைதிரிவார்

க.ரா.பால. - திருவவதாரம்

ராமனும் லக்ஷ்மணனும் மாலை வேளையில் ஸரயூ நதிக்கரையிலும், மேகங்கள் தவழும் நீண்ட பருத்த மரங்கள் அடர்ந்த சோலைகளிலும், குளக் கரைகளிலும் சேர்ந்தே உலவுவராம். இவர்களிடம் பிரிதல் என்பதே

கிடையாது. கைக்கேளையர் ஆடைகள் நெய்வர். பாவு நூல்களின் இடையே ஊடு நூல்களை மாற்றி மாற்றிச் செலுத்த ஒரு குழலிலே நூலைக் கோர்த்து நெய்வர். அக்குழலிலே ஆடை நெய்யும் பொழுதும் நெய்யாத பொழுதும் நூல் எப்பொழுதும் இருக்கும். ஆக குழலும் நூலும் போல பிரியாதிருப்ப ராம். இவர்கள் தவழ்ந்து நடந்து ஓடி விளையாடி உலவி வருதலினால் ஸ்ரீ பூதேவியாம் நிலமகள், யோகிகட்கும் எட்டாத எம்பெருமான் தன்னகத்தே, தான் செய்த தவத்தின் பயனாய் அவதரித்துத் தன் திருவடிகளால் தன்னைத் தீண்டும் பாக்கியத்தைப் பெற்றாளாம்.

भरतस्यापि शत्रुघ्नः लक्ष्मणा वरजोहिसः ।
प्राणैः प्रियतरो नित्यं तस्यचासीत् तथाप्रियः ॥

பரதஸ்யாபி ஶத்ருக்ன: லக்ஷ்மணாவரஜோஹி ஸ: ।
ப்ராணை: ப்ரியதரோ நித்யம் தஸ்ய ச ஆஸீத் ததாப்ரிய: ॥

வா. ரா. பால. - 18

ராமனும் லக்ஷ்மணனும் போல பரதனும் சத்ருக்னனும் இணைந்தே வளர்ந்தனராம். பரதனை விட்டு ஒரு கணமும் சத்ருக்னன் பிரிய மாட்டானாம். ஏன்? சத்ருக்னன் லக்ஷ்மணனோடு ஒரே வயிற்றில் பிறந்தவன் அல்லவா? எனவே சேஷனாய்த் தொண்டு செய்யும் மனப்பான்மையும், அன்போடு சேர்ந்து பழகும் தன்மையும் இயற்கையாக லக்ஷ்மணனைப் போன்றே அமைந்துவிட்டன. லக்ஷ்மணன் பரமனைப் பற்றினான். சத்ருக்னன் பரதனைப் பற்றினான். பரதனும் சத்ருக்னனும் ஒருவரையொருவர் தத்தம் உயிரினும் மிகுதியாக நேசித்து வாழ்ந்தனர்.

तेषां द्वयोः द्वयोः ऐक्यं बिभिदे न कदाचन ।
यदा वायु विभावस्वोः यथा चन्द्र समुद्रयोः ॥

தேஷாம் த்வயோ: த்வயோ: ஐக்யம் பிபிதே ந கதாசன: ।
யதா வாயு விபாவஸ்வோ: யதா சந்த்ரஸமுத்ரயோ: ॥

காளிதாஸன், ரகுவம்சம் - 10

தீ தோன்றுமிடத்தில் கூடவே காற்றும் தோன்றும். தீ சுடர் விட்டு எரியக் காற்று உதவும். வளர்பிறையில் சந்திரன் வளரும் பொழுது கடலும் வளரும் பொங்கும். தேய்பிறையில் மதி தேயும் பொழுது கடலும் வளராது குறையும். இதே போன்று இவ்விரு இரட்டையரும் ஒரே எண்ணம் உடையவர்களாயும், ஒற்றுமை உடையவர்களாயும், இன்ப துன்பங்களில் ஸமமான நோக்கு உடையவர்களாயும் நிலை திரியாதவர்களாயும் வாழ்ந் தனர். ஒரு கணமும் பிரிந்தனரல்லர்.

இவர்கள் பிறவி முதற்கொண்டு இரு ஜோடிகளாக வாழ்ந்தனராயினும் ஒன்று சேர்ந்து நால்வராயும் திகழ்ந்தனராம்.

ते प्रजानां प्रजानाथाः तेजसा प्रश्रयेण च ।
मनो जह्रुः निदाघान्ते श्यामाभ्राः दिवसा इव ॥

தே ப்ரஜானாம் ப்ரஜாநாதா: தேஜஸா ப்ரச்ரயேண ச ।
மன: ஜஹ்ரு: நிதாகாந்தே ஶ்யாமாப்ரா: திவஸா: இவ ॥

காளிதாஸன், ரகுவம்சம் - 10

மக்கள் தலைவர்களான இந் நால்வரும் பிரஜைகளுக்கு நேரும் துன்பங்களைத் தம்முடைய பெருமையினாலும், பராக்ரமத்தினாலும் அடக்கத்தினாலும் அகற்றி அவர்களை மகிழ்விப்பதில் ஒத்த கருத்தினராய்த் திகழ்ந்தனர். சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் கதிரவனின் கடும் வெம்மையால் மக்கள் துன்புறுவர். ஆடிக்கடைசியில் வானத்தில் கருமேகங்கள் சூழும். அப்பொழுது அதிக குளிரோ அதிக வெப்பமோ இராது. அந்நாட்கள் மக்களின் மனதைக் கவர்ந்து மகிழ்விக்கும். அதே போன்று இந்நால்வரும் ஒத்த கருத்தினராய் எப்பொழுதும் மக்களை மகிழ்விப்பராம்.

வீரனும் இளைஞரும் வெறி பொழில்களின் வாய்
ஈரமொடு உறைதரு முனிவரர் இடை போய்
சோர் பொழுது அணிநகர் துறுகுவர் எதிர்வார்
கார் வரவு அலர் பயிர் பொருவுவர் களியால்

க. ரா. பால - அவதாரம்

வெறி: மணம், ஈரம்: கருணை, சோர்: அஸ்தமனம், துறுகுவர்: திரும்புவர்.

மஹா வீரனான ராமனும் இவனது தம்பிகளான பரதன் லக்ஷ்மணன், சத்ருக்னன் ஆகிய நால்வரும் காலையில் புறப்பட்டு நகருக்கு வெளியேயுள்ள சோலைகளுக்குச் செல்வார்கள். அங்குள்ள மரங்கள் பூத்துக் குலுங்கும். அவற்றிலுள்ள மகரந்தங்கள் (வாஸனைப் பொடிகள்) இளங்காற்றில் தவழ்ந்து காடு முழுவதிலும் பரவி நறுமணம் கமழும். அங்குள்ள முனிவர்கள் இன்முகம் காட்டி வரவேற்றுத் தேனினும் இனிய பழங் களையும், கிழங்குகளையும் அளித்து உபசரிப்பர். அவர்களோடு அமர்ந்து தாம் கற்ற கல்வி கேள்விகளில் எழும் ஐயங்களைப் போக்கிக் கொள்வர். முனிவர்கள் கருணையே வடிவானவர்கள். எனவே சிறிதும் சோம்பலின்றி அரசகுமாரர்கட்குத் தக்க ஆதரத்துடன் விடையளிப்பர். மாலையில் கதிரவன் மறையும்பொழுது நகர் திரும்புவர். செழித்து வளரும் பயிர் கார்மேகத்தை (மழையை) எதிர்பார்த்து நிற்கும். மழைத் துளியும் விழுந்துவிட்டால் பயிர்கள் மகிழ்ந்து ஓங்கி நிற்கும். இப்பயிர்கள் போல, குமாரர்களை நகரின் எல்லையில் எதிர்கொண்டு காத்து நிற்கும் நகர மாந்தர்கள் இவர்களைக் கண்ணுற்று மகிழ்ந்து செழிப்புற்றனராம்.

விஶ்வாமித்ரர் வருகை

अथ राजा दशरथः तेषां दारक्रियां प्रति ।
चिन्तयामास धर्मात्मा सोपाध्यायः सबान्धवः
तस्य चिन्तयमानस्य मन्त्रिमध्ये महात्मनः ।
अभ्यागच्छन् महातेजाः विश्वामित्रो महामुनिः ॥
स राज्ञः दर्शनाकांक्षी द्वाराध्यक्षानुवाच ह ॥
शीघ्रमाख्यात मां प्राप्तं कौशिकं गाधि नन्दनम् ।
तच्छ्रुत्वा वचनं तस्य राज्ञः वेश्म प्रदुद्रुवुः ॥

அத ராஜா தசரத: தேஷாம் தாரக்ரியாம் ப்ரதி ।
சிந்தயாமாஸ தர்மாத்மா ஸோபாத்யாய: ஸபாந்தவ: ॥
தஸ்ய சிந்தயமானஸ்ய மந்த்ரிமத்யே மஹாத்மன: ।
அப்யாகச்சன் மஹாதேஜா: விஶ்வாமித்ரோ மஹாமுனி: ॥
ஸ ராஜ்ஞ: தர்ஶனாகாங்க்ஷீ த்வாராத்யக்ஷான் உவாசஹ ।
சீக்ரம் ஆக்யாத மாம் ப்ராப்தம் கௌசிகம் காதி நந்தனம்,
தத் ஶ்ருத்வா வசனம் தஸ்ய ராஜ்ஞ: வேஶ்ம ப்ரதுத்ருவு: ॥

வா. ரா. பால. - 18.

பகவதனுக்ரஹத்தினால் தசரதரின் விருப்பங்கள் பல நிறைவேறின. மக்கட் பேற்றைப் பெற்றார்; குழந்தைகளோடு கொஞ்சிக் குலாவி மகிழ்ந்தார்; பின்னர் கல்வியைக் கற்பிக்கச் செய்து அனைத்திலும் அவர்கள் தேர்ச்சி பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். இப்பொழுது அவர்கட்குத் திருமணம் செய்வித்து குமாரர்களின் தாம்பத்ய வாழ்க்கையைப் பார்க்க வேண்டு மென்று ஆசை கொண்டார். தவம் கிடந்து பெற்ற குழந்தைகளாயிற்றே; ஆசைக்கு அளவேது? இதைப் பற்றி முடிவெடுக்க எண்ணியவராய்,

நனைவரு கற்பக நாட்டு நன்னகர்
அனைவரும் அணைதர அயிர்க்கும் சிந்தையால்
நினையவும் அரியது விசும்பின் நீண்டது ஓர்
புனை மணி மண்டபம் பொலிய எய்தினான்.

க. ரா.பால. - கையடை

விரும்புவதையெல்லாம் அளிக்க வல்லது கற்பகமரம். கிளைகள் முழுவதிலும் அரும்புகள். அவை மலரும் போது அவற்றில் தேன் நிறை கிறது. மலர் மணமும், தேன் மணமும் கமழ இளங்காற்று சுவர்க்கத்தி லும்,

அதன் தலைநகரான அமராவதியிலும் வீசுகிறது. அங்கு இதை நுகர்ந்து கொண்டு உல்லாஸ வாழ்க்கை வாழும் தேவர்கள் இந்திர ஸபையான, ''ஸுதர்மா''வுக்குப் போக எண்ணிக் கீழே பார்க்கிறார்கள். அயோத்தியின் ஸபா மண்டபம் அவர்களின் கண்களுக்கு இலக்காகிறது. அம்மண்டபம் வானுலகளவும் கம்பீரமாய் உயர்ந்து நிற்கிறது. பல்வகை இரத்தினங்கள் பதிக்கப்பட்டு ஒளி மயமாய் விளங்குகிறது. இதன் வேலைத் திறனும், அழகும் நினைப்பதற்கும் அரியது. இதையே இந்திர ஸபை என மயங்கி இம் மண்டபத்திற்கு வரத் தேவர்கள் எண்ணுகின்றனராம். இத்துணைச் சிறப் பினைப் பெற்ற மண்டபத்திற்குத் தசரதன் வருகிறான். அரசனின் கம்பீர மான தோற்றமும், அவன் பொலிவும் அழகும் மண்டபத்திற்கு மேலும் பொலிவை அளிக்கிறதாம்.

தூய மெல் அரியணைப் பொலிந்து தோன்றினான்
சேய் இரு விசும்பிடைத்திரியும் சாரணர்
நாயகன் இவன் கொல்! என்று அயிர்த்து, நாட்டம் ஓர்
ஆயிரம் இல்லை என்று ஐயம் நீங்கினார்.

க. ரா. பால. - கையடை

சேய்: உயர்ந்த, நாட்டம்: கண்.

தசரதன் அவை மண்டபத்தில் நேராகச் சென்று தூய்மையும், மென்மையும் மிக்க ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தான். அப்பொழுது தேவர் களில் ஒரு வகையினரான சாரணர்கள் வானவீதியிலே சென்று கொண்டிருந் தனர். கீழே இந்திரஸபையை விஞ்சிய அத்தாணி மண்டபத்தையும், செல்வம், பதவி, அதிகாரம், காம்பீர்யம், அழகு, தேஜஸ் இவைகளால் சிறப்புற்று விளங்கும் இவ்வரசனையும் பார்த்தனர். ''இந்திரனே பூமிக்கு வந்தான் போலும்'' என எண்ணி இம்மண்டபத்தை நோக்கி வந்தனர். சிறிது நெருங்கியதும், இவர் யாரோ? என ஐயம் எழுந்தது, உற்று நோக்கினர். இவன் இந்திரன் அல்லன் எனும் முடிவுக்கு வந்து திரும்பினர். ஏன்? இந்திரனுக்குக் கண்கள் ஆயிரமாயிற்றே! இவருக்கோ கண்கள் இரண்டு தானே என ஐயம் நீங்கித் திரும்பினராம். இங்கு கம்பர் அயோத்தியைத் தேவருலகிற்கும், அத்தாணி மண்டபத்தை இந்திரனின் கொலு மண்டபத் திற்கும், தசரதனை இந்திரனுக்கும் ஒப்புமை காட்டித் தசரதனின் பெருமையை அழகுற விளக்கியது நோக்கத்தக்கது.

கொலு மண்டபத்தில் அரசன் வருவதற்கு முன்னரே அவருடைய நெருங்கிய உறவினர்களும், குல குருவான வஸிட்டரும், முனிவர்களும், அமைச்சர்களும் வந்து அமர்ந்திருந்தனர். அவர்களோடு கல்விகளைக் கற்றுத்தேர்ந்த தம் குமாரர்களுக்குத் திருமணம் செய்விப்பதுபற்றி ஆலோசித்தார் தசரதர். ''திருமணத்தினால் முன்னர் எவ்விதத் தொடர்பும் இல்லாத இரு குடும்பங்கள் இணைகின்றன. இணைந்த பிறகு எவ்விதப்

பிணக்குகளும் நேராமல் இருக்க வேண்டும். நம் குமாரர்கட்கும் வரும் பெண்களுக்கும் நற்பண்புகளாலும், வயதினாலும், கல்வியினாலும் நடத்தையினாலும், நற்குடிப் பிறப்பினாலும், உடலமைப்பினாலும், அழகினாலும் ஒப்புமை இருக்க வேண்டும்'' என்று எண்ணினார். இவரோ தர்மாத்மா. தம்பதிகள் ஒழுக்கத்தினாலும் வயதினாலும் தர்ம சாஸ்திரங்களில் கூறிய தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்று நினைத்தார்.

ஒரு கல்யாணத்தை நிச்சயிக்க நாமே எவ்வளவு கவலைப்படுகிறோம். சக்ரவர்த்திக்குக் கேட்பானேன்? இக்காலத்திலோ அரசு, கன்யா விவாஹத்தை அம்மாக்கள் விவாஹமாக மாற்றிவிட்டது. இதனால் தம்பதிகளிடையே பிணக்குகளும், வம்புகளும் குறைந்து நல்லுறவு நிகழும் என்பது அவர்கள் கருத்து. ஆனால் நேர் மாறாக வரதக்ஷிணைக் கொடுமைகளும், விவாஹரத்துகளும், குடும்பச் சண்டைகளுமே மலிந்திருப்பதைக் கண் கூடாகப் பார்க்கிறோம். இதற்குச் சினிமாக்களும், டிவிக்களும், வார, மாத இதழ்களும் தூபம் போடுகின்றனவாகப் பெரும்பாலும் அமைகின்றன. மருமகன் (மாப்பிள்ளை) மறுக்ரஹமாக மாறிவிடுகிறான்.

सदाक्रूरः सदावक्रः नित्यं सेवां अपेक्षते ।
कन्या राशि स्थितो नित्यं जामाता दशमोग्रहः ॥

ஸதாக்ரூர: ஸதாவக்ர: நித்யம் ஸேவாம் அபேக்ஷதே ।
கன்யா ராசி ஸ்திதோ நித்யம் ஜாமாதா தசமோ க்ரஹ: ॥

எப்பொழுதும் மண மகளுக்கும், அவள் குடும்பத்தினருக்கும் கொடியவனாகவும், வக்ர புத்தியுடையவனாகவும், பெண் வீட்டார் எப்பொழுதும் செல்வத்தாலும், பொருளாலும் தன்னை உபசரித்துக் கொண்டே இருக்க வேண்டும், எனும் எண்ணம் உடையவனாகவும், எப்பொழுதும் கன்யாராசியிலேயே இருப்பவனுமான மாப்பிள்ளை நவக்ரஹங்களை விட வேறுபட்ட தன்மையுடைய பத்தாவது க்ரஹம் (கோள்) ஆவான், (நவக்ரஹங்களோ 12 ராசிகளில் மாறி மாறி ஸஞ்சரிப்பதால் அவைகளின் கொடுமை நீடிப்பதில்லை. இந்தப் புது க்ரஹமோ கன்யா ராசியிலேயே இருப்பதால் எப்பொழுதும் இவனால் பெண்ணுக்கும் பெண் வீட்டாருக்கும் கொடுமையே (நிகழும்) என்று ஒரு கவிஞன் பரிஹாஸத்திற்காக—நகைச்சுவைக்காகப் பாடினான். ஆனால் இதுவே இக்காலத்தில் உண்மையாகி விட்டது. இந்நிலையை மனதிற் கொண்டே ''கன்யா பித்ருத்வம் துக்காய'' (பெண்களுக்குத் தந்தையாயிருப்பது துன்பத்தை விளைவிக்கக் கூடியது) எனப் பேசலாயினர். ஆக பெண் பிள்ளைகளைப் பெற்றவன் உண்மையில் கவலைப்படலாம். தசரதரோ ஆண் பிள்ளைகளைப் பெற்றவர். மேலும் அரசர், இவர் ஏன் கவலைப்பட வேண்டும்? நாட்டுப் பெண்கள் கடைசி காலத்தில் சரியாக சாதம் போட வேண்டுமே என்ற கவலை போலும்! நாட்டுப் பெண்கள் குணவதிகளாக அமையா

விட்டால் ராஜ்யத்திற்கு இழுக்கு ஏற்பட்டுவிடுமே என்றுதான் கவலைப் பட்டிருப்பார். எனவே குலகுருவோடும் சான்றோர்களோடும் முனிவர்க ளோடும் ஸபையில் குமாரர்களின் திருமண விஷயத்தைப் பற்றிய தன் கருத்துக்களை எடுத்துரைத்து கலந்து ஆலோசனை செய்தார்.

இச்சமயத்தில் எதிர்பாராது மாமுனிவரான விஸ்வாமித்ரர் அரண்மனைக்கு வந்தார். அவருக்கு, தாம் தொடங்க இருக்கும் வேள்விக்கு ரக்ஷகனாக ராமபிரானை அழைத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம். சிறந்த தபஸ்வியானபடியால் தன் தவத்தின் பெருமையினாலேயே எண்ணியவற்றை நன்கு முடிக்க முடியும் என்பது 'மஹா தேஜா:' எனும் அடைமொழியே நமக்கு உணர்த்துகிறது. உண்மை ஆயினும் ராமனின் பெருமையை, திறனை உலகுக்கு எடுத்துக்காட்டவே அவனை அழைக்க வந்தாராம்.

ராமனை அழைத்துச் செல்வதால் இவ்வுலகினருக்கும் மேலுல கினர்க்கும் எண்ணற்ற நன்மைகள் விளையப் போகின்றன என்பதை விஸ்வாமித்ரர் எனும் இவர் திருநாமமே நமக்கு எடுத்துக்காட்டுகிறது. விஸ்வாமித்ரர் என்பதன் பொருள்: உலக நண்பன், உலகுக்கெல்லாம் நன்மையை விளைவிப்பவர் என்பதாம். விச்வம் என்பது திருமாலின் ஆயிரம் நாமங்களில் முதல் நாமம். ஆமித்ரம் என்றால் நீண்ட காலமாக நண்பனா யிருப்பவர். ஆக மஹாவிஷ்ணு வோடு பன்னாட்களாக நண்பனாய்ப் பழகிக் கொண்டிருப்பவர். எனவே இங்கு அவதரித்த நண்பரை (ராமரை)ப் பார்க்க வந்தார் போலும்!

வந்தவர் சக்ரவர்த்தியைப் பார்க்க விரும்பினார். நேராக உள்ளே செல்ல முடிய வில்லை. அரண்மனை வாயிலில் காவலர் இருந்தனர். அவர்களை நோக்கி ''குசிக வம்சத்தைச் சேர்ந்த காதி மஹாராஜாவின் பிள்ளை வந்திருப்பதாக விரைவில் ஓடிச் சென்று அரசனிடம் விண்ணப்பி யுங்கள்'' என்றார். அரசனைப் பேட்டிகாண வருகின்றவர்கள் தம் பெயரைக் குறிப்பிட்டே செய்தி சொல்லி அனுப்புவர். ஆனால் முனிவரோ தன் பெயரைக் குறிப்பிடாது ராஜகுமாரன் வந்திருப்பதாகச் சொல்லி அனுப்பி னார். ஏன்? பெயரைச் சொன்னால் சக்ரவர்த்திக்கு நம் குல குருவோடு காரணமின்றிச் சண்டையிட்டவர் எனும் எண்ணம் தோன்றி விடும். அருகில் தன் குரு இருக்கும் பொழுது அவரைப் பகைத்தவருக்கு பேட்டி அளிப்பது தவறு எனக் கருதி, அரசர் உள்ளே வர அனுமதி கொடுக்காமல் போகலாம். எனவே பெயரைக் கூறாமல், ராஜகுமாரன் என்றே தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். ஆயினும் காவலர்கள் இவருடைய தேஜஸ்ஸையும், வேஷத்தையும் கண்டதுமே கோபம் மிகுந்த முனிவர் என்பதை அறிந்து கொண்டனர். தாமதித்தால் சபித்து விடுவாரோ என அஞ்சினர் போலும்! மிக்கவிரைவுடன் ஓடோடியும் சென்று விண்ணப்பித்தனர்.

प्रत्युज्जगाम तं हृष्टः ब्रह्माणमिव वासवः ।
प्रहृष्टवदनो राजा ततोऽर्घ्यमुपहारयत् ॥

ப்ரத்யுஜ்ஜகாம தம் ஹ்ருஷ்ட: ப்ரஹ்மாணமிவ வாஸவ: ॥
ப்ரஹ்ருஷ்ட வதன: ராஜா தத: அர்க்யம் உபஹாரயத் ॥

வா.ரா. பால. - 18.

மடங்கல் போல் மொய்ம்பினான் முன்னர் மன்னுயிர்
அடங்கலும் உலகும் வேறு அமைத்துத் தேவரோடு
இடம் கொள் நான்முகனையும் படைப்பன் ஈண்டு எனாத்
தொடங்கிய துனியுறு முனிவன் தோன்றினான்.
வந்து முனி எய்துதலும் மார்பின் அணியாரம்
அந்தர தலத்து இரவி அஞ்ச ஒளிவிஞ்சக்
கந்த மலரில் கடவுள் தன் வரவு காணும்
இந்திரன் எனக் கடிது எழுந்து அடிபணிந்தான்.

க. ரா. பால. - கையடை

காவலன் முனிவர் வந்திருப்பதை விண்ணப்பித்ததும், அவரை வரவேற்க உடனே பெருமகிழ்வுடன் புறப்பட்டார் தசரதர். கல்யாண விஷயத்தைப் பற்றிய ஆலோசனையைத் தொடங்கும்போது ஒரு பெரியவர், சாஸ்த்ரங்களைக் கசடறக் கற்றவர், தவமுனிவர், காயத்ரீ மஹாமந்திரத்தின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டியவர், ஒரு ஸமயம் ''மேலுலகையும் புதிய பூவுலகையும் பல்வகை உயிரினங்களையும் தேவர்களையும் இவர்கட்குக் தலைவனாக வேறு இந்திரனையும், படைக்கும் தேவதையாக மற்றொரு நான்முகனையும் யான் படைப்பன்,'' எனக்கூறிப் படைக்கத் துணிந்தவர் வந்தாரென்றால் அதைவிட சுபசகுனம் வேறு என்ன வேண்டும்? உறுதியாக நால்வருக்கும் திருமணம் நிகழும் என்பதை முனிவரின் வருகையால் அறிந்த தசரதர் வஸிஷ்டரோடு முனிவரை வரவேற்கச் சென்றார். வலிமையும் காம்பீர்யமும்மிகுந்த ஸிம்ஹத்தினுடைய நடை போன்று இருந்ததாம் அரசருடைய நடை. அவர் மார்பில் அணிந்துள்ள ரத்தின ஹாரத்தின் ஒளி நடையசைவில் வான வீதியில் செல்லும் சூரியனின் ஒளியை விஞ்சுவது போன்று இருந்ததாம். இந்திர ஸபைக்கு வரும் நான்முகனை தேவேந்திரன் எதிர்கொண்டு, அர்க்யம் முதலிய, பல்வகை உபசாரங்களைச் செய்துவரவேற்பது போன்று முனிவரை தசரதர் வரவேற்றார்.

பணிந்து மணி செற்றுபு குயிற்றி அவிர் பைம்பொன்
அணிந்த தவிசு இட்டு அதில் அருத்தியோடு இருத்தி
இணைந்த கமலச்சரண் அருச்சனைசெய்து இன்றே
துணிந்தது என்வினைத் தொடர் எனத் தொழுது சொல்லும்.

க.ரா. பால. - கையடை

''இந்திரன் நான்முகனை உபசரிப்பது போன்று உபசரித்தார்.'' என மூல நூல் கூறியதை விளக்குவர் கம்பர். மண்டபத்திலுள்ள முனிவரை அழைத்துச் சென்று ஆஸனத்தில் அமர்த்தினார். இவர் தன் அதிதியாக (விருந்தினராக) வந்ததில் அரசருக்குள்ள மகிழ்வையும், பெருமதிப்பையும் இட்ட ஆஸனத்தைக் கொண்டே உணர்த்துகிறார், கம்பர்.

நெருப்பிலிட்டு அழுக்கு அகற்றின பசும் பொன்னால் அழகாகச் சமைக்கப்பட்டது ஆஸனம். அதில் பல்வகையான ரத்தினங்கள் பதிக்கப் பெற்றிருப்பதால் ஆஸனம் பளபளவென ஜொலிக்கிறது. ப்ரஹ்ம தேஜஸ்ஸினால் ஜொலிக்கும் முனிவருக்கு வஜ்ராஸனமே ஏற்றது எனக் கருதினார் போலும்! அதில் அமர்த்தி அர்க்யம், பாத்யம், ஆசமனீயம், பொன்மலர், வெள்ளிமலர், நறுமணம் மிகும் மலர்கள், சந்தனம், தூபம், தீபம் முதலியவைகளைக் கொண்டு பாத பூஜை செய்து உபசரித்தார். அவர் திருவடிகளோ தாமரை மலர் போன்ற சிவப்பாகவும், மென்மையாகவும், அழகாகவும், மிளிர்கின்றன. அவற்றுக்கு நன்னீரால் மஞ்சனமாட்டியும், அத்தூய நீரைப் பருகியும், தலையில் தெளித்தும், அகம் மகிழ்ந்தவராய்ப் பேசுகிறார். ''முனிவர் கோமகனே! உம் நல்வரவினால் இன்றே தொலைந்தது எனது தீவினைத்திரள். அது இனி என்னைத் தொடர்ந்து வருத்தாது. என்னே என் பாக்யம்!'' என்றார்.

நிலம் செய்தவம் என்று உணரின் அன்று, நெடியோய்! என்
நலம் செய்வினை உண்டு எனினும் அன்று நகர் நீ யான்
வலம் செய்து வணங்க எளி வந்த இது முந்து என்
குலம் செய் தவம் என்று, இனிது கூற முனி கூறும்.

க. ரா. பால. - கையடை

''பெரியோரே! யான் தங்களை அர்ச்சித்து வணங்கி வலம் செய்து உய்வதற்காக, ப்ரஹ்மர்ஷியான தாங்கள் என் நாட்டிற்கு எழுந்தருளியது யார் செய்த பாக்கியமோ? அறியேன். ஒரு வேளை யான் இப் பெறற்கரிய பேறு பெறுவதற்காக இந்நாடே தவம் செய்திருக்கலாம். இல்லை, இந்த நாடு நெடுங்காலமாக இருந்து வருகிறதே; இப்பாக்யம் முன்னரே தோன்றியிருக்க வேண்டுமே! அல்லது, நான் செய்த தவமே இதற்குக் காரணம் எனக் கூறவும் முடியாது. யான் இத்துணைத் தவத்தினை இயற்றியதில்லையே! உண்மையில் எனது முன்னோர்கள் தொன்றுதொட்டு செய்து வந்த மாபெரும் தவத்தின் பலனேயாம்''.

நம் இல்லத்திற்கு வரும் பெரியோர்களோடு நாம் எவ்வாறு பழக வேண்டுமென்பதை இங்கு தசரதரிடமிருந்து அறிந்து செயல்பட வேண்டியது நம் கடமை. இப்பழக்கம் நமக்குப் பல நன்மைகளை அளிக்க வல்லது என்பதை அனுபவத்தில் அறிய முடியும்.

தசரதனின் வரவேற்பு

कुशलं चाव्ययं चैव पर्यपृच्छन्नराधिपम् ।
पुरे कोशे जनपदे बान्धवेषु सुहृत्सु च ॥
कुशलं कौशिको राज्ञः पर्यपृच्छत् सुधार्मिकः ।
अपि ते सन्नताः सर्वे सामन्ताः रिपवो जिताः ॥
दैवं च मानुषं चापि कर्म ते साध्वनुष्ठितम् ।
वसिष्ठं च समागम्य कुशलं मुनि पुङ्गवः ॥

குஶலம் ச அவ்யயம் சைவ பர்யப்ருச்சத் நராதிபம் ।
புரே கோஶே ஜனபதே பாந்தவேஷு ஸுஹ்ருத்ஸு ச ॥
குஶலம் கௌசிக: ராஜ்ஞ: பர்யப்ருச்சத் ஸுதார்மிக: ।
அபி தே ஸந்நதா: ஸர்வே ஸாமந்தா: ரிபவ: ஜிதா: ।
தைவம் ச மானுஷம் சாபி கர்ம தே ஸாது அனுஷ்டிதம்? ।
வஸிஷ்டம் ச ஸமாகம்ய குஶலம் முனிபுங்கவ: ॥

வா. ரா. பால. - 18.

இதுவரை பகவானின் அவதாரத்தைப் பற்றிய கதையை அறிந்தோம். இனி அவன் அவதாரத்தின் பயனைப் பற்றி அறிவோம். ''தீயோர்களைக் களைந்தும், நல்லோரைக் காத்தும் இவர்களைத் துணையாகக் கொண்டு தர்மத்தை நிலைநிறுத்துவதே பரமனின் குறிக்கோள்'' என்று முன்பே எழுதினோம். இனி ஸாதுவான விஸ்வாமித்ரரையும், அவரியற்றும் தர்மமான வேள்வியையும் காத்தது பற்றி முதலில் கூற விழைகிறார் வால்மீகி.

''ரத்னஹாரீ து பார்த்திவ:'' உலகில் கிடைக்கும் மிக உயரிய பொருட்களையெல்லாம் கவர்ந்து வைத்துக் கொள்ளும் உரிமை பெற்றவன் அரசன், என்பது பொதுவிதி. ஏனெனில் மக்களால் மிக உயர்ந்த பொருள் களை வைத்துப் பாதுகாக்கவும் முடியாது, அப்பொருளின் தரம் குறையாமல், கெடாமல் வைத்துக் கொள்ளவும் முடியாது. இதை ஆட்சியாளரால் தான் செய்ய முடியும், இக்காலத்தில் அத்தகு பொருட்கள் இருக்குமிடத்தைப் பொருட்காட்சி சாலை என்கிறார்கள். அங்கு சென்று பாமரர்களும் அவற்றைக் கண்டு களிக்க முடியும்; ரஸிக்க முடியும். முனிவர் தசரதரைப் பார்த்து, ''நாட்டிலுள்ள உயரிய பொருள்களைப் பெற்று அவற்றை நன்கு பாதுகாத்து வருகிறாயா? என வினவுகிறார். இந்நகரிலுள்ள மக்களும், நாட்டு மக்களும், உனது உற்றார் உறவினர்களும், நண்பர்களும், நலமுடன் வாழ்கின்றனரா? மக்களும் தாங்களும் எவ்வித உபத்ரவங்கள் (தீங்குகள்)

இன்றி இருக்கின்றீர்களா? அரசின் கருவூலம் குறைவற இருக்கிறதா? மக்களை வாட்டிக் கசக்கிப் பிழியாமல் ஆறில் ஒரு பங்கு வரி வசூலிப்பதும், வசூலித்த செல்வத்தைக் கொண்டு மக்கள் பன்மடங்கு பயன்பெறும்படி சமூகப் பணிகளைச் செய்வதும் நடைபெறுகின்றனவா? உமது சிற்றரசர்கள் சக்ரவர்த்தியின் ஆணைக்குப் பணிந்து செயல்படுகின்றனரா? பகைவர்கள் ஸாம தான பேத தண்டனைகளாகிற வழிகளால் வெல்லப் படுகின்றனரா? தேவதைகளுக்காக ஆற்ற வேண்டிய யாகம் முதலிய வைதிக கர்மாக்கள் அனுஷ்டிக்கப்படுகின்றனவா? மனிதர்கட்குச் (செய்ய வேண்டிய) விருந் தோம்பல் முதலிய உதவிகள் கிடைக்கின்றனவா?'' என்றவாறு அரசனைப் பற்றியும், மக்களைப் பற்றியும் குசலப்ரஶ்னங்களைச் செய்தார். நலன் விசாரிப்பதில் ஒரு முறை உண்டு. அதாவது

ब्राह्मणं कुशलं पृच्छेत् क्षत्रबन्धुमनामयम् ।
वैश्यं क्षेमं समागम्य शूद्रं आरोग्यमेव च ॥

ப்ராஹ்மணம் குஶலம் ப்ருச்சேத் க்ஷத்ரபந்தும் அனாமயம் ।
வைஶ்யம் க்ஷேமம் ஸமாகம்ய ஶூத்ரம் ஆரோக்யமேவ ச ॥

அந்தணரிடம் குசலத்தையும், க்ஷத்திரியரிடமும் நான்காம் வர்ணத்த வரிடமும் ஆரோக்யத்தையும், வைச்யரிடம் க்ஷேமத்தையும் (பெற்ற பொருளைக் காப்பாற்றுதல்) கேட்க வேண்டும் என்பது முறை. இதன்படி நோயற்ற வாழ்வைப் பெற்றிருக்கிறீரா? எனக் கேட்க வேண்டியிருக்க, அந்தணரைக் கேட்க வேண்டிய குஶல ப்ரஶ்னத்தை க்ஷத்திரியரிடம் கேட்டதின் கருத்தாவது, தசரதர் கர்மானுஷ்டானங்களில் சிறந்து மஹானு பாவராய் விளங்கும் உயர்வு பற்றி எனலாம்.

பின்னர் முனிவர் வாமதேவர், வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளையும் அவரவர் அருகில் சென்று குஶலப்ரஶ்னம் செய்தார்.

अथ हृष्टमना राजा विश्वामित्रं महामुनिम् ।
उवाच परमोदारः हृष्टस्तमभिपूजयन् ॥
यथाऽमृतस्य संप्राप्तिः यथावर्षमनूदके ।
यथा सदृश दारेषु पुत्र जन्म अप्रजस्य च ।
प्रणष्टस्य यथा लाभः यथा हर्षो महोदये ।
तथैवागमनं मन्ये स्वागतं ते महामुने ॥
अद्य मे सफलं जन्म जीवितं च सुजीवितम् ।
पूर्वं राजर्षि शब्देन तपसा द्योतित प्रभः ।
ब्रह्मर्षित्वमनुप्राप्तः पूज्योऽसि बहुधा मया ॥

அத ஹ்ருஷ்டமனா: ராஜா விச்வாமித்ரம் மஹாமுனிம் ।
உவாச பரமோதார: ஹ்ருஷ்ட: தம் அபிபூஜயன் ॥
யதா அம்ருதஸ்ய ஸம்ப்ராப்தி: யதா வர்ஷம் அனூதகே ।
யதா ஸத்ருஶ தாரேஷு புத்ரஜன்ம அப்ரஜஸ்ய ச ॥
ப்ரணஷ்டஸ்ய யதா லாப: யதா ஹர்ஷோ மஹோதயே ।
ததைவ ஆகமனம் மன்யே ஸ்வாகதம் தே மஹாமுனே ।
அத்யமே ஸபலம் ஜன்ம ஜீவிதம்ச ஸுஜீவிதம் ॥
பூர்வம் ராஜர்ஷி ஶப்தேன தபஸா த்யோதிதப்ரப: ॥
ப்ரஹ்மர்ஷித்வம் அனுப்ராப்த: பூஜ்ய: அஸி பஹுதா மயா ॥

வா. ரா. பால. - 18.

காட்டில் தவம் புரிந்து கொண்டிருக்கும் முனிவரை அரசர் காட்டிற்குச் சென்று வணங்குவது வழக்கம். பொதுவாக முனிவர்கள் பெருநகர்கட்குச் செல்வதை வெறுப்பர். அத்தகைய மாமுனிவர் நம்மைத் தேடி அரண்மனைக்கு வந்திருக்கிறார் என உள்ளடங்காத மகிழ்ச்சி தசரதருக்கு. கல்யாணத்தைப் பற்றி ஆலோசிக்கும் போது ஒரு மஹானின் வரவு சுபஸூசகம். எண்ணியது விரைவில் நிறைவேறும். இதனால் உடலெல்லாம், அவருக்கு மயிர்க்கூச்சலிட்டிருக்கிறது. தசரதரோ பரமோதாரர்; கேட்டதை யெல்லாம் வாரி வழங்கும் வள்ளல். வந்தவர் எதைக் கேட்டு விடுவாரோ எனும் அச்சம் இல்லை. எனவே உள்ளும் புறமும் மகிழ்வுடன் முனிவரைத் துதித்துக் கொண்டே பேசுகிறார்.

''முனிவரே! உமது நல்வரவு எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. தேவாஸுரர்கள் பாற்கடலைக் கடைந்தனர். பெரு முயற்சிக்குப் பிறகு அம்ருதம் வந்தது. அவ்வம்ருதத்திற்காக அனைவரும் ஏங்கி நின்றனர். அத்தகு அம்ருதம் பூவுலகில் உள்ள ஒருவனுக்குக் கிடைத்தால் அவன் எத்தனை மகிழ்ச்சியை அடைவான்! அதே போன்று உம் வரவு கிடைத்தற் கரிய அம்ருதத்தைப் பெற்றது போன்ற மகிழ்ச்சியை எனக்கு அளிக்கிறது'' என்றார்.

கோடையில் கதிரவனின் வெம்மையைப் பொறுக்க முடியவில்லை. எங்கும் நிலம் வறண்டு கிடக்கிறது. நீர் நிலைகள் காய்ந்து பூமி வெடித்துக் கிடக்கிறது. கிணறுகளில் தானியத்தைச் சேமிக்கலாம்! இந்நிலையில் இடை விடாது தாரை தாரையாக மழை பொழிந்தால், மக்களின் மகிழ்ச்சியை அளவிடவும் முடியுமோ? ஒருவனுக்கு மக்கட்பேறு இல்லாத குறை மனதை வாட்டியது. இது தன் மனைவியின் குறையாக இருக்கலாமோவென நினைத்து மறுமணம் செய்து கொண்டான். பல நாட்களாகியும் அவளிடமும் ஸந்ததி ஏற்படவில்லை. பின்னர் மூன்றாவதாகவும் ஒருத்தியை மணந்தான். அவளிடமும் புத்ரபாக்யம் கிட்டவில்லை. தன் ஊழ்வினையை நினைத்து நொந்து கொண்டான். இந்நிலையில் எதிர்பாராது பரமன் அருள் கிட்டியது.

மூவரும் கருவுற்றனர். நன்மக்களையும் பெற்றெடுத்தனர். அவன் மகிழ்ச்சிக்கு எல்லைதான் உண்டோ!

ஒருவன் பரம ஏழை, உண்ண உணவோ, உடுக்க உடையோ, இருக்க இல்லமோ கிடையாது. ''முயற்சி திருவினையாக்கும்'', ''உத்யோகினம் புருஷ ஸிம்ஹம் உபைதி லக்ஷ்மீ'', ''முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்'', என்பது மூதுரை. பாடுபட்டு அயராது உழைத்தான். பல்வகைப் பொருட்களைத் தானே தயாரித்து வாணிபம் செய்தான். பரமன் அருளும் உதவியது. விரைவில் பெரும் தனிகனானான். சொந்த வீட்டில் சேமித்து வைத்திருந்தான். எதிர்பாராது ஒருநாள் குடும்பத்தினருடன் வெளியூர் செல்லவேண்டி வந்தது. திரும்பி வந்ததும் அறையைத் திறந்து பார்த்தான். ஈட்டிய செல்வம் அனைத்தும் பறிபோய்விட்டது. தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டான். ஒன்றும் பயனில்லை. பழைய ஏழ்மை திரும்பியது. முதலில் தான் ஒருவனே கஷ்டப்பட்டான். இப்பொழுதோ குடும்பமே தத்தளிக்கிறது. மீண்டும் பிச்சை எடுக்கலானான். இந்நிலையில் ஒருநாள் காவல் நிலையத்திலிருந்து அழைப்பு வந்தது. இன்னும் என்னென்ன துன்பங்கள் காத்திருக்கின்றனவோ, என்று நொந்து கொண்டே காவலருடன் நிலையத்திற்குச் சென்றான். அஞ்சி, நடுங்கி, பதட்டத்துடன் உள்ளே நுழைந்தவன் தன் பெட்டியை அடையாளம் காட்டித் தன் சாவியினால் திறந்து காட்டிக் கூறிய அடையாளங்கள் சரியாக இருக்கவே, பெட்டி, காவலுடன் அவன் வீட்டிற்கு அனுப்பப்பட்டது. அப்பொழுது அவனுக்கும் அவன் குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட ஆனந்தம் எத்தகையது என வாயால் கூறத்தான் முடியுமோ?

ஒருவர் பெரிய ஸம்ஸாரி, குழந்தைகள் தசாவதாரம், அனைவரையும் கண்ணும் கருத்துமாக வளர்த்தார்; படிக்க வைத்தார். பல்வேறு காரணங் களினால் ஒவ்வொருவராக அகாலத்தில் மறைந்தனர். கடைசிப் பிள்ளை ஒருவனே மிச்சம். அவனை மிகச் செல்லமாக வளர்த்தார். அவனுக்கு ஜாத கர்மம், நாமகர்மம், அன்ன ப்ராசனம், சௌளம், உபநயனம் ஆகிய ஸம்ஸ் காரங்களை உரிய காலத்தில் செய்து மகிழ்ந்து வந்தார். இவருக்கு வயதாகி விட்டது. தான் கண்ணை மூடுவதற்குள் பிள்ளைக்குக் கல்யாணத்தைப் பண்ணிப் பார்க்க வேண்டுமென்று பேரவா. பெண் வீட்டாரிடமிருந்து ஜாதகங்கள் வாங்குவதும், பல ஜோஸ்யர்களிடம் சென்று பொருத்தம் பார்ப்பதுமாகப் பல நாட்கள் கழிந்தன. இன்னும் குரு பலன் கூடிவரவில்லை போலும் என துயரத்தில் ஆழ்ந்தார். எதிர்பாராது ஒரு நாள் கல்யாணம் நிச்சயமாயிற்று. நல்ல ஜாதகமாகவும், நல்ல பெண்ணாகவும், சீரும் சிறப்பும் உள்ள இடமாகவும் அமைந்தது. குறித்த சுபமுஹூர்த்தத்தில் விவாஹம் கோலாஹலமாக நிகழ்ந்தது. குமாரனும் மணப் பெண்ணின் கையைப் பற்றியவாறு தகப்பனாரின் அருகில் வந்து தம்பதியாக வணங்கி அவர் தாள்களைப் பற்றினான். தகப்பனாரும் ஆனந்த பாஷ்பம் கண்களினின்றும்

பெருகத் தழுதழுத்த குரலில் ஆசீர்வாதம் பண்ணி மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினார்.

தசரதன்: ''முனிவரே! அம்ருதத்தை, மழையை, மக்கட்பேற்றை, இழந்த பொருளை, மகளின் மண விழாவைப் பெற்றவர்கட்கு எத்துணை ஆனந்தம் ஏற்படுமோ அத்தகு பெருமகிழ்ச்சியை உமது நல்வரவு எனக்குக் கொடுக்கிறது. உமது வரவு நல்வரவு ஆகுக. எனது பிறவியும் பயனுற்றது. என் வாழ்வும் சிறப்புற்றது. அரசரை அரசர் போற்றுவது மரபு. நீர் வெறும் அரசர் அன்று. உமது தூய தவத்தின் பெருமையால் ராஜர்ஷியாகத் திகழ்கிறீர். உமது திருமுகத்தில் ப்ரஹ்மதேஜஸ் பொலிகிறது. தொடர்ந்த கடும் தவத்தினால் இப்பொழுது ப்ரஹ்மர்ஷியாகவும் திகழ்கிறீர். அதோடு எங்கள் குலகுருவான வஸிஷ்டராலும் ப்ரஹ்மர்ஷி எனப் போற்றப் பட்டவர். எனவே பிறர் எய்தற்கரிய பெருஞ் சிறப்பைப் பெற்ற தாங்கள் என்னால் பல வகைகளில் சிறப்பாகப் போற்றுதற்கு உரியவராகிறீர்'' என்றார்.

तदद्भुत मिदं ब्रह्मन् पवित्रं परमं मम ।
शुभक्षेत्र गतश्चाहं तव सन्दर्शनात् प्रभो ॥

தத் அத்புதம் இதம் ப்ரஹ்மன்! பவித்ரம் பரமம் மம ।
சுப க்ஷேத்ரகத: ச அஹம் தவ ஸந்தர்ஶநாத் ப்ரபோ! ॥

வா.ரா. பால. - 18

மேலும் ''ஓ ப்ரஹ்மர்ஷியே! உமது வரவு எனக்கு மிகப் பவித்ரமானது. எனக்கு அகத்தூய்மையையும், புறத்தூய்மையையும் அளிக்கிறது. மேலும் உம் வரவு மிகமிக ஆச்சரியமானது. ஓ ப்ரபுவே! தாங்கள் இங்கு எழுந்தருளிய தால் இவ்வயோத்தி மாநகர் புண்யக்ஷேத்ரமாகி பவித்ரமாகிவிட்டது. தங்கள் தர்சனத்தினால் யானும் புண்ய க்ஷேத்திரத்தில் வஸிப்பவனாகிறேன். யாத்திரையாக எல்லா க்ஷேத்ரங்களுக்கும் சென்றவர்கட்குரிய பயனைப் பெற்றவனாகிறேன். க்ஷேத்ராடனம் செய்யாமலே க்ஷேத்ராடனம் செய்த பலன் கிட்டுவது அத்புதம் (ஆச்சரியம்) தானே'' என்றார்.

பொதுவாக பரமன் விபவாவதாரம் எடுத்த இடங்களையும், அர்ச்சாவதாரமாய் ஸேவை ஸாதிக்கும் இடங்களையும், க்ஷேத்ரம் என்றும், புண்ய க்ஷேத்ரம் என்றும் சொல்லுகிறோம். ராமனின் அவதாரம் விபவாவ தாரமானாலும் அவனை தசரதன் அவ்வாறு உணர்ந்தவனல்லன். அப்படி யிருக்க அவன் தன்னைப் புண்ய க்ஷேத்திரத்திலிருப்பவனாகக் கருதக் காரணம் யாது என ஆராய வேண்டும். ஸ்வாமி தேசிகன் எது புண்யக்ஷேத்ரம் என்பதற்கு இலக்கணம் வகுத்து விடையளிக்கிறார்.

सा काशीति न चाकशीति भुविसाऽयोध्येति नाध्यास्यते
साऽवन्तीति न कल्मषादवति सा कांचीति नोंदचति ।

धत्ते सा मधुरेति नोत्तम धुरां नान्याऽपि मान्या पुरी
या वैकुण्ठ कथा सुधारस भुजां रोचेत नो चेतसे ॥

ஸா காசீ இதி ந சாகசீதி, புவி ஸா அயோத்யா இதி ந
அத்யாஸ்யதே
ஸா அவந்தீ இதி ந கல்மஷாத் அவதி ஸா காஞ்சீ இதி ந உதஞ்சதி ।
தத்தே ஸா மதுரா இதி ந உத்தம துராம் ந அன்யா
அபி மான்யா புரீ
யா வைகுண்ட கதா ஸுதா ரஸபுஜாம் ரோசேத நோ சேதஸே ॥

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்

எது புண்ய க்ஷேத்ரம்? எது பக்தர்கள் வஸிப்பதற்கு உரியது? எம்பெருமானுடைய கதை, ஸம்ஸாரத்தில் பல்வகை இன்னல்களால் வாடித் தவிக்கும் மக்களுக்கு வாழ்வை அளிக்கும் அம்ருதமாகும். இதைத் தம் அனுபவத்தில் கண்ட கோபிகள் ''தவ கதாம்ருதம் தப்த ஜீவனம்'' என்பர். பரமனின் கதை கேட்கக்கேட்க அவன் பால் நம்மை ஈர்க்கும். ''மத்கதா ச்ரவணே பக்தி'' என பரமனே கூறுவான். இத்தகைய சரித்திரங்களாகிற அம்ருதத்தை சுவைப்பதிலேயே, பருகுவதிலேயே எவர்களுடைய மனம் நாட்டம் கொண்டிருக்குமோ அவர்களே பாகவதர்கள்—பக்தர்கள் ஆவர். இவர்களின் மனதிற்கு எந்த இடம் உகப்பாக இருக்குமோ அதுவே அனைவர்க்கும் வஸிப்பதற்குரிய புண்ய, க்ஷேத்ரமாகும். நம் நாட்டில் காசீ, காஞ்சீ, அயோத்யா, அவந்தீ, மதுரா போன்ற பல க்ஷேத்ரங்கள் உள்ளனவே? ஆம், உள்ளன. அங்கு பாகவதோத்தமர்கள் வாஸம் செய்வதற்குரிய சூழ்நிலை இருந்தது, சிலராவது அங்கு வஸித்தால் தான் அவை க்ஷேத்ரங் களாகும். அன்னியர் படையெடுப்பின் காரணமாக பழம்பெரும் க்ஷேத்ரங்கள் வாஸத்திற்குத் தகுதியற்றனவாயின. எனவே அவைகளின் புகழ்மிக்க பெயர்களையும் பழம் பெருமைகளையும் கொண்டு அவற்றை க்ஷேத்ரங்களாகக் கருதமுடியாது. பாகவதோத்தமர்கள் வஸிக்கும் இடங்களே க்ஷேத்ரங்களாகும்.

விஸ்வாமித்ரரோ பரம பாகவதர். அவர் எப்பொழுதும் எம்பெரு மானையே தியானித்த வண்ணம் இருப்பவர். தியானம் செய்பவர்களின் இதயத்தில் நாராயணன் எப்பொழுதும் வாஸம் பண்ணுகிறான். அவனுக்கே உரித்தான சில இடங்கள் உண்டு. திருப்பாற்கடல், ஸூர்ய மண்டலம், ஸ்ரீ வைகுண்டம் என்பவை. இவை இருப்பினும் அவற்றை விடுத்துப் பாகவதர்களின் இதயத்தில் வந்து தங்குவான். இவ்வுலகிலும் ஆலிலை, துவாரகை போன்ற பல இடங்கள் அவனுக்கு உகந்த இடங்கள் தாம். ஆயினும் அவற்றை இகழ்ந்து பக்தர்களின் இதய கமலங்களையே தனது உயர்ந்த இடமாகக் கருதுகின்றான்.

பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்து என்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ
தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகே என்றென்று
உனக்கு இடமாயிருக்க என்னை உனக்கு உரித்தாக்கினையே
வடதடமும் வைகுந்தமும் மதில் துவராபதியும்
இடவகைகள் இகழ்ந்திட்டு என்பால் இடவகை
கொண்டனையே.

பெரியாழ்வார் திருமொழி - 5ப. 4தி.

''தனக்கே உரிய சிறந்த இடங்களை ஒதுக்கிவிட்டு விஸ்வாமித்ரர் போன்ற பாகவதர்களின் இதயத்தில் நித்யவாஸம் செய்கிறான். பரமனை உள்ளத்தில் கொண்ட தாங்கள் எழுந்தருளியிருப்பதால் அயோத்தி க்ஷேத்ர மாயிற்று. நானும் புண்யக்ஷேத்ர வாஸியானேன். மேலும் உம்மை நான் தர்சனம் செய்ததாலும், தாங்கள் என்னைக் கண் குளிரக் கடாக்ஷித்ததாலும் க்ஷேத்ரவாஸம் செய்பவர்கள் போன்று பாபங்கள் அகன்று நான் தூய்மை பெற்றேன்'' என்றார் தசரதர்.

नह्यम्मयानि तीर्थानि नदेवाः मृच्छिला मयाः ।
ते पुनन्त्युरु कालेन दर्शनादेव साधवः ।।

நஹி அம்மயானி தீர்த்தானி நதேவா: ம்ருச்சிலா மயா: ।
தே புனந்தி உருகாலேன தர்ஶனாத் ஏவ ஸாதவ: ॥

ஸ்ரீ பாகவதம் 10, 48, 31

புண்ய தீர்த்தங்களோ, அர்ச்சையிலுள்ள (விக்ரஹங்களாயுள்ள) தேவர்களோ காலக்ரமத்தில் மெள்ள மெள்ள நம் பாபங்களைப் போக்கித் தூய்மைப்படுத்துவர். ஸாதுக்களோ (பாகவதர்களோ) தம் கடாக்ஷத்தினா லேயே (பார்வையினாலேயே) நம் பாபங்களை உடனே போக்கி நம்மைத் தூய்மைப் படுத்துவர்.

इदं शरीरं कौन्तेय क्षेत्रमित्यभिधीयते ।

இதம் ஶரீரம் கௌந்தேய! க்ஷேத்ரம் இதி அபிதீயதே

பகவத் கீதை - 13.1

என நமது உடலை க்ஷேத்ரம் என்றார் கண்ணபிரான். முனிவரின் பார்வை யினால் தசரதரின் உடல் புண்ய (க்ஷேத்ரம்) சரீரமாயிற்று. ஆத்மாவும் பாபங்கள் விலக, பரிசுத்தமாயிற்று. எனவே தசரதர் சுப க்ஷேத்ரகதரானார்.

இங்கு விஸ்வாமித்ரரின் வருகையை ''ததத்புதம்'' அத்புதம் என்கிறார். சுகர் க்ருஷ்ணாவதாரத்தை ''தம் அத்புதம் பாலகம் அம்புஜே க்ஷணம்'' என்றும், ந்ருஸிம்ஹாவதாரத்தை ''அத்ருச்யத அத்யத்புத ரூபம்

உத்வஹன்'' என்றும் (அத்புதம், அத்யத்புதம்) கூறினார். வால்மீகியோ ராமாவதாரத்தை அத்புதம் என்கிறார். ஏன்? கண்ணனும், நரஸிம்ஹனும் அவதார கார்யத்தை (துஷ்ட நிக்ரஹம், சிஷ்டபரிபாலனம்) அவதரித்ததுமே செய்யத் தொடங்கிய படியால் அவர்கள் அவதாரத்தையே அத்புதம் (ஆச்சரியம்) என்றார். ராமாவதாரத்திலோ முனிவரின் வருகையிலிருந்துதான் அவதார கார்யம் தொடங்குகிறது. எனவே முனிவரின் வருகையை அத்புதம் என்றார்.

ब्रूहि यत्प्रार्थितं तुभ्यं कार्यमागमनं प्रति ।
इच्छाम्यनुगृहीतोऽहं त्वदर्थं परिवृद्धये ॥
कार्यस्य न विमर्शं च गन्तुमर्हसि कौशिक ।
कर्ताचाह मशेषेण दैवतं हि भवान्मम ॥

ப்ரூஹி யத் ப்ரார்த்திதம் துப்யம் கார்யம் ஆகமனம் ப்ரதி ।
இச்சாமி அனுக்ரஹீத: அஹம் த்வதர்த்தம் பரிவ்ருத்தயே ॥
கார்யஸ்ய ந விமர்ஶம் ச கந்தும் அர்ஹஸி கௌசிக ।
கர்த்தாச அஹம் அஶேஷேண தைவதம் ஹி பவான் மம ॥

வா. ரா. பால. - 18.

மஹான்களின் ஆசீர்வாதம் எதையும் செய்யவல்லது. உபநயனம் விவாஹம் போன்ற சுபமுஹூர்த்தங்களைச் செய்வதற்கு முன், முதல் நாள் பாகவதர்களான வேதம் வல்லார்கட்கும், ப்ரஹ்ம வித்துக்களுக்கும் போஜனம் செய்வித்து, அவர்களின் ஆசீர்வாதங்களைப் பெற்று சுபங்களைச் செய்ய வேண்டுமென ஸூத்ரகாரர் நமக்கு உபதேசிக்கிறார், ''ப்ராஹ்மணான் போஜயித்வா ஆஶிஷ: வாச யித்வா'' என்று. அவ்வாறு செய்தால் மஹான்களின் ஆசீர்வாதம் நாம் எண்ணியதை எண்ணியாங்கு பூர்த்தி செய்விக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. இது அனுபவ பூர்வமாக முன்னோர்களும் நாமும் கண்ட உண்மை. எனவே விஶ்வாமித்ர முனிவரை நன்கு உபசரித்த பிறகு மன்னர் தஶரதர் வினவுகிறார்: ''முனிவரே! தாங்கள் அடியேன் இருக்கைக்கு எழுந்தருளக் காரணம் என்ன? தாங்கள் விரும்பியது எதுவாயினும் தலையாலே செய்யக் காத்திருக்கிறேன்.'';

முனிவர்: ''உம்மால் முடியாததாயின் அதை எப்படிச் செய்து கொடுப்பீர்?.''

மன்னர்: ''அடியேனுக்கு முடியாதது என்று ஒன்று உண்டோ? தாங்கள் எதைக் கட்டளையிடினும் உடனே செய்து கொடுக்கத் தயார்.''

முனிவர்: ''இத்தகைய தன்னம்பிக்கை உமக்கு எவ்வாறு ஏற்பட்டது?''

மன்னர்: ''இச்சாமி அனுக்ருஹீத: அஹம்'' இப்பொழுது உமது அருளை—அனுக்ரஹத்தைப் பரிபூர்ணமாகப் பெற்றிருக்கிறேன். மஹான்களின் அனுக்ரஹத்தைப் பெற்றவர்களால் எதைத்தான் செய்ய முடியாது?

எனவே தாங்கள் என்னால் செய்ய முடியுமோ முடியாதோ என யோசிக்க வேண்டாம். நீர் எதைச் சொன்னாலும் அதைக் குறைவறச் செய்யச் சித்தமாயிருக்கிறேன். தாங்கள் என்னை ஆட்கொண்ட தெய்வம் ஆயிற்றே! தெய்வத்திற்குச் செய்ய யார்தான் தயங்குவார்?'' என்றார்.

இங்கு விஶ்வாமித்ர முனிவரை ''என் தெய்வம்'' என்கிறார் தசரதர். அது எவ்வாறு பொருந்தும் என சற்று ஆராய்வோம்.

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥
तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।
तत्प्रसादात्परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥

ஈஶ்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேஶே அர்ஜுன! திஷ்டதி ।
ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா ॥
தமேவ ஶரணம் கச்ச ஸர்வ பாவேன பாரத! ।
தத்ப்ரஸாதாத் பராம் ஶாந்திம் ஸ்தானம் ப்ராப்ஸ்யஸி
ஶாஶ்வதம் ॥

பகவத் கீதை - 18 : 61, 62

எம்பெருமான் ஒவ்வொரு ஜீவனுடைய இதயத்திலும் வீற்றிருக்கிறான். புலன்களும் உறுப்புகளும் கொண்ட நமது சரீரமே ஒரு இயந்திரமாகும். இவ்வியந்திரத்தில் இருக்கும் ஜீவனை அவரவர்கள் செய்த புண்ய பாப கர்ம வாஸனைகட்கு ஏற்ப அவ்வச் செயல்களில் ஈடுபடச் செய்து ஆட்டுவிக்கிறான். இதயத்தில் வீற்றிருக்கும் எம்பெருமானை நமது அந்தர்யாமியாகவும், நம்மால் அடையப்படுபவனாகவும், அவனை அடைவதற்கு அவனையே உபாயமாகவும் எண்ணி சரணம் அடைக. பக்தவத்ஸலனான பரமன் நம் இன்னல்களைப் போக்கி இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தையே அளிப்பான். இதயத்திலுள்ள பரமனை வழிபடும் ஜீவனை ''ஞானீ து ஆத்மைவ மே மதம்'' தன்னுடைய ஆத்மாவாக, அவனை விட்டு ஒரு கணமும் தன்னால் வாழ முடியாதவனாகப் பரமன் கருதுகிறானாம். பரமன் நம் உள்ளிருந்து நம்மை வழி நடத்திச் செல்கிறான். அவனின்றி நாம் ஒரு கணமும் வாழ முடியாது. எனவே அவனை நாம் தெய்வமாகப் போற்றுகிறோம். நம் தெய்வமான பரமன் நாராயணன் பக்தனின்றி உயிர் தரிக்க மாட்டாதவனாய்—வாழமுடியாதவனாய் எக்காலத்திலும் தன்னை நினைக்கும் பக்தனே அவனுக்கு தெய்வமாகிறான் போலும்! இவ்வாறு எம்பெருமானே தெய்வமாகக் கருதும் பக்தர்களுள் விஶ்வாமித்திரரும் ஒருவர். இவருடைய எண்ணங்கள் த்யானங்கள் எப்படி இருந்தன என்பதை ஆழ்வார் ஸ்ரீ ஸூக்தியைக் கொண்டு விளக்கலாம்.

பொன்னைக் கொண்டு உரைகல் மீதே நிறமெழ
உரைத்தாற் போல்
உன்னைக் கொண்டு என் நாவகம்பால் மாற்றின்றி,
உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன் என்னையும்
உன்னிலிட்டேன்
என்னப்பா! என் இருடீகேசா! என்னுயிர்க் காவலனே

உன்னுடைய விக்கிரமம் ஒன்று ஒழியாமல் எல்லாம்
என்னுடைய நெஞ்சம்பால் சுவர் வழி எழுதிக் கொண்டேன்
மன்னடங்க மழு வலங்கைக் கொண்ட இராமநம்பீ!
என்னிடை வந்து எம்பெருமான்! இனி எங்குப் போகின்றதே?

பெரியாழ்வார் திருமொழி - 5ப. 4 தி

பொன்னணிகலன்களை வாங்குகின்றவர்கள் அவ்வணிகரிடம் சென்று விரும்பியவற்றை உயர்ந்த பொன்னா, கலப்படம் இல்லாததா என்பதை அறிய உரைகல்லில் அழுந்தத் தேய்த்துப் பார்த்து நல்லதாக வாங்கிச் சென்று தன்னகத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வார்கள். அது போன்று பக்தரான ஆழ்வாரும் பரமனைப் பாடிப்பாடித் தன் நாவகமாம் உரை கல்லில் ''ஹிரண்மயனான புருஷன்'' என வேதம் போற்றும் பரமனாம் பொன்னை நன்கு உரைத்துக் கொண்டேன். ஸதாசாரியனிடம் பரதத்வம் பற்றிய ஸ்வரூப ரூப குணங்களை நன்கு கேட்டு, அறிந்து த்யானம் செய்து என் மனத்தினுள்ளே நிலையாக வைத்துக் கொண்டேன். அது மட்டுமன்றி என்னையும் ஸர்வ ரக்ஷகனான உன் திருவடிகளில் அடைக்கலமாக ஸமர்ப்பித்துவிட்டேன்'' என்றார். பக்தரான இவ்வாழ்வார் ஸர்வேச்வரனான எம்பெருமான் தன் இதயத்தை விட்டு அகலாதபடி வைத்துக் கொண்டதற் கான உபாயத்தையும் தானே கூறுகிறார்.

''பரமா! நீ பரசு என்னும் ஆயுதத்தைக் கையிலேந்தி பரசுராமனாக அவதரித்து துஷ்டர்களை வென்று அடக்கி ஆண்டாயல்லவா? அதே போன்று துஷ்டர்களான புலன்களை வெல்ல ஒரு வழி செய்தேன். நீ பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை எனும் ஐவகை நிலங்களைத் தாங்கி என்னென்ன செய்தாயோ, அவற்றுள் விபவத்தில் மீனாய் , ஆமையாய், வராஹமாய், நரசிங்கனாய், வாமனனாய், பரசுராமனாய், தசரதராமனாய், பலராமனாய், கண்ணனாய், கல்கியாய் அவதரித்துச் செய்த லீலைகள் எத்தனையோ, அவையனைத்தையும் ஒன்றையும் விடாது உயிர் ஓவியங் களாகத் தீட்டினேன். எங்கு தெரியுமோ? வீட்டுச் சுவரில் சரித்திரங்கள் எல்லாம் வரைய இடம் ஏது? எனவே என் நெஞ்சகத்தினுள் உள்ள அகன்ற சுவர்களில் பல வண்ணங்களில் எழுதிக் கொண்டேன். நான் எங்கு திரும்பி னாலும் மனதில் நீயே காட்சி அளிக்கிறாய், என் புலன்கள் எல்லாம் மனமே

யாகி உட்கண்ணால் உன்னையே நேராகப் பார்ப்பது போன்ற (தர்சன ஸமானாகாரமான) பரம பக்தியாக மாறியதைக் கண்டு என் வசத்தில் இதயத் தினுள் வந்துவிட்டாய், நீ இனி எங்கே போவது, நான் விட்டால் தானே'' என்பர் பெரியாழ்வார்.

இவ்வாறு பரமனை தன் வயப்படுத்தியவர் விஸ்வாமித்திரர், பொன்னை மீதியில்லாமல் கல்லில் உரைத்துவிட்டால் கல்லே பொன்னாகக் காட்சி அளிக்குமல்லவா? அது போன்று பரமனை இதயத்தில் உரைத்துக் கொண்ட விஸ்வாமித்திரர் பரமனாகவே தெய்வமாகவே தசரதருக்குக் காட்சி யளித்ததில் வியப்பென்ன! உமது வரவே எனக்குக் கல்யாணமாகி விட்டது என்றார்.

சொற்களில் சுகம்

इति हृदय सुखं निशम्य वाक्यं
श्रुति सुख मात्मवता विनीतमुक्तम् ।
प्रथित गुणयशाः गुणैर्विशिष्टः
परमर्षिः परमं जगाम हर्षम् ॥

இதிஹ்ருதய ஸுகம் நிஶம்ய வாக்யம்
ஶ்ருதி ஸுகம் ஆத்ம வதாவினீதம் உக்தம் ।
ப்ரதித குணயசா: ருணை: விசிஷ்ட:
பரமர்ஷி: பரமம் ஜகாம ஹர்ஷம் ॥

வா.ரா. பால. -18.

இதுவரை முனிவரை நோக்கிச் சக்ரவர்த்தி பேசியது அவர் இதயத்திற்கு இன்பமாக இருந்ததாம். பேச்சு பொருளாழமுள்ளதாகவும், சாஸ்த்ர முறையினின்றும் வழுவாததாகவும், உண்மையான அன்பையும், மரியாதைஸ்யயும் வெளிப்படுத்துவதாகவும் இருந்ததினால் முனிவருக்கு ஸுகத்தைக் கொடுத்தது. ச்ருதி ஸுகம்—காதால் கேட்பதற்கு இனிமையாக இருந்தது. அரசர் பேசிய பேச்சில் பெரும்பாலும் மெல்லின எழுத்துக்களே இருந்தமை பற்றிக் கேட்பதற்கு மென்மையாகவே இருந்தது. சொற்களில் மென்மையிருப்பினும் கோபத்தோடு வன்மையாகப் பேசினால் அச் சொற்கள் காதுகட்குக் கொடுமையாக இருக்கும். அப்படியின்றி பக்தி யோடும் அடக்கத்தோடும் பேசும் பேச்சில் வல்லினச் சொற்களும் மென்மை யாகவே காதில் விழும். ஒரு பேரரசரின் பேச்சில் பணிவும் அன்பும் ததும்பு வதை நினைத்து மாமுனிவர் மட்டற்ற மகிழ்ச்சியை எய்தினார்.

ஒருவரின் பேச்சு இதயத்திற்கும் காதுக்கும் இன்பமாயிருந்ததை நடை முறை அனுபவத்தினின்றும் நன்கு அறியலாம்.

ஒரு நண்பர் ஒரு ப்ரமுகரிடம் வந்தார். பிரமுகர் வந்தவரிடம் மிகப் பரிவுடன் குசலப்ரச்னங்களைச் செய்தார். அவர் ஏழ்மையைப் பற்றி மனம் உருகினார். இவனது எலும்பும் தோலுமான உடம்பைப் பார்த்துக் கண்ணீர் வடித்தார். நான்கு நாட்கள் முன்பு உன்னைப் பார்த்திருந்தால் வேண்டிய உதவிகளைத் தாராளமாகச் செய்திருப்பேன். இப்பொழுது வந்தாயே என்றார். இப்படியாக 12 மணி வரை பேசிவிட்டு ''ஏனப்பா சாப்பிட்டாயா? என்ன சாப்பிட்டாய்? வயிறு நிறையச் சாப்பிட வேண்டாமா? வயிறு இப்படி குழைகிறதே பாவம்'' என்றார். வந்தவர் உடனே ''ஸ்வாமீ இன்னும் நான் சாப்பிடவில்லை. உங்களைப் பார்க்கலாமென எண்ணி வந்தேன்'' என்றார்.

பிரமுகர் ''அடபாவமே, வந்ததுமே சொல்லக் கூடாதா! என் வீட்டில் நாங்கள் இருவர்தான் 10 மணிக்கே சாப்பிட்டு விட்டோம். என் மனைவி, தானும் சாப்பிட்டுவிட்டு, பாத்திரங்களைச் சுத்திசெய்து கவிழ்த்து விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பாளே. குழந்தைகள் ஊரில் இல்லாததினால் சாதமும் மிஞ்சாது. ஐயோ! பாவம். எழுந்திரும். இந்தத் தெருவிலேயே கோடி வீட்டில் போய்ப் பாரும். கண்டிப்பாக சாப்பாடு கிடைக்கும். எழுந்திரும்'' என்றார். இங்கு பிரமுகரின் பேச்சு ச்ருதி ஸுகம் (காதுக்கு நன்றாயிருக்கிறது) மனதிற்கோ வருத்தத்தை அளிப்பது.

வந்தவர் பசிவாட்டத்துடன் தள்ளாடிக் கொண்டு கோடி வீட்டுக்குச் சென்றார். வீட்டுக்காரர் இவரைப் பார்த்ததுமே, ''என்ன இந்த வேளையிலே வருகிறீர்! வயிறும், மூஞ்சியும் வாடிக் கிடக்கிறதே! இன்னும் சோறு தின்னவில்லை போலிருக்கிறது. வேகமாக உள்ளே தொலையும். டேய் ராமா! இவருக்கு நிறைய சோத்தைப் போட்டு அனுப்புடா'' என்றார். இலை போட்டாயிற்று. வீட்டுக்காரரும் உள்ளே வந்து அமர்ந்தார். ''ராமா! இன்னும் 2 முட்டை நெய்யைக் குத்துடா. அது நெய்யைக் கண்ணாலேயே கண்டிருக் காதுடா. ஏண்டா தொட்டுக்க ஒன்றும் இல்லையா? நேற்று பண்ணிய பக்ஷணம் இருக்கும். அதைக் கொஞ்சம் தொலை. தயிரை நிறையக் குத்து. நன்னா சாப்பிடட்டும்.'' அதிதி சாப்பிட்டு வெளியே வந்ததும், ''ஓய்! இங்கே வாரும். வேலைக்காரி மெழுகத் துணியில்லை என்றாள். அந்த கந்தலை அவிழ்த்துப் போட்டுவிட்டு இதைக் கட்டிக்கும். தூங்கி எத்தனை நாள் ஆச்சோ. இந்தக் கட்டிலிலே படுத்துத் தொலையும்'' என்றார். தூங்கி எழுந்து மாலையில் ''போய் வருகிறேன்'' என்றார் வந்தவர். ''எங்கே போகிறீர்? போக்கிடம் வேறா உமக்கு? ஒன்றும் அவசரமில்லை. ராத்திரி சாப்பிட்டுத் தூங்கும்'' என்றார் வீட்டுக்காரர். தூங்கி எழுந்து புறப்பட்டார் அதிதி. ''காலையில் எங்கே பரட்டைத் தலையோடு வெளியிலே. எண்ணெய் தேய்த்துக் கொண்டு வெந்நீரிலே குளித்துச் சாப்பிட்டுவிட்டுப் போகலாம். சாப்பிட்டுவிட்டு புறப்படும்பொழுது வழியில் திண்டாடலாமா? டேய் ராமா! செலவுக்கு 5 ரூபாயைத் தொலைடா அவருக்கு'' என்றார் வீட்டுக்காரர். இந்தப் பேச்சு காதுக்கு சுகமில்லை. இதயத்திற்கு சுகம். வயிற்றுக்குச் சுகம். தசரதர் பேச்சோ காதுக்கும், ஹ்ருதயத்திற்கும் சுகம். (இனிவரும் விச்வாமித்ர

பேச்சு இதயத்தையும், மனதையும் பிளக்கக் கூடியது என சொல்லப் போகிறார்.)

हृष्टरोमा महातेजा: विश्वामित्रोऽभ्यभाषत ।
सदृशं राजशार्दूल तवैतद्भुवि नान्यथा ।
महाकुल प्रसूतस्य वसिष्ठ व्यपदेशिन: ।

ஹ்ருஷ்டரோமா மஹா தேஜா: விச்வாமித்ர: அப்யபாஷத ॥
ஸத்ருசம் ராஜ சார்தூல தவ ஏதத் புவி நான்யதா ।
மஹாகுல ப்ரஸூதஸ்ய வஸிஷ்ட வ்யபதேஶின: ॥

வா. ரா. பால. - 19

தசரதரின் உபசரிப்பையும் அழகான பேச்சையும் கேட்டு விஶ்வாமித்ரர் உள்ளடங்கா மகிழ்ச்சியோடு மயிர்ப்பொடிப்ப (மயிர்க் கூச்சம்) ஏற்படப் பேசலானார். ''ராஜ ச்ரேஷ்டரே! இத்தகைய பேச்சு உமக்கே தகும். நீர் பெருங்குடியில் பிறந்தது மட்டுமன்றி வஸிட்டரின் சீடர். (அழகிய சிங்கர் திருவடி, ஸ்ரீ மதாண்டவன் திருவடி, அந்த ஸ்வாமியின் திருவடி என்று சொல்வது போல்) நீர் வஸிஷ்டர் திருவடியாயிற்றே! அன்புக்கும் பண்புக்கும் அதற்கேற்ற பேச்சுக்கும் உறைவிடமன்றோ நீர்! உம்முடைய வீரமோ அனைவருக்கும் நலம் கூட்டுவது'' என்றார்.

இன் தளிர்க் கற்பக நறுந்தேன் இடை துளிக்கும்
நிழலிருக்கை இழந்து போந்து,
நின்று அளிக்கும் தனிக்குடையின் நிழலொதுங்கிக்
குறைஇரந்து நிற்ப நோக்கி,
குன்று அளிக்கும் குல மணித்தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீ கொண்டு
அன்று அளித்த அரசு அன்றோ புரந்தரன் இன்று
ஆள்கின்றது அரசு என்றான்.

க. ரா.பால. - கையடை

இருக்கை: ஸிம்ஹாஸனம் (அரசை), அளிக்கும்: அருள் செய்யும்

''தண்டகாரண்யத்தில் வைஜயந்த நகரில் அரசாண்டு வந்த திமித்வஜன் எனும் பெயருள்ள சம்பராசுரன் குலாசலங்களையொத்த தோள் வலிமை யுடையவன். அவன் மாயா யுத்தத்தில் வல்லவன். அவன் ஒரு சமயம் அஸுரர்களையும் ராக்ஷஸர்களையும் கொண்ட படைகளைத் திரட்டி ஸ்வர்க்கலோகம் சென்று தேவர்களோடு பெரும்போர் புரிந்தான். அப்பொழுது இந்திரன் அமராவதியெனும் தலைநகரில் கற்பக மரத்தின் நிழலிலே சிங்காஸனத்தில் அமர்ந்து ஆட்சி புரிந்து வந்தான். பன்னீர்

தெளிப்பது போன்று கற்பகம் தன் மலர்ந்த மலர்களினின்றும் தேனைத் தெளித்தும், மணம் கமழச் செய்தும் உபசரித்து வந்தது. சம்பரன் தேவர்களை அடித்து விரட்டி மேலுலகையும் கைப்பற்றி இந்திரனோடு கடும் போர் நிகழும் போது, அவனது அபயக் குரலைக் கேட்டுத் தாங்கள் கைகேயியுடன் தேரில் சென்று பெரும் போர் புரிந்து அஸுரர்களை வீழ்த்த, சம்பரன் அஞ்சி நடுங்கி மறைந்து நின்று போரிட்டுப் பின் வாங்க, அவன் மறைவிடம் அறிந்து துரத்தி சம்பரனைப் படைகளோடும், சுற்றத்தோடும் கொன்று குவித்து தேவருலகைக் கைப்பற்றினீர். பின்னர் உம் வெண்கொற்றக் குடையின் நிழலிலே புகலடைந்த இந்திரனுக்குப் பெருந்தன்மையுடன் ஸுவர்க்கத்தின் அரசாட்சியை மீட்டுக் கொடுத்தீர். அதனால்தான் இன்று இந்திரன் த்ரிலோகாதிபதியாயிருந்து பெருமையுடன் ஆண்டு வருகிறான். இவ்வாறு தனக்கென வாழாது பிறர் நலம் பேணும் உம்மிடம் யான் எதற்காக வருவேன்? தாமே அறியீரோ?'' என்றார் முனிவர்.

என்னனைய முனிவரரும், இமையவரும், இடையூறு
ஒன்று உடையர் ஆனால்
பல்நகமும் நகுவெள்ளிப் பனிவரையும், பாற்கடலும்
பதுமபீடத்,
தன்நகரும், கற்பக நாட்டு அணிநகரும் அணிமாட
அயோத்தி என்னும்,
பொன் நகரும் அல்லாது புகல் உண்டோ இகல் கடந்த
புலவு வேலோய்!

க. ரா. பால. - கையடை

பல் நகமும் நகு: பல மலைகளின் அழகையும் (பரிஹஸிக்கும்)

''வேலாயுதத்தைக் கொண்டே பகைவரைப் போரில் வெல்லும் திறனுடைய மன்னரே! அரும்பெரும் தவம் புரிந்து ப்ரஹ்மர்ஷி பட்டம் பெற்ற என்னைப் போன்ற முனிவர்களும், தேவர்களும் (தங்கட்கு) ஏதாவது துன்பங்கள் நேரிடின் - மலைகள் அனைத்தையும் பரிஹஸித்து, அவமதிக்கும் வெள்ளியே உருவான கைலாய மலையும் (அதிலுள்ள சிவனும்) திருப்பாற் கடலும் (இதன் கண் துயிலும் திருமாலும்) ஸத்ய லோகமும் (அதிலுள்ள பத்மாஸனனான நான்முகனும்) கற்பக மரத்தை தன்னகத்தே கொண்ட அமராவதியும் (இந்திரனும்), அழகிய மாளிகைகளையுடைய இவ்வயோத்தி யும் (நீயும்) அல்லாது வேறு புகலிடம் தான் உண்டோ? இவற்றுள் மிக அருகிலிருக்கும் அயோத்தியை (உம்மை) விட்டால் எங்களுக்கு வேறு யார் கதி?'' என்றதும், தசரதர் கரை செய்ய அரியதொரு (எவராலும் அளவிட முடியாத) பேர் உவகைக் கடல் பெருகத் தன் கரங்களைக் கூப்பி, முனிவரின் திருமுகம் நோக்கி, யான் அரசு எய்தியிருந்த பயன் எய்தினன். இனி தங்களுக்குச் செய்வது அருளுக' என வினவினான்.

'வேண்டும் ராமன்'

अहं हि नियममातिष्ठे सिद्ध्यर्थं पुरुषर्षभ ।
तस्य विघ्नकरौ द्वौ तु राक्षसौ कामरूपिणौ ।
व्रते मे बहुशः शीर्णे समास्यां राक्षसौ इमौ ।
मारीचश्च सुबाहुश्च वीर्यवन्तौ सुशिक्षितौ ।
तौ मांस रुधिरौघेण वेदिं तं अभ्यवर्षताम् ।
न च मे क्रोधमुत्स्रष्टुं बुद्धिर्भवतु पार्थिव ।
तथा भूता हि सा चर्या न शापः तत्र मुच्यते
स्वपुत्रं राजशार्दूलं रामं सत्यपराक्रमम् ।
काक पक्षधरं शूरं ज्येष्ठं मे दातुमर्हसि ।
शक्तोह्येषः मया गुप्तः दिव्येन स्वेन तेजसा ।
राक्षसाः ये विकर्तारः तेषामपिविनाशने
श्रेयश्चास्मै प्रदास्यामि बहुरूपं न संशयः ।
त्रयाणामपि लोकानां येन ख्यातिं गमिष्यति ॥
न च पुत्रकृत स्नेहं कर्तुमर्हसि पार्थिव ।

அஹம் ஹி நியமம் ஆதிஷ்டே ஸித்யர்த்தம் புருஷர்ஷப ।
தஸ்ய விக்னகரௌ த்வௌ து ராக்ஷஸௌ காமரூபிணௌ ॥
வ்ரதே மே பஹுஶ: ஶீர்ணே ஸமாப்த்யாம் ராக்ஷஸௌ இமௌ ॥
மாரீசஶ்ச ஸுபாஹுஶ்ச வீர்யவந்தௌ ஸுஶிக்ஷிதௌ ।
தௌ மாம்ஸ ருதிரௌகேண வேதிம் தம் அப்யவர்ஷதாம் ॥
நசமே க்ரோதம் உத்ஸ்ரஷ்டும் புத்தி: பவதி பார்த்திவ ।
ததாபூதாஹி ஸா சர்யா ந ஶாப: தத்ரமுச்யதே ॥
ஸ்வபுத்ரம் ராஜஶார்தூலம் ராமம் ஸத்ய பராக்ரமம் ।
காக பக்ஷதரம் ஶூரம் ஜ்யேஷ்டம்மே தாதும் அர்ஹஸி ॥
ஶக்தோஹிஏஷ: மயாகுப்த: திவ்யேன ஸ்வேன தேஜஸா ।
ராக்ஷஸா: யே விகர்த்தார: தேஷாமபி விநாஶனே ॥
ஶ்ரேய: ச அஸ்மை ப்ரதாஸ்யாமி பஹுரூபம் நஸம்ஶய: ।
த்ரயாணாம் அபி லோகானாம் யேந க்யாதிம் கமிஷ்யதி ॥
நச புத்ரக்ருத ஸ்னேஹம் கர்தும் அர்ஹஸி பார்த்திவ ॥

விஸ்வாமித்ரர் ''மன்னர் மன்னா! நான் ஒரு வேள்வியைத் துவக்கி யிருக்கிறேன். பயனைப்பெற யாகதீக்ஷையை மேற்கொண்டிருக்கிறேன். அதற்கு இரு அரக்கர்கள் இடையூறு செய்கின்றனர். ஒருவன் ஸுபாஹு, மற்றொருவன் மாரீசன். இருவரும் நினைத்த உருவத்தை எடுக்க வல்லவர்கள்; நல்ல வலிமையுடையவர்கள்; நன்கு போரிடப் பயின்றவர்கள். நான் ஹோமம் செய்யும் பொழுது மாமிசத்தையும் இரத்தத்தையும் கொணர்ந்து யாகவேதியில் கொட்டுகின்றனர். அது மழை பொழிவது போன்று யாக பூமியை வெள்ளக்காடாக்குகிறது. எனவே தூய்மை கெடுவதினால் வேள்வியை மேலே தொடர முடியவில்லை. நீர்தான் தவவலிமை பெற்றவராயிற்றே. சபித்து ஒரு கணத்தில் அவர்களைக் கொன்றுவிடலாமே, எனக் கேட்காதீர், அது சபிப்பதற்குரிய காலம் அன்று, காமம் கோபம் முதலியவற்றை அடக்கி, ஸத்வகுணம் மேலிட, மந்த்ரங்களைப் பிழையறச் சொல்லிக் கொண்டு, மந்திரங்களின் பொருளை நினைத்த வண்ணம் மந்திரத்தில் வரும் தேவதைகளைச் சரீரமாக உடைய ஸர்வநியாமகனான ஸ்ரீமந்நாராயணனே ஹவிஸ்ஸைப் பெறுபவனாக நினைத்து ஹோமம் செய்ய வேண்டும். இவ்வாறு மனதை ஒரு நிலைப் படுத்திப் பரமனிடம் செலுத்தியிருக்கும் பொழுது இவ்வற்பர்களை சபிக்க வேண்டுமென்கிற எண்ணமே தோன்றாதே. நான் என்ன செய்யட்டும்? எனவே உமது புதல்வனை எனக்கு உதவியாக அனுப்பும்'' என்றார். ''சிறு குடுமியை வாரி அழகாக முடிந்து கொண்டிருப்பினும் சூரன் அவன். புதல்வர்களுள் மூத்தவன், அந்த ராமனை எனக்குக் கொடுப்பீராக'' என்றார். மன்னரின் மனதில் அச்சமும் தயக்கமும் இருப்பதை முகத் தோற்றத்தி னின்றும் அறிந்தவராய் ''சிறுவனாயிற்றே எனக் கவலை கொள்ளாதீர். எனது தவத்தின் மஹிமையினால் அவனைப் பாதுகாப்பேன். இன்னல் புரியும் அரக்கர்களை அழிக்கும் ஆற்றல் உடையவன் உம் புதல்வன். என்னோடு அனுப்பினீராகில் ராமனுக்குப் பல நன்மைகளும் பெருமைகளும் வந்து சேரும்.

''விளையாட்டாகவே விஸ்வாமித்ர யாக ஸம்ரக்ஷணம் செய்தவன்'' ''கௌமாரகேளி கோபாயித கௌசிகாத்வர:'' என்று ரகு வீரகத்யத்தில் பேசப் படுகிறது. மேலும் அஹல்யா சாபவிமோசகன், கல்லைப் பெண்ணாக்கிய வன். சிவதனுஸ்ஸை ஒடித்தவன், ஸீதாபதி என மூவுலகும் புகழும் பெருமையைப் பெறப்போகிறான்'' என்பதை மறைமுகமாகச் சொன்னார். இங்கு ராமனைத் தபோபலத்தினால் யான் பாதுகாப்பேன் என்றார். இத்தகு தவப்பெருமையுடையவர். அரக்கர்களினின்றும் யாகத்தைத் தானே காத்துக் கொள்ளக் கூடாதோ என ஐயம் நமக்கு எழலாம். அரக்கர்களை அழிப்பதி னால் தபோபலம் குறைந்து கொண்டே போகும். யஜ்ஞ ஸ்வரூபமான விஷ்ணுவை (ராமனை)க் காப்பதினால் தபோபலம் வளர்ந்து கொண்டே போகும். வேள்வியினால் ஆராதிக்கப்படும் பரமனை அருகில் இருத்தி யாகத்தைச் செய்வது பெரும் பாக்யமல்லவா என்று கருதினார்.

''தருவனத்துள் யான் இயற்றும் தகை வேள்விக்கு
இடையூறா, தவம் செய்வோர்கள்
வெருவரச் சென்று அடை காம வெகுளி என
நிருதர் இடை விலக்காவண்ணம்,
'செருமுகத்துக் காத்தி' என, நின் சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதி'' என உயிர் இரக்கும்
கொடுங் கூற்றின், உளையச் சொன்னான்.

க. ரா. பால. - கையடை.

வெருவர: அஞ்சும்படி, நிருதர்: அரக்கர்கள், செருமுகத்து: யுத்தத்தில், கொடும் கூற்று: கொடிய யமன், உளைய: வருந்தும்படி.

விஸ்வாமித்ரர் இமயத்தில் தவம் செய்து கொண்டிருந்தவர் வேள்வியைச் செய்வதற்காக ஸித்தாச்ரமத்திற்கு வந்தார். ஸித்தாச்ரமம் நாராயணன் வாமனாவதாரம் செய்த இடம். இது மங்களத்தை, நற்பயனை அளிக்கும் இடமாகும். இதை 'தருவனம்' என்றார். மரங்கள் அடர்ந்து பலனைத் தருகின்ற வனம். இங்கு யாகத்தைச் செய்யப் போகிறேன். இதற்குத் தாடகையின் பிள்ளைகளான ஸுபாஹு மாரீசர்கள் இடையூறு செய்கின்றார்கள். பகவத் தியானமாகிய தவத்தினைச் செய்பவர்கட்கு விரோதிகள் ஆறு: காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம். இவற்றுள் காமமும் கோபமும் கொடியவை. ஆசை கொடியது. அது நிறைவேறாத போது கோபம் வரும். இதனால் அறிவு மயங்க தியானம் உருக்குலைந்து விடும். இதை விஸ்வாமித்ரர் அனுபவத்தில் கண்டவர். இவ்விரண்டும் உட்பகைவர்கள் போன்று மிகக் கொடியவை, புறப்பகைவர்களான இவ் விருவர். (ஆக அகயோகமாகிய தவத்திற்கு வைரிகள் மூவர்: காமம், கோபம், மயக்கம். கோபத்திற்கும் மயக்கத்திற்கும் காமம் தாயாகும். இவ்வாறே புறவேள்வியில் தாடகையும், இவள் பிள்ளைகளான ஸுபாஹுவும் மாரீசனும்) இவர்களால் வேள்விக்குத் தீங்கு வராதபடி காத்திட ஸ்ரீராமனை அனுப்ப வேண்டும், என்றார்.

நேராக இராமனைக் கொடும் என்று கூறாது முதலில் நின் சிறுவர் நால்வரினும் என்றார். நால்வரில் யாரையோ என நினைத்தார் தசரதர். பின்னர் கரிய (கருப்பான) பிள்ளை என்றார். பரதனும் கருப்பானபடியால் அவனைக் கேட்கிறாரோ என நினைத்தார். பின்னர் செம்மல் என்றார். செம்மல் என்றால் இறைவன். தலைமகன், அரசன் என்று பொருள். ராமனைக் கேட்கிறார் என அறிந்தார். ராமனோ இவருக்கு உயிர். அவனைத் தந்திடுதி எனக் கட்டளை யிடுவது போல் கூறினாராம். இது யமன் ''உயிரைக் கொடு'', எனக் கேட்பது போல் இருந்தது. (இங்கு வால்மீகத்திலும் ஸ்வபுத்ரம், காகபக்ஷதரம், சூரம்,

ஜ்யேஷ்டம், ராமம் என அன்வயப்படுத்தி கடைசியில் ராமம் எனக் கொள்ள வேண்டும். இதையே கம்பரும் நின் சிறுவர் எனத் தொடங்கி முடிவில் செம்மல் என்றார்.)

தசரதரின் முகத் தோற்றத்தினின்றும் ''ராமனைக் கொடுக்க மனமில்லை. இச் சிறுவயதில் பிறரோடு காட்டிற்கு அனுப்பினால் என்னென்ன தீங்குகள் விளையுமோ'' என அஞ்சுகிறார் என்பதையும் அறிந்து முனிவர் பேசலானார். ''அரசே! மகனிடத்தில் இவ்வளவு பாசம் வைப்பது பிறருக்குத் தகும், உமக்குத் தகாது, ஏனெனில் நீர் ஸாமான்யமான நாட்டுப் பிரஜை அன்று. நாட்டு மக்களைக் காக்கும் கடமையுடைய மன்னர் ஆவீர். (இக் கடமையை உணர்த்தவே ராஜன் என விளிக்காமல் பார்த்திவ: என்றார்—பூமியை ஆளுபவன் என்று பொருள்)'' எனவே வேள்வியைக் காக்க ராமனை அனுப்பும். அவனை யார் என நினைத்தீர்? எனக்கல்லவோ அவன் பெருமை தெரியும். அவனை நீர் அறியீர், சொல்லுகிறேன் கேளும்.''

'அஹம் வேத்மி'

अहं वेद्मि महात्मानं रामं सत्यपराक्रमम् ।
वसिष्ठोऽपि महा तेजाः ये चेमे तपसि स्थिताः ॥
यदिह्यनुज्ञां काकुस्थ ददते तवमन्त्रिणः ।
वसिष्ठप्रमुखाः सर्वे राघवं मे विसर्जय ॥

அஹம் வேத்மி மஹாத்மானம் ராமம் ஸத்ய பராக்ரமம் ।
வஸிஷ்ட: அபி மஹாதேஜா: யே ச இமே தபஸி ஸ்திதா: ॥
யதிஹி அனுஜ்ஞாம் காகுத்ஸ்த்த! தததே தவ மந்த்ரிண: ।
வஸிஷ்ட ப்ரமுகா: ஸர்வே ராகவம்மே விஸர்ஜய ॥

வா. ரா. பால. - 19

'அஹம் வேத்மி': என்றதன் கருத்து ''இந்த ராமன் யார்? எத்தகைய வன் என்பதை நானும் உமது குல குருவான வஸிஷ்டரும், இங்குள்ள முனிவர்களுமே அறிவர். பிறர் எவருமே அறியார்.''

''நானே ராமனை அறிவேன். நீர் அறியீர்''. ஏன்? சொல்லுகிறேன் கேட்பீராக. ''நான் ஞான வ்ருத்தர்களான (அறிவில் முதிர்ந்தவர்களான) பல பெரியோர்களை அணுகி ''சிஷ்ய: தே அஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்'' ''நான் உம்மிடம் சீடனாக மாணாக்கனாக வந்திருக்கிறேன். எனக்குத் தத்துவ ஞானத்தை உபதேசியும்'' என அவர்கள் திருவடிகளில் சரணடைந்து வணங்கி அறிவைப் பெற்றவன். நீரோ நாட்டு மக்களால் வணங்கிப் பாராட்டப் படுபவர். பிறரை வணங்கியவர் அல்லர். எனவே நுண்ணிய அறிவைப் பெற உமக்கு வாய்ப்பில்லை.''

''நான் ராஜஸ, தாமஸ குணங்களினால் ஏற்படும் இன்னல்களை அனுபவித்து அவற்றை ஒதுக்கி ஸாத்விகத்தை வளர்த்ததால் நேர்மையான எண்ணம் கொண்டவன். எண்ணத்திற்கேற்ப வேஷத்தையும் உடையவன்— அதாவது தலையில் சடைமுடியும், இடுப்பில் மரவுரியும் அணிந்திருப்பவன். நீரோ ராஜஸ, தாமஸ குணங்களுக்கு வயப்பட்டு, பகைவரை அழிப்பதும், பிறர் நாட்டை வென்று ராஜ்யத்தின் எல்லையை விரிவு படுத்துதலுக்கேற்ற வேஷத்தை அதாவது—தலையில் கிரீடம், மகுடம், இடுப்பில் பட்டாடை முதலியவற்றை தரித்திருப்பவர்''.

''நான் பல்லாண்டுகள் காட்டில் தனிமையில் யோகத்தில் ஈடுபட்டு ஜீவாத்ம தத்வத்தையும், பரமாத்ம தத்வத்தையும் ஸாக்ஷாத்கரித்து கண்களால் பார்ப்பது போல் பார்த்தறிந்த தத்வஞானியாவேன். நீரோ, நாட்டு மக்களை நல்வழிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு, அறிவைப் பெருக்கிக் கொள்ளாது கருமமே கண்ணாகத் திகழ்பவர். நானும் மற்ற முனிவர்களும் ராமனுக்குக் கர்ப்பமாக (கருவாக)த் திகழ்பவர்கள். ஒரு பெண் தனது கருவை அதற்கு எவ்விதத் தீங்கும் நேராது, கண்ணும் கருத்துமாக எங்ஙனம் காப்பாற்று வாளோ, அதே போன்று எங்களைக் காப்பாற்ற அவதரித்தவன் ராமன். நீரோ, ராமனைக் கர்ப்பத்தினின்றும் பிறந்தவனாகக் கருதி அவனைக் காப்பதற் குரிய முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்.''

''நான் யோக க்ரமங்களைக்—கர்ம யோகம், ஞான யோகம், பரபக்தி யோகம், பரஞான யோகம், பரமபக்தி யோகம், இவற்றை அறிந்தவன். நீரோ சிற்றின்பங்களை நுகர்வதற்குரிய யோக கர்மங்களை அறிந்தவர். நான் பேரின்பத்தைப் பெறுவதற்குரிய மோக்ஷ காமேஷ்டியைச் செய்ய எண்ணி யஜ்ஞபதியான ராமனை அழைக்க வந்திருக்கிறேன். நீரோ மக்கட்பேற்றை (சிற்றின்பத்தை) விரும்பி புத்ர, காமேஷ்டியைச் செய்தவராவீர்.''

''அரசே' நான் அறம் பொருள், இன்பம், வீடு எனப்படும் நான்கு வகை புருஷார்த்தங்களில் முதலும் கடையுமான தர்மத்திலும் மோக்ஷத் திலும் ஈடுபட்டவன். நீரோ இடையிலுள்ள அர்த்தத்திலும் காமத்திலும் ஈடுபட்டவர். நான் யோகத்தின் வலிமையினால் மனதாகிற உள் கண்ணால் கண்டு உணர்ந்து களிக்கின்றவன். (பரமனைக் காண வேண்டு மாயின் உட்கண்ணாலே, ஞானக்கண்ணால் தானே காண முடியும்) நீரோ புறக் கண்ணாலே (மாமிசக் கண்ணாலே) தானே பார்ப்பீர். அது வெளித் தோற்றத் தைத் தானே காட்டும். உண்மையைத் தத்துவத்தைக் காட்டாதே. புல்லும் கையுமாயிருக்கிற யான் அவனை இன்னாரென அறிவேன். ஏன்? பவித் திரத்தை தரித்துக் கொண்டு ப்ராணாயாமம் செய்தும், வேள்விகள் பல புரிந்தும் தூய்மையான மனதைப் பெற்றிருப்பவனானபடியாலே அகக் கண்ணாலே யான் அறிய முடியும். நீரோ கையில் செங்கோலையும் வில்லையும் உடையவர். இதனால் நல்லோரை ஆட்கொள்வதும், தீயோரை அடக்கி ஆள்வதுமான செயலில் ஈடுபடும் உமக்குப் புறக்கண்களால்

பார்க்கப்படும் பொருளே உண்மையாகத் தோன்றும். பெரியோர்களின் ஆஸனத்தின் கீழும் அடிக்கீழும் பணிவுடன் அமர்ந்து பழகும் யான் உண்மைப் பொருளை அறிய முடியுமே ஒழிய ஸிம்ஹாஸனத்தின் மேலே இறுமாந்து அமரும் நீர் எங்ஙனம் இவனை அறிய முடியும்? ஆசாரியன் பக்கலிலே குனிந்து கேளாதவராயிற்றே. எங்ஙனம் நீர் அவனை அறிவீர்'' என்று முனிவர் தன் தபோபலத்தில் வலிமையை விளக்கினார்.

தசரதர்: ''முனிவரே! ராமனை, என் குமாரனைப் பற்றி எனக்குத் தெரியாது என்கிறீரே. நான் இவன் பிறந்ததிலிருந்து ஒரு கணம்கூடக் குழந்தையை விட்டுப் பிரியாது வாழ்ந்து வருபவனாயிற்றே. இந்தச் சிறுவயதிலேயே அரக்கர்களோடு சண்டையிட்டு வெல்லும் திறன் அவனுக்கு இருந்தால், பத்துப் பதினைந்து ஆண்டுகளாகக் கூடிக் குலாவி, பேசிப் பழகி வரும் என்னிடம் சொல்லாமலா இருப்பான்? வெளியில் எங்கு சென்றாலும் அரண்மனைக்குத் திரும்பியதும் அன்றாடம் நிகழ்ந்தவற்றை என்னிடம் சொல்லிவிட்டுத்தானே தூங்குவான்'' என்றான்.

முனிவரோ, ''அரசே! அவனும் தன்னுடைய தன்மையை அறிய முடியாதவனாயிற்றே. அவன் ப்ரஹ்மா, ருத்ரன், இந்திரன் ஆகியோருக்கும் கூட மனதினால் நினைத்தற்கும் அரியனாயிற்றே! அவன் தன்னை ஸர்வஜ்ஞனாக நினைத்து ஒரு ஆசாரியன் பக்கலிலே குனிந்து அடிபணிந்து கேளாமையாலே தன்னைப் பற்றி அறியாதவனே. நானோ மஹான்கள் பல்லோரை அணுகி அவனைப் பற்றி அறிந்தவன். எனவே உமது குமாரனைப் பற்றிச் சொல்லுகிறேன் கேளும்''.

'மஹாத்மா'

''நான் என்று நம்மைச் சொல்லிக் கொள்கிறோம். அந்த நான் என்பது சரீரமா அல்லது வேறு பொருளா? எனது கை எனது கால் என்னும்போது கை கால் முதலிய உறுப்புக்கள் சரீரத்தினுடையதுதானே. ஆகவே நான் என்பது சரீரம் (உடல்) தான் என்பர் சிலர். அது தவறு. இந்த உடல் யாருடையது என்று ஒரு சிறுவனைக் கேட்டால் கூட அவன் தயங்காது என் உடம்பு என்பான். இதிலிருந்து சரீரம் முழுவதும் ஒருவனுக்குச் சொந்தம் என ஏற்படுகிறது. அவன் தான், நான் எனும் ஜீவாத்மா. இந்த ஜீவாத்மாவிற்கு இந்த உடம்பு (கை, கால் முதலிய உறுப்புக்களுடன் கூடியது) சரீரம் என ஏற்படுகிறது. சரீரமானது உள்ளிருக்கும் ஜீவாத்மா இட்ட வழக்காக செயல்படுகிறது. ஆத்மா 'போ' என்றால் சரீரம் நடந்து செல்லும். உட்கார் என நினைத்தால் உட்காரும். இது போல உலகிலுள்ள ஜீவாத்மாக்கள் எல்லாம் பரமாத்மா வான ராமன் இட்ட வழக்காக செயல்படும். ஆகவே எல்லா ஆத்மாக் களையும் இந்த ராமன் சரீரமாகக் கொண்டவன்'' என்றார்.

''இவன் எனது யாகத்திற்கு இடையூறு செய்கிற தாடகை, ஸுபாஹு, மாரீசன் மற்றும் யார் வந்தாலும் 'வேள்விக்கு இடையூறு செய்பவர்களைக் கொன்றே தீர்வேன்' எனும் மனத்திண்மையை உடையவன்.''

''ராமன் நம்மைப் போன்ற ப்ராக்ருதமான மாம்ஸம், ரத்தம், எலும்பு களோடு கூடிய சரீரத்தை உடையவன். அரக்கர்கள் அவனை அடித்துக் கடித்துத் துன்புறுத்தி உயிருக்கே ஆபத்தை விளைவிப்பர் என அஞ்சுகிறீர் போலும்! அவ்வாறு அஞ்சாதீர். இவனுடைய திருமேனி அப்ராக்ருதமானது. தண்ணீரில் பால் கலந்திருப்பது போன்று சுத்த ஸத்வ மயமான மாசுணாச் சுடருடம்பு ப்ராக்ருத மேனியில் கலந்திருக்கிறது. இத்திருமேனிக்கு அரக்கர் எத்தகைய தீங்கையும் செய்யவல்லரல்லர்.''

''ராமனுடைய ஸ்வபாவம் (தன்மை) தன்னை வந்து அடைந்தோர்க்கு எவராலும் எவ்விதத் தீங்கும் வராதபடிக் காக்கக் கூடியது. நான் உம்மோடு பேசியதை அறிந்தால், நான் யாகத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன், என்று கூறி விடை பெற்று என்னுடன் புறப்படுவான்.''

''இவனை மஹாத்மா என்றேன், அவன் பரமாத்மாவும் ஆவான். அதாவது இவனைக்காட்டிலும் மிக்காரை—ஒத்தாரை யாரும் காண முடியாது. இவனுடைய உத்ஸாஹம் அளவிடற்பாலது. நல்லோரைக் காப்பதிலும், தீயோரைக் களைவதிலும் மிகுதியான உத்ஸாஹம் உடையவன். உங்கள் வம்சத்தின் முதல்வனான கதிரவனைப் போன்று பகைவர்களாகிய தண்ணீரை வற்ற அடிப்பதில் வீரனாவான். இவனுக்குக் கோபம் வரின் தன் கண்ணொளியினாலேயே (பார்வையினாலேயே) கட்டைகளைத் தீ பொசுக்குவது போன்று பகைவர்களைச் சுட்டெரித்து விடுவன். அரக்கர்கள் மாயை உடையவர்களாயினும் தான் இருந்த இடத்திலிருந்தே பகைவர்களை முடிக்கும்படியான உபாயத்தை (வழியை) வகுக்கவல்லவன். புயற்காற்றில் பஞ்சு படும்பாடுபோல தீயோரை விரட்டியடிப்பவன். அதே நேரத்தில் நல்லோர்களைப் ப்ராணவாயு போன்று உயிர்ப்பிக்கவல்லவன்'' என்றார்.

மஹாத்மா எனும் சொல்லிலுள்ள ஆத்ம சப்தத்திற்கு நிகண்டுப்படி ஜீவன், துணிவு, சரீரம், ஸ்வபாவம், பரமாத்மா, முயற்சி, சூரியன், அக்னி, அறிவு, காற்று என பத்துவகைப் பொருளைக் கொண்டு பல கருத்துக்களைப் பெரியோர் கூறுவர். அது இங்கே சுருக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதேபோன்று ஸத்ய பராக்ரமம் என்பதற்கும் பல பொருள்களைக் கூறுவர்.

'ஸத்ய பராக்ரமன்'

ஒரு ஸமயம் நான்முகனிடமிருந்து நான்கு வேதங்களையும் பறித்துக் கொண்டு (ஸத்யத்தில்) ஸமுத்ர ஜலத்தில் மூழ்கி மறைந்த மது, கைடபர்

எனும் அஸுரர்களைத் தேடி ஆக்ரமித்துக் கொன்று வேதங்களை மீண்டும் ப்ரஹ்மாவுக்கு உபதேசித்தவனும் இவனே. ஹிரண்யாக்ஷன் பூமியைப் பாயாகச்சுருட்டி (ஸத்யத்தினுள்) ஸமுத்ர ஜலத்தினுள் ஓடி மறைந்தபொழுது வராஹாவதாரம் எடுத்து ராக்ஷஸனைக் கொன்று ஜலத்தினின்றும் தன்னை நேசிக்கும் பூதேவியை (ஆக்ரமித்துக் கொணர்ந்த) ஸ்வீகரித்த பூவராஹனும் ராமனேயாம்.

ஸத்ய ஸ்வரூபனான நாராயணனிடத்தில் (பரனான) பக்தி பூண்டவனான ப்ரஹ்லாதாழ்வானின் பொருட்டு ''தூணிலும் உளன்'' எனும் அவன் வார்த்தையை மெய்ப்பிப்பதற்காக நரஸிம்ஹனாக அவதரித்து ஹிரண்ய கசிபுவை ஆக்ரமித்தவனும் (கொன்றவனும்) இந்த ராகவஸிம்ஹனே.

வானவீதியிலே விமானத்தில் சென்று கொண்டிருந்த கந்தர்வ தம்பதிகளைப் பார்த்து, ''எதையும் செய்யவல்ல தவ வலிமையைப் பெற்ற நம் புருஷனும் இம்மாதிரி இருந்தாலென்ன'' என்று நினைத்துத் தாமதமாக நீர் கொணர்ந்த தன் மனைவி ரேணுகாவைக் கொல்லும்படி ஜமதக்னி முனிவர் கட்டளையிட்ட பொழுது மூத்த மகன் தயங்கியவளவில் இளையவனான பரசுராமன் தன் தந்தை சொல்லை மந்திரமாகக் கொண்டு பெற்ற தாயைக் கொன்று பின்னர் தந்தையிடமே வரம் பெற்று அவளை உயிர்ப்பித்தான். இப்பரசுராமனே எதிர்காலத்தில் மிதிலையிலிருந்து ஸீதையுடன் ராமன் அயோத்தி வரும்பொழுது எதிர்கொள்ளப் போகிறான். அப்பொழுது பரசுராமனின் சக்தியை (ஆற்றலை) இந்த ராமனே (ஆக்ரமிக்க) ஸ்வீகரிக்கப் போகிறான்.

ஸத்ய ஸ்வரூபனான கண்ணனையே காதலித்த ருக்மிணியை சிசுபாலன் முதலியவர்களை ஏமாற்றி ஆக்ரமித்தவன் (ஸ்வீகரித்தவன்). ''இன்று போய் போர்க்கு நாளை வா'' என்று கூறி தன்னுடைய ஸத்யமான (உண்மையான) பராக்ரமத்தை (போரில் களைத்து வலிமை குன்றிய எதிரியைக் கொல்லாது) காட்டப்போகிறவன். வாமனன் வடிவு ஒன்றைக் காட்டி மூவடி மண் இரந்து த்ரிவிக்ரமனாய் ஓங்கி உலகு அனைத்தையும், வேறு வடிவில் அளந்தது போன்று சொல்வது ஒன்று செய்வது மற்றொன்று என்று இல்லாமல் என்றும் மாறாத நித்யமான பராக்ரமம் (வீரம்) முதலிய கல்யாண குணங்களை உடையவன்.

எனவே ''இவ்வாறு மஹாத்மாவும், ஸத்ய பராக்ரமனுமான ராமனைச் சிறிதும் கவலையின்றி என்னோடு அனுப்புவீர்'' என்றார் முனிவர்.

விஶ்வாமித்ரர், மறைகள் புகலும் ஸூக்ஷ்மமான தத்வார்த்தங்களை எல்லாம் ஒரு வேதாந்த ஆசார்யனாக எதிரே தோன்றி உபதேசித்தும் தசரதனின் மனம் தெளிவு பெறவில்லை. மாறாக பாசமும், அச்சமும், கலக்கமும் விஞ்சியவனாய் மயங்கினான்.

விஸ்வாமித்ரர்: 'அரசே! உமக்கு எம் வார்த்தையில் நம்பிக்கை இல்லா விடில் வஸிஷ்டரைக் கேளும். அவர் அனுப்பலாம் என்றும், நான் சொன்ன தெல்லாம் உண்மையென்றும் கொள்வாரேயாகில் ராமனைக் கொடும். வஸிஷ்டர் உமக்கு குருவாவார். உமது குலத்திற்கே அவர் தானே குரு. அவர் ஸரஸ்வதியின் கணவனான ப்ரஹ்மாவினுடைய புதல்வர். பல்லாண்டுகள் யோகத்தைச் செய்து எதையும் அறிய வல்லவர். ஸர்வலோக சரண்யனான புருஷோத்தமன் உள்பட அனைவருமே தம் காலில் குனிந்து விழுந்து வணங்கும்படியான ஏற்றமுடையவர். நானே அவர் வாயால் ப்ரஹ்மர்ஷி எனச் சொல்ல வேண்டுமென விரும்பி தவம் கிடந்தவன். நான் வஸிஷ்ட ருடைய பசுவைக் கவர்ந்தவன். அதற்காக அவரோடு போரிட்டவன். அவர் குமாரர்களைக் கொன்றவன். அவருக்கு நான் விரோதி. ஆயினும் அவர் மஹாதேஜஸ்வியானபடியால் பொய் சொல்ல மாட்டார். எனவே அவரைக் கேட்டு முடிவு செய்யும். ஆசார்யனைக் கலந்து கொண்டு முடிவு செய்வதே முறையாகும். நீரே ஒரு முடிவுக்கு வருவது உசிதமல்ல'' என்றார்.

தசரதரோ தானே ஒரு முடிவுக்கு வருவதுதான் உசிதம் எனக் கருதினார். ஏன்?

''यत् ब्राह्मणश्च अब्राह्मणश्च
प्रश्नं एयातां ब्राह्मणाय अधि ब्रूयात्''
ब्राह्मणार्थे गवार्थेवा सम्यक् प्राणान् परित्यजेत् ॥

''யத் ப்ராஹ்மணஸ்ச அப்ராஹ்மணஸ்ச
ப்ரஸ்னம் ஏயாதாம் ப்ராஹ்மணாய அதிப்ரூயாத்''
''ப்ராஹ்மணார்த்தே கவார்த்தேவா
ஸம்யக் ப்ராணான் பரித்யஜேத்''

யஜுர் வேதம் - 2 காண்டம்

''ப்ராஹ்மணர்கட்கும் மற்றோருக்கும் இடையே விவாதம் ஏற்படின் ப்ராஹ்மணர் பக்கம் தான் பேச வேண்டும். அந்தணனுக்கோ பசுவிற்கோ தீமை ஏற்படின், அவர்கட்காக உயிரை விட்டாவது உதவவேண்டும் என்பது சாஸ்த்ரம். எனவே வஸிஷ்டருக்கு, விரோதியாயினும் (விச்வாமித்ரரிடம்) உம்மிடம் தானே பக்ஷபாதம் இருக்கும்'' என்றார்.

''சக்ரவர்த்தியே! வஸிஷ்டரை விடும். அவரைக் கேட்க வேண்டாம். இங்கே குழுமியுள்ள மஹர்ஷிகளைக் கேளும். இவர்கட்கு உம்மோடு எவ்விதத் தொடர்பும் கிடையாது. எதிர்பாராது வந்தவர்கள், ராமனைப் பற்றி அறியக்கூடிய தவவலிமை பெற்றவர்கள். உண்மையான பரமைகாந்திகள். இன்னார் என்று ஊர், பேர், குலம், கோத்ரம் சொல்ல முடியாதபடி இருப்பவர்கள். எனவே உம்மிடம் சிறிதும் தாக்ஷிண்யம் அற்றவர்கள்.

இவர்களின் சிறப்பைப் பற்றி நான் சொல்ல வேண்டுவதில்லை. பார்த்தாலே தெரியும், நரைதலையும், மெலிந்த மோவாயும், ஒட்டின கன்னமும், சுருங்கின தோலும், உலர்ந்த வடிவும், எண்ணுகின்ற விரலும், ஜபிக்கின்ற வாயும், பரமனையே நினைத்தும் கண்டும் மகிழ்வதால் வடிகிற ஆனந்தக் கண்ணீரும், மயிர்க்கூச்சலிட்ட மேனியுமாய் இருக்கும் இவர்களின் இருப்பே யாருக்கும் தாக்ஷிண்யப்படாதவர்கள் என அறிவிக்குமே!''

''சிறியன் என்று இளஞ்சிங்கத்தை இகழேல் கண்டாய், சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்று கேள்'' என ஆழ்வார் வாமனனின் பெருமையை மஹாபலியிடம் கேட்டால் தெரியும் என்றார். (பெரியாழ்வார் திருமொழி 1.5.8) அங்கு மாவலி இருக்குமிடம் தேடி வாமனப் பெருமானின் பெருமையை அறிய வேண்டும். இங்கோ மஹர்ஷிகள் குழாம் அரண்மனையி லேயே குழுமியிருக்கிறது. என்னையும் வஸிஷ்டரையும் போல் ஒருவர் இருவர் அன்றி பல முனிவர்கள் இங்கிருப்பதும், அவர்கள் சொல்லும் உனக்கு நம்பிக்கை ஏற்படக் காரணமாகும் அன்றோ? இவர்கள் வைதிகர்கள், உலகியல் அறியாதவர்கள் என நினைப்பீராயின், அரசியல் வல்லுனர்களும், உற்ற தோழர்களுமான மந்திரிமார்கள் அனுமதிப்பார்களாயின், அதோடு வஸிஷ்டரும் முனிவர்களும் ஒப்புக் கொண்டால் ராமனை அனுப்பிக் கொடும்'' என்றார்.

தசரதன் தவிப்பு

अभिप्रेतं असंसक्तं आत्मजं दातुमर्हसि ।
दशरात्रं हि यज्ञस्य रामं राजीव लोचनम् ॥
इति हृदय मनो विदारणं मुनिवचनं तदतीव शुश्रुवान् ।
नरपतिरभवत् महान् तथा व्यथितमनाः प्रचचाल चासनात् ॥

அபிப்ரேதம் அஸம்ஸக்தம் ஆத்மஜம் தாதும் அர்ஹஸி ।
தசராத்ரம்ஹி யக்ஞஸ்ய ராமம் ராஜீவலோசனம் ॥
இதிஹ்ருதய மனோ விதாரணம் முனிவசனம் தததீவ ஶுஶ்ருவான் ।
நரபதி: அபவத் மஹான் ததா, வ்யதித மனா: ப்ரசசால சஆஸநாத் ।

வா. ரா. பால. - 19.

வஸிஷ்டர் முதலியோர் ஸம்மதித்தாலும் ராமனைக் கொடுக்காமல் வேறு வழியில் யாக ஸம்ரக்ஷணத்திற்கு ஏற்பாடு செய்ய தசரதர் நினைப்பதை முகத் தோற்றத்தினின்றும் அறிந்த விஸ்வாமித்திரர் மேலும் பேசலானார். ''அரசே! நாம் வேண்டுவது உமது புதல்வனையே. உம் புதல்வர்களுள்ளும் ராமனையே வேண்டுகிறோம். அவனே மலர்ந்த தாமரை மலர் போன்ற திருக் கண்களால் கடாக்ஷித்து அருளும் தன்மையுடையவன். (வேள்வி பத்து நாட்கள் நடக்கப் போகிறது என்று கூறாது பத்து இரவுகள் என்றார்.) யாகத்தின் போது மற்றவர்களின் கண்கள், தன்னையறியாது அயர்ந்துவிடும். ராமனோ புண்டரீகாக்ஷன். சிறிதும் அயராத கண்களை உடையவன். மேலும் அவனை ஸஹஸ்ராக்ஷன் என மறை தெளிவாகப் பேசுகிறது. ஒரு சில கண்கள் அயர்ந்தாலும் மற்ற பல கண்கள் விழிப்புடன் கண்காணிக்கும், வேள்விக்குக் குறித்த நாள் நெருங்கிவிட்டது. யோசிக்க இது தருணமில்லை. விரைவில் ராமனை எனக்கு அளிப்பீராக.'' இங்கு விரைவில் என்பதற்கு ''அஸம் ஸக்தம்'' என்றார். பால்யம் கடந்துவிட்டதால் தாய் தந்தையரிடம் பற்று குறைந்து வெளி விஷயங்களில் கவனம் செலுத்தும் வயதுடையவன் எனவும், இவன் பரம்பொருளானபடியாலே எதிலும் ஆஸக்தி இல்லாதவன் என்பதும் தொனிப்பொருளாகும்.

மாமுனிவரின் கோரிக்கையை மாமன்னர் கேட்டார். அது இவர் இதயத்தைப் பிளந்தது. மனமும் மிகக் கலங்கியது. உடலும் குலுங்கியது. சுய நினைவை இழந்து, மூர்ச்சையுற்றார். இந்நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் கம்பர்:

எண் இலா அருந் தவத்தோன் இயம்பிய சொல்
மருமத்தின் எறி வேல் பாய்ந்த
புண்ணில் ஆம் பெரும் புழையில், கனல் நுழைந்தா
லெனச் செவியில் புகுதலோடும்,
உன் நிலாவிய துயரம் பிடித்த உந்த,
ஆர் உயிர் நின்று ஊசலாட,
'கண் இலான் பெற்று இழந்தான' என உழந்தான்
கடுந் துயரம்—காலவேலான்

க.ரா. பால. - கையடை

மன்னருக்கு இத்துணைத் துயரம் ஏற்படக் காரணம்?

1. ராமனைக் கேட்டவர் முனிவர் என்பதனால் தான். இவனோ காலவேலான். யமனையொத்த வேலாயுதத்தை உடையவன். பகைவர் எத்தகு வலிமை பெற்றிருப்பினும் எதிர்த்து அடிக்கும் திறமும், படைக் கலமும் பெற்றவன். ஆயினும் முனிவரை எதிர்த்துப் பேச முடியாது மூர்ச்சையுற்றான். ஏன்? ''இவர் பெயரளவுக்குத் தவம் புரியும் முனிவரல்லர், எண் இலா அரும் தவத்தோன் எண்ணிக்கை இல்லாத அரிய தவத்தினைச் செய்தவர். எதிர்த்தால் பிடி சாபம் என்பவர்'', எனவே பயந்தார்.

2. எண்ணில் ஆ வரும் தவத்தோன் (ஆ:பசு). ''இவர் பெருமையை எண்ணில் ஆராய்வோமாகில் பசுவினால் வரும் தவத்தை உடையவர். ஒரு ஸமயம் நம் குலகுருவான வஸிட்டரிடம் பசுவை (நந்தினியை)ப் பெற வேண்டிக் கடுந்தவம் இயற்றியவர். என் குருவின் விரோதி எனக்கும் விரோதியன்றோ? பசுவை அடைய விரும்பியது போல நம் ராமனையும் பறிக்க முற்படுவாரோ எனக் கலங்குகிறார். சாஸ்த்ரமோ ''யதாசக்தி நிக்ருண்ஹியாத் தேவதா குருநிந்தகான்'' குருவையும் தெய்வத்தையும் இகழ்பவனை அவரவர் சக்திக்கேற்ப எதிர்த்து அடக்க வேண்டும். இவ்வா றிருக்க இவரை நம்பி ராமனை எப்படி அனுப்புவது, எனத் தயங்குகிறார் போலும்.

3. எண்ணில் ஆம் அரும் தவத்தோன், ''ஆம் ஆக்குவதில், படைப்ப தில் பிரமனுக்கு நிகராக இருக்கக் கூடிய பெருந்தவத்தினைச் செய்தவர். இவர் தன் தபோ பலத்தினால் த்ரிசங்குவை ஸ்வர்க்கத்திற்கு அனுப்ப, அதைத் தேவர்கள் ஏற்காத பொழுது ''அன்யம் இந்த்ரம் கரிஷ்யாமி லோகோ வாஸ்யாத் அனிந்த்ரக:'' மற்றொரு வானுலகையும், அதை ஆள ஒரு புதிய தேவேந்திரனையும் படைப்பன் என்று அன்று அவர் கூறியது நினைவுக்கு வரவே மயங்குகிறார்.''

4. எண்ணில் ஆ அரும்தவத்தோன், ''ஆ விருப்பமும், இரக்கமுமாம். இவர் பல்லாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்து எண்ணியதை விரும்பியதை எண்ணியாங்கு பெற்ற ஆற்றலுடையவர். நம் குலகுருவாயினால் ரிஷி

என்றும் ராஜர்ஷி என்றும், ப்ரஹ்மர்ஷி என்றும் அழைக்கப்பட்ட முனிவராயிற்றே இவர்.''

5. மேலும் ''மனமிருந்தால் இரக்கம் காட்டி அருளும் தன்மையை உடையவர். தாய்தந்தையரால் பரிவு காட்டப்படாத சுனச்சேபனை வேள்விக்குப் பலியாக அம்பரீஷன் அழைத்துச் சென்றபோது, இவனுக்கு மந்த்ரோபதேசம் செய்து சுனச்சேபனையும் வேள்வியையும் காத்தவர். எனவேதான் நம் குரு வஸிட்டர் எதிரே இருந்தும் எதிர்த்துப் பேசாமல் இருக்கிறார் போலும்.''

6. எண்-நிலாவு அரும் தவத்தோன், ''எல்லோருடைய எண்ணங்களிலும் நிலவி நின்று அவரவர் எண்ணங்களை அபிப்பிராயங்களை அறிந்து செயல்படும் ஞானத்ருஷ்டியை அளிக்கக் கூடிய உயரிய தவத்தினைச் செய்தவராயிற்றே! ஞானத்ருஷ்டியால் நான் நினைப்பதை அறிந்து என்னை சபித்து விடுவாரோ?'' என அச்சமுறுகிறார்.

7. ஏனெனில் எண்-இலா-அரும் தவத்தோன், ''எண்ணாமல் கொள்ளாமல் எதையும் செய்துவிடும் கோப ப்ரக்ருதியாயிற்றே! தவ வலிமையினால் கோபங்கொண்டும், காமம் கொண்டும் பல செயல்களைச் செய்தவராயிற்றே.''

8. எண்ணிலா-அரும் தவத்து-ஓன். ''அ + உ + ன் = விஷ்ணு, பிராட்டியின் சிறப்பு. பன்னாள் தவமியற்றியதின் காரணமாகத் தன்னிடம் நிறைந்த அருள் கொண்ட திவ்ய தம்பதிகளை உடையவர். பெறவேண்டிய உயர் பேற்றைப் பெற்றவர். எனவே எவ்வாறு மறுப்பது. அனுப்பினால் ஒரு வேளை நன்மைகளும் விளையலாம்.''

9. எண்-நிலாவு-அரும் தவத்தோன். ''பெரியோர்களுடைய எண்ணத்தில் மனதில் 'ஆஹா இவர் என்ன தவம் செய்தார்! என்ன தவம் செய்தார்!' என்று வியந்து பாராட்டும்படியான நிலைபெறத்தக்க தவத்தினை உடையவர்.''

10. எண்-இல்லா-வரும்-தவத்தோன், ''எண்ணிக்கையின்றி எல்லையின்றி மேன்மேலும் இன்றுவரை செய்து வருகின்ற தொடர்ந்த தவத்தினை உடையவர்.''

விஸ்வாமித்ரரை அறிமுகப்படுத்தும்பொழுது வால்மீகி முனிவர் ''தேஜஸ்வீ'' என்றும் ''முனி'', என்றும் கூறாது ''மஹாதேஜா:'' ''மஹாமுனி:'' (அப்யாகச்சன் மஹாதேஜா: விச்வாமித்ரோ மஹாமுனி:) என்று கூறினார். அவருடைய தேஜஸ்ஸிற்கும் தவத்திற்கும் உள்ள மஹத்வத்தை பல்பொருள் கொண்ட சொற்றொடரால் ''எண்ணிலா வரும் தவத்தோன்'' என விளக்குகிறார் கம்பர்.

இத்தகு பெருமை சான்ற கௌசிகர் கூறிய ''ராமம் மே தாதும் அர்ஹஸி'' ராமனை எனக்குக் கொடு என்று கூறிய சொல் அரசருக்குப் பெரும் துயரத்தை விளைவித்தது.

ஒருவன் போருக்குச் சென்று திரும்பினான். போர்க்களத்தில் அவன் மார்பகத்தில் எதிரி வேலாயுதத்தால் தாக்கியதில் பெரும் புண் ஏற்பட்டிருந்தது. அந்தப் புண்ணின் வலியைத் தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த பொழுது அந்தப் புண்ணின் த்வாரத்தில் மற்றொருவன், எரியும் கொள்ளிக் கட்டையைச் சொருகினானாம். இப்பொழுது இவன் துன்பத்தை அளவிட்டுக்கூறமுடியுமோ?

தசரதர் ஒரு சமயம் வேட்டையாடச் சென்ற பொழுது யானை நீர் குடிக்கிறது என நினைத்துத் தாய் தந்தையருக்குப் பருக நீர் முகந்து எடுத்த வைச்ய குமாரனை அம்பால் அடித்து விட்டார். அவர் இதை அறிந்து வைச்ய ரிஷிகளை அணுகி மன்னிப்புக் கேட்டார். அவர்கள் ''நீயும் எங்களைப் போன்று புத்ர வியோகத்தினால் மரிப்பாய்'' எனச் சாபமிட்டனர். இச் சாப நிகழ்ச்சி தசரதரின் இதயத்தில் வேல் பாய்ந்த புண்ணின் புழை போன்று இருந்தது. முனிவரின் ''ராமனை எனக்குக் கொடும்'' என்ற சொல் செவியில் புகுந்து, பழைய புண்ணில் கொள்ளிக் கட்டையைச் சொருகியது போலச் சொல்லொணாத் துயரத்தை விளைவித்ததாம். இத்துயர் தசரதரின் உயிரைப் பிடித்து வெளியே தள்ள, ராமனிடம் உள்ள பாசம் உயிரை உள்ளே தள்ள, ஊஞ்சல் போன்று இனிய உயிர் போவதும் வருவதுமாயிருந்ததாம்.

ஒருவன் பிறவிக் குருடன் இயற்கையில் கண்கள் கிடையாது. பரமனின் இன்னருளால் கண்கள் பார்வையைப் பெற்றன. உற்றார் உறவினர் களையும், உலகிலுள்ள அழகிய காட்சிகளையும், பல்வகைப் பொருள் களையும் கண்டுகளித்து மகிழ்ந்துவந்தான். ஒரு நாள் திடீரென்று பார்வையை இழந்தானாகில் அவன் நிலை எத்தகையதோ அதேபோல தசரதருக்குப் பிள்ளை இல்லாதிருந்தபோது ஏற்பட்ட சோகத்தைக் காட்டிலும், பிள்ளை யைப் பெற்று அவனை இழப்பதால் வரும் சோகம் பன்மடங்காயிற்று. ஹ்ருதய மனோவிதாரணம் முனிவசனம் என வான்மீகத்தின் கருத்தைக் கம்பர் இரு உவமைகளைக் கொண்டு அழகாக விளக்கியது இங்கு சுவைத்து இன்புறத்தக்கது.

मुहूर्तमिवनिस्संज्ञः संज्ञावान् इदमब्रवीत् ।
ऊनषोडश वर्षो मे रामः राजीवलोचनः ॥
न युद्धयोग्यतामस्य पश्यामि सहराक्षसैः ॥

முஹூர்தமிவ நிஸ்ஸம்ஞ: ஸம்ஞாவான் இதம் அப்ரவீந் ।
ஊனஷோடசவர்ஷ: மே ராம: ராஜீவ லோசன: ॥
ந யுத்தயோக்யதாம் அஸ்ய பஶ்யாமி ஸஹராக்ஷஸை: ॥

வா. ரா. பால. - 20

மன்னர் சிறிது நேரத்திலேயே ப்ரக்ஞை தெளிந்து சுயநினைவு பெற்று முனிவரை நோக்கிப் பேசலானார்.

ராமனைப் பற்றி ''அஹம்வேத்மி மஹாத்மானம், இவன் பெருமை களை நான் அறிவேன்'' என்று முனிவர் பரக்கப் பேசியதைப் புத்ர வாத்ஸல்யத்தினாலே மன்னர் மனதில் கொள்ளாது பேசினார். ''முனிவரே! என் மகன் 16 வயது கூட நிரம்பியவனல்லன். குறைந்த அளவாகப் பார்ப்பினும் ஒருவனுக்குப் போரிலீடுபட பதினாறு வயதாவது நிரம்பியிருக்க வேண்டும். இவனோ பால் மணம் மாறாதவன்''.

बालोह्यकृतविद्यश्च न च वेत्ति बलाबलम् ।

न चास्त्रबल सम्पन्नः न च युद्ध विशारदः ॥

பால: ஹி அக்ருதவித்ய: ச ந ச வேத்தி பலாபலம் ।
நச அஸ்த்ரபலஸம்பன்ன: ந ச யுத்தவிஶாரத: ॥

வா. ரா. பால. - 20.

''இவன் போர்க் கல்வியை (தனுர் வேதத்தை) கற்றவனல்லன். போருக்குச் செல்பவன் முதலில் எதிரியினுடையவும் தம்முடையவும் படையின் பலாபலத்தை—மிகுதி குறைவினை சீர்தூக்கி அறியக் கற்றிருக்க வேண்டும். அவ்வாற்றல் இவனுக்கில்லை. அஸ்த்ரங்களை எய்யும் ஆற்றலை யும், அஸ்த்ர ப்ரயோகத்திற்குரிய மந்த்ரங்களையும் உபதேசிக்கப் பெற்றிலன். போரிட்டும், படைகளை நடத்திச் சென்றும் பழகாதவன். தனித்துச் சுதந்திர மாகப் போரிடக் கூடிய வயதினை இன்னும் பெறவில்லையே! வாலிப (யௌவன)ப் பருவம் வருவதற்குரிய மீசை முளைக்கும் அறிகுறியே இல்லையே! நீரே காகபக்ஷதரம் என்றீரே. இன்னும் மயிர் முடித்திலன். அலைந்த குடுமியும் சுற்றிய பூவுமாயிருக்கிற இவனையோ பூசலுக்கு அழைக்கிறீர்'' என்றார் தசரதன்.

முனிவர்: ''தேஜஸாம் ஹி ந வய: ஸமீக்ஷ்யதே''. வீரதீர பராக்ரமும் ஆற்றலும் மிக்கவரிடையே வயதைப் பார்ப்பதில்லை. ''சிறியவன் என்று என் இளஞ்சிங்கத்தை இகழேல் கண்டாய்'' என்பது ஆழ்வார் அனுபவம். எனவே வயதைக் கொண்டு அசக்தன் என முடிவு கட்டாதீர். இவனோ திவ்யதேஜஸ்ஸை உடையவன். சிறு பொறியாயினும் நெருப்புச் சுடாமல் இருக்குமோ? எனவே தயங்காதீர்'' என்றார்.

அரசர்: ''முனிவரே! இவன் ''மே ராம:'' என்னுடைய மகன் ராமன்'' கையும் கோடாலியுமாய் மூவேழு இருபத்தொரு தலைமுறை க்ஷத்திரியர் களின் தலை துணித்துத் திரிந்த முரட்டுப் பரசுராமன் என நினைத்தீர் போலும். அன்று நான் தவங்கிடந்து பெற்ற ராமன் இவன். பெரும் பசியால் வாடும் ஒருவன் பெரு முயற்சி செய்து பல்லோரிடம் பல்லைக்காட்டிக் கெஞ்சிப் பெற்ற சோற்றைத் தனியே ஓரிடத்தில் அமர்ந்து உண்ணப் புகும்போது அவர் கையைப் பிடித்துத் தடுப்பார் போலுள்ளது உம் செய்கை. அறுபதினாயிரம் ஆண்டுகள் காத்திருந்து உம்மைப் போன்ற பல முனிவர்

களை ஒன்று திரட்டி அச்வமேதம். புத்ரகாமேஷ்டி யாகங்களைச் செய்து, அரும்பாடுபட்டுப் பெற்றெடுத்து வளர்த்த குழந்தையின் திருமுகத்தின் அழகையும், கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடிய நீண்ட அக்கண்களின் அழகையும், செவ்விய இதழ்களில் தவழும் வெண்ணிறப் புன்முறுவலையும், யாழினும் குழலினும் இனிய சொல்லழகையும், வரும்போதும் போகும் போதும் என்னை மகிழ்விக்கும் நடையழகையும் அனுபவித்து அனுபவித்துச் சொல்லொணா ஆனந்தத்தில் மிதக்கும் என்னிடமிருந்து என் ராமனைப் பிரிப்பது உமக்குத் தகுமோ, தர்மமோ'' என்றார்.

மேலும் ''முனிவரே! நறுமணம் மிக்க கருமுகை பூ மாலையைச் சூடி அழகு பார்ப்பதை விடுத்து அதைக் கசக்கி வெயிலில் வைப்பார் உண்டோ? கண்ணுக்கு இனிதான பொருளை (ராமனை)க் கண்டு மகிழ்ந்து அனுபவிக்க லாமே ஒழிய காட்டுக்கு அனுப்புவது உசிதமோ?''

ராஜீவலோசன: ''கதிரவனின் கதிர் கண்டு வெடித்தும், இதழ் விரிந்து விகஸித்தும் இருக்கிற தாமரை மலரை ஒத்த திருக்கண்களையுடைய ராமனை வெயிலில் நிறுத்துவதோ, சண்டையிடச் செய்வதோ எவ்வாறு தகும்?''

முனிவர் : ''அரசே! ராஜீவலோசனன் (செந்தாமரைக் கண்ணன்) என்று நீர்தானே சொல்கிறீர். வெயில் காணத் தாமரை விகஸிக்குமாப் போலே படை (பகைவரை) கண்டால் க்ஷத்திரிய வீரனாகிய ராமன் உள்ளம் மகிழ்ந்து அதை வரவேற்பான் அன்றோ? வெயில் இவனுக்கு ஆகாதாகில், நிசாசரர்கள் (அரக்கர்கள்) இரவில் தானே வருவார்கள். எனவே இரவில் வரும் விரோதிகளை அழித்து வேள்வியைக் காத்து உதவட்டுமே.''

அரசர் : ''கிங்கிணி (சிறிது வாய் திறந்திருக்கும் சலங்கைமணி) வாய்ச் செய்த தாமரைப் பூப்போல, 'செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ' (திருப்பாவை, 22) என்பது போல தூங்குவதற்குரிய காலமான இரவில் தூக்கத்திற்குரிய மயக்கத்தினால் சிறிதே விழிக்கும் கலங்கிய கண்களோடு அல்லவா காட்சியளிப்பன். அந்நிலை போரிட உதவுமோ சிந்தித்துப்பாரும்.''

மேலும் ''முனிவரே! நீரை விட்டுப் பறித்துக் குளத்திற்கு வெளியே கொணர்ந்த தாமரை மலர் வாடி உலர்ந்து விடுமாப் போலே என்னை விட்டுப் பிரித்து வெளியே அழைத்துச் சென்றால் அவன் முகத்தின் செவ்வி அழிந்து வாடி நிற்பனே! எனது செல்வ மகனை மடியில் அமர்த்தி, கட்டி அணைத்து, உச்சிமுகந்து மகிழலாமே ஒழிய பூசலுக்கு இலக்காக்கலாமோ! 'பால: தாவத் க்ரீடாஸக்த:' என்பது போல பல்வகை விளையாட்டுக் கருவிகளைக் கொண்டு விளையாடும் பருவமாயிற்றே! 'ஸஹ ராக்ஷஸை:' ராமனோ மனுஷ்யன், போரிட வருகின்றவர்களோ அரக்கர்கள். ராமனோ ஒருவன், அவர்களோ பலர், இவன் செய்யக்கூடியதோ தர்ம யுத்தம். அரக்கர்கள்

புரிவதோ முற்றிலும் மாயாயுத்தமாகும். எனவே உம்மோடு என் ராமனை அனுப்புவதை எனது நாட்டினர் தகாத செயலாகவே கருதுவர். 'அபிநிவேச வசீக்ருத சேதஸாம் பஹுவிதாமபி ஸம்பவதி ப்ரம:' தான் நினைத்ததைச் செய்தேயாக வேண்டும் எனப் பிடிவாதம் உடையவர்கட்கு, அவர்கள் எவ்வளவு கற்றவராயினும் உண்மை நிலையை அறிய முடியாது என்பர். நீரோ, வந்த காரியத்தை முடித்தே (பூர்த்தி செய்தே) ஆகவேண்டுமெனப் பிடிவாதம் கொண்டவர். எனவே யான் கூறிய உண்மைகளை ஏற்க உம் மனம் மறுக்கிறது போலும்.'' (இக்கருத்துக்கள் வ்யாக்யான சக்ரவர்த்தியின் உரையமிழ்தில் சில துளிகள்)

'ராமனைக் கொடேன்'

अहमेवधनुष्पाणिः गोप्ता समरमूर्धनि ।
यावत् प्राणान् धरिष्यामि तावत् योत्स्ये निशाचरैः ॥
बालोह्यकृतविद्यश्च न च वेत्ति बलाबलम् ।
न चास्त्र बल संयुक्तः नच युद्धविशारदः ।
विप्रयुक्तो हि रामेण मूहूर्तमपि नोत्सहे ।
जीवितुं मुनिशार्दूल न रामं नेतुमर्हसि
यदि वा राघवं ब्रह्मन् नेतुमिच्छसि सुव्रत ।
चतुरङ्ग समायुक्तं मया च सहितं नय ॥
चतुर्णां आत्मजानां हि प्रीतिः परमिका मम ।
ज्येष्ठं धर्मप्रधानं च न रामं नेतुमर्हसि ।

அஹமேவ தனுஷ்பாணி: கோப்தா ஸமரமூர்த்தநி ।
யாவத் ப்ராணான் தரிஷ்யாமி தாவத் யோத்ஸ்யே நிஶாசரை: ॥
பால: ஹி அக்ருதவித்யஶ்ச ந ச வேத்தி பலாபலம் ।
ந ச அஸ்த்ர பல ஸம்யுக்த: நச யுத்தவிஶாரத: ॥
விப்ரயுக்த: ஹி ராமேண முஹூர்த்தமபி ந உத்ஸஹே ।
ஜீவிதும் முனிஶார்தூல ந ராமம் நேதும் அர்ஹஸி ॥
யதி வா ராகவம் ப்ரஹ்மந் நேதும் இச்சஸி ஸுவ்ரத ।
சதுரங்க ஸமாயுக்தம் மயா ச ஸஹிதம் நய ॥
சதுர்ணாம் ஆத்மஜானாம் ஹி ப்ரீதி: பரமிகா மம ।
ஜ்யேஷ்டம் தர்மப்ரதானம் ச ந ராமம் நேதும் அர்ஹஸி ॥

வா. ரா. பால. - 20.

தசரதர் முனிவரை வரவேற்று உபசரித்த பொழுது எல்லா உதவியையும் செய்து தருவதாக அவருக்கு வாக்கு அளித்துவிட்டார். அப்பொழுது சிறுவன் ராமனைக் கொடுக்கும்படி கேட்பார் என்று எண்ணுவதற்கு இடமில்லை. ஆனால் முனிவரோ உயிருக்கு உயிராம் ராமனையே கேட்டு விட்டார். கொடுத்த வாக்கை ஸத்யஸந்தரானபடியால் மாற்றுவதற்கில்லை. என்ன செய்வது? யோசித்தார், முனிவருக்குத் தேவை வேள்வியின் பாதுகாப்பு, அதை நாமே செய்துவிடலாமே என எண்ணிப் பேசலானார். ''முனிவரே! போர்க்களமோ காடு, எதிரிகளோ—மாயாவிகளான அரக்கர்கள் பலர், போரிடுவதோ இரவில், அவர்கள் செய்வதோ மாயாயுத்தம். இதை எதிர்

கொள்ளத் தூங்கும் தன்மையுடையவனும், சிறுவனும், ஒருவனுமாகிய ராமன் தகுதியற்றவன். எனவே தங்கள் வேள்வியை எவ்விதத் தீங்கும் நேராத படி பாதுகாக்க நானே கையில் வில்லேந்தியவனாய் ஒரு அக்ஷௌஹிணீ ஸேனையுடன் களத்தில் முன் நின்று போரிடப் போகிறேன். இதோ தங்களுக்கு முன்பே கிளம்பிவிட்டேன். பாலனும், நன்கு போர்க்கலையைப் பயிலாதவனும், ஓரளவு அறிந்த போதிலும் அரக்கர்களின் போர் நுணுக்கங் களை அறியாதவனுமாகிய அழகனை அழைத்துச் செல்வது தக்கதன்று.''

தொடை ஊற்றின்தேன் துளிக்கும் நறும் தாரான்
ஒரு வண்ணம் துயரம் நீங்கி,
படையூற்றமிலன், சிறியன், இவன்; பெரியோய்!
பணி இதுவேல் பனிநீர்க் கங்கை
புடையூற்றும் சடையானும், நான்முகனும்,
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக்கு இடையூறாய் யான் காப்பேன்,
பெரு வேள்விக்கு எழுக, என்றான்.

க. ரா. பால. - கையடை

தசரதர் பேரரசர் ஆனதுபற்றி அவரைக் காண சிற்றரசர்கள் பலர் வந்த வண்ணம் இருப்பர். அவர்கள் அப்பொழுதலர்ந்த நறுமண மலர் மாலை களைச் சூட்டிச் சக்ரவர்த்தியை வணங்குவர். எனவே சக்ரவர்த்தி அழகிய மலர் மாலையைச் சூடிய வண்ணமிருப்பர். இதிலிருந்து பல்லோராலும் அணுகிப் போற்றப்பெறும் ஆற்றல் மிக்கவர் என்பது தெளிவு. ஓரளவு முனிவரைச் சமாதானப்படுத்தி ராமனை அனுப்பாதிருக்கலாம் என்று எண்ணிச் சிறிது துன்பம் நீங்கியவராய்ப் பேசலானார். ''முனிவரே! உமது வேள்விக்கு எவ்வகையில் இடையூறு நேர வாய்ப்பு இருக்கிறது என்பது பற்றி யான் அறிந்து கொண்டேன். அதாவது, கங்காதேவி ஜன்ஹு மஹர்ஷியின் யாக சாலையை அழித்தவள். அத்தகையவளை தன் சிரத்தின் மீது தாங்கு கிறார் சிவன். இவரோ ஸம்ஹார மூர்த்தி, அழிக்கும் கடவுள். தக்ஷயாகத்தைக் கெடுத்தவர். எனவே, இவரால் வேள்விக்குத் தீங்கு நேரிடலாமென எண்ணுகிறீர் போலும். நீர் த்ரிசங்கு மஹாராஜனுக்காக வேறு புதிய சுவர்க்க உலகையே படைப்பேன் என்றதால், படைக்கும் கடவுளான பிரமனுக்கு நம் தொழிலில் போட்டிக்கு வருகிறாரே, எனப் பொறாமையும் கோபமும் இருக்க வாய்ப்பு உண்டு. ஆக நான்முகனும் உமது வேள்வியைக் கெடுக்கலாம். வேறொரு இந்திரனைப் படைத்து சுவர்க்கத்திற்கு அவனை (த்ரிசங்குவை) இந்திரனாக்குகிறேன் என, அன்று பேசினீர். வஞ்சம் தீர்க்க உமது வேள்வியை இந்திரனும் அழிக்கலாம். இம் மூவராலும் ஏற்படக்கூடிய இடையூறுகள் எத்தகையன ஆயினும் அவற்றைத் தகர்த்து உமது வேள்வியைக் காக்க யான் தயாராகிவிட்டேன், புறப்படும். யானும், படைகளுடன் இதோ புறப்பட்டுவிட்டேன். கவலை வேண்டாம். ராமன் படைக்கலங்களைக்

கையாள்வதில் போதிய பயிற்சி அற்றவன். சிறுவன், அவன் வேண்டாம். நாம் புறப்படுவோம். வாரீர்'' என்றார். மேலும் ''ராமனைப் பிரிந்து நான் ஒரு முஹூர்த்தம் கூட (48 நிமிடங்கள்) பிழைத்திருக்க மாட்டேன். சிறிது தூரம் செல்வதற்குள் என் ஆவி பிரிந்தால் உடனே அரண்மனைக்கே திரும்ப வேண்டியிருக்குமே! எப்படி அழைத்துப் போவீர்? ராமனையே அழைத்துச் செல்ல வேண்டுமெனப் பிடிவாதமாகக் கூறுவீராகில் அவச்யம் அழைத்துச் செல்லும். ஆனால் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட் படை இவற்றுடன் நானும் கூடவே வருவேன். இதை நீர் அனுமதிக்க வேண்டும்.''

''நான் அறுபதினாயிரம் ஆண்டுகள் மக்கட்பேறின்றி வருந்தி, பல வ்ரதங்களையும், உபவாஸம், முதலியவற்றையும் செய்து நான்கு புதல்வர் களைப் பெற்றேன். நால்வர்களுள் ராமனிடம் எனக்குப் ப்ரீதி (பாசம்) எல்லை கடந்தது. ஏனெனில் அவன் தான் மூத்தவன்; அரசாள உரிமை பெற்றவன். அவன் பிரிவினால் என் ஆவி பிரிந்தாலோ, காட்டிற்கு உம்முடன் வந்து அரக்கர்களோடு நிகழும் போரில் அவனுக்கு ஏதாவது நேர்ந்தாலோ அறவழியில் ஆளும் அரசன் அயோத்திக்கு இல்லாமல் போய் விடலாம். போரில் வெற்றியோ, தோல்வியோ, வாழ்வோ, சாவோ, எதுவும் நேரலாமல்லவா? எனவே எவ்வழியில் பார்த்தாலும் ராமனை நீர் அழைத்துச் செல்வது தக்கதன்று.''

இவ்வாறு ஐந்து தடவை ''ந ராமம் நேதும் அர்ஹஸி'' என்று மறுத்துப் பேசினார். ஒன்றை உறுதியாக மறுக்க மூன்று தடவை கூறுவது வழக்கம். ஆனால் இங்கு ராமன் பரமபுருஷனானபடியால் தன்னை அறியாது பாசம் இரட்டிப்பாகிறது. மேன்மேலும் மறுக்கத் தூண்டுகிறது. தத்துவ நிலையில் பார்க்கும்போது பரமாத்மாவை விட்டு ஜீவாத்மாவுக்கு ஸத்தை (இருப்பு) ஏது?

किं वीर्याः राक्षसाः ते च कस्य पुत्राः च के च ते ।
कथं प्रमाणाः केच एतान् रक्षन्ति मुनिपुङ्गव ।

கிம்வீர்யா: ராக்ஷஸா: தே ச கஸ்ய புத்ரா: ச கே ச தே?
கதம்ப்ரமாணா: கே ச ஏதான் ரக்ஷந்தி முனிபுங்கவ? ॥

வா. ரா. பால. - 20.

மன்னர் : ''முனிவரே! என் ராமனை அழைத்துச் செல்ல விரும்புகிறீர்? ராமன் எவர்களோடு போரிட வேண்டியிருக்கும்? அவர்கள் பெயர்கள் என்ன? அவர்களின் வலிமை எத்தகையது? அவ்வரக்கர்கள் யாருடைய பிள்ளைகள்? அவர்களின் பின்பலம் என்ன? அவர்களின் உருவ அமைப்பு (ஆகாரம்) எத்தகையது? அவர்கட்குப் பாதுகாவலாக இருப்பவர் யார்? இவற்றை எல்லாம் நன்கு அறிந்து ஆராயாது ராமனை எப்படி அனுப்ப முடியும்? நான் தான் எப்படி வரமுடியும்? எனவே இதுபற்றி விரிவாகக் கூறும்'' என்று கேட்டான்.

पौलस्त्य वंश प्रभवः रावणो नाम राक्षसः ।
स ब्रह्मणा दत्तवरः त्रैलोक्यं बाधते भृशम् ॥
तेन संचोदितौ द्वौ तु राक्षसौ वै महाबलौ ।
मारीचश्च सुबाहुश्च यज्ञविघ्नं करिष्यतः ॥

பௌலஸ்த்ய வம்ஶப்ரபவ: ராவண: நாம ராக்ஷஸ: ।
ஸ: ப்ரஹ்மணா தத்தவர: த்ரைலோக்யம் பாததே ப்ருஶம் ।
தேந ஸம்சோதிதௌ த்வௌ து ராக்ஷஸௌ வை மஹாபலௌ ॥
மாரீச: ச ஸுபாஹு: ச யஜ்ஞவிக்னம் கரிஷ்யத: ॥

வா. ரா. பால. - 20.

முனிவர்: ''விச்ரவஸ் முனிவருக்கு கைகஸியிடம் பிறந்தவன் ராவணன். அவன் (மனிதனைத் தவிர) எவராலும் தனக்குச் சாவு கிடையாது எனப் பிரமனிடமிருந்து வரம் பெற்றிருக்கிறான். எல்லையற்ற வலிவும் வீரமும் உடையவன். மூவுலகையும் துன்புறுத்தி வருகிறான். அவனுடைய தூண்டுதலின் பேரில் இரு அரக்கர்கள் வேள்விகட்கு இடையூறு செய்கின்றனர்'' என்றார்.

नहि शक्तोऽस्मि सङ्ग्रामे स्थातुं तस्य दुरात्मनः ।
स त्वं प्रसादं धर्मज्ञ कुरुष्व मम पुत्रके ॥
मम चैवाल्प भाग्यस्य दैवतंहि भवान् गुरुः ।
न शक्ताः रावणं सोढुं किम् पुनर्मानवा युधि ।
स हि वीर्यवतां वीर्यं आदत्ते युधि राक्षसः ॥
तेन चाहं न शक्नोमि संयोद्धुं तस्य वा बलैः ।
बालं मे तनयं ब्रह्मन् नैव दास्यामि पुत्रकम् ।

நஹி சக்த: அஸ்மி ஸங்க்ராமே ஸ்தாதும் தஸ்ய துராத்மந ॥
ஸ த்வம் ப்ரஸாதம் தர்மஜ்ஞ! குருஷ்வ மமபுத்ரகே ॥
மம சைவ அல்பபாக்யஸ்ய தைவதம் ஹி பவான்குரு: ॥
ந ஶக்தா: ராவணம் ஸோடும் கிம் புனர் மானவா: யுதி ।
ஸஹி வீர்யவதாம் வீர்யம் ஆதத்தே யுதி ராக்ஷஸ: ।
தேன ச அஹம் ந ஶக்னோமி ஸம்யோத்தும் தஸ்ய வா பலை: ॥
பாலம் மே தனயம் ப்ரஹ்மன்! நைவ தாஸ்யாமி புத்ரகம் ॥

வா. ரா. பால. - 20.

தசரதர்: ''இந்தக் கொடியோனாகிய இராவணனுக்கு எதிராய்ப் போரிடுவது என்பது நம்மால் முடியாததாகும். தேவர்களாலேயே அவனை

எதிர்த்து நிற்க முடியாதென்றால் நான் எம்மாத்திரம்! அறவோராகிய தாங்கள் என் ராமனிடம் கருணை காட்ட வேண்டும். நான் சிறிதும் அத்ருஷ்டமில்லாதவன். பல்லாண்டு பிள்ளை இல்லாது வருந்தித் தவம் கிடந்து பெற்ற பிள்ளையை வளர்த்து அனுபவிக்கக் கூட பாக்யமில்லாதவன். நீர் தான் எனக்குக் கண்கண்ட தெய்வம், நீரே எமக்குக் குரு. உம் அருளையே நாடி நிற்கிறேன். அருளுவீராக! ராவணன் யாரோடு போரிட்டாலும் எதிரியினுடைய வலிமை ஆற்றல் எல்லாம் அவனையே அடையும். எனவே என் படைகளோடு நான் வந்தாலும் அவன் எதிரே என்னால் நிற்க முடியாது'' என்றார்.

முனிவர்: ''இப்பொழுது ராவணன் இங்கு வரமாட்டான். ஸுபாஹு மாரீசர்கள் இருவர் தான், இவர்களை ராமனே எதிர்த்து விரட்டி விடுவான்.''

தசரதர்: ''இவ்விரு அரக்கர்களும் யார்? எத்தகையர் எனத் தங்கட்குத் தெரியாது போலும்! இருவரும் தண்டதரனான யமனை ஒத்தவர்கள். மிகமிகக் கொடியோர்களாய்த் திகழ்ந்த ஸுந்தனுடைய பிள்ளை மாரீசன், உபஸுந்தனுடைய மகன் ஸுபாஹு, வேள்விகளை அழிக்கவே பிறந்தவர்கள். மாயா யுத்தத்தில் (கொரில்லாப் போரில்) நன்கு பயிற்சி பெற்றவர்கள். இவர்களோடு சண்டையிடுவதும் முடியாததாகும். முன்பே கூறினேன்; ராமனை விட்டுச் சிறிதும் என்னால் வாழமுடியாது. ராமனை அயோத்தியில் இருத்தி நான் உம்மோடு வந்தாலும், நான் இங்கேயே தங்கி ராமனை உம்மோடு அனுப்பினாலும், அவர்களுடன் மாயா யுத்தத்தில் ஒருவருக்கு ஆபத்து வந்தாலும் பிரிவு ஏற்படுவது உறுதி. எனவே கண்டிப்பாக நானோ, ராமனோ, இருவருமோ உம்மோடு கானகத்திற்கு வரமுடியாது'' என்று உறுதிபடச் சொன்னார்.

''அதிஸ்னேஹ: பாபஶங்கீ'' ஒருவரிடம் அளவுக்கு மீறிய அன்பைச் செலுத்துவது கூடாது. அது அவர் விஷயத்தில் என்ன நேருமோ? என அச்சத்தை விளைவித்து நம் மன நிம்மதியைக் கெடுக்கும். அவருக்கு தலைவலி வந்தால் கூட, உயிருக்கே ஆபத்து வந்துவிடுமோ என ஐயம் உண்டாகும். அன்புக்குரிய குழந்தை பள்ளியிலிருந்து வருகிறது தாமதமானால், வழியில் வண்டி அவன் மேலே ஏறி ஏதாவது ஆகியிருக்குமோ? என மனம் தவிக்கும். தெருக்கோடியில் போய் நின்று கொண்டு காத்திருக்கத் தோன்றும். ராமனை அனுப்புவதற்கு முன்னரே, அனுப்பினால் என்னென்ன கேடுகள் குழந்தைக்கு வந்து சூழுமோ எனும் பயத்தினால் தான் எதையும் செய்வதாக வாக்களித்ததை மறந்து அனுப்ப மறுத்துவிட்டார்.

ராவணன் பெயரைச் சொன்னதுமே பயந்து நடுங்கி படையுடன் தான் வருவதாகச் சொல்லியிருந்தும் வர மறுத்துவிட்டார். ராவணனைக் குறித்துப் பயப்படக் காரணம் என்ன? ஆனந்த ராமாயணம் விடைபகரும், கௌஸல்யா

கல்யாணத்தின் போது நிகழ்ந்தது. கோஸல நாட்டு அரசனின் தூதுவர்கள் கோஸலையை மணக்க சுப முஹூர்த்தம் வைத்த செய்தியைச் சொல்லி தசரத சக்ரவர்த்தியை அழைத்துச் செல்ல அயோத்திக்கு வந்தனர்.

लग्नार्थम् तं समानेतुं दूताः दशरथं नृपम् ।
तदा दशरथश्चापि साकेते सरयू जले ।
नौकास्थो जलजां क्रीडां चक्रे वै मन्त्रि बन्धुभिः ।

லக்னார்த்தம் தம் ஸமானேதும் தூதா: தசரதம் ந்ருபம் ॥
ததா தசரத: சஅபி ஸாகேதே ஸரயூ ஜலே ।
நௌகாஸ்த்த: ஜலஜாம் க்ரீடாம் சக்ரே வை மந்த்ரிபந்துபி: ॥

ஆனந்த ராமாயணம்

தூதுவர்கள் வந்த ஸமயம் தசரதர் ஸரயூ நதியின் நீரில் படகில் அமர்ந்து அமைச்சர்களோடும், உறவினர்களோடும் நீர் விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தார்.

அதே ஸமயம் இலங்கையில் பிரமன் ராவணனோடு உரையாடிக் கொண்டிருந்தார்.

कौसल्यायां दशरथात् रामः साक्षात् जनार्दनः ।
चतुर्धा पुत्र रूपेण भूत्वा त्वां स हनिष्यति ।

கௌஸல்யாயாம் தசரதாத் ராம: ஸாக்ஷாத் ஜனார்தன: ।
சதுர்தா புத்ரரூபேண பூத்வா த்வாம் ஸ ஹநிஷ்யதி ॥

ஆனந்த ராமாயணம்

''ராவணா! கோஸல நாட்டு அரசன் தன் மகளைத் தசரதருக்கு மணம் முடிக்க இருக்கிறான். கோஸலையினிடத்தில் தசரதருக்கு ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனே நால்வராக அவதரித்து உன்னைக் கொல்லப் போகிறார்'' என்று சொல்லிவிட்டுப் பிரமன் மறைந்தார்.

बभंज निज पादेन तां नौकां सरयू जले ।
दशरथ सुमन्त्रौ द्वौ नौका खण्ड परिस्थितौ ।
ततस्समुद्रमध्ये जीवितौ ईश्वरेच्छया ।

பபஞ்ஜ நிஜ பாதேன தாம் நௌகாம் ஸரயூ ஜலே ।
தசரத ஸுமந்த்ரௌ த்வௌ நௌகா கண்ட பரிஸ்திதௌ ॥
ததஸ் ஸமுத்ர மத்யே ஜீவிதௌ ஈச்வரேச்சயா ॥

ஆனந்த ராமாயணம்

நான்முகன் இலங்கையிலிருந்து புறப்பட்டதுமே ராவணன் நேராக ஸரயூநதிக்கே வந்தான். தசரதர் இருந்த படகையும் மற்ற படகுகளையும் தன் காலால் உதைத்து உடைத்து விட்டான். ஸரயூ நதியின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஸுமந்த்ரரும், தசரதரும் பகவத் ஸங்கல்பத்தினால் உயிர் பிழைத்து உடைந்த படகுத் துண்டுகளைப் பிடித்துக் கொண்டு கடலை அடைந்து அங்குள்ள ஒரு சிறு தீவில் ஒதுங்கினர்.

ஸரயூ நதிக்கு வந்த ராவணன் நேராக கோஸல நாடு சென்று அவ்வரசனோடு போரிட்டு, அவனைக் கொன்று அவன் மகளாகிய கௌஸல்யாவை அபஹரித்துக் கொண்டு ''இவளை இலங்கையில் கொண்டு போய் வைத்தால் அயோத்தியின் ரஹஸ்யப்படையினர் இங்கிருந்து இவளைக் கடத்திச் சென்றுவிடுவர்'' என எண்ணி அவளை ஒரு பெட்டியில் அடைத்துப் பூட்டி வழியில் கடலிலுள்ள தன் நண்பனாகிய ஒரு திமிங்கிலத்தி னிடம் ஒப்படைத்துவிட்டு இலங்கை சென்றான். அத்திமிங்கிலமும் பெட்டியை ஒரு தீவில் வைத்து விட்டுத் தன் பகைவர்களுடன் சண்டையிடச் சென்றுவிட்டது. அத்தீவில் தான் தசரதரும் ஸுமந்த்ரரும் கரையேறித் தங்கியிருந்தனர். அத்தீவில் திமிங்கிலம் வைத்த பெட்டியைத் திறந்து பார்த்தனர். அதில் கௌஸல்யை இருந்ததைப் பார்த்து ஆச்சர்யமுற்றனர்.

गान्धर्वाख्यं विवाहं च चकार मुदिताननः ।

காந்தர்வாக்யம் விவாஹம் ச சகார முதிதாநந: ॥

ஆனந்த ராமாயணம்

அரசர்கட்கு அனுமதிக்கப்பட்ட காந்தர்வ விவாஹ முறைப்படி இருவரும் திருமணம் செய்து கொண்டனர். முன்பே நிச்சயித்திருந்த சுப முஹூர்த்தத்தில் இது நிகழ்ந்தது.

இலங்கை சென்ற ராவணன் நான்முகனைப் பார்த்து 'தாங்கள் கூறிய தசரத கௌஸல்யா கல்யாணத்தை நடக்க விடாமல் செய்து விட்டேன்' என்றான். இதைக் கேட்ட ப்ரஹ்மா ''யார் எவ்வளவு வல்லவனாயினும் விதியை மாற்ற முடியாது'' என்றார்.

ராவணன்: ''அப்படியா? இதோ பாருங்கள்'' என்று கூறி திமிங்கிலத் திடமிருந்து பெட்டியை வரவழைத்துத் திறந்து காட்டினான். அவன் எண்ணம், தசரதர் ஸரயூவிலும், கோஸலை பெட்டியிலும், மூச்சுத்திணறி மாண்டிருப் பார்கள் என்பதாகும். திறந்த பெட்டியில் மூவர் இருந்தனர். அதைப் பார்த்த பிரமன், ''ராவணா! நீ பெட்டியில் ஒரு கோஸலையை வைத்தாய். இப்பொழுது மூவர் இருக்கின்றனர். சின்னாட்களில் இவர்களே கோடி பேர் ஆகலாம். நான் கூறியபடி ராமாதிகளும் பிறக்கலாம்.''

ராவணன்: ''அப்படியானால் இதோ பாருங்கள்'' என, இடுப்பிலிருந்த வாளை உருவி ஓங்கினான்.

நான்முகன்: ''ராக்ஷஸேச்வர! எப்பொழுதோ உனக்கு நேர இருக்கும் மிருத்யுவை இப்பொழுதே ஏன் அழைக்கிறாய்? சற்று யோசித்துச் செயல் படு'' என்று கூறினார்.

यद्भविष्यं तत् भवतु अग्रे मास्तु साम्प्रतम् ॥

யத் பவிஷ்யம் தத் பவது அக்ரே, மாஸ்து ஸாம்ப்ரதம் ॥

ஆனந்த ராமாயணம்

இதைக் கேட்ட ராவணன் வாளை உறையில் சொருகி, ஏவலர்களை நோக்கி, இம்மூவரையும் இப்பொழுதே அயோத்தியில் கொண்டுவிடுங்கள்'' என்றான்.

தசரதருக்கு ராவணனைப் பற்றிய பயத்திற்கு தனது முதல் கல்யாண நிகழ்ச்சியே காரணம். ராவணன் நினைவுக்கு வரவே ராமனை அனுப்ப மறுத்துவிட்டார் போலும்.

கோபமும் பரிந்துரையும்

தசரதர் பல தடவை ராமனை அனுப்ப மறுத்த போதிலும், ராமனின்றி ஸித்தாச்ரமத்திற்குத் திரும்ப விஸ்வாமித்திரருக்கு விருப்பமில்லை. எனவே மீண்டும் பேசலானார்.

राजर्षे ममकारो हि राजपुत्रेषु राज्ञां
उपलालन क्लेशाय केवलम् । उपयोगस्तु प्रजानां ।
यथैतत्:
कष्टा वेधव्यथा कष्टः नित्यं च वहनक्लमः ।
श्रवणानां अलंकारः कपोलस्य तु कुण्डलम् ॥
अलं च ते रामभद्रेऽपि बालोऽयमिति सम्भावनया
द्यावा पृथिव्योः तिमिरस्तिरस्करिणीं धरणिः
अणुतरोऽपि निजतेजसा तिरस्करोति ।

ராஜர்ஷே! மமகாரோ ஹி ராஜபுத்ரேஷு ராக்ஞாம்
உபலாலன க்லேசாய கேவலம். உபயோக: து ப்ரஜானாம்.

யதா ஏதத்:
கஷ்டா வேதவ்யதா கஷ்ட: நித்யம் ச வஹனக்லம: ।
ச்ரவணானாம் அலங்கார: கபோலஸ்ய து குண்டலம் ॥
அலம் ச தே ராம பத்ரே அபி பால: அயம், இதி ஸம்பாவனயா ।
த்யாவா ப்ருதிவ்யோ: திமிர திரஸ்கரிணீம் தரணி:
அணுதர: அபி நிஜதேஜஸா திரஸ்கரோதி ॥

மஹாகவி முராரி

''ராஜர்ஷியே! ராஜனே! என்று அழைக்காது ராஜர்ஷியே! என்று அழைத்தார். ரிஷி என்றால் அறிவுடையவர், விவேகமுடையவர், தத்வ ஞானமுடையவர் என்று பொருள். எவருக்கும் ஒரு பொருளின் மமகாரம் கூடாது. என்னுடையது என்கிற எண்ணம் கூடாது. எனது, என்னுடையது என்கிற அபிமானம் பெருந்துன்பத்தை அளிக்கவல்லது 'மம இதி த்வ்யக்ஷர: ம்ருத்யு:' மம எனும் இரண்டு எழுத்து யமனையொத்தது, என்பர். வீடு, மனைவி, தனம், பொருள் மக்கள் எனும் பாசமுடையவர் அல்லலுறுவதை உலகில் கண்கூடாகப் பார்க்கிறோம். அதிலும் அரசனுக்கு மகனிடத்தில் 'இவன் தனக்கே உரியவன்' என மமகாரம் கூடாது. தன் மகனைச் சீராட்டி, தாலாட்டி, அமுதூட்டி, சுமந்து வளர்க்கும் ச்ரமம் தான் அரசனுக்குக்

கிடைப்பது. அவனை ஆளாக்கிய பிறகு மகனால் ஏற்படும் நன்மைகள் அனைத்தும் மக்களுக்கே உரியது. நீரே யோசித்துப் பாரும். ஒருவர் வைரக் கடுக்கனையோ, வைரத் தோட்டையோ காதுகளில் அணிகிறார். அதற்காக காதுகள், ஊசியால் துளையிடுவதை வேறுவழியின்றிப் பொறுத்துக் கொள்கின்றன. தாங்க முடியாத வலி, அதைச் சுமப்பதினாலும் வலி, நாளடைவில் தொள்ளக் காதாக ஆகி அதன் அழகையும் கெடுக்கிறது. ஆனால் தோட்டின் கடுக்கனின் பயனை காதுகளில் அருகிலுள்ள கன்னங்களே பெறுகின்றன. விலையுயர்ந்த ரத்னக் கற்களினின்றும் வீசும் ஒளிக் கற்றையால் கன்னங்கள் பேரழகைப் பெற்றுத் தம்மைப் பார்ப் போரைக் கவர்கின்றன. இங்கு காதணிகளைச் சுமப்பதோ காதுகள், அணி களால் கிடைக்கும் பெருமையைப் பெறுவதோ கன்னங்கள், என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாரும். எனவே ராஜகுமாரனாகிய ராமனைக் கொண்டு பயனைப் (உதவியை)பெற இந்நாட்டுக் குடிமகனாகிய எனக்கு முழு உரிமை உண்டு''.

''ராமன் சிறுவனாயிற்றே அவனுக்கு என்ன நேருமோ? அவனால் என்ன செய்யமுடியும்? என அச்சமும் ஐயமும் உம்மை வாட்டுகிறது. அவன் ராமபத்ரன், 'மங்களானாம் ச மங்களம்'; மங்களமே உருவானவன். நல்லோர்க்கு மங்களத்தை விளைவிப்பவன். அமாவாஸ்யையன்று இரவில் நாம் எந்தப் பொருளையும் கண்களால் பார்த்து அறியமுடியாது. வானிலும் நிலத்திலும் எங்கும் காரிருள். அது திரைச் சீலை போன்று அனைத்தையும் மறைக்கிறது. இவ்விருளின் ஆட்சி சிறிது நேரம் தான், பொழுது புலர்கிறது. வானத்தில், ஒரு திசையில், சிறு இடத்தில் சிறிய அளவினனான ஸூர்யன் உதயமாகிறான். இருள் விரைந்து ஓடுகிறது. ராமபத்ரன் ரவிகுலத் தோன்றல், சூரியக்குஞ்சு. இவன் தேஜஸ்ஸினால் அரக்கராம் இருட்கற்றை விரைந்தோடி மறையவேண்டியது தானே. உமக்கு ஏன் ஐயம்,'' என்றார்.

தசரதர்: ''முனிவரே! மன்னிக்க, நீர் கூறுவது உண்மையாயினும் என் மனம் ஏற்க மறுக்கிறது. 'நைவ தாஸ்யாமி புத்ரகம்'. சிறுவனாம் ராமனை கண்டிப்பாகக் கொடுக்க மாட்டேன்,'' என்றான்.

इति नरपति जल्पनाद्द्विजेन्द्रं
कुशिकसुतं सुमहान् विवेश मन्युः ।
सुहुत इव समिद्भिः आज्यसिक्तः
समभवदुज्वलितः महर्षि वह्निः ॥

இதி நரபதி ஜல்பனாத் த்விஜேந்த்ரம்
குசிகஸுதம் ஸுமஹான் விவேஶ மன்யு: ।
ஸுஹுத இவ ஸமித்பி: ஆஜ்ய ஸிக்த:
ஸமபவத் உஜ்வலித: மஹர்ஷி வன்ஹி: ॥

என்றனன் என்றலும் முனிவோடு எழுந்தனன்
மண் படைத்தமுனி இறுதிக்காலம்
அன்றென ஆமென இமையோர் அயிர்த்தனர், மேல்
வெயில் கரந்தது அங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தன, மேல் நிவந்த கொழுங்
கடைப் புருவம் நெற்றி முற்றச்
சென்றன, வந்தது நகையும், சிவந்தன கண்
இருண்டன போய்த் திசைகள் எல்லாம்.

க. ரா. பால. - கையடை.

அரசன் முன்னுக்குப் பின் முரணாக, முடிவாகப் பேசியதும் விஸ்வாமித்ரர் பெருங்கோபங் கொண்டார். ப்ரஹ்மர்ஷியாயினும் அவரால் கோபத்தை அடக்கமுடியவில்லை. ஹோமம் செய்பவர்கள் முதலில் அக்னியில் ஸமித்தைச் சேர்ப்பார்கள். பின்னர் நெய்யை எடுத்து ஹோமம் செய்வர். ஸமித்துக்களினால் சுடர்விட்டு எரியும் அக்னியில், நெய்யைச் சேர்த்ததும் குபீர் என விரைந்து மேலே எழும்பும். அது போன்று முனிவரின் கோபம் பன்மடங்காயிற்று. ஆஸனத்தினின்றும் விரைந்து எழுந்தார். அவரது புருவங்கள் நெற்றியின் மீது ஏறின. பெருஞ்சிரிப்புச் சிரித்தார். கண்கள் சிவந்தன. தேவர்கள், முனிவனால் உலகத்துக்கே பெருங்கேடு, இறுதிக் காலம் வரலாமென ஐயுற்றார். கோபாக்னியில் எழுந்த புகை சூரியனை மறைக்க உலகமே இருண்டது. ரயிலில் செல்பவர்கட்கு வெளிப் பொருட்கள் சுழல்வது போன்று காட்சி அளிக்கும். அதுபோன்று அனைவருக்கும் அச்சம் மிகமிக உலகிலுள்ள பொருள்கள் நிலைபெயர்ந்து சுழன்றனவாம். முன்பொரு தடவை கோபத்தினால் புதிதாக அனைத்தையும் படைக்க முனைந்தவரான படியாலே, இந்தக் கோபம் உலகத்தை அழித்துப் புதிதாகச் செய்துவிடுமோ என நினைப்பது இயற்கை தானே! முன்பொரு தனி மனிதனுக்கு (த்ரிசங்குக்கு) செய்ய நினைத்தது நிறைவேறாததனாலே வந்த கோபம். இப்பொழுதோ தனக்காகத் தான் செய்ய நினைத்தது நிறைவேறாத படியே வந்த கோபம். இது மிகுதியாகத் தானே இருக்கும்! அல்லது உலக நன்மைக்காக, தசரதர் நன்மைக்காக, ராமன் நன்மைக்காகவன்றோ ராமனை வேண்டுகிறார். அதை உணராத பொழுது கோபம் மிகத்தானே செய்யும்! இத்தகைய அடங்காத கோபத்தைச் சுட்டிக்காட்டவே வால்மீகி விஸ்வாமித்ர முனிவரை ''மஹர்ஷி வஹ்னி'' ''மாமுனிவராகிய தீ'' என உருவகப்படுத்திக் கூறினார். இவ்வுருகத்தின் கருத்தையே கம்பர் இங்கு மிக அழகாக விளக்கினார்.

पूर्वमर्थं प्रतिश्रुत्य प्रतिज्ञां हातुमिच्छसि ।
राघवाणामयुक्तोऽयं कुलस्यास्य विपर्ययः ।
मिथ्याप्रतिज्ञः काकुत्स्थ सुखीभव स बान्धवः ।
त्रस्तरूपं स विज्ञाय जगत्सर्वं महानृषिः ।

பூர்வம் அர்த்தம் ப்ரதிஶ்ருத்ய ப்ரதிஜ்ஞாம் ஹாதும் இச்சஸி।
ராகவாணாம் அயுக்த: அயம் குலஸ்ய அஸ்ய விபர்யய: ॥
மித்யா ப்ரதிஜ்ஞ: காகுத்ஸ்த ஸுகீபவ ஸபாந்தவ: ॥
த்ரஸ்தரூபம் ஸ: விஜ்ஞாய ஜகத் ஸர்வம் மஹான் ரிஷி: ।

नृपतिं सुव्रतः धीरः वसिष्ठः वाक्यमब्रवीत् ॥
संश्रुत्यैवं करिष्यामीति अकुर्वाणस्य राघव ।
इष्टापूर्त वधो भूयात् तस्माद्रामं विसर्जय ॥
कृतास्त्रमकृतास्त्रं वा नैनं शक्ष्यन्ति राक्षसाः ।
गुप्तं कुशिकपुत्रेण ज्वलनेनामृतं यथा ॥
एषः विग्रहवान् धर्मः एष वीर्यवतां वरः ।
एषः विद्याधिको लोके तपसश्च परायणम् ॥
तेषां निग्रहणे शक्तः, स्वयं च कुशिकात्मजः ।
तव पुत्र हितार्थाय त्वामुपेत्याभियाचते ॥

ந்ருபதிம் ஸுவ்ரத: தீர: வஸிஷ்ட: வாக்யம் அப்ரவீத் ॥
ஸம்ஶ்ருத்ய ஏவம் கரிஷ்யாமி இதி அகுர்வாணஸ்ய ராகவ! ।
இஷ்டாபூர்த்த வத: பூயாத் தஸ்மாத் ராமம் விஸர்ஜய ॥
க்ருதாஸ்த்ரம் அக்ருதாஸ்த்ரம்வா நைனம் ஶக்ஷ்யந்தி ராக்ஷஸா: ।
குப்தம் குஶிகபுத்ரேண ஜ்வலனேன அம்ருதம் யதா ॥
ஏஷ: விக்ரஹவான் தர்ம: ஏஷ: வீர்யவதாம் வர: ।
ஏஷ: வித்யா அதிக: லோகே தபஸ: ச பராயணம் ॥
தேஷாம் நிக்ரஹணே ஶக்த: ஸ்வயம் ச குஶிகாத்மஜ: ।
தவ புத்ர ஹிதார்த்தாய த்வாம் உபேத்ய அபியாசதே ॥

வா. ரா. பால. - 21

கௌசிகர்: ''அரசே, முன்பு விரும்புவதனைத்தையும் தருவதாக உறுதி கூறி, பின்னர் அதைக் கைவிட விரும்புவது மனிதனுக்கு அழகன்று. அதிலும் ஒரு அரசன் ஸத்யத்தினின்றும் பிறழ்வது தகுமோ? மேலும் நீர் ரவிகுலத் தோன்றல், ஸூர்ய வம்சத்தினுள் இக்ஷ்வாகு குலம் உமது குலம், உமது குலத்திற்கே இழுக்கைத் தேடலாமோ? கூறியதை மறுப்பது தக்கதன்று. தகுமென (யுக்தம் என) நினைப்பீராயின் யான்வந்த வழியே திரும்புகிறேன். தன் சொல்லைப் பொய்யாக்கிய நீர் பந்துக்களுடன் நண்பர்களுடனும் இன்பமாக வாழும்'' என்றார்! (ஸத்யத்தை மீறியவன் கூண்டோடு அழிவான் என்பதைக் கோபத்தினால் தொனிப் பொருளாக வைத்துப் பேசுகிறார்).

விச்வாமித்ரரின் கோபத்தைக் கண்டு பூமி முழுவதும் நடுங்குகிறது. (எங்கும் பூகம்பம்) தேவர்கள் என்ன ஆகுமோ என அஞ்சுகின்றனர். இந் நிலையைக் கண்ட வஸிஷ்டர் துணிந்து உறுதிபடப் பேசலானார். ''அரசே! எதையும் தரச் சித்தமாக இருப்பதாகக் கூறிவிட்டு அதைச் செய்யாமல் மறுப்பது உமது குலத்திற்கே அழிவைத் தரும். நீரும் உமது குலத்தினரும் செய்த இஷ்டாபூர்த்தங்கள் அழியும். இஷ்டமாவது நீங்கள் செய்த அஸ்வ மேதம் முதலிய வேள்விகள்'' ஆம்.

वापी कूपतटाकादि प्रतिष्टा सेतु बन्धनम् ।
अन्न प्रदानं आराम पूर्तमिध्यभिधीयते

வாபீ கூப தடாகாதி ப்ரதிஷ்டா ஸேதுபந்தனம் ।
அன்னப்ரதானம் ஆராம: பூர்தமிதி அபிதீயதே॥

பொதுமக்களின் நலனுக்காக நடவாபி அமைப்பது, கிணறு தோண்டுவது, குளம் வெட்டுவது, அணை, பாலம் கட்டுவது, ஏழைகட்கும் விருந்தினர்கட்கும் ஆங்காங்கு அன்ன சத்திரங்கள் அமைத்து உணவு அளிப்பது, பூங்காக்கள், தோட்டங்கள் வளர்ப்பது ஆகியவை பூர்த்தமாம்.

''இவற்றால் உமக்குக் கிடைக்கக்கூடிய பயன்கள் (புண்ணியங்கள்) அனைத்தும் அழிந்துபோம். எனவே ராமனை முனிவருக்கு அளிப்பதே நன்று. இவன் வில்வித்தையில் பயிற்சி பெற்றானோ அல்லனோ. அதைப் பற்றி உமக்கு ஏன் கவலை? இம்முனிவரின் பாதுகாப்பில் அரவணைப்பில் இருக்கப் போகும் ராமனை அரக்கர்கள் என்ன செய்ய முடியும்? தேவர்களிடமிருந்த அம்ருதத்தை அஸுரர்களிடமிருந்து அக்னிசக்கரம் பாதுகாத்தது போல் முனிவர் உம்குமாரனைப் பாதுகாப்பர்'' என்றார்.

தேவர்களும் அஸுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். அமிழ்தம் வந்தது. அதை அஸுரர்கள் பறித்துக் கொண்டனர். பரமன் மோஹினீ அவதாரம் எடுத்து அஸுரர்களை மயக்கித் தான் பங்கிட்டுத் தருவதாகக் கூறி அமிழ்தத்தைப் பெற்று தேவர்கட்கே கொடுத்து அஸுரர்கட்கு இல்லாமல் செய்தார். இருதரப்பினருக்கும் போர் மூண்டது. அமிழ்தம் உண்ட வலிமையினால் தேவர்கள் வென்றனர். இப்போரில் நர நாராயணர்கள் வில்லையும் சக்ரத்தையும் கொண்டு தேவர்கட்கு உதவினர். மீதமுள்ள அம்ருதத்தை இந்திரலோகத்தில் அஸுரர்கள் பறித்துச் செல்ல முடியாத ஒரிடத்தில் பாதுகாப்பாக வைத்தனர். அமிழ்த கலசத்தைச் சுற்றிலும் அக்னியை ஜ்வலிக்கச் செய்தனர். கலசத்தை ஒட்டி ஒரு யந்திரத்தை அமைத்து எப்பொழுதும் ஒரு சக்கரத்தைச் சுழலச் செய்தனர். அச்சக்ரத்தின் ஆரங்கள் மிகக் கூர்மையானவை. நெருங்குகின்றவர்களை அது செதிள் செதிளாகச் செதுக்கித் தள்ளிவிடும். ஆரங்கள் தீ ஜ்வாலைகளைக் கக்கிய வண்ணம் இருக்கும். ஜ்வாலைகள் அக்னியையும் ஸூர்யனையும் விஞ்சியவை. அருகில் வருகின்றவர்களை தீய்த்துப் பொசுக்கிச் சாம்பலாக்கிவிடும். ''இவ்வமிர்தத்தை தேவர்கள்

காத்தது போன்று ராமாம்ருதத்தை மஹர்ஷி வன்ஹியான கௌசிகர் நன்கு காப்பாற்றுவார். கவலை வேண்டாம்'' என்றார். மேலும் கூறுவார்: ''அரசே இம்முனிவரின் (ராமனின்) பெருமையை அறியாது அஞ்சுகிறீர் போலும்! இவர் தர்மமே உருவானவர். பிறவி முதல் இயற்கையான வீரம் உடையவர். இயற்கையான அறிவும் ஆற்றலும் உடையவர். தவத்திற்கு நிலைக்களமாய்த் திகழ்பவர். என இருவருக்கும் பொதுவான தன்மையைத் தெரிவித்தார். இவர்கள் இருவரும் சேர வேண்டியவர்கள். முனிவரின் தவத்திற்குப் பயனாய், அடையப்படுபவனாய் இருப்பவன் ராமன்.''

இங்கு முனிவரின் பெருமையைப் பேச வந்த வஸிஷ்டர் ராமனின் பெருமையையே மறைத்துப் பேசினார். ஏன்? ''ஸர்வ: ஸகந்தேஷு விஶ்வஸிதி'' எவரும் தன்னையொத்தவர்களையே சார்ந்து நிற்பதும், பேசுவதும், நேசிப்பதுமே இயல்பு. ஆம் இனம் இனத்தையே சார்ந்து நிற்கும். வஸிஷ்டர் முனிவர், எனவே விஶ்வாமித்ர முனிவரை ஆதரித்துப் பேசுகிறார் என்று தசரதர் நினைக்கக் கூடாதே. நினைத்தால் என்ன? வஸிஷ்டருக்கு தசரதரிடம் பயமா? இல்லை. ஆனால் அரசர் ''இவ்விருவரும் ஒன்று'' என எண்ணினால் ராமனை அனுப்பும் கார்யம் கெட்டுவிடுமே. எனவே வேறு வகையில் பேசத் தொடங்கினார். ''அரசே! விஶ்வாமித்திரர் தானே தன் எதிரிகளை வீழ்த்தும் ஆற்றலுள்ளவர். எனினும் உமது புதல்வனின் நன்மைகட்காகவே உம்மை அணுகி யாசிக்கிறார்.''

நின் மகற்கு
உறுத்தல் ஆகலா உறுதி எய்து நாள்
மறுத்தியோ எனா வசிட்டன் கூறினான்.

க. ரா. பால. - கையடை

''உமது குமாரனாகிய ராமனுக்குப் பிறரால் ஆகாத (அடைவிக்க முடியாத) பற்பல நன்மைகள் விஶ்வாமித்திரரால் வந்து சேரும்போது அவற்றைத் தடுத்தல் ஆகுமோ?''

பெய்யுமாரியால் பெருகு வெள்ளம் போய்
மொய் கொள் வேலைவாய் முடுகுமாறுபோல்
ஐய நின்மகற்கு அளவில் விஞ்சை வந்து
எய்து காலம் இன்று எதிர்ந்தது என்னவே.

க. ரா. பால. - கையடை.

''பெருமழை பெய்கிறது. பலநாள் பெய்கிறது. எங்கும் வெள்ளம். எல்லாம் ஒன்று சேர்ந்து கடலை நோக்கித் தானே பாயும். எவ்வளவு நீர் வந்தாலும் கடல் தன்னகத்தே கொள்ளும். அது போல முனிவரின் மூலமாக அவர் அறிந்த அஸ்த்ர சஸ்த்ர வித்தைகளும் பல நன்மைகளும் எல்லாம் கம்பீரனான ராமனிடத்தில் வந்து சேரப் போகின்றன. அவச்யம் ராமனை அனுப்பும்.''



அன்னதம்பியும் தானும் ஐயன்ஆம்
மன்னன் இன்னுயிர் வழிக்கொண்டாலென
சொன்ன, மா தவன் தொடர்ந்து சாயைபோல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினான்.

பிரியா விடை

त्वद्विधाः यद्गृहं यान्ति तत्रैवायान्ति सम्पदः ।

த்வத்விதா: யத் க்ருஹம் யாந்தி தத்ர ஏவ ஆயாந்தி ஸம்பத: ॥

அத்யாத்ம ராமாயணம்

தன் அரண்மனைக்கு வந்த விஸ்வாமித்ரரைப் பார்த்து தசரதர் பேசுகிறார், ''முனிவரே! தங்களைப் போன்ற முனிவர்கள் எவருடைய க்ருஹத்திற்கு வருகிறார்களோ அங்கு செல்வங்கள் தாமே வந்தடையும்.''

चत्वारोऽमरतुल्यास्ते तेषांरामोऽतिवल्लभः ।

रामस्तु इतोगच्छतिचेत् न जीवामि कथंचन ॥

சத்வார: அமரதுல்யாஸ் தே தேஷாம் ராம: அதிவல்லப: ।
ராம: து இத: கச்சதிசேத் ந ஜீவாமி கதம்சந ॥

அத்யாத்ம ராமாயணம்

''எனது குமாரர்கள் நால்வரும் தேவர்களை ஒத்தவர்கள். அவர்களுள் ராமனிடம் எல்லையற்ற அன்புடையவன் யான். ராமன் என் உயிர் போன்றவன். அவன் அயோத்தியினின்று என்னை விட்டுப் பிரிந்து செல்வானேயாகில் என் வாழ்வும் முடிந்துவிடும். பல வழிகளில் மிக முயன்று உயிரை தரிக்கச் செய்ய வேண்டுமென்று நான் ஆசைப்பட்டாலும் என் உயிர் தரிக்காது''. (பெரியோர்களின் வருகை நல்லதை அல்லவா நல்க வேண்டும். நான் இறந்தால் உலகம் உம்மையல்லவா தூற்றும்! 'விஸ்வாமித்ரர் வந்தார் நம் அரசர் இறந்தார்', என பழிச்சொல் அல்லவா தங்களுக்கு வந்து சேரும்! என மறைமுகமாக உணர்த்துவதில் நோக்கு போலும்). இந்நிலையில் வஸிஷ்டர் கூறலானார்.

शृणु राजन् देवगुह्यं गोपनीयं प्रयत्नतः ।

रामो न मानुषो जातः परमात्मा सनातनः ।

भूमेः भारावताराय ब्रह्मणा प्रार्थितः पुरा ।

स एव जातः भवने कौसल्यायां तवानघः ।

त्वं तु प्रजापतिः पूर्वं कश्यपः ब्रह्मणः सुतः ।

कौसल्या च अदितिः देवमाता पूर्वं यशस्विनी ।

भवन्तौ तप उग्रं वै तेपाते बहु वत्सरम् ।

वृणीष्व वरं इत्युक्ते त्वं मे पुत्रः भवामल ।

तथेत्युक्त्वा अद्य पुत्रः ते जातः रामः स एवहि ।
शेषस्तु लक्ष्मणो राजन् राममेवान्वपद्यत ।
जातौ भरत शत्रुघ्नौ शङ्ख चक्रे गदाभृतः ।
योगमायाऽपि सीतेति जाता जनक नन्दिनी ।
विश्वामित्रोऽपि रामाय तांयोजयितुमागतः
एतत् गुह्यतमं राजन् न वक्तव्यं कदाचन ।

ஶ்ருணு ராஜன் தேவகுஹ்யம் கோபநீயம் ப்ரயத்னத: ।
ராம: ந மானுஷ: ஜாத: பரமாத்மா ஸனாதன: ॥
பூமே: பாராவதாராய ப்ரம்ஹ்ணா ப்ரார்த்தித: புரா ।
ஸ ஏவ ஜாத: பவனே கௌஸல்யாயாம் தவ அனக: ॥
த்வம் து ப்ரஜாபதி: பூர்வம் கஶ்யப: ப்ரஹ்மண: ஸுத: ।
கௌஸல்யா ச அதிதி: தேவமாதா பூர்வம் யஶஸ்வினீ ॥
பவந்தௌ தப: உக்ரம் வை தேபாதே பஹுவத்ஸரம் ।
வ்ருணீஷ்வ வரம் இத்யுக்தே த்வம் மே புத்ர: பவஅமல! ॥
ததா இதிஉக்த்வா அத்ய புத்ர: தே ஜாத: ராம: ஸ: ஏவ ஹி ॥
சேஷ: து லக்ஷ்மணோ ராஜன்! ராமம் ஏவ அன்வபத்யத ।
ஜாதௌ பரத ஶத்ருக்னௌ ஶங்க சக்ரே கதாப்ருத: ॥
யோகமாயா அபி ஸீதாஇதி ஜாதா ஜனக நந்தினீ ।
விச்வாமித்ர: அபி ராமாய தாம் யோஜயிதும் ஆகத: ॥
எதத் குஹ்யத்மம் ராஜன் ந வக்தவ்யம் கதாசன ॥

அத்யாத்ம ராமாயணம்

வஸிஷ்டர் தசரதரிடம் தனிமையில் கூறுவார். ''அரசே! பிறர் அறியாத வாறு முழு முயற்சியுடன் மறைக்க வேண்டிய தேவரஹஸ்யம் ஒன்று உண்டு. அதைச் சொல்லுகிறேன் கேளும். நம் ராமன் மனிதன் அல்லன். ஸனாதனமான ஸ்ரீமந் நாராயணனே பிறந்திருக்கிறான். ஒரு ஸமயம் நாட்டில் தீயோர்கள் மிக, அவர்களைச் சுமக்க முடியாது துன்புற்ற பூதேவி நான்முகனை அணுகித் தனது கஷ்டங்களை முறையிட்டாள். பிரமனும் பரமனிடம் அதை முறையிட்டுப் பிரார்த்திக்க அந்நாராயணனே உமது அரண்மனையில் கௌஸல்யா தேவியிடம் உமக்குப் புதல்வனாக அவதரித்தான். இதற்கு ஒரு காரணமும் உண்டு. சொல்லுகிறேன் கேளும்.''

''அரசே! நீர் முற்பிறவியில் பிரமனின் புதல்வனான கச்யப ப்ரஜாபதி யாக இருந்தீர். உமது மனைவி கோஸலை புகழ் பெற்ற தேவ மாதாவான அதிதி தேவியாக இருந்தாள். நீங்கள் இருவரும் (கச்யபரும் அதிதியும்) பல்லாண்டுகள் உக்ரமான தவத்தினை மேற்கொண்டீர்கள். உங்கள் தவத்திற்கு மகிழ்ந்து நாராயணன் எதிரே தோன்றி (ப்ரத்யக்ஷமாகி) விரும்பிய

வரத்தைக் கேளுங்கள், தருகிறேன் என்றார். அதற்கு நீங்கள் இருவரும், ''தூயோனே! நீரே எமக்குப் புதல்வனாகப் பிறக்க வேண்டும்'' என்று வரம் கேட்டீர்கள். பரமனும் ''அப்படியே ஆகுக'' என்று கூறி அதன்படியே உங்களுக்குத் தவப் புதல்வனாக இப்பொழுது பிறந்தான். அப்புதல்வனே ராமன், ஆதிசேஷனே லக்ஷ்மணனாகப் பிறந்திருக்கிறான். அவன் ராமனையே தொடர்பவன். நாராயணனுடைய சங்கு சக்ரங்களே பரத சத்ருக்னர்கள். பகவானுடைய யோக மாயையே ஸீதாதேவி. ஜனகரை மகிழ்விக்கப் பெண்ணாகத் தோன்றியவள். அவளை ராமனோடு சேர்த்து வைக்கவே விஸ்வாமித்ரர் வந்திருக்கிறார். இது மிகமிக ரஹஸ்யமானது. ஒரு பொழுதும் வெளியில் சொல்லக் கூடாதது. எனவே ராமனை அனுப்பத் தயக்கம் வேண்டாம்'' என வஸிஷ்டர் உணர்த்தியதாக அத்யாத்ம ராமாயணம் கூறும். (வால்மிகம் ராமனை மானுடனாகவும் அத்யாத்ம ராமாயணம் தெய்வ மாகவும் பேசும்.)

तथा वसिष्ठे ब्रुवति राजा दशरथः प्रियम् ।
प्रहृष्ट वदनः रामं आजुहाव सलक्ष्मणम् ।

ததா வஸிஷ்டே ப்ருவதி ராஜா தஶரத: ப்ரியம் ।
ப்ரஹ்ருஷ்ட வதன: ராமம் ஆஜுஹாவ ஸலக்ஷ்மணம் ॥

வா. ரா. பால. 22.

குருவின் வாசகம் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென.

க. ரா. பால.- கையடை

குலகுருவான வஸிஷ்டரின் ஆணையை ஏற்று தசரதன் தனது செல்வக் குமாரனும் திருவின் கேள்வனும் (கணவனும்) ஆகிய ராமனை அழைத்து வரும்படி மலர்ந்த முகத்துடன் ஏவலரை நோக்கிச் சொன்னான். (இங்கு திருசெல்வம், தன் உடமைக்கு செல்வத்திற்கு, பூமிக்கு ராமனே வாரிசு ஆனபடியால் திருவின் கேள்வன் என்றார். அல்லது அத்யாத்ம ராமாயணத்தை மனதிற் கொண்டு கம்பர் ஸீதா பதியாகப் போவதைச் சுட்டினர் எனலாம். குரு சொல்ல வேறுவழியின்றி வேண்டாவெறுப்பாக ராமனை அழைத்தார் எனக் கூறவேண்டியிருக்க மகிழ்வுடன் அழைத்தார் என வால்மீகியின் கூற்று அத்யாத்மத்தில் கூறிய கருத்தை மனதிற் கொண்டார் என்பதை அறிவுறுத்து கிறது எனலாம்.)

स पुत्रं मूर्ध्नि उपाघ्राय राजादशरथः प्रियम्
ददौ कुशिकपुत्राय सुप्रीतेनान्तरात्मना ।

ஸ புத்ரம் மூர்த்னி உபாக்ராய ராஜா தஶரத: ப்ரியம் ।
ததௌ குஶிகபுத்ராய ஸுப்ரீதேன அந்தராத்மனா ॥

வா. ரா. பால. - 22

வந்த நம்பியைத் தம்பிதன் னொடும்
முந்தை நான் மறை முனிக்குக் காட்டி நல்
தந்தைநீ தனித்தாயும் நீ இவர்க்கு
எந்தை தந்தனென் இயைந்த செய்க என்றான்.

க. ராம. பால. - கையடை

ராமன் வந்தான். இணை பிரியாத லக்ஷ்மணனும் வந்தான். அவர்கட்கு தாயாரும், தந்தையும், குருவும் ஆகிய மூவரும் மங்களாசாஸனம் செய்தனர். அவர்களை தசரதர் உச்சி முகந்து மனக்கலக்கமின்றி உவந்த உள்ளத்துடன், குசிக புத்ரருக்கு (விஸ்வாமித்ரருக்கு)க் கொடுத்தார். இருவரும் சேர்ந்து வந்தபடியால் அவருக்கு இவன்தான் ராமன். இவன் தான் லக்ஷ்மணன் என்று அறிமுகப்படுத்திக் கொடுத்தாராம். முனிவரைப் பார்த்து ''எந்தையே! இவர்கள் தாய் தந்தையரைப் பிரிந்து ஒரு கணமும் இருந்திலர். இனி இவர்கட்கு நீர் அப்பாவும் அம்மாவும் ஆவீர். எதிர்காலத்திற்குத் தேவையான ஹிதத்தையும், தாய் அவ்வப்பொழுது செய்யும் தேவையான ப்ரியத்தையும் செய்ய வேண்டிய பொறுப்பு உம்முடையதாயிற்று. ஆக எல்லா அனுகூலங் களையும் செய்வீராக'' என்று குமாரர்களை முனிவருக்குக் கொடுத்தார்.

(இங்கு ''குசிக புத்ராய ததெள'' என்றார். முனிவருக்கு என்றோ, விஸ்வாமித்ரருக்கு என்றோ கூறவில்லை. இதிலிருந்து குசிகர் உமது தகப்பனார். உம்மை யாருக்காவது கொடுக்க வேண்டி நேர்ந்தால்—உம் தகப்பனார் அவரிடம் என்ன என்ன எதிர் பார்ப்பாரோ அதையெல்லாம் நீர் ராமனுக்குச் செய்ய வேண்டும் என்பது தொனியாகும்).

கொடுப்பதில் இரு வகையுண்டு. ''வண்ணானுக்கு ஆடைகளைக் கொடுத்தார்'' என்றால் அவற்றை அவன் வெளுத்துத் திருப்பித் தர வேண்டும். அவனுக்கே தீபாவளிக்கு ஆடைகளைக் கொடுத்தார், என்றால் அதைத் திருப்பித்தர வேண்டியதில்லை. அது தீபாவளி இனாமாகும். ஸம்ஸ்கிருதத்தில் நான்காம் வேற்றுமையை உபயோகித்தால் அப்பொருள் அவனையே சாரும். ''ததெள குசிக புத்ராய'' என்று வால்மீகி கூறுவதால் ராமனை முனிவருக்கே உரிய சொத்தாகக் கொடுத்து விட்டார் என்றே கொள்ள வேண்டும். இதை விளக்கவே கம்பர் ''தந்தையும் நீ தனித்தாயும் நீ'' என்றார். இனி ராமனுக்கு தாயும் தந்தையும் முனிவரே. தசரதனோ அவன் மனைவிகளோ இல்லர் என்று கொள்ள வேண்டும், இனி இவர்களை விஸ்வாமித்திரர் தம் இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளலாம். தானம் கொடுத்த பொருளை நாம் மீண்டும் பெறுவது வழக்கமில்லை. கோதானம் பண்ணினால் அதன் பாலை தானம் பண்ணியவர் பருகுவது தவறாகும். அப்படியிருக்க ஸீதா கல்யாணத்திற்குப் பிறகு ராமனை (தானம் கொடுக்கப் பட்டவரை) எப்படி தன் பிள்ளையாக அயோத்திக்கு அழைத்து வந்தார் எனில், கூறுவோம். பெண்ணையோ, பிள்ளையையோ தானம் பண்ணும் பொழுது ''ந மம'' அதில் எனக்கு உரிமையில்லை, என்று சொல்வது

கிடையாது. அவளிடத்தில் தான் பெற்று வளர்த்த பெண் எனும் தொடர்பு உண்டு. ஆயினும், தனக்கே உரிய (மூத்த) புதல்வனாகக் கருதி பின்னர் முடி சூட்ட நினைப்பது எங்ஙனம்? எனில் ஸீதா கல்யாணத்திற்குப் பிறகு விடை பெற்று இமயத்திற்குச் செல்லும் பொழுது ராமனை முனிவர் தசரதருக்குத் திரும்ப தானம் பண்ணிக் கொடுத்து விட்டார் என்றே கொள்ள வேண்டும்.

ततोवायुस्सुखस्पर्शो विरजस्को ववौ तदा ।
विश्वामित्रगतं रामं दृष्टवा राजीव लोचनम् ।
पुष्पवृष्टिर्महत्यासीत् देव दुन्दुभिनिस्वनैः ।
शंख दुन्दुभिनिर्घोषः प्रयाते तु महात्मनि ।

தத: வாயு: ஸுகஸ்பர்ஶ விரஜஸ்க: வவௌ ததா ।
விச்வாமித்ர கதம் ராமம் த்ருஷ்ட்வாராஜீவ லோசனம் ॥
புஷ்ப வ்ருஷ்டி: மஹதீ ஆஸீத் தேவதுந்துபி நிஸ்வனை: ।
சங்க துந்துபி நிர்கோஷ: ப்ரயாதே து மஹாத்மனி ॥

வா. ரா. பால. - 22.

தசரதர் ராமனை விஶ்வாமித்திரருக்கு அளித்ததும் அவன் தம்பியோடு முனிவரின் பக்கமாக மலர்ந்த முகத்துடன் கண்களில் மகிழ்ச்சி வெள்ளமிட வந்து நின்றார். அப்பொழுது இளங்காற்று வீசிற்று. தூசு அற்ற காற்று, உடலின் மேல் பட்டதும் நாட்டிலுள்ளோர் அனைவரும் இன்புற்றனர். வானத்தினின்றும் தேவர்கள் மலர் மழை பொழிந்தனர். துந்துபி வாத்யங்களை முழக்கினர். விஶ்வாமித்திரரோடு ராமன் அரண்மனையினின்றும் வெளியே புறப்பட, தேவர்கள் வாத்யங்களோடு சங்குகளைக் கையிலேந்தி வாயில் வைத்து ஊதினார். ஒருவர் வெளியில் புறப்படும் போது எதிர்காற்றும், கோரமான ஒலிகளும் அபசகுனம், ராமனுக்கு இக்காற்றும் வாத்ய கோஷங்களும் சகுனமாய் பெருமாளுக்குப் புறப்பாட்டு வாத்யமாயிற்று.

க்ருஷ்ணாவதாரத்தில் அவதரிக்கும் பொழுதே அவதார கார்யம் தொடங்கிவிட்ட படியால் அனுகூலவாதம் (சுகமான காற்று) புஷ்பவர்ஷ, தேவதுந்துபி கோஷம் முதலியவை சுகரால் வருணிக்கப்பட்டன. ராமாவதாரத்திலோ விஶ்வாமித்ரரோடு புறப்பட்ட பிறகு தான் அவதார கார்யம் - துஷ்ட நிக்ரஹம், சிஷ்டரக்ஷணம் தொடங்குகிறது. விஶ்வாமித்ரர் என்பதற்கு, வேதமே ''உலகிற்கு எல்லாம் நண்பன் ஆகையால் விஶ்வாமித்ரர் என சொல்லப்படுகிறார்'' என்று பேசுகிறது. ராமனை இவர் அழைத்துச் செல்வது உலக நன்மைக்குத் தானே!

तौ निदेश करणोद्यतौ पितुः धन्विनौ चरणयोः निपेततुः
भूपतेरपि तयोः प्रवत्स्यतोः नेत्रयोरुपरि बाष्प बिन्दवः ।
मातृवर्ग चरणस्पृशौ मुनेः तौ प्रपद्य-पदवीं महौजसः ।

தௌ நிதேஶ கரணோத்யதௌ பிது: தன்வினௌ
சரணயோ: நிபேதது:
பூபதேரபி தயோ: ப்ரவத்ஸ்யதோ: நேத்ரயோ: உபரி
பாஷ்ப பிந்தவ:
மாத்ருவர்க சரணஸ்ப்ருஶௌ முனே: தௌ ப்ரபத்ய
பதவீம் மஹௌஜஸ:

காளிதாஸன் ரகுவம்சம் 11 - 4

कलापिनौ धनुष्पाणी शोभयानौ दिशो दश ।
विश्वामित्रं महात्मानं त्रिशीर्षाविव पन्नगौ ॥

கலாபினௌ தனுஷ்பாணீ ஶோபயானௌ திஶ: தஶ ।
விச்வாமித்ரம் மாஹாத்மானம் த்ரிஶீர்ஷௌ இவ பன்னகௌ ॥

வா.ரா.பால. - 22

धन्विनौ तमृषिमन्वगच्छतां पौरदृष्टिकृत मार्गतोरणौ ।

தன்வினௌ தம் ரிஷிம் அன்வகச்சதாம் பௌர த்ருஷ்டி க்ருத
மார்க தோரணௌ ॥

காளிதாசன், ரகுவம்சம்

पक्षी तार्क्ष्यः समागत्य त्रीणिचास्त्राणि कार्मुकम्
सर्वभूतैरदृश्यमान दत्वा ताभ्यां पुनर्ययौ ।

பக்ஷீ தார்க்ஷ்ய: ஸமாகத்ய த்ரீணி ச அஸ்த்ராணி கார்முகம்
ஸர்வ பூதை: அத்ருஶ்ய மான: தத்வா தாப்யாம் புன: யயௌ ॥

பாத்ம புராணம்

முனிவர் அரசரிடம் விடைபெற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் புறப்பட்டார். தந்தையின் கட்டளையை தலைமேற்கொண்டு ராமனும் லக்ஷ்மணனும் தம் கையிலுள்ள வில்லை, தந்தையின் திருவடிகளிலே தாழ்த்தி தாங்களும் விழுந்து வணங்கினர். குழந்தைகள் தம்மை விட்டுப் பிரிவதைப் பொறுக்காத தந்தையின் கண்களினின்றும் பெருகிய கண்ணீர் அவர்கள் தலையில் விழுந்தன. இவ்வாறு பிரியா விடைபெற்று, அன்னை மார்கள் இருக்குமிடம் சென்று அடிபணிந்து முனிவரைத் தொடர்ந்தனர். விஶ்வாமித்ரர் முன்னே விரைந்து செல்ல இருவரும் இரு தோள்களிலும் அம்பறாப் பைகளை மாட்டிக் கொண்டும், கையில் வில்லை ஏந்தியும் சென்றார்கள். (இவர்கட்கு பிறர் அறியாத வண்ணம் கருடன் கத்தி, வில், அஸ்த்ரங்களை அளித்துவிட்டுச் சென்றதாக பாத்ம புராணம் கூறும்), ராஜ குமாரர்கள் நாட்டை விட்டுச் செல்வதை அறிந்த நகர மக்கள் ராஜ வீதியில் கீழும் மேலும் உள்ள அறைகளின் ஜன்னல்களில் குழுமிப்பார்த்த வண்ணம்

இருந்தனர். இது ராஜ குமாரர்கள் ராஜ வீதிகளில் செல்லும் பொழுது அவர்கட்கு மரியாதை செய்வதற்காகத் தோரணம் கட்டியது போல் இருந்ததாம் (காளிதாஸன்). ராஜ குமாரர்கள் தலையைச் சீவிக் கொண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். தலைக்கு சமமாக இரு தோள்களிலும் அம்பறாப் பைகளின் வாய்ப்பகுதி கட்டப்பட்டு கொண்டை போல் காட்சியளிக்கிறது. இது பார்ப்போருக்கு மூன்று தலைப் பாம்புகள் இரண்டு விரைந்து செல்கின்றனவோ எனத் தோன்றியதாம். பின்னும் இருமருங்கிலும் சிறிதும் திரும்பிப் பாராது முனிவரையே நோக்கிய வண்ணம் நேராகச் சென்றமையால் பாம்பிற்கு ஒப்பிட்டுப் பேசினார் போலும்.

இதைப் பார்த்த நகர மக்கள் ''விஸ்வாமித்திரர் மிகக் கண்டிப்பானவ ராயிற்றே. நம் ராஜ குமாரர்கள் எத்தகைய துன்பமும், கஷ்டமும் இன்றி நாடு திரும்பி வரவேண்டுமே'' எனக் கவலைப்பட்டனராம். இதற்குக் காரணம் முனிவரைப் பற்றிய ஒரு பழைய நிகழ்ச்சி நினைவுக்கு வந்ததே. அதாவது:

சீடன் நக்ஷத்ரேசன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை நன்கு எழுப்பி விஸ்வாமித்ரர் கேட்டார். ''என்ன சீடனே! நான் உன்னை ''ஹரிச்சந்திர னோடு எப்பொழுதும் இருக்க வேண்டும். அவன் (அஸத்யம்) பொய் பேசும் பொழுது உடனே வந்து என்னிடம் தெரிவிக்க வேண்டும்'' என்றல்லவா சொல்லியிருந்தேன். அதை மறந்து சோம்பேறியாய் தூங்கிக் கொண்டு பொழுது போக்குகிறாயே! நீ குருவின் கட்டளைக்குக் கீழ்ப்படிவது நன்றாக இருக்கிறது'' என்று கடிந்து கொண்டார்.

ப்ரிய சிஷ்யன்: ''ப்ரபுவே! ஹரிச்சந்திர மஹாராஜா தங்கள் எதிரிலேயே பொய் பேசினாரே. இது தங்கட்கு நன்கு தெரிந்தது தானே என நினைத்துத் தூங்கலானேன். மன்னிக்க'' என்றான்.

விஸ்வாமித்ரர்: ''சீடா! அப்படியா! எனக்கு நினைவில்லையே. எப் பொழுது? எப்பொழுது? சொல்லு பார்ப்போம்'' என்று கேட்டார்.

சீடன் பயந்து கொண்டே சொல்லத் தயங்கினான்.

விஸ்வாமித்ரர்: ''ஏன் அஞ்சுகிறாய், எப்பொழுது? சொல்லு. அதற்குத் தானே நான் காத்திருக்கிறேன்.''

சீடன்: ஹரிச்சந்திரர் தங்களைப் பார்த்து ''கருணாமூர்த்தியே! சிஷ்ய வத்ஸலரே! மஹாத்மாவே!'' என்று பேசினாரே, தெரியாதா?

(கருணையும், பெருந்தன்மையும், அன்பும் இல்லாத உம்மை அவற்றை உடையவராகப் பேசியது பொய் தானே என்பது கருத்து). இதன் கருத்தை அறிந்த விஸ்வாமித்ரர் வெட்கித் தலை குனிந்து அகன்றாராம்.

சீடன் ஓய்வெடுப்பதையும் பொறுக்காத இத்தகையவரிடம் ராமனை ஒப்படைத்தது பற்றி மக்கள் கவலைப்படுவதில் என்ன வியப்பு.

ஸரயூ நதிக்கரையிலே

अध्यर्ध योजनां गत्वा सरय्वाः दक्षिणे तटे ।
रामेति मधुरां वाणीं विश्वामित्रोऽभ्यभाषत ॥
गृहाण वत्स सलिलं माभूत् काल विपर्ययः ।
मन्त्रग्रामं गृहाण त्वं बलामति बलां तथा ।
न श्रमः न ज्वरः वा ते न रूपस्य विपर्ययः ।
न च सुप्तं प्रमत्तं वा धर्षयिष्यन्ति नैर्ऋताः ॥
क्षुत्पिपासे न ते राम भविष्येते नरोत्तम ।
बलामतिबलां चैव पठतः पथि राघव ॥
ततो रामः जलं स्पृष्ट्वा प्रहृष्ट वदनः शुचिः ।
प्रति जग्राह ते विद्ये महर्षेः भावितात्मनः ॥
गुरु कार्याणि सर्वाणि नियुज्य कुशिकात्मजे ।
ऊषुस्तां रजनीं तत्र सरय्वां सुसुखं त्रयः ॥

அத்யர்த யோஜனாம் கத்வா ஸரய்வா: தக்ஷிணே தடே ।
ராமேதி மதுராம் வாணீம் விஸ்வாமித்ர: அப்யபாஷத ॥
க்ருஹாண வத்ஸ! ஸலிலம் மாபூத் காலவிபர்யய: ।
மந்த்ர க்ராமம் க்ருஹாண த்வம் பலாம் அதிபலாம் ததா ॥
நஸ்ரம: நஜ்வர: வாதே ந ருபஸ்ய விபர்யய: ।
நச ஸுப்தம் ப்ரமத்தம்வா தர்ஷயிஷ்யந்தி நைர்ருதா: ॥
க்ஷுத் பிபாஸே நதே ராம! பவிஷ்யேதே நரோத்தம ।
பலாம் அதிபலாம்சைவ படத: பதி ராகவ! ॥
தத: ராம: ஜலம் ஸ்ப்ருஷ்ட்வா ப்ரஹ்ருஷ்ட வதன: ஶுசி: ।
ப்ரதி ஜக்ராஹ தே வித்யே மஹர்ஷே: பாவிதாத்மன: ॥
குருகார்யாணி ஸர்வாணி நியுஜ்ய குஶிகாத்மஜே ।
ஊஷு: தாம் ரஜனீம் தத்ர ஸரய்வாம் ஸுஸுகம் த்ரய: ॥

வா. ரா. பால. - 22.

முனிவரின் நிழல் போன்று சக்ரவர்த்தித் திருமகனும், இளைய பெருமாளும் முனிவரைப் பின் தொடர்ந்தனர். நிழல் நாம் நின்றால் நிற்கும்; சென்றால் செல்லும்; விரைந்தால் விரையும். இது போன்றே ராஜகுமாரர்களும் இங்கு மங்கும் திரும்பிப் பாராது நேராக முனிவரை விட்டுச் சிறிதும் விலகாது

விரைந்து சென்றனர். இதே வேகத்தில் தசரதரே முனிவரைப் பின் தொடர்கிறாரோ எனத் தோன்றிற்றாம். ஏன்? ராமனைப் பிரிய தசரதரின் மனம் துணியுமா? துணியாது, துணியவே துணியாது. அவர் உடல் அரண்மனையில் இருக்கிறது. ஆத்மாவும் மனமும் முனிவரைப் பின் தொடர் கின்றன. அவை ராமலக்ஷ்மணர்களின் வடிவில் இரு தசரதர்களாகத் தொடர் கின்றன போலும். குமாரர்களைப் பார்த்தால் தசரதராகவே காட்சி யளிக்கிறார்கள். ஆம் உண்மையில் அவர்கள் தசரதர்களே.

पतिः भार्यां सम्प्रविश्य गर्भोभूत्वेह जायते ।
जायायाः तद्धि जायात्वं यदस्यां जायते पुनः ॥

பதி: பார்யாம் ஸம்ப்ரவிஶ்ய கர்ப: பூத்வாஇஹ ஜாயதே ।
ஜாயாயா: தத்ஹி ஜாயாத்வம் யத்அஸ்யாம் ஜாயதேபுன: ॥

மநுஸ்ம்ருதி. 9.8

ஸம்ஸ்கிருதத்தில் மனைவிக்கு ஜாயா என்றொரு பெயர் உண்டு. அதற்கு இலக்கணம் வகுத்த மனு தமது ஸ்ம்ருதியில். புருஷன் (கணவன்) தன் மனைவியினிடத்தில் கருவில் நின்று குழந்தையாக (புத்ரனாக) மீண்டும் ஜனிப்பதால் (பிறப்பதால்) அவளுக்கு ஜாயா எனப் பெயர் வந்தது என்றார். எனவே தந்தையே தனயனாகத் தோன்றுவதால், இக்குமாரர்களைத் தந்தை யாக—தசரதராகச் சொல்வதில் வியப்பென்ன? இக்கருத்தை மனதிற் கொண்டு வரையப்பட்டது. ''மன்னன் இன்னுயிர் வழிக் கொண்டால் என'' எனும் கம்பசித்ரம். (கையடைப்படலம்)

இவ்வாறாக மூவரும் ஒன்றரை யோஜனை தூரம் அதாவது பன்னிரண்டு மைல் (சுமார் 16 கிலோ மீட்டர்) தொலைவு சென்று ஸரயூ நதியின் தென்கரையை அடைந்தனர். நாம் மூன்று பேர் சேர்ந்து போனால் அதுவும் 12 மைல் தொலைவிலுள்ள ஊருக்கு நடந்தே சென்றால் பேசாமலே போக முடியுமா? இம் மூவரும் மௌன விரதத்தை ஏற்றுக் கொண்டார்களா? அல்லது பேசினால் சிறுவர்கள் கால் வலிக்கிறது. எங்களால் இனி நடக்க முடியாது எனச் சொல்லிவிட்டால் என்ன செய்வது என முனிவருக்கு அச்சமா? பேசிக் கொண்டே சென்றால் வழியும் சுருங்கும். நடைப் பயணத்தின் சிரமமும் தெரியாது என்பதே நம் அனுபவம். இம் முனிவரே பின்னர் சிறுவர்கட்கு சிரமம் தெரியாமலிருப்பதற்காகக் கதைகளைச் சொல்லிக் கொண்டே அழைத்துச் செல்லப் போகிறார். அயோத்தியைவிட்டு ஸரயூ நதிக் கரைக்குச் செல்ல 12 மைலுக்கு சுமார் மூன்று மணி நேரமாவது ஆகியிருக்கும். இவ்வளவு நேரம் பேசாமல் இருக்க முடியுமா? முடியாது தான். சிறியோர்கட்கு பெரியவரிடம் பேச அச்சமிருக்கலாம். ஆனால் முனிவர் ஏன் பேசவில்லை? அவர் தியானத்தில் மூழ்கியிருந்தார். என்ன பரப்ரஹ்ம த்யானமா? இல்லை. நாமத்யானம். சக்ரவர்த்தியின் மூத்த குமாரனை என்ன பெயரிட்டு விளித்துப் பேசுவது? வஸிஷ்டர் தான் ராமன்

எனப் பெயர் சூட்டியிருக்கிறாரே. உண்மை. இவனை அழைத்துவர வஸிஷ்டர் உதவியிருப்பினும் அவர் நமக்கு விரோதிதானே! அவரிட்ட பெயரைச் சொல்லி நாம் ஏன் அழைக்க வேண்டும்? அதைவிட நல்ல பெயரை நாம் சூட்டி அழைக்கலாமே என எண்ணினார். அதற்காக ஸஹஸ்ர நாமத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்தார். அதைவிட உயர்ந்த பெயர் கிடைக்கவில்லை. புராணங்களையெல்லாம் நினைத்து நினைத்துத் தேடினார். ''ராம'' பெயரைவிட உயர்ந்தது கிடைக்கவில்லை. இவ்வளவு தூரம் விரைந்து நடந்ததில் நாக்கொட்டி வறண்டு போயிருந்தது. 'ராம' என விளித்துப் பேசத் தொடங்கினார். நாவில் இனிய நீர் ஊறிற்று. ஏன்? ராம நாமமே ஒரு கற்கண்டு அன்றோ! இதுவே சொற்சுவையும், பொருட் சுவையும், மென்மையும், அழகும், கேட்க இனிமையும் பொருந்தியது, என முடிவுக்கு வந்தார். இவையனைத்தையும் கருத்திற் கொண்டே ''ராமேதி மதுராம் வாணீம்'' என இயம்பினார் வால்மீகி.

''ராம! ஸரயூ நதியில் ஆசமனம் பண்ணிவிட்டு வா. காலதாமதம் கூடாது. உனக்கு பலா, அதிபலா எனும் இரண்டு மந்த்ரங்களை உபதேசிக் கிறேன். இம்மந்த்ரங்கள் பல்வகைப் பயன்களை அளிக்கவல்ல பற்பல மந்த்ரங்களை உள்ளடக்கியவை. இவற்றை ஜபிப்பதால் மனிதனுக்கு ஏற்படக்கூடிய உடற்களைப்பு, இளைப்பு, ஜுரம், பசி, தாகம் ஆகியவை தோன்றா. நீ தூங்கும் பொழுதோ, கவனக் குறைவாக இருக்கும் பொழுதோ அரக்கர்கள் உனக்கு எத்தகு தீங்கினையும் செய்ய முடியாது. உனது அழகும், ஆற்றலும், முடிவெடுக்கும் திறனும், புகழும் மிகும். இம்மந்திரங்கள் அறிவைச் சுரக்கும். அறிவுக்கெல்லாம் தாய், பிதாமஹனாகிய நான்முகனிட மிருந்து தோன்றியவை'' என்று பயனையும் அவைகளின் பெருமையையும் கூறி இருவர்கட்கும் உபதேசித்தார். அயோத்தியில் வஸிஷ்டர் குரு (ஆசிரியர்) அவரிடம் கற்றதற்கு செய்முறை விளக்கம் தேவையல்லவா? அதை காட்டில், விஶ்வாமித்ரரிடம் பெறுகிறார்கள். எனவே விஶ்வாமித்ரரும் ஆசார்யர். இவருக்கும் ராமன் சிச்ருஷை (பணிவிடை) செய்து மகிழ்ந்தார். அன்று இரவுப் பொழுது ஸரயூநதி தீரத்தில் மூவருக்கும் மிக இன்பமாகக் கழிந்தது. மந்த்ர பலத்தினால் அரண்மனையிலிருந்ததை விட மிக ஸுகமாக இருந்தார்கள் என்பதை ''ஸுஸுகம்'' என்ற சொல்லினால் உணர்த்துகிறார் வால்மீகி.

प्रभातायां तु शर्वर्यां विश्वामित्रो महामुनिः ।
अभ्यभाषत काकुत्स्थौ शयानौ पर्ण संस्थरे ॥
कौसल्यासुप्रजा राम पूर्वा सन्ध्या प्रवर्तते ।
उत्तिष्ठ नरशार्दूल कर्तव्यं दैवमाह्निकम् ॥

ப்ரபாதாயாம் து ஶர்வர்யாம் விஶ்வாமித்ர: மஹாமுனி: ।
அப்யபாஷத காகுத்ஸ்தௌ ஶயானௌ பர்ண ஸம்ஸ்தரே ॥

கௌஸல்யா ஸுப்ரஜா! ராம! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்தே ।
உத்திஷ்ட நரஶார்தூல! கர்த்தவ்யம் தைவம் ஆன்ஹிகம் ॥

வா. ரா.பால. - 23.

மறுநாள் பொழுது புலரும் நேரம். புற்களினாலும் இலைகளினாலும் அமைந்த படுக்கையில் ராஜகுமாரர்கள் தூங்குகிறார்கள். பாத யாத்திரையாக நகரிலிருந்து வந்தபடியால் அசதி போலும். நன்கு தூங்குகிறார்கள். அரண்மனையிலோ வந்திகள் இசைபாடி புகழ்பாடி எழுப்புவர். இங்கோ மாமுனிவர் கடமையை உணர்த்தி எழுப்புகிறார். ராம! நன்மகனே ராம! கோஸலை தன் மணி வயிறு வாய்த்த நன் மகனே ராம! மனிதப் புலியே ராம! எழுந்திரு. பொழுது விடிகிறது. விடியற்காலை தொடங்கி நாம் செய்ய வேண்டிய கர்மானுஷ்டானங்கள் உண்டே. எழுந்திரு'' என்றார்.

இங்கு ராமலக்ஷ்மணர்கள் இருவரையும் எழுப்பத்தான் அருகில் வந்தார் முனிவர். ஆனால் எழுப்புவதோ ராமனை மாத்திரம். ஏன்? படுக்கையில் ராமன் தான் கண்ணில் பட்டார். லக்ஷ்மணனைக் காணவில்லை. அவன் முன்னரே எழுந்து நீராட்டத்திற்குச் சென்றிருக்கலாமோ? இல்லை. அவன் பெருமாளுக்குப் பணிவிடை செய்யவே அவதரித்தவன் அல்லவா! மெத்தென பஞ்ச சயனத்தின் மேலேறிப்படுப்பவனாயிற்றே ராமன்! முனிவர் புற்களையும் இலைகளையும் பரப்பிப் படுக்க வைத்தார். சக்ரவர்த்தித் திருமகன் இதிலா படுப்பது? அதுவும் நம் எதிரில் என எண்ணினான் லக்ஷ்மணன். உடனே மெத்தென சயனமாக புல் இவை உருவில் ஆனான். இவன் ஆதிசேஷன் அவதாரமாயிற்றே! இடத்திற்கு, காலத்திற்கு ஏற்ப பரமன் உகக்கும் கைங்கர்யத்தைச் செய்வதாலன்றோ சேஷன் எனும் பெயர் பெற்றான்.

निवास शय्यासन पादुकांशुकोपधान वर्षातप वारणादिभिः ।
शरीरभेदैः तवशेषतां गतैः यथोचितं शेष इतीरिते जनैः ॥

நிவாஸ சய்யா ஆஸன பாதுகா அம்சுக
உபதான வர்ஷா தபவாரணா திபி: ।
சரீரபேதை: தவ சேஷதாம் கதை:
யதோசிதம் சேஷ இதி ஈரிதே ஜனை: ॥

ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னம் - 40

திருமாளிகையாகவும், படுக்கையாகவும், ஸிம்ஹாஸனமாகவும், மரவடியாகவும், திருப்பரிவட்டமாகவும், திண்டாகவும், குடையாகவும் அவ்வக் காலத்திற்கேற்பப் பயன்படும் பல்வகை திருமேனிகளைக் கொள்வ தால் சேஷன் எனப்படுகிறான், என்பர் ஆளவந்தார்.

எனவே ராமனை மாத்திரம் எழுப்பினார். அல்லது இருவரையும் எழுப்ப வந்தவர் ராமனின் அழகில் மயங்கிப் பேசினார். சிலர் தூங்கும் போது

பார்த்தால் வெறுப்புற்று அகன்று விடுவர். தூங்கும்போது ராமனின் திருமுக மண்டலத்தின் அழகோ முனிவரின் மனதையே கொள்ளை கொண்டு விட்டது.

மாலைவேளை மலர்ந்த தாமரையில் தேன் பருகச் சென்றது ஒரு வண்டு. கதிரவன் மறையவே மலரின் இதழ்கள் குவிந்தன. வெளியே செல்ல முடியவில்லை. மறுநாள் காலை அருணோதயம் ஆயிற்று. இதழ்கள் விரியும் நேரம். அக்குளத்தில் நீராடிய பக்தர் அர்ச்சனைக்காகப் பூவைப் பறிக்கச் சென்றார். கரிய வண்டு வெளியேற முயன்று கொண்டிருந்தது. செவ்விய இதழ்களின் இடையே கரிய வண்டின் காட்சி. பூவைப் பறிக்காமல் அதன் அழகில் மனதைப் பறிகொடுத்து மயங்கி நின்றார். இதே போல் இங்கு ராமன் துயில் எழும் நேரம். குவிந்த இமைகள் சிறிது பிரிந்தன. இடையே கருவிழிகளின் தோற்றம். செந்தாமரைக் கண்களின் அழகு முனிவரை ஈர்க்க, வந்த காரியத்தை மறந்து அழகனின் கண்ணழகையே மனதில் கொண்டு ராமா! (அழகா!) என ஒருவனையே எழுப்பினாராம்.

இந்நிலையில் கோஸலையின் நினைவு வந்தது முனிவருக்கு. ஏன்? இன்று ஒரு நாள் துயிலெழும் அழகில் மயங்கி இவனை எழுப்ப முடியாமல் சொக்கி நிற்கிறோமே! இவ்வழகனைப் பெற்று வளர்த்த கோஸலை காலையில் எழுப்ப முயன்று இக்கண்ணழகில் மயங்கி, பருகிப் பருகி எழுப்ப மனமில்லாது கட்டி அணைத்து முத்தமிட்டு ஆனந்த வெள்ளத்தில் எத்தனையோ நாட்கள் மிதந்திருப்பாளே என தாயின் நினைவு வரவே கோஸலையின் நன்மகனே! அழகனே! எழுந்திராய் என்றார். மேலும் கிருஷ்ணாவதாரத்தில் ''ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர (ஆண்டாள்)'' என்றபடி தேவகி, கண்ணனை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. ஆய்ச்சியான யசோதையே பாலூட்ட, சீராட்ட, கயிற்றாலடிக்க, உரலில் கட்டக் கொடுத்து வைத்தாளே, என்று புழுங்குகிறார் குலசேகராழ்வார். இவ்வாறின்றி, கோஸலையோ 16 ஆண்டு காலம் வளர்த்த பெருமையுடையவளாயிற்றே! இதே நிலையில் கண்ணனின் அழகைப் பருக விழைகிறாள் சூடிக் கொடுத்த நாச்சியார்.

''கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போல
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ''

திருப்பாவை - 22.

என்று பல்லாண்டுகள் தவம் செய்து இன்னொரு நாள் பரமனின் இயற்கை அழகைப் பருகும் பாக்கியத்தைப் பெற்றேன் நான். தூக்கத்தின் அழகைச் சுவைத்து, பால் கொடுக்க எழுப்ப வேண்டியும், அழகைப் பருகும் நிலையில் எழுப்ப முடியாமலும், திணறும் கோஸலை எத்தனை யுகங்கள் தவம் செய்தாளோ? ''இவன் தாய் எந்நோற்றாள் கொல்'' என்னும் படியன்றோ இருக்கிறது!'' என வியக்கிறார்.

'உலகு யாவையும் மன்வயிற்றில் அடக்கிய மாயனைத்
தன்வயிற்றின் அடக்கும் தவத்தினாள்''

என்பர் கம்பர்.

தசரதரும் கோஸலையும் தவம் புரிந்து, மூன்று பிறவிகளில் எங்களுக்கு மகனாகப் பிறக்க வேண்டும் எனப் பரமனிடம் வரம் வேண்டியவர்கள். இதை அறிந்திருப்பார் விஸ்வாமித்ரர். உண்மை அப்படியிருக்க, தசரத கௌஸல்யா தம்பதிகளின் மகனாகிய ராமனை கோஸலையின் நன்மகனே! என்பது எவ்வாறு பொருந்துமென்பதைக் கேண்மின்.

வேதம் முதன் முதலில் ''தாயைத் தெய்வமாகக் கொள்'' என்கிறது. தாய் தந்தையர் மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளுள் தாய் செய்யும் உதவியே மிகுதியானவை பிறரால் செய்ய முடியாதவை, ''தந்தையினும் நூறு மடங்கு தாய்' என்கிறது ஸ்மிருதி. ராமனின் பெருமையைப் பல தடவை பன்மடங்கு எடுத்துக் கூறினும் அனுப்ப இசையவில்லை தசரதர். வஸிஷ்டர் கூறிய பிறகே ஸம்மதித்தார். கோஸலையோ பாசத்தினால் தடுக்க வேண்டியிருக்க, தடுக்காது பரிவுடன் கட்டி அணைத்து உச்சி முகந்து ஆசீர்வதித்து (நம்முடன்) அனுப்பி வைத்தாள். இதையெல்லாம் மனதிற் கொண்டே கோஸலையின் நன்மகனே! என்றார். தாய் தந்தையர் கூறினும் நான் நாட்டை விட்டு காட்டிற்குப் போக மாட்டேன். கட்டாயம் போக வேண்டியிருப்பின் (நீயும்) தந்தையும் துணையாக வந்தால் தான் போவேன். மேலும் இம்முனிவ ரோடு (இந்தத் தாடியோடு) நான் போக மாட்டேன்.'' என மறுத்துப் பிடிவாதம் பிடிக்காமல் ''தந்தை தாய் சொல் மிக்க மந்திரமில்லை'' ''தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை'' என்பதை உலகுக்குக் காட்டியவனான படியாலே நன்மகனே! என்று அழைத்தார் போலும்.

''தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை'' என்றபடி ''இவனைப் பெற்ற வயிறுடையாள்'' என்று தாயை நாட்டார் புகழும்படி நடந்து கொண்டது பற்றியும் நன்மகன் என்றாராம். தாய் சொல்லியும் முனிவரோடு செல்ல மறுத்து விட்டால் தாயோ, ஊராரோ ''இவனைப் பெற்ற வயிற்றுக்கு பிரண்டையைத் தான் கட்டிக்கனும்'' என்பர். இக்கூற்றுக்கு இடங்கொடாது ''இவனைப் பெற்ற என் வயிற்றுக்குப் பாலை வார்த்தான்'' என்று சொல்லும்படி நடந்து கொண்டபடியாலும் நன்மகனே என்றாராம்.

இவ்வாறாக ராம ஸௌந்தர்யத்தை அனுபவித்துத் தன்னையே மறந்த முனிவர் தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசலானார். ''பூர்வா ஸந்த்யா ப்ரவர்ததே'' என்று கோஸலையிடம் தோன்றிய நீ தாயை வணங்குவது போல கதிரவனைத் தோற்றுவிக்கும் ஸந்த்யா தேவியையும் வணங்க வேண்டுமே. கண்ணனைப் போன்று உபதேசத்தைப் பிரதானமாகக் கொண்ட அவதாரம் அன்றே உமது அவதாரம். ஆசாரத்தை அனுஷ்டானத்தைப் பிரதானமாகக் கொண்ட அவதாரமாயிற்றே, எனவே துயிலெழும் என்றதாம்.

ब्रह्मणा उपास्यते सन्ध्या विष्णुना शंकरेण च ।
कस्मान्नोपासये देवीं श्रेयस्कामो द्विजोत्तमः ॥
ऋषयः दीर्घ सन्ध्यत्वात् दीर्घमायुरवाप्नुयुः ।
प्रज्ञां यशश्च कीर्तिं च ब्रह्मवर्चसमेव च ॥
ऐहिकं आमुष्मिकं पापं सर्वं निरवशेषतः ।
पंचरात्रेण गायत्री जप्यमाना व्यपोहति ॥
गायत्र्यास्तु परं नास्ति चोदनं पापकर्मणाम् ॥

ப்ரஹ்மணா உபாஸ்யதே ஸந்த்யா விஷ்ணுனா ஶங்கரேணச ।
கஸ்மாத் ந உபாஸயே தேவீம் ச்ரேயஸ்காம: த்விஜோத்தம: ॥
ரிஷய: தீர்க்க ஸந்த்யத்வாத் தீர்க்கம் ஆயு: அவாப்னுயு: ।
ப்ரக்ஞாம் யச: ச கீர்த்திம் ச ப்ரஹ்மவர்ச்ஸமேவ ச ॥
ஐஹிகம் ஆமுஷ்மிகம் பாபம் ஸர்வம் நிரவஶேஷத: ।
பஞ்சராத்ரேண காயத்ரீ ஜப்யமானா வ்யபோஹதி ॥
காயத்ர்யா: து பரம் நாஸ்தி சோதனம் பாபகர்மணாம் ॥

ஸந்த்யாவந்தனத்தை பிரமன் விஷ்ணு சிவன் எல்லோரும் செய்கிறார்கள். அப்படியிருக்க நன்மையை—க்ஷேமத்தை விரும்பும் அந்தணர் முதலியோர் ஸந்த்யாவந்தனத்தைச் செய்யாமலிருக்க முடியுமா? மஹர்ஷிகள் நீண்டகாலம், காலம் தவறாது முறைப்படி ஸந்த்யாவந்தனத்தை அனுஷ்டித்ததினால் நீண்ட ஆயுளையும், நல்லநிலையையும், பல்வகைப் புகழையும், ப்ரஹ்மதேஜஸ்ஸையும் பெற்றனர். ஐந்து நாட்கள் இடைவிடாது காயத்ரியை ஜபம் செய்வதால் இப்பிறவியிலும் முற்பிறவிகளிலும் செய்த பாபங்கள் அனைத்தும் அகலும், பாபங்களைப் போக்குவதில் காயத்ரிக்கு நிகரான மந்த்ரமே கிடையாது. 'சந்தி செய்யாதவன் தூய்மையற்றவன்; பிற கர்மாக்களைச் செய்யத் தகுதியை இழந்தவன்' என்று ப்ரமாணங்கள் தெரிவிக்கின்றபடியால் ஸந்த்யோபாஸனத்திற்காகத் துயில் எழுப்புகிறார். அல்லது உதயமாகும் ஸூரியன் எதிரியான இருளை விரட்டுவதுபோல் ஸாதுக்களின் எதிரிகளான அரக்கர்களை ஒழிக்கும் காலம் நெருங்குகிறது எனக் குறிப்பால் உணர்த்துகிறார் போலும்; அல்லது யான் இன்று வரை தத்வ ஸாக்ஷாத்காரமின்றி அறியாமையாம் இருளில் உழன்றேன். இப்பொழுதோ ஞானத்தில் தவத்தின் பயனாகிய உம்மைக் கண்டு பகவத் ஸாக்ஷாத்காரத்தைப் பெற்றேன். ''அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்'' என்றபடியான ஞான ஸூர்யத்தை அளிக்கும் பூர்வாஸந்த்யா—விடிவு வேளை எனக்கு என தன்னைக் குறித்துப் பேசியபடியாம்.

கம்ஸனால் அனுப்பப்பட்டுக் கண்ணனை அழைத்து வர கோகுலம் சென்றார் அக்ரூரர். தன்னை அனுப்பியதில் பெருமகிழ்ச்சி அக்ரூரருக்கு.

ஏன்? இதுவரை கம்ஸனுக்கு அஞ்சி கண்ணனை ஸேவிக்க முடியாமல் இருந்தார். அத்தடை விலகியது.

अद्य मे सफलं जन्म सुप्रभाता च मे निशा ।
यदुन्निद्राब्ज भद्राक्षं विष्णोः द्रक्ष्यामि अहं मुखम् ॥

அத்யமே ஸபலம் ஜன்ம ஸுப்ரபாதா ச மே நிசா ।
யத் உந்நித்ராப்ஜ பத்ராக்ஷம் விஷ்ணோ: த்ரக்ஷ்யாமி அஹம்முகம் ॥

விஷ்ணுபுராணம் - 5.17.3.

''இன்று எனது பிறவி பயனைத் தழுவியது. எனது அச்சமாகிய இருள் விலகிப் பொழுது புலர்ந்தது. ஏனெனில் விஷ்ணுவாம் கண்ணனின் திருமுக மண்டலத்தைத் தடையின்றி நேராகப் பார்க்கப் போகிறேன். அம்முகம் நன்கு அலர்ந்த தாமரை மலரின் நீண்டு செவ்வரியோடிய இதழ்களைப் போன்ற திருக்கண்களையுடையது. அவனை நான் ஸாக்ஷாத்கரிக்க அவனும் மலர்ந்த கண்களால் குளிரக் கடாக்ஷிக்கும் பாக்யத்தையன்றோ பெறப்போகிறோம்'' என மகிழ்ந்தார். இதே போன்ற ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெற்றமையில் விஸ்வாமித்ரர் 'இது எனக்கு ஸுப்ரபாதம் நல்விடிவு நற்பொழுது' என மகிழ்கிறார் எனலாம்.

''நரசார்தூல! தைவம் ஆன்ஹிகம் கர்த்தவ்யம், உத்திஷ்ட, ''ஶ்ருதி: ஸ்மிருதி: மமைவ ஆஜ்ஞா'' வேதமும், ஸ்ம்ருதியும் நானே இட்ட கட்டளை'' இதை யாரும் மீறக் கூடாது என்றீரே, எனவே நீரும் ஸந்த்யாவந்தனத்தை அனுஷ்டிக்க வேண்டாமா? நீரோ நரஶ்ரேஷ்டர்.

यद्यदाचरति श्रेष्ठः तत्तदेवेतरोजनः ॥

யத்யத் ஆசரதி ஶ்ரேஷ்ட: தத் தத்ஏவ இதர: ஜன: ॥

பகவத் கீதை - 3.21.

உயர்ந்தவன்—சிறந்தவன் எதை எதைச் செய்கிறானோ அதை அதையே மற்ற மக்களும் பின்பற்றுவார்கள்.

ஒரு தம்பதிக்கு ஒரே பிள்ளை, திருமணமாயிற்று. இவர்கட்கும் ஒரே பிள்ளை. தாயார் பரமபதித்துவிட்டாள். கிழவரைப் பாதுகாக்கும் பொறுப்பு பிள்ளைக்கு ஏற்பட்டுவிட்டது. சில நாட்கள் உள்ளே வைத்து சாதம் போட்டாள் மனைவி, பின்னர் கூடத்தில், பிறகு தாழ்வாரத்தில், அவருக்கு வயதாகி விட்டது. ''வாசலிலேயே திண்ணையில் மறைவு கட்டி அங்கேயே இருக்கச் சொல்லுங்கள், வாசலுக்குப் போய் வர ஸௌகரியமாக இருக்கும்'' என்றாள் மனைவி. புருஷனும் அவ்வாறே ஏற்பாடு செய்தான். ''வாசலில் பாதுகாப்புக் குறைவு, அவருடைய வெள்ளித்தட்டை உள்ளே வைத்து விடுங்கள். இனி இலையில் போடுகிறேன்'' என்றாள். பின்னர் ''தினந் தோறும் இலைக்கு எங்கே போகிறது? ஒரு மண் மடக்கு வாங்குங்கள்,

அதிலே கலந்து சாதம் போடுகிறேன். அதை அலம்பி அதையே உடைக்காமல் பத்திரமாக வைத்துக் கொள்ளச் சொல்லுங்கள்'' என்றாள். அவ்வாறே புருஷனும் செய்தான். பரிமாறும் போது ஏதாவது கடிந்து கொள்வாள். ஒரு நாள் மண் மடக்கு காணாமற் போய்விட்டது. ''கிழம் மடக்கைத் தேடி எடுத்து வைத்தால்தான் சோறு போடுவேன். இல்லையேல் சாகட்டும்'' என்றாள். புருஷன் தேடினான். எங்கும் கிடைக்கவில்லை. அப்பொழுது சிறுவன் விளையாடி விட்டு ஓடி வந்தான். பிள்ளையை இருவரும் விசாரித்தனர். பிள்ளை ''உங்களுக்கு ஏன் கவலை? நான் பத்திரமாக வைத்திருக்கிறேன்.'' ''அப்படியா, கொண்டு வா'' என்றனர். முடியாது என்றான். ஏன்? ''கொஞ்ச நாள் போனால் நீங்கள் இருவரும் கிழவர்களாகி விடுவீர்கள். எனக்கும் கல்யாணம் ஆகியிருக்கும். அப்பொழுது நாங்கள் உங்களை வாசலில் வைத்து மண் மடக்கில் சாதம் போட வேண்டுமே, அப்பொழுது கிடைக்காவிட்டால் என்ன செய்வது? அதற்காக இப்பொழுதே ஒளித்து பத்திரமாக வைத்திருக்கிறேன்'' என்றான். இவ்வாறு முன்னோர் செய்வதைத் தான் பின்னோர் பின்பற்றுவர். எனவே உரிய காலத்தில் சந்தி செய்வதற்காகத் துயிலெழுப்பினார். அல்லது ''ஸூர்ய மண்டலத்திலுள்ள (ஸூர்ய) நாராயணனை உத்தேசித்துத் தானே அர்க்யம் விடவேண்டும். அந்த நீ தான் இங்கு வந்துவிட்டாயே. எனவே நான் கொடுக்கும் அர்க்யத்தை உரிய காலத்தில் நேராக ஏற்றுக் கொள்ள எழுந்திரும்'' என்றாராம்.

உத்திஷ்ட- எழுந்திரும், ஏன்? வெகுநேரம் துயிலும் அழகைக் கண்டு களித்தேன். இப்பொழுதோ செந்தாமரை மலர்களையொத்த திருக்கண்கள் துயிலெழும் (மலரும்) அழகினையும் கண்டுகளிக்க விழைகிறது என் மனம் என்றார்.

तस्यर्षेः परमोदारं वचः श्रुत्वा नरोत्तमौ ।
स्नात्वा कृतोदकौ वीरौ जेपतुः परमं जपम् ॥

தஸ்ய ரிஷே: பரமோதாரம் வச: ஶ்ருத்வா நரோத்தமௌ ।
ஸ்நாத்வா க்ருதோதகௌ வீரௌ ஜேபது: பரமம் ஜபம் ॥

வா,ரா. பால. - 23

ராம லக்ஷ்மணர்கள் மனிதர்களாக அவதரித்திருப்பவர்கள். இவர்களை மனிதர்களுள் சிறந்தவர்கள் உத்தமர்கள் என கவி குறிப்பிடுகிறார். எனவே விஶ்வாமித்திரரின் கம்பீரமான, மனித சமூகத்திற்கே பல்வகை நன்மைகளை அளித்து உய்விக்க வல்ல சொற்களைக் கேட்டதும் விரைவாக எழுந்து ஸரயூ நதியில் நீராடி ஸ்னானாங்கமான தேவரிஷி பித்ரு தர்ப்பணங்களைச் செய்து ஸூர்யோதயத்திற்கு முன் அர்க்யமளித்து, மந்திரங்களுள் சிறந்த காயத்ரீ மஹா மந்திரத்தைச் சிரத்தையுடன் ஜபித்தனர்.

முனிவரின் கடமையுணர்ச்சி

விஸ்வாமித்ர முனிவர், விடியற் காலையில் எழுந்ததும் ராம லக்ஷ்மணர்களை துயிலெழுப்பினார். ராஜ குமாரர்கள் துயில் நீங்கித் தாமே எழுந்திராவிடில் அவர்களை எழுப்புவது உசிதம். ஏனெனில் அவர்கள் சக்ரவர்த்தியின் திருக்குமாரர்கள்; அரண்மனையில் மெத்தென்ன பஞ்ச சயனத்தின் மீது உறங்கித் துயில் எழுபவர்கள். இங்கோ வெறும் தரையில் புற்களாலான படுக்கையில் படுத்துள்ளனர். இடமும் புதிது. நாடு அல்ல. காடு, திறந்தவெளி. நன்கு தூங்கியிருக்க முடியாது. இந்நிலையில் விடியற் காலையில் எழுவது கடினம். அது மட்டுமன்றி பகல் முழுவதும் வெயிலில் கல்லும் முட்களும் இருக்கக்கூடிய ஒற்றையடிப் பாதையில் நடந்து வந்த களைப்பு. இந்நிலையில் எழுப்பினால் எழுவார்களோ, மாட்டார்களோ! ''என்ன அவசரம் பொழுது விடியட்டும்'' என்று சொன்னால் என்ன செய்வது? ஒரு பகல் பழக்கம் தானே! நெருங்கி வற்புறுத்திச் சொல்ல முடியாதே, எனச் சிறிதும் தயக்கம் காட்டவில்லை. நற்குடியில் பிறந்தவர் கட்கு நல்ல பழக்க வழக்கங்களும், ஒழுக்கமும் இருக்கத்தானே செய்யும். ''அரசன் எவ்வழி அவ்வழி மக்கள்'' என்பது மூதுரையாயிற்றே. இவர்கள் கடமை தவறினால் மக்களும் கெடுவார்களே! நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்களை நல்லொழுக்கத்தினின்றும், நன்நெறியினின்றும், அனுஷ்டானத்தி னின்றும் பிறழாது காக்க வேண்டிய கடமை நமக்குளதே, என எண்ணி எழுப்பினார் போலும்.

(இவ்வாறே, பள்ளி கல்லூரிகளில் படிக்கும் தத்தம் குழந்தைகளுக்குத் தேவையான பொருளை—பணத்தைக் கொடுப்பதையும், பசியாற உணவளிப்பதையும் மட்டும் தமது கடமையாகக் கருதாமல், பிள்ளைகள் உரிய காலத்தில் குளித்து ஸந்த்யாவந்தனாதிகளை செய்யச் செய்வது, கண்ட இடங்களில், கண்டவேளைகளில், கண்டவற்றைச் சாப்பிடாமலிருக்கச் செய்வது, கூடா நட்பை விலக்கச் செய்வது, போன்றவையும் தமது கடமை களே என்பதை முனிவர் மூலம் ராமாயணம் பெற்றோர்க்கு உணர்த்துகிறது என்பதை உணர்க.)

முனிவர் தாம் தூக்கத்தினின்றும் கண் விழித்ததும் ராமனை (எம்பெருமானை) ஸேவிக்க வேண்டும். முதலில் அவன் முகத்தில் விழிக்க வேண்டும் எனும் அவாவினால் எழுப்பினார், என்றும் கொள்ளலாம். ஏனெனில், காலையில் தூக்கம் கலைந்து எழும்போது, முதன் முதலாக மங்களமான பொருள்களைப் பார்க்க வேண்டும். அதாவது திருவிளக்கு, கோபுரம், பெருமாள், கன்றோடுகூடிய பசு, சுடரும் தீ, தனது வலக்கை, கண்ணாடி, மோதிரம், வளையலாகிய தங்கம், மனைவி, தாமரைப்பூ,

ம்ருதங்கம் முதலிய பொருள்களைப் பார்க்க வேண்டும் என்பர். தசரதரோடு பேசும் போது ''அஹம் வேத்மி மஹாத்மானம் ராமம்'' என்று ராமனை இன்னார், இனையர் என்று நான் அறிவேன் என்றாரல்லவா? தன்னோடு வந்த ராமன் புருஷோத்தமனாகிய ஸ்ரீமந் நாராயணன் என நன்கு அறிவார். பரமனே அருகிலிருக்கும் பொழுது பிறபொருளை, பிறரைப் பார்த்தல் தகாதல்லவா? எனவே எழுந்தவுடன் அருகில் உறங்கும் ராமனைப் பார்த்தார். பெருமாளைக் காலையில் முதலில் பார்க்க வேண்டும். பார்த்தாயிற்றே! அவனை எழுப்புவானேன்? திருமுகத்தின் தூங்கும் அழகைப் பார்த்தார். கண்கள் விழிக்கும் பொழுதுள்ள திருமுகத்தின் ஸௌந்தர்யத்தைப் பருக வேண்டுமே, அதற்காக எழுப்பினாராம்.

இங்கு நகைச் சுவைக்காக (ஹாஸ்யத்திற்காக) ஒரு ஸம்பவத்தைப் பௌராணிகர்கள் கூறுவதுண்டு. ஒருவருக்குச் சென்னையில் வேலை. குடியிருப்போ சிறிது தொலைவிலுள்ள கிராமத்தில். காலை ஏழரை மணிக்கே வீட்டை விட்டுப் புறப்பட வேண்டும். மனைவியோ விடிவதற்குள் எழுந்திருக்கமாட்டாள். எனவே தினந்தோறும் விடியற் காலையிலேயே எழுந்து தானே வெந்நீர் போட்டுக் குளித்து விட்டு, பாலைக் காய்ச்சி வைத்து, அடுப்பில் உலையேற்றி, மனைவியை எழுப்புவார். இத்தொல்லையி னின்றும் என்று விடுதலை கிடைக்குமோ என ஏங்குவார். ஒருநாள் மாலை அலுவலகத்தினின்றும் திரும்பும் பொழுது ஓரிடத்தில் கூட்டத்தைப் பார்த்து நின்றார். அங்கு ஹரிகதை நிகழ்ந்து கொண்டிருந்தது. ''காலையில் துயிலெழும் பொழுது மேற்கூறிய மங்களப் பொருள்களை முதலில் பார்த்தால் அன்று முழுவதும் எல்லாம் நன்கு நடைபெறும்'' எனச் சொற்பொழிவாளர் கூறினார். இதைக் கேட்டதும் நம் தொல்லைகள் ஒழிந்தன, என எண்ணியவராய் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினார். அன்று இரவு படுக்கும்பொழுது தான் கேட்டதை மனைவியிடம் கூறினார். மனைவி விரைந்து எழுந்து சென்று ஒரு கண்ணாடி, ஒரு சந்தனவில்லை. ஒரு சிறிய பெருமாள் படம் இவற்றைத் தலையணையின் கீழ் வைத்து விட்டு, ''இனி விடியற் காலையில் கண் விழிக்கும் பொழுது இவற்றை எடுத்துக் கண்களால் பார்த்து விட்டுப் படுக்கையை விட்டு எழுந்திருங்கள்'' என்றாள். புருஷன் ''மஹாலக்ஷ்மீ மாதிரி–பரதேவதை போன்ற நீ இருக்கும் பொழுது உயிரற்ற இப்பொருள்கள் எதற்கு? இனி நீ முன்னர் எழுந்து என்னை எழுப்ப வேண்டும். நான் முதலில் உன் முகத்தில் விழிக்க வேண்டும். நாளையி லிருந்து இப்படிச் செய்'' என்றார்.

மறுநாள் விடியற்காலை. வாயிற் கதவைத் தட்டும் சப்தம் எழுந்தது. வாயிற் பக்கம் சென்றாள். ''சாணி தெளிக்க நான் வர முடியாது. வெளியூர் செல்லுகிறேன்'' எனக் குரல் கேட்டது. வேலைக்காரி மீது கோபம். உடனே கொட்டிலிலிருந்து சாணத்தையும், கிணற்றிலிருந்து நீரையும் இறைத்து வந்து, வாயிலில் தெளித்து பெருக்கிக் கோலம் போட்டு விட்டு உள்ளே நுழையும்

போதுதான், புருஷனை எழுப்ப வேண்டுமென நினைவு வந்தது. இடுப்பில் குடம், கையில் சாணிச் சட்டி, மற்றொரு கையில் விளக்குமாறு, வேலைக் காரியின் மீது கோபம், தலை மயிர் விரிந்த கோலம், மூச்சுத் திணறல். இந்நிலையில் புருஷனை எழுப்பினாள். ''விரைவில் விழித்துப் பாருங்கள். எனக்கு உள்ளே வேலை இருக்கிறது.'' விழித்துப் பார்த்தான். ''காளி, காளி, மஹாகாளி, ஸர்வலோக பயங்கரி'' உன் முகத்தில் விழிப்பது இம்மாதிரி அமைந்தால் என்ன நன்மை ஏற்படும் என எண்ணிப் பழையபடியே வீட்டு வேலையைத் துவக்கினானாம்.

कृताह्निकौ महावीर्यौ विश्वामित्रं तपोधनम् ।
अभिवाद्य अतिसंहृष्टौ गमनाय अभितस्थतुः ॥
तौ प्रयातौ महावीर्यौ दिव्यां त्रिपथगां नदीम् ।
ददृशाते ततः तत्र सरय्वाः सङ्गमे शुभे ॥
तं दृष्ट्वा परमप्रीतौ राघवौ पुण्यमाश्रमम् ।
कस्यायमाश्रमः पुण्यः? कोन्वस्मिन् वसते पुमान् ।
तयोस्तद्वचनं श्रुत्वा प्रहस्य मुनिपुङ्गवः ।
अब्रवीत् श्रूयतां राम! यस्यायं पूर्व आश्रमः ॥
कन्दर्पो मूर्तिमानासीत् काम इत्युच्यते बुधैः ।
तपस्यन्तं इह स्थाणुं नियमेन समाहितम् ॥
धर्षयामास दुर्मेधा हुँकृतश्च महात्मना ।
अशरीरः कृतः कामः क्रोधादेवेश्वरेण हि ॥

க்ருதான்ஹிகெள மஹாவீர்யௌ விஸ்வாமித்ரம் தபோதநம் ।
அபிவாத்ய அதிஸம்ஹ்ருஷ்டௌ கமனாய அபிதஸ்தது: ॥
தௌ ப்ரயாதௌ மஹாவீர்யௌ திவ்யாம் த்ரிபதகாம்நதீம் ।
தத்ருஶாதே தத: தத்ர ஸரய்வா: ஸங்கமே ஶுபே ॥
தம் த்ருஷ்ட்வா பரமப்ரீதௌ ராகவௌ புண்யம் ஆஶ்ரமம் ॥
கஸ்ய அயம் ஆஶ்ரம: புண்ய:? கோனு அஸ்மின் வஸதே புமான் ॥
தயோ: தத்வசனம் ஶ்ருத்வா ப்ரஹஸ்ய முனிபுங்கவ: ।
அப்ரவீத் ஶ்ரூயதாம் ராம! யஸ்யாயம் பூர்வ: ஆஶ்ரம: ॥
கந்தர்ப்ப: மூர்த்திமான் ஆஸீத் காம: இத்யுச்யதே புதை: ॥
தபஸ்யந்தம் இஹ ஸ்தாணும் நியமேன ஸமாஹிதம் ।
தர்ஷயாமாஸ துர்மேதா: ஹூம்க்ருத: ச மஹாத்மனா ॥
அஶரீர: க்ருத: காம: க்ரோதா தேவ ஈஶ்வரேண ஹி ॥

விஸ்வாமித்ரர் ''கௌஸல்யா ஸுப்ரஜா'' என்றதும் பயந்து கொண்டே சிறிது புரண்டு படுத்தாராம் இராமர். என்ன பயம்? முனிவர் எப்பொழுதும் என்னை ஶேஷஶாயியாய், வைகுண்ட வாஸியாய் பரவாஸு தேவனாய் தியானம் செய்பவர். ஶேஷன் (லக்ஷ்மணன்) புல்லுருவில் படுக்கையாய் இருப்பதை அறிவார். எனவே இரவில் தான் த்யானம் பண்ணிய முறையில் கோஸலையின் நன் மகனே என்றழைத்து, பிறகு சேஷசாயியே! வைகுண்ட வாஸனே! பரவாஸு தேவா! என அழைத்து எனது ப்ரஹ்ம ஸ்வரூபத்தை வெளிப்படுத்தி விடுவாரோ என பயம். இது மனிதனாய்த் தோன்றிய அவதாரமாயிற்றே. ''இவனை நான் அல்லவா அறிவேன்'' என்று பேசியவராயினும் நல்ல வேளையாக ''ராமா! நரஶார் தூலா! சந்தி செய்ய வேண்டாமா'' என மனிதனாக வைத்துப் பேசியதைக் கேட்டு மிக்க ஸந்தோஷம். உடனே எழுந்து, தம்பியை அழைத்துக் கொண்டு, ஸரயூவில் நீராடி ஸ்னானாங்க தேவர்ஷி தர்ப்பணம், ஸந்த்யா வந்தனம், காண்டரிஷி ஆதார சக்தி தர்ப்பணங்கள், ப்ரஹ்ம யக்ஞம், ஸமிதாதானம் முதலிய தன் வர்ணத்திற் குரிய அனுஷ்டானங்களைச் செய்து முடித்துக் கொண்டு முனிவரின் எதிரே வந்து மகிழ்ந்த உள்ளத்தோடு வணங்கி நின்றனர். பின்னர் மூவரும் தங்கள் பாத யாத்திரையைத் தொடங்கினர்.

சிறிது நேரத்தில் ஸரயூ கங்கை ஸங்கமத்தை வந்தடைந்தனர். அங்கு பல்லாயிரம் ஆண்டுகளாக உக்ரமான தவத்தினைச் செய்து வரும் முனிவர் களின் ஆஶ்ரமங்கள் இருப்பதைக் கண்ணுற்றனர். இவ்விடம் அழகிய ஶோலையாக இருப்பதாலும், முனிவர்கள் நித்ய கர்மாக்களாகிய ஹோமங் களைச் செய்து வரும் இடமாதலாலும் ''வேள்வி வாய்த்தாவு மாபுகை தழுவு சோலை'' என்றார் கம்பர். ''இங்குள்ள ஆஶ்ரமத்தில் பல புண்ய கர்மாக்கள் நிகழ்கின்றன. இவ்வாஶ்ரமத்தைப் பார்ப்போரும் புண்யத்தின் பயனைப் பெறுகின்றனர். இதைப் பார்த்த தம் மனதில் அமைதியும், மகிழ்ச்சியும் தோன்றவே, தனித்து இவ்விடத்திற்கு ஒரு பெருமை இருக்கும்'' என எண்ணியவர்களாய் முனிவரைப் பார்த்து: ''முனிவரே! இது யாருடைய ஆஶ்ரமம்? இங்கு வசிப்பது யார்?'' எனக் கேட்டனர். முனிவர் சிரித்துக் கொண்டே விடையளிக்கத் தொடங்கினார். சிரித்ததற்குச் சில காரணங்கள் உள்ளன. இதுவரை அதிகமாகப் பேசாத குழந்தைகள் அழகாகக் கேள்வி கேட்கிறார்களே. குரலிலே என்ன அழகு! கேள்வி தன் காதுகட்கு இனிமையாக இருக்கிறதே. மனிதனாக அவதரித்தபடியால் எதையும் தான் அறியாதவன் போன்று நடிக்கின்றானே! ''இது காமாஶ்ரம மாகும். அழகுத் தெய்வமான மன்மதனின் ஆச்ரமம்'' என்று பதில் சொல்ல வெட்கிச் சிரித்தாராம்.

तासामाविरभूच्छौरिः स्मयमान मुखाम्बुजः ।
पीताम्बर धरस्रग्वी साक्षान्मन्मथमन्मथः ॥

தாஸாம் ஆவிரபூத் ஸௌரி: ஸ்மயமான முகாம்புஜ: ।
பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாத் மன்மத மன்மத: ॥

கண்ணனைக் காணாது கோபியர் தபிக்கும் பொழுது புன்னகை மிளிரும் செந்தாமரையை ஒத்த திருமுகத்தோடும், கரிய திருமேனியில் கண்களைக் கவரும் பட்டாடையோடும், திருமார்பிலே பசுமை மிகும் வனமாலையோடும் அழகுத் தெய்வத்திற்கும் அழகினை நல்கும் தெய்வ மாய் எதிரே தோன்றுகிறவனாயிற்றே இவன்.

पुंसां दृष्टि चित्तापहारिणम्
''பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்''

வா.ரா. அயோ.-3

காய்ந்து உலர்ந்து வாடி வதங்கி, தோல் சுருங்கி, எலும்புகள், மேலிட்டுப் புலன்களை வென்ற தபஸ்விகளும் உன்னை நேரில் பார்த்ததும், அழகில் மயங்கித் தம் கண்களையும், மனத்தையும் பறி கொடுத்து மயங்கி நிற்பரே!

''ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்''

க.ரா.- தாடகை

உன்னைக் காணும் ஆண்கள் உன்னழகிலே சொக்கி நாம் பெண் களாகப் பிறக்கவில்லையே என மனம் வருந்துகின்றனர்.

ஆக ஸௌந்தர்ய தேவதையான உன்னிடம் அழகுத் தெய்வமாம் மன்மதனின் ஆச்ரமம் எனச் சொல்ல வேண்டியிருக்கிறதே என்று நகைத் தாராம். உன்னைக் கண்ட பின்பு மற்றொருவனை அழகுத் தெய்வம் எனப் பகர்வது பேதமை தானே!

''ராமா! இதைக் காமாச்ரமம் என்பர். இங்கு சிவன் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் மீது மலரம்புகளைத் தொடுத்து மன்மதன் அவர் தவத்தைக் கெடுத்தான். சிவன் சினத்தினால் நெற்றிக் கண்ணைத் திறந்து காமனைச் சுட்டெரித்தார். அன்று முதல் அவன் அனங்கன் (சரீரமில்லாதவ னாக) ஆனான். அவன் சரீரம் விழுந்த இடமானபடியால் அங்கதேசம் என்றும், இதை காமாச்ரமம் என்றும் பகர்வர்''.

इहाद्य रजनीं राम ! वसेम शुभदर्शन ।
पुण्ययोः सरितोर्मध्ये श्वः तरिष्यामहे वयम् ॥
अर्घ्यं पाद्यं तथाऽऽतिथ्यं निवेद्य कुशिकात्मजे ।
रामलक्ष्मणयोः पश्चादकुर्वन् अतिथिक्रियाम् ॥
कथाभिरभिरामाभिः अभिरामौ नृपात्मजौ ।
रमयामास धर्मात्मा कौशिको मुनिपुङ्गवः ॥

இஹாத்ய ரஜனீம் ராம! வஸேம சுபதர்ஶன!।
புண்யயோ: ஸரிதோ: மத்யே, ஶ்வ: தரிஷ்யாமஹே வயம் ॥
அர்க்யம் பாத்யம் ததா ஆதித்யம் நிவேத்ய குஶிகாத்மஜே ।
ராமலக்ஷ்மணயோ: பஶ்சாத் அகுர்வன் அதிதிக்ரியாம் ॥
கதாபி: அபிராமாபி: அபிராமௌ ந்ருபாத்மஜௌ ॥
ரமயாமாஸ தர்மாத்மா கௌஶிக: முனிபுங்கவ: ॥

வா.ரா.பால.-23

''காமன், சிவன் இவர்களுடைய தொடர்பின் காரணமாக இந்த இடம் 'காமாஶ்ரமம்' 'ஸ்தாண்வாஶ்ரமம்' என்று வழங்கப்படுகிறது. இந்த சம்பவத்திற்கு முன்பிருந்தே இம்முனிவர்கள் இங்கு பரம்பரையாக வாழ்கின்றனர். இவர்கள் பெரும் புண்யசாலிகள். அனைவரின் பாபங்களைப் போக்கும் புண்ய நதிகளான கங்கையும், ஸரயூவும் இருமருங்கிலும் ஓடுகின்றன. நீயும் இவ்விடத்தை மிகவும் விரும்புகிறாய். இன்றிரவு இவ்வாஶ்ரமத்தில் தங்கி நாளை புறப்படுவோம்'', என்றார் முனிவர். பிறகு மூவரும் ஆஶ்ரமத்தை நோக்கிச் சென்றனர். அங்குள்ள முனிவர்கள் ஞான த்ருஷ்டியினால், நம் நலம் கருதி இவர்கள் வருகிறார்கள், என்பதை உணர்ந்து எதிர் கொண்டு அழைத்து நல்வரவு கூறி அர்க்யம், பாத்யம், ஆசமனீயம், போஜ்யம், பானீயம் என்கிற முறைப்படி உபசரித்தனர். விஶ்வாமித்ரர் ராம லக்ஷ்மணர்கட்கு மாதா, பிதா, குரு என்ற நிலையில் இருப்பதை உணர்ந்து முதலில் முனிவருக்கும், பின்னர் இவ்விருவருக்கும் உபசாரங்களைச் செய்ததாக வால்மீகி கூறுவர்.

இவர்களை உபசரித்த முனிவர்கள் ஞானத்ருஷ்டி உடையவர்களாயிற்றே! விஶ்வாமித்ரரைப் போன்று ராமனை நாராயணன் என்று அறிவர். எனவே தெய்வத்திற்குத் தானே முதல் மரியாதை செய்ய வேண்டும்? ஆம், உண்மை தான். ஆனால் இத்தெய்வம் அதை உகந்து விரும்பினால் தானே!

आराधनानां सर्वेषां विष्णोः आराधनं परम् ।
तस्मात् परतरं प्रोक्तं तदीयाराधनं परम् ॥

ஆராதனானாம் ஸர்வேஷாம் விஷ்ணோ: ஆராதனம் பரம் ।
தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதனம் பரம் ॥

பாத்மோத்தரம் - 29-81

मम मद्भक्त भक्तेषु प्रीति रभ्यधिका भवेत् ।
तस्माद्मद्भक्त भक्ताश्च पूजनीयाः विशेषतः ॥

மம மத் பக்த பக்தேஷு ப்ரீதி: அப்யதிகா பவேத் ।
தஸ்மாத் மத் பக்த பக்தா: ச பூஜனீயா: விஶேஷத: ॥

பாரதம். ஆஶ்வ 116-23

ஆராதனங்களுக்குள்ளே உயர்ந்தது விஷ்ணுவின் ஆராதனம். அதைவிட மிக உயர்ந்தது ததீயர்களின்—அவன் பக்தர்களின் ஆராதனம்; எனவே பகவான் கூறுகிறான். ''எனக்கு, எனது பக்தர்களிடம் பக்தி செய்கின்றவர்களிடமே அதிக அன்பு. ஆக எனது தொண்டர்களுக்குத் தொண்டு செய்கின்றவர்களைத் தான் சிறப்பாக உபசரிக்க வேண்டும் என்பது.'' தெய்வத்தின் கட்டளையானபடியால் பக்தரான விஶ்வாமித்ரருக்கு முதலில் உபசாரம் (விருந்தோம்பலை) செய்தனர்.

மாலையில் ஸந்த்யாவந்தன, ஹோமாதிகளைச் செய்த பிறகு அழகிய கதைகளைச் சொல்லி அரசகுமாரர்களை முனிவர் மகிழ்வித்தார். இவ்வாறு பல்வகைக் கதைகளின் வாயிலாக சரித்திர அறிவையும், பூகோள அறிவையும் நல்கினார் முனிவர். மேலும் முன்பு பெற்ற அம்பு எய்தல் போன்ற படைக் கலப் பயிற்சியும் செயல் முறையில் தாடகை, ஸுபாஹு, மாரீசன் போன்றோரிடம் பயன்படப் போகிறது. இவர்கட்கு பள்ளிப் படிப்பு (High School Study) வஸிஷ்டரிடமும், கல்லூரிப் படிப்பு, செயல்முறைப் படிப்பு (College & Practical Study) பெயருக்கேற்ப உலகறிந்த விஶ்வாமித்ரரிடமும் கிடைத்ததாகக் கொள்ளலாம்.

न्यवसन् सुसुखं तत्र कामाश्रम पदे तदा ।

ந்யவஸன் ஸுஸுகம் தத்ர காமாஶ்ரமபதே ததா!!

வா.ரா.பால.-23

அன்றைய இரவு காமாஶ்ரமத்தில் மிகவும் இன்பமாகக் கழிந்தது.

ततः प्रभाते विमले कृत्वाह्निकमरिन्दमौ ।
विश्वामित्रं पुरस्कृत्य नद्याः तीरमुपागतौ ॥
ते च सर्वे महात्मानः मुनयः संशित व्रताः ।
उपस्थाप्य शुभां नावं विश्वामित्रमथाब्रुवन् ॥
आरोहतु भवान् नावं राजपुत्र पुरस्कृतः ।
अरिष्टं गच्छ पन्थानं माऽभूत् काल विपर्ययः ॥
ततार सहितस्ताभ्यां सरितं सागरङ्गमाम् ।

தத: ப்ரபாதே விமலே க்ருத்வா ஆன்ஹிகம் அரிம்தமௌ ।
விஶ்வாமித்ரம் புரஸ்க்ருத்ய நத்யா: தீரம் உபாகதௌ ॥
தேச ஸர்வே மஹாத்மான: முனய: ஸம்ஶிதவ்ரதா: ।
உபஸ்தாப்ய ஶுபாம் நாவம் விஶ்வாமித்ரம் அதாப்ருவன் ॥
ஆரோஹது பவான் நாவம் ராஜபுத்ர புரஸ்க்ருத: ।
அரிஷ்டம் கச்ச பந்தானம் மாஅபூத் கால விபர்யய: ॥
ததார ஸஹித: தாப்யாம் ஸரிதம் ஸாகரங்கமாம் ॥

வா.ரா.பால. - 24

விடியற் காலையில் (ப்ராஹ்ம முஹூர்த்தத்தில்) இருவரும் எழுந்து நீராடி, ஸந்த்யாவந்தனம் முதலிய ஆன்ஹிக அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு விஶ்வாமித்ரருடன் நதிக்கரைக்குச் சென்றனர். (வால்மீகி அரிம்த மௌ-பகைவர்களை அடக்கும் தன்மையர் எனக் குறிப்பிடுவதால் தீயோரை அழிப்பதாகிற அவதார, கார்யம் இனி தொடங்குவதைக் குறிக்கும்) முன்னாள் இவர்களை வரவேற்ற மஹர்ஷிகள் இன்று, வழியனுப்ப, நதிக்கரையில் குழுமியிருந்தனர். அதோடு கங்கையைக் கடப்பதற்காக ஒரு படகையும் துறையில் தயாராக வைத்திருந்தனர். அது ஆகிவந்த படகு போலும். அதில் செல்பவர் க்ஷேமமாக (நலமாக) விபத்து எதுவுமின்றி அக்கரை செல்வர். மங்களத்தை விளைவிக்கும் படகு, ராஜகுமாரர்கள் இடையூறின்றி அக்கரை சேர்ந்தால் தான், காட்டில் வாழும் முனிவர்கட்கு துன்பங்கள் விலகும். இதற்காக இங்குள்ள முனிவர்கள் முன்னரே வந்து அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு வைதிக ரக்ஷா மந்த்ரங்களைச் சொல்லிப் படகை மந்திரித்து வைத்தனராம். (ஸம்ஶித வ்ரதா: எனும் உரியசொல் இதைத் தெரிவிக்கிறது).

மூவரும் வந்ததும், விஶ்வாமித்ரரைப் பார்த்து ''ராம லக்ஷ்மணர் களைப் படகில் ஏற்றிவிட்டுத் தாங்களும் ஏறிக் கொள்ளுங்கள். உங்கள் வழிப்பயணம் மங்களமாக அமையட்டும். தாமதம் வேண்டாம்'' என்றனர். மஹர்ஷிகள், இவர்களின் பிரயாணத்திற்கு லக்னம் பார்த்து வைத்திருந்தனர் போலும். எனவே துரிதப்படுத்தினர். கௌசிக முனிவர், குழாத்திற்கு மரியாதை செய்து, தசரத குமாரர்களையும் வணங்கச் செய்வித்து, மூவரும் படகில் ஏறி, அதை மிகக் கவனமாகச் செலுத்தி அக்கரைக்குச் சென்றனர். கங்கை, கடலை நோக்கி விரைந்து செல்வதால் படகைச் செலுத்துவதில் மிகக் கவனம் தேவை. ஆயினும் பகவானும் பாகவதனும் முதலில் ஏற, அவர்களின் திருவடித் தொடர்பால் படகு, விபத்தின்றி அக்கரை சேரும் என முனிவர்களின் நம்பிக்கை ''அம்ருதஸ்ய ஏஷ: ஸேது:'' என உபநிஷத் கூறும். பிறவிக் கடலைக் கடக்கச் செய்யும் ராமனாகிற (ராமநாமமாகிற) தெப்பத்தைப் பற்றியிருக்கும் முனிவர்கள் அப்பரமனுக்கே இங்கு தெப்பம் அளிக்கின்றனர். அந்தோ!

ஸரயூவின் பெருமை

अथ रामः सरिन्मध्ये पप्रच्छ मुनिपुङ्गवम् ।
वारिणः भिद्यमानस्य किमयं तुमुलो ध्वनिः ॥
कैलास पर्वते राम ! मनसा निर्मितं सरः ।
ब्रह्मणा नर शार्दूल तेनेदं मानसं सरः ॥
तस्मात्सुस्राव सरसः साऽयोध्यामुपगूहते ।
सरः प्रवृत्ता सरयूः पुण्या ब्रह्मसरश्च्युता ।
तस्यायं तुमुलश्शब्दः जाह्नवीमभिवर्तते ॥
वारिसंक्षोभजोराम प्रणामं नियतः कुरु ।

அத ராம: ஸரிந்மத்யே பப்ரச்ச முனிபுங்கவம் ।
வாரிண: பித்யமானஸ்ய கிமயம் துமுல: த்வனி: ॥
கைலாஸ பர்வதே ராம ! மனஸா நிர்மிதம் ஸர: ।
ப்ரஹ்மணா நரஶார்தூல தேன இதம் மானஸம்ஸர: ॥
தஸ்மாத் ஸுஸ்ராவ ஸரஸ: ஸா அயோத்யாம் உபகூஹதே ।
ஸர: ப்ரவ்ருத்தா ஸரயூ: புண்யா ப்ரஹ்மஸரஸ் ச்யுதா ॥
தஸ்யாயம் துமுல: ஶப்த: ஜான்ஹவீம் அபிவர்த்தே ।
வாரி ஸம்க்ஷோபஜ: ராம ப்ரணாமம் நியத: குரு ॥

வா.ரா.பால.-24

இரவி தன்குலத்து எண்ணில் பல்வேந்தர் தம்
பரவு நல் ஒழுக்கின்படி பூண்டது
ஸரயூ என்பது தாய் முலை அன்னது இவ்
உரவு நீர் நிலத்து ஓங்கும் உயிர்க்கெலாம்.

க.ரா.பால.-ஆற்று

பரவு : பாதுகாத்த, உரவு : வலிமை, உலவும்

ताभ्यां तु तावुभौ कृत्वा प्रणाममतिधार्मिकौ ।
तीरं दक्षिणमासाद्य जग्मतुर्लघुविक्रमौ ।

தாப்யாம் து தௌ உபௌ க்ருத்வா ப்ரணாமம் அதிதார்மிகௌ ।
தீரம் தக்ஷிணம் ஆஸாத்ய ஜக்மது: லகுவிக்ரமௌ ॥

வா.ரா.பால.-24

மூவரும் கங்கையைப் படகினால் கடந்து கொண்டிருக்கின்றனர். ஆற்றின் நடுப்பகுதியை அடைந்தபொழுது ''ஹோ'' என பேரிரைச்சல் கேட்கிறது. இது ஸரயூ நதி, கங்கையில் வேகமாக வந்து கலப்பதினால் ஏற்படும் ஓசை. பெரியோர்களோடு சிறுவர்கள் வெளியில் செல்லும்போது ஆங்காங்குள்ள சிறப்புக்களைச் சுட்டிக் கேள்வி கேட்பதும், அறியாதனவற்றைத் தெரிந்து கொள்வதும் இயற்கை. அம்முறையில் ராமனும் இவ்வோசையைப் பற்றி முனிவரிடம் கேட்க அவரும் கூறத் தொடங்கினார்.

''ராம! இமயத்தின் உச்சியில் கைலாஸமலை இருக்கிறது. அதில் குபேரனின் மாளிகைக்கருகில் பிரமன் ஒரு குளத்தை மனதினாலேயே படைத்தார். மனதினால் படைக்கப்பட்டது பற்றி இதை மானஸ ஸரோவரம் என வழங்குவர். இந்த ஸரஸ்ஸிலிருந்து வெளியேறும் நீர் ப்ரவாஹமாக ஓடி பூமியில் விழுகிறது. இது உங்கள் அயோத்தியின் மேற்கு பகுதியில் நுழைந்து வடக்குப் புறமாக ஓடி கிழக்கேயுள்ள அங்க நாட்டின் வழியாகச் சென்று கங்கையில் கலக்கிறது. இந்நதி (மானஸ) ஸரஸ்ஸினின்றும் தொடங்கி ஓடி வருவதால் ஸரயூ என அழைக்கப்படுகிறது. கங்கையில் கலக்கும்பொழுது நீரோடு நீர் வேகமாக மோதுவதால் இரைச்சல் ஏற்படுகிறது. இந்த இரு தெய்வீகமான புண்ய நதிகளை (கங்கை, ஸரயூ) வணங்குவாயாக,'' என்றார்.

''ஸரயூ நமக்குத் தாய் போன்றது. தாய்ப் பாலைப் பருகிக் குழந்தைகள் வலிமை பெற்று வளர்கின்றன. அதுபோல் இப்பகுதியிலுள்ள அனைவரும் ஸரயூ நீரைப் பருகியே வளர்கின்றனர். மேலும் மரம், செடி, கொடி, பயிர்கள் எல்லாம் இதன் நீரைப் பருகியே வளர்ந்து நமக்குத் தேவையான உணவுப் பொருட்களை அளிக்கின்றன. உனது சூரிய குலத்து முன்னோர்களாகிய மன்னர்கள் இன்று வரை நல்லொழுக்கத்தினின்றும் சிறிதும் வழுவாது ஒழுகி வருவது போல் இந்நதியும் நீர்ப்பெருக்கு சிறிதும் குறையாது தொன்று தொட்டு பிரவஹித்து வருகிறது. எனவே தாயும் தெய்வமுமான நதிகளைப் போற்றி வணங்குங்கள் என்றார்''. இவ்வாறு முனிவர் வணங்கச் சொல்லுவது நம்மனோர்க்கும் வழிகாட்டியாக அமைகிறது அன்றோ என்பர் கம்பர்.

மேலும் ஸரயூ நதியைத் தெய்வமாகவும் கம்பர் காட்டியுள்ளதையும் இங்கு நினைவு கூர்வது பொருத்தமாகும்.

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லைஇல் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈது என்னத்
தொல்லையில் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும் போல் பரந்ததன்றே.

க.ரா.பால. - ஆற்று

போந்து: வெளிப்பட்டு வந்து, நீத்தம்: வெள்ளம், சூழ்ச்சி: ஆராய்ச்சி

பரம்பொருளை (எம்பெருமானை) உபநிஷத்துக்கள், தமிழ் மறைகள், புராணங்கள், இதிஹாஸங்கள் இவைகளை ஆதாரமாகக் கொண்டு,

சமயப் பெரியோர்கள் பலவாறாகக் கூறுகின்றனர். உண்மையில் பார்க்கப் போனால் உபநிஷத்துக்களே பரமனைப் பற்றிப் பேச முயன்று, அவனுடைய குண நலன்களை விரிவாக எடுத்துக் கூற முடியாமல் திணறுகின்றன. ஆனால் மறைகளை ஆராயும் பெரியோர்களோ விசிஷ்டாத்வைதம் என்றும், அத்வைதம் என்றும், த்வைதம் என்றும், அவனை ஸகுணன் என்றும், நிர்குணன் என்றும், பலவாறாக ஆராய்ந்து பேசுகிறார்கள். மேலும் அவன் ஸ்ரீ வைகுண்டத்தில் பரன் எனும் வடிவோடு பரவாஸுதேவ னாகவும், திருப்பாற்கடலிலும் மற்றும் பிற இடங்களில் வ்யூஹம் என பேசப்பட்டு லக்ஷ்மீ நாராயணன், அநிருத்தன், ஹயக்ரீவன், கேசவன் ஆகிய பற்பல வடிவினனாகவும், பூவுலகில் விபவமாக மத்ஸ்ய, கூர்ம, ராம, கிருஷ்ணாதி வடிவங்களில் அவதரிப்பவனாகவும், ஜீவர்களுடைய இதயத் தில் மறைந்து நின்று அந்தர்யாமியாகவும், திருக்கோயில்களில் வேத மந்திரங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பல்வகை அர்ச்சா மூர்த்தி களாகவும் ஸேவை ஸாதித்து அருள் புரிவதாகவும் கூறுகின்றனர். ஆதிமூல மாகிய ஒரு பரம் பொருளே ஸ்ருஷ்டிக்குப் பிறகு பல்வேறு வகைகளாக ஸேவை ஸாதித்தாலும் மஹா ப்ரளயத்திற்குப் பிறகு பரவாஸுதேவனாகவே அறியப்படுகிறான்.

இதே போன்று ஸரயூவின் வெள்ளம் (ப்ரவாஹம்) வாய்க்கால், ஆறு, மடு, ஏரி, குளம், ஊற்று என பலவாறாகப் பேசப்பட்டு கடைசியில் கடலோடு கலந்து ஒரே வெள்ளமாகவே மீண்டும் மாறுகிறது. இது முற்கூறியபடி பரமனையே ஒத்திருக்கிறபடியால் வணங்கச் சொன்னாராம்.

இவ்விரு நதிகளின் இடையிலுள்ள பகுதியில் இரவு தங்கிப் பொழுது விடிந்ததும் கங்கையைத் தாண்டித் தென்திசை நோக்கிச் சென்றனர்.

தாடகை வரலாறும் வீழ்ச்சியும்

अहो वनमिदं दुर्गं झिल्लिका गण नादितं ।
सिंहव्याघ्र वराहैश्च वारणैश्चोपशोभितम् ॥
संकीर्णं बदरीभिश्च किन्त्वेतद्दारुणं वनम् ।
श्रूयतां वत्स काकुत्स्थ यस्यैतद् दारुणं वनम् ।
एतौ जनपदौ स्फीतौ पूर्वमास्तां नरोत्तम ! ॥
मलदाश्च करूशाश्च देवनिर्माण निर्मितौ ।

அஹோ வனம் இதம் துர்கம் ஜில்லிகா கண நாதிதம் ।
ஸிம்ஹ, வ்யாக்ர, வராஹை: ச வாரணை: ச உபசோபிதம் ।
ஸங்கீர்ணம் பதரீபி: ச கிந்து ஏதத் தாருணம் வனம் ।
ஶ்ரூயதாம் வத்ஸ காகுத்ஸ்த ! யஸ்ய ஏதத் தாருணம் வனம் ॥
ஏதௌ ஜனபதௌ ஸ்பீதௌ பூர்வம் ஆஸ்தாம் நரோத்தம !।
மலதா: ச கரூசா: ச தேவநிர்மாண நிர்மிதௌ ॥

வா.ரா.பால. - 24

எதிரே அடர்ந்த காடு. பயங்கரமாகக் காட்சி அளிக்கிறது. மக்கள் நடமாடிய அடையாளங்களே இல்லை. மறைந்திருக்கும் பயங்கரமான ஓநாய்கள், நாய்கள், கேட்போர் நடுங்கும்படியான ஒலிகளை எழுப்புகின்றன. சிங்கம், புலி, கரடி, யானைகள் இங்குமங்குமாக நடமாடிக் கொண்டிருக்கின்றன. உள்ளே நுழைய முடியாமல் இலந்தை முதலிய முள்ளடர்ந்த மரம், செடி, கொடிகள் பரவியிருக்கின்றன. ''இத்தகு பயங்கரமான காடு ஏற்படக் காரணம் என்ன?'' எனக் கேட்கிறான் இராமன். இதைக் கடந்து செல்வது கடினம் என எண்ணம் போலும். ஆயினும் அவ்விடத்தின் பழைய சரித்திரங் களை, பெருமைகளைச் சொல்லிக் கொண்டே அழைத்துச் செல்கிறார் முனிவர்.

''முன்பு இங்கு புகழ் பெற்ற, செல்வம் கொழிக்கும் இரு நாடுகள் 'தேவருலகோ', என்னும்படி இருந்தன. இவைகட்கு மலதம், கருசம் என்று பெயர்கள். இப்பெயர்கள் காரணப் பெயர்களாகும். ஒரு காலத்தில் தேவேந்திரன் வ்ருத்ரனைப் போரில் கொன்றான். உடனே அவனை ப்ரஹ்மஹத்திதோஷம் பற்றியது. இதனால் தூய்மையின்றியும், பசியோடும் வாடித் துன்புற்றான். அவனிடம் கருணை கொண்ட மஹர்ஷிகள் பாபங் களைப் போக்கும் மந்திரங்களை ஜபித்து கங்கையின் புனித நீரால் அவனை இங்கு நீராட்டினர். இதனால் இந்திரனின் பாபங்களும், பசியும் அகன்றன.

ப்ரஹ்மஹத்தி தோஷத்தினின்றும் விடுபட்ட இந்திரன் தனது அழுக்கையும், பசியையும் ஏற்றுக் கொண்டதற்காக மகிழ்ந்து இந்நாட்டிற்கு வரமளித்தான்:-

इमौ जनपदौ स्फीतौ ख्यातिं लोके गमिष्यतः ।
मलदाश्च करूशाश्च मुदितौ धनधान्यतः ॥

இமௌ ஜனபதௌ ஸ்பீதௌ க்யாதிம் லோகே கமிஷ்யத: ।
மலதா: ச கரூசா: ச முதிதௌ தனதான்யத: ॥

வா.ரா.பால.-24

இந்நாடுகள் இனி மலதம், கரூசம் என வழங்கப்படும். இவை உலக நாடுகளுள் புகழ் பெற்று விளங்கும். செல்வமும், விளைபொருள்களும் கொழிக்கும் நாடுகளாக விளங்கும் என்றும் சொன்னான்.''

कस्यचित्वथ कालस्य यक्षी वै कामरूपिणी ।
बलं नागसहस्रस्य धारयन्ती तदाह्यभूत् ॥
ताटका नाम भद्रं ते भार्या सुन्दस्य धीमतः ।
मारीचो राक्षसः पुत्रः यस्याः शक्रपराक्रमः ॥
राक्षसो भैरवाकारः नित्यं त्रासयते प्रजाः
इमौ जनपदौ नित्यं विनाशयति राघव! ॥
सेयं पन्थानमावार्य वसत्यध्यर्धयोजने
स्वबाहुबलमाश्रित्य जहीमां दुष्टचारिणीम्
मन्नियोगात् इमं देशं कुरुनिष्कण्टकं पुनः ।

கஸ்ய சித்துஅத காலஸ்ய யக்ஷீவை காமரூபிணீ ।
பலம் நாகஸஹஸ்ரஸ்ய தாரயந்தீ ததாஹி அபூத் ॥
தாடகா நாம பத்ரம்தே பார்யா ஸுந்தஸ்ய தீமத: ।
மாரீச: ராக்ஷஸ: புத்ர: யஸ்யா: ஶக்ரபராக்ரம : ॥
ராக்ஷஸ: பைரவாகார: நித்யம் த்ராஸயதே ப்ரஜா: ।
இமௌ ஜனபதௌ நித்யம் விநாஶயதி ராகவ! ॥
ஸேயம் பந்தானம் ஆவார்ய வஸதி அத்யர்த யோஜனே ।
ஸ்வபாஹுபலம் ஆஶ்ரித்ய ஜஹிஇமாம் துஷ்டசாரிணீம் ।
மந்நியோகாத் இமம்தேஶம் குருநிஷ்கண்டகம் புன: ॥

வா.ரா. பால.-24

ராமன்:

कथं नाग सहस्रस्य धारयति अबला बलम् ॥
கதம் நாக ஸஹஸ்ரஸ்ய தாரயதி அபலா பலம் ॥

விச்வாமித்ர:

वरदानकृतं वीर्यं धारयति अबलाबलम् ॥
पूर्वमासीत् महायक्षः सुकेतुः नाम वीर्यवान् ।
अनपत्यः शुभाचारः सच तेपे महत्तपः ॥

வரதானக்ருதம் வீர்யம் தாரயதி அபலா பலம் ॥
பூர்வம் ஆஸீத் மஹாயக்ஷ: ஸுகே து: நாம வீர்யவான் ।
அனபத்ய: ஶுபாசார: ஸச தேபே மஹத் தப: ॥

பிதாமஹ:

कन्यारत्नं ददौ राम ताटकां नाम नामतः ।
जम्भ पुत्राय सुन्दाय ददौ भार्यां यशस्विनीम् ।

கன்யாரத்னம் ததௌ ராம । தாடகாம் நாம நாமத: ।
ஜம்பபுத்ராய ஸுந்தாய ததௌ பார்யாம் யஶஸ்வினீம் ॥

வா.ரா. பால.-25

வெற்புஅன புயத்து மாரீசனும், விறல்
மல் பொரு சுவாகுவும் வந்து தோன்றினர்
விழைவுஉறும் மாதவம் வெஃகினோர் விரும்பு
உழை, கலை, இரலையை உயிர் உண்டு ஓங்கிய
வழை முதல் மரன்எலாம் மடிப்ப, மா தவன்
தழல் எழ விழித்தனன் சாம்பர் ஆயினான்.

க.ரா.பால. - தாடகை.

விழைவு : விருப்பம், வழை : சுரபுன்னை

सुन्दे तु निहते राम सा अगस्त्यं मुनिपुङ्गवम् ।
ताटका सह पुत्रेण प्रधर्षयितुं इच्छति ॥
भक्षार्थं जात संरम्भा गर्जन्ती सा अभ्यधावत ॥

ஸுந்தேது நிஹதே ராம! ஸா அகஸ்த்யம் முனிபுங்கவம் ।
தாடகா ஸஹ புத்ரேண ப்ரதர்ஷயிதும் இச்சதி ॥
பக்ஷார்த்தம் ஜாத ஸம்ரம்பா கர்ஜந்தீ ஸா அப்யதாவத ॥

வா.ரா.பால.-25

தேவேந்திரனின் வரபலத்தால் மலதமும் கருசமும் மேன்மேலும் செழிப்புடன் வளர்ந்தோங்கின, சிறிது காலத்திற்குப் பிறகு யக்ஷ கன்னிகை யான தாடகை என்பவள் இங்கு வந்தாள். இவளுடைய தந்தை யக்ஷர்களின்

தலைவன் ஸுகேது. இவன் மக்கட்பேறின்றி தவம் புரிந்து நான்முகனின் அருளால் இப்பெண்ணைப் பெற்றெடுத்தான். ஆயிரம் யானைகளின் வலிமையைப் பெற்றவள் இவள். தக்க பருவத்தில் கட்டழகு வாய்ந்த தன் மகளை யக்ஷர்குடியைச் சேர்ந்த ஜம்பன் என்பவனின் புதல்வனான ஸுந்தனுக்கு மணம் முடித்தான். காமனும் ரதியும் போன்று இல்லறத்தில் வாழ்ந்த இவர்கட்கு பன்னாட்களுக்குப் பிறகு இருபுதல்வர்கள் பிறந்தனர். இவர்களை மாரீசன், ஸுபாஹு என அழைப்பர். இவர்கள் மலைகளை ஒத்த தோள்களும், போரில் வெல்லும் புஜபலமும் பெற்றிருந்தனர். இந்திரனை ஒத்த வீரமுடையவர், இவர்களைக் கண்டாலே மக்கள் அஞ்சி ஓடுவர், ஸுந்தன் ஒருநாள் அகஸ்த்யரின் ஆஶ்ரமத்துக்கு வந்து நீண்டுயர்ந்து வளர்ந்த நிழல் தரும் மரங்களைப் பிடுங்கி எறிந்தான். ஆஶ்ரமத்தில் வசிக்கும் உழை, கலை, இரலை எனப்படும் மான் வகைகளைக் கொன்று தின்று மகிழ்ந்தான். இதைக் கண்ட அகத்திய முனிவர் கோபத்தால் ஸுந்தனை தீப்பொறி பறக்க விழித்துப் பார்த்து சுட்டெரித்துச் சாம்பலாக்கினார்.

தன் கணவன் அகத்தியரால் சுட்டெரிக்கப்பட்டதை அறிந்த தாடகை மகன் மாரீசனோடு அவரைக் கொன்று புசிக்க கர்ஜித்துக் கொண்டே விரைந்து ஓடி வந்தாள்.

आपतन्तीं तु तां दृष्ट्वा अगस्त्यः भगवान् ऋषिः ।
राक्षसत्वं भजस्व इति मारीचं व्याजहार सः ॥
(ताटकां) पुरुषादी महायक्षी विरूपा विकृतानना ।
इदं रूपं विहाय अथ दारुणं रूपं अस्तु ते ॥

ஆபதந்தீம் து தாம் த்ருஷ்ட்வா அகஸ்த்ய: பகவான் ரிஷி:
ராக்ஷஸத்வம் பஜ ஸ்வேதி மாரீசம் வ்யாஜ ஹார ஸ: ॥
(தாடகாம்) புருஷாதீ மஹாயக்ஷீ விரூபா விக்ருதானனா ।
இதம் ரூபம் விஹாய அத தாருணம் ரூபம் அஸ்து தே ॥

வ.ரா.பால.-25

தமிழ் எனும் அளப்பரும் சலதி தந்தவன்
உமிழ்கனல் விழிவழி ஒழுக உங்கரித்து
அழிவன செய்தலால் அரக்கராகியே
''இழிக''! என உரைத்தனன் அசனி எஞ்சவே

க.ரா.பால.-தாடகை

ஆரவாரத்தோடு ஓடிவரும் தாடகையையும், அவள் மகனையும் (கண்களில் தீப்பொறி பறக்க) பார்த்து, (ஹும் என ஹுங்காரம் செய்து,) யக்ஷரெனும் தேவரினத்தைச் சேர்ந்த மாரீசனையும், தாடகையையும் அரக்கர்

(ராக்ஷஸர்) ஆகக் கடவீர் என ஶபித்தார். பிறருக்கு, ''நன்மை நல்கும் தொழிலை விடுத்து, இழி தொழிலை விரும்பும் உங்களுக்கு இதுவே தகும்'', என ஆவேஶத்துடன் கூறினார். மேலும் தாடகையை நோக்கி, ''நீ இனி அழகிழந்து பயங்கரத் தோற்றத்துடன், நரமாமிசம் புஶிக்கும் நீச ஜாதியைப் பெறுவாய்'' என இடிக்கும் குரலில் பேசினார்.

இங்கு கம்பன் ''முனிவன் தன் கண்களால் ஸாதுக்களிடம் கருணை மழையைப் பொழிபவன், தீயோர்களிடம் கோபக் கனலை உமிழ்பவன்'' எனும் பெருமையை முதலிரண்டடிகளில் உணர்த்துவதை உணரவும்.

இக் கொடியர்கள் அழகிய (மலதம், கரூசம்) நாட்டை அழித்தனர், மக்கள் அஞ்சி புகலிடம் தேடி ஓடினர். இதனால் நாடு காடாயிற்று, இங்கு சிறிது தூரத்தில் தாடகை தன்னை மீறி எவரும் செல்லாதபடி வழியை மறித்துக் கொண்டு வாழ்கிறாள். இக்காட்டைக் கடந்து செல்லவே எவரும் அஞ்சுவர். எனவே இது தாடகாவனம் ஆயிற்று.

முனிவரின் அறிவுரை

स्व बाहु बलमाश्रित्य जहि इमां दुष्टचारिणीं ।
मन्नियोगात् इमं देशं कुरु निष्कण्टकं पुनः ।
गो ब्राह्मण हितार्थाय जहि दुष्ट पराक्रमाम् ।
न हि एनां शाप संस्पृष्टां कश्चित् उत्सहते पुमान् ।
निहन्तुं त्रिषु लोकेषु त्वामृते रघुनन्दन ।
न हि ते स्त्री वधकृते घृणा कार्या नरोत्तम ॥
नृशंसं अनृशंसंवा प्रजारक्षण कारणात्
पातकं वा सदोषं वा कर्तव्यं रक्षता सताम्
राज्य भार नियुक्तानां एष धर्मः सनातनः ।
अधर्म्यां जहि काकुत्स्थ धर्मः हि अस्या न विद्यते ॥
श्रूयते हि पुराशक्रः विरोचन सुतां नृप !
पृथिवीं हन्तुं इच्छन्तीं मन्थरां अभ्यसूदयत् ।
विष्णुना च पुरा राम भृगुपत्नी दृढव्रता ।
अनिन्द्रं लोकमिच्छन्ती काव्यमाता निषूदिता ।
तस्मात् एनां घृणां त्यक्त्वा जहिमच्छासनान्नृप ।

ஸ்வபாஹு பலம் ஆஶ்ரித்ய ஜஹி இமாம் துஷ்டசாரிணீம் ।
மந்நியோகாத் இமம் தேஶம் குரு நிஷ்கண்டகம் புன: ॥

கோ ப்ராஹ்மண ஹிதார்த்தாய ஜஹி துஷ்ட பராக்ரமாம் ॥
ந ஹி ஏனாம் ஶாப ஸம்ஸ்ருஷ்டாம் கச்சித் உத்ஸஹதே புமான் ।
நிஹந்தும் த்ரிஷுலோகேஷு த்வாம்ருதே ரகுநந்தன ।
நஹி தே ஸ்த்ரீ வத க்ருதே க்ருணா கார்யா நரோத்தம ॥
ந்ருஶம்ஸம் அந்ருஶம்ஸம்வா ப்ரஜாரக்ஷண காரணாத் ।
பாதகம் வா ஸதோஷம் வா கர்தவ்யம் ரக்ஷதா ஸதாம் ॥
ராஜ்யபார நியுக்தானாம் ஏஷ: தர்ம: ஸனாதன: ।
அதர்ம்யாம் ஜஹி காகுத்ஸ்த தர்ம: ஹி அஸ்யா ந வித்யதே ॥
ஶ்ரூயதே ஹி புராஶக்ர: விரோசனஸுதாம் ந்ருப!।
ப்ருதிவீம் ஹந்தும் இச்சந்தீம் மந்தராம் அப்யஸூதயத் ॥
விஷ்ணு நா ச புரா ராம ப்ருகுபத்னீ த்ருடவ்ரதா ।
அநிந்த்ரம் லோகம் இச்சந்தீ காவ்ய மாதா நிஷூதிதா ॥
தஸ்மாத் ஏனாம் க்ருணாம் த்யக்த்வா ஜஹி மச்சாஸனாந்ந்ருப ॥

வா.ரா. பால.-25

''ராம! தாடகை இருக்கும் வழியில்தான் நாம் செல்கிறோம். நிச்சயமாக அவள் நம்மை எதிர்கொள்வாள். கொடுஞ்செயல் புரியும் இவளைக் கொன்று உனது தோள் வலிமையை—புஜபல பராக்ரமத்தைக் காட்ட வேண்டும். உனது குருவாகிய எனது ஆணையை ஏற்று இவ்விடத்தை பகையற்ற ப்ரதேஶமாகச் செய்ய வேண்டும், உலகின் நல்வாழ்விற்காக அந்தணர்கள் வேள்விகளையும், கர்மானுஷ்டானங்களையும், பகவதாரா தனத்தையும் செய்கிறார்கள். இதற்குப் பசுக்கள் இன்றியமையாதவை. அந்தணர்கட்கும் பசுக்கட்கும் பாதுகாப்பளிப்பது உனது கடமை. எனவே தாடகையை நீ கொல்ல வேண்டும்.''

''உயிரினத்திற்கே கொடுமை புரியும் இவளை எவரும் மன்னிக்க மாட்டார்கள். ஆனால் அவர்களால் இவளைத் தண்டிக்க முடியாது, ஏன்? மூவுலகிலும் உன்னைத் தவிர எவருக்கும் இவளை மாய்க்கும் ஆற்றல் கிடையாது. மனிதருள் சிறந்தோய்! நீ கருணைக் கடல், உயிரினத்தின் மீது கருணையை மழையாகப் பொழிபவன். பெண் எனில் பேயும் இரங்கும் என்பர். ஆயினும் தாடகையைக் கொல்வதில் ஜுகுப்ஸையோ, இரக்கமோ கொள்ளக்கூடாது. நீயோ சக்ரவர்த்தியின் திருமகன். நாட்டின், பொது மக்களின் நலம் பேணுவது உனது கடமை, மக்களை—சான்றோர்களைக் காப்பதற்காகச் செய்யும் தொழில் 'கொடியது, மாபாதகமானது, குற்றமுடையது, புகழைச் சிதைத்து அபவாதத்தை விளைவிக்கவல்லது' என ஆய்ந்து பார்க்கக்கூடாது. மக்களைக் காத்தலையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். ஆட்சியில் இருப்பவர்கள் தொன்று தொட்டு நடைமுறையிலுள்ள நல்லறத்தைச் சுயநலம் பேணாது செய்தேயாக வேண்டும். இதனால் வரும் பழி பாபங்களைப் பொருட்படுத்தக் கூடாது. அறவழி பிறழ்ந்து தீ நெறியில் செல்லும் இவளை மாய்ப்பதே நல்லறமாகும்.

त्यजेदेकं कुलस्यार्थे ग्रामस्यार्थे कुलं त्यजेत् ।
ग्रामं जनपदस्यार्थे आत्मार्थे पृथिवींत्यजेत् ॥

த்யஜேத் ஏகம் குலஸ்ய அர்த்தே க்ராமஸ்ய அர்த்தே
குலம் த்யஜேத் ।
க்ராமம் ஜனபதஸ்ய அர்த்தே ஆத்மார்த்தே ப்ருதிவீம் த்யஜேத் ॥

மஹாபாரதம்

''ஒரு குலம் காக்கப்படுமாகில் ஒருவனை இழக்கத் துணிய வேண்டும், ஒரு கிராமத்தைக் காக்க ஒரு குலத்தை இழப்பதில் தவறில்லை. ஒரு கிராமத்தை இழந்தாவது நாட்டைக் காக்க வேண்டும். அனைத்தையும் இழந்தாவது தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்'', என்பது நீதியாகும்.

''ஒரு சமயம் ஶுக்ராசாரியர் தேவர்களைத் தண்டிப்பதற்காக ருத்ரனைக் குறித்துத் தவம் இருந்தார். அச்சமயம் பார்த்து தேவர்கள் அஸுரர்களைத் துன்புறுத்தினர். உடனே அஸுரர்கள் ப்ருகு முனிவரின் மனைவியான ஶுக்ராசாரியாரின் தாயாரைச் சரணடைந்தனர். ஶுக்ரமாதா தேவர்களைக் கொல்ல முயன்றாள். இந்திரனின் வேண்டுகோளின் பேரில் மஹாவிஷ்ணு அவளுடைய தலையைக் கொய்து கொன்றார். இதேபோன்று இந்திரன், விரோசனின் மகளாகிய பிருதிவியைக் கொல்ல வந்த மந்தரையைக் கொன்று காப்பாற்றினான். தந்தை ஜமதக்னியின் கட்டளையின் பேரில் பரஶுராமர் தன் தாயைக் கொன்றது போல் குருவாகிய எனது கட்டளைக் கிணங்க நாம் எதிர் கொள்ளப்போகும் தாடகையைக் கொல்வாயாக! பல்லுயிர்களையும் இரக்கமின்றி அழிக்கும் இவளைப் பெண்ணெனப் பாராதே'' என்றார்.

தாடகாவதம்

राघवः प्राञ्जलिः भूत्वा प्रत्युवाच दृढव्रतः ।
पितुः वचन निर्देशात् पितुः वचन गौरवात् ।
वचनं कौशिकस्य इति कर्तव्यं अविशङ्कया ।
अनुशिष्टः अस्मि अयोध्यायां गुरुमध्ये महात्मना ।
करिष्यामि न सन्देहः ताटकावधं उत्तमम् ॥
एवं उक्त्वा धनुर्मध्ये बध्वा मुष्टिं अरिन्दमः ।
ज्या घोषं अकरोत् तीव्रं दिशः शब्देन नादयन् ।
तेन शब्देन वित्रस्ताः ताटका वन वासिनः ।

ताटकाच सुसंक्रुद्धा तेन शब्देन मोहिता ।
श्रुत्वा च अभ्यद्रवत् वेगात् यतः शब्दः विनिस्सृतः

ராகவ: ப்ராஞ்ஜலி: பூத்வா ப்ரத்யுவாச த்ருடவ்ரத: ।
பிது: வசன நிர்தேஸாத் பிது: வசன கௌரவாத் ।
வசனம் கௌஸிகஸ்ய இதி கர்தவ்யம் அவிஸங்கயா ।
அனுஸிஷ்ட: அஸ்மி அயோத்யாயாம் குருமத்யே மஹாத்மனா ॥
கரிஷ்யாமி ந ஸந்தேஹ: தாடகாவதம் உத்தமம் ॥
ஏவம் உக்த்வா தனுர்மத்யே பத்வா முஷ்டிம் அரிந்தம: ।
ஜ்யா கோஷம் அகரோத் தீவ்ரம் திஸ: ஸப்தேன நாதயன் ॥
தேன ஸப்தேன வித்ரஸ்தா: தாடகா வனவாஸின: ॥
தாடகா ச ஸுஸங்க்ருத்தா தேனஸப்தேன மோஹிதா ।
ஸ்ருத்வா ச அப்யத்ரவத் வேகாத் யத: ஸப்த: விநிஸ்ஸ்ருத: ॥

வா.ரா. பாவ.-26

தாடகாவனத்தில் நுழைந்ததும் தாடகையைக் கொல்ல வேண்டுமென்று முனிவர் பணித்தார், இதற்கு ராமன் சிறிதும் மறுத்துப் பேசவில்லை. மாறாகக் கைகளைக் கூப்பிய வண்ணம் பேசினான்: ''முனிவரே! அயோத்தி யினின்றும் நான் உம்முடன் புறப்படும் போது எனது தந்தை மகிழ்ந்த உள்ளத்துடன் உம்மைத் தந்தையாக பாவித்து, உம் சொற்படி நடக்க வேண்டுமெனக் கட்டளையிட்டிருக்கிறார். தந்தை என்னிடம் எவ்வளவு அன்பு காட்டினாரோ அதைவிட மிகுதியான மதிப்பை அவரிடம் வைத்திருக் கிறேன். உம்மிடம் மந்த்ரோபதேசத்தையும் பெற்ற சீடன் யான். எனவே தந்தையினுடையவும், தங்களுடையவும் சொற்படி நடக்கக் கடமைப் பட்டவனாவேன். மேலும் பசுக்களுடையவும், அந்தணர்களுடையவும் நன்மையின் பொருட்டும், நாட்டு நலனுக்காகவும் தாடகையைக் கொல் வேன். இது உத்தமமான செயலாகும்'', என்று கூறி கோதண்டத்தில் நாண் கயிற்றை இழுத்துக்கட்டி வில்லின் நடுப்பகுதியை இடது கையினால் இறுகப் பிடித்து வலது கை விரல்களினால் நாணைச் சுண்டினான். அப்பொழுது எழுந்த ஒலி திசைகள் தோறும் எதிரொலித்தன. இவ் வொலியைக் கேட்டு தாடகாவனத்திலுள்ள விலங்குகளும் பறவைகளும் அஞ்சி நடுங்கின. இதைச் செவியுற்ற தாடகையும் நடுங்கினாள். ''நமக்கும் ஒரு எதிரியுண்டோ'' எனக் கோபம் கொண்டாள். கோபம் மிக மிக, மயங்கினாள். நாணொலி வந்த வழியே பாய்ந்து ஓடிவந்தாள்.

तां दृष्ट्वा राघवः क्रुद्धां विकृतां विकृताननाम् ।
प्रमाणेन अतिवृद्धां च लक्ष्मणं सः अभ्यभाषत ॥
पश्य लक्ष्मण यक्षिण्याः भैरवं दारुणं वपुः ।
भिद्येरन् दर्शनादस्याः भीरूणां हृदयानि च ॥

विनिवृत्तां करोम्यद्य हृतकर्णाग्रनासिकाम् ।
वीर्यं च अस्याः गतिं चाऽपि हनिष्यामि इति मे मतिः ।

தாம் த்ருஷ்ட்வா ராகவ: க்ருத்தாம் விக்ருதாம் விக்ருதானனாம் ।
ப்ரமாணேன அதிவ்ருத்தாம் ச லக்ஷ்மணம் ஸ: அப்யபாஷத ॥
பஶ்ய லக்ஷ்மண யக்ஷிண்யா: பைரவம் தாருணம் வபு: ।
பித்யேரன் தர்ஶனாத் அஸ்யா: பீருணாம் ஹ்ருதயானி ச ॥
விநிவ்ருத்தாம் கரோமி அத்ய ஹ்ருத கர்ணாக்ர நாஸிகாம் ॥
வீர்யம் ச அஸ்யா: கதிம் சாபி ஹநிஷ்யாமி இதிமே மதி: ॥

தாடகை:

उद्यम्य बाहू गर्जन्ती राममेव अभ्यधावत ।
विश्वामित्रस्तु ब्रह्मर्षिः हुँकारेण अभिभर्त्स्य ताम्
स्वस्ति राघवयोः अस्तु जयं चैवअभ्यभाषत ॥
शिलावर्षं महत्तस्याः शर वर्षेण राघवः ।
प्रतिवार्योपधावन्त्याः करौ चिच्छेद पत्रिभिः ॥
सौमित्रिः अकरोत् क्रोधातू हृतकर्णाग्र नासिकाम् ।
कामरूप धरा सद्यः कृत्वा रूपाणि अनेकशः ॥
अन्तर्धानं गता यक्षी मोहयन्ती स्वमायया ।

உத்யம்ய பாஹூ கர்ஜந்தீ ராமம்ஏவ அப்யதாவத ॥
விஶ்வாமித்ர: து ப்ரஹ்மர்ஷி: ஹுங்காரேண அபிபர்த்ஸ்யதாம் ।
ஸ்வஸ்தி ராகவயோ: அஸ்து ஜயம்சைவ் அப்யபாஷத ॥
ஶிலாவர்ஷம் மஹத் தஸ்யா: ஶரவர்ஷேண ராகவ: ।
ப்ரதிவார்ய உபதாவந்த்யா: கரௌ சிச்சேத பத்ரிபி: ॥
ஸௌமித்ரி: அகரோத் க்ரோதாத் ஹ்ருத கர்ணாக்ர நாஸிகாம் ॥
காமரூபதரா ஸத்ய: க்ருத்வாரூபாணி அநேகஶ: ।
அந்தர்தானம் கதா யக்ஷீ மோஹயந்தீஸ்வ மாயயா ॥

வா.ரா.பால. - 26

ஓடிவரும் தாடகையை ராமன் பார்த்தான். முகத்திலே கோபம் பொங்கி எழுகிறது. மிகவும் கோரமான முகத்தோற்றம். நல்ல உயரம், வயது முதிர்ந்தவள். ''லக்ஷ்மணா! அதோ பார், யக்ஷிணியின் பயங்கர உருவத்தை. இவளைப் பார்ப்பவர்களின் இருதயம் பிளந்து போகும், ஆயினும் இவள் பெண்ணாயிற்றே! பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்களே! பெண்ணை எவ்வாறு கொல்வது? ஆனால் இவளோ,

மண் உருத்து எடுப்பினும் கடலை வாரினும்
விண் உருத்து இடிப்பினும் வேண்டின் செய்கிற்பாள்

எண் உருத்தெரிவு அரும்பாவம் ஈண்டி ஓர்
பெண் உருக் கொண்டு எனத் திரியும் பெற்றியாள்.

க.ரா. பால.-தாடகை.

''கோபம் கொண்டால் பூ மண்டலம் முழுவதையும் பெயர்த்து எடுத்து விடுவாள் போலும்! தனக்கு ஆபத்து நேரிடின் கடல்நீர் முழுவதையும் பருகும் தன்மையள், வானுலகையே இடித்துத் தள்ளிவிடுவாளாம். இன்னது என்று மனதினாலும் நினைக்க முடியாத பல்வகை பாபங்களும் ஓர் உருக்கொண்டு எதிரே வருவது போன்றிருக்கிறாள். ஆயினும் இவளை எடுத்த எடுப்பில் கொல்வது தகாது. குற்றம் செய்பவர் யாராயினும் திருந்து வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். எனவே அவளுடைய காதுகளையும், மூக்கையும் அறுப்பதோடு, கால்களையும், கைகளையும் ஒடித்து அவள் வீர்யத்தையும், பிற இடங்களுக்குச் செல்வதையும் தடுத்து விட்டால், பல இடங்களுக்குச் சென்று பிறரைத் துன்புறுத்தமாட்டாள் அல்லவா! அவள் மாயையினால் எதையும் செய்யவல்லவள் எனின் அவளுடைய பிறரைத் துன்புறுத்தும் ஆற்றலையும், வானவீதியில் செல்லும் ஆற்றலையும் நம் அஸ்த்ரத்தினால் தடுத்துவிடுவோமே'' என்றார்.

இவ்வாறு இளையவனோடு பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில் தன் இரு கைகளையும் உயரத் தூக்கிய வண்ணம் வீரகர்ஜனை புரிந்தவாறு ராமனை நோக்கி ஓடி வந்தாள். ''விஶ்வாமித்திரர் முனிவர்; அவரிடம் சென்றால் சபித்துவிடுவாரே என அச்சம், ராமனோ மனிதன் என எண்ணி னாள் போலும். இதைக் கண்ட முனிவர் ஒரு ஹுங்காரத்தினால் தாடகையை மிரட்டி விட்டு, 'ராம லக்ஷ்மணர்கட்கு நன்மையும் வெற்றியும் உண்டா கட்டும்' என வாழ்த்தினார்.

தாடகை கல்மாரி பொழிந்தாள். அதை ஶரவர்ஷத்தினால் (அம்பு மழையினால்) ராமன் தடுத்தான். அதையும் மீறி, தாடகை அருகில் வரவே ராமன் அவள் கைகளை அம்புகளாலேயே அறுத்து வீழ்த்தினான். லக்ஷ்மணன் அவள் காதுகளையும், மூக்கையும் அம்புகளை எய்து அறுத்தான். தாடகை தான் விரும்பிய மாற்று உருவங்களை எடுத்துக் கொண்டு வானத்தில் மறைந்தாள்.

दृष्ट्वा गाधिसुतः श्रीमान् इदं वचनमब्रवीत् ।
अलं ते घृणया वीर ! पापैषा दुष्टचारिणी ॥
यज्ञविघ्नकरी यक्षी पुरावर्धेत मायया ।

த்ருஷ்ட்வா காதிஸுத: ஶ்ரீமான் இதம் வசனம் அப்ரவீத் ॥
அலம் தே க்ருணயா வீர! பாபாஏஷா துஷ்டசாரிணீ ।
யஜ்ஞ விக்னகரீ யக்ஷீ புரா வர்தேத மாயயா ॥

விச்வாமித்ரர் :

वध्यतां तावदेव एषा पुरासन्ध्या प्रवर्तते ।
रक्षांसि सन्ध्या कालेषु दुर्धर्षाणि भवन्ति वै ।

வத்யதாம் தாவதேவ ஏஷா புரா ஸந்த்யா ப்ரவர்த்ததே ।
ரக்ஷாம்ஸி ஸந்த்யா காலேஷு துர்தர்ஷாணி பவந்தி வை ॥

வ.ரா.பால.-26

சூடக அரவு உறழ் சூலக் கையினள்
காடுஉறை வாழ்க்கையள், கண்ணின் காண்பரேல்
ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய் !
தாடகை என்பது அச்சழக்கி நாமமே!

க.ரா.பால. - தாடகை.

ராமன் ஸாக்ஷாத் மன்மதனாய்த் திகழ்பவன், ''உன் அழகைக் கண்டு மகளிர் மயங்குவது இயற்கை, ஆடவர்கள், அதிலும் மஹர்ஷிகள் கூட மயங்குகின்றனர். உன் தோள்களின் அமைப்பு அழகைக் கண்டதும் மயங்கி ஆடவர், தம்மைப் பெண்ணாக மனதால், நினைத்து உன்னைத் தழுவ ஆசைப்படுகின்றனர். இத்தகு அழகுடைய ராமனே!'' என விளிக்கிறார் முனிவர், ''தாடகையோ படமெடுக்கும் பாம்புகளைத் தனக்குக் கங்கண மாக அணிபவள், பயங்கரமான சூலத்தைக் கையில் ஏந்தியவள், மலைத் தாழ் வரையில் காட்டில் வசிப்பவள், இத்தகையவளைக் கொல்ல இவ்வழகனை நகரிலிருந்து அழைத்து வந்தோமே என நினைக்கிறார் போலும்''. அல்லது ''தாடகையோ மாயாஜாலக்காரி, அழகிய பெண்ணுருக் கொண்டு புன்னகை தவழ எதிரே தோன்றினாளாகில் மேனகை, ஊர்வசிகளிடம் தான் ஏமாந்தது போல ராமனும் ஏமாற்றப்பட்டால் என்ன செய்வது'' என நினைத்து ''ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்!'' என்றார் போலும். வால்மீகி ''பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்'' ஆடவரின் கண்களையும் மனதையும் கவர்பவன் ராமன் என்றார். இதையே தோளழகில் வைத்துப் பேசினார் கம்பர் எனலாம்.

முன் உலகு அளித்து முறை நின்ற உயிர் எல்லாம்
தன் உயிர் எனக் கருது தன்மையினன் மைந்த !
என் இனி உணர்த்துவது இனிச் சிறிது நாளில்
மன்னுயிர் அனைத்தையும் வயிற்றிலிடும் என்றான்.

க.ரா.பால-தடகை.

முனிவர் மேலும் கூறுவார், ''ராம! உன் தந்தை, பிரமன் படைத்த உயிர்கள் அனைத்தையும் தன் உயிராகக் கருதிப் பாதுகாத்து வருபவன். அத்தகைய வேந்தனின் மைந்தன் நீ. அறிஞனாகிய உனக்கு நான் மீண்டும் உணர்த்த வேண்டுவது ஒன்றுமில்லை. ஆயினும் ஒன்று சொல்லுகிறேன்.

இத்தாடகையை நீ விட்டு வைத்தால் உலக மக்கள் யாவரையும் தன் வயிற்றில் வைத்து விடுவாள். பிரமன் மக்களைப் படைப்பது தன் உணவுக்காக எனக் கருதுபவள்''. தாடகையின் கொடுமையைப் பற்றி முனிவர் கூறினாலும் பெருந்தகை ராமன் ''இவள் பெண்ணாயிற்றே'' என நினைத்தான்.

குல முதல்வன் மனுவோ :

गुरुं वा बाल वध्वौ वा ब्राह्मणं वा बहुश्रुतम् ।
आततायिनं आयान्तं हन्यादेव अविचारयन् ॥
न आततायि वधे दोषः हन्तुः भवतिकश्चन ।
जिघांसन्तं जिघांसीयात् न तेन ब्रह्महा भवेत् ॥
अग्निदः गरदः चैव शस्त्रोन्मत्तः धनापहा ।
क्षेत्रदारहरः च एतान् षड् विद्यात् आततायिनः ॥

குரும் வா பாலவத்வௌ வா ப்ராஹ்மணம் வா பஹுஶ்ருதம் ।
ஆததாயினம் ஆயாந்தம் ஹன்யாதேவ அவிசாரயன் ।
ந ஆததாயி வதே தோஷ: ஹந்து: பவதி கஶ்சன ।
ஜிகாம்ஸந்தம் ஜிகாம்ஸீயாத் ந தேன ப்ரஹ்மஹா பவேத் ।
அக்னித: கரத: சைவ ஶஸ்த்ரோன்மத்த: தனாபஹா ।
க்ஷேத்ரதாரஹர: ச ஏதான் ஷட் வித்யாத் ஆததாயின: ॥

மனுஸ்மிருதி

''பிறர் பொருளுக்குத் தீ வைப்பவன், ஏமாற்றி விஷம் கொடுப்பவன், ஆயுத மேந்திப் பிறரைத் துன்புறுத்துபவன், பிறர் செல்வத்தை ஏமாற்றிக் கவர்பவன், பிறர் நிலத்தையோ மனைவியையோ பலாத்காரமாகக் கவர்பவன் ஆகிய இந்த அறுவரும் 'ஆததாயி' எனப்படுபவர், மேலும் குரு, பாலன், பெண், வேத சாஸ்த்ரங்கள் கற்ற அந்தணன் ஆகியோரைக் கொல்பவனும் ஆததாயி ஆவான். இவனைக் கொல்பவனுக்கு எவ்விதப் பாபமும் கிடையாது. தன்னைக் கொல்லவந்தவனைக் கொன்றாலும் சிறிதும் பாபம் கிடையாது என்று கூறியுள்ளார். எனவே தாடகையைக் கொல்வதில் சிறிதும் பாபம் கிடையாது'' என்றார் விஶ்வாமித்ரர்.

(ராமன் முதலில் தந்தை, ஆசான் இருவருடைய வாக்கின்படி ''தாடகையைக் கொல்வேன்'' என்றவன் தாடகை வந்த பிறகு பெண் எனத் தயங்குவானேன்? மேலும் ''ராம: த்வி: ந அபிபாஷதே'' ராமன் முதலில் கூறியதை மறுத்து மீண்டும் பேசமாட்டான் எனப் புகழ் பெற்றவன் ஆயிற்றே எனில் அவன் எடுத்த எடுப்பில் ஸ்த்ரீ வதம் செய்ய விரும்பவில்லை. அது தகாதது, எனவே முதலில் கை, காது, மூக்குகளை அறுத்து தண்டனை அளித்தான். அவள் மீண்டும் தன்னைக் கொல்ல வருவாளேயாகில் ஆததாயி

ஆகிறாள், அப்பொழுது கொன்றால் ஶாஸ்த்ர ஸம்மதமாகும், லோகாப வாதம் ஏற்படாது, குருவின் உத்திரவுக்குப் பணிந்ததாகவும் ஆகும் என்று எண்ணினான் எனக் கொள் ள வேண்டும்.)

விஶ்வாமித்ரர் ''இவளைக் கொல்வதில் கருணையோ, ஜுகுப்ஸை யையோ கொள்ள வேண்டாம். இவள் பிறருக்குத் தீங்கிழைப்பதையே கடமையாக உடையவள்; வேள்விகளைத் தடுப்பவள்; மக்களுக்கு இம்மை மறுமைப் பயன்கள் கிட்டாதவாறு செய்பவள்; மாயையினால் வலிமை யுடன் வளர்பவள். மாலை நேரம் நெருங்குகிறது. ஸந்த்யா காலத்தில். இவளுக்கு பலம் பெருகும். அப்பொழுது இவளைக் கொல்வது அரிது'' என்றார்.

இங்கு ''தாடகை இவ்வளவு கொடியவளாகில் உம்மை (விஶ்வா மித்ரரை) கொன்றிருக்க வேண்டும். நீர் எவ்வாறு தப்பிப் பிழைத்திருக் கிறீர்?'' என்ற கேள்வி ராமன் மனதில் தோன்றியிருக்கும் என நினைத்துக் கம்பர், முனிவர் சொல்வதாகக் கூறுகிறார்.

தீதென்று உள்ளவை யாவையும் செய்து எமைக்
கோது என்று உண்டிலள், இத்தனையே குறை
யாது என்று எண்ணுவது இக்கொடியாளையும்
மாது என்று எண்ணுவதோ மணிப்பூணினாய்

க.ரா.பால.-தாடகை

கோது : சக்கை

''ரத்னாபரணம் பூணும் ராம! இவள் தன்னால் முடிந்த அளவு தீங்குகளை எனக்கும் பிற முனிவர்கட்கும் செய்திருக்கிறாள். எங்களையும் உண்டிருப்பாள், வ்ரதங்களினால் வாடிவதங்கி சுருங்கிய தோலும் எலும்பு மாக இருக்கும் எங்களிடம் ருசியுள்ளதும், ஈரப்பசையுள்ளதுமான மாமிசம் இருக்காது என நினைத்து எங்களை உண்டிலள். இத்தகு கொடியவளை மாது என நினைத்துக் கருணை காட்டலாமோ'' என்றார்.

ஐயன் அங்கு அதுகேட்டு அறன் அல்லவும்
எய்தினால் அதுசெய்க என்று ஏவினால்
மெய்ய! நின் உரை வேதம் எனக் கொடு
செய்கை யன்றோ அறம் செய்யும் ஆறு என்றான்.

க.ரா.பால.-.தாடகை

முனிவரின் வார்த்தையைக் கேட்டதும் ராமன் பேசினான், ''ஸத்யமே (உண்மையே) வடிவெடுத்த முனிவரே! அறம் அல்லாத ஒரு செயலைச் செய்யும்படி தாங்கள் கட்டளையிட்டாலும், தங்கள் சொல்லை வேதம் எனக் கருதி அதை நிறைவேற்றுவதே எனது கடமையாகும். இவ்வாறு செய்வதே அறமும் ஆகும். (இங்கு ''விப்ரவாக்யோ ஜனார்தன:'' என்பதை உணர்ந்து, தக்க இடத்தில் கம்பர் பொருத்திப் பேசியது ரஸிக்கத்தக்கது).

दर्शयन् शब्दवेधित्वं तां रुरोध स सायकैः ।
अभिदुद्राव काकुत्स्थं लक्ष्मणं च विनेदुषी ॥
तां आपतन्तीं वेगेन विक्रान्तां अशनीं इव ।
शरेण उरसि विव्याध सा पपात ममार च ॥

தர்ஶயன் ஶப்தவேதித்வம் தாம் ருரோத ஸஸாயகை: ॥
அபிதுத்ராவ காகுத்ஸ்தம் லக்ஷ்மணம் ச விநேதுஷீ ॥
தாம் ஆபதந்தீம் வேகேன விக்ராந்தாம் அஶனீம் இவ ।
ஶரேண உரஸி விவ்யாத ஸா பபாத மமார ச ॥

வா.ரா.பால.-26

तां विलोक्य वनितावधे घृणां
पत्रिणा सहमुमोच राघवः ॥

தாம் விலோக்ய வனிதா வதே க்ருணாம்
பத்ரிணா ஸஹ முமோச ராகவ: ॥

காளிதாஸன், ரகுவம்சம் - 11-17

முனிவருக்கு வாக்களித்தபடி தாடகையைக் கொல்வதென்று உறுதி பூண்டு அம்பு எய்ய நினைத்த பொழுது தாடகை எதிரில் இல்லை. அவள் மாயையினால் வானத்தில் மறைந்து நின்று இவர்கள் மீது கல்மாரி பொழிந்த வண்ணம் கர்ஜித்துக் கொண்டிருந்தாள். ஒலி வரும் திஶையைச் சரியாக உணர்ந்து எதிரியை அடிக்கும் வல்லமையை ராமன் பெற்றிருந்தமையால் அவளை வேறு எங்கும் தப்பி ஓடாதபடி அவளது கர்ஜனையினின்றும் இருக்கும் இடம் அறிந்து ஶர வர்ஷங்களால் (அம்பு மழையால்) தடுத்தான், உடனே அவள் கோபங்கொண்டு மறைந்திருப்பதில் பயனில்லை என எண்ணிப் பயங்கரமாகக் கத்திக்கொண்டே அரசகுமாரர்கள் மீது விழுந்து அமுக்கப் பாய்ந்து ஓடிவந்தாள். வானத்தினின்றும் இடி வீழ்வது போன்று பேரிரைச்சலுடனும், வேகத்துடனும் வந்த தாடகையின் மார்பைக் குறி வைத்து ஒரே அம்பை எய்தினான் சக்ரவர்த்தித் திருமகன். அம்பை வில்லில் பூட்டும் வரை பெண்ணைக் கொல்வானேன் என்று நினைத்திருந்தான் போலும். இதை மஹாகவி காளிதாஸன், ராமன் தாடகையை நேரில் பார்த்ததும் ''பெண் கொலையில் ஜுகுப்ஸையையும், கருணையையும் அம்போடுகூட விட்டான்'' என்று அழகாகச் சித்தரித்தான். அவள் மார்பில் ராம பாணம் பாய்ந்ததும் விழுந்துப் பிராணனை விட்டாள்.

ராமபாணம் எதிரி மீது பாய்ந்துக் கொன்ற பிறகு ராமன் தோள் மீது உள்ள பையில் தானே வந்து தங்கிவிடுவது அதன் சிறப்பு. தாடகை மீது தொடுத்த அம்பு அவள் உயிரைப் பருகி அங்கேயே தங்காது வெளியே சென்றதாம். இதை அழகுற கம்பர் சித்தரிப்பதைச் சுவைப்போம்.

சொல் ஒக்கும் கடியவேகச் சுடுசரம், கரிய செம்மல்
அல் ஒக்கும் நிறத்தினாள் மேல் விடுதலும், வயிரக் குன்றக்
கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்றன்றே.

க.ரா.பால.-தாடகை.

அல் : இருள், புல்லர் : முட்டாள், அறிவிலி

சான்றோர்கள் முட்டாள்கட்கு (கல்வி அறிவு இல்லாதவர்கட்கு) எவ்வளவு உபதேசம் செய்தாலும் அவர்கள் மீண்டும் மீண்டும் தவறு களையே செய்து கொண்டிருப்பர், ஏன்? நல்லோரின் நல்லுரைகள் அவர்கள் மனதில் பதிந்து தங்குவதில்லை. ''ரிஷீணாம் புன: ஆத்யானாம் வாசம் அர்த்த: அனுதாவதி'' பெரியோர்களின் சொல் தன் பயனைத் தவறாது அளிக்கும். முனிவர்களின் வாழ்த்துச் சொல் ஒருவனுக்கு வாழ்வை அளிக்கும். சாபமிடும் சொல் அவர்கள் மனதில் எண்ணியாங்கு தாழ்வை, அழிவை உடனே அளிக்கும். அவர்களின் சொல்லுக்கேற்ற பொருள் வந்து நிற்கும். ஒருவனை அழியக்கடவன், அழிக என்று கூறினால் அவன் அழிந்தே விடுவான். ரிஷிகளின் சாபச் சொல்லைப் போன்று விரைந்து சென்று அழிக்க வல்லது ராமபாணம். இத்தகைய அம்பை அமாவாஸ்யை தினத்துக் காரிருள் போன்று கருத்த உடலையும், மனதையும் உடைய தாடகையின் மீது ஏவினான், தாடகையின் மார்போ வஜ்ர மயமான கல்லைப் போன்று மிக உறுதியானது. எனவே ஏவிய அம்பு கல்லில் பதிந்த ஆணிபோல மார்பிலேயே தங்கியிருக்க வேண்டும், ஆனால் ராமபாணமோ இதயக் கல்லில் பதிந்து தங்காது ஊடுருவி வெளியே சென்றதாம். இது முட்டாளுக்குச் செய்த உபதேசம் காது வழியே சென்று மனதில் தங்காது வெளியேறுவது போல இருக்கிறதாம்.

ராம பாணத்தினால் தாக்கப்பட்ட தாடகை கீழே விழுந்தாள், அது எப்படி இருந்தது எனில்,

பொன் நெடும் குன்றம் அன்னான் புகர் முகப் பகழி என்னும்
மன் நெடும் கால வல்காற்று அடித்தலும் இடித்து வானில்
கல்நெடு மாரி பெய்யக் கடையுகத்து எழுந்த மேகம்
மின்னொடும் அசனியோடும் வீழ்வதேபோல வீழ்ந்தாள்.

க.ரா.பால.-தாடகை.

புகர்:கூர்மை, பகழி:அம்பு

''ராமன் பொன்மயமான மஹாமேரு மலைபோன்று கம்பீரத்தன்மை உடையவன். அவன் எய்த வாளியோ மிகவும் கூரியது. அம்பின் வேகமோ உலகு அனைத்தையும் அழிக்கும் ஆற்றல் பெற்ற (பிரளய) ஊழிக்கால காற்றின் வேகத்திற்கு நிகரானது. ஊழிக்காலக் காற்று வீசத் தொடங்கியதும் ஆங்காங்குள்ள மேகங்கள் திரண்டு வந்து கல்மாரி பொழியும்; ஒன்றோ

டொன்று மோதும் போது பேரிடிகள் இடிக்கும்; மின்னல் மின்னும்; காற்றின் வேகம், ஒன்றாகத் திரண்ட மேகத்தை பூமியிலே அடித்து வீழ்த்தும். இத்தகு கோரக் காட்சியை மேலிருந்து தேவர்கள் பார்த்தனராம். தாடகை மேகம் போன்று கருத்த பெரிய உருவமுடையவள், அவளுடைய பற்கள் மின்னல் போன்று மின்னுகின்றன. அவளுடைய குரலோ இடியோசை போன்று பயங்கரமானது. ஊழிக்கால மேகத்தினின்றும் வெள்ளம் பெருகுவது போல் இவளது கரிய உடலினின்றும் ரத்த ப்ரவாஹம் பெருகி ஓடுகிறது. இவ்வாறு இவள் அழிவு, ஊழிக்கால அழிவு போன்று பயங்கரமாயிருந்தது'' என்பர் கம்பர்.

தாடகையின் உடலிலிருந்து பீறிட்டுப் பெருகிய ரத்த வெள்ளத்தின் வருணனை காப்பியத்தின் முடிவுரையை நினைவூட்டுகிறது.

பொடியுடைக் கானம் எங்கும் குருதிநீர் பொங்க வீழ்ந்த
தடியுடை எயிற்றுப் பேழ்வாய்த் தாடகை, தலைகள்தோறும்
முடியுடை அரக்கற்கு அந்நாள் முந்திஉற்பாதம் ஆகப்
படியிடை அற்று வீழ்ந்த வெற்றி அம் பதாகை ஒத்தாள்.

க.வா.பால. - தாடகை

தடி: பிராணிகளின் தசை, பேழ்: பிளந்த, படி: பூமி

தாடகையின் ஸஞ்சாரத்தினால் கானகம் எங்கும் புழுதி படிந்திருக்கிறது. அம்பினால் அடிபட்டுத் தாடகை கீழே வீழ்ந்தாள். பிராணன் போகும் போது வாய் திறந்தபடி இருக்கிறாள், பல்லிடுக்குகளில் அவள் கொடுமையை எடுத்துக் காட்டுவன போன்று மாமிசத் தசைகள் பதிந்திருக்கின்றன. அவள் நீண்டு கிடப்பது கொடிக்கம்பம் போன்றிருக்கிறது. மார்பகத்தினின்றும் பீறிட்டுக் கிளம்பிய ரத்த வெள்ளம் சிவந்து படிந்திருக்கிறது. இது சிவந்த கொடி போன்றிருக்கிறது. இது கொடி அறுந்து விழுந்திருக்கிறதோ அல்லது கொடியுடன் கொடிக்கம்பமே சாய்ந்து விழுந்திருக்கிறதோ, எனும்படி தோன்றுகிறது. இது எல்லா உலகையும், இந்திரனையும் வெற்றி கொண்ட பத்துத் தலைகளிலும் முடிசூடிய ராவணன் நட்டுவைத்த வெற்றிக் கொடி எனலாம். கொடி அறுந்து கீழே விழுந்தால் அதை அபசகுனம், உத்பாதம் என்பர். அதாவது பின்னால் வரும் அழிவை எடுத்துக் காட்டுவதாகும். ராவண ஸம்ஹாரத்திற்காகவே ராமன் அவதரித்த படியால், தாடகையின் வீழ்ச்சியும், வெற்றிக்கொடியின் வீழ்ச்சி போன்ற தோற்றமும், பின்னால் வரும் ராவண ஜயத்தை எடுத்துக் காட்டுவது போல் அமைந்துள்ளது. இதைக் காவ்யார்த்த ஸூசனம் என்பர்.

அம்பு தாடகையின் மார்பைத் துளைத்ததைக் காளிதாஸன் ரஸமாகப் பேசுகிறான்:

यत् चकार विवरं शिलाघने ताटकोरसि स राम सायकः ।
अप्रविष्ट विषयस्य रक्षसां द्वारतां अगमत् अन्तकस्य तत् ॥

யத் சகார விவரம் சிலாகனே தாடகோரஸி ஸ ராமஸாயக: ।
அப்ரவிஷ்ட விஷயஸ்ய ரக்ஷஸாம் த்வாரதாம் அகமத்
அந்தகஸ்யதத் ॥

காளிதாஸன். ரகுவம்சம் - 11.18

யமன், இலங்கை போன்ற அரக்கர் வாழும் தேசங்களில் நுழைய வழி இல்லாது தவித்துக் கொண்டிருந்தான். அவர்கள் புரியும் தீச்செயல்கட்குத் தண்டனை அளிக்க முடியவில்லை. இப்பொழுதோ கற்கோட்டை போன்ற தாடகையின் மார்பில் ராமன் பெரியதொரு த்வாரத்தை (தொளையை)ச் செய்துவிட்டான். இது யமனுக்கு அரக்கர் உலகில் நுழைய வழி திறந்து விட்டது போல் ஆயிற்றாம்.

तां हतां भीमसंकाशां दृष्ट्वा सुरपतिः तदा ।
साधु साधु इति काकुत्स्थं सुराः च समभिपूजयन् ॥

தாம் ஹதாம் பீமஸங்காஶாம் த்ருஷ்ட்வா ஸுரபதி: ததா ।
ஸாது ஸாது இதி காகுத்ஸ்தம் ஸுரா: ச ஸமபிபூஜயந் ॥

तोषिताः कर्मणा अनेन स्नेहं दर्शय राघवे ।
पात्र भूतश्च ते ब्रह्मन् तव अनुगमने रतः ।
कर्तव्यं च महत्कार्यं सुराणां राजसूनुना ।
प्रजापतेः कृशाश्वस्य पुत्रान् सत्य पराक्रमान् ॥
तपोबलभृतो ब्रह्मन् राघवाय निवेदय ॥

தோஷிதா: கர்மணா அனேன ஸ்னேஹம் தர்ஶய ராகவே ॥
பாத்ரபூத: ச தே ப்ரஹ்மன்! தவ அனுகமனே ரத: ।
கர்த்தவ்யம் ச மஹத்கார்யம் ஸுராணாம் ராஜஸூனுனா ॥
ப்ரஜாபதே: க்ருஶாஶ்வஸ்ய புத்ரான் ஸத்ய பராக்ரமான் ।
தபோபல ப்ருத: ப்ரஹ்மன் ! ராகவாய நிவேதய ॥

வா.ரா.பால.-26

யாமும் எம் இருக்கை பெற்றோம் உனக்கு இடையூறும் இல்லை
கோமகற்கு இனிய தெய்வப் படைக்கலம் கொடுத்தி என்னா
மாமுனிக்கு உரைத்துப் பின்னர் வில்கொண்ட
மழையனான்மேல்
பூ மழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர் போயினாரே.

க.ரா.பால.- தாடகை

நாம் ஒரு பெருஞ் செயலை ஆற்றுவதற்கு முன்பும், அப்பணிக்காக வெளியில் புறப்படுவதற்கு முன்பும் ஶகுனம், நல்வாக்கு (உபஶ்ருதி) ஆகிய

வற்றை அறிந்தே தொடங்குகிறோம். ஏன்? முதலிலும், முடிவிலும் வெற்றி யாக அமையும், இல்லாவிடில் முதற் கோணல் முற்றும் கோணலாகி விடும். எம்பெருமான் சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்தது தேவகார்யத்திற்காக, அவதரித்த பின் முனிவரோடு வர, அரக்கி எதிர் கொண்டாள். இப்போரில் வெற்றி பெற்றால் நமக்கு ராவண பயம் நீங்கும் என எண்ணிய தேவர்கள் இந்திரனோடு வானத்தில் குழுமி நிற்கின்றனர். தாடகையோ தோற்றத்திலும் சொல்லிலும், செயலிலும் மிக, மிக பயங்கரமானவள். ராமனோ, பாலன், சிறியன். எனினும் அவன் அம்பிற்குத் தாடகை இரையானாள். என்ன ஆகுமோ, என அச்சத்துடனும் ஐயத்துடனும் எதிர் நோக்கிய தேவர்களின் கண்களுக்கு இச்செயல் அரிய விருந்தாக அமைந்தது. மட்டற்ற பொங்கிய மகிழ்ச்சியுடன் தேவர்கள் ராமஜயம் பாடினர். மழை பொழியும் மேகத்தி னிடையே வானவில் பளிச்சிடும். மின்னலைப் போன்று பளிச்சிடும் மெல்லிய வில்லை ஏந்தியவன் ராமன், கருணை மழை பொழியும் விற் கொண்ட கார்மேனியான் மீது மலர் மழையைப் பொழிந்தனர் தேவர்கள்.

கூசி வாளரக்கர் தங்கள் குலத்து உயிர் குடிக்க அஞ்சி,
ஆசையால் உழலும் கூற்றும் சுவை சிறிது அறிந்தது அன்றே.

க.ரா.பால.-தாடகை.

இந்நாள் வரை யமன் அரக்கர் குலத்தினரின் உயிரைக் குடிக்க ஆசைப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனால் எப்போதும் வாளேந்தியிருந்தமை யால் அணுக பயந்து கொண்டிருந்தான். இன்றோ இராமனின் உதவியால் அரக்கர் உயிரின் சுவையைச் சுவைத்து மகிழ்ந்தான்.

இந்திரன் ''முனிவரே! தாங்கள் சக்ரவர்த்தித் திருமகனை அழைத்து வந்தீர், இதன் பயனாக பயங்கரச் செயல் புரிந்து வந்த தாடகை அழிக்கப் பட்டாள். இவளால் ஏற்படும் இடர்கள் இன்றி எங்கள் இருப்பிடங்களில் நாங்கள் இனிது வாழ்வோம். இந்நிகழ்ச்சியினால் மிக மகிழ்ந்தோம். இனி தங்கள் வேள்வியும் இனிது முடியும். மேலும் இராமபிரானால் தேவர் களாகிய எங்களுக்கு ஆக வேண்டியவை நிறைய இருக்கின்றன. தேவரீர் ஆட்சிசெய்து கொண்டிருந்த காலத்தில் க்ருசாச்வ முனிவரிடமிருந்தும், உமது தவத்தினாலும் நிறைய அஸ்த்ர சஸ்த்ரங்களைப் பெற்றிருந்தீர், அவை அனைத்தையும் இராகவனுக்குக் கொடுக்க வேண்டும்'' எனக் கூறி விடை பெற்றான்.

ततः मुनिवरः प्रीतः ताटकावध तोषितः ।
मूर्ध्नि रामं उपाघ्राय इदं वचनं अब्रवीत् ।
इह अद्यरजनीं राम वसाम शुभदर्शन ।
श्वः प्रभाते गमिष्यामः तत् आश्रमपदं मम ॥
प्रहस्य राघवं वाक्यं उवाच मधुराक्षरम् ।

परितुष्टोऽस्मि भद्रं ते राजपुत्र ! महायशः ॥
प्रीत्या परमया युक्तः ददामि अस्त्राणि सर्वशः ।
देवासुर गणान् वापि सगन्धर्वोरगानपि ।
यैः अमित्रान् प्रसह्य आजौ वशीकृत्य जयिष्यसि ॥

தத: முனிவர: ப்ரீத: தாடகா வத தோஷித:
மூர்த்னி ராமம் உபாக்ராய இதம் வசனம் அப்ரவீத் ।
இஹ அத்ய ரஜனீம் ராம! வஸாம சுபதர்ஶன !।
ஶ்வ: ப்ரபாதே கமிஷ்யாம: தத் ஆஶ்ரமபதம் மம ॥
ப்ரஹஸ்ய ராகவம் வாக்யம் உவாச மதுராக்ஷரம் ।
பரிதுஷ்டோ அஸ்மி பத்ரம்தே ராஜபுத்ர! மஹா யஶ:
ப்ரீத்யா பரமயா யுக்த: ததாமி அஸ்த்ராணி ஸர்வஶ: ॥
தேவாஸுர கணான் வாபி ஸகந்தர் வோரகான்அபி ।
யை: அமித்ரான் ப்ரஸஹ்ய ஆஜௌ வஶீக்ருத்ய ஜயிஷ்யஸி ॥

வா.ரா.பால.-26, 27

''தாடகை பெண் எனக் கூறிக் கொல்ல மறுத்து விடுவானோ?'' என ராமனைப் பற்றிய ஐயம் தீர்ந்தது. உரிய நேரத்தில் தேவர்களும் வந்து போற்றினர். முனிவரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ராமனை அணைத்து உச்சி முகந்து பேசினார். ''ராம! ஸந்த்யா காலம் நெருங்குகிறது. அனுஷ்டானத்தை முடித்துக் கொண்டு இன்றிரவு இங்கேயே (தாடகாவனத்தில்) தங்குவோம். தாடகா வனத்திற்கு இருந்த ஶாபக்கேடு உனது செயலால் இன்றோடு தீர்ந்தது. பயங்கரமாயிருந்த இக்காடு குபேரனின் சைத்ர ரதம் (உத்யானம்) போன்று காட்சி அளிக்கிறது. நாளை விடியற் காலையில் புறப்பட்டு எனது ஆச்ரமத்திற்குச் செல்லலாம்'' என்றார். மீண்டும் முகத்தில் புன்னகை தவழப் பேசலுற்றார். ''ராஜகுமார! நீ எதிர்காலத்தில் போர்களில் வென்று புகழுடன் விளங்க நான் பெற்ற அஸ்த்ர ஶஸ்த்ரங்கள் அனைத்தையும் மிக்க மகிழ்ச்சியோடு உனக்குத் தருகிறேன். அதற்குரிய மந்த்ரங்களையும் உபதேசிக்கிறேன். கந்தவர்கள், உரகர்கள், இவர்களோடு கூடின தேவர்கள், அஸுரர்கள் ஆகியவர்கள் உன்னைப் பகைப்பராயின் அவர்களை பலாத்காரமாக எதிர்த்து நின்று போரில் வெல்வாய். கருணை காட்ட வேண்டுமாயின் மோஹனாஸ்த்ரங்களை உபயோகித்து அவர்களை வசப்படுத்திக் கொள்வாய். இத்தகு உயரிய அஸ்த்ரங்களை உனக்கு அளிக்க விரும்புகிறேன்.''

एतान् राम महाबाहो कामरूपान् महाबलान् ।
गृहाण परमोदारान् क्षिप्रमेव नृपात्मज ॥
स्थितस्तु प्राङ्मुखो भूत्वा शुचिः मुनिवरः तदा ।
ददौ रामाय सुप्रीतः मन्त्रग्रामं अनुत्तमम् ॥

ஏதான் ராம மஹாபாஹோ காமரூபான் மஹாபலான்
க்ருஹாண பரமோதாரான் க்ஷிப்ரமேவ ந்ருபாத்மஜ ।।
ஸ்தித: து ப்ராங்முக: பூத்வா ஶுசி: முனிவர: ததா ।
ததௌ ராமாய ஸுப்ரீத: மந்த்ரக்ராமம் அனுத்தமம் ।।

வா.ரா.பால.-27

தர்ம சக்ரம், கால சக்ரம், விஷ்ணு சக்ரம், ஐந்த்ரம், சைவம், ப்ராஹ்மம், மோதகீ, சேகரீ, தர்ம, கால, வருண பாசங்கள், நாராயணம், ஆக்னேயம், வாயவ்யம், நந்தனம், ப்ரஸ்வாபனம், ப்ரசமனம், சோஷணம், ஸந்தாபனம், விலாபனம், மோஹனம் ஆகிய சுமார் 64 வகையான அஸ்த்ரங்களின் பெயரைச் சொல்லி ''இவைகள் அனைத்தையும் விரைவில் ஏற்றுக்கொள்'' எனக் கூறித் தான் கிழக்கு முகமாக அமர்ந்து தூயராய் அவ்அவ் அஸ்த்ரங்களுக்குரிய தேவதைகளை மகிழ்வித்து, அவர்களை, வசப் படுத்தும் சிறந்த மந்த்ரங்கள் அனைத்தையும் ராமனுக்கு உபதேசித்தார். அதே போன்று இளைய பெருமாளுக்கும் உபதேசித்ததாகக் கூறுவர்.

இவ்வஸ்த்ரங்களுள் சில எதிரிகளின் கை கால்களைக் கட்டிப் போட்டது மாதிரி இயங்காமற் செய்து விடும்; சில மழையைப் பொழி விக்கும்; சில நீரிடி, இடிகளை விழச் செய்யும்; சில நெருப்பைக் கக்கும்; சில புழுதியுடன் புயற் காற்றை வீசச் செய்யும்; சில சக்தி, கதை, முதலிய ஆயுதங் களாக வந்து மார்பையும் மண்டையையும் பிளக்கும்; சில உலக்கைகளைக் கிளப்பி அடித்து விரட்டும்; சில வாள்களை ஏவி உறுப்புக்களை அறுத்துத் தள்ளும்; சில எதிரிகளுக்குத் தூக்கத்தைத் தோற்றுவித்துச் செயலிழக்கச் செய்யும். சில கோபதாபங்களை அடக்கி மனதில் சாந்தியை (அமைதியை)த் தோற்று வித்துப் படைக்கலங்களைக் கீழே போடச் செய்யும்; சில அபச குனமாக அழுது புலம்பச் செய்யும்; சில உடலுள் ஈரப்பசை இல்லாதபடி உலர்த்தியும், உடல் வெந்து போகும்படியும் செய்யும்; சில விரும்பிய உருவங்களை எடுத்துப் பகை வீரர்களை மயங்கச் செய்யும்; சில குளிரினால் உடல் நடுங்கும்படி செய்யும்; சில வீரர்களின் வீரத்தை (ஆற்றலை) மங்கச் செய்யும்.

जपतः तु मुनेः तस्य विश्वामित्रस्य धीमतः ।
उपतस्थुः महार्हाणि सर्वाण्यस्त्राणि राघवम् ।।
ऊचुश्च मुदिताः सर्वे रामं प्राञ्जलयस्तदा ।
इमेस्म परमोदाराः किंकराः तव राघव ।।

ஜபத: து முனே: தஸ்ய விஶ்வாமித்ரஸ்ய தீமத:
உபதஸ்த்து: மஹார்ஹாணி ஸர்வாணி அஸ்த்ராணி ராகவம்
ஊசு: ச முதிதா: ஸர்வே ராமம் ப்ராஞ்ஜலய: ததா ।
இ மஸ்ம பரமோதாரா: கிங்கரா: தவ ராகவ ।।

வா.ரா.பால.-27

ஆறிய அறிவன் கூறி அளித்தலும் அண்ணல் தன் பால்
ஊறிய உவகையோடும் உம்பர்தம் படைகள் எல்லாம்
தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்கள் எல்லாம்
மாறிய பிறப்பில் தேடி வருவபோல் வந்த அன்றே.

க.ரா.பால.வேள்வி.

ஆறிய: அமைதியுடைய, ஊறிய: சுரக்கும், தேறிய: தெளிந்த

முனிவருக்கு, தாம் உடலை வருத்தி மனத்தை அடக்கித் தவம் செய்து பெற்ற அஸ்த்ர வித்யைகளைத் தக்க பாத்திரத்தில் கொடுக்கிறோம் என மகிழ்ச்சி; தெய்வீகப் படைகளுக்கோ ''முற்றும் துறந்த முனிவரிடம் தாம் இயங்குவதற்குரிய நிலையின்றி வாளாவிருக்கிறோமே என இதுகாறும் இருந்த வருத்தம் நீங்கி ராவண ஸம்ஹாரத்திற்கென்றே அவதரித்த இராமபிரானிடம் போய்ச் சேர்கிறோம். நம் தினவு அடங்க தாடகா வதம் போன்ற வீரச் செயல் புரியும் வாய்ப்பு இனி மிகுதியாக கிடைக்கும்'' எனப் பெருமகிழ்ச்சி. எனவே ஒவ்வொரு தேவதா மந்த்ரங்களை முனிவர் ஜபம் செய்ய செய்யப் பெருமை வாய்ந்த அஸ்த்ர தேவதைகள் ஒவ்வொருவராக (நல்வினைப் பயன்கள் மறு பிறவியில் நம்மை வந்தடைவதுபோல்), ராமனை வந்தடைந்தனர்.

(ஒவ்வொருவனும் தன் வாழ் நாட்களில் எத்தனையோ பாப புண்ணிய கர்மாக்களைச் (நல்வினை தீவினைகளை) செய்கிறான், ''அவச்யம் அனுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபா சுபம்'' அவரவர்கள் செய்த நல்வினைத் தீவினைப் பயன்களை அவரவர்களே அனுபவித்தாக வேண்டும். சில இப்பிறவியிலும், பல மறுபிறவியிலும் மாந்தரால் அனுபவிக்கப் பெறு கின்றன. தீவினைப் பயன்கள் மறு பிறவியில் தேடி வருவன போன்று நல்வினைப் பயன்களும் மறு பிறவியில் நம்மை தேடி ஓடோடி வரும்)

மேவினம் பிரிதல் ஆற்றேம் வீர! நீ விதியின் எம்மை
ஏவின செய்து நிற்றும் இளையவன் போல என்று

க.ரா.பால.-வேள்வி.

அஸ்த்ர தேவதைகள் வந்ததும் அஞ்ஜலி செய்து வணங்கி ''உமது ஊழியர்கள் நாங்கள், உமது திருத்தம்பியார் இளைய பெருமாளைப் போன்று எப்பொழுதும் எதையும் செய்யத் தயாராக இருக்கின்றோம்'' என்றனர்.

प्रतिगृह्य च काकुत्स्थः समालभ्य च पाणिना ।
मानसा मे भविष्यध्वं इति तान् अभ्यचोदयत् ।
अभिवाद्य महातेजाः गमनाय उपचक्रमे ।
अस्त्राणां तु अहं इच्छामि संहारं मुनिपुङ्गव ।
संहारं व्याजहार अथ धृतिमान् सुव्रतः शुचिः ॥

ப்ரதி க்ருஹ்ய ச காகுத்ஸ்த: ஸமாலப்ய ச பாணினா ।
மானஸா மே பவிஷ்யத்வம் இதிதான் அப்யசோதயத் ॥
அபி வாத்ய மஹாதேஜா: கமனாய உபசக்ரமே ॥
அஸ்த்ராணாம் து அஹம் இச்சாமி ஸம்ஹாரம் முனிபுங்கவ! ॥
ஸம்ஹாரம் வ்யாஜஹார அத த்ருதிமான் ஸுவ்ரத: ஶுசி: ॥

வா.ரா.பால.-27,28

மகிழ்ச்சியோடு தன்னை வந்தடைந்த படைக்கலங்களை தமது திருக்கையினால் தடவிக் கொடுத்து ''நீங்கள் இனி நான் நினைக்கும் பொழுதெல்லாம் வந்துவிடவேண்டும்'' எனக் கட்டளையிட, அவைகளும் ராமனை வணங்கி வலம் வந்து விடை பெற்றன. பின்னர் உவந்த உள்ளத்தோடு முனிவரை வணங்கிய ராமன் ''அஸ்த்ரங்களையும், இவற்றின் ப்ரயோகங்களையும் (ஏவுதல்) தெரிந்து கொண்டேன். இவற்றின் உபஸம்ஹாரத்தையும் (திரும்பப் பெறுதலையும்) உபதேசிக்க வேண்டும்'' என வேண்ட முனிவரும் மகிழ்வுடன் அதற்குரிய மந்த்ரங்களையும் உபதேசித்தார்.

வாமனாவதாரம்

किन्तु एतत् मेघ संकाशं पर्वतस्य अविदूरतः ।
वृक्षषण्डं इतो भाति परं कौतूहलं हि मे ॥
दर्शनीयं मृगाकीर्णं मनोहरं अतीव च ।
नानाप्रकारैःशकुनैः वल्गुनादैः अलंकृतम् ।
बद्ध पल्लव पुटाञ्जलि द्रुमं दर्शनोन्मुख मृगं तपोवनम् ।

கிம்துஏதத் மேகஸங்காஶம் பர்வதஸ்ய அவிதூரத: ।
வ்ருக்ஷ ஷண்டம் இத: பாதி பரம் கௌதூஹலம்ஹிமே ॥
தர்ஶனீயம் ம்ருகாகீர்ணம் மனோஹரம் அதீவச ॥
நானாப்ரகாரை: ஶகுனை: வல்கு நாதை: அலங்க்ருதம் ॥
பத்த பல்லவ புடாஞ்ஜலித்ருமம் தர்ஶனோன்முக ம்ருகம்
தபோவனம்

காளிதாஸன் - சாகுந்தலம்

इह राम महाबाहो विष्णुः देव वरः प्रभुः ।
वर्षाणि सुबहूनीह तथा युगशतानि च ।
तपश्चरण योगार्थं उवास सुमहा तपाः ।
एषः पूर्वाश्रमः राम । वामनस्य महात्मनः ।
सिद्धाश्रमः इति ख्यातः सिद्ध हि अत्र महातपाः ।

இஹ ராம மஹாபாஹோ! விஷ்ணு: தேவவர: ப்ரபு: ।
வர்ஷாணி ஸுபஹூநீஹ ததா யுகஶதானிச ॥
தபஶ்சரண யோகார்த்தம் உவாஸ ஸுமஹா தபா: ॥
ஸித்தாஶ்ரம: இதி க்யாத: ஸித்த: ஹிஅத்ர மஹாதபா: ॥

வா.ரா.பால.-29

மூவரும் தாடகாவனத்தினின்றும் புறப்பட்டனர், சிறிதுதூரம் சென்றதும் எதிரே அழகியதோர் இயற்கைக் காட்சியைப் பார்க்கிறான் ராமன். ஒரு மலை, அதனருகில் அடர்ந்த காடு, பல்வகை மரங்கள் ஓங்கித் தழைத்து வளர்ந்திருக் கின்றன. அவற்றின் பசுமை, நீருண்ட மேகங்கள் தான் மலைக்கு அருகில் தாழ்வரையில் படிந்திருக்கின்றனவோ என எண்ணத் தோன்றுகிறது. ''அதைப் பார்க்கப் பார்க்க என் மனம் மிக மகிழ்கிறது. பல்வகை விலங்குகள் சுதந்திரமாகத் துள்ளிக் குதித்தோடி விளையாடுவது எனது கண்களுக்கு நல்விருந்து. பல்வகைப் பறவைகள் காட்டின் அழகை மேம்படுத்துகின்றன.

அதன் ஒலிகள் இசை விருந்தை அளிக்கின்றன எனலாம். அங்குள்ள மான்கள் நம் வரவை உற்று நோக்குகின்றன. இளந்தளிர்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருப்பது மரங்கள் நம்மை வரவேற்கும் நிலையில் குவிந்த கைகளால் அஞ்சலி செய்கின்றன போலும், இது என்ன இடம்?'' என ராமன் வினவ முனிவர் கூறுவார்.

ஸித்தாஶ்ரமம்

''ராம! பல யுகங்கள் பல்லாண்டுகள் மஹாவிஷ்ணு இங்கு தவம் புரிந்தார். பதரிகாஶ்ரமத்தில் எம்பெருமான் நரனாகவும் நாராயணனாகவும் சீடனாகவும் குருவாகவும் இருந்து அஷ்டாக்ஷர மந்த்ரோபதேசம் செய்து பகவானுடைய மந்த்ரங்களை குருஶிஷ்ய முறையில் பெற்று ஏகாந்தமான இடத்தில் ஜபம் செய்ய வேண்டுமென்பதை உலகினருக்குக் காட்டியதுபோல் இங்கும் தவம் புரியும் முறையை நமக்குக் காட்ட விஷ்ணு தவம் புரிந்தார் போலும். இதே போன்று இங்கு காஶ்யப முனிவர் தவம் புரிந்தார். இங்கு தான் வாமனப் பெருமான் அவதரித்தார். காஶ்யபரின் தவத்திற்கு ஸித்தி ஏற்பட்டது. இங்கு யார் தவம் புரியினும் வெற்றி பெறுவர். எனவே இவ்விடத்திற்கு ஸித்தாஶ்ரமம் (மங்களத்தை விளைவிக்கும்) எனப் பெயர் வழங்கலாயிற்று.''

தங்கள் நாயகனின் தெய்வம் தான் பிறிதுஇலை என்று உன்னும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது; மற்றும் கேளாய்
எங்கள் நான் மறைக்கும், தேவர் அறிவிற்கும், பிறர்க்கும் எட்டாச்
செங்கண்மால் இருந்து மேல் நாள் செய்தவம் செய்தது அன்றே

கம்ப.ரா.பால.-வேள்வி

இது பூர்வாஶ்ரமம் என்றார், ''வாமனன் அவதரித்து வாழ்ந்த இடம், உமது முன் அவதாரம் வாமனாவதாரம். எனவே இது உம்முடைய பூர்வாஶ்ரமம்'' என்பதை, உமது எனக் குறிக்காமல் மறைத்துப் பேசினார். ''இவ்வாஶ்ரமம் மிகத் தூயது, இதற்குப் பெண்களின் மனதை உவமை யாக்கினார் கம்பர், பதிவ்ரதைகளான பெண்கள் தமது கணவனைத் தவிர வேறொரு தெய்வம் இருப்பதாக மனதில் கருதமாட்டார்கள். ''குலமகட்கு தெய்வம் கொழுனனே'' என்பர். பதிவ்ரதைகள் மனமுவந்து சொல்வது அப்படியே நடக்கும். இதைத் திருக்குறள் கூறும்: ''தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுது எழுவாள் பெய் எனப் பெய்யும் மழை'' என்று. கணவனைத் தவிர மற்றொன்றைத் தெய்வமாகக் கருதாது தம் கணவனையே தெய்வமாகப் போற்றித் தொழுபவளே பதிவ்ரதையாம். இத்தகைய கற்புடை மாதர், வெப்பம் தணிய, பெய் எனக் கூறின் உடனே மழை பெய்யுமாம், ஏன்? அவர்கள் மனம் அவ்வளவு தூய்மையைப் பெற்றிருக்கிறது. இத்தகு பெண் மனம் போன்று இவ்வாஶ்ரமம் தூயது, எனவே இங்கு செய்யும் வேள்வி தவம் ஆகியவை உடனே கோரிய பயனைத் தருகிறது. மேலும் ரிக், யஜுஸ்,

ஸாமம், அதர்வம் எனப்படும் வேதங்களாலேயே அறியப்பட முடியாததும், தேவர்களின் அறிவிற்கும், முனிவர்களின் அறிவிற்கும் எட்டாததுமான ஸ்வரூபத்தையுடையவனும், செந்தாமரை போன்ற செவ்விய திருக்கண் களின் அழகையுடையவனுமான எங்கள் திருமால் முன்பு அங்கேயே தவம் புரிந்தமையாலும் மிகவும் சிறப்புற்றது ஸித்தாஶ்ரமம்'' என்றார். (வால்மீகத் தில் ''அஹம்வேத்மி'' என்றும், கம்பனில் ''எங்கள் செங்கண்மால்'' என்றும் கூறியது விஶ்வாமித்ரர் தூய வைஷ்ணவர் என்பதைக் காட்டுகிறது) நான்மறை களை ஓதுவதையும், தவம் புரிவதையுமே தொழிலாக உடைய ஸ்ரீ வைஷ்ணவர்கள் வாமனாஶ்ரமத்தில் இருக்கிறார்கள் என்பதையும் கம்பர் உணர்த்தியபடி.

एतस्मिन् एव काले तु राजा वैरोचनिः बलिः ।
निर्जित्य दैवत गणान् सेन्द्रान् च स मरुद्गणान् ।
कारयामास तद्राज्यं त्रिषु लोकेषु विश्रुतः ।
बलिः वैरोचनिः विष्णो । यजते यज्ञमुत्तमम् ।
असमाप्तेक्रतौ तस्मिन् स्वकार्यमभिपद्यताम् ।
एतस्मिन्नन्तरे राम कश्यपः अग्निसमप्रभः ।
अदित्या सहितः राम दीप्यमानः इव ओजसा ।
देवी सहायः भगवान् दिव्यं वर्ष सहस्रकम् ।
व्रतं समाप्य वरदं तुष्टाव मधुसूदनम् ।
पुत्रत्वं गच्छ भगवन् अदित्याः मम च अनघ ।
भ्राता भव यवीयान् त्वं शक्रस्य असुरसूदन ।
वामनं रूपमास्थाय वैरोचनिं उपागमत् ।
स्वस्तितेऽस्तु महाराजः यज्ञश्च अतीव शोभनः ।
वयं दानार्थिनः राजन् श्रुत्वा यज्ञं अनुत्तमम् ।
अद्य मे सफलः यज्ञः कृतार्थः अस्मि अद्य वामन ।
ग्रामं वा नगरं वापि राष्ट्रं वा यानमेव वा ।
हस्त्यश्व रथः पत्तीःवा त्वं लभस्व अन्यमेव वा ।

ஏதஸ்மின் ஏவ காலே து ராஜா வைரோசனி: பலி: ।
நிர்ஜித்ய தைவத கணான் ஸேந்த்ரான் ச ஸமருத் கணான் ॥
காரயாமாஸ தத்ராஜ்யம் த்ரிஷுலோகேஷு விஶ்ருத: ॥
பலி: வைரோசனி: விஷ்ணோ! யஜதே யஜ்ஞம் உத்தமம் ।
அஸமாப்தே க்ரதௌ தஸ்மின் ஸ்வகார்யம் அபிபத்யதாம் ॥

ஏதஸ்மின் அந்தரே ராம! கஶ்யப: அக்னிஸமப்ரப: ।
அதித்யா ஸஹித: ராம தீப்யமான: இவ ஓஜஸா ॥
தேவீ ஸஹாய: பகவான் திவ்யம் வர்ஷ ஸஹஸ்ரகம் ।
வ்ரதம் ஸமாப்ய வரதம் துஷ்டாவ மதுஸூதனம் ॥
புத்ரத்வம் கச்ச பகவன்! அதித்யா: மம ச அனக ।
ப்ராதா பவ யவீயான் த்வம் ஶக்ரஸ்ய அஸுரஸூதன ॥
வாமனம் ரூபம் ஆஸ்தாய வைரோசனிம் உபாகமத் ।
ஸ்வஸ்தி தே அஸ்து மஹாராஜ! யக்ஞஸ் ச அதீவஶோபன: ॥
வயம் தானார்த்தின: ராஜன் ஶ்ருத்வா யக்ஞம் அனுத்தமம் ॥
அத்யமே ஸபல: யக்ஞ: க்ருதார்த்த: அஸ்மி அத்ய வாமன ॥
க்ராமம் வா நகரம் வா அபி ராஷ்ட்ரம் வா யானம் ஏவவா ।
ஹஸ்த்யஶ்வ ரத பத்தீ: வா த்வம் லபஸ்வ அன்யம் ஏவவா ॥

வா.ரா.பால. 29

இங்கு மஹாவிஷ்ணு தவம் செய்து கொண்டிருந்த பொழுது விரோசனின் குமாரனும், ப்ரஹ்லாதாழ்வானின் பெயரனுமான பலிச் சக்ரவர்த்தி ஆட்சி செய்து வந்தான். இவன் விஷ்ணு பக்தன். தேவர்களோடும், வாயு கணங்களோடும் இவர்களின் தலைவனான இந்திரனோடும் போரிட்டு, வென்று மூன்று உலகங்களையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தினான். இந் நிலையில் தேவர்கள் விஷ்ணுவை வணங்கி ''எங்கள் ராஜ்யம் பறிபோயிற்று. இந்திரன் உட்பட நாங்கள் யாவரும் பலிக்கு அடிமையாக இருக்க வேண்டிய நிலை. இந்த அவல நிலையைப் போக்கி அருள வேண்டும்'' என வேண்டினர், நிற்க.

''இப்பொழுது பலி உத்தமமான யாகத்தைச்* செய்து வருகிறான். இரப்போற்குக் கேட்கும் பொருளை எல்லாம் தானமாக வழங்கி வருகிறான்.

குறிப்பு: யாகம் என்பது தேவ பூஜை, அக்னி, இந்திரன், வருணன் ஆகிய தேவர்கட்கு ஹவிஸ்ஸை அளித்து மகிழ்வித்து, நமக்கு வேண்டிய வற்றைத் தேவர்களிடமிருந்து பெறுவதற்காகச் செய்வதேயாகும். பலியோ தேவர்கட்குச் சத்ரு. எனவே பலி யாகத்தைச் செய்வது எவ்வாறு பொருந்தும்?

விடை: விஷ்ணு எங்கும் பரவி நிற்பவன். தேவர்களிடம் அந்தர்யாமி யாக இருந்து நாம் கொடுக்கும் ஹவிஸ்ஸைப் பெறுபவன் நாராயணனே. பலி விஷ்ணு பக்தன், இந்த்ர, வருண முதலிய சப்தங்களால் சொல்லப்படும் விஷ்ணுவைக் குறித்தே யாகம் பண்ணுகிறான். எனவே தேவ சத்ருவாயினும் யாகம் செய்வது பொருந்தும். இவ்வாறு செய்யும் யாகமே மிகச் சிறந்ததாம், இதையே ''யஜதே யாகம் உத்தமம்'' என்று உத்தம சப்தத்தினால் வால்மீகி குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

இந்த யாகத்தை முடிப்பதற்குள் தேவ ராஜ்யத்தை மீட்டுக் கொடுக்க வேண்டும். அதாவது தேவரீரே சென்று இரந்து கேட்டால் எங்கள் ராஜ்யம் கிடைத்துவிடும். யாகத்திற்குப் பிறகோ அவன் மிக்க வலிமை பெற்றவனாவான்'' எனவும் விண்ணப்பித்தனர்.

இந்த ஸந்தர்பத்தில் பகவான் கச்யபர் இங்கு கடுந்தவத்தினை மேற்கொண்டுள்ளார், ஆயிரம் தேவ வர்ஷங்களாகச் செய்து வருகிறார். இதற்கு உறுதுணையாக அவருடைய தர்ம பத்னீ அதிதிதேவீ இருந்து வருகிறாள். யாகத்தை முடித்துப் பரமனைத் துதித்து சரணாகதி பண்ணியதும் எம்பெருமான் எதிரில் தோன்றி 'வேண்டிய வரத்தைக் கேட்பாய்' என்றார். கச்யபரும் மிக மகிழ்ந்து ''பகவானே! நீர் எங்கள் இருவருக்கும் புத்ரனாக அவதரிக்க வேண்டும். இந்திரனுக்குத் தம்பியாக உபேந்த்ரனாகத் தோன்றி நாடிழந்த தேவர்கட்கு உதவவேண்டும். எங்களுக்குத் திருமகனாக இங்கு அவதரித்து இவ்வாஶ்ரமத்தையும் ஸித்தாஶ்ரமமாக ஆக்க அனுக்ரஹிக்க வேண்டும். அதாவது இங்கு செய்யும் எந்த கர்மாவும் (ஹோமம், தவம், தானம் முதலியவை) ஸபலமாக விரும்பிய மங்களத்தை அளிப்பதாக ஆக வேண்டும்'' எனவும் பிரார்த்தித்தார், கோரியபடி அவதரித்து கச்யப தம்பதிகளையும், அவ்வாஶ்ரமப் பிரதேசத்தையும் ஸபலமாக்கினார் பகவான்.

பகவான் வடுவாக (ப்ரஹ்மசாரியாக) அவதரித்தான், உபநயனம் வரையுள்ள ஸம்ஸ்காரங்களை மஹர்ஷிகள் செய்து வைத்தனர். மிகவும் குள்ளமாக இருந்தபடியால் வாமனன் என அழைக்கப்பட்டான்.

முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பது ஓர் நாவன் அனல் படுகையன்
அற்புதன் அற்புதரே அறியும் தன்
சித் பதம் ஒப்பது ஓர் மெய் கொடு சென்றான்

க.ரா.பால. வேள்வி.

வாமனன் மூன்று வடமுள்ள பூணூலை அணிந்திருந்தான். இடுப்பில் முஞ்சிப்புல்லாலாகிய பொன் நிறமுள்ள அரை நாணைச் சுற்றியிருந்தான். அவன் நாக்கு வேதத்தை ஓதிக்கொண்டிருந்தது. அந்தணனின் வலது கையில் அக்னி இருக்கிறது எனும் மறைமொழிக்கேற்ப கையில் அக்னி ஒளிர்விட்டுக் கொண்டிருந்தது. அல்லது, அக்னியில் ஸமிதா தானம் செய்யும் கையுடனிருந்தான். அவனது உருவம், தோற்றம், தேஜஸ் ஆகியவை வியக்கத்தக்க நிலையிலிருந்தன. அவதாரங்கள் அனைத்துமே அத்புதம்தானே. ஞான ஆனந்த ஸ்வரூபமாயுள்ள அவனை வியக்கத்தக்க நுண்ணிய ப்ரஹ்ம ஞானமுடைய மஹர்ஷிகள் அன்றி வேறு யாரால் அறிய முடியும்.

நீல நிறத்து நெடுந்தகை வந்து ஓர்
ஆல் அமர் வித்தின் அரும் குறள் ஆனான்

க.ரா.பால.-வேள்வி.

நீருண்ட மேகம் போன்ற கரிய திருமேனியையுடையவனும், பெருமை மிக்க திருக்கல்யாண குணங்களை உடையவனும், எங்கும் பரவி நிற்பவனுமான திருமால், அணிதேர் புரவி ஆட்பெரும் படையுடன் வரும் மன்னர் தன் நிழலில் தங்குவதற்கேற்ப, உயர்ந்து, பரந்து, விரிந்து, வளரும், பெரியதொரு ஆலமரத்தைத் தன்னுள் அடக்கிய ஆலின் விதை போன்று அரியதொரு அத்புத வாமன வடிவமாய்த் தோன்றினான். இந்த விசித்திரக் குள்ளனான வடுவைப் பார்த்து மஹர்ஷிகள் வியந்து மகிழ்ந்தனர். ஏன்? அவன் திருப்பாதங்களுக்கேற்ற கணுக்கால்கள், அதற்கேற்ற முழங்கால்கள், இதற்கேற்ற தொடைகள், இடுப்பு, வயிறு, கழுத்து, தலை, உடலுக்கேற்ற கைகள், குட்டிக் கைகட்கேற்ற விரல்கள் ஆகிய உருவ அமைப்புக் கண்டும் மகிழ்ந்தனராம். (குள்ளனுக்கு பூசணிக்காய் போன்று தலையும், சால் போன்று வயிறும் இருந்தால் எப்படி இருக்கும்?) ப்ரஹ்மசர்யத்தை, ஸந்த்யா வந்தனம் முதலிய அனுஷ்டானஙகளை ஒழுங்காகச் செய்பவனுக்கு முகத்தில் ப்ரஹ்ம தேஜஸ் சொட்டும் (பிரகாசிக்கும்) என்பர், பரப்ரஹ்மமே ப்ரஹ்மசாரியாக அவதரித்தால் தேஜஸ்ஸுக்குக் கேட்பானேன்!

திருமுக மண்டலத்திலும், திருமேனியிலும் ப்ரஹ்ம தேஜஸ் பொலிய, மாயா ப்ரஹ்மசாரீ, பலியின் அஶ்வமேத யக்ஞ வாடத்திற்கு வந்தான். கடுகு சிறியதாயினும் காரம் அதிகம் என்பது போல் வடிவில், குள்ளனாயினும் தேஜஸ், திருமுகப் பொலிவு யாக வேதியிலுள்ள மஹர்ஷிகளையும், ரித்விக்குகளையும், யஜமானனான பலிச் சக்ரவர்த்தியையும், மிக மிகக் கவரவே அனைவரும் தம்மையறியாது எழுந்திருந்து வணங்கி வரவேற்றனர். யாகத்தில் தீக்ஷிதனான யஜமானன் எழுந்திருக்கவோ, பேசவோ கூடா தாயினும், பரவசப்பட்டு எழுந்திருந்து நல்வரவு கூறி, திருவடிகட்குத் தீர்த்தம் சேர்த்து, ஸ்ரீ பாத தீர்த்தத்தைத் தலையில் தாங்கி ஆஸனமிட்டு அமரும்படிப் பிரார்த்தித்தான்.

வாமனர்: ''பேரரசே! உமக்கு மங்களம் உண்டாகுக! உமது வேள்வி மிக மங்களமானது. வேள்வியில் உம்மிடமிருந்து ''நன்கொடையைப் பெற விரும்பி இங்கு வந்தோம்.''

பலி: ''வாமனரே! நான் (க்ருதார்த்தன்) பெற வேண்டியதைப் பெற்றவன் ஆனேன், நீரோ மஹர்ஷிகள், ப்ரஹ்மர்ஷிகள் செய்த தவமெல்லாம் உருவங்கொண்டதோ என்னும்படி இருக்கிறீர்.''

நின்தனின் அந்தணர் இல்லை நிறைந்தோய்,
என்தனின் உய்ந்தவர் யார் உளர் என்றான்.

க.ரா.பால.-வேள்வி.

''நிறைந்தோய்! பண்பும் குணமும் ஒருங்கே நிறைந்தவரே! (எங்கும் நிறைந்து பரவி இருப்பவரே) ப்ரஹ்மதேஜஸ் நிறைந்த அந்தணர் உம்மைக் காட்டிலும் உலகில் வேறு யார் உளர்? உம்மை நேரில் தர்சனம் செய்யும் பாக்யம் பெற்றவர் என்னைவிட வேறு யாரும் இல்லை. எனவே க்ராமம், நகர், நாடு, வண்டி, நால்வகைப் படைகள், பொன், கன்யாரத்னம் எது

தேவையோ அதைக் கேளும். பெண் என்றதுமே, ஸபத்னீ (சக்களத்தீ) வந்துவிடப் போகிறாளே என அச்சம் போலும், திருமார்பிலுள்ள மஹாலக்ஷ்மீ எட்டிப் பார்த்தாளாம். உடனே வாமனன் பூணூல் மாதிரி தரித்துள்ள மான் தோலினால் அவளை மறைத்துக் கொண்டாராம், ஏன்? 'லக்ஷ்மீ கடாக்ஷம் பலிக்கு ஏற்பட்டால் மூன்றுலகங்களையும் அவனிடமிருந்து பிடுங்க முடியாமல் போய் விடுமே' என பெருமாளுக்கு அச்சம் போலும்! ஈ ''க்ருஷ்ணாஜினேன ஸம்வ்ருண்வன் வதூம் வக்ஷஸ்தலாலயாம்'' என்ற அடியால் ஸ்வாமி தேசிகன் ஸாதிப்பர்.

வாமனர்:

एतैः किं मम राजेन्द्र ! तैः तु नास्ति प्रयोजनम् ।
अस्मत् पादत्रयाक्रान्तां देहि भूमिं विभो तथा ॥

ஏதை: கிம்? மம ராஜேந்த்ர! தை: து நாஸ்தி ப்ரயோஜனம் ।
அஸ்மத் பாதத்ரயாக்ராந்தாம் தேஹி பூமிம் விபோ ததா ॥

வா.ரா.பால.-29

ஆண் தகை அவ்வகைகூற அறிந்தோன்
வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி
நீண்டகையாய் இனி நின்னுழை வந்தோர்
மாண்டவர்; அல்லவர் மாண்பிலர் என்றான்.


க.ரா.பால.-வேள்வி.

ஆண்மைக் குணமுடைய மகாபலிச் சக்ரவர்த்தி ''எதை விரும்பினும் கொடுக்கத் தயார்'' எனக் கூற, ஸர்வ ஜ்ஞானான வாமனன் ''ஓ ராஜேந்திரனே! நீர் பொருளை விரும்பி வருவோர் கேட்பதைக் காட்டிலும் மிகுதியாக எடுத்தெடுத்து விரைந்து கொடுக்கும் நீண்ட கைகளை உடையவர். இத்தகு கொடைத்திறன் உள்ள உம்மிடம் வந்து இரந்து பொருள் பெறுவோரே உலகில் மாட்சிமைப்பட்டவர். மற்றவர்களோ மாண்பு (சிறப்பு) இல்லாதவராம், உமது தந்தை விரோசனனோ அந்தணர் வேடம் பூண்டு யாசித்த தேவர்கட்குத் தன் உயிரையே கொடுத்தனன். கொடை என்பது பரம்பரையாக வந்த குணம், ஆயினும் அத்தனை பொருள்கள் எனக்குத் தேவையில்லை, எனக்கு வேண்டியது சிறிதளவு நிலம் மாத்திரம், அதையும் என் கால் அடியால் மூன்று அடி கொடுத்தால் போதும் (இங்கு நீண்ட கையாய் என்பது நான் நீண்ட காலன் என்பதைக் குறிக்கிறது போலும்). அரசே! நீர் கூறும் பொருள்களைப் பெற்று எனக்கு யாதொரு பயனும் இல்லை'' என்றார்.

त्वं बालः बालिशमतिः स्वार्थं प्रति अबुधः यथा ।
मां वचोभिः समाराध्य लोकानां एकं ईश्वरं
पदत्रयं वृणीते यः अबुद्धिमान् द्वीप दाशुषम् ।



பொருவில் வலம்புரியரக்கன் முடிகள் பத்தும் புற்றுமறிந்தன போலப் புவிமேல் சிந்த, செருவில் வலம்புரிசிலைக்கை மலைத் தோள் வேந்தன் திருவடி சேர்ந்துய்கிற்பீர் என்று கலியன் **சீர்காழியில்** அனுபவித்த வீரராமன்



'ஓதி நாமம் குளித்துச்சி தன்னால், ஒளிமாமலர்ப் பாதம் நாளும் பணிவோம் நமக்கே நலமாதலின்' என்று கலியனருளிய தர்பசயன ராமன் திருப்புல்லாணியில்.

न पुमान् मां उपव्रज्य भूयो याचितुं अर्हति ।
तस्मात् वृद्धिकरीं भूमिं वटो कामं प्रतीच्छ मे ।

த்வம் பால: பாலிஶமதி: ஸ்வார்த்தம் ப்ரதி அபுத: யதா ॥
மாம் வசோபி: ஸமாராத்ய லோகானாம் ஏகம் ஈச்வரம் ।
பதத்ரயம் வ்ருணீதே ய: அபுத்திமான் த்வீப தாசுஷம் ॥
ந புமான் மாம் உபவ்ரஜ்ய பூயோ யாசிதும் அர்ஹதி ।
தஸ்மாத் வ்ருத்திகரீம் பூமிம் வடோ ! காமம் ப்ரதீச்சமே ॥

பாகவதம் : 8:19:18-20

''ஓ ப்ராஹ்மணா! நீ சிறுவன்; வயதிற்கு ஏற்ற அறிவைப் பெற்றிருக்கிறாய். தனக்கு எது தேவை எவ்வளவு தேவை என்பதை அறியாத முட்டாள். மூவுலகங்களுக்கும் ஒரே சக்ரவர்த்தியான என்னைப் புகழ்ந்துவிட்டு, ஒரு தீவு பூமியையே அளிக்கவல்ல என்னிடம், மூன்றடி மண் கேட்கின்றாய்! என்னிடம் ஒரு தடவை யாசகத்திற்கு வந்தவன் மீண்டும் என்னிடமோ, பிறரிடமோ பொருளை வேண்டிச் செல்லக்கூடாது. எனவே விரும்பியதெல்லாம் கேள் தருகிறேன்''* என்றான். ஆனால் மேலும் எதையும் வாமனன் வேண்டவில்லை.

वामनाय महीं दातुं निश्चिते असुरसत्तमे ।
तं निवार्य महाराजं प्राह शुक्रः द्विजोत्तमः ॥
यं न जानन्ति वेदाः च स एषः विष्णुः अव्ययः ।
पत्न्या सह विनिश्चित्य यजमानः महाबलिः ।

குறிப்பு: *பரமதார்மிகனாய் மஹா விஷ்ணுவை அஶ்வமேதத்தினால் ஆராதிக்கும் தன் பக்தனான பலியைத் தண்டித்து ராஜ்யத்தைப் பிடுங்கி இந்திரனுக்குக் கொடுப்பானேன்? ஆம், சரியான கேள்வி. இதற்குப் பதில், பக்தனைத் திருத்துவதும் பரமன் கடமையாகும். பலி தன்னை லோகேஶ்வரனாக நினைத்து அகங்காரமும், தான், தனது பொருளைத் தருவதாக மமகாரமும் கொண்டான். பகவானைப் பாலன் என்றும், முட்டாள் என்றும் பேசினான், காமாலைக் கண்ணனுக்கு எல்லாம் மஞ்சளாகத் தெரியும். கருப்புக் கண்ணாடி அணிந்தவனுக்கு வெள்ளிய பொருளும் கரியதாகத் தெரியும். நான், எனது, எனும் கர்வமுடைய பலிக்கு பகவானே முட்டாளாகத் தெரிகிறான். பக்தனிடம் இத்தகு கர்வம் கூடாது. ஒருவரிடம் 1 ரூ. பிச்சை வாங்கியவன் அவருக்கே 25 பைசா தருகிறேன் என்பது போல பகவத் கருணையினால் மூவுலக ஸாம்ராஜ்யத்தைப் பெற்றவன் அவருக்கே மூன்றடி மண் தருவதாக, வேண்டியதெல்லாம் கொடுப்பதாகப் பேசுவது எவ்வளவு மடமை! (பூர்ண வைராக்யத்தைத் தோற்றுவிக்கவே வாமனனாக வந்தார் எனக் கொள்ளலாம்.)*

माया रूपेण देवेशः मम यज्ञं गतः यदि ।
तदेतत् यज्ञसाफल्यं एवमस्तु इति च अब्रवीत् ।
इति मत्वा उदकं दत्तं वामनाय महात्मने ।
उदके स्पृष्टमात्रे तु विश्वरूपधरो हरिः ।
तत्रस्थ एव ववृधे येन पूर्णं जगत्रयम् ।
आक्रम्य लोकान् लोकात्मा सर्वलोक हिते रतः ॥
महेन्द्राय पुनः प्रादात् नियम्य बलि मोजसा ।

வாமனாய மஹீம் தாதும் நிஸ்சிதே அஸுரஸத்தமே।
தம் நிவார்ய மஹாராஜம் ப்ராஹ ஶுக்ர: த்விஜோத்தம: ।
யம் ந ஜானந்தி வேதா: ச ஸ ஏஷ: விஷ்ணு: அவ்யய: ॥
பத்ன்யா ஸஹ விநிஸ்சித்ய யஜமான: மஹா பலி: ॥
மாயா ரூபேண தேவேஶ: மம யஜ்ஞம் கத: யதி ॥
தத் ஏதத் யஜ்ஞஸாபல்யம் ஏவ மஸ்துஇதிச அப்ரவீத் ॥
இதிமத்வா`உதகம் தத்தம் வாமனாய மஹாத்மனே ॥
உதகே ஸ்பருஷ்டமாத்ரே து விஸ்வரூபதர: ஹரி ।
தத்ரஸ்த: ஏவ வவ்ருதே யேன பூர்ணம் ஜகத்ரயம் ॥
ஆக்ரம்ய லோகான் லோகாத்மா ஸர்வ லோக ஹிதே ரத: ।
மஹேந்த்ராய புன: ப்ராதாத் நியம்ய பலிம் ஓஜஸா ॥

வா.ரா.பால.-29

''அஸந்துஷ்ட: த்விஜ: நஷ்ட:'' கிடைத்ததைக் கொண்டு த்ருப்தி அடையாத அந்தணன் அழிவான். பெரியவர்கட்குச் சிறிது பொருளைக் கொடுத்தாலும் மகிழ்வர். இதுவே போதுமே! இதைக் கொண்டு அஶ்வமேதமே பண்ணலாமே என்பர். அதுபோல வாமனனும் ''நீர் கொடுக்கும் மூன்றடி பூமி மூன்று உலகங்களுக்குச் சமமாயிற்றே'' என்றார். உடனே தாரை வார்த்துத் தானம் பண்ணத் தொடங்கினான்.

மஹா பலிக்கு குருவும் மந்திரியுமான சுக்ராசாரியர் ''அரசே! இக்குள்ளனை யார் என நினைத்தீர்? எவனைப் பற்றி வேதங்கள் எல்லாம் விளக்கிக் கூற முடியாமல் திணறுகின்றனவோ அந்த மஹா விஷ்ணுவே இவன்! எங்கும் பரவி நிற்பவன், முதலும் முடிவும் இல்லாதவன்''.

கண்ட திறத்து 'இது கைதவம் ஐய!
கொண்டல் நிறக் குறள் என்பது கொள்ளேல்
அண்டமும் முற்றும் அகண்டமும் மேல் நாள்
உண்டவனாம் இது உணர்ந்து கொள்' என்றான்

க.ரா.பால. - வேள்வி.

சுக்ராசாரியர் தனது ஞானக் கண்ணால் இவனை யார் என அறிந்து பேசலானார். சுட்டிக்காட்டி ''இது இவனுடைய உண்மையான வடிவமல்ல, ப்ராஹ்மண ப்ரஹ்மசாரி அன்று இவன்; நீருண்ட மேகம் போன்று மனதைக் கவரும் கரிய திருமேனியோடு கூடியவன் என்று எண்ணாதே, உன்னை வஞ்சிப்பதற்காகப் போட்டுக் கொண்ட வேடம் இது. பிரளய காலத்தில் அண்டங்கள் யாவையும் தன் வயிற்றில் அடக்கி ஆல மாமரத்தின் ஓர் இலைமேல் ஒரு பாலகனாய்க் காட்சியளிக்கும் பரமன் இவன். இவனுக்கு தானம் செய்வது தீமையை விளைவிக்கும். உலகு அனைத்தையும் தன்னுள் அடக்கியவனுக்கு நீர் என்ன தானம் பண்ணுவது?'' என்பது தொனிப் பொருள்.

மஹாபலி: ''மாயா உருவம் எடுத்து எம்பெருமானே எனது வேள்விக்கு நேராக வருவானேயாகில் அதை விட வேறு பாக்யம் எனக்குண்டோ? யக்ஞ ஸ்வரூபனான விஷ்ணுவே என்னிடம் தானம் வாங்குவானேயாகில் எனது வேள்வி பெரும் பயனைப் பெற்றது''. மேலும்

நினைக்கிலை, என்கை நிமிர்ந்திட வந்து
தனக்கு இயலாவகை தாழ்வது, தாழ்வில்-
கனக் கரியானது கைத்தலம் என்னின்
எனக்கு இதன் மேல் நலம் யாதுகொல்? என்றான்

க.ரா.பால. - வேள்வி.

கரியானது: திருமாலினது

''குருவே! தானம் செய்யும் பொழுது கொடுப்பவரின் கை மேலேயும், தானம் பெறுபவரின் கை தாழ்ந்து கீழேயும் இருக்கும். யாவரினும் உயரிய புருஷோத்தமனே தனது உயர்வுகளை—பெருமைகளை, மதிப்பைக் குறைத்துக் கொண்டு என்னிடம் வந்து யாசகனாய் நின்று கேட்பானாயின், அப்பொருளைக் கொடுப்பதன்றோ நமக்குப் பெருமை! இத்தகைய ஸத்பாத்ரம் நமக்குக் கிடைத்தற்கரியதன்றோ! மேலும், யாகத்தில் தக்ஷிணை கொடுப்பது மிக முக்கியமானது. தானத்தினால் பகைவர்களைப் போக்கிக் கொள்ள முடியும். தானம் பகைவர்களையும் நட்புடையவர்கள் ஆக்கும். தானத்தினால் ஆகாதது ஒன்றுமில்லை. கொடுப்பவனை எல்லோரும் அண்டி நிற்பர். கொடுப்பதையும் சிரத்தையோடும் ஸங்கல்பத்தோடும், முக மலர்ச்சியோடும், பயத்தோடும் 'இவ்வளவு தானே கொடுக்கிறோம்' என்கிற வெட்கத்தோடும் கொடுக்க வேண்டுமென்று மறைகள் அறிவிப்பதை நீர் அறியீரோ?''

நல்லாறு எனினும் கொளல் தீது, மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. குறள் - 222

அதாவது ஒருவரிடம் ஒரு பொருளை இரந்து தானமாகப் பெறுவது நமக்கு மோக்ஷம்—பேரின்பம் கிடைப்பதற்குரிய நல்ல நெறியாயினும், பெறுவது தீய செயலாகும். கொடுப்பவர்கள்-தானம் செய்பவர்கள் அத்தகைய பேரின்பத்தைப் பெறவியலாது. என்றாலும் ஈதலே (தானம் செய்வதே) சிறந்ததாகும்.

இன்னுயிரேனும், கொள்ளுதல் தீது, கொடுப்பது நன்றாம், நம் உயிரைக் காக்க வேண்டி அதை இரந்து பெறுவது தீய செயல், இரப்பது துன்பத்தையே விளைவிக்கும். ''யாசனாத் நச்யதி த்ருவம்'' இரந்து கேட்பவன் அழிவது உறுதி. (''அயாசிதம் ஸ்யாத் அம்ருதம்''. இரந்து கேட்காமல் வரும் பொருள் அமிழ்தத்திற்குச் சமம்) என்பர். நமது இன்னுயிரையே பிறருக்குத் தானமாகக் கொடுக்க வேண்டியிருப்பின் ததீசி, சிபி போன்று கொடுத்தலே நல்லது.

இங்கு ஒரு கதையை நினைவு கூர்வது பயனுடைத்து.

பகவான் க்ருஷ்ணன் துர்யோதனனிடம் சென்று 'நான் ஸஹஸ்ர ப்ராஹ்மண போஜனம் (ஆயிரம் அந்தணர்களை உண்பிப்பது) செய்ய எண்ணி சாமான்கள் அனைத்தையும் தயார் செய்து விட்டேன். ஒரே ஒரு பொருள் தான் கிடைக்கவில்லை. அதை உன்னிடம் கேட்க வந்தேன்' என்றார். துர்யோதனன் 'எது வேண்டுமாயினும் உடனே கொடுக்கத் தயார்' என்றனன்.

கண்ணன் ''விறகு 10 வண்டி வேண்டும். உலர்ந்ததாக வேண்டும்'' என்றார்.

துர்யோதனன் ''இது என்ன பிரமாதம். இதோ அனுப்புகிறேன்'' என்றான். அப்பொழுது ஒரு மாதமாக அடை மழை பெய்து கொண்டிருந்தது. என்ன முயற்சித்தும் அவனுக்குக் காய்ந்த விறகு கிடைக்கவில்லை. உடனே கண்ணன், கர்ணன் அரண்மனைக்குச் சென்றார். அவனிடம் விஷயத்தைச் சொன்னார்; ''உடனே அனுப்புகிறேன்'' என்றான் கர்ணன்.

கண்ணன்: ''இந்த மழையில் ஈரமில்லாத விறகு எப்படி உனக்குக் கிடைக்கும்?''

கர்ணன்: ''இதைப் பற்றி உமக்கு ஏன் கவலை?'' என்று கூறி மறுநாளே பத்து வண்டி விறகு அனுப்பி விட்டான். அதைப் பார்க்க, கண்ணன் அங்கு போனார். அரண்மனையின் ஒரு பகுதியை இடித்து அட்டை, உத்தரம், தூண் ஆகியவைகளைப் பிளந்து அனுப்புதலைப் பார்த்தார். கண்ணன் கடாக்ஷத் தால் கர்ணன் அரண்மனை முன்னிலும் இரு மடங்கு பெரியதாகவும் அழகாகவும் அமைந்துவிட்டதாம். துரியோதனன் தன் பெருமையை வெளி யிடவே விறகு தருவதாகக் கூறினான். எனவே அது நிறைவேறவில்லை.

கர்ணனோ தானத்தின் சிறப்பையுணர்ந்து, தரமுன் வந்ததால் அது நிறைவேறியது. என்னே கொடையின் சிறப்பு!

धर्मार्थं ब्राह्मणे दानं यशोर्थं नट नर्तके ।
भृत्येषु भरणार्थं वै भयार्थं चैव राजसु

தர்மார்த்தம் ப்ராஹ்மணே தானம் யஶோர்த்தம் நடநர்த்தகே ।
ப்ருத்யேஷு பரணார்த்தம் வை பயார்த்தம் சைவ ராஜஸு ॥

''தர்மத்திற்காக பிராஹ்மணனுக்கும், புகழுக்காக நடிகர்கட்கும், தம்மைப் போஷித்துக் கொள்வதற்காக ஊழியர்கட்கும், பயத்தினால் (வரியாக) அரசர்கட்கும், தானம் செய்வது முக்யம் என்பது முதுமொழி. எனவே இந்த வாமன பிராஹ்மணர்க்குக் கேட்பதைக் கொடுக்கத்தான் போகிறேன்'' என்றான் பலி. வாமனரும் ''போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. எனவே எனக்கு மூன்று அடி பூமியே போதும்.'' என்றார்.

यदृच्छया उपपन्नेन सन्तुष्टः वर्तते सुखम् ।
न असन्तुष्टः त्रिभिः लोकैः अजितात्मोपसादितैः ।
यदृच्छा लाभ तुष्टस्य तेजः विप्रस्य वर्धते ।
तत् प्रशाम्यति असन्तोषात् अम्भसाइव आशुशुक्षणिः ॥

யத்ருச்சயா உபபந்நேன ஸந்துஷ்ட: வர்ததே ஸுகம் ।
ந அஸந்துஷ்ட: த்ரிபி: லோகை: அஜிதாத்மோ பஸாதிதை: ॥
யத்ருச்சா லாப ஸந்துஷ்டஸ்ய தேஜ: விப்ரஸ்ய வர்ததே ।
தத் ப்ரஶாம்யதி அஸந்தோஷாத் அம்பஸா இவ ஆஶு ஶுக்ஷணி: ॥

பாகவதம் - 8:19

''எதிர்பாராது கிடைக்கும் பொருட்களைக் கொண்டு வாழ்க்கையை நடத்துபவன் எப்பொழுதும் இன்பமாக வாழ்வான். எவ்வளவு கிடைத்தாலும் த்ருப்தி இல்லாதவன் ஸுகத்தை அடைய மாட்டான். கிடைத்ததைக் கொண்டு மகிழ்பவனுக்கு தேஜஸ் வளரும். அப்படி இல்லாத அந்தணனுடைய தேஜஸ் நீரினால் தீ அணைந்து கரியாவது போல் மங்கும். எனவே நான் கேட்டதே போரும்'' என்றார் வாமனர். உடனே மஹாபலி தன் மனைவி விந்த்யாவளியை அழைத்து, தானம் செய்ய நீர் வார்க்கச் சொன்னான்.

சுக்ராசாரியர், ''அரசே! நான் உமது குரு, புரோஹிதர். அரசனுக்கு வரும் கேடுகளை விலக்க ஆலோசனை கூறி நல்வழி நடத்த வேண்டியது என் கடமை. என் சீடன் கேடுறுவதை எங்ஙனம் பொறுக்க முடியும்? ஆகவே நான் இச்செயலை இடையில் குறுக்கிட்டுத் தடுப்பேன்'' என்று உறுதிபடக் கூறினார்.

எடுத்து ஒருவருக்கு ஒருவர் ஈவதனின்முன்னம்
தடுப்பது நினக்கு அழகிதோ தகவில் வெள்ளி!
கொடுப்பது விலக்கு கொடியோய்! உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி விடுகின்றாய்

க.ரா.பால. - வேள்வி.

வெள்ளி : சுக்ராசாரியர்

உடனே மஹாபலி: ''நான் செய்யும் தானத்தை விலக்கும் கொடுந் தொழில் புரியும் சுக்ராசாரியரே! வள்ளல் ஒருவன் ஒருபொருளை எடுத்து வேண்டுபவனுக்குக் கொடுக்கும் பொழுது அதைத் தடுப்பது கற்றவராகிய உமக்குத் தகுமோ! அழகாகுமோ! இவ்வாறு செய்தல் நீரும், உமது சுற்றத்தாரும் உடுக்க உடையும், உண்ண உணவுமின்றி வருந்த வேண்டி வருமே!''

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும் குறள் 166

அழுக்காறு : பொறாமை

என்று கூறி, மனைவி தாரை வார்க்க, தானம் பண்ணினான். சுக்ராசாரியர் பலியினிடமுள்ள பாஶத்தினால் இதைத் தடுக்க ஒரு யுக்தி செய்தார். திடீரென ஒரு வண்டு உருவம் எடுத்து கிண்டியினுள் புகுந்து தண்ணீர் வரும் வழியை அடைத்தார். வாமனனோ ''கருதும் இடம் பொறாது—சக்கரத்தன்'' அதாவது திருமால் விரும்பிய இடங்களில் விரும்பின வடிவம் கொள்ளும் தன்மையை உடையது பரமனின் சக்கரம். எனவே சக்கரத்தாழ்வான், வடுவின் வேஷத்திற்கேற்ப வாமனனின் கையில் தர்பத்தினாலான பவித்ரமாக மாறி, அதைக்கொண்டு கிண்டியின் த்வாரத்தில் குத்தினான். சுக்கிரன் கண்கள் குத்தப்பட்டுத் துன்புற்றான். அடைப்பு நீங்கி நீர் விழ, பின்னர் தானத்தைப் பெற்றான் வாமனன்.

उदके स्पृष्ट मात्रे तु विश्वरूप धरो हरिः ।
तत्रस्थः एव ववृधे येन पूर्णं जगत्रयम् ॥

உதகே ஸ்ப்ருஷ்டமாத்ரே து விஶ்வருப தரோஹரி: ।
தத்ரஸ்த: ஏவ வவ்ருதே யேன பூர்ணம் ஜகத்த்ரயம் ॥

உரியது இந்திரற்கு இது என்று உலகம் ஈந்துபோய்
விரிதிரை பாற்கடல் பள்ளி மேவினான்
கரியவன் உலகெலாம் கடந்த தாளிணை
திருமகள் கரம் தொடச் சிவந்துகாட்டிற்றே

க.ரா.பால.-வேள்வி.

तेनैषपूर्व आक्रान्तः आश्रमः श्रमनाशनः ।
मया तु भक्त्या तस्यैषः वामनस्योपभुज्यते ॥

தேனஏஷ: பூர்வம் ஆக்ராந்த: ஆச்ரம: ஶ்ரமநாஶன: ॥
மயாது பக்த்யா தஸ்ய ஏஷ: வாமனஸ்ய உப புஜ்யதே ॥

வா.ரா.பால. - 29

தாரை வார்த்த நீர் கையில் விழுந்ததுமே வாமனர் விச்வரூபம் எடுத்து த்ரிவிக்ரமனாக வளர்ந்து, மூவுலகையும் அளந்து, இந்திரனுக்குரிய த்ரிலோக ஸாம்ராஜ்யத்தை அவனுக்குக் கொடுத்து திருப்பாற்கடலில் பள்ளிகொள்ள, உலகளந்த ச்ரமம் தீர திருமாமகள் அடிவருட மென்மையான திருவடிகள் சிவந்து காட்டினவாம்.

''இத்தகைய ஸித்தாஶ்ரமத்தில் விஷ்ணு பக்தனாகிய நான் இருந்து வருகிறேன். இவ்வாஶ்ரமம் (வாமனாஶ்ரமம்) உலகினரின் இன்னல்களைப் போக்கவல்லது. இங்கு தான், யான் வேள்வியை அனுஷ்டிக்கப் போகிறேன்,'' என்றார் விஶ்வாமித்ரர்.

(இங்கு ராமன் ஸித்தாஶ்ரமத்தைப் பற்றிக் கேட்பது தனது பூர்வாவதாரத்தையும், அதன் லீலைகளையும் விஶ்வாமித்திரர் உணர்ந்தவரா என்பதை அறிவதற்காகத்தான்.)

யாக ஸம்ரக்ஷணம்

तं दृष्ट्वा मुनयः सर्वे सिद्धाश्रम निवासिनः ।
उत्पत्य उत्पत्य सहसा विश्वामित्रं अपूजयन् ।
तथैव राजपुत्राभ्यां अकुर्वन् अतिथिक्रियाम् ।
अद्यैव दीक्षां प्रविश भद्रं ते मुनिपुङ्गव ।
सिद्धाश्रमोऽयं सिद्धस्यात् सत्यमस्तु वचस्तव ।

தம் த்ருஷ்ட்வா முனய: ஸர்வே ஸித்தாஸ்ரம நிவாஸின: ।
உத்பத்ய உத்பத்ய ஸஹஸா விச்வாமித்ரம் அபூஜயன் ।
ததைவ ராஜபுத்ராப்யாம் அகுர்வன் அதிதிக்ரியாம் ।
அத்யைவ தீக்ஷாம் ப்ரவிஶ பத்ரம் தே முனிபுங்கவ! ।
ஸித்தாஸ்ரம: அயம் ஸித்த: ஸ்யாத் ஸத்யம் அஸ்துவச: தவ

வா.ரா.பால.-29


ஆதலால் அருவினை அறுக்கும் ஆரிய!
காதலால் கண்டவர் பிறவிகாண் குறார்
வேத நூல் முறைமையால் வேள்வி முற்று வேற்கு
ஈது அலாது இல்லை வேறு இருக்கற் பாலதே.

க.ரா.பால. - வேள்வி

சக்ரவர்த்தித் திருமகன், இளையபெருமாள், விஸ்வாமித்ர முனிவர் மூவரும் ஸித்தாஸ்ரமத்திற்கு வந்தனர். அங்குள்ள முனிவர்கள் விஸ்வாமித்ரரைக் கண்ணுற்றதும் போட்டியிட்டு ஓடோடியும் வந்து மகிழ்ச்சியுடன் எதிர் கொண்டழைத்து உபசரித்தனர். பின்னர் ராஜகுமாரர்கட்குரிய விருந் தோம்பலைச் செய்து மகிழ்ந்தனர். பின்னர் சிறிது நேரம் இளைப்பாறிய பிறகு அரசகுமாரர்கள் முனிவரிடம் கைகளைக் கூப்பிய வண்ணம் பணிவுடன் விண்ணப்பித்தனர். "முனிவர் பெருமானே! தங்கள் ஆஸ்ர மத்திற்கு வந்து சேர்ந்தோம். தேவரீர் விரும்பிய வேள்வியை இன்றே அனுஷ் டிக்கத் தொடங்கலாமே. "சுபஸ்ய சீக்ரம்" பலருக்கு நன்மையை விளை விக்கும் நற்செயல்களை விரைந்து செய்ய வேண்டுமென்பர். இந்த ஆச்ரமத்தின் பெயரும் அன்வர்த்தமாக—பொருள் படைத்ததாக அதாவது மங்களங்களை விளைவிக்கும் ஆஸ்ரமமாக ஆகட்டும். உமது வேள்வி இடையூறின்றி ஸித்தியை (பூர்த்தியை) அடையட்டும். தங்களுடைய வாக்கும் "அத்ரைவ புருஷவ்யாக்ர ஹந்தவ்யா: துஷ்டசாரிண:" இங்கு தான் அல்லவை செய்வோர் அனைவரும் அழிக்கப்படவேண்டும் என்பதும்



பரதனும் தம்பி சத்துருக்கனனும் இலக்குமனோடு மைதிலியும் இரவும்
நன்பகலும் துதி செய்யநின்ற இராவணாந்தகனான கோஸலராமன்
சென்னை திருவல்லிக்கேணியில் ஸேவை ஸாதிக்கிறபடி



‘விபீஷணோவா ஸுக்ரீவ யதிவா ராவண: ஸ்வயம்’ என்றருளிய வள்ளல்.
விபீஷண சரணாகதியை ஏற்றதற்கடையாளமாக சிரம் சாய்த்து
திருப்பதியில் ஸேவை தரும் சக்கரவர்த்தி திருமகன்

ஸித்தமாக ஸத்யமாக ஆகட்டும். அதாவது தர்மத்திற்கு இடையூறு செய்பவர்கள் யாராயினும் அவர்களை அழித்து வேள்வியைக் காக்கிறோம்''.

விஸ்வாமித்திரர் 'ஆரியனே! இந்த ஆச்ரமம் அருவினையறுக்கும் ஆச்ரமம். இது வேள்வி, தவம் முதலியவற்றைச் செய்வோரின் பற்பல பிறவிகளில் செய்த வினைகளை (பாபங்களை) அறுக்கும் வல்லமை யுடையது. ஏனெனில் இங்கு மஹாவிஷ்ணுவும், பின்னர் கச்யப முனிவரும் தவம் இயற்றி ஸித்தி பெற்றனர். அத்தகு பெருமை சான்ற இடத்தில் யான் யாகம் செய்யப்போகிறேன், அதைக் காக்க நீ வந்திருக்கிறாய், நீயோ எவ்வித உபாயங்களினாலும் அழிக்க முடியாத (பக்தர்களின்) பாபங்களின் வேர்களை அறுக்கும் திறன் பெற்றவன். இவ்வாஶ்ரமத்தைக் கண்களால் காண்பவர் மீண்டும் பிறவிச் சூழலில் சிக்கித் துன்புறார். எனவே வேதத்தில் கூறியபடி நெறி பிறழாது நான் வேள்வியைச் செய்யத் திட்டமிட்டுள்ளேன். எனவே வேள்வியை இங்கேயே இப்பொழுதே தொடங்க யாக தீக்ஷையை மேற்கொள்ளுகிறேன்'' என்றார்.

प्रभात काले च उत्थाय पूर्वां सन्ध्यां उपास्य च ।
स्पृष्टोदकौ शुचीजप्यं समाप्य नियमेन च ।
हुताग्निहोत्रं आसीनं विश्वामित्रं अवन्दताम् ।
भगवन् श्रोतुं इच्छावः यस्मिन् काले निशाचरौ ।
संरक्षणीयौ तौ ब्रह्मन् नातिवर्तेत तत्क्षणम् ।

ப்ரபாதகாலே ச உத்தாய பூர்வாம் ஸந்த்யாம் உபாஸ்ய ச ॥
ஸ்ப்ருஷ்டோதகௌ ஶுசீஜப்யம் ஸமாப்ய நியமேன ச ।
ஹுதாக்னிஹோத்ரம் ஆஸீனம் விச்வாமித்ரம் அவந்ததாம் ॥
பகவன்! ஶ்ரோதும் இச்சாவ: யஸ்மின் காலே நிஶாசரௌ ।
ஸம்ரக்ஷணீயௌ தௌ ப்ரஹ்மந் ந அதிவர்தேத தத்க்ஷணம் ॥

வா.ரா. பால. - 29,30

ராஜகுமாரர்கள் அன்றிரவு தூங்கி விடியற்காலை எழுந்தனர். நீராடி அர்க்யப்ரதானம் செய்து—காலை ஸந்த்யாவந்தனத்தை அனுஷ்டித்து, மந்த்ர ஜபங்களையும் முடித்துக் கொண்டு, விஸ்வாமித்ரரை அணுகி வணங்கினர். (எப்பொழுதும் ஸந்த்யா வந்தனம் செய்ததும், அகத்திலுள்ள பெரியோர் களை அவஶ்யம் வணங்க வேண்டும். பின்னர் பெருமாளையும் சென்று வணங்க வேண்டும்) அப்பொழுது முனிவர் காலை கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, யாக தீக்ஷாஸங்கல்பத்தையும் செய்து ரித்விக்குகள் வந்ததும் யாகத்தை ஆரம்பிக்கத் தயாராக இருந்தார்.

''முனிவரே! தொடங்க இருக்கும் வேள்வி பன்னாட்கள் நீடிக்கு மெனத் தெரிகிறது. தீங்கிழைக்கும் அரக்கர்கள் எப்பொழுது வருவார்கள்? ஏமாறாது ஜாக்ரதையாக (விழிப்புடன்) செயல்பட வேண்டுமே என்பதற் காகக் கேட்கிறோம்'' என்றனர்.

அப்பொழுது அருகிலிருந்த முனிவர்கள் குமாரர்களின் கடமை யுணர்ச்சியைப் பாராட்டி மகிழ்ந்து பேசினர்:

अद्य प्रभृति षड्रात्रं रक्षतं राघवौ युवाम् ।
दीक्षां गतः हि एष मुनिः मौनित्वं च गमिष्यति ॥
तौ च तद्वचनं श्रुत्वा राजपुत्रौ यशस्विनौ ।
अनिद्रौ षडहोरात्रं तपोवनं अरक्षताम् ।
उपासाञ्चक्रतुः वीरौ यत्तौ परम धन्विनौ ॥
ररक्षतुः मुनिवरं विश्वामित्रं अरिन्दमौ ।
अथ काले गते तस्मिन् षष्ठे अहनि समागते ।
सौमित्रिं अब्रवीत् रामः यत्तोभव समाहितः ॥

அத்ய ப்ரப்ருதி ஷட்ராத்ரம் ரக்ஷதம் ராகவௌ யுவாம் ।
தீக்ஷாம் கத: ஹி ஏஷ: முனி: மௌனித்வம் ச கமிஷ்யதி ॥
தௌ ச தத்வசனம் ஶ்ருத்வா ராஜபுத்ரௌ யஶஸ்வினௌ ।
அநித்ரௌ ஷடஹோராத்ரம் தபோவனம் அரக்ஷதாம் ॥
உபாஸாஞ்சக்ரது: வீரௌ யத்தௌ பரம தன்வினௌ ॥
ரரக்ஷது: முனிவரம் விஶ்வாமித்ரம் அரிந்தமௌ ॥
அத காலே கதே தஸ்மின் ஷஷ்டே அஹனி ஸமாகதே ।
ஸௌமித்ரிம் அப்ரவீத் ராம: யத்த: பவ ஸமாஹித: ॥

வா.ரா.பால.-30

''வேள்வி தொடங்கப் பெறுகிறது. இன்று முதற்கொண்டு ஆறு நாட்கள் நடைபெறும். முனிவர் யாகத்தில் தீக்ஷிதரானபடியால் முடியும் வரை பேச மாட்டார். மௌனத்தோடு கவனமாகச் செய்ய வேண்டியது யஜ்ஞம். யாகமாகவும், யாகத்தினால் ஆராதிக்கப்படுகிறவனாகவும், யாக கர்த்தா வாகவும், யாகத்தின் ஹவிஸ்ஸாகவும் யக்ஞபதியாகவும் இருப்பது ஸ்ரீமந் நாராயணனே யானபடியால் பய பக்தியுடனும் ச்ரத்தையுடனும் செய்ய வேண்டியதாகும்''.

यज्ञ इज्यः महेज्यश्च क्रतुः सत्रं सतां गतिः ।
महाक्रतुः महायज्वा महायज्ञो महाहविः ॥

யஜ்ஞ: இஜ்ய: மஹேஜ்யஶ்ச க்ரது: ஸத்ரம் ஸதாம் கதி: ॥
மஹாக்ரது: மஹாயஜ்வா, மஹாயஜ்ஞ: மஹாஹவி: ॥

விஷ்ணு, ஸஹஸ்ரநாமம்-48, 78

''எனவே நீங்கள் இருவரும் இந்த ஆறு நாட்களிலும் எவ்வித இடையூறுகளும் நேராது வேள்வியைப் பாதுகாக்க வேண்டும்'' என்றனர்.

இதைக் கேட்ட ராஜகுமாரர்கள் ஆறு நாட்களும் இரவும் பகலும் சிறிதும் தூங்காது தபோவனத்தையும், யஜமானனான விஸ்வாமித்ர முனிவரையும் பாதுகாத்து வந்தனர். அக்காலத்தில் மிகவும் எச்சரிக்கையுடனும், கவனத் துடனும் நாணேற்றிய வில்லும் கையுமாகக் காவல் செய்தனராம். வேள்வி காத்தவன். யஜ்ஞரக்ஷகன் எனும் புகழை விரும்பிக் காவல் காத்தனர் என 'யசஸ்விநௌ' எனும் சொல்லால் குறிப்பிடுகிறார் மஹாகவி. முன்பு புகழ் கெட்டிருந்தது, எப்பொழுது? வாமனாவதாரத்தில், பலிச்சக்ரவர்த்தி இயற்றிய வேள்விக்குச் சென்று மூன்றடி மண் இரந்து அவன் தலைமீது ஒரு அடியை வைத்து வேள்வியைக் கெடுத்தவர்தானே! இப்பொழுது யாக ரக்ஷ்கன் எனப் புகழ் பெற விரும்பினாராம். ஸ்வாமி தேசிகனும் ''கௌமார கேளி கோபாயித கௌசிகாத்வர'' தன் வயதிற் கேற்ற விளையாட்டினால் கௌசிகனின் வேள்வியைக் காத்தவன் என்றார். இங்கு வால்மீகி ''யத்தௌ, யத்தோபவ'' கவனக்குறைவின்றி மிகவும் ஜாக்ரதையாக விழிப்புடன் காத்தனர் என்றும், ராமன், தம்பியை ஆறாம் நாளில் 'ஜாக்ரதை' என எச்சரித்ததாகவும்'' கூறுகிறார். இதன் விளக்கத்தை கம்பனில் பார்ப்போம்.

எண்ணுதற்கு ஆக்க அரிது இரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையின் காத்தனர்.

க.ரா.பால. - வேள்வி.

இப்பூவுலகைப் பாதுகாக்கும் தசரதனின் குமாரர்களான இராமனும் இலக்குவனும் முனிவர் தேவர்கட்காக ஆறு நாட்கள் செய்த வேள்வியைக் காத்தனர். இவ்வேள்வியோ மாபெரும் வேள்வி. பிறரால் இத்தகு வேள்வியைச் செய்யலாம் என மனதினால் எண்ணவோ, செய்வேன் எனச் சொல்லவோ, கைகளால் இயற்றவோ முடியாதாம். இப் பெருவேள்வியை கண்களை இமைகள் காப்பது போல இவர்கள் பாதுகாத்தனராம். இவ் வேள்வியைப் போன்று ராஜகுமாரர்களின் காவல் தொழிலும் பிறரால் நினைப்பதற்கோ, சொல்லுதற்கோ, செய்வதற்கோ முற்றிலும் முடியாததாம். எனவேதான் ராமன் ஜாக்ரதை என அடிக்கடி எச்சரித்தானாம். நமக்கு கண்கள் இரண்டு, இமைகளும் இரண்டு, இமைகள் கண்கட்குள் தூசுகள் புகா வண்ணமும், பிறரால் தீமைவராதவாறும் கண்களை மூடிப் பாதுகாக் கின்றன. விஸ்வாமித்திரரும், யாகமும் இரு கண்கள் போன்றவை. காக்கும் இமைகள் போன்றவர்கள் இவ்விருவரும். மேலிமை பெரியது—அது ராமனுக்கும், கீழிமை சிறியது—அது இலக்குவனுக்கும் உவமைகள். இமைப்பதால் மேலே உள்ளதற்கு இமை என்று பெயர். இமைக்காது அசையாது கீழ் இமை இருப்பதால் அதை இல் என்பர். மேல் இமை, தானே வந்து கீழிமையோடு சேர்ந்து கண்ணைப் பாதுகாக்கும், அதுபோல ராமன் யாக ஶாலையின் வாயிலில் எவரும் உள்ளே நுழையாது பாதுகாக்க

அசையாது இலக்குவனை இருக்கும்படி நிறுத்திவிட்டுத் தான் சாலையைச் சுற்றிச் சுற்றி வந்து பாதுகாப்பானாம். அப்பொழுது வாயிற் பக்கம் வரும் பொழுது ''லக்ஷ்மணா! ஜாக்ரதை (யத்தோபவ)'' எனக் கூறித் தம்பியைத் தட்டிக் கொடுப்பானாம். ஆக பிறர் ஏவிச் செய்யாதபடி இமைகள் போல் இயல்பாகவும் உரிமையோடும் வேள்வியைக் காத்தனராம். (இங்கு போல என வருவித்து இமை, இல் போல எனப் பொருள் கொள்ள வேண்டும்) காளிதாஸரின் சொற் சித்திரத்தையும் சற்று நோக்குவோம்.

तत्र दीक्षितं ऋषिं ररक्षतुः विघ्नतो दशरथात्मजौ शरैः ।
लोकं अन्धतमसात् क्रमोदितौ रश्मिभिः शशि दिवाकरादिव ॥

தத்ர தீக்ஷிதம் ரிஷிம் ரரக்ஷது: விக்னத: தசரதாத்மஜௌ ஶரை: ।
லோகம் அந்த தமஸாத் க்ரமோதிதௌ, ரச்மிபி: ஶஶி
திவாகராவிவ ॥

காளிதாஸன்

தமது ஒளிக்கதிர்களால் சந்திரனும், கதிரவனும் முறையாக இரவிலும் பகலிலும் தோன்றி உலகினரை வருத்தும் காரிருளைப் போக்கி, மக்களைக் காப்பது போல், ராஜகுமாரர்களான ராமனும் இலக்குவனும் யாக தீக்ஷை பெற்ற முனிவரைத் தமது அம்புகளால் பாதுகாத்தனராம்.

प्रजज्वाल ततः वेदिः सोपाध्याय पुरोहिता ।
आकाशे च महान् शब्दः प्रादुरासीत् भयानकः ॥

ப்ரஜஜ்வால தத: வேதி: ஸோபாத்யாய புரோஹிதா ॥
ஆகாஶே ச மஹான் ஶப்த: ப்ராதுராஸீத் பயானக: ॥

வா.ரா.பால.-30

பார்த்தனன் விசும்பிடைப் பருவமேகம் போல்
ஆர்த்தனர், இடித்தனர், அசனி அஞ்சவே,

க.ரா.பால.-வேள்வி

मारीचश्च सुबाहुश्च तयोः अनुचराश्च ये
आगम्य भीम संकाशाः रुधिरौघं अवासृजन् ।

மாரீசஶ்ச ஸுபாஹுஶ்ச தயோ: அனுசராஶ்ச யே ।
ஆகம்ய பீமஸங்காஶா: ருதிரௌகம் அவாஸ்ருஜன் ॥

வா.ரா.பால.-30

எய்தனர் எறிந்தனர் எரியும் நீருமாய்ப்
பெய்தனர் பெருவரை பிடுங்கி வீசினர்

வைதனர், தெழித்தனர் மழுக்கொண்டு ஓச்சினர்
செய்தனர் ஒன்றல தீய மாயமே.

க.ரா.பால.-வேள்வி

தெழித்தல்:அதட்டுதல், மழு:கோடாலி போன்ற ஆயுதம்

யஜ்ஞ ரக்ஷகனான ராமனே காவல் தொழிலைச் செய்வதால் மாமுனிவர் சிறிதும் கவலையின்றி வேள்வியைத் தொடங்கினார். ரித்விக்குகள் ஹோமம் செய்யத் தொடங்கியதும், அதன் ஜ்வாலையினால் முனிவரும், ரித்விக்குகளும், ப்ருஹஸ்பதியும் ஜொலித்தனர்.

வேள்வி முறைப்படித் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது வானத்தில் பயங்கரமான ஒலி எழுந்தது. மழைக் காலத்தில் வானத்தை மறைத்துக் கொண்டு மேகங்கள் பரவி எழும், இடிகள் இடிக்கும், இவை தோற்கும்படி அரக்கர்கள் வானத்தில் சூழ்ந்தனர். ஆரவாரம் செய்தனர், இடித்தனர்.

பார்த்த அளவிலே காண்போர் நடுங்கும் பயங்கர உருவத்தினரான அரக்கர்கள் பல்லோர் புடை சூழ, மேலே வந்த ஸுபாஹுவும், மாரீசனும் இரத்தத்தைக் கொட்டினர். அம்புகளை எய்தனர்; வேல் முதலிய ஆயுதங்களை வீசினர்; நெருப்பும் நீருமாகச் சொரிந்தனர்; பெரும் மலைகளைப் பெயர்த்து வீசினர், வசைகளை (திட்டுதல்) மொழிந்தனர், அதட்டினர்; மழுவை வீசினர். இவ்வாறு பல்வகையான மாயச் செயல்கள் புரிந்தனர்.

हृत्वाद्रेः शिखराणि तानि परितः क्षिप्त्वा हसित्वा क्रुधा
कृत्वा हस्त विघट्टनं तत इतः स्थित्वा नटित्वा मुहुः ।
सिक्त्वा क्ष्मामसृजा स्रजान्त्रकृतया बद्ध्वा कचान् खेचरान्
दग्ध्वाऽग्रेः सदृशा दृशा निशिचरा रुन्धन्ति रन्ध्रं दिवः ॥

ஹ்ருத்வா அத்ரே: ஶிகராணி தானி பரித: க்ஷிப்த்வா,
ஹஸித்வா, க்ருதா
க்ருத்வா ஹஸ்த விகட்டனம், தத: இத: ஸ்த்தித்வா நடித்வா முஹு: ।
ஸிக்த்வா க்ஷ்மாம் அஸ்ருஜா, ஸ்ரஜா ஆந்த்ர க்ருதயா பத்வா
கசான் கேசரான்
தக்த்வா அக்நே: ஸத்ருஶா த்ருஶா நிஶிசரா: ருந்தந்தி ரந்த்ரம் திவ: ॥

போஜசம்பூ

மேலும் மலைச்சிகரங்களை எடுத்து முனிவர்கள் வாழும் பகுதியில் வீசினர், சிரித்தனர், கோபத்துடன் கைகளைத் தட்டினர். இங்கும் அங்குமாக

நிற்பதும், கூத்தாடுவதுமாக இருந்தனர். ஆஶ்ரமப் பகுதிகளில் ரத்தம் தெளித்தனர். தமது பரட்டைத் தலைமயிரை குடல் நரம்புகளால் கட்டிக் கொண்டு, வானத்தில் செல்லும் பறவைகளையும், ஸித்தர்கள் சாரணர்கள் முதலிய தேவர்களையும், அனல் கக்கும் கண் விழிகளால் எரித்துக் கொண்டு, வான வீதியையே அடைத்துக் கொண்டு நின்றனர்.

पश्य लक्ष्मण दुर्वृत्तान् राक्षसान् पिशिताशनान् ।
बालोऽयमिति विज्ञाय तमानादृत्य दुर्मती ॥
विश्वामित्रस्य तां वेदिं सत्वरौ अभ्यधावताम् ।

பஶ்ய லக்ஷ்மண துர்வ்ருத்தான் ராக்ஷஸான் பிசிதாசனான் ॥
பால: அயம் இதி விஜ்ஞாய தம் அனாத்ருத்ய துர்மதீ ।
விச்வாமித்ரஸ்ய தாம் வேதிம் ஸத்வரௌ அப்யதாவதாம் ॥

வா.ரா.பால.-30

உடனே ராமன் இலக்குவனை அழைத்து ''அதோ பார். அரக்கர்கள் கூட்டம் கூட்டமாக வேள்விச்சாலையை நோக்கி விரைந்து ஓடி வருகின்றனர்'' என வானத்தைக் காட்டினார். அதற்குள் ஸுபாஹுவும், மாரீசனும் ராமலக்ஷ்மணர்களை வில்லேந்தியிருப்பினும் 'சிறுவர்கள் தானே' எனக்கருதி மதிக்காது அவர்களைத் தாண்டி முனிவரின் யாகசாலைக்கு விரைந்தனர். இதைக் கண்ணுற்ற ராமன் 'புகையை ஒத்த கரிய நிறத்தையும், வேற் படையையுமுடைய இவர்களைக் கொன்றால் இவர்களின் உடல் மாமிசமும், இரத்தமும் யாகவேதியில் விழும்; வேள்வியும் கெட்டுவிடும்' என எண்ணிய வராய் யாக வேதிக்கு உயரே வானத்தில் தென்னங்கீற்றுக்களால் கூரை வேய்வது போல அம்புகளைக் கொண்டே கூரையை வேய்ந் தானாம்.

தூம வேல் அரக்கர்தம் நிணமும் சோரியும்
ஓமவெங்கனலிடை உகும்என்று உன்னி அத்
தாமரைக் கண்ணனும் சரங்களே கொடு
கோமுனி இருக்கை ஓர் கூடம் ஆக்கினான்

க.ரா.பால.-வேள்வி.

चिक्षेप परम क्रुद्धः मारीचोरसि राघवः ।
स तेन परमास्त्रेण मानवेन समाहतः ॥
सम्पूर्णं योजन शतं क्षिप्तः सागर संप्लवे ।
संगृह्य अस्त्रं ततः रामः दिव्यं आग्नेयं अद्भुतम् ।
सुबाहूरसि चिक्षेप स विद्धः प्रापतत् भुवि ॥
शेषान् वायव्यमादाय निजधान महायशाः ।

சிக்ஷேப பரம க்ருத்த: மாரீசோரஸி ராகவ: ।

ஸ தேன பரமாஸ்த்ரேண மானவேன ஸமாஹத: ।
ஸம்பூர்ணம் யோஜனஶதம் க்ஷிப்த: ஸாகர ஸம்ப்லவே ॥
ஸங்க்ருஹ்ய அஸ்த்ரம் தத: ராம: திவ்யம் ஆக்னேயம் அத்புதம் ।
ஸுபாஹுரெஸி சிக்ஷேப ஸ வித்த: ப்ராபதத் புவி ॥
ஶேஷான் வாயவ்யம் ஆதாய நிஜகான மஹாயஶா: ।

வா.ரா.பால.-30

பின்னர் மிகக் கோபத்துடன் மானவாஸ்த்ரத்தை ப்ரயோகம் செய்து மாரீசனைக் கொல்லாமல் மிகத் தொலைவிலுள்ள ஸமுத்ரத்தில் கொண்டு போய்த் தள்ளினார்! ஏன் கொல்லவில்லை?

क्लृप्ते कौशिक नन्दनेन च मखे तत्र आगतान् राक्षसान् ।
हत्वा अमूमुचत् आशु भाविविदसौ मारीचमुग्राकृतिम् ॥

க்லுப்தே கௌசிக நந்தனேன ச மகே தத்ர ஆகதான் ராக்ஷஸான் ।
ஹத்வா அமுமுசத் ஆஶு பாவிவித் அஸௌ மாரீசம் உக்ராக்ருதிம் ॥

ஹனுமந் நாடகம்

கௌசிகன் வேள்வியைக் கெடுக்க வந்த அரக்கர்களைக் கொன்ற ராமன் மிகக்கொடியவனான மாரீசனைக் கொல்லாது கடலில் தள்ளினாராம். ஏன்? வருங்காலத்தை உணர்ந்தவரானபடியால் கொல்லவில்லையாம். தேவர்களின் பொருட்டு ராவண ஸம்ஹாரத்திற்காக அவதரித்தவரான படியால், ஸீதாபஹாரத்திற்கு மாரீசன் தேவை என நினைத்துக் கொல்லாமல் விட்டாராம்.

ஆக்னேயாஸ்த்ரத்தை பிரயோகித்தவுடன் ஸுபாஹு பூமியில் விழுந்து மடிந்தான். வாயவ்யாஸ்த்ரத்தினால் மற்ற அரக்கர்கள் அனைவரையும் வெகுதூரத்தில் தள்ளிக் கொன்றார்.

ऋषिभिः पूजितः तत्र यथा इन्द्रो विजये पुरा ।
कृतार्थः अस्मि महाबाहो कृतं गुरुवचः त्वया ।
सिद्धाश्रममिदं सत्यं कृतं राम महायशाः ॥

ரிஷிபி: பூஜித: தத்ர யதா இந்த்ர: விஜயே புரா ॥
க்ருதார்த்த: அஸ்மி மஹாபாஹோ க்ருதம் குருவச: த்வயா ।
ஸித்தாஶ்ரமம் இதம் ஸத்யம் க்ருதம் ராம மஹாயசா: ॥

வா.ரா.பால-30

பந்தரைக் கிழித்தன பரந்த பூமழை
அந்தர துந்துமி அலையின் ஆர்த்தன
இந்திரன் முதலிய அமரர் ஈண்டினார்
புனித மாதவர் ஆசியின் பூ மழை பொழிந்தார்

க.ரா.பால.-வேள்வி

யாகத்திற்கு எழுந்தருளிய முனிவர்களும் மற்றோரும் தேவாஸுர யுத்தத்தின் பொழுது அஸுரர்களை வெற்றிகொண்ட தேவேந்திரனை அனைவரும் வாழ்த்தியது போல ராமனை, வாழ்த்தினராம். தேவர்கள் சொரிந்த கற்பக மலர்மழை பந்தல்களை கிழித்துக் கொண்டு ராமன் மீது விழுந்தன. வானத்தில் தேவர்கள் துந்துபி வாத்யங்களை முழங்கினர். இந்திரனுள்ளிட்ட தேவர்குழாம் அழகுமிகு கோதண்டம் ஏந்திய அழகனை வணங்கி வாழ்த்தியது. மாமுனிகள் மலர்களைச் சொரிவதோடு வாயால் வாழ்த்தி மகிழ்ந்தனர். அக்காட்டிலுள்ள மரங்களும் மலர்களைச் சொரிந்தன.

(சுந்தரவில்லி, இராமன் அழகன், அவனுடைய வில்லும் அழகு, பரமனின் குணங்கள், அவனுடைய சேர்த்தியால் கல்யாண குணங்கள் ஆவதுபோல, சங்கம், சக்ரம், கதை, சார்ங்கம் ஆகியவை துஷ்டநிக்ரஹத்தின் பொழுது ஆயுதங்களாகவும் மற்ற ஸமயங்களில் திருவாபரணங்களாகவும் விளங்குவன.)

வேள்வியை முடித்துக் கொண்டு விஸ்வாமித்ரர் யாகசாலையி னின்றும் வெளியே வந்தார். எங்கும் அமைதி நிலவியது. அரக்கர்கள் அனைவரும் அழிந்தமையால் மனிதர்கட்கோ, விலங்குகட்கோ எவ்விதத் தீங்குமில்லை. இந்நிலையைக் கண்ட முனிவர் மகிழ்ச்சி பொங்க ராமனைப் பாராட்டுகிறார். ''ராமா! உன்னுதவியால் நான் பெறவேண்டிய நற்பயன் களைப் பெற்றேன். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பர். தந்தையான தசரதரின் கட்டளையை நிறைவேற்றிவிட்டாய். இந்த ஸித்தாஸ்ரமம் (மங்களங்களை விளைவிக்கும் இடம்) எனும் பெயரை உண்மையான பொருளுடையதாக ஆக்கிவிட்டாய்? ''ஜீவதோ: வாக்ய கரணாத்'' என்றபடி தாய் தந்தையர் உச்சி முகந்து உன்னிடம் என்ன சொல்லி அனுப்பினார்களோ அதைச் செய்து பித்ருவாக்ய பரிபாலனம் செய்து பெரும் புகழ் பெற்றாய். ''கௌமார கேளி கோபாயித கௌசிகாத்வர'' இளமைப் பருவத்தில் விளையாட்டாக அரக்கர்களை ஒழித்து கௌசிகரின் வேள்வியைக் காத்தவன்'' எனப் பின்னோர் கொண்டாடும் புகழினைப் பெற்றாய் என்று.''

பின்னர் சற்று யோசித்து விட்டு மேலும் பேசினார். ''ராமா! நான் உன்னைப் புகழ்வானேன். எனது பெரும் பாக்கியத்தையன்றோ புகழ வேண்டும். ஒரு முனிவரின் வேள்வியைக் காத்தது ஒரு பெரும் பணியா உனக்கு? நீயே யஜ்ஞரக்ஷகன். வேள்வியைக் காப்பதே உனது இயற்கையான தொழில், அது மட்டுமா? அண்டங்களையும் அவற்றுள் பதினான்கு லோகங் களையும் படைப்பதும், காப்பதும், அழிப்பதும் உனது தொழில், மஹா ப்ரளய காலத்தில் உயிர்கள் அனைத்தையும் வயிற்றில் அடக்கி, அவற்றை ஜீரணிக்காது காத்து உதவுவதும் உனது தொழில். இத்தகையோனுக்கு இச் சிறு வேள்வியைக் காத்தல் ஒரு பெருமையா? இல்லை. எனது நல்வினைப் பயனாய் ஸர்வ ரக்ஷகனான நீ பரத்வத்தை மறைத்து மனிதனாய்த் தோன்றி

எளிமையைக் கைக்கொண்டு நடந்து கானகம் வந்து என்னை ஆட்கொண் டாய். இதற்குக் காரணமான என் (புண்ணியத்தை) பாக்யத்தையே புகழ்வேன்.''

பாக்கியம் எனக்கு உளது என நினைவுறும் பான்மை
போக்கி, நிற்கு இது பொருள் என உணர்கிலேன், புவனம்
ஆக்கி மற்று அவை அகிலமும் அணி வயிறு அடக்கிக்
காக்கும் நீ ஒரு வேள்விகாத்தனை எனும் கருத்தே.

க.ரா.பால.-வேள்வி

நிற்கு:உனக்கு

இதனால் க்ஷத்திரியனுடைய (நாட்டை ஆள்கின்றவர்களுடைய) கடமை உணர்த்தப் பெறுகிறது. வேள்விகளையும், அறப்பணிகளையும், அவற்றைச் செய்கின்றவர்களையும் எவ்வித தீங்கும் நேராதவாறு விழிப் புடன் காப்பது ஆளுனர்களின் கடமை. அதைச் செய்யாவிடில் அவர்கள் அறம் செய்யும் மக்கட்கு ஏற்படும் பாபங்களைப் பெற்று மிகத் துன்புறுவர்.

பரமனின் பண்பு

अथ तां रजनीं तत्र कृतार्थौ रामलक्ष्मणौ ।
ऊषतुः मुदितौ वीरौ प्रहृष्टेन अन्तरात्मना ॥
प्रभातायां तु शर्वर्यां कृत पौर्वाह्णिक क्रियौ ।
विश्वामित्रं मुनींश्चान्यान् सहितौ अभिजग्मतुः ।
ऊचतुः मधुरोदारं वाक्यं मधुर भाषिणौ ॥
इमौ स्म मुनिशार्दूल किंकरौ समुपस्थितौ ।
आज्ञापय यथेष्टं वै शासनं करवाव किम् ॥

அத தாம் ரஜனீம் தத்ர க்ருதார்த்தௌ ராம லக்ஷ்மணௌ ।
ஊஷது: முதிதௌ வீரௌ ப்ரஹ்ருஷ்டேன அந்தராத்மனா ॥
ப்ரபாதாயாம் து ஶர்வர்யாம் க்ருத பௌர்வான்ஹிக க்ரியௌ ।
விஶ்வாமித்ரம் முனீம்ஶ்ச அன்யான் ஸஹிதௌ அபிஜக்மது: ॥
ஊசது: மதுரோதாரம் வாக்யம் மதுர பாஷிணௌ ॥
இமௌ ஸ்ம முனி ஶார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்த்திதௌ ।
ஆஜ்ஞாபய யதேஷ்டம்வை ஶாஸனம் கரவாவ கிம் ॥

வா.ரா. பால - 31

விஶ்வாமித்ரரின் வேள்வி பூர்த்தி பெற்றது. மகிழ்ந்த ராம லக்ஷ்மணர் சிறிதும் கவலையின்றி மிகமிக மகிழ்ந்த உள்ளத்துடன் அன்றைய இரவை ஸித்தாஶ்ர மத்தில் கழித்தனர். மகிழ்ச்சிக்குக் காரணம், 6 நாட்கள் விழிப்புடன் இருந்து முனிவர் தொடங்கிய வேள்விக்கு நேர்ந்த இடையூறுகளைப் போக்கியது. மேலும், அதிக மகிழ்ச்சிக்குக் காரணம் தம் கடமையை ஆற்றியது. என்ன கடமை? நாட்டு நலனுக்காக வேள்விகளைச் செய்யும் மஹர்ஷிகளைக் காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு க்ஷத்ரியனின் கடமையாயிற்றே.

धर्मागमान् धर्मपूरान् ये न रक्षन्ति मानवान् ।
पार्थिवा पुरुषव्याघ्र तेषां पापं हरन्ति ते ॥

தர்மாகமான் தர்ம பரான் யே ந ரக்ஷந்தி மானவான் ।
பார்த்திவா: புருஷ வ்யாக்ர தேஷாம் பாபம் ஹரந்தி தே ॥

மஹாபாரதம்

மிக்க ஈடுபாட்டுடன் அறப்பணி புரியும் பெரியோர்களை அரசர்கள் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அவர்கள் செய்த பாபங்கள்

எல்லாம் அரசனுக்கு வந்து சேருமாம். மேலும் தம் தந்தையான சக்ரவர்த்தியோடு முரண்டு, பிடிவாதமாக வாதாடித் தம்மை அழைத்து வந்தவரல்லவா விஸ்வாமித்திரர்! அத்தகைய முனிவரின் எண்ணத்தை (கோரிக்கையை) முடித்துக் கொடுத்தோம் என்பதில் அதிக மகிழ்ச்சியாம்.

அன்று இரவு முழுவதும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தவர்களாய் ஓரளவு தூங்கி, விடியற்காலையில் விழித்து எழுந்தனர். பொழுதும் விடிந்தது. புனித நீராடி காலை கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு வேள்விச் சாலையில் சூழ்ந்திருந்த முனிவர்களையும், காலை ஹோமத்திற்காக அங்கு எழுந்தருளிய விஸ்வாமித்திரரையும் வணங்கினர். பின்னர் முனிவர் கோமானை நோக்கிப் பேசினர்: ''பக்த சிரோமணியே! உமது கட்டளையைத் தலையாலே ஏற்று நீர் விரும்பியதைச் செய்து முடித்தோம். இன்று யாம் செய்யும் பணி என்கொல்? உமது கட்டளையை மீண்டும் ஏற்று அதைச் செய்யத் தயாரான கிங்கரர்களாக (ஊழியர்களாக) வந்துள்ளோம். உமது விருப்பப்படி உயர்ந்தது தாழ்ந்தது எனும் வேற்றுமையின்றி எந்தப் பணியையும் செய்யும்படி கட்டளையிடலாம். பணியின் தன்மையை ஆராயாது எதையும் செய்யத் தயாராக வந்துள்ளோம்'' என இனிதாகப் பேசினர். இவர்கள் பேசிய மதுரமாகச் செவிகட்கு இனிதாக, பணிவுடையதாக இருந்ததாகவும், அதோடு பேசிய சொற்களும் மென்மையுடையனவாகவும், இனியனவாகவும், உதாரமாயும் அதாவது நற்பயனை விளைவிப்பனவாகவும் இருந்ததாகவும் வால்மீகி கூறியுள்ளார். இக்கருத்தைத் திருக்குறளிலும் காணலாம்.

> பணிவு உடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
> அணி, அல்ல மற்றுப்பிற. குறள் - 95
>
> இனிய உளவாக இன்னாத கூறல்
> கனியிருப்பக் காய் கவர்ந்தற்று. குறள் - 100

''முனிவரே வேள்வியைக் காக்க எங்களைத் தாங்கள் அழைத்து வந்தீர். அப்பணி இனிது முடிந்தது. இனி நாங்கள் அயோத்தி செல்லலாமா?'' எனக் கேட்கவில்லை. ''இப்பணி முடிந்தது. அடுத்து எப்பணி செய்ய வேண்டும்? அதைச் செய்யத் தங்கள் உத்தரவைப் பெறக் காத்திருக்கிறோம்'' என்றனர். இதில் அன்பும் பணிவும் ததும்பிற்று. உலகினர்தம் உடலை அழகு செய்யத் தலையில் தலைப்பாகை, கொண்டை, சிலவகை ஆபரணங்கள், காதுகளில் கடுக்கன், தோடு, மூக்கில் மூக்குத்திகள், கழுத்தில் சங்கிலி, கைகளில் காப்பு வளைகள் முதலியவை, விரல்களில் மோதிரம், இடுப்பில் ஒட்டியாணம், கால்களில் கொலுஸு, காப்பு, மெட்டி ஆகிய ஆபரணங்களை அணிகின்றனர். ஆனால் இரு உயர்ந்த ஆபரணம் இல்லாவிடில் மற்றைய அணிகள் உடலுக்கு அழகூட்டா, என்பர் குறளாசிரியர். அவை எவை? பணிவும் இன்சொல்லும், உடல் முழுவதிலும் பணிவு மிளிர வேண்டும்.

முகத்தில் (வாயில்) புன்னகை தவழ இன்சொல் வெளிவர வேண்டும். இவை இரண்டும் இல்லாவிடில் அவனைத் திமிர் பிடித்தவன், அஹங்காரி, வக்ரமாகப் பேசுபவன், நல்லதே அவன் வாயில் வராது என்று கூறி அவனை, (பல்வகை அணிகளை அவன் அணிந்தவனாய் இருப்பினும்) யாரும் அணுகார். அவன் நகைகளின் அழகு பிறரைக் கவராது. மாறாக அனைவரை யும் ஒதுக்கிவிடும். அனுபவத்தில் யாவரும் அறியும் உண்மை இது. இனிமை யாகப் பேசுபவனாயின் அவனது கோரமான உடலமைப்பை யாரும் பொருட்படுத்தாது இணைந்து பழகுவர். இக்கதாநாயகனோ பூர்வ பாஷீ, ப்ரியபாஷீ, உதாரபாஷீ மரத்தில் இனிப்புள்ள பழுத்த பழங்கள் கைகளால் எட்டிப் பறித்துச் சுவைக்கத்தக்கனவாக இருக்கும் போது எட்டாத கிளை களிலுள்ள புளிக்கும் காய்களை ஏறிப் பறிக்க எவரேனும் முயற்சிப்பரோ? எனவே வாயில் இன்சொல் இருக்க கொடுஞ்சொற்களைப் பேசுவது தகுமோ!

இங்கு ராஜகுமாரர்கள் முனிவரை வணங்கும் பொழுது ''ஊழியர் களாகிய யாம் வந்தோம்'' என்றனர். இவர்களுள் யார் தலைவர் யார் ஊழியர் என்பதை நோக்குங்கால், ராமன் பரமனின் அவதாரம். எனவே அவனே ஸ்வாமி, விஸ்வாமித்திரரோ சேஷன், தாஸன். அதாவது ஊழியன். ராமனை பகவான் என்று அறியாததால் விஸ்வாமித்ரர் இவர்கள் வார்த்தையைக் கேட்டதும் மறுப்புக் கூறாமலிருந்தார் என்று சொல்வதற்கில்லை. "அஹம் வேத்மி மஹாத்மானம்'' என்று ராமனைச் சிறுவனாக நினைத்துக் காட்டிற்கு அனுப்பத் தயங்காதே. அவன் ஸர்வேஸ்வரன், அஞ்சாது என்னோடு காட்டிற்கு அனுப்பும்'', என்று சக்ரவர்த்தியிடம் பேசியிருக்கிறார். உண்மை இப்படியிருக்கப் பரமனாகிய ராமன் தன்னை ஊழியனாக எப்படிப் பேச முடியும்?

விடையாவது: ராமன் பக்திக்கு வஶப்பட்டவன், ''அக்ஷய பாத்திரத்தைக் கொண்டு துர்வாஸரின் கோஷ்டிக்கு அன்னமிட முடிய வில்லையே. அவர் ஶபித்து விடுவாரே'', என திரௌபதி அஞ்சியபோது காட்டிற்கு ஓடோடி வந்து பக்தையைக் கண்ணன் காப்பாற்றினான். ஸ்வாமி தேசிகன் ஶ்ராத்தத்திற்குப் பிரார்த்தித்திருந்த ஸ்வாமிகள் எழுந்தருளாத போது, எம்பெருமானே அந்தணர்களாக வந்து ஶ்ராத்தத்தைப் பூர்த்தி பண்ணினான். நமது வேலைகளைச் செய்ய ஒருவனைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்குகிறோம். அவன் அன்று முழுவதும் நமக்கு ஊழியம் செய்வதில்லையா? அது போன்று பரமனை பக்தியினால் விலைக்கு வாங்கி விடலாம் என்று ப்ரமாணம் கூறுகிறது. ''பக்தி க்ரீத: ஜனார்தன:'' என்று. பீஷ்மர் பரம பக்தர், அவரைப் பற்றிச் சொல்லும் பொழுது கண்ணன்

शरतल्प गतः भीष्मः शाम्यन्निव हुताशनः ।
मां ध्याति पुरुषव्याघ्रः ततः मे तद्गतं मनः ॥

''ஶரதல்ப கத: பீஷ்ம: ஶாம்யன்னிவ ஹுதாஶன: ।
மாம் த்யாதி புருஷவ்யாக்ர: தத: மே தத்கதம் மன: ॥''

பாரதம்

''போர்க்களத்தில் அம்புப்படுக்கையில் பீஷ்மர் படுத்திருக்கிறார். என்னிடமுள்ள பரமபக்தியினால் மஹா தேஜஸ்வியாக விளங்குகிறவர், அணையும் தீப்பிழம்பு போல உயிரை விடக் காத்திருக்கிறார், இந் நிலையிலும் என்னையே நினைத்து யோகத்தில் ஆழ்ந்திருக்கிறார். எனவே என்னுடைய மனமும் அவரையே சார்ந்திருக்கிறது'' என்றார். இதே போன்று விஶ்வாமித்ரர் ராமனையே த்யானித்துக் கொண்டிருக்கும் பரம பக்தரான படியால் இவரைப் பிரியமனமில்லை ராமனுக்கு. ஒரு வேளை முனிவர் ''எனது வேண்டுதலுக்கிணங்கி என் பணியை இனிது முடித்தீர். உங்களுக்கு தந்தையார் இட்ட கட்டளையும் நிறைவேறியது. துணை அனுப்புகிறேன்; அயோத்திக்குப் புறப்படுங்கள். உங்களிடத்தில் என்றும் நன்றியுடையவர் களாவோம்'' என்று நம்மைத் திருப்பி அயோத்திக்கு அனுப்பிவிடுவாரோ என ஐயம் போலும். எனவே ''உபஸ்த்திதௌ'' என்று கூறாமல் ''ஸமுபஸ்த்திதௌ'' எனக்கூறி முனிவரைப் பிரிய இயலாமையை விண்ணப்பித்தாராம்.

சொன்ன வண்ணம் செய்த பெருமாள்

பக்தனும் பரமனும் ஒருவருக்கொருவர் பிரிவை விரும்பாது ஒருவர் விருப்பப்படி மற்றவர் நடந்து கொள்வதையும் ஆழ்வார்கள் வரலாற்றில் காணலாம்.

கணிகண்ணன், திருமழிசை ஆழ்வாரின் பக்தன். இவன் இவ் வாழ்வாரின் திருவருளால் பிறவியைப் பெற்றவன். பின்னரும் ஆழ்வாருக்கே தொண்டு பூண்டு வாழ்ந்து வந்தான். ஆழ்வாரின் ஆச்ரமத்தில் துப்புரவுப் பணி செய்து வந்த ஒரு கிழவி அவரது இன்னருளால் முதுமை நீங்கி யுவதி யானாள். அவள் அழகில் மயங்கிய பல்லவ அரசன் அவளை மணந்து ராணியாக்கிக் கொண்டான். ராணியைப் போன்று நாமும் யுவனாக இருந் தால் தானே பொருந்தும் என எண்ணி தன் அரண்மனைக்கு வரும் கணி கண்ணனைப் பார்த்து ''கிழவிக்கு இளமையை அருளியதைப் போல எனக்கும் இளமை வரும்படி ஆழ்வாரிடம் சொல்லிப் பாடுமாறு விண்ணப் பிக்கப் பிரார்த்திக்கிறேன்'' என்றான்.

கணிகண்ணன் : ''அரசே! திருமழிசையார் பரமனைப் பாடும் வாயால் நரனைப் பாடார்'' என்றான்.

அரசன்: ''கணிகண்ணா! நீரோ பரமனிடமும் ஆழ்வாரிடமும் பக்தி பூண்டவர். அவ்விருவர்களையும் பிரார்த்தித்து எனக்கு இளமை வரும்படி நீரே பாடும்.''

கணிகண்ணன்: ''அரசே யான் என் வாய் கொண்டு மானிடம் (மனிதனைப்) பாட வந்தவன் அல்லன்.''

அரசன்: ''நீர் மானிடர் பற்றிப் பாட வேண்டாம். நானோ அரசன். அரசனைத் திக்பாலகர்களான தேவர்களின் அம்சமாகவும், சாஸ்த்ரம் பகரும். எனவே அரசனைப் பாடுவது திருமால் தொண்டர்க்கு இழுக்கல்லவே என்றான்.'' கணிகண்ணன் பாட மறுக்கவே, கணிகண்ணனைத் தன் நாட்டை விட்டு வெளியேறும்படி உத்திரவிட்டான்.

உடனே கணிகண்ணன் ஆழ்வாரிடம் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறிக் காஞ்சியைவிட்டுப் புறப்பட்டான். சீடனை விட்டுப் பிரிய மனமில்லாத ஆழ்வாரும் புறப்பட்டார். புறப்படும்போது, தாம் போற்றியுகக்கும் துயில் கொண்ட பரமனிடம் சென்று அடிபணிந்து:

கணிகண்ணன் போகின்றான், காமரு பூங்கச்சி
மணிவண்ணா! நீ கிடக்கவேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன். நீயும் உன்தன்
பைந்நாகப் பாய்ச் சுருட்டிக்கொள்.

பழம்பாடல்

என்று விண்ணப்பித்தார். முன்னே கணிகண்ணன் போக, சீடனைப் பக்திஸாரர் தொடர, பக்தனைப் பிரிய மனமில்லாது வைகுண்டநாதனும் தம் படுக்கையாம் ஆதிசேஷனோடும் பரிவார தேவதைகளோடும் காஞ்சிக்கு வெளியே சென்றனர். கச்சியம்பதியும் ராமனில்லா அயோத்தி போன்று பொலிவிழந்து, பிணிகள் மண்டி வறுமை மிகவாடியது. பல்லவனும் பின்னர் உண்மையை உணர்ந்து தன் தவறுக்கு வருந்தி, ஓடிச் சென்று கணிகண்ணன் அடிபணிந்து இரந்து மன்னிப்புக் கேட்க, அவனும் அரசனுக்கு இரங்கி, ஆழ்வாரிடம் விண்ணப்பிக்க, திருமழிசையாரும் வைகுண்டசோதியைச் சரணடைந்து,

''கணிகண்ணன் போக்குஒழிந்தான், காமருபூங்கச்சி
மணிவண்ணா! நீ கிடக்கவேண்டும் - துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கு ஒழிந்தேன், நீயும் உன்
பைந்நாகப் பாய்ப்படுத்துக் கொள்.''

பழம்பாடல்

என வேண்ட, அனைவரும் காஞ்சிபுரத்திற்கே திரும்ப எழுந்தருளினர். இப்பரமனை, ''யதோக்தகாரிப் பெருமாள்'' என்றும் ''சொன்ன வண்ணம் செய்த பெருமான்'' என்றும் வழங்கி வணங்குகின்றோம்.

மேலும் திருமழிசை ஆழ்வார் செந்நெல் கவரிவீசும் செழுநீர் திருக்குடந்தையுள் கிடக்கும் ஆராவமுதனை ஸேவிக்க மனங்கொண்டார். நினைத்தவளவிலே அவர் உடலும் நீராய் அலைந்து கரைய உருகிற்று. நேரே குடந்தை சென்றார். செந்தாமரைக் கண்ணனைத் தொழுதார். அவன்

தாளிணைக் கீழ் அமர்ந்து அழுது ஆடிப்பாடி அரற்றினார். அவ்வமுதம் அகத்திலே தித்திக்கக் கட்டி அணைக்க விரும்பிப் பேசினார்.

நடந்த கால்கள் நொந்தவோ, நடுங்குஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ விலங்குமால் வரைச் சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்த ஆறு? எழுந்திருந்து பேச, வாழி கேசனே

திருச்சந்த விருத்தம்

ஆராவமுதா! நீ ஏன் பள்ளி கொண்டிருக்கிறாய்? ராமாவதாரத்தில் பல்லாண்டுகள் காடுகளில் நடந்த ச்ரமம் தீரப்படுத்தாயோ? அல்லது அதற்கு முன் வராஹாவதாரத்தில் பாதாளத்தில் அமிழ்ந்த பூமியை இடந்து மேலே கொணர்ந்த ஶ்ரமம் தீர ஶயனித்தாயோ? ஶ்ரமத்தைப் போக்கிக் கொள்ள வாய்க்கால்கள் பலவோடு பரந்து பாயும் காவிரிக் கரையில் குளிர்ச்சியும், இளங்காற்றும் நிறைந்திருப்பதால் இளைப்பாறுகிறாய் போலும்! உன்னைத் தேடி உனது பக்தன், தொண்டன் வந்திருக்கிறானே, எழுந்து பேசக் கூடாதோ?'' என்றார்.

உடனே அமுதனும் எழுந்தார். சிறிது எழுந்த நிலையின் அழகைக் கண்டதும் ''போதும் போதும், அப்படியே ஸேவை ஸாதிக்கவேண்டும்'' எனப் பிரார்த்தித்து, அந்நிலைக்கு வாழி என வாழ்த்துப் பாடினார். இன்றும் உத்தான ஶாயியாகவே ஸேவை ஸாதிக்கிறார் ஆராவமுதன்.

एवमुक्तः ततः ताभ्यां सर्वे एव महर्षयः ।
विश्वामित्रं पुरस्कृत्य रामं वचनं अब्रुवन् ॥
मैथिलस्य नरश्रेष्ठ जनकस्य भविष्यति ।
यज्ञः परम धर्मिष्ठः तस्य यास्यामहे वयम् ॥
त्वं चैव नरशार्दूल सहास्माभिः गमिष्यसि ।
अद्भुतं च धनूरत्नं तत्र तत् द्रष्टुमर्हसि ॥

ஏவமுக்த: தத: தாப்யாம் ஸர்வே ஏவ மஹர்ஷய: ।
விஶ்வாமித்ரம் புரஸ்க்ருத்ய ராமம் வசனம் அப்ருவன் ॥
மைதிலஸ்ய நரஶ்ரேஷ்ட! ஜனகஸ்ய பவிஷ்யதி ।
யஜ்ஞ: பரம தர்மிஷ்ட: தஸ்ய யாஸ்யாமஹே வயம் ॥
த்வம்சைவ நரஶார்தூல! ஸஹஅஸ்மாபி: கமிஷ்யஸி ॥
அத்புதம் ச தனூரத்னம் தத்ர தத் த்ரஷ்டும் அர்ஹஸி ॥

வா.ரா. பால. 31

''ஹழியர்கள் வந்தோம். மேலும் ஏவலைச் செய்யக் காத்திருக் கிறோம்'' என்றனர் ராஜகுமாரர்கள். உடனே விஶ்வாமித்ரரும், மற்ற முனிவர்

களும் ஒருமித்த கருத்தினராய் ''மிதிலை மன்னனாகிய ஜனகர் வேள்வியை அனுஷ்டிக்கப் போகிறார். அவ்வேள்விக்கு நாங்கள் அனைவரும் போகப் போகிறோம்'' என்றனர். ராமன், ''நாங்கள் இருவரும் ஆறு நாட்கள் உங்கள் யாகத்தைப் பார்த்தாகிவிட்டது. ஸித்தாஶ்ரமத்தில் யாரும் இல்லாததால் உங்களுக்குச் செய்ய வேண்டிய பணி ஏதும் இல்லை. எனவே நாங்கள் அயோத்தி செல்கிறோம்'' என்றான்.

முனிவர்: ''ராமா! ஜனகர் வேள்வி, யான் இயற்றியது போன்றது அன்று. அவ்வேள்வி மிக உயர்ந்தது. யான் இயற்றியது நித்யகர்மாவில் அடங்கும். ஜனகருடையதோ பகவத் கைங்கர்ய ரூபமானது; பரம தர்மிஷ்ட மானது, அதாவது எல்லையற்ற பெருமையை-அதிசயத்தை உடையது. அதைப் பார்க்க நீ அவஶ்யம் வரவேண்டும். மேலும் மிதிலை அரண்மனை யில் உயர்ந்த தனுஸ் (வில்) இருக்கிறது. அதைப் பார்க்க நீ வரவேண்டும். (அதை தனுஸ் என்னாமல் தனூரத்னம்,) என்றார். 'உன் கோதண்டத்தை விட அத்புதமானது' என்றார். அத்புதம் ஆச்சர்யத்தை விளைவிப்பது, அவதார கார்யத்திற்கு மிக முக்யமானது. அதுதான் ஸீதா (உன்) கல்யாணத்திற்கு வித்திடப் போகிறது. மேலும் தனூரத்னம் ஸீதா ரத்னத்தைக் கொடுக்கும். அஹல்யா ஶாப விமோசனம், பரசுராமரிடமிருந்து வைஷ்ணவ தனுஸ்ஸைப் பெறுதல் முதலிய அவதார கார்யத்திற்குத் தேவையானவை பல இருப்பதை மனதிற்கொண்டு மிதிலைக்கு அழைத்தார். ராமன் வீரனானபடியால், ரத்னம் போன்ற வில் அத்புதமான வில் என்று கூறி உணர்ச்சியைத் தூண்டினார் போலும்.

ராமன் ஆற்றவேண்டிய பணிகள் பல. அவற்றை ''தனூரத்னம் ச'' என்று ''ச'' சொல்லினால் வால்மீகி உணர்த்தியதைக் கம்பர் சற்று விரித் துரைக்கிறார்.

அரிய யான் சொலின் ஐய! நிற்கு அரியது ஒன்றுஇல்லை
பெரிய காரியம் உள அவை முடிப்பது பின்னர்
விரியும் வார் புனல் மருதம் சூழ் மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியும் காண்டும் நாம் எழுக என்று போனார்.

க.ரா. பால.-வேள்வி

முனிவர் ''ராமா! இனி உனக்குச் செயற்கரிய பணிகள் பல காத்திருக் கின்றன. அவை என் கருத்தில் அரியனவாயினும் உன்னால் செய்ய முடியாதது எதுவுமே இல்லை. நீ செய்ய வேண்டிய பெருந்தொழில்கள் (ராவணவதம் முதலியன) சில உள. அவற்றுக்கு இப்பொழுது அவசரமில்லை. எனினும் நீ ஒரு முனிவன் இயற்றிய வேள்வியைப் பார்த்தாய், அயோத்தி போன்று நீர் வளமும், நிலவளமும் பொருந்திய மிதிலை நாட்டில் ஒரு அரசன் செய்யும் வேள்வியைப் பார்ப்பதும் உசிதம் தானே! புறப்படு போவோம்'' என்றார்.

முனிவரின் நோக்கம்

விஸ்வாமித்ரர் தான் செய்ய வேண்டிய ஒரு பெரிய காரியம் அவர் மனதை பன்னாட்களாக உறுத்திக் கொண்டிருக்கிறது. அதையே 'பெரிய காரியம் என்கிறார்' என்றும் கொள்ளலாம். முனிவர் தசரதரிடம் ராமனை வேண்டும் போது யாகத்தைக் காப்பதற்காக எனக் கேட்கவில்லை. வால்மீகத்தில் ''அஹம் நியமம் அதிஷ்டே'' என்றார். நியமம் என்றால் விரதம் என்று பொருள். ஒரு பயனைப் (பலத்தை) பெறுவதற்காக விரதம் செய்யப் போகிறேன் என்றார். வஸிஷ்டரும் ஞான திருஷ்டியால் நிகழப்போவதை அறிந்து ''தவபுத்ரஹிதார்த்தாய'' உன் புதல்வன் ராமனின் நன்மைக்காகவே ராமனை முனிவர் கேட்பதாகச் சொல்வதிலிருந்து தன் நன்மைக்காகக் கேட்கவில்லை என்பதும் உறுதி யாகிறது. கம்பரும் ''யான் செய்யும் தவவேள்விக்கு'' என்றார். தவமும் விரதம் தான். இங்கு முனிவரின் விரதம் என்ன எனப்பார்ப்போம். விஸ்வாமித்ரருக்கு, தான் செய்த பாபங்களுக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டிய நியதி ஏற்பட்டிருக்கிறது.

இவர் ரகுகுல சக்ரவர்த்தியாயிருந்த ஹரிச்சந்திரனை என்ன பாடு படுத்தினார். புருஷனையும் பத்னியையும் பிரித்தார், நாடு இழக்கச் செய் தார். சந்திரமதியின் புதல்வன் லோஹிதாஸனை இறக்கச் செய்தார். சக்ர வர்த்தியாக இருந்தவனைக் காசியில் ஒரு புலையனுக்கு அடிமையாக்கினார். தகாத வேலைகளைச் செய்யும் சூழ்நிலையை உருவாக்கினார். உண்மையில் இவை அனைத்தும் ஹரிச்சந்திரனின் வாய்மையை, ஸத்யம் தவறாமையை உலகுக்கு எடுத்துக் காட்டத்தான் செய்தார். எனினும் முனிவரின் மனம் சாந்தியை (நிம்மதியை) அடையவில்லை. மனச்சாந்தியைப் பெறவேண்டி அவன் குலத்துதித்த (ராமனுக்கு) ஒருவனுக்காவது கல்யாணம் நடத்தி வைக்க விரதம் பூண்டார்.

திருமலையில் கல்யாணோத்ஸவம் செய்யப் பிரார்த்தித்துக் கொள்வதில்லையா? தசரதர் ''சிந்தயாமாஸ தர்மாத்மா தேஷாம் தார க்ரியாம்ப்ரதி'' புதல்வர்கட்குக் கல்யாணம் பண்ண மனதில் தசரதர் எண்ணி னார். இதை ஞான த்ருஷ்டியினால் அறிந்து ஓடோடியும் வந்தார். ஏகபத்னி விரதம் உடைய ராமனுக்கு வேறு யாராவது பெண் கொடுக்க நிச்சயதார்த்தம் செய்துவிட்டால் இவர் எண்ணம் நிறைவேறாதே! ஆகவே தான், விரைந்து வந்து பிடிவாதமாக ராமனை அழைத்து வந்தார். ஆகவே தான், வேள்வியைக் காக்க என்று கேட்கவில்லை. அப்படிக் கேட்டிருந்தால் வேள்வி இனிது முடிந்ததும் சொன்ன சொல் தவறாமைக்காக இவர்களை அயோத்தி சென்று சக்ரவர்த்தியிடம் நன்றிகூறி ஒப்படைக்க வேண்டுமே ஒழிய மிதிலைக்கு அழைத்துச் செல்ல உரிமையில்லை அல்லவா!

மிதிலையை நோக்கி

तद्धि पूर्वं नरश्रेष्ठ दत्तं सदसि दैवतैः ।
अप्रमेय बलं घोरं मखे परम भास्वरम् ।
नास्य देवाः न गन्धर्वाः नासुराः न च राक्षसाः ।
कर्तुम् आरोपणं शक्ताः न कथंचन मानुषाः ।
न शेकुः आरोपयितुं राजपुत्राः महाबलाः ।
प्रदक्षिणं ततः कृत्वा सिद्धाश्रमं अनुत्तमम् ।
उत्तरां दिशमुद्दिश्य प्रस्थातुं उपचक्रमे ।

தத்ஹி பூர்வம் நர ச்ரேஷ்ட! தத்தம் ஸதஸி தைவதை: ।
அப்ரமேய பலம் கோரம் மகே பரம பாஸ்வரம் ॥
நாஸ்ய தேவா: நகந்தர்வா: நாஸுரா: நச ராக்ஷஸா: ।
கர்த்தும் ஆரோபணம் ஶக்தா: ந கதம்சன மானுஷா: ॥
ந ஶேகு: ஆரோபயிதும் ராஜபுத்ரா: மஹா பலா: ॥
ப்ரதக்ஷிணம் தத: க்ருத்வா ஸித்தாஶ்ரமம் அனுத்தமம் ।
உத்தராம் திஶம் உத்திச்ய ப்ரஸ்தாதும் உபசக்ரமே ॥

வா. ரா. பால - 31.

''முன்பு ஒரு ஸமயம் த்ரிபுர ஸம்ஹாரத்திற்காக தேவர்கள் விஶ்வகர்மாவை அணுகி சிறந்த வில் ஒன்றை வடித்துத்தரச் சொன்னார்கள். பின் அவ் வில்லைச் சிவனாரிடம் கொடுத்தனர். சிவனுக்கும் மஹா விஷ்ணுவுக்கும் இடையே வலிமை மிக்கவர் யார், என்பது பற்றி பரீக்ஷை நடந்தது. அப்பொழுது மஹாவிஷ்ணு அவ்வில்லைத் தன் காலால் மிதித்து அதை வலிமையிழக்கும்படி செய்தார். சிவன் தேவர்களின் வேண்டுகோளுக் கிணங்க அவ்வில்லை தேவராதனிடம் கொடுத்தார்.

அன்று முதல் வைப்பு நிதி போன்று ஜனகரின் முன்னோர்களால் பாதுகாக்கப்பட்ட வில் முறையாக ஜனகருக்கு வருகிறது. இதன் வலிமை இயம்புதற்கு அரிது. இதை நாணேற்றிக் காட்ட தேவர்களோ, கந்தர்வர்களோ, அஸுரர்களோ, அரக்கர்களோ வலிமையற்றவர்கள். மனிதர்கள் எம்மாத்திரம்! வலிமை மிகுந்த பல ராஜகுமாரர்கள் நாணேற்ற முயன்றும், திறனற்றுத் திரும்பினார்கள்,'' என்று வில்லின் கதையை, இராமனின் உணர்ச்சியை - வீரத்தைத் தூண்டும் படி முனிவர்கள் கூறினர். உடனே மாவீரனான ராமன் அதைப் பார்க்க எண்ணிப் புறப்பட, அனைவரும் புறப்பட்டனர். வாமனாவ

தார க்ஷேத்ரமான ஸித்தாஸ்ரமத்தை வலம் வந்து வடதிசையை நோக்கிப் புறப்பட்டனர்.

प्रासादं देवदेवीयं आचार्यं पाञ्चरात्रिकम् ।
अश्वत्थं च वटं धेनुं सत्समूहं गुरोः गृहम् ।
दूरात् प्रदक्षीणी कुर्यात् निकटे प्रतिमां हरेः ।
मृदं गां दैवतं विप्रं घृतं मधु चतुष्पदम् ।
प्रदक्षिणानि कुर्वीत सदैव च वनस्पतीन् ।

ப்ரஸாதம் தேவதேவீயம் ஆசார்யம் பாஞ்சராத்ரிகம் ।
அஶ்வத்தம் ச வடம் தேனும் ஸத்ஸமூஹம் குரோ: க்ருஹம் ॥
தூராத் ப்ரதக்ஷிணீகுர்யாத் நிகடே ப்ரதிமாம் ஹரே: ॥
ம்ருதம் காம் தைவதம் விப்ரம் க்ருதம் மது சதுஷ்பதம் ।
ப்ரதக்ஷிணானி குர்வீத ஸதைவச வனஸ்பதீன் ॥

தேவதேவோத்தமனான எம்பெருமானுடைய திருக்கோயில்கள், பரமனை வழிபடும் முறைகளையும், அதற்கான மஹாமந்த்ரங்களையும் உபதேசிக்கும் ஆசார்யர்கள், அரசு, ஆல் போன்ற சிறந்த மரங்கள், பசு, ஸத்துக்கள் (ஸாதுக்கள், பெரியோர்கள்), ஆசார்யனின் திருமாளிகை, வைதிக கார்யங்களுக்காக மந்த்ர பூர்வமாக எடுத்து வைக்கப்பட்ட ம்ருத் (மண்), அந்தணர், நெய், தேன், நான்கு வழிகள் பிரியும் இடம் ஆகியவற்றை எப்பொழுதும் வலமாக-ப்ரதக்ஷிணமாகச் செல்ல வேண்டும் எனும் விதிகட்கிணங்க வாமனாச்ரமத்திற்கு வலமாகச் சென்றனராம்.

निवर्तयामास ततः पक्षिसङ्घान् मृगानपि ।
ते गत्वा दूरमध्वानं लम्बमाने दिवाकरे ।
वासं चक्रुः मुनिवराः शोणाकूले समागताः ।

நிவர்த்தயாமாஸ தத: பக்ஷிஸங்கான் ம்ருகான் அபி ॥
தே கத்வா தூரம் அத்வானம் லம்பமானே திவாகரே ।
வாஸம் சக்ரு: முனிவரா: ஶோணா கூலே ஸமாகதா: ॥

வா.ரா. பால. - 31

மனிதனுக்குத் தேவையான எட்டுவகை ஆத்ம குணங்களில் முதன்மை யாகச் சொல்லப்படுவது ஸர்வ பூததயை. 'உயிரினங்கள் அனைத்திடமும் கருணை காட்ட வேண்டியது 'மனித இனத்தின் கடமை', என கௌதம ஸூத்ரம் நமக்கு அறிவுறுத்துகிறது.

''அருட் செல்வம் செல்வத்துள் செல்வம்''
''அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை''

''அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை''
''அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள் சேர்ந்த
இன்னா உலகம்''

குறள் 241, 243, 245, 247

பிறர் துன்புறுவதைக் காணப் பொறுக்காது அனைத்து உயிரிடத்தும் கருணை காட்டுவதே மனிதனுக்குப் பெரும் செல்வமாகும். பிறரிடம் நாம் காட்டும் கருணையே நமது அல்லல்களை (துன்பங்களை)ப் போக்கும், கருணையின்றேல் சுவர்க்கமும் இல்லையாம். கருணை காட்டுபவர் ஒரு நாளும் நரகம் புகார் என்று பொய்யா மொழி பேசும். ஆஸ்ரமங்களில் தம்முடன் வாழும் பல்வகைப் பிராணிகளிடமும் கருணை நோக்கும், உதவும் பான்மையுமுள்ள முனிவர்கள் புறப்படவே அப்பிராணிகள் அனைத்தும் தம்மை நேசித்தவர்களோடு கூடவே புறப்பட்டனவாம். அவ்வாறு புறப்பட்ட பறவை இனங்களையும், பசு, மான் போன்ற விலங்குகளையும் ஆறுதல் கூறித் தேற்றி, தடவிக் கொடுத்து ஆச்ரமத்திற்குத் திருப்பி அனுப்பி விட்டு நீண்ட தூரம் நடந்து சென்று மதியம் பொழுதில் சோணா நதிக்கரையில் இளைப்பாறினார்.

காட்டின் அழகு இராமனை மிகக் கவர்ந்தது. ''இந்நாட்டை ஆளும் அரசன் யார்?'' என வினவினான். இளம் பருவம் அறிவு வளரும் பருவம், சிறுவர்கள் பெற்றோர்களைக் கேள்வி கேட்ட வண்ணம் இருப்பர். சிலர் பதில் கூறாது 'என்ன தொணதொணப்பு?' என சீறுவர், சிறார்கட்குத் தினவு அடங்க பதில் கூற வேண்டும். இல்லையேல் அறிவு மழுங்கும், வளராது. இதை உணர்ந்த முனிவர் அந்நாட்டின் வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

பித்ரு பக்தியும், பொறுமையும்

ब्रह्मयोनिः महानासीत् कुशः नाम महातपाः ।
अक्लिष्ट व्रतधर्मज्ञः सज्जन, प्रतिपूजकः ॥
वैदर्भ्यां जनयामास सदृशान् चतुरः सुतान् ।
कुशाम्बं कुशनाभं च आधूर्तरजसं वसुम् ।
क्रियतां पालनं पुत्राः धर्मं प्राप्स्यथ पुष्कलम् ।
कुशनाभस्तु राजर्षिः कन्या शतं अनुत्तमम् ।
जनयामास धर्मात्मा घृताच्यां रघुनन्दन ।

ப்ரஹ்மயோனி: மஹான் ஆஸீத் குச: நாம மஹாதபா: ।
அக்லிஷ்ட வரத தர்மக்ஞ: ஸஜ்ஜன ப்ரதி பூஜக: ॥
வைதர்ப்யாம் ஜனயாமாஸ ஸத்ருஶான் சதுர: ஸுதான் ॥

குசாம்பம் குசுநாபம்ச ஆதூர்த்தரஜஸம் வஸுும்
க்ரியதாம் பாலனம் புத்ரா: தர்மம் ப்ராப்ஸ்யத புஷ்கலம்
குசநாபஸ்து ராஜர்ஷி: கன்யா சதம் அனுத்தமம் ॥
ஜனயாமாஸ தர்மாத்மா க்ருதாச்யாம் ரகுநந்தன ॥

வ.ரா.பால.-32

''குஸர் என்று ஒரு மஹாராஜா இருந்தார். இவர் நாரதரைப் போன்று பிரமனின் குமாரர். தேவலோகத்திலேயே தங்காமல் ப்ரஜாபாலனத்திற்காக பூமிக்கு வந்துவிட்டபடியால் குஸர் என (காரண)ப் பெயர் அமைந்தது. க்ஷத்திரியரின் தொழிலில் ஈடுபட்டபடியால் க்ஷத்ரியர் ஆனார். இவர் மஹா தபஸ்வீ; யாகாதி கர்மாக்களையும் அனுஷ்டித்து வந்தார். மனைவி வைதர்பீ. இவர்கட்கு நான்கு குமாரர்கள். குஸாம்பன், குஸநாபன், ஆதூர்தரஜஸன், வஸு. எல்லோரும் அரசியலை விரும்பினர்; உண்மை பேசினர்; அறவழி நின்றனர். தந்தையின் அனுமதி பெற்றுத் தனித்தனியாக ராஜதானியை அமைத்துக் கொண்டனர். அவை முறையே கௌஸாம்பீ, மஹோதயம், தர்மாரண்யம், வஸுமதீ என அழைக்கப்பட்டன. ராமா! இதோ ஐந்து மலைகள் தெரிகின்றன பார்! அவைகட்கிடையே மகத நாட்டினின்றும் மாலை போல் பெருகி ஓடிவரும் இந்த நதிக்கு சோணா என்று பெயர். இந்நதி வஸுமதீ ராஜதானியின் கீழ்ப்புறமாக ஓடுவதால் நாடும் காடும் மிகச் செழிப்புள்ளதாக இருக்கிறது.''

''குசரின் இரண்டாவது பிள்ளையான குஸநாபன் கௌஸாம்பியை ஆண்டு வந்தான். இவருடைய மனைவி க்ருதாசீ, இவ்வரசதம்பதிகட்கு நூறு பெண்கள், இவர்கள் யௌவனப் பருவம் எய்தினர். இயற்கையாகவே அழகு வாய்ந்தவர்கள், மேலும் தங்களை ஆடை அணிகளால் ஒப்பனை செய்து கொண்டு உத்யானத்திற்குச் சென்றனர். பசுமை மிகும் பூங்காவில் மழை காலத்து மின்னல்கள் போல் விளங்கினர். ஆடியும் பாடியும் இசைக் கருவி களை இசைவித்தும் மகிழ்ச்சி பொங்க பொழுது போக்கினர். அனைவரை யும் வாழ்விக்கும் வாயு தேவன் அங்குவந்தான். இவர்களின் நற்குணங்களை யும், நற்பண்புகளையும் நிகரற்ற அழகையும், இசை, நாட்டியம் அனைத்தை யும் கூர்ந்து கவனித்தான், மயங்கிப் பேசலுற்றான்.

ताः सर्वाः गुण सम्पन्नाः रूपयौवन संयुताः ।
दृष्ट्वा सर्वात्मकः वायुः इदं वचनं अब्रवीत् ।
अहं वः कामये सर्वाः भार्याः मम भविष्यथ ।
मानुषः त्यज्यतां भावः दीर्घं आयुः अवाप्स्यथ ।
चलं हि यौवनं नित्यं मानुषेषु विशेषतः ।
अक्षयं यौवनं प्राप्ताः अमर्यः च भविष्यथ ।

தா: ஸர்வா: குண ஸம்பன்னா: ரூப யௌவன ஸம்யுதா: ।
த்ருஷ்ட்வா ஸர்வாத்மக: வாயு: இதம் வசனம் அப்ரவீத் ॥
அஹம் வ: காமயே ஸர்வா: பார்யா: மம பவிஷ்யத ।
மானுஷ: த்யஜ்யதாம் பாவ: தீர்க்கம் ஆயு: அவாப்ஸ்யத ॥
சலம் ஹி யௌவனம் நித்யம் மானுஷேஷு விஶேஷத: ।
அக்ஷயம் யௌவனம் ப்ராப்தா: அமர்ய: ச பவிஷ்யத ॥

வா. ரா. பால. - 32

''அரசகுமாரிகளே, உங்கள் அனைவரையும் நான் என் மனைவிகளாகக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் எனக்கு மனைவிகளானால் மனிதத் தன்மை நீங்கி தேவத்தன்மையைப் பெறுவீர்கள். நீண்ட ஆயுளைப் பெற்று சாகா வரம் பெறுவீர்கள். நீங்கள் அழகு, யௌவனப் பருவம், எல்லாம் மாற்றமில்லாது வாழ்வீர்கள். நீவிர் மனிதர்களை மணந்தால் இவை நிலைத்து நிற்கா. சில்லாண்டுகளில் கிழப்பருவம் உங்களை அணைத்துக் கொண்டுவிடும்'' என்றான்.

प्रभावज्ञाः स्म ते सर्वाः किमस्मान् अवमन्यसे ।
कुशनाभ सुताः सर्वाः समर्थाः त्वां सुरोत्तम ॥
स्थानात् च्यावयितुं देवं रक्षामः तु तपः वयम् ।
पिता हि प्रभुरस्माकं दैवतं परमं हितः ।
यस्य नः दास्यति पिता स नः भर्ता भविष्यति ।

ப்ரபாவ ஜ்ஞா: ஸ்ம தே ஸர்வா: கிம் அஸ்மான் அவ மன்யஸே ॥
குசநாப ஸுதா: ஸர்வா: ஸமர்த்தா: த்வாம் ஸுரோத்தம! ।
ஸ்த்தானாத் ச்யாவயிதும் தேவம் ரக்ஷாம: து தப: வயம் ॥
பிதாஹி ப்ரபு: அஸ்மாகம் தைவதம் பரமம் ஹித: ।
யஸ்ய ந: தாஸ்யதி பிதா ஸ: ந: பர்தா பவிஷ்யதி ॥

வா. ரா. பால. - 32

पिता रक्षति कौमारे भर्ता रक्षति यौवने ।
पुत्रास्तु स्थाविरे भावे न स्त्री स्वातन्त्र्यं अर्हति ।

பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவனே ।
புத்ரா: து ஸ்த்தாவிரே பாவே நஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யம் அர்ஹதி ॥

மனுஸ்ம்ருதி

பெண்கள் நூற்றுவரும் ஒரே குரலில் பேசினர்: ''வாயு பகவானே! நாங்கள் நும் பெருமைகள் அனைத்தையும் அறிவோம். உயிரினங்களை வாழ்விக்கும் பிராண வாயுவாக நீர் திகழ்கிறீர். நீர் இல்லாவிடில் யாரும் உயிர் வாழ முடியாது. எனினும் நீர் எங்களை அவமதிப்பது தகாது. நாங்கள் யார்

தெரியுமா? பிரமனின் பேரனாகிய குசநாபரின் புதல்விகள், தவ வலிமை பெற்றவர்கள். உம்மை வாயு தேவப் பதவியிலிருந்து அகற்றும் திறன் எங்களுக்கு உண்டு. நாங்கள் சுயம்வரத்தை விரும்பவில்லை. ஏன்? தந்தை தான் எங்களுக்கு ஸ்வாமி, தந்தையே எங்கள் பரதேவதை. அவர் பார்த்து எவருக்கு மணம் முடிப்பாரோ அவரையே எங்கள் கணவனாகப் பெறு வோம். இது உறுதி'' என்றனர். (அப்பொழுது கலியுகமில்லை. அது த்ரேதாயுகமானாலும், ராமாவதாரத்தின் சிறப்பால் சிறந்த க்ருதயுகமாகவே நடமாடிய காலமாகையால் வேதங்களிலும், ஸ்ம்ருதிகளிலும் கூறியுள்ளபடி செயல்கள் நடந்தன. பெண்களும் பெரியோர்களுக்குக் கட்டுப்பட்டிருந்தனர்.)

பெண்களை பால்யத்தில் தந்தை காப்பாற்றுவார். யௌவனப் பருவத்தில் கணவன் காப்பாற்றுவான். முதுமையில் மகன் காப்பாற்றுவான். எனவே ஆண்கள் போன்று பெண்களுக்குச் சுதந்திரம் கிடையாது என மனுஸ்மிருதி பகரும்.

तासां तद्वचनं श्रुत्वा वायुः परम कोपनः ।
प्रविश्य सर्वगात्राणिबभञ्ज भगवान् प्रभुः ।
किमिदं कथ्यतां पुत्र्यः कः धर्मं अवमन्यते ।
कुब्जाः केन कृताः सर्वाः वेष्टन्त्यः न अभिभाषथ ।
क्षान्तं क्षमवतां पुत्र्यः कर्तव्यं सुमहत् कृतम् ।
ऐकमत्यं उपागम्य कुलं च अवेक्षितं मम ।
अलंकारो हि नारीणां क्षमातु पुरुषस्य वा ।
क्षमा दानं क्षमा सत्यं क्षमा यज्ञः च पुत्रिकाः ।
क्षमा यशः क्षमा धर्मः क्षमया विष्टितं जगत् ॥
मन्त्रज्ञः मन्त्रयामास प्रदानं सह मन्त्रिभिः ।

தாஸாம் தத்வசனம் ஶ்ருத்வா வாயு: பரம கோபன: ।
ப்ரவிஶ்ய ஸர்வகாத்ராணி பபஞ்ஜ பகவான் ப்ரபு: ॥
கிம் இதம் கத்யதாம் புத்ர்ய: க: தர்மம் அவமன்யதே ।
குப்ஜா: கேன க்ருதா: ஸர்வா: வேஷ்டந்த்ய: ந அபிபாஷத ॥
க்ஷாந்தம் க்ஷமவதாம் புத்ர்ய: கர்த்தவ்யம் ஸுமஹத் க்ருதம் ।
ஐகமத்யம் உபாகம்ய குலம் ச அவேக்ஷிதம் மம ॥
அலங்கார: ஹி நாரீணாம் க்ஷமா து புருஷஸ்ய வா ॥
க்ஷமா தானம் க்ஷமா ஸத்யம் க்ஷமா யஜ்ஞ: ச புத்ரிகா: ।
க்ஷமா யஶ: க்ஷமா தர்ம: க்ஷமயா விஷ்டிதம் ஜகத் ॥
மந்த்ரக்ஞ: மந்த்ரயாமாஸ ப்ரதானம் ஸஹ மந்த்ரிபி: ।

வா. ரா. பால. - 32, 33.

வாயு தேவனை, கோபம் ஆட்கொண்டது. சிறுமிகளின் சொற்களால் மேலும் வளர்ந்தது. உடனே அவர்களின் உடலில் புகுந்தான். அவர்களின் உள் உறுப்புக்களை ஒடித்துச் சிதற அடித்துச் சென்றான். யௌவனப் பருவம் இருந்த உடலில் கிழப் பருவம் தாண்டவமாடியது. முகத்தின் கவர்ச்சி மறைந்தது. கவலை குடியேறியது. பேச்சில் மிடுக்கு இல்லை. அழகிய பெண்கள் கூனிகளாயினர். அந்தோ பரிதாபம்! மதிமயங்கி, கண்ணீரும் கம்பலையுமாய் தட்டுத் தடுமாறி அரண்மனை சென்று தரையில் விழுந்தனர்.

குசநாபர் தம் பெண்களின் அவல நிலையைப் பார்த்துப் பிரமித்துப் போனார். தியான நிலையைக் கைக்கொண்டு ஞான த்ருஷ்டியால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை விபரமாக அறிந்து பேசலுற்றார். ''பெண்களே! நீங்கள் அனைவரும் ஒருமுகமாக நம் குலத்தின் பெருமையைக் காத்தீர்கள். தேவனான வாயு வேண்டியும் நீங்கள் தளரவில்லை. உங்கள் அழகையும் மேனியையும் உருக்குலைத்தான். ஆயினும் மனம் நொந்து கோபமுற்று அவரைச் சபிக்காமலிருந்தீர்கள். என்னே உங்கள் பொறுமை! பெண்ணுக்கும் ஆணுக்கும் பொறுமை தான் அணி. தானம், ஸத்யம், வேள்வி, புகழ், தர்மம், எல்லாம் பொறுமையில் (க்ஷமையில்) அடங்கியிருக்கிறது. பொறுத்தவர் பூமி ஆள்வார். உங்கள் பொறுமைப் பண்பே உங்கட்கு நல்வாழ்வை நல்கும்'' எனக் குமாரிகளைத் தேற்றினார். உடன் தன் மந்திரி சபையைக் கூட்டிப் பெண்களின் பிணிகள் நீங்குவது பற்றியும், உரிய இடத்தில் உரிய காலத்தில் உரிய வரனுக்கு கன்யகாதானம் செய்து கொடுப்பது பற்றியும் மந்திரிகளுடன் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்.

एतस्मिन् एव काले तु चूली नाम महामुनिः ।
ऊर्ध्वरेताः शुभाचारः ब्राह्मं तप उपागमत् ॥
तप्यन्तं तमृषिं तत्र गन्धर्वी पर्युपासते ।
सोमदा नाम भद्रंते ऊर्मिला तनया तदा ॥
अपतिश्चास्मि भद्रं ते भार्याचास्मि न कस्यचित् ।
ब्राह्मेणोपगतायाश्च दातुमर्हसि मे सुतम् ॥
तस्याः प्रसन्नः ब्रह्मर्षिः ददौ पुत्रमनुत्तमम् ।
ब्रह्मदत्तइतिख्यातं मानसं चूलिनः सुतम् ॥
स राजा सौमदेयस्तु पुरीं अध्यावसत् तदा ।
तमाहूय महातेजाः ब्रह्मदतं महीपतिः ।
ददौ कन्याशतं राजा सुप्रीतेन अन्तरात्मना ।
स्पृष्टमात्रे ततः पाणौ विकुब्जाः विगतज्वराः ।
युक्ताः परमया लक्ष्म्या बपुः कन्याशतं तदा ॥

ஏதஸ்மின் ஏவ காலே து சூலீ நாம மஹா முனி: ।
ஊர்த்வரேதா: ஶுபாசார: ப்ராஹ்மம் தப: உபாகமத் ॥
தப்யந்தம் தம் ரிஷிம்தத்ர கந்தர்வீ பர்யுபாஸதே ।
ஸோமதா நாம பத்ரம்தே ஊர்மிளா தனயா ததா ॥
அபதி: சாஸ்மி பத்ரம் தே பார்யா சாஸ்மி ந கஸ்யசித் ।
ப்ராஹ்மேண உபகதாயா: ச தாதும் அர்ஹஸிமே ஸுதம் ॥
தஸ்யா: ப்ரஸந்ந: ப்ரஹ்மர்ஷி: ததௌ புத்ரம் அனுத்தமம் ॥
ப்ரஹ்மதத்த: இதிக்யாதம் மானஸம் சூலின: ஸுதம் ॥
ஸ: ராஜா ஸௌம தேய: து புரீம் அத்யாவஸத் ததா ॥
தம் ஆஹூய மஹாதேஜா: ப்ரஹ்மதத்தம் மஹீபதி: ।
ததௌ கன்யா ஶதம் ராஜா ஸுப்ரீதேன அந்தராத்மனா ॥
ஸ்ப்ருஷ்டமாத்ரே தத: பாணௌ விகுப்ஜா: விகதஜ்வரா: ॥
யுக்தா: பரமயா லக்ஷ்ம்யா பபு: கன்யாஶதம் ததா ॥

வா.ரா. பால. 33

அக்காலத்தில் ஶூலீ எனும் மாமுனிவர் கடும் தவம் புரிந்து வந்தார். அவருக்கு கந்தர்வியான ஊர்மிளையின் பெண்ணான ஸோமதா என்பவள் பணிவிடை செய்து வந்தாள். பன்னாட்களுக்குப் பிறகு ஶூலீ முனிவர் தன்னை ஶரணடைந்த ஸோமதாவைப் பார்த்து ''நீ என் தவத்திற்கு ஊறு ஏற்படாத முறையில் பணிவிடை செய்து வந்திருக்கிறாய், மிக்க மகிழ்ச்சி, நீ விரும்பியதைக் கேள். அளிக்கிறேன்'' என்றார். மகிழ்ந்த முனிவரை நோக்கி ஸோமதா இனிய குரலில் அழகாகப் பேசினாள்: ''முனிவரே! தாங்கள் அரிய தவத்தி னால் பரப்ரஹ்மத்தைப் போன்று காட்சி அளிக்கிறீர். ப்ரஹ்மதேஜஸ் முகத் தில் பொலிகிறது. யான் மணமாகாதவள், எவரையும் மணக்க விருப்பமும் இல்லை. நைஷ்டிக ப்ரஹ்மசாரிணியாக இருப்பேன். ஆயினும் எனக்குப் புத்திரன் வேண்டும், தவத்தின் பெருமையினால் புத்ரனை அளிக்க வேண்டு கிறேன்'' என்றாள்.

உடனே முனிவரும் தவத்தினால் ஒரு மானஸிக புத்ரனைப் படைத்து அளித்தார். ஸோமதா அவனுக்கு ப்ரஹ்மதத்தன் (தவத்தினால் கொடுக்கப் பட்டவன்) எனப் பெயர் சூட்டி வளர்த்தாள். இவன் காம்பிலீ எனும் நகரில் இந்திரனைப் போன்று ஆட்சி செய்து வந்தான். இதை அறிந்த குஶநாபர் அரச மரியாதைகளுடன் ப்ரஹ்மதத்தனை வரவழைத்து, தன் நூறு பெண்களையும் அவ்வரசனுக்குக் கன்யகாதானம் செய்து கொடுத்தார். ப்ரஹ்மதத்தன் இப் பெண்களைத் தனது கரத்தால் பற்றியதும் (பாணி க்ரஹணம் செய்து கொண்டதும்) அவர்கள் பிணிகளும், முடக்கு வாதமும் நீங்கி முன்னினும் மிக்க அழகுடன் விளங்கினர். (இக்காலத்தில் சில பெண்கள் கல்யாணத்திற்கு முன் எவ்வித வியாதிகளும் இல்லாமல் இருந்ததாகவும், புருஷன் கைப்பிடித்த பிறகு கால்வலி, தலைவலி எல்லாம் போட்டியிடுவதாகவும் பேசிக் கொள்கின்றனர். ஏன்? புருஷன் என்றாவது ஸந்த்யாவந்தனமாவது

பண்ணியிருந்தால் தானே! ஜாதகாதி விவாஹாந்தம் ஒரே நாளில் நடக்கிறதே. வ்யாதி வராமல் எப்படி இருக்கும்.)

सोमदाऽपि सुसंहृष्टा पुत्रस्य सदृशीं क्रियाम् ।
यथान्यायं च गन्धर्वी स्नुषाः ताः प्रत्यनन्दत ॥

ஸோமதாபி ஸு ஸம்ஹ்ருஷ்டா: புத்ரஸ்ய ஸத்ருசீம் க்ரியாம் ॥
யதாந்யாயம் ச கந்தர்வீ ஸ்நுஷா: தா: ப்ரத்யநந்தத ॥

வா. ரா. பால. - 33

ப்ரஹ்மதத்தனின் தாயார் ஸோமதா தன் பிள்ளைக்குத் தகுந்த உயர்ந்த இடத்தில் திருமணம் ஆனது பற்றி ரொம்ப ஸந்தோஷப்பட்டாள். மேலும் தனக்குக் குணத்திலும், அழகிலும், அடக்கத்திலும் சிறந்த நாட்டுப் பெண்கள் கிடைத்தது பற்றி மகிழ்ச்சியினால் ஒவ்வொருவரையும் தொட்டு அணைத்துப் பாராட்டினாள். பெண்களின் அடக்கம் அவர்களை மேலும் உயர்த்தி விட்டது.

அடக்கம் அமரருள் உய்க்கும், அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். குறள் - 121.

ஸத்யவதியும், கங்கையும்

कृतोद्वाहे गते तस्मिन् ब्रह्म दत्ते च राघव ।
अपुत्रः पुत्रलाभाय पौत्रीं इष्टि अकल्पयत् ॥
पुत्र ते सदृशः पुत्रः भविष्यति सुधार्मिकः ।
गाधिं प्राप्स्यसि तेन त्वं कीर्तिं लोकेच शाश्वतीम् ।
स पिता मम काकुत्स्थ गाधिः परम धार्मिकः ।
कुश वंश प्रसूतोऽस्मि कौशिको रघुनन्दन ॥
पूर्वजा भगिनी चापि मम राघव सुव्रता ।
नाम्ना सत्यवती नाम ऋचीके प्रतिपदिता
सशरीरा गता स्वर्गं भर्तारं अनुवर्तिनी ॥
कौशिकी परमोदारा प्रवृत्ता च महानदी ।
ततोऽहं हिमवत्पार्श्वे वसामि निरतः सुखम् ॥
अहं हि नियमाद्राम हित्वा तां समुपागतः ।
सिद्धाश्रमं अनुप्राप्य सिद्धोऽस्मि तव तेजसा ॥

க்ருதோத்வாஹே கதே தஸ்மின் ப்ரஹ்மதத்தே ச ராகவ ।
அபுத்ர: புத்ரலாபாய பௌத்ரீம் இஷ்டிம் அகல்பயத் ॥
புத்ர தே ஸத்ருச: புத்ர: பவிஷ்யதி ஸுதார்மிக: ।
காதிம் ப்ராப்ஸ்யஸி தேன த்வம் கீர்த்திம் லோகேச சாச்வதீம் ।
ஸ: பிதா மம காகுஸ்கத காதி: பரம தார்மிக: ।
குஶவம்ச ப்ரஸூத: அஸ்மி கௌசிக: ரகுநந்தன! ॥
பூர்வஜா பகிநீ சாபி மம ராகவஸுவ்ரத
நாம்னா ஸத்யவதீநாம ரிசீகே ப்ரதிபாதிதா
ஸ ஶரீரா கதா ஸ்வர்கம் பர்த்தாரம் அனுவர்த்தினீ ।
கௌசிகீ பரமோதாரா ப்ரவ்ருத்தா ச மஹாநதீ ॥
தத: அஹம் ஹிமவத் பார்ஶ்வே வஸாமி நிரத: ஸுகம் ।
அஹம் ஹி நியமாத் ராம ஹித்வா தாம் ஸமுபாகத: ॥
ஸித்தாச்ரமம் அனுப்ராப்ய ஸித்த: அஸ்மி தவதேஜஸா ॥

வா. ரா. பால. 34

விஶ்வாமித்திரர்: ''ப்ரஹ்மதத்தர் கன்னிகைகளை ஏற்றுச் சென்ற பிறகு குஶநாபர் தனக்கு புத்ரன் இல்லாத குறை நீங்க புத்ரகாமேஷ்டி யாகத்தைச்

செய்தார். யாகத்திற்கு வந்த குஶர் மகனைப் பார்த்து, ''குஶநாபா! உனக்கு ஸத்புத்ரன் பிறப்பான். புகழோடு விளங்குவான். அவனுக்கு காதி எனப் பெயர் சூட்டு'' என ஆசீர்வதித்து, ப்ரஹ்மலோகம் சென்றார். ''குஶரின் பேரனான காதியின் மகன் யான். என்னை, என் பிறவியைக் காரணமாகக் கொண்டு கௌசிகர் என்று அழைப்பர். எனக்கு ஸஹோதரீ உண்டு. அவள் பெயர் ஸத்யவதீ. இவளை ருசீகர் எனும் மாமுனிவர் மணந்தார். இவள் தனது கற்பின் பெருமை யினால் கணவன் சுவர்க்கம் சென்றதும் தானும் சுவர்க்கம் சென்றாள். இவள் தன் மானுட உடலோடேயே சுவர்க்கம் சென்றது குறிப்பிடத்தக்கது. சின்னாட்களுக்குப் பின் நாட்டு மக்களின் நலன் கருதி சுவர்க்கத்தினின்றும் திரும்பிக் கீழே வந்து, இமயமலையினின்றும் ஒரு புண்ய நதியாகப் பிரவஹிக்கலானாள். ஸஹோதரியிடம் உள்ள பாசத்தின் காரணமாக நானும் இமய மலைச்சாரலிலேயே வ்சிக்கலானேன். அங்கிருந்து ஒரு விரதத்தை (யாகத்தை)ச் செய்து முடிப்பதற்காக ஸித்தாஶ்ரமத்திற்கு வந்தேன். உன்னால் என் எண்ணம் நிறைவேறியது. இரவு தூங்கும் நேரம், சந்த்ரோதயம் ஆகிறது. மிகுதியாகக் கண் விழித்தால் நாளை வழி நடப்பது கடினமாகிவிடும். கதை சொல்லிக் கொண்டே பாதி இரவைக் கழித்து விட்டேன். பறவைகள் மரங்களில் ஒடுங்கிவிட்டன. இலைகள் அசைய வில்லை. கோட்டான்கள் வெளிக் கிளம்புகின்றன'' என்று கூறி முடித்தார். இதைக் கேட்ட ராமன், தம்பியிடம் ''நம்மிடம் எவ்வளவு பரிவு முனிவருக்கு'' எனப் புகழ்ந்து கொண்டே தூங்கினான்.

सुप्रभाता निशा राम पूर्वा सन्ध्या प्रवर्तते ।
उत्तिष्ठोत्तिष्ठ भद्रं ते गमनायाभिरोचय ॥

ஸுப்ரபாதா நிசாராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்ததே ।
உத்திஷ்ட உத்திஷ்ட பத்ரம்தே கமனாய அபிரோசய ॥

வா.ரா.பால.-35

ப்ராம்ஹ முஹூர்த்தம், கீசு கீசு என்று ஆனைச் சாத்தன் கலந்து பேசுகின்றன. விடியற்காலை மணி நான்கு. முனிவர் ராமனை எழுப்புகிறார். தான் முன்னரே எழுந்து ராமனுக்கு ஸுப்ரபாதம் சொல்வதில் முனிவருக்கு மிக்க விழைவு! ஆழ்வார் அர்ச்சையில் பரமனுக்குப் பள்ளியெழுச்சி பாடுகிறார். கௌசிகரோ விபவத்தில் பள்ளி எழுப்புகிறார். பாக்கியமோ பாக்யம்!

அனைவரும் எழுந்து ஶோணையில் நீராடி அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு புறப்பட்டனர். பல அழகிய காடுகளைக் கடந்து காலை 11 மணிக்கு கங்கைக் கரையை அடைந்தனர்.

जाह्नवीं सरितां श्रेष्ठां ददृशुः मुनिसेविताम् ।
ततः स्नात्वा यथान्यायं सन्तर्प्य पितृ देवताः

हुत्वाचैवाग्निहोत्राणि प्राश्य च अमृतवद्धविः ।

ஜான்ஹவீம் ஸரிதாம் ச்ரேஷ்டாம் தத்ருசு: முனிஸேவிதாம் ॥
தத: ஸ்நாத்வா யதாந்யாயம் ஸந்தர்ப்ய பித்ரு தேவதா: ॥
ஹுத்வா சைவ அக்னிஹோத்ராணி ப்ராச்ய ச அம்ருதவத்ஹவி: ॥

வா. ரா. பால.-35

மாத்யான்ஹிக ஸ்நானத்தைச் செய்து, தேவ, ரிஷி, பித்ரு தர்ப்பணாதிகள் முதலிய அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, கிடைத்த கனி கிழங்குகளையும், ஹோமத்தில் மிகுந்த ஹவிஸ்ஸையும் உண்டு, அடர்ந்த நிழலில் இளைப்பாற அமர்ந்தனர். பளிங்கு போன்ற கங்கையின் நீரோட்டத்தையும், அதில் விளையாடும் மீன்கள், அன்னங்கள், நாரைகள் ஆகிய வற்றையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனர். சக்ரவர்த்தித் திருமகனுக்கு கங்கை யைப் பார்த்ததும் த்ரிவிக்ரம அவதாரத்தில் தன் திருவடியினின்றும் கங்கை தோன்றியது நினைவுக்கு வரவே, இக்கங்கையின் பெருமையைப் பரப்ப எண்ணி விஸ்வாமித்ரரைப் பார்த்துக் கேட்கலானார்:

''பூஜ்யரே! இந்த நதி இங்கு கங்கை என்றும், வானத்தில் ஆகாஶ கங்கை என்றும், கீழே பாதாள கங்கை என்றும் பேசப்படுகிறதே, ஏன்? இதன் காரணத்தை அறியலாமா?'' என்றான். விஸ்வாமித்ரர் ''ஹிமவான் மலையரசன், இவன் மனைவி மனோரமா, இவள் மேருவின் மகள். இத்தம்பதிகட்குக் குமாரிகள் இருவர். அழகில் நிகரற்றவர்கள். இவர் களை கங்கை, உமை என அழைப்பர். தேவர்கள் தங்கள் உபயோகத்திற்காகக் கங்கையைத் தரும்படி மலையரசனை வேண்டினர். கங்கை மூவுலகினரையும் தூய்மைப்படுத்தும் திறன் பெற்றவள். எந்த இடத்திலும் தடையின்றிச் செல்லும் ஆற்றலுள்ளவள். தேவர்களோ பல்லோரின் நன்மைக்காகக் கேட்கிறார்கள். இவர்கட்குக் கொடுப்பது தானங்களுள் சிறந்த தானமாகக் கருதப்படும் என நினைத்து, மலையரசன், தேவர்கட்கு மூத்த பெண்ணை (கங்கையை) அளித்தான்.* தாரகாஸுரனிடம் பயந்து வாழும் மூவுலகினர்க்கும் இவளால் நன்மை உண்டாகும் எனக் கருதி,

---

குறிப்பு: ''பரோபகாரார்த்தம் இதம் சரீரம். பரோப கார: புண்யாய'' என்பது ஆன்றோர் வாக்கு. தான் அழிய மாறினும் பிறருக்கு உதவுவதே நம் கடமை. ஸத்யவதியும் கங்கையும் பெண்கள், பொதுவாகப் பெண்கள் தம் உடற்கட்டமைப்பையும் அழகையும் பேணி வளர்ப்பர். இவ்விரு பெண்களையும் பேரழகிகளாக, படிப்போர் மனத்திரையில் நிறுத்திய வால்மீகி இவர்கள் தம் பேரழகையும் உடலமைப்பையும் அழித்துத் தவ வலிமையால் உலகுக்கு உயிரளிக்கும் (அமிழ்தாய்) நீராய் மாறியதாகச் சித்தரித்து பொதுத் தொண்டின் உயர்வை, பெருமையை உணர்த்துவது குறிப்பிடத் தக்கது.

தேவர்கள் கங்காதேவியை மகிழ்ச்சியுடன் அழைத்துச் சென்றனர்.'' *(கங்கையில் தான் தேவஸேனாபதியின் உற்பத்தி)*

கங்கையின் தங்கை உமை ருத்ரனை மணக்க விரும்பிக் கடுந்தவம் புரிந்தாள். அவரும் ப்ரஸன்னராய் வர, மலையரசன் மணம் செய்து கொடுத்தான்.

குமார ஸம்பவம்

விஸ்வாமித்ரர் கங்கையின் தோற்றத்தை, அது மூவுலகிலும் சென்றதால் ''த்ரிபதகா'' என்றும் வழங்கப்படுகிறது என்று கூறி முடித்தார். ராமன் அதை விரிவாகக் கேட்க ஆசைப்படவே முனிவர் கதையைத் தொடர்ந்தார்.

''ஒரு காலத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடந்தது. நமக்கு ஒரு வருடம் தேவர்கட்கு ஒரு நாள், இவ்வாறு தேவ வர்ஷத்தில் நூறு ஆண்டுகள், அதாவது நம் ஆண்டில் 36,000 ஆண்டுகள் புதுமணத் தம்பதிகள் தனித்து வாழ்ந்தனர். ஆயினும் அவர்கட்கு மக்கட்பேறு கிட்டவில்லை. தேவர்கள் கலங்கினர். இனி ஏற்படும் மகவு மிகக் கொடியதாக இருக்கக் கூடும் என எண்ணித் தம்பதிகளைப் பிரிக்கக் கருதி தேவர்கள் சிவனை அணுகி முறையிட்டனர். ''தேவனே! எங்களை அருள்வீராக, இனி உம் தேஜஸ்ஸை யாராலும் தாங்கமுடியாது. எனவே, பார்வதியுடன் இனி தவம் புரிவீராக'' என வேண்டினர். அவனும் ''அப்படியே ஆகுக'' எனக் கூறி, வானுலகினரும், கீழுலகினரும் நலம் பெறுவராக என ஆசியும் கூறிப் பேசினான்.

''தேவர்களே! நாங்கள் இனி தவத்தினை மேற்கொள்வோம். எனினும் இதுகாறும் உணர்ச்சிவசப்பட்டதின் காரணமாக என் இதயத்தினின்றும் தோன்றிய தேஜஸ்ஸை உங்களில் யார் தாங்குவார்கள்?''

தேவர்கள்: ''எருத்துக் கொடியோனே! எதையும் தாங்கும் வலிமையும், ஆற்றலும், பொறுமையும் மிக்க பூமி தாங்குவாள்'' என்றனர். உடனே ருத்ரன் தன் தேஜஸ்ஸை, பூமியில் விட அது காடுகள், மலைகள் எங்கும் பரவியது. இத்தேஜஸ்ஸினால் பூமி சிதறிப் பயனற்றுப் போய்விடுமோ என அஞ்சிய தேவர்கள் அக்னியை அணுகி வேண்டினர். ''அக்னிதேவனே! பூமிக்குக் கேடு நேராமலிருக்க நீர் வாயுவோடு பூமியில் பரவிய சிவ தேஜஸ்ஸினுள் பிரவேசிப்பீராக'' என்று. உடனே அக்னி அதனுள் பிரவேசிக்க, ஒரு வெண்ணிற மலை தோன்றியது. சில நாட்களில் அங்கு நாணற்காடு வளர்ந்தது. அக்காடு, அக்னியைப் போன்றும், ஆதித்யனைப் போன்றும் பிரகாசித்தது. பின்னர் சிவபார்வதீ தம்பதிகளைத் தேவர்கள் வணங்கி நின்றனர். அப்பொழுது மிகுந்த கோபத்துடன் உமா கூறினாள். ''நான் ஔரஸ புத்ரனை வேண்டி சிவனுடன் சில காலம் தனித்து வாழ விரும்பினேன்.

எங்கள் தனிமையைத் தடுத்து, தவம் செய்யுமாறு வேண்டிய நீங்கள் உங்கள் மனைவிமார்களிடத்தில் ஔரஸ புத்ரனைப் பெற மாட்டீர்கள்'' எனச் சபித்தாள்; பூமியை நோக்கி, ''நீ எனக்குரியதைத் தாங்கிய படியால் உவர் நிலம், சதுப்பு நிலம் போன்ற பல தன்மைகளைப் பெறுவாய். மேலும் பலருக்கு மனைவியாகவும் (பல அரசர்களைக் கொண்டவளாக வும்), தாய்ப் பாசம் அற்ற புத்ரர்களை உடையவளாகவும் ஆகக்கடவாய்'' என்று சபித்தாள். சிவனும் தன் மனைவி கொடுக்கும் சாபத்தைத் தடுக்க முடியாதவராய் தன்னைச் சார்ந்தவர்கட்கு நேர்ந்த துன்பங்களைப் பார்க்க விருப்பமின்றி உமையுடன் இமயத்தை நோக்கி விரைந்தார். அங்கு இருவரும் தவத்தினை மேற் கொண்டனர்.

(கங்கையைப் பற்றிக் கேட்ட ராஜகுமாரர்கட்கு கங்கையின் பெருமையை விளக்கத் தேவையான உமையின் கதையைக் கூறி கதையை மேலே தொடர்ந்தார்.)

தேவர்கள் நான்முகனிடம் சென்று ''நீர் எங்களுக்கு ஸேனாபதியாக ருத்ரனை அளித்தீர். அவன் தவம்புரியச் சென்று விட்டான். எனவே மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்'' என வேண்டினர்.

நான்முகன்: ''உமையின் சாபத்தால் உங்களிடம் ஸேனாபதியாக ஆவதற்குரிய புத்ரன் தோன்றான். ஆனால் இந்த ஆகாச கங்கையில் அக்னிதேவன் அத்தகு மகனைத் தோன்றச் செய்வான். அவனை உமையும் தன் மகனாக ஏற்றுக் கொள்வாள். அவனே தேவஸேனாபதியாக அமைவான்'' என்றார்.

உடனே தேவர்கள் கைலாஸமலை சென்று அக்னிதேவனை அணுகி, ''நீர் தாங்கி வரும் சிவதேஜஸ்ஸைக் கங்கையில் விடுங்கள்'' எனக் கூற, அவனும் கங்கையைப் பிரார்த்திக்க, கங்கையும் அழகிய தேவ மாது வேடம் பூண்டு அந்த தேஜஸ்ஸை ஏற்றதும், தாங்க முடியாமல் தவிப்பதைப் பார்த்த அக்னி தேவன் கங்கையை ஒட்டிய நாணற்காடு அமைந்த ச்வேத பர்வதத்தில் விடும்படி கூற, அவளும் அப்படியே செய்தாள். விட்டதும் அக்கருவினின்றும் குமாரன் தோன்றினான். அக்குமாரனுக்குப் பாலூட்டி வளர்க்க க்ருத்திகா தேவதைகள் முன் வந்தனர். அவர்களோ அறுவர். எனவே அக்குழந்தை ஆறுமுகங்களைக் கொண்டு அறுவரிடமும் பாலைப் பருகிற்றாம்.

இவ்வாறு வளர்க்கப்பட்ட குமாரனை தேவஸேனாதிபதியாக தேவர்கள் பட்டாபிஷேகம் செய்தார்கள். இவன் அஸுரர்களை வென்று தேவர்களை மகிழ்வித்தான். க்ருத்திகை தேவதைகளால் வளர்க்கப்பட்ட படியால் கார்த்திகேயன் என்றும், கருவினின்றும் நழுவித் தோன்றியபடியால் ஸ்கந்தன் என்றும் அழைக்கலானார்கள். கங்கை, தேஜஸ்ஸை விடும் காலத்தில் பூமியில் சிதறியவையே தங்கம், தாமிரம், ஈயம், இரும்பு முதலிய லோகங்களாக மாறின எனக் கதையை பலச்ருதியுடன் சொல்லி முடித்தார்.

ஸகரகுலத்தினரின் முயற்சி

முனிவர், கங்கையில் குமாரன் தோன்றியதைக் கூறும் போது கங்கையை பூமியில் அவதரிக்கச் செய்த பகீரதனின் நினைவு வரவே, பகீரதனின் தாதாவுக்கும் தாதாவான ஸகரன் தொடங்கி கங்காவதரணக் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

கௌஶிகர்: ''ராமா! உங்கள் குலத்து அரசர்களுள் உனக்கு பதினைந்து தலைமுறைகட்கு முன்னர் ஸகரன் என ஒரு அரசர் இருந்தார். கருவிலேயே இவரைக் கொல்ல சக்களத்தியால் விஷம் கொடுக்கப்பட்டது. ச்யவன முனிவரின் அருளால் விஷத்தோடு பிறந்தபடியால் ஸகரன் என்றே பெய ரிட்டார்கள். (கரம் : விஷம்) இவர் பரமதார்மிகர். இவருக்கு கேஶினீ, ஸுமதி என இரு மனைவிகள். மக்கட்பேறு இல்லாததால். அரசர் இரு மனைவிகளுடன் நூறு ஆண்டுகள் ப்ருகு முனிவரை வேண்டி தவம்புரிந்தார்.

மகிழ்ந்த முனிவர் கூறியதாவது: ''அரசே! உமது மனைவியருள் ஒருத்திக்கு ஒரே மகன் பிறப்பான். அவனால் உன் வம்சம் வளரும். மற்றொருத்திக்கு அறுபதினாயிரம் பிள்ளைகள் பிறப்பர். அவர்கள் வலிமை யும், புகழும், செயலாற்றலும் உடையவர்களாயிருப்பர். இது உங்கள் விருப்பப்படி நடை பெறும்'' என்றார். உடனே கேஶினீ ஒரே மகனையும், ஸுமதி அறுபதி னாயிரம் மகன்களையும், வேண்டினர். முனிவர் பிருகுவும், அப்படியே ஆகுக'' என அருளினார். பின்னர் கேஶினீ அஸமஞ்ஜனையும், ஸுமதி ஒரு கர்ப்பப் பிண்டத்தையும் ஈன்றனர். அக்கருப்பிண்டத்தினின்றும் பின்னர் அறுபது ஆயிரம் மக்கள் தோன்றினர்.

வாலிபப் பருவம் எய்தியதும் அஸமஞ்ஜன் ஊரிலுள்ள தெருப் பிள்ளைகளை விளையாட ஸரயூநதிக் கரைக்கு அழைத்துச் செல்வான். அவர்களை ஒவ்வொருவராக ஸரயூ வெள்ளத்தில் தூக்கி எறிவான். அவர்கள் மூழ்கிப் பிராணனை விடுவதைப் பார்த்து மகிழ்வான். மக்களின் துயரத்தைப் பொறுக்காத ஸகரன் அஸமஞ்ஜனை நாடு கடத்தினான். அஸமஞ்ஜனுக்கு ஒரே ஒரு பிள்ளை அம்ஶுமான், இவனோ மக்களை மகிழ்விக்கும் செயல் களையே செய்து வந்தான். ஒரு ஸமயம் ஸகரன் அஶ்வமேத யாகம் செய்ய எண்ணினான். இவ்வேள்வியைச் சக்ரவர்த்தியாக இருப்பவர்கள் தான் செய்ய முடியும்.

வேள்வியைத் தொடங்குவதற்கு முன்னர் குதிரையை, ஒப்பனை செய்து வெளியே விடுவார்கள். அது நாடு எங்கும் சுற்றிவரும், அதன் பின் பெரும் படையும் செல்லும். எந்த அரசனாவது குதிரையைப் பிடித்துக் கட்டினால் அந்நாட்டைப் போரிட்டு வென்று குதிரையை மீட்பர். அஶ்வ மேத குதிரை நாடு திரும்பியதும் அஶ்வமேதப் பெருவேள்வியைத் தொடங்குவர். ஸகரனால் குதிரை சுற்றிவர அவிழ்த்து விடப்பட்டது.

குதிரையைப் படையுடன் அம்ஶுமான் தொடர்ந்தான். இந்திரனுக்குச் ஶதக்ரது என்று பெயர். நூறு அஶ்வமேத வேள்வியைச் செய்தவர் இந்திர பட்டத்தைப் பெறுவர். எனவே இந்திரன் இவ்வேள்வியைக் கெடுக்க, அரக்கர் வேடம்பூண்டு குதிரையைப் பிடித்து எவருமறியாமல் பாதாளத்தில் கபிலர் ஆஶ்ரமத்தில் விட்டுச் சென்றான். அரசனுக்கு குதிரை காணாமற் போன செய்தி எட்டியதும் தன் பிள்ளைகள் அறுபதினாயிரம் பேரையும் அழைத்து ''பூமண்டலம் முழுவதும் குதிரையைத் தேடுங்கள். கிடைக்கா விடில் பூமியைத் தோண்டி பாதாளம் சென்று தேடுங்கள்'' என உத்தர விட்டான்.

பூவலயம் முழுவதும் தேடியாயிற்று; குதிரை கிடைக்கவில்லை. பூமியைத் தோண்ட முனைந்தனர். பூகம்பத்தின் போது வெடித்துச் சிதறுவது போல எங்கும் பெரும்பள்ளங்களும் வெடிப்புகளும் தோன்றின. இவற்றின் அருகில் புது மலைகள் தோன்றின. நாகர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், தேவர்கள் அல்லல்பட்டு ஹிம்ஸை தாங்க மாட்டாமல் அலறினர். நான் முகனிடம் முறையிட்டனர். பிரமன் ''கபிலர் சாபத்தால் அவர்கள் அழிவர். அஞ்சற்க'' என ஆறுதல் கூறினான். அறுபதினாயிரவரும் திசை முடியும்வரை தேடினர். திக்கஜங்களை வணங்கினர். கடைசியாக ரஸா தலத்தில் கபில வாஸுதேவரைப் பார்த்தனர். அவர் ஆஶ்ரமத்தின் அருகில் குதிரை மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்ணுற்றனர். மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. முயன்று வெற்றி கொண்டோம் என இறுமாந்தனர். இக்கபிலரே நம் குதிரையைப் பிடித்து இங்கு ஓட்டிவந்தனர் எனத் தவறாக எண்ணி, கோபத்துடன் அவர் மீது பாயச் சென்றதும், கபிலர் கடுங்கோபத்துடன் ஹுங்காரம் பண்ணினார். உடனே அனைவரும் பற்றி எரிந்து சாம்பல் மூட்டுகளாயினர்.

நாட்கள் பல ஓடின, பிள்ளைகள் நாடு திரும்பவில்லை, குதிரையும் வரவில்லை. மிக வருந்தியவனாய் தன் பெயரனான அம்ஶுமானை அழைத்துப் படைகளுடன் சென்று தந்தையரைத் தேடிவா எனப் பணித்தார். அவனும் நாடெங்கும் தேடி தம் பிதாக்கள் பூமியைத் தோண்டிச் சென்ற வழியில் சென்று பாதாளத்தில் குதிரையைப் பார்த்து மகிழ்ந்தான். ஆனால் பித்ருக்களைக் காணவில்லை. சாம்பல் மூட்டுக்களைக் கண்டான். மனம் புழுங்கினான். அவர்கட்குத் தர்ப்பணம் செய்ய எண்ணித் தண்ணீரைத் தேடினான். எங்கும் நீரே கிடைக்கவில்லை. அப்பொழுது பக்ஷிராஜனாகிய கருடனைப் பார்த்தான். கருடனின் தங்கையாகிய ஸுமதியின் பிள்ளைகள் தான் அறுபதினாயிரவரும், எனவே தனது பித்ருக்களின் மாமனாகிய கருடாழ்வானை அணுகினான். அவர் ஆறுதல் கூறி இவர்கள் விதியின் பயனாய் கபிலரால் ஶபிக்கப்பட்டார்கள். தேவ லோகத்திலிருந்து கங்கையைக் கொணர்ந்து இச்சாம்பல் மூட்டுக்களின் மீது பாயும்படி செய்தால் அனைவரும் சுவர்க்கம் எய்தி மகிழ்வர் எனக் கூறினார்.

கருடாழ்வானிடம் விடைபெற்றுக் குதிரையுடன் அயோத்தி சேர்ந்தான் அம்ஶுமான். ஸகர சக்ரவர்த்தி யாகத்தைப் பூர்த்தி செய்து, புத்ரர்களை உய்விக்கக் கங்கையைக் கொணர வழியறியாது முப்பதினாயிரம் ஆண்டு நாட்டை ஆண்டு நற்கதியை அடைந்தார்.

பின்னர் மக்கள் அம்ஶுமானுக்கு முடி சூட்டினர். இவர் சில்லாண்டு கட்குப் பிறகு தன் புதல்வன் திலீபனுக்கு முடிசூட்டிவிட்டு இமயமலைக்குச் சென்றார். அங்கு கங்கையைக் கொண்டு வரும் முயற்சியில் முப்பத்திரண்டாயிரம் ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தும் பயனின்றி விண்ணுலகு எய்தினார்.

திலீபன் ஆட்சிக்கு வந்தான். இவனுக்கும் பெருங்கவலை, கங்கையை எங்ஙனம் கொணர்வது? தர்ப்பணம் செய்து அவர்களை உய்விப்பது எங்ஙனம்? என்ற கவலை மேலோங்கியது. இச்சமயம் இவனுக்கு பகீரதன் மகவாகப் பிறந்து மகிழ்வித்தான். திலீபன் முப்பதினாயிரம் ஆண்டு பல வேள்விகளை அனுஷ்டித்தும் கங்கையைக் கொணரும் வழியறியாது கடைசியில் வியாதி யினால் பீடிக்கப்பட்டு காலகதியை அடைந்தான்.

பின்னர் அரியணை ஏறிய பகீரதன் பரம தார்மிகன். ஆளும் திறனும் வல்லமையும் ஒருங்கே அமைந்தவன். ஆயினும் மக்கட்பேற்றைப் பெறாததி னாலும், மூத்த பித்ருக்களை உய்விப்பதையே தனது குறிக்கோளாகக் கொண்டதினாலும் நாட்டைத் தான் ஆளாது மந்திரிமார்களிடம் ஒப்படைத்து விட்டு இமயத்தின் அடிவாரத்திலுள்ள கோகர்ணத்திற்குச் சென்றான். அங்கு தனக்கு நாற்புறமும் தீயை மூட்டி, உயரே கதிரவன் தனது கொடுங்கதிர்களை வீச, தன் கைகளை மேலே உயர்த்தி, புலன்களை உள்ளே அடக்கி, ஆயிரமாண்டுகள் கடுந்தவம் புரிந்தான்.

ஒரு நாள் நான்முகன் தேவர்கள் புடைசூழ எதிரே தோன்றி ''நாம் மகிழ்ந்தோம், விரும்பியவரனைக் கேட்பாயாக'' என்றான். ''உமது அருள் இருக்குமாகில் கங்கை நீரினால் மூதாதையர் சாம்பரைக் கரைத்தும், தர்ப்பணம் செய்தும் அவர்களைச் சுவர்க்கத்தை அடையச் செய்ய வேண்டும்'' என்றான். பகீரதனைப் பார்த்து நான்முகனும் ''அப்படியே ஆகுக. ஆனால் விண்ணுலகிலிருந்து கங்கை கீழ் நோக்கி வரும்பொழுது பூமியால் அதைத் தாங்கமுடியாது. தாங்கும் திறன் பெற்றவர் சிவன் ஒருவரே. எனவே அவர் அருளை நீ பெற்றால் கங்கை பூலோகம் வரும்'' என்று கூறித் தேவர்களுடன் ஸத்யலோகம் சென்றார்.

பகீரத ப்ரயத்தனம்

ऊर्ध्वबाहुः निरालम्बः वायुभक्षः निराश्रयः ।
अचलः स्थाणुवत् स्थित्वा रात्रिंदिवं अरिन्दम ॥
प्रीतस्तेऽहं नरश्रेष्ठ ! करिष्यामि तव प्रियम् ।
शिरसा धारयिष्यामि शैलराज सुतामहम् ॥
तदा सा अतिमहद्रूपं कृत्वा वेगं च दुस्सहम् ।
आकाशात् अपतत् गंगा शिवे शिवशिरस्युत ॥
विशामि अहं हि पातालं स्रोतसा गृह्य शङ्करम् ।
सा तस्मिन् पतिता पुण्या पुण्ये रुद्रस्य मूर्धनि ॥
हिमवत् प्रतिमे गंगा जटा मण्डल गह्वरे ।
सा कथंचित् महीं गन्तुं नाशक्नोत् यत्नमास्थिता ॥
तस्यां विसृज्यमानायां सप्त स्रोतांसि जज्ञिरे ।
ह्लादिनी पावनी चैव नलिनी च तथा अपरा ॥
सुचक्षुश्चैव सीता च सिन्धुश्चैव महानदी ।
सप्तमी चान्वगात् तासां भगीरथं (रथं तदा) अथो नृपम् ।
तदद्भुतमिमं लोके गङ्गापतनं उत्तमम् ।
दिदृक्षवः देवगणाः समीयुः अमितौजसः ॥

ஊர்த்வபாஹு: நிராலம்ப: வாயுபக்ஷ: நிராஶ்ரய: ।
அசல: ஸ்தாணுவத் ஸ்தித்வா ராத்ரிம்திவம் அரிந்தம ॥
ப்ரீத:தே அஹம் நரச்ரேஷ்ட! கரிஷ்யாமிதவ ப்ரியம் ।
சிரஸாதாரயிஷ்யாமி சைலராஜ ஸுதாம் அஹம் ॥
ததாஸா அதிமஹத்ருபம் க்ருத்வா வேகம்ச துஸ்ஸஹம் ।
ஆகாஶாத் அபதத் கங்கா ஶிவே ஶிவசிரஸி உத ।
விசாமி அஹம் ஹி பாதாளம் ஸ்ரோதஸா க்ருஹ்ய சங்கரம் ॥
ஸா தஸ்மின் பதிதா புண்யா புண்யே ருத்ரஸ்ய மூர்த்தனி ।
ஹிமவத் ப்ரதிமே ராம! ஜடா மண்டல கஹ்வரே ॥
ஸா கதம்சித் மஹீம் கந்தும் ந அஶக்னோத் யத்னம் ஆஸ்திதா ॥
தஸ்யாம் விஸ்ருஜ்யமானாயாம் ஸப்த ஸ்ரோதாம்ஸி ஜக்ஞிரே ।
ஹ்லாதினீ பாவனீசைவ நளினீ ச ததா அபரா ।

ஸுசக்ஷு: சஏவ ஸீதாச ஸிந்து: சஏவ மஹாநதீ ।
ஸப்தமீ ச அன்வகாத் தாஸாம்: பகீரதம் அதோ ந்ருபம் ॥
தத் அத்புதமிமம் லோகே கங்கா பதனம் உத்தமம் ।
தித்ருக்ஷவ: தேவகணா: ஸமீயு: அமிதௌஜஸ: ॥

வா. ரா. பால. 43.

நான்முகன் சென்றதும் பகீரதன் கங்கையைத் தாங்குவதற்காகச் சிவனைக் குறித்துத் தவம் புரியத் தொடங்கினான். அரசனாக, கர்ப ஸ்ரீமானாகப் பிறந்தும் அதிகாரத்திலோ, ராஜஸுக போகத்திலோ சிறிதும் நாட்டமிராமல், தன் பித்ருக்களைக் கரையேற்றுவதிலேயே நாட்டம் கொண்டான். எண்ணியதை எண்ணியபடி நிறைவேற்றுவதில் விடாமுயற்சி. எனவே இன்பங்களையும் பெருமைகளையும் ஒதுக்கினான். மனத்திண்மை இன்னல் களை இன்பமாக்கியது. கடுந்தவம். கண் துஞ்சான், பசிநோக்கான், இரு கட்டை விரல்களை மாத்திரம் பூமியில் ஊன்றி நின்றான். இரு கை களையும் உயரத் தூக்கினான். தன்னைச் சுற்றிலும் எவ்விதப் பிடிப்பும் இன்றி ப்ராண வாயுவையே உணவாகக் கொண்டான். ஊன்றிய மரம் போல் அசையாது நின்று மனதை ஒருநிலைப்படுத்தி, சிவனை எண்ணியபடியே ஓராண்டை, ஒரு நிமிஷமாகக் கழித்தான், தவத்தினால் மகிழ்ந்த உமாபதி உமையுடன் தோன்றி ''உன் விருப்பத்தை நிறைவேற்றவே வந்துள்ளேன். கங்கையை என் தலையாலே தாங்கி உனக்கு அளிக்கிறேன்'' என்றார். மகிழ்ந்த பகீரதன் கங்கா தேவியைப் பிரார்த்தித்தான்.

உடனே கங்காதேவி பேருருவம் எடுத்தாள், மிக வேகமாக பூமியை நோக்கிப் பாய்ந்தாள். சங்கரனைப் பாதாளத்திற்கு இழுத்துச் செல்வேன் என கர்வங்கொண்டாள், இறுமாப்புடன் மிக விரைந்து ஶிவன் தலை மீது பாய்ந் தாள். கங்கையின் எண்ணத்தை உணர்ந்த ஶிவன் அவளை (கங்கையை) தன் தலையின் ஜடாமுடியிலேயே அடக்கிக் கொண்டுவிட்டார். பாதாளத்திற்கு இழுத்துச் செல்ல நினைத்தவளுக்கு பூமியைக் கூட அடையமுடியவில்லை, தான் எவ்வளவோ முண்டியடித்தும் கூட சடையாம் குஹையினின்றும் சிறிதும் வெளியில் தலைகாட்ட முடியவில்லை. திணறித் திணறித் தவிக்க லானாள், பல்லாண்டுகள் ஜடையிலேயே சுற்றிச் சுற்றி வரலானாள்.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என வருந்தினான் பகிரதன். மீண்டும் தவம்புரிந்து சிவனை மகிழ்விக்க, சினம் தணிந்த சிவன், இமயத்தில் நான்முகனால் நிர்மாணம் செய்யப்பட்ட பிந்துஸரஸ் எனும் தடாகத்தில் கங்கையை சடையினின்றும் வெளியே விட்டார். கங்கா ப்ரவாஹம் அக்குளத்தினின்றும் ஏழாகப் பிரிந்து ஓடியது, ஹ்லாதினீ, பாவனீ, நளினீ என்ற பெயர்களுடன் கீழ்திசையை நோக்கி ஓடியது. ஸுசக்ஷு, ஸீதா, ஸிந்து என்ற பெயர்களுடன் மூன்று பெரு நதிகளாக மேற்கு திசையை நோக்கி ஓடின. ஒன்று சாலிகா என்ற பெயருடையது, அது தேரில் செல்லும் பகீரதனைத் தொடர்ந்து பாதாளத்திற்குச் சென்றது. இந்த ஏழு நதிகட்கும்

பொதுப் பெயர் கங்கை, இது பூமியில் இறங்குவது பார்ப்போருக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. எனவே இதைப் பார்க்க தேவர்கள், ரிஷிகள், கந்தர்வர்கள், அனைவரும் ஓடோடியும் வந்தனர்.

तत् शङ्कर शिरोभ्रष्टं भ्रष्टं भूमितले पुनः ।
व्यरोचत तदा तोयं निर्मलं गत कल्मषम् ॥
तत्र देवर्षि गन्धर्वाः वसुधातल वासिनः ।
भवाङ्ग पतितं तोयं पवित्रमिति पस्पृशुः ॥
शापात् प्रपतिता ये च गगनात् वसुधातलम् ।
कृत्वा तत्राभिषेकं ते बभूवुः गत कल्मषाः ।

தத் ஶங்கர ஶிரோப்ரஷ்டம் ப்ரஷ்டம் பூமிதலே புன: ।
வ்யரோசத-ததா-தோயம் நிர்மலம் கதகல்மஷம் ।
தத்ர தேவர்ஷிகந்தர்வா: வஸுதா தல வாஸின: ॥
பவாங்க பதிதம் தோயம் பவித்ரமிதி பஸ்ப்ருஶு: ॥
ஶாபாத் ப்ரபதிதா யே ச ககனாத் வஸுதாதலம் ।
க்ருத்வா தத்ராபிஷேகம் தே பபூவு: கதகல்மஷா: ॥

வா.ரா.பால.-43

यच्छौच निस्सृत सरित्प्रवरोदकेन
तीर्थेन मूर्ध्नि विधृतेन शिवश्शिवोऽभूत् ।

யத்ஶௌச நிஸ்ஸ்ருத ஸரித் ப்ரவரோதகேன ।
தீர்த்தேன மூர்த்னி வித்ருதேன சிவ: சிவ: அபூத் ॥

ஸ்ரீபாகவதம்

तदम्बु पतितं दृष्ट्वा दधार शिरसा हरः ।
पावनार्थं जटा मध्ये योग्योऽस्मीत्यवधारणात् ॥

ததம்பு பதிதம் த்ருஷ்ட்வா ததார சிரஸா ஹர: ।
பாவனார்த்தம் ஜடாமத்யே யோக்ய: அஸ்மி இதி அவதாரணாத் ॥

மஹாபாரதம்

கங்கை அதிபவித்ரமானது, மிகத் தூயது, தன் ஸம்பந்தம் உடையவர்களையும் அதாவது கங்கையில் நீராடுகின்றவர்களையும், கங்கை நீரை ப்ரோக்ஷணம் (தலைமீது தெளித்துக்கொள்ளுதல்) செய்து கொள்ளுகின்றவர்களையும், அந்நீரைப் பருகுகின்றவர்களையும்கூட பவித்ரமாக்குகிறது. ஏன்? அது எம்பெருமானுடைய திருவடி ஸம்பந்தம் பெற்றது. ஸ்ரீமந் நாராயணனுடைய ஸ்ரீ பாத தீர்த்தம். த்ரிவிக்ரமாவதார காலத்தில் மேலே எழுந்த

திருவடியை நான்முகன் நன்னீராட்டியதால் (திருமஞ்சனம் செய்ததால்) தோன்றியது. பரமனைத் தம் இதயங்களில் தாங்கும் பரம பாகவதர்களுடைய ஸ்ரீ பாத தீர்த்தத்தைப் பருகுவது நம் பாபங்களைப் போக்கும் பிராயச்சித்த மாக ப்ரமாணங்கள் பகர்கின்றன. எனவே தான் ஸ்ரீ வைஷ்ணவர்கள் சிராத்தத் திற்கு முதல்நாள் ஆசார்யர்களின் ஸ்ரீ பாத தீர்த்தத்தையும், சிராத்தத்தன்று பித்ருக்களாக, விச்வே தேவர்களாக, விஷ்ணுவாக ஆவாஹனம் செய்யப் பட்ட ஸ்வாமிகளின் ஸ்ரீ பாத தீர்த்தத்தையும் பருகுவதை முக்யமாகக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் ஶிவன் ஆகாய கங்கை கீழே விழு வதைப் பார்த்ததும் தன் தலையில் தாங்கி ஜடைகளின் நடுவே வைத்துத் தன்னைத் தூய்மைப் படுத்திக் கொண்டதாக மஹாபாரதம் கூறுகிறது.

ஸ்ரீ பாகவதம், திருமாலின் திருவடியை அலம்பும் பொழுது அத்திருவடியினின்றும் கிளம்பிய நதிகளுள் சிறந்த கங்கையின் நீரைத் தன் தலையில் தாங்கித் தூய்மை பெற்று சிவன் சிவனாக—மங்களமாக ஆனான் என்று கூறுகிறது. எனவே தன் முடியில் தாங்கி தான் பவித்ரமாக ஆனது போல், பிறரும் இக் கங்கையினால் தூய்மை பெறட்டும் என்று எண்ணியும், பகீரதனின் வேண்டுகோளுக்கு இணங்கியும் சிவன், கங்கையைப் பூமியில் விட்டார். பூவுலகினருக்குக் கிடைத்தற்கரிய திருமாலின் ஸ்ரீ பாத தீர்த்தமாகிய கங்கையைச் ஶிவன் நமக்குக் கிடைக்கச் செய்தானே என மகிழ்ந்து மஹர்ஷிகள் முதலியோர் அதில் நீராடினாராம். ஶாபத்தின் காரணமாக மேலுலகினின்றும் பூமியை அடைந்தவர்களும் அதில் நீராடிப் பாபத்தைப் போக்கிக் கொண்டனராம்.

ततो हि यजमानस्य जह्नोः अद्भुत कर्मणः ।
गङ्गा संप्लावयामास यज्ञवाटं महात्मनः ।
तस्यावलेपनं ज्ञात्वा क्रुद्धः जह्नुश्च राघव ।
अपिबत् तु जलं सर्वं गङ्गायाः परमाद्भुतम् ।
पूजयन्ति महात्मानं जह्नुं पुरुष सत्तमम् ।
ततस्तुष्टो महातेजाः श्रोत्राभ्यामसृजत् पुनः ।
तस्मात् जह्नुसुता गङ्गा प्रोच्यते जाह्नवी इति च ।
अथ तत् भस्मनां राशिं गङ्गा सलिलमुत्तमम् ।
प्लावयत् धूत पाप्मानः स्वर्गं प्राप्ताः रघूत्तम ।
इयं च दुहिता ज्येष्ठा तव गङ्गा भविष्यति ।
त्वत्कृतेन च नाम्नाथ लोके स्थास्यति विश्रुत ।
त्रीन् पथः पावयन्तीति ततः त्रिपथगा स्मृता ।
कृतोदकः शुचिः राजा स्वपुरं प्रविवेश ह ।

தத: ஹி யஜமானஸ்ய ஜன்ஹோ: அத்புதகர்மண: ।
கங்கா ஸம்ப்லாவயாமாஸ யஜ்ஞ வாடம் மஹாத்மன: ॥
தஸ்ய அவலேபனம் ஜ்ஞாத்வா க்ருத்த: ஜன்ஹு:ச ராகவ! ।
அபிபத் து ஜலம் ஸர்வம் கங்காயா: பரமாத்புதம் ॥
பூஜயந்தி மஹாத்மானம் ஜன்ஹும் புருஷஸத்தமம் ॥
தத: துஷ்ட: மஹாதேஜா: ச்ரோத்ராப்யாமஸ்ருஜத் புன: ॥
தஸ்மாத் ஜன்ஹுஸுதா கங்கா ப்ரோச்யதே ஜான்ஹவீதி ச ॥
அத தத் பஸ்மனாம்ராசிம் கங்காஸலிலம் உத்தமம் ।
ப்லாவயத் தூதபாப்மான: ஸ்வர்கம் ப்ராப்தா: ரகூத்தம ॥
இயம் ச துஹிதா ஜ்யேஷ்டா தவ கங்கா பவிஷ்யதி ।
த்வத்க்ருதேனச நாம்னா அத லோகே ஸ்தாஸ்யதி விஸ்ருத ॥
த்ரீன் பத: பாவயந்தீதி தத: த்ரிபதகா ஸ்ம்ருதா ॥
க்ருதோ:தக: சுசி: ராஜா ஸ்வபுரம் ப்ரவிவேசஹ ॥

வா.ரா.பால-43,44

பின்னர் கங்கை பகீரதனைத் தொடர்ந்து செல்லும் பொழுது வழியில் ஜன்ஹு மஹர்ஷியின் ஆச்ரமம், அவருடைய யாகசாலை, ஜபம் செய்யும் இடம் ஆகிய அனைத்தும் நீரில் மூழ்கின. முனிவர் சிறிது கோபங்கொண்டார். ஆனால் இந்நீரோ அவரையும் பிறரையும் பாபங்களினின்றும் விடுவிக்கும் தன்மையது, மிகத் தூய்மையானது. எனவே நீர் அனைத்தையும் அவர் நொடிப் பொழுதில் பருகி விட்டார். ''ச்ரேயாம்ஸி பஹுவிக்னானி'' சுபங் களுக்குத் தடைகள் பலப்பல. பகீரதன் மனம் நொந்து அகலாது தேவர் களுடனும் முனிவர்களுடனும் சேர்ந்து வணங்கி வழிபட்டுத் துதித்து வேண்டினான். மகிழ்ந்த ஜன்ஹு முனிவரும் தாம் பருகிய கங்கையைத் தன் காதின் வழியாக வெளியே விட்டார். இக்கங்கை ஜன்ஹுவிடமிருந்து வந்தபடியால் ''ஜான்ஹவீ'' என்றும், மூவுலகிலும் செல்வதால் ''த்ரிபதகா'' என்றும் அழைக்கப்படுகிறது. பின்னர் பகீரதன் காட்டிய வழியில் பாதாளம் சென்று ஸகர புத்ரர்களின் சாம்பல் முட்டுக்களைக் கரைக்க, அறுபதினாயிர வரும் பாபங்கள் நீங்கி ஸ்வர்க்கம் எய்தினர். அப்பொழுது நான்முகன் தோன்றி ''பகீரதா! இந்த கங்கை உனக்கு மூத்த மகள் ஆவாள். உனது பெரு முயற்சியினால் தோன்றி, உன்னைப் பின்பற்றியே வந்தவள். எனவே இவள் ''பாகீரதீ'' என உலகினரால் புகழப்படுவாள்'' என்றார். நான்முகனிடம் விடை பெற்று, கங்கையில் தன் முன்னோர்கட்குத் தர்பணங்களைச் செய்து விட்டுத் தன் நகருக்குச் சென்றான் பகீரதன். அன்று முதல் உலகினர் விடா முயற்சிக்கும், சலியாது உழைத்ததற்கும், ஆன்றோர் வழிநிற்றலுக்கும் பகீரதனையே வழிகாட்டியாகக் கொண்டனர்.

(தற்காலத்திய இளைஞர்கள் குலாசாரத்திலும், கல்வியிலும், பொருளீட்டும் முயற்சியிலும் மனம் நொந்து நம்பிக்கையை இழக்காதிருக்க பகீரதனை நினைவில் கொள்வார்களாக.)

एष ते राम गङ्गायाः विस्तरः अभिहितो मया ।
स्वस्ति प्राप्नुहि भद्रं ते सन्ध्याकालः अतिवर्तते ।
धन्यं यशस्यं आयुष्यं पुत्र्यं स्वर्ग्यं अतीव च
प्रीयन्ते पितरः तस्य प्रीयन्ते दैवतानि च ।
सर्वे पापाः प्रणश्यन्ति आयुः कीर्तिः च वर्धते ।

ஏஷ:தே ராம! கங்காயா: விஸ்தர: அபிஹித: மயா ।
ஸ்வஸ்தி ப்ராப்னுஹி பத்ரம்தே ஸந்த்யா கால: அதிவர்த்ததே ॥
தன்யம் யஶஸ்யம் ஆயுஷ்யம் புத்ர்யம் ஸ்வர்க்யம் அதீவச ॥
ப்ரீயந்தே பிதர: தஸ்ய ப்ரீயந்தே தைவதானிச ॥
ஸர்வே பாபா: ப்ரணஶ்யந்தி ஆயு:கீர்த்தி:ச வர்ததே ॥

வா.ரா.பால.-44

விஶ்வாமித்ரர் ''ராம! கங்கையைப் பற்றி விரிவாகப் பழைய நிகழ்ச்சிகளை உனக்கு எடுத்துக் கூறினேன். இக்கதையைக் கேட்டால் செல்வம் வளரும், புகழ்கிட்டும், நீண்ட ஆயுளை அளிக்கும், மக்கட்பேற்றை நல்கும், பேராநந்தத்தைப் பெற உதவும், பாபங்கள் அழியும். நேரமாகி விட்டது. ஸந்த்யாகாலம் நெருங்கிவிட்டது. ஸந்த்யாவந்தனத்தை அனுஷ்டிப் போம். உனக்கு மங்களம் உண்டாகுக'' என்றார்.

गता भगवती रात्रिः श्रोतव्यं परमं श्रुतम् ।
तराम सरितां श्रेष्ठां पुण्यां त्रिपथगां नदीं ।
नौरेषाहि सुखास्तीर्णा ऋषीणां पुण्य कर्मणाम् ।
भगवन्तं इह प्राप्तं ज्ञात्वा त्वरितं आगताः
कतरः राजवंशः अयं विशालायां महामुने ।
श्रोतुमिच्छामि भद्रं ते परं कौतूहलं हि मे ।

கதா பகவதீ ராத்ரி: ஶ்ரோதவ்யம் பரமம் ஶ்ருதம் ॥
தராம ஸரிதாம் ஶ்ரேஷ்டாம் புண்யாம் த்ரிபதகாம் நதீம் ॥
நௌ: ஏஷா ஹி ஸுகாஸ்தீர்ணா ரிஷீணாம் புண்ய கர்மணாம் ।
பகவந்தம் இஹ ப்ராப்தம் ஜ்ஞாத்வா த்வரிதம் ஆகதா: ॥
கதர: ராஜவம்ஶ: அயம் விசாலாயாம் மஹாமுனே ।
ஶ்ரோதும் இச்சாமி பத்ரம்தே பரம் கௌதூஹலம் ஹி மே ॥

வா.ரா.பால.-45

தம் குல மூத்தோர்களின் கதையை நினைத்து நினைத்து மகிழ்ச்சியில் மூழ்கிய ராஜகுமாரர்கட்கு அன்றைய இரவு நொடிப் பொழுதாகக் கழிந்தது.

காலை அனுஷ்டானங்களை முடித்தனர். மஹர்ஷிகள் தாங்களே தயாரித்த படகைக் கொணர்ந்தனர். அது, மூவரும் செல்வதற்குத் தேவையான அகலம் கொண்டது. பரமனின் தெப்போத்ஸவத்தை ஸேவிக்க நன்கு தயாரித்தனர் போலும். அதில் ஏறிக் கங்கையைக் கடந்து அக்கரை சென்றனர். அங்கு அழகிய பழைய பெரு நகரைக் கண்ணுற்றனர். அது சுவர்க்கலோகத்தைப் போன்று அழகாகக் காட்சியளித்தது. அதன் பெயர் விசாலா. அதை ஆண்ட ராஜவம்சத்தைப் பற்றி ராமன் கேட்கவே விஸ்வாமித்ரர் கூறலானார். அந்நாட்டின் வரலாற்றில் தேவேந்திரன் தொடர்பு இருந்தது. எனவே இந்திரனைப் பற்றிக் கூறத் தொடங்கியவர் திருப்பாற்கடலைக் கடைந்த கதையைக் கூற வேண்டியதாயிற்று.

पूर्वं कृतयुगे राम दितेः पुत्राः महा बलाः ।
अदितेश्च महाभाग ! वीर्यवन्तः, सुधार्मिकाः ।
ततस्तेषां नरश्रेष्ठ ! बुद्धिरासीत् महात्मनाम् ।
अजराः अमराश्चैन कथं स्याम निरामयाः ।
क्षीरोद मथनं कृत्वा रसं प्राप्स्याम तत्र वै ।

பூர்வம் க்ருதயுகே ராம! திதே: புத்ரா: மஹா பலா: ।
அதிதே: ச மஹாபாக! வீர்யவந்த: ஸுதார்மிகா: ॥
தத: தேஷாம் நரஶ்ரேஷ்ட ! புத்தி: ஆஸீத் மஹாத்மனாம் ।
அஜரா: அமரா: சைவ கதம் ஸ்யாம நிராமயா: ॥
க்ஷீரோத மதனம் க்ருத்வா ரஸம் ப்ராப்ஸ்யாம தத்ரவை ॥

கா.ரா. பால. - 45

முனிவர்: ''ராம! இந்த (த்ரேதா) யுகத்திற்கு முந்திய க்ருத யுகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறுகிறேன், கேள். கச்யப ப்ரஜாபதிக்கு இரு மனைவிகள், அவர்களை திதி, அதிதி என அழைப்பர், திதியின் பிள்ளைகள் அஸுரர்கள், நல்ல பலசாலிகள், அதிதியின் பிள்ளைகளே தேவர்கள், இவர்கள் வீரம் பொருந்தியவராயினும் அறவழி நிற்பவர்கள். தேவர்கள் ஒன்று கூடி, ''தாம் நோயற்றவர்களாகவும், கிழத்தனம் அற்றவர்களாகவும், இறப்பற்றவர்களாகவும் வாழ வழி யாது'' என ஆராய்ந்தனர். உலகிலுள்ள சிறந்த மூலிகைகளையெல்லாம் திரட்டிக் கொணர்ந்து பாற் கடலில் போட்டுக் கடைந்து திரண்டுவரும் ரஸமே சாவா மருந்தாகும் என முடிவு கண்டனர். கடைவதற்கு பெரிய மத்து தேவை, மந்தர மலையே அதற்கு ஏற்றது, கருடனைப் பிரார்த்திக்க அவர் மலையைப் பெயர்த்துக் கொணர்ந்தார், வாஸுகி ஸர்ப்பத்திற்கு அம்ருதத்தில் பங்களிப்பதாகக் கூறி அதைக் கடையும் கயிறாகக் கொண்டனர். முப்பத்து மூன்று கோடி தேவர்கள் சேர்ந்தாலும் கடைவதற்கு வலிமை போதாது, எனவே பரமனின் யோசனைப் படி அறுபத்தாறு கோடி அஸுரர்களையும் பகைவர்களாயினும் அமுதத்தில்

பங்கு தருவதாகக் கூறி சேர்த்துக் கொண்டனர், பாம்பாட்டியின் கூடையில் அடைபட்ட பாம்பு, தான் வெளியே வர எலியோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, த்வாரம் பண்ணியதும் அந்த எலியையே உணவாகக் கொள்வது போல, அஸுரர்களை முடிவில் ஏமாற்றி விடலாமென்று எண்ணம். தேவர்கள் புத்திசாலித்தனமாக வாஸுகியின் தலைப்பக்கம் பிடிக்க, அஸுரர்கள் ''வால் பக்கம் தாழ்ந்தது, நாங்கள் அந்த வாலைப் பிடிக்கமாட்டோம்'' எனப் பிணங்க, தேவர்கள் சிரிப்பை அடக்கிக் கொண்டு வாலைப்பிடிக்க தொண்ணூற்றொன்பது கோடி பேர்களும் ஆயிரம் ஆண்டுகள் கடைந்தனர்.

அப்பொழுது மஹாஸர்ப்பத்தின் வாயிலிருந்து ஹாலாஹலவிஷம் வெளிவந்தது, அவ்விஷத்தின் காற்று பரவ அனைவரும் வாடி வதங்கி ருத்ரனைத் துதிக்க, அவர் வந்ததும் மஹாவிஷ்ணு திருமுகத்தில் புன்னகை தவழ,

दैवतैः मथ्यमाने तु यत् पूर्वं समुपस्थितम् ।
तत् त्वदीयं सुर श्रेष्ठ सुराणां अग्रजोऽसि यत् ।
अग्रपूजां इमां मत्वा गृहाणेदं विषं प्रभो ॥

தைவதை: மத்யமானேது யத்பூர்வம் ஸமுபஸ்த்திதம் ।
தத் த்வதீயம் ஸுரஶ்ரேஷ்ட ! ஸுராணாம் அக்ரஜ: அஸியத் ॥
அக்ர பூஜாம் இமாம் மத்வா க்ருஹாண இதம் விஷம்ப்ரபோ ॥

வா.ரா.பால. - 45

''ருத்ரதேவனே! ப்ரஹ்ம ஸ்ருஷ்டியில் முதலாவதாகப் படைக்கப் பட்ட நீர் தேவர்களுள் முதல்வர் ஆவீர். ஸமுத்ர மதனத்தில் முதலில் கிடைத்த பொருள் தேவர்களுள் மூத்தவனான உமக்கே உரியது. அக்ர பூஜையாக ஏற்றுக்கொள்ளும்'' எனக்கூறி மறைந்தார். ருத்ரனும் விஷத்தைப் பருகி கழுத்தில் தேக்கினான், அன்று முதல் ருத்ரன் நீலகண்டன் என்று அழைக்கப்பட்டான்.

தொடர்ந்து கடைந்தனர். மத்தாகிய மந்தரமலை மூழ்கிப் பாதாளம் சென்றது. உடனே அனைவரும் மதுஸூதனனைத் தொழுதனர்.

इति श्रुत्वा हृषीकेशः कमठं रूपमास्थितः ।
पर्वतं पृष्ठतः कृत्वा शिश्ये तत्रोदधौ हरिः ।
पर्वताग्रं तु लोकात्मा हस्तेनाक्रम्य केशवः ।
देवानां मध्यतः स्थित्वा ममन्थ पुरुषोत्तमः ।

இதிஶ்ருத்வா ஹ்ருஷீகேச: கமடம் ரூபம் ஆஸ்தித: ।
பர்வதம் ப்ருஷ்டத: க்ருத்வா ஶிஶ்யே தத்ர உததௌ ஹரி: ॥

பர்வதாக்ரம்து லோகாத்மா ஹஸ்தேன ஆக்ரம்ய கேசவ: ।
தேவனாம் மத்யத: ஸ்தித்வா மமந்த புருஷோத்தம: ॥

வா.ரா.பால.-45

பக்தர்களின் ஈனக்குரலைக் கேட்டதும் விஷ்ணு ஓடோடியும் வந்தார், ஒருலக்ஷம் யோஜனை பரப்பளவுள்ள ஒரு தீவு போன்ற மேற்பகுதியைக் கொண்ட ஆமை வடிவமெடுத்து மந்தரத்தை மேலே தூக்கியதோடு, அடியில் மீண்டும் கீழே போகாமல் தாங்கியும் நின்றார். கடையும் வேகத்தில் மலை மேலே எழும்பியதைக் கேசவனாய்க் கையை மேலே வைத்துப் பிடித்துக் கொண்டார். அதுமாத்திரமன்றி தேவர்களோடும், அஸுரர்களோடும் உடன் நின்று ஆயிரமாண்டுகள் கடைந்தார்.

பக்தர்கட்கு ஆபத்துக் காலத்தில், எந்த உருவத்துடன் வந்தால் அவர்களை ஆபத்தினின்றும் மீட்க முடியுமோ அவ்வாறு தோன்றுவது பகவானின் வழக்கம். எனவே ஆமையாய் மலையைத் தாங்கியும், கேசவனாய் மேலே எழும்பாது மலையை அமுக்கியும், தேவர்களோடும் அஸுரர்களோடும் வேற்றுருவம் கொண்டு நின்று கடைந்தும், வாஸுகிக்குத் தன் தேஜஸ்ஸினால் வலிமையை அளித்தும், கடைகின்றவர்கட்குச் சோர்வு ஏற்படாதவாறு அவர்களை ஆவேசித்து ஊக்குவித்தும் பல்வகையில் உதவும் பாங்கை நினைக்கும் போது பக்தவத்ஸலனின் கருணைக்கு எல்லை தான் உண்டோ!

பின்னர் தண்டம் கமண்டலுவுடன் ஆயுர்வேத புருஷன் தன்வந்தரி தோன்றினார், அப்ஸரஸ்ஸுக்கள் தோன்றினர். அப்பு (ஜலம்) இக்கடலில் பாலாகிய ஜலம் இருந்ததால் பாற்கடல் எனப் பெயர் அக்கடலுக்கு ஏற்பட்டது. அப்பாற்கடலின்றும் தோன்றியது ரஸம், இத்தகு ரஸத்தினின்றும் தோன்றியவர்கட்கு அப்ஸரஸ்ஸுக்கள் எனப் பெயர். இவர்கள் கட்டழகு வாய்ந்தவர்கள், இந்த அறுபது கோடி அப்ஸரஸ்ஸுகளுக்கு உதவப் பணிப்பெண்கள் பன்மடங்கு தோன்றினர். இவ்வப்ஸரஸ்ஸுக்களைத் தேவர்களும், அஸுரர்களும் தமக்கு உரியர்களாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். வரப்போகும் அமிழ்தத்தில் பங்கு கிடைக்காமல் போகுமோ என அச்சம் போலும், இரு தரப்பினரும் உரியவர்களாக ஏற்காததால் பொதுப் பெண்களாயினர். பின் வருணனின் பெண்ணாக வாருணீ தோன்றினாள், இவள் தனக்குரிய பதியைத் தேடும்போது அஸுரர்கள் ஏற்காமல் ஒதுங்கவே தேவர்கள் வாருணியை ஏற்றுக் கொண்டனர்.

(வாருணீ என்றால் மது, ஸுரா என்றும் கூறுவர். ஸுரையைப் பருகுகின்றவர்கள் ஸுரர்கள் தேவர்கள், பருகாதவர்கள் அஸுரர்கள். ஸுரா என்பது பூமியில் வழங்கப்படும் கள் அல்ல, ஏனெனில் வாருணீ குற்றமற்றது எனச் சொல்லப்பட்டிருக்கிறது.)

பின்னர் வந்த உச்சைச்ரவஸ் எனும் குதிரையை இந்திரன் பெற்றான். மணிரத்னமான கௌஸ்துபத்தையும், மஹாலக்ஷ்மியையும் திருமால் திருமார்பில் ஏற்றுக் கொண்டார்.

(ஸ்ரீமத் பாகவதம் கடலைக் கடைதலையும், திருவின் அவதாரத்தையும், விரிவாகக் கூறும். ஆனால் விஶ்வாமித்ரர் விஶாலா நகரைப் பற்றிக் கூறும் நோக்கில் கதைகளை சுருக்கினார் போலும்.)

கடைசியில் அமிழ்தம் வந்தது, இதற்காக இருசாராரும் காத்திருந்தனர். அதைக் கைப்பற்றத் தேவர்களும் அஸுரர்களும் போட்டியிட்டுப் பெரும் போர் புரிந்தனர். இப்பூசலைக் கண்ணுற்ற ஸாக்ஷாந் மன்மதனாய்த் திகழும் எம்பெருமான் ஜகன்மோஹன ரூபம் எடுத்தான். பல அவதாரங்களை ஏற்று அம்ருதம் வரச் செய்தவன் அதைப் பக்தர்கட்குப் பங்கிட்டுக் கொடுக்க மோஹினீ அவதாரம் எடுத்தான். அது, கண்டதும் அனைவரும் மயங்கும் பெண்ணுருவம், ''அழகெலாம் ஒருங்கே கண்டால் ''யாவரே ஆற்ற வல்லார்'' என்பதற்கிணங்க அனைவரும் அழகுத் தெய்வத்தைக் கண்டதும் செய்வதறியாது மயங்கி நிற்க, அம்ருதகலசத்தைக் கைப்பற்றி தேவர்கள் அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தான். அஸுரர்கள் ஏமாந்தனர், மோஹினீயும் மறைந்தாள். சாவாமையையும் வலிமையையும் பெற்ற தேவர்கள் இந்திரன் தலைமையில் போரிட்டு அஸுரர்களை மாய்த்து மூவுலக ஸாம்ராஜ்யத்தைப் பெற்றனர். இக்கதையினின்றும் ''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' ''பரமன் பக்தர்களின் இன்னலைப் போக்க, தானே பல்வகை இன்னல்களையும் ஏற்பான்'' தெய்வபலம் இன்றி யாரும் எதையும் சாதிக்க முடியாது. தெய்வபலம் மாறா பலம், என்றும் அறியலாமல்லவா?

திதியின் முயற்சியும், இந்திரனின் சூழ்ச்சியும்

हतेषु तेषु पुत्रेषु दितिः परम दुःखिता ।
मारीचं काश्यपं राम भर्तारमिदमब्रवीत् ।
हत पुत्रास्मि भगवन् तव पुत्रैः बहाबलैः ।
शक्रहन्तारमिच्छामि पुत्रं दीर्घ तपोर्जितम् ॥

ஹதேஷு தேஷு புத்ரேஷு திதி: பரமது க்கிதா ।
மாரீசம் காச்யம் ராம பர்தாரம் இதம் அப்ரவீத் ॥
ஹத புத்ராகுஸ்மி பகவன் ! தவபுத்ரை: மஹாபலை: ।
சக்ரஹந்தாரம் இச்சாமி புத்ரம் தீர்க்கதபோர்ஜிதம் ॥

வா.ரா.பால.-46

தன் மக்களைப் பறிகொடுத்த திதி தேவீ மிக வருந்தினாள்; பழிக்குப் பழி வாங்குவது என்கிற முடிவுக்கு வந்தாள், ''தேவேந்திரனைக் கொல்லும்

ஆற்றலுடைய மகனை நாம் பெற்றெடுக்க வேண்டும், இதற்காக எத்தகைய கடுந்தவமாயினும் நாம் மேற்கொள்ள வேண்டும்'' என எண்ணினாள். கணவனின் அனுமதியின்றி பெண்கள் எந்த விரதத்தினையும் மேற்கொள்வது கூடாது என்பது விதி, மரீசி முனிவரின் புதல்வரான கச்யபரே இவள் கணவர், அவரை அணுகி வணங்கி வேண்டினாள்: ''நாதா! நான் பெற்ற மக்களை இழந்து தவிப்பது தாங்கள் அறியாதது அன்று, தங்கள் ஆசியால் தேவேந்திரனை மாய்க்க வல்ல மகனைப் பெற்றாக வேண்டும். இதற்காகக் கடுந்தவத்தினையும் மேற்கொள்ள உறுதி பூண்டுள்ளேன். அத்தகு புதல்வனை நீர் எனக்கு அருள்வீராக'' என வேண்டினாள். மனைவியிடம் இரக்கம் கொண்ட முனிவர் ''அப்படியே ஆகட்டும்; ஆனால் இதற்காக நீ ஆயிரம் ஆண்டுகள் தூய்மைகாத்து தவம்புரிய வேண்டும். பின்னர் இந்திரனைக் கொல்லும் மகவைப் பெறுவாய்'' எனக்கூறி அவளைத் தேற்றும் முறையில் தடவிக் கொடுத்தார். மேலும் அவளுடைய வயிற்றைத் தொட்டு ''மகனைப் பெறுவாயாக'' என ஆசீர்வதித்துத் தவம் புரியச் சென்றார்.

कुशप्लवनमासाद्य तपस्तेपे सुदारुणम् ।
शक्रः सर्वेषु कालेषु दितिं परिचचारह ॥

குசப்லவனம் ஆஸாத்ய தப: தேபே ஸுதாருணம் ॥
ஶக்ர: ஸர்வேஷு காலேஷு திதிம் பரிசசார ஹ ॥

வா.ரா.பால.-46

திதி, குசப்லவனம் என்ற இடத்தில் கடும்தவம் செய்யத் தொடங்கினாள். இதன் உண்மையை அறிந்த இந்திரன் பெரிய தாயாருக்கு (பெரியம்மாவுக்கு)த் தேவையான பணிவிடைகளைச் செய்ய குசப்லவனம் வந்தான். அங்கு தினந்தோறும் தீமுட்டிக் கொடுப்பான்; தர்பம், விறகு, தீர்த்தம், பழம், கிழங்கு முதலிய பொருள்களைக் கொணர்ந்து கொடுத்து உபசரிப்பான்; பிடித்து விடுவான்; விசிறி கொண்டு விசிறுவான். இவ்வாறாக 990 ஆண்டுகள் கழிந்தன. தபஸ்ஸின் பூர்த்திக்கு இன்னும் பத்து ஆண்டுகளே இருந்தன. இப்பொழுது பெரியம்மாவிற்கு இந்திரனிடமிருந்த கோபம் மாறி அன்பு வளர்ந்தது. இந்திரனை அருகில் அழைத்துப் பேசினாள். ''இந்திரா! உன் தந்தையின் அருளினால் இன்னும் பத்து ஆண்டுகளில் உன்னிடம் (ஸஹோதர) பற்றுடைய உன் ஆட்சிக்குத் துணைபுரியும் மகனைப் பெற்றெடுப்பேன்,'' என்று கூறி மகிழ்ச்சியினால் தன்னையறியாது உட்கார்ந்த படியே தூங்கிவிட்டாள். அப்பொழுது நண்பகல், தலை தொங்கியது, தலையும் கேசபாசமும் அவள் கால்களின் மீது அமைந்திருந்தது. பகலில் தூங்குவது, அதிலும் வ்ரத காலத்தில் பகலில் தூங்குவது தகாததாகும். தலையோ, தலை மயிரோ கால்களில் படுவதும் தூய்மையைக் கெடுக்கும், பல்லாண்டு

களாகப் பேணிக்காத்த தூய்மை கெட்டது. இதற்காகவே இந்திரனும் காத்திருந்தான்; நேரம் வாய்த்தது; உள்ளம் மகிழ்ந்தான்; புன்முறுவல் பூத்தான்.

तस्याः शरीर विवरं प्रविवेश पुरन्दरः ।
गर्भं च सप्तधा राम बिभेद परमात्मवान् ॥
रुरोद सुस्वरं राम ! ततो दितिरबुध्यत ।
मा रुदो मा रुदश्चेति गर्भं शक्रोऽभ्यभाषत ॥

தஸ்யா: சரீர விவரம் ப்ரவிவேஶ புரந்தர: ।
கர்ப்பம் ச ஸப்ததா ராம! பிபேத பரமாத்மவான் ॥
ருரோத ஸுஸ்வரம் ராம! தத: திதி: அபுத்யத ॥
மா ருத: மா ருத: சேதி கர்ப்பம் ஶக்ர: அப்யபாஷத ॥

வா.ரா.பால.-46

உடனே மிகச் சிறியதோர் உருவம் பூண்டு அவள் வயிற்றினுள் நுழைந்து கருப்பையிலுள்ள சிசுவைத் தனது வஜ்ராயுதத்தினால் ஏழு கூறுகளாகப் பிளந்தான். வலி தாங்காது குழந்தை அழத்தொடங்கியது, இந்திரன் அதைப்பார்த்து (மா ருத:) அழாதே அழாதே எனக் கூறிக்கொண்டே மேலும் பிளக்கத் தொடங்கினான். திதி தேவி விழித்தாள்; நிகழ்வதை உணர்ந்தாள். உடனே ''இந்திரா! என் கருவைப் பிளந்தாய் எனினும், உயிர் போகும் வண்ணம் அதை மாய்க்காதே'' என்றாள்.

இந்திரனும் தாய்ச்சொல்லை மதித்து வஜ்ரஹஸ்தனாய் வெளியே வந்து கைகளைக் கூப்பிய வண்ணம் ''தாயே! தாங்கள் தூய்மை தவறியதை வாய்ப்பாகக் கொண்டு, 'ஆத தாயினம் ஆயாந்தம் ஹன்யாதேவ அவிசாரயன்', தன்னைக் கொல்ல வந்த பசுவைக்கூட கொல்லலாம் என்பதற்கிணங்க என்னைப் போரில் கொல்ல இருக்கும் மகவை ஏழு கூறுகளாக்கினேன். இப்பிழையைப் பொறுத்து மன்னிப்பீராக' என வேண்டினான். திதி ''இந்திரா! தவம் முடிய சில்லாண்டுகளேயிருக்க, கவனக் குறைவினால் நான் தூய்மை தவறினேன்; என் சிசு இந்நிலையை அடைய நானே காரணமானேன்; பிழை என்னு டையதே, உன்னுடையதன்று'' என்றாள்.

मम अपराधात् गर्भः अयं सप्तधा शकलीकृतः ।
न अपराधोऽस्ति देवेश तव अत्र बलसूदन ।
मरुतां सप्त सप्तानां स्थानपालाः भवन्त्विमे ।

மம அபராதாத் கர்ப்ப: அயம் ஸப்ததா ஶகலீக்ருத: ।
ந அபராத: அஸ்தி தேவேஶ ! தவ அத்ர பல ஸூதன! ॥
மருதாம் ஸப்த ஸப்தானாம் ஸ்தானபாலா: பவந்துஇமே ॥

வா.ரா.பால.-47

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீது உண்டோ மன்னும் உயிர்க்கு. குறள்-190

எண்பதற்கிணங்க திதி இந்திரனைச் சபிக்கும் ஆற்றல் பெற்றிருந்தும் தம் குற்றம் உணர்ந்து அவனைச் சபித்திலள்.*

''தவத்தின் பயனாய் இவ்வெழுவரையும் ஸப்தமருத் கணங்களுக்கும் (ஏழு வாயுக்கூட்டங்கட்கும்) அபிமானி தேவதைகளாக (லோகபாலர்களாக) நியமிக்கிறேன்' இவர்கள் எழுவருள் ஒருவன் ப்ரஹ்ம லோகத்திலும், ஒருவன் இந்த்ர லோகத்திலும், ஒருவன் வாயு என்ற பெயருடன் வானத்திலும், நால்வர் நான்கு திசைகளிலும் ஸஞ்சரிக்கட்டும். மாருதா: என நீ இட்ட பெயருடன் வழங்கப்படட்டும்'' என்று கூற, தேவேந்திரனும் ''அப்படியே ஆகுக'' என்று கூறி அவர்களை அபிமானி தேவதைகளாக நியமித்தான். இவர்கள் 1. ககனன், 2. ஸ்பர்சனன், 3. வாயு, 4. அனிலன், 5. ப்ராணன், 6. பிராணேச்வரன், 7. ஜீவன் என அழைக்கப்படுவார்கள்'' என்றான். இவ்விதம் திதியும் இந்திரனும் (தாயும் புதல்வனும்) கருத்தொற்றுமையுடன் ஸ்வர்க்கலோகம் சென்றனர்.

एष देशः स काकुत्स्थ महेन्द्राध्युषितः पुरा ।
दितिं यत्र तपस्सिद्धां एवं परिचचार सः ।
इक्ष्वाकोस्तु नर व्याघ्र पुत्रः परम धार्मिकः ।
अलम्बुसायां उत्पन्नः विशाल इति विश्रुतः ।
तेन च आसीत् इह स्थाने विशाला इति पुरी कृता ।

ஏஷதேச:ஸ காகுத்ஸ்த! மஹேந்த்ராத்யுஷித: புரா ।
திதிம் யத்ர தபஸ்ஸித்தாம் ஏவம் பரிசசார ஸ: ॥
இக்ஷ்வாகோ:து நரவ்யாக்ர! புத்ர: பரம தார்மிக: ॥
அலம்புஸாயாம் உத்பன்ன: விசால: இதிவிஶ்ருத: ॥
தேன ச ஆஸீத் இஹ ஸ்தானே விசாலா இதிபுரீ க்ருதா ॥

வா.ரா.பால.-47

விஶ்வாமித்ரர்: ''ராம! நான் உனக்குக் கூறிய சரித்திரத்தின்படி தேவருலகில் வசிக்க வேண்டிய இந்திரன் பல்லாயிரம் ஆண்டுகள் வசித்த இடம் இது, தனது பெரியதாயாரான திதிதேவிக்குப் பணிவிடை செய்து தன்னையும் தன் பதவியையும் பாதுகாத்துக்கொள்ள வாய்ப்பு அளித்த இடம் இது. உன் வம்சத்தில் இக்ஷ்வாகு எனும் அரசன் புகழ் பெற்று விளங்கியவன்.

குறிப்பு: இக்கதையினின்றும் மஹா விஷ்ணுவைச் சார்ந்தவர்கட்கு எதிராகச் செய்யும் எத்தகு முயற்சியும் வெற்றி பெறாது என்பதையும், ஆசாரம் (ஒழுக்கம்) இல்லாவிடில் அனுஷ்டானத்தின் (ஜப தபஸ்ஸுக் களின்) பெருமை குறையும் என்பதையும் உணர்வோமாக.

அவனுக்கும் அலம்புஸைக்கும் பிறந்தவன் விசாலன், அவனாலே இந்த நகர் தோற்றுவிக்கப்பட்டுக் குடியமர்த்தப்பட்டது. எனவே இந்நகரை விசாலா என அழைக்கின்றனர். விசாலனின் புதல்வர்களுள் ஸோமதத்தன் இளையவன். இவனுடைய குமாரன் காகுத்ஸ்தன், இவன் மகன் ஸுமதி. ஸுமதியே தற்சமயம் இந்நாட்டை ஆளும் அரசனாவான்.'' இவ்வாறு ராமனின் கேள்விக்கு விடையளித்து முடித்த முனிவர். ''இந்நகரில் இரவு தங்கி, நடந்த களைப்புத் தீர நன்கு தூங்குவோம்'' என்றார்.

ஸுமதியின் இராமானுபவம்

सुमतिस्तु महातेजाः विश्वामित्रं उपागतम् ।
श्रुत्वा नर वर श्रेष्ठः प्रत्युद्गच्छन् महायशाः ।
धन्योऽस्मि अनुगृहीतोऽस्मि यस्य मे विषयं मुनिः ।
तदन्ते सुमतिः वाक्यं व्याजहार महामुनिम् ।

ஸுமதி: து மஹாதேஜா: விச்வாமித்ரம் உபாகதம் ।
ஶ்ருத்வா நர வர ஶ்ரேஷ்ட: ப்ரத்யுத்கச்சன் மஹாயஶா: ॥
தன்யோஅஸ்மி அனுக்ருஹீதோஅஸ்மி யஸ்யமே விஷயம் முனி: ॥
ததந்தே ஸுமதி: வாக்யம் வ்யாஜஹார மஹாமுனிம் ॥

வா.ரா.பால.-47

ராஜகுமாரர்களும் முனிவரும் மறுநாள் காலை அனுஷ்டானத்தை முடித்துக் கொண்டு மிதிலை நோக்கிப் புறப்படத் தயாராயினர், இவர்கள் இரவில் வந்து தன் நாட்டில் தங்கியிருக்கும் செய்தி கிட்டிற்று அரசனுக்கு, பேராற்றலும் பெரும்புகழும் பெற்ற ஸுமதி, முனிவரை எதிர்கொள்ள விரைந்து வந்தான். முனிவரை அடிபணிந்து 'எனது நாட்டிற்குள் தாங்கள் வருகை தந்தது எனது பெரும் பாக்யமாகும்' என்று கூறி அஞ்ஜலி செய்து, தம் குல குருவைக் கொண்டு அர்க்ய பாத்யாதிகளையும் உபஹாரங்களையும் ஸமர்ப்பித்து 'தங்கள் தர்ஶனம் பெற்று உய்ந்தேன்' எனக்கூறி ஒருவருக் கொருவர் குஶலப்ரச்னங்கள் ஆனபிறகு ஸுமதி பேசலுற்றான்.

इमौ कुमारौ भद्रं ते देवतुल्य पराक्रमौ ।
गज सिंह गती वीरौ शार्दूल वृषभोपमौ ।
पद्म पत्र विशालाक्षौ खट्ग तूणी धनुर्धरौ ।
अश्विनौ इव रूपेण समुपस्थित यौवनौ ।
यदृच्छयैव गां प्राप्तौ देवलोकादिवामरौ ।

कथं पद्भ्यामिह प्राप्तौ किमर्थं कस्य बा मुने ॥
भूषयन्ताविमं देशं चन्द्रसूर्याविवाम्बरम् ।
परस्परेण सदृशौ प्रमाणेङ्गितचेष्टितैः ॥
किमर्थंच नरश्रेष्ठौ सम्प्राप्तौदुर्गमे पथि ।
वरायुधधरौ वीरौ श्रोतुमिच्छामि तत्त्वतः ॥

இமௌ குமாரௌ பத்ரம் தே தேவதுல்ய பராக்ரமௌ ।
கஜ ஸிம்ஹ கதீ வீரௌ ஶார்தூல வ்ருஷபோபமௌ ॥
பத்ம பத்ர விஶாலாக்ஷௌ கட்க தூணீ தனுர்தரௌ ।
அஶ்விநௌ இவரூபேண ஸமுபஸ்தித யௌவனௌ ।
யத்ரு ச்ச யைவ காம் ப்ராப்தௌ தேவலோகாத் இவ அமரௌ ।
கதம் பத்ப்யாம் இஹப்ராப்தௌ கிமர்த்தம்? கஸ்யவா? முனே ॥
பூஷயந்தௌ இமம்தேஶம் சந்தர ஸூர்யௌ இவ அம்பரம் ।
பரஸ்பரஸ்ய ஸத்ருஶௌ ப்ரமாணேங்கித சேஷ்டிதை: ॥
கிமர்த்தம் ச நரஶ்ரேஷ்டௌ ஸம்ப்ராப்தௌ துர்கமே பதி ।
வராயுத தரௌ வீரௌ ச்ரோதும் இச்சாமி தத்வத: ॥

வா.ரா.பால.-48

''முனிவரே! இச்சிறுவர்கள் யார்?'' நாம் கேட்பதால் இக்குமாரர்கட்கு த்ருஷ்டி விழுமோ (கண் எச்சில் படுமோ) என அஞ்சி மங்களாஶாஸனம் பண்ணுகிறார். ''பத்ரம் தே என்று (திருமேனியைக் கண்ணுற்றால் மஹா விஷ்ணுவை ஒத்த பராக்ரமம் (பேராற்றல்) வெளிப்படுகிறது. நான் தொலைவிலிருந்து இவர்கள் வருகையைப் பார்த்த பொழுது யானையைப் போன்று அசைந்தாடி மெதுவாக வருகின்ற கம்பீரமான நடையழகைக் காண்கின்றேன். எதிரே வரும் ஶத்ருக்களையெல்லாம் தன் வீர கர்ஜனையால் ஓடி ஒளியச் செய்கின்ற, குதித்தெழும் சிங்கம் போன்று தடையற்ற மிடுக்கான நடையழகும், பதினாறடி வேங்கை போன்று பிறருக்கு பயத்தை விளை விக்கும் நடையழகும், யானையைப் போன்ற மிடுக்கான உல்லாஸ நடையும் உள்ள இவர்களின் தோற்றம் என் மனதைக் கவர்கின்றதே!

''என்னே! இவ்வீரர்களின் திருக்கண்களின் அழகு. கர்ணாந்த விச்ராந்த மாய், மலர்ந்த தாமரை மலர் போன்று விசாலமாய், இம்மலரின் இதழ் போன்று நீண்டு செவ்வரியோடியவாய் காண்போரின் உள்ளத்தைப் பேதமை செய்கின்றனவே! என்ன ஸௌந்தர்யம் ! என்ன லாவண்யம் ! இடுப்பிலே கத்தி, தோளிலே அம்பறாப்பை, கையிலே வில், தேஹகாந்தி யையும், அவய ஸௌந்தர்யத்தையும் பார்த்தாலோ வாலிபமும் அழகும் மிளிரும் அஶ்வினீ குமாரர்கள் தவறுதலாக பூலோகம் வந்து விட்டார்களோ! கவர்ச்சியினாலும் பராக்ரமத்தாலும் பூமியை அணி செய்யச் சந்திரனும் ஸூர்யனும் ஒரு சேர

இங்கு தோன்றினார்களோ, ஆகா! என்ன அழகு ! என்ன கவர்ச்சி ! ஒரே உயரம், ஒரே பருமன், ஜாடை, பேச்சு, மந்தஹாஸம், ப்ரு விலாஸம் (புருவத் தோற்றம்) ராஜ நடை, கூரிய பார்வை, கருணாகடாக்ஷம் (அருள் நோக்கு) கலங்கா மனம், எல்லாம் ஒருவரைப் பார்த்தால் ஒருவரைப் பார்க்க வேண்டாமே, புதர்களும் முட்களும் நிறைந்த இக்காட்டுப்பாதையில் ஏன்? எவ்வாறு? நடத்தி அழைத்து வந்தீர்? இன்னல்களைப் பொறுமையுடன் ஏற்று இவர்கள் நடந்துவரக் காரணம் தான் என்ன? உண்மையைச் சொல்லி அருள்வீர்'' என பல கேள்விகளை அடுக்கினான் ஸுமதி.

अयोध्याधिपतेः पुत्रौ राज्ञो दशरथस्य हि ।
मम यज्ञसमाप्त्यर्थमागतौ रामलक्ष्मणौ ॥
पूजयामास विधिवत् सत्कारार्हौ महाबलौ ।
उष्य तत्र निशामेकां जग्मतुर्मिथिलां ततः ॥

விச்வாமித்ரர்:-

அயோத்யாதி பதே: புத்ரௌ ராஜ்ஞ: தஶரதஸ்யஹி ।
மம யஜ்ஞ ஸமாப்த்யர்த்தம் ஆகதௌ ராமலக்ஷ்மணௌ ॥
பூஜயாமாஸ விதிவத் ஸத்காரார்ஹௌ மஹாபலௌ ।
உஷ்ய தத்ர நிஶாம்ஏகாம் ஜக்மது: மிதிலாம் தத: ।

வா.ரா.பால.-48

'இவர்கள் தசரத சக்ரவர்த்தியின் குமாரர்கள், அரக்கர்களை மாய்த்து எனது வேள்வியைக் காத்தனர். பெயர் ராமன், லக்ஷ்மணன்' என அறிமுகம் செய்து வைத்தார் முனிவர். உண்மையைக் கேட்ட ஸுமதி மகிழ்ச்சி பொங்க ''என்னே எனது பாக்யம்! சக்ரவர்த்தியின் குமாரர்கள் எனது விருந்தினர் ஆனார்களே'' என நினைத்து அரசர்கட்குரிய உபசரிப்புகளைச் செய்தான், முனிவர்கட்கேற்ப விஶ்வாமித்ரரையும் மற்ற முனிவர்களையும் உபசரித் தான், அன்றிரவு அங்கு தங்கி பின்னிரவில் மிதிலையை நோக்கி நடந்தனர்.

கௌதமரின் சாபம்

इदमाश्रमसंकाशं किंन्विदं मुनिवर्जितम् ।
गौतमस्य नरश्रेष्ठ पूर्वमासीत्महात्मनः ।
स चात्र तप आतिष्ठदहल्यासहितः पुरा ।
तस्यान्तरं विदित्वा तु सहस्राक्षः शचीपतिः ।
संगमं त्वहमिच्छामि त्वया सह सुमध्यमे ।
मुनिवेषं सहस्राक्षं विज्ञाय रघुनन्दन ।
मतिं चकार दुर्मेधा देवराजकुतूहलात् ॥

இதம் ஆஶ்ரமஸங்காஶம் கிந்நு இதம் முனிவர்ஜிதம் ।
கௌதமஸ்ய நரஶ்ரேஷ்ட ! பூர்வம் ஆஸீத் மஹாத்மன: ॥
ஸ சாத்ர தப: ஆதிஷ்டத் அஹல்யா ஸஹித: புரா ॥
தஸ்ய அந்தரம் விதித்வாது ஸஹஸ்ராக்ஷ: ஶசீபதி: ॥
ஸங்கமம் துஅஹம் இச்சாமி த்வயா ஸஹ ஸுமத்யமே ॥
முனிவேஷம் ஸஹஸ்ராக்ஷம் விஜ்ஞாய ரகுநந்தன ।
மதிம் சகார துர்மேதா: தேவராஜ குதூஹலாத் ॥

வா.ரா.பால.-48

விசாலா நகரிலிருந்து புறப்பட்ட மூவரும் மிதிலையை நெருங்கினர். ஒரு சிறிய காடு மிதிலையின் அருகில்; அதைக் கடக்கும்போது ராமன் எதிரே பார்த்தான். ஒரு இடம் அவனைக் கவர்ந்தது, அது மிகவும் பொலிவுடன் புண்யபூமி போன்று விளங்கியது. ஆனால் அங்கு ஒரு குடிசையோ முனிவரோ தென்படவேயில்லை. எனினும் ஒரு மஹான் வாழ்ந்த இடமாக இருக்க வேண்டும். அழகாக உள்ள இந்த ஆஶ்ரமம் எந்த முனிவருடையது சொல்ல வேண்டுமென்று கேட்க, விஶ்வாமித்ரர் ''இது மஹாத்மா கௌதம முனிவருடையது. தன் தர்மபத்னியான அஹல்யையுடன் தவம் புரிந்து வந்தார். ஒருநாள் ஸ்நானத்திற்காக முனிவர் வெளியே சென்றபொழுது தேவலோகத்திலிருந்து வந்த இந்திரன் கௌதம முனிவரின் வேடம் பூண்டு ஆச்ரமத்தினுள் நுழைந்தான், அவளை அடைய முற்பட்டான். முனிவர் திரும்பி வருவதற்குரிய காலம் ஆகவில்லை, முனிவர் அனுஷ்டானத்திற்குரிய காலத்தில் ஆசையை வெளியிட மாட்டார். இந்திரன் தன்னோடு சேரவேண்டுமென்று ஆவலுள்ளவனாய் வந்தவன் என்பதையும் அறிந்தும் அஹல்யை த்ரிலோக பதியான தேவேந்திரனே வந்திருக்கிறானே என புத்திகெட்டு மயங் கினாள்'' என்றார்.

தேவேந்திரன் அஹல்யயை விரும்பியதற்கான காரணத்தை உத்தர காண்டம் 27வது ஸர்க்கம் கூறுகிறது.

सोऽहं तासां विशेषार्थं स्त्रियमेकां विनिर्ममे ।
यद्यत्प्रजानां प्रत्यङ्गं विशिष्टं तत्तदुद्धृतम् ।
ततो मया रूपगुणै रहल्या स्त्री विनिर्मिता ।
हलं नामेह वैरूप्यं हल्यं तत्प्रभवं भवेत् ।
यस्मान्न विद्यते हल्यं तेनाहल्येति विश्रुता ।
भविष्यतीति कस्यैषामम चिन्ता ततोऽभवत्
त्वंतु शक्र तदा नारीं जानीषे मनसा प्रभो ।
स्थानाधिकतया पत्नी ममैवेति पुरन्दर ॥

ஸோஅஹம் தாஸாம் விஶேஷார்த்தம் ஸ்த்ரியம் ஏகாம் விநிர்மமே ।
யத் யத் ப்ரஜானாம் ப்ரத்யங்கம் விஶிஷ்டம் தத்தத் உத்ருதம் ॥
ததோ மயா ரூபகுணை: அஹல்யா ஸ்த்ரீ விநிர்மிதா ।
ஹலம் நாம இஹ வைரூப்யம் ஹல்யம் தத்ப்ரபவம் பவேத் ॥
யஸ்மாத் நவித்யதே ஹல்யம் தேன அஹல்யா இதி விஶ்ருதா ॥
பவிஷ்யதி இதி கஸ்ய? ஏஷா மமசிந்தா தத: அபவத் ॥
த்வம் து ஶக்ர ததா நாரீம் ஜானீஷே மனஸா ப்ரபோ ।
ஸ்தானாதிகதயா பத்னீ மம ஏவ இதி புரந்தர ॥

நான்முகன் இந்திரனிடம் கூறுவான். ''இந்திரா ! நான் எத்தனையோ பெண்களை ஸ்ருஷ்டி பண்ணினேன், முழு அழகுடன் ஒரு பெண் கூட அமையவில்லை. (இக்காலத்திலும் கல்யாணத்திற்குப் பெண் பார்க்கிறார்கள், ஏதாவது குறை சொல்கிறார்கள். 'பெண்ணைப் பார்த்தோம் நல்ல சிகப்பு, ஆனால் முகத்தில் களையே இல்லை. இந்தப் பெண் நல்ல பொலிவு, களை, ஆனால் அட்டைக்கரி பரவாயில்லை என்றாலும் சிடுமூஞ்சி, குணமில்லை' என்று.)

இதற்காகப் புதுமுறையில் ஒரு பெண்ணைப் படைத்தேன், இதுவரை படைத்த பெண்களிடம் மிக அழகாக அமைந்த உறுப்புகளைத் தேடிப் பார்த்து, ஒவ்வொருவரிடமும் உள்ள அழகுப் பகுதியை மாத்திரம் திரட்டி எடுத்து, நற்குணங்களையும் சேர்த்து ஒரு பெண்ணாகப் படைத்தேன். அப்பெண்ணிடம் பிறர் சொல்லும் எந்தக் குற்றமோ குறையோ கிடையாது. அதனால் அவளுக்கு 'அஹல்யா' என்ற பெயரை நானே சூட்டினேன். ஹல்யம் என்றால் மாசு, மறு, குற்றம், விகாரம், இவை இல்லாதவள் அஹல்யா, இவளைப் படைத்ததும் என்னைக் கவலை ஆட்கொண்டது. இவ்வாறு பார்த்துப் பார்த்து அழகுக் கடலாய், குணக்குன்றாய் படைத்த

பெண்ணுக்கு ஏற்ற புருஷன் வேண்டுமே, குரங்கின் கைப் பூமாலையாகக் கூடாதே!'' என்றார் பிரமன்.

இதைக்கேட்ட இந்திரன் ''ரத்னஹாரீ து பார்த்திவ:'' நாட்டிலுள்ள சிறந்த பொருள்களை எல்லாம் கவர்ந்து அனுபவிப்பவன் அரசன் என்பதற் கிணங்க த்ரிலோகாதிபதியான எனக்கே அஹல்யை உரியவள்'' என நினைத் தான். அப்பொழுது அருகிலிருந்த நாரதர் ''யார் மூன்று முறை பூ ப்ரதக்ஷிணம் செய்து முதலில் வருகிறாரோ, அவருக்குத்தான் என் தங்கையை மணம் செய்து கொடுப்போம்'' என்று கூறினார். அதை தந்தை நான்முகனும் ஏற்றார், உடனே இந்திரனும் ஐராவதத்தின் மீது ஏறி பூப்ரதக்ஷிணம் செய்யத் தொடங்கினான். கௌதம முனிவருக்கே கொடுக்க வேண்டுமென்கிற பிரமனின் எண்ணத்தை அறிந்த நாரதர் உடனே கௌதமரின் ஆய்ரமத்திற்கு வந்தார். அப்பொழுது ஆய்ரமத்தில் ஒரு பசு கன்றை ஈன்று கொண்டிருந்தது. உடனே கௌதமரை அழைத்து, அதை மூன்று முறை வலம் வரச் செய்தார். பிறகு பிரமனிடம் அழைத்துச் சென்று முனிவர் கன்று ஈனும் பசுவை மும்முறை ப்ரதக்ஷிணம் செய்தார். இதை பூப்ரதக்ஷிணமாக சாஸ்த்ரம் பேசுகிறது.

आदित्य चन्द्रौ अनिलोऽनलश्च द्यौर्भूमिरापः हृदयं यमश्च ।
अहश्च रात्रिश्च उभे च सन्ध्ये धर्मोऽपि जानाति नरस्य वृत्तम् ॥

ஆதித்ய சந்த்ரௌ அனில: அனல: ச த்யௌ: பூமி: ஆப:
ஹ்ருதயம் யம: ச ।
அஹ: ச ராத்ரி: ச உபே ச ஸந்த்யே தர்ம: அபி ஜானாதி
நரஸ்ய வ்ருத்தம் ॥

''ஸூரியன், சந்திரன், காற்று, அக்னி, வானம், பூமி, நீர், மனது, யமன், பகல், ராத்ரி, காலை, மாலை இரு ஸந்திகள், தர்மம் ஆகிய பதின்மூவரும் மனிதனின் செய்கைகட்கு ஸாக்ஷிகள் என்ற விதிப்படி பசுவை வலம் வந்ததிற்கு இவர்கள் ஸாக்ஷிகள் ஆவர்,'' என நாரதர் சொன்னதும் கௌத மருக்கே மணம் முடித்தார் பிரமன். பின்னர் வந்த இந்திரன் ஏமாந்தான். தேவர்களும் தன் தலைவனுக்கு அஹல்யை கிடைக்கவில்லையே என வருந்தித் திரும்பினர்.

संक्रुद्धः त्वं हि कामात्मा गत्वा तस्याऽश्रमं मुनेः ।
दृष्टवांश्च तदा तां स्त्रीं दीप्तामग्नि शिखामिव

ஸம்க்ருத்த: த்வம் ஹி காமாத்மா கத்வா தஸ்ய ஆய்ரமம் முனே: ।
த்ருஷ்டவான் ச ததா தாம் ஸ்த்ரீம் தீப்தாம் அக்னி சிகாம் இவ ॥

வா.ரா. - உத்ரகாண்டம்

இந்திரன் அஹல்யையைப் பெறாத கோபத்தினால் அவளை அடைந்தே தீர்வது என எண்ணினான்; ஆஶ்ரமத்தினுள் நுழைந்தான், அவளோ சுடர் விட்டு ஜொலிக்கும் தீக்கதிர் போன்று காட்சி அளித்தாள். உடனே கௌதமரின் வேடம் தாங்கி அருகிற் சென்றான்.

இவ்வுத்தர காண்டக் கதையின்படி அஹல்யையை மணக்க விரும்பியவன் இந்திரன். அது நிறைவேறாமற் போகவே காமுகனாய் வந்தான் என்று தெரிகிறது. முனிவர் வேடத்தில் வந்தாலும் ''இவன் இந்திரனே'' என்பதை அஹல்யை உணர்ந்தாள், ஆயினும் தன்னை மீட்டுக் கொள்ளவில்லை. அப்பொழுது அவனை 'தேவராஜன், மூவுலகையும் ஆள்கின்றவன்' என நினைத்தாளே ஒழிய, தன் கணவர் மூவுலகங்களையும் உண்டு உமிழ்ந்து காக்கும் பரமனையே ஆள்பவர் என்பதை அக்கணம் மறந்து விட்டாள் போலும். காமம் பொல்லாததன்றோ!

अथाब्रवीत् सुरश्रेष्ठं कृतार्थेनान्तरात्मना ।
कृतार्थास्मि सुरश्रेष्ठ गच्छ शीघ्रमितः प्रभो ॥
गौतमं स ददर्शाथ प्रविशन्तं महामुनिम् ।
देवदानवदुर्धर्षं तपोबलसमन्वितम्
गृहीतसमिधं तत्र सकुशं मुनिपुङ्गवम् ।
दृष्ट्वा सुरपतिस्त्रस्तो विषण्णवदनोऽभवत् ॥
अथ दृष्ट्वा सहस्राक्षं मुनिवेषधरं मुनिः ।

அத அப்ரவீத் ஸுரஶ்ரேஷ்டம் க்ருதார்த்தேன அந்தராத்மனா ।
க்ருதார்த்தா அஸ்மி ஸுரஶ்ரேஷ்ட கச்சஶீக்ரம் இத: ப்ரபோ ॥
கௌதமம் ஸ: ததர்ஶ அத ப்ரவிஶந்தம் மஹாமுனிம் ।
தேவதானவதுர்தர்ஷம் தபோபல ஸமன்விதம் ॥
க்ருஹீத ஸமிதம் தத்ர ஸகுஶம் முனிபுங்கவம் ।
த்ருஷ்ட்வா ஸுரபதி: த்ரஸ்த: விஷண்ணவதன: அபவத் ॥
அத த்ருஷ்ட்வா ஸஹஸ்ராக்ஷம், முனிவேஷதரம் முனி:

வா.ரா.பால.-48

அஹல்யை விரும்பியதைப் பெற்ற மனத்தினளாய், விரைந்து வெளியேறும்படி இந்திரனைப் பணித்தாள். திரும்பும்பொழுது தேவர் களாலும் அஸுரர்களாலும் அசைக்க முடியாத தவவலிமை பெற்ற கௌதமர் ஹோமத்திற்குத் தேவையான ஸமித்தையும், குஶத்தையும் கையில் தாங்கிய வராய் உள்ளே நுழைந்தார்.

புக்கு அவளோடும் காமப் புது மண மதுவின் தேறல்
ஒக்க உண்டு இருத்தலோடும் உணர்ந்தனள், உணர்ந்த பின்னும்

தக்கது அன்று என்ன ஓராள் தாழ்ந்தனள் இருப்பத் தாழா
முக்கணன் அனைய ஆற்றல் முனிவனும் முடுகி வந்தான்.

க.ரா. பால.-அகலிகை.

தாழா : குறைவற்ற

முனிவர் என எண்ணி இந்திரனோடு சேர்ந்தவள், பின்னர் இவன் முனிவரல்லன் இந்திரனே என்று அறிந்த பிறகும் இது தக்கதன்று என நினையாது தாழ்ந்த நிலையில் இருந்தனள். சிவனை ஒத்த ஆற்றல் மிக்க கௌதமரும் விரைந்து ஆஶ்ரமத்திற்கு வந்தாராம். எதிரே அவரைக் கண்டதுமே இந்திரன் அச்சத்தினால் நடுங்கி ஒடுங்கி முகம் வெளுத்துக் குன்றிப்போனான். கௌதமரும், தன் வேடத்தில் இந்திரன் வந்திருப்பதை உணர்ந்தார். ஞானத்ருஷ்டியினால், நிகழ்ந்ததை அறிந்தார். (இந்திரன் பூனை வேடத்தில் வெளியேறியதாக புராணாந்தரம் கூறும்)

புகை எழுந்தன உயிர்தொறும், எயில் பொடித்தவனில்
நகை எழுந்தன நிவந்தன புருவம் நல் நுதலில்
சிகை எழும் சுடர் விழியினன், அசனியும் திகைப்ப
''மிகை எழுந்திடு சதமக! கேள்'' என வெகுண்டான்.

க.ரா.பால.-அகலிகை

உயிர் : மூச்சு, எயில் : பொடித்தவனின் : மும்மதில்களை எரித்த சிவனைப் போல, நிவந்தன : ஏறின

மூச்சுக் காற்றில் புகையெழ, த்ரிபுர ஸம்ஹாரம் செய்த சிவன் போல கோபச் சிரிப்பு தோன்ற, புருவங்கள் நெறிந்து நெற்றியில் ஏற, கண்களில் தீப்பொறி பறக்க பெருஞ்சினத்தோடும் கௌதமர் இடியை ஒத்த குரலோடும் இந்திரனை நோக்கிப் பேசினார்.

मम रूपं समास्थाय कृतवानसि दुर्मते ।
अकर्तव्यमिदं यस्माद् विफलस्त्वं भविष्यसि ।।
पेततुर्वृषणौ भूमौ सहस्राक्षस्य तत्क्षणात् ।।

மம ரூபம் ஸமாஸ்த்தாய க்ருதவான் அஸி துர்மதே ।
அகர்த்தவ்யம் இதம் யஸ்மாத் விபல:த்வம் பவிஷ்யஸி ॥
பேதது: வ்ருஷணௌ பூமௌ ஸஹஸ்ராக்ஷஸ்ய தத்க்ஷணாத் ॥

வா.ரா.பால.-48

ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறி உனக்கு உண்டாக என்று
ஏயினன், அவைஎலாம் வந்து இயைந்தன இமைப்பின் முன்னம்.

க.ரா.பால.-அகலிகை

''ஏ முட்டாள்! என் வேடம் தாங்கிச் செய்யக்கூடாததைச் செய்தாய்! அந்த இன்பநுகர்ச்சிக்குரிய இந்த்ரியம் உனக்கு இல்லாமல் போகக்கடவது'' எதை நாடி மாதைக் கெடுத்தாயோ அவ்வறிகுறி உன் உடம்பெல்லாம் ஆயிரம் உண்டாகுக! ஒன்றை நாடி வந்தாய், ஆயிரம் கொடுத்திருக்கிறேன், வேறு எங்கும் சென்று பிறரைக் கெடுக்காமல் உன் உடம்பில் அல்லும் பகலும் அவற்றைக் கண்டுகளித்திடு''. *(பின்னர் அவன் வேண்ட அவை பிறருக்கு கண்களாகத் தோற்றமளிக்கட்டும்'' என்றாராம், அதனால் ஸஹஸ் ராக்ஷன் ஆயிரங்கண்ணன் என்று பெயர் வந்தது. இது புராணாந்தரத்தில் உள்ளது).*

यस्मान्मे धर्षिता पत्नी त्वया वासव निर्भयम्
तस्मात्त्वं समरे राजन् शत्रु हस्तं गमिष्यसि ।।

யஸ்மாந்மே தர்ஷிதா பத்னீ த்வயா வாஸவ நிர்பயம் ।
தஸ்மாத் த்வம் ஸமரே ராஜன் ஶத்ருஹஸ்தம் கமிஷ்யஸி ।।

வா.ரா. உத்தர-31

'சிறிதும் பயமின்றி என் மனைவியைக் கெடுத்த நீ போரில் தோற்று கைதியாக அவமானப்படுவாயாக' என்றும் சபித்தார். (எனவே இந்திரஜித்தி னால் தோற்கடிக்கப்பட்டு பின்னர் நான்முகனால் விடுவிக்கப்பட்டான்)

वायु भक्षा निराहारा तप्यन्ती भस्मशायिनी ।
अदृश्या सर्वभूतानामाश्रमेऽस्मिन् वसिष्यसि ।।

வாயு பக்ஷா நிராஹாரா தப்யந்தீ பஸ்ம ஶாயினீ ।
அத்ருஶ்யா ஸர்வபூதானாம் ஆஶ்ரமே அஸ்மின் வஸிஷ்யஸி ।।

வா.ரா.பால.-48

மெல்லியலாளை நோக்கி விலைமகள் அனைய நீயும்
கல்இயல் ஆதி என்றான் கருங்கலாய் மருங்குவீழ்வாள்

க.ரா.பால.-அகலிகை

रूप यौवन संपन्ना यस्मात्त्वं अनवस्थिता ।
तस्मा द्रूपवती लोके नत्वमेका भविष्यसि ।।
रूपं च ते प्रजाः सर्वाः गमिष्यन्ति न संशयः ।
यत् तत् एकं समाश्रित्य विभ्रमो अयमुपस्थितः ।

ரூப யௌவன ஸம்பன்னா யஸ்மாத் த்வம் அனவஸ்த்திதா ।
தஸ்மாத் ரூபவதீ லோகே நத்வம் ஏகா பவிஷ்யஸி ।।
ரூபம் ச தே ப்ரஜா: ஸர்வா: கமிஷ்யந்தி ந ஸம்ஶய: ।
யத் தத் ஏகம் ஸமாஶ்ரித்ய விப்ரம: அயம் உபஸ்த்தித: ।

வா.ரா.உத்தர.-30

இந்திரனைச் சபித்த பிறகு அஹல்யையை நோக்கி ''நீ உண்ண உணவின்றி, காற்றையே உணவாகக் கொண்டு, சாம்பர் முட்டில் படுத்து, பிறர் கண்ணுக்கு புலப்படாதவளாய்த் தவித்துக் கொண்டு இங்கேயே வசிக்கக் கடவாய்''.

(இந்திரன் செய்த பிழையினால், கணவன் இட்ட சாபத்தினால் பீடிக்கப்பட்டு சிலையாக (கல்லாக)க் கிடந்தாள், என பாத்மம் கூறும். இதையே கம்பரும் ''கருங்கலாய் மருங்கு வீழ்வாள்'' என்றார்.)

''பார்யா ரூபவதீ சத்ரு'' - ''அழகுள்ள மங்கை, கொண்டவனுக்கு பகையாவாள்'' என்று சொல்வதுண்டு, உன்னை அழகும் யௌவனமும் தான் கெடுத்தன. அழகினால் நிலை தடுமாறினாய். எனவே இவ்வுலகில் நீ ஒருத்தி மாத்திரம் ஸௌந்தரியாக—அழகியாக இனி இருக்க மாட்டாய். உன் அழகு உலகிலுள்ள எல்லா மக்களையும் அடையட்டும்'' என்றும் சபித்தார்.

अज्ञानात् धर्षिता नाथ त्वद्रूपेण दिवौकसा
न कामकारात् विप्रर्षे प्रसादं कर्तु मर्हसि ॥

அஜ்ஞானாத் தர்ஷிதா நாத! த்வத்ரூபேண திவௌகஸா ।
நகாமகாராத் விப்ரர்ஷே ப்ரஸாதம் கர்த்தும் அர்ஹஸி ॥

வா.ரா.உத்தர.-30

அஹல்யை கணவரை நோக்கி ''நாதா! அறியாமையினால் உம்மையே உரித்துவைத்தாற் போன்று உமது உருவம் பூண்ட தேவனால் ஏமாற்றப் பட்டேன். அதில் எனக்கு உடன்பாடு கிடையாது. நான் விரும்பி இது நிகழவில்லை. பொறுமையையும் புலனடக்கத்தையும் தனமாகப் போற்றும் அந்தணரான மஹர்ஷியே! கோபத்தை அடக்கி இவ்வடிமையை அருள்வீராக என்றாள்.''

यदा त्वेतद् वनं घोरं रामो दशरथात्मजः ।
आगमिष्यति दुर्धर्षस्तदा पूता भविष्यसि ॥
तस्यातिथ्येन दुर्वृत्ते लोभमोहविवर्जिता ।
मत्सकाशं मुदा युक्ता स्वं वपुर्धारयिष्यसि ॥

யதா து ஏதத் வனம் கோரம் ராம: தசரதாத்மஜ: ।
ஆகமிஷ்யதி துர்தர்ஷ: ததா பூதா பவிஷ்யஸி ॥
தஸ்ய ஆதித்யேன துர்வ்ருத்தே! லோப மோஹ விவர்ஜிதா ।
மத்ஸகாஶம் முதாயுக்தா ஸ்வம் வபு: தாரயிஷ்யஸி ॥

வா.ரா.பால.-48

''செய்கையினால் கெட்டவளே! ஒரு ஸமயம் எம்பெருமான் தசரத சக்ரவர்த்திக்கு மகனாய் அவதரித்து ராமன் எனப் பெயர் பூண்டு இந்த கோரமான காட்டிற்கு வருவான். அப்பொழுது நீ தூய்மையைப் பெறுவாய், அப்பொழுது தீய ஆசையையும் மதிமயக்கத்தையும் விலக்கி இந்த ஆஶ்ரமத்தில் வரவேற்று அவனுக்கு விருந்தளித்து உபசரிப்பாய். அப்பொழுது ராமானு க்ரஹத்தினால் பழைய உருவம் பெற்று மகிழ்ச்சியோடு என்னோடு மீண்டும் சேர்வாய்'' என ஶாப விமோசனத்தையும் அருளினார் முனிவர்.

कुर्वता तपसो विघ्नं गौतमस्य महात्मनः ।
क्रोधमुत्पाद्य हि मया सुरकार्यमिदं कृतम् ॥
अफलोऽस्मि कृतस्तेन क्रोधात् सा च निराकृता ।
शापमोक्षेण महता तपोऽस्यापहृतम् मया ।
अग्नेस्तु वचनं श्रुत्वा पितृदेवाः समागताः ।
उत्पात्य मेषवृषणौ सहस्राक्षे न्यवेशयन् ॥

குர்வதா தபஸ: விக்னம் கௌதமஸ்ய மஹாத்மன: ।
க்ரோதம் உத்பாத்ய ஹி மயா ஸுரகார்யம் இதம்க்ருதம் ॥
அபல: அஸ்மி க்ருத: தேன க்ரோதாத் ஸா ச நிராக்ருதா ।
ஶாபமோக்ஷேண மஹதா தப: அஸ்ய அபஹ்ருதம் மயா ॥
அக்னே: து வசனம் ஶ்ருத்வா பித்ருதேவா: ஸமாகதா: ।
உத் பாத்ய மேஷ வ்ருஷணௌ ஸஹஸ்ராக்ஷே ந்யவேசயன் ॥

வா.ரா.பால.-49

கௌதம ஶாபம் பெற்றுச் சென்ற இந்திரன் தேவர்களை அழைத்துப் பேசினான். ''தேவர்களே. தேவகார்யமாக கௌதமரின் தபஸ்ஸைக் கெடுக்கச் சென்றேன். அவர் மிகுதியாக தவத்தை மேற்கொண்டவரான படியால் விச்வாமித்ரர் போன்று நமக்குத் தீமை விளைவிக்க முற்படுவார்; அவரோ பரம சாந்தர். கோபத்தை அடக்கியவர், கோபத்தைக் கிளப்பினால் தான் பிறரை ஶபிப்பார். அப்பொழுது தவம் அழியும், வலிமை குன்றும். அவருக்குக் கோபத்தை மூட்டவே அஹல்யையை நாடினேன். என்னையும் ஶபித்தார், அவளையும் ஶபித்து ஒதுக்கினார், தேவ கார்யம் நிறைவேறியது. ஆனால் ஶாபத்தினால் எனக்கு இன்பநுகர்ச்சிக்குரிய புலன் இல்லாது போய் விட்டது'' என்றான். உடனே தேவர்கள் பித்ரு தேவதைகளை வேண்ட அவர்கள் யாகத்தில் ஹவிஸ்ஸுக்காக இருந்த ஆட்டின் குறியைக் கொணர்ந்து இந்திரனுக்குப் பொருத்தினராம். (இக்காலத்தில் ஒருவருடைய உறுப்பை பிறருக்கு அறுவை சிகித்ஸ்யை செய்து பொருத்துவதைப் பார்க்கிறோம், இத்தகு மருத்துவம் புராண காலத்திலேயே தொடங்கப் பெற்றது போலும்.)

ஸ்ரீ பாதரேணுவின் பெருமை

तदागच्छ महातेजा आश्रमं पुण्यकर्मणः ।
तारयैनां महाभागामहल्यां देवरूपिणीम् ।
विश्वामित्रवचः श्रुत्वा राघवः सहलक्ष्मणः ।
विश्वामित्रं पुरस्कृत्य आश्रमं प्रविवेश ह ॥

தத் ஆகச்ச மஹா தேஜா । ஆஶ்ரமம் புண்யகர்மண: ।
தாரய ஏனாம் மஹாபாகாம் அஹல்யாம் தேவரூபிணீம் ॥
விஶ்வாமித்ரவச: ஶ்ருத்வா ராகவ: ஸஹ லக்ஷ்மண: ।
விஶ்வாமித்ரம் புரஸ்க்ருத்ய தம் ஆஶ்ரமம் ப்ரவிவேஶஹ ॥

வா.ரா.பால.-49

விஶ்வாமித்ரர், ''ராமா! உனது வருகையின் பொழுது, அஹல்யைக்குச் சாப விமோசனத்தை கௌதமர் கூறியிருக்கிறார். 'விப்ரவாக்யோ ஜனார்தன:' என்பர். அவர் சொல் நிறைவேறுவது உன்னாலன்றோ! அதோடு அவர் பலப்பல புண்ய கர்மாக்களைச் செய்தவர். உனது வருகையே அவர் ஆற்றிய புண்ய கர்மாக்களின் பலனாகும். எனவே ஆச்ரமத்திற்குள் போவோம், வா'' என்று அழைத்தார். ''இதுவரை அஹல்யையினுடைய தீய ஒழுக்கத்தைச் சொன்னதினால், பேய், பிசாசு போன்று பிறர் கண்ணில் படாமல் இருப்பவளுடைய இடத்திற்கு எப்படிச் செல்வது எனத் தயங்காதே, அவளுடைய மாசுகளை எல்லாம் தீயினில் தூசாக்கும் தன்மையையுடைய ஆற்றலைப் பெற்ற மஹா தேஜஸ்வியாயிற்றே நீ! அதோடு அவள் மானிடப்பெண் அல்லள், தேவமாது ஆயிற்றே.

மனிதர்கட்காக பரமன் விதித்த சாஸ்த்ரங்களின் ஆணைகட்கு உட்பட்டவள் அன்றே. அதோடு அவள் உன்னை ஆராதிக்கும்படி கணவன் இட்ட கட்டளையாகிற பெரும் பாக்யத்தை பெற்றவளாயிற்றே, நீ ஆச்ரமத்தினுள் புகுந்து அவள் பெயருக்கேற்ப குற்ற மற்றவளாகக் கரையேற்றி அஹல்யையாகச் செய்ய வேண்டியது உனது பொறுப்பாயிற்றே'', என விஶ்வாமித்ரர் கூறியதும், அவரையே முன்னிட்டுக் கொண்டு தம்பி லக்ஷ்மணனோடு கௌதமராஶ்ரமத்தினுள் நுழைந்தார். இங்கு வால்மீகி, ராமன் ஆச்ரமத்தினுள் நுழைவதைச் சித்தரித்திருப்பது மிக அழகானது. ஏற்படப் போகும் சாப விமோசனம் ஆசார்யனின் பாத தூளியாலா? இராமனின் பாத தூளியாலா? அல்லது பக்தனின் பாத தூளியாலா? என்பதைப் பிரித்து நாம் உணர முடியாதபடி மூவரும் உள்ளே நுழைந்ததாகக் கூறுகிறார்.

ஆடிப்பாடி அரங்கவோ ! என்று அழைக்கும்
தொண்டர் அடிப்பொடி
ஆட நாம் பெறில் கங்கைநீர் குடைந்தாடும்
வேட்கை என்னாவதே?

பெருமாள்திருமொழி-2-2

பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான் பெரியதோர் இடும்பை பூண்டு,
உண்டு இராக் கிடக்கும்போதும் உடலுக்கே கரைந்து, நைந்து''

தொண்டரடிபொடியாழ்வார் - திருமாலை

என்றபடி இராமனாய் அவதரித்த எம்பெருமானின் சரித்ரங்களை—அவதார லீலைகளை நினைத்து நினைத்து ஆடுவர் பரமைகாந்திகள், பின்னர் விசித்ரமான ஆச்சரியமான லீலைச் செயல்களை அநுஸந்திக்க, ஏற்படும் ஸந்தோஷத்தை—ஆனந்தத்தை மனதிலேயே அடக்க முடியாமல் பாடுவர். இடையிடையே 'ரங்கா! ரங்கா!'' என அழைத்து மகிழ்ச்சி வெள்ளத்தில் பகவதனுபவத்தில் மூழ்குவர். இத்தகு பாகவதர்களினுடைய திருவடித் துகள்களில் அவகாஹனம் பண்ணும் (திருவடித்தூசுகளைச் சிரத்தில் தாங்கும்) பாக்யத்தை நாம் பெறுவோமாகில் நம் பாபங்கள் அனைத்தும் விலகும், இப்படியிருக்க பாபங்களைப் போக்கிக் கொள்ள கங்கா ஸ்நானம் பண்ண வேண்டுமென்று யாராவது ஆசைப்படுவார்களா? என வியக்கிறார் குலசேகரர்.

(ராமனை) தில்லைநகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள்
தலைவணக்கிக் கைகூப்பி, ஏத்தவல்லார்
திரிதலால் தவமுடைத்துத் தரணிதானே.

பெருமாள் திருமொழி. 10-5

திருச்சித்ரகூடத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ராமனை ஸேவித்துத் தலைவணங்கி கைகளைக் கூப்பி அஞ்ஜலி செய்து ஸஹஸ்ர நாமங்களைச் சொல்லி வாழ்கின்ற பெரியோர்கள் ஸஞ்சாரம் செய்வதாலே இத்தரணியும், இத்தரணிதன்னில் வாழ்வோரும் பெரும் பாக்யம் பெற்றவர்களாகிறார்கள்.

ஆச்ரமத்தினுள் ராமன் சென்று அவன் திருவடி படுவதைவிட அவனடியார்களான முனிவரும் இலக்குவனும் உள்ளே செல்ல அவர்களின் திருவடித்துகள் படுவதினால் ஏற்படும் பாக்ய விசேஷங்கள் உயர்ந்தன வன்றோ!

இக்கருத்தினை பெரியாழ்வாரும் தெளிவாக அனுபவிப்பதைப் பார்ப்போம்.

''நாதனை நரசிங்கனை நவின்று ஏத்துவார்கள் உழக்கிய
பாத தூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே''

பெரியாழ்வார். திருமொழி - 4.4

ஜகத் ரக்ஷகனான நரஸிம்ஹனை, ராகவஸிம்ஹனைத் தொழுது வாயினால் அவன் கல்யாண குணங்களைப்பாடி, அவற்றை மனத்தினால் சிந்தித்து மகிழும் பக்தர்களின் ஸ்ரீ பாதங்களில் ஒட்டிய தூசுகள் படுதலால் உலகத்துக்கும், உலகத்தினர்க்கும் ஏற்படும் பாக்ய விசேஷங்களைச் சொல்லி மாளுமோ, எனவே தான் பகவதவதாரங்களின் போது பக்தர்களான சிறிய திருவடி, ப்ரஹ்லாதாழ்வான், இளைய பெருமாள் போன்றோர்களும் அவதரித்து அவதாரங்களுக்குச் சிறப்பூட்டுகின்றனர், இதை எண்ணியே பக்தர்களின் திருவடிகளை ஏத்தி வாழ்த்தும்படி தம் மனதிற்குக் கட்டளை யிடுகிறார் குலசேகராழ்வார்.

தோய்த்த தண் தயிர் வெண்ணெய் பால் உடன் உண்டலும்
உடன்று ஆய்ச்சிகண்டு
ஆர்த்த தோளுடை எம்பிரான் என் அரங்கனுக்கு
அடியார்களாய்
நாத்தழும்பெழ நாரணா வென்று அழைத்து, மெய்
தழும்பத் தொழுது
ஏத்தி இன்புறும் தொண்டர் சேவடி ஏத்தி வாழ்த்தும்
என் நெஞ்சமே

பெருமாள் திருமொழி . 2:4

உடன்று : கோபித்து. ஆர்த்த : கட்டப்பட்ட

ஒரு ஸமயம் யசோதை ஒரு பானையில் கெட்டித் தயிர், ஒரு பானையில் காய்ச்சிய பால், ஒரு சட்டியில் கடைந்தெடுத்த வெண்ணெய் இவற்றை ஒரு சேர வைத்துவிட்டு அயர்ந்தாள் போலும். கண்ணன் மெல்ல உள்ளே நுழைந்து தயிர், பால், வெண்ணெய் மூன்றையும் ஒரு சேர மாற்றி மாற்றிச் சாப்பிட்டு விட்டான். இதைக் கண்ட தாய்க்குப் பெருங்கோபம். வியாபாரத்துக்குப் பொருள் இல்லையே என்று கோபமில்லை. ''மூன்றையும் ஒரே சமயத்தில் சேர்ந்தாற் போல் சாப்பிட்டு விட்டானே! உடலுக்கு என்ன தீங்கு நேருமோ'' என்ற கோபம், உடனே கயிற்றால் அருகில் இருந்த உரலில் கட்டி விட்டாள், இதைக் கண்டு பக்தர்கள் அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்; என்ன வியப்பு!

கண்ணன் பரமனின் பூர்ணாவதாரம், ஸர்வசக்தன், திமிறிக்கொண்டு ஓடியிருக்க முடியும், அல்லது யசோதையை அருகில் நெருங்கி வர முடியாத படி மயங்கி விழச்செய்திருக்க முடியும், இவனோ ஸப்தலோகீ க்ருஹஸ்தன், ஸர்வேச்வரன், இவனின்றி ஓரணுவும் அசையாது, ஸர்வநியாமகன்.

அனைத்து சேதனா சேதனங்களுடைய ஸ்வரூபம், இருப்பு, செயல் எல்லாம் இவனுக்கு அதீனமானது, தனக்குமேல் உயர்ந்தவன் இல்லை என்னும்படி உயர்வினை உடையவன்.

இத்தகையோன் மிகத் தாழ்ந்த ஒரு ஆய்ச்சியின் கட்டுதலுக்கு உட்பட்டானே என்பதை நினைக்க நினைக்க பக்தர்கட்கு-அடியார்கட்கு ஒரே வியப்பு, ஒரே திகைப்பு! ''என்னே உனது பரத்வ உயர்வு! என்னே உனது ஸௌலப்யம், எளிமை!'' என்னும்படி இவனுடைய கட்டுண்ட நிலை நம்மாழ்வாரை ''எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே'' எத்திறம்? எத்திறம்? எத்திறம்? என மொழிந்தவாறு ஆறு மாதம் மூர்ச்சித் திருக்கும்படி செய்துவிட்டது. இதே போன்று பரமனின் ஸௌலப்யத்தை எண்ணி நாக்குத் தழதழக்கும்படி நாராயணா! நாராயணா கண்ணா! கண்ணா! என அழைத்தும், அவன் ஸந்நிதியில் உடல் முழுவதும் காய்ப்பு ஏறும்படி தண்டனிட்டும் ஏங்கி இன்புறும் அடியார்களின் சேவடிகளை ஏத்தி அவர்கட்குப் பல்லாண்டு பாடுவதையே என் தொழிலாகக் கொள்வேன் என்கிறார்.

இவ்வாறு பாகவதர்களின் திருவடித்துகளும் நம்மை உய்விக்க வல்லவை என்ற பெருமையைக் காட்டவே ராமன் மற்ற இருவரோடும் கௌதமாச்ரமத்தினுள் நுழைவதாகக் காட்டுகிறார் மஹாகவி.

ददर्श च महाभागां तपसा द्योतितप्रभाम् ।
लोकैरपि समागम्य दुर्निरीक्ष्यां सुरासुरैः ॥
धूमेनापि परीताङ्गीं दीप्तामग्निशिखामिव ।
सतुषारावृतां स्वभ्रां पूर्णचन्द्रप्रभामिव ।
मध्येऽम्भसो दुराधर्षां दीप्तां सूर्यप्रभामिव ॥
शापस्यान्तमुपागम्य तेषां दर्शनमागता ॥

ததர்ச ச மஹா பாகாம் தபஸா த்யோதித ப்ரபாம் ।
லோகை: அபி ஸமாகம்ய துர்நிரீக்ஷ்யாம் ஸுராஸுரை: ॥
தூமேந அபி பரீதாங்கீம் தீப்தாம் அக்னிஶிகாம் இவ ॥
ஸ துஷாராவ்ருதாம் ஸ்வப்ராம் பூர்ணசந்த்ர ப்ரபாமிவ ।
மத்யே அம்பஸ: துராதர்ஷாம் தீப்தாம் ஸூர்யப்ரபாம் இவ ॥
ஶாபஸ்ய அந்தம் உபாகம்ய தேஷாம் தர்ஶனம் ஆகதா ॥

வா.ரா.பால.-49

இதுகாறும் மனிதர்களாலும் தேவர்களாலும், அஸுரர்களாலும் காண முடியாதவளாய், பனிப்படலமும் மேகங்களும் சூழ்ந்த வானில் நிறைமதி யின் நிலவு போலவும், புகை மண்டிய வேள்வித் தீ போலவும், நீர்நிலையின் நடுவே தோன்றும் கதிரவன் ஒளி போன்றும், மங்கியிருந்த அஹல்யை

பரமனின் (ராமனின்) பாததூளி பட்டதும் சாபத்தின் முடிவைப் பெற்று, அனைவரும் பார்க்கக் கூடிய நிலையை அடைந்து, தேவர்களின் கண்களும் கூசும்படியான தேஜஸ்ஸூம், தவவலிமையும் பெற்றவளாய், எதிரே தோன்றினாள், (சாபம் தொட்டு இன்று வரை ராம மந்த்ரத்தைச் சொல்லிக் கொண்டே அவனையே நினைத்திருந்ததே இங்கு தவமாம்)

கண்ட கல் மிசை காகுத்தன் கழல் துகள் கதுவ
உண்ட பேதைமை மயக்குஅற வேறுபட்டு உருவம்
கொண்டு மெய் உணர்பவன் கழல் கூடியது ஒப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனள் மாமுனி பணிப்பான்.

க.ரா.பால. - அலிகை

ஆசார்யர்களின் தத்துவங்களைப் பற்றிய உபதேசத்தால் அறியாமை நீங்கி உபாயானுஷ்டானம் செய்தவர்கள், பாஞ்சபௌதிகமான உடலை நீத்து பரமபதம் அடைந்து தேஜோமயமான திவ்ய சரீரத்தைப் பெற்று விளங்குவது போல, அஹல்யா தேவியும் கல்லாய்க் கிடந்த, தன் மீது ராமனின் திருவடித் துகள் பட்டதும் முன்னிருந்த உருவத்துடன் எழுந்து நின்றாள்.

दुःखे सुखे च रज एव बभूव हेतुः
तादृग्विधे महति गौतमधर्मपत्न्याः ।
यस्माद्गुणेन रजसा विकृतिं गता सा
रामस्य पाद रजसा प्रकृतिं प्रपेदे ॥

துக்கே ஸூகே ச ரஜ: ஏவ பபூவ ஹேது:
தாத்ருக்விதே மஹதி கௌதம தர்ம பத்ன்யா: ।
யஸ்மாத் குணேன ரஜஸா விக்ருதிம் கதா ஸா
ராமஸ்ய பாத ரஜஸா ப்ரக்ருதிம் ப்ரபேதே ॥

போஜராஜன் - சம்பு ராமாயணம்

கௌதம முனிவரின் தர்மபத்னியான அஹல்யைக்குப் பொறுக்க முடியாத துன்பத்தை அனுபவிப்பதிலும், பின்னர் மிக உயர்ந்த பெரும் மகிழ்ச்சியை அளிக்கும் ஸூகானுபவத்திலும் காரணமாக அமைந்தது ரஜஸ் ஒன்றே. எங்கேயாவது ஒரே வஸ்து இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணம் ஆகுமோ? இது மிக விசித்ரமாக இருக்கிறதே! ஆம் விசித்திரம் தான். ஆனால் கவியின் கற்பனைத் திறன் இன்ப துன்பங்களுக்கு ஒன்றையே காரணமாக அமைத்துக் காட்டுகிறது. 'ரஜ:' என்பது ஸத்வம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணங்களுள் ஒன்றாகும். இந்த ரஜஸ் தீய ஆசைகளினாலும் தீயோர் சேர்க்கையினாலும் உண்டாவது. இது தீமையைத்தான் விளைவிக்கும். இந்திரனிடம் ஏற்பட்ட தகாத ஆசையினால் கல்லாய் கிடக்க வேண்டிய தாயிற்று. ரஜஸ் தூசி, இராமனுடைய பாதரஜஸ்ஸினால் (தூசியினால்)

மீண்டும் பழைய உருவத்தையே பெற்றாள். எனவே ரஜஸ்ஸே அஹல்யைக்குத் தீமையையும், நன்மையையும் விளைவித்ததல்லவா!

सा ततः तस्य रामस्य पाद स्पर्शात् महात्मनः ।
अभूत् सुरूपा वनिता समाक्रान्ता महा शिला ॥

ஸாதத: தஸ்ய ராமஸ்ய பாதஸ்பர்ஶாத் மஹாத்மன: ।
அபூத் ஸுரூபா வனிதா ஸமாக்ராந்தா மஹாஶிலா ॥

பாத்மபுராணம்.

शिला कम्पं दत्ते शिवशिव वियुङ्क्ते कठिनताम्
अहो नारीच्छायां अयति वनितारूपं अयते ।
वदत्येवं रामे विकसितमुखीं वल्कलं उरः
स्थले धृत्वा बध्व कचपुरं उदस्तात् ऋषिवधूः ॥

ஶிலா கம்பம் தத்தே சிவசிவ வியுங்தே கடினதாம்
அஹோ! நாரீச்சாயாம் அயதி வனிதா ரூபம் அயதே ।
வததி ஏவம் ராமே விகஸிதமுகீ வல்கலம் உர:
ஸ்த்தலே த்ருத்வா பத்வா கசபுரம் உதஸ்தாத் ரிஷிவதூ: ॥

மஹா நாடகம்

ராமன் சாலையுள் நுழைந்தான், எதிரே பெருங் கல்லைக் கண்டான், ராமனுடைய திருவடி அதன்மேல் பட்டது, உடனே கல் அழகிய பெண்ணாக மாறிற்று என்று பாத்ம புராணம் கூறுவதை மஹா நாடகக்காரர் அழகாக வருணிக்கிறார். ராமன் திருவடி பட்டதும் அந்தக் கல் ''ஆடி அசைகின்றதே. பிறகு அதன் கடினத் தன்மை மாறி மென்மை உண்டாகிறதே, ஆச்சரியம், பெண் போன்று தோன்றுகிறதே, ஆஹா ! அசல் பெண்ணாகவே மாறி விட்டதே'' என்று ஆச்ரமத்தினுள் நுழைந்த ராமன் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே அவள் புன்னகையுடன் மரஉறியை மேலாக்காக மார்பில் போட்டுக் கொண்டு, தலைக்கூந்தலைக் கோதி நன்கு முடிந்து கொண்டே எழுந்து நின்றாளாம்.

पद कमल रजोभिः मुक्त पाषाण देहां
अलभत यदहल्या गौतमो धर्म पत्नीम् ।
त्वयि चरति विशीर्ण ग्राविणे विन्ध्य पादे
कति कति भवितारः तापसा दारवन्तः ॥

பத கமல ரஜோபி: முக்த பாஷாண தேஹாம்
அலபத யத் அஹல்யா கௌதமோ தர்மபத்னீம் ।

த்வயி சரதி விஶீர்ண க்ராவிணே விந்த்யபாதே
கதி? கதி? பவிதார: தாபஸா தாரவந்த: ॥

மஹாநாடகம்

கௌதமர் ராமரைப் பார்த்துக் கேட்கிறாராம், ''ராமா! எனது தர்ம பத்னியான அஹல்யை உனது திருவடித் தாமரைகளின் தூசுபட்டு பண்டைய மேனியைத் திரும்பப் பெற்றாள். என் போன்று எத்தனையோ மஹர்ஷிகள் கோபத்தினால் தத்தம் மனைவிமார்களைச் சபித்திருக்கலாமல்லவா! நீ விந்தியமலையின் தாழ்வரைகளில் நடந்து செல்லும்போது அங்கு பரந்து கிடக்கும் கற்களில் உன் திருவடிபட, பலர் பெண்ணுருவம் பெற்று எழ, பல முனிவர்கள் தத்தம் தர்ம பத்னிகளை மீண்டும் பெறுவர் போலும் என்றாராம். (மஹா நாடகத்தில் ஓர் அழகிய கற்பனை)

राघवौ तु तदा तस्याः पादौ जगृहतुर्मुदा ।
स्मरन्ति गौतमवचः प्रतिजग्राह सा च तौ ॥
पाद्यमर्घ्यं तथाऽऽतिथ्यं चकार सुसमाहिता ।
प्रतिजग्राह काकुत्स्थो विधिदृष्टेन कर्मणा ॥
साधु साध्विति देवास्तामहल्यां समपूजयन् ।
तपोबल विशुद्धाङ्गीं गौतमस्य वशानुगाम् ॥
गौतमोऽपि महातेजा अहल्यासहितः सुखी ।
रामं सम्पूज्य विधिवत् तपस्तेपे महातपाः ॥

ராகவௌ து ததா தஸ்யா: பாதௌ ஜக்ருஹது: முதா: ।
ஸ்மரந்தீ கௌதமவச: ப்ரதி ஜக்ராஹ ஸாச தௌ ॥
பாத்யம் அர்க்யம் ததாஆதித்யம் சகார ஸுஸமாஹிதா ।
ப்ரதி ஜக்ராஹ காகுத்ஸ்த: விதி த்ருஷ்டேன கர்மணா ॥
ஸாது ஸாது இதி தேவா: தாம் அஹல்யாம் ஸமபூஜயன் ।
தபோபல விசுத்தாங்கீம் கௌதமஸ்ய வஶானுகாம் ॥
கௌதமோ அபி மஹாதேஜா: அஹல்யா ஸஹித: ஸுகீ ।
ராமம் ஸம்பூஜ்ய விதிவத் தபஸ்தேபே மஹாதபா:

வா.ரா.பால. - 49

பரம பவித்ரையான அஹல்யை எதிரே தோன்றியதும் முனிவரின் பத்னியானபடியால் ராமலக்ஷ்மணர் அவளை வணங்கினர். ராமன் வரும் பொழுது உனக்கு சாப விமோசனம் ஏற்படுமென்று கணவர் கூறியது நினைவுக்கு வரவே, அஹல்யை, இவர் ராமர் தான் என முடிவுக்கு வந்து விருந்தோம்பலை (அதிதி ஸத்காரத்தை) செய்தாள். மிக்க பக்திச்ரத்தையுடன்

ராமன் திருக்கைகளில் அர்க்யம் ஸமர்ப்பித்தும், அவன் திருவடிகளில் பாத்ய தீர்த்தத்தை ஸமர்ப்பித்தும், ஆசமனத்திற்காக தீர்த்தம் ஸமர்ப்பித்தும் உபசரித்தாள். யாராவது நமது க்ருஹத்திற்கு வந்தால் மஹாவிஷ்ணுவாக நினைத்து உபசரிக்க வேண்டும், ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே அதிதியாக வந்தால் கேட்கவும் வேண்டுமோ! ஞானத்ருஷ்டியால் ராமனின் வரவை அறிந்த கௌதமரும் விரைந்து வந்து உபசாரத்தில் கலந்து கொண்டார். பக்திக்ரீதனான ராமபிரான் மகிழ்ச்சியுடன் உபசரிப்பை ஏற்றுக் கொண்டார், அப்பொழுது துந்துபி வாத்யத்துடன் தேவர்கள் வானத்தினின்றும் நல்லது நிகழ்ந்ததெனப் போற்றிய வண்ணம் பூமாரி பொழிந்தனர்.

குணங்களால் உயர்ந்த வள்ளல் கோதமன் கமலத்தாள்கள்
வணங்கினன், வலங்கொண்டு ஏத்தி மாசறு கற்பின் மிக்க
அணங்கினை அவன் கை ஈந்து

க.ரா.பால.-அகலிகை

பின்னர் ராமன் ''அம்மா உன் நாயகன் வந்துவிட்டார், அவரிடம் போய்ச்சேர்'' என தள்ளிவிட்டுப் போகாமல், உடையவரிடம் ஒப்படைக்கக் கருதி கௌதம முனிவரின் கமலத்தாள்களில் வணங்கி, அவரைப் பிரத க்ஷிணம் செய்து, அவர் தவத்தினைப் போற்றிக் கூறினார். ''முனிவரே! குற்றமற்ற பதிவ்ரதா தர்மத்தினால் மேம்பட்டவளும் தெய்வப்பெண் போன்றவளுமான இவளை நீர் ஏற்றுக் கொள்ளும்'', எனக்கூறி அஹல் யையை கௌதமரிடம் ஒப்படைத்தாராம், ஏன்? ராமன் குணங்களால் உயர்ந்த வள்ளலாயிற்றே! வரையாது கொடுத்துப் பழகினவனல்லவா? எனவே இவ்வணங்கையும் உரியவரிடம் ஒப்படைத்தானாம். உடனே விச்வாமித்ரரும் கௌதமரைப் பார்த்து ॥

நெஞ்சினால் பிழைப்பு இலாளை நீ அளித்திடுதி என்னக்
கஞ்சமலரோன் அன்னமுனிவனும் கருத்துள் கொண்டான்

க.ரா.பால. - அகலிகை

அளித்திடுதி: காப்பாற்று, அன்னமுனிவனும்: கௌதமரும்

गौतमोऽपि महातेजा: अहल्यासहित: सुखी ।
रामं सम्पूज्य विधिवत् तपस्तेपे महातपा: ॥

கௌதம: ஹி மஹாதேஜா: அஹல்யா ஸஹித: ஸுகீ ।
ராமம் ஸம்பூஜ்ய விதிவத் தப: தேபே மஹாதபா: ॥

வ.ரா.பால. - 49

மஹா தேஜஸ்வியான கௌதமமுனிவரும் அஹல்யையோடு சேர்ந்து ராமனை முறைப்படி பூஜித்து அவ்வாச்ரமத்திலேயே தனது தவத்தினைத் தொடங்கினாராம்.

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம், இனி
இந்த உலகுக்கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம்
உறுவது உண்டோ?
மை வண்ணத்து அரக்கிபோரில் மழைவண்ணத்து
அண்ணலே! உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன் கால் வண்ணம்
இங்குக் கண்டேன்.

க.ரா.பால. - அஹல்யா

கௌதமரின் ஆச்ரமத்தினின்றும் புறப்படும் போது ராமனை அழைத்து வந்ததின் நோக்கத்தில் கால் பகுதி முடிந்தது. (கால் பகுதி தாடகாதிவதம், முக்கால் பகுதி ஸீதா கல்யாணம் தொடங்கிய லீலை) என மகிழ்ச்சியினால் விஸ்வாமித்ரர் ராமனை நோக்கிப் பேசுகிறார்.

''ராமா! நீ அவதாரம் செய்தது தர்மத்தை நிலைநிறுத்த—தீயோரைக் கடிந்து, நல்லோரைக் காப்பதற்காக அல்லவா! எனவே இனி இவ்வுலகிலுள்ள எல்லா உயிரினங்களும் தீமைகள் நீங்கி, பல்வகை நன்மைகளைப் பெற்று, உய்வார்களே ஒழிய தீமைகட்கு இலக்காகி ஒரு நாளும் துன்புற மாட்டார்கள். நான் சொல்வது முற்றிலும் உண்மை, நான் கண்களால் கண்டது. மை போன்று கரிய நிறமும், தமோ குணத்தினால் உண்டாகும் ஆசை, வஞ்சனை, பொய், களவு, ஏமாற்றம் முதலிய தீய பண்புகளையுடைய அரக்கியான தாடகை, அகப்பட்டதை அழித்து, மறைத்து, மாய்க்கும் தன்மையாள். அவளோடு நிகழ்ந்த போரில் அவளையும், அவளைச் சார்ந்தோரையும் கூண்டோடு அழித்தாய். அப்பொழுது உனது கைவண்ணத்தை—துஷ்ட நிக்ரஹத்தை நேராகக் கண்டேன். நீ வில்லேந்திய வீரன் அல்லவா! தாடகைப் போரில் கைத்திறனைக் கண்டேன், இங்கு கால் வண்ணத்தை, திருவடிகளின் திறத்தையும், நேராகப் பார்த்தேன். ராமா! நீயோ மழை வண்ணத்து அண்ணல், மேகம் போன்று திருமேனி நிறத்தையுடையவன். நிறம் மாத்திரம் அல்ல. மேகத்தின் தன்மையையும்—ஸ்வபாவத்தையும் உடையவன்''.

நீருண்ட மேகத்தைக் காண்போருக்கு மனதிலும், உடலிலும் உள்ள கொதிப்பு அடங்கும். மேகம் எங்கும் மழையைப் பொழிந்து அனைவரையும் வாழ்விக்கும். அதே போன்று ராமனும் கைம்மாறு கருதாது கருணை மழையைப் பொழிகின்றவன், ராமனை ''கருணா காகுஸ்தன்'' என ஸ்வாமி தேசிகன் பணிப்பர், மேலும், 'அண்ணல்' என்றார். அதாவது யாவற்றையும் அளிப்பவன், வளர்ப்பவன், காப்பவன், கம்பர் தாடகையையும், ராமனையும் கருப்பு என்றார், அவளோ மை கருப்பு, ராமனோ

மழை (மேகம்) கருப்பு, இரண்டு கருப்புக்கும் உள்ள வேற்றுமையை (அழிக்கும் தன்மை, ஆக்கும் தன்மை) அழகுறச் சித்தரிப்பதை ரஸிக்க வேண்டும்.

எம்பெருமானுடைய திருமுகமண்டலம் கடைக்கண் பார்வையால், கருணையைக் காட்டுகிறது. கை, அபயஹஸ்தம் - அபயத்தை அளிக்கிறது, வரதஹஸ்தம் விரும்பியதைக் கொடுக்கிறது, திருவடியோ பாபத்தைப் போக்குகிறது. எனவே தான் அர்ச்சா மூர்த்தியின் திருவடியை (ஸ்ரீ சடாரியை) தலையில் தாங்குகிறோம். இம்மூன்றிலும் நமக்குத் திருவடியே உயர்ந்தது, எப்படி? திருமலை ஸ்ரீநிவாஸனே தன் திருக்கையால் திருவடிகளையன்றோ நமக்கு உஜ்ஜீவனமாகக் காட்டுகிறார், விபவத்தில் கண்ணன் ''மாம் ஏகம் சரணம் வ்ரஜ'' என்று தன் திருவடிகளில் சரணடையும் படிதானே உபதேசித் தார். எனவே திருக்கண், திருக்கை, திருவடி மூன்றிலும் திருவடியே உயர்ந்தது. அது நம் பாபங்கள் அனைத்தையும் போக்குகிறது. திருக்கண்களும், திருக்கைகளும் கொடுக்கும் பலத்தை திருவடிகள் பாபங்களைப் போக்கி நித்யமாக அளிக்கின்றன. இதை அஹல்யா சாபவிமோசனம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. திருவடியின் பெருமையைக் காட்டத்தான் பால முகுந்தன் தன் கட்டை விரலைத் தன் வாயில் வைத்துக் காட்டுகிறான் போலும்.

करारविन्देन पदारविन्दं मुखारविन्दे विनिवेशयन्तं ।
वटस्य पत्रस्य पुटे शयानं बालं मुकुन्दं मनसा स्मरामि ॥

கராரவிந்தேன பதாரவிந்தம் முகாரவிந்தே விநிவேஶயந்தம்
வடஸ்ய பத்ரஸ்ய புடே ஶயானம் பாலம் முகுந்தம் மநஸா ஸ்மராமி

முகுந்தாஷ்டகம்

இந்திரனின் கர்வபங்கம்

அஹல்யையின் திருமணத்திற்கு பூப்ரதக்ஷிணத்தை கன்யா சுல்கமாக நாரதர் கூறினார், ஏன்?

நாரதர் ஒரு நாள் இந்திர ஸபைக்குச் சென்றாராம். அன்று ஊர்வசியின் நடனம் நடந்து கொண்டிருந்தது. அது முடிந்ததும் ஸபைக்குள் நுழைந்தார் நாரதர். முனிவரை வரவேற்று இந்திரன் கூறினான்: ''முனிவரே! இன்று அழகான நடனம் நிகழ்ந்தது, அதைக் கண்டுகளிக்கத் தவறி விட்டீரே. இனி எப்பொழுது நம் அவையில் இத்தகு நிகழ்ச்சி அமையுமோ? உமக்கு பாக்யமில்லை'' என்றான்.

நாரதர்: ''தேவேந்திரனே! நான் உம் அவைக்குத்தான் விரைந்து வந்தேன்; வழியில் காமதேனுவைப் பார்த்தேன், அதை வணங்கி வலம் வந்து அதைப் பார்த்துக்கொண்டே இருந்து விட்டேன், பசுவினிடம் எல்லா தேவதைகளும் வாஸம் பண்ணுகின்றனர் அல்லவா!''

இந்திரன்: அலட்சிய மாக ''நீர் அரஸிகர், காமதேனுவைத்தான் தினந்தோறும் பார்க்கின்றோமே'' என்றான்.

நாரதர்: ''தேவர் தலைவா! நீர் காமதேனுவின் (பசுவின்) பெருமையை உணராதவர். அதைப் பிறிதொரு சமயத்தில் உணர்த்துகிறேன்'' என்று கூறி விடைபெற்றார்.

இதை மனதிற் கொண்டே கௌதம முனிவரை கோப்ரதக்ஷிணம் செய்யச் செய்து, நாரதர் தங்கை அஹல்யையை அவருக்கு மணம் செய் வித்தார் என்பர். இது பௌராணிகர் கூறக்கேட்டது.

அஹல்யா ஓர் ஆய்வு

உத்தர காண்டத்தில் முப்பதாவது ஸர்க்கத்தில் இராமனுக்கு அகஸ்த்ய முனிவர் கூறுவதாக அஹல்யையின் படைப்புப் பற்றிய செய்தி வருகிறது. அங்கு நான்முகன் ''ரூப குனாண: அஹல்யா ஸ்த்ரீ வினிர்மிதா'' உருவ அமைப்பிலும், அதன் அழகிலும், குணத்திலும் எவ்விதக் குறைவும் மாசும் கூற முடியாத படி இப்பெண்ணைப் படைத்ததாகக் கூறுகிறார். அங்கு உடலமைப்பு, உடலழகுகளில் மாத்திரம் சிறப்பைக் குறிப்பிடாது. ஆத்ம குணத்திலும், நற்பண்புகளிலும் குறைபாடு இன்றிப் படைத்ததாகவும் கூறி, காரணப் பெயராக அஹல்யா (குறைபாடற்றவள், மாசு மறுவற்றவள்) எனப் பெயர் சூட்டியிருப்பதாகவும் அறிமுகப்படுத்துகிறார். ஸ்ரீமந் நாராயணனின் திருவருள் பெற்று உலகங்களையும் உலகினரையும் படைக்கும் ஆற்றல் பெற்ற மனுஷ்ய குல முதல்வனும், நம் அனைவருக்கும் பிதாமஹனுமான

நான்முகனின் முழு அனுக்ரஹத்தைப் பெற்ற அஹல்யா இத்தகு பெருந் தவறைப் புரிந்தாள் என்பதை நம்புவதற்கு நம் மனம் மறுக்கிறது.

காம வயப்பட்ட இந்திரன் கௌதமரின் ஆச்ரமத்தினுள் நுழைந்து அஹல்யையைப் பார்க்கிறான். அவள் கட்டழகியாகத் தோற்றமளிக்க வில்லை. அவள் தோற்றம் அருகில் நெருங்க முடியாத - சுடர் விட்டு ஒளிரும் தீக்கொழுந்து போன்று இருந்ததாம் இந்திரனுக்கு, ''தீப்தாம் அக்னிசிகாமிவ'' என்றார் வால்மீகி. காதலனுக்குக் காதலி முழுமதியின் நிலவு போன்றல்லவா இருந்திருக்க வேண்டும்? அப்படியின்றித் தீச்சுடராகக் காட்சி அளித்தவள் இந்திரனின் வரவை விரும்பியிருப்பாளா?

अहल्या द्रौपदी तारा सीता मन्दोदरी तथा
प्रातः कालेस्मरेन्नित्यं महापातक नाशिनीः ॥

அஹல்யா த்ரௌபதீ தாரா ஸீதா மந்தோதரீ ததா ।
ப்ராத: காலே ஸ்மரேத் நித்யம் மஹாபாதக நாசினீ: ॥

என்றபடி அஹல்யை, திரௌபதீ, தாரை, ஸீதை, மந்தோதரீ ஆகிய கற்புக் கரசிகளான ஐவரையும் காலையில் நினைத்து, தாம் செய்த மஹா பாபங் களைக் கழிக்கலாம் எனக் கூறப்படுகிறது. பாதகம் புரிந்தவளை நினைத் தால் பாதகச் செயலினால் ஏற்பட்ட பாபங்கள் தொலையுமென ப்ரமாணம் கூறுமோ? கூறவேகூறாது. எனவே இத்தகு பல்வகைக் காரணங்களால் அஹல்யா குற்றமற்றவள், கற்புக்கரசி, பதிவ்ரதை என்றே கொள்ள வேண்டும். இதை விளக்குவோம். அஹல்யா கௌதம தம்பதிகளின் புதல்வர் சதானந்தர்; ஜனக மஹாராஜாவுக்குப் புரோஹிதர்; தவ முனிவர், இவர் விஶ்வாமித்ரரைச் சந்தித்ததும் தாய் தந்தையரைப் பற்றி வினவுகிறார்.

गुरुणा मम सङ्गता मम माना?
इहागतेन रामेण प्रयतेनाऽभिवादितः?

''குருணா மம ஸங்கதா மம மாதா?''
இஹ ஆகதேன ராமேண ப்ரயதேன அபிவாதித:?''

வா.ரா.பால. - 51

''ராம தர்சனத்திற்குப் பிறகு எனது தந்தையோடு எனது தாயார் சேர்ந் தாளா? அவர்கள் இராமனை ஆச்ரமத்தில் உபசரித்தார்களா? தாயையும், தாயோடு சேர்ந்ததினால் தந்தையையும் குற்றமுடையவர்களாகக் கருதி ராமன் என் தாய் தந்தையரை வணங்காமல் இருந்தாரா? அல்லது உண்மையில் தாயைக் குற்ற மற்றவளாகக் கருதி வணங்கினாரா?'' என்று,

संङ्गता मुनिना पत्नी भार्गवेणेव रेणुका

ஸங்கதா முனினா பத்னீ பார்க்கவேணேவ ரேணுகா ॥

வ.ரா.பால. - 51

பரசுராமரின் தாயும் ஜமதக்னி முனிவரின் மனைவியுமான ரேணுகா தன் கணவரான ஜமதக்னியோடு எப்படி சேர்ந்தாளோ அதே போல் உமது தாய் உமது தந்தையோடு சேர்ந்தாள்'' என்று விடையளித்தார் விச்வாமித்ரர்.

இங்கு ரேணுகாவைப் போல என்கிற உவமையைப் பரிசீலிப்போம். ஜமதக்னி முனிவர் செய்யும் பகவதாராதனத்திற்குத் தினந்தோறும் ரேணுகா ஒரு குடம் தீர்த்தத்தை, குளித்து விட்டுக் குளத்திலிருந்து கொண்டு வருவாள். நீர் கொணர ஆச்ரமத்திலிருந்து குடம் எடுத்துச் செல்லமாட்டாள். குளித்ததும், குளத்திலிருக்கும் சேற்று மண்ணை எடுத்து நன்கு பிசைந்து குடம் செய்து, அதை உலர்த்தி, அக்குடத்தில் தண்ணீரைக் கொணர்வாள், அவளுடைய பாதிவ்ரத்யம் (கற்பு) அத்தகையது.

ஒரு நாள் அவள் குளிக்கும் பொழுது அவள் மீது நிழல் விழுந்தது. உடனே அண்ணாந்து மேலே வானத்தைப் நோக்க கந்தர்வ தம்பதிகள் விமானத்தில் வான வீதியில் செல்வதைப் பார்த்தாள். ''இம்மாதிரி நாமும் ஸுகமாக நம் கணவரோடு சேர்ந்து செல்லும் பாக்யத்தைப் பெறவில்லையே! நம்மவர் எதையும் செய்யும் ஆற்றலுள்ள மாமுனிவராயிற்றே! ஆயினும் பயனில்லை. தலைப்பொறி கடன் இருந்தது போலும், குழந்தைகள் பிறந்து விட்டன. அந்த சுந்தர்வ தம்பதிகள் மகிழ்ச்சியுடன் வாழும் வகை அறிந்தவர்கள் போலும். நம் தாடி முனிவருக்கோ மூக்கைப் பிடித்துக் கொண்டு இருக்கத்தானே நேரம் இருக்கிறது!'' என எண்ணினாள். இவ்வாறு இவள் எண்ணியதே கற்புக்கு இழுக்காக ஆயிற்று போலும்.

இவ்வெண்ண அலைகளில் மூழ்கியதில் தன்னையறியாது சிறிது நேரம் கடந்தது. திருவாராதனத்திற்கு நாழிகை ஆயிற்றே, என்று அவசரம் அவசரமாக மண்ணை எடுத்துக் குடமாகப் பிடித்தாள். என்ன முயன்றும் குடம் அமையவில்லை. என்ன செய்வாள்? மனம் பதறினாள், குமுறினாள். மனம் நொந்தவளாய் ஆச்ரமத்திற்கு ஓடோடியும் வந்தாள்.

முனிவர் மனைவியைப் பார்த்து, ''ஏன் இவ்வளவு நாழிகை யாயிற்று?'' என்றார். பதில் இல்லை. ஞான த்ருஷ்டியால் நிகழ்ந்ததை அறிந்தார். ''சரி, போய் தீர்த்தம் கொண்டுவா'' என்றார் உரத்த குரலில். புருஷன் வார்த்தையை அனுக்ரஹமாகக் கொண்டு குளத்திற்குப் போயிருந் தால் அன்று மீண்டும் குடம் பிடிக்க வந்திருக்கும். முதலில் குடம் செய்ய வராத காரணத்தினால் மனநிம்மதியற்று இருந்தபடியால், குடம் பிடிக்க வரவில்லை, தினந்தோறும் புதிய குடம் செய்வது வழக்கமாயிருந்தபடியால் அன்றாடம் இரவில் பழைய குடத்தை எறிந்து விடுவதால் பழைய குடம் ஆச்ரமத்தில் இருப்பில் இல்லை. (நமக்கு மண்குடம் காய்ந்த பிறகு சூளை யிட்டு ஜலம் வைத்துப் பழகினால் தான் மண்குடம் தீர்த்தம் கொணரத்தக்க

தாக அமையும், ஈர மண்ணாலாகிய குடமே அவளுக்கு சுட்டகுடம் போல உதவிற்று, அவள் கற்பு (பாதிவ்ரத்யம்) அத்தகையது.)

இதையே கற்புக்கு இழுக்காகக் கொண்டு ஜமதக்னி முனிவர், குமாரனான பரசுராமனைக் கூப்பிட்டு ''அம்மாவின் கழுத்தை வாளால் சீவிவிடு'' என உத்திரவிட்டார். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை எனக் கொண்டு கூரிய வாளால் தாயின் கழுத்தை அறுந்தெறிந்தார், மறுக்காது தான் சொன்னபடி செய்ததற்காக மகிழ்ந்து குமாரனைப் பார்த்து ''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' எனக் கேட்க, மாத்ருபக்தனாகிய பரசுராமர் ''என் அம்மாவை உயிர்ப்பிக்க வேண்டும், மேலும் நான் கொன்றதை அம்மா அறியக் கூடாது'' எனக் கேட்டார். ஜமதக்னியும் பரசுராமர் வேண்டிய படியே ''ஆகட்டும்'', (அம்மா அறிந்தால் அவ்வப்பொழுது இடித்துக் காட்டு வாளே, அவளல்லவோ சாதம் போடுகிறவள்) என்றதும் ரேணுகா முன்பு இருந்ததுபோலவே முனிவரோடு வாழ்ந்து வந்தாள்.

இவ்வுவமையைக் கொண்டு அஹல்யையின் சரித்திரத்தைப் பார்க்க வேண்டும், இவளிடத்திலும் நிழலுக்குத் தொடர்பு உண்டு, ரேணுகாவுக்குக் கற்பில் இழுக்கு ஏற்பட நிழல் காரணமாயிற்று, அவ்வாறே அஹல்யை யினுடைய கற்புக்கும் நிழலாலே இழுக்கு ஏற்பட்டு சாபத்தைப் பெற்றாள்.

அஹல்யையை விரும்பிய இந்திரன் மணத்தின் போது ஏமாற்றம் அடைந்ததால், சூழ்ச்சி செய்து முனிவருக்கு மணம் செய்து கொடுத்ததைப் பொறாது, நிகழ்ந்ததைக் கேட்டுக் கோபமுற்று ''ஒரு கை பார்த்து விடுகிறேன்'' எனக் கூறிச் சென்றான். இதைக் கௌதமரும் அறிவார்; எனவே சிந்திக்கலானார், நூறு அச்வமேத யாகங்களைப் பண்ணுபவன் இந்திரன் ஆவான் என வேதம் கூறுகிறது. ''அஹல்யே! நாமும் நூறு அச்வ மேத யாகங்களைப் பண்ணிவிட்டால் நீ இந்த்ராணியாகவும் நான் இந்திர னாகவும் ஆகிவிடலாம். அவன் என்ன செய்ய முடியும்'' என்றார். அச்வமேத யாகத்தை க்ஷத்திரியன் தான் பண்ணலாம். இவரோ அந்தணராயிற்றே. ஆயினும் அச்வமேத ப்ரகரணத்தில் இப்பகுதியை யார் அறிகிறானோ, அவன் அச்வமேத வேள்வியின் பயனை அடைகிறான் என்று வேதமே கூறுகிறது. முனிவர் வேதத்தை முற்றும் உணர்ந்தவரானபடியால் அதிலுள்ள அச்வமேத ப்ரகரணத்தை (பகுதியை) 99 தடவை ஓதி த்யானம் செய்துவிட்டார். நூறாவது தடவையும் ஓதி த்யானம் செய்துவிட்டால் கௌதமரும் சதமகராக நூறு அச்வமேத வேள்வியைச் செய்தவர் ஆகிவிடுவார்.

தன் பதவிக்குப் போட்டியாக மற்றொருவர் வருவதை இந்திரன் பொறுத்துக் கொள்வானா? உடனே இதைக் கெடுக்க திலோத்தமை, ஊர்வசீ போன்ற அழகிகளை அனுப்பி கௌதமரைக் கெடுக்க எண்ணி அவர்களை அழைத்து உங்கள் திறமையைக் காட்டி முனிவரைக் கவர்ந்து வசப் படுத்துங்கள் என்றான். ஆனால் அவர்கள் ''நாங்கள் அவரை மயக்குவது அரிது. அவர் மனைவியோ கட்டழகி''. எங்களுக்கு அவர் மயங்கமாட்டார்

எனக் கூறி மறுத்துவிட்டனர், பின்னர் இந்திரன் ''அவரைக் கெடுக்க முடியா விட்டாலும் நாமே நேரில் சென்று அவர் மனைவியைக் கெடுத்துவிட்டால் அவரையும் கெடுத்ததாக ஆகிவிடும், தவமும் பயனற்றுப் போய்விடும். அஹல்யையை மணக்க முடியாமல் போன குறையும் நீங்கிவிடும்' என எண்ணி, கௌதமரின் ஆச்ரமத்திற்கு வந்தான். முனிவரும் உள்ளே இல்லையென்பதை அறிந்து உள்ளே நுழைந்தான். முனிவர் வேடத்திலிருந்த இவனை இந்திரன் என அறிந்த அஹல்யை மிக்க சந்தோஷப்பட்டாள். ஏன்? ''என் மீது நீண்ட நாட்களாய்த் தவறான எண்ணம் கொண்டவன்'' இவன் கெட்டு அழியட்டும். என எண்ணினாள். அவன் உள்ளே வரும் பொழுது அஹல்யை சிறிது ஒதுங்கி மறைந்து நின்று தன் நிழலை இந்திரனிடம் அனுப்பினாள், காமவயப்பட்ட அவன் மதிமயங்கி, பகுத்து உண்மையை உணரும் அறிவை இழந்து, நிழலையே அஹல்யையாக எண்ணி மகிழ்ந்து திரும்பும்போது கௌதமரின் சாபத்திற்கு இலக்கானான். இதையே அஹல்யையின் பாதிவ்ரத்யத்திற்கு இழுக்காக எண்ணி இவளையும் கௌதமர் சபித்தார்.

விஶ்வாமித்ரரோடு ராம லக்ஷ்மணர்கள் இவ்வாச்ரமத்திற்கு வந்ததும் ''ஶாபஸ்ய அந்தம் உபாகமத்'' *(சாபம் நீங்கப்பெற்றாள்.)* விருந்தினர்க ளான அவர்களை நன்கு உபசரித்தாள், ராம லக்ஷ்மணர்களும் முடிவில் அஹல்யையின் திருவடிகளை (தபஸ்வினீயானபடியால்)ப் பிடித்து வணங்கினர். ''ராகவௌது ததா தஸ்யா: பாதௌ ஜக்ருஹது: முதா'' என்று வால்மீகியே கூறுகிறார். எனவே இந்திரனைக் கண்டு தேவராஜன் என்ற குதூஹலத்தினால் மயங்கி மகிழ்ந்தாள் எனப் பொருள் கொண்டால் அத்தகையவளை ராமன் அடிபிடித்து வணங்கியது பொருந்துமா? என ஆராயவேண்டும். எனவே ''மதிம் சகார துர்மேதா: தேவ ராஜ குதூஹலாத்'' என்பதற்கு தேவேந்திரனே வந்திருக்கிறான் என மகிழ்ச்சியினால் புத்தி கெட்டு விரும்பினாள் என்று பொருள் கொள்வது தவறு.

தேவ ராஜ குதூஹலாத் என்பதற்கு தேவராஜே ஶாப குதூஹலாத் என்று கொண்டு கௌதமருடைய சாபம் பெற்று அழியப் போகிறான் என்கிற மகிழ்ச்சியாம். துர்மேதா: என்பதற்குக் கெட்ட புத்தியை உடையவள் என்று பொருள் அல்ல. துர்லபமான பெறுதற்கு அரிதான மேதையை உடையவள் அதாவது அதிபுத்திசாலியானவள், ஸமய ப்ரதிபையை (Presence of mind) உடையவள், மதிம்சகார என்பதற்கு மதியை புத்தியை வைத்தாள், விரும்பினாள் என்று பொருள் அல்ல, இங்கு மூன்றாம் வேற்றுமைப் பொருளில் இரண்டாம் வேற்றுமை வந்திருக்கிறது எனக்கொண்டு 'மத்யா சகார'' மதியினால் நுண்ணறிவினால் பண்ணினாள் என்று கொள்ள வேண்டும். ஆக, ''கணவரின் அனுமதியின்றி இந்திரனை நாம் சபிப்பது தகாது'' என எண்ணி வந்த ஆபத்தினின்றும் தப்பித்துக்கொள்ள புத்திசாலித் தனத்தினால் அவசர முடிவு எடுத்து, தனது நிழலையே அழகிய நங்கையாக

தன் மதியினால் (ஸங்கல்பத்தினால்) ஆக்கி அனுப்பினால். காம மயக்கத்தினால் இவ்வுண்மையை அவன் உணரான். இந்த நங்கையை நிழல் என உணர்வதற்குள் கணவரின் சாபத்திற்கு இலக்காவான். கெட்ட எண்ணமுடைய தேவராஜன் நிச்சயமாக அழிவான்'' என மகிழ்ந்தாளாம். தீயோன் அழிந்தால் நல்லோர் மகிழத்தானே செய்வர். ஆகவே அஹல்யா உண்மையில் குற்ற மற்றவள், தீய பண்புடையவளாய் இருப்பின் கௌதமர் ஆச்ரமத்தில் நிகழ்ந்ததை தமது ஞான த்ருஷ்டியால் அறிந்தபொழுது கற்பிழந்ததையும் அறிந்திருப்பராதலால் ''பஸ்மீ பவ'' (சாம்பலாக ஆகு) என்றே சபித்திருப்பர், மேலும் சதானந்தர் விஶ்வாமித்ரரைத் தன் தாயைப் பற்றிக் கேட்கும் பொழுது இருமுறை ''யஶஸ்வினீ'' மிகுந்த புகழுடையவள் எனக் குறிப்பிடுகிறார். கற்பை இழந்தவளாயின் ஒரு பெண்ணை பெரும் புகழுடையவள் என அடைமொழி கொடுத்துப் பேசுவாரா? எனவே அஹல்யை கற்பினாலும், பண்பினாலும்' ஒழுக்கத்தினாலும், தவத்தினாலும் ஜானகி போன்று பெரும் புகழுடையவள். அப்படியாயின் இவ்வாறு ஏன் நிகழ்ந்தது எனின் ''தைவேன துரனுஷ்டிதம்'' (இச்சம்பவம் தைவஸங்கல்பத்தினால் நிகழ்ந்தது) என்பதை யும் வால்மீகி சதானந்தரின் வாயிலாகக் காட்டுகிறார். பரமனின் லீலையை யாரே மாற்றவல்லார்!

மக்கட் பேற்றை அளிக்க வல்லதாகவும், மாபாதகங்களுக்குப் பிராயச்சித்தமாகவும் அமைந்தது அஹல்யை செய்த ராமஸ்துதி.

अहो कृतार्थाऽस्मि जगन्निवास ते
पादाब्ज संलग्न रजः कणादहम् ।
स्पृशामि यत्पद्मज शंकरादिभिः
विमृग्यते रन्धित मानसैः सदा ॥
अहो विचित्रं तव राम चेष्टितं
मनुष्य भावेन विमोहितं जगत् ।
यत्पाद पङ्कज पराग पवित्रगात्रा
भागीरथी भव विरिञ्चि मुखान् पुनाति ॥
साक्षात्स एव मम दृग्विषयः यदास्ते
किं वर्ण्यते मम पुरा कृत भागधेयम् ॥
मर्त्यावतारे मनुजाकृतिं हरिं
रामाभिधेयं रमणीय देहिनम् ।
धनु र्धरं पद्म विशाल लोचनं
भजामि नित्यं न परान् भजिष्ये ॥

यत्पाद पङ्कज रजः श्रुतिभिः विमृग्यं
यन्नाभि पङ्कज भवः कमलासनश्च ।
यन्नाम सार रसिकः भगवान् पुरारिः
तं रामचन्द्रं अनिशं हृदि भावयामि ॥
नमस्ते पुरुषाध्यक्ष ! नमस्ते भक्तवत्सल !
नमस्तेस्तु हृषीकेश ! नारायण नमोस्तु ते ॥

அஹோ க்ருதார்த்தாஅஸ்மி ஜகன் நிவாஸ! தே
பாதாப்ஜ ஸம்லக்ன ரஜ: கணாத் அஹம் ।
ஸ்ப்ருஶாமி யத் பத்மஜ ஶங்கராதிபி:
விம்ருக்யதே ரந்தித மானஸை: ஸதா ॥
அஹோ விசித்ரம் தவ ராம ! சேஷ்டிதம்
மனுஷ்ய பாவேன விமோஹிதம் ஜகத் ।
யத் பாத பங்கஜ பராக பவித்ர காத்ரா
பாகீரதீ பவ விரிஞ்சிமுகான் புனாதி ।
ஸாக்ஷாத் ஸ ஏவ மம த்ருக் விஷய: யதாஸ்தே
கிம் வர்ண்யதே மம புரா க்ருத பாகதேயம் ॥
மர்த் யாவதாரே மனுஜாக்ருதிம் ஹரிம்
ராமாபிதேயம் ரமணீய தேஹினம் ।
தனுர்தரம் பத்ம விஶால லோசனம்
பஜாமி நித்யம் நபரான் பஜிஷ்யே ॥
யத் பாத பங்கஜ ரஜ: ச்ருதிபி: விம்ருக்யம்
யந்நாபி பங்கஜ பவ: கமலாஸன: ச ।
யந்நாம ஸார ரஸிக: பகவான் புராரி:
தம் ராமசந்த்ரம் அனிசம் ஹ்ருதி பாவயாமி ॥
நமஸ்தே புருஷாத்யக்ஷ !
நமஸ்தே பக்தவத்சல ।
நமஸ்தேஅஸ்து ஹ்ருஷீகேஶ
நாராயண நமோஸ்துதே ॥

அத்யாத்ம ராமாயணம் பால. - 5

ஜனகரின் வரவேற்பு

ततः प्रागुत्तरां गत्वा रामः सौमित्रिणा सह ।
विश्वामित्रं पुरस्कृत्य यज्ञवाटमुपागमत् ॥

தத: ப்ராகுத்தராம் கத்வா ராம: ஸௌமித்ரிணா ஸஹ ।
விஸ்வாமித்ரம் புரஸ்க்ருத்ய யஜ்ஞ வாடம் உபாகமத் ॥

வா.ரா. பால. - 50

ராமன் அஹல்யா கௌதம தம்பதிகளின் பக்தி பூர்வகமான உபசரிப்பைப் பெற்று விஸ்வாமித்திரர் முன்னே செல்லத் தம்பியோடு வடகிழக்கிலுள்ள மிதிலையை நோக்கி நடந்தான். கௌசிகருக்குப் பெரு மகிழ்ச்சி; எண்ணியது எண்ணியபடி நிகழ்ந்து வருகிறது. ஸித்தாச்ரமத்தில் அவதரித்த வாமனன் மூன்றடி மண் இரந்த பொழுது அதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் நீரேற்றுத் தானத்தைப் பெற்ற கைவண்ணத்தையும், ஓரடியால் பூமண்டலம் முழுவதையும் அளந்த கால்வண்ணத்தையும் நினைத்தார். தனக்காக (பக்தனுக்காக) அயோத்திப் பெருநகர் நீங்கி, கானகம் வந்து, வல்லரக் கரினத்தை மாய்த்து, வேள்வியைக் காத்த கைவண்ணத்தை யும், தன் சொல் ஏற்று கௌதமரின் ஆச்ரமத்தில் நுழைந்து அஹல்யையை அஹல்யையாக (மாசற்றவள் என) காட்டிய கால்வண்ணத்தையும் நினைத்தார்.

''பவித்ராணாம் பவித்ரம் ய: மங்களானாம் ச மங்களம்'' என்றபடி ராமன் பரமபவித்ரமானவன். பிறரைப் பரமபவித்ரமாக்குபவன் என்பதை நேரில் கண்டார். மங்களங்களுக்கெல்லாம் மங்கள தேவதையாய், ஶ்ரிய: பதியாய், ஸீதாபதியாய் ஸேவிக்க வேண்டும். பிறருக்கு, ஜனகருக்கு, தம்பி மார்கட்கு, நாட்டு மக்களுக்கு, தமக்கு மங்களங்களை விளைவிக்கப் போவதையும் கண்களால் கண்டு மகிழ மிதிலை நோக்கி விரைந்தார்.

சிறிது தூரம் சென்றதும் மிதிலை நகர் காட்சி தருகிறது. அதன் வானளாவிய மதிள் சுவரின் கம்பீரமான தோற்றம், அதன் மீது உயர்ந்த அழகிய கம்பங்களில் நாட்டுக் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கின்றன. அவை சக்ரவர்த்தித் திருமகனை விரைந்து வரும்படி அழைக்கின்றனவாம். இதைக் கம்பசித்திரத்தில் கண்டு மகிழ்வோம்.

மை அறு மலரின் நீங்கி யான்செய் மாதவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் என்றும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச்செங்கண்
ஐயனை ஒல்லைவா என்று அழைப்பது போன்றது அம்மா!

க.ரா.பால. - மிதிலை

கடி : காவல், மணம், மை : குற்றம்

மிதிலையின் அருகில் ராமன் வருவதைப் பார்த்ததும், மிதிலா தேவிக்கு மிக்க ஸந்தோஷம். தான் பெற்றெடுத்த பெண் ராமனுக்கு உரியவளாயிற்றே. மணமகனைத் தேடி, பெண்ணை மணம் செய்வித்து ஒப்படைக்க வேண்டியிருக்க, எவ்வித முயற்சியுமின்றி மணமகனே தன்னிடத்திற்கு வந்துவிட்டால் மகிழ்ச்சிக்கு அளவு ஏது? நாராயணன் பரமபதத்தை விட்டு, சக்ரவர்த்தித் திருமகனாக பூவுலகில் அவதரித்த பொழுது, மஹாலக்ஷ்மியும் பூமியில் தனக்குரிய தாமரை (மலர்) இல்லத்தில் குடி புகுந்தாள். தாமரை இல்லமோ குவிதலும் வாட்டமும் இல்லாதது. மேலும் மென்மை, குளிர்ச்சி, மணம், அழகு பொருந்தியது. ஆயினும் அதை விடுத்து மிதிலையில் பூதேவியின் திருமகளாக, வேள்விச் சாலையில் அவதரித்து ஜனகரின் அரண்மனையில் வாழ்ந்து வந்தாள். ஏன்? தன்னை மணக்கப் பரமன் ராமனாக மிதிலை வரப்போவதை அறிந்தவள் அல்லளோ?

அதோடு ராமன் அவதாரம் செய்வதற்கு கோஸலைக்கு அயோத்தி பிரஸவ அறையாக அமைந்ததுபோல் பிராட்டியைப் பெற்றெடுக்க பூதேவிக்கு மிதிலை ப்ரஸவ அறையாக அமைந்ததாம்.

இதை மஹா நாடகம் பேசுகிறது:

देव्या यस्याः वसन मुदधिः पीठिका हाटकाद्रिः
हार स्सिन्धुः सगरतनय स्वर्ग मार्गैक बन्धुः ।
क्रीडा शैलः प्रथम पुरुष क्रोड दंष्ट्रा च तस्याः
सीमा मातुः जगति मिथिलां सूतिका गेह माहुः ॥

தேவ்யா: யஸ்யா: வஸனம்உததி: பீடிகா ஹாடகாத்ரி:
ஹார: ஸிந்து: ஸகர தனய ஸ்வர்க மார்க்கைகபந்து: ।
க்ரீடாஶைல: ப்ரதம புருஷக்ரோட தம்ஷ்ட்ரா ச தஸ்யா:
ஸீமா மாது: ஜகதி மிதிலாம் ஸூதிகா கேஹம் ஆஹு: ॥

பூதேவியானவள் தன்னைச் சூழ்ந்துள்ள கடலை ஆடையாக உடுத்தியிருப்பவள். மஹாமேரு என்னும் பொன் மலையே இவள் அமர்வதற்குரிய ஆஸனமாகும். பல்லாயிரம் ஸகர புத்ரர்கள் சுவர்க்கம் பெறுவதற்கு உதவிய கங்கையை மாலையாக அணிந்திருப்பவள். மஹாவராஹமாக அவதரித்த எம்பெருமானுடைய கோரைப்பற்களே இவளுக்குக் க்ரீடாசைல மாகும் (விளையாடுமிடம்.) மிதிலாபுரியே பூதேவிக்குப் ப்ரஸவ அறை யாகும். பெற்ற பெண்ணுக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்வித்துப் பார்ப்பது தானே தாய்க்குப் பெரும்பேறு. எனவே, அருகில் இராமனைப் பார்த்ததும் நகரின் வெற்றிக் கொடிகளாகிற கைகளால் ராமனை ''ஒல்லைவா, ஒல்லைவா, ஒல்லைவா (விரைந்து வருவீர்)'' என அழைக்கிறாளாம். என்ன சொல்லி அழைக்கிறாள்? ''மிதிலையோ பாதுகாப்பான இடம், என்றும் எப்பொழுதும் கல்யாண கோலம் கொண்டது. மங்களம் பொருந்தியது. உன்

அனுமதி தான் தேவை. கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரத் தயார், உனக்குரிய பெண்ணை யான் தவம் செய்து பெற்றிருக்கிறேன், என் பெண்ணோ செய்யவள். செந்நிறமும் அழகும் பொருந்தியவள், நீயோ இவளைக்கண்டு களித்தற்கு ஏற்ற கமலச் செங்கண் ஐயன், இவள் செந்தாமரை போன்று நீண்டு அகன்று செவ்வரியோடிய அழகிய கண்களைப் பெற்றவள், என் அழகியை மணக்க அழகனாகிய நீயே ஏற்றவன், வேறு பொருத்தமும் வேண்டுமோ! விரைந்து வாரீர்'' என அழைக்கிறாளாம்.

கொடிகள் கைகளாகி நின்று அழைப்பதாக வருணிப்பது கவிஞன் மரபு. வில்லி பாரதத்தில் மாலையிட்ட சருக்கம் இருபதில்

குழைப்புறம் கடந்த செங்கண் குறுநகைக்
கொவ்வைச் செவ்வாய்
இழைப்பொலி முலையினாளுக்கு இற்றை நாள்
வதுவை என்று
மழைப்புறம் மாடம் ஏறி வருநரை மலர்க் கை காட்டி
அழைப்பன போன்ற வீதி அணி கொடி ஆடை எல்லாம்.

குழைப்புறம் கடந்த: காதின் புறத்தைக் கடந்து நீண்ட, இழைபொலி: ஆபரணங்கள் விளங்கக் காரணமான, வதுவை: சுயம்வரம், மழைப்புறம்: மேகங்களைத் தம்மேல் உடைய.

பாஞ்சால நகருக்குப் பாண்டவர்கள் வரும்போது ''காதுகள் வரை நீண்ட அழகிய கண்களை உடையவளும், கோவைப்பழம் போன்று அழகிய சிவந்த அதரங்களில் வெண்ணிற புந்நகை பூக்க விளங்குபவளும், ஆபரணங் களுக்கே அழகைத் தரும் மார்பகம் உடையவளுமான திரௌபதிக்கு இன்று திருமணம் நிகழப் போகிறது, விரைந்து வருவீர்'' என அந்நகரானது மேகங்கள் படியும் அளவுக்கு மிகவும் உயர்ந்த மாடங்களின் மீது அமைந் துள்ள கொடிகளாகிற தனது மலர்க்கைகளால் பாண்டவர்களை விரைந்து வரும்படி அழைக்கின்றனவாம்.

இத்தகு பெருமதில்கள் சூழ்ந்த மிதிலையின் அருகே அமைந்துள்ள ஜனக மன்னரின் யாகசாலைக்குச் சென்றனர்.

साध्वी यज्ञसमृद्धिर्हि जनकस्य महात्मनः ।
बहूनीह सहस्राणि नानादेशनिवासिनाम् ॥
ब्राह्मणानां महाभाग वेदाध्ययनशलिनाम् ।
ऋषिवाटाश्च दृश्यन्ते शकटीशतसंकुलाः ॥
निवेशमकरोद्देशे विविक्ते सलिलान्विते ॥
विश्वामित्रमनुप्राप्तं श्रुत्वा नृपवरस्तदा ।
शतानन्दं पुरस्कृत्य पुरोहितमनिन्दतम् ॥

प्रत्युज्जगाम सहसा विनयेन समन्वितः ।
जनकस्य वचः श्रुत्वा निषसाद महामुनिः ॥
पुरोधा ऋत्विजश्चैव राजा च सहमन्त्रिभिः ।
अद्य यज्ञसमृद्धिर्मे सफला दैवतैः कृता ॥
अद्य यज्ञफलं प्राप्तं भगवद्दर्शनान्मया ।
ஸாத்வீ யஜ்ஞஸம்ருத்தி: ஹி ஜநகஸ்ய மஹாத்மன: ॥
பஹூநிஇஹ ஸஹஸ்ராணி நாநாதேச நிவாஸினாம் ।
ப்ராஹ்மணானாம் மஹாபாக! வேதாத்யயன சாலினாம் ॥
ரிஷிவாடா: ச த்ருச்யந்தே சகட சதஸங்குலா: ।
நிவேசம் அகரோத் தேசே விவிக்தேஸலிலாயுதே ॥
விச்வாமித்ரம் அனுப்ராப்தம் ச்ருத்வா ஸந்ருபதி: ததா ।
சதானந்தம் புரஸ்க்ருத்ய புரோஹிதம் அநிந்திதம் ॥
ப்ரத்யுஜ்ஜகாம ஸஹஸா வினயேன ஸமந்வித: ॥
ஜனகஸ்ய வச: ச்ருத்வா நிஷஸாத மஹாமுனி: ।
புரோதா: ரித்விஜ: சைவ ராஜா ச ஸஹ மந்த்ரிபி: ॥
அத்ய யஜ்ஞஸம்ருத்தி: ஹிஸபலாதைவதை: க்ருதா ।
அத்ய யஜ்ஞபலம் ப்ராப்தம் பகவத் தர்சனாத் மயா ॥

வா.ரா.பால.-50

யாகசாலையின் அருகில் வேள்விக்குத் தேவையான பொருள்களும், வந்தவர்களை உபசரிப்பதற்குத் தேவையான பொருள்களும், ஆங்காங்கு குவிந்து கிடக்கின்றன. ''அனாஹூத: அத்வரம் கச்சேத்'' எனும் விதி முறைக்கு இணங்க அழைக்கப்பட்டவர்களும், அழைக்கப்படாதவர்களு மாக மஹர்ஷிகள், கூட்டம் கூட்டமாக வேள்வியைக் காண வந்திருக் கின்றனர். சுற்றிலும் அமைக்கப்பட்ட சிறு குடிசைகளில் முனிவர்கள் தங்கி யிருக்கின்றனர். எங்கு பார்த்தாலும் சிறு வண்டிகள். அவற்றில் அக்னி ஹோத்ராதி கர்மானுஷ்டானங்களுக்குத் தேவையான பொருள்கள் நிறைந் திருக்கின்றன. பல தேசங்களிலிருந்து ஆயிரக்கணக்காக வந்த அந்தணர்கள் வேதங்களை ஓதிய வண்ணம் இருக்கின்றனர். ராமனின் எண்ணத்தை அறிந்த விஶ்வாமித்ரர், மக்கள் நெருக்கமில்லாததும், தூய்மையுடையதும், நீர் வசதியுடையதுமான ஓரிடத்தில் ராஜகுமாரர்கள் தங்குவதற்குரிய இடத்தை ஏற்பாடு செய்தார்.

கௌசிகர் வந்த செய்தி அரசருக்கு எட்டியதும், அவர் குலகுருவான சதானந்தரையும், புரோஹிதர்களையும், ரித்விக்குகளையும், மந்திரிகளையும் அழைத்துக் கொண்டு விஶ்வாமித்ரர் இருக்குமிடம் வந்து வினயத்துடன் எதிர் கொண்டு, அர்க்ய பாத்யாதிகளைக் கொண்டு உபசரித்துக் குஶல

ப்ரஶ்னங்களைச் செய்ய, கௌசிகரும் மகிழ்ந்து அரசரை நலம் விசாரித்த பிறகு, அனைவரும் அமர்ந்தனர். இங்கு முனிவர்களும், புரோஹிதரும், ரித்விக்கு களும் அமர்ந்த பிறகே அரசர் அமர்ந்தது நோக்கத் தக்கது. ஜனகர்: ''முனிவரே! இன்று வரை யாகம் எவ்வித இடையூறுமின்றி, அங்கலோபங் கள் இல்லாமல் யஜ்ஞபுருஷனால் நன்கு நடத்திவைக்கப்பட்டது. தேவரீர் யாகத்திற்கு வந்ததும் தங்களை தர்சித்து வணங்கி வரவேற்றதுமே எனது யாகத்தின் பயனாகும், இங்கு ''பகவத்தர்சனாத்'' என்றார், பகவான் வஸிஷ்ட: என்பது போன்று முனிவரை பகவான் என்றார். ஆயினும் பகவானே (ராமனே) நேரில் எழுந்தருளி ஸீதாரூபமான ஹவிஸ்ஸை நேரில் பெற வந்திருக்கிறானோ! என்பது த்வனி. ''அவனை தர்ஶனம் செய்யும் பாக்யம் எனக்குக் கிடைத்ததே, பகவத் பாகவத தர்ஶனத்தைத் தவிர யாகத்திற்கு வேறு பயன் ஏது? அதுவும் இப்பொழுதே யாகம் முடிவதற் குள்ளேயே பயனைப் பெற்று தன்ய னானேன். பரிபூர்ண அனுக்ரஹத்தைப் பெற்றேன் ''தன்ய: அஸ்மி, அனுக்ருஹீத: அஸ்மி'' என்றார்.

इत्युक्त्वा मुनिशार्दूलं प्रहृष्टवदनस्तदा ।
पुनस्तं परिपप्रच्छ प्राञ्जलिः प्रयतो नृपः ।
इमौ कुमारौ भद्रं ते देवतुल्यपराक्रमौ ॥
गजसिंहल्यगती वीरौ शार्दूलवृषभोपमौ ।
पद्मपत्रविशालाक्षौ खङ्गतूणीधनुर्धरौ ।
अश्विनाविव रूपेण समुपस्थितयौवनौ ॥
यदृच्छयैव गां प्राप्तौ देवलोकादिवामरौ ।
कथं पद्भ्यामिह प्राप्तौ किमर्थम् कस्य वा मुने ॥
वरायुधधरौ वीरौ कस्य पुत्रौ महामुने ।
भूषयन्ताविमं देशं चन्द्रसूर्याविवाम्बरम् ॥
परस्परस्य सदृशौ प्रमाणेङ्गितचेष्टितैः ।
काकपक्षधरौ वीरौ श्रोतुमिच्छामि तत्त्वतः ॥

இதி உக்த்வா முனிஶார்தூலம் ப்ரஹ்ருஷ்ட வதன: ததா ।
புன: தம் பரிபப்ரச்ச ப்ராஞ்ஜலி: ப்ரயத: ந்ருப: ॥
இமௌ குமாரௌ பத்ரம்தே தேவ துல்ய பராக்ரமௌ ।
கஜ ஸிம்ஹ கதீ வீரௌ சார்தூல வ்ருஷபோபமௌ ॥
பத்ம பத்ர விஶாலாக்ஷௌ கட்க தூணீ தனுர்தரௌ ।
அஶ்வினௌ இவ ரூபேண ஸமுபஸ்த்தித யௌவனௌ ॥
யத்ருச்சயைவ காம் ப்ராப்தௌ தேவலோகாத் இவ அமரௌ ॥

கதம் பத்ப்யாம் இஹப்ராப்தௌ கிமர்த்தம்? கஸ்யவாமுனே! ।
வராயுத தரௌ வீரௌ கஸ்ய? புத்ரௌ மஹாமுனே ॥
பூஷயந்தௌ இமம் தேஶம் சந்த்ர ஸூர்யௌ இவ அம்பரம் ।
பரஸ்பரஸ்ய ஸத்ருஶௌ ப்ரமாணேங்கித சேஷ்டிதை: ॥
காக பக்ஷ தரௌ வீரௌ ச்ரோதும் இச்சாமி தத்வத: ॥

வா.ரா. பால. - 50

ஜனகர் மீண்டும் கௌசிகரை வினவுகிறார்; கேட்கத் தொடங்கும் போதே அரசரின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கித் ததும்புகிறது. ஏன்? இவர் ராஜர்ஷியல்லவா! ஓரளவு ராமனைப் பற்றி அறிந்துள்ளார் போலும். ''இவனே ஸீதை மணாளனாக அமைந்துவிட்டால் நன்றாக இருக்குமே'' என எண்ணியிருப்பார். உள்ளத்தில் எழுந்த மகிழ்ச்சி முகத்தில் வெள்ளமிடு கிறது. தலை வரையில் கைகளைக் கூப்பிய வண்ணம் பேசுகிறார். சிறுவர் களை நோக்கி இந்த குமாரர்கள் என்னும் போதே எங்கு த்ருஷ்டி ஏற்படுமோ (கண்ணெச்சில் படுமோ) என அஞ்சி 'பத்ரம்' மங்களம் உண்டாகட்டும் என்று மேலே பேசுகிறார்.

மன்மதனை (அழகு தெய்வத்தையே) பழிக்கும் அழகு வாய்ந்தவர் கள். இந்த்ராதி தேவர்களை நிகர்த்த ஆற்றல் மிக்கவர்கள்; யானை போன்று தளர் நடை போட்டு வருகின்றனர். (அது கரும்பை எடுத்து அலக்ஷியமாக முறிப்பது போல் இவனும் நமது வில்லை முறித்து விடுவான் போலும்.)

ந்ருஸிம்ஹாவதாரத்தில் அண்டத்தை முட்டும் தூணைப் பிளந்து, நிமிர்ந்து, முழங்கிப் புறப்பட்டது போன்றது இவன் நடையழகு, (சிவ தனுஸ்ஸையும் பிளப்பான் போலும்.)

சார்தூலம் என்பது ஒரு வகை ம்ருகம். அது ஒருவர் இருவரைப் பார்த்தால் ஒன்றும் செய்யாது. ஆனால் ஆயிரக்கணக்கான விலங்கினங் களைத் தாவி.ஒரே தாக்குதலில் அழித்து விடும், அது போன்று இவனும் எதிர் காலத்தில் பகைவர்களை (பதினாயிரக் கணக்கான கர தூஷணாதிகளை) அழிப்பான் போலும், இங்கும் வில்லின் முறிவின் போது எழும் ஒலியில் பல்லோரும் மூர்ச்சித்து விழுவதை ஸூசனம் செய்கிறார் போலும். சிறந்த எருது கயிற்றுக்குச் சிறிது கட்டுப்படும். இவனும் கிருஷ்ணாவதாரத்தில் வெண்ணெய் களவின் பொழுது தாயின் கயிற்றுக்குக் கட்டுப்பட்டு தாமோதரனாய் காட்சி அளிப்பான். இவ்வவதாரத்திலும் ப்ரஹ்மாஸ்த்ர, நாகபாசங்களுக்குச் சிறிது கட்டுப்படுவதையும் நினைக்கிறார் போலும்,

இவ்வாறு யானை, சிங்கம், சார்தூலம், எருதுகளிடமுள்ள நடையழகு பெருந் தன்மை, வீரம், மிடுக்கு எல்லாம் ஒருங்கே இவர்களிடம் அமைந் திருப்பதைப் பார்த்த மாத்திரத்தில் கண்டு பேசுகிறார். அவர்களுடைய தாமரை மலரின் இதழ்கள் போன்று நீண்டு அகன்ற கண்கள் அரசனை வசீகரிக்கின்றன. இடுப்பிலே கத்தி, தோளிலே அம்பறாப்பை, கையிலே வில்

இவர்களை வீரர்களாக அறிமுகம் செய்கின்றன. வாலிபப் பருவமும் ஸௌந்தர்யமும் தேவலோகத்து அச்வினீ தேவதைகள்தான் பூவுலகிற்கு வந்தனரோ எனத் தோன்றுகிறது. இத்தகு பெருமை பொருந்தியவர்கள் வண்டி ரதம் இன்றித் தம் கால்களால் நடந்து இங்கு எவ்வாறு வந்தனர்? எதற்காக வந்தனர். உயர் ரகக் கத்தியையும் வில்லையும் பார்க்கும் பொழுது க்ஷத்ரியர்களே, என உணர்கிறேன். யாருடைய குமாரர்கள்? வானத்திற்கு சந்திரனும் ஸூர்யனும் ஏற்றம் அளித்து பூமண்டலத்தையே பிரகாசிக்கச் செய்வது போல இவர்கள் எனது நகரையே அழகுடன் விளங்கச் செய் கிறார்கள், ஒருவரைப் பார்த்தால் ஒருவரைப் பார்க்க வேண்டாம், இருவரும் ஒரே அச்சில் வார்த்து எடுத்தவர்கள் போல் இருக்கின்றனர். உயரம், பருமன், ஜாடையாகப் பேசுவது, செய்கை ஆகிய அனைத்தும் ஒத்திருக்கும் இவர் களைப் பார்த்து மனம் மகிழ்கிறது, மேலும் இன்னார், இக்குடியினர் என்று அறியவும் விழைகிறது என்றார்.

न्यवेदयदमेयात्मा पुत्रौ दशरथस्य तौ ।
महाधनुषि जिज्ञासां कर्तुमागमनं तथा ॥

ந்யவேதயத மேயாத்மா புத்ரௌ தசரதஸ்ய தௌ ॥
மஹாதனுஷி ஜிஜ்ஞாஸாம் கர்த்தும் ஆகமனம் ததா ॥

வ.ரா.பால. - 50

இருந்த குலக்குமரர்தமை இருகண்ணின்
முகந்து அழகுபருக நோக்கி
அருந் தவனை அடிவணங்கியாரை இவர்?
உரைத்திடுமின் அடிகள் என்ன
விருந்தினர்கள் நின்னுடைய வேள்விகாணிய வந்தார்
வில்லும் காண்பார்
பெரும் தகைமைத் தயரதன்தன் புதல்வர் என அவர் தகைமை
பேசலுற்றான்

க.ரா.பால.- மிதிலை

விஸ்வாமித்ரர்: ''நற்பண்புகளும் புகழும் வீரமும் பொருந்திய தசரத சக்ரவர்த்தியின் திருக்குமாரர்கள் இவர்கள், எனக்காக ஸித்தாச்ரமம் வந்து அரக்கர்களை மாய்த்து வேள்வியைக் காத்தனர். வழியில் விசாலா நகரில் ஸுமதியினால் உபசரிக்கப்பட்டு, கௌதமரின் ஆச்ரமம் வந்தனர். அஹல்யையையும் கௌதமரையும் வணங்கி மிதிலை வந்தனர்.''

ஜனகர் தம் இரு கண்களாலும் குமாரர்களின் திருமுக மண்டலத்தின் அழகைப் பருகிப் பருகி அனுபவித்ததை முனிவர் நன்கு அறிவர், எனவே அவருடைய உள் எண்ணத்தை அறிந்து அதற்கேற்ப பதிலுரைக்கும் பொழுது, ''அவர்கள் க்ஷத்திரியர்கள், சக்ரவர்த்தியின் திருக்குமாரர்கள், அரசாங்க

விருந்துக்கு ஏற்றவர்கள்'' எனக்கூறி, எளிதில் இங்குவரக் கூடியவர்கள் அல்லர். அருமருந்தைப் போன்று கிடைத்தற்கு அரியர். (உயர்ந்த பச்சிலைகள் எவ்வளவு தேடினாலும் எளிதில் கிடைப்பது அரிது) நீர் உமது விருந்தினர் களாக ஏற்றுக்கொள்ள ஆசைப்படலாம். ஆனால் அவர்கள் உம் விருந்தை விரும்பி வந்தவர்கள் அல்லர். ''கர்மணைவஹி ஸம்ஸித்திம் ஆஸ்த்திதா: ஜனகாதய:'' என்று கண்ணனும் (ஸ்மிருதியும்) வேதமும் புகழ்கின்றபடியால் உமது கர்மானுஷ்டானங்களை நேரில் அறிய நின்னுடைய வேள்வியைக் காணவே வந்தார்கள்'' என்றார். இவ்வளவோடு பேச்சை நிறுத்தியிருக்க லாம், அவச்யமில்லாததை முனிவர் பேசார். ஆனால், தான் யாகத்தைப் பார்ப்பதை வ்யாஜமாக (சாக்காக)க் கூறி, ஸீதையை மணம் முடிக்கவன்றோ ராமனை அழைத்து வந்தார். எனவே தன் குறிக்கோளை நிறைவேற்ற எண்ணிக் குறிப்பாக மேலும் பேசினார். ''மஹாதனுஷி ஜிஜ்ஞாஸாம்'' ''வில்லும் காண்பார்'' என்றார். உம்மிடமுள்ள வில்லின் உயர்வையும், வலிமையையும் நேரில் அறியவே வந்தார்கள் என்று கூறி உமது மருமகன் களாக (மாப்பிள்ளையாக) ஏற்றுக் கொள்ளத்தக்கவர் என்பதை அழகாக உணர்த்தினார், அதோடு தசரதர் உமக்கு ஸம்பந்தியாகக் கொள்ளத்தக்கவர் என்பதை உணர்த்தவே ''பெரும் தகைமை தசரதன் புதல்வர்'' என்றார். அதாவது அருள், கொடை, நீதி, வீரம், அமைதி போன்ற எல்லா நலங்களும் ஒருங்கே பெற்ற தசரதர் ஸம்பந்தியாகத் தடை என்ன என்று அழகாகப் பேசினார்.

ஆசார்ய பக்தி

अपि ते मुनिशार्दूल मम माता यशस्विनी
दर्शिता राजपुत्राय तपोदीर्घमुपागता ॥
वन्यैरुपाहरत् पूजां पूजार्हे सर्वदेहिनाम् ।
अपि कौशिक भद्रं ते गुरुणा मम संगता ।
मम माता मुनिश्रेष्ठ रामसंदर्शनादितः ॥
संगता मुनिना पत्नी भार्गवेणेव रेणुका ।

அபி தே முனிஶார்தூல ! மம மாதா யஶஸ்வினீ ।
தர்ஶிதா ராஜபுத்ராய தபோதீர்கம் உபாகதா ॥
வன்யை: உபாஹரத் பூஜாம் பூஜார்ஹே ஸர்வதேஹினாம் ॥
அபி கௌசிக! பத்ரம் தே குருணா மம ஸங்கதா ।
மாதா மம முனிஶ்ரேஷ்ட! ராம ஸந்தர்ஶனாத் இத: ॥
ஸங்கதா முனினா பத்னீ பார்க்கவேண இவ ரேணுகா ॥

வா.ரா.பால.-51

முனிவர், ஜனகர் ஆகிய அனைவரும் அமர்ந்து ஒருவருக்கொருவர் குஶலப்ரஶ்னங்கள் முடிந்த பிறகு சதானந்தர் ''கௌசிக முனிவரே! பதிவ்ரதா சிரோமணியாய் பெரும்புகழ் பெற்ற எனது தாய் அஹல்யை, வினைப் பயன் காரணமாக எனது தந்தையால் சபிக்கப்பட்டு நீண்டகாலம் பிறர் கண்களுக்கு இலக்காகாமல் ராம த்யானம் செய்துகொண்டு இருந் தாளே, அத்தகைய என் தாயை சக்ரவர்த்தித் திருமகனுக்கு அறிமுகம் செய்வித்தீரா? மனிதர்கள், தேவர்கள் அன்றி பசு பக்ஷி முதலியவற்றாலும் போற்றப்படும் ராமனை, காட்டில் கிடைக்கும் உயரிய பொருட்களை உபஹாரமாக ஸமர்ப்பித்து உபசரித்துப் போற்றினாளா? எனது தாய் எனது குருவான தந்தையோடு சேர்ந்தாளா?''

கௌசிகர்: ''சதானந்தா! உனக்கு ஏன் இந்தக் கவலை? நான் எனது கடமையினின்றும் வழுவாது செய்ய வேண்டியதைச் செய்தேன். பார்கவ ரான ஜமதக்னி மஹர்ஷியோடு அவரது மனைவி மீண்டும் எப்படிச் சேர்ந்தாளோ அதேபோன்று உனது தாய் உன் தந்தையான கௌதமரோடு சேர்ந்தாள்''.

नास्ति धन्यतरो राम त्वत्तोऽन्यो भुवि कश्चन ।
गोप्ता कुशिकपुत्रस्ते येन तप्तं महत्तपः ॥
श्रूयतां वाभिधास्यामि कौशिकस्य महात्मनः ।
यथाबलं यथातत्वं तन्मे निगदतः श्रृणु ॥

நாஸ்தி தன்யதர: ராம ! த்வத்த: அன்ய: புவிகச்சன ।
கோப்தா குஶிக புத்ர: தே யேன தப்தம் மஹத்தப: ॥
ஶ்ரூயதாம் வா அபிதாஸ்யாமி கௌஶிகஸ்ய மஹாத்மன: ।
யதாபலம் யதாதத்வம் தத் மே நிகதத: ஶ்ருணு ॥

வா.ரா.பால.-51

சதானந்தர், ''ராமா! எதிர்பாராது எங்களது புண்ய விசேஷத்தினால் விச்வாமித்ரரை முன்னிட்டுக் கொண்டு இங்கு வந்திருக்கும் உன்னை மிக மகிழ்ந்த உள்ளத்துடன் வரவேற்கிறேன். ராம! இவ்வுலகில் பெரும்பாக்கியம் செய்தவர் உன்னைவிட வேறு யார் உளர்? உலகை எல்லாம் காக்கும் ஸர்வரக்ஷகனான உனக்கும் ஒரு ரக்ஷகராக அமைந்தார் கௌசிகர். இதற் காகவே பெரும் தவம்புரிந்தவர் போலும். கொடிய விலங்குகளும், அரக்கர் களும் நடமாடும் இக்காட்டின் வழியே யார்தான் வரமுடியும்? தனது தவத்தின் வலிமையினால் பாதுகாப்பாக உங்களை மிதிலை வரை அழைத்து வந்துவிட்டாரே. ப்ரஹ்மர்ஷியல்லவா! அதுமட்டுமா? பலை, அதிபலை என்ற மந்த்ரங்களையும், பல்வகை அஸ்த்ரங்களையும், இவற்றை விடவும், திரும்பப் பெறவும் தேவையான மந்த்ரங்களையும் உபதேசித்து உங்களைக்

காத்த குருவாயிற்றே. அவருடைய சரித்திரத்தையும், தவ வலிமையையும் பற்றிக் கூறுகிறேன், கேட்கவும்'', என்றார்.

அயோத்தியினின்றும் புறப்பட்டு மூவருடன் கரடு முரடான பயங்கர மான காடுகளைக் கடந்து நாமும் மிதிலை வந்து விட்டோம். நமது பொறுமைக்கு ஒரு சோதனை. ஸீதா கல்யாணத்தைக் கண்டு கேட்டு அனுப விக்கத்தானே பொறுமை காட்டினோம், விஸ்வாமித்திரரும் ஸீதையை மணம் முடிக்கும் நோக்கத்தினாலன்றோ ராமனை இங்கு அழைத்து வந்தார். ஜனகரும் ''இத்தகு அழகும் மிடுக்கும் உள்ள ராஜகுமாரன் கிடைத் திருக்கிறான். எப்படியாவது இவனுக்கே ஸீதையைக் கொடுத்து விடலாம்'' என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கிறார். இந்நிலையில் பூசை வேளையில் கரடியை விடுவதைப் போன்று சதானந்தர் விஸ்வாமித்ர கதாப்ரவசனத்தைத் தொடங்கி விட்டாரே, அவரைப் போதும் வேண்டா மென்று உட்காரச் சொல்லலாமா? கூடாது; ஏன்? மஹாராஜாவான ஜனகரே அரசுப் பணிகள், தொடங்கிய வேள்விக்குரிய பணிகள், இவற்றிற்கிடையே ஸீதா கல்யாணம் ''என்ன செய்தால் நடக்கும்'' என்கிற கவலை ஆகியவை இருந்தும் அவர் கதை கேட்க ஆவலுறும்போது நாம் எம்மாத்திரம்? மேலும் எதையும் குருவின் அருள் பெற்றுத் தொடங்கினால் தான் அது இனிது பூர்த்தி பெறும். தெய்வத்தைவிட பக்தன், ஆசார்யன் உயர்ந்தவன், தைவ வந்தனை யால் ஆகாதது ஆசார்ய வந்தனையால் கைகூடும். பரமன் பக்தவத்ஸன், பக்தபராதீனன், அவனுடைய மந்திரங்களுக்குட்பட்டவன். எனவே குரு சொன்னபடி நடப்பவன். கண்ணன் அர்ஜுனனைப் பார்த்து ''அர்ஜுனா! நீ உன் வாயால் ''ந மே பக்த: பரணச்யதி'' க்ருஷ்ண பக்தனுக்கு என்றும் க்ஷேமம் தான். கேடு வராது'' எனச் சொல்லேன் என்றார். ஏன் பக்தன் வாயால் சொல்லிவிட்டால் பகவான் அப்படியே செய்துவிடுவான். ''ஸத்யம் விதாதும் நிஜப்ருத்யபாஷிதம்'' பக்தன் சொன்ன ''தூணிலும் இருக்கிறான்'' எனும் வார்த்தையை மெய்ப் பித்தற்காகவன்றோ பரமன் நரஸிம்ஹனாக தூணில் அவதரித்தான்.

எனவே இங்கு விஸ்வாமித்ரர் பரமபக்தர், குரு, ஆசார்யன், அவர் சரித்திரத்தைச் சொன்னால், கேட்டால், எழுதினால்தான் பெண்ணின் கல்யாணம் நிர்விக்னமாக ஜனகருக்கு நடக்கும். கல்யாணத்தைப் பண்ணி (நடத்தி) வைக்கும் பாக்யம் சதானந்தருக்குக் கிடைக்கும். இதில் வஸிஷ்டர் சரித்திரமும் வருகிறது. வஸிஷ்டரும் கௌசிகரும் ராமனுக்கு குருக்கள். ஆசார்யர்களைப் புகழ்வதால் - நினைப்பதால் ராமாதிகளுக்கும் விவாஹங் கள் நடக்கும். நமக்கு எழுதும் பாக்யமும், உங்களுக்கும் படித்து, கேட்டு, கண்டு அனுபவிக்கும் பாக்யமும் கிட்டும். எனவே விஸ்வாமித்ரரின் சரித்திரத்தைச் சதானந்தரிடம் கேட்போம்.

ப்ரஹ்மதேஜஸ்ஸின் பலம்

மக்களைப் படைக்கும் பிரஜாபதியின் குமாரன் குஶன் எனும் அரசர். இவர் பரம தார்மிகர். இவரைக் கண்டால் பகைவர்கள் அஞ்சி நடுங்குவர். இவர் கல்வி கேள்விகளில் மிகச் சிறந்தவர்; மக்கள் நலனைப் பேணுபவர். இவருடைய பிள்ளை குஶநாபர்; இவர் தந்தையைப் போன்றே கல்வியிலும், பண்பிலும் மிக்கவர். இவர் மகனாகிய காதி என்ற அரசரின் குமாரனே விஶ்வாமித்ரர். பல்லாயிரம் ஆண்டுகள் நாட்டை நன்முறையில் ஆண்டு வந்தார்.

வஸிஷ்டரின் நல்விருந்து

अक्षौहिणीपरिवृतः परिचक्राम मेदिनीम् ।
आश्रमान् क्रमशो राजा विचरन्नाजगामह ।
वसिष्टस्याश्रमपदं ब्रह्मलोकमिवापरम् ।
ददर्श जयतां श्रेष्ठो विश्वामित्रो महाबलः ॥
प्रतिगृह्य तु तां पूजां वसिष्ठाद् राजसत्तमः ।
तपोऽग्निहोत्रशिष्येषु कुशलं पर्यपृच्छत ॥

அக்ஷௌஹிணீ பரிவ்ருத: பரிசக்ராம மேதினீம் ।
ஆஶ்ரமான் க்ரமஶ: ராஜா! விசரன் ஆஜகாமஹ ॥
வஸிஷ்டஸ்ய ஆஶ்ரமபதம் ப்ரஹ்மலோகம் இவஅபரம் ।
ததர்ஶ ஜயதாம் ச்ரேஷ்ட: விச்வாமித்ர: மஹாபல: ॥
ப்ரதிக்ருஹ்யது தாம்பூஜாம் வஸிஷ்டாத் ராஜஸத்தம: ।
தபோக்னிஹோத்ர ஶிஷ்யேஷு குஶலம் பர்யப்ருச்சத் ॥

வா.ரா.பால.-51, 52

இவர் ஒரு ஸமயம் பெரும் படைகளுடன் நாடு முழுவதையும் சுற்றி வரலானார். பல நகரங்களையும், மலை நாடுகளையும் கடந்து கடைசியில் காட்டுப் பகுதியிலுள்ள ஆச்ரமங்களையும் பார்த்துக் கொண்டு வந்தார். வழியில் வஸிஷ்ட முனிவருடைய ஆச்ரமம் இருந்தது, அங்கு பல்வகை மரங்கள் வானோங்கி வளர்ந்து அழகாகக் காட்சி தந்தன. பல்வகை விலங்கினங்கள் கூட்டம் கூட்டமாகப் பகையின்றி வாழ்ந்து வருவதைக் கண்டார். ஸித்தர், சாரணர், தேவர், தானவர், கந்தர்வர், கின்னரர், அந்தணர் ஆகியோரின் அமைதியான வாழ்வினைக் கண்டு மகிழ்ந்தார். தண்ணீரையோ, காற்றையோ, உலர்ந்த சருகுகளையோ, பழங்களையோ, கிழங்குகளையோ

உணவாகக் கொண்டு, புலன்களை வென்று, அமைதியாகத் தவம் புரிந்துவரும் ப்ரஹ்மர்ஷிகள், தேவர்ஷிகள், ரிஷிகள் ஆகியோரை தரிசித்து உள்ளம் பூரித்தார். ஜபத்திலும், ஹோமத்திலும் ஈடுபடும் வாலகில்யர் களையும் வைகானஸர்களையும் நோக்கினார். ''இது என்ன? வஸிஷ்டரின் ஆச்ரமமா? அல்லது நான்முகனின் ஸத்யலோகமா?'' என ஐயுற்றார். உள்ளே சென்று வஸிஷ்ட பகவானை வணங்கினார். வஸிஷ்டரும் அரசரை வரவேற்று, இருக்கையில் அமரச்செய்து கனி, கிழங்குகளைக் கொடுத்து உபசரித்தார்.

விச்வாமித்ரர்: ''வஸிஷ்டரே! உங்களுடைய தவம் இடையூறின்றி நடைபெறுகிறதா? அக்னிஹோத்ராதி ஹோமங்கள் உரிய காலத்தில் தடையின்றி நிகழ் கின்றனவா? சீடர்களும் மற்றோரும் நோய் நொடியின்றி நலமாக இருக் கின்றனரா?''

இவ்வாறு குசலப்ரச்னங்களைச் செய்தும், பல கதைகளைப் பேசியும் இருவரும் இன்புற்றனர். வஸிஷ்டர் முடிவில் சொன்னார்.

आतिथ्यं कर्तुमिच्छामि बलस्यास्य महाबल ।
तव चैवाप्रमेयस्य यथार्हं सम्प्रतीच्छ मे ॥
राजस्त्वमतिथिश्रेष्ठः पूजनीयः प्रयत्नतः ॥

ஆதித்யம் கர்த்தும் இச்சாமி பலஸ்ய அஸ்ய மஹாபல ।
தவ ச ஏவ அப்ரமேயஸ்ய யதார்ஹம் ஸம்ப்ரதீச்ச மே ।
ராஜஸ் த்வம் அதிதிச்ரேஷ்ட: பூஜனீய: ப்ரயத்னத: ।

வா.ரா.பால.-52

''அரசே! நீர் எமக்குச் சிறந்த விருந்தினர். உமது பெருமை அளவிடற்பாலது அன்று. சீரிய முறையில் தங்களுக்கும் படையினருக்கும் நல் விருந்து அளிக்க விரும்புகிறேன். ஏற்பீராக'' என்றார்.

कृतमित्यब्रवीत् राजा पूजावाक्येन मे त्वया ।
नमस्तेऽस्तु गमिष्यामि मैत्रेणेक्षस्व चक्षुषा ॥

க்ருதம் இதிஅப்ரவீத் ராஜா ப்ரியவாக்யேன மே த்வயா ॥
நம: தே அஸ்து கமிஷ்யாமி மைத்ரேண ஈக்ஷஸ்வ சக்ஷுஷா ॥

வா.ரா.பால.-52

விச்வாமித்ரர்: ''முனிவரே! நீர் அர்க்யம், பாத்யம், ஆசமனீயம், கனி, கிழங்குகள் அளித்து முறைப்படி நன்கு உபசரித்தீர். மேலும் அன்புடன் மீண்டும் விருந்து அளிப்பதாகச் சொல்லுகிறீர். இச்சொல் ஒன்றே எனக்குப் போதுமானது. உமது அருள் நோக்கினால் என்னைக் குளிரக் கடாக்ஷித்து விடை அளித்தால் அதுவே பெரும் பாக்யமாகும்'' என்றார்.

न्यमन्त्रयत धर्मात्मा पुनः पुनरुदारधीः ॥
यथाप्रियं भगवतस्तथास्तु मुनिपुङ्गव ॥
आजुहाव ततः प्रीतः कल्माषीं धूतकल्मषां ॥
एह्येहि शबले क्षिप्रं श्रृणु चापि वचो मम ।
सबलस्यास्य राजर्षेः कर्तुम् व्यवसितोऽस्म्यहम् ।
भोजनेन महार्हेण सत्कारं संविधत्स्व मे ॥
रसेनान्नेन पानेन लेह्य चोष्येण संयुतम् ॥
अन्नानां निचयं सर्वं सृजस्व शबले त्वर ॥

ந்யமந்த்ரயத தர்மாத்மா புன: புன: உதாரதீ: ॥
யதாப்ரியம் பகவத: ததா அஸ்து முனிபுங்கவ ॥
ஆஜுஹாவ தத: ப்ரீத: கல்மாஷீம் தூதகல்மஷாம்: ॥
ஏஹிஏஹி சபலே க்ஷிப்ரம் ஶ்ருணுச அபிவச: மம ॥
ஸபலஸ்ய அஸ்ய ராஜர்ஷே: கர்தும் வ்யவஸித: அஸ்மிஅஹம் ॥
போஜனேன மஹார்ஹேண ஸத்காரம் ஸம்விதத்ஸ்வ மே ॥
ரஸேன அன்னேன பானேன லேஹ்ய சோஷ்யேண ஸம்யுதம் ॥
அன்னானாம் நிசயம் ஸர்வம் ஸ்ருஜஸ்வ சபளே த்வர ॥

வா.ரா.பால.-52

தனது ஆச்ரமத்திற்கு வந்தவர்களை உபசரிக்காமல் அன்னமளிக்காமல் திருப்பி அனுப்புவது தகாதது ஆகும். வேதம் ''தன்வீடு தேடி வந்தவர்களை, தான் எவ்வளவு ஏழையாயிருப்பினும் உபசாரத்துடன் உணவு அளிக்காது திருப்பி அனுப்பாதே, இது உனது வ்ரதம், கடமை. எனவே எம்முறையிலாவது முயன்று உணவுப் பொருட்களைத் தேடி வைத்துக் கொள்'' எனக் கட்டளையிடுகிறது. எனவே விஸ்வாமித்ரருக்கும் அவர் பரிவாரங்களுக்கும் நல்விருந்தளிக்க உறுதிபூண்டு, மீண்டும் மீண்டும் வற்புறுத்தி அரசரை இணங்கத் தூண்டினார். அரசரும் ''மஹர்ஷியே! உமது விருப்பப்படி நடக்கட்டும்'' என அனுமதித்தார்.

வஸிஷ்டர் உடனே பார்ப்பதற்கு மிக அழகும் கவர்ச்சியும், பல்வகை நிறங்களோடு கூடியதுமான ஆச்ரமத்துப் பசுவை—நந்தினியை அழைத்துப் பேசலானார்: ''விரைவில் அருகில் வா. நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நமது ஆச்ரமத்திற்கு அரசர் தமது படை வரிசைகளுடன் வருகை புரிந்திருக்கிறார். இவர்கள் அனைவருக்கும் உயர் ரக விருந்து அளிக்க வேண்டும். அறுசுவை உண்டியில் யார் யார், எதை எதை விரும்பி உண்பார்களோ அதை அதை, பரிவுடன் விசாரித்துப் பரிமாற வேண்டும். அன்ன வகைகளில் அதாவது ரஸ (சாறு) வகைகள், ஓஹோரை வகைகள், பருகும் பான வகைகள், பச்சடி வகைகள், நக்கி, உறிஞ்சி ருசித்துச்

சாப்பிடுபவை, பக்ஷ்யங்களின் வகைகள் அனைத்தையும் குளம் போன்றும், வாய்க்கால் போன்றும், மலைகள் போன்றும் விரைவில் படைத்துத் தயார் செய்து கொண்டு எவரும் எதற்கும் காத்திராமல் விரைந்து உடனுக்குடன் சூடாகப் பரிமாற வேண்டும்'' எனக் கட்டளையிட்டார். உடனே நினைத்த மாத்திரத்தில் அனைத்தும் தயாராகி அரசர், ராணி, அந்தப் புர பரிஜனங்கள், புரோஹிதர்கள், மந்த்ரிகள் பல்வகைப்படையினர் அனைவரும் உண்டு மகிழ்ந்தனர்.

அறு சுவைத்து ஆய உண்டி அரச! நின் அனிகத்தோடும்
பெறுக என அளித்து வேந்தோடு யாவரும் துய்த்த பின்றை
நறுமலர்த்தாரும் வாசக் கலவையும் நல்கலோடும்
உறு துயர் தணிந்து மன்னன் உய்த்து உணர்ந்து
உரைக்கல் உற்றான்

க.ரா.பால. - மிதிலை

அனிகம் : சேனை, வேந்து : அரசன், தார் : மாலை

அனைவரும் விரும்பியபடி அறுசுவை உண்டிகளை உண்டு நாட்டிலிருந்து காடுவந்த ச்ரமம் தீர்ந்து அமர்ந்தனர். அவ்வனைவருக்கும் உயர்ந்த நறுமணம் வீசும் மலர் மாலைகளைச் சூட்டி, மணங்கமழும் சந்தனத்தை அளித்து, தாம்பூல வகைகளையும் அளித்து உபசரித்தார் வஸிஷ்டர்.

பேராசை பெரு நஷ்டம்

விச்வாமித்ரரும், மாமன்னர்களாலும் அளிக்க முடியாத இத்தகு தெய்வீக விருந்து வஸிஷ்டர் அளித்தற்குக் காரணமாயிருந்தது ஒரு பசு என்பதை நுனித்து உணர்ந்தவராய்ப் பேசலானார்.

गवां शतसहस्रेण दीयतां शबला मम ।
रत्नं हि भगवन्नेतद् रत्नहारी च पार्थवः ॥
तस्मान्मे शबलां देहि ममैषा धर्मतो द्विजः!

கவாம் ஶதஸஹஸ்ரேண தீயதாம் சபளா மம ॥
ரத்னம்ஹிபகவன் ! ஏதத் ரத்னஹாரீ ச பார்த்திவ: ।
தஸ்மாந்மே சபளாம் தேஹிமம ஏஷா தர்மத: த்விஜ ॥

வா.ரா.பால. - 53

தீது அறு குணத்தால் மிக்க செழுமறை தெரிந்த நூலோர்
மேதகு பொருள்கள் யாவும் வேந்தருக்கு என்கை தன்னால்

க.ரா.பால.-மிதிலை

''வஸிஷ்டரே! நீரோ அந்தணர். உயர்ரக பொருள்களில் பற்றற்றவர், நானோ அரசன், நாட்டில் உயர்ந்த பொருள் எதுவாயினும் எங்கிருப்பினும் அதைப் பெற—கவர்ந்து கொள்ள உரிமை பெற்றவன். இது அறநூலோர் வகுத்த முறை. இது பரம தார்மிகரான தர்மசாஸ்த்ரம் கற்ற நீர் அறியாத தன்று. தினந்தோறும் அக்னிஹோத்ராதி கர்மானுஷ்டானத்திற்குத் தேவையான பஞ்சகவ்யப் பொருள்களைப் பிற பசுக்களிடமிருந்தும் பெறலாம். எனவே இந்த ஒரு பசுவிற்கு ஈடாக ஆயிரக்கணக்கான பசுக்களைத் தருகிறேன். தேவையானால் பொன்னணிகளாலான இடுப்புப் பட்டை, கழுத்துப் பட்டை பூண்ட பல யானைகளையும், ஆயிரம் உயர்ரக வெண் புரவிகள் பூட்டிய தேர்களையும், நீர் விரும்பும் அளவிற்கு ரத்னங்களையும் அளவின்றித் தருகிறேன். எனவே உம்மிடமுள்ள காமதேனுவை எனக்குத் தாரும்'' என்றார்.

अस्यां हव्यं च कव्यं च प्राणयात्रा तथैव च ॥
आयत्तमग्निहोत्रं च वलिर्होमस्तथैव च ।
एतदेव हि सर्वस्वमेतदेव हि जीवितम् ॥

அஸ்யாம் ஹவ்யம்ச கவ்யம்ச ப்ராணயாத்ரா ததைவ ச ।
ஆயத்தம் அக்னிஹோத்ரம்ச பலி: ஹோம: ததைவச ॥
ஏததேவஹி ஸர்வஸ்வம் ஏததேவஹி ஜீவிதம் ।

வா.ரா.பால.-53

வற்கலை யுடையென் யானோ வழங்கலென் வருவது ஆகில்
கொற்கொள்வேல் உழவ! நீயே கொண்டு அகல்க என்று கூற

க.ரா.பால.-மிதிலை

வஸிஷ்டர், அரசனின் பேராசையைக் கண்டு மனம் வருந்தியவராய்ப் பேசலானார்: ''அரசே! நீர் வேல் முதலிய பல்வகை ஆயுதங்களைக் கொண்டு பகை அரசர்களை வென்று அவர்களிடமுள்ள அரியனவாகிய உயரிய பொருள்களைப் பெற்றவராவீர். நானோ ஒரு பசுவை வைத்திருக்கிறேன். எனக்கு இதுவே ரத்னம், பொன், தனம். நான் தினந்தோறும் செய்யவேண்டிய தேவர்கட்குரிய ஹோமங்கள், பித்ருக்களுக்குரிய ச்ராத்தாதிகள், பூதங் களுக்கு இடும் பலிகள் எல்லாம் இதைக் கொண்டே நடக்கின்றன. நான் செய்யும் கர்மாக்களோ நாட்டை வாழ்விப்பவை. அதை நிறுத்த முடியாதே. எனக்கு எல்லா சொத்துக்களும் ஆவது இது ஒன்றுதான். இப்பசுவே எனது உயிர். அதை எப்படி நான் உனக்குக் கொடுக்க முடியும்? ஒரு அரசனுக்கு ஏழை பிராஹ்மணன் கோதானம் பண்ணுவது எங்ஙனம்? தானம் என்பது, தான் ஈட்டிய பொருளைப் பிறருக்குக் கொடுப்பது. இப்பசுவோ தானாக வந்தது. என் ஆச்ரமத்தில் இருந்து எனக்கு உதவுகிறது. அப்பசு வந்தால் நீர் அழைத்துச் செல்லும்'' என்றார்.

तदास्य शबलां राम विश्वामित्रोऽन्वकर्षत ।
भगवन् किं परित्यक्ता त्वयाहं ब्रह्मणः सुत ।
यस्माद् राजभटा मां हि नयन्ते त्वत्सकाशतः ॥

ததா அஸ்ய சபளாம் ராம! விச்வாமித்ர: அன்வகர்ஷத ।
பகவன்! கிம் பரித்யக்தா த்வயா அஹம் ப்ரஹ்மண: ஸுத ।
யஸ்மாத் ராஜபடா மாம்ஹி நயந்தே த்வத்ஸகாஶத: ॥

வ.ரா.பால.-54

மணித்தடம் தோளினாற்குக் கொடுத்தியோ, மறைகள் யாவும்
கணித்த எம்பெரும! என்னக் கலைமறை முனிவன் சொல்வான்

க.ரா.பால. - மிதிலை

கணித்த:ஆய்ந்தறிந்த, கலை:கல்விகள்

नहि तुल्यं बलं मह्यं राजा त्वद्य विशेषतः ।
बली राजा क्षत्रियश्च पृथिव्याः पतिरेव च ॥
ब्रह्मन् ब्रह्मबलं दिव्यं क्षात्राच्च बलवत्तरम् ।
नियुङ्क्ष्व मां महातेजस्त्वं ब्रह्मबलसम्भृताम् ।
तस्य दर्प बलं यत्तत् नाशयामि दुरात्मनः ॥

நஹி துல்யம் பலம் மஹ்யம் ராஜாது அத்ய விஶேஷத: ॥
பலீ ராஜா க்ஷத்ரிய: ச ப்ருதிவ்யா: பதி: ஏவச ॥
ப்ரஹ்மன் ப்ரஹ்மபலம் திவ்யம் க்ஷாத்ராத்ச பலவத்தரம் ॥
நியுங்க்ஷ்வமாம் மஹாதேஜ:! த்வம்ப்ரஹ்ம பலஸம்ப்ருதாம் ॥
தஸ்ய தர்ப்பபலம் யத்தத் நாஶயாமி துராத்மன: ॥

வ.ரா.பால.-54

இடித்துஎழு(ம்) முரசவேந்தன் சேனையை யானே இன்று
முடிக்குவென் காண்டி என்னா மெய்ம்மயிர் சிலிர்த்தது அன்றே,
துப்புடைச் சேனையாவும் தொலைவுறத் துணித்தலோடும்
வெப்புடைக் கொடிய மன்னன் தனயர்கள் வெகுண்டு மிக்கார்.

க.ரா.பால. - மிதிலை

துப்புடைய:வலிமையுடைய, துணித்தல்:வெட்டுதல், வெப்புடை:கோபதாப முடைய

ते साश्वरथपादाता वसिष्ठेन महात्मना ।
भस्मीकृता मुहूर्तेन विश्वामित्रसुतास्तथा ॥

தே ஸாஸ்வ ரதபாதாதா: வஸிஷ்டேன மஹாத்மனா ।
பஸ்மீக்ருதா: முஹூர்த்தேன விச்வாமித்ர ஸுதா: ததா ॥

வா.ரா.பால.-55

எரி எழ விழித்தலோடும் இறந்தனர் குமரர் எல்லாம்

க.ரா.பால.-மிதிலை

கோபத்தினால் மதியிழந்த விஶ்வாமித்ரர் தன் படையினர்மூலம் பசுவின் கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்தார். அப்பசு கயிற்றை அறுத்து உதறிவிட்டு வஸிஷ்டரிடம் வந்து அழுதுகொண்டே கேட்டது. ''பூஜ்யரே! ராஜபடர்கள் உம்மிடமிருந்து என்னைப் பிரித்து இழுத்துச் செல்ல முயல்கின்றனரே! நான்முகனின் மகனாகிய நீர் என்னை விட்டு விட்டீரா? விச்வாமித்ரரின் தோள்வலிக்கு அஞ்சி, தனுர் வேதத்தோடு அனைத்தையும் பயின்ற நீர் என்னைத் துறக்க எண்ணினீரோ? ப்ராஹ்மணனின் வலிமைக்கு எதிரே க்ஷத்ரியனின் பலம் எம்மாத்திரம்! ராஜா பூமண்டலத்திற்குத் தலைவன். அதைக் காக்கும் வலிமையுடையவன். ஆயினும் ப்ரஹ்ம தேஜஸ்ஸின் பலத்திற்கு அது நிகராகுமோ? உமது அருளினாலும் உமது ப்ரஹ்மதேஜஸ்ஸினாலும் எனது பலம் வளர்கிறது. நீர் உத்திரவு அளித்தால் அந்த பேராசை பிடித்த அரசனையும், அவன் படைபலத்தையும் இதோ அழித்து விடுகிறேன்'' என்று கூறி, வஸிஷ்டரின் உத்திரவையும் ஆசியையும் பெற்று, மயிர் சிலிர்த்து, உரக்கக் குரல் கொடுக்க பல்வகை படைக் கலங்களோடு மிலேச்சரின் படைகள் தோன்றி, அரசு படைகள் அனைத்தை யும் அரசர் பார்த்துக்கொண்டே இருக்க அழித்தன. உடனே அரசரின் புதல்வர்கள் நூற்றுவரும் படைகளைத் திரட்டிக் கொண்டுவர, அவர்களை வஸிஷ்டர் ஒரு ஹூம்காரத்தினால் சாம்பலாக்கி அரசரின் கொட்டத்தை அடக்கினார்.

समुद्र इव निर्वेगो भग्नद्रंष्ट्र इवोरगः ।
उपरक्त इवादित्यः सद्यो निष्प्रभतां गतः ॥
लूनपक्ष इव द्विजः ॥ निर्वेदं समपद्यत ॥
स गत्वा हिमवत्पार्श्वं किंनरोरगसेवितम् ।
महादेवप्रसादार्थं तपस्तेपे महातपाः ॥

ஸமுத்ர இவ நிர்வேக: பக்னதம்ஷ்ட இவஉரக: ।
உபரக்த இவ ஆதித்ய: ஸத்ய: நிஷ்ப்ரபதாம் கத: ॥
லூனபக்ஷ: இவத்விஜ: ॥ நிர்வேதம் ஸமபத்யத ॥
ஸகத்வா ஹிமவத் பார்ஸ்வம் கிந்நரோரக ஸேவிதம் ॥
மஹாதேவ ப்ரஸாதார்த்தம் தபஸ் தேபே மஹாதபா: ॥

வா.ரா.பால.-55

புதல்வர்களையும், நான்கு வகைப் படையினரையும் இழந்த விஶ்வாமித்ரர் வஸிஷ்டரின் ஆத்ம பலத்திடம் தனது உடல் வலியும், படை வலியும் ஆற்றல் இழந்ததைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தார். பொங்கிச் சீறி எழும்கடல், கரையில் அடங்குவது போன்று, போர் முயற்சியற்றவராய், விஷப் பற்களை இழந்த ஸர்ப்பம் போன்று, ஆற்றலை இழந்தவராய், க்ரஹண காலத்தில் ஒளியிழந்த கதிரவனைப் போன்று களை இழந்தவராய், சிறகுகளைப் பறிகொடுத்த பறவை போன்று, துணை இழந்தவராய் மக்களை இழந்து, தேசு அழிந்து, ஊக்கம் குன்றி, நொந்த மனத்தினராய்ப் பெரும் துன்பத்தில் ஆழ்ந்தார்.

பின்னர் மீதமுள்ள ஒரு புதல்வனுக்கு முடிசூட்டி, ராஜ்யத்தில் அமர்த்திவிட்டு, இமயம் சென்று பசிதாகங்களை அடக்கி, புலன்களை வென்று, மஹாதேவனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்து, அவன் அருளால் தனுர் வேதத்தையும், பல்வகை அஸ்த்ரங்களையும், இவைகட்குரிய மந்த்ர ரஹஸ்யங்களையும் பெற்று, வலிமை மிக்கவராய் பௌர்ணமியன்று கடல் பொங்குவதுபோல் வீரமும், திமிரும், ஊக்கமும் வளர, எழும்பிக் குதித்து, செருக்குடன், வஸிஷ்டரின் ஆச்ரமத்திற்கு வந்தார். வந்ததும் முன் எச்சரிக்கை எதுவுமின்றி, திடீர்த் தாக்குதலைத் தொடங்கி பல்வகை அஸ்த்ரங்களைப் ப்ரயோகம் செய்து ஆச்ரமத்தைச் சூன்யமாக்கி ''வஸிஷ்டன் செத்தான்'', என நினைத்து மகிழ்ந்தார். எங்கும் மயான அமைதி நிலவியது.

आश्रमं चिरसंवृद्धं यद् विनाशितवानसि ।
दुराचारोसि यन्मूढस्तस्मात् त्वं न भविष्यसि ॥
क्व च ते क्षत्रियबलं क्व च ब्रह्मबलं महत् ।
पश्य ब्रह्मबलं दिव्यं मम क्षत्रियपांसन ॥

ஆஶ்ரமம் சிரஸம்வ்ருத்தம் யத்வினாஶிதவான் அஸி ।
துராசார: அஸி யத் மூட ! தஸ்மாத் த்வம் ந பவிஷ்யஸி ।
க்வச தே க்ஷத்ரியபலம் க்வச ப்ரஹ்மபலம் மஹத் ।
பஶ்ய ப்ரஹம பலம் திவ்யம் மம க்ஷத்ரிய பாம்ஸன ॥

வா.ரா.பால. - 55, 56

ஜபத்திலிருந்த முனிவர் நிஷ்டை கலைந்து, கண் திறந்து பார்த்து நிகழ்ந்ததை உணர்ந்தார். ''ஏ மூடா! பல்லாண்டு பல்லாண்டாக வளர்ந்து, நல்லோர் பல்லோருக்குப் புகலாயிருந்த ஆச்ரமத்தை அழித்த நீ வாழ மாட்டாய். பகலவனைக் கண்ட பனிபோல் விரைவில் அழிவாய். ஒழுக்கம் கெட்டவனே! உனது அரசு பலம் எங்கே? எனது ப்ரஹ்மபலம் எங்கே? ப்ரஹ்மபலத்தின் பெருமையை இதோ பார். உனது வலிமையை முடிந்த வரை காட்டு'' எனக் கூறித் தன் கையிலுள்ள ப்ரஹ்ம தண்டத்தை எதிரே நிறுத்தினார். அந்த தண்டம் புகையற்ற ஊழிக்காலத் தீயைப் போன்று, மிக

பயங்கரமாக சுடர்விட்டு பிரகாசித்தது, ப்ரளய காலத்தில் உயிர்கள் அனைத்தையும் அழிக்கும் யமனின் தண்டம் எனத் தோன்றியது.

विधूम इव कालाग्निःर्यमदण्ड इवापरः ।

விதூமஇவ காலாக்னிம் யம தண்டமிவ அபரம் ॥

வா.ரா.பால.-56

விஸ்வாமித்ரர், கர்வத்துடனும், செருக்குடனும், தவத்தினால் சிவன், தனக்கு அளித்த அஸ்த்ரங்களை ஒவ்வொன்றாகப் ப்ரயோகம் செய்தார். கனலைக் கக்கியவாறு சீறிப் பாய்ந்த ஆக்னேயாஸ்த்ரம், ப்ரஹ்மதண்டத்தைப் பொசுக்குவதற்கு மாறாக தண்ணீரினால் அணைக்கப்பட்டது போன்று சாந்தமாயிற்று. மழையைப் பொழிவனவும், மார்பைப் பிளப்பனவும், அறிவை மயக்குவனவும் தூங்கச் செய்வனவும், உடலை உலர்த்துவனவும், பொசுக்குவனவும் ஆகிய சுமார் நாற்பது அஸ்த்ரங்களை ஏவினார். ஒவ்வொன்றும் உலகையே அழிக்கக் கூடியவை. ஒவ்வொன்றும் இக் காலத்திய பல்லாயிரம் அணுகுண்டுகளை விஞ்சியவை. ஆயினும் எல்லாம் என்ன ஆயின?

वसिष्ठे जपतां श्रेष्ठे तदद्भुतमिवाभवत् ।
तानि सर्वाणि दण्डेन ग्रसते ब्रह्मणः सुतः ॥

வஸிஷ்டே ஜபதாம் ஶ்ரேஷ்டே தத் அத்புதம் இவ அபவத் ।
தானி ஸர்வாணி தண்டேன க்ரஸதே ப்ரஹ்மண: ஸுத: ॥

வா.ரா.பால.-56

முனியும் தன் கைத் தண்டினை எதிர்க என்றான்.
கடவுளர் படைகள் ஈறாக் கற்றன படைகள் யாவும்
விடவிட முனிவன் தண்டம் விழுங்கி மேல் விளங்கல் காணா.

க.ரா.பால.-மிதிலை

நிகழ்பவை எல்லாம் ஒரே அற்புதமாய், ஆச்சரியமாய், காதால் கேட்டறியாதனவாய் இருந்தன. அவ்வஸ்த்ரங்கள் அனைத்தையும் ப்ரஹ்ம தண்டத்தினால் விழுங்கி விட்டார் வஸிஷ்டர். அனைத்தும் பயனற்றுப் போயின. அவற்றை அனைத்தையும் ப்ரஹ்மதண்டம் சகோதரனை வர வேற்பதுபோல் வரவேற்று தன்னுள் அடக்கிக் கொண்டது. பிறகு ப்ரஹ் மாஸ்த்ரத்தை ஏவினார் விஸ்வாமித்ரர். அதற்கும் அதே கதி. பயங்கரமான அஸ்த்ரங்கள் அனைத்தையும் தனது ப்ரஹ்ம தண்டத்தின் மூலம் தன்னுள் அடக்கியதால், தீயினின்றும் தீப்பொறிகள் கிளம்புவதுபோல, அவர் உடலின் ஒவ்வொரு மயிர்க்கால்களினின்றும் அக்னி ஜ்வாலைகள் கிளம்பின. ப்ரஹ்ம தண்டமும் தீப்பிழம்பு போன்று சுடர்விட்டது. இதைக்

கண்டு மூவுலகினரும் நடுங்கி, அஞ்சி மூர்ச்சித்து விழுந்தனர். தேவர்கள், முனிவர்கள் யாவரும் வஸிஷ்டரை வணங்கிப் போற்றி வேண்டினர்.

''வஸிஷ்டரே! உமது ஆன்மபலமும், காயத்ரீ ஜபத்தின் பலமும், நிகரற்றது. இதன் எதிரே விஸ்வாமித்ரரின் உடல் வலியும், படைவலியும், தவவலியும் எம்மாத்திரம்! அனைத்தும் அழிந்ததைக் கண்டோம். எங்களையும், மூவுலகினரையும் காப்பாற்றுவீராக. தண்டத்தினின்றும் உம்மிடத்தினின்றும் கிளம்பிய தேஜஸ்ஸை உம்முள்ளேயே அடக்கிக் கொள்ளும், என வேண்டினர்''. வஸிஷ்டர் அவ்வாறே செய்ய அனைவரும் மகிழ்ந்தனர்.

விஸ்வாமித்ரரும், ''ஆஹா! என்ன ஆச்சரியம்! காயத்ரீ மந்த்ர ஜபத்தின் வலிமையினால் நான் கடுந்தவமியற்றி சிவனாரிடம் பெற்ற அனைத்து அஸ்த்ரங்களையும் ஒரே ப்ரஹ்ம தண்டத்தினால் செயலிழக்கச் செய்து அழித்துவிட்டாரே!''

धिग् बलं क्षत्रियबलं ब्रह्मतेजोबलं बलम् ।
एकेन ब्रह्मदण्डेन सर्वास्त्राणि हतानि मे ॥

திக் பலம் க்ஷத்ரியபலம் ப்ரஹ்ம தேஜோபலம் பலம் ।
ஏகேன ப்ரஹ்மதண்டேன ஸர்வாஸ்த்ராணி ஹதானி மே ॥

வா.ரா.பால.-56

என்று இவ்வாறு அரசு வலியின் இழிவை உணர்ந்து ப்ரஹ்ம பலத்தைப் பெற விழைந்து அங்கிருந்து புறப்பட்டார்.

பசுவை விற்கலாமா?

வஸிஷ்டரின், பசுவை வேண்டி விஸ்வாமித்திரர் போரிட்டுத் தோற்ற கதையைக் கேட்டோம். இங்கு சில ஐயப்பாடுகள். வஸிஷ்டர், புலன்களை வென்று காம க்ரோதாதிகளை அடக்கிய தவமுனிவர். ''ரத்னஹாரீது பார்த்திவ:'' உயரிய பொருள் எதையும் கவர்ந்து கொள்ளும் உரிமையைப் பெற்றவன் அரசன் எனும் நீதியை உணர்ந்தவர். எனவே பல பசுக்கள் இருக்கும்பொழுது ஒரு பசுவிடம் பற்றுக்கொள்ளாமல் அரசனுக்கு அதை உபஹாரமாக, காணிக்கையாகக் கொடுத்திருக்கலாமே. அரசனுக்கு மக்கள் காணிக்கை அளிப்பது, தொன்று தொட்டுவரும் மரபு தானே! ஆம், எனினும் உண்மை வேறு.

கௌசிகர் வஸிஷ்டரின் பசுவைத் தானமாகவோ, காணிக்கையாகவோ கொடுக்கும்படி கேட்கவில்லை, ''வஸிஷ்டரே! நீர் இந்தப் பசுவிற்காக எவ்வளவு ரத்தினங்களை விரும்புகிறீரோ, எவ்வளவு தங்கக் கட்டிகளைக் கேட்கிறீரோ அவ்வளவும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அவற்றைப் பெற்றுக்கொண்டு இந்தப் பசுவை எனக்குக் கொடும்'' என்று

கேட்டார். இப்பண்ட மாற்றுக்கு வாணிபம்—வியாபாரம் என்று பெயர். பசுவை விற்கக்கூடாது என்பது சாஸ்த்ரத்தின் கட்டளை.

ये दोषाः यादृशाश्चैव द्विज यज्ञोपघातके
विक्रयेचापहारे च ते दोषाः ये श्रिताः गवाम्
एका एकस्य दातव्या न बहूनां कदाचन
साचेत् विक्रयमापन्ना हन्ति चा सप्तमं कुलम् ॥

யே தோஷா: யாத்ருஶா: சைவ த்விஜ யக்ஞோபகாதகே ।
விக்ரயே ச அபஹாரே ச தே தோஷா: யே ஶ்ரிதா: கவாம் ॥
ஏகா ஏகஸ்ய தாதவ்யா ந பஹூனாம் கதாசன ।
ஸாசேத் விக்ரயம் ஆபன்னா ஹந்திச ஆஸப்தமம் குலம் ॥

பாரதம் - வன பர்வம்

நிகழ்ந்து கொண்டிருக்கும் வேள்வியை முற்றுப்பெறாது தடுத்துக் கெடுப்பவனுக்கு எத்தகு பாபங்கள் வந்து சூழுமோ அவ்வளவு பாபங்கள் பசுவை விற்பவனுக்கும், திருடுபவனுக்கும், வலிமையால் பறித்துச் செல்பவனுக்கும் உண்டு என்றும், பசுவை விற்றால் அவனுடைய குலம் ஏழு தலைமுறை அழியும் என்றும் மஹாபாரதம் கூறும். எனவே வஸிஷ்டர் ரத்னங்களையும் பொன்னையும் விலையாகப் பெற்று பசுவைக் கொடுக்க விரும்பாததால் ''ந தாஸ்யே காம தோஹினீம்''; காமதேனுவைக் கொடுக்க மாட்டேன்'' என்றார்.

அரசனுக்கு மக்களிடமுள்ள உயரிய பொருளைக் கவரும் உரிமைக்கு விலக்கு உண்டு. தத்வங்களை உணர்ந்த ப்ரஹ்ம ஞானிகளின் பொருளைக் கவர்வது தகாது என்பது விதி.

न त्वेव कदाचित् स्वयं राजा ब्राह्मणस्वं आददीत

நது ஏவ கதாசித் ஸ்வயம் ராஜா ப்ராஹ்மணஸ்வம் ஆததீத.

न विषं विषमित्याहुः ब्रह्मस्वं विषमुच्यते ।
ब्रह्मस्वं पुत्र पौत्रघ्नं विष मेकाकिनं हरेत् ॥
तस्माद्राजा ब्राह्मणस्वं नाददीत, परं हि एतत् विषं यत् ब्राह्मणस्वम् ।

ந விஷம் விஷம் இதிஆஹு: ப்ரஹ்மஸ்வம் விஷம் உச்யதே ।
ப்ரஹ்மஸ்வம் புத்ர பௌத்ரக்னம் விஷம் ஏகாகினம் ஹரேத் ॥
தஸ்மாத் ராஜா ப்ராஹ்மணஸ்வம் ந ஆததீத, பரம் ஹிஏதத் விஷம் யத் ப்ராஹ்மணஸ்வம் ॥

போதாயனர்

அரசன் எக்காலத்தும் ப்ரஹ்ம வித்துக்களின் சொத்துக்களை எடுத்துக் கொள்ளக்கூடாது. இதுபற்றிப் பெரியோர்கள் பகன்றதாவது:

ஒருவனைத் தீண்டிய உடனே கொல்லும் விஷம், விஷம் அல்ல, ப்ரஹ்மவித்துக்களின் சொத்துக்களே அசல் விஷம் ஆகும். ஏனெனில் விஷம் ஒருவனைத்தான் கொல்லும். ப்ரஹ்ம வித்துக்களின் சொத்தாகிற விஷமோ தன் மக்களையும், அவர்களின் மக்களான பேரன்களையும் கொல்லும், எனவே அரசன் வேதமோதிய ப்ரஹ்மவித்துக்களின் சொத்தைப் பறிக்க லாகாது.

शुभे पात्रे ये गुणाः गो प्रदाने
तावान् दोषः ब्राह्मण स्वापहारे ॥

ஶுபே பாத்ரே யே குணா: கோ ப்ரதானே
தாவான் தோஷ: ப்ராஹ்மண ஸ்வாபஹாரே ॥

நற்பாத்திரத்தில் கோதானம் பண்ணினால் எவ்வளவு சிறப்போ, அவ்வளவு இழிவு ப்ராஹ்மணனின் சொத்தைப் பறித்தால் உண்டாகுமென்று பீஷ்மர் தர்மபுத்ரருக்கு உபதேசித்தபடி, இவ்வுண்மையை அறிந்திருந்தும் செய்தபடியால் விஸ்வாமித்திரர் அவமதிப்பையும் தோல்வியையும் சந்திக்க வேண்டியதாயிற்று.

ஒருவன் நிமித்தங்களால் தனக்குத் தீமைகள் வர இருப்பதை உணர்ந்து தன்னைக் காத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். ''யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே'' என்பது போல நிமித்தங்கள் முன்னே வந்து உஷார், ஜாக்ரதை என நம்மை எச்சரிக்கும். நிமித்தங்களாவன:

ब्राह्मणान् प्रथमं द्वेष्टि ब्राह्मणैश्च विरुध्यते
ब्राह्मण स्वानिचादत्ते ब्राह्मणांश्च जिघांसति
रमते निन्दया चैषां प्रशंसां नाभिनन्दति
नैतान् स्मरति कृत्येषु याचतश्चाभ्यसूयति
एतान् दोषान् नरः प्राज्ञः बुद्ध्या बुध्वा विवर्जयेत्

ப்ராஹ்மணான் ப்ரதமம் த்வேஷ்டி ப்ராஹ்மணை:ச விருத்யதே ।
ப்ராஹ்மண ஸ்வானி ச ஆதத்தே ப்ராஹ்மணான் ச ஜிகாம்ஸதி ॥
ரமதே நிந்தயா ச ஏஷாம் ப்ரசம்ஸாம் ந அபிநந்ததி ।
நஏதான் ஸ்மரதி க்ருத்யேஷு யாசத: ச அப்யஸூயதி ।
ஏதான் தோஷான் நர: ப்ராஜ்ஞ: புத்யா புத்வா விவர்ஜயேத் ॥

மஹாபாரதம்

''ப்ராஹ்மணர்களைப் பகைப்பது, விரோதித்துக் கொள்வது, அவர்கள் பொருட்களைத் திருடுவது (பறிப்பது), கொல்ல விரும்புவது,

அவர்களை இகழ்ந்து பேசி மகிழ்வது, பிறர் அவர்களைப் புகழ்வதை வெறுப்பது, சுபகார்யங்களில் அவர்களை நினைக்காமலிருப்பது, தான் உதவாவிடினும் பிறர் உதவுவதைக் கண்டு வெறுப்பது, ஆகிய இவ்வெட்டையும் புத்திசாலியானவன் உணர்ந்து ஒதுக்க வேண்டும்'' என விதுரர் த்ருதராஷ்டிரருக்கு உணர்த்துவார்.

ராஜர்ஷியான விஸ்வாமித்ரர் தர்மங்கள் அனைத்தையும் நன்கு கற்றுணர்ந்தவர்; கற்றதற்கேற்ப ஒழுகும் தன்மையுடையவர். ஆயினும் ஒரு தவ முனிவரின் பசுவைக் கவரும் எண்ணம் அவருக்கு ஏன் தோன்றியது?

यस्मै देवाः प्रयच्छन्ति पुरुषाय पराभवम्
बुद्धिं तस्यापकर्षन्ति सः अर्वाचीनानि पश्यति
बुद्धौ कलुष भूतायां विनाशे समुपस्थिते
अनयः नयसङ्काशः हृदयान्नापसर्पति ।
नदेवा यष्टि मादाय रक्षन्ति पशुपालवत्
यंहि रक्षितुमिच्छन्ति बुद्ध्या संयोजयन्ति तम् ।

யஸ்மை தேவா: ப்ரயச்சந்தி புருஷாய பராபவம் ।
புத்திம் தஸ்ய அபகர்ஷந்தி ஸ: அர்வாசீனானி பச்யதி ॥
புத்தௌ கலுஷபூதாயாம் வினாசே ஸமுபஸ்த்திதே ।
அனய: நயஸங்காச: ஹ்ருதயாத் ந அபஸர்ப்பதி ॥
ந தேவா: யஷ்டிம் ஆதாய ரக்ஷந்தி பசுபாலவத் ।
யம் ஹி ரக்ஷிதும் இச்சந்தி புத்யா ஸம்யோஜயந்தி தம் ॥

தேவர்கள் ஒருவனை அவமானப்படுத்த வேண்டும் அல்லது துன்புறுத்த வேண்டும், என விரும்புவார்களேயாயின் அவனுடைய புத்தியை அறிவைக் கெடுத்துவிடுவார்கள், புத்திகெட்டவன் பகுத்தறிவை இழந்தவன் தகாததைத் தக்கதாக உணர்கிறான். தீயவழியில் செயல்பட அவனைப் பேரழிவு நெருங்குகிறது. இந்நிலையில் நேர்மையற்றதை எல்லாம் மனம் நேர்மையுடையதாகக் கருதுகிறது. பின்னர் அழிந்தே போகிறான்.

தேவர்கள் ஒருவனுக்குப் பல நன்மைகளைச் செய்ய விரும்பினால் அவனுக்கு நற்புத்தியை, பகுத்தறிவைத் தோன்றச் செய்வார்கள். அதனால் நேரிய வழியில் சென்று பலரால் பாராட்டப்பட்டுப் பல நன்மைகளைப் பெறுவான். மாடு மேய்ப்பவன் மாடுகள் மேயும் பொழுது புற்கள் மூடிய பாழுங்கிணற்றில் விழுந்து அழியாதபடித் தடியினால் மிரட்டி ஒதுக்கிவிடுவது போல் நேராகத் தாங்களே வந்து நமக்கு தேவர்கள் உதவமாட்டார்கள். ஆனால் நற்புத்தியைக் கொடுப்பதன் மூலமே உதவுவார்கள். எனவே, ''பவிதவ்யம் பவத்யேவ'' நடப்பது நடந்தே தீரும்''.

ஊழின் பெருவலி யாஉள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும் குறள் - 380

ஊழ்வினை மிக்க வலிமையுடையது, அது பலனைக் கொடுத்தே தீரும். இதனை விலக்க நாம் வேறு உபாயத்தைச் செய்ய எண்ணுவோமாயின், அதற்கு முன்பாகத் தான் வந்து பலனைக் கொடுத்து விடுமாம்.

எனவே அவரவர்கள் பல பிறவிகளிற் செய்த தீயனவும் நல்லனவுமான வினைகளின் பலன்களைத் துய்ப்பதற்கேற்ற புத்தியைக் கொடுத்து நம்மை அனுபவிக்கச் செய்கிறது தெய்வம். கௌசிகர் தீவினையின் பயனாய் புத்தி கெட்டுத் தகாததைச் செய்து துன்புற்றார் போலும்.

तपो महत् समास्थास्ये यद्वै ब्रह्मत्व कारणम्
ततः संतप्त हृदयः स्मरन् निग्रह मोत्मनः
विनिश्वस्य विनिश्वस्य कृत वैरो महात्मना
सदक्षिणां दिशं गत्वा महिष्या सहराघव ।
तताप परमं धोरं विश्वामित्रो महातपाः ॥

தப: மஹத் ஸமாஸ்தாஸ்யே யத்வை ப்ரஹ்மத்வ காரணம் ।
தத: ஸந்தப்த ஹ்ருதய: ஸ்மரன் நிக்ரஹம் ஆத்மன: ।
விநிஸ்வஸ்ய விநிஸ்வஸ்ய க்ருத வைர: மஹாத்மனா ॥
ஸதக்ஷிணாம் திஶம் கத்வா மஹிஷ்யா ஸஹ ராகவ: ।
ததாப பரமம் கோரம் விஸ்வாமித்ர: மஹாதபா: ॥

வா.ரா.பால.-56, 57

பிறர் பெருமையைக் கண்டு உவந்து பாராட்டும் தன்மையை நாம் பெற வேண்டும். பொறாமை கூடாது. அப்பெருமையை நாமும் பெற முயலலாம். ஆனால் அஸூயை உள்ளவர்கள் லக்ஷ்மீ கடாக்ஷத்தைப் பெறாததோடு அவள் அக்காளின் (மூதேவியின்) கடாக்ஷத்திற்கு இலக்காவர்.

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். குறள் - 167

பிறர் ஆக்கம் கண்டு பொறாமைப்படுகின்றவனை திருமகள் தான் அருளாதது மட்டுமன்றி, தன் அக்காளுக்கு அவனைக் காட்டிவிடுவாளாம்.

விஶ்வாமித்ரர் வஸிஷ்டரின் பெருமையைக் கண்டு பொறாததோடு பகைமை பூண்டு அவருக்குத் தீங்கும் இழைத்தவர், வஸிஷ்டரிடம் பெற்ற பெரும் தோல்வியினால் உள்ளம் வெந்து பெருமூச்சு விட்டுக் கொண்டே தென்திசையை நோக்கிச் சென்றார். உடன் மனைவியையும் அழைத்துச் சென்றார். அரசை மீதியுள்ள ஒரே மகனிடம் ஒப்படைத்தார். காய் கனிகளை

உணவாகக் கொண்டு கடுந்தவம் புரிந்தார். தவத்திற்கு உட்பகைவர்கள் ஆறு. காமம், கோபம், பேராசை, மோஹம், செருக்கு, பொறாமை ஆகியவை இவை இவரை விட்டு அகலவில்லை. இவற்றிற்குத் துணைவர்களாக நான்கு மக்களை மனைவியிடம் பெற்றார்.

अथाऽस्य जज्ञिरे पुत्राः सत्य धर्मपरायणाः ।
हविष्पन्दो मधुष्पन्दो दृढ नेत्रो महारथः ॥
पूर्णे वर्ष सहस्रेतु ब्रह्म लोक पितामहः ।
अनेन तपसा त्वां हि राजर्षि रिति विद्महे ॥
विश्वामित्रोऽपितच्छ्रु त्वा ह्रिया किञ्चिदवाङ्मुखः ।
दुःखेन महता विष्टः समन्यु रिदमब्रवीत् ॥
तपश्चसुमहत् तप्तं राजर्षिरितिमां विदुः ॥

அத அஸ்ய ஜஜ்ஞிரே புத்ரா: ஸத்யதர்ம பராயணா: ।
ஹவிஷ்யந்த: மதுஷ்யந்த: த்ருடநேத்ர: மஹாரத: ॥
பூர்ணே வர்ஷஸஹஸ்ரேது ப்ரஹ்மா லோகபிதாமஹ: ॥
அனேன தபஸா த்வாம் ராஜர்ஷிரிதி வித்மஹே ॥
விச்வாமித்ரோபி தத்ஶ்ருத்வா ஹ்ரியா கிஞ்சித் அவாங்முக: ।
துக்கேன மஹதா விஷ்ட: ஸமன்யு: இதம் அப்ரவீத் ॥
தப:ச ஸுமஹத் தப்தம் ராஜர்ஷிரிதி மாம் விது: ॥

வா.ரா.பால.-57

மக்கட்கு ஹவிஷ்யந்தன், மதுஷ்யந்தன், த்ருடநேத்ரன், மஹாரதன் எனப் பெயரிட்டார். அவர்கள் அறத்திலும், வாய்மையிலும் பற்றுடையவர்களாய் வளர்ந்தார்களாம். பின்னர் தவத்தில் முன்னேற்றம் ஏற்படாததைக் கண்டு வருந்தி தன் மனதை அடக்கி, ஆயிரம் ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். அதனால் மகிழ்ந்த நான்முகன் எதிரில் தோன்றி ராஜர்ஷியே என அழைத்து ''உமக்கு ராஜர்ஷிகட்கு உரிய மேலுலகங்கள் கிடைக்கும்'' என வாழ்த்தி ஸத்யலோகம் சென்றார். ப்ரஹ்மா, தன்னை ''ப்ராஹ்மணரே! ப்ரஹ்மர்ஷியே'' என அழைப்பார் என எதிர்பார்த்தது கிட்டவில்லை, நினைத்தது கிட்டாததினால் வெட்கித் தலைகுனிந்து, சினமுற்று, எனது தவத்திற்கு இதுதானா பலன் என வருந்தி மீண்டும் பெருமுயற்சியுடன் மனதை நன்கு அடக்கிக் கடுந்தவம் புரியலானார்.

த்ரிசங்கு ஸ்வர்கம்

एतस्मिन्नेव काले तु सत्य वादी जितेन्द्रिय:
त्रिशङ्कुरिति विख्यात: इक्ष्वाकु कुलवर्धन:
तस्य बुद्धि: समुत्पन्ना यजेयमिति राघव !
गच्छेयं स शरीरेण देवतानां परां गतिम्
प्रत्याख्यातो वसिष्ठेन सययौ दक्षिणां दिशाम् ॥

ஏதஸ்மின் ஏவகாலே து ஸத்யவாதீ ஜிதேந்த்ரிய: ।
த்ரிசங்கு: இதி விக்யாத: இக்ஷ்வாகுகுல வர்த்தன: ॥
தஸ்யபுத்தி: ஸமுத்பன்னா யஜேயம் இதி ராகவ! ।
கச்சேயம் ஸஶரீரேண தேவதாநாம் பராம் கதிம் ॥
ப்ரத்யாக்யாத: வஸிஷ்டேன ஸ:யயௌ தக்ஷிணாம் திசம் ॥

வா.ரா. பால - 57

''முயன்று முயன்று பலன் கிட்டாது களைத்துக் களைத்துப் போனாலும் மீண்டும் மீண்டும் சலியாது உழைப்பவனையே எல்லாச் செல்வங்களும் வந்தடையும்'' எனும் மனுவின் கூற்றை மனதிற் கொண்டு கௌசிகன் தவம்புரியச் சென்றபொழுது, த்ரிசங்கு மன்னன் அவனை நாடி வந்தான்.

இம்மன்னன் அக்காலத்தில் அயோத்தியில் ஆட்சிபுரிந்து வந்தவன். த்ரிசங்கு என்பது அவனுடைய இயற்பெயர் அல்ல, காரணப்பெயராகும்.

पितुश्चापरितोषेण गुरो र्दोग्ध्री वधेनच ।
अप्रोक्षितोपयोगाच्च त्रिविधस्ते व्यतिक्रम: ॥

பிது: ச அபரிதோஷேண குரோ: தோக்த்ரீ வதேனச ।
அப்ரோக்ஷிதோ பயோகாச்ச த்ரிவித: தே வ்யதிக்ரம: ॥

ஹரிவம்சம்

இவ்வரசன் தன் வாழ்நாளில் மூன்று குற்றங்களை இழைத்தவனாம். 1. ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுப்பதாக வாக்களிக்கப்பட்ட ஒரு அந்தணர் பெண்ணை தான் பலாத்காரமாகப் பறித்துச் சென்று மணம் கொண்டமையில் வெகுண்ட தந்தையினால் இடப்பட்ட சாபம். 2. தன் குல குருவின் கறவைப் பசுவைக் கொன்றது. 3. குலதெய்வமான திருவரங்கனுக்கு ப்ரோக்ஷித்து சுத்தம் செய்து நிவேதனம் செய்யப்படாத அன்னத்தை உண்டது. இம்மூன்று சங்குகளை—குற்றங்களைச் செய்தது பற்றி இவனைத் த்ரிசங்கு என்றே அழைக்கலாயினர். இவனது இயற்பெயர் ஸத்யவ்ரதன்.

இவன் மகனே ஹரிச்சந்திரன். இவனுடைய முன்னோர்களும் பின்னோர்களும் தங்கள் சரீரத்தோடு ஸ்வர்கம் சென்றது உண்டு. எனவே இவனுக்கும் தன் உடலோடு (மரணமின்றி) சுவர்கம் எய்த வேண்டும் என அவா தோன்றியது. உடனே அதற்குரிய வேள்விகளைச் செய்ய எண்ணி வஸிஷ்டரை அரண்மனைக்கு அழைப்பித்து வேள்வியைச் செய்விக்கும்படி வேண்டினான். ஆனால் குலகுருவோ மறுத்துவிட்டார். குலகுருவே குலபுரோஹிதரும் ஆவார். எனவே யாகத்தைச் செய்விக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் உடையவர். வேதமும் குறிப்பிட்ட வேள்வியைச் செய்தவர் சரீரத்தோடு சுவர்கம் புகலாம் என்று கூறுகிறது. அரசன் தன் சீடனாயினும் இவன் தகாத குற்றங்களைப் புரிந்ததை அறிந்தவரானபடியால் வேள்விபுரியத் தகுதியற்றவன் எனக்கருதி வஸிஷ்டர் வேட்பிக்க மறுத்து விட்டார்போலும்.

தன்துணைக் குருவை நண்ணித் தனுவோடும் துறக்கம் எய்த
இன்று எனக்கு அருளுக என்ன யான் அறிந்திலன் அது என்றான்
நினக்கு ஒலாது ஆகின் ஐய! நீள் நிலத்து யாவரேனும்
மனக்கு இனியாரை நாடி வகுப்பல் யான் வேள்வி என்ன

க.ரா.பால. - மிதிலை.

தனு: உடல், துறக்கம்: சுவர்கம்

''உம்மால் முடியாதாயின் வேறு ஒருவரைக் குருவாகக் கொண்டு யாகம் செய்வேன்'' எனக் கூறி தென்திசையில் தவம்புரிந்து வரும் வஸிஷ்ட புத்ரர்களை நாடி,

शरणं वः प्रपद्येऽहं शरण्यान् शरणं गतः ।
प्रत्याख्यातोऽस्मि भद्रं वो वसिष्ठेन महात्मना ।

சரணம் வ: ப்ரபத்யே அஹம் ஶரண்யான் ஶரணம்கத: ।
ப்ரத்யாக்யாத: அஸ்மி பத்ரம் வ: வஸிஷ்டேன மஹாத்மான ॥

न भू प्रदानं न सुवर्णदानं न गो प्रदानं न तथाऽन्न दानम् ।
यथा वदन्तीह महा प्रदानं सर्वेषु दानेष्व भय प्रदानम् ॥

ந பூப்ரதானம் ந ஸுவர்ணதானம் ந கோப்ரதானம் ந ததா
அன்னதானம் ॥
யதா வதந்திஇஹ மஹா ப்ரதானம் ஸர்வேஷு தானேஷு
அபய ப்ரதானம் ॥

सर्व काम समृद्धस्य अश्वमेधस्य यत्फलम्
तत्फलं लभ्यते सम्यक् रक्षिते शरणागते

याजने भगवान् शक्तः त्रैलोक्य स्यापि पार्थिव
अवमानं च तत्कर्तुं तस्य शक्ष्यामहे कथम् ।

ஸர்வ காம ஸம்ருத்தஸ்ய அஸ்வமேதஸ்ய யத் பலம் ।
தத்பலம் லப்யதேஸம்யக் ரக்ஷிதே ஶரணாகதே ॥
யாஜனே பகவான் ஶக்த: த்ரைலோக்யஸ்யாபி பார்த்திவ ।
அவமானம் ச தத் கர்த்தும் தஸ்ய ஶக்ஷ்யாமஹே கதம்? ॥

வா.ரா. பால. - 57

''நூற்றுவரான வஸிஷ்டபுத்ரர்களே! எனக்குத் தாங்களே புகல். உங்களை யான் சரணடைகிறேன்'' என்று கூறி வேண்டினான். ''தங்கள் தந்தையான வஸிஷ்டரே எங்களுக்குப் புரோஹிதரும் தெய்வமும் ஆவர். அவர் இப்பூத உடலுடன் சுவர்கம் பெறுவதற்கான வேள்வியை வேட்பிக்க மறுத்து விட்டார். என்னை வாழ வைக்கத் தாங்களே உதவவேண்டும்'', என்றான்.

குருபுத்ரர்கள்: ''அரசே! எங்கள் தந்தை எதையும் செய்து முடிக்கும் வல்லமை பெற்றவர். அவரே மறுத்த பிறகு பிறரை நீர் நாடுவது குருவை அவமதிப்பதாகும். நீரோ எங்களைச் சரணடைந்துவிட்டீர். பூதானம், ஸ்வர்ணதானம், கோதானம், அன்னதானம் இவை அனைத்திலும் அபய தானமே சிறந்தது. உமது கோரிக்கையை ஏற்று சரணடைந்த உமக்கு அபய மளித்து, நீர் வேண்டும் வேள்வியை முடித்துத் தருவது அச்வமேத யாகத்தின் பயனை எங்களுக்கு நல்கும். ஆயினும் குருத்ரோஹம் மிகக் கொடியது. எனவே உம்மை ஏற்க மாட்டோம்'' என்றனர்.

अन्यांगतिं गमिष्यामि स्वस्तिवांऽस्तु तपोधना:

அன்யாம் கதிம் கமிஷ்யாமி ஸ்வஸ்திவ: அஸ்து தபோதனா:! ॥

வா.ரா. பால. - 28

த்ரிசங்கு: ''நீங்கள் க்ஷேமமாக இருங்கள். நான் வேறு ஒரு குருவை (ப்ருஹஸ் பதியை) தேடிக் கொள்கிறேன்''.

शेपुः परमसंक्रुद्धाः चण्डालत्वं गमिष्यसि
नीलवस्त्रधरो नीलः पुरुषो ध्वस्त मूर्धजः
चित्य माल्याङ्गरागश्च आयसा भरणोऽभवत् ।

சேபு: பரமஸம்க்ருத்தா: சண்டாளத்வம் கமிஷ்யஸி ॥
நீல வஸ்த்ர தர: நீல: புருஷ: த்வஸ்த மூர்தஜ: ।
சித்ய மால்யாங்கராக: ச ஆயஸா பரண: அபவத் ॥

வா. ரா.பால. - 28

காசோடு முடியும் பூணும் கரியதாம் கனகம் போன்றும்
தூசொடும் அணியும் முந்நூல் தோல்தரும் தோற்றம் போன்றும்
மாசொடு கருகி மேனி வனப்பு அழிந்திட ஊர் வந்தான்
சீசி என்று யாரும் எள்ளத் திகைப்பொடு பழுவமும் சேர்ந்தான்

க.ரா. மிதிலை காட்சி

காசொடு: ரத்தினஹாரம், முடியும்: கிரீடம், பூணும்: ஆபரணமும், கரியதாம் கனகம்: இரும்பு, தூசு: ஆடை, வனப்பு: அழகு, பழுவம்: காடு

तं दृष्ट्वा मन्त्रिणस्सर्वे त्यज्य चण्डाल रूपिणम्
प्राद्रवन् सहिता राम पौरा येऽस्यानुगामिनः ।

தம் த்ருஷ்ட்வா மந்த்ரிண: ஸர்வே த்யஜ்ய சண்டால ரூபிணம் ।
ப்ராத்ரவன் ஸஹிதா: ராம! பௌரா:யே அஸ்ய அனுகாமின: ।

வா.ரா. பால - 28

குலகுருவை—ப்ருஹஸ்பதியை—ஆசார்யனை இஷ்டப்படி மாற்றிக் கொள்வது மிகக் கொடிய செயல். எனவே இதைக் கேட்ட உடனே சினம் கொண்ட வஸிஷ்ட புத்ரர்கள் ''நீ சண்டாளனாகக் கடவாய்'' என சபித்தனர். அரசன் அரண்மனைக்குச் சென்று காலையில் துயிலெழுந்தான். உருவம் முற்றிலும் மாறியிருந்தது. விழித்தெழுவது நாம்தானா? என உற்று நோக்கினான். இடுப்பில் உடுத்திய பட்டாடை அழுக்கடைந்த கரிய ஆடை யாகக் காட்சியளித்தது. பொன்னிறமான திருமேனி கோரமான கருமேனி யாகத் தோன்றியது. க்ஷத்திரியர்கட்குரிய ராஜகம்பீரம் பொலிவு மறைந்தது. உடல் உறுப்புக்கள் பிறர் அஞ்சவும், அருவருக்கவும் உரியனவாயின. மார்பில் துலங்கிய யக்ஞோபவீதம் (முப்புரி நூல்) விலங்குகளை விரட்டும் தோல் பட்டையாக மாறியது. நீண்டு, நெளிந்து வனப்புடன் கூடிய தலை மயிர்கள் குறைந்து செம்பட்டை நார்கள் போன்றவையாயின. மேனியில் நறுமணம் கமழும் சந்தனமும் உடற்பூச்சும் துர்நாற்றம் வீசும் மயானச் சாம்பலாகியது, கரங்களில் விளங்கிய பொற்காப்புகளும், மோதிரங்களும், ரத்தின ஹாரங் களும், கிரீடமும், மற்றைய ஆபரணங்களும் கரும் பொன்னால்—இரும்பி னால் ஆனவையாக மாறின. ''ஐயோ! விதியின் ஆட்சி எத்தகையது?'' என நொந்தான்.

காலையில் அரசனைக் காண அரண்மனை வந்த அமைச்சர்களும், மற்றோரும் வெறுத்து ஒதுங்கினர். தெருவில் சென்றதும் மக்கள் பயங்கர உருவைக்கண்டு அஞ்சி ஓடினர். எனினும் அரசன் மன உறுதியை நம்பிக்கையை இழக்காது, வஸிஷ்டரின் சத்ருவான விஸ்வாமித்திரர் தவ மியற்றும் காட்டுக்கு விரைந்தான்.

अब्रवीत् प्राञ्जलि र्वाक्यं वाक्यज्ञो वाक्य कोविदम्
प्रत्याख्यातोऽस्मि गुरुणा गुरु पुत्रैस्तथैव च

दैवमेव परं मन्ये पौरुषं तु निरर्थकम्
दैवेनाक्रम्यते सर्वं दैवं हि परमागतिः
नान्यां गतिं गमिष्यामि नान्यत् शरणमस्ति मे ।
दैवं पुरुष कारेण निवर्तयितुमर्हसि
हस्त प्राप्त महं मन्ये स्वर्गं तव नराधिप
यस्त्वं कौशिक मागम्य शरण्यं शरणागतः
क्षत्रियो याजको यस्य चण्डालस्य विशेषतः
कथं सदसि भोक्तारः हवि स्तस्य सुरर्षयः
ब्राह्मणा वा महात्मानः भुक्त्वा चाण्डाल भोजनम्
कथं स्वर्गं गमिष्यन्ति विश्वामित्रेण पालिताः
श्वमांस नियताहाराः मुष्टिका नाम निर्घृणाः ।
महोदयस्तु दुर्बुद्धिः मां अदूष्यं ह्यदूषयत्
दूषित स्सर्वलोकेषु निषादत्वं गमिष्यति ॥

அப்ரவீத் ப்ராஞ்ஜலி: வாக்யம் வாக்ய ஜ்ஞ: வாக்ய கோவிதம் ।
ப்ரத்யாத்யாத: அஸ்மி குருணா குருபுத்ரை: ததைவ ச ॥
தைவமேவ பரம் மன்யே பௌருஷம்து நிரர்த்தகம் ।
தைவேன ஆக்ரம்யதே ஸர்வம் தைவம் ஹி பரமா கதி: ॥
ந அன்யாம் கதிம் கமிஷ்யாமி ந அன்ய: சரணம் அஸ்திமே ॥
தைவம் புருஷகாரேண நிவர் தயிதும் அர்ஹஸி ॥
ஹஸ்த ப்ராப்தம் அஹம் மன்யே ஸ்வர்கம் தவநராதிப ।
யஸ்த்வம் கௌஶிகம் ஆகம்ய ஶரண்யம் ஶரணாகத: ॥
க்ஷத்ரிய: யாஜக; யஸ்ய சண்டாளஸ்ய விசேஷத : ।
கதம் ஸதஸி போக்தார: ஹவிஸ்: தஸ்ய ஸுரர்ஷய: ॥
ப்ராஹ்மணா: வா மஹாத்மான: புக்த்வா சாண்டால போஜனம் ।
கதம் ஸ்வர்கம் கமிஷ்யந்தி விசுவாமித்ரேண பாலிதா: ॥
ஶ்வமாம்ஸ நியதாஹாரா: முஷ்டிகா: நாம நிர்க்ருணா: ।
மஹோதயஸ்து துர்புத்தி: மாம் அதூஷ்யம் ஹி அதூஷயத் ।
தூஷித: ஸர்வலோகேஷு நிஷாதத்வம் கமிஷ்யதி ॥

வா.ரா.பால. - 58, 59

காட்டில் விஶ்வாமித்ரரைக் கண்டதும் தரையில் விழுந்து வணங்கி கை கூப்பி நிகழ்ந்தவற்றை விளம்பினான். கௌசிகரும் ''இவன் அயோத்தி நாட்டின் பேரரசன்; ஒழுக்கம் குன்றாது அரசியலை நடத்தியவன்; வேள்விகள் பல ஆற்றியவன்; முன்னோர்களைப் போன்று பூத உடலோடு சுவர்கம் செல்ல

விரும்பியவன். தான் மதித்துப் போற்றிய குலகுருவினாலும், குரு புத்ரர் களாலும் இந்நிலையை எய்தியவன்' என்பதை உணர்ந்தார். அவர் இதயத்திலே கருணை வெள்ளமிட்டது. இதை அறிந்து அரசன் பேசுவான்:

''முனிவரே! மனிதனுக்கு நன்மைகளையோ தீமைகளையோ அளிக்க வல்லவை முன் வினைகளே, அவையே மனிதனை ஆட்டிப்படைக்கின்றன. இப்பிறவியில் நாம் செய்யும் தர்மங்கள், கர்மானுஷ்டானங்கள் முற்பிறவி யில் செய்த வினைகளின் பயன்களை மாற்றி அமைக்க வலிமையற்றவை போலும். இப்பிறவியில் யான் இயற்றிய யாக, தான ஹோமாதிகள் எனக்குக் கை கொடுக்கவில்லையே! எனக்கு நீரே புகல், நான் எண்ணியதைப் பெற உம்மையே சரணடைகிறேன். நான் வேறு கதி (புகல்) அற்றவன், உமது அருளால் முன் வினை மாய்த்துக் கோரியதைப் பெறுவேன் என உறுதியாக நம்புகிறேன்''. சரணாகதியில் இம் மஹாவிச்வாசம்தான் விரும்பியதைப் பெற நமக்கு உதவுகிறது.

மேலும், ''முனிவரே! மனிதனின் ஆற்றலைவிட விதியே வலிமை மிக்கது. எனினும் விதியை மதியினால் வெல்லலாமன்றோ? தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும், என்பர். நிச்சயமாக முயற்சி திருவினையாக்கும் என்பதில் ஐயமில்லை. விதியின் திண்மையை முறியடிக்கச் சலியாது உழைக்கும் தங்களைப் போன்ற முனிவர்கள் ஊழையும் உப்பக்கம் காண்பரல்லரோ! தாங்களே எனக்குப் புகல்'' என்றார்.

கௌசிகர்: ''அரசே! அஞ்சாதீர், நீர் பரம தார்மிகர் என்பதை அறிவேன். நீர், எப்பொழுது நம்மைத் தேடிவந்து எம்மைச் சரணடைந்தீரோ, உடனே நீர் விரும்பிய சுவர்கம் உமது கைக்கு எட்டியது'' என்று ஆறுதல் கூறி, சீடர்களை அழைத்து, யாகத்திற்கு வேண்டியவற்றைத் திரட்டும்படியும் கட்டளை யிட்டார். சீடர்கள் முனிவரின் கட்டளைப்படி ஆங்காங்கே சென்று எல்லா முனிவரையும் வேள்விக்கு அழைத்தனர்.

கௌசிகரின் கோபத்திற்கு அஞ்சி அனைவரும் வேள்வியை வேட்பிக்க வந்து சேர்ந்தனர். ஆனால் வஸிஷ்டரோ, அவர் குமாரர்களோ, முனிவர் மஹோதயரோ வரவில்லை.

> ''சுற்றுறு முனிவர் யாரும் தொக்கனர் வசிட்டன் மைந்தர்
> கற்றிலம் அரசன் வேள்வி கனல்துறை புலையற்கு ஈவான்''
>
> க.ரா.பால - மிதிலை

''சாஸ்த்ர விதிகட்கு மாறாக க்ஷத்ரியனான விஸ்வாமித்திரர் புரோஹித ராய் யாகம் செய்விப்பதும், சண்டாளன் யாகம் செய்வதும், எவ்வாறு தகும்? சண்டாளனின் உணவைச் சாப்பிட்ட அந்தணர்கள் யாகத்தில் எப்படி ரித்விக்குகளாக ஹோமம் செய்ய முடியும்? வேதவிதியை மீறிய இந்த யாகத்தில் தேவர்கள் வந்து ஹவிஸ்ஸைப் பெறுவார்களா?'' என்று கூறி அவர்கள் வரமறுத்ததாகச் சீடர்கள் கூறினர்.

இதைக் கேட்ட விஸ்வாமித்ரருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. ''வஸிஷ்ட புத்ரர்கள், பிணத்தைத் தின்னும் முஷ்டிகள் எனும் தாழ்ந்த ஜாதியைப் பெற்றுத் திரியட்டும், மஹோதயர் வேடுவனாகத் திரியட்டும். ''மஹானுபாவர்களான பெரியோர்கள் செய்வது சாஸ்த்ரங்களுக்கு முரணாயிருப்பினும் அவர்களின் தேஜோ விசேஷத்தினால் (தேஷாம் தேஜோ விசேஷேண ப்ரத்யவாய: நவித்யதே) தீங்கற்றதாக ஆகும்'' என்பதை அவர்கள் அறியார்'' எனக் கூறி சபித்தார்.

अयं कुशिक दायादः मुनिः परमकोपनः
अग्नि कल्पो हि भगवान् शापं दास्यति रोषतः
तस्मात्प्रवर्त्यतां यज्ञः सशरीरो यथा दिवि
चकारावाहनं तत्र भागार्थं सर्व देवताः
नाभ्यागमंस्तदातत्र भागार्थं सर्वदेवताः
स्रुवमुद्यम्य सक्रोधः त्रिशंकुमिदमब्रवीत्
स्वार्जितं किञ्चिदप्यस्ति मयाहितपसः फलम्
राजन् स्वतेजसातस्य सशरीरः दिवं व्रज
दिवं जगाम काकुत्स्थः मुनीनां पश्यतां तदा।
त्रिशंको गच्छभूयस्त्वं नासि स्वर्गकृतालयः ।
गुरुशाप हतो मूढ! पतभूमि मवाक् शिराः ।
रोषमाहारयत् तीव्रं तिष्ठ तिष्ठेति चाब्रवीत् ।
सृजन् दक्षिण मार्गस्थान् सप्तर्षीनपरान् पुनः ।
सृष्ट्वा नक्षत्र वंशञ्च क्रोधेन कलुषीकृतः
अन्य मिन्द्रं करिष्यामि लोको वा स्यादनिन्द्रकः
दैवतान्यपि स क्रोधात् स्रष्टुं समुपचक्रमे ॥

அயம் குஶிக தாயாத: முனி: பரமகோபன: ॥
அக்னி கல்ப: ஹிபகவான் ஶாபம் தாஸ்யதி ரோஷித: ।
தஸ்மாத் ப்ரவர்த்யதாம் யஜ்ஞ: ஸஶரீரோ யதாதிவி ॥
சகார ஆவாஹனம்தத்ர பாகார்த்தம் ஸர்வதேவதா: ।
நஅப்யா கமன் ததா தத்ர பாகார்த்தம் ஸர்வ தேவதா: ॥
ஸ்ருவம் உத்யம்ய ஸக்ரோத: த்ரிசங்கும் இதம் அப்ரவீத் ॥
ஸ்வார்ஜிதம் கிஞ்சித் அப்யஸ்தி மயாஹி தபஸ: பலம் ।
ராஜன்! ஸ்வதேஜஸா தஸ்ய ஸஶரீர: திவம்வ்ரஜ ॥
திவம் ஜகாம காகுத்ஸ்த: முனீனாம் பஶ்யதாம் ததா ॥

த்ரிசங்கோ கச்சபூய: த்வம் நஅஸி ஸ்வர்கக்ருதாலய: ॥
குரு ஶாபஹத: மூட! பத பூமிம் அவாக்ஶிரா: ॥
ரோஷம் ஆஹாரயத் தீவ்ரம் திஷ்ட திஷ்ட இதிச அப்ரவீத் ।
ஸ்ருஜன் தக்ஷிணமார்க்ஸ்தான் ஸப்தர்ஷீன் அபரான் புன: ॥
ஸ்ருஷ்ட்வா நக்ஷத்ர வம்சம்ச க்ரோதேன கலுஷீக்ருத: ।
அன்யம் இந்த்ரம் கரிஷ்யாமி லோக: வாஸ்யாத் அனிந்த்ரக: ॥
தைவதானி அபிஸ: க்ரோதாத் ஸ்ரஷ்டும் ஸமுபசக்ரமே ॥

வா.ரா. பால. - 60

கௌசிகர் இட்ட சாபத்தைச் செவியுற்ற முனிவர்கள் அவருடைய கடுங் கோபத்திற்கு அஞ்சி நடுங்கியவர்களாய் விரைந்து வந்து வேள்வியை நடத்தத் தொடங்கினர். விஶ்வாமித்ரர் உரிய தேவர்களை ஆவாஹனம் செய்து ஹவிர்பாகங்களைப் பெற ஒவ்வொருவராக இந்திரன் முதலியோரை மந்திரங்களால் அழைத்தார். ஆனால் தேவர்களோ வேதவிதி முறைகட்கு எதிராகச் செய்யும் எதுவும், வேள்வி ஆகமாட்டாது எனக் கருதி ஹவிர் பாகத்தைப் பெற வரவில்லை. அப்பொழுது முனிவரின் வெகுளி எல்லையை மீறியது. உடனே ஹோமம் செய்யும் ஸ்ருவத்தை—அகப்பையை உயரே தூக்கியவாறு த்ரிசங்குவைப் பார்த்து, ''அரசே! யாகம் கிடக்கட்டும் எனது தவவலிமையைப் பாரீர். இன்றுவரை நான் ஈட்டிய தவத்தின் பயன் இருக்குமாயின் நீர் இவ்வுடலோடு சுவர்கம் புகக் கடவீர்! செல்லும், செல்லும், செல்லும்'' என்றார். வந்த ரிஷிகளும் மற்றோரும் அண்ணாந்து கண்கொட்டாது பார்த்துக் கொண்டேயிருக்க, அரசன் தேவருலகை விரைந்து எய்தினான்.

தேவேந்திரன் உடனே ''த்ரிசங்குவே! நீர் குருவின் சாபத்தைப் பெற்றவர். உமக்கு சுவர்கத்தில் இடம் ஏது? எனவே நீர் தலைகீழாக பூமியில் விழக் கடவீர்'' என்றான். உடனே அரசனும் தலைகீழாக விழும்போது பூமியை நோக்கியவனாய், ''விஶ்வாமித்ரரே! முனிவரே! காப்பாற்றும், காப்பாற்றும்'' எனக் கதறி அலறினான். இதைக் கண்ணுற்றுக் கேட்ட முனிவர் கையை உயரே தூக்கி ''அப்படியே நிற்க'' எனக் கூற அரசனும் நடுவானில் தலைகீழாகவே நின்றான். மன்னன் நின்ற இடத்தையே சுவர்கமாக ஆக்கக் கருதிய முனிவர் ''ஸப்தர்ஷிகளையும், நக்ஷத்திரங்களையும், தேவர்களை யும், இந்திரனையும் தவவலியால் வேறாகப் படைக்கத் தொடங்கினார்.

இதைக்கண்ட தேவர்கள் விரைந்து முனிவரிடம் வந்து நல்வார்த்தை கள் கூறி ஸமாதானப்படுத்தினர்.

अयं राजा महाभाग गुरुशाप परिक्षत:
सशरीरो दिवं यातुं नार्हत्येव तपोधन!

आरोहणं प्रतिज्ञाय नानृतं कर्तु मुत्सहे
मत्कृतानि सुराः सर्वे तदनुज्ञातुमर्हथ
एवं भवतु भद्रंते तिष्ठन्त्वेतानि सर्वशः
गगने तान्यनेकानि वैश्वानर पथाद्बहिः
अवाक् शिराः त्रिशङ्कुश्च तिष्ठ त्वमर सन्निभः
अनुयास्यन्ति चैतानि ज्योर्तींषि नृप सत्तमम् ।

அயம் ராஜா மஹாபாக! குருஶாப பரிக்ஷத: ।
ஸஶரீர: திவம் யாதும் ந அர்ஹத்யேவ தபோதன! ॥
ஆரோஹணம் ப்ரதிஜ்ஞாய ந அந்ருதம் கர்த்தும் உத்ஸஹே ।
மத்க்ருதானி ஸுரா: ஸர்வே தத் அனுஜ்ஞாதும் அர்ஹத ॥
ஏவம் பவது பத்ரம்தே திஷ்டந்து ஏதானி ஸர்வஶ: ।
ககனே தானி அனேகானி வைச்வானர பதாத் பஹி: ।
அவாக் ஶிரா: த்ரிசங்கு: ச திஷ்டது அமரஸந்நிப: ॥
அனுயாஸ் யந்தி ச ஏதானி ஜ்யோதீம்ஷி ந்ருபஸத்தமம் ॥

வா.ரா. பால. - 60

''முனிவரே! நீர் பாக்யசாலி, எதையும் செய்யவல்ல தவப் பெருமையைப் பெற்றவர். ஆயினும் குரு சாபம் உம் தவத்தினும் வலியது. எனவே உடலோடு எங்கள் உலகை எய்த அவனுக்குத் தகுதியில்லை'' என்றனர் தேவர்கள்.

முனிவர் ''தேவர்களே! நான் அரசனுக்கு உடலோடு சுவர்கம் எய்த வாக்களித்து விட்டேன். அதை என்னால் பொய்யாக்க முடியாது. எனவே இப்பொழுது அரசன் இருக்குமிடமே வேறொரு சுவர்கம் ஆகட்டும். நான் படைத்த ஸப்தர்ஷி மண்டலமும், நக்ஷத்ர மண்டலமும், அவனைச் சுற்றிவரட்டும். அரசனும் ஒரு தேவனாக விளங்கட்டும்'' என்றார்.

தேவர்கள்: ''அப்படியே ஆகட்டும், ஸ்வர்க்கத்திற்கு அருகிலுள்ள வைச்வானரம் என்கிற ஒளிப்பாதைக்குக் கீழாக த்ரிசங்கு ஸ்வர்கம் அமையும். நீர் படைத்த ஜோதி மண்டலம் அதைச் சுற்றிக் கொண்டே த்ருவ மண்டலம் போல் சாச்வதமாக விளங்கட்டும்'' என்று கூறி முனிவரை வாழ்த்திச் சென்றனர்.

யாகம் செய்யாமலே பயன் கிட்டியதைப் பாராட்டி கௌசிகரிடம் விடைபெற்றுச் சென்றனர் அனைவரும்.

''हरौ रुष्टे गुरुः त्राता, गुरौ रुष्टे न कश्चन''

''ஹரௌ ருஷ்டே குரு: த்ராதா, குரௌ ருஷ்டே ந கஶ்சன''

எம்பெருமான் வெகுண்டால் குரு காப்பாற்றுவார். குரு வெகுண்டால் வேறு கதியே கிடையாது என்பதற்கிணங்க த்ரிசங்கு தலை கீழாகவே இருக்க வேண்டியதாயிற்று.

महान् विघ्नः प्रवृत्तोऽयं दक्षिणामास्थितो दिशम्
दिश मन्यां प्रपत्स्यामः तत्रतप्स्यामहे तपः
पश्चिमायां विशालायां पुष्करेषु महात्मनः
सुखं तपः चरिष्यामः वरं तद्धि तपोवनम् ।
तप उग्रं दुराधर्षं ते पे मूल फलाशनः ॥

மஹான் விக்ன: ப்ரவ்ருத்த: அயம் தக்ஷிணாம் ஆஸ்த்தித: திஶம் ।
திகம் அன்யாம் ப்ரபத்ஸ்யாம: தத்ர தப்ஸ்யாமஹே தப:
பஶ்சிமாயாம் விஶாலாயாம் புஷ்கரேஷு மஹாத்மன: ॥
ஸுகம் தப: சரிஷ்யாம: பரம் தத் ஹி தபோவனம் ।
தப: உக்ரம் துராதர்ஷம் தேபே மூல பலாஶன: ॥

வா.ரா.பால. - 61.

விஶ்வாமித்ரர் ப்ரஹ்மர்ஷியாக ஆகவேண்டுமென்று எண்ணி தென் திசையில் தவம் இயற்றினார். அங்கு த்ரிசங்கு உருவில் நேர்ந்த இடையூற்றால் தவம் வீணாகியது. மனம் நொந்தவராய் மேற்குத் திசையை நோக்கிச் சென்றார். அங்கு அகன்ற தீர்த்தக் கரைகளில் தபோவனங்கள், தாமரை மலர் நிறைந்த குளிர்ந்த ஓடைகளொடு அமைந்திருந்தன. அங்கு கிடைக்கும் காய், கனி, கிழங்குகளையே உணவாகக் கொண்டு தவமியற்ற எண்ணியவராய் மஹர்ஷிகளுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு தவம் புரியலானார். கடுந்தவம் எதிர் வரும் இடையூறுகளைத் தகர்க்கும் வல்லமை பெற்றது.

அம்பரீஷன், சுனச்சேபன்

अम्बरीष इति ख्यातः यष्टुं समुपचक्रमे ।
तस्य वै यजमानस्य पशु मिन्द्रो जहार ह
पशुरद्य हतो राजन् प्रणष्टः तवदुर्नयात्
अरक्षितारं राजानं घ्नन्ति दोषा नरेश्वर ।
प्रायश्चित्तं महत् ह्येतत् नरं वा पुरुषर्षभ
गवां शत सहस्रेण विक्रीणीषे सुतं यदि ।
पशोरर्थे महाभाग कृतकृत्योऽस्मि भार्गव ।

அம்பரீஷ இதி க்யாத: யஷ்டும் ஸமுபசக்ரமே ॥
தஸ்யவை யஜமானஸ்ய பஶும் இந்த்ர: ஜஹாரஹ ॥
பஶு: அத்ய ஹ்ருத: ராஜன்! ப்ரணஷ்ட: தவதுர்நயாத் ॥
அரக்ஷிதாரம் ராஜானம் க்னந்தி தோஷா: நரேச்வர ॥
ப்ராயஶ்சித்தம் மஹத் ஹி ஏதத் நரம் வா புருஷர்ஷப ॥
கவாம் சதஸஹஸ்ரேண விக்ரீணீஷே ஸுதம் யதி ।
பசோ: அர்த்தே மஹாபாக! க்ருத க்ருத்யோரஸ்மி பார்கவ ॥

வா.ரா.பால. - 61

அயோத்தியில் அம்பரீஷ மஹா ராஜா ஆட்சி செலுத்தி வந்தார். அவர் நாட்டு மக்களின் நலன் கருதி அச்வமேதம் எனும் வேள்வியை வேட்க எண்ணினார். வேள்வியும் தொடங்கப் பெற்றது. புரோஹிதர், யாகப் பசுவான குதிரையைக் கொணர்ந்திருந்தார். தேவைப்படும் வேளையில் குதிரை காணப்பட வில்லை. அதைப் பிறர் அறியாமல் இந்திரன் கவர்ந்து சென்று விட்டான்.

புரோஹிதர்: ''அரசே! இங்கிருந்த பசு காணப்படவில்லை. மக்களை யும், உடமையையும் காக்கவேண்டிய பொறுப்பு அரசனுடையது. இது உமது பாபத்தினாலும், உமது காவலர்களின் கவனக் குறைவினாலும் நிகழ்ந்திருக் கிறது. இது உமக்கு பெருந்தீங்கை விளைவிக்கும். இதற்கு உடனே பிராயச் சித்தம் செய்ய வேண்டும்''.

प्रायः पापमिति प्रोक्तं सिद्धं तच्छोधनं स्मृतं ।

ப்ராய : பாபம் இதி ப்ரோக்தம் சித்தம் தச்சோதனம் ஸ்ம்ருதம் ॥

''பாபங்களைக் களையும் கர்மாவுக்குப் பிராயச்சித்தம் என்று பெயர். இதைச் செய்யாவிடில் யாக பசுவிற்கு மாற்றாக நரனை (மனிதனை)

கொணர்ந்து நரமேதமாக அவனைப் பலியிட வேண்டும். எனவே குதிரையைத் தேடியும் கிடைக்காவிட்டால் பல்லாயிரம் பசுக்களை விலையாகக் கொடுத்து ஒரு மனிதனைப் பலியிட வாங்கி வரவும்'' என்றார்.*

உடனே நாடெங்கிலும் குதிரையைத் தேடிக் கொண்டு அம்பரீஷன், தானே சென்றான். எங்கும் காணவில்லை. கடைசியாக பிருகுதுங்கம் எனும் மலையடிவாரத்தை அடைந்தான். அங்கு ஒரு ஆச்ரமத்தில் தம் மக்கள் மூவருடனும் மனைவியுடனும் வஸித்த ரிசீக முனிவரைக் கண்டு வணங்கி ''முனிவரே! யான் தொடங்கிய வேள்வி முற்றுப்பெற யாகப் பசுவிற்கு மாற்றாக உமது புதல்வர்களுள் ஒருவரை எனக்குக் கொடும். நான் அவனுக்காக பல்லாயிரம் பசுக்களை விலையாகக் கொடுக்கிறேன்'' என்று கூறினான்.

ரிசீகர் :

नाऽहं ज्येष्ठं नरश्रेष्ठ विक्रीणीयां कथञ्चन

ந அஹம் ஜ்யேஷ்டம் நரஶ்ரேஷ்ட! விக்ரீணீயாம் கதம்சன ।

தாய் :

ममापि दयितं विद्धि कनिष्ठं शुनकं नृप
तस्मात् कनीयसं पुत्रं न दास्ये तव पार्थिव

மமாபி தயிதம் வித்தி கனிஷ்டம் சுனகம் ந்ருப! ।
தஸ்மாத் கனீயஸம் புத்ரம் ந தாஸ்யே தவ பார்த்திவ ॥

சுனச்சேபன் :

पिता ज्येष्ठ मविक्रेयं माता चाह कनीयसम्
विक्रीतं मध्यमं मन्ये राजन् पुत्रं नयस्व माम् ।

शुनःशेपं नरश्रेष्ठः गृहीत्वातु महा यशाः
व्यश्राम्यत्पुष्करे राजा मध्याह्ने रघुनन्दन ।

பிதா ஜ்யேஷ்டம் அவிக்ரேயம் மாதா ச ஆஹ கனீயஸம் ।
விக்ரீதம் மத்யமம் மன்யே ராஜ! புத்ரம் நயஸ்வ மாம் ॥
கனச்சேபம் நரஶ்ரேஷ்ட: க்ரஹீத்வாது மஹாயஶா: ।
வ்யஶ்ராம்யத் புஷ்கரே ராஜா மத்யான்ஹே ரகுநந்தன! ।

வா.ரா. பால. - 61, 62

குறிப்பு: *யாகத்தைச் செய்யும்பொழுது யாகப் பசு காணாமற் போனால் அதற்கு ஈடாக ஒரு மனிதனைப் பலியிட்டு யாகத்தை முடிக்க வேண்டும் என்பதும், யாகத்தில் செய்யப்படும் ஹிம்ஸை, ஹிம்ஸை ஆகாது என்பதும், இதனால் அந்த ஜீவன் சுவர்க்கத்தைப் பெறுகிறான் என்பதும் வேத நூல் துணிபு என்பதை மனதில் கொள்ள வேண்டும்.*

'பெற்றவள் இளவல் எற்கே என்றனள், பிதா முன் என்றான்'
மற்றைய மைந்தன் நக்கு மன்னவன் தன்னை நோக்கி
'கொடுத்து அருள் வெறுக்கை வேண்டிற்று; ஒற்கம் ஆம்
விழுமம் குன்ற
எடுத்து எனை வளர்த்த தாதைக்கு' என்று அவன் தொழுது
வேந்தன்
தடுப்ப அருந் தேரின் ஏறி நடை இலா படர்தலோடும்
சுடர்க் கதிர் கடவுள் வானத்து உச்சி அம்சூழல் புக்கான்

க.ரா.பால. மிதிலை

முன்: ஜ்யேஷ்டன், மற்றைய மைந்தன், சுனச்சேபன், நக்கு: சிரித்து, வேண்டிய வெறுக்கை கொடுத்து அருள், வெறுக்கை: செல்வம், வேண்டிற்று: வேண்டு மளவில், ஒற்கம் ஆம் விழுமம் குன்ற: வறுமைத் தளர்ச்சித் துன்பம் குறைய, படர்தலோடும்: செல்லுகையில்.

ரிகீகர் வறுமையின் காரணமாக மகனைக் கொடுத்தற்கு இயலாது என்னாது, புதல்வர்களுள் மூத்தவனைக் கொடுக்க முடியாது என்றார். உடனே ரிசீகரின் மனைவி எனது அன்புச் செல்வமாம், கடையனாகிய சுனகனை என்னால் கொடுக்க இயலாது என்றாள். இதைக்கேட்ட நடுவனாகிய சுனச்சேபன் அரசனை நோக்கிக் கூறினான்: ''சக்ரவர்த்தியே! தந்தை முன்னவனையும், தாய் கடையனையும் விற்க இயலாது என்றனர். எனவே நடுவனாகிய என்னை விற்கப்பட்டவனாகவே யான் கருதுகிறேன். என்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தையருக்கு என்னை விற்க உரிமையுண்டு. வளர்த்ததற்கு நன்றிக் கடனாக யான் உம்மோடு வருகிறேன். தாய் தந்தையர் அவ்வாறு பேசியதற்கு ஏழ்மை தான் காரணம். எனவே குடும்பத்தின் ஏழ்மை நீங்கும்படி அவர்கள் விரும்பும் அளவிற்கு செல்வத்தைக் கொடுத்தருள்வீர்'' எனக்கூறி தாய் தந்தையரை விழுந்து வணங்கி அம்பரீஷனின் தேரில் ஏறி அமர்ந்தான். அரசன் தேரைச் செலுத்திக் கொண்டு சிறிது தூரம் சென்றதும், நடுப்பகல் உச்சி வேளையின் காரணமாகக் களைத்தவனாய் புஷ்கர க்ஷேத்ரத்தில் ஒரு தீர்த்தக் கரையில் தங்கி இளைப்பாறினான்.

மகனை விற்பதும் உண்டோ?

உலகில் அறிவற்ற ஜடப்பொருள்களை விற்பதும் வாங்குவதும் உண்டு. அறிவு இருப்பினும் பகுத்தறிவு பெறாத ஆடு மாடு போன்ற விலங்கினங்களை விற்பதையும் வாங்குவதையும் பார்த்து வருகிறோம். ஆனால் ஆறறிவு பெற்ற பகுத்தறிவு பெற்ற மனிதனை விற்பதும் வாங்குவதும் உண்டோ? அதிலும் பெற்றெடுத்து பாசத்துடன் வளர்த்து ஆளாக்கிய தம் புதல்வனைப் பிறருக்கு விற்பதும், வாங்குவதும் தகுமோ?

यो मनुष्यः मनुष्यस्य विक्रयाद्धनमिच्छति ।
तस्य मूत्रं पुरीषञ्च स परत्रोपजीवति ॥
ய: மனுஷ்ய: மனுஷ்யஸ்ய விக்ரயாத் தனம் இச்சதி ।
தஸ்யமூத்ரம் புரீஷம் ச ஸ: பரத்ர உபஜீவதி ॥

பணத்திற்காக மனிதனை விலைபேசி விற்க விரும்புகின்றவன் நரக லோகத்தை அடைந்து விற்கப்பட்டவனுடைய மல மூத்ரங்களைக் கொண்டு உயிர் வாழ்வான்'' என மனுவும், ''ஆபத் காலத்திலும் மனிதனை விற்பது தகாது'' என்று ஆபஸ்தம்பரும் கூறுவதால் ஒரு தவமுனிவர் நன்கு கற்றவர் மகனை விற்கலாமா? சட்டத்தின் ஆட்சியை அமல் படுத்த வேண்டிய ஒரு பேரரசன் பணத்தைக் கொடுத்து மனிதனை வாங்கலாமா? தகுமா? இது முற்றிலும் சுயநலம் அல்லவா?

சரியான கேள்வி, விடை காண்போம். இது தக்கது, செய்யலாம். இது தகாதது, செய்யக் கூடாது, என வரையறுத்துக் கூறும் உரிமை சாஸ்த்ரத்திற்கே (சட்ட நூலுக்கே) உண்டு என்பதை "தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம்தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ'' என்று கண்ணபிரான் கீதையில் கூறுவார். இப்பொழுது எது சாஸ்த்ரம்—சட்ட நூல் எனக் கேள்வி எழும். இதற்கு ''வேத சாஸ்த்ராத்பரம் நாஸ்தி நதைவம் கேசவாத்புரம்'' சட்ட நூல் என்பது வேதம் ஒன்றே, இதை அமல்படுத்துபவர்களுள் உயர்ந்தவன் கேசவன் (பிரமனுக்கும் சிவனுக்கும் தாதையானவன் ஒருவனே என்பர். மேலும் ''தத்விதாம் ச ஸ்ம்ருதிசீலே'' வேதங்களையும் பரமனையும் நன்கு உணர்ந் தோர்களின் ஸ்ம்ருதிகளும் (கற்ற வேதங்களின் நினைவுக் குறிப்புகள்) அவர்களது ஒழுக்க முறைகளும் ப்ரமாணங்களாகும், சட்டம் (விதி) என்றால் அதற்கு விலக்கும் உண்டு. வேதம் உயிரினங்களை மாய்க்காதே (ஹிம்ஸை செய்யாதே) என விதிக்கும். ஆனால் யாகங்களில் பசுவை ஆட்டை, குதிரையை மாய்க்க வேண்டும். மாய்க்கப்படுவது உடனே மேலுலகில் நல்லுயர்வைப் பெறும் என விதிவிலக்கையும் கூறும். இதே போன்று இங்கும் கொள்ள வேண்டும்.

न ज्येष्ठ पुत्रं दद्यात् गृह्णीयाद्वा स सन्तानाय पूर्वेषाम्
''ந ஜ்யேஷ்ட புத்ரம் தத்யாத் க்ருண்ஹீயாத்வா
ஸ ஸந்தானாய பூர்வேஷாம்
नत्वेक पुत्रं दद्यात् सहि सन्तानायपूर्वेषाम्
''நது ஏகபுத்ரம் தத்யாத் ஸஹிஸந்தானாய பூர்வேஷாம்''

போதாயனர்

यस्मिन् ऋणं सन्नयति येनचामृतमश्नुते
स एव धर्मजः पुत्रः कामजानितरान् विदुः ।

யஸ்மின் ருணம் ஸந்நயதி யேனச அம்ருதம் அச்னுதே ।
ஸ: ஏவ தர்மஜ: புத்ர: காமஜானிதரான் விது: ॥

மனுஸ்ம்ருதி

மூத்த பிள்ளையைக் கொடுப்பதோ வாங்குவதோ கூடாது. அவன் முன்னோர்களின் ஸந்ததிக்காக (வம்ச வளர்ச்சிக்காக) ஏற்பட்டவன்.

ஒருவனுக்கு புதல்வன் ஒருவனேயாயின் அவனைக் கொடுக்காதே. ''மூத்த புதல்வனால் ''பித்ரு ருணம்'' பித்ருக்களுக்கான கடன் நீங்குகிறது. அவனால் மோக்ஷத்தையும் பெறுகிறான். அவனே தர்ம ப்ரஜை. சாஸ்த்ரீய முறையில் பிறந்தவன். மற்றவர்கள் கேவலம் காமத்தினால் பிறந்தவர்கள்'' என்று கூறும் ப்ரமாணங்களால் மூத்தவனையும், ஒரே புதல்வனையும் கொடுத்தல், வாங்குதல் கூடாது என்பதால் பிற பிள்ளைகளைக் கொடுப்பதும் வாங்குவதும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எனவே ரிசீகர் கொடுத்ததும் அம்பரீஷன் பெற்றதும் தவறல்ல.

तप्यन्तं ऋषिभिः सार्धं मातुलं परमातुरः
विवर्ण वदनो दीनः तृष्णया च श्रमेणच
पपाताङ्के मुने राशु वाक्यञ्चेदमुवाच ह
नमेऽस्ति माता न पिता ज्ञातयो बान्धवाःकुतः ?
त्रातु मर्हसि मां सौम्य धर्मेण मुनिपुङ्गव
राजा च कृत कार्यः स्यात् अहं दीर्घायुरव्ययः
पितेव पुत्रं धर्मात्मन् त्रातुमर्हसि किल्विषात् ।

தப்யந்தம் ரிஷிபி: ஸார்தம் மாதுலம் பரமாதுர: ॥
விவர்ண வதன: தீன: த்ருஷ்ணயா ச ஶ்ரமேண ச ।
பபாத அங்கே முனே: ஆஶு வாக்யம் சேதம் உவாசஹ ॥
நமே அஸ்தி மாதா நபிதா ஜ்ஞாதய: பாந்தவா: குத:? ।
த்ராதும் அர்ஹஸி மாம் ஸௌம்ய! தர்மேண முனிபுங்கவ ॥
ராஜா ச'க்ருத கார்ய: ஸ்யாத் அஹம் தீர்காயு: அவ்யய: ॥
பிதா இவ புத்ரம் தர்மாத்மன்! த்ராதும் அர்ஹஸி கில்பிஷாத் ॥

வா.ரா.பால. - 62

அம்பரீஷன் இளைப்பாறும் வேளையில், சுனச்சேபன் சிறிது தூரம் சென்றான். அங்கு தனது தாய் கௌசிகியின் ஸஹோதரரான (தாய் மாமனான) விஸ்வாமித்ரர் தவம் செய்து கொண்டிருந்தார். சுற்றிலும் பல தபஸ்விகள். அவர்கள் இடையே விரைந்து சென்று கௌசிகரின் திருவடி வாரத்தில் விழுந்தான். மருமானைப் பார்த்தார் மாமா. மரண பயத்தினால் முகத்தில் களையில்லை. வெளுத்து வாடியிருக்கிறது. தாகத்தினால் வாயில்

பேச்சு எழவில்லை. நீண்ட தூரம் வந்த ச்ரமம் உடலை வாட்டுகிறது. அம்பரீஷன் புறப்படுவதற்குள் போய்ச் சேர வேண்டியுள்ளதால் விரைந்து பேசினான். நிகழ்ந்தவற்றைக் கூறி, ''மாமாவே! எனக்கு தாயுமில்லை தந்தையுமில்லை, சுற்றமுமில்லை, என்னைக் காக்க வேண்டியவர்கள் கைவிட்டனர். நீரே எனக்குத் தாயும், தந்தையும், சுற்றமும் ஆவீர். உம்மைச் சரணடைந்தேன். என்னைக் காப்பீராக. அரசனுடைய வேள்வியும் முழுமை பெறவேண்டும். நானும் தீர்க்காயுஸ்ஸாக வாழ்ந்து தவமியற்றி சுவர்க்கம் புக வேண்டும். பரம தார்மிகராகிய நீர்தான் இதற்கு வழி காண வேண்டும்'' என வேண்டினான்.

यत्कृते पितरः पुत्रान् जनयन्ति शुभार्थिनः
परलोक हितार्थाय तस्य कालोऽयं आगतः
पशुभूता नरेन्द्रस्य तृप्तिं अग्नेः प्रयच्छत

யத் க்ருதே பிதர: புத்ரான் ஜனயந்தி ஶுபார்த்தின: ।
பரலோக ஹிதார்த்தாய தஸ்ய கால: அயம் ஆகத: ॥
பசுபூதா: நரேந்த்ரஸ்ய த்ருப்திம் அக்னே: ப்ரயச்சத ॥

வா.ரா. பால - 62

விஸ்வாமித்ரர் உடனே தமது புதல்வர்களை அழைத்துப் பேசலானார். ''குமாரர்களே! உலகில் மக்கள் இம்மையில் நன்மையைப் பெறவும், மறுமையில் பேரின்பத்தைப் பெறவுமே மக்களைப் பெறுகிறார்கள். ''ஜீவதோ: வாக்யகரணாத்'' உலகில் வாழும் வரை தாய் தந்தையரின் சொற்படி நடத்தலே மகனின் தலையாய கடமையாகும். அத்தகு நேரம் உங்களுக்கு வாய்த்திருக்கிறது. இச்சிறுவன் உங்கள் அத்தையின் பிள்ளை. என்னைச் சரணடைந்திருக்கிறான். மரண தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்தவனாயினும் சரணாகதனைக் காக்கவேண்டுமென மறை மறைக்காது தெளிவாக ஓதுகிறது.''

प्रतिप्रदानं शरणागतस्य स्त्रियो वधः ब्राह्मण स्वापहारः
मित्र द्रोहः तानि चत्वारि शक्र भक्त त्यागश्चैव समं मतः मम

ப்ரதி ப்ரதானம் ஶரணாகதஸ்ய, ஸ்த்ரிய: வத: ப்ராஹ்மண ஸ்வாபஹார: ।
மித்ர த்ரோஹ: தானி சத்வாரி யக்ர! பக்த த்யாக: ச ஏவ ஸமம் மத: மம ॥

மஹாபாரதம்

''சரணாகதனைக் காக்காமல் விடுதல், பெண்ணினத்தை வதைத்தல், அந்தணரின் சொத்துக்களைப் பறித்தல், நண்பனுக்கு த்ரோஹம் செய்தல், பக்தனைக் கைவிடுதல் ஆகியவை சமமான குற்றங்களாகும். நம்மைக்

காட்டுக்குத் துரத்தினவர்களாயினும் அவர்கள் பயந்து ஆர்த்தர்களாய் நம்மைச் சரணடையும்போது அவர்களை—கௌரவர்களைக் காப்பது நம் கடமையென பீமனுக்கு யுதிஷ்டிரர் உணர்த்துவதாக பாரதம் பேசும். எனவே இச்சிறுவன் வாழ நீங்கள் அனைவரும் அரசனின் வேள்வியில் பசுவாக இருந்து அக்னி தேவனைத் திருப்தி செய்யுங்கள். உங்களை ஹவிஸ்ஸாக ஏற்று தேவதை களும் மகிழ்வர். என் சொல்லும் நிறைவேற்றப்பட்டதாகும் விரையுங்கள்'' என்றார்.

புத்ரர்கள், மதுஷ்யந்தனை முன்னிட்டுக் கொண்டு பேசலாயினர். ''ஸாபிமானம் நரச்ரேஷ்ட ஸலீலம் தம் அப்ருவன்.''

कथमात्म सुतान् हित्वा त्रायसेऽन्य सुतं विभो
अकार्य मिव पश्यामः श्वमांसमिव भोजने
निस्साध्वसमिदं प्रोक्तं धर्मादपि !विगर्हितम्
अतिक्रम्यतु मद्वाक्यं दारुणं रोमहर्षणम्
श्वमांसभोजिनः सर्वे वासिष्ठा इव जातिषु
पूर्णं वर्ष सहस्रंतु पृथिव्या मनु वत्स्यथ ॥

கதம் ஆத்ம ஸுதான் ஹித்வா த்ராயஸே அன்யஸுதம் விபோ! ।
அகார்யமிவ பஶ்யாம: ஶ்வமாம்ஸமிவ போஜனே ॥
நிஸ்ஸாத்வஸம் இதம் ப்ரோக்தம் தர்மாதபி விகர்ஹிதம் ।
அதிக்ரம்யது மத்வாக்யம் தாருணம் ரோமஹர்ஷணம் ॥
ச்வ மாம்ஸ போஜின: ஸர்வே வாஸிஷ்டா: இவ ஜாதிஷு ।
பூர்ணம் வர்ஷ ஸஹஸ்ரம் து ப்ருதிவ்யாம் அனுவத்ஸ்யத ॥

வா. ரா. பால. - 62

எழும் கதிரவனும் நாணச் சிவந்தனன் இருகண், நெஞ்சம்
புழுங்கினன், வடவைதீய மயிர்ப்புறம் பொறியின் துள்ள
அழுங்கல் இல் சிந்தையீர்! நீர் அடவிகள் தோறும் சென்றே
ஒழுங்கு அறு புளிஞர் ஆகி உறு துயர் உறுக என்றான்.

க.ரா.பால. மிதிலை

அழுங்கல் : இரக்கம், அடவிகள் : காடு, புளிஞர் : வேடர்.

கர்வத்துடனும் பரிஹாஸமாகவும் அவமதிப்புத் தோன்றவும் தந்தையை நோக்கி புதல்வர்கள் ஒரே குரலில் பேசினர்: ''தந்தையே! நன்றாக இருக்கிறது உமது பேச்சு! தன் பிள்ளைகளை ஒதுக்கிவிட்டு அண்டைவீட்டுப் பிள்ளையைக் காப்பாற்றுகிறீரே? இது முற்றிலும் தகாததன்றோ? வைதிகர் களின் சாப்பாட்டில் நாய் மாமிசத்தைப் பரிமாறுவது போன்றுளது உமது கூற்று.''

தந்தை, கோபத்தினால் உதயசூரியனைவிட கண்கள் சிவக்க, நெஞ்சம் குமுற, வடவாக்னியே தீய்ந்துபோகும்படி உடலிலுள்ள ரோமத்துவாரங் களினின்று அனற்பொறிகள் கிளம்பப் பேசினார். ''சிறிதும் அச்சமின்றி, அறவழி மறந்து, பித்ருபக்தி சிறிதுமின்றி, அறவோர்கள் இகழும்படியான கொடிய வார்த்தைகளைப் பேசினீர். தந்தை சொல் மீறிய நீங்கள் வஸிஷ்ட புத்திரர்களைப் போன்று ஈனஜாதியினராகி, நாயின் மாமிசத்தை உண்டு, ஆயிரம் ஆண்டுகள் காடுகளில் உழல்வீராக'' எனச் சபித்தார்.

पवित्रपाशै रासक्तः रक्तमाल्यानुलेपनः
वैष्णवं यूपमासाद्य वाग्भि रग्निं उदाहर
इमे तु गाथे द्वे दिव्ये गायेथा मुनि पुत्रक
अम्बरीषस्य यज्ञेऽस्मिन् ततस्सिद्धि मवाप्स्यसि ।

பவித்ரபாசை: ஆஸக்த: ரக்த மால்யானுலேபன: ।
வைஷ்ணவம் யூபம் ஆஸாத்ய வாக்பி: அக்னிம் உதாஹர ॥
இமேது காதே த்வே திவ்யே காயேதா: முனிபுத்ரக ।
அம்பரீ ஷஸ்ய யக்ஞே அஸ்மின் தத: ஸித்திம் அவாப்ஸ்யஸி ॥

வா.ரா.பால. - 61

விஸ்வாமித்ரர்: ''சுனச்சேபா! வேள்வி அரங்கில் யூபஸ்தம்பத்தில் தர்ப்பைப் புற்களான கயிற்றால் உன்னைக் கட்டிச் சிவந்த மலர் மாலை களைச் சூட்டி, செவ்விய சந்தனம் பூசி அலங்காரம் செய்வார்கள். அப்பொழுது நான் உபதேசிக்கும் இரண்டு மந்திரங்களைச் சொல்லி இந்திரனையும், உபேந்திரனான வாமனனையும் யாகாக்னியைப் பார்த்துத் துதிப்பாயாக. இதனால் அரசனின் வேள்வியும் நிறைவுறும், உனது உயிரும் காக்கப்படும்'' எனக் கூறி மந்திரங்களை உபதேசம் பண்ணினார்.

शुनः शेपः

राजसिम्ह महासत्व शीघ्रं गच्छावहे सदः
स बद्धो वाग्भिरग्रयाभिः अभितुष्टाव वै सुरौ
इन्द्रं इन्द्रानुजं चैव यथावत् मुनिपुत्रकः
(इन्द्रः) दीर्घमायुः तदाप्रादात् शुनः शेपाय राघव ।
फलं बहुगुणं राम सहस्राक्ष प्रसादजं ॥

ஶுனச்சேப :

ராஜஸிம்ஹ மஹாஸத்வ! சீக்ரம் கச்சாவஹே ஸத: ।
ஸ: பத்த: வாக்பி: அக்ர்யாபி: அபிதுஷ்டாவ வை ஸுரௌ ।

இந்த்ரம் இந்த்ரானுஜம் சைவ யதாவத் முனிபுத்ரக: ॥
(இந்த்ர:) தீர்க்கம் ஆயு: ததாப்ராதாத் ஶுனச்ஶேபாய ராகவ ॥
பலம் பஹுகுணம் ராம ஸஹஸ்ராக்ஷ ப்ரஸாதஜம் ॥

வா.ரா.பால. - 61 ,62

உடனே சுனச்சேபன் முகம் மலர்ந்தது. அம்பரீஷன் இருக்குமிடம் வந்து ''அரசே! விரைவில் புறப்படுங்கள், தீக்ஷை பெற்ற வேள்வியைத் தொடருங்கள்'' என்றான். இதைக் கேட்ட அரசன் பன்மடங்கு மகிழ்ந்து, விரைந்து வேள்விச் சாலையை அடைந்து, ரித்விக்குகளின் உதவியுடன் யாகத்தைத் தொடங்கி சுனச்சேபனை அலங்கரித்து யூபஸ்தம்பத்தில் கட்டச் செய்தான். யாக பசுவான முனிகுமாரனும் சிரித்த முகத்துடன் மந்திரங் களைச் சொல்லித் துதித்தான். தேவேந்திரன் நேரில் தோன்றி சுனச்சேபனுக்கு நீண்ட ஆயுளையும், அம்பரீஷனுக்கு வேள்விப் பயனைப் பன்மடங்காகவும் அளித்தருளினான்.

என்னே, மந்திரத்தின் பெருமை! சந்தி ஸாவித்ரீ இன்றித் திரியும் குழந்தைகளை, பெற்றோர்கள் இதமாகச் சொல்லி ஸந்த்யாவந்தனங்களை அனுஷ்டிக்கச் செய்து காயத்ரீ தேவதையின் இன்னருளால் வாழ்க்கையில் பல பயன்களைப் பெறச் செய்யலாமே!

विश्वामित्रोऽपिधर्मात्मा भूयः तेपे महातपाः
पूर्णे वर्षे सहस्रेतु व्रतस्नातं महामुनिम्
अभ्यागच्छन् सुराः सर्वे तपः फल चिकीर्षवः
ऋषित्वमसि भद्रं ते स्वार्जितैः कर्म भिश्शुभैः

விச்வாமித்ர: அபிதர்மாத்மா பூய: தேபே மஹாதபா: ॥
பூர்ணே வர்ஷஸஹஸ்ரே து வ்ரதஸ்நாதம் மஹாமுனிம் ।
அப்யாகச்சன் ஸுரா: ஸர்வே தப: பல சிகீர்ஷவ: ॥
ரிஷி: த்வமஸி பத்ரம்தே ஸ்வார்ஜிதை: கர்மபி: ஶுபை: ॥

வா.ரா. பால. - 62, 63

விஶ்வாமித்ரர் தம் தவ வலிமையினால் சுனச்சேபனைக் காத்தார். அப்பொழுது தம் சொல்லுக்குக் கீழ் படியாத தம் புதல்வர்களைச் சபித்தத னால் தவத்தின் ஆற்றல் குறைந்தது. எனவே மீண்டும் பகவத் ஸாநித்யமுள்ள புஷ்கர க்ஷேத்ரத்தில் ஆயிரம் ஆண்டுகள் தவம் புரிந்து, புஷ்கரிணியில் அவப்ருத ஸ்நானம் செய்து மஹாதேஜஸ்வியாக விளங்கினார். அப்பொழுது அவர் தவத்திற்குப் பயனை அளிக்க விரும்பி தேவர் குழாம் புடை சூழ பிரமன் எதிரே தோன்றி ''முனிவரே! நீர் இயற்றிய தவத்தின் பயனாய் இனி ரிஷியாகக் கருதப்படுவீர்'' எனக் கூறி விடை பெற்றார்.

விஶ்வாமித்ரர் ப்ரஹ்மர்ஷியானார்

ஆயிரம் ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தும் தேவர்கள் நம்மை ப்ரஹ்மர்ஷியாகக் கருதவில்லையே! முன்பு ராஜர்ஷி என்றனர். இப்பொழுதோ ரிஷி என்றார் கள். ஆம், நாம் இன்னும் கோபத்தை வெற்றிகொள்ளவில்லையே! நம் குமாரர்களையே சபித்தோமே!'' என எண்ணி விஶ்வாமித்ரர் வருந்தினார். இனி எது நிகழினும் எவர் மீதும் கோபப்படக்கூடாது என உறுதி பூண்டு மீண்டும் புஷ்கரத்தில் தவத்தில் அமர்ந்தார். ஆண்டுகள் பல கழிந்தன. மிகவும் உக்ரமான தவம். இந்நிலையில் தேவர்களால் தூண்டப்பட்ட மேனகை அங்கே வந்தாள். முனிவர் தவம்புரியும் இடத்திற்கு மிக அருகி லுள்ளதுறையில் இறங்கி நீராடினாள்.

रूपेणाप्रतिमां तत्र विद्युतं जलदे यथा
दृष्ट्वा कन्दर्प वशगः मुनिस्ता मिदमब्रवीत्
अप्सरसः स्वागतं तेऽस्तु वस चेह ममाश्रमे
अनुगृह्णीष्व भद्रं ते मदनेन सुमोहितम्
तस्यां वसन्त्यां वर्षाणि पञ्च पञ्च च राघव ॥

ரூபேண அப்ரதிமாம் தத்ர வித்யுதம் ஜலதேர்யதா ।
த்ருஷ்ட்வா கந்தர்ப்ப வசகமுனி தாம் இதம் அப்ரவீத் ॥
அப்ஸர:! ஸ்வாகதம்தேஅஸ்து வஸ ச இஹ மம ஆஶ்ரமே ।
அனுக்ருஹ்ணீஷ்வ பத்ரம் தே மதனேன ஸுமோஹிதம் ।
தஸ்யாம் வஸந்த்யாம் வர்ஷாணி பஞ்ச பஞ்ச ச ராகவ ॥

வா. ரா. பால. - 63

அவள் எழில் கொஞ்சும் மேனியை உடையவள். நீருண்ட மேகத்தின் இடையே கண்களைக் கவரும் மின்னற்கொடி போன்று காட்சி அளித்தாள். தவத்திலிருந்த முனிவர் மெள்ள மெள்ள கண்களைத் திறந்தார். நங்கையின் ஒப்பற்ற அழகு அவரைக் கவர்ந்தது. காமம் கண்களின் வழியே அவர் இதயத்தில் புகுந்தது. பேசலானார்: ''ஏ அப்ஸரஸே! உன் வரவு நல்வரவு ஆகுக. என் ஆச்ரமத்திலேயே நீயும் வசிக்கலாம். க்ஷேமமாக இருப்பாய். என்னை அருள்வாயாக. என்னைக் காமன் முற்றிலும் ஆட்கொண்டு விட்டான்'' என்றார்.

முனிவனும் தன் அழகைக் கண்டு மயங்கியதை நினைந்து நினைந்து உள்ளம் பூரித்தாள் மேனகை. தவவேள்விக்கு இடையூறுகளான காமம்,

கோபம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் முதலிய தீய குணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஓர் வடிவம் கொண்டதோ எனத் தோன்றும் மேனகையோடு பத்து ஆண்டுகள், ஒரு பகல் ஒரு இரவு போல் கழிந்தது.

सव्रीड इव संवृत्तः चिन्ता शोक परायणः ।
सर्वं सुराणां कर्मैतत् तपोपहरणं महत् ॥
विनिश्वसन् मुनिवरः पश्चात्तापेन दुःखितः ।
भीता मप्सरसं दृष्ट्वा वेपन्तीं प्राञ्जलिः स्थिताम् ॥
मेनकां मधुरै वाक्यैः विसृज्यकुशिकात्मजः ।
उत्तरं पर्वतं राम विश्वामित्रो जगाम ह ॥

ஸவ்ரீட இவ ஸம்வ்ருத்த: சிந்தாஶோக பராயண: ।
ஸர்வம் ஸுராணாம் கர்ம ஏதத் தபோபஹரணம் மஹத் ॥
வினிஸ்வஸன் முனிவர: பஸ்சாத்தாபேன துக்கித: ।
பீதாம் அப்ஸரஸம் த்ருஷ்ட்வா வேபந்தீம் ப்ராஞ்ஜலிம் ஸ்த்திகாம் ॥
மேனகாம் மதுரை: வாக்யை: விஸ்ருஜ்ய ருசிகாத்மஜ: ।
உத்தரம் பர்வதம் ராம! விஸ்வாமித்ர: ஜகாம ஹ ॥

வா.ரா. பால. - 63

ஒருநாள் ஞானோதயம் ஆயிற்று. முன்பு செய்த தவம் வீண்போக வில்லை போலும்! மனம் பேசிற்று: ''ராஜர்ஷியே! ரிஷியே! முன்பு கோபத்திற்கு ஆளானீர். இப்பொழுதோ காமத்திற்கு வயப்பட்டீர். ஸபாஷ்! புலன்களை நன்கு வென்றீர். இனியாவது என்னை நல்வழியில் செலுத்தும்'' என்று. முனிவர் வெட்கித் தலை குனிந்தார். தேவர்கள் செய்த வேலை இது எனது பெருந்தவத்தைக் கொள்ளை கொண்டனர். கவலையும் சோகமும் அவரை ஆட்கொண்டன. பச்சாதாபப்பட்டார். கோபம் சிறிது தலையை நீட்டிற்று. பெருமூச்சு விட்டார். உடனிருந்த மேனகை முனிவரின் முகத் திரையை உற்று நோக்கினாள். அவர் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளைக் காட்சிகளாகக் கண்டாள். முனிவரின் காமத்தை விவேகம் (பகுத்தறிவு) வென்றதை உணர்ந்தாள். இப்பொழுது என்ன ஆகுமோ? என நடுங்கினாள். அஞ்சினாள், தவித்தாள், கைகளைக் கூப்பி அஞ்சலி செய்தாள். இது முனிவரின் கோபத்தை விரட்டியது. கருணை புகுந்தது.

முனிவர் பேசினார்: ''மேனகையே! அஞ்சற்க. நீ என் செய்வாய்! பேதைப் பெண். உன்னைத் தேவர்கள் தூண்டினர். நான் அல்லவா காமவயப் பட்டு குற்றம் செய்தவன். உன்னிடம் யான் பிழையைக் காணவில்லை. நீ வந்த வழியே செல்'' எனச் சபிக்காமல் விடை கொடுத்தார்.

काम मोहाभिभूतस्य विघ्नोऽयं प्रत्युप स्थितः

காம மோஹா பிபூதஸ்ய விக்ன: அயம் ப்ரத்யுபஸ்தித: ॥

வா.ரா. பால. - 62

''காமப்பித்தினால் ஏற்பட்ட மதிமயக்கம் என்னையே கெடுத்து விட்டது. முன்பு கோபத்தினால் கெட்டோம். சுனச்சேபனுக்காக நற்புதல்வர் களிடம் கோபம் கொண்டோம். கோபவெறி அவர்களைச் சபிக்கச் செய்து விட்டது''.

पितृमातृगुरूणाञ्च येऽवज्ञां चक्रुरुद्धता:
तेइमे भूय विण्मूत्र गर्दे मज्जन्ति अधोमुखा:
गर्दभो जायते जन्तुः पित्रोश्चाप्यवमानकृत्
आक्रुश्य मातापितरौ सारिका संप्रजायते
तावेव पीडयित्वातु कच्छपः स प्रजायते ।
परीवादी खरो भवति श्वावै भवति निन्दकः
परिभोक्ता कृमिर्भवति कीटोभवति मत्सरी
आचार्यश्च पिताचैव माता भ्राताच पूर्वजः
नाऽर्तेनाप्यवमन्तव्याः ब्राह्मणेन विशेषतः

பித்ரு மாத்ரு குருணாம் ச யே அவஜ்ஞாம் சக்ரு: உத்ததா: ।
தே இமே பூயவிண்மூத்ர கர்தே மஜ்ஜந்தி அதோ முகா: ॥
கர்தப: ஜாயதே ஜந்து: பித்ரோ: சாபி அவமானக்ருத் ॥
ஆக்ருஶ்ய மாதாபிதரௌ ஸாரிகாஸம்ப்ரஜாயதே ।
தாவேவ பீடயித்வாது கச்சப: ஸம்ப்ரஜாயதே ॥
பரீவாதீ கர: பவதி ச்வா வை பவதி நிந்தக: ।
பரிபோக்தா க்ரிமி: பவதி கீட: பவதி மத்ஸரீ ॥
ஆசார்ய ச பிதாசைவ மாதா ப்ராதாச பூர்வஜ: ।
ந ஆர்த்தேனாபி அவமந்தவ்யா: ப்ராஹ்மணேன விசேஷத: ॥

மனு ஸ்ம்ருதி

सम्यक् मिथ्याप्रवृत्तेपि वर्तितव्यं गुराविह
गुरु निन्दा दहत्यायुः मनुष्याणां न संशयः ॥

ஸம்யக் மித்யா ப்ரவ்ருத்தேஅபி வர்த்திதவ்யம் குராவிஹ ।
குருநிந்தா தஹதிஆயு மனுஷ்யாணாம் நஸம்ஶய: ॥

மஹாபாரதம்

''தந்தையையோ, தாயையோ, ஆசிரியனையோ அவமதிக்கின்றவர் கள் துர்நாற்றமுள்ள சீழ் மூத்திரக் குழியில் தலைகீழாக விழுந்து துன்புறு

வார்கள்; கழுதையாகப் பிறப்பார்கள். தாய் தந்தையை கோபிப்பவர்கள் (தாணத் தங்குருவி) பறவையாகப் பிறந்து தவிப்பார்கள், துன்புறுத்துபவர்கள் ஆமையாகவும், தாழ்த்திப் பேசுபவன் கழுதையாகவும், நிந்திப்பவன் குலைக்கும் நாயாகவும், பொறாமைப்படுபவன் புழுவாகவும் பிறப்பான்' என்று மனு கூறினார்.

தாய் தந்தையர், ஆசார்யன், மூத்த ஸகோதரன் ஆகியோரை ஒருவன் ஸங்கடமான நிலையிலிருந்தாலும் அவமதிக்கக் கூடாது இதனை; மீறுபவனின் ஆயுளை அது சுட்டெரிக்குமென்று, பாரதமும் கூறும். எனவே என் புதல்வர்கட்கு நான் தந்தையும் குருவும் ஆவேன். சாஸ்த்ர விதிப்படி அவர்கட்குத் தண்டனை கிடைக்கப்போகிறது. அப்படியிருக்க நான் சபித்து என் தவ வலிமையை இழந்தேனே! என நொந்து மனம் வெதும்பினார்'. 'நான் கோபத்தை வெல்ல உறுதி பூண்டேன். ஆனால் காமம் என்னை வென்றது. குதிரைகளைக் கடிவாளம் பிடித்து அடக்கிக் குறிப்பிட்ட இடத்தை அடைவது போல் நான் எனது புலன்களாகிற குதிரைகளை மனம் எனும் கடிவாளம் கொண்டு அறவழியில் செலுத்தி ப்ரஹ்மரிஷி நிலையை அடைய வேண்டும்'' என உறுதி பூண்டவராய் புஷ்கரத்தை விடுத்து வட திசையிலுள்ள இமயத்தை அடைந்தார்.

उत्तरं पर्वतं राम विश्वामित्रो जगामह
कौशिकी तीरमासाद्य तपः तेपे सुदारुणम्
महर्षि शब्दं लभतां साध्वयं कुशिकात्मजः
महर्षे स्वागतं वत्स तपसोग्रेण तोषितः
महत्वं ऋषि मुख्यत्वं ददामि तव कौशिक
न विषण्णो न सन्तुष्टः विश्वामित्रः तपोधनः
महर्षिशब्द मतुलं स्वार्जितैः कर्मभिश्शुभैः ।
यदिमे भगवानाह ततोऽहं विजितेन्द्रियः
तमुवाच ततो ब्रह्मा न तावत्त्वं जितेन्द्रियः

உத்தரம் பர்வதம் ராம! விச்வாமித்ர: ஜகாமஹ ॥
கௌசிகீதீரம் ஆஸாத்ய தப: தேபே ஸுதாருணம் ॥
மஹர்ஷி சப்தம் லபதாம் ஸாதுஅயம் குஶிகாத்மஜ: ॥
ப்ரஹ்மா : மஹர்ஹே! ஸ்வாகதம் வத்ஸ! தபஸா உக்ரேண
தோஷித: ।
மஹத்வம் ரிஷிமுக்யத்வம் ததாமி தவ கௌஶிக! ॥
நவிஷண்ண: நஸந்துஷ்ட: விஸ்வாமித்ர: தபோதன: ॥॥
மஹர்ஷி சப்தம் அதுலம் ஸ்வார்ஜிதை: கர்மபி: ஶுபை: ।

யதி மே பகவான் ஆஹ தத: அஹம் விஜிதேந்த்ரிய: ॥
தம்உவாச தத: ப்ரஹ்மா நதாவத் த்வம் விஜிதேந்த்ரிய: ॥

வா.ரா. பால. - 63

இமயத்தில் கௌசிகீ நதிக் கரையில் ஆயிரம் ஆண்டுகள் புலன்களை அடக்கவிரும்பிக் கடுந்தவம் புரிந்தார். பயங்கரமான தவத்தைப் பார்த்த தேவர்கள் மிகவும் அஞ்சியவர்களாய் நான்முகனிடம் இவரை மஹர்ஷியாக அருளலாமே என வேண்டினர். நான்முகனும் இமயமலைக்கு வந்து முனிவரை அணுகி, ''கௌசிகரே! உமது தவத்தைக் கண்டு மகிழ்ந்து மெச்சுகிறோம். இனி உம்மை மஹர்ஷியாக மதிக்கிறோம். ரிஷிகளுள் மிகச் சிறந்தவர் நீர்'' எனக் கூறினார்.

இதைக் கேட்ட முனிவர் தாம் பெற்றிருந்த ரிஷி எனும் நிலைக்குக் குறைவின்மையால் வருந்தவுமில்லை. தான் எதிர்பார்த்த உயர்நிலை (ப்ரஹ்மர்ஷி) கிட்டாததால் மகிழவுமில்லை. ஆயினும் நான்முகனை எழுந்து வணங்கிக் கைகளைக் கூப்பியவராய் பணிவுடன் பேசினார். ''பிரம! என்னை மஹர்ஷி என்றீர். நான் முற்றிலும் இந்திரியங்களை வென்று இயற்றிய பெருந்தவத்தினால் மஹர்ஷியானேன். இதிலிருந்து நான் புலன்களை நன்கு வென்றவன் என்பதை ஒப்புக் கொள்கிறீர் அல்லவா'' என்றார். (எனவே ப்ரஹ்மர்ஷி நிலைக்கு என்னை ஏன் உயர்த்தக் கூடாது என்பது கருத்து). இதற்குப் பிரமன் ''நீர் இன்னும் புலன்களை வெற்றி கொள்ளவில்லை. மீண்டும் முயல்வீராக'' என்றார்.

विकार हेतौ सति विक्रियन्ते येषां न चेतांसि त एव धीराः ।
விகார ஹேதௌ ஸதி விக்ரியந்தே யேஷாம் ந சேதாம்ஸி
தே ஏவ தீரா: ।

தனிமையில் இருக்கும்பொழுதும், ஐம்புலன்களுக்கும் தேவையான விஷயங்கள் கிடைத்தற்கு அரியதாயிருக்கும் பொழுதும் தன்னை ஜிதேந்த்ரியனாக (புலன்களை வென்றவனாக)க் கருதுவது தவறு. மனதை அடிமை கொள்ளக்கூடிய உயரிய பொருள்கள் (விஷயங்கள்) தனிமையில் இடையூறின்றி கர்மேந்திரியங்களுக்கும் ஞானேந்திரியங்களுக்கும் நுகர்வதற்கு எளிதாகக் கிடைக்கும் பொழுது புலன்கள் அவற்றை நாடாமலிருப்பின் அதுவே புலனடக்கம் (வைராக்யம்) ஆகும். விஷயங்களின் (பொருள்களின்) தொடர்பு (ஸங்கம்) மிகக் கொடியது. இத்தொடர்பு காமத்தை, பொருட்பற்றைத் தோற்றுவித்து, அதற்கு இடையூறு தோன்றும் பொழுது கோபத்தையும், கோபம் மயக்கத்தையும், மயக்கம் பகுத்தறிவையும் இழக்கச் செய்து அழிவை எதிரே கொணர்ந்து நிறுத்தும் என்பதை கீதை விளக்குகிறது.

सङ्गात् सञ्जायते कामः कामात्क्रोधोऽभिजायते
क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृति विभ्रमः

स्मृति भ्रंशात् बुद्धिनाशः बुद्धिनाशात्प्रणश्यति

ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோத: அபிஜாயதே ।
க்ரோதாத் பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம: ॥
ஸ்ம்ருதி ப்ரம்ஶாத் புத்திநாஶ: புத்திநாஶாத் ப்ரணஶ்யதி ॥ என்று

பகவத் கீதை, 2-62, 63

எனவே இனிதான் ஜிதேந்த்ரியனாக முயற்சிக்க வேண்டும் என்பது நான்முகனின் கருத்து.

ऊर्ध्वबाहुः निरालम्बः वायुभक्षस्तपश्चरन्
घर्मेपञ्च तपाभूत्वा वर्षास्वाकाश संश्रयः
शिशिरे सलिलस्थायी रात्र्यहनितपोधनः
एवं वर्ष सहस्रं हि तपः घोरं उपागमत् ।

ஊர்த்வபாஹு: நிராலம்ப: வாயுபக்ஷ தப: சரந் ।
கர்மே பஞ்சதபா: பூத்வா வர்ஷாஸு ஆகாஶ ஸம்ஶ்ரய: ॥
ஶிஶிரே ஸலில ஸ்தாயீ ராத்ர்யஹனி தபோதன: ।
ஏவம் வர்ஷ ஸஹஸ்ரம் ஹி தப: கோரம் உபாகமத் ॥

வா. ரா. பால. - 63

அன்று முதல் முனிவர் கைகளை உயரத் தூக்கியவராய் எதையும் சார்ந்திராமல் காற்றையே உணவாகக் கொண்டு தவம் புரியலானார். கோடையில் மேலே கதிரவன் தனது வெங்கதிர்களால் கூட, நாற்புறமும் தீக்கொழுந்துகள் சுடவும், மழைக் காலத்தில் மேலே கூரையின்றிக் கொட்டும் மழையிலும், குளிர் காலத்தில் தண்ணீரிலும் குளிரைப் பொருட்படுத்தாது ஆயிரம் ஆண்டுகள் அல்லும் பகலும் கடுந்தவம் புரிந்தார்.

सुर कार्य मिदं रम्भे कर्तव्यं सुमहत् त्वया
लोभनं कौशिकस्येह काममोहसमन्वितम्
माभैषि रम्भ भद्रं ते कुरुष्व मम शासनम्
कोकिलो हृदय ग्राही माधवे रुचिरद्रुमे
अहं कन्दर्पसहितः स्थास्यामि तव पार्श्वतः
त्वं हि रूपं बहुगुणं कृत्वा परमभास्वरम्
तं ऋषिं कौशिकं रम्भे भेदय स्व तपस्विनम्
अथ तस्यच शब्देन गीतेनाप्रतिमेन च
दर्शनेन च रम्भायाः मुने स्सन्देहमागतः

यन्मां लोभयसे रम्भे काम क्रोध जयैषिणम्
दशवर्ष सहस्राणि शैली स्थास्यसि दुर्भगे
उद्धरिष्यति रम्भे त्वां मत्क्रोध कलुषीकृताम् ।

ஸுர கார்யம் இதம் ரம்பே! கர்த்தவ்யம் ஸுமஹத் த்வயா ।
லோபனம் கௌசிகஸ்ய இஹ காமமோஹ ஸமன்விதம் ॥
மாபைஷி ரம்பே பத்ரம்தே குருஷ்வ மமஶாஸனம் ॥
கோகில: ஹ்ருதயக்ராஹீ மாதவே ருசிரத்ருமே ।
அஹம் கந்தர்ப்ப ஸஹித: ஸ்தாஸ்யாமி தவ பார்ஶ்வத: ॥
த்வம் ஹி ரூபம் பஹுகுணம் க்ருத்வா பரம பாஸ்வரம் ।
தம் ரிஷிம் கௌசிகம் ரம்பே பேதயஶ்வ தபஸ்வினம் ॥
அத தஸ்யச ஶப்தேன கீதேன அப்ரதிமேன ச ।
தர்சனேன ச ரம்பாயா: முனே: ஸந்தேஹம் ஆகத: ॥
யந்மாம் லோபயஸே ரம்பே! காம க்ரோத ஜயைஷிணம் ।
தஶவர்ஷ ஸஹஸ்ராணி சைலீ ஸ்தாஸ்யஸி துர்பகே ॥
உத்தரிஷ்யதி ரம்பே த்வாம் மத்க்ரோத கலுஷீக்ருதாம் ॥

வா.ரா.பால. - 64

உடனே இந்திரன் இவர் இந்திரப் பட்டத்திற்காக கடுந்தவம் புரிகின்றாரோ என அஞ்சி, தவத்தினைக் கெடுக்க, ரம்பை எனும் அப்ஸரஸ் மாதை அழைத்து ''நீ தேவர்களின் நலனை முன்னிட்டு விச்வா மித்ரரை உன் அழகினால் மயக்கி அவருக்குக் காமத்தையும் மதிமயக்கத் தையும் தோற்று வித்து தவத்தினைக் கெடுப்பாயாக'' என உத்தரவிட்டான்.'' ரம்பையோ மிகவும் அஞ்சியவளாய் அஞ்ஜலி செய்த வண்ணம் பேச லானாள். ''தேவர் தலைவா! இம்முனிவரோ கொடுங்கோபம் கொண்டவர். என்னைச் சபித்திடுவார். மிக அஞ்சுகிறேன். மன்னித்து அருள்க'' என்றாள்.

இந்திரன்: ''அரம்பையே! அஞ்சற்க, உனக்கு நான் உதவுகிறேன். குயில் உருவில் முனிவரின் மனம் கலங்கும்படி இனிதாகக் கூவுகிறேன். என்னோடு காமனும் உனக்கு உதவுவான். எளிதில் அவர் மன்திில் ஆசையைத் தூண்டுவான். முனிவரும் எளிதில் உன் வயப்பட்டுத் தவத்தினைக் கைவிடுவார். அஞ்சற்க'' என்றான்.

வஸந்த காலம், கோகிலத்தின் இனிய கானம், பெண்ணின் மதுர கானம். முனிவர் மெள்ள கண்களைத் திறந்தார். எதிரே பார்த்தார். புன்னகை தவழும் பெண்ணின் முகம். காமனின் விளையாட்டு போலும்! இது இந்திரனின் சூழ்ச்சியே என உணர்ந்தார். ''பல தடவை ஏமாந்தோம். இனி காமத்திற்கு வயப்படோம்'' என உறுதிபூண்டார். ஆனால் இந்திரனோ, நல்ல சூழ்நிலை. இவர் காம வயப்பட்டேயாக வேண்டும் என நம்பினான். ஏன்?

பெண்ணாசை மிகப் பொல்லாதது. இதனின்றும் எவரும் மீளமுடியாது, என்பது அவன் துணிபு. இது பற்றி ஒரு கவிஞரின் கூற்று நோக்கத்தக்கது.

विश्वामित्र पराशर प्रभृतय: वाताम्बु पर्णाशना:
ते पि स्त्री मुख पङ्कजं सुललितं दृष्ट्वैव मोहं गता:
शाल्यन्नं स पयोदधि घृतं ये भुञ्जते मानवा:
तेषामिन्द्रिय निग्रहः यदि भवेत् विन्ध्यः प्लवेत्सागरे ।

விஸ்வாமித்ர பராஶர ப்ரப்ருதய: வாதாம்பு பர்ணாஶனா:
தே அபி ஸ்த்ரீமுக பங்கஜம் ஸுலலிதம் த்ரஷ்ட்வா ஏவ மோஹம் கதா: ।
சால்யன்னம் ஸ பயோததி க்ருதம்யே புஞ்ஜதே மானவா :
தேஷாம் இந்த்ரிய நிக்ரஹ: யதி பவேத் விந்த்ய: ப்லவேத் ஸாகரே

ஸுபாஷித ரத்நாகரம்

''விஸ்வாமித்ரர், பராசரர் முதலிய மஹர்ஷிகள் நம்மால் போற்றி வணங்கப்படுபவர்கள். இவர்களது உணவோ காற்று, நீர், இலைச் சருகுகள், இவை ஸாத்விக உணவில் சேர்ந்தவை. ஆயினும் அவர்கள் அணங்கின் தாமரை மலரையொத்ததும் மென்மையுடையதுமான முகத்தின் அழகில் ஒரு ஸமயம் மயங்கினர். நாமோ நல்ல பால், தயிர், நெய் இவற்றுடன் அரிசிச் சோறு உண்டு வருபவர்கள். நாம் புலன்களை அடக்கி விடுவோமாகில் விந்தியமலையே கடலில் போடப்பட்டால் மிதக்கும். எனவே புலன்களை அடக்குவது எளிதானதல்ல. மிக்க எச்சரிக்கையுடன் செயல்பட்டு விழிப் புடன் இருந்து அவற்றை அடக்க வேண்டும்'' என இடித்துரைப்பதில் இங்கு கவிஞருக்கு நோக்கு.

காமத்தை அடக்கிய முனிவர் கோபத்தை அடக்க முடியவில்லை போலும்! சினத்துடன் பேசினார்: ''அரம்பையே! நீ என்னை மயக்கி ஆட் கொள்ள வந்தாய். உன்னை எனது சாபம் ஆட்கொள்கிறது பார். பத்தாயிரம் ஆண்டுகள் சிலையாகக் கிடப்பாயாக'' என சபித்தார். மறுகணம், 'உண்மை யில் இவள் குற்றம் புரியவில்லை. இந்திரன் தூண்டுதல் அல்லவா காரணம்' என வருந்தியவராய், ''வஸிஷ்டரின் அனுக்ரஹத்தினால் நான் இட்ட சாபம் நீங்கும்'' என சாபத்தைப் போக்க வழியையும் அருளினார்.

இடையூறுகள் தொடர்வதை நினைக்க நினைக்கக் கோபம் தொடர் கிறது. பிரமன் கூறியது உண்மை. 'புலன்களை வென்றேன் அல்லேன்' என வருந்திக் கடுந்தவம் புரியத் தொடங்கினார். 'பேச்சுதானே கெடுத்தது. இனி மௌனத்தைக் கடைப்பிடிப்பேன்; புலன்கள் என் வசப்படும் வரை, இவற்றிற்கு புகலிடமான சரீரத்தை வருத்துவேன்; மூச்சை அடக்குவேன்; பிராஹ்மண்யத்தைப் பெறும்வரை சாப்பிடவும் மாட்டேன்' என உறுதி

பூண்டார். இங்ஙனம் மன உறுதியுடன் வடக்கு திசையை விட்டு கிழக்கு திசைக்கு வந்து தவம் புரியலானார். இவ்வாறு ஆயிரம் ஆண்டுகள் தவம் புரிந்தார். உணர்ச்சியற்ற மரக்கட்டை போலானார். அங்கும் பல இடை யூறுகள், ஆயினும் சிறிது கூட கோபம் வரவில்லை. இவ்வாறு காமம், கோபம் இரண்டும் அடங்கியதும் விரதத்தை முடித்தார்.

भोक्तु मारब्धवान् अन्नं तस्मिन् काले रघूत्तम
इन्द्रो द्विजातिर्भूत्वा तं सिद्धमन्न मयाचत
तस्मै दत्वा तदासिद्धं सर्वं विप्राय निश्चितः
निःशेषितेऽन्ने भगवान् अभुक्त्वैव महातपाः
अथ वर्ष सहस्रंवै नोच्छ्वसन् मुनिपुङ्गवः
तस्यानुच्छ्वसमानस्य मूर्ध्नि धूमो व्यजायत ।

போக்தும் ஆரப்தவான் அன்னம் தஸ்மின் காலே ரகூத்தம! ॥
இந்த்ர: த்விஜாதி: பூத்வா தம் ஸித்தம் அன்னம் அயாசத ॥
தஸ்மை தத்வா ததா ஸித்தம் ஸர்வம் விப்ராய நிச்சித: ।
நிஃஶேஷிதே அன்னே பகவான் அபுக்த்வைவ மஹாதபா: ॥
அத வர்ஷ ஸஹஸ்ரம் வை ந உச்சவஸன் முனிபுங்கவ: ।
தஸ்ய அநுச்வஸமானஸ்ய மூர்த்னி தூம: வ்யஜாயத ॥

வா.ரா. பால. - 65

விஶ்வாமித்ரர் தவத்தை முடித்துக் கொண்டு சாப்பிடுவதற்காகத் தேவையான அன்னத்தைத் தயார் செய்து கொண்டு பாரணை பண்ணுவதற் காக அமர்ந்தார். அப்பொழுது இந்திரன் அந்தணர் வேடம் தரித்து அவ் வன்னத்தை யாசித்தான். சிறிதும் கோபம் கொள்ளாமல் அன்னம் முழுவதை யும் பிராஹ்மணனுக்குக் கொடுத்துவிட்டு மீண்டும் பல்லாண்டுகள் தவம் புரியலானார். மௌனியாக இருந்தபடியால் எதுவும் பேசவில்லை. தவத்தின் பொழுது சிறிதும் சுவாஸிக்காமல் மூச்சை அடக்கித் தியானம் செய்தார். அப்பொழுது அவருடைய தலையினின்றும் புகை கிளம்பிற்று. மூவுலகங் களும் தீப்பற்றி எரிவது போன்று காட்சி அளித்தன. தேவர்கள், கந்தர்வர்கள், அஸுரர்கள் ராக்ஷஸர்கள் மற்றும் பலரும் முனிவருடைய தவத்தீயினால் துன்புற்று மூர்ச்சை அடைந்தனர். பின்னர் சிறிது தெளிந்தவுடன் நான் முகனை அணுகி முறையிட்டனர். ''பிதாமஹரே! விஶ்வாமித்ரர் பலவகை யில் ஏமாற்றப்பட்டார். கோபத்தை மூட்டித் தவவலிமை இழக்கும்படி செய்யப்பட்டார். உண்ணும் அன்னத்தைப் பறித்து பட்டினியிருக்கும்படி செய்யப்பட்டார். இனி அவரை ஏமாற்ற முடியாது. அவருடைய தவத்தின் வலிமை வளர்ந்து கொண்டே இருக்கிறது. தவத்தீயினால் பாபங்கள் சுட்டெரிக்கப்பட்டு மிகத் தூயராய் விளங்கினார். அவருக்கு ப்ரஹ்மரிஷி பட்டத்தை உடனே அளிக்க வேண்டும். அளிக்காவிடில் மூவுலகங்களும்

அழிந்துவிடும். உலகிலுள்ளவை அனைத்தும் ஒளியிழந்து கலங்கி நிற்கின்றன. கடல்கள் கொதித்து வற்றுகின்றன. மலைகள் வெப்பம் தாங்காது வெடித்துச் சிதறுகின்றன. எங்கும் சூறாவளிக் காற்று வீசுகிறது. கதிரவன் கதிர்களை இழந்து ஒளிமழுங்கி நிற்கிறான். தாமதிப்பின் தேவராஜ்யமே அழிந்துவிடும்'' என்றனர்.

இதைக் கேட்ட நான்முகன் தேவர்கள் புடைசூழ விஶ்வாமித்ரரின் தவச்சாலைக்கு வந்தான்.

ब्रह्मर्षे स्वागतं तेऽस्तु तपसास्म सुतोषिताः
ब्रह्मण्यं तपसोग्रेण प्राप्तवानसिकौशिक
ब्रह्मण्यं यदि मे प्राप्तं दीर्घ मायुस्तथैवच
ओङ्कारश्च बषट्कारश्च वेदाश्च वरयन्तु माम्
क्षत्रवेद विदां श्रेष्ठ ब्रह्मवेद विदामपि
ब्रह्मपुत्रो वसिष्ठो मां एवं वदतु देवताः
सख्यं चकार ब्रह्मर्षिः एवमस्त्वितिचाब्रवीत्
ब्रह्मर्षिस्त्वं नसन्देहः सर्वं सम्पत्स्यते तव
पूजयामास ब्रह्मर्षिं वसिष्ठं जपतां बरम् ॥

ப்ரஹ்மர்ஷே ஸ்வாகதம் தே அஸ்து தபஸாஸ்ம ஸுதோஷிதா: ।
ப்ரஹ்மண்யம் தபஸா உக்ரேண ப்ராப்தவான் அஸி கௌஶிக ॥
ப்ரஹ்மண்யம் யதி மே ப்ராப்தம் தீர்கம் ஆயு: ததைவச ।
ஓங்கார: ச வஷட்கார: ச வேதா: ச வரயந்துமாம் ॥
க்ஷத்ர வேத விதாம் ஶ்ரேஷ்ட: ப்ரஹ்மவேத விதாமபி ।
ப்ரஹ்ம புத்ர: வஸிஷ்ட: மாம் ஏவம் வதது தேவதா: ॥
ஸக்யம் சகார ப்ரஹ்மர்ஷி: ஏவமஸ்து இதிச அப்ரவீத் ॥
ப்ரஹ்மர்ஷி: த்வம் நஸந்தேஹ: ஸர்வம் ஸம்பத்ஸ்யதேதவ ।
பூஜயாமாஸ ப்ரஹ்மர்ஷிம் வஸிஷ்டம் ஜபதாம் வரம் ॥

வா. ரா. பால. - 65

பிரமன், முனிவரைப் பார்த்து, ''ப்ரஹ்மர்ஷியே! நல்வரவு, உமது தவத்தினால் மிக மகிழ்ந்தோம்'' கடுந்தவம் புரிந்து ப்ராஹ்மண்யத்தைப் பெற்றீர். உமக்கு நீண்ட ஆயுளை நல்குகிறேன். செல்க'' என்றார். மிக மகிழ்ந்த முனிவர் பிரமனையும் தேவர்களையும் வணங்கினார்.

முனிவர்: ''பிரமா! ப்ரஹ்மண்யத்தையும், நீண்ட ஆயுளையும் அளித்தீர். மகிழ்ச்சி. இதுவரை க்ஷத்ரியனாக இருந்தபடியால், யாகம் செய்யவும், வேதங்களை ஓதவும் உரிமை பெற்றிருந்தேன். இனி அந்தணரைப் போன்று வேள்வியை வேட்பிக்கவும், வேதங்களை ஓதுவிக்கவும் உரிமை

வேண்டும். மேலும் அதர்வண வேதத்தைக் கற்று அரசர்கட்கு புரோஹித குருவாக உள்ளவரும், மூன்று வேதங்களையும், உபநிஷத்துக்களையும் நன்கு கற்றவரும், உமது புதல்வருமான வஸிஷ்டர், தம் வாயால் ப்ரஹ்மர்ஷி என அழைக்க வேண்டும். ஏனெனில் ப்ராஹ்மண்யம் தவத்தினால் பெறப் பட்டதே ஒழிய ஜாதியினால் இயற்கையாகப் பெறப்பட்டதன்று என நினைத்து என்னை அவர் அவமதிக்கலாம். எனது விருப்பமோ அவர் என்னை ப்ராஹ்மணன் என ஏற்க வேண்டும். அவர் ஏற்காவிடில் மீண்டும் தவம்புரியச் செல்வேன். எனவே தேவர்களே! வஸிஷ்டர் என்னை ஏற்ற பிறகு தான் நீங்கள் செல்ல வேண்டும்'' என்றார்.

உடனே பிரமனும் தேவர்களும் வஸிஷ்டரை அணுகி அவரை மகிழ்ந்து ஏற்கச் செய்தனர். வஸிஷ்டரும் அப்படியே ஆகுக என அருளிய தோடு, ''நீர் ப்ரஹ்மர்ஷியே, ஐயம் வேண்டாம். உம்மோடு மூன்று தலை முறை (தந்தையும் தாத்தாவும் கூட) ப்ராஹ்மணர்கள் ஆவார்கள். எனவே பிறவியினாலும் நீர் அந்தணர் ஆவீர்'' எனக் கூறினார். தேவர்களும் அதை உறுதி செய்துவிட்டு விடை பெற்றார்கள். விஸ்வாமித்ரரும் வஸிஷ்டருக்கு நன்றி கூறி, வணங்கி, உபசரித்து விடை பெற்றார். இவ்வாறு முனிவரின் வரலாற்றைக் கூற முடிவில் சதானந்தர் கூறுவார்: ''ராமா! இவர் முனிவர் களுள் சிறந்தவர்; தவமே உருக்கொண்டவர்; ஜனகரைப் போன்று கர்மானுஷ் டானம் செய்பவர்; தவம் வீர்யத்திற்குப் புகலானவர்''.

முனிவரின் பெருமையைக் கேட்ட மிதிலை அரசர் வணங்கி அஞ்சலி செய்து பேசினார்: ''முனிவர் கோமகனே! என்னே! எனது பாக்யம், வானவர் கட்கும் உதவும் ரகு குலத்தின் செம்மல்களோடு நல்லறமே உருவான நீர் எமது யாகத்திற்கு வந்துள்ளீர். உமது பேரருள் பெற்று யான் அருட்பார்வை யினால் வேள்வியை வேட்பதற்குரிய தூய்மையைப் பெற்றேன். உமது வரவினால் எனது வேள்வியும் உறவினர்களும் சிறப்புற்றனர்.''

लुम्पन् अदृष्ट जामातृ सम्पदां शुचं अद्य नः
त्वदागमन जन्माऽयं आनन्दः सुदिनायते ॥

லும்பன் அத்ருஷ்ட ஜாமாத்ரு ஸம்பதாம் ஶுசம் அத்ய ந: ।
த்வதாகமன ஜன்மா அயம் ஆனந்த: ஸுதினாயதே ॥

முராரி

''ஸீதையின் திருமணத்திற்குப் பணயம் வைத்தோமே! சிவ தனுஸ்ஸை நாணேற்றும் நன்மகன் கிடைப்பானோ எனும் வருத்தத்தை உமது வரவினால் ஏற்பட்ட மகிழ்ச்சி திருடிச் சென்றுவிட்டது. இது என் நன்னாளாகும்'' எனப் பாராட்டி விடை பெற்றார். முனிவரும் தமக்கு அளித்த இருக்கைக்குச் சென்றார்.

நல்லோரைக் காண்பதும் நன்று

சதானந்தர் கூறிய விஸ்வாமித்ர முனிவரின் சரித்திரத்தை விரிவாகக் கேட்டோம். இக்காலத்தில் இதிஹாஸக் கதைகளைக் கூறுவது ஒரு தொழிலாகி விட்டது. தொழில் பொருளீட்ட உதவுகிறது. எனவே ஸத் விஷயங்களைக் கூறுபவற்கு வேண்டிய தகுதிகள் மறைந்து விட்டன. கேட்போரை மகிழ்விப்பதற்கு வேண்டிய சொல்லாற்றலும், சிரிக்க வைக்கும் கற்பனைக் கதைகளும், பரிஹாஸ வார்த்தைகளும் சொற்பொழிவின் நேரத்தில் பெரும் பகுதியை ஆட்கொண்டு விடுகின்றன.

இங்கோ சொற்பொழிவாளர் சதானந்தர், தவமுனிவர், குல முறையில் தக்கோரிடம் தத்வங்களைப் பயின்றவர், ஸதாசார சீலர். அவர் கூறிய கதையோ ஒரு முனிவரைப் பற்றியது. ஆன்ம நூலறிவினால் நல்லொழுக்கத்தினால், தவத்தினால், விடாமுயற்சியால், மறைகள் பகரும் வேள்வியினால், மறை களை முறைப்படி ஓதுவதினால், பகவத் பக்தியினால் முடியாதது எனக் கருதியதனைத்தையும் செய்து காட்டிய தவயோகியைப் பற்றியது. தன் தாயின் அவல நிலையைப் போக்கிய கர்ம வீரருடையது.

விஸ்வாமித்ரரின் கதையை நன்றி காட்டும் முகமாக சதானந்தர் உரைத்தார். ஆசார்யனின் சரித்திரத்தைக் கேட்டுத் தியானிப்பதன் மூலம் சக்ரவர்த்தித் திருமகனுக்கு நன்மைகள் பல விளையட்டுமென உரைத்தார். ஜனக மஹாராஜனுக்கும் மங்களங்கள் பல உண்டாகட்டுமென்றும் உரைத்தார். நல்லோரைப் பற்றிக் கேட்பது மட்டுமன்றி ஸாதுக்களைப் பார்ப்பதும் அனைத்து மங்களங்களை விளைவிக்கு மென்பர். இங்கு ஸாது தர்சனம் இராமனுக்கும், அவன் தம்பியர்க்கும் திருமணத்தையும், ஜனகருக்கு பெண்களின் திருமணங்களையும் நடத்தி வைத்தது. ஸாது தர்சனத்தின் பெருமையை நாரதரால் அறியலாம்.

ஒரு ஸமயம் நாரத முனிவர் ஸ்ரீமந்நாராயணனை அணுகி வணங்கிக் கேட்டார்: ''ஸாதுக்களை தர்சிப்பதால் யாது பயன்?'' என்று. உடனே பகவான் பூலோகத்திலுள்ள ஒரு எருக்கஞ் செடியைக் காட்டி ''அங்கு செல், அதன் வேரில் ஒரு புழு துடித்துக் கொண்டிருக்கும். அதை அணுகிக் கேட்பீர்'' என்றார். அங்கு போய்க் கேட்டதும் அந்தப் புழு நாரதரைக் கண்ணெடுத்துப் பார்த்தது.| மறுகணம் மாண்டு விட்டது. உடனே பெருமானிடம் வந்து தகவலைக் கூறினார். அவர் ஒரு ஆலமரத்தைக் காட்டி ''அதன் பொந்தில் ஒரு கிளிக் குஞ்சு இருக்கும். அதைக் கேளும்'' என்றார். அந்த கிளிக்குஞ்சும் நாரதரைப் பார்த்ததும் பிராணனை விட்டது. மீண்டும் வந்த பொழுது பரமன் ஒரு ஜமீன்தாரின் வீட்டைக் காட்டி, ''பசு ஒன்று கன்றை ஈன்று கொண்டிருக்

கிறது. அக்கன்றைக் கேட்பீர்'' என்றார். அதுவும் உயிர் நீத்தால் என்ன செய்வது என அச்சத்துடன் ஜமீன்தாரை அணுகினார். அவர் உபசரிப்பை ஏற்று அவர் வழிகாட்ட மாட்டுக் கொட்டிலுக்குச் சென்றார். அங்கு நல்ல விலை மதிப்புள்ள உயர்ரக கன்று கட்டியிருந்தது. அதைப் பார்த்து, ''ஏ, கன்றே! ஸாது தர்சனத்தின் பலன் என்ன'' என்றார். அது முனிவரை உற்று நோக்கியதும் கீழே விழுந்து இறந்தது. ஒருவாறாக ஆறுதல் கூறிச் சமாளித்துக் கொண்டு ஜமீன்தாரிடம் விடைபெற்று நாராயணனிடம் வந்தார்.

''இன்றிலிருந்து பத்தாவது மாதத்தில் திருவோணத் திருநாளில் காசிராஜனுக்கு ஒரு ஆண் மகவு பிறக்கப்போகிறது. அது பிறக்கும் பொழுது பூமியில் படாமல் ஒரு தங்கத் தாம்பாளத்தில் ஏந்தி வரச் செய்து அதைக்கேளும், அது சொல்லும்'' என்றார். அதன் படி பயந்து கொண்டே காசி ராஜனின் அரண்மனைக்கு வந்தார். வரும்பொழுதே குழந்தை மரிக்காமலிருக்கப் பெருமாளைப் பிரார்த்தித்துக் கொண்டும், ம்ருத்யுஞ்ஜய மந்த்ரங்களை ஜபித்துக் கொண்டும் வந்தார். அரசன் நாரதரை வரவேற்று உபசரிக்க, நாளை ஆண் மகன் பிறக்கப் போவதைக் கேட்டு உள்ளம் மகிழ்ந்தான். மறுநாள் நாரதர் கூறியபடி திருவோணத்தில் தன் மனைவி பிரஸவிக்க, அக்குழந்தையைத் தங்கத் தாம்பாளத்தில் ஏந்தி நாரதரிடம் ஸமர்ப்பிக்கக் குழந்தையைப் பார்த்து ''ஸாது தர்சனத்தின் பயன் யாது?'' என்று வினவ மகவு சிரித்துக் கொண்டே பேசத் தொடங்கியது. எங்கேயாவது பிறந்த குழந்தை பேசுமா? பேசியதால் எல்லோருக்கும் ஒரே வியப்பு!

குழந்தை: ''முனிவரே! வணக்கம் பல. நான் எருக்கம் செடியின் வேரில் புழுத்துப் புழுவாய்த் துடித்தேன். அப்பொழுது எனது பாக்ய வசத்தால் தங்களுடைய தர்சனம் கிடைத்தது. அதன் பயனாய் கிளிப் பிறவியைப் பெற்றேன். அப்பிறவியிலும் தங்களைக் கண்டதன் பயனால், நல்லோர் போற்றும் பசுவாய்ப் பிறந்தேன். அப்பொழுது ஜமீன்தாரிடம் அனுமதி பெற்று மாட்டுக் கொட்டிலுக்குத் தாங்கள் எழுந்தருள, பரம பாகவதோத்தம ரான தங்களுடைய தர்சனத்தினால் இன்று காசி ராஜனின் திருமகனாகப் பிறக்கும் பெரும்பேற்றைப் பெற்றேன். இதைவிட வேறு எவ்வாறு ஸாது தர்சனத்தின் மஹிமையை விளக்குவது?'' என்றது.

இப்பெருமையை ஸ்ரீ பாகவதம் மூன்று இடங்களில்

नहि अम्मयानि तीर्थानि न देवाः मृच्छिलामयाः ।
ते पुनन्त्युरुकालेन दर्शनादेव साधवः ॥

நஹி அம்மயானி தீர்த்தானி ந தேவா: ம்ரச்சிவாமயா: ।
தே புனந்தி உருகாலேன தர்சனாதேவ ஸாதவ: ॥

ஸ்ரீமத் பாகவதம்

ஸம்ஸாரத்தில் மூழ்கித் துன்புறும் நாம் கங்கை, காவிரி, போன்ற புண்ய நதிகளில் நீராடினால் நம் பாபங்கள் தொலைந்து நன்மைகள் விளையும். இதே போன்று திருக்கோவில்களில் ஸேவை ஸாதிக்கும் மண், சிலை, லோஹங்களாலாகியவைகளும், திருப்பிரதிஷ்டை ஆனவைகளுமான அர்ச்சாமூர்த்திகளான ராம க்ருஷ்ணாதி தேவர்களும் தன்மை ஸேவிக்கின்றவர்களின் பாபங்களைப் போக்கி நன்மைகளை நல்குகின்றனர். புண்யநதி ஸ்நானமும், பகவத் ஸேவையும் பாபங்களைப் போக்குவது. உண்மை. ஆனால் இவை காலக்ரமத்தில் மெதுவாகத்தான் பாபங்களைப் போக்கும். எம்பெருமானை இதயத்தில் தாங்கும் தபோதனர்களான ஸாதுக்கள் தம் கண்களால் பார்ப்பது, உடனே பாபங்களைப் போக்கி ஸர்வ மங்களங்களையும் அளிக்கும் என்கிறது. எனவே விச்வாமித்ர ஸாதுவின் பெருமையை சதானந்த பாத்திரத்தின் வாயிலாக உரிய இடத்தில் வால்மீகி விளக்கினார் எனலாம்.

மருங்கிலா நங்கை

ततः प्रभाते विमले कृत कर्मा नराधिपः ।
विश्वामित्रं महात्मानं आ जुहाव सराघवम् ॥

தத: ப்ரபாதே விமலே க்ருத கர்மா நராதிப: ।
விச்வாமித்ரம் மஹாத்மானம் ஆஜுஹாவ ஸராகவம் ॥

வா.ரா. பால. - 66

மறுநாள் விடியற்காலை ஜனக மஹாராஜா எழுந்து ஸந்தியா வந்தனாதி நித்ய கர்மாக்களைச் செய்த பிறகு தக்கவரை அனுப்பி விஸ்வாமித்ரரையும், ராம லக்ஷ்மணர்களையும் அரண்மனைக்கு அழைத்து வரும்படி சொன்னார். முனிவரும் ராஜகுமாரர்களை அழைத்துக் கொண்டு மிதிலை நகரினுள் வீதிகளின் வழியாகச் சென்றார். வீதிகளில் அடுக்குமாடிக் கட்டடங்களைப் பார்த்துக் கொண்டே மூவரும் சென்றனர். வீடுகள் அனைத்தும் ஒரே அளவும் உயரமும் கொண்டனவாகவும் கண்களைக் கவர்வனவாகவும் இருப்பதைப் பார்த்துக் கொண்டே சென்றனர்.

நிரம்பிய மாடத்து உம்பர் நிரை மணிக் கொடிகள் எல்லாம்
தரம் பிறர் இன்மை உன்னித் தருமமே தூது செல்ல
வரம்பில் பேரழகினாளை மணஞ் செய்வான் வருகின்றான் என்று
அரம்பையர் விசும்பின் ஆடும் ஆடலின் ஆடக்கண்டார்.

க.ரா. பால. - மிதிலை

உருவத்திலும், குலத்திலும், குணத்திலும், வயதிலும், நடத்தையிலும், கல்வியிலும் ஒத்து சிறப்புடைய வதுவும் வரனும் திருமணம் செய்து கொள்வதுதான் நேர்மையும் அறமும் ஆகும். எவ்வளவோ முயன்றும் தக்க வரன் கிடைக்கவில்லை ஸீதைக்கு. ஜனகர் கர்மயோகி. இவர் பெண்ணுக்கு நாமே வரன் தேடிக் கொடுப்போம் என தர்ம தேவதையே முனைந்து மைதிலிக்கு, அயோத்தி தாசரதி தான் தக்கவன் என முடிவுக்கு வந்ததோடு, தானே தூது சென்று அழைத்தும் வந்ததாம். இங்கு தர்மமே உருவெடுத்தாற் போன்ற, விச்வாமித்ரர் அழைத்து வந்ததையும் நாம் கருத்தில் கொள்ளலாம். முன்பு மிதிலை நகரே தனது செழுமணிக் கொடியைக் கொண்டு ''ஒல்லைவா ஒல்லைவா'' (விரைந்து வருவீர்) என அழைத்தது, இப்பொழுதோ ராமனின் நகர ப்ரவேசத்தைப் பார்த்த மாடமாளிகைகள் தம்மீது பறக்கும் கொடிகளாகிற கைகளால் ''ஸீதை மணாளனே வருக! வருக!'' என வரவேற்பு உரைக்கின்றனவாம். இக்கொடிகளின் அசைவுகள், ராமன் வருவதைக்

கண்டு மகிழ்ந்த அரம்பை முதலிய தேவமாதர்கள் வானவீதியிலே ஆனந்த நடனமாடுவதை ஒத்திருக்கின்றனவாம். தேவர்கள் நடனத்தையும், வீட்டின் மேல் பட்டொளி வீசிப் பறக்கும் கொடிகளின் நடனத்தையும் கண்டு களித்த வண்ணம் வீதிகளிலே நடந்து சென்றனராம் மூவரும். பெண்வீட்டார் மாப்பிள்ளையைத் தேடிக் கஷ்டப்படாமல் மணமகனே வலுவில் வருகின்றான் என ஸீதையின் மணம் நிகழ இருப்பதை முன்னரே தொனிக்கச் செய்கிறான் மாகவி.

பொன்னின் சோதி போதின் இன்நாற்றம் பொலிவேபோல்
தென்உண் தேனின் தீஞ்சுவை செஞ்சொல் கவிஇன்பம்
கன்னி மாடத்து உம்பரின் மாடே களிபேடோடு
அன்னம் ஆடும் முன் துறை கண்டு அங்கு அயல் நின்றார்.

க.ரா.பால. - மிதிலை

போதின்: மலரினது, உம்பரின்: மேற்பகுதியில், களிப்போடு: மகிழ்ந்த பெட்டை, முன்துறை: முன்புறத்தில். நாற்றம்: நறுமணம்.

மிதிலை நகரின் வீதிகளின் வழியே மூவரும் செல்கின்றனர். போகும் பொழுது பற்பல காட்சிகளைப் பார்த்துக் கொண்டே செல்கின்றனர். அரண்மனை நெருங்கிற்று. கன்னிமாடம் (அந்தப்புரம்) மேலே முகப்பில் அன்னங்கள் பெண் அன்னங்களோடு கூடி விளையாடிக் கொண்டிருப்பது இவர்களின் கண்களைக் கவர்ந்தன. அதன் கீழே மாடியின் வெளிப்புறத்தில் (வராந்தாவில்) பெண்கள் பலர் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் உரையாடிக் கொண்டிருப்பதும் கண்ணில் படவே சற்றுத் தயங்கி அங்கே நின்றனர். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஸீதையை அறிமுகப்படுத்துகிறார் கம்பர். ஸீதையைப் பற்றிப் பொன் எனும் மங்கல மொழியால் தொடங்கி னார். கன்னி மாடத்தில் பெண்களிடையே ஸீதையும் நிற்கிறாள். பிராட்டியின் திருமேனி மிக அழகியது. பொன்னின் சோதி போன்று செந்நிறமானது.

பேயாழ்வார் முதன்முதலாக எம்பெருமானைக் கண்டு மங்களா சாஸனம் பண்ணும் பொழுது ''திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன்'' பரமனின் கார்மேனியும் பிராட்டியின் சிவந்த திருமேனித் தொடர்பால் பொன்னிறமாயிற்று என்பார். இதை மனதிற் கொண்டு கம்பரும் ''பொன்னின் சோதி'' என்றார். பத்மினி ஜாதி ஸ்த்ரீகள் அருகில் இருந்தால் சம்பகம், தாமரை மலர்களின் நறுமணம் வீசுமாம். பிராட்டியைப் பற்றிக் கேட்பானேன்! போதின் நாற்றமும், மலர்களின் மலர்ச்சியும், பொலி கிறதாம். ஸீதை தோழிகளோடு பேசுவது காதில் விழுகிறது. பேச்சில் தேனின் இனிய தீஞ்சுவையும், செஞ்சொற் கவி போன்று காதுக்கும் மனதிற்கும் இனிமையும் பொலிகின்றனவாம். ஆக பொன்னின் ஒளி கண்களுக்கும், மலர் மணம் மூக்கிற்கும், தேன் சுவை நாக்கிற்கும், கவியின்பம் மனதிற்கும் இன்பத்தைத் தருவன போல், இராமபிரானின் ஐம்புலன்களுக்கும் ஆறு அறிவுக்கும் பேரின்ப (பரமானந்த) நிலையாக ஸீதை கன்னி மாடத்தில்

பெண்ணமுதாகத் தோன்றுகிறாள். இப்பாட்டு ஸீதையின் அவயவ ஸமுதாய சோபையையும், திருமேனியின் திவ்ய ஸௌந்தர்யத்தையும், இனிய குண நலன்களையும் அறிமுகப்படுத்துவது சுவைக்கத்தக்கது. கவியின் இன்சுவை நம் மனதையும் அறிவையும் கொள்ளை கொள்வது போல் உப்பரிகையி லுள்ள ஸீதை ராமனைக் கவர்ந்தாள் போலும்.

உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக்கரம் வைக்கும்
கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரை காணார்
'இமையா நாட்டம் பெற்றிலம்' என்றார்; இரு கண்ணால்
அமையாது என்றார்; அந்தர வானத்தவர் எல்லாம்.

க.ரா. பால. - மிதிலை

கமை: பொறுமை, நாட்டம்: கண்கள்

பிராட்டியின் திருமேனி அழகை முற்றிலும் நாம் கண்டோம் எனப் பெருமைப்பட விரும்புகின்றனர் பலர். பிராட்டியோ பொறுமை (க்ஷமா) முதலிய நற்குண நற்பண்புகளுக்கு நிலைக்களமானவர், பெருமையையோ ஆடம்பரத்தையோ விரும்பாதவள், எனவே அவளுடைய திருமேனி அழகை முற்றிலும் காண வாய்ப்பு கிடைப்பதில்லை போலும், எனினும் பிராட்டியின் அழகின் எல்லையைக் கண்டு உள்ளபடி தியானித்துத் தொழ வேண்டுமென பக்தர்கள் விழைகிறார்கள். ''நமக்கு தேவர்களைப் போன்று இமைக்காத கண்கள் இல்லையே! சரியான நேரத்தில் கண்கள் இமைத்து அழகை முற்றிலும் காண முடியாது தடுத்து விடுகின்றனவே'' என்ற மனக்குறை மனிதர்களுக்கு.

வானத்தில் வானவர்கள் சூழ்ந்து வந்து ஸீதையின் அழகின் எல்லையைக் காணப் போட்டியிடுகின்றனர். ஆனால் அவர்களாலும் முடிய வில்லையாம். ''மனிதர்களைப் போலன்றி நமக்கோ கண்கள் இமைப்ப தில்லை. தடையின்றி எப்பொழுதும் பார்க்கிறோம்; ஆயினும் காணமுடிவ தில்லை. நமக்குள்ள இரண்டு கண்கள் போதவில்லை. இந்திரனைப் போன்று பல கண்கள் இருப்பின் அழகின் எல்லையைக் காணலாம்'' என குறைப் படுகின்றனர். பார்வதியைப் போன்ற மங்கையர்களோ தலைமேல் கைகளை வைத்துக் கூப்பி அஞ்ஜலி செய்யத்தான் பக்தர்கட்கு முடியுமே ஒழிய பிராட்டியின் அழகின் எல்லையை யாராலும் காணமுடியாது என்கின்றனர். மேலும்,

தந்நேர் இல்லா மங்கையர் செங்கைத் தளிர் மானே!
அன்னே! தேனே! ஆர் அமிழ்தே! என்று அடிபோற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறை சாரப்
பொன்னே சூழும் பூவின் ஒதுங்கிப் பொலிகின்றாள்.

க.ரா. பால. - மிதிலை

உயரே மாடியில் நிகழ்வதும், இவர்களை சற்று நிற்கச் செய்கிறது. உவமை கூறமுடியாதபடி கட்டழகையுடைய பல தோழிமார்கள் ஸீதை நடந்து செல்ல வேண்டிய இடங்களில் பிராட்டியின் மெத்தென்ன திருவடி கட்கு என்ன தீங்கு நேருமோ என அஞ்சி நறுமண மலர்களை முன்னே நெருக்கமாக தூவிக்கொண்டே செல்கின்றனர். அதோடு ''தளிர் போன்ற சிவந்த திருக்கைகளை உடையவளே! பெண் மானே! தாயே! தேனே! (தேன் போன்று இனிமை மிக்கவளே) பெறுதற்குரிய அமிழ்தம் போன்றவளே! அடிபோற்றி'' எனக் கூறிய வண்ணம் அழைத்துச் செல்கின்றனர். அப் பூக்களின் மீது மெல்ல நடந்து செல்லும் ஸீதை, தாமரை மலரில் வாழும் மஹாலக்ஷ்மி போன்று பொலிகின்றாள்.

இழைகளும் குழைகளும் இன்ன முன்னமே
மழை பொரு கண் இணை மடந்தை மாரோடும்
பழகிய எனினும் இப்பாவை தோன்றலால்
அழகெனும் அணியும் ஓர் அழகு பெற்றவே.

க.ரா. பால. - மிதிலை

இழைகளும்: உடல் மீதணிலயும் ஆபரணங்களும், குழைகளும்: காதணி களும், மழை: மேகம்.

ஸீதையுடன் இருக்கும் தோழிமார்கள் அனைவரும் நல்ல அழகி களாகத் தோற்றம் அளிக்கின்றனர். அவர்கள் நீருண்ட மேகம் போன்று கரிய கண் விழிகளையும், குளிர்ந்த கூரிய பார்வைகளையும் உடையவர்கள், இவர்கள் மேனியில் நிறைய அணிகளைப் பூட்டிக் கொண்டிருப்பதால் பொலிவுடன் விளங்குபவர்கள். ''மண்ணை பூசிப்பார், பெண்ணை பூட்டிப் பார்'' எனப் பழையவர் மொழிவதும் உண்டு. தன்னை அணிந்தவர்கட்கு அழகூட்டுவதால் ஆபரணங்களை அணிகள் என்கிறோம். எனவே அணிகள் ஸீதையின் தோழிமார்கட்கு அழகைத் தருகின்றன. ஆனால் பிராட்டிக்கோ நகைகள் அழகைத் தருவதில்லை. ஸீதை தன் திருமேனியில் இவைகளை அணிவதால் ஆபரணங்கள் அழகைப் பெறுகின்றனவாம். ஆக ஆபரணங் களுக்கும் அழகு கொடுக்கும் ஸீதையின் பேரழகைச் சக்ரவர்த்தித் திருமகன் கீழேயிருந்தபடியே கண்டுகளித்தபடி;

எண்ணரு நலத்தினாள் இளைய(ள்) நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை, கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.

பருகிய நோக்கு எனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாள் கண் நங்கையும்

இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்
மருங்கு இலா நங்கையும் வசை இல் ஐயனும்
ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினார்
கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ.

க.ரா. பால. - மிதிலை

மருங்கு: இடை, வசை: குற்றம்.

ஜகன்மாதாவான ஸீதையின் அழகு (ஸௌந்தர்யம்) ஒப்புயர்வு அற்றது, எழுத்தால் வடிக்கவோ, மனதால் நினைக்கவோ, வாயால் சொல்லவோ, கண்களால் வேறு இடத்தில் காணவோ முடியாதது. மேலே அழகெலாம் ஒருங்கே திரண்ட அழகொளியின் வட்டம். கீழே ப்ரஹ்மமே அவதரித்த ராமனின் ப்ரஹ்ம தேஜஸ்ஸின் ஒளிவட்டம். ஓரிடத்தில் ஒளிவீசினால் அதைப் பார்ப்பது இயற்கைதானே! இருவரும் முதலில் மற்றவரோடு சேர்ந்து பொதுவாகப் பார்த்துக் கொண்டனர். இப்பொழுதோ கண்களோடு இருவர் மனமும் சேர்ந்து கொண்டன. இருவர் கண்களும் ஒன்றை மற்றொன்று கவ்வி உண்ணவும், பருகவும் தொடங்கிவிட்டன. இது தனிப்பார்வை, காதல் பார்வை, இருவர் மனமும் தத்தம் இதயங்களில் நிலைபெறாது பெயர்ந்து ஒன்று மற்றொன்றோடு கூடின. திருமணத்திற்குரிய பொருத்தங்களுள் மனப்பொருத்தமே சீரியது என்பர் ஆபஸ்தம்பர். இங்கு சுதந்திரனான அண்ணல் ராமன் நோக்கினான் அதையடுத்து அபலையான பரதந்த்ரையான ஸீதையும் நோக்கினாள். பிரானுடைய கடாக்ஷம் பிராட்டிக்கும், பிராட்டியினுடைய கடாக்ஷம் பிரானுக்கும் ஏற்பட்டது. பிராட்டியின் பார்வை ராவண வதம் வரை ராமனுக்கு வலிவை அளித்து அவதார கார்யத்தை முடித்து வைக்கப் போகிறது. பிராட்டியின் கடாக்ஷம் இருந்தால்தான் மங்களங்கள் நம்மை நாடி வரும்.

ஒரு க்ருஹஸ்தர் தினந்தோறும் கீதா பாராயணம் பண்ணிவிட்டுத்தான் சாப்பிடுவார். 4 நாட்களாக வீட்டில் அரிசி இல்லை. தர்மபத்னீ குழந்தைகளின் பசிக் கொடுமையைப் பார்க்க மனம் பொறாது புருஷனிடம் முறையிட்டாள், தினந்தோறும்

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

அனன்யா: சிந்தயந்த: மாம் யே ஜனா: பர்யுபாஸதே ।
தேஷாம் நித்யா பியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாமி அஹம் ॥

பகவத்கீதை, 9 - 22

''தின்னும் சோறும், பருகும் நீரும், மென்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணனாகக் கருதி வாழ்வதையே பயனாகக் கொண்டு வேறு

பயனை நாடாதவர்களாய், திருக்கல்யாண குணங்களோடும், உபய விபூதி களோடும் கூடிய கண்ணபிரானை எவர்கள் எப்பொழுதும் தியானம் செய்கிறார்களோ, அவர்களுடைய யோகக்ஷேமத்தை அதாவது கிடைத்தற் கரியதைப் பெறுவதையும், பெற்றதைப் பாதுகாப்பதையும் யானே செய் கிறேன் என்று தினந்தோறும் பாராயணம் செய்கிறீரே! நான்கு நாட்களாக குழந்தைகள் பட்டினி, சுவடியைக் கட்டிவைத்துவிட்டு, அருகிலுள்ள புதிய கிராமங்களுக்குச் சென்றால், புதியவர் என்று அக்கிராமத்தார் உஞ்ச விருத்தியில் நிறைய அரிசி போடுவர்'' என்றாள். பத்னி சொல்லச் சொல்ல அவருக்கும் பாராயணத்தில் சிறிது அசிரத்தை தோன்றியது. ரேழியில் படுத்திருந்தவர் விளக்குப் பிறையில் கைவைத்தார். விரலில் பட்ட கரி மையை கீதையிலுள்ள ''யோக க்ஷேமம் வஹாமிஅஹம்'' என்பதின் மேல் தடவிச் சுவடியைக் கட்டி வைத்து விட்டார்.

அன்று இரவு பிராட்டிக்கும் பகவானுக்கும் வாக்குவாதம்.

பிராட்டி: ''அந்த பிராம்மணனை நீர் ஏன் கவனிக்கவில்லை? எவ்வளவு கஷ்டப்படுகிறான்?''

பெருமாள்: ''அவன் கர்ம பயனை அனுபவித்துக் கழிக்க இன்னும் ஒரு நாள் பட்டினி கிடக்க வேண்டும். அதன் பிறகு அனுக்ரஹிக்கலாம் என எண்ணினேன். அதோடு உன் கடாக்ஷம் அவன் மீது விழாதவரை நான் சட்டப்படித்தானே செய்ய முடியும்? இப்பொழுதோ உன் கடாக்ஷத்தைப் பெற்றுவிட்டான். இன்றே அவனை ஆசீர்வதிப்போம்'' என்றார்.

यस्यां यस्यां दिशि विहरते देवि दृष्टिस्त्वदीया ।
तस्यां तस्या महमहमिकां तन्वते सम्पदोघाः ॥

யஸ்யாம் யஸ்யாம் திஶி விஹரதே தேவி: த்ருஷ்டி: த்வதீயா
தஸ்யாம் தஸ்யாம் அஹமஹமிகாம் தன்வதே ஸம்பதோகா: ॥

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீஸ்துதி - 15

''பிராட்டியின் கடாக்ஷம் எவரெவர் மீது விழுகிறதோ அவர்கட் கெல்லாம் செல்வங்கள், நான் முன்னே, நான் முன்னே என்று போட்டி யிட்டுக் கொண்டு வந்து குவியும்' என்பது ஸ்வாமி தேசிகனின் திருவாக்கு.

அன்று இரவு பிராஹ்மணன் பட்டினியினால் துயரம் தாளாது தூங்குகிறான். யாரோ ஒரு சிறுவன் வாயிற் கதவைத் தட்டுகிறான். அவன் மனைவி கதவைத் திறக்க, அச்சிறுவன், ''உன் புருஷனின் நண்பர் இவற்றை அனுப்பினார். இதை உள்ளே வைத்து விட்டுப் போகிறேன்'' என்ற கூறி நான்கு வருடங்களுக்குத் தேவையான 2 வண்டி அரிசி, 4 மூட்டை பருப்பு, 10 டின் எண்ணெய், நெய் முதலியவற்றை வீட்டினுள் வைத்துவிட்டுச் சிறுவன் விடைபெற்றான். மனைவிக்கு ஸந்தோஷம் தாங்கவில்லை. புரட்டிப் புரட்டிப் புருஷனை எழுப்பினாள். எழுந்து செய்தியைக் கேளுங்கள். ''மாட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு ஒரு சிறுவன் வந்தான். நம் அகத்துக்

கதவைத் தட்டினான். திறந்ததும் நம் தெருவின் பெயர், மாமனார் பெயர், உங்கள் பெயர், வீட்டு எண் எல்லாம் சொல்லி, இந்த வீடுதானே என்று கேட்டு ஆமாம் என்று சொன்னதும் சாமான்களை இறக்கி வைத்துவிட்டு, இந்தப் பையையும் கொடுத்துவிட்டுப் போனான்'' என்று கூறினாள்.

கணவன்: ''அவர் யார், என்ன பெயர், எந்த ஊர் என்று சரியாக விசாரிக்கவில்லையா?''

மனைவி: ''எல்லாம் விசாரித்தேன். அவர் பெயர் பார்த்தஸாரதி, ஊர் திருவல்லிக்கேணி, நான்கு நாள் முன்பே இவற்றை அனுப்பினாராம். வழியில் ஆற்று வெள்ளத்தினால் உடனே வரமுடியவில்லையாம். அது போகட்டும், உள்ளே வந்து சாமான்களைப் பாருங்கள்'' என்றாள். பார்த்த புருஷன் கண்களில் நீர்ததும்ப ''என்னே! நின் கருணை'' எனப் பரமனை வியந்து துதித்துக்கொண்டே, ''அவன் எப்படி இருந்தான்? என்ன அடையாளம்'' என விசாரித்தார்.

''அடையாளம் என்ன? சிறு பையன். முகத்தில் நல்ல களை, கையில் வண்டி ஓட்டிய சாட்டை, தலையில் முண்டாசு, வாயில் கரியைப் பூசிக் கொண்டிருந்தான்'' என்று மனைவி கூறிக் கொண்டிருக்கும்போதே ''அப்படியா!'' என்றவாறு அவசரமாக ஓடி ஓலைச்சுவடியைப் பிரித்துப் பார்த்தார். தான் பூசிய கரி அதில் இல்லை. ''என்னப்பா! உன் வாயிலா கரியைப் பூசினேன்? என்னை மன்னிப்பாயாக!'' என்று வேண்டி பார்த்த ஸாரதியின் கருணையை நினைத்து ஆனந்தக் கண்ணீர் பெருக மனமுருகினார்.

இக்கதையினின்றும் அவளுடைய (ஸீதையினுடைய) நோக்கு ராமனுக்கு அனைத்தையும் அளிக்கும் என்பது கவிஞர் கருத்துபோலும்.

ஸீதையை ராமனும், ராமனை ஸீதையும் நேராகப் பார்த்துக் கொண்டனர். உடனே அவ்விருவர்களுடைய மனமும் இப்பார்வையையே பாசமாக—கயிறாகப் பயன்படுத்திக் கொண்டு, கட்டி இழுத்து இருவரையும் தான் இருக்கும் இடத்திற்குள் கொணர்ந்து வைத்துக் கொண்டன. இருவரும் வீரர்கள். அண்ணலோ புருஷோத்தமன், கட்டமைப்புடன் கூடிய சீரிய வில்லைக் கையிலேந்தியவன். அவளோ (நங்கை ஸீதையோ) மகளிரிற் சிறந்தவள். கூரிய பார்வையாம் வாளை ஏந்தியவள். இவர்களுடைய மனஸ்ஸுக்களுள் ஒன்று மற்றொன்றைப் பார்வையாம் பாசக்கயிற்றால் கட்டி இழுக்கும்போது, வில்லம்பையும் கூரிய வாளையும் ஏந்திய இவர்கள் போரிட்டுக் கயிற்றை அறுத்துத் தடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறின்றிக் கைதியாகி ஒருவர் மற்றொருவர் இதயச் சிறையில் அடைபட்டனர். விந்தையோ விந்தை! புறப் போரில் கைதியாவது தோல்வி, அகப்போரில் கைதியாவது வெற்றியல்லவா! மேலும் இவ்விருவருள் வெற்றியும் தோல்வியும் இல்லை. ஏன்? ஸமமான ஜோடி, கண்ணொடு கண் இணைந்தன.

கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின்
வாய்ச்சொற்கள் என்ன பயனுமில. குறள் - 1100

கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணேயுள. குறள் - 1101

இவ்விரு பாக்களும் இங்கு நோக்கத்தக்கன. காதல் உள்ளே நெஞ்சைக் கவ்வுகிறது. விழிகளோ வெளியே கொஞ்சிக் கொஞ்சிக் கவ்வுகின்றன. பருகிய நோக்கு என்றார். கடுந்தாகம் உடையவன் தண்ணீரைக் கண்டவுடன் மொண்டு குடிப்பது போல் பெருங்காதல் தாகம் மண்டிப் பிரானும் பிராட்டியும் ஒருவருக்கொருவர் (கண்டு) பருகிக் களித்தனராம்.

ருக்மிணீ ''ஸ்ருத்வா குணான் புவனஸுந்தர'' என்றபடி கண்ணன் குணங்களைக் கேட்டதும் காதல் கொண்டாள். இவர்களோ கண்டதும் காதல் கொண்டனர். இதைக் கேட்ட நம்மவர்களும் இதைப் பின்பற்றி விட்டால் நாட்டின் நிலை என்ன ஆகுமோ என அஞ்சினர் கம்பர். ஏன்? ராமனோ ப்ரஹ்மசாரீ. குருகுல வாஸம் செய்து கொண்டு முனிவரைப் பின் தொடர்ந்து சீடனாக வருகிறான். ஸீதையோ கன்னித்தன்மையைக் காத்துக் காவல் மாடத்தில் இருக்கிறாள். இன்னார், இனியர் என்று இருவரும் இனம் தெரியாதவர்கள். இங்கு பெண்ணைக் கொடுப்பாருமில்லை, வாங்கு எனச் சொல்வாருமில்லை.

தெரு வழியே சென்றவனைக் கண்டு ஆசை கொண்டாள். தெருவில் செல்பவன் மாடத்திலிருப்பவளிடம் உயிரைப் பறிகொடுக்கிறான். இருவரும் உள்ளம் குலைந்து உருகுகின்றனர். கண்ட இடத்தில் காதல், கண்டதும் காதல், அதுவும் நடுத்தெருவில் காதல், கள்ளக்காதல், இது கொள்ளத்தக்கதா? எள்ளி நகைக்கத் தக்கதல்லவா? இவர்களின் உயரிய குடும்ப நிலைக்கு ஒவ்வுமா? இது பெரும் பழியன்றோ! ''இவ்வாறு நான் வர்ணனை செய்வது நம் மக்கள் ஸமுதாயத்தையே, உருக்குலைத்து விடுமே'' என எண்ணிய கம்பர், இவர்கள் புது மாப்பிள்ளை யும் இல்லை, புது மணப்பெண்ணுமில்லை. பிரிந்தவர்கள் கூடுகின்றார்கள் என்கிறார் ''மருங்கிலா நங்கையும்'' என்று.

நுண்ணிய இடுப்பையுடைய ஸீதையும் எவ்வித குற்றமும் இல்லாத ராமனும் அன்பின் மிகுதியால் ஒருவரையொருவர் பார்த்தமாத்திரத்தில் இரண்டு உடம்புகட்கு ஒரு உயிர் (ஆத்மா) என்னும்படி ஒற்றுமைப்பட்டனர். திருப்பாற்கடலில் அனந்த சயனத்தின் மீது கூடியிருந்த தம்பதிகள் பிரிந்து போய் இப்பொழுது கூடினார்கள் என்றால், அவர்களுடைய அன்பை, காதலை எத்தகையது என்று நாம் பேச வேண்டுமோ? பேசத்தான் முடியுமோ? என்றார்.

இங்கு கவிஞன் ஸீதையை அழகுடையவள், குணமுடையவள், அணிகலன் உடையவள் என்று சொல்ல வேண்டும். உலகில் மணப்

பெண்ணை அறிமுகப்படுத்தும்போது நிறைய அணிகளைப் பூட்டியே அழைத்து வருவர். ஆனால் இங்கு ஸீதையை ''நுண்ணிடையாள்'' எனச் சொல்ல வேண்டியிருக்க அதை மாற்றி மருங்கிலா நங்கை இடையில்லாதவள் என்றான். அதாவது ஸீதையிடம் இல்லாதது இடை ஒன்றுதான். மற்றவை அனைத்தும் உள. இது இடையின் நுண்மையை உணர்த்தி பெண்களுக்குரிய அழகின் பெருக்கை எடுத்துக் காட்டுகிறது.

இதே போன்று ராமனிடமும் ஒன்றும் இல்லை எனக் கூற முயன்று, அவனிடம் எது இல்லை என்று தேடுகிறார் கம்பர். சிலருக்குக் கல்வி இருக்கும், செல்வம் இருக்காது. இவ்விரண்டும் இருப்பின் அழகு இருக்காது. மூன்றும் இருப்பின் வீரம் இராது. கல்வி, செல்வம், அழகு, வீரம் நான்கும் இருப்பினும் கருணை இராது. இம்மாதிரி ஏதாவதொரு குறை இருக்கத்தான் செய்யும். ராமனிடம் செல்வம் இல்லை எனக் கூறமுடியாது. சக்ரவர்த்தித் திருமகன் கல்வியிலோ வஸிஷ்டரிடமும், கௌசிகரிடமும் எல்லாம் பயின்றவன். அழகிலோ ஆடவரும் பெண்மையை அவாவும் தோளினன்.

மைதில நகர ஸுலோசனாலோசன சகோர சந்த்ரன், ஸாக்ஷாந் மந்மத மன்மதன், வீரத்திலோ அஸஹாய சூரன், அனபாய ஸாஹஸன், விளை யாட்டாக கௌசிகர் வேள்வியைக் காத்தவன், எளிதாக தாடகையையும் அவள் மகனையும் கொன்றவன். அருளிலோ தயாநிதி, கருணாகாகுத்தன், கருணையங்கோயில், குணத்திலோ தீயவற்றை எதிர்க்கும் கல்யாண குணக் கடல், ஆக ராமனிடம் எதை இல்லை என்று சொல்வது, தேடித் தவித்தார். முடிவில் இல்லாத ஒன்றைக் கண்டுபிடித்தார். வசையில் ஐயன், பழி இல்லாதவன், மருங்கு இன்மையில் உடலழகும் வசையின்மையால் உயிரழகும் உணரத் தக்கன. இவ்வாறு உடலும் உயிரும் சேர்ந்து அழகனும் அழகியும் புனலோடு புனல் (நீர்) கலந்தாற்போல் ஒன்றி ஈருயிர் ஓருயிராயினர்.

இவ்வாறு ஒருவர் மற்றொருவரைப் பார்த்த வண்ணம் நிற்கின்றனர்.

மனத்திரையில் காட்சிகள்

முனிவரை முன்னிட்டுக் கொண்டு ராஜ வீதியில் தசரத குமாரர்கள் ஜனகரின் அரண்மனையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதை மாடியிலிருந்து பெண்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அக்காலத்தில் சன்னல்கள் பசுவின் கண்கள் போன்று அமைக்கப்பட்டிருக்கும். அதன் வழியாக பெண்கள் பார்க்கிறார்கள். வீதியிலிருந்து பார்ப்பவர்க்கு இவர்களின் முகம், தாமரை மலர்கள் போன்று காட்சியளிக்கிறது. ராஜகுமார்களின் வருகையை முன்னிட்டு தாமரை மலர்களால் தோரணம் கட்டினார்களோ என்னும்படி காட்சி தருகிறது என்பார் மஹாகவி.

ஸீதை கன்னி மாடத்திலிருந்து ராமனைப் பார்த்த பிறகு அவனுடைய கவர்ச்சியும் அழகும் மனதைவிட்டு அகலாது அவனை நினைத்தவண்ணம் பேசுவாள்.

கடலோ? மழையோ? முழுநீலக் கல்லோ? காயாநறும் போதோ?
படர் பூங்குவளை நறுமலரோ? நீலோற்பலமோ? பானலோ!
இடர்சேர் மடவார் உயிர் உண்பது யாதோ! என்று தளர்வாள்.

க.ரா.பால. - மிதிலை

தான் கண்ட ராமனின் திருமேனியை நினைப்பூட்டும் இயற்கைப் பொருள்கள் எல்லாம் நினைவுக்கு வருகின்றன. அவன் கடல்வண்ணனான படியால் கடலை நினைக்கிறாள். களைப்பைப் போக்கிப் புத்துணர்வை அளிக்கும் நீருண்ட மேகத்தை நினைக்கிறாள். இந்திர நீலக் கல்லாலான பச்சை மாமலைபோன்ற மேனியன் நினைவுக்கு வராமலிருப்பானா? நறுமணம் கமழும் காயா மரத்தின் நீலமலரும், நீரில் படரும் காட்சிக்கு இனிய, கருங்குவளைக் கொடியின் மலரும், நீலோற்பலமும், கருநெய்தல் மலரும் ராமன் திருமேனியை நினைவூட்டத் தளர்கிறாள். ''பெண் பிறந்தார் எய்தும் பெருந்துயர் காண்கிலேன்'' (திருவாய்மொழி) என்றபடி காதலனைப் பிரிந்து துயருறும் தன் உயிரை இவை உண்பதாக, வருத்துவதாக நினைத்து வருந்துகிறாள்.

இந்திரநீலம் ஒத்து இருண்ட குஞ்சியும்
சந்திரவதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளுமே அல
முந்தி என் உயிரை அம்முறுவல் உண்டதே.

க.ரா. பால. - மிதிலை

ஸீதையின் மனத்திரையில் கடல், மேகம் முதலியவை ராமனின் முழு உருவத்தையும் படம் பிடித்துக் காட்டின. திருமேனி முழுவதையும்

ஸேவித்தவள் மேனியின் உறுப்புக்களைக் கண்டு மகிழ்கிறாள். கேசவனின் தலைமயிர்முடி முதலில் இவளைக் கவர்கிறது. அது இந்திர நீலரத்தினக் கல்போன்று கரியதாகக் காட்சியளிக்கிறது. அதன் கீழே அழகிய திருமுக மண்டலம், சந்திரனைப் போன்று வட்டமாகவும், தன்னைக் காண்போரை மகிழ்விப்பதாகவும் உள்ளது. அதில் செந்தாமரை இதழ்களை ஒத்த நீண்ட பெரியவாய், பேதமை செய்யும் திருக்கண்கள். முழங்கால் வரை நீண்ட பருத்த திருக்கைகள், நீலமணி மலைபோன்று பருத்து உருண்ட தோள் களின்றும் தொங்குகின்றன. கீழே அனைவருக்கும் தஞ்சமளிக்கும் பத்மத்தை யொத்த திருப்பாதங்கள். இவ்வாறு வரிசையாகத் திருமுடி முதல் திருவடி வரை ஸேவித்தவள் மீண்டும் திருமுகத்தைப் பார்க்கிறாள். திருவதரத்தில் தவழும் புன்னகை இவளை வரவேற்கத் தயாராக இருப்பதைப் பேசுகிறது. மகிழ்ந்து மயங்குகிறாள், இங்கு திருமுடி, திருமுகம், திருக்கைகள், திருத் தோள்கள், திருப்பாதங்கள் எல்லாம் போட்டியிட்டுக் கொண்டு ஸீதையைக் கவர்ந்தன வாயினும் எல்லாவற்றையும் விட என்னைக் கவர்ந்தது எது எனில், ''அவன் திருவதரங்கள் செய்த சிறு வேலைதான், உதடுகளில் தவழும் புன் முறுவலே என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது'' என்றாள். ஏன்? புன் முறுவலால் தான் அவன் என்னை விரும்புகிறான் என்று உறுதியாக அறிந்து காதல் கொண்டேன். எனவே ஒருதலைக் காதல் இல்லை என வாக்கு மூலம் கொடுக்கிறாள் போலும், ரகசிய காதல் சிரிப்பு, இங்கு பஹிரங்கமாகி விட்டது.

(நண்பன்: பெண் பார்க்கப் போனாயே என்ன ரிஸல்ட்? பாதிக் கல்யாணம் நிச்சயமானாப் போல்தான், எவ்வாறு? எனக்குப் பெண்ணை மிகவும் பிடித்திருக்கு. அவளுக்கு? யார் கண்டார்? என்பது போல் இல்லை இங்கு)

இனி ராமனிடம் செல்வோம். ராமன் நினைக்கிறான். ''எனது உள்ளம் எப்பொழுதும் நல்ல வழியிலேயே செல்லும். ஒருநாளும் தீய வழியில் திரும்பாது; தருமநெறி வழுவாது. என் மனமே அவளை நாடுகிறது. என் மனம் நாடுவதால் அவள் பிறர்க்கு உரியவள் அல்லள். அவள் கன்னியாகவே இருக்க வேண்டும். அவள் பிறர்க்கு உரியவளாய் இருப்பின் என் மனம் அவளை நாடிக் காதல் கொண்டிருக்காதே. இது உண்மை'' என எண்ணு கிறான்.

ஏகும் நல்வழி அவ்வழி என் மனம்
ஆகுமோ, இதற்காகிய காரணம்
பாகு போல்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும், வேறு இதற்கு ஐயுறவில்லையே.

க.ரா. பால. - மிதிலை.

தன்னைப் பற்றியும் தன் மனநிலை குறித்தும் ராமன் எண்ணியிருக்கும் உண்மையை ஒவ்வொரு மனிதரும் செவ்வையாக எண்ணி வந்தால் உலகம் எவ்வளவு புண்ணியம் உடையதாய்ப் பொலியும்!

சாகுந்தல நாடகத்தில் காளிதாஸன் :

असंशयं क्षत्र परिग्रहक्षमा
यदार्यमस्यां अभिलाषि मे मनः
सतां हि सन्देह पदेषु वस्तुषु
प्रमाणमन्तः करण प्रवृत्तयः ॥

அஸம்ஶயம் க்ஷத்ர பரிக்ரஹ க்ஷமா
யத் ஆர்யம் அஸ்யாம் அபிலாஷி மே மன: ।
ஸதாம் ஹி ஸந்தேஹ பதேஷு வஸ்துஷு
ப்ரமாணம் அந்த: கரணப்ரவ்ருத்தய: ॥

சாகுந்தலம், 1 - 19

காட்டிற்கு வேட்டையாடச் சென்ற துஷ்யந்த மஹாராஜன் ஆச்ரமத்தி லுள்ள பூஞ்செடிகட்கு நீர்வார்த்துக் கொண்டிருக்கும் சகுந்தலையைப் பார்த்துக் காதலித்துக் காந்தர்வ விவாஹ முறையில் மணம் செய்து கொள் கிறான். அங்கு நாம் காதலித்தது தகுமா? ஆச்ரமத்திலிருப்பவள் அந்தணர் பெண்ணாக இருக்கலாம், என ஐயுற்று ஒரு முடிவுக்கு வருகிறான். ''இவள் ஒரு க்ஷத்திரியப் பெண்தான். ஏன்? என் மனம் தவறான வழியில் செல்லாது, என் மனம் எப்பொழுது விரும்பிற்றோ, அது சாஸ்த்ர ஸம்மத மாகவே இருக்கும். ஏனெனில் ஐயப்பாட்டிற்குரிய விஷயங்களில் பெரியோர் களான ஸாதுக்களுடைய மனம் எதில் ஈடுபடுகிறதோ, எதை நல்லது எனத் தீர்மானிக் கிறதோ, அது சாஸ்த்திர ப்ரமாணங்களுக்கு ஏற்றதாகவே இருக்கும். நல்லோர் களின் எண்ணம், சொல், செயல் அனைத்தும் சாஸ்த்ரங்களைத் தழுவியே இருக்கும்'' என்றான். எனவே இங்கும் ராமன் திருமணமாவதற்கு முன்னரே பிற மனை நோக்காத பேராண்மையாளன் என்பதைத் தன் வாயாலேயே அதிவினயத்துடன் உறுதி செய்துள்ளது உணரத்தக்கது.

ராமன் மேலே சென்று கொண்டே :

வாள் நிலா முறுவல் கனிவாய் மதி
காணல் ஆவதோர் காலம் உண்டாம் கொலோ

க.ரா. பால. - மிதிலை

என எண்ணியவாறு செல்கிறான். இவ்வாறு இருவரும் (ஸீதையும் ராமனும்) மெய்க்காதல் கொண்டு கண்ணும் கண்ணும் கவ்வி, பின்னர் உணர்வும் உணர்வும் ஒன்றி, பின் உள்ளமும் உள்ளமும் இழுக்க

''மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற்கு உயிரொன்றாயினர்''

என்றபடி உயிர் ஒன்றாகி உடல்களால் மாத்திரம் இருவராயினர். என்னே கம்பனின் படைப்பு!

திருமணத்திற்கு முன் ராமனும் ஸீதையும் பார்த்துக் கொண்டதாகப் பேசினார் கம்பர். துளஸிதாஸரோ தனது ''ராம சரிதமானஸம்'' எனும் ராமாயணத்தில் இருவரும் சந்தித்துக் கொண்டதாகவே பேசுகிறார்.

देखि सीय सोभा सुख पावा
हृदय सराहत वचनु वचनु न आवा ।
थके नयन रघुपति छवि देखे
पलकन्हि हूँ परिहरी निमेषे ॥

தேகி ஸீய் ஸோபா ஸுக் பாவா ।
ஹ்ருதய ஸராஹத் வசனு வசனு ந ஆவா ॥
தகே நயன ரகுபதி சவி தே கே ।
பல கன்ஹிஹூம் பரிஹரீ நிமேஷே ॥

மிதிலைக்குச் சென்றதும் விஶ்வாமித்ரரின் திருவாராதனத்திற்காக (பூஜைக்காக) ராமனும் லக்ஷ்மணனும் பூக்கொய்ய அருகிலுள்ள நந்த வனத்திற்குச் செல்கிறார்கள். அங்கு ஸீதை பூக்கொய்து கொண்டிருக்கிறாள். அவள் இருப்பதை அறிந்த லக்ஷ்மணன் பிறிதொரு இடத்தில் மலர்களைப் பறிக்கச் செல்பவன் போல நகர்ந்து மறைகிறான். அப்பொழுது ராமன் ஸீதையின் பேரழகைப் பார்த்து இன்புற்று மனதில் மகிழ்ச்சி கொள்கிறான். ஆனந்தானுபவத்தினால் பேச நா எழவில்லை. ராமனின் அழகைக் கண்களால் கண்டு பருகிய ஸீதை கண்களை இமைக்கவே இல்லையாம். இவ்வாறு இருவரும் நெருங்கிச் சந்தித்தனராம்.

(மணமகள் மணமகனைப் பார்த்து இசைவு தெரிவித்த பிறகு கல்யாணம் நிச்சயதார்த்தம் செய்வது வழக்கத்தில் இருந்து வருகிறது. இதை மனதிற் கொண்டும், க்ஷத்திரியர்கட்கு முன்னர் பார்ப்பதும் சந்திப்பதும் உசிதம் எனக் கருதியும் கம்பரும், துளஸியும் மேற்கண்டவாறு கூறினர். இது வான்மீகத்திற்குப் பொருந்துமோ? என்பதை உரிய இடத்தில் விளக்குவாம்.)

ப்ரஹ்மர்ஷியும் ராஜர்ஷியும்

तमर्चयित्वा धर्मात्मा शास्त्र दृष्टेन कर्मणा
राघवौ च महात्मानौ तदा वाक्य मुवाचह
भगवन् स्वागतं तेऽस्तु किं करोमितवानघ
भवानाज्ञापयतु मां आज्ञप्यो भवताह्यहम्

தம் அர்ச்சயித்வா தர்மாத்மா சாஸ்த்ரத்ருஷ்டேன கர்மணா ।
ராகவௌச மஹாத்மானௌ ததா வாக்யம் உவாசஹ ॥

பகவன்! ஸ்வாகதம் தேஸ்து கிம் கரோமி தவானக! ।
பகவன் ஆஜ்ஞாபயதுமாம் ஆஜ்ஞப்ய: பவதா ஹி அஹம் ॥

வா.ரா. பால. - 66

पुत्रौ दशरथस्येमौ क्षत्रियौ लोकविश्रुतौ
द्रष्टुकामौ धनुःश्रेष्ठं यदेतत्त्वयि तिष्ठति
एतत् दर्शयभद्रं ते कृत कामौ नृपात्मजौ
दर्शनादस्य धनुषः यथेष्टं प्रति यास्यतः

புத்ரௌ தசரதஸ்ய இமௌ க்ஷத்ரியௌ லோகவிச்ருதௌ ।
த்ரஷ்டுகாமௌ தனு: ச்ரேஷ்டம் யத்ஏதத் த்வயி திஷ்டதி ॥
ஏதத் தர்சய பத்ரம்தே க்ருதகாமௌ ந்ருபாத்மஜௌ ॥
தர்சனாத் அஸ்யதனுஷ: யதேஷ்டம் ப்ரதியாஸ்யத: ॥

வா.ரா. பால. - 66

மூவரும் நகரின் அழகையும் அமைப்பையும் பார்த்துக் கொண்டு அரண் மனையின் வாயிலை அடைந்தனர். உடனே ஜனக மஹாராஜர் சதானந்த முனிவரும், மந்திரிமார்களும் புடைசூழ எதிர் கொண்டு வரவேற்று விஸ்வாமித்ரருக்கு மாமுனிக்குரியதும், குமாரர்கட்கு, அரசர்கட்குரியதுமான மரியாதைகளைச் செய்து உள்ளே அழைத்துச் சென்று உபசரித்து ஆஸனங் களில் அமர்த்திப் பேசலானார். ''முனிவரே! உம்முடையவும் ராஜகுமாரர் களுடையவும் வரவு நல்வரவு ஆகுக. அடியேன் தங்களுக்குச் செய்ய வேண்டுவது யாது? தங்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தவன் யான். எதைக் கட்டளையிட்டாலும் செய்யப் பணிவுடன் காத்திருக்கிறேன்'' எனப் பேசினார்.

விஸ்வாமித்ரர்: ''ஜனகரே! பத்துத் திசைகளிலும் தேரைச் செலுத்தி மக்கள் நலம் பேணும் அயோத்தி மன்னனின் மைந்தர்கள் இவர்கள். க்ஷத்திரியர்கட்குரிய கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள். என்னுடன் காட்டிற்கு வந்து, தீயோர்களைக் களைந்து, வேள்வி காத்துப் பொது நலம் பேணி, நாடுகள் எங்கும் புகழ் பரப்பியவர்கள். உம்மிடம் புகழ் பெற்றதொரு சிறந்த வில் இருப்பதைச் செவியுற்றதிலிருந்து அதைக் காண விரும்பி இங்கு வந்தனர்.''

திறையோடும் அரசு இறைஞ்சும் செறிகழல் கால்தசரதனாம்
பொறையோடும் தொடர் மனத்தான் புதல்வர் எனும் பெயரே காண்
உறையோடும் நெடுவேலாய்! உபநயன விதிமுடித்து
மறை ஓதுவித்து இவரை வளர்த்தானும் வசிட்டன் காண்.

க.ரா பால. - குலமுறை

''பகைவனே இல்லாதபடியால் உபயோகமின்றி உறையிலேயே தங்குகிற வேலாயுதத்தை உடைய மிதிலை அரசனே! இவர்களின் தந்தை தசரதர், மனு நெறிப்படி செங்கோல் செலுத்துபவர்; தம் கால்களிலே வீரக் கழல்களை அணிந்தவர்; இவர் ஆணைக்கு அஞ்சி சிற்றரசர்கள் கப்பங் களுடன் வந்து அடிபணிந்த வண்ணம் இருப்பர்; பூமியைப் போன்று பொறுமை மிக்கவர். இவர் தந்தை, இவர்களை உபநயனம் முடித்து வஸிஷ்டரிடம் குருகுலவாஸத்திற்கு அனுப்பினார்.

குலகுரு மிக விரைவில் வேதங்களையும், வேதாங்கங்களான சாஸ்த்ரங்களையம் கற்பித்து வளர்த்தார். பெற்ற தந்தை தசரதராயினும், ஞானத்தந்தை வஸிஷ்டராவார். ஶஸ்த்ரங்கள், அஸ்த்ரங்கள் அனைத்தையும் என்னிடம் உபதேசம் பெற்ற ராமனிடம் அஸ்த்ர தேவதைகள் அன்புடன் தொண்டு செய்யக் காத்துக் கிடக்கின்றன. இத்தகைய வீரனுக்கு உமது வில்லைக் காட்டும். இங்கு ''பத்ரம் தே'' என்றார் முனிவர். நிகழப் போகும் மங்களங்களை மறைமுகமாகக் கூறுகிறார் போலும். இவர்கள் வில்லைப் பார்ப்பதனால் உமக்கும், ஸீதைக்கும் ராமனுக்கும், இவன் ஸஹோதரர் கட்கும், எனக்கும், உலகிற்கும் நன்மைகள் (பத்ரங்கள்) வரக் காத்திருக் கின்றன'' என்றார். வில்லைப் பார்த்த பிறகு இவர்களும் தமது இஷ்டம் நிறைவேறி மனநிறைவுடன் ஊர் திரும்புவர்.

சிவதனுஸ்—வரலாறு

மாற்றம் மாறு உரைப்பதுஎன்? மாய விற்கு நான்
தோற்றனென் என மனம் துளங்குகின்றதால்
நோற்றனள் நங்கையும் நொய்தின் ஐயன்வில்
ஏற்றுமேல் இடர்க்கடல் ஏற்றும் என்றனன்.

க.ரா. பால. - கார்முக

மாற்றம்: வார்த்தை, தோற்றவாறு, எண: (வில்லை வளைப்பவரொடு சீதையின் மணம் நிறை வேறுமென்ற எண்ணம்) தோற்றுப் போனதை எண்ணும்போது, துளங்குகின்றது: நடுங்குகிறது, நொய்தின்: எளிதாக.

ஜனகர்: ''கௌசிகரே! பெரும் தவமுனிவராகிய நீர் ஒன்று சொன்னால் அதற்கு மறுமாற்றம் உண்டோ? அப்படியே வில்லைக் காட்டுகிறேன். அது சிவதனுஸ் (மங்களமான தனுஸ்) பெயரளவிற்குத்தான். ஆனால் அது மாய வில், அதை கன்யாசுல்கமாக வைத்ததினால் என் மகள் ஸீதை மங்களமான திருமணத்தைப் பெறாது மனம் துளங்குகிறாள். எத்தனையோ வீரர்கள் இம்மாயவில்லை (வஞ்சனை செய்யும் வில்லை) நாணேற்ற முடியாது அவமானப்பட்டுத் திரும்பினர். ஸீதைக்கு விவாஹம் ஆகுமோ என்ற ஐயத்தால் என் மனமும் முறிந்து போயிற்று. இந்நிலையில் தவமுனிவரும்,

ப்ரஹ்மர்ஷியுமான உம் வாயால் ''பத்ரம் தே'' என்றீர். ப்ரஹ்மவித்தின் அனுக்ரஹத்தால் இவ்வழகன் எளிதில் நாணேற்ற என் ஸீதைக்கும் மணம் ஆகட்டுமே. இவன் நாணேற்றுமேல் நானும் என் இடர்க்கடலினின்றும் கரை ஏறுவேன்'' என்றார்.

देवरात इति ख्यातः निमेर्ज्येष्ठो महीपतिः
न्यासोऽयं तस्य भगवन् हस्ते दत्तो महात्मना
दक्षयज्ञवधे पूर्वं धनुरायम्य वीर्यवान्
रुद्रस्तु त्रिदशान् रोषात् सलील मिदमब्रवीत्
यस्माद्भागार्थिनो भागां नाकल्पयत मेसुराः
वराङ्गानि महार्हाणि धनुषा शातयामि वः ।
प्रसादयन्ति देवेशं तेषां प्रीतोऽभवद्भवः
तदेत द्देवदेवस्य धनू रत्नं महात्मनः
न्यासभूतं तदान्यस्तं अस्माकँ पूर्वकै विभो ॥

தேவராத இதி க்யாத: நிமே: ஜ்யேஷ்ட: மஹீபதி: ।
ந்யாஸ: அயம்தஸ்ய பகவன்! ஹஸ்தே தத்த: மஹாத்மனா ॥
தக்ஷயக்ஞவதே பூர்வம் தனு: ஆயம்ய வீர்யவான் ।
ருத்ர:து த்ரிதசான் ரோஷாத் ஸலீலம் இதம் அப்ரவீத் ॥
யஸ்மாத் பாகார்த்தின: பாகான் நாகல்பயத மே ஸுரா: ।
வராங்கானி மஹார்ஹாணி தனுஷா ஶாதயாமிவ: ॥
ப்ரஸா தயந்தி தேவேஶம் தேஷாம் ப்ரீத: அபவத் பவ: ॥
தத் ஏதத் தேவதேவஸ்ய தனூரத்னம் மஹாத்மன: ।
ந்யாஸபூதம் ததா ந்யஸ்தம் அஸ்மாகம் பூர்வகே விபோ: ॥

வா.ரா. பால. - 66

ராஜகுமாரர்கள் வில்லைப் பார்க்க விரும்புவதாக முனிவர் கூறியதும் ஜனகர் வில் வந்த காரணத்தைக் கூறலானார். ''முன்பொரு காலத்தில் தக்ஷப்ரஜாபதி யாகம் செய்த பொழுது ருத்ரனுக்கு ஹவிர் பாகம் அளிப்பதை நிறுத்திவிட்டனர். அதனால் சினம்கொண்ட ருத்ரன் வில்லைக் கையிலேந்தி நாணேற்றி, 'தேவர்களே! நீங்கள் வேள்விகளில் எனக்குரிய ஹவிர்பாகத்தை கொடுக்கத் தவறியதால் உங்களுடைய தலைகளை இதோ அறுத்தெறி கிறேன்' என்றார். உடனே நடுங்கிய தேவர்கள் பயந்து ருத்ரனைத் துதித்து ஸமாதானப்படுத்தினர். அப்பொழுது அந்த வில்லை எனது குலமுதல்வரான நிமிக்குப்பின் ஆறாவது அரசரான தேவராதரிடம் 'இதைப் பூஜித்து சத்ருஜயத்தைப் பெறுவீர்' எனக் கூறிக் கொடுத்தனர். அன்று முதல் இந்த வில் எமது அரண்மனையில் பூஜிக்கப்பட்டு வருகிறது.''

ஸீதையின் தோற்றம்

अथभे कृषतः क्षेत्रं लाङ्गला दुत्थिता मम
क्षेत्रं शोधयता लब्धा नाम्ना सीतेति विश्रुता
भूतलादुत्थिता सा तु व्यवर्धत ममात्मजा
वीर्यशुल्केति मे कन्या स्थापितेयमयोनिजा

அத மே க்ருஷத: க்ஷேத்ரம் லாங்கலாத் உத்திதா மம ।
க்ஷேத்ரம் ஶோதயதா லப்தா நாம்னாஸீதேதி விஶ்ருதா ॥
பூதலாத் உத்திதா ஸாது வ்யவர்தத மம ஆத்மஜா ।
வீர்யசுல்க இதி மே கன்யா ஸ்தாபிதேயம் அயோனிஜா ॥

வா.ரா. பால. - 66

உழுகின்ற கொழுமுகத்தின் உதிக்கின்ற கதிரின் ஒளி
பொழிகின்ற புவிமடந்தை திரு வெளிப்பட்டு என புணரி
எழுகின்ற தெள் அமுதோடு எழுந்தவளும் இழிந்து ஒதுங்கித்
தொழுகின்ற நல்நலத்துப் பெண்ணரசி தோன்றினாள்.

க. ரா. பால. - கார்முக

ஜனகர் மேலும் கூறலானார்: ''ஒரு ஸமயம் நான் யாகம் செய்ய விரும்பினேன். அதற்காக யாகம் செய்யும் இடத்தில் நற்பயிர்களை விளைவித்து, அப்படியே பசுக்களை மேயவிட்டு அங்கு யாகசாலையை அமைத்தேன். தங்கக் கலப்பையில் வயிரக் கொழுவைப் பூட்டி உழுதேன். பால ஸூர்யன் போல் செஞ்சோதி வீசியது. ஸ்ரீதேவியும் வெட்கப்படும்படி பூதேவி என் குல விளக்காய்த் தோன்றினாள். இவள் அழகு பாற்கடலில் தோன்றிய மஹா லக்ஷ்மியையும் விஞ்சி இருந்தது. யாக பூமியில் தோன்றிய இவள் எனது பெண்ணாக வளர்க்கப்பட்டாள். அயோனிஜையான (அயோநிஜை: ஏனைய மனிதப் பிறவிகளைப் போல் பிறப்பெடுக்காமல் தாமாகவே தோன்றியவள்) இவளை மணக்க விரும்புகின்றவர்கள் இவ்வில்லை எடுத்து நாணேற்ற வேண்டுமென கன்யாகல்கமாக அறிவித்தேன். உழுபடைச்சாலில் கண்டெடுத்த குழந்தையானபடியால் ஸீதை எனப் பெயரிட்டேன். மற்றொரு பெயர் மைதிலீ. மிதிலையிலுள்ள அனைவரும் எங்கள் ஸீதை என உரிமை கொண்டாடுகிறார்கள். இதில் என்ன தவறு? சுதந்திரம் பெற்ற பிறகு ''எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என பூமியில் உரிமை கொண்டாடுவது போல் மிதிலைவாசிகள், பூமி ஸுதையான (நிலமகள் பெண்ணாகிய) இவளிடம் எங்கள் பெண் என உரிமை கொண்டாடுவதில் வியப்பென்ன?'' (பலர் போற்றும் நிலையில் ஒருவர் - இருந்தால் அவரை எங்கடவர் என்றும்,

இன்ன உறவு என்றும் ஸம்பந்தம் இல்லாதவர்களும் உறவு கொண்டாடுவதைப் பார்க்கிறோம்.)

ஒரு காலத்தில் பறவைகளுக்குள் யார் ராஜாவாக இருப்பதென்பதில் சச்சரவு ஏற்பட்டது. உடனே பறவைகள் சபையைக் கூட்டி தேர்தலின் மூலம் பக்ஷிராஜனைத் தேர்ந்தெடுப்பது என நிச்சயிக்கப்பட்டது. தேர்தல் நாளன்று பறவை எல்லாம் ஓரிடத்தில் கூடின. பல போட்டியிட்டன. ஆனால் கருடனும் கழுகும் போட்டியில் முக்கியமானவை. தேர்தலில் வென்று, கருடன் பக்ஷி ராஜா ஆயிற்று. அன்று ஒரு கொசு சாக்கடையினின்றும் கிளம்பி வேகமாக உயரே சென்றது. அருகிலிருந்த ஒருவர், ''ஏ கொசுவே! பக்கத்திலிருக்கும் எனது ரத்தத்தை உறிஞ்சாமல் எங்கே விரைந்து செல்கிறாய்'' என்றார். ''நீர் நிற்பதைப் பார்த்தேன். ஆனால் எனக்கு அவகாசமில்லை; இன்று எங்கடவனுக்கு (கருடனுக்கு) முடிசூட்டு விழா, அதற்காகப் போகிறேன்'' என்றதாம். கொசுவிற்கும் இறகு இருக்கிறதல்லவா? எனவே கருடனைத் தன் இனமாகக் கருதியது போலும், கொசுவே கருடனை எங்கடவன் எனக் கொண்டாடும் பொழுது தங்கள் நாட்டில் தோன்றிய (ஜனகன் மகளாகிய) ஸீதையிடம் மிதிலை மக்கள் எங்கடவள் எனப் பரிவு கொள்வதில் ஆச்சரியமில்லையே! எனவே மக்களின் அபிமானத்தை மனதில் கொண்டு மைதிலி'' எனவும் பெயரிட்டோம் என்றார்.

ஸீதையின் முற்பிறவி

உலகில் பலர் ஐச்வர்யத்தை விரும்புவதைப் பார்த்த பத்மாக்ஷன் எனும் அரசன், மஹாலக்ஷ்மியைக் குறித்துத் தவம் செய்தான். அவளும் ப்ரத்யக்ஷமானாள். மஹாலக்ஷ்மியையே தனக்குப் பெண்ணாகப் பிறக்கும் படி வரம் வேண்டினான். அவள் மஹாவிஷ்ணுவைப் பிரார்த்திக்கச் சொன்னாள். மீண்டும் தவம் செய்தான். மஹாவிஷ்ணு ப்ரத்யக்ஷமாகி மாதுலிங்கம் எனும் ஒருவகைப் பழத்தைக் கொடுத்து மறைந்தார். அதை அவன் பிளந்தபொழுது அதனுள் ஒரு அழகிய கன்னியைப் பார்த்தான். அன்புடன் வளர்த்துப் பருவம் வந்த பொழுது ஸ்வயம்வர விவாஹத்திற்கு பணயமாக (சுல்கமாக) ''எவன் ஒருவன் தன் உடலை வானம் போன்ற நீல நிறமுடையதாக (நாராயணன் போன்று வானத்தின் நிறம் உடையவனாக) தன்னை ஆக்கிக் கொள்ளுகிறானோ அவனுக்குத்தான் என் மகள் பத்மாவை மணம் செய்து கொடுப்பேன்'' என்று ராஜ ஸபையில் அறிவித்தான்.

आकाश नीलवर्णेन यः स्वाङ्गं परिलेपयेत् ।
ददामि तस्मै पद्माञ्च सत्यं ज्ञेयं वचो मम ॥

ஆகாச நீல வர்ணேன ய: ஸ்வாங்கம் பரிலேபயேத் ।
ததாமி தஸ்மை பத்மாம் ச ஸத்யம் ஜ்ஞேயம் வசோ மம ॥

ஆனந்த ராமாயணம்

இதை விரும்பாத அரசர்கள் போர் தொடுத்து பத்மாக்ஷனைக் கொன்றனர். இவளை அடையப் பலர் போட்டியிட்டுத் தங்களுக்குள் சண்டையிட்டனர். அதில் வென்றவன் பத்மாவைத் தூக்க ஓடிவந்தான். இதைக் கண்ணுற்ற பத்மா தன் உடலை அக்னியில் ஹோமம் செய்து கொண்டாள். இவளைக் காணாது ஏமாந்த அரசன் கோபத்தினால் அந்த நாட்டையே அழித்துச் சூறையாடினான்.

लक्ष्म्याः चित्तस्य चाञ्चल्यं भयंशोको वधोऽपिच
भवत्येव महत्दुःखं तस्मात्तां परिवर्जयेत् ॥

''லக்ஷ்ம்யா: சித்தஸ்ய சாஞ்சல்யம் பயம்ஸோக: வதோஅபிச ।
பவத்யேவ மஹத்துக்கம் தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத் ॥

ஆனந்த ராமாயணம்

''லக்ஷ்மியின் மனது சஞ்சலமானது. அவளை அடைய விரும்புகின்றவர்கட்கு பயமும், சோகமும், உயிரை இழத்தலும் வரும். பெருந்துன்பமும் சூழும், ஆகவே ஆசை கொள்ளாது அவளை ஒதுக்க வேண்டும்'' என்று கூறி அரசர்கள் அனைவரும் சொந்த ஊருக்குத் திரும்பினர். ஒரு ஸமயம் அவள் அக்னி குண்டத்தின் அருகில் வீற்றிருந்த பொழுது வானத்தில் சென்று கொண்டிருந்த ராவணன் கண்ணுற்று அவளை எடுக்கவர அவள் அக்னியில் குதித்தாள். உடனே அவன் தண்ணீரினால் தீயை அணைத்துத் தேடினான். அப்பொழுது அதில் ஐந்து ரத்தினங்கள் கிடைத்தன. அவற்றை ஒருபெட்டியில் வைத்து. ஏடுத்துச் சென்று இலங்கை அரண்மனையில் வைத்தர்ன்.

ஒருநாள் அவன் மந்தோதரியை அழைத்து ரத்தினங்களைக் காட்டுவதற்காக அப்பேழையை எடுத்து வரச் சொன்னான். அவளால் அதை அசைக்கவே முடியவில்லை. உடனே ராவணன் சென்று எடுக்க அவனாலும் அசைக்க முடியவில்லை. திகைத்தவனாய் இருபது கைகளாலும் முழு பலத்துடன் எடுக்க, அதுவும் முடியாமல் போகவே ஆச்சரியமுற்றுப் பெட்டியின் மூடியை முக்கித் திறந்தான். தான் வைத்த ரத்தினங்கள் பெட்டியில் இல்லை. அழகிய பெண்ணைப் பார்த்தான். உடனே மந்தோதரி, ''இவள் ஆபத்தானவள் எங்கேயாவது கொண்டு விடுங்கள்'' என்று சொல்ல, அப்பெண் ''நான் ராவணாதிகளையும் ராக்ஷஸர்களையும் அழிக்க மீண்டும் வருவேன்'' என்று கூறினாள். கோபங்கொண்ட ராவணன் அவளைக் கொல்ல முயற்சிக்க மந்தோதரி தடுத்துப் பேசினாள்.

कालान्तरेण यो मृत्युः तं अद्यत्वे त्वम् इच्छसि?

''காலாந்தரேண ய: ம்ருத்யு: தம் அத்யத்வேத்வம் இச்ஸஸி?

பிறிதொரு காலத்தில் வர இருக்கின்ற யமனை நீர் இப்பொழுதே ஏன் அழைக்கிறீர்'' எனக் கூறித் தடுத்தாள்.

பின்னர் ராவணன் உத்தரவின் பேரில் ஊழியர்கள் பலர் அப் பெட்டியைச் சுமந்து எடுத்துச் சென்று ஓரிடத்தில் குழி தோண்டிப் புதைத்து விட்டுத் திரும்பினர். அந்த இடம் தான் மிதிலையின் ஒரு பகுதி. அங்குதான் ஜனகர் வேள்வி நிகழ்த்தக் கலப்பையைக் கொண்டு பூமியை உழுதார். அப்பெட்டியே ஜனகருக்குக் கிடைத்தது.

सीराग्रात् निर्गता यस्मात् सीतेत्यत्र प्रगीयते ॥

ஸீராக்ராத் நிர்கதா யஸ்மாத் ஸீதேத்யத்ர ப்ரகீயதே ॥

கலப்பையின் முனையினின்றும் வெளிக் கிளம்பியபடியால் ஸீதா என அழைக்கப் பட்டாள். வானத்தைப் போன்று நீலநிறமுடைய ராமனால் மணம் கொள்ளப் போவதால் பத்மாக்ஷராஜனின் பிரதிக்ஞையும் நிறை வேறியது.

வில்லின் பெருமை

ततः सर्वे नृपतयः समेत्य मुनिपुङ्गव
न शेकुः ग्रहणे तस्य धनुषः तोलनेऽपि वा
प्रत्याख्याताः नृपतयः तन्निबोध तपोधन ।

தத: ஸர்வே ந்ருபதய: ஸமேத்ய முனிபுங்கவ! ॥
ந ஶேகு: க்ரஹணே தஸ்ய தனுஷ: தோலனேஅபிவா ॥
ப்ரத்யாக்யாதா: ந்ருபதய: தத் நிபோத தபோதன் ॥

வா.ரா. பால. - 66

ஜனகர், விஶ்வாமித்ரரை நோக்கி "முனிவரே! ஸீதையின் திருமணத்திற்கு இவ்வில்லை நாணேற்றுவதை வீர்ய சுல்கமாக அறிவித்ததை அறிந்த அரசர்கள் பலர் போட்டியிட்டுக் கொண்டு திரண்டு வந்தனர். ஆனால் எவராலும் அவ்வில்லைப் பெட்டியிலிருந்து எடுக்கவோ, எடுத்து நிறுத்தவோ, அதன் வலிமையை அறிய கைகளால் அசைக்கவோ முடிய வில்லை. எனவே அவர்கட்குப் பெண்ணை மணம் முடிக்க மறுத்து விட்டேன் என்றார்.

अधोमुखाः तदा सर्वे बभूवुः पार्थिवोत्तमाः
भूमेः उच्चलिते केचित् ऊर्ध्वं नेतुं नचाशकन्

அதோமுகா: ததா ஸர்வே பபூவு: பார்த்திவோத்தமா: ॥
பூமே: உச்சலிதே கேசித் ஊர்த்வம் நேதும் ந ச அஶகன் ॥

धनुषः सन्निधिं गत्वा विहसन् जनकं प्रति
येन वै निर्जिता देवाः त्रैलोक्यं स्व वशीकृतम्
आन्दोलितौ भुजाभिर्हि कैलासोयेन वैमया
द्रष्टुमिच्छसि किन्त्वस्मिन् लघुचापे तृणोपमे
गुणं भूम्यां निपतितं गृहीतुं हि दशाननः
किञ्चि द्भूत्वा विनम्रः सः दोष्णा जग्राह तं गुणम्
एत स्मिन्नन्तरे तच्च पपात हृदये धनुः
तदा सभायां ऊर्ध्वस्थः पपात स दशाननः
मुकुटः पतितो भूमौ मुक्त कच्छोप्य भूत्तदा
तदा विजहसु स्सर्वे सभायां पार्थिवोत्तमाः

अक्षीणि भ्रामयामास लालाऽस्येभ्यो विनिर्ययौ
सद्वस्त्रेषु दशास्य स्सः विष्टा मूत्रं तदाऽकरोत् ॥

தனுஷ: ஸந்நிதிம் கத்வா விஹஸன் ஜனகம் ப்ரதி ।
யேன வை நிர்ஜிதா: தேவா: த்ரைலோக்யம் ஸ்வவஶீக்ருதம் ॥
ஆந்தோலித: புஜாபி: ஹி கைலாஸ: யேன வை மயா ॥
(பலம்) த்ரஷ்டும் இச்சஸி கிந்து அஸ்மின் லகுசாபே
த்ருணோபமே ॥
குணம் பூம்யாம் நிபதிதம் க்ருஹீதும் ஹி தஶானன: ।
கிஞ்சித் பூத்வா வினம்ர: ஸ: தோஷ்ணா ஜக்ராஹ தம்குணம் ॥
ஏதஸ்மின் அந்தரே தச்ச பபாத ஹ்ருதயே தனு: ।
ததா ஸபாயாம் ஊர்த்வஸ்த: பபாத ஸ தஶானன: ॥
முகுட: பதித: பூமௌ முக்தகச்ச: அபி அபூத் ததா ।
ததா விஜஹஸு: ஸர்வே ஸபாயாம் பார்த்திவோத்தமா: ॥
அக்ஷிணி ப்ராமயாமாஸ லாலா ஆ ஸ்யேப்ய: விநிர்யயௌ ।
ஸத் வஸ்த்ரேஷு தஶாஸ்ய: ஸ: விஷ்டா மூத்ரம் ததா அகரோத் ।

ஆனந்த ராமாயணம்

இங்கு ஆனந்த ராமாயணத்தில் வருணிக்கப்படும் ரஸமான சம்பவத்தைப் பார்ப்போம். பல அரசர்கள் எவ்வளவோ முயன்றும் வில்லை அசைக்க முடியாமலும் உயரத் தூக்க முடியாமலும் அவமானப்பட்டு தலை குனிந்தார்கள். இந்நிலையில் இலங்கையின் தலைவனாகிய இராவணன் பெட்டியின் அருகே வந்தான். வில்லைப் பார்த்துவிட்டுப் பரிஹாஸச் சிரிப்புடன் ஜனகரை நோக்கிப் பேசினான்: ''நான் யார் தெரியுமா? போரில் தேவர்களை வென்றவன், மூவுலகங்களும் என் வசத்தில் இருக்கின்றன. ஒரு ஸமயம் சிவனின் கைலாஸ மலையை என் புஜங்களால் ஆட்டுவித்தேன். அத்தகைய நான் இச்சிறுவில்லைப் புல்லாக மதிக்கிறேன். எனினும் பலரால் எடுக்க முடியாத இவ்வில்லின் வலிமையை அறிய விரும்புகிறேன்'' எனக் கூறி வில்லைத் தன் இடதுகையால் எடுத்தான். எடுக்கமுடியவில்லை. பிறகு வலது கையால் தூக்கினான், வில் அசையவில்லை. பின்னர் இரு கைகளாலும் எடுத்தான். முடியவில்லை. வெட்கத்துடன் இருபது கைகளாலும் முக்கி முனகி உயர நிறுத்தினான். நாணேற்ற விரும்பிக் கீழே கிடக்கும் நாண் கயிறைக் குனிந்து எடுத்தான். நிமிரும்பொழுது நேராக நின்ற வில் அவன் மார்பில் சாய்ந்தது. அதைத் தாங்கமுடியாமல் சபை நடுவே நிலத்தில் விழுந்தான். பத்துத் தலைகளினின்று மகுடங்கள் கீழே விழுந்து சிதறின. இடுப்பில் உடுத்திய ஆடைகளும் அவிழ்ந்தன. அவையில் அமர்ந்திருந்த அரசர்களும் தம்மையறியாது நகைத்தனர். விழுந்து அடிபட்டதில் கண்கள் சுழன்றன. வாய்களினின்றும் உமிழ்நீர் பெருகியது. உயரிய பீதாம்பரங்கள் மலமூத்ரங்களால் மீண்டும் உடுத்த தகுதியற்றவையாயின. இதைப் பார்த்த நான்

कोपि वीरोऽस्ति भूम्यां वा किं निर्वीरं हि भूतलम्
जीवदानं करोत्वस्मै दशास्याय नृपाग्रतः

கோSபி வீர: அஸ்தி பூம்யாம்வா கிம் நிர்வீரம் ஹி பூதலம் ।
ஜீவதானம் கரோது அஸ்மை தசாஸ்யாய் ந்ருபாக்ரத: ॥

''இப்பூவுலகில் வீரன் யாரும் இல்லையா? நாடே வீரன் அற்றதாக ஆகி விட்டதா? ராவணன் மீதுள்ள வில்லை எடுத்து அவனுக்கு உயிர் அளியுங்கள் என்றேன்'' எனும் முன்பு நிகழ்ந்த வரலாற்றை ஜனகர் கூறினார்.

ततः परमकोपेन राजानः मुनिपुङ्गव
न्यरुन्धन् मिथिलां सर्वे वीर्य सन्देहमागताः
ततो देव गणान् सर्वान् तपसॉऽहं प्रसादयम्
ददुश्च परम प्रीताः चतुरङ्ग बलं सुराः
ततो भग्ना नृपतयः हन्यमाना दिशो ययुः
यद्यस्य धनुषो रामः कुर्या दारोपणं मुने ।
सुतामयोनिजांसीतां दद्यां दाशरथे रहम् ॥

தத: பரம கோபேன ராஜான: முனிபுங்கவ! ॥
ந்யருந்தன் மிதிலாம் ஸர்வே வீர்ய ஸந்தேஹம் ஆகதா: ॥
தத: தேவகணான் ஸர்வான் தபஸா அஹம் ப்ரஸாதயம் ।
தது: ச பரமப்ரீதா: சதுரங்க பலம் ஸுரா: ॥
தத: பக்னா: ந்ருபதய: ஹன்யமானா: திச: யயு: ॥
யதி அஸ்ய தனுஷ: ராம: குர்யாத் ஆரோபணம் முனே! ।
ஸுதாம் அயோனிஜாம் ஸீதாம் தத்யாம் தாசரதே: அஹம் ॥

வா.ரா. பால. - 66

போதகம் அனையவன் பொலிவு நோக்கி, அவ்
வேதனை தருகின்ற வில்லை நோக்கித், தன்
மாதினை நோக்குவான் மனத்தை நோக்கிய
கோதமன் காதலன் கூறல் மேயினான்.

அன்று முதல் இன்றளவும் ஆகும் இந்தச் சிலையருகு
சென்றுமிலர், போய் ஒளித்தார் தேர் வேந்தர் திரிந்துமிலர்
என்றும் இனி மணமும் இல்லை என்று இருந்தோம் இவன் ஏற்றின்
நன்று மலர்க்குழல் சீதை நலம் பழுது ஆகாது என்றான்.

க.ரா. பால. - கார்முக

ஜனகர், ''வந்த அரசர்கள் தம்மை உலகினர் வீரமற்றவர்கள் என எண்ணுவார்களே என வெட்கி, மிகுந்த கோபங்கொண்டு தத்தம் படைகளைத் திரட்டி மிதிலையை வென்று ஸீதையைப் பறித்துச் செல்ல எண்ணி என் நகரை முற்றுகையிட்டுத் தாக்க முற்பட்டனர். நான் தேவர்களைத் தவத்தினால் மகிழ்விக்க, அவர்கள் வீரம் மிக்க பெரும் படைகளை (தேவகார்யம் நிறைவேறவும், ஜகன் மாதாவைக் காக்கவும்) அருள, அவற்றைக் கொண்டு எதிரிகளைத் துரத்தி அழித்தேன். இப்பொழுது அவ்வுயரிய சிவதனுஸ்ஸை ராம லக்ஷ்மணர்களுக்கும் காட்டப் போகிறேன்.''

வில்லைக் கொணர்க

धनुर्दर्शय रामाय इति होवाच पार्थिवम्
ततस्स राजा जनकः सामन्तान् व्यादिदेशह
धनुरानीयतां दिव्यं गन्धमाल्य विभूषितम्
नृणां शतानि पञ्चाशत् व्यायतानां महात्मनाम्
मञ्जूषामष्ट चक्रां तां समूहुस्ते कथञ्चन ।
नैतत्सुरगणास्सर्वे नासुरा नच राक्षसाः
क्व गतिः मानुषाणां तु धनु षोऽस्य प्रपूरणे ।
आरोपणे समायोगे वेपने तोलनेऽपि वा
तदेतत् धनुषां श्रेष्ठं आनीतं मुनि पुङ्गव
दर्शयैतत् महाभाग अनयोः राज पुत्रयोः

தனு: தர்சய ராமாய இதி ஹோவாச பார்த்திவம் ।
தத: ஸ: ராஜா ஜனக: ஸாமந்தான் வ்யாதி தேசஹ ।
தனு: ஆனீயதாம் திவ்யம் கந்த மால்ய விபூஷிதம் ॥
ந்ருணாம் சதானி பஞ்சாசத் வ்யாயதானாம் மஹாத்மனாம் ।
மஞ்ஜூஷாம் அஷ்டசக்ராந்தாம் ஸமூஹுஸ்தே கதஞ்சன ॥
நைதத் ஸுரகணா: ஸர்வே நாஸுரா: நச ராக்ஷஸா: ।
க்வ கதி: மானுஷாணாம்து தனுஷ: அஸ்ய ப்ரபூரணே ॥
ஆரோபணே ஸமாயோகே வேபனே தோலனேபி வா ।
தத் ஏதத் தனுஷாம் ஶ்ரேஷ்டம் ஆனீதம் முனிபுங்கவ ॥
தர்ஶய ஏதத் மஹாபாக அனயோ: ராஜபுத்ரயோ: ॥

வா.ரா.பால. - 67

விஶ்வாமித்ரர்: ''அரசே! பெருமை மிகுந்த அந்த வில்லை ராமனுக்குக் காட்டும்'' என்றார்.

ஜனகர் அருகிலிருந்த சிற்றரசர்களைப் பார்த்து 'அரண்மனையில் சந்தனம், மலர் மாலைகள், நைவேத்யங்கள் இவற்றால் தினந்தோறும் பூஜிக்கப்பட்டுவரும் சிவதனுஸ்ஸை இங்கு (யாக சாலைக்கு) கொண்டு வாருங்கள்' எனக் கட்டளையிட்டார். அவர்கள் உடனே நகருக்குச் சென்று ஐயாயிரம் ஆட்களைத் திரட்டினர். அவர்கள் ஒவ்வொருவரும் நல்ல உயரமும் பருமனும், மகிழ்ச்சியும் உடையவர்கள்.

உறுவலி யானையை ஒத்தமேனியர்
செறிமயிர் கல்லெனத் திரண்ட தோளினர்
அறுபதினாயிரர் அளவிலாற்றலர்
தறி மடுத்து இடையிடைத் தண்டில் தாங்கினர்.

வலி மிகுந்த யானையைப் போன்ற சரீரத்தை உடையவர்கள், மலை போலத் திரண்டும் மயிர்கள் செறிந்தும் உள்ள தோள்களை உடையவர். அளவற்ற வல்லமை மிகுந்தவர். சிவதனுஸ் பெரிய இரும்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. பெட்டிக்கு எட்டு சக்கரங்கள் அப்பெட்டியை வாரையோடு (தண்டு மரத்தோடு) பிணைத்துச் சுமந்து வருகிறார்கள்.

(இங்கு வால்மீகி ஐயாயிரம் பேர் வில்லைத் தூக்கி வந்தததாகக் கூறுகிறார். கம்பரோ அறுபதினாயிரம் பேர் தூக்கி வந்தததாகக் கூறியுள்ளார்.)

'திண்நெடு மேருவைத் திரட்டிற்றோ, என்பார் ।
'வண்ண வான்கடல் பண்டு கடைந்த மத்தோ, என்பார் ।
'அண்ணல் வாள் அரவினுக்கு அரசனோ, என்பார் ।
'விண் இடு நெடியவில் வீழ்ந்ததோ என்பார் ।

க.ரா.பால. - கார்முக

பல்லோர் சேர்ந்து ஒரு வேலையைச் செய்யும் பொழுது (ஐலஸா) பாட்டுப் பாடிக் கொண்டும் பேசிக் கொண்டும் ச்ரமத்தை உணராமல் செய்வது வழக்கம். அதே போன்று சுமப்பவர்கள் பொருத்தமாக பாடிக் கொண்டே வருகிறார்கள். நாம் சுமக்கும் வில்லின் பளுவை உணரும் போது வலிய, நெடிய மஹாமேரு மலையை ஒன்று திரட்டிச் செய்திருப்பார்கள் போலும். 'அகன்று நீண்ட திருப்பாற்கடலைக் கடைவதற்குக் கொணர்ந்த உருண்டு திரண்ட மந்தர மலையைத் தட்டி, நீட்டி இவ்வில்லைச் சமைத் தனரோ! பெருமை மிக்க ஸர்ப்பங்களுக்கெல்லாம் அரசனாகிய ஆதி சேஷனே இவ்வில் உருக்கொண்டானோ! ஆகாயத்தில் தோன்றும் நீண்ட இந்திர தனுஸ்ஸே ஒரு ஸமயத்தில் கீழே விழ அதையே பெட்டியில் வைத்து பூஜை செய்து வருகிறாரோ' எனவும் பாடினார்கள்.

'சங்கொடு சக்கரம் தரித்த செங்கையச்
சிங்க ஏறு அல்லனேல், இதனைத் தீண்டுவான்

எங்குளன் ஒருவன்? இன்று ஏற்றின் இச்சிலை
மங்கை தன் திருமணம் வாழுமால்' என்பார்.

க.ரா. பால. - கார்முக

''*திருச்சங்கையும் திருவாழி ஆழ்வானையும் செந்தாமரைக் கையில் ஏந்தும் ஆண் சிங்கமாம் திருமால் (ராகவஸிம்ஹன்) நாணேற்றி இதை வளைக்கலாமேயொழிய வேறு எவர்தான் இவ்வில்லைத் தீண்டும் தகுதி யுடையோன்? அவன் எங்கு உள்ளான்? எங்கும் யாருமில்லையே! இவ் வில்லை அம்மஹா விஷ்ணுவே நேரில் எழுந்தருளி நாணேற்றி வளைப்பானே யாகில் நம் ஸீதையின் திருமணம் வளர்ச்சி பெறும்'' என்றனர்.*

என் இது கொணர்க என இயம்பினான் என்பார்
மன்னவர் உளர்கொலோ மதிகெட்டார் என்பார்
முன்னை ஊழ்வினையினால் முடிக்கிலாம் என்பார்
கன்னியும் இச்சிலை காணுமோ என்பார்.

க.ரா.பால. - கார்முக

''*இச்சிலையை எவரும் நாணேற்ற முடியாது எனத் தெரிந்தும் இதைக் கொணரும்படி அரசன் ஏன் பணித்தான்? இதை வளைத்து நாணேற்றுவதைக் கன்யா சுல்கமாக வைத்தது அறிவீனம். ஒரு வேளை முற்பிறவியிற் செய்த ஊழ்வினை உதவுமேல் வில்லை வளைப்பதும் ஸீதையை மணம் செய்து கொள்வதும் நடக்கலாமே! (ஊழ்வினை என்பது அவரவர் பாப புண்யச் செயல்களுக்கேற்ப பலனை பகவான் ஸங்கல்பிப்பதாகும். அவதரிப்பதும், வில்லை முறித்து, ஸீதையை மணம் செய்து கொண்டு காடு ஏகி, ராவண ஸம்ஹாரம் பண்ணுவது என்பதும் அவன் ஸங்கல்பித்தது தானே) ஸீதை இச்சிலையைப் பார்த்திருப்பாளாயின் இதைக் கன்யா சுல்கமாகவைப்பதைத் தடுத்திருப்பாள். அவள் முன்பே இதைப் பார்க்கவில்லை போலும்'' இவ்வாறு வில்லைச் சுமப்பவர்களும், சுமந்து கொணர்வதைப் பார்ப்போரும் பேச, வில் யாகசாலை மண்டபத்தை (வேள்விச்சாலையை) வந்தடைந்தது.*

ஜனகர்: ''முனிவரே! இதோ வில் வந்துவிட்டது. நீர் பார்க்க விரும்பி யது இந்த வில்தான். பல அரசர்களால் போற்றப்பட்டது. எங்களால் இச் சிவதனுஸ் பூஜிக்கப்பட்டு வருகிறது. இந்த வில்லை வளைப்பதற்கும், காது வரை இழுப்பதற்கும், நாண் கயிற்றை இழுத்து மற்றொரு நுனியில் கட்டுவதற்கும், அம்பைப் பூட்டுவதற்கும், நாண் கயிற்றை இழுப்பதற்கும், வலிமையைப் பார்ப்பதற்காக ஆட்டுவதற்கும் தேவர்களாலும் முடியவில்லை. அஸுரர், ராக்ஷஸர்களாலும் முடியவில்லை. கந்தர்வர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள் ஆகியோரும் பயந்து திரும்பினர். இப்படியிருக்க மனிதர்கள் எம்மாத்திரம்! இத்தகு வில்லை உம்முடன் வந்த ராஜகுமாரர்கட்குக் காட்டும்.''

ராஜகுமாரர்கள் அருகில் தானே இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து ''பெட்டியிலுள்ள வில்லைப்பாருங்கள்'' என்று ஜனகர், தான் நேராகக் கூறாது, முனிவரைப் பார்த்து வில்லைக் காட்டும் என்றது. ஏன்? வில்லைப் பார்க்க விரும்புகிறார்கள் என்று சொன்னது முனிவரானபடியால் முனிவரிடம் விண்ணப்பிப்பதே ஒழுங்கு முறையாகும், நிற்க, தானே அவர்களிடம் சொல்ல, அவர்கள் வில்லை எடுக்க முடியாது போனால் தன் நோக்கம் பழுதாகிவிடும். ஏனெனில் பல அரசர்களுக்குத் தான் காட்டியதில் அவர்கள் வெற்றி பெறவில்லை. தனது துரதிருஷ்டம் (பாக்யமின்மை) அவர்களைப் பற்றிக் கொண்டிருக்கலாம். வந்த முனிவர் தம் வாயால் சொன்னால் அவர் அனுக்ரஹம் காரணமாக ராமன் நாணேற்ற நம் நோக்கம் வெற்றி பெறலாம் என எண்ணியே அவர்களை ''வில்லைப்பார்'' எனத் தானே சொல்லவில்லை போலும்.

ராமா! வில்லைப் பார்!

विश्वामित्रस्तु धर्मात्मा श्रुत्वाजनकभाषितम्
वत्स राम धनुः पश्य इति राघवमब्रवीत्

விஸ்வாமித்ர: து தர்மாத்மா ஸ்ருத்வா ஜனகபாஷிதம் ।
வத்ஸ ராம தனு: பச்ய இதி ராகவம் அப்ரவீத் ॥

வா.ரா. பால. - 67

''பெரும் பாக்யம் பெற்ற முனிவரே! இந்த ராஜபுத்ரர்கட்கு இவ் வில்லைக் காட்டும்'' என்றார் ஜனகர். பரமதார்மிகராகிய விஸ்வாமித்ரரோ ஜனகரின் சொல்லைக் கேட்டதும், தான் அழைத்து வந்த இருவரையும் பார்த்துக் கூறாமல், ராமனைப் பார்த்துப் பேசினார்; தெளிவாகப் பேசினார்; அழகாகப் பேசினார்; மிக அழகாகப் பேசினார்: ''குழந்தாய் ராமா! வில்லைப்பார்'' என்று. இச்சிறு சொற்றொடரில் எவ்வளவு அழகு, ஜாடை, தொனி, வத்ஸ! குழந்தாய்! என்றதும் இளைய பெருமாள் விரைந்து எழுந்தார். இருவருள் குழந்தை எனும் சொல் சிறியவனைத் தானே குறிக்கும். ஜனகர் முன்பு பேசும் பொழுது ''நிர்வீரம் உர்வீதலம் (இப்பூவுலகு வீரனற்றது)'' என்றார். ஏன்? எவருமே இவ்வில்லை அசைக்கக் கூட முடிய வில்லையே! இதைக் கேட்டதிலிருந்து லக்ஷ்மணனின் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. 'நாமிருக்க உலகு வீரன் அற்றதாக எப்படி ஆகும்' என்று, எனவே வத்ஸ! என்றதுமே ஆத்திரத்துடன் எழுந்தான். முனிவர் பார்த்தார். ஸீதை ராமனுக்கு உரியவளாயிற்றே. லக்ஷ்மணனோ கோபக்காரன். அவன் நாணேற்றிவிட்டால் எல்லாம் விபரீதமாகி விடுமே, என ராமனைப் பார்த்து,

''வத்ஸ! ராம!'' என்றார். இலக்குவன் அமர்ந்தான். ராமன் எழுந்தான். அவனை நோக்கி ''தனு: பஸ்ய, வில்லைப்பார்'' என்றார். வில்லை (ஆரோபய) நாணேற்று என்றல்லவா கூறவேண்டும்? முனிவர் அவ்வாறு கூறவில்லை. ஏன்? மாற்றான் பிள்ளைக்கு அதிசயப் பொருளைக் காட்டலாமே ஒழிய கொடிய வேலையில் ஏவுவது தகாததல்லவா? வேண்டுமானால் நாணேற்றும் விஷயத்தை ராமனே முடிவு செய்து கொள்ளட்டுமே.

முனிவர் ''வத்ஸ பஸ்ய'', குழந்தாய் பார் என்றார். அவனை உத்ஸாஹப்படுத்தி ''வீர! ராம! பஸ்ய'' என்றல்லவோ கூறவேண்டும். ஆம், எனினும் இளங்கன்று பயமறியாதே. எனவே ''ஆராயாமல் தூக்கி வில்லின் இடுக்கில் அகப்பட்டுக் கொண்டால், அவன் தந்தைக்கு அவன் அல்லனோ. பதில் (ஜவாப்) சொல்ல வேண்டும்'' என்பதால் ''பார்'' என்றார். உலகில்

குழந்தைகள் தன்னால் தூக்க முடியாத பளுவான பொருளை முக்கிமுனகி இடுப்பளவு தூக்கிவிடும். ஆனால் குனிந்து கீழே வைக்க முடியாது பயந்து அழும். அப்பொழுது யாராவது ஓடிவந்து அதை வாங்கிக் கீழே வைப்பதைப் பார்த்திருக்கிறோம். அதுபோன்ற நீ, வில்லைத் தூக்கிய பிறகு மீண்டும் அதைப் பெட்டியில் வைக்க முடியாது தவிப்பாயாகில், அதை வாங்கி வைக்க யாரும் இங்கே கிடையாது. ''பஶ்ய: த்ருசிர்ப்ரேக்ஷணே'' நன்கு பார், ஆராய்ந்து பார் என்று பொருள். உன்னால் எடுக்கவும், நாணேற்றவும், பின்னர் பெட்டியில் வைக்கவும் முடியுமா? என்பதை நன்கு ஆராய்ந்து செயல்படு'' என்றாராம்.

''பஶ்ய'' பார் என்றார். நாணேற்று என்று சொன்னால் ஒரு வேளை நாணேற்ற முடியாமல் தோல்வியுற்றால் சபையோர்கள் ''ராஜபி: ச மஹா வீர்யை: அசக்தை: பூஜிதம் புரா'' மஹா வீரர்களான அரசர்களே அசைக்க முடியாமல் வில்லை வணங்கிச் சென்றனர். பாவம் இந்த சின்ன பையன் என்ன பண்ணுவான்? ''விஶ்வாமித்ர: மஹாமுனி'' எனப் புகழப் படும் இவருக் கன்றோ புத்தி வேண்டும் என நகைப்பார்களே!

முனிவர் ''பஶ்ய'' பார் என்று ஜாடையாகச் சொன்னார். என்ன எண்ணத்தோடு முனிவர் சொன்னார் என்பதை அறிந்து ராமன் செயல்பட வேண்டும். முனிவரின் எண்ணம் என்ன? ராமனுக்கு ஸீதையை மணம் புரிவித்து, கல்யாணராமனாக ஸீதாராமனாக அவனைத் தசரதரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது.

தன் புனைந்த சடை முடி துளக்கிப் போரேற்றின்
முகம் பார்த்தான்
வனைந்த(து) அனைய திருமேனி வள்ளலும்
அம்மாதவத் தோன்
நினைந்த எலாம், நினைந்து அந்த நெடுஞ்சிலையை
நோக்கினான்.

க.ரா. பால. - கார்முக

வனை: எழுதிய

கௌசிக முனிவர் சடைகளோடு கூடிய தன் தலையை ஜாடை காட்டுவது போல அசைத்து, போர் வீரனாய் ரிஷபம் (காளை) போன்று கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கும் ராமனின் முகத்தை, ''நீ இவ்வில்லை அஞ்சாது எடுத்து நாணேற்று'' எனக் குறிக்கும் முறையில் பார்த்தார். உடனே சித்திரத்தில் எழுதியது போன்று பேரழகு படைத்த திருமேனியை— (திருவுக்கு) ஸீதைக்கு உரிய சரீரத்தை உடையவனும், வள்ளலும் ஆன (தன்னையே ஸீதைக்கு அளிக்கப் போவதால் பெருங்கொடையாளனான) ராமனும் அம்மாதவத்தோனாகிய விஶ்வாமித்திரனின் கருத்தை நன்கு

உணர்ந்து, வில்லை நோக்கினான். 'நம்மைவிட வில் மிக நீண்டது. அதை எங்கே பிடித்தால் உயரே எடுக்க சமநிலை (balance) சரியாக இருக்கும்'. எப்படி நிறுத்தினால் தன் மீது சாயாமல் விழாமல் இருக்கும் எனும் ஆலோசனைகளோடு பார்த்தானாம். ஆக குறிப்பறிந்து செயலாற்ற முயன்றான். ''இங்கிதக்ஞா: ச கோஸலா:'' கோஸல நாட்டு மன்னனும் மக்களும் தம்மோடு பேசுபவரின் குறிப்பை (மனதில் புதைந்திருக்கும் கருத்தை) உணர்ந்து கொள்வதில் சிறந்தவர்கள். ராமனைப் பற்றிக் கேட்பானேன்.

உலகில் குறிப்பை (ஜாடையை) உணர்ந்து செயல்படாதவர்கள் வாழ்க்கையில் துன்புறுவர். ஒருவர் சாப்பாட்டு வேளையில் நண்பர் வீட்டுக்குச் சென்றார். இருவரும் வாசல் திண்ணைகளில் எதிரெதிராக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். கணவர் உள்ளே சாப்பிட வரவில்லையே என்று அழைக்க அவர் மனைவி வந்து ரேழியில் கதவு மூலையில் நின்று கொண்டிருந்தாள். புருஷன் கையால் ஜாடையாக ''என் நண்பரும் சாப்பிட வருகிறார். சிறிது நேரத்திற்குள் தகுந்த ஏற்பாடுகளைச் செய்'' என்று கூறினார். நெடு நேரமாகியும் மனைவி சாப்பாட்டிற்கு அழைக்க வரவில்லை. இவருக்கோ நல்லபசி, அப்பளம், பொறியல், வதக்கல், பாயஸம் எல்லாம் நடக்கிறதோ என எண்ணியிருந்தார். எழுந்து உள்ளே போய்ப்பார்த்தார். அவளோ தான் சாப்பிட்டு விட்டு, பாத்ரங்களைத் துலக்கிக் கவிழ்த்து விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். எழுப்பிக் கேட்டார். நீங்கள்தான் ''இந்தப் பாவி வேறு வந்திருக்கிறான். நானும் சாப்பிடவில்லை. நீ சாப்பிட்டு விட்டுத் தூங்கு என்று ஜாடை காட்டினீர்களே'', என்றாள். இம்மாதிரி குறிப்பறிந்தால் என்ன செய்வது? இராமன் இத்தகையவன் அல்லனே.

இவர்கள் எதிரே தான், பெட்டியில் வில் இருக்கிறது. எனவே ''பச்ய'' பார் என்றாலே போதுமே. ''தனு: பஶ்ய'' வில்லைப்பார் என்று ஏன் சொன்னார்? புதிதாக வந்த இடமான படியால் ராமன் சுற்றிலும் பார்த்துக் கொண்டிருக்கிறான். உயரே மாடத்தில் ஸீதையும் என்ன நடக்குமோ எனப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். எனவே மேலே ஸீதையை ராமனும் பார்த்துக் கொண்டிருப்பான் போலும், இதை உணர்ந்த முனிவர் 'இப்பொழுதே அவளைப் பார்த்து என்ன பயன்? இதோ வில்லைப் பார். வில்லை எடுத்தாலன்றோ அவள் கிட்டுவாள்' எனக்கருதிச் சொன்னாராம்.

''வத்ஸ ராம''! குழந்தாய்! ராமா! எனக் கூறாமல் வீர ராம! வீரராகவா என அழைத்திருக்கலாம். ராமன் வீரத்தைக் காட்ட வேண்டிய இடம் இது. எனவே வீர! ராம! என அழைப்பதே முற்றிலும் பொருத்தமாகும்.

முனிவருக்கு தம் யாகத்தைக் காத்த ராமனுக்கு வீரத்தை நினைவு படுத்த. வேண்டிய தேவையில்லை. ராமனுக்கு உணர்த்த வேண்டியது வேறொன்று உண்டு. எனவே வத்ஸ! ராமா! என்றார். ராமா! குழந்தை களாகிய இந்நிலையிலேயே எழுந்து சென்று வில்லைப் பார். குழந்தை

சிறுவன் என்ற நிலையிலேயே செய்ய வேண்டியதைச் செய். முன் ஒரு அவதாரத்தில் நீ உபேந்திரனாக அவதரித்து, வாமனனாக பலியின் வேள்விக்குச் சென்று.

अस्मत् पादत्रयाक्रान्तां देहि भूमिं विभो तदा

''அஸ்மத் பாத த்ரயாக்ராந்தாம் தேஹி பூமிம் விபோ ததா ॥

''ப்ரபுவே! எனது இந்தக் காலினால் மூன்றடி மண் அளந்து கொடும், அதுவே எனக்குப் போதும்'' என்று இரந்து கேட்டாய்.

उदके स्पृष्ट मात्रेतु विश्वरूपधरो हरिः

तत्रस्थ एव ववृधे येन पूर्णं जगत्रयम्

உதகே ஸ்ப்ருஷ்டமாத்ரேது விஸ்வரூப தர: ஹரி: ।

தத்ரஸ்த ஏவ வவ்ருதே யேன பூர்ணம் ஜகத் த்ரயம் ॥

அப்போது மஹாபலி ''தானமாக நீரை தாரை வார்த்தவுடன், அங்கிருந்தபடியே வானளாவிய த்ரிவிக்ரமாவதாரம் எடுத்து அளந்தாயே. அதே போன்று இங்கும் வில்லைப் பார்த்ததும் அது பெரிதாக இருக்கிறதே என நினைத்து தனுர் பஞ்ஜகன், (வில்லை ஒடிப்பவன்) அவதாரம் எடுத்துவிடாதே. ''ஆத்மானம் மானுஷம் மன்யே'' என்னை மனிதனாக தசரத புத்ரனாகக் கருதுகிறேன்'' என்று கூறிய படி இதே நிலையிலேயே வில்லை நாணேற்று என்றாராம்.

''வத்ஸ ராம தனு: பஶ்ய'', ராமம் என்றால் விளையாட்டுக் கருவி, ''ராமதனு'' விளையாடும் வில், ''குழந்தாய்! இது நீ விளையாடும் வில், ஐயாயிரம் பேர் தூக்கி வந்தார்களே என மலைக்காதே, பெட்டிதான் கனம், வில்லை அஞ்சாது எடு'' என்றாராம்.

''ராமதனு: (ரமயதீதி ராமம்)'' ''இது மகிழ்விக்கும் வில். குழந்தாய்! நீயோ எல்லோரையும் மகிழ்விப்பதற்காக அவதரித்தாய். அத்தகைய உன்னை (ஸீதையை மணம் செய்வித்து) மகிழ்விப்பதற்காக வந்தது இந்த வில், எனவே அஞ்சாது எடு.''

ராமதனு: (ராமஸ்யதனு:) ராமனாகிய உன்னுடைய வில் இது. ''நான் உனக்கு முன்பே ரௌத்ரம், பாசுபதம் முதலிய அஸ்த்ர மந்த்ரங்களை உபதேசித்திருக்கிறேன் அல்லவா! அம்மந்த்ரங்களை ஜபித்தால் மிக எளிதாக எடுக்கத் தக்கதாக இவ்வில் ஆகிவிடும், எனவே தயக்கமின்றி எடு.''

''ராமதனு:'' ஆச்சரியத்தை விளைவிக்கும் வில். ''நாணேற்றும் காலத்திலேயே, இது ஒடியப் போகிறது. இத்தகு வலிவற்ற இந்த வில்லையா இவ்வளவு பேர் சுமந்தனர்! இதனிடமா தன்னைச் சக்ரவர்த்தி என மார் தட்டும் அரசர்கள் எல்லோரும் தோற்று, வலுவிழந்து ஓடினார்கள்! என்று

உனக்கும், பிறருக்கும் ஆச்சரியத்தை விளைவிக்கப் போகும் வில்லைச் சென்று பார்.''

''ராமதனு:'' மங்களமான வில். ''அழகிய வில். விச்வகர்மாவினால் இரண்டு விற்கள் செய்யப்பட்டு ஒன்று மஹாவிஷ்ணுவிற்கும், மற்றொன்று சிவன், சங்கரன் என்று பெயர் கொண்ட மங்களதேவதைக்கும் அளிக்கப் பட்டது. எனவே மங்கள தேவதையின் இந்த வில்லானது பிராட்டியின் சேர்த்தியாகிய மங்களத்தை உனக்கு உண்டு பண்ணிப் பின்பு திவ்ய தம்பதி களாகிய உங்களுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவிக்கப் போகும் எனக்கும், என் போன்ற தண்டகாரண்யவாசிகட்கும், தேவர்கட்கும், இவ்வுல கினர்க்கும் மங்களத்தை விளைவிக்கப்போகிறது.''

''பஶ்ய:'' இத்தகு வில்லைப் பார், காண்பிக்க வேண்டியது என் கடமை. இனி உன் திறமை.''

''இதி ராகவம்'' என்று ராகவனுக்குச் சொன்னார். ''நீயோ உயர்ந்த ரகுகுலத்தில் தோன்றியவன். அந்த ரகுகுலத்திற்கு இழுக்கு வராமல் பார்த்துக் கொள்.''

ராமனின் செயலழகு

महर्षेर्वचनाद्रामः यत्र तिष्ठति तद्धनुः
मञ्जूषां तामपावृत्य दृष्ट्वा धनु रथाब्रवीत्

மஹர்ஷே: வசனாத் ராம: யத்ரதிஷ்ட திதத்தனு: ।
மஞ்ஜூஷாம் தாம் அபாவ்ருத்ய த்ருஷ்ட்வா தனு: அதாப்ரவீத் ॥

வா.ரா. பால. - 67

முனிவர் வில்லைப் பார் என்று சொல்ல ராமன் எழுந்தான்.

பொழிந்த நெய் ஆஹுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கனல் என்ன எழுந்தான்
அழிந்தது வில், என விண்ணவர் ஆர்த்தனர்
மொழிந்தனர் ஆசிகள் முப்பகை வென்றார்.

க.ரா. பால. - கார்முக

ஹோம குண்டத்தில் தணல் கனலை வீசிக் கொண்டிருக்கும். மந்திரங் களைச் சொல்லி நெய்யைப் பொழிவார்கள். அங்கிருந்து அக்னி கிளர்ந்து, குபீரென வலமாகப் பொங்கி மேலே எழும். அது போல, ஆஹுதி நெய் போன்று முனிவரின் சொல் காதில் விழ சடக்கென ராமன் எழுந்தான். விண்ணவராகிய தேவர்கள் இவன் எழுந்த வேகத்தைப் பார்த்து அவசரமாக ''இனி தொலைந்தது வில் அழிந்தது வில்'', எனக் கூச்சலிட்டனர். காமம், கோபம், மோஹம் ஆகிய உட்பகையை வென்ற முனிவர்கள் ஆசிகள் கூறினர் ராமன் அதன் மூடியைத் திறந்தான். எவ்வாறு சென்றான்?

மாக மடங்கலும், மால் விடையும் பொன் -
நாகமும் நாகமும் நாண நடந்தான்.

க.ரா.பால. - கார்முக

மடங்கல்: சிங்கம், விடை: எருது, நாக: மலை.

வானத்தை முட்டும்படியாகக் குதித்து நிமிர்ந்து எழும் சிங்கம் போல் எழுந்து, காளையின் மிடுக்கு நடைபோல் ஒய்யாரமாக நடந்து சென்று வில்லின் அருகில் மஹாமேரு மலைபோல் கம்பீரமாகச் சற்று நின்று, யானை துதிக்கையை நீட்டுவதுபோல் கையை நீட்டி வில்லை எடுத்தானாம். (இங்கு வீரம், பெருமிதம், திண்மை, கம்பீரம் ஆகிய நான்கும் தோன்ற நடந்தான் என்பது நோக்கத்தக்கது.)

निष्कास्य कण्ठात् हारादीन् कटिं बद्ध्वा तदाप्रभुः ।
परस्परं तदा प्रोचुः किं मूढोऽस्ति शिशु स्त्वयम् ॥

क्वाऽयं बाल: कोमलाङ्ग: क्वेदं चापं सुदुर्धरम् ।
किं चातक: तृषाक्रान्त: सागरं शोषयिष्यति ॥
நிஷ்காஸ்ய கண்டாத் ஹாராதீன் கடிம் பத்வா ததா ப்ரபு: ॥
பரஸ்பரம் ததா ப்ரோசு: கிம்மூட அஸ்திசிக: துஅயம் ॥
க்வஅயம் பால: கோமளாங்க: க்வஇதம் சாபம் ஸுதுர்தரம் ॥
கிம் சாதக: த்ருஷாக்ராந்த: ஸாகரம் சோஷயிஷ்யதி ॥

ஆனந்த ராமாயணம்

ராமன் எழுந்ததும் கழுத்தில் தான் அணிந்திருந்த ஹாரங்களைக் கழற்றி வைத்துவிட்டு கச்சை கட்டிக் கொண்டு புறப்பட்டானாம். இதைப் பார்த்த அரசர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனராம். ''என்ன இந்தக் குழந்தை முட்டாளாக இருக்கும் போலிருக்கிறதே! இளமை தவழும் இவன் மேனி எங்கே? அசைக்கவோ, தூக்கவோ முடியாத இந்த வில் எங்கே? ஒரு சிறிய சாதகப் பறவை அதிக தாகம் என்பதற்காக கடல் நீர் முழுவதையும் பருக முடியுமா?''

हे शम्भो ! हे रमाकान्त ! हे विधे ! अस्मत्पुराकृतै:
व्रतदानादि पुण्यैश्च चापं सज्जीकरोत्वयम्
युष्माभिर्नस्सुकृतैश्च कर्तव्यं पुष्पवद्धनु:

ஹே சம்போ! ஹே ரமாகாந்த! ஹே விதே! அஸ்மத் புராக்ருதை: ।
வ்ரத தானாதி புண்யை: ச சாபம் ஸஜ்ஜிகரோது அயம் ॥
யுஷ்மாபி: ந: ஸுக்ருதை: ச கர்த்தவ்யம் புஷ்பவத் தனு: ॥

ஆனந்த ராமாயணம்

மேல் மாடத்திலுள்ள பெண்கள்: ''இவ் வில்லின் தேவதையான சம்புவே! லக்ஷ்மீ காந்தனான மஹாவிஷ்ணுவே! ஏ நான்முகனே! நாங்கள் இதுவரை வாழ்நாளில் இயற்றிய விரதங்கள், தானங்கள், புண்யங்கள் அனைத்தின் பலனையும் ராமனுக்கு அளிக்கிறோம். அவன் இவ்வில்லை எங்கள் ஸீதைக்காக நாண் ஏற்றட்டும். நீங்கள் உங்கள் ஆசியினால், தூக்க முடியாத இந்த வில்லை மலர்போன்று லேசாக இருக்கச் செய்யுங்கள்'' என வேண்டினர். மேலும் சில பெண்கள் :

வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்
கொள் என முன்பு கொடுப்பதை அல்லால்
வெள்ளம் அணைத்தவன் வில்லை, எடுத்து இப்
பிள்ளை முன் இட்டது பேதைமை என்பார்.

க.ரா. பால. - கார்முக

''பெருங்கொடையாளனாகிய ஜனகமஹாராஜன் (ஸீதையின் திருமணத்தை விரும்பியிருப்பானேயாகில்) அழகும், பொலிவும், ஏற்றமும், கல்வியும் பொருந்திய ராமன் கிடைத்திருக்கும் பொழுது உடனே மணம் செய்து கொடுக்க வேண்டியதுதானே! அவ்வாறு செய்யாது கங்கையைத் தலையில் தாங்கும் சிவனின் வில்லை எடுத்துவரச் செய்து அவன் முன் வைத்தது அறிவீனமல்லவா. சொந்த மகளானால் இந்நேரம் கல்யாணம் முடிந்திருக்கும். இவள் (ஸீதை) ஏதோ பூமியில் கண்டெடுக்கப்பட்டவள் தானே. எப்படிப் போனால் என்ன என்று மனத்தில் ஆர்வமில்லாமல் இருக்கிறான்'' என்றனர்.

एतस्मिन्नन्तरे सीता रामं दृष्ट्वा सभाङ्गणे
दिव्य प्रसाद संरूढा सखीभिः परिवेष्टिते
क्व रामः सुकुमाराङ्गः क्वेदं चापं नगोपमम्
हे देवताः !, सर्वैरेतत् महच्चापं करणीयं तु पुष्पवत्
चतुर्दशवत्सराणि मुनिवृत्त्यनुवर्तिनी
विचरामिवने चाहं धनुः सज्जं करोत्वयम् ।

ஏதஸ்மின் அந்தரேஸீதா ராமம்த்ருஷ்ட்வா ஸபாங்கணே ।
திவ்ய ப்ராஸாத ஸம்ரூடா ஸகீபி பரிவேஷ்டிதே ॥
க்வ ராம: ஸுகுமாராங்க: க்வ இதம் சாபம் நகோபமம் ॥
ஹேதேவதா:!, ஸர்வை: ஏதத் மஹத்சாபம் கரணீயம்து புஷ்பவத் ।
சதுர்த்தஶவத்ஸராணி முனிவ்ரத்யனுவர்தினீ ।
விசராமி வனே சாஹம் தனு: ஸஜ்ஜம் கரோது அயம் ॥

ஆனந்த ராமாயணம்

ஸபா மண்டபத்தில் ராமன் இருப்பதை அறிந்த ஸீதை தன் தோழிமார் களுடன் மாடிக்கு ஏறிச் சென்றாள். அங்கிருந்து ராமன் விற்பெட்டியின் அருகே செல்வதைப் பார்த்துப் பேசினாள்: ''இவருடைய ஸுகுமாரமான அழகிய மேனி எங்கே? மலைபோன்ற இந்த வில் எங்கே? ஏ தேவதைகளே! அவர் கை வைக்கும்போது மிக கனமான இந்த வில்லை மலர் போன்று லேசானதாகச் செய்யுங்கள், அப்படிச் செய்வீர்களாகில் நான் முனிவர்களைப் போன்று காய்கனி கிழங்குகளைப் புசித்துக் கொண்டு காட்டில் பதினான்கு ஆண்டுகள் விரதம் இருப்பேன். இவர் வில்லை எடுத்து நாணேற்றட்டும்'' என்று தேவதைகளை வேண்டினாள்.

இவ்வாறு பலவாறாகப் பல்லோர் பேசிக் கொண்டிருக்க ராமன் வில்லின் அருகே சென்று தம்பியைப் பார்த்துப்பேசினான்.

ना वृष्टं न च टङ्कितं न नमितं न उत्थापितं स्थानतः ।
केनापीदं अहो महत् धनुरिदं निर्वीरं उर्वीतलम् ॥

நாக்ருஷ்டம் நசடங்கிதம் நநமீதம் நஉத்தா பிதம்ஸ்தானத: ।
கேனா பி இதம் அஹோ மஹத் தனு: இதம் நிர்வீரம் உர்வீதயம் ॥

ஹனுமன் நாடகம்

''லக்ஷ்மணா! இப்பெரிய வில்லை இதுவரை எவரும் இப்பெட்டியினின்றும் எடுக்கவில்லை. எடுத்து நாண் கயிற்றை இழுத்து வளைக்கவும் இல்லை. நாணைக்கட்டி அதை சுண்டிப் பார்க்கவும் இல்லை. இப்பூவுலகில் வீரனே இல்லை போலும்''.

ஆசியே துணை

பின்னர் ராமன், ஜனகர், கௌஶிகர் மற்றுமுள்ள பெரியோர்களைப் பார்த்துப் பேசினான் :

इदं धनुर्वरं ब्रह्मन् संस्पृशामीह पाणिना
यत्नवांश्च भविष्यामि तोलने पूरणेऽपिवा
बाढ मित्यब्रवीत् राजा मुनिश्च समभाषत ।
लीलया स धनुर्मध्ये जग्राह वचनान्मुने:
पश्यतां नृसहस्राणां बहूनां रघुनन्दन:
आरोपयित्वा धर्मात्मा पूरयामासवीर्यवान्
तद्बभञ्ज धनुर्मध्ये नरश्रेष्टो महायश:

இத்ம் தனுர்வரம் ப்ரஹ்மன்! ஸம்ஸ்ப்ருஶாமி இஹபாணினா ।
யத்னவான் சபவிஷ்யாமி தோலனே பூரணே அபிவா ॥
பாடம் இதி அப்ரவீத் ராஜா முனி: ச ஸமபாஷத ॥
லீலயா ஸ தனுர்மத்யே ஜக்ராஹ வசனாத்முனே: ।
பச்யதாம் ந்ருஸஹஸ்ராணாம் பஹூனாம் ரகுநந்தன: ।
ஆரோபயித்வா தர்மாத்மா பூரயாமாஸ தத்தனு: ।
தத் பபஞ்ஜ தனுர்மத்யே நரச்ரேஷ்ட: மஹாயஶ: ॥

வா.ரா. பால. - 67

மஹான்களின் ஆசீர்வாதம் எல்லாப் பயன்களையும் விளைவிக்க வல்லது. மஹான்களின் அனுமதியுடன் தொடங்கப் பெறும் எப்பணியும் இடையூறின்றி மங்களமாகப் பூரத்தியை அடையும். ''ரிஷீணாம் புன: ஆத்யானாம் வாசம் அர்த்த: அனுதாவதி'' முன்னோர்களாகிய முனிவர்களின் சொல்லை அதன் பொருள் பின்பற்றுமாம். அதாவது அவர்கள், சொற்படியே எதுவும் நடக்கும். ஆகையினால் 'தான்' கல்யாணங்களில் ஸ்வஸ்தி (மங்களம்) ப்ரஹஸ்பதி ஸ்வாமி சொல்ல பெரியோர்கள் ''ததாஸ்து'' அப்படியே ஆகட்டும் என்பர்.

(நமது க்ருஹங்களில் அசுத்தி ஏற்பட்ட போது புண்யாஹவாசனம் எனும் சுபகர்மாவைச் செய்கிறோம். அப்பொழுது ''பவத்பி: அனுஜ்ஞாத: புண்யாஹம் வாசயிஷ்யே'' அமர்ந்திருக்கும் பெரியோர்களைப் பார்த்துத் ''தங்களுடைய அனுமதியைப் பெற்றுப் புண்யாஹ மந்த்ரங்களைச் சொல்லச் சொல்லுகிறேன்'' என்று நாம் பிரார்த்திக்க அவர்கள்''வாச்யதாம்'' சொல்லச் சொல்லுங்கள் என அனுமதி அளித்த பிறகு எல்லோரும் சேர்ந்து புண்யாஹ மந்த்ரங்களைச் சொல்லுகிறோம்.)

எனவே ஸர்வலோக சரண்யனான ராமபிரான் தொல்வழியான நல்வழியை நமக்குக் காட்டுவதற்காக மஹான்களின் அனுமதியை வேண்டு கிறார்.

கர்மானுஷ்டானபரரான ஜனக மஹாராஜரையும், தர்மாத்மாவான விஸ்வாமித்ர முனிவரையும் பார்த்துப் பேசுகிறார். ''இந்த உயர்ந்த வில்லை என் கையினால் தொடட்டுமா? தொட்டு எடுத்து, ஆட்டிப் பார்த்து, அதன் பளுவை (கனத்தை) அறிந்து, வளைக்க முயற்சிக்கட்டுமா?'' எனக் கேட்க அவர்களும், ''அப்படியே செய்'' என அனுக்ரஹிக்க, முனிவரின் அனுமதி யையே தனக்குப் பலமாக (உதவியாக)க் கொண்டு அச்சமின்றித் தயங்காது விளையாட்டாக வில்லின் நடுப்பகுதியைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான். நிறுத்தப்பட்டவுடனே, புகழ்பெற்ற அந்த வில் நடுவிடத்தில் முறிந்தது.

தொட்டதும் இற்றது வில்

रामोऽपि तद्धनुष्कोटिं स्पृष्ट्वा पादाङ्गुलात् ततः
उन्नतं चाप मारोप्य वभञ्जे मोहिताजनाः

ராமோபி தத் தனுஷ்கோடிம் ஸ்ப்ருஷ்ட்வா பாதாங்குலாத் தத: ।
உந்நதம் சாபம் ஆரோப்ய பபஞ்ஜே மோஹிதா: ஜனா: ॥

பாத்ம புரணம்

ராமன் வில்லின் ஒரு நுனியை, தன் கால் கட்டை விரலினால் அழுத்தி அந்த வில்லின் மற்றொரு நுனி, மேலே எழ கையால் அதைப் பிடித்து நாணேற்றினான் என்ற பாத்ம புராணம் கூறும்.


பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் 'என்ன ஆகுமோ?' எனக் கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, நாண் கயிற்றை மற்றொரு நுனியில் கட்ட ஒரு கையால் வில்லின் நடுப்பகுதியைப் பிடித்துக் கொண்டு மற்றொரு கையால் நாண் கயிற்றை இழுத்தார்.

गृहीत हर कोदण्डे रामे परिणयोन्मुखे ।
पस्पन्द नयनं वामं जानकी जामदग्नियोः
पृथ्वी याति विनम्रतां फणिपतेः नम्रं फणामण्डलम्
बिभ्रत्क्षुभ्यति कूर्मराज सहिताः दिक्कुञ्जवराः कातराः
आतन्वन्ति च बृंहितं दिशिभटैः सार्धं धराधारिणः
वेपन्ते रघुपुङ्गवे पुरजितः सज्यं धनुः कुर्वति ॥

க்ருஹீத ஹர கோதண்டே ராமே பரிணயோன்முகே ।
பஸ்பந்த நயனம் வாமம் ஜானகீ ஜாமத க்னியோ: ॥
ப்ருத்வீ யாதி வினம்ரதாம் பணிபதே: நம்ரம் பணாமண்டலம் ॥
பிப்ரத் க்ஷுப்யதி கூர்ம ராஜ ஸஹிதா: திக்குஞ்ஜரா: காதரா: ।
ஆதன்வந்தி ச ப்ரும்ஹிதம், திஶிபடை: ஸார்தம் தராதாரிண: ।
வேபந்தே ரகுபுங்கவே புரஜித: ஸஜ்யம் தனு: குர்வதி ॥

ஹனுமன் நாடகம்

ராமன் வில்லைக் கையில் எடுத்ததும் எதிர்பாராது இரண்டு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தனவாம். இதுவரை எவராலும் செய்ய முடியாத செயலைச் செய்ததினால், ராமன் மாவீரன் எனப்புகழ் பெற்றான். ஸீதையின்



தடுத்து இமையால் இருந்தவர், தாளில்
மடுத்ததும், நாண் நுதி வைத்ததும், நோக்கார்;
கடுப்பினில் யாருமறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்.

திருமணமும் உறுதியாயிற்று. இவ்விரண்டையும் உணர்த்தும் வகையில் ஸீதைக்கும் பரசுராமருக்கும் இடது கண் துடித்ததாம்.

चक्षुर्वामं मृगदृशः जयकारिभृशं त्वरा
तथैव पुरुषस्यारात् स्फुरितंभयशंसकम्

சக்ஷு: வாமம் ம்ருகத்ருஶ: ஜய்காரி ப்ருஶம் த்வரா ।
ததேவ புருஷஸ்ய ஆராத் ஸ்புரிதம் பயஶம்ஸகம் ॥

பெண்களுக்கு இடது கண் துடித்தால் விரைவில் வெற்றி கிட்டும். ஆண்களுக்கு இடது கண் துடித்தால் பயத்தைக் குறிக்கும். பரசுராமர் க்ஷத்திரிய பூண்டு இல்லாது அழிக்க முற்பட்டவர். அவருக்கு ராமனால் பயம் விளையப் போவதையும், ஸீதைக்கு திருமணம் நிகழப் போவதையும் கண் துடிப்பு அறிவுறுத்தியதாம். வில்லை நேராக நிறுத்தி நாணேற்றியதும் பூ மண்டலமே அமுங்கியதாம். உடனே பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனுடைய படமெடுத்த தலை கீழ் நோக்கி வணங்கியதும், மேலுள்ள உலகங்களைத் தாங்கும் கூர்மமும், (ஆமையும்) திசை யானைகளும் நடுங்கிக் கலங்கினவாம். மேலும் அச்சத்தினால் பிளிறினவாம்.

நாண் கயிற்றைச் சிறிது இழுத்ததும், குண்டு வெடிப்பது போன்றும், வானத்தில் பேரிடி இடிப்பது போன்றும் சத்தம் கேட்டது.

तस्य शब्दो महानासीत् निर्घात समनिस्वनः
भूमि कम्पश्च सुमहान् पर्वतस्येव दीर्यतः
निपेतुश्च नराः सर्वे तेनशब्देन मोहिताः
वर्जयित्वामुनिवरं राजानं तौच राघवौ ॥

தஸ்ய சப்த: மஹான் ஆஸீத் நிர்காத ஸமநிஸ் வன: ।
பூமிகம்ப: ச ஸுமஹான் பர்வதஸ்யேவ தீர்யத: ॥
நிபே து: ச நரா: ஸர்வே தேன ஶப்தேன மோஹிதா: ।
வர்ஜயித்வா முனிவரம் ராஜானம் தௌ ச ராகவௌ ॥

வா.ரா. பால. - 67

பெரும் வெப்பம் மிகுந்த புயல் காற்று ஒன்றோடொன்று மோதித் தரை மீது அறையும் பொழுது எழும் பயங்கர சப்தம், பெரிய மலைகள் திடீரெனப் பிளந்தால் எழும் ஒலி, பெரும் பூகம்பம், எல்லாம் ஏற்படவே மக்கள் எல்லோரும் மயங்கி விழுந்தனர். ஆனால் ஒரு ஆச்சரியம்! இவ்வளவு அமளியிலும் நான்கு நபர்கள் மாத்திரம் மயங்காது விழாது இருந்தனராம். விஶ்வாமித்ரர், ஜனகர், சக்ரவர்த்தித் திருமகன்களாகிய ராமர், லக்ஷ்மணர் ஆகியோர்.

''வாராரும் இளங்கொங்கை மைதிலியை மணம் புணர்வான்
காரார் திண்சிலை இறுத்த தனிக்காளை''

வாராரும்: கச்சையிட்டுத் தாங்கும்படியான, மணம் புணர்வான்: மணம் புரிவதற்காக, காரார்: மாலை, தனிக்காளை: விலக்ஷணமான வாலிபம் உடையவன்.

பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வாரும் வில்லிறுத்த செய்தியைக் கூறி 'ராமனை தனிக்காளை' எனத் துதிப்பார்.

रामे बाहुबलं विवृण्वति धनुर्वंशे गुणारोपणं
माऽभूत्केवल मात्मना तिलकिते वंशेऽपि वैकर्तने ।
आकृष्टं नितरां तदेव न परं सीतामनोऽपि द्रुतं
भङ्गः तस्य न केवलं क्षितिभुजां दोस्तम्भ दम्भस्य च ॥

ராமே பாஹுபலம் விவ்ருண்வதி தனுர்வம்சே குணாரோபணம்
மா பூத் கேவலம் ஆத்மனா திலகிதே வம்சேஅபி வைகர்த்தனே ।
ஆக்ருஷ்டம் நிதராம் ததேவ ந பரம் ஸீதா மனோஅபி த்ருதம்
பங்க: தஸ்ய நகேவலம் க்ஷிதிபுஜாம் தோஸ்தம்ப தம்பஸ்ய ச ॥

போஜன், 1 - 103

ராமன் நாணேற்றியதை போஜராஜன் தனது சம்பூ நூலில் அழகாக வருணிக்கிறான். ராமன் தன் புஜபல பராக்ரமத்தை உலகினர் நன்கு அறியட்டும் என்பதற்காக மாத்திரம் சிவதனுஸ்ஸில் நாணேற்றவில்லை. ராமன் ஸுர்ய வம்சத்தில் அவதரித்தவன். அக்குடிக்கே திலகமாக விளங்குகிறவன். இவன் நாணேற்றியதால் ஸுர்ய வம்சத்திற்குப் பெரும் புகழை அளித்தான். குணம் என்றால், நாண்கயிறு, அதை வில்லில் ஏற்றினான், குணம் என்றால் சௌர்யம், வீர்யம், பராக்ரமம் எனும் நற் குணங்களுக்கும் பெயர். இத்தகு நற்குணங்களுடையவர்களைக் கொண்டது என, ஸுர்ய வம்சத்திற்குப் பெரும் புகழைச் சேர்த்தான். மேலும் நாண் கயிற்றைக் கட்டி வில்லை இழுத்ததன்றி, ''என்றும் இனி மணமும் இல்லை'' என எண்ணியிருந்த ஸீதையின் மனதையும் பற்றித் தன்பால் இழுத்தானாம். நாணேற்றியதைப் பார்த்தவுடன் ராமனை மணக்கப் போகிறோமென மகிழ்ந்தாள் அல்லவா? ராமன் வில்லை மாத்திரம் ஒடிக்கவில்லை. நாம், நாம், என அஹங்காரம் கொண்ட அரசர்களின் புயவலித்திறனையும் ஒடித்தானாம்.

வில் ஒடித்ததும் மாபெரும் ஓசை (ஒலி) ஏற்பட்டதே அதிலும் கவித்திறனைப் பார்க்கலாம்.

रामाकर्षणभग्न कार्मुकभुवा ध्यानेन रोदोरुधा
दृप्तक्षत्र यश स्सितच्छदकुले जीमूत नादायितम् ।

वीरश्री प्रथम प्रवेश समये पुण्याह घोषायितम्
मैथिल्याः किल मानसे परिणये माङ्गल्य तूर्यायितम्

ராமாகர்ஷண பக்ன கார்முக புவா த்வானேன ரோதோ ருதா
த்ருப்த க்ஷத்ர யஶ: ஸிதச்சதகுலே ஜீமூத நாதாயிதம் ।
வீர ஸ்ரீ ப்ரதம ப்ரவேஶ ஸமயே புண்யாஹ கோஷாயிதம்
ஸீதாயா: கில மானஸே பரிணயே மாங்கல்ய தூர்யாயிதம் ॥

போஜன் 1 - 104

ராமன் வில்லை இழுத்தார். வில் இரும்பாலாகிய கனமான வில், எதிர்பாராது திடீரென ஒடிந்தது. அதனால் ஏற்பட்ட பேரொலி, பூ மண்டலம், வான மண்டலம் எங்கும் பரவியது. நாட்டில் பல அரசர்கள் பெரும் புகழுடன் வாழ்ந்தார்கள். புகழை வெண்மை நிறம் கொண்டதாக வருணிப்பது கவி மரபு. புகழை வெண்ணிற அன்னங்களாக உருவகப்படுத்தினார் கவி. அன்னங்களுக்கு மழையைக் கண்டால் அச்சம். எனவே மேகம் இடித்தால் பயந்து மூலை முடுக்குகளில் ஓடி ஒளியும், ஆக அரசர்களுடைய பெரும் புகழாகிற அன்னங்களுக்கு இவ்வொலி மேகங்களின் பேரிடியின் சத்தமாகக் கேட்டதாம், ராமன் ஒடித்த வில்லின் ஒலியைக் கேட்டதும் அரசர்கள் தம் புகழ் இழந்து வெட்கித் தலை குனிந்தார்களாம்.

இச்செயலினால் வீரலக்ஷ்மீ ராமனிடம் வந்து சேர்கிறாள். நாம் புதுமனை புகும்பொழுது வாத்திய இசை, மேளத்தின் மங்கள ஒலி, சான்றோர்களின் வேத ஒலி, ஸ்வஸ்தி வாசன ஒலி, மங்கையர்களின் மங்கல இசை, எவ்வளவு ஆர்ப்பாட்டம்! வீர்யலக்ஷ்மீ ராமனையே தன் இல்லமாகக் கருதி வந்து புகும் பொழுது இந்நன்னாளில் அனைவரும் மயங்கியதால் இம் மங்கள வில்லே தான் ஒடிந்து ஸ்வஸ்தி வாசன மங்கள இசையை ஒலிக்கச் செய்ததாம். நாணேற்றியதைப் பார்த்த ஸீதையின் மனத்தில் ராமன் மாலை யிடுவது, கைப்பிடிப்பது முதலிய திருமண நிகழ்ச்சிகள் (மானஸிக விவாஹம்) நடப்பதால் அதற்கு இவ்வொலி திருச்சின்னம் ஊதுவது, பேரீ முழங்குவது, மங்களம் பாடுவது போன்ற ஒலியாக அமைந்ததாம்.

ஒரு கேள்வி

''ராமன் நாணேற்றி வில்லை ஒடித்தான் எனில், அவனுக்கு ஸீதையை எப்படிக் கொடுப்பது, ந்யாயவாதிகள் கூடாது என்றே வாதாடுவர்.'' ஏன்? கன்யாசுல்கம் என்ன? வில்லை வளைத்தவனுக்கு ஸீதையைக் கொடுப்பது. இது தானே விதி. விதியை மீறியவனுக்குக் கொடுக்கக் கூடாதல்லவா? ராமன் விதியைக் கடந்து வரம்பு மீறி வில்லை ஒடித்துவிட்டான். எனவே வளைத்தவனுக்கே பெண் என்ற மரபு மாறிவிட்டது என திருமணத்திற்குத் தடை வரும் எனக் கருதிய வால்மீகி ''தத் பபஞ்ஜ'' அது (வில்) ஒடிந்தது

என்றார். (ராமன் ஒடிக்கவில்லை) இக்கருத்தை கம்பர் விரித்துச் சுவைபடக் கூறுவார்.

தடுத்து இமையாமல் இருந்தவர், தாளின்
மடுத்ததும், நாண் நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினை யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்.

க.ரா.பால. - கார்முக

கடுப்பினை: வேகத்தை

கூடியிருந்தவர்கள் அனைவரும் தம்மனதைக் (கண்டதை நினைக்காது) தடுத்து ஒன்றிய மனத்துடன், கண்களை இமைக்காமல் கவனமாக பார்த்துக் கொண்டிருந்தனர். கண் கொட்டினால் இராமன் வில்லை எடுப்பதையும் நாண் ஏற்றுவதையும் பார்க்க முடியாமல் போய்விடுமே. இராமனோ அப்பொழுது மிக விரைவாகச் செயல்பட்டான். எனவே வில்லின் ஒரு பாகத்தைக் கால் கட்டைவிரலால் மிதித்துக் கொண்டு, நாண் கயிற்றை மற்றொரு நுனியில் கட்டி இழுத்துப் பார்த்த போது வில் ஒடிந்துவிட்டது. தாமரையின் ஆயிரம் இதழ்களை அடுக்கி ஒரு ஊசியினால் ஓங்கிக் குத்தினால் ஊசி ஒவ்வொரு இதழையும் துளைத்துக் கொண்டு தான் மறுபுறம் வந்திருக்கிறது. நாம் தான் ஊசியினால் குத்தினோம். ஆனால் எப்பொழுது எந்த எந்த இதழை ஊசி துளைத்தது என்பதை நம்மால் அறிய முடிவதில்லை. ஏன்? அதன் விரைவுதான். அது போல ராமன் விரைந்து செயல்பட்டதினால் வில்லை எடுத்ததைப் பார்த்தனர். அடுத்து வில் முறிந்த ஓசையைக் கேட்டனர். வில் தானே இற்றது. இற்றுப் போயிற்று. இறாது வளையும் படியான உள்ளுறுதி வில்லுக்கு இல்லை. ஒடியும் தொழிலில் ராமன் கர்த்தா இல்லை.

இங்கு வில் ராமனைவிட ஒரு மடங்கு உயரமாக இருக்கும். எட்டாத மேற்பகுதி எப்படி எட்டிற்று என ஐயம் சிலருக்கு. இராமபிரானின் திருவடி ஒரு பகுதியில் பட்டதும் அவனது மஹிமையினால் மற்றொரு முனைதானே வளைந்து கொடுத்திருக்கலாம். அல்லது அவர் தானே வளர்ந்து மேல் முனையைப் பிடித்திருக்கலாம். அவனோ விசித்திரமான ஆற்றலை உடையவன். அவனால் செய்ய முடியாதது எது? இதை வேகத்தினால் யாரும் அறிந்து கொள்ள முடியவில்லை.

கொண்டாட்டம்

பூமழை சொரிந்தார் விண்ணோர், பொன் மழை பொழிந்தமேகம்
பாமம் ஆ கடல்கள் எல்லாம் பன்மணி தூவி ஆர்த்த,
கோமுனிக் கணங்கள் எல்லாம் கூறின ஆசி, கொற்ற
நாம வேல் சனகற்கு இன்று நல்வினை பயந்தது என்னா.

பாமம்ஆர்: பரந்த, கொற்ற: வெற்றி, நாம வேல்: அச்சம் தரும் வேல்.

மாலையும் இழையும் சாந்தும் சுண்ணமும் வாச நெய்யும்
வேலை வெண் முத்தும் பொன்னும், காசும் நுண்துகிலும் வீசிப்
பால் வளை வயிர்கள் ஆர்ப்ப பல்லியம் துவைப்ப முந்நீர்
ஓல் கிளர்ந்து உவாவுற்று என்ன ஒலி நகர் கிளர்ந்தது அன்றே.

இழை: அணிகலன், சாந்து: சந்தனம், சுண்ணம்: வாசனைப்பொடி, வாச நெய்: புனுகு, காசு: ரத்தினம், உவா: பௌர்ணமி காலம்.

வெண்ணிற மேகம் மேன் மேல் விரிகடல் பருகுமாபோல்
மண்ணுறை வேந்தன் செல்வம் வறியவர் முகந்து கொண்டார்

க.ரா. பால. - கார்முக

ஸீதையின் திருமணத்திற்கிருந்த சுல்கமான தடை நீங்கியது. மணம் நிச்சயமாயிற்று. ஸீதையைத் தம் மகளாகக் கருதும்நாட்டு மக்களின் மகிழ்ச்சி பொங்கியது. வெண் சங்குகளை எடுத்து ஊதினர். அமிழ்தம் போன்று மகிழ்விக்கும் இனிய வாத்யங்களை முழங்கினர். ஒருவருக் கொருவர் மலர் மாலைகளைச் சூட்டினர்; நகைகளை அணிவித்தனர்; சந்தனம் பூசினர், புனுகையும் வாசனைப் பொடிகளையும் தூவினர்; முத்துக்கள், பவுன்கள், ரத்தினங்கள், மெல்லிய ஆடைகள் ஆகியவற்றை அளித்து மகிழ்ந்தனர். காற்று வீசும் காலத்தில், பௌர்ணமியில் கடலலைகள் மோதி ஓசைகளை எழுப்புவது போன்று எங்கும் மகிழ்ச்சி ஆரவாரங்கள் ஒலித்தன.

இது நிலவுலகில் நடந்தது. வானத்திலோ வில்லொடித்த ஓசையைச் செவியுற்ற தேவர்கள் அஞ்சினராயினும், பின்னர் உண்மையை அறிந்து 'இது பகையை முறியடிக்கும் ஆயுதம் தாங்கிய ஜனகருக்கு முற்பிறவியில் செய்த நல்வினைகள் நற்பயனை நல்கின போலும்' என அறிந்து, மகிழ்ந்து வானத்தி லிருந்து மலர் மழையைப் பொழிந்தனர்.

மேகங்கள் ஆலங்கட்டி மழை போல் பொன் மழை பொழிந்தன. பூமியில் பரந்து இருக்கும் கடல்கள் பல்வகை இரத்தினங்களைக் கரையில் ஒதுக்கி ஆரவாரம் செய்தன. தேவர்ஷிகள் ஆசிகூறி வாழ்த்தினர்.

கோடையில் வெண்ணிற மேகங்கள் கடல் நீரைத் தாம் விரும்பியபடி பருகுவது போல் ஜனகர் உத்தரவிட நாட்டின் கருவூலத்திலுள்ள செல்வத்தை ஏழைகள் வாரிக் கொண்டு மகிழ்ந்து சென்றனர்.

வியப்பும் மகிழ்வும்

ராம ஸௌந்தர்யத்தையும், திருமேனி அமைப்பையும் பார்த்த மிதிலாபுரி மஹாஜனங்கள் ''ராமனே நாணேற்ற வேண்டும். ராமனே ஸீதா பிராட்டியை மணங்கொள்ள வேண்டும்'' எனத் தத்தம் இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொண்டிருந்தனர். அவர்கள் விரும்பியபடி ராமன் சிவதனுஸ்ஸை ஒடித்த செய்தி நகர் எங்கிலும் பரவிற்று. மகிழ்ச்சி வயப்பட்ட மக்கள் ஆங்காங்கு கூடிப் பேசலாயினர். அதைக் கம்பன் ஒட்டுக் கேட்கிறான்.

தயரதன் புதல்வன் என்பார் தாமரைக் கண்ணன் என்பார்
புயல் இவன் மேனி என்பார் பூவையும் பொருவும் என்பார்
மயல் உடைத்து உலகம் என்பார் மானுடன் அல்லன் என்பார்
கயல் பொரு கடலுள் வைகும் கடவுளே காணும் என்பார்.

க.ரா. பால. - கார்முக

மயல்: அறியாமை

ஒருத்தி ''முனிவரோடு வந்த பிள்ளை பத்துத் திசையிலும் தன் தேரைச் செலுத்தும் வல்லமை பெற்ற தசரத சக்கரவர்த்தியின் குமாரனாம். தந்தை யின் ஆற்றல் மகனுக்கு இல்லாமல் போகுமா! அதனால் தான் நாணேற்றச் சொல்லிய வில்லை முறித்தே விட்டான்'' எனக் குலத்தின் பெருமையைப் புகழ்ந்தாள்.

மற்றொருத்தி ''ராமன் மிதிலையில் நுழையும் பொழுது நான் நெருங்கிச் சென்று பார்த்தேனே, திருமுகத்தைப் பார்த்ததும் எனக்குப் புரிந்து விட்டது. என்னே அவன் கண்ணழகு! மறைகள் செந்தாமரைக் கண்ணன் (புண்டரீகாக்ஷன்) எனப் போற்றும் திருமால் தான் அவன், இல்லாவிடில் ஒரு சிறுவன் ராவணனாலேயே தூக்க முடியாத வில்லை எடுக்கவோ, முறிக்கவோ முடியுமா?'' என அவன் கண்ணழகில் மயங்கி கூறினாள்.

பிறிதொருவர் ''நீர் சொல்வது சரிதான். நீருண்ட மேகம் போன்ற அழகிய திருமேனியே 'திருமால்தான் இவர்' என்பதைக் காட்டுகிறதே.''

எதிரே வந்தவர் ''ஸர்வகந்த: ஸர்வரஸ: எனப்படும் இவனுக்கு நீல வண்ணமும் நறுமணமும் பொருந்திய காயாம்பூவை ஒப்பிடுவதே நல்லது.'

இவ்வுரையாடலைக் கேட்டுக் கொண்டே வந்த முனிவர் ஒருவர் ''நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. இவன் மனிதன் அல்லன்; திருப்பாற் கடலுள் பையத்துயின்ற பரமனே இவன். சிவன் வில்லை முறித்ததோடு கண்டவரைக் கனிய வைக்கும் ஆற்றல் மனிதனுக்கு ஏது? இவனை மனித

னாக நினைக்கும் உலகினர் மயல் உடையவர், அறிவிலிகள்'' என்றார். இவ்வுரையாடலால் கண் விழிப்புற்ற மிதிலை வாசிகள் ராமனைக் கடவுளாகக் கண்டனர்.

> **நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்**
> **கொம்பினைக் காணும் தோறும் குரிசிற்கும் அன்னதேயால்**
> **தம்பியைக் காண்மின் என்பார், தவமுடைத்து உலகம் என்பார்**
> **இம்பர் இந்நகரில் தந்த முனிவனை இறைஞ்சும் என்பார்.**

க.ரா. பால. - கார்முக

கொம்பினை: கொம்பு போன்ற ஸீதையை. குரிசிற்கும்: ஆண்களிற் சிறந்த ராமனுக்கும், இம்பர்: இவ்வுலகு.

ராமன், சங்கரன் கையாண்ட வில்லை எளிதாக எடுத்து நாணேற்றி முறித்தான். இவ்வாறு செயற்கரிய செயல் புரிந்த செம்மலின் ஈடிலாப் பேரழகில் தன் மனதைப் பறிகொடுத்த மிதிலைப் பெண் ஒருத்தி பேசினாள். அயோத்தி ராமனின் வடிவழகைக் காண்பதற்கு சீதாபிராட்டிக்கு ஆயிரங் கண்கள் வேண்டும். இவ்விரண்டு கண்கள் போதாதென்றாள். ஸாதாரண மாகக் கல்யாண காலங்களில் பிள்ளை வீட்டார் பிள்ளையையும், பெண் வீட்டார் பெண்ணையும் பாராட்டிப் பேசுவது வழக்கம். இதற்கு மாறாக மிதிலைப் பெண் கோஸல ராமனைப் பாராட்டினாள். ''நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்'' என்ற இப்பேச்சில் ராமனினும் ஸீதை அழகில் சிறிது குறைந்தவள் எனத் தொனித்தது.

இதைக் கேட்டு வெகுண்ட மற்றொருத்தி பேசினாள். ''பேதையே! மதிமயங்கினாய் போலும், ராமனின் அழகைக் கண்டுகளிக்க ஸீதைக்கு ஆயிரம் கண்கள் வேண்டும் எனில் கொம்பினை—கொம்பு போன்ற ஸீதையின் வடிவழகைப் பார்க்கும் போதெல்லாம் ராமனுக்கு ஆயிரம் கண்கள் வேண்டும். என்னே நம் ஸீதையின் அழகு'' என்றாள். பக்கத்திலிருந்த மற்றொருத்தி, ''தம்பியைக் காண்மின்! அண்ணன் ராமன் இருக்கட்டும், அவன் தம்பியான லக்ஷ்மணனின் வடிவழகு எத்தகையது! காண்மின்'' என்று கூறி, வாதிடுகின்ற பெண்களின் நாட்டத்தைத் திசை திருப்பி ''ஆம். ஆம், இவ்விரு இளம் மைந்தர்களைத் தன்னகத்தே கொண்ட இம் மண்ணுலகம் எத்தகு தவத்தினை இயற்றியதோ!'' என பேராச்சரியத்தில் மூழ்கினாள் அடுத்தவள்.

''இதெல்லாவற்றையும் விட மிக முக்கியமானதை நீவிர் அனைவரும் மறந்தே போனீர்களே! அது என்ன? நம் ஊரிலுள்ள அனைவரும் கண்டு களித்துப் பெருமை பெறும்படி ராஜகுமாரர்களை இங்கு அழைத்து வந்த இம் மாமுனிவரையன்றோ வாழ்த்தி வணங்க வேண்டும்'' என்றாள். வேறொருத்தி.

இவ்வாறு பொதுமக்கள் ஆங்காங்கு கூடி ஸீதையின் திருமணம் உறுதியானது பற்றிப் பேசி மகிழ்ந்தனர்.

प्रत्याश्वस्ते जने तस्मिन् राजा विगत साध्वसः
उवाच प्राञ्जलिर्वाक्यं वाक्यज्ञो मुनिपुङ्गवम्
भगवन् दृष्ट वीर्यो मे रामो दशरथात्मजः
अत्यद्भुतमचिन्त्यञ्च न तर्कित मिदं मया
जनकानां कुले कीर्तिं आहरिष्यति मे सुता
सीताभर्तारमासाद्य रामं दशरथात्मजम् ।

ப்ரத்யா ஶ்வஸ்தே ஜனே தஸ்மின் ராஜா விகத ஸாத்த்வஸ: ।
உவாச ப்ராஞ்ஜலி: வாக்யம் வாக்யஜ்ஞ: முனிபுங்கவம் ॥
பகவன் த்ருஷ்டவீர்ய: மே ராம: தசரதா த்மஜ: ।
அத்யத்புதம் அசிந்த்யம் ச நதர்கிதம் இதம் மயா ।
ஜனகானாம் குலே கீர்த்திம் ஆஹரிஷ்யதி மே ஸுதா ।
ஸீதா பர்த்தாரம் ஆஸாத்ய ராமம் தசரதாத்மஜம் ॥

வா.ரா. பால. - 67

வில் முறிந்த போது எழுந்த பேரொலியைக் கேட்டு மயங்கிய மக்கள் சிறிது நேரத்தில் உணர்வைப் பெற்றனர். அப்பொழுது அச்சம் நீங்கியவராய் ஜனகர் கைகளைக் கூப்பிய வண்ணம் பணிவுடன் முனிவரை நோக்கிப் பேசலானார். இதுவரை இருந்த பயத்தைக் காளிதாஸன் விளக்குவான்.

तस्य वीक्ष्य ललितं वपुः शिशोः पार्थिवः प्रथितवंश जन्मनः
स्वं विचिन्त्य धनुः दुरानमं पीडितो दुहितृ शुल्कसंज्ञया

தஸ்ய வீக்ஷ்ய லலிதம் வபு: சிசோ: பார்திவ: ப்ரதித வம்ச ஜன்மன: ।
ஸ்வம் விசிந்த்ய தனு: துராநமம் பீடிதோ துஹித்ரு கல்க
ஸம்ஜஞயா ॥

''இதுவரை நாட்டிலுள்ள அரசர்கள் அனைவரும் வில்லை எடுக்கவே இயலாது திரும்பினர். கடைசியாக அயோத்தி சக்கரவர்த்தியின் திருக்குமாரன் வந்திருக்கிறான். இவன் மேனியில் இன்னும் இளமை மாறவில்லை. இவன் மாப்பிள்ளையாக (மருமகனாக) ஆகவேண்டும். நாமோ எவராலும் வளைக்க முடியாத வில்லை கன்யா சுல்கமாக வைத்து விட்டோம். நாமும் அதை மாற்றுவதற்கில்லை. இச்சிறுவன் எங்கே நாணேற்றப் போகிறான்! ஸீதைக்கு எப்படி கல்யாணம் ஆகும்? அவள் இனி வாழாவெட்டியாக இருக்க வேண்டும் போலும்' என பயம் குடிகொண்டிருந்தது ஜனகருக்கு. இந்த பயத்தைச் சதானந்தர் உணர்ந்து பேசியதாகக் கம்பரும் கூறுவார்.

போதகம் அனையவன் பொலிவு நோக்கி அவ்
வேதனை தருகின்ற வில்லை நோக்கித் தன்
மாதினை நோக்குவான் மனத்தை நோக்கிய
கோதமன் காதலன் கூறல் மேயினான்.

க.ரா. பால. - கார்முக

யானைக் கன்றை (குட்டியை)ப் போன்ற சக்ரவர்த்தித் திருமகனின் அழகைக் கண்டு இவனுக்கே தன் மகளை மணம் செய்விக்க வேண்டுமெனப் பேரவாக் கொண்டான். உடனே எவருக்கும் வளைக்கவொண்ணாதபடி பெரும் துன்பத்தைத் தருகின்ற கன்யா சுல்கமான சிவதனுஸ் இடையூறாய் நிற்பதை நினைத்துப் பெரும் வேதனைக்குள்ளானான்; தன் மகளை மனதில் எண்ணி ''அந்தோ! இவள் திருமணம் ஆகாமலே வாழ்நாளைக் கழிக்க வேண்டி வருமோ'' எனப் பெருங் கவலையுள் மூழங்கினான்''.

இத்தகு அச்சமும், கவலையும் ஓடிமறைந்தன. உள்ளடங்காத பெருமகிழ்ச்சியுடன் பேசினான். ''முனிவரே! தசரதர் பிள்ளை ராமனுக்கு இவ்வுலகில் எங்கும் எவரிடமும் கண்டறியப்படாத, எவராலும் நம்ப முடியாத வீர்யம் இருக்கும் என என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடிய வில்லை. இவனுடைய வீரம் ஆச்சரியமானது, மிகமிக ஆச்சரியமானது. இதை வேறு எவரிடமும் முன்பு பார்க்காததால் இவனை இத்தகு மாபெரும் வீரனாக நினைப்பதற்குக் கூட முடியவில்லை. ஒரு வேளை தேவர்களுள் எவரிடமாவது இத்தகு வீரம் இருப்பினும் மனிதனான ராமனிடத்தில் இதை ஊகித்துப் பார்க்கக்கூட முடியவில்லையே! என்னே ஆச்சரியம்! ராமனுடைய வீரமே வீரம். இதெல்லாம் உம்மோடு வந்ததின் பெருமை போலும். (இதை ''பகவன்!'' எனும் சொல் குறிக்கும்) பூஜ்யரே! என் பெண்ணாகிய ஸீதை என்னைப் பெற்றெடுத்த முன்னோர்களின் குலத்திற்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுப்பாள். ஏன்? தசரதரின் திருமகனாகிய ராமனை அன்றோ பர்த்தாவாக அடையப் போகிறாள்'' என்றார் ஜனகர்.

மணப் பொருத்தம்

कन्या वरयते रूपं माता वित्तं पिताश्रुत्तम्
बान्धवा: कुलमिच्छन्ति मृष्टान्नमितरेजना:

கன்யா வரயதே ரூபம் மாதா வித்தம் பிதா ச்ருதம் ।
பாந்தவா: குலம் இச்சந்தி ம்ருஷ்டான்னம் இதரே ஜனா: ॥

திருமணத்திற்குரிய பெண், தனக்கு வரும் கணவன் அழகனாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறாள். அவளது தாய், மருமகன் பணக்காரனாக

இருக்க விரும்புகிறாள். தந்தையோ, படித்தவனாக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறார். உறவினர்களோ நற்குடிப்பிறப்பை விரும்புகிறார்கள். மற்ற வரோ திருமணத்தில் நல்ல உணவை விரும்புகின்றனர்.

ராமம்: திருமணம் எனில் யார் யார் எதை எதை விரும்புவர் என்பதை விளக்குகிறது இது. மணப் பெண்ணுக்குக் கணவன் பேரழகு பெற்றவனாகத் திகழ வேண்டும் என்பது ஆசை. ஜனகர் ''ராமம்'' என்றதினால் ஸீதைக் கேற்ற பேரெழிலன் என்கிறார்.

பர்தாரம்: *ராமன் ஸீதையைப் போஷிக்கவும், செல்வத்தாலும், நகையாலும், அன்னத்தாலும் எல்லா வகையாலும் தாங்கும் ஆற்றல் பெற்றவன். எனவே ஸீதையை ராமனுக்கு மணம் முடிப்பதில் தாய்க்கும் ஸந்தோஷம்.*

ஜனகானாம்: *ஜனகர் மறைகளில் போற்றப்படுவர். சாஸ்த்ரங்களை அறிந்து அதன்படி அனுஷ்டானம் செய்பவர். ராமன் வஸிஷ்டரிடமும், விஶ்வாமித்ர ரிடமும் பயின்றவன். எல்லாக் கலைகளையும் கற்றவன். நல்ல படிப்பை விரும்பும் தந்தையான ஜனகருக்கு நல்லறிஞனாகிய ராமனுக்கு ஸீதையை தாரைவார்த்துக் கொடுப்பதில் அளவற்ற மகிழ்ச்சி.*

குலே: *ராமனை ''தசரதாத்மஜம்'' எனக்குறிப்பிடுகிறார் வால்மீகி. ஸூர்ய (இக்ஷ்வாகு) வம்சத்தில் அவதரித்த ராமனுக்கு சந்த்ர (நிமி) வம்சத்தில் தோன்றிய நம் ஸீதையைத் திருமணம் செய்து கொடுப்பதைக் கேட்டு பந்துக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அனபிஜாதனுக்கு - மட்டமான குடியில் பிறந்தவனுக்குப் பெண்ணைக் கொடுக்க பந்துக்கள் ஸம்மதிப்பார்களா? ''குலம் தாரயதே தாத! ஸப்த ஸப்த ஸப்தச'' என்றபடி இந்த கன்யா தானத்தினால் 21 தலைமுறையினர் கடைத்தேறுவர் எனப் பேருவகையினால் உறவினர்கள் துள்ளிக் குதித்தனராம். அனபிஜாதன் - நற்குண-நற்பண்பு களற்றவன்)*

ஸுதா கீர்த்திம் ஆஹரிஷ்யதி: *''மகன் நல்லறச் செயல்களைப் புரிந்து, தான் ஈட்டிய புகழைத் தன் குலத்திற்குக் கொடுப்பான். பெண்ணோ தன்னுடைய தொண்டினாலும், அரவணைப்பினாலும், பொறுமையினாலும் ஈட்டிய தன் புகழைத் தான் பிறந்த குலத்திற்கும், புகுந்த குலத்திற்கும் கொடுப்பாள். எனவே முனிவரே! ''இந்த ஸீதாராம விவாஹம் எனக்கும் என் குலத்திற்கும் பெரும் புகழ் அளிக்க இருப்பதை நினைத்துப் பெருமைப் படுகிறேன்'' என்றார் ஜனகர்.*

உடனே குலகுருவான சதானந்தர், ''க்ஷத்திரியர்கள் வீர்யசுல்க ஈடாக உரிய பொருள்களைப் பெறுவது போல், ஸீதையைப் பெற ராமன் உரிமை யுள்ளவன். எனினும் வைதீகாக்ரேஸரரான நீர் ராமனின் பெற்றோர்களை வரவழைத்து முறைப்படி கன்யகாதானம் செய்வதே தக்கது'' எனக் கூற அதையே விஶ்வாமித்ரரும் உகக்க, இரு முனிவர்களின் அனுமதியுடன் அயோத்திக்கு தூதுவர்களை அனுப்பினார்.

विश्वामित्राभ्यनुज्ञातः शतानन्दमते स्थितः

விஸ்வாமித்ராப்யனுஜ்ஞாத: சதானந்த மதே ஸ்தித: ॥

தூதுவர்களும் வழியில் மூன்று நாட்கள் தங்கி அயோத்திக்குச் சென்றனர். உடனே காவலர்களின் அனுமதி பெற்று அரண்மனையுள் நுழைந்து கைகளைக் கூப்பியவண்ணம் மிக அடக்கத்துடன் அச்சங் கொள்ளாது இனிய குரலில் தெளிவாக ஜனகரின் கூற்றைக் கூறினர்.

''பேரரசே! ஆற்றல் மிக்க ராமனால் எமது பேரவையில் சிவதனுஸ் ஒடிக்கப்பட்டது. அவனுக்கு ஸீதையை வீர்யசுல்கமாகக் கொடுக்க உறுதியாக விரும்புகிறேன். அதைத் தாங்கள் அனுமதிப்பீராக! புரோஹிதருடன் விரைந்து வந்து தங்கள் குமாரர்களான ராம லக்ஷ்மணர்களை மணக் கோலத்தில் பார்த்து வாழ்த்துவீராக'' என்று.

மல்வலான் அவ்வுரை பகர மா தவன்
ஒல்லையில் அவனும் வந்து உறுதல் நன்று என
எல்லையில் உவகை யான் இயைந்தவாறு எலாம்
சொல்லுக என்று ஓலையும் தூதும் போக்கினான்.

க.ரா. பால. - கார்முக

மல்வலான்: மல்யுத்தத்தில் வல்லவன், ஒல்லையில்: விரைவில், உவகை யான்: மகிழ்ச்சி உடையவன், இயைந்தவாறு: நிகழ்ந்த செயல்.

மற்போரில் வல்ல ஜனகர் கூறியதைக் கேட்ட மாமுனிவர் ''விரைவில் தசரதரும் வருவதே நல்லது'' எனக் கூறப் பெருமகிழ்ச்சியுடன் தூதுவனை அழைத்து ''நீ விரைந்து சென்று தசரத சக்ரவர்த்தியிடம் விஸ்வாமித்ரரோடு ராமன் வந்த பிறகு நிகழ்ந்தவற்றை எல்லாம் விரிவாகக் கூறி இந்த திருமணப் பத்திரிகையைக் கொடு'' எனக் கூறி வழி அனுப்பினான். (இங்கு திருக் கல்யாணப் பத்திரிகையயும் எழுதி அனுப்பியதாகக் கம்பன் கூறுவான்.) தூதுவனும் விரைந்து அயோத்தியின் அரண்மனை வாயிலை அடைந்ததும் உள்ளே புக முடியவில்லை.

''அடியிணை தொழ இடமின்றி மன்னர்தம்
முடியொடு முடிபொரு வாயில் முன்னினார்.''

க.ரா. பால. - எழுச்சி

அங்கு சிற்றரசர்களின் கூட்டம், அவர்கள் தசரதரின் பாதங்களைத் தொழுவதின் பொருட்டு, நான் முன்னே, நான் முன்னே என போட்டியிட்டுக் கொண்டு நுழைகிறார்கள். அப்பொழுது அவர்கள் தலையில் அணிந்த கிரீடங்கள் ஒன்றோடொன்று உராய்கின்றன. இத்தகு கூட்டத்தினிடையே மெள்ள உள்ளே நுழைந்து அவர்தம் அடிதொழுது கல்யாணப் பத்திரிகையைக் கொடுத்து விவரம் கூறினர்.

ஜனகரின் செய்தியைக் கேட்டதும் தசரதர் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார். ''மலையென வளர்ந்தன வயிரத் தோள்கள்'' உடனே செய்தி கூறியவருக்கு தங்கத்தினாலான அணிகளையும் பட்டாடைகளையும் அளித்தார். வஸிஷ்டர் முதலிய, ப்ரஹ்மர்ஷிகளையும் அமைச்சர்களையம் விளித்து ''நீவிர் இத்திருமணத் தொடர்பை விரும்புவீராயின் தாமதமின்றி நாளையே புறப்படுங்கள்'' என்றார்.

वसिष्टो वामदेवश्च जाबालिरथ काश्यपः ।
मार्कण्डेयस्सु दीर्घायुर्ऋषिः कात्यायनस्तथा ॥

வஸிஷ்ட: வாமதேவ: ச ஜாபாலி: அதகாச்யப: ।
மார்க்கண்டேய: ஸுதீர்க்காயு: ரிஷி: காத்யாயன: ததா ॥

வா.ரா.பால. - 69

ஆகியோர் மங்களமாக முன்னே செல்லட்டும் என்றார்.

சேனையும் அரசரும் செல்க முந்துஎனா
ஆனைமேல் அணிமுரசு அறைக என்று ஏவினான்.

க.ரா. பால. - எழுச்சி

अद्य सर्वे धनाध्यक्षाः धनमादाय पुष्कलम्
ब्रजन्त्वग्रे सुविहिताः नानारत्न समन्विताः

அத்ய ஸர்வே தனாத்யக்ஷா: தனம் ஆதாய புஷ்கலம் ।
வ்ரஜந்து அக்ரே ஸுவிஹிதா: நாநாரத்ன ஸமன்விதா: ॥

வா.ரா.பால. - 69

கவிகையின் நீழல் கற்பின் அருந்ததி கணவன் முத்தின்
சிவிகையின் அன்னம் ஊரும் திசைமுகன் என்னச் சென்றான்.
திருவளர் மார்பர் தெய்வச் சிலையினர் தேரர் வீரர்
இருவரும், முனி பின் போன இருவரும் என்னப்போனார்
பொய்கை அம் கமலக்கானில் பொலிவதோர் அன்னம் என்னக்
கைகயர் வேந்தன் பாவை–தேனிசை முரலப் போனாள்
குருமணிச் சிவிகை தன்மேல் கொண்டலின் மின் இதென்ன
இருவரைப் பயந்த நங்கை யாழிசை முரலப் போனாள்
வள்ளலைப் பயந்த நங்கை வானவர் வணங்கப் போனாள்.

க.ரா. பால. - எழுச்சி

தசரதர் தமதுநாட்டின் சிற்றரசர்களையும் காவலுக்குத் தேவையான ராணுவத்தினரையும் மிதிலை நோக்கிப் புறப்படும்படி கட்டளையிட்டது மன்றி, அக்கட்டளையை அனைவரும் அறியும்படி யானை மீது சென்று

வள்ளுவர், அழகிய பறையை அறையட்டும் (தண்டோரா போடட்டும்) என்றும் உத்தரவிட்டார். அமைச்சர்களை நோக்கி ''திருமணத்திற்குத் தேவையான செலவினங்களுக்குரிய செல்வத்தையும் பரிசுப் பொருள் களையும் கருவூலத் தலைவர்களை எடுத்துக் கொண்டு முன்னே செல்லும் படி கூறுங்கள்'' என்றார்.

பறை அறிவிக்கப்பட்டதும் ராமனின் திருக்கல்யாண மஹோத்ஸவத்தை நேரில் கண்டு களிக்கப் பல்லோர் புறப்படலாயினர். கற்பரசியான அருந்ததி யுடன் குலகுரு வஸிஷ்டர் குடை நிழலில் முத்துப் பல்லக்கில் ஹம்ஸத்தின் மீது நான்முகன் செல்வது போலச் சென்றாராம். திருமார்பில் ஜயலக்ஷ்மீ ஒளிர, தெய்வீகமான அஸ்த்ரங்களை எய்தற்கேற்ற வில் அம்புகளை ஏந்தியவர்களாய், அதிரதர்களும், மாவீரர்களுமான பரத சத்ருக்னர்கள், ராமலக்ஷ்மணர்கள் கௌசிகரைப் பின் தொடர்ந்து சென்றது போல வஸிஷ்டரைப் பின் தொடர்ந்தார்களாம்.

அழகிய செந்தாமரை மலர் நிறைந்த பொய்கையில் இளமையும் பொலிவும் நிறைந்த பெண் அன்னம் மகிழ்வுடன் நடமாடுவது போல் எழிலரசியான கைகேயி மலர்களில் மொய்க்கும் வண்டுகள் இன்னிசை இசைக்க மணிச் சிவிகையில் சென்றாளாம். லக்ஷ்மணன், சத்ருக்னன் எனும் இரட்டையரைப் பெற்ற ஸுமித்திரை நீலமணிகள் இழைத்த சிவிகையில் நீருண்ட மேகத்தினிடையே மிளிரும் மின்னற் கொடி போன்று போனாளாம்.

தன்னடியார்க்கு வரையாது வாரி வழங்கும் ஸ்ரீ ராமசந்திரனைப் பயந்த கௌஸல்யாதேவி பல்வகை மணிகள் பொருந்திய ஊர்தியில் வழி நெடுகில் வானத்தினின்றும் இறங்கும் தேவர்கள் போற்றி வணங்கிச் சென்றாளாம்.

நித்திய நியமம் முற்றி, நேமியான் பாதம் சென்னி
வைத்த பின், மறைவல்லோர்க்கு வரம்பு அறு மணியும் பொன்னும்,
பத்தி ஆன் நிறையும், பாரும் பரிவுடன் நல்கிப் போனாள்,
முத்தணி வயிரப் பூணான் மங்கல முஹூர்த்த நன்னாள்.

பத்தி: வரிசை

இரு பிறப்பாளர் எண்ணாயிரர் மணிக் கலசம் ஏந்தி
அருமறை வருக்கம் ஓதி, அங்கைநீர் தெளித்து வாழ்த்த
வரன்முறை வந்தார் கோடி மங்கல மழலைச் செவ்வாய்ப்
பருமணிக் கலாபத்தார் பல்லாண்டிசை பரவப் போனான்.

க.ரா. பால. - எழுச்சி

கலாபத்தார்: ஒட்டியாணம் பூண்ட மகளிர்.

தசரதச் சக்ரவர்த்தி காலையில் துயிலெழுந்து நன்னீராடி ஸந்த்யா வந்தனம் முதலிய நித்ய நைமித்திக கர்மாக்களை அனுஷ்டித்து, அரண்

மனைத் திருக்கோயிலுள் சென்று, தன்னைச் சரணடைந்தாரைத் தாமத மின்றிக் காக்க, பஞ்சாயுதங்களை எப்பொழுதும் தாங்கி நிற்கும் குலதெய்வ மாம் திருவரங்கனை வணங்கி அவன் திருப்பாதங்களைத் தலையில் சூடினான். பகவதனுக்ரஹத்தைப் பெற்றபின், வேதவல்லுநர்களும் பேசும் தெய்வங்களுமான ப்ரஹ்ம வித்துக்களுக்கு யாத்ராதானமாக எல்லை யின்றி ரத்னங்களையும், தங்கத்தையும், வரிசை வரிசையாகப் பசுக்கூட்டங்களை யும், பூமியையும் உவந்த உள்ளத்தோடு தானம் செய்தான். பிறகு உயரிய முத்துமாலைகளையும், வைர நகைகளையும் அணிந்து, பொன்னாடை உடுத்தி அழகியவனாய், சுபமுஹூர்த்தத்தில் புறப்பட்டான்.

மஹான்களின் உறவு

மாமன்னன் தசரதன் மிதிலையை நோக்கி விரைந்து வந்து கொண்டிருக்கிறான். சக்ரவர்த்தி வருவது மிதிலை வரை உள்ள மக்களுக்கு முனகூட்டியே அறியமுடிகிறது. எப்படி?

மந்திரகீத ஓதை, வலம்புரிமுழங்கும் ஓதை
அந்தணர் ஆசிஓதை, ஆர்த்துஎழும்முரசின் ஓதை
கந்துகொல் களிற்றின்ஓதை, கடிகையர் கவிதைஓதை
இந்திரதிருவன் செல்ல எழுந்தன திசைகள் எல்லாம்.

க.ரா. பால. - எழுச்சி

தசரதன் பூவுலகை ஆண்டாலும் தேவருலகை ஆளும் இந்திரனுக்கு ஒப்பானவன்; அவனை விட மேம்பட்டவன் கூட. தேவேந்திரனுக்கே தேவாஸுரப் போரில் உதவியவனாயிற்றே! இத்தகையவன் புறப்பட்டால் ஆர்ப்பாட்டத்திற்குக் கேட்பானேன். எங்கும் ஒரே ஓசைதான். இக்காலத்திலோ அதிர்வேட்டுகள், பீரங்கிகள், அவுட்டுகள் முழங்கும். இவற்றின் ஒலியோ மக்களை மயக்கும், அச்சுறுத்தும். அக்காலத்திலோ எழுப்பப்படும் ஒலிகள் மக்களை வாழ்விக்கும் மங்கள ஒலிகள். அரசனுக்கும் பிரஜைகட்கும் நல்வாழ்வையும் வெற்றியையும் அளிக்கும் வேதமந்திரங்களை உரத்த குரலில் அந்தணர் ஓதினர். நற்சகுனத்தையும் நன்மைகளையும் விளைவிக்கும் வலம்புரிச்சங்குகளின் ஓசையை எழுப்பினர் சிலர். பெரியோர்கள் சிலர் ஆசி கூறி வாழ்த்தும் பேரொலிகள் கேட்கின்றன ஒரு புறம், எல்லோருக்கும் முன்னே முரசு முழக்கம். யானைகள் பிளிறிக் கொண்டே முன்னால் நடைபோடுகின்றன. குதிரைப் படையின் குதிரைகள் கனைக்கின்றன. அவ்வப்பொழுது நேரத்தை (மணியை) அறிவிக்கும் நங்கையின் இசை ஒலிகள் ஒருபுறம், இவ்வாறாக பல்வகை மங்கள ஒலிகள் அரசனின் நல்வரவை உணர்த்தின.

ஜனகர் எதிர் கொள்ளல்

गत्वा चतुरहं मार्गं विदेहानभ्युपेयिवान्
राजातु जनकः श्रीमान् श्रुत्वापूजामकल्पयत्

கத்வா சதுரஹம் மார்க்கம் விதேஹான் அப்யுபேயிவான் ।
ராஜாது ஜனக: ஸ்ரீமான் ஶ்ருத்வா பூஜாம் அகல்பயத் ॥

வா.ரா. பால. - 69

வந்தனன் அரசன் என்ன மனத்தெழும் உவகை பொங்கக்
கந்து அடு களிறும், தேரும், கலினம் மா கடலும், சூழச்
சந்திரன் இரவி தன்னைச் சார்வதோர் தன்மை தோன்ற
இந்திர திருவன் தன்னை எதிர்கொள்வான் எழுந்து வந்தான்.

க.ரா. பால. - எதிர்கொள்

கந்து: கட்டுத்தறி, கலினம்: கடிவாளம், மா: விலங்கு, இங்கு குதிரை

தசரதன் தனது தேர், யானை, குதிரை, காலாட்களின்படைகளுடன் நாலாவது நாளில் மிதிலையை அணுகினான். இவ்வரவைத் தூதர்களின் வாய் மொழியால் கேட்டறிந்த ஜனகர் பேருவகை மனதில் பொங்க ஸம்பந்தியை எதிர் கொண்டு வரவேற்கத் தயாரானார். கட்டுத்தறியை அறுத்தெறியும் மதயானைகளும், தேரும், கடிவாளம் பூட்டிய குதிரைகளும், இவற்றில் ஏறி வரும் படையினரும் சூழ சந்திரவம்சத்தில் தோன்றிய ஜனகர் ஸூர்யவம்சத் தோன்றலும் தேவேந்திரனை ஒத்தவருமான தசரதரை வரவேற்க மிதிலையினின்றும் புறப்பட்டார். (தசரதரின் உயர்வைக் காட்ட வம்சத்தைக் குறித்தார் கம்பர்) இவர்களின் சந்திப்பு ஸூர்யனை சந்திரன் வந்தடைவது போன்றிருந்ததாம்.

எய்த வந்து இரு நெடுந் தேர்இழிந்து இனிய தன்
மொய் கொள் திண்சேனை பின்நிற்க முன் சேறலும்
கையின் வந்து ஏறுஎனக் கடிதின் வந்து ஏறினான்
ஐயனும் முகம் மலர்ந்து அகமுறத் தழுவினான்.

க.ரா.பால. - எதிர்கொள்

எய்த: அருகில், இருநெடும்: மிகப்பெரிய

ஜனக மஹாராஜன் தசரதரை வரவேற்க ராஜமரியாதைக்குரிய படைகள் பின் தொடர, பெரியதொரு தேரின் மீது ஏறி விரைந்து வந்தான். எதிரேவரும் தசரதரைக் கண்டதும் தேரினின்றும் இறங்கி, தனது படைகளைக் கையினால் சைகை செய்து நிறுத்திவிட்டுத் தான் முன்னே சென்றான். தனது தேரின் எதிரே ஜனகர் விரைந்து வருவதைக் கண்ட தசரதர் தன் தேரை நிறுத்தி, தேரின் மீது ஏறி வருக எனத் தனது கையை முன்னே நீட்டிச் சைகை செய்ய, குறிப்பு அறிந்து தேரின் மீது ஜனகர் ஏறினார். உடனே தசரதனும் இருக்கையினின்றும் எழுந்து மனதில் மகிழ்ச்சியும், முகத்தில் மலர்ச்சியும் கொண்டு மார்போடு மார்பு பொருந்த இறுகத் தழுவினான். பின்னர் ஒருவருக்கொருவர் க்ஷேமம் (நலம்) விசாரித்துக் கொண்டே மிதிலை வந்தனர்.

காவியும் குவளையும் கடிகொள் காயாவும் ஒத்து
ஓவியம் சவி கெட பொலிவது ஓர் உருவோடே

தேவரும் தொழுகழல் சிறுவன் முன்பிரிவதோர்
ஆவி வந்தென்ன வந்து அரசன் மாடு அணுகினான்.

க.ரா. பால. - எதிர்கொள்

காவியும்: நீலோத்பலம், சவி: அழகு, ஆவி: உயிர் (ஆத்மா)

தந்தை வருகிறார் என்றால் தனயனுக்கு இருப்புக்கொள்ளுமா? செய்தி கிடைத்ததும் முனிவர் அனுமதி பெற்று ராமனும் லக்ஷ்மணனும் விரைந்து வந்து எதிர்கொண்டனர். தசரதரின் தேருக்கு முன் அயோத்தி மக்களும், மிதிலை மக்களும், இருநாட்டுப் படையினரும் குழுமியிருக்கின்றனர். இவர்களிடையே நுழைந்து விரைந்து வருகிறான் சிறுவன் (ராமன்). இவன் அழகில் மயங்கி திகைத்து நிற்கின்றனர் அனைவரும்.

ராமனிடம் உள்ளழகும் உடலழகும் போட்டியிடுகின்றன. நீலோத்பல மலரையும், கருங் குவளை மலரையும், காயாம்பூவையும் விஞ்சி நிற்கிறது இவன் திருமேனி. ஓவியத்தில் எழுதவொண்ணாத அழகு. ஓவியர் அழித்து அழித்து திருத்தித் திருத்தி ஒவ்வொரு உறுப்பாகப் பார்த்துப் பார்த்து அழகூட்டினாலும் தம் ஓவியத்தில் (சித்திரத்தில்) ராமனைப் போன்ற அழகை வடிக்க முடிய வில்லையே! ராமன் ஸாக்ஷாத் மன்மத மன்மதனாயிற்றே. இவன் அழகைக் கண்களார இடைவிடாது பருகப் பெண்ணாகப் பிறக்காமல் போனோமே என ஆடவர் வருந்துகின்றனரே. மாமுனிவர்கள் கூட கண் களையும், மனதையும் பறிகொடுத்து மயங்குகின்றனரே.

பிரிந்த ஆருயிர்த் தந்தையைப் பார்க்கப் போகிறோம் என மகிழ்ச்சி யும், வீரனாய் வில்லிறுத்து ஸீதையின் கைத்தலம் பற்றப் போகிறோம் என மகிழ்ச்சியும், பிறிதொரு மாதத்தில் திருமணம் கொள்வோம், எனத் தடை கூறாது தந்தை விரைந்து வந்தாரே என மகிழ்ச்சியும் இதயத்தில் வெள்ளமிட வரும் ராமனின் அழகில் மயங்கிய யாவரும் ஒதுங்கி வழிவிடத் தேரின் மீது ஏறித் தந்தையை வணங்கினான் ராமன். முன்பு முனிவரோடு தன் உயிரையே அனுப்புவதாகக் கருதிய தசரதனுக்குத் தனது பிரிந்த ஆருயிர் மீண்டும் தன் உடலில் புகுந்தது எனும் உணர்ச்சி மேலோங்க மார்போடு மார்புற ராமனை இறுகத் தழுவிக் கொண்டானாம். பின்னர் இவர்கள் தாய்மார்களைத் தொழ, இவர்களை பரத சத்ருக்னர்கள் தொழ அனைவரும் மிதிலை புக்கனர்.

தெய்வ ஸங்கல்பம்

स्वागतं ते महाराज दिष्ट्या प्राप्तो सिराघव
दिष्ट्या प्राप्तो महा तेजाः वसिष्ठो भगवान् ऋषिः
दिष्ट्या मे निर्जिता विघ्नाः दिष्ट्यामे पूजितं कुलम्
राघवैस्सह सम्बन्धः वीर्यश्रेष्ठैमहात्मभिः

श्वः प्रभाते नरेन्द्र त्वं निर्वर्तयितुमर्हसि
यज्ञस्यान्ते नरश्रेष्ठ विवाहं ऋषिसम्मतम्

ஸ்வாகதம் தே மஹாரார்ஜா! திஷ்ட்யா ப்ராப்தோஅஸி ராகவ ।
திஷ்ட்யா ப்ராப்த: மஹா தேஜா: வஸிஷ்ட: பகவான் ரிஷி: ॥
திஷ்ட்யா மே நிர்ஜிதா: விக்னா: திஷ்ட்யா மே பூஜிதம் குலம் ।
ராகவை: ஸஹ ஸம்பந்த: வீர்யை ச்ரேஷ்டை: மஹாத்மபி: ॥
ஶ்வ: ப்ரபாதே நரேந்த்ரத்வம் நிர்வார்தயிதும் அர்ஹஸி ।
யஜ்ஞஸ்ய அந்தே நரஶ்ரேஷ்ட! விவாஹம் ரிஷிஸத்தமம் ॥

வா.ரா. பால. - 69

சக்ரவர்த்திக்கு ஏற்ற மாளிகையில் தசரதரைத் தங்கவைத்து விடை பெறுவதற்கு முன் ஜனகர் பேசலானார்: ''பகவத் ஸங்கல்பம் அனுகூலமாக இருந்தால் தான், நாம் எண்ணியது ஒழுங்காக நடைபெறும். ஸீதா கல்யாணத்திற்கு வீர்ய (கன்யா) சுல்கமாக சிவதனுஸை நாணேற்ற வேண்டும் என ஆணை பிறப்பித்தேன். ஆனால் விதி (தைவம்) எனக்கு அனுகூலமாயிற்று. சக்கரவர்த்தியின் (உமது) திருமகனே இங்கு வந்து வில்லை ஒடித்தது எனது பெரும் பாக்யம், உரிய இடத்தில் ஸீதையை ஒப்படைப்பதற்காகவே நாணேற்றுவதை கன்யா சுல்கமாக விதி என் வாயால் அறிவித்தது போலும். இதனால் எனக்குப் பெரிய இடத்து ஸம்பந்தம் அதாவது ரகுகுலத் தொடர்பு கிட்டியது. மஹான்களின் உறவைப் பெற்றேன். எனக்கேற்பட்ட இடையூறுகள் எல்லாம் மங்களங்களையே அளித்தன. ஸூர்ய வம்சத்தின்–ரகு குலத்தின் ஸம்பந்தத்தால் சந்திர வம்சமான எனது நிமி குலம் ஒரு முழம் உயர்ந்தது; பெரும் பாக்யத்தைப் பெற்றது.

இக்கல்யாணத்தை நடத்திவைக்க பகவான் வஸிஷ்டரே எழுந்தருளினார் என்றால் யான் செய்த தவப் பயனைத்தான் அளவிடமுடியுமோ? எல்லாவற்றிற்கும் மேலாக பகவதானு கூல்யம் (இறையருள்) ஒன்று உண்டு எனில் அதுதான் தாங்கள் உரிய காலத்தில் இங்கு வந்ததாம். இராமன் அயோத்திக்குத் திரும்பட்டும். பின்பொரு நன்னாளில் நாங்கள் எல்லோரும் சேர்ந்து கல்யாணத்திற்கு வருகிறோம் எனச் செய்தி அனுப்பியிருந்தால் என் நிலை என்னவாகும்? அப்படியின்றி தெய்வம் அனைத்தையும் கூட்டி வைத்ததே என வியந்து மகிழ்ந்து'', தசரதரிடம் ஜனகர் மேலும் பேசலானார்: ''நாளை, காலை கல்யாண நிச்சயதார்த்தம் முதலியவைகளை நடத்திவைக்க வேண்டும்'' என வேண்டினார். ''அடியேன் இயற்றும் வேள்வி முடிந்து அவப்ருத ஸ்நானம் ஆனதும் திருக்கல்யாணத்தைப் பாங்குற நடத்திக் கொடுக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்.

प्रतिग्रहो दातृवशः श्रुतमेतन्मयापुरा
यथावक्ष्यसिधर्मज्ञ तत्करिष्यामहे वयम् ।

श्रुत्वाविदेहाधिपतिः परं विस्मयमागतः

ततस्सर्वे मुनिगणाः परस्पर समागमे

हर्षेण महता युक्ताः तां निशामवसन् सुखम् ॥

ப்ரதிக்ரஹ: தாத்ருவஶ: ஶ்ருதம் ஏதத் மயா புரா ।
யதா வக்ஷ்யஸி தர்மஜ்ஞ! தத் கரிஷ்யாமஹே வயம் ॥
ஶ்ருத்வா விதே ஹாதிபதி: பரம் விஸ்மயம் ஆகத: ॥
தத: ஸர்வே முனிகணா: பரஸ்பர ஸமாகமே ।
ஹர்ஷேண மஹதா யுக்தா: தாம் நிஶாம் அவஸன் ஸுகம் ॥

வா.ரா. பால. - 69

தசரதர் பேசலானார் : ''வாங்குவது (பெறுவது) என்பது கொடுப்பவரைப் பொறுத்தது'' என்று கேட்டிருக்கிறோம் (இவர் க்ஷத்ரியர்; பிறருக்குக் கொடுத்தே பழகப்பட்டவர். தானம் வாங்கியவரிலர், எனவே கேட்டிருக்கிறோம் என்றார்). எனவே தர்மங்களை நன்கு உணர்ந்தவராகிய நீர் எப்படிச் சொன்னாலும் அப்படியே செய்யக் காத்திருக்கிறோம்'' என்றார். சக்ரவர்த்தி பெருந்தன்மையுடன் அடக்கமாக (பணிவாக)ப் பேசியதைக் கேட்டு ஜனகர் மிக்க ஆச்சரியப்பட்டாராம். ஏனெனில் ஸீதையை வீர்யசுல்கமாக அறிவித்திருந்தார். அதன்படி நாணேற்றிய தாசரதிக்கு ஸீதை உரியவளாக உடைமையாக ஆகிவிட்டாள். ஒருவரின் உடைமையை அவருக்கே தானமாக எவ்வாறு வழங்கமுடியும்? அப்படியிருந்தும் நாம் சொன்னதை ஏற்றுப் பேசியபடியால் பேராச்சரியத்தில் ஆழ்ந்தாராம் ஜனகர். ஸம்பந்திகளான அரசர்களின் உரையாடலை அருகிருந்து கேட்ட முனிவர்களும் பெரு மகிழ்ச்சியில் மூழ்கியதோடு அன்றிரவு முழுவதும் ஸீதாராம விவாஹத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே பொழுதை ஸுகமாகக் கழித்தனராம். ஆம், விடிந்தால் கல்யாணம், யாருக்குத்தான் தூக்கம் வரும்? அதுவும் திவ்ய தம்பதிகளின் திருக்கல்யாணத்தைப் பார்க்கக் கொடுத்துவைத்தவர்கட்கா தூக்கம் வரும்? மறுநாள் விடியற்காலையில் சதானந்தரை அழைத்து ஜனகர் பேசலானார்.

भ्राता मम महातेजा वीर्यवानतिधार्मिकः ।

कुशध्वजः इति ख्यातः पुरीमध्यवसच्छुभाम् ॥

सांकाश्यां पुण्यसंकाशां विमानमिव पुष्पकम् ॥

तमहं द्रष्टुमिच्छामि यज्ञगोप्ता स मे मतः ॥

प्रीतिं सोऽपि महातेजा इमां योक्ता मया सह

दूताः, समानेतुं नरव्याघ्रं विष्णुमिन्द्राज्ञया यथा

ப்ராதா மம மஹாதேஜா: வீர்யவான் அதிதார்மிக: ।
குஶத்வஜ இதி க்யாத: புரீம் அத்யவஸத் சுபாம் ॥

ஸாங்காஸ்யாம் புண்ய ஸங்காஸாம் விமானமிவ புஷ்பகம் ॥
தம் அஹம் த்ர்ஷ்டுமிச்சாமி யஜ்ஞகோப்தா ஸ மே மத: ॥
ப்ரீதிம் ஸோஅபி மஹாதேஜா: இமாம் யோக்தா மயா ஸஹ ॥
தூதா:, ஸமாநேதும் நரவ்யாக்ரம் விஷ்ணும் இந்த்ராஜ்ஞயா யதா ॥

आज्ञया च नरेन्द्रस्य आजगाम कुशध्वजः
उपविष्टौ उभौ तौ तु भ्रातरौ अतितेजसौ
प्रेषयामासतु वीरौ मन्त्रि श्रेष्ठं सुदामनम्
गच्छ मन्त्रिपते शीघ्रं ऐक्ष्वाकु ममित प्रभम्
आत्मजैस्सह दुर्धर्षं आनयस्व समन्त्रिणम्

ஆஜ்ஞயா ச நரேந்த்ரஸ்ய ஆஜகாம குஶத்வஜ: ॥
உப விஷ்டௌ உபௌ தௌது ப்ராதரௌ அதிதேஜஸௌ ।
ப்ரேஷயாமாஸது: வீரௌ மந்த்ரி ஶ்ரேஷ்டம் ஸுதாமனம் ॥
கச்ச மந்த்ரிபதே சீக்ரம் ஐக்ஷ்வாகும் அமிதப்ரபம் ।
ஆத்மஜை: ஸஹ துர்தர்ஷம் ஆனயஸ்வ ஸமந்த்ரிணம் ॥

வா.ரா. பால. - 70

''குலகுருவே! பரம தார்மிகராய், மஹாதேஜஸ்வியாய் இருக்கும் எனது இளைய ஸஹோதரர் குசத்வஜர் இக்ஷுமதீ நதிக் கரையிலுள்ளதும், (புஷ்பக விமானம்) போன்று நினைத்தது எல்லாம் கிடைக்கக் கூடியதுமான ஸாங்காச்யா எனும் நகரில் வாழ்ந்து வருகிறார். அவர் மிதிலையில் நான் இயற்றும் வேள்விகட்குத் தேவையான பொருள்களை அனுப்பிக் கொடுத்து யாகத்தைக் காப்பாற்றுபவர், அவரை இப்பொழுதே பார்க்க விரும்புகிறேன். ஸீதா கல்யாணம் நடக்க இருக்கிறது, யாகம் பூர்த்தியடையும் பொழுது தம்பி வந்திருந்து, பார்த்து ஸந்தோஷப்படுவார். அவர் ஸீதா கல்யாணத்தையும் நேரில் பார்த்து அனுபவித்து நம்மோடொக்க மகிழ வேண்டும். (யாகத்தில் செய்யப்படும் ஒவ்வொரு ஆஹுதியும் எம்பெருமானுக்கே போய்ச் சேரு கிறது. கடைசியில் விஷ்ணுவே என்று ஸ்வாஹாகாரம் செய்து ஹோமம் செய்வது நேராக விஷ்ணுவை அடைகிறது. அது போல ஸீதா கல்யாணமும் ஒரு வேள்விதான். இதில் ஸீதையாம் ஹவிஸ்ஸை விஷ்ணுவான ராமனுக்கு அளிப்பதும் உயரிய யாகமாயிற்றே). எனவே தம்பி விரைந்து வர ஏற்பாடு செய்ய வேண்டும்'' என பிரார்த்தித்தார்.

உடனே தூதர்கள் விரைந்து சென்று இந்திரனின் உத்திரவுக்கு ஏற்ப தம்பியான உபேந்திரனை (விஷ்ணுவை) தேவர்கள் அழைத்து வருவதுபோல குசத்வஜரை, அழைத்து வந்தனர். இருவரும் ஸீதா கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை, முறைகளை நன்கு ஆலோசித்து முடிவு செய்து

கொண்டனர். பின்னர் முதலமைச்சர் ஸுதாமனர் என்பவரை அழைத்து ஜனகர் உத்தரவிட்டார். ''முதலமைச்சரே! நீரே தசரதர் தங்கியிருக்கும் மாளிகைக்குச் செல்லும், சக்ரவர்த்தியை குலகுருவோடும், அமைச்சர் களோடும், குமாரர்களோடும், முனிவர்களோடும் நாளை காலை நமது அரண்மனைக்கு வரும்படி பணிவுடன் அழைத்துவிட்டுவாரும்'' என்றார்.

உடனே ஸுதாமனர் அரசு மரியாதைகளுடன் அயோத்தி மன்னரிடம் சென்று முறைப்படி வணங்கி விண்ணப்பித்துத் திரும்பினார்.

நிச்சயதார்த்தம்

मन्त्रि श्रेठ वचः श्रुत्वा राजा सर्षिगण स्तदा ।
सबन्धु रगमत् तत्र जनको यत्र वर्तते ॥
विदितं ते महाराज इक्ष्वाकु कुलदैवतम्
वक्ता सर्वेषु कृत्येषु वसिष्ठो भगवानृषिः
विश्वामित्राभ्यनुज्ञातः सह सर्वैर्महर्षिभिः
एष वक्ष्यति धर्मात्मा वसिष्ठो मेयथाक्रमम्

மந்த்ரி ஶ்ரேஷ்ட வச: ஶ்ருத்வா ராஜா ஸர்ஷிகண: ததா ।
ஸ பந்து: அகமத் தத்ர ஜனக: யத்ர வர்த்ததே ॥
விதிதம் தே மஹாராஜ இக்ஷ்வாகு குலதைவதம் ।
வக்தா ஸர்வேஷு க்ருத்யேஷு வஸிஷ்ட: பகவான் ரிஷி: ॥
விச்வாமித்ரா ப்யனுஜ்ஞாத: ஸஹ ஸர்வை: மஹர்ஷிபி: ।
ஏஷ வக்ஷ்யதி தர்மாத்மா வஸிஷ்ட: மே யதா க்ரமம் ॥

வா.ரா.பால. - 70

மிதிலையின் பிரதமர் வந்து அழைத்ததும் தசரதர் ஜனகரின் அரண்மனைக்கு விஶ்வாமித்ரர் போன்ற பல மஹர்ஷிகளுடனும், தமது பந்து வர்கங்களுடனும் குலகுருவான வஸிஷ்டருடனும் போய்ச் சேர்ந்தார். (ராமர் போகவில்லை, க்ஷத்திரியர்கள் விவாஹத்திற்கு முன்பு பெண்ணைப் பார்ப்பது வழக்க மில்லை. பெரியோர்கள் பெண்ணைப் பார்த்து கன்யா வரணம் செய்து நிச்சயித்த பிறகு கல்யாணத்தின் பொழுது பூர்வாங்கங்கள் ஆனபிறகு மண மக்களின் இடையே இருந்த திரையை நீக்கி ஒருவருக் கொருவர் பார்க்கச் செய்வர்.)

தசரதர் ஜனகரை நோக்கி: ''பேரரசே! எங்கள் குலதெய்வமான வஸிஷ்டரைத் தாங்கள் அறிவீர். அவர் அனுமதி பெற்றே எங்கள் குடும்பக் கார்யங்களைச் செய்வோம். திருமணத்தின் பொழுது மணமக்களின் முன்புள்ள சுமார் பத்து தலைமுறையினரைப் பற்றிச் சொல்லி வம்சத்தின் பெருமையை உயர்வை எடுத்துச் சொல்வது வழக்கம். அந்த ஸம்ப்ரதாயத் திற்கு இணங்க இத்திருமணத்திற்குக் காரண புருஷரான விஶ்வாமித்ர ருடையவும், இங்கு குழுமியிருக்கும் மஹர்ஷிகளினுடையவும் அனுமதியைப் பெற்று, பகவான் வஸிஷ்டர் எமது குலத்தின் முன்னோர்களைப் பற்றி அறிமுகம் செய்வார்'' என்றார்.

வஸிஷ்டர்: ''ஸ்ரீமத் நாராயணனிடமிருந்து முதன் முதலாகத் தோன்றியவர் நான்முகன். அவரிடமிருந்து முறையே தோன்றியவர்கள் மரீசி, காச்யபர், ஸூர்யன், வைவஸ்தமனு, இக்ஷ்வாகு. இவர்கள் பெரும் புகழ் பெற்றவர்கள்.''

பிணி அரங்க வினை அகலப் பெருங்காலம் தவம் பேணி
மணி அரங்குஅம் நெடுமுடியாய்! மலரயனை வழிபட்டுப்
பணி அரங்கப் பெரும்பாயல் பரஞ்சுடரை யாம் காண
அணி அரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார்.

க.ரா. பால. - குலமுறை

அரங்க : அழிய, மணி அரங்குஅம் : மணி அழுந்தப் பதிக்கப் பெற்ற, பணி : படமுடைய சேஷன், அரங்க : பெரும்பாயல் : உடம்பே இடமான பெரிய படுக்கை, அரங்கம் : ஸ்ரீரங்க விமானம்.

''நவரத்னங்களும் பதிக்கப்பெற்ற அழகிய கிரீடத்தை அணிந்த ஜனக மஹாராஜரே! இக்ஷ்வாகு மன்னரின் பெருமையைக் கேளீர். வைவஸ்வத மனுவின் திருக்குமாரராகிய இக்ஷ்வாகு நான்முகனைக் குறித்துப் பெருந் தவம் இயற்றினார். அதன் பயனாய் தாம் ஆராதித்து வந்த ஸ்ரீ ரங்கனாதனை இக்ஷ்வாகுக்கு பிரமன் அளித்தார். அவ்வெம்பெருமானைத் தம் அரண்மனையில் பிரதிஷ்டை செய்து இன்று தசரதர் வரை ஆராதித்து வருகின்றனர். இதனால் பல்வகை உலகியல் துன்பங்களுக்குக் காரணமான ஊழ்வினை அகன்று அயோத்தி அரசர்கள் யாவரும் க்ஷேமநலன்களுடன் வாழ்ந்து வருகிறார்கள், ஸத்ய லோகத்திலிருந்து பூவுலகிற்கு அதிலும் திரு வயோத்திக்கு ரங்கனாதப் பெருமாளை எழுந்தருளப் பண்ணிய பெருமை இக்ஷ்வாகுவுக்கே உரியது. இத்தகு பேரரசனைக் கற்றவர்கள் அறியா திருப்பரோ.''

''இப்பெருமானே பின்னர் ஸ்ரீராமனால் ஆராதிக்கப்பட்டு, தமது பட்டாபிஷேக காலத்தில் விபீஷணாழ்வானுக்கு அளிக்கப்பட்டவராவார், இலங்கைக்குச் செல்லும்பொழுது தமது அனுஷ்டானத்திற்காக உபய காவேரி மத்தியில் மணல்திட்டில், சேஷபீடத்தில் பெருமாளை எழுந்தருளப் பண்ணினார் விபீஷணன். அனுஷ்டானத்தை முடித்துக் கொண்டு புறப்படும் பொழுது ரங்கனாதனை எழுந்தருளப் பண்ணிக்கொள்ள எவ்வளவு முயன்றும் முடியாமற் போயிற்று. பெருமானோ ப்ரணவ வடிவமான ஸ்ரீரங்க விமானத்தில் அனந்தசயனத்தில் பள்ளி கொண்டுவிட்டான். ரங்கம் நடிக்குமிடம், ஜகத் ரக்ஷணார்த்தமாக பத்து விதமான வேடங்கள் பூண்டு நடித்த இடம் இதுவே போலும். இப்பெருமானையே ஆழ்வார் குலசேகரர்

திரு அரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக் கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டு என்
கண் இணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே?

பெருமாள் திருமொழி - 1

பொன்னி: காவேரி

வன்பெரு வானகம் உய்ய, அமரர் உய்ய
மண் உய்ய, மண்ணுலகில் மனிசர் உய்ய,
துன்பமிகு துயர் அகல, அயர்வு ஒன்றில்லாச்
சுகம்வரை, அகம் மகிழுந் தொண்டர்வாழ
அன்பொடு தென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளும்
அணி அரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இன்பமிகு பெருங் குழுவுகண்டு யானும்
இசைந்துடனே என்று கொலோ இருக்கும் நாளே?

பெருமாள் திருமொழி 1 - 10

அயர்வு: துன்பம்

இப்பாசுரங்களின் எளிய நடையே நம்மைத் திரும்பத் திரும்பப் படித்து இன்புறச் செய்கிறது. திருப்பாணாழ்வாரும் அமலனாதிபிரானில்

''செய்ய வாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே''

''அமலன்முகத்து, கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து
செவ்வரியோடி, நீண்ட அப்பெரிய வாய கண்கள்
என்னைப் பேதமை செய்தனவே''

''முடிவில்லதோர் எழில் நீலமேனி ஐயோ,
நிறைகொண்டது என் நெஞ்சினையே''

''கொண்டல் வண்ணனை, என்னுள்ளம் கவர்ந்தானை,
என்அமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக்
காணாவே.''

இங்கு அரங்கனின் கவர்ச்சியும், பாணரின் பரவச நிலையும் சொல் லால் இயம்புவதற்கு எளிதோ!

सत्याल्लोकात्सकलमहितात् स्थानतो वा रघूणां
शङ्केमात: समधिक गुणं सैकतं सह्यजाया ।
पूर्वं पूर्वं चिरपरिचितं पादुके यत् त्यजन्त्या
नीतोनाथ: तदिदमितरत् नीयते न त्वयाऽसौ ॥

ஸத்யாத் லோகாத் ஸகல மஹிதாத் ஸ்தானத: வா ரகூணாம்
ஶங்கே மாத: ஸமதிககுணம் ஸைகதம் ஸஹ்யஜாயா: ।
பூர்வம் பூர்வம் சிரபரிசிதம் பாதுகே! யத் த்யஜந்த்யா
நீத: நாத: ததிதம் இதரத் நீயதே ந த்வயா அஸௌ ॥

வேதாந்த தேசிகன், பாதுகா ஸஹஸ்ரம்

ஸ்வாமி தேசிகன் பாதுகையின் பெருமையைப் பேசும் முகத்தான் ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தின் பெருமையைக் காட்டுகிறார். ''பரமன் ஸ்ரீவைகுண்டம், திருப்பாற்கடல், ஸூர்ய மண்டலம். ஸத்ய லோகம், யோகிகளின் இதயம், திருவயோத்தி ஆகிய இடங்களிலெல்லாம் வாஸம் பண்ணினான். ஏ பாதுகா தேவி! பன்னாட்கள் வசித்துப் பழகின இடங்களை எல்லாம் ஒவ்வொன்றாக விட்டுவிட்டு, திருவரங்கம் எனும் மணல்திட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டாய். எல்லா இடங்களையும் விட ஸ்ரீரங்கமே உயர்ந்தது என்பது உன் எண்ணம் போலும். அதனால்தான் இங்கு பகவான் எழுந்தருளி பன்னாட்களாயினும் வேறிடத்திற்கு அவனை நீ அழைத்துச் செல்லவில்லை'' என்பர். (மஹாராஜரே—விபீஷணனே நாமும் பின்னோரும் உய்வதற்கு வழி வகுத்தவர்.)

வஸிஷ்டர் மேலும் கூறலானார். ''இந்த ராமனின் மூத்தோரான இக்ஷ்வாகுக்குப் பின் அனரண்யன், ப்ருது:, த்ரிசங்கு:, மாந்தாதா, ஸகரன், அஸமஞ்ஜன், அம்சுமான், திலீபன், பகீரதன், ககுத்ஸ்தர் (இவர் தேவர்கட்கு உதவியாகப் போரிடும் போது இந்திரனே இவருக்கு எருது உருவில் வாஹன மாக இருந்தான்) பின்னர் ரகு, அம்பரீஷன், நஹுஷன், யயாதி, நாபாகன், அஜன், தசரதர்.''

அயன் புதல்வன் தயரதனை அறியாதார் இல்லை - அவன்,
பயந்த குலக்குமாரர் - இவர் தமக்குள்ள பரிசு எல்லாம்
நயந்து உரைத்துக் கரை ஏற நான்முகற்கும் அரிதாம் பல்
இயம் துவைத்த கடைத்தலையாய்! யான் அறிந்தபடி கேளா.

க.ரா.பால - குலமுறை

அயன்: அஜமஹாராஜன், பரிசு: சிறப்புக்கள், பல்லியம்: பல வாத்யங்கள்.

''பல்வகை வாத்யங்கள் முழங்கும் கோட்டை வாயிலை உடைய ஜனகரே! அஜ மஹாராஜனின் புதல்வனான தசரதனை மூவுலகும் அறியும். அவன் பெற்ற குமாரர்களின் சிறப்பை யாரே உரைக்க வல்லார்? அவர் தம் புகழ்க்கடலை விரித்துரைத்து நான்முகனாலும் கரை ஏறமுடியாது. அத்தகு புகழுடையோர் இக்குமாரர்கள்'' என்று முடித்தார்.

आदि वंश विशुद्धानां राज्ञां परमधर्मिणाम्
इक्ष्वाकु कुलजातानां वीराणां सत्यवादिनां ।
रामलक्ष्मणयोरर्थ त्वत्सुते वरये नृप
सदृशाभ्यां नरश्रेष्ठ सदृशे दातु मर्हसि

ஆதிவம்ஶ விஶுத்தானாம் ராஜ்ஞாம் பரமதர்மிணாம் ।
இக்ஷ்வாகு குலஜாதானாம் வீராணாம் ஸத்யவாதினாம் ॥

ராம லக்ஷ்மணயோ: அர்தே த்வத்ஸுதே வரயே ந்ருப ।
ஸத்ருஸாப்யாம் நரஸ்ரேஷ்ட ஸத்ருஸே தாதும் அர்ஹஸி॥

வா.ரா. பால. - 70

''பிரமன் தொடங்கி சுமார் நாற்பது தலைமுறையினரான அரசர்களைக் கூறி, இவ்வம்சத்தினர் தொடக்கத்திலிருந்தே தூய்மையானவர்கள், தர்மானுஷ்டானபரர்கள், வீரர்கள், ஸத்யம் தவறாதவர்கள். இத்தகு இக்ஷ்வாகு வம்சத்தைச் சார்ந்தவர்களும் தசரதரின் புத்ரர்களுமான ராமனுக்கும் லக்ஷ்மணனுக்குமாக உமது குமாரத்திகள் இருவரையும் வரிக்கிறேன். எனவே தேவரீர் உமது புத்ரிகளான ஸீதை, ஊர்மிளை இருவரையும் ஏற்றவர்களான ராம லக்ஷ்மணர்க்குக் கன்யகாதானம் செய்து கொடுப்பீர்,'' எனக் கூறி இளைய பெருமாளுக்கும் சேர்த்து வதூவரணத்தைச் செய்தார்.

प्रदाने हि मुनि श्रेष्ठ कुलं निखशेषतः
वक्तव्यं कुल जातेन तन्निबोधमहामुने ॥

ப்ரதானே ஹி முனிச்ரேஷ்ட । குலம் நிரவசேஷத: ।
வக்தவ்யம் குல ஜாதேன தத் நிபோத மஹாமுனே! ॥

வா.ரா. பால. - 71

வஸிஷ்டர் பேசிய பிறகு ஜனகர் கைகளைக் கூப்பிய வண்ணம் பேசினார். தம் கன்னியை மணம் முடிக்கும் பொழுது தமது குலத்தைப் பற்றிய செய்திகள் முழுவதையும் கூறுவது நற்குடித் தோன்றலின் கடமையாகும். அதைக் கவனமாகக் கேட்கும்படி வேண்டுகிறார். ஏன்? மணப் பொருத்தம் பார்க்கும் பொழுது நற்குடிப் பிறப்பை—ஆபிஜாத்யத்தை முதலில் பார்க்க வேண்டும். மணமகன் நற்குடியில் தோன்றியதை வஸிஷ்டர் கூறினார். ஜனகரோ தம் மகளின் உயர்குடிப் பிறப்பைத் தாமே புகலத் தொடங்குகிறார்.

राजाभूत् त्रिषु लोकेषु विश्रुतः स्वेन कर्मणा
निमिः परम धर्मात्मा सर्वसत्त्ववतां वर
तस्य पुत्रो मिथिर्नाम मिथिला येन निर्मिता ।
तस्य पुत्रद्वयं जज्ञे धर्मज्ञस्य महात्मनः
ज्येष्ठोऽहंअनुजो भ्राता मम वीरः कुशध्वजः
कस्य चित्त्वथकालस्य साङ्काश्यादागतः पुरा
सुधन्वा वीर्यवान् राजा मिथिला मवरोधकः
सच मे प्रेषयामास शैवं धनु रनुत्तमम्
सीता कन्या च पद्माक्षी मह्यं वै दीयता मित्ति

तस्याप्रदाना द्ब्रह्मर्षेर्युद्धमासीन्मया सह
निहत्य तं मुनिश्रेष्ठ अभ्यषिञ्चं कुशध्वजम् ॥

ராஜா அபூத் த்ரிஷு லோகேஷு விஸ்ருத: ஸ்வேன கர்மணா ।
நிமி: பரம தர்மாத்மா ஸர்வ ஸத்வ வதாம் வர: ॥
தஸ்ய புத்ர: மிதி: நாம மிதிலா யேன நிர்மிதா ।
தஸ்ய புத்ரத்வயம் ஜக்ஞே தர்மக்ஞஸ்ய மஹாத்மன: ।
ஜ்யேஷ்ட அஹம், அனுஜ: ப்ராதா மமவீர: குசத்வஜ: ॥
கஸ்யசித் து அத காலஸ்ய ஸாங்காஸ்யாத் ஆகத: புரா ।
ஸுதந்வா வீர்யவான் ராஜா மிதிலாம் அவரோதக: ॥
ஸசமே ப்ரேஷயாமாஸ சைவம் தனு: அனுத்தமம் ।
ஸீதா கன்யாச பத்மாக்ஷீ மஹ்யம் வை தீயதாம் இதி ॥
தஸ்ய அப்ரதானாத் ப்ரஹ்மர்ஷே! யுத்தம் ஆஸீத்மயாஸஹ ॥
நிஹத்ய தம் முனிஸ்ரேஷ்ட அப்யஷிஞ்சம் குஸதவஜம் ॥

வா.ரா. பால. - 71

''மக்கள் அனைவருக்கும் நன்மைகளைச் செய்தலால் மூவுலகினரும் கொண்டாடும்படியாக நிமி எனும் அரசர் கோலோச்சி வந்தார். இவர் பரம தார்மிகர், திறனும் வலிமையும் பெற்றவர். இவரே எங்கள் குல முதல்வர். இவருடைய குமாரர் மிதி என்பவர். இவர் இத்தலைநகரை அமைத்ததால் இதற்கு மிதிலை எனப் பெயர் வழங்கப்படுகிறது. இவர்களைத் தொடர்ந்து 21 தலைமுறை அரசர்களுக்குப் பிறகு, 22வதாக ஹ்ரஸ்வரோமா ஆட்சி புரிந்தார். இவருடைய இரு குமாரர்களுள் மூத்தவன் யான், இளையவன் குசத்வஜன், எனது ஆட்சியின்போது ஸாங்காச்ய நாட்டரசனான ஸுதர்மா, மிதிலையை முற்றுகையிட்டான். அப்பொழுது ஸமாதானம் செய்து கொள்வ தாகக் கூறி, தன் வசமிருந்த மிகச்சிறந்த சிவதனுஸ்ஸை எனக்குக் கொடுத் தனுப்பி, எனது மகளாகிய ஸீதையைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டான். யான் ஸீதையை அவனுக்குக் கொடுக்க மறுக்கவே பெரும் போர் மூண்டது. அப்போரில் ஸுதன்வாவைக் கொன்று ஸாங்காச்யாநகரில் எனது தம்பி குசத்வஜனை முடிசூட்டினேன்.

सीतां रामाय भद्रं ते ऊर्मिलां लक्ष्मणाय च
वीर्यशुल्कां मम सुतां सीतां सुरसुतोपमाम्
द्वितीयामूर्मिलाञ्चैव त्रिः वदामि न संशयः
ये मातृतः पितृतश्च दश पुरुषं समनुष्ठिताः

ஸீதாம் ராமாய பத்ரம் தே ஊர்மிளாம் லக்ஷ்மணாயச ।
வீர்யசுல்காம் மமஸுதாம் ஸீதாம் ஸுர ஸுதோபமாம் ॥

த்விதீயாம் ஊர்மிளாம் சைவ த்ரி: வதாமி ந ஸம்ஶய: ॥
யே மாத்ருத: பித்ருத: ச தச புருஷம் ஸமனுஷ்டி தா: ॥

வா.ரா. பால. - 71

தாய் வழியிலும் தந்தை வழியிலும் பத்து தலைமுறைகள் சிறந்தவர்களாக—குற்றமற்றவர்களாக இருக்க வேண்டும் என்று தர்ம சாஸ்த்ரம் கூறும். ஆனால் இங்கோ பிள்ளை வழியில் நாற்பது தலைமுறையும், பெண் வழியில் இருபத்து மூன்று தலைமுறையும் மிகத் தூயர்கள் என்று எடுத்துக் கூறினர் முறையே வஸிஷ்டரும் ஜனகரும். இவ்வாறு குலப் பொருத்தம் பேசப்பட்டது, மேலும்

शीलं वृत्तिं च विज्ञाय विद्यां योनिंच कर्मच
सद्भिरेवं प्रदातव्या कन्या गुणवते वरे ।
कुलञ्च शीलञ्च वपुर्वयश्च विद्यांच वित्तंच सनाथतांच
एतान् गुणान् सप्त परीक्ष्य देया कन्या बुधैः शेषमचिन्तनीयम्

ஶீலம் வ்ருத்திம் ச விஜ்ஞாய வித்யாயோனிம்ச கர்மச
ஸத்பி: ஏவம் ப்ரதாதவ்யா கன்யா குணவதே வரே ।


குலம்ச சீலம்ச வபு: வய: ச வித்யாம் ச வித்தம் ச ஸநாததாம்ச ।
ஏதான் குணான் ஸப்த பரீக்ஷ்ய தேயா கன்யாபுதை: ஶேஷம்
அசிந்தனீயம் ॥

நற்பண்புகள், பரம்பரைத் தொழில், கல்வி, பிறப்பு, செய்யும் தொழில், இவைகளை நன்கு அறிந்த பிறகே பெண்ணைக் கொடுக்க வேண்டும் என பீஷ்மரும், நற்குடிப் பிறப்பு, உடலமைப்பு, வயது, செல்வம், தலைவன் ஆகியவற்றையும் நன்கு ஆராய்ந்தே பெண்ணைக் கொடுக்க வேண்டும் என யம தர்மரும் கூறுவர்.

नोद्वहेत् कपिलां कन्यां नाधिकाङ्गीं न रोगिणीम्
नालोमिकां नातिलोमां नवाचाटां न पिङ्गलाम्
नऋक्ष वृक्ष नदीनाम्नीं नान्त्य पर्वत नामिकाम् ।
न पक्षी अहि प्रेष्यनाम्नीं नविभीषण नामिकां ।
अव्यक्ताङ्गीं सौम्य नाम्नीं हंस वारणगामिनीम् ।
तनु रोम केश दशनां मृद्वङ्गी उद्वहेत् स्त्रियम् ।
यस्यास्तु न भवेत् भ्राता न विज्ञायेत वा पिता ।
न श्मश्रु व्यञ्जनवतीं न चैव पुरुषाकृतिम् ।



அங்கணெடு மதிள்புடை சூழ் அயோத்தியென்னும் அணிநகரத்துலகனைத்தும் விளக்குஞ்ஜோதி வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி விண்முழுதுமுயக் கொண்ட வீரனின் அம்மாஜி மந்திரில் மஞ்சனக் கோலம்.



ஏழை ஏதலன் கீழ் மகன் என்னாதிரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து.......... தோழன் நீயெனக்கிங்கொழி என்றுரைத்த அழகன். குகனது இனத்தவனாக—வேடுவனாக (கண்ணனுடன்) மன்னார் கோயிலில் (அம்பாசமுத்திரம்அருகில்). இவ்வூரில் தான் ஸ்ரீ குலசேகராழ்வார் பரமபதித்ததாகத் தெரிகிறது.

न गर्ग स्वरां क्षामां तथा काकस्वरां न च ।
नातिवृत्तेक्षणां तद्वत् वृत्ताक्षींनोद्वहेत् बुधः
न वामनां नातिदीर्घां नोद्वहेत् संहत भ्रुवम् ।
न अतिछिद्र दशनां न करालमुखीम् नरः ।

நஉத்வஹேத் கபிலாம் கன்யாம் நஅதிகாங்கீம் நரோகிணீம் ।
நஅலோமிகாம் நஅதிலோமாம் நவாசாடாம் நபிங்கலாம் ॥
நருக்ஷ வ்ருக்ஷ நதீ நாம்னீம் நஅந்த்ய பர்வத நாமிகாம் ॥
ந பக்ஷீ அஹிப்ரேஷ்ய நாம்னீம் ந விபீஷண நாமிகாம் ॥
அவ்யக்தாங்கீம் ஸௌம்ய நாம்னீம் ஹம்ஸ வாரணகாமினீம் ।
தனு ரோம கேஶ தசனாம் ம்ருத்வங்கீம் உத்வஹேத் ஸ்திரியம் ॥
யஸ்யா: து நபவேத் ப்ராதா ந விஜ்ஞாயேத வா பிதா ॥
ந ஶ்மஶ்ரு வ்யஞ்ஜனவதீம் நசைவ புருஷாக்ருதிம்
ந கர்க ஸ்வராம் க்ஷாமாம் ததா காகஸ்வராம் ந ச ।
ந அதிவ்ருத்தேக்ஷணாம் தத்வத் வ்ருத்தாக்ஷீம் நஉத்வஹேத் புத: ॥
ந அதிசித்ர தசனாம் ந கராலமுகீம் நர: ॥

நிறம் கபிலமாயும் (செங்கல்லைப் போன்று மங்கலான நிறம் கருஞ் சிகப்பு.) அதிகமான உறுப்பை உடையவளும், நோயுற்றவளும், ரோம மில்லாதவளும், மிகுதியாக ரோமம் உடையவளும், வாயாடியும், மஞ்சள், அரக்கு (brown) நிறமுடையவளும், நக்ஷத்ரம், மரம், நதீ, நீசர், மலை, பறவை, பாம்பு இவற்றினுடையவும், பயங்கரமாயும் உள்ள பெயரை உடையவளும், மணக்கத்தக்கவள் அல்லள்; உடற்குறை இல்லாத வளும், அழகிய மங்களமான பெயரையுடையவளும், மெல்லிய அழகிய ரோமம், கேசம், பற்கள் இவற்றையுடையவளும், மென்மையான உடலுடையவளும் மணக்கத்தக்கவள். ஸஹோதரன் இல்லாதவளும், தந்தை இன்னாரென்று அறியப்படாதவளும், மீசையின் அறிகுறியுடையவளும், ஆணுருக் கொண்ட வளும், கரகரப்பான குரலுடையவளும், காகத்தின் குரலுடையவளும், வாடியவளும் வட்டமான கண்ணுடையவளும், மிகக் குட்டையாயும், மிக உயரமாயும் இருப்பவளும், சேர்ந்த புருவத்தினளும் ஒட்டையும் இடை வெளியும் உள்ள பற்களையுடையவளும், பயங்கர முகத்தையுடையவளும் திருமணத்திற்கு ஏற்புடையவள் அல்லள் என பொருத்தத்தையும் பொருத்த மின்மையையும் மனு, ஆபஸ்தம்பர், கௌதமர் ஆகியோர் கூறுவர்.

இவற்றைத் தவிர பத்துவகைப் பொருத்தங்களும், கோத்ரமின்மை போன்றவைகளும் சொல்லப்படுகின்றன. இவையெல்லாம் ஒருங்கே அமைவது மிகக் கடினம். இவ்வாறு பார்ப்பின் நாட்டில் பெரும்பாலோர்க்கு கல்யாணம் நிகழ்வது அரிதாகிவிடும். எனவே ஓரளவு முக்கியமான ஒரு சில

பொருத்தங்களைப் பார்த்துத் திருமணம் செய்வதே நாட்டு வழக்கில் உள்ளது.

ஆனால் இவ்வனைத்துப் பொருத்தங்களும் ஸீதா ராமர்கட்கு உண்டு என்பதை முன்னரே உணர்ந்தவர் விஸ்வாமித்ரர். இவர் பொருத்தம் பார்த்தது மிகச் சரியானது என அத்தாட்சி வழங்கியவர் ஆஞ்ஜனேயர்.

கிஷ்கிந்தையில் ராமபிரானைச் சந்தித்ததிலிருந்து மிக நெருங்கிப் பழகியவர் ஹனுமான். இவர் அசோகவனத்தில் ஸீதையைப் பார்த்ததும் பேசினார்.

तुल्यशीलवयो वृत्तां तुल्याभिजन लक्षणाम् ।
राघवोर्हति वैदेहीं तं चेयमसितेक्षणा ॥

துல்யசீல வயோவ்ருத்தாம் துல்யாபிஜன லக்ஷணாம் ।
ராகவ: அர்ஹதி வைதேஹீம் தம் ச இயம் அஸிதேக்ஷணா ॥

வா.ரா. சுந்தர. - 16

''நற்குண நற்பண்புகள், வயது, செயல்கள், நற்குடிப் பிறப்பு ஆகியவற்றை நோக்குங்கால் ராமன் ஸீதைக்கும், ஸீதை ராமனுக்குமே ஏற்றவர்கள். பெரும்பாலும் ஆண் தன்னைவிட அழகிய பெண்ணையே மணம் கொள்ள விரும்புவது இயல்பு. அப்படிப் பார்க்கும் பொழுது செந்தாமரை கண்ணனின் கண்ணழகைவிட பிராட்டியின் கண்ணழகு ஒருபடி உயர்ந்தது'' என்றார். சிலருக்கு வட்டமாகப் பூனைக் கண்ணாக இருக்கும். அரக்கு நிறத்திலிருக்கும். இவ்வாறின்றி ''கருவிழி, பெயருக்கேற்ப கரிய தாகவும், கண் தாமரையிதழ் போன்று நீண்டும், ராமனின், நீண்டு கரியவாய்ப் புடைபரந்து செவ்வரியோடிப் பெரியவாய கண்களைவிட ஸீதையின் கண்ணழகு விஞ்சியதாக இருக்கிறது'' என்றார்.

இவ்வாறு பல்வகையிலும் பொருத்தம் உத்தமமாக இருந்ததால் பெண்ணைக் கொடுப்பதற்கு என்ன தடை என எண்ணி ஜனகர்: ''வீர்ய சுல்கையாயும், தேவ மாது போன்றவளுமான ஸீதையை ராமனுக்கும், ஊர்மிளையை லக்ஷ்மணனுக்கும், முழு ஸம்மதத்தோடு, அதாவது மனம் மெய் மொழி எனும் முக்கரணங்களின் கத்தியோடு கொடுக்கிறேன். கொடுக் கிறேன், கொடுக்கிறேன் என்று மும்முறை கூறி, வதூவரர்கட்கு க்ஷேமம் உண்டாகுக'' என ஆசீர்வாதத்துடன் உறுதி மொழி அளித்து மேலும் பேசலானார்.

रामलक्ष्मणयोः राजन् गोदानं कारयस्व ह
पितृकार्यश्च भद्रं ते ततोवैवाहिकं कुरु
रामलक्ष्मणयोरर्थे दानं कार्यं सुखोदयम्

ராமலக்ஷ்மணயோ: ராஜன்: கோதானம் காரயஸ்வஹ ।
பித்ருகார்யம்ச பத்ரம்தே தத: வைவாஹிகம் குரு ॥
ராமலக்ஷ்மணயோரர்த்தே தானம் கார்யம் ஸுகோதயம் ।

வ.ரா. பால. - 71

''விவாஹத்திற்குப் பூர்வாங்கமாக ஸமாவர்த்தன வ்ரதத்தையும், பித்ருக்களை மகிழ்விக்கும் நாந்தீமுக ச்ராத்தத்தையும் பண்ணிக் கொண்டு கல்யாணத்திற்கு வாருங்கள். நானும் பெண்ணுக்குச் செய்ய வேண்டிய பூர்வாங்கத்தைச் செய்கிறேன். வரர்களின் க்ஷேமத்திற்காக கோதானம், பூதானம், திலதானம், ஹிரண்யதானம் ஆகியவற்றையும் செய்யுங்கள்'' என்றார்.

விஸ்வாமித்ரரின் வதூவரணம்

भ्राता यवीयान् धर्मज्ञः एष राजा कुशध्वजः
अस्य धर्मात्मनो राजन् रूपेणा प्रतिमंभुवि
सुताद्वयं नरश्रेष्ठ पत्यर्थं वरयामहे
भरतस्य कुमारस्य शत्रुघ्नस्य च धीमतः
वरयेम सुते राजन् तयोरर्थे महात्मनोः

ப்ராதா யவீயான் தர்மஜ்ஞ: ஏஷ: ராஜா குஶத்வஜ: ।
அஸ்ய தர்மாத்மன: ராஜன் ரூபேண அப்ரதிமம் புவி ॥
ஸுதா த்வயம் நரஸ்ரேஷ்ட பத்யர்த்தம் வரயாமஹே ॥
பரதஸ்ய குமாரஸ்ய சத்ருக்னஸ்ய ச தீமத: ।
வரயேம ஸுதே ராஜன் தயோ: அர்த்தே மஹாத்மனோ: ॥

வ.ரா. பால. - 72

இராமனையும் இலக்குவனையும் மிதிலைக்கு அழைத்து வந்து, கன்யா சுல்கமான நாணேற்றுதலைச் செய்வித்து, ஸீதாராம விவாஹத்திற்குக் காரணமாகத் திகழ்ந்தவர் விஸ்வாமித்ரர். ஆயினும் வஸிஷ்டர் ஸீதாராம விவாஹத்தை (திவ்ய தம்பதிகளின் திருமணத்தை)த்தாமே புரோஹிதராக இருந்து நடத்தி வைக்க வேண்டுமெனும் ஆசையினால் ராமர் அவதரிப் பதற்கு முன்பே ரகுகுலத்தரசர்கட்குப் புரோஹிதராகத் தொடர்ந்து காத்து இருப்பவர். எனவே குலகுருவானபடியால் ராம லக்ஷ்மணர்கட்கு வதூ வரணத்தைச் (தங்கள் பெண்களை மணஞ் செய்து கொடுங்கள் என வேண்டுதல்) செய்தார். இது முறையாயினும் தனக்கு இந்த பாக்யம் கிட்டவில்லையே எனும் குறையைப் போக்கிக்கொள்ள எண்ணியவராய் கௌசிகர் பேசலானார்:

''ஜனகரே! என்ன? கல்யாணத்தைப் பற்றி என்னை ஒரு வார்த்தை கேட்காமலிருக்கிறீரே? நான் ராமனை அழைத்து வர அயோத்திக்குச் சென்ற போது தசரதர் தம் குமாரர்கள் நால்வருக்கும் நல்ல இடத்தில் கல்யாணம் ஆக வேண்டுமே எனக் கவலையுற்று மந்த்ராலோசனை செய்து கொண்டிருந்தார். ராம லக்ஷ்மணர்கட்கு நிச்சயமாகிவிட்டது. இதோ உமது அருகில் தம்பி குசத்வஜர் இருக்கிறாரே. இவரும் உம்மைப் போன்ற மஹாராஜர், பரமதார் மிகர், யாகாதிகளை அனுஷ்டிப்பவர். இவருக்கும் இரண்டு பெண்கள் இருப்பதாகவும், அவர்கள் அழகும் பண்பும் வாய்ந்தவர்கள் எனவும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஸீதாகல்யாணத்திற்கு உமது தம்பி அப்பெண்

களையும் அழைத்து வந்திருப்பார். தசரதரின் மற்ற குமாரர்களும் அழகும் நுண்ணிய அறிவும் வாய்ந்தவர்கள். சிறந்த வீரர்கள். உலகில் எத்தனையோ ராஜ குலங்கள் உண்டு. ஆயினும் ரகுகுலமும், விதேஹ குலமும் மிக உயர்ந்தவை. பிற குலங்கள் இவைகட்கு ஈடு ஆகா. இக்குலங்களின் பெருமைகளோ இயம்புதற்கு அரியவை. இந்த விவாஹ ஸம்பந்தத்தினால் இருகுலங்களும் உலகமும் பெருமை அடையப் போகின்றன. எனவே தம்பி குசத்வஜரின் பெண்களாகிய மாண்டவீ, ச்ருத கீர்த்திகளை பரத சத்ருக்னர் களுக்காக நான் வரணம் பண்ணுகிறேன்,'' என்று வதூவரணத்தை வஸிஷ்டருக்குப் பதிலாக யாம் செய்கின்றோம் என்றார். வஸிஷ்டரும் மகிழ்வுடன் ஸம்மதித்தார்.

जनकः प्राञ्जलिः र्वाक्यं उवाच मुनि पुङ्गवौ
कुलं धन्यमिदं मन्ये येषां नो मुनिपुङ्गवौ
सदृशं कुल सम्बन्धं यदाज्ञापयथः स्वयम्
एवं भवतु भद्रं वः कुशाध्वजसुतेइमे
पत्न्यौ भजेतां सहितौ शत्रुघ्न भरतावुभौ
एकाह्नाराजपुत्रीणां चतसृणां महामुने
पाणीन् गृह्णन्तु चत्वारः राजपुत्रा महाबलाः
परोधर्मः कृतोमह्यं शिष्योऽस्मि भवतोस्सदा
यथादशरथस्येयं तथायोध्या पुरीमम
प्रभुत्वे नास्ति सन्देहः यथार्हं कर्तुमर्हथ ॥

ஜனக: ப்ராஞ்ஜலி: வாக்யம் உவாச முனிபுங்கவௌ ॥
குலம் தந்யம் இதம்மன்யே யேஷாம்ந: முனிபுங்கவௌ ।
ஸத்ருஶம் குலஸம்பந்தம் யத் ஆஜ்ஞாபயத: ஸ்வயம் ॥
ஏவம் பவது பத்ரம் வ: குஶத்வஜஸுதே இமே ।
பத்ன்யௌ பஜேதாம் ஸஹிதௌ சத்ருக்னபரதௌ உபௌ ॥
ஏகான்ஹா ராஜபுத்ரீணாம் சதஸ்ருணாம் மஹாமுனே ।
பாணீன் க்ருஹ்ணந்து சத்வார: ராஜபுத்ரா: மஹாபலா: ॥
பர: தர்ம: க்ருத: மஹ்யம் சிஷ்ய: அஸ்மி பவதோ: ஸதா ।
யதா தசரதஸ்ய இயம் ததா அயோத்யா புரீ மம ।
ப்ரபுத்வே நாஸ்தி ஸந்தேஹ: யதார்ஹம் கர்த்தும் அர்ஹத ॥

வா.ரா. பால. - 72

இவ்வாறாக தசரத ராஜ குமாரர்கள் நால்வருக்கும், ஜனக குசத்வஜர் களின் புத்ரிகட்கும் விவாஹ நிச்சய தார்த்தம் ஆயிற்று. இருவரும் எதிர்பாராது விவாஹம் நிச்சயமானபடியாலும், ஸம்பந்தமும் உயர்ந்ததாக அமைந்த

படியாலும் மிக மகிழ்ந்தனர். ஜனகர் வஸிஷ்டரையும், விஸ்வாமித்ரரையும் நோக்கிக் கைகளைக் கூப்பி அஞ்ஜலி ப்ரணாமம் செய்து பேசினார்: ''முனி ச்ரேஷ்டர்களே! தாங்கள் இருவரும் சீடராகிய தசரதரைக் கேட்காமலேயே இவ்விவாஹ ஸம்பந்தத்தைக் கட்டளையிட்டுப் பூர்த்தி செய்து வைத்தீர்கள். இதனால் நாங்கள் தன்யர்களானோம். எங்கள் குலம் பெரும் பெருமை பெற்றது. தங்கள் உத்தரவுபடியே எனது தம்பி குசத்வஜரின் பெண்களை பரத சத்ருக்னர்கட்குத் திருமணம் செய்து கொடுக்க ஸம்மதிக்கிறோம். இத் திருமணங்கள் க்ஷேமமாக, மங்களமாக நடைபெற ஆசீர்வதியுங்கள்.

ஒரே நாளில் இந்நான்கு ராஜபுத்ரிகளின் கைகளை சக்ரவர்த்தியின் திருக்குமாரர்கள் நால்வரும் பற்றிக் கொள்ளட்டும். நாளை உத்தரபல்குனீ (உத்தரம்) நக்ஷத்ரம். மிகச் சிறந்த நாளாகப் பெரியோர் கூறுவர்'' எனக் கூறி எழுந்து நின்று மீண்டும் அஞ்ஜலி ஹஸ்தராய் வணங்கி, ''இப்பேருதவியைப் புரிந்த தங்களுக்கு எப்பொழுதும் யான் சீடனாக இருப்பேன். தானங்களுள் கன்யகாதானம் மிகச் சிறந்தது. தங்களால் அதைச் செய்யும் பாக்யம் எங்களுக்குக் கிட்டிற்று. இனி எங்களுடைய அதாவது என்னுடையதும், குசத்வஜனுடையதும், ஸம்பந்தீ தசரதருடையதுமான மூன்று ராஜ்யங்களும் தங்களுடையதே. அவற்றைத் தாங்களே ஆளலாம்'' என்றார்.

தசரதரின் ராஜ்யத்தை இவர் எப்படிக் கொடுக்க முடியும் எனில், நாங்கள் ஸம்பந்திகளான பிறகு மிதிலை எவ்வாறு தசரதனுடையதோ, அவ்வாறே அயோத்தி என்னுடையது. என் தம்பிக்கு நான்தான் ஸாங்காச்யா ராஜ்யத்தை அளித்தேன். எனவே அதுவும் என்னுடையது. ஆக மூன்று ராஜ்யங்களையும் நான் கொடுக்கத் தடை ஏது? (அக்காலத்தில் பெண்ணைக் கொடுப்பதோ, பெண்ணை வாங்குவதோ மிகயோசித்து செய்யக் கூடியதாக இருக்கும். ஸம்பந்தம் செய்து கொண்டு விட்டால் இருகுடும்பமும் ஒரே குடும்பம் போன்று ஆகிவிடும். இருவரும் இரு குடும்பங்களின் யோக க்ஷேமங்களில் அக்கரை கொண்டிருப்பார்கள். தம் வீட்டுக்கு வந்த பெண்ணின் கண்கள் கலங்காது நாஸுக்காக நடந்து கொள்வார்கள். இக் காலத்தில் நிகழும் சீரழிவுகள் ஸமுஹத்தையே கலங்கச் செய்கின்றன. இரக்கம், நற்குடிப் பிறப்பு, பண்பு, பெருந்தன்மை தேவையான வசதி எல்லாம் அமைந்த குடியில் ஸம்பந்தம் கொள்ள வேண்டும். வரன் கிடைத் தால் போதுமென நினைத்துச் செய்யக் கூடாது. பெண்களுக்குப் படிப்பு மிகத்தேவை. கல்விதான் குடும்பத்தை, நாட்டை முன்னேற்றும். ஆனால் படிக்கும் காலத்தில் பண்பையும் காப்பாற்றப் பெற்றோர்கள் சலியாது கவனத்துடன் இருந்து நல்வழியில் நிற்கப் பழக்க வேண்டும். பெரும்பாலும் ஸ்வயம்வரம் மரணத்தின் வரமாக ஆவதையே செய்திகள் தெரிவிக்கின்றன.

युवा मसंख्येय गुणौ भ्रातरौ मिथिलेश्वरौ
ऋषयो राज संघाश्च भवद्भ्यामभिपूजिता:

स्वस्ति प्राप्नुहि भद्रं ते गमिष्यामि स्वमालयम्
मुनीन्द्रौ तौ पुरस्कृत्य जगामाशुमहायशाः
प्रभाते काल्य मुत्थाय चक्रेगोदानमुत्तमम्
गवां शत सहस्राणि चत्वारि पुरुषर्षभः
वित्तमन्यच्च सुबहु द्विजेभ्यो रघुनन्दनः

யுவாம் அஸங்க்யேய குணௌ ப்ராதரௌ மிதிலேஶ்வரௌ ।
ரிஷய: ராஜ ஸங்கா: ச பவத்ப்யாம் அபி பூஜிதா: ।
ஸ்வஸ்தி ப்ராப்னுஹி பத்ரம் தே கமிஷ்யாமி ஸ்வம் ஆலயம் ॥
முனீந்த்ரௌ தௌ புரஸ்க்ருத்ய ஜகாம ஆஶு மஹாயஶா:
ப்ரபாதே கால்யம் உத்தாய சக்ரே கோதானம் உத்தமம் ॥
கவாம் ஶதஸஹஸ்ராணி சத்வாரி புருஷர்ஷப: ।
வித்தம் அன்யத்ச ஸுபஹு த்விஜேப்ய: ரகு நந்தன: ॥

வா.ரா. பால. - 72

தசரதர்: ''ஸஹோதரர்களாகிய நீங்கள் இருவரும் மிதிலை நாட்டின் மன்னர்கள். உங்களுடைய ஆத்ம குணங்கள் (பண்புகள்) எண்ண முடியாதவை. நீங்கள் பலப்பல ராஜர்ஷிகளையும், மஹர்ஷிகளையும் போற்றிப் பூஜித்திருக்கிறீர்கள். பெரும்பாக்யம் பெற்றவர்கள். உங்கள் ஸம்பந்தம் பெற்றதால் யானும் பாக்யசாலியானேன். அனைவருக்கும் மங்களம் உண்டாகுக,'' எனக்கூறி விடைபெற்றார். வஸிஷ்டர்; விஶ்வாமித்ரர் மற்றுமுள்ள மஹர்ஷி களையும் முன்னிட்டுக் கொண்டு தமது இருப்பிடம் வந்தடைந்தார்.

மறுநாள் விடியற்காலையிலேயே எழுந்து அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பெரியோர்களைக் கொண்டு ஸமாவர்த்தன—வ்ரதம், நாந்தீச்ரார்த்தம், கோதானம், தனதானம் ஆகியவற்றைக் குமாரர்களின் க்ஷேமத்திற்காகச் செய்து வைத்தார். நான்கு குமாரர்கட்காக நான்கு லக்ஷம் பசுக்களை தானம் பண்ணினார். பசுக்கள் அனைத்தும் நன்கு பால் கறப்பவை; இளங்கன்றுகளுடன் கூடியவை; கொம்புகளில் தங்கக் குப்பிகள் கொண்டவை. பால்கறக்க வெண்கலப் பாத்திரங்கள், இவற்றைப் பராமரிப்பதற்குத் தேவையான தனம், இதைத் தவிர ஸ்வர்ணதானாதிகள், இவ்வனைத்தையும் செய்து நான்கு புத்ரர்களோடும், மஹர்ஷிகளோடும் கூடியிருக்கும் தசரதர், லோகபாலகர்களோடு கூடிய பிரஜாபதி போன்று காட்சியளித்தார். இச் சமயத்தில் பரதனின் மாமனான கேகய நாட்டரசனும் வந்து சேர்ந்தான். எல்லோரும் கல்யாண மண்டபத்திற்குப் புறப்படத் தயாரானார்கள்.

युक्ते मुहूर्ते विजये सर्वाभरण भूषितैः

भ्रातृभिस्सहितो रामः कृत कौतुक मङ्गलः
ऋषीस्तदा पुरस्कृत्य यज्ञवाट मुपागमत्

யுக்தே முஹூர்த்தே விஜயே ஸர்வாபரண பூஷிதை: ।
ப்ராத்ரு பி: ஸஹித: ராம: க்ருத கௌதுகமங்கள: ॥
ரிஷீன்ததா புரஸ்க்ருத்ய யஜ்ஞவாடம் உபாகமத் ॥

வா.ரா. பால. - 73

அப்பொழுது விஜயம் எனும் சுபமுஹூர்த்தத்தில் கல்யாணத்திற்கான சுப கர்மாக்கள் அனைத்தையும் செய்து கையில் ரக்ஷாபந்தனஸூத்ரத்தோடு கூடிய நால்வரும் எல்லா வகையான திருவாபரணங்களாலும் தங்களை அலங்கரித்துக் கொண்டு மஹர்ஷிகள் புடைசூழ தந்தையுடனும் உறவினர் களுடனும் புறப்பட்டனர்.

இங்கு ஸர்வாபரண பூஷிதர்களாய் புறப்பட்டதாக வால்மீகி முனிவர் கூறியதை கம்பர் விரித்துக் கூறுவார்.

கல்யாணத்தன்று வரன் காலையில் மங்கள ஸ்னானம் செய்து கொண்டு காசியாத்திரையாகப் பெண் வீட்டுக்குப் போவது என்பது வழக்கம். அம்மரபிற்கேற்ப ராமனுக்கு மங்கள ஸ்னானம் செய்வித்தார்கள்.

சங்கு இனம் தவழ் கடல் ஏழின் தந்தன
சிங்கல்இல் அருமறை தெரிந்த தீர்த்தங்கள்
கங்கையே முதலிய கலந்த நீரினால்
மங்கலம் மஞ்சனம் மரபின் ஆடியே.

க.ரா. பால. - கடிமண


சிங்கல்: அழிதல்.

சங்குப் பூச்சிகள் கடல்களில் நிறைய தவழ்கின்றன. சங்குபட்ட தீர்த்தம் மிகப் புனிதமானது. அத்தகு கடல்கள் ஏழினின்றும் தீர்த்தங்கள் கொண்டுவரப்பட்டனவாம். (அரசர்கள் புனிதத் தீர்த்தங்களை எப்பொழுதும் சேமித்து வைப்பதும் உண்டு) நித்யமாய் அனாதியாக விளங்கும் நம் வேதங்களில் போற்றிக் கூறப்படும் கங்கை, யமுனை, ஸரஸ்வதி, காவேரி முதலிய புண்ய நதிகளினின்றும் தீர்த்தங்கள் கொண்டு வரப்பட்டனவாம். நமது பாபங்களை எல்லாவற்றையும் போக்கவல்ல இப்புண்ய நீரினால் ராமனுக்கு மங்களஸ்நானம் செய்வித்தார்களாம். ஞானிகளின் குற்றமற்ற தூய அறிவு போன்று ஒளிவீசும் உத்தரீயத்தையும், (மேலாடையையும்) திருப்பாற்கடலில் அலைகள் போன்று வெண்ணிறமுடைய பட்டாடையைத் திருவரையிலும் (இடுப்பிலும்) குளியலுக்குப் பிறகு சாத்திக் கொண்டானாம்.

என்றும் நான்முகன் முதல் யாரும் யாவையும்



காரார் கடலை யடைத்திட்டிலங்கை புக்கு ஓராதான் பொன்முடி ஒன்பதோடொன்றையும் நேரா அவன் தம்பிக்கே நீளரசீந்த ஆராவமுதனான இராமபிரான் சுக்ரீவன் வணங்குமாறு தஞ்சை புன்னைநல்லூரில் காட்சி தருகிறான்.



திருவையாறுக்கு அருகிலுள்ள புது அக்ரஹாரத்தில் பக்தர்களைப் பாலிக்கும் பட்டாபிராமன். ஸங்கீத மும்மூர்த்திகளுள் தலைசிறந்தவரான தியாகய்யாவுக்கு இப்பெருமானிடம் ஈடுபாடு மிகுதி என்பர்.

நின்றபேரிருளினை நீக்கி நீள்நெறி
சென்ற மீளாகுறிசேரச் சேர்த்திடு
தன் திருநாமத்தைத் தானும் சாத்தியே

க.ரா. பால. - கடிமண

பேருளினை: ப்ரக்ருதியை, நெறி: இடம், பரமபதம், மீளாகுறிசேர: அர்சிராதி மார்கம்.

குளித்து நல்லாடை உடுத்தியதும் வைஷ்ணவர்கள் நெற்றியில் திருமண்காப்பை–ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்துக் கொள்வது தொன்று தொட்டு வரும் மரபு. கம்பர் வைணவக் கொள்கையுடையவர். திருமண் காப்பு தரிப்பவர். எனவே ராமாதிகளிடம் அவ்வனுஷ்டானத்தை வருணிக்கிறார். அதர்வண வேதம் ''ஒவ்வொருவரும் தமது நெற்றியில் தமது நலத்தின் பொருட்டு நாராயணனின் திருவடிபோன்று மேல் நோக்கியதாகவும், நடுவில் இடைவெளி விட்டும் இட்டுக் கொள்ள வேண்டும். இவ்விதம் தரித்தால் அவன் விஷ்ணுவின் திருவருளுக்குப் பாத்ரமாகிறான். இறுதியில் ஸ்ரீவைகுண்டத்தை (மோக்ஷத்தை) அடைகிறான்'' என்று பேசுகிறது.

வ்ருத்த ஜாபாலி முனிவர் 'அந்தணர்கள் யாவரும் ஊர்த்வபுண்டத்தையே தரிக்க வேண்டு'மென்றும், சாதாதர் ''அந்தணர்கள் விளையாட்டாகக் கூட மேல் நோக்காது குறுக்காக இடக்கூடாது. இட்டுக் கொள்பவன் பதிதனாகி விடுவான்'' என்றும் பேசுவர். சந்தனம், அகில் இவைகளினால் க்ஷத்திரியர்கள் ஊர்த்வபுண்ட்ரம் தரிக்க வேண்டுமெனவும், திருமண்ணாலும் தரிக்கலா மெனவும் பாரமேஷ்ட்ய ஸம்ஹிதை கூறும். இதையெல்லாம் தக்கோர் கூறக் கேட்டவர் கம்பர். பிரமன் தொடங்கிய அனைவரும் யாராயினும் ஊர்த்துவ புண்ட்ரத்தை இட்டுக் கொள்வாராயின், கடைசியில் அர்சிராதி வழியாக ப்ரக்ருதி மண்டலத்தைத் தாண்டி, மீண்டும் மீளாதபடி ஸ்ரீவைகுண்ட உலகை அடைந்து, ப்ரஹ்மானந்தத்தை அனுபவித்துக் கொண்டு என்றென்றும் மகிழ்ந்திருப்பார். இத்தகு திருநாமத்தை (திருமண் காப்பை)த்தானும் சாத்திக் கொண்டானாம்.

ராமனோ விஷ்ணுவின் அவதாரம், இவன் உய்வதற்கு இது ஒருவழியா? இல்லையே. ஏன் திருமண் இட்டுக் கொண்டான்? யாவரும் திருமண் இட்டுக் கொண்டு இம்மையிலும் மறுமையிலும் உய்ய வேண்டும் என்பதற்காக.

यद्यदाचरति श्रेष्ठः तत्तदेवेतरोजनाः

யத்யத் ஆசரதிஸ்ரேஷ்ட: தத்ததேவ இதரோ ஜனா: ॥

பகவத் கீதை

உயர்ந்தவன் எதை எதைச் செய்கிறானோ அவனைப் பார்த்து மற்றோரும் அதைதைச் செய்வர். இது உலகியல்பு. பிரசாரத்திற்குப் பொது மேடை போன்று மணமேடையும் ஒரு பொதுமேடையாகும். சக்ர வர்த்தியின்

திருமகன் அல்லவா இவன். பன்னாட்டு அரசர்களும் மக்களும் குழுமுவர். வாய்திறக்காது செயலால் செய்யும் பிரசாரம் இது. மக்களை உய்விக்க அவதரித்தான் அல்லனோ? முன்பு வாமனாவதாரத்தில் ஸித்தா ச்ரமத்தில் தான் தவம்புரிந்து பிறருக்குத் தவம்புரியும் வழியைக் காட்டினான். பதரிகாச்ரமத்தில் நாராயணனாகவும் நரனாகவும் அவதரித்து அஷ்டாக்ஷர மந்த்ரோபதேசத்தை குரு சிஷ்ய முறையில் பெற்றுப் பிறரும் பகவன் மந்த்ரங்களை ஆசார்யனிடம் உபதேசம் பெற்றே அறிய வேண்டும் என செய் முறையில் காட்டினான்.

यद्दच्छयाश्रुतो मन्त्रः छन्देनाथ छलेन वा
पत्रे क्षितो वाव्यर्थः स्यात् प्रत्युतानर्थदो भवेत् ।

யத்ருச்சயா ஶ்ருத: மந்த்ர: சந்தேன அத சலேனவா ।
பத்ரேக்ஷித: வா வ்யர்த: ஸ்யாத் ப்ரத்யுத அனர்ததோ: ப்வேத் ॥

தற்செயலாகவோ, மறைந்து நின்றோ, ஏதோ ஒரு வியாஜத்தினாலோ, புத்தகத்தைப் பார்த்தோ அறிந்து கொண்ட மந்த்ரமோ, வேதாந்தத் தத்வமோ ஒரு பலனையும் தராது. மாறாக தீங்குகளையே விளைவிக்கும் என உணர்த்தியதுபோல், ராமாவதாரத்தில் ''மக்கள் நலம் பெற திருமண் காப்பை இட்டுக் கொள்ளும்படி, தான் அணிந்து வழிகாட்டினான்'' என்பர். நிற்க, திருமண் காப்பு திருக்கோயிலாகக் கூறுவர். அதைத் தரித்ததும் பிரான் பிராட்டியுடன் அங்கு உறைகின்றான். எனவேதான் பின்னர் ப்ரணவத்துடன் கேசவாதி பன்னிரு திருநாமங்களைச் சொல்லி அவ்விடங்களை அஞ்ஜலி செய்து வணங்குகிறார்கள். இதை ''தன்திருநாமத்தை தானும் சாற்றியே'' எனப்பாடம் கொண்டு ராமன் திருமண் அணிந்த பிறகு அவ்வோ இடங்களை கேசவாதி திருநாமத்தைத் தானும் சாற்றி (சொல்லி) அஞ்ஜலி செய்தான் என்றும் பொருள் கொள்ளலாம்.

(இதிலிருந்து கம்பன் வைணவனானபடியால் வைணவ நெறி முறைகளைக் கசடறக் கற்றிருந்தான் என்பதும், தானும் திருமண்காப்பை அணிந்திருந்தான் என்பதும் தேறும். ஸ்ரீவைஷ்ணவர்கள் நெற்றி, சூன்யமா யிராமல் திருமண்காப்பை இட்டுக் கொள்ள அஞ்சுவதோ, இட்டதை அழிப்பதோ கூடாதென்றும் உணரப்படும்.)

கோதறு தவத்துத் தன் குலத்துள்ளோர் தொழும்
ஆதியஞ்சோதியை அடிவணங்கினான்.

க.ரா. பால. - கடிமண

இராமன் திருமண்காப்பைத் தரித்து ஸந்த்யாவந்தனாதிகளைச் செய்து முடித்துத் தன் அவதாரத்திற்கு மூல காரணமாய் அமைந்த ஜோதியை, இக்ஷ்வாகு முதற்கொண்டு குலதெய்வமாக விளங்கிய ஸ்ரீரங்கநாதனைத் தொழுதுவிட்டுத் தன்னை அழகு செய்து கொள்வதில் முனைந்தான். தசரதர்

அர்ச்சா மூர்த்தியான திருவரங்கனை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வந்திருப்பார் போலும்.

பின்னர் மணம் கமழும் அரங்கன் சந்தனத்தைத் திருமேனியில் அழகுற பூசிக் கொண்டான். செம்பொன்னாலான சங்கிலியையும் பூமாலை யையும் அணிந்து கொண்டான். ஸூர்யனையும் சந்திரனையும் ஒத்து. ஒளி வீசும் குண்டலங்களைக் காதுகளிலும் நெற்றியின் மேலிடத்தில் வீரப்பட்டி கையையும், திருமார்பில் முத்து மாலையையும், மந்தரமலை போன்ற தோள்களில் தோள்வளைகளையும், தோள்களுக்குக் கீழே கைகளில் முத்துக் குஞ்சங்களையும், மலர்மகள் உறையும் திருமார்பினில் நவரத்ன ஹாரங் களையும் அணிந்து கொண்டான்.

மேவு அருஞ் சுடர் என விளங்கும் மார்பின் நூல்
ஏவரும் தெரிந்து இனிது உணர்மின் ஈண்டு எனத்
தேவரும் முனிவரும் தெரிக்கலா முதல்
மூவரும் தான் என முடித்தது ஒத்தே ॥

க.ரா.பால. - 2

மேவு: சேர்தற்கு அரிதான, ஏவரும்: எல்லோரும், தெரிந்து: ஆராய்ந்து, தெரிக்கலா: அறிவிக்க முடியாத, முடி: முடியப்பட்டது.

ராமன் ப்ரஹ்மசாரி, உபநயனமாகி ஒற்றைப் பூணூலை அணிந்திருக் கிறார். அது மிக வெண்மையாகத் திருமார்பில் பிரகாசிக்கிறது. யஜ்ஞோப வீதம் மூன்று வடம் உள்ளது. ஒவ்வொரு வடத்திலும் ஒன்பது நூல்கள் அடங்கியிருக்கின்றன. பிரதிஷ்டை பண்ணும் பொழுது ஒன்பது நூலிலும் ஒன்பது தேவதைகளை ஆவாஹனம் பண்ணி ஆராதிக்க வேண்டும். இவ் வடங்களைச் சேர்த்து மூன்று முடிச்சுக்களைப் போட்டு, அதை ஒரே முடிச்சாக ஆக்குவார்கள். மூன்று முடிச்சுக்களிலும் பிரமன், விஷ்ணு, கிரீசன் தேவதைகளை ஆவாஹனம் பண்ணி ஆராதித்து, இவை எல்லாவற்றுக்கும் அதிஷ்டான தேவதையாக ச்ரிய: பதியான நாராயணனை ஆவாஹனம் பண்ணி ஆராதித்து அப்பூணூலை மந்திரத்துடன் ஸூர்யனுக்குக் காட்டி, காயத்ரீ மந்த்ரத்தை ஜபித்து ரங்கனாதனுக்கு அணிவித்துப் பின்னர் மந்த்ர பூர்வமாக ராமன் பூணூலை அணிந்து கொண்டிருக்கிறாராம். அதுவும் ஒரு திருவாபரணம்போல் பிரகாசிக்கிறதாம். யஜ்ஞோபவீதத்தின் இத்தகு பெருமையை அறிந்து கம்பர் பேசுகிறார்.

பூணூலின் ஒளி பிறரை அருகில் நெருங்கவிடாமல் தடுக்கிறதாம். ஏன்? அவ்வொளி கதிரவன், சந்திரன், அக்னி ஆகிய முச்சுடர்களின் ஒளி போன்று ஒளிர்கின்றதாம். தேவர்களும் முனிவர்களும் கூட அறிய முடியாத மூன்று முடிச்சுக்களின் தேவதைகளான மும்மூர்த்திகளைத் தன்னகத்தே கொண்ட ஸ்ரீய:பதியுடன் விளங்குகிறது, அதன் ப்ரஹ்மமுடிச்சு. இப்

பெருமையை—ராமன் அணிந்துள்ள பூணூலின் பெருமையை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள் என்கிறார்.

(இப்பெருமையை உணராது, பூணூலை வாணிபப் பொருள் போன்று கடையிலிருந்து வாங்கிச் சிலர் அணிகிறதைப் பார்க்க நெஞ்சு பொறுக்காது குமுறுகிறதே, அந்தோ!)

நாட்டில் சுதந்திர இயக்கம் தோன்றிய பொழுது கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், கட்டுப்பாட்டையும், ஒருமைப் பாட்டையும் தூண்டவும், சுய தேவைப் பூர்த்தியை வளர்க்கவும், இராட்டையில் நூல் நூற்பதை மக்களின் கடமையாக்கினார் காந்தியடிகள். அப்பொழுது வைதிக அந்தணர்களும் இராட்டையில் நூல்நூற்று ஆடையாக நெய்து உடுத்தி வந்தனர். அவ்வுணர்ச்சியை புதுப்பித்துக் கொண்டு அந்தணர்கள் ஞாயிறு தோறும் சில மணி நேரம் நூல் நூற்று, அதை முறுக்கிப் பிரதிஷ்டை செய்து அணிந்தால் அந்தணத் தன்மை (ப்ராம்ஹண்யம்) சீர்மைபெறும், ஜபம் பயனை அளிக்கும். வாழ்வு மலரும்.

ஸூர்யகுல தேஜஸ்வீ

''ராஜபுத்ரிகள் நால்வருக்கும் ராஜகுமாரர்கள் நால்வரோடும் ஒரே நாளில் திருமணம் நிகழட்டும்'' என்றார் மிதிலை அரசர். இது தகுமோ என சிலர் ஐயுறுவர், ஏன்?

एकस्मिंस्तु गृहे कुर्यात् एकामेव शुभक्रियाम्
अनेकां य: कुरुते स नाश मधिगच्छति

ஏகஸ்மின் து க்ருஹே குர்யாத் ஏகாமேவ சுபக்ரியாம் ।
அனேகாம் ய: குருதே ஸநாஶம் அதிகச்சதி ॥

என்றபடி 'ஒரே மண்டபத்தில் ஒரு சுபத்தை (கல்யாணத்தை)த்தான் செய்யலாம் பல கல்யாணங்களைச் செய்வது தீமைகட்கு அடிகோலும்' என்று சோதிட நூல் கருத்தென்பர் சிலர். ஆனால்

भिन्नोदरोदयवतां उद्वाहे कल्पयेत् पृथग्वेदिम् ।
एक गृहे जगु रार्याः मण्ट प मेकं पराशरेणोक्तम् ।

பிந்நோதரோதயவதாம் உத்வாஹே கல்பயேத் ப்ருதக் வேதிம் ।
ஏக க்ருஹே ஜகு: ஆர்யா: மண்டபம் ஏகம் பராசரேணோக்தம் ॥

பின்னோதரர்களான ஸஹோதரர்கட்கு தனித்தனிப் படியில் ஒரே மண்டபத்தில் கல்யாணம் செய்யலாம் என, பராசர முனிவரால் கூறப்படுவதால் குற்றமில்லை என்பர். ஆயினும் லக்ஷ்மண சத்ருக்னர்கள் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளாயிற்றே எனில்

एकस्मिन् दिवसे तु एक लग्ने भिन्नांशके तयोः
एकगर्भोदयवतोः विवाहः शुभकृद्भवेत्

ஏகஸ்மின் திவஸேது ஏக லக்னே பின்னாம்சகே தயோ: ।
ஏக கர்போதயவதோ: விவாஹ: ஶுபக்ருத் பவேத் ॥

ஒரே நாளில் ஒரே லக்னத்தில் வெவ்வேறு பாகத்தில் ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகட்கும் மணம் செய்வது சுபமே என ப்ரமாணம் கூறுவதால் தோஷமில்லை.

தசரதர் சுற்றத்தாரோடும் புதல்வர்களோடும் பரிஜனங்கள் புடைசூழ கல்யாண மண்டபத்திற்குப் புறப்பட்டார்.

அனையது ஓர் தேரினில் அருணன் நின்று எனப்
பனிவரும் மலர்க்கண் அப்பரதன் கோல் கொளக்

குனி சிலைத் தம்பி பின்கூட ஏனையன்
இனிய பொன் கவரி கால் இயக்க ஏகினான்.

க.ரா.பால. - கடிமணம்

ராமன் நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் (ஸாரட்டில்) மிதிலையின் ராஜவீதி வழியே செல்கிறான். குதிரைகள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு வகையான புருஷார்த்தங்களோ என்னும்படியும், அச்வ சாஸ்த்ரத்தில் சொல்லப்படும் லக்ஷணங்களும், பேரழகும் பொருந்தியவை களாயும் விளங்கின, தேரில் பாகன் (ஸாரதி) அமரும் இடத்தில் ஸூரியனின் தேர்ச் சாரதியான அருணன் போன்று அழகு வாய்ந்த பரதன் அமர்ந்து கையில் கோலுடன் (சாட்டையுடன்) தேரைச் செலுத்துகிறான். (தேரோட்டுவதைத் தனது கிடைத்தற்கரிய பாக்யமாகக் கருதுவதால் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்புகிறது. ஸூர்யகுலத் தோன்றலாகிய ராமன் குல முதல்வனைப் போன்று தேஜஸ்வியாகத் திகழ்பவன் எனவே அருணனை பரதனுக்கு ஒப்பிட்டான் போலும்) ராமனின் திருமேனிக் காவலனாய், வளையும் தன்மையதான வில்லைக் கையில் ஏந்தியவனாய் லக்ஷ்மணன் பின்னே நின்றான். இவனோடு சத்ருக்னன் பொன்னாலான பிடியையுடைய வெண் சாமரத்தைக் காற்றெழச் சுழற்றிய வண்ணம் நின்றான்.

அமைவர மேனியான் அழகின் ஆயதோ
இமையவர் ஆயினர் இங்குளாருமே.

க.ரா. பால. - கடிமண.

இராமனின் திருமேனி அழகைக் கண்ணுறும் மாந்தர்கள் கண் கொட்டாமல் உற்றுப் பார்த்துக் கொண்டே இருப்பதால் தேவர்களாயினராம்! ஏன்? தேவர்கள் இமையவர்கள் கண்ணின் இமையை இமைக்காதவர்கள். இவர்களும்தான் கண்களை இமைக்கவில்லையே!

காசி யாத்திரை புறப்பட்டால் கையில் குடையும், தோளில் சிறு மூட்டையும், கண்ணில் மையும், கழுத்தில் மாலைகளும், கன்னத்தில் பொட்டும் இடுப்பில் கச்சமுமாய் வரும் மாப்பிள்ளைப்பிள்ளையைப் பார்க்கத் தெருவிலுள்ள பெண்களெல்லாம் போட்டதைப் போட்டபடியே போட்டுவிட்டு பறந்து கொண்டு வாயிலுக்கு ஓடோடியும் வந்து பார்ப்பதைக் கிராமங்களில் இன்றும் காண்கிறோம். இன்று மாப்பிள்ளை ராமனைப் பார்க்கக் கேட்கவும் வேண்டுமோ?

மானினம் வருவபோன்றும், மயிலினம் திரிவ போன்றும்
மீனினம் மிளிர்வ போன்றும் மின்னினம் மிடைவபோன்றும்
தேனினம் சிலம்பி ஆர்ப்பச் சிலம்பினம் புலம்பவெங்கும்
பூநனை கூந்தல் மாந்தர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார்.

க.ரா. பால. - உலாவு

ஸீதை மணாளனைப் பார்க்கப் பெண்கள் தத்தம் வீட்டு வேலைகளை யெல்லாம் அப்படியே நிறுத்திவிட்டு, தேன் மணம் கமழும் மலர் ஸரங்களை எடுத்துக் கூந்தலில் அணிந்து கொண்டு வீடுகளின் வாயில்களில் வந்து கூடினர். (இவர்கட்கு உவமையாகக் கூட்டமாக வாழும் மான் இனங்களைக் கூறுகிறார் மஹாகவி) மான்கள் நல்ல புல் கிடைக்கும் இடத்திற்குக் கூட்ட மாகத் திரிவது போன்றும், தம் அழகாலும் அணிந்த அணிகளின் ஒளி களாலும் நக்ஷத்ரங்கள் கூட்டமாக விளங்குவன போன்றும் அல்லது நீரில் பொறி, மாவு உணவுப் பண்டங்களைப் போட்டால் மீன்கள் அதை உண்ண கூட்டமாக வரும். அப்பொழுது அவைகளின் செதிள்களின் ஒளி வெள்ளி போல் பளிச்சிடும், அப்பொழுது அவை விளங்குவன போன்றும், சில சமயம் வானத்தில் மின்னல்கள் ஒன்று சேர்ந்து ஒளிர்வது போன்றும், அவர்கள் அணிந்த மலர்களிலுள்ள தேனைப் பருக ரீங்காரத்துடன் வந்த வண்டுகள் மொய்ப்பது போன்றும், கால்களில் அணியும் சிலம்பு, கொலுஸு ஆகிய அணிகள் ஒலிக்கவும் ராமனைப் பார்க்க வந்து சூழ்ந்தனராம்.

விரிந்து வீழ் கூந்தல்பாரார் மேகலை அற்ற நோக்கார்
சரிந்த பூந்துகில்கள் தாங்கார், இடை தடுமாறத் தாழார்,
நெருங்கினர் நெருங்கிப் புக்கு நீங்குமின் நீங்குமீன் என்று
அருங்கலம் அனைய மாதர் தேன்நுகர் அளியின் ஒத்தார்.

க.ரா. பால. - உலாவு

மேலும் மிதிலைப் பெண்கள் தத்தம் வீடுகளைத் தாண்டி ராமனின் ஸாரட்டு சென்றுவிட்டால் ராமனைப் பார்க்க முடியாதே என்று மிக அவசர மாக வீட்டினுள்ளிருந்து ஓடி வருகின்றனர். அந்த அவசரத்தில் சிலருக்குச் சீவிமுடிந்த கூந்தல் அவிழ்ந்து விழும். அதைக் கவனிக்க மாட்டார்கள். சிலருக்கு ஒட்டியாணம் முதலிய நகைகளில் கட்டிய முத்துக்கள், பதித்த பல்வகைக் கற்கள் அறுந்து கீழே சிந்துமாம். அவற்றை லட்சியம் செய்ய மாட்டார்களாம். சிலரின் மெல்லிய பட்டாடைகள் அவிழ்ந்து தளர்ந்து கீழே விழுமாம்; ஆனால் அதை ஏந்தித் தாங்கிச் செல்ல மாட்டார்களாம், ஏன்? கட்டழகு வாய்ந்த இத்தகு பெண்கள் வாழ்வதால் மிதிலை மாநகரே அழகுடன் விளங்குகிறது. பிறருக்கு அழகூட்டும் இவர்கட்கு அழகூட்ட இவ்வணிகள் ஆடைகள் தேவையில்லை போலும். போகும் அவசரத்தில் கால்கள் தொடைகள் ஒன்றோடொன்று சேர்ந்து தடுமாற்றம் ஏற்படினும்; நிலைகுலைந்தாலும் அதற்காகத் தாமதியாது விரைந்து சென்று நீங்குமின் எனக் கூறியவாறு தேனைப்பருக வருகின்ற வண்டுகள் போன்று ராமனைச் சூழ்ந்து கொண்டு பார்க்கின்றார்களாம்.

பல்லாண்டுகள் வானம் மழை பொழியாது நிலம் எங்கும் தண்ணீர் வறண்டு பருகு நீரின்றித் தவித்து அலையும் மான்கள் ஓரிடத்தில் பருகுதற் குரிய நல்ல நீரைப் பார்த்ததும் ஓடிச்சென்று நீரைப்பருகுவது போன்று ராமனைத் தம் கண்களால் மாதர்கள் பருகினார்களாம்.

அரத்தம் உண்டனைய மேவி அகலிகைக்கு அளித்த தாளும்
விரைக் கருங்குழலிக்காக வில்லிற நிமிர்ந்து வீங்கும்
வரைத் தடம் தோளும் காண மறுகினின் வீழும் மாதர்
இரைத்து வந்து அமிழ்தின் மொய்க்கும் ஈஇனம் என்னலானார்.

க.ரா. பால. - உலாவு

அரத்தம் : செந்நிறம். உண்டனைய - ஊட்டப்பட்டாற் போன்ற

மகளிர் ராமனது பெருமையையும் வடிவழகையும் புகழ்ந்து பாராட்டிக் கொண்டே ஓடிவந்தனர். செக்கச் சிவந்த ராமனின் தாள் மண் மூடிக் கல்லாய் கிடந்த நம் அகலிகைக்குச் சாபம் நீக்கி உயிர்ப்பிச்சை அளித்துக் கணவனோடு வாழ வழிவகுத்தது. மணம் கமழும் கரிய கூந்தலை யுடைய நம் ஸீதைக்கு ''இனி மணமுமில்லை வாழ்வுமில்லை'' என மனம் புழுங்கினோம். சிவனின் வில்லை ஒடிக்கலாம்படி உயர்ந்து பூரித்துத் திகழும் மலை போன்ற அவன் திருத்தோள்கள் வில்லிறுத்துத் தாமே மணம் முடிக்கத் தயாராயின? இவ்வாறு பெண்ணினத்திடம் பரிவும் கருணையு முள்ள ராமனைப் பார்க்காமலிருக்க முடியுமா? எனவே பெண்கள் அனை வரும் வெல்லப்பானையில் ஈ மொய்ப்பது போல் ராமாம்ருதத்தைக் கண் களால் பருக ஓடோடியும் வருவதில் வியப்பேது!

வீதிவாய்ச் செல்கின்றான்போல் விழித்துஇமையாது நின்ற
மாதரார் கண்கள் ஊடே வாவு மான் தேரில் செல்வான்
யாதினும் உயர்ந்தோர் தன்னை யாவர்க்கும் கண்ணன் என்றே
ஓதிய பெயர்க்குத் தானே உறுபொருள் உணர்த்தி விட்டான்.

க.ரா. பால. - உலாவு

பெரியோர்கள் ராமனையும் கண்ணன் என்று அழைப்பர். க்ருஷ்ணன் எனும் சொல் மருவிக் கண்ணன் என ஆயிற்று, எனவே கருநிறமுடையவன் காண்போர் மனத்தைத் தன் அழகால் கவர்ந்து இழுப்பவன், தாமரை மலர் போன்று அழகிய கண்களையுடையவன். அவன் யாண்டும் கண்ணோட்டம் (கருணை) உடையவன், எல்லா உயிர்கட்கும் கண் போன்றவன், எங்கணும் உள்ளவன், யாவர்க்கும் கண் போன்று அருமையாய் நிற்பவன், ஞானக் கண்ணை (உபதேசத்தினால்) அளிப்பவன் என்று இவ்வாறு பலப்பல பொருள்களைக் கூறுவர் பெரியோர். ஆனால் தக்கதொரு வேறு பொருளை ராமன் உணர்த்தினானாம், தாவிப்பாயும் குதிரைகள் பூட்டிய தேரில் ராஜ வீதிகளின் வழியே செல்கின்றான் அன்று. விழித்து இமையாது சிறிதும் கண் கொட்டாது தன்னையே உற்று நோக்குகின்ற அனைத்து மாதர்களின் கண் களின் வழியில் சென்றானாம். எனவே தான் தன்னை கண்ணன் என அழைக்கின்றார்கள் என அச்சொல்லுக்குத் தகுந்த பொருளைத் தானே உணர்த்தினானாம்.

இப்பெண்களில் ஒருத்தி தன் கண்களை இருகையாலும் பொத்திக் கொண்டாளாம். ஏன்? இப்படித் தன் கண்வழியே செல்லும் ராமனை வெளியே போக வொட்டாது தடுக்கவாம்.

நெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன், போகாவண்ணம் கண் எனும் புலங்கொள்வாயும்
சிக்கென அடைத்தேன் தோழி சேருதும் அமளி என்றாள்.

க.ரா. பால. - உலாவு

அமளி: படுக்கை

தோள் கண்டார் தோளே கண்டார் தொடு கழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாரும் அஃதே
வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ் கொண்ட சமயத் தன்னான் உருவு கண்டாரை ஒத்தார்.

க.ரா. பால. - உலவு

மங்கள வாத்யங்களின் ஒலியைக் கேட்ட மிதிலையின் காரிகைகள் வீட்டின் உள்ளேயிருந்து அவசரமாக ஓடிவந்து வாயிலில் ராமனைச் சூழ்ந்து கொண்டார்களே ஒழிய, தாம் எண்ணியபடி எவரும் ராமனை முற்றிலும் பார்த்து மகிழ முடியவில்லையாம். ஏன்? ஒரு சிலர் ராமனின் விஸ்வாமித்ர யாகஸம்ரக்ஷணத்தைக் கேட்டவர்கள். அவன் தோள்வலியைப் புகழ்ந்த வண்ணம் வந்தவர்கள் முதலில் தாசரதியின் வலிமைமிக்க தோள்களைப் பார்த்தனர். தோள்களின் அழகோ எல்லையற்றது. தோளழகில் பதிந்த கண்கள் பிறிதொரு உறுப்பினைக் காண விழையவில்லையாம்.

ஒரு சிலர் அஹல்யா சாபவிமோசனத்தைக் கேட்டு, ராமனுக்குப் பெண் இனத்திடம் இருக்கும் அனுதாபத்தை நினைத்து மனம் உருகியவர்களாய் வாயிலில் வந்ததும் அண்ணலின் திருவடிகளையே முதலில் பார்த்தார்கள், அவையோ தம் புகழைப் பரப்பும் வீரக் கழல்களை அணிந்திருந்தன. திருவடிகளின் அழகோ அலர்ந்த செந்தாமரையின் அழகையும் விஞ்சியிருந்தது. அவ் வழகில் சொக்கிப்போன கண்கள் வேற்றுறுப்பைப் பார்க்கத் துணியவில்லை, எனவே அவர்கள் திருவடிகளைப் பார்த்த வண்ணம் அதன் அருட் செயல்களைப் பாடி நின்றனர். வேறு சிலர் ராமன் வில்லிறுத்த போது அவ்வோசையில் மயங்கியவர்கள், சிவதனுஸ்ஸை எடுத்தும், நாணேற்றியும் இழுத்ததுமான கைகளைப் பார்க்க வேண்டுமெனும் அவாவினால் தூண்டப்பட்டு வந்தவர்கள், கைகளைப் பார்த்தனர். இவை வேள்வியை அரக்கர்களிடமிருந்து காத்தவை. கல்லினின்றும் பாவையை எழுப்பி அபயமளித்துக் காத்தவை, நம் ஸீதையின் கையைப் பிடித்துக் கவலையைப் போக்க இருப்பவை என எண்ணி அவற்றின் அழகில் மூழ்கினார்கள்.

இவ்வாறு அவ்அவ் உறுப்புக்களின் முழுநிலையை உணராதவர்களாய் மற்றொன்றினைப் பார்க்க முடியாதவர்களாயினர். பார்ப்பவர்களோ வாள் போன்று கூரிய கண்களை உடையவர். ஆயினும் ''யாரே வடிவினை முடியக் கண்டார்?'' என்றார் கம்பர். இக்கேள்விக்கு ''யாரும் இலர்'' என்பது விடையன்று. வடிவு முழுவதையும் காணும் பாக்கியமும், ஆற்றலும் உரிமையும் பெற்றவள் ஒருத்தி இருக்கிறாள். அவள் யார்? அவள்தான் ஸீதை, ஏன்? எப்படி? மற்றவர்கள் ராமனின் மூன்று செய்கைகளைக் கேட்டும் பார்த்தும் இருந்தபடியால் அவ்அவ் உறுப்புக்களையே கண்டார்கள். ஸீதையோ இதயத்தின் வாயிலாகிய கண்களையே கண்டவள், அப்பாக்கியம் பிறருக்குக் கிடைக்கவில்லை. ஏன்? அவர்களை ராமன் பார்க்கவில்லை. ஸீதையே ஆயிரம் கண்களாலன்றிப் பார்க்க முடியாத ராமனழகை இரு கண்களைக் கொண்ட மாதர் எங்ஙனம் காணமுடியும்?

ராமன் முனிவரோடு மிதிலையில் நுழைந்த நாளன்றே ''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'' அதுமட்டுமா! ''இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்'' ஒருவர் மற்றொருவருடைய இதயச் சிங்காதனத்தில் அமர்ந்தனர்.

வேதங்கள் கூறிய முறை தவறாது அமைந்த நம் மதத்தில், அதுவும் பிராட்டியின் புருஷகாரத்தை (சிபாரிசை) முக்கியமாகக் கொண்ட வேதாந்தக் கொள்கையின்படி எவ்வாறு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுமோ (அதாவது ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை எடுத்துக்காட்டும் தர்மங்களைக் கொண்டு ஸ்வரூபத்தை அறிந்து, இதைச் சிறப்பித்துக் காட்டும் அதன் கல்யாணங்களையும் உபநிஷத்தின் மூலம் அறிந்த உபாஸகனுக்கு எவ்வாறு பரமாத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுமோ) அதுபோல ஸீதைக்கு ராமஸாக்ஷாத்காரம் ஏற்பட்டது. நம் மதத்திலுள்ள ஒரு சில கொள்கைகளை (கருத்துக்களை) தமக்குச் சிறப்பாகக் கொண்ட பௌத்தாதி மதத்தினர் ஓரளவு இன்பம் பெறுவதுபோல் மற்ற பெண்களும் ராமனை ஓரளவு அனுபவித்தனர். நிற்க.

மிதிலைப் பெண்மணிகள் ராமனைப் பார்த்து ஏன் இவ்வளவு பரவசமடைந்தனர்? ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும். ராமன் யார்? திருமால்தானே! நாராயணன் எப்படி அவதரித்தான்? தன்னையே திவ்யமான பாயஸமாக ஆக்கிக் கொண்டு, அதை கோஸலையைப் பருகச் செய்து அவதரித்தவன் அல்லவா? அவனே ஆராவமுதமாயிற்றே! அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுமா? நாடுமா?

எனவே அவன் நாமம், அவன் மேனி, அவன் முகம், அவன் வாய்ச் சொல், அவன் மீது பட்டகாற்று எல்லாமே பாயஸம் போன்று அமிழ்தம் போன்று தித்திக்கத்தானே செய்யும்! அழகும், வசீகரமும் கொண்ட ராமனைப் பார்க்கும் பொழுது காதல் மிகுதியால் அவனை விழுங்கி விடமாட்டோமா? என்று தானே தோன்றும். பரமனை ஒருத்தி விழுங்கவும்

விழுங்கிவிட்டாளே! யார்! கோஸலைதான். காதலினால் அல்ல, அவள் முன் ஜன்மங்களில் செய்த பக்தியின் மிகுதியால் பரமனைக் கண்ணால் பருகுவது போல அவனையே வாயாலும் கரைத்துக் குடித்துவிட மாட்டோமா என்று ஏங்கியிருந்தாள். ''பக்திக்ரீத: ஜனார்தன:'' மக்கள் துயர் துடைக்கும் பரமன் பக்தியினால் விலைக்கு வாங்கப்பட்டவன்போல் ஆவான் என்றபடி. அவன் எதைத்தான் பக்தனுக்காகச் செய்யமாட்டான்? எதையும் செய்வான், கௌஸல்யைக்காகப் பாயஸமாக வந்து தன்னையே அவள் பருகும்படியாக ஆக்கிக் கொண்டானே! அவளும் குடித்தாள். அவதரித்த பிறகு ''கௌஸல்யானந்தவர்தன:'' (கோஸலைக்கு மேன் மேலும் ஆனந்தத்தைக் கொடுப்பவன்) என்று பட்டமும் பெற்றான். எனவே தித்திக்கும் ஆராவமுதை கண்ண(ன)முதை கோபிகைகள் காதலால் பருகியதுபோல் மிதிலையரும் பருகுவதில் தப்பென்ன? எனவேதான் கம்பன் விரிவாக வருணித்தான். ஆனால் கண்ணனைப் போல ராமன் அவர்களை ஆட்கொள்ளவில்லை; ஏன்? கண்ணன் பக்திசெய்யும் முறையைக் காட்டுவதற்காக அவதரித்த நித்ய ப்ரஹ்மசாரீ, தன்னையும், தன்னிடமுள்ள மாடு, கன்று, வெண்ணெய், பால், தயிர் முதலிய எல்லாமே க்ருஷ்ணார்ப்பணம் ஆக வேண்டுமென்பதைக் காட்டிக் கொடுத்தான்.

ராமனோ வஸிஷ்டரிடம் கல்வி பயின்ற போதிலும் செயல்முறைப் பயிற்சிக்கு (அனுபவப் பயிற்சி முறைக்கு) தக்க வயது வந்த பொழுது காமத்தாலும், கோபத்தாலும் விளையும் இன்னல்களை எல்லாம் அனுபவித்துத் திருந்தி தவவலிமை பெற்ற விச்வாமித்ர முனிவரிடம் பயிற்சி பெற்றவன். அத்தகையவன் பெண்களைக் கண்ணெடுத்துப் பார்ப்பானா? அதோடு ராமன் இல்லறம், உலகியல், அரசியல், ஸஹோதர தர்மம், பித்ரு வாக்ய பரிபாலனம், அன்றாட வாழ்க்கைமுறை இவைகளைக் காட்டுவதற் காகவே அவதரித்தவன்.

ஊர்வலமாகக் கல்யாணப் பிள்ளைகள் செல்லும்போது அவர்கள் மீது மிதிலை மகளிர் அழகனது அழகினைப் பருகக் கொடுத்ததற்கு ப்ரத்யுபகாரமாக மலர் மழை சொரிந்தார்கள்; நறுமணம் கமழும் பொடிகளைத் தூவினர். ஒளிவிடும் இரத்தினங்களையும், பொற்காசுகளையும், நல்ல பட்டாடைகளையும் வீசினராம்.

சொரிந்தனர் மலர்மழை சுண்ணம் தூவினர்
விரிந்து ஒளிர் காசு, பொன், தூசு வீசினர்
பரிந்தனர் அழகினைப் பருகினார் கொல்லாம்?
தெரிந்திலம் திருநகர் மகளிர் செய்கையே.

க.ரா. பால. - கடிமனம்

சுண்ணம்: வாசனைப் பொடி, ஒளிர்: ஒளிர்கின்ற, பரிந்தனர்: விரும்பி. பருகினார் கொலாம்: பரகினார்களோ என்னவோ?

கொற்றவன் இருந்தகூடம் மேரு மால் வரையிற் சேரும்
செஞ்சுடர்க் கடவுள் என்னத் தேரிடைச் சென்றுசேர்ந்தான்

க.ரா.பால. - கடிமணம்

கொற்றவன்: வெற்றியையுடையவன், செஞ்சடர்க் கடவுள்: ஸூரியன்

இவ்வாறு மிதிலை மக்களின் உபசாரங்களைப் பெற்றவனாய் தசரத சக்ரவர்த்தி முன்னரே சென்று அமர்ந்திருந்த கல்யாண மண்டபத்திற்கு மஹா மேருமலைக்கு தம் குல முதல்வனாம் சூரியபகவான் போய்ச் சேர்வது போல ராமன் தேரின் மீது போய்ச் சேர்ந்தான்.

பிராட்டியின் ஸௌந்தர்யம்

வரர்கள் (கல்யாணப் பிள்ளைகள்) தம் சுற்றத்தோடு கல்யாண மண்டபத்தை அடைந்தனர். நகரை அழகு செய்யும் வேலை தொடங்கியது. மிதிலை மக்கள் ஸீதையின் திருமணத்தைத் தத்தம் வீட்டுப் பெண்களின் கல்யாணமாக நினைத்து அழகு செய்கிறார்கள்.

தோரணம் நடுவாரும் தூண் உறை பொதிவாரும்
பூரண குடம் எங்கும் புனைதுகில் புனைவாரும்
காரணி நெடுமாடம் கதிர்மணி அணிவாரும்
ஆரண மறை வாணர்க்கு இன்னமுது அடுவாரும்

அன்னமென் நடையாரும் மழவிடை அனையாரும்
கன்னிநல் நகர் வாழை கமுகொடு நடுவாரும்
பன்னரு நிரை முத்தம் பரியன தெரிவாரும்
பொன்அணி அணிவாரும் மணிஅணி புனைவாரும்

சந்தனம் அகில் நாறும் சந்தொடு தெரு எங்கும்
சிந்தினர் திரிவாரும் செழுமலர் சொரிவாரும்

க.ரா. பால. - கடிமண

நடையாரும்: இளங்காளை, பன்னரு: வருணிக்க முடியாத, முத்தம்: பருத்த முத்துக்கள்

மிதிலை மக்கள், வீடுகளிலும், சாலைகளிலும் கம்பங்களை நட்டுத் தோரணம் கட்டுகிறார்கள்; வீட்டுத் தூண்களிலும் தோரணக் கம்பங்களிலும் சித்திர வேலைப்பாடுள்ள பட்டுச் சீலைகளால் தயாரிக்கப்பட்ட உறைகட்டி அழகு செய்கின்றனர்; வரவேற்புக்காக பூரண கும்பங்களை சந்தனம், அக்ஷதை, நூல் பட்டாடை ஆகியவைகளால் அலங்கரித்து, கும்பத்தின் வாயில் மஞ்சள் தேங்காய், மாவிலைக் கொத்துக்களை வைத்து வீட்டு வாயில்களில் வைக்கிறார்கள்; மேகங்கள் அமரும் வகையில் மிக உயரமான மேல்மாடிகளில் ரத்னகலசங்களையும், கொடிச் சீலைகளையும் அமைத்து அழகு செய்கிறார்கள். வேதம் ஓதும் அந்தணர்களுக்காகத் தத்தம் இல்லங் களில் இன்னடிசில்களைச் சமைக்கிறார்கள்.

அன்ன நடைபோடும் அழகிய மகளிரும், இளங்காளை போன்ற மிடுக்கான நடையுடைய ஆண்களும், வாழை மரங்களையும் பாக்கு மரங் களையும் கொணர்ந்து நடுகின்றனர்; பாதுகாப்பாக உள்ளே வைத்திருந்த

சிறந்த உயரிய நல்முத்துக்களையும், தங்க நகைகளையும், இரத்தினங்கள் பதித்த ஆபரணங்களையும் எடுத்து அணிகின்றார்கள்.

சிலர் நறுமணம் கமழும் சந்தனக் குழம்பையும், அகிற்கட்டையைத் தேய்த்தெடுத்த குழம்பையும் வீதிகள் எங்கும் தெளிக்கின்றனர். அழகிய மலரிதழ்களைத் தூவுகின்றனர் சிலர். இவ்வாறு மிதிலை மாநகரே கல்யாண மண்டபம் போன்று விழாக் கோலம் பூண்டு திகழ்கிறது.

கங்கர் கொங்கர் கலிங்கர் தெலுங்கர்கள்
சிங்களாதியர் சேரலர் தென்னவர்
அங்கர் சீனர் குலிந்தர் அவந்திகர்
வங்கர் மாளவர் சோளர் மராடரே.

க.ரா.பால. - கோலங்காண்

தேர்மிசை வருவாரும் சிவிகையில் வருவாரும்
ஊர்தியில் வருவாரும் ஒளிர்மணி திரை ஓடைக்
கார்மிசை வருவாரும் கரிணியில் வருவாரும்
பார்மிசை வருவாரும் பண்டியில் வருவாரும்

க.ரா.பால. - கடிமண.

சிவிகை: பல்லக்கு, கார்மிசை: மேகம் போன்ற ஆண் யானை, கரிணி: பெண் யானை

பாரத நாட்டு சிற்றரசர்களும், சீனா முதலிய வெளி நாட்டரசர்களும் மற்ற பல்வகை இனத்து மக்களும் தேரிலும், பல்லக்கிலும், குதிரைகளின் மீதும், பளபள என மின்னும் ரத்தினங்கள் பதித்த நெற்றிப் பட்டம் அணிந்த ஆண் யானைகளின் மீதும், பெண் யானைகளின் மீதும், மாட்டு வண்டி களிலும், கால் நடையாகவும் கல்யாணத்திற்கு வந்து குழுமியுள்ளனர்.

இந்திரன் சசியொடும் எய்தினான் இளம்
சந்திரமௌலி தன் தையலாளோடும்
வந்தனன் மலரயன் வாக்கினாளுடன்
அந்தரம் புகுந்தனன் அழகுகாணவே.

க.ரா.பால. - கடிமண

அந்தரம்: வானம்

பிரானும் பிராட்டியும் விபவாவதாரத்தில் ஸீதாராம கல்யாணம் என்கிற வியாஜத்தில் சேரும் சேர்த்தி அழகை ஸேவிக்க அழையாமலேயே இந்திராணியுடன் இந்திரனும், பிறைச் சந்திரனைத் தன் முடியில் தாங்கிய சிவன் பார்வதியுடனும், பரமனின் திருநாபிக் கமலத்தில் வாழும் நான்முகன் ஸரஸ்வதியுடனும் மிதிலை நகருக்கு மேலே வானத்திலே வந்து கூடினர்.

நன்றிவானவர் எலாம் இருந்த நம்பியைத்
துன்று இரும் கரும் கடல் துவைப்பத் தோன்றிய
மன்றல் அம் கோதையாள் மாலை சூட்டிய
அன்றினும் இன்று உடைத்து அழகு என்றார் அரோ.

க.ரா. பால. - கடிமண

துன்று: நிறைந்த, இரும்: பெரிய, துவைப்ப: கடைய, மன்றல்: வாசனை யுடையது, கோதையாள்: கூந்தல்

ப்ரஹ்ம ருத்ராதிகளே வந்திருக்கும்பொழுது மற்ற தேவர்களைப் பற்றிக் கேட்பானேன். அவர்களும் வானத்தில் வந்து கூடினர். தேவர்கள் செய்நன்றி மறவாதவர்கள். அன்று சாவா மருந்தாம் அமிழ்தத்தைக் கடைந்து பங்கிட்டுக் கொடுத்தவரின் கல்யாணமாயிற்றே. அன்று பாற்கடலைக் கடைந்தபோது அமிழ்தத்தில் வந்த அமிழ்தமாம் கடல் மகள் நறுமணம் மிகும் அழகிய கூந்தலையுடைய திருமகள், திருமாலுக்கு மணமாலை சூட்டியபோது அத்திருமணத்தை அருகிருந்து பார்த்தவர்கள்தான் தேவர்கள். ஆயினும் இப்பொழுது நிகழும் திருமணம் மிக்க அழகியது. சீரியது ஏன்? முன்போ மணமகளும் மணமகனும் மாலை மாற்றிக் கொண்டார்கள். இதுவோ விதிமுறைப்படி நடப்பது, மேலும், தீயோர்களைக் களைந்து நல்லோர்களைக் காக்கவன்றோ இத்திருமணம்! தங்களைத் துன்புறுத்தும் இராவணனை வதைக்கவன்றோ இது! எனவே நன்றி பாராட்டுமுகமாக வானவர்களும் இங்கு கூடினராம்.

वसिष्ठो भगवानेत्य वैदेहमिदमब्रवीत्
राजा दशरथो राजन् कृत कौतुकमङ्गलैः
पुत्रैर्नरवरश्रेष्ठ दातारमभिकांक्षते
कः स्थितः प्रतिहारो मे कस्याज्ञा संप्रतीक्ष्यते
स्वगृहे को विचारोऽस्ति यथा राज्यमिदंतव
कृतकौतुक सर्वस्वा वेदि मूलमुपागताः
ममकन्या मुनिश्रेष्ठ दीप्ता वह्नेर्यथार्चिषः
सज्जोऽहं त्वत्प्रतीक्षोऽस्मि वेद्यामस्यां प्रतिष्ठितः
अविघ्नं क्रियतां सर्वं किमर्थं हि विलम्ब्यते

வஸிஷ்ட: பகவான் ஏத்ய வைதேஹம் இதம் அப்ரவீத் ।
ராஜா தசரத: ராஜன்! க்ருத கௌதுக மங்களை:
புத்ரை: நரவரஶ்ரேஷ்ட! தாதாரம் அபிகாங்க்ஷதே.
க: ஸ்தித: ப்ரதிஹாரோ மே கஸ்ய ஆஜ்ஞா ஸம்ப்ரதீக்ஷ்யதே ।
ஸ்வக்ருஹே க: விசார: அஸ்தி யதாராஜ்யம் இதம் தவ ॥

க்ருத கௌதுக ஸர்வஸ்வா: வேதிமூலம் உபாகதா: ।
மம கன்யா முனிஸ்ரேஷ்ட தீப்தா வந்ஹேரிவ அர்ச்சிஷ: ॥
ஸஜ்ஜ: அஹம் த்வத் ப்ரதீக்ஷ: அஸ்மிவேத்யாம் அஸ்யாம்
ப்ரதிஷ்டித: ।
அவிக்னம் க்ரிதாம் ஸர்வம் கிமர்த்தம் ஹி விலம்ப்யதே? ॥

வா.ரா. பால. - 73

பிள்ளைஅகத்து சம்பந்திகள் அனைவரும் கல்யாணப் பிள்ளைகளோடு கல்யாணப்படி இருக்குமிடத்தில் அமராமல் நுழைவாயில் அருகிலுள்ள அறையில் அமர்ந்திருக்கிறார்கள். பெண் வீட்டார் சீர் வரிசை, மங்களப் பொருள்களோடு வந்து அழைத்துச் செல்வது மரபு. அவர்கள் (ஜனகாதிகள்) இதுவரை வராததால் பிள்ளை வீட்டாரின் குலகுருவும் ப்ருஹஸ்பதியுமான வஸிஷ்டர் உள்ளே சென்று ஜனகரைப் பார்த்து பேசினார். ''ஜனகரே! எங்கள் சக்ரவர்த்தி கல்யாணத்திற்கு, பூர்வாங்கமான ஹோமாதிகளை முடித்துக் கொண்டு கன்யகாதானம் பண்ணவேண்டியவர் இன்னும் வரவில்லையே. சுப லக்னம் வந்துவிட்டதே என்று காத்துக் கொண்டிருக்கிறாரே'' என்றார்.

ஜனகர்: ''அப்படியா? எங்கே த்வாரபாலகனைக் காணோமே'' என்றதும் அவன் ஓடி வந்தான். ''ஸம்பந்திகளைக் காத்திருக்கச் செய்யலாமா? உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டாமா? அது போகட்டும், தசரதர் உள்ளே கல்யாணப் படியில் வந்து அமர்ந்து கல்யாண கார்யங்களைத் தொடங்க வேண்டியதுதானே! அவரை யார் அழைக்க வேண்டும்? யார் அனுமதி தரவேண்டும்? தன் வீட்டில் இதெல்லாம் உண்டா? அயோத்தி போன்று மிதிலையும் அவருடைய ராஜ்யம்தானே! இவ்வரண்மனையும் அவருடையது தானே! அவரன்றோ எனக்கு ஆணையிட வேண்டும்? நான் ஸீதைக்குரிய பூர்வாங்க ஹோமங்களையெல்லாம் செய்து முடித்துக் கொண்டு தயாராக இருக்கிறேனே! ஸீதையும் ஹோமம் நடக்கும் பொழுது அருகில் இருந்ததால் அக்னிஜ்வாலை போன்று சிவந்து பிரகாசிக்கிறாள். நான் தயாராக இருந்து கொண்டு உங்கள் வரவிற்காகக் காத்திருக்கிறேன். வேதியைப் பாருங்கள்! அக்னியின் ஜ்வாலைகள் கூட அடங்கவில்லை. ராஜா! இனி தாமதம் வேண்டாம். ''சுபஸ்ய சீக்ரம்'' என்பார்கள். ஏன் இந்தத் தாமதம்?'' என்று ஜனகர் சொன்னதைக் கேட்டதும், தசரதர் குமாரர்களையும் மஹர்ஷிகளையும் அழைத்துக் கொண்டு வேதியில் (கல்யாணப் படியில்) அமர்ந்தார்.

'எல்லோரும் வந்தாகிவிட்டது. ஆனால் கல்யாணப் பெண்ணைக் காணோமே!' என எல்லோரும் முணு முணுத்தார்கள். முன்பே ஸீதையைத் திருமண மண்டபத்திற்கு அழைத்து வந்திருந்தார்கள். வந்த பெண் மாப்பிள்ளையைக் காணோமே என்று வெட்கத்துடன் உள்ளே சென்று விட்டாள். வந்த பெண்ணை வெறுமே விடுவார்களா? மீண்டும் மணப் பெண்ணுக்கு அலங்காரம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். மஹாகவி

கம்பனுக்குச் சிறிது இடம் கிடைத்தால் போதாதா? உடனே பிராட்டியை வருணிக்கத் தொடங்கிவிட்டார்.

அமிழ் இமைத் துணைகள் கண்ணுக்கு அணியென
அமைக்குமா போல்,
உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை உருவினை மறைப்பது ஓரார்
அமிழ்தினைச் சுவைசெய்தென்ன அழகினுக்கு அழகுசெய்தார்
இமிழ் திரைப் பாவை ஞாலம் ஏழைமை உடைத்து மாதோ.

க.ரா.பால. - கோலங்காண்

அமிழ்: மறைக்கின்ற, கலன்கள்: ஆபரணங்கள், இமிழ்: ஒலிக்கின்ற, ஏழைமை: அறியாமை

ஸீதையின் தோழிமார்கள் போட்டியிட்டுக் கொண்டு வெவ்வேறு வகையான நகைகளைப் பூட்டி ஸீதைக்கு அலங்காரம் செய்கிறார்கள். உண்மையில் ஸீதையோ கட்டழகு வாய்ந்தவள். அவளுக்கு அழகூட்ட நகைகள் தேவையில்லை. எனினும் நகைகளைப் பூட்டி அழகு பார்க்கிறார்கள். ஏன்? அது இயற்கை காட்டிக் கொடுத்த வழி. கண்கள் அனைவருக்கும் அழகைக் கொடுக்கின்றன. ஒருவன் எவ்வளவு அழகு வாய்ந்தவனாயினும் கண்கள் இல்லாவிடில், அல்லது கண்கள் பொட்டையாகவோ, பூனைக்கண்ணாகவோ, பூவிழுந்தோ இருப்பின் அவனை அழகன் என்று சொல்வோமோ? அவ்வளவு அழகான கண்களுக்கும் தெய்வம் இயற்கையிலேயே இமைகளை அமைத்து அழகு செய்திருக்கிறது.* அதுபோல ஸீதைக்கு இயற்கையாக அழகு அமைந்திருப்பினும் அணிகளைப் பூட்டி அலங்கரிக்கிறார்கள் தோழிகள். உண்மையில் சுடர்விடும் இவ்வணிகள் ஸீதையின் இயற்கையான அழகை மறைப்பதை இவர்கள் உணர்ந்தார்களில்லை. இது இயற்கையிலேயே மிகுந்த இன்சுவையுடைய அமிழ்தத்திற்கு சர்க்கரை, கல்கண்டு, திராக்ஷை முதலியவைகளைப் போட்டு சுவை யூட்டுவது போலிருக்கிறது. பரந்த கடல் சூழ்ந்த இவ்வுலகில் வாழும் அழகிக்கு அழகு செய்யும் இவர்கள் அறியாமையில் மூழ்கியவர்கள் போலும்.

குறிப்பு : எல்லாப் பொருள்களையும் பார்க்கும் கண்கள் தன்னைக் காக்கும் இமைகளைப் பார்க்காது. இமைகளின் குற்றத்தை கண் உணராது. ஆயினும் கண்ணும் இமையும் இணைந்தவை. ஒளியுள்ள கண்ணை இமைகள் மறைப்பதுபோல ஸீதையின் எழில் மேனியை அணிகள் மறைத்தன. இங்கு கண் ஸீதை, இமைகள் அணிகள், ராமனோ கண்ணினைக் காக்கும் இமை. இமையனைய ராமன் கண் அனைய பெண்ணைப் பெற வந்துள்ளது என்பது நயம். பாலுக்கு ஜீனிபோல் பிற பெண்களுக்கு அணிகள் அழகாம். அமிழ்தமாம் ஸீதைக்கு அணிகள் நவையாம் (குற்றமாம்).

கஞ்சத்துக் களிக்கும் இன்தேன் கவர்ந்து உணும் வண்டுபோல
அஞ்சொற்கள் கிள்ளைக்கெல்லாம் அருளினாள் அழகை மாந்தித்
தம் சொற்கள் குழறித் தத்தம் தகைதடுமாறி நின்றார்
மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனம் என்பது ஒன்றேயன்றோ.

க.ரா.பால. - கோலங்காண்

கிள்ளை: கிளிகள், மாந்தி: பருகி, மஞ்சர்: ஆடவர்.

கம்பன் வர்ணனையில் ஒரு புதுமையைப் பாரீர். உலகில் ஆண்கள் பெண்களைக் காமுறுவது உண்டு. பெண்கள் ஆண்களைக் காமுறுவ துண்டு. பெண்கள் மற்றொரு பெண்ணைக் காதலிப்பதைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இங்கு ஸீதைக்கு அலங்காரம் செய்த தோழிகள் ஒப்பனை முடிந்த பிறகு ஸீதையின் அழகைப் பார்க்கிறார்கள்; பருகு கிறார்கள்; அருகில் வந்து தொட்டு மெய் மறக்கிறார்கள். மனம் பேதலிக்கிறது. தாமரை மலரின் தேனை நிறையப் பருகி, மயங்கி வண்டுகள் ரீங்காரம் செய்வது போல் தங்களை அறியாது என்னென்னமோ பேசுகிறார்கள். ஸீதை, தோழிகளைப் பார்த்து ''ஏன் இப்படி தாறுமாறாகப் பேசுகிறீர்கள்'' என்கிறாள். அப்பேச்சு ஸீதை, கிளிகளுக்கு கொஞ்சிப் பேசச் சொல்லிக் கொடுக்கும் பொழுது எப்படி இனிதாக இருந்திருக்குமோ அதுபோல் தோழிகளை மேலும் கவர்கிறது. மேலும் மயங்கி, பூட்டிய நகையைக் கழற்றுவதும் பூட்டுவதுமாக இருக்கிறார்கள். பெண்களுக்கு இத்தகு காமப் பேதலிப்பு எப்படி வந்தது? கேள்விக்கு விடை தருகிறார் கம்பர். ''மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனம் என்பது ஒன்றேயன்றோ'' என்று.

அழகைக் கண்டால் மயங்குவதும், பார்த்த பொருளைக் கவர்வதும், கவர்ந்த பொருட்களைப்பெற முயற்சிப்பதும் மனதின் செயல்தானே! ஆண் பெண் இருபாலார்க்கும் மனம் உண்டே. அது பிறரை நேசிப்பதில் வியப்பென்ன என்கிறார். பிறிதொரு இடத்தில், ''அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்'' என்பார். பெண் பெண்ணைக் காதலிப்ப தாகக் கம்பர் கூற ஆதாரம் உண்டு. வால்மீகியும் வ்யாஸருமே கூறினர்; தண்டகாரண்யத்து முனிவர்கள் இராமன் அழகைக் கண்டதும் தாம் பெண்ணாகப் பிறக்காமல் போய்விட்டோமே என ஏங்கினராம். இந்த ஏக்கம் க்ருஷ்ணாவதாரத்தில் ஆய்ச்சியர்களாகப் பிறந்த போது தீர்ந்ததாம்.

வியாஸர் மஹாபாரதத்தில் பாஞ்சாலியின் அழகின் உயர்வைப் பற்றிக் கூறும்போது, திரௌபதியின் தோழிகள் ஏகாந்தத்தில் அவளுக்கு ஒப்பனை செய்துவிடும்பொழுது அவளழகில் சொக்கி மனதினால் ஆண் தன்மையை அடைந்தார்கள் என்பதை ''யா: ஸ்த்ரிய: த்ருஷ்டவத்ய: தா: பும் பாவம் மனஸா யயு:'' என்ற வாக்யத்தினால் விளக்கினார். எனவேதான் ஆணாகப் பிறந்த நம்மாழ்வார் தான் சடகோப நாயகியாக உருமாறி நாயிகா நாயக பாவத்தினாலே நாராயணனைத் தன் நாயகனாக எண்ணிக் காதலித்து

அவனைக் கண்ணால் கண்டபோது மகிழ்ந்தும், பிரிந்தபோது துன்புற்றும் எழுந்த பேச்சுக்களைத் திருவாய்மொழியில் காண்கிறோம். இக்கருத்தை விளக்கியருளினார் ஸ்வாமி தேசிகன். இவ்வாசாரியர் இயற்றிய த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில்

पाञ्चाली गात्रशोभा हृत हृदय वधू वर्ग पुंभाव नीत्या
पत्यौ पद्मासहाये प्रणयिनि भजतः प्रेयसीपारतन्त्र्यम्
भक्तिः शृङ्गार वृत्त्या परिणमति मुनेः भावबन्ध प्रथिम्ना

பாஞ்சாலீ காத்ர ஶோபாஹ்ருதஹ்ருதய வதூவர்க பும்பாவ நீத்யா
பத்யௌ பத்மாஸஹாயே ப்ரணயினிபஜத: ப்ரேயஸீ
பாரதந்த்ர்யம்
பக்தி: ஶ்ருங்கார வ்ருத்யா பரிணமதி முனே: பாவ பந்த ப்ரதிம்னா

திரௌபதியின் உடலழகால் கவரப்பட்ட தோழிமார்களான பெண்கள் ஆண்மையைப் பெற்று ராணியைக் காதலித்தது போல் நம்மாழ்வார் ஸ்ரீமந் நாராயணனைக் கணவனாக ஏற்றுக் காதலித்துத்தன் காதலுக்குரிய காதலனுக்கு அடியாளாகும் தன்மையைப் பெற்றார். இங்கு சடகோபனுடைய பகவத் பக்தியானது ஸாக்ஷாத் மன்மத மன்மதனாய்த் திகழும் பரமனின் கவர்ச்சியினால் காதலாக மாறியது என்று கூறி மனதினால் பெண் ஆணாகும் தன்மையையும், ஆண் பெண்ணாகும் தன்மையையும் விளக்கியருளியபடி.

தோழிகள் ஸீதைக்கு அணிசெய்து பேதுற்ற காலை ஸீதையைத் திருமணப்படிக்கு அழைத்துச் சென்றார்கள். ஸீதை வந்ததும் முதலில் விஸ்வாமித்திரர் அவளைப் பார்த்தார். சேர்த்தியை ஸேவித்துப் பேசுவார்.

**அச்சென நினைத்த முதல் அந்தணன் நினைந்தான்
பச்சைமலை ஒத்த படிவத்து அடல் இராமன்
நச்சுடைய வடிகண்மலர் நங்கை இவள் என்றால்
இச்சிலை கிடக்கமலை ஏழையும் இறானோ?**

க.ரா.பால. - கோலங்காண்

அச்சென: மாதிரி, மூல உருவம், அடல்: வலிமையுடைய, நச்சு: நஞ்சு

தவத்தினால் மேன்மைபெற்று உலகத்தாரால் அந்தணருள் சிறந்தவன் என போற்றப்பெற்று, மாதிரி புருஷனாகக் கருதப் பெறும் விஶ்வாமித்திரர் கூரிய பார்வையை உடைய கண்ணழகினைப் பெற்ற ஸீதையைப் பார்த்தார். பச்சைமாமலை போன்று அழகும் வலிமையையும் ஒருங்கே பெற்ற ராமன், அழகுக்கு ஆதாரமாய், கண்ணழகையும் மேனியழகையும் பெற்ற இச் சீதையை மணக்க மேருமலை போன்ற சிவதனுஸ்ஸை முறித்தது பெரிதன்று. ஏழு மலைகளையும் பிளக்க வேண்டுமென்று சொன்னாலும் பெரிதன்று. எங்கள் இராமன் அதையும் செய்து முடிப்பானே. இச்சிலை எம்மாத்திரம்

அவனுக்கு! அழகுத் தெய்வமாம் மஹாலக்ஷ்மியைப் பெற எதைத்தான் செய்யமாட்டான் என்று ராமனின் அழகையும் வலிமையையும், ஸீதையின் அழகையும் சிறப்பித்துப் பேசினாராம்.

ஸீதையின் ஸௌந்தர்யத்தை ஹனுமத் நாடகம் பேசும்

स्वर्ण सुवर्णं दहने स्वदेहं
चिक्षेप कान्तिं तव दन्त पङ्क्तिम्
विलोक्य पूर्णं मणि बीज पूर्णं
फलं विदीर्णं ननु दाडिमस्य
वदन ममृतरश्मिं पश्यकान्ते तवोर्व्यां
अनिल तुलन दण्डेनास्य वार्धौ विधाता
स्थितमतुलय दिन्दुं खेचरोऽभूत् लघुत्वात्
क्षिपति च परिपूर्त्यै तस्य तारा: किमेता:

ஸ்வர்ணம் ஸுவர்ணம் தஹனே ஸ்வதேஹம்
சிக்ஷேப காந்திம், தவ தந்த் பங்க்திம்
விலோக்ய பூர்ணம் மணி பீஜபூர்ணம்
பலம் விதீர்ணம் நநு தாடிமஸ்ய ॥
வதனம் அம்ருதரஶ்மிம் பஶ்ய காந்தே! தவ உர்வ்யாம்
அனில துலன தண்டேன அஸ்ய வார்தௌ விதாதா ।
ஸ்திதம் அதுலயத் இந்தும் கேசர: அபூத் லகுத்வாத்
க்ஷிபதிச பரிபூர்த்யை தஸ்ய தாரா: கிம் ஏதா: ॥

ஸீதா பிராட்டியின் திருமேனியழகை நல்ல நிறமுடைய தங்கம் பார்த்து வெட்கப்பட்டுத் தன் உடலை அக்னியில் இட்டதாம். இவளுடைய முல்லை மொட்டுகள் போன்ற பல்வரிசையின் அழகைப் பார்த்து வெட்கி இனியசாறு நிறைந்த முத்துக்களையுடைய மாதுளைப் பழம் வெடித்துச் சிதறிப் போயிற்றாம். உடலழகுக்கும், பல்லழகுக்கும் உவமையாகக் கூறப் படும் பொருள்களே ஸீதையைப் பார்த்துப் பொறாது தம் உயிரையே மாய்த்துக் கொண்டனவாம்.

ஸீதா பிராட்டியாம் மஹாலக்ஷ்மியும், அமிழ்த மயமான கதிர்களை உடைய சந்திரனும் திருப்பாற் கடலைக் கடையும் பொழுது தோன்றி னார்களல்லவா! அப்பொழுது பிரமன் இவ்விருவர்களுடைய அழகு, மகிழ்விக்கும் தன்மை, குளிர்ச்சி முதலியவற்றை தராசில் வைத்து நிறுத்து எது உயர்ந்தது எனப் பார்க்க விரும்பினாராம். உடனே இரு தட்டுக்களை வாயுவாகிற துலாக் கோலின் இரு நுனிகளில் கட்டி ஒரு தட்டில் பிராட்டியின்

திருமுகத்தையும் மற்றொன்றில் சந்திரனையும் வைத்து தூக்கிப் பிடித்தாராம். சந்திரன் உள்ள தட்டுமேலே போய்விட்டது. மற்றொரு தட்டோடு சமமாக்க நக்ஷத்திரங்களை எல்லாம் சந்திரன் தட்டில் போட்டாராம். எவ்வளவு போட்டும் சந்திரன் உள்ள தட்டு கீழே தணிந்து சமநிலைக்கு வரவில்லையாம். பெண்களின் முகத்திற்கு ஒப்பிட்டுப் பேசப்படுபவன் சந்திரனே. அவனோடு எவ்வளவு அழகுப் பொருள் களைச் சேர்த்தாலும் ஸீதையின் திருமுக மண்டலத்திற்கு ஒப்பாகாது என்பதைக் கவிஞர் எடுத்துக் காட்டும் பாங்கு ரஸிக்கத்தக்கது.

ततो राजा विदेहानां वसिष्ठ मिदमब्रवीत्
कारयस्व ऋषे सर्वं ऋषिभिस्सह धार्मिकैः
रामस्य लोकरामस्य क्रियां वैवाहिकीं प्रभो ॥

தத: ராஜா விதேஹானாம் வஸிஷ்டம் இதம் அப்ரவீத்
காரயஸ்வ ரிஷே! ஸர்வம் ரிஷிபி: ஸஹ தார்மிகை: ॥
ராமஸ்ய லோகராமஸ்ய க்ரியாம் வைவாஹிகீம் ப்ரபோ ॥

வா.ரா. பால. - 73.

ஸீதை கல்யாண வேதிக்கு வந்ததும் பெரியோர்களை வணங்கி அமர்ந்தாள்.

மாதவனை முன்கொள வணங்கி, நெடுமன்னன்
பாதமலர் கைதொழுது, கண்கள் பனிசோரும்
தாதை அருகு இட்ட தவிசில் தனி இருந்தாள்
போதினை வெறுத்த அரசர் பொன்மனை புகுந்தாள்.

க.ரா. பால. - கோலங்காண்

ஸீதை தான் இயற்கையாக வஸிக்கும் இடமான தாமரை மலரை நீங்கி மானிட வடிவம் கொண்டபடியால் ஜனகரின் அரண்மனை புகுந்தாள். தன் கேள்வன் ராமனும் தன் பரத்வ நிலையைத் துறந்து எளிமையை ஏற்று மனிதனாய் வந்தவன். ஒரு வியாஜமாக இருவரும் சேரும் சூழ்நிலை உருவாகிற்று போலும். இவள் முதலில் மஹாதபஸ்வியான வஸிஷ்ட முனிவரை வணங்கினாள் (மாதவனை) தன் கணவனை வணங்கினாள் (மனதினால்) எனவும் தொனிக்கிறது. பின்னர் மாமனாராகும் பேரரசரான தசரதரையும் வணங்கினாள். திருமணத்தை எதிர்நோக்கி ஆனந்தமும் ஸீதை பிரியப்போகிறாளே என வருத்தமும் தோய்ந்த கண்களையுடைய ஜனகரையும் வணங்கி அவர் அருகிலுள்ள ஆஸனத்தில் அமர்ந்தாளாம்.

உடனே அரசர் அனைவரையும் மகிழ்விக்கும் ராமனின் க்ஷேமத்திற்காகத் திருமண காலத்தில் செய்ய வேண்டியவற்றை பரம தார்மிகர்களான இம்மஹர்ஷிகளைக் கொண்டு செய்விக்கும்படி வஸிஷ்டரைப் பிரார்த்தித்தார்.

சேர்த்தியின் அழகு

प्रपामध्ये विधिवत् वेदिं कृत्वा महातपाः
अलङ्कार तां वेदिं गन्ध पुष्पैस्समन्ततः
सुवर्ण पालिकाभिश्च चित्र कुम्भैश्च साङ्कुरैः
लाज पूर्णैश्च पात्रीभिः अक्षतै रभिसंस्कृतैः
अग्नि मादाय वेद्यां तु विधि मन्त्रपुरस्कृतं
जुहावाग्नौ महातेजाः वसिष्ठो भगवानृषिः

ப்ரபாமத்யே விதிவத் வேதிம் க்ருத்வா மஹாதபா: ।
அலஞ்சகார தாம் வேதிம் கந்த பஷ்பைஸ்ஸமந்தத: ॥
ஸுவர்ண பாலிகாபி: ச சித்ரகும்பை: ச ஸாங்குரை: ॥
லாஜ பூர்ணை: ச பாத்ரீபி: அக்ஷதை: அபிஸம்ஸ்க்ருதை: ॥
அக்னிம் ஆதாய வேத்யாம்து விதி மந்த்ர புரஸ்க்ருதம் ।
ஜுஹாவாக்நௌ மஹா தேஜா: வஸிஷ்ட: பகவான் ரிஷி: ॥

வா.ரா.பால. - 73

திருமணத்திற்காக மாவிலை, தென்னை குருத்துக்களால் அழகிய தோரணம், பழக்கொத்துக்கள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் ஹோமத்திற்கு வேதியை அமைத்து, அதன்மீதும் சுற்றிலும் நறுமணம் கமழும் மலர்களால் அலங்கரித்தும், சந்தனம் மஞ்சள் முதலியவற்றைக் கொண்டு தங்கத்தினாலான பாலிகைகளையும் சித்திர வேலைப்பாடுள்ள கலசங்களையும் அலங்கரித்து ஆங்காங்கு வைத்து, முளைத்த தானியங் களையும் அவற்றில் வைத்தார். மடக்குகளில் பொரி, அக்ஷதைகளை வைத்து மந்த்ரங்களால் ஜபித்து ப்ரோக்ஷித்தார். இவற்றை வைக்க தர்பங்களைப் பரப்பினார். இவ்வாறு ஹோமத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். பின்னர் கல்பங்களில் சொல்லப்பட்ட முறைப்படி வேதியில் அக்னியைச் சேர்த்து, ராமன் கல்யாணத்திற்கு முன் செய்ய வேண்டிய ஹோமங்களை அவருக்குப் பதிலாக ப்ருஹஸ்பதியான வஸிஷ்டரே செய்தார்.

ततः सीतां समानीय सर्वाभरणभूषितां
विद्युत्प्रभां विशालाक्षीं स्निग्धकुञ्चित मूर्धजां
हंसाङ्कितेन क्षौमेण किञ्चित्पीतेन संवृतां
वासितेनोत्तरीयेण सुरक्तेन सुसंवृताम्
समक्षमग्नेः संस्थाप्य राघवाभिमुखे तदा

अब्रवीज्जनको राजा कौसल्यानन्दवर्धनं
इयं सीता ममसुता सहधर्मचरी तव
प्रतीच्छ चैनां भद्रं ते पाणिं गृण्हीष्व पाणिना

தத: ஸீதாம் ஸமாநீய ஸர்வாபரண பூஷிதாம் ।
வித்யுத் ப்ரபாம் விசாலாக்ஷீம் ஸ்நிக்த குஞ்சிதமூர்த்த ஜாம் ॥
ஹம்ஸாங்கிதேந க்ஷௌமேண கிஞ்சித் பீதேந ஸம்வ்ருதாம் ।
வாஸிதேந உத்தரீயேண ஸுரக்தேந ஸுஸம்வ்ருதாம் ॥
ஸமக்ஷம் அக்னே: ஸம்ஸ்தாப்ய ராகவாபிமுகே ததா ।
அப்ரவீத் ஜனக: ராஜா கௌஸல்யானந்த வர்த்னம் ॥
இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ
ப்ரதீச்ச ச ஏனாம் பத்ரம் தே பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணினா ॥

வா.ரா.பால. - 73

குல புரோஹிதரான வஸிஷ்டருக்கு அருகில் சக்ரவர்த்தித் திருமகன் அமர்ந்திருக்கிறார். ஹோமம் செய்த அக்னி ஜ்வலித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு எதிரே ஸீதையை அழைத்து வந்து அமர்த்தினர். ஸீதையைப் பார்த்ததும் அனைவருக்கும் மஹாலக்ஷ்மியே ப்ரத்யக்ஷமாகி ஸேவை தருவ தாகத் தோன்றியது. அனைவரும் தம்மையறியாது கைகளை சிரத்தின் மீது உயர்த்தி அஞ்ஜலி செய்தனராம்.

**நைவளம் நவிற்றும் மொழி நண்ணு வரலோடும்
வையம் நுகர் கொற்றவனும் மாதவரும் அல்லார்
கைகள் தலைபுக்கன கருத்து உளதும் எல்லாம்
தெய்வம் என உற்ற உடல் சிந்தை வசம் அன்றோ.**

க.ரா. பால. - கோலங்காண்

ஸீதையை அழைத்து வரும் போது தோழிகள் அருகில் வந்து பரிஹாஸம் செய்கிறார்கள். திருமண காலத்தில் மணப்பெண்ணைப் பரிஹாஸம் செய்வது உலகியல்பு. அதற்கு மெல்லிய குரலில் நாணத்துடன் பதில் சொல்லுகிறாள் ஜானகி. இதை ஒட்டுக்கேட்டுக் கவிஞன் அதன் இனிமையை நமக்கு இயம்புகிறான். ஸீதையின் குரல் யாழினிசை போல் இனியது. யாழைப் பல்வகைப் பண்களில் இசைப்பது உண்டு. அவற்றுள் குறிஞ்சிப் பண் போன்று மெல்லிய இனிய குரலில் பேசுகிறாளாம் ஸீதை. அத்தகு ஸீதை திருமண மேடையில் ராமனுக்கு எதிரே வந்ததும் வஸிஷ்டர், விஶ்வாமித்திரர் போன்ற முனிவர்களைத் தவிர ''ச்வசுரம் அமரவந்த்யம் ரங்கனாதஸ்ய ஸாக்ஷாத்'' (ரங்கனாதப்) பெருமானுக்குப் பெரியாழ்வார் மாமனாரானது போல், பிராட்டிக்கு மாமனாராகிய தசரதரையும் தவிர வந்திருந்தவர்கள் அனைவரும் வணங்கினார்களாம். ஸீதையின் திவ்ய

தேஜஸ் பிராட்டியே அவள் என உணர்த்தியது. எனவே பார்ப்போரின் மனம் அவ்வுண்மையை உணர்ந்தது. மனதிற்கேற்ப அறிவுப் புலன்களும், செயற் புலன்களும் செயல் படுவது இயற்கை. எல்லோர் மனமும் மஹாலக்ஷ்மியாக ஸீதையை எண்ண, பக்தி வயப்பட்டுத் தம்மை மறந்து கைகள் தலைமேல் சென்றன. முனிவர்கள் மனதினால் வணங்கியிருப்பர்.

கல்யாணத்திற்கு முன்பு உற்றாரும் உறவினர்களும் பொருத்தம் பார்ப்பர். கல்யாணத்தன்று தான், தம்பதிகளின் பொருத்தம் பற்றிப் பேசுவர் பிறர். இவர்கள் மனதில் ஸீதையை எண்ணியபடி மஹாகவி பேசுவார்.

பிராட்டி அணியக்கூடிய எல்லா வகையான உயரிய திருவாபரணங் களைப் பூட்டிக் கொண்டிருக்கிறாள். இயற்கையாகவே அழகுவாய்ந்தவள்; அணிகளும் சேர்ந்தன. திருமேனியும் மெல்லியது. எனவே மின்னல் போன்று மின்னுகிறாளாம். மணம் கமழும் தைலம் தடவியதும், வளைந்து வளைந்து உள்ளதுமான பின்னிய கூந்தலை உடையவள். ஹம்ஸத்தின் கரைபோட்ட வெளிர் மஞ்சள் நிறமுள்ள பட்டு வஸ்த்ரத்தை அணிந்திருக்கிறாள். அரக்கு நிறமுள்ள வாஸனை ஏற்றிய உத்தரீயத்தை (மேலாடையை) அணிந்திருக் கிறாள். (ஆண்களைப் போன்று பெண்களும் அரைக்கும் மேலுக்கும் தனித்தனி ஆடையை வைதிகர்கள் இல்லங்களில் அணிவது வழக்கம்) கோயிலுக்குச் சென்றால் பெருமாளையும் தாயாரையும் ஸேவிக்கும் பொழுது அன்று சாற்றியத் திருவாபரணங்களையும், உடுத்திய பீதக வாடையையும் கண்டு மகிழ்வது வழக்கம். அது போன்று இங்கு கல்யாணத்தில் சேர்த்தி அழகை ஸேவிக்க வந்தவர்கள் ஆடை அணிகளின் பொருத்தத்தையும் கண்டு மகிழ்ந்தனர்.

இப்பொழுது ராமனும் ஸீதையும் எதிரெதிராக அமர்ந்திருக்கின்றனர். கல்யாணத்திற்கு வந்த அனைவர்களுடைய கண்களும் இவ்விளம் மண மக்களையே பார்த்துக் கொண்டிருக்கின்றன. அது போல மணமக்கட்கும் ஒருவரை ஒருவர் பார்க்க வேண்டு மென்று ஆசை இருக்காதா? இருக்கும், ராமனோ ஆண் மகன்; துணிவுடன் வரப் போகும் மனைவியை அவ்வப் பொழுது பார்த்துக் கொள்கிறான். ஸீதையோ பெண், சிறுவயது, அபலை, துணிவில்லாதவள், நாணமே உருவெடுத்தவள், வரப்போகும் புருஷனை இக்கூட்டத்தில் எப்படிப் பார்ப்பது? உள்ளத்திலோ ஆசை பொங்குகிறது. அதை வெட்கம் தடுக்கிறது. என்ன செய்வாள்? பெண்ணினமோ, தான் எண்ணியதை எப்படியும் நிறைவேற்றிவிடும். ஸீதை ராமனைப் பார்த்ததைக் கல்யாணத்திற்கு வந்த முனிவர்களுள் ஒருவர் பார்த்து விட்டார். அவர் யார் வால்மீகிதான், பார்த்ததை ராமாயணத்திலும் குறிப்பாக உணர்த்துகிறார். ''விசாலாக்ஷீ'' என்று, ''அஸிதேக்ஷணா'' என்று பிராட்டியின் கண்ணழகைப் பேசினான் அனுமன். கண்ணின் செயலைக் குறிக்கிறார் வால்மீகி. அகன்ற கண்களை உடையவள் என்று, கண்கள் ஒன்றை உற்றுப் பார்க்கும் போது தான் அகலும்.

''விசாலாக்ஷீம்'' எனும் வால்மீகியின் சொல்லையே ஆதாரமாகக் கொண்டு கன்னி மாடத்திலிருந்த ஸீதை ராமனையும், ராஜ வீதியில் சென்ற ராமன் ஸீதையையும் பார்த்ததாக முன்பு வருணித்த கம்பர் இப்பொழுதும் ஸீதை ராமனைப் பார்த்ததாகப் பேசுகிறார் கவிநயத்துடன்.

எய்யவில் வளைத்ததும் இறுத்ததும் உரைத்தும்
மெய் விளைவு இடத்து முதல் ஐயம் விடலுற்றாள்
ஐயனை அகத்து வடிவே அல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள்.

க.ரா.பால. - கோலம்காண்

மணத்தவிசில் அமர்ந்த ஸீதைக்கு இதுவரை ஒரு ஐயப்பாடு தொடர்ந்து இருந்து வந்தது. அதாவது அன்று ராஜ வீதியில் வரும் போது கன்னி மாடத்திலிருந்து பார்த்தோமே! அவரும், பின்னர் சிவதனுஸ்ஸைக் கையில் எடுத்து அம்பைப் பூட்டி எய்வதற்கேற்ப வளைத்து அதை ஒடித்த வரும் ஒருவரே என்பதை வஸிஷ்ட விஸ்வாமித்ராதிகள் பேச்சிலிருந்து அறிந்தாள். எனவே முதலில் தோன்றிய ஸந்தேஹம் தீர்ந்தது. எனினும் தாமே நேராகப் பார்த்தும் ஐயத்தைப் போக்கிக் கொள்ள விழைகிறாள். ஆனால் இவள் ஆசையை நாணம் தடுக்கிறது. ஆசையோ எதிரே இருக்கும் ராமனைப் பார்க்கத் தூண்டுகிறது. அன்று முதல் ராமனையே நினைத் திருந்ததினால் இதயத்தில் பார்த்துக் கொண்டே இருந்தாலும், புறத்தும் பார்க்க வேண்டு மென ஆசை எழத்தானே செய்யும்.

கல்யாணத்திற்கு வந்தவர்கள் அனைவரும் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது பிறர் அறியாமல் எப்படிப் பார்ப்பது? 'ஆசையும் அழிவுறாது, பெண்மையும் வசையுறாது, கடைக்கண்ணால் பார்ப்பதே சாலும்' எனும் முடிவுக்கு வந்து ஓர் உபாயம் செய்தாள். தான் நடந்து வந்தபோது நிலை குலைந்திருந்த கைவளைகளை ஒழுங்குபடுத்தினாள். அப்பொழுது ஸீதையின் திருமுகச் செவ்வியை நோக்கியிருந்த அனைவரின் கண்களும் அவள் கைவளை வரிசையில் ஈடுபட்டன. அந்நிலையில் ராமனை கடைக்கண்ணால் கண்டு ஐயம் நீங்கி இன்புற்றாள். (இக்கருத்தைத்தான் ''விசாலாக்ஷீ'' என்ற சொல்லால் வால்மீகி அறிவுறுத்தினார் போலும்) இவ்வாறு ஸர்வாலங்கார பூஷிதையான ஸீதையை ஜனகர் ஹோமாக்கினிக்கு நேர் எதிரிலும், ராகவனுக்கு நேர்முக மாகவும் நிறுத்தி ராமனைப் பார்த்துச் சொன்னார்:

''ராமபத்ர! இந்த ஸீதை எனது மகள், இவள் நீ செய்யும் தர்ம கார்யங்களில் எப்பொழுதும் உனக்கு உறுதுணையாக இருப்பாள். இவளை நீ ஏற்றுக்கொள். உனக்கு ஸர்வமங்களங்களும் உண்டாகும். நீ ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக உனது கையால் இவள் கையைப் பற்றிக் கொள்'' என்றார்.

पतिव्रता महाभागा छायेवानुगता सदा
इत्युक्त्वा प्राक्षिप द्राजा मन्त्रपूतं जलं तदा ॥

பதிவ்ரதா மஹா பாகா சாயேவ அனுகதா ஸதா ।
இத்யுக்த்வா ப்ராக்ஷிபத் ராஜா மந்த்ரபூதம் ஜலம் ததா ॥

வா.ரா. பால. - 73

''இவள் எப்பொழுதும் நிழல் போல கணவனையே பின் தொடரும் பதிவ்ரதையாக இருப்பாள். உன்னைப் பெறப் பெரும் பாக்யம் பெற்றவள்'' என்று கூறி, விவாஹ மந்தரங்களினால் பவித்ரமான தீர்த்தத்தைத் தாரையாக ராமன் கையில் வார்த்துக் கொடுத்தார். ராமனும் அக்னி சாக்ஷியாக ஸீதையின் கையைப் பிடித்து ஏற்றுக் கொண்டான்.

இங்கு ஸீதையின் கையைப் பற்றும்படி ஜனகர் கூறிய சொல்லுக்கு உரையாசிரியர்களும், சொற்பொழிவாளர்களும் பலப்பல அழகிய கருத்துக் களைக் கூறுவர். அவற்றுள் சிலவற்றை நாம் அனுபவிக்கலாமே.

இயம்: இவள். ''ராமா! வில்லை இறுத்ததினால் இப்பெண்ணை நம் காலில் கட்டு கிறார்கள் என்று நினைக்காதே. இவளை நிமிர்ந்து பார். அளவிட்டுக் கூற முடியாத மேனி அழகையும், மேனியின் மென்மையையும் லாவண்யத் தையும் பார், எனச் சுட்டி இவளை மனைவியாகப் பெறுவது நீ செய்த பெரும் பாக்யமாகும்'' என்றாராம்.

உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக் கரம் வைக்கும்
கமையாள் மேனிகண்டவர் காட்சிக் கரைகாணார்,
இமையா நாட்டம் பெற்றிலம் என்றார் இரு கண்ணால்
அமையாது என்றார் அந்தரவானத்தவரெல்லாம்.

க.ரா. பால. - மிதிலை

கமையாள்: பொறுமையுடையவள், காட்சி: அழகு, நாட்டம்: கண்கள்.

''ராமா! நம் நாட்டிலே அழகிய பெண்கள் பலருளர். அவர்களுள் பார்வதி தேவி போன்ற பேரழகு பெற்ற ஸீதையைப் பார்த்ததும் இவளுடைய மேனி அழகிற்கு எல்லை காணாதவராய் சிலர் திகைத்து நின்றனர். அது மட்டுமா? ஸீதையின் பொறுமைக்கும் பேரழகிற்கும் ஈடு உண்டோ? என சிரங்களின் மேல் கைகளைக் கூப்பி வணங்கினர். ஸீதையின் பேரெழிலை நன்கு காண முடியாது நம் கண்ணிமைகள் இமைக்கின்றனவே என குறை பட்டுக் கொண்டனர். மனிதர்களென்ன வானவர்கட்கும் குறைதான். ஏன்? அவர்கள் இமைக்காத கண்களைப் பெற்றிருந்தும் நமக்கு மானிடரைப் போன்று இரு கண்கள் தாமே உள. ஸீதையின் அழகைப் பருக அவை போத வில்லையே என்று. நான்முகனுக்கு எட்டு கண்கள் இருப்பினும், ஆறு

முகனுக்கு பன்னிரண்டு கண்கள் இருந்தாலும் ஸ்ரீதேவியின் அழகைப் பார்க்கப் போதவில்லையாம். இந்திரன் ஸஹஸ்ராக்ஷன் (ஆயிரங் கண்ணன்) ஆயிற்றே! அவன் பிராட்டியின் திருவழகை நன்கு பார்க்க முடியுமே எனில் அவனாலும் முடியாது. பெயரைக் கண்டு மயங்காதே. கள்ளிச் செடியை மஹா வ்ருக்ஷம் என்றும், அவையில் பேசாதிருப்பவனை ஸ்பீக்கர், (Speaker) என்றும், அமங்களமான செவ்வாய்க்கிழமையை மங்களவாரம் என்றும் கூறுவது போல் இந்திரனை ஸஹஸ்ராக்ஷன் என்கிறார்கள். உண்மையில் அவனுக்கு ஆயிரம் கண்கள் இல்லை. கௌதம சாபத்தால் ஆயிரம் புண்களே உள்ளன. ஆதிசேஷன் இரண்டாயிரம் கண்களை உடையவனாயிற்றே எனில் உண்மை தான். ஆனாலும் ''நான் அப்பாக்கியம் பெற்றவன். அதுவும் ஸமுத்ரத்தில் கரைத்த பெருங்காயம் போல் பிராட்டியின் திருவழகைச் சேவிக்கப் போதா'' என குறைப்பட்டானாம். எனவே ''ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்'' (புருஷ ஸூக்தம்)

अनेक वक्त्र नयनं अनेकाद्भुतदर्शनम्
अनेक बाहूदर वक्त्रनेत्रं पश्यामि त्वां सर्वतोऽनन्तरूपम्

அனேக வக்த்ரநயனம் அனேகாத்புத தர்ஶனம் ॥
அனேக பாஹூதர வக்த்ர நேத்ரம் பச்யாமி த்வாம் ஸர்வத:
அனந்தரூபம் ॥

பகவத் கீதை, 11-10, 16

என புருஷ ஸூக்தமும், கீதையும் கூறியபடி எண்ணற்ற திருக் கண்களைப் பெற்ற திருநாரணனே பிராட்டியின் திருவழகைக் காண முடிந்தவன். இதை மனதில் கொண்ட கம்பர் ''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கி னாள்'' என்றான். (அந்நாரணன் நீ தானே என்பது த்வனி)

மேலும், ''ராமா! நீ ஸித்தாச்ரமத்தில் முனிவர்களிடம் கேட்டதிலிருந்து வில்லை இறுத்தது வரை மனதில் யாரை நினைத்திருந்தாயோ அவள்தான் இவள்'' என்றாராம்.

ஜனகர் ஸீதையை ராமன் எதிரில் அருகில் நிறுத்தினார். ராமனுக்கு ஸீதை மின்னல் போல் மின்னுவதாகத் தெரிந்தது. வானத்தில் மின்னல் மின்னும் போது நேராகப் பார்த்துவிட்டால் ஒளியினால் ஏற்பட்ட அதிர்ச்சி யினால் கண், எதிரே உள்ள பொருள்களைத் தெளிவாகப் பார்க்காது. அது போல், ஸீதையின் மேனி அழகின் ஒளியும், அவள் பூண்ட திருவாபரணங் களின் ஒளியும் பளிச்சிடவே, ஒளிப் புஞ்சத்தினிடையே உள்ள ஸீதையை நன்கு பார்த்து உணர முடியாத நிலையில் கண்கள் கூசப் பரபரப்புடன் திகைத்து நின்ற ராமனுக்கு (இயம் ஸீதா) இவள் தான் ஸீதை எனக் காட்டினான் போலும்.

ஸீதையும் ராமனும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டதிலிருந்து அல்லது சிவதனுஸ்ஸை ஒடித்ததிலிருந்து இருவருக்கும் கல்யாணம் செய்து கொள்ளப்போகும் எண்ணம் மேலோங்கி நிற்கிறது. இந்த அன்பு வளர வளர எங்கு பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் ராமனுக்கு ஸீதை தானோ என எண்ணம் ஏற்படுகிறது. ''இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்'' என்றபடி இதயத்தில் ஸீதையையே மனக்கண்ணால் காண்பதால், மனதில் எப்பொழுதும் அவளையே நினைப்பதால் மாடியிலும் வழியிலும் முன்பும், பின்பும் அவளையே காண்கின்ற நிலை ஏற்பட்டு விட்டபடியால் உண்மையான ஸீதையைப் பார்க்காமல் பக்கத்தில் அவள் இருப்பதாக நினைத்து அங்கு பார்க்கிறான் போலும் என நினைத்து ஜனகர் ''ராமா! ஸீதை அங்கில்லை, (இயம்) இதோ ஸீதை இருக்கிறாள் பார்'' என்றாராம்.

இவளே பொருத்தமானவள் !

ஜனகர்: ''ராமா ! நீ ஆத்மானம் மானுஷம் மன்யே ராமம் தசரதாத்மஜம் ॥ என்றபடி பரமபுருஷனாகிய நாம் இப்பொழுது நமது பரத்வத்தைப் (உயர்வை) பாராட்டாது தசரத புத்ரனாய் மனிதனாக நினைத்து, தர்மத்தை நிலைநிறுத்த ஈண்டுப் பிறந்தனம், அதற்கேற்ப இவள் இருப்பாளோ என நினைக்காதே''.

राघवत्वेऽभवत्सीता रुक्मिणी कृष्णजन्मनि
अन्येषुचावतारेषु विष्णो रेषाऽनपायिनी

ராகவத்வே அபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜன்மனி ।
அன்யேஷு ச அவதாரேஷு விஷ்ணோ: ஏஷா அனபாயினீ ॥

விஷ்ணு புராணம்

''நீ ரகுகுலத் தோன்றலாக வரும் பொழுது ஸீதையாகவும், கண்ணனாக அவதரிக்கும் பொழுது ருக்மிணியாகவும், பிற அவதாரங்களிலும் உன்னை விட்டுப் பிரியாதவள் எனும் கூற்றுக்கு இணங்க இப்பொழுது எனது புத்திரியாக ஸீதையாக இருப்பவளே இவள். எனவே இவள் யாரோ என நினைக்க வேண்டாம்'' என்றாராம்.

இயம்: என்பதற்கு இப்படியும் சிலர் கூறுவர். அதாவது திருக்கோயிலுக்குப் பெருமாள் ஸேவிக்கப் போகிறோம். எம்பெருமான் கண்ணாடி அறையில் எழுந்தருளியிருக்கிறார். போகிறவன் கண்ணாடி அறையில் இதற்கு முன்பு ஸேவித்ததில்லை. பெருங்கூட்டம், முண்டியடித்து நுழைந்தால் பெருமாள் பலராக ஸேவை ஸாதிக்கிறார். உண்மையில் யார் பெருமாள் என்பதை உணராது ஸேவித்ததாக நினைத்துத் திரும்புகிறான். அது போல இங்கும் கல்யாண மண்டபம் கண்ணாடி மண்டபம். சுற்றிலும் நிலைக் கண்ணாடிகள் ராமனுக்கு பல ஸீதைகள் தென்படுகிறார்கள். யார் நிஜ ஸீதை என உணராது திகைக்கிறான் போலும். அதை உணர்ந்த ஜனகர் ''இதோ பார் இவள் தான் ஸீதை'' எனச் சுட்டிக் காட்டுகிறாராம்.

चन्द्र कान्ताननं रामं अतीव प्रियदर्शनम्
रूपौदार्य गुणैः पुसां दृष्टि चित्तापहारिणम्

''சந்த்ர காந்தானனம் ராமம் அதீவ ப்ரிய தர்ஶனம்''
''ரூப ஔதார்ய குணை: பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்''

ராமனின் திருமுக மண்டலம் சந்திரனைப் போன்று அனைவரையும் மகிழ்விக்கும் தன்மையது. திருமேனியோ மிக ஆழமானது. திருமேனியும், அவனது வள்ளல் தன்மையும், கல்யாண குணங்களும் பெண்ணினத்தை மட்டுமன்றி ஆண்களின் கண்களையும், மனத்தினையும் தன் பால் ஈர்க்கும் தன்மையன. எனவே இத்தகு வடிவு படைத்திருப்பது பற்றி நம்மிடம் பெண்ணைப் பெற்றோர் அனைவரும் வந்து சூழ்கிறார்கள் என தன்னையே பார்த்துக் கொண்டு இறுமாந்து நாமே அழகன் நாமே சிறந்தவன் என்று கர்வத்தினால் என் சொல்லைக் காதில் வாங்காது அலட்சியமாக நிற்காதே. ''ராமா! இவளையும் பார், இவள் எத்தகையவள் தெரியுமா?''

तुल्यशील वयोवृत्तां तुल्याभिजन लक्षणाम्
राघवोर्हति वैदेहीं तञ्चेयमसितेक्षणा

துல்யஶீல வயோ வ்ருத்தாம் துல்யாபி ஜன லக்ஷணாம் ।
ராகவ: அர்ஹிதி வைதேஹீம் தம் ச இயம் அஸிதேக்ஷணா ॥

வா.ரா. ஸுந்தர - 16

''உனக்கு பண்பினாலும் வயதினாலும், நற்கருமங்களினாலும் நற்குடிப் பிறப்பினாலும் இவளே பொருத்தமானவள். மேலும் உனது தாமரை இதழ் போன்று நீண்டு அகன்று செவ்வரியோடிய திருக்கண்களை விட இவளுடைய திருக்கண்களின் அழகு மிகச் சீரியது''. ஒரு காலத்தில்

नजीवेयं क्षणमपि विना तामसितेक्षणाम्

''நஜீவேயம் க்ஷணமபி வினா தாம் அஸிதேக்ஷணாம்''

வா.ரா. ஸுந்தர - 66

இவள் கண்ணழகில் சொக்கிப்போய் ''இவளைப் பிரிந்து ஒரு நொடியும் உயிர் வாழமாட்டேன்'' என்றும் சொல்லப் போகிறாய். பின்பு ஒரு சமயம் உனது பக்தன் (அனுமன்) ஒருவன் :

राज्यं वा त्रिषुलोकेषु सीता वा जनकात्मजा ।
त्रैलोक्य राज्यं सकलं सीताया नाप्नुयात्कलाम् ॥

ராஜ்யம் வா த்ரிஷுலோகேஷு ஸீதாவா ஜனகாத்மஜா ।
த்ரைலோக்ய ராஜ்யம் ஸகலம் ஸீதாயா: ந ஆப்னுயாத் கலாம் ॥''

வா.ரா. ஸுந்தர - 16

''உங்களைத் தன் மனமாகிற தராசில் வைத்து நிறுத்துப் பார்த்து மூவுலக அரசுகளும் (நீயும்) ஸீதையின் ஸௌந்தர்யத்தின் ஒரு கலைக்கு ஒரு அம்சத்திற்குக் கூட ஈடாகாது என நடுவு நிலை நின்று முடிவு சொல்லப்

போகிறான். எனவே உன்னைவிட அழகில் இவள் எத்தனையோ மடங்கு உயர்ந்தவள். இதை முற்றும் உணர்ந்தே நான் இவளைக் கொடுக்கிறேன். இறுமாப்பு கொள்ளாது இவளை ஏற்றுக் கொள்' எனக் கூறியதாகவும் உரைப்பர் சிலர்.

இயம் ஸீதா : ''ராமா! இவள் ஜனகருடைய வளர்ப்புப் பெண் எனக் கேள்விப் பட்டோமே; குலம் கோத்ரம் என்னவோ என ஐயம் வேண்டாம்.''

उत्थिता मेदिनीं भित्वा क्षेत्रे हलमुखक्षते
पद्मरेणु निभैः कीर्णा शुभैः केदार पांसुभिः ॥

உத்திதா மேதினீம் பித்வா க்ஷேத்ரே ஹலமுக க்ஷதே।
பத்மரேணுநிபை: கீர்ணா சுபை: கேதார பாம்ஸுபி: ॥

''நான் யாகம் செய்வதற்காக சாஸ்த்ர முறைப்படி நிலத்தை உழுத பொழுது ஏரின் படைச் சாலிலிருந்து பூமியைப் பிளந்து கொண்டு மேலே எழுந்தவள்; தாமரையின் மகரந்தத்துகள்களை ஒத்த நிலத்தூசுகள் படிந்த படியே தோன்றியவள். எனவே பூதேவியின் பெண். நம்மைப் போன்ற ஸ்த்ரீகர்ப்பத்தினின்று தோன்றியவள் அல்லள். எனவே ஸீதை என்று பெயர் வைத்தேன். நீயோ கௌஸல்யா கர்ப்பத்தினின்றும் தோன்றியவன், யோனிஜன், இவளோ பூமியினின்றும் தானே தோன்றியவள். அயோனிஜா, தன்னைவிட உயர்ந்த பெண்ணை மணம் கொள்வதில் ஐயமேன்'' என்றாராம்.

மேலும் முற்காலத்தில் மணப் பெண்ணின் எதிர்காலத்தையும் (அத்ருஷ்டத்தையும்) உயர்வையும் அறிய, யாக பூமியினின்றும், புற்றி லிருந்தும், ஸாதாரண இடத்திலிருந்தும் மண்ணைக் கொணர்ந்து உருட்டி வைத்து மணப்பெண்ணை அழைத்து மூன்றில் ஒன்றை எடுக்கும்படி சொல்வார்கள். அவள் எடுக்கும் மண்ணிலிருந்து பெண்ணின் மேன்மையை அறிவார்களாம். அதில் யாக பூமி மண்ணை எடுத்தவள் மிகச் சிறந்தவள் என அறிவது வழக்கம். ஸீதையோ யாகபூமியிலேயே தோன்றியவள், உயர்வைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ!

மம ஸுதா: பெண்ணுக்கு அழகைவிட நற்குடிப் பிறப்புதான் தேவை என ராமன் கருதுவதாகக் கருதி ''மம ஸுதா'' என்னுடைய பெண் என்றார். ஜனகரோ வேதத்திலேயே ''கர்மட: ஜனக: ஹவை'' எனப் புகழ்ந்து பேசப் பட்டவர். அதோடு கீதையிலும் கண்ணன்

कर्मणैव हि संसिद्धिं आस्थिता जनकादयः

''கர்மணைவஹி ஸம்ஸித்திம் ஆஸ்த்திதா: ஜனகாதய:''

பகவத்கீதை. - 3-20

என்று கர்மயோகத்தின் உயர்வைக் குறிக்க, ஜனகரால் கர்மயோகம் அனுஷ்டிக்கப்பட்டுப் பயனும் பெறப்பட்டது என்கிறார். எனவே அத்தகு ஜனகரின் பெண்ணான படியால் நற்குடியைச் சேர்ந்தவள் என்பதில் ஐயம் ஏன்?

கேள்வி : ஜனகர் வேதம் புகழும் நற்குடித் தோன்றல் எனின் ''மம ஸுதா'' எனது பெண் என ஸீதையினிடம் மமகாரம் கொள்வது தவறாயிற்றே.

ममेतिद्व्यक्षरं मृत्युः नममेति च शाश्वतम्

மம இதி த்வ்யக்ஷரம் ம்ருத்யு: நமம இதிச சாச்வதம் ॥

மமகாரம் கொள்வது அழிவை விளைவிக்கும், கொள்ளாமலிப்பது மோக்ஷத்தையே நல்கும் என சாஸ்த்ரம் பேசும். ஆம்; பரமனைத் தவிர பிராட்டியைத் தவிர, பிறபொருள்களில் மமகாரம் கொள்வது தவறு. நாம் அடைய வேண்டிய திவ்ய தம்பதிகளிடம் மமகாரம் கொள்வது தவறன்று. இத்தகு ப்ரஹ்ம ஞானீ ஜனகர். இதை விளக்க ஒரு கதையை இங்கு கூறலாம்.

யாஜ்ஞவல்க்ய மஹர்ஷியிடம் காட்டில் ஜனகரும் ஸந்யாஸிகளும், மற்ற மஹர்ஷிகளும் ப்ரஹ்மவித்யை பாடம் கேட்டு வந்தார்கள். யாஜ்ஞ வல்க்யருக்கு அரசரிடம் பரிவு அதிகம். இதைக் கண்ட ஸந்யாஸிகள் காரணத்தை ஆராயாது, ''குருவுக்கு நம்மைவிட ஜனகரிடமே அன்பு அதிகம். என்ன இருந்தாலும் அவர் அரசர் அல்லவா! நாம் ஆண்டிகள் தானே'' என்று மனம் வெதும்பினர். அதோடு குருவின் அனுக்ரஹத்தை—அன்பைப் பெற்ற ஜனகரிடம் பொறாமை கொண்டனர். நன்கு கற்று உணர்பவரிடம், கற்கும் கல்வியின் குறிக்கோளைப் பெற்றவனிடம் அதிக பரிவைக் காட்டுவது ஆசிரியரின் இயல்பு. பொறாமைக்காரர்கட்கு ஸமயம் வாய்க்கும்போது தக்க பாடம் கற்பிக்க எண்ணியிருந்தார் குரு. ஒரு நாள் காலக்ஷேபம் நடந்து கொண்டிருக்கும் போது அரசாங்க தூதுவன் ஓடிவந்து ''மிதிலை பற்றி எரிகிறது. விரையுங்கள்'' என ஜனகரைப் பார்த்து அலறினான். உடனே அங்கிருந்த ஸந்யாஸிகள் நதிக்கரையிலுள்ள மடத்தில் இருக்கும் தங்களுடைய கௌபீனம், வஸ்த்ரம், பிக்ஷாபாத்ரம் ஆகியவை மிதிலையிலிருந்து காற்றில் வரும் தீப்பொறியினால் எரிந்து விடுமே என்கிற கவலையினால் குருவின் அனுமதியைக் கூட பெறாமல் ஓடிவிட்டார்கள். ஜனகரோ நகரவில்லை. குருவினால் வற்புறுத்தப்பட்டும் அசைந்தாரில்லை. ஏன்? என குரு கேட்கப் பேசலானார்.

अनन्तं पदमे वित्तं यस्यमे नास्तिकिञ्चन
मिथिलायां प्रदीप्तायां न मे किञ्चित्प्रदह्यते ॥
सर्वंखल्विदं ब्रह्म तज्जलानिति शान्त उपासीत

அனந்தம் பதமே வித்தம் யஸ்யமே நாஸ்திகிஞ்சன ।
மிதிலாயாம் ப்ரதீப் தாயாம் நமே கிஞ்சித் ப்ரதஹ்யதே ।
ஸர்வம் கலு இதும் ப்ரஹ்ம தஜ்ஜலானிதி சாந்த உபாஸீத ।

''மிதிலை நகரம் தீப்பற்றி எரிந்தால் எனக்கு என்ன நஷ்டம்? எனக்கும் மிதிலைக்கும் என்ன ஸம்பந்தம் உள்ளது? அனைத்தும் எம்பெருமானுடைய தன்றோ. அதைக் காக்கவேண்டிய பொறுப்பு பரமனுடையதன்றோ! அவ னின்றி என்னால் என்ன செய்ய முடியும்? எல்லா உலகுப் பொருட்களும் அவனிடமிருந்து தோன்றி, அவனால் வாழ்ந்து அவனிடமே லயத்தை அடைகிறதன்றோ! இது முதலிய தங்களுடைய உபதேசத்தால் எங்கும் ப்ரஹ்மத்தைக் காணும் எனக்குக் கவலையேது?'' என்று கூறினார். இதை மடத்திற்குச் சென்று திரும்பியவர்கள் கேட்டு வெட்கித் தலை குனிந்தனர். குருவும் சீடர்களைப் பார்த்து ''பெரிய ராஜ்யமே தன்னுடையதாயிருக்க அவர் எழுந்து ஓடவில்லை. சிறு பொருள்களுக்காக ஓடினீர்களே! தத்வ ஞானியான ஜனகர் எங்கே? நீங்கள் எங்கே'' என்றாராம்.

இவ்வாறு அஹங்கார மமகாரங்களை ஒழித்த ஜனகர் ''ஹ்ரீஸ்ச்சதே லக்ஷ்மீஸ்ச பத்ன்யௌ'' ''அஹோராத்ரே பார்ஸ்வே'' ''ஏகதத்வமிவோ திதௌ'' என்றபடி எப்பொழுதும் எவ்விடத்தும் பிரித்துப் பார்க்க முடியாது பரமபுருஷனோடு ஒரே தத்வம் என்னும்படி விளங்கும் பிராட்டியான ஸீதையினிடத்தில் மமகாரம் கொண்டாடுவதில் தவறென்ன? அத்தகு (ஜனகருடைய) என்னுடைய பெண் ஸீதை.

மம ஸுதா: ஸீதை என்பதினால் இவள் பிறப்பினால் உயர்ந்தவள் என்பதைக் கூறி வளர்ப்பினாலும், வாஸத்தினாலும், சேர்க்கையினாலும் உயர்ந்தவள் என்பதற்காக மம ஸுதா என்றாராம். ஒரு முனிகுமாரன் காட்டில் செல்லும் போது ஒரு சேரியைக் கடந்தான். அங்கு ஒரு கிளியைப் பார்த்தான். அது இவனைக் கண்டதும் ''டேய்! அடி, வெட்டு, பிடி, கொல்லு'' என்றது. அதைக் கேட்டுக் கொண்டே சென்றவன் ஒரு முனிவரின் ஆச்ரமத்தை அடைந்தான். அங்கேயும் ஒரு கிளி 'வாரும்' என வரவேற்று, ''அமரும்'' என உபசரித்தது. ''இதோ அர்க்யம், பழம் சாப்பிடுங்கள்' என்று பேசியது. இதைக் கேட்டதும் ஆச்சரியமுற்றுக் கிளியைப் பார்த்து வழியில் உன்னைப் போன்ற ஒரு கிளியைப் பார்த்தேன். அது குத்து வெட்டு என்றது. நீயோ வாரும், அமரும், சாப்பிடும் என்று உபசாரமாகப் பேசுகிறாய். என்ன காரணம்?'' என்று கேட்டான். அதற்கு அக்கினி கூறியது.

मातप्येका पिताप्येकः मम तस्य च पक्षिणः
अहं मुनिभिरानीतः सचानीतो गवाशनैः
अहं मुनीनां वचनं शृणोमि गवाशनानां स वचः शृणोति
प्रत्यक्षमेतत् भवतापि दृष्टं संसर्गजा दोषगुणा भवन्ति

மாதா அபி ஏகா பிதா அபி ஏக: மம தஸ்யச பக்ஷிண: ।
அஹம் முனிபி: ஆனீத: ஸ: ச ஆனீத: கவாஶனை: ॥
அஹம் முனீனாம் வசனம் ஶ்ருணோமி கவாஶனானாம் ஸ: வச:
ஶ்ருணோதி ।ர

ப்ரத்க்ஷம் ஏதத் பவதா அபித்ருஷ்டம் ஸம்ஸர்கஜா
தோஷகுணா: பவந்தி ॥

''எனக்கும் அக்கிளிக்கும் தாயும் தந்தையும் ஒருவரே. என்னை முனிவர் எடுத்து வந்து வளர்க்கிறார். அதுவோ பசுவைத் தின்னும் புலையர் களால் வளர்க்கப்படுகிறது. நான் ஆச்ரம முனிவர்களின் பேச்சுக்களைக் கேட்டு கேட்டுப் பழகி அவ்வாறே பண்போடு பேசுகிறேன். அதுவோ கொலைத் தொழில் புரிபவர்களின் பண்பற்ற பேச்சுக்களைக் கேட்டு அவ்வாறே பேசப் பழகிவிட்டது. எங்கள் இருவரின் வேறுபாட்டை நேராக நீரே அறிந்தீர், தோஷங்களும் குணங்களும் அவரவர்கட்கு சேர்க்கையினால் அமைகின்றன.''

''எனவே ஸீதைக்குத் தாய் இல்லாததினால் நானே வளர்த்தேன். அரண்மனைத் தாதிமார்களைக் கொண்டு வளர்க்கவில்லை. என்னோடு ஸாத்விகாஹாரங்களையும் பகவன்நிவேதித ஆஹாரங்களையும், யாக சிஷ்டமானவற்றையும் சாப்பிட்டு வளர்ந்ததாலும், நல்லோர்கள் பலர் இங்கு வருவதினால் ஸத்ஸங்கத்தைப் பெற்றவளானபடியாலும் பிறப்பி னாலும் நல்லோர் நட்பினாலும் மிகவும் பரிசுத்தமானவள். எனவே நமக்கு ஏற்றவளோ என ஐயுற வேண்டாம்.''

மமஸுதா: ''தசரதர் அச்வமேதம், புத்ர காமேஷ்டி யாகங்களைச் செய்து பெற்ற உன்னைத் தான் தபஸ்வியாக இருந்து வளர்த்தது போல் நானும் ஸீதையை உனக்கு அளிக்க விரும்பி பல்வகை வ்ரத உபவாஸாதிகளை அனுஷ்டித்து நல்ல முறையில் வளர்த்துள்ளேன்.''

மேலும் ''நிலமகளின் பெண்ணாக கிடைத்த படியால் பெண் 'தாயைக் கொள்ளும்' என்றபடி க்ஷமையே—பொறுமையே உருவெடுத்த பூதேவி போன்று, அவள் பெண்ணாகிய ஸீதையும் பொறுமை முதலிய குணம் மிக்கவள்.''

பொதுவாக மக்கள் தந்தை வயிற்றில் இரண்டு மாதங்களும் தாய் வயிற்றில் பத்து மாதங்களும் வளர்ந்து பிறப்பதாகச் சொல்வதுண்டு. ராமன் தசரதர் வயிற்றில் தங்காது பிறந்தவன். ஸீதையும் ஜனகர் வயிற்றில் தங்கிப் பிறந்தவள் அல்லள், ராமன் வேள்வித் தீயினின்றும் எழுந்த திவ்யபாயஸத்தி னின்றும் தோன்றியவன். ஸீதையோ தலைமுறை தலைமுறையாக வேள்வி கள் நடக்கும் வேள்விச் சாலையினின்றும் தோன்றியவள். ஸீதை பிறந்த

இடம் ஜனகரின் முன்னோர்கள் யாகம் செய்த இடம் என்பதற்கு மத்ஸ்ய புராணத்தில் ஒரு கதை உண்டு.

ஜனகரின் குல முதல்வன் நிமி அரசன். ஒரு ஸமயம் நிமிக்கு வஸிஷ்டர் குருவாயிருந்தார். இவர் நிமிக்குப் பல யாகங்களை செய்து வைத்தார். ஒரு வேள்வி முடிந்ததும், சோம்பலின்றி ''இன்னொரு வேள்வியை ப்ருஹஸ்பதியாக இருந்து நடத்திக் கொடும்'' என நிமி வஸிஷ்டரைப் பிரார்த்தித்தார். குரு வஸிஷ்டரோ நிமியைப் பார்த்துப் பேசினார்: ''அரசே! உமக்குப் பல வேள்விகளைச் செய்து வைத்துக் களைத்துப் போயிருக்கிறேன். சிறிது காலம் தாமதித்துத் தொடங்கலாம்'' என்றார். நிமி :

न च मे सौहृदं ब्रह्मन् कृतान्तेन बलीयसा ।
धर्मकार्येत्वराकार्या चलं यस्माद्धिजीवितम् ॥

நசமே ஸௌஹ்ருதம் ப்ரஹ்மன்! க்ருதாந்தேன பலீயஸா ।
தர்மகார்யே த்வரா கார்யா சலம் யஸ்மாத்ஹி ஜீவிதம் ॥

''குருவே! யமன் எனக்கு நண்பன் அல்லன். என் உயிரை ஈர்க்க அவன் வந்தால் என்னால் தடுக்க முடியாது. அவ்வளவு பலமுடையவன் அவன். வாழ்வு நிலையற்றது. எனவே தர்ம கார்யங்களை ஒத்திப் போடக் கூடாது. யமன் எனக்கு பக்ஷபாதம் காட்டமாட்டான்.''

धर्मपथ्यौदनः जन्तुः मृतो अपि सुखं अश्नुते ।
श्वः कार्यं अद्य कुर्वीत पूर्वान्हे चापरान्हिकं ॥

தர்ம பத்யௌதன: ஜந்து: ம்ருதோபிஸுகம் அஶ்னுதே ।
ச்வ: கார்யம் அத்யகுர்வீத பூர்வாண்ஹேச ஆபராண்ஹிகம் ॥

''பூமியில் பிறந்தவனுக்கு மேலே செல்லும் போது அவன் பண்ணிய தர்மங்கள்தான் பாதேயம்.—வழியில் உதவும் கட்டுச் சோறு, அது நாம் இறந்தாலும் இன்பத்தை அளிக்க வல்லது. எனவே நாளை செய்யும் நற்பணியை இன்றே செய்ய வேண்டும். பிற்பகலில் செய்யும் தர்மத்தை முற்பகலிலேயே செய்துவிட வேண்டும்.''

शरीरं शाश्वतं मन्ये विद्याभ्यासे धनार्जने
अशाश्वतं धर्मकार्ये ऋणवानस्मि सङ्कटे ॥

ஶரீரம் ஶாஶ்வதம் மன்யே வித்யாப்யாஸே தனார்ஜனே ।
அஶாஶ்வதம் தர்மகார்யே ருணவான் அஸ்மி ஸங்கடே ॥

''மனிதன் கல்வி கற்பதிலும், பொருளீட்டுவதிலும் தனது உடல் நிலையானது என எண்ணிக் கற்கவும் ஈட்டவும் வேண்டும். அறப் பணி களைச் செய்வதில் உடல் எந்த நிமிடத்திலும் அழியக்கூடியது என நினைத்து கடன் பட்டவன் கடனைத் தீர்க்க விழைவது போல் விரைந்து நல்லதைச் செய்ய வேண்டும். எனவே உமக்கு உதவ முடியாது போனால் வேறொரு குருவை நாடுகிறேன்'' என்றாராம்.

இதிலிருந்து ஜனகரின் குல முதல்வர்கள் யாகங்களை இங்கு செய்து கொண்டே இருந்தனர் என அறியலாம். ஆக இருவரும் வேள்வித் தொடர்பு உடையவர்கள்; முற்றிலும் தூயவர்கள். எனவே ''ராமா! ஸீதையை மணப்பதே உனக்குப் பொருத்தமாகும்'' என்றாராம்.

ஸஹதர்மசரீ தவ: தந்தை தசரதர் பலரை மணம் செய்து கொண்டார். ஆனால் பட்டத்து ராணிகள் மூவர்தான். பலர் அழகின் காரணமாக இன்ப நுகர்ச்சிக்காக மணம் செய்து கொள்ளப்பட்டவர்கள். இவர்கள் யாகம் முதலிய தர்மானுஷ்டானத்திற்குப் பயன்பட மாட்டார்கள். அது போல ஸீதை நல்ல அழகி. போகானுபவத்திற்கு இருக்கட்டும். தர்மானுஷ்டானத் திற்கு வேறொருத்தியை பின்னர் மணம் செய்து கொள்ளலாம் என நினைக் கிறானோ எனக் கருதி, ''இவளே தர்மானுஷ்டானத்திற்கும் உதவுபவள் ஸஹதர்மசரீ'' என்றார்.

ஸஹ என்றால் ஸமானம். ஸமானமான தர்மத்தை, அதாவது நீர் போற்றும் தர்மத்தை சரணாகதரக்ஷண தர்மத்தை இவளும் அனுஷ்டிப்பாள். ராமா! நீ எதிர் காலத்தில் :-

अभयं सर्व भूतेभ्यो ददाम्येतद्व्रतं मम
दोषो यद्यपि तस्य स्यात् सतामेतदगर्हितम्

அபயம் ஸர்வ பூதேப்ய: ததாமி ஏதத் வ்ரதம் மம ।
தோஷ: யத்யபி தஸ்யஸ்யாத் ஸதாம்ஏதத் அகர்ஹிதம் ॥

வா.ரா.ஸுந்தர - 18

''இன்னார் இனியர் என்று எவ்வித வேற்றுமையும் பாராது, குற்றவாளி யாயினும் அவர்களுடைய குற்றங்களைப் பொருட்படுத்தாது சரணடைந்த அனைவருக்கும் அபயம் அளிப்பதை வ்ரதமாக நீ கொண்டுள்ளது போல் இவளும் தன்னை அல்லும்பகலும் துன்புறுத்தி வந்த அரக்கிகளைக் கூட ''பவேயம் சரணம் ஹிவ:'' ''நகச்சித் நாபராத்யதி'' உங்களுக்கு ரக்ஷகியாக இருப்பேன் எனக் கூறியும், ''உலகில் குற்றம் புரியாதார் யார்'' எனக் கூறி அரக்கிகட்கும் அபயப்ரதானம் செய்யப் போகிறாள்''.

இதை மனதிற்கொண்டே கூரத்தாழ்வானும் பிராட்டியின் சரணாகத ரக்ஷணத்தைப் போற்றி ராமனைவிட ஸீதையை உயர்த்திப் பேசுகிறார்.

मात मैथिलि! राक्षसी स्त्वयि तदैवाद्रीपराधास्त्वया
रक्षन्त्या पवनात्मजाल्लधुतरा रामस्यगोष्ठीकृता
काकं तं च विभीषणं शरण मित्युक्तिक्षमौ रक्षतः
सा नः सान्द्र महागसः सुखयति क्षान्ति स्तवाकस्मिकी ।

மாத: மைதிலி! ராக்ஷஸீ: த்வயி ததைவ ஆர்த்ராபராதா: த்வயா
ரக்ஷந்த்யா பவனாத்மஜாத் லகுதரா ராமஸ்ய கோஷ்டீக்ருதா ।
காகம் தம் ச விபீஷணம் சரணம் இத்யுக்தி க்ஷமௌ ரக்ஷத:
ஸா ந: ஸாந்த்ர மஹாகஸ: ஸுகயதி க்ஷாந்தி: தவ ஆகஸ்மிகீ ॥

ஸ்ரீ குணரத்ந கோசம்

''தாயே! மைதிலி! உனக்குத் தீங்கு இழைத்துக் கொண்டே இருக்கிற அரக்கிகளை அனுமனிடமிருந்து காப்பாற்றியதால் உனது சரணாகத ஸம்ரக்ஷணம் ராமனை விட ஒரு படி உயர்ந்து விட்டது. ராமனோ ''புகலில்லா அடியேன் உன்னடிக் கீழ் அமர்ந்து புகுந்தேன்'' என்று கூறிய பிறகுதான் காகத்தையும், விபீஷணனையும் காப்பாற்றினான். எனவே அம்மா! உன் கருணையே மிக உயர்ந்தது. எனவே இனி நாங்கள் அம்மா கக்ஷியே ஒழிய அப்பா கட்சி அல்ல,'' எனப் பேசினார். எனவே, ராமா! ஸீதை தர்மானுஷ் டானத்தில் உன்னைப் பின்பற்றுபவள், உண்மையில் உன்னையும் விஞ்சக் கூடியவள்'' என்றார்.

ஸஹ தர்மசரீதவ: மனைவி நாட்யம், பாட்டு, வீணை இவற்றைக் கற்றிருந் தால் மாத்திரம் போதாது. தளிகை பண்ணவும் (சமைக்கவும்) தெரிந்திருக்க வேண்டும். பசியுடன் புருஷன் இல்லத்திற்கு வரும்பொழுது சாப்பிட இலைபோடாமல், ''இன்று புதிதாக ஒரு நாட்யம் (டான்ஸ்) கற்றிருக்கிறேன்; அபிநயம் பிடிக்கிறேன் பாருங்கள்'' என்றோ, ''இன்று பாட்டு வாத்யாரிடம் ராக மாலிகை கற்றிருக்கிறேன். ஆலாபனம் செய்கிறேன்; சற்றுக் கேளுங்கள்'' என்றோ சொல்லலாமா? உடனே இலை போட்டு அன்னத்தையன்றோ பரிமாற வேண்டும்? எனவே இங்கிதம் அறிந்து ஸமயம் அறிந்து புருஷனுக்கு உதவுபவள் இவள்.

மனைவி வேலைக்காரி அல்லள். அவளை ஸகி—நண்பன் போல் உதவுபவள் என்கிறது மஹாபாரதம், நண்பனும் வேலை செய்கிறான், ஊழியனும் வேலை செய்கிறான். ஆனால் நண்பன் செய்வதை வேலை என்று சொல்வதில்லை. உதவி என்கிறோம். அவ்வுதவியும் சொல்லிச் செய்வ தில்லை, நட்பினால் அன்பினால் செய்கிறான்.

உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

குறள் - 788.

இடுப்பில் உடுத்தப்பட்ட ஆடை எத்தனையோ தடவை அவிழ்கிறது. ஆடை அவிழ்கிறதே என்று நினைத்து நாம் அதை மீண்டும் உடுத்துவதில்லை. நமது கவனம் அதில் செல்லாதிருந்த போதிலும் நமது கைகள் தாமே சென்று ஆடையை நழுவாது பிடித்து இடுப்பில் கட்டிவிடுகின்றன. இத்தகு கைகள் போல நண்பன் இயற்கையாகவே உதவுபவன்.

किंस्वित्प्रवसतो मित्रं किंस्विन्मित्रं गृहेसतः
आतुरस्य च किं मित्रं किंस्विन्मित्रं मरिष्यतः
सार्थः प्रवसतो मित्रं भार्या मित्रं गृहे सतः
आतुरस्य भिषक् मित्रं दानं मित्रं मरिष्यतः ॥

கிம்ஸ்வித் ப்ரவஸத: மித்ரம் கிம்ஸ்வித் மித்ரம் க்ருஹே ஸத: ।
ஆதுரஸ்யச கிம் மித்ரம், கிம்ஸ்வித் மித்ரம் மரிஷ்யத: ॥
ஸார்த: ப்ரவஸத: மித்ரம் பார்யா மித்ரம் க்ருஹே ஸத: ।
ஆதுரஸ்ய பிஷக் மித்ரம் தானம் மித்ரம் மரிஷ்யத:

பாரதம் - யக்ஷப்ரச்னம்

வெளியூர் செல்பவனுக்கு யார் நண்பன்? - வழிப் போக்கன்
வீட்டில் இருப்பவனுக்கு யார் நண்பன்? - மனைவி
நோயாளிக்கு யார் நண்பன்? - வைத்தியன்
இறக்கின்றவனுக்கு நண்பன் யார்? - தானம் செய்வது

என்றபடி நண்பன் போல் உனது தர்மானுஷ்டானத்திற்கு உடனுக்குடன் உதவுபவள் ஸீதை.

ஸஹ தர்மசரீ: *''ராமா! உங்கள் குலகுரு வஸிஷ்டரின் மனைவி அருந்ததீ போன்று ஸீதை தர்மானுஷ்டானத்தில் உடனிருந்து உதவுவாள். இதை நான் சொல்ல வில்லை. ஒரு காலத்தில் அகஸ்தியர் உனக்குக் கூறுவார்.''*

एषाहि प्रकृतिः स्त्रीणां आसृष्टेः रघुनन्दन
समस्थ मनुरज्यन्ति विषमस्थं त्यजन्ति च
शतह्रदानां लोलत्वं शस्त्राणां तीक्ष्णतां तथा
गरुडा निलयोः शैघ्र्यं अनुगच्छन्ति योषितः
इयंतु भवतो भार्या दोषैरेतैर्विवर्जिता
श्लाघ्या च व्यपदेश्या च यथा देवी ह्यरुन्धती

ஏஷா ஹி ப்ரக்ருதி: ஸ்த்ரீணாம் ஆஸ்ருஷ்டே: ரகுநந்தன! ।
ஸமஸ்தம் அனுரஜ்யந்தி விஷமஸ்தம் த்யஜந்தி ச ॥
சதஹ்ரதானாம் லோலத்வம் ஶஸ்த்ராணாம் தீக்ஷ்ணதா: ததா ।

கருடாநிலயோ: சைக்ர்யம் அனுகச்சந்தி யோஷித: ॥
இயம்து பவத: பார்யா தோஷை: ஏதை: விவர்ஜிதா ।
ச்லாகயா ச வ்யபதேச்யா ச யதா தேவீ ஹி அருந்ததீ ॥

வா.ரா. ஆரண்ய.13.

இவ்வுலகம் படைக்கப்பட்டதிலிருந்து பெண்கள் தனம், தான்யம், வீடு முதலிய சொத்துள்ள கணவனையே விரும்புகிறார்கள். ஏழ்மை, நோய் நொடி ஆகியவற்றால் துன்புறும் புருஷனை விரும்புவதில்லை. அவனை விட்டுப் பிரிந்தும் செல்கின்றனர். பெண்கள் மின்னல் போன்று சஞ்சல புத்தியடையவர்கள். ஓரிடத்தில் நிலையாக இருக்க மாட்டார்கள். கூரிய வாளைப் போன்று கொடுமையானவர்கள், திருமணம் தொட்டுத் தொடர்ந்த அன்புப் பிணைப்பை ஒரு நொடியில் அறுத்துக் கொண்டு விடுவர். ஆராயாது, இகழத் தக்க செயலைப் புரிவதில், ''கருடன், காற்று போன்று விரைந்து ஈடுபடுவர். ஆனால் இத்தகு துஷ்டஸ்வபாவம் ஸீதைக்குக் கிடையாது. மாறாக நற்குண நற்பண்புகளால் பெரிதும் பாராட்டத் தக்கவள், கற்பரசி களான பெண்களுக்குள் அருந்ததீ போன்று முதல்வியாய் கற்புக்கனல் நெருப்பு எனப் போற்றத்தக்கவள்.'' என உன்னிடமே முனிவர் கூறுவார் என முக்காலமும் அறிந்த ஜனகர் எடுத்துக் கூறினார். எனவே ஸீதை -

அன்னை தயையும், அடியாள் பணியும், மலர்
பொன்னின் அழகும், புவிப்பொறையும்–வண்ணமுறும்
வேசித் துயிலும், விறல் மந்திரி மதியும்,
பேசில் இவை உடையாள் பெண்.

மலர்ப்பொன்: மஹாலக்ஷ்மீ, வண்ணம் உறும் வேசி: நயங்கள் பொருந்திய விலை மகளிர், விறல்: தைர்யமுள்ள

இத்தகு பெண்ணிலக்கணம் பொருந்திய ஸத்பத்னியாவள்.

कार्येषु दासी करणेषु मन्त्री रूपेषु लक्ष्मी क्षमया धरित्री
स्नेहे च माता शयनेतु वेश्या षट्कर्मयुक्ता कुलधर्मपत्नी

கார்யேஷு தாஸீ கரணேஷு மந்த்ரீ, ரூபேஷு லக்ஷ்மீ க்ஷமயா தரித்ரீ ।
ஸ்னேஹே ச மாதா ஶயனே து வேஶ்யா, ஷட்கர்ம யுக்தா குலதர்ம பத்னீ ॥

குடும்ப (நாட்டு) கார்யங்களைச் செய்வதில் வேலைக்காரி போன்றும், தக்க ஆலோசனை கூறுவதில் மந்த்ரி போன்றும், அழகில் மஹாலக்ஷ்மீ போன்றும், பொறுமையில் பூமி போன்றும், அன்பைப் பொழிவதில் தாய் போன்றும், சயனத்தில் வேசி போன்றும், இருப்பவளே- அதாவது இந்த

ஆறுவகைச் செயலைச் செய்பவளே குலத்திற்கேற்ற தர்ம பத்னியாவாள் எனும் இலக்கணங்கட்கு இலக்கிய மாகத் திகழ்பவள் ஸீதை.

ஸஹ தர்மசரீ: ''இவள் எக்காலத்தும் உன்னை விட்டுப் பிரியாது வாழ்ந்து, தர்மங்களை நினைவூட்டி, உன்னை தர்மங்களை அனுஷ்டிக்கும்படிச் செய்பவள். தண்டகாரண்யத்தில் ராமனைப் பார்த்து ஸீதை பேசப் போகிறாள்; 'ஆர்யபுத்ர! ப்ரஹ்மசர்யம், ஸத்யம், அஹிம்ஸை' இம்மூன்றும் பொதுவாக அனைவராலும் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்கள், உம் மிடத்தில் பிறன் மனை விழையாத பேராண்மை எனும் ப்ரஹ்மசர்ய வ்ரதம் இருக்கிறது. நீர் ஏக பத்னீ விரதம் உடையீர். பித்ரு வாக்ய பரிபாலனத்திற்காக காடு வந்ததால் வாய்மை தவறாத ஸத்யமெனும் தர்மமும் இருக்கிறது. ஆனால் காரணமின்றிப் பிறரைத் துன்புறுத்தாத அஹிம்ஸாதர்மம் தான் இல்லை. ஏனெனில் நம்மைப் பகைக்காத, நமக்கு நேரிடையாகத் தீங்கிழைக்காத அரக்கர்களைக் கொல்லத் திட்டமிட்டு வில்லையும் அம்பையும் எடுத்துவந்திருக்கிறீர். இது தகாதே,'' என்றாள். இங்கு தர்மத்தினின்றும் கணவன் வழுவாதபடி காக்க முற்படு கிறாள்.

(இதற்கு ராமன் ''சரணாகத ஸம்ரக்ஷணம் என்பது விசேஷதர்மம், முனிவர்களும் தேவர்களும் என்னைச் சரணடைந்திருக்கிறார்கள். அவர் களைக் காக்கத் தீயோரை நலியும்படி செய்யவேண்டியிருக்கிறது. வேறு வழியில்லை'' என்று பதில் கூறப்போகிறார்.)

ஸஹதர்மசரீ: ''ராமா! நீ இவளை மணந்தால்தான் உனது சரணாகத ஸம்ரக்ஷணம் ஒழுங்காக நடைபெறும். இவள் அருகில் இல்லாவிடில் அதர்மமாக பிறர்களை வதை செய்யவேண்டியிருக்கும், எதிர்காலத்தைச் சற்று நினைத்துப்பார். ஊரெல்லாம் சுற்றி இளைத்து உனது அஸ்த்ரத்திற்குப் பயந்து வந்து விழுந்த காகம் ஸீதை அருகில் இருந்ததால் காப்பாற்றப்படு கிறது. விமானத்தினின்றும் குனிந்து ஸீதை கடாக்ஷித்ததால் ஸுக்ரீவன் பட்டாபி ஷேகத்தைப் பெறுகிறான். உயரே எழுந்த விபீஷணனை அசோக வனத்தி னின்றும் ஸீதை அருளுடன் நோக்கியதால் அவன் லங்காராஜ்யத்தில் முடிசூடப் போகிறான். ஆகியவற்றை—வரப்போவதை முக்காலத்தையும் உணர்ந்தவரானபடியால் குறிப்பாக நினைவுபடுத்தி இவளை ஏற்பது உமக்கு மிகத்தேவை'' என்றாராம்.

आपन्नार्ति प्रशमन विधौ बद्ध दीक्षस्य विष्णोः ।
आचख्युस्त्वां प्रियसहचरी मैकमत्योपपन्नाम् ॥

ஆபந்நார்த்தி ப்ரஶமனவிதௌ பத்ததீக்ஷஸ்ய விஷ்ணோ: ।
ஆசக்யு: த்வாம் ப்ரியஸஹசரீம் ஐகமத்யோபபந்நாம் ॥

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீ ஸ்துதி10

''சரணாகதர்களாய் ஸம்ஸாரத்தில் மூழ்கித் துன்புறும் மக்களுடைய துன்பங்களைக் களைவதாகிற வேள்வியில் தீக்ஷையை மேற்கொண்ட விஷ்ணுவுக்கு கருத்து வேறுபாடு சிறிதுமின்றி அன்புடன் கூட ஒத்துழைப் பவள் இவள். ஒத்த கருத்துடையவளானபடியால் தேவ சரணாகதியை நிறைவேற்ற உதவுவதின் பொருட்டு, உமக்கு முன்பே அசோக வனத்தில் சிறையிலிருந்து ஏற்றம் பெறப்போகிறவள் இவள். எனவே இவள் கையைப் பிடித்து ஏற்பீராக'' என்றாராம்.

ஸீதை தனது செய்கையால் அயோத்தி மக்கள் யாவரும் நமது ராணியம்மா, மிதிலையரசர், ஜனகரிடம் வளர்ந்தவளாயிற்றே. அதனால்தான் அரண்மனையில் செய்ய வேண்டிய அறப்பணிகள் அனைத்தையும் உரிய காலத்தில் தக்கோரைக் கொண்டு செய்வித்து எல்லோரும் புகழும்படி நடந்து கொள்கிறாள் எனப் புகழும்படி இருப்பாள். எனவே ''ஜனகானாம் குலேகீர்த்திம் ஆஹரிஷ்யதி மேஸுதா'' உன்னை மணந்து இவள் அயோத்தி யில் வாழும் போது எங்கள் குலத்தை எல்லோரும் பாராட்டும்படி செய்யப் போகிறாள்.

ப்ரதீச்ச ச ஏநாம்: ராமர், ''ஜனகரே ''இயம் ஸீதா மமஸுதா ஸஹதர்மசரீ தவ'' என்றீர்! அதாவது பெண்ணினுடைய அழகு, உயர்குடிப்பிறப்பு, தர்மங் களை அனுஷ்டிப்பது போன்றவைகளால் உனக்கு மிக ஏற்றவள் என்று எல்லாம் சொன்னீர்! உமது அனுமதியின்றி அவளை எங்ஙனம் ஏற்பது'' என்றாராம்.

ப்ரதீச்ச ச ஏநாம் இவளை ஏற்றுக் கொள். (அங்கீகரி) என்றார்.

कन्यां कनकसंपन्नां सर्वाभरणभूषिताम्
दास्यामि विष्णवे तुभ्यं ब्रह्मलोकजिगीषया

கன்யாம் கனகஸம்பந்நாம் ஸர்வாபரண பூஷிதாம் ।
தாஸ்யாமி விஷ்ணவே துப்ஸம் ப்ரஹ்மலோக ஜிகீஷயா ॥

''தங்கத்தினாலான பல்வகை ஆபரணங்கள் சூடிய இவளை ஸ்ரீ வைகுண்டத்தைப் பெறுவதற்காக விஷ்ணு ஸ்வரூபனான உமக்குக் கொடுக் கிறேன் என்று கூறிக் கன்யாதானம் செய்வதையன்றோ பார்த்திருக்கிறோம். இது கன்யகையின் தானமாக அல்லாது கன்யகையின் ஆதானமாக (தானே ஏற்றுக்கொள்வதாக) அன்றோ இருக்கிறது என்று ராமன் எண்ணுவதை அறிந்த ராஜர்ஷி 'ஆம்' இவளை நீயே தானாகத் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்றாராம். ஏன்?

अनन्या राघवेणाऽहं भास्करेण प्रभा यथा

அனன்யா ராகவேண அஹம் பாஸ்கரேண ப்ரபா யதா ॥

என்றபடி கதிரவனும் கதிரும் போல ராமனிடமிருந்து பிரிக்க முடியாதவளாய் உடலால் வேறுபட்டிருப்பினும் உயிரால் ஒரே தத்வமானவர்கள் என்பதைக் குறிப்பாலும், ப்ரதீச்ச எனும் சொல்லாலும் உணர்த்தினாராம் ஜனகர்.

இதை உணர்ந்த ராமர் ஜாடையாக அப்படியானால் இத்தகைய கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் எதற்காகவோ? என்று கேட்க, ''திருக் கோயில்களில் பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவங்கள் போல கல்யாணோத்ஸ வமும் அர்ச்சகர் களால் செய்யப்படுவது போல அடியேனும் கல்யாணோத் ஸவம் பண்ணுகிறேன். நானும் ஒரு அர்ச்சகன் தானே'' என்றாராம்.

ப்ரதீச்ச ச ஏனாம் பத்ரம் தே: ''இவளை ஏற்றுக் கொண்டால்தான் உனக்கு மங்களம் உண்டாகும். ராவண ஸம்ஹாரத்திற்கு ஸீதை காரணமாகிறாள். இதனால் சரணாகத ஸம்ரக்ஷணமாகிற மங்களம் அதாவது ராவணனைக் கொன்று தேவர்களைக் காத்தலாகிற மங்களம் நிறைவேறுகிறது. இவள் அருகிலிருந்ததால் தான் ஆர்த்ராபராதியான காகாஸுரனையும் ரக்ஷித்ததாகிற மங்களமும் கைகூடும், எனவே இவளை ஏற்றுக் கொள். ப்ரதீச்ச பரிவோடு, ஆதரவோடு ஏற்றுக் கொள்.''

''நச ஸீதா த்வயாஹீனா'': ஜலத்தை விட்டுப் பிரிந்த மீன் வாழாதது போல் உன்னை விட்டுப் பிரிந்தால் இவளும் வாழ மாட்டாள். உன்னிடம் அவ்வளவு பரிவுடையவள் இவள். நீயும் ஒரு ஸமயம் "ந ஜீவேயம் க்ஷணமபி வினா தாம் அஸிதேக்ஷணாம'' இவளின்றி ஒரு நொடி கூட நான் வாழ மாட்டேன் என்று இவள் கண்ணழகில் சொக்கிச் சொல்லப் போகிறாய். எனவே ஒருவருக் கொருவர் இவ்வளவு பரிவு இருக்கும் பொழுது ஏற்றுக் கொள்வதில் தாமதம் ஏன்'' என்றாராம்.

''மேலும் ராமா! கரும்பு தின்னக் கூலி கொடுப்பாருண்டோ! இவளைக் கைக்கொள்ளும் என்று உன்னை நான் வேண்ட வேண்டி யிருக்கிறதே?''

ப்ரதீச்ச ச ஏனாம் பத்ரம் தே: ''ராமா! நீ இவளை ஏற்றுக் கொண்டால்தான் உனக்கு மங்களங்கள் தொடரும், தேவர்கட்கு அபயம், மஹர்ஷிகட்கு அபயம், ஸுக்ரீவ விபீஷணாதிகட்கு அபயம் ஆகிய மங்களங்கள் தொடரும்.''

பத்ரம் தே: கல்யாணத்தில் இளம் தம்பதிகட்கு பெரியோர்கள் அக்ஷதை சேர்த்து ஆசீர்வாதம் பண்ணுவதில்லையா? அதே போன்று ஜனகரும் மங்களம் உண்டாகட்டும் என ஆசீர்வதிக்கிறார் போலும்.

அல்லது திவ்ய தம்பதிகளின் சேர்த்தி அழகை ஸேவித்து மயங்கிப் பின்னர் தெளிந்து இச்சேர்த்திக்கு இடையூறு இல்லாமல் இருக்க வேண்டுமே என மங்களாசாஸனம் பண்ணுகிறாராம்.

உலகில் சிலர் கண் பட்டால் உடனே கேடு உண்டாவதைப் பார்த்திருக்கிறோம். இங்கு பல்லோர் இத் தம்பதிகளைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதாவதொரு விஷக்கண் பட்டால் என்ன தீமை உண்டாகுமோ எனப் பயந்து பத்ரம்தே என்று த்ருஷ்டி கழிக்கிறாராம்.

''இவள் ரொம்ப அதிருஷ்டக்காரி. இவள் கையைப் பிடிக்கும் உனக்கு எல்லா அத்ருஷ்டங்களும் (மங்களங்களும்) உண்டாகும்'' என்றாராம்.

ஜனகர் பகவத் பக்தரானபடியால் பெரியாழ்வாரைப் போன்று திவ்ய தம்பதிகளைக் கண்களாரக் கண்டு களித்து ''வடிவாய்நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு'' என மங்களா சாஸனம் பண்ணுகிறார் என்றும் கூறலாம்.



வாய் நல்லார் நல்லமறை யோதி மந்திரத்தால்
பாசிலை நாணற் படுத்துப் பரிதி வைத்துக்
காய்சினமா களிறன்னான் ''ஸீதையின்''
கைப்பற்றித் தீ வலம் செய்யும் காட்சி

பாணிக்ரஹணம்

பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா: இதுவரை இயம், ஸீதா, மமஸுதா, ஸஹதர்மசரீ என்று, பெண்ணினுடைய அழகு, உயர்வு, நற்குடிப் பிறப்பு, தர்மானுஷ்டானத்தில் ச்ரத்தை ஆகியவற்றை விரித்துப் பேசினார். இதைக் கேட்ட ராமன் இத்தகைய பெண்ணரசி கிடைத்தற்கு அரியன். இவளைப் பெற முன்பு பலர் முயன்று இருக்கிறார்கள். எனவே கல்யாணம் நிகழ்வதற்குள் ஏதாவது நிகழ்ந்தால் என்ன செய்வது? நாமோ க்ஷத்ரியன், காந்தர்வ முறையிலோ, ராக்ஷஸ விவாஹ முறையிலோ இவளை ஏற்று விரைந்து அயோத்திக்குச் சென்றுவிடலாம். இங்கு அதிக நேரம் தாமதிப்பது கூடாது என யோசிக்கிறான் போலும் என, பயந்த ஜனகர் 'ஸீதையின் கையை உமது கையால் பற்றிக் கொள்ளும். நானும் மந்த்ரபூர்வமாக தாரை வார்த்துக் கொடுக்கிறேன்' என விரைந்து கூறினார். ஏனெனில் இவளோ தாயில்லாப் பெண், பெற்ற தந்தையும் இல்லை. நீ அக்னி ஸாக்ஷியாகக் கையைப் பற்றி ஏற்றுக் கொண்டால் என் கடமையைச் செய்தவனாய் கவலையற்றிருப்பேன். காந்தர்வ முறையில் (ஒருவருக் கொருவர் காதலித்து மணப்பது) துஷ்யந்தனை மணந்த சகுந்தலைக்கு ஏற்பட்ட நிலை ஸீதைக்கும் நேர்ந்தால் என்ன செய்வது? ஊரார் பழி சொல்லுவார்களே என எண்ணிக் கையைப் பற்றும்படி கூறினார்.

கல்யாண காலத்தில் முதியோர்களாகிய ஸம்பந்திகள் மருமகப் பிள்ளையை பரிஹாஸம் செய்வதுண்டு. அம்முறையில் ''ராமா! ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து தேவியைப் பிரிந்து ரொம்ப நாளாயிற்றே. ப்ரணயத்தி னால், பிரிவாற்றாமையினால், நேர்ந்த ஊடலினால் அவள் காலையா பற்றப் போகிறாய்? வேண்டாம் வேண்டாம் இப்பொழுது ஸபையில் தனிமையில் இல்லை. காலைப் பற்றாதே! கையைப் பற்று'' என்று கூறி நகைத்தனராம்.

''கையைப் பற்று என்று தகப்பனார் சொன்னதும் பெண் கையை நீட்டினாலன்றோ நாம் பற்றலாம் என்றிராதே. அவள் தன் கையை நீட்டி உன் கையைப் பற்றத் தெரியாதவள். சிறுபெண் தானே! நீயே கையை நீட்டி அவள் கையைப் பற்றிக்கொள்''.

''இப்பொழுது கையாலே கையைப் பற்றுவீர். கைத்தலம் பற்றிய பிறகு நீ வலம் வரும்பொழுதல்லவா கையாலே காலைப் பற்றி அம்மி மிதிக்கச் செய்வது, அவசரப்படுவானேன்?''

''பாணிம் பாணினா க்ருஹ்ணீஷ்வ'' 'ஸீதையின் கையை உமது கையால் பிடியும்' என்றார். ஏன்? ஸீதை தன் கையால் பற்றினால் அவள் கை மேல் ஆகவும், ராமன் கை கீழாகவும் ஆகி விடுமாம். ராமனோ ''பாஹு சாயாம் அவஷ்டப்தா: யஸ்ய லோகா: மஹாத்மன:॥'' என்றபடி ராமன் ஜகத்காரண

மாயிருப்பவன். உபய விபூதி நாதன். உலகும் அதிலுள்ள ஜீவராசிகளும் அவனுடைய கை நிழலில் ஒதுங்கி வாழ்கின்றன. அவனது பராக்ரமத்தினால், பாஹுபலத்தினால் (கை வன்மையால்) தீயோர் களையப்பட்டு நல்லோர் வாழ்விக்கப்படுகின்றனர்.

''உத்தம அமர்த் தலம் அமைத்தது
ஓர் எழில் தனுவின் உய்த்த கணையால்
அத்திர வரக்கன் முடிபத்தும் ஒருகொத்து
என உதிர்த்த திறலோன்''

ஸ்ரீதேசிகன், அதிகாரஸங்க்ரஹம் - 44

என்று புகழப்படும் பராக்ரமசாலியான ராமன்கை தாழலாமா? ராமன் தன் கையால் பிடித்தால் கை தாழாது மேலே இருக்கும் அல்லவா?

எனவேதான் நம் பெரியோர்கள் தானமாகத் தம் பொருளைக் கொடுக்கும் போது தமது கையால் பொருளை எடுத்துக் கொடுக்க மாட்டார்கள். நம் கையால் கொடுத்தால் பொருளைப் பெறும்போது நம் கை மேலேயும், பொருளைப் பெறும் மஹான்களின் கை கீழேயும் இருக்கும். மஹான்களை உபசரிக்க அழைத்து, அவர்களைத் தாழ்த்துவது அபசாரம் (பிழை) ஆகும். எனவே நாம் கொடுக்கும் பொருளைத் தட்டில் (தாம் பாளத்தில்) வைத்துக் கொடுத்தால் பெறுபவர் கை மேலேயும் கொடுப்பவர் கை கீழேயும் இருக்கும். விவாஹமும் தானம் தானே! கன்யா தானமல்லவா! இதை மனதிற் கொண்டே ஜனகர் பாணிம் (ஸீதையின் கையை) பாணினா (உன் கையால்) பற்று எனக் கூறினாராம்! ராமனை இன்னார் என அறிந்த ஞானியல்லவா !

மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூத,
முத்துடைத் தாமம் நிறைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுஸூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

வாரணமாயிரம் - 6

என்று ஆண்டாள் கனவுகண்டபடி ஸீதையும் கனவுகண்டிருப்பாளே! இவள் கனவும் நனவு ஆக வேண்டுமே, அதற்காக உன் கையால் இவள் கையைப் பிடி என்றாராம்.

इयं सीता ममसुता सहधर्मचरी तव
प्रतीच्छचैनां भद्रंते पाणिं गृह्णीष्व पाणिना

இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்ம சரீதவ ।
ப்ரதீச்ச ச ஏனாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணினா ॥

வா.ரா.பால. - 73

என்று ராமன் ஏற்றுக்கொள்வதற்குரிய காரணங்களை விளக்கி ஜனகர் கூற ''உனது ஸௌபாக்யத்தின் பொருட்டு உனது கையைப் பற்றுகிறேன்'' என வேத மந்த்ரங்களைச் சொல்லிக் கொண்டே,

चक्राङ्केन सरोजाङ्कं सीतापाणिं स्वपाणिना
अरुणेनारुणं रामः जग्राह जगदीश्वरः

சக்ராங்கேன ஸரோஜாங்கம் ஸீதாபாணிம் ஸ்வபாணினா ।
அருணேன அருணம் ராம: ஜக்ராஹ ஜகதீச்வர: ॥

ஜகத்பதியான ராமன் சக்ரரேகையோடு கூடியதும், சிவந்ததுமான தனது கையினால் பத்ரரேகையோடு கூடியதும் சிவந்ததுமான ஸீதையின் கையைப் பற்றிக் கொண்டானாம்.

உடனே ஜனகரின் குலகுருவான சதானந்தர் ஸீதாதேவியின் ப்ரவரங் களைச் சொல்லத் தொடங்கினார்.

यजुर्वेदशाखाध्यायिनीं आङ्गिरस, आयास्य, गौतम त्रयार्षेय प्रवरान्वित गौतम गोत्रोद्भवां, चतुर्दशभुवनाधीश्वरीं अखिलाण्डकोटि ब्रह्माण्डनायिकां, तत्त्व स्वरूपिणीं, चन्द्रवंश प्रदीपिकां, शरणागत वत्सलां, वेदिगर्भोदितां पद्मालंकृतकर कमलां, कलहंसगामिनीं, इन्दी वरलोचनां दिव्य स्रग्वस्त्र भूषणां, हरिचन्दन लिप्त भुजान्तरां, विद्युत्प्रभां विशालाक्षीं, स्निग्ध कुञ्चित मूर्धजां, हंसांकितक्षौमेण किञ्चित्पीतेन संवृतां, वासितेनोत्तरीयेण सुरक्तेन सुसंवृतां जगन्मातरं, निमिवंशोद्भवां, स्वर्णरोममहाराज वर्मणः नप्त्रीं ह्रस्वरोम महाराज वर्मणः पौत्रीं, जनक महाराज वर्मणः पुत्रीं, श्रीसीतानाम्नीं, साक्षात् लक्ष्मीस्वरूपिणीं इमां कन्यां

யஜுர் வேதசாகாத்யாயினீம், ஆங்கிரஸ ஆயாஸ்ய கௌதம த்ர்யார்ஷேய ப்ரவாரான்வித கௌதம கோத்ரோத்பவாம், சதுர்தஶ புவனாதீஶ்வரீம், அகிலாண்டகோடி ப்ரம்ஹாண்ட நாயிகாம், தத்வஸ்வரூபிணீம், சந்த்ரவம்ச ப்ரதீபிகாம், சரணாகத வத்ஸலாம், வேதிகர்போதிதாம், பத்மாலங் க்ருத கரகமலாம், கலஹம்ஸ காமினீம், இந்தீவரலோசனாம், திவ்ய ஸ்ரக் வஸ்த்ர பூஷணாம், ஹரிசந்தன லிப்த புஜாந்தராம், வித்யுத்ப்ரபாம், விசாலாக்ஷீம், ஸ்நிக்தகுஞ்சித மூர்த்தஜாம், ஹம்ஸாங்கித க்ஷௌமேண கிஞ்சித் பீதேனஸம்வ்ருதாம். வாஸிதேன உத்தரீயேண ஸுரக்தேன ஸுஸம்வ்ருதாம், ஜகன்மாதரம், நிமிவம்சோத் பவாம், ஸ்வர்ணரோம மஹாராஜவர்மண: நப்த்ரீம், ஹ்ரஸ்வரோம

மஹாராஜவர்மண: பௌத்ரீம், ஜனக மஹாராஜ வர்மண: புத்ரீம், ஸ்ரீ ஸீதாநாம்னீம், ஸாக்ஷாத் லக்ஷ்மீ ஸ்வரூபிணீம் இமாம் கன்யாம்.

'யஜுர்வேதத்தை அத்யயனம் பண்ணியவரும், ஆங்கிரஸர் ஆயாஸ்யர் கௌதமர் முதலிய மூன்று ரிஷிகளைக் கொண்ட ப்ரவரத்தோடு கூடிய கௌதம கோத்ரத்தில் தோன்றியவளும், பதினான்கு உலகங்கட்கு ராணியும், கோடிக்கணக்கான அனைத்து அண்டங்களோடு கூடிய ப்ரம்ஹாண்டத்திற்கு நாயகியும், சேதன அசேதன தத்வங்களில் பரவியிருப்பவளும், சந்திர வம்சத்தை விளங்கச் செய்பவளும், அடைக்கலமாய்த் தன்னை அண்டியவர் களிடத்துப் பேரன்புமிக்கவளும், யாக வேதியினின்றும் தோன்றியவளும், தாமரை மலரைக் கையில் ஏந்தியவளும், அன்னம் போன்று நடையழகு உடையவளும், கருநெய்தல் போன்று கண்ணழகியும், தெய்விகமான மாலை, ஆடை, திருவாபரணங்களை அணிந்தவளும், மஞ்சளான சந்தனம் பூசிய திருமார்பினளும், மென்மையான மடிப்புடன் கூடிய கூந்தலை உடையவளும், இடுப்பில் அன்னக் கரை (பார்டர்) இட்ட வெளிர் மஞ்சளான பட்டாடையை உடுத்தியவளும், மணமூட்டிய செந்நிற மேலாடையைத் தரித்தவளும், ஜகன் மாதாவும், நிமி வம்சத்தில் தோன்றியவளும், பேரரசன் ஸ்வர்ணரோமவர்மாவின் கொள்ளுப் பேத்தியும், ஹ்ரஸ்வரோம மஹாராஜ ருடைய பேத்தியும், ஜனக மஹாராஜரின் புதல்வியும், ஸாக்ஷாத் மஹா லக்ஷ்மியின் அவதாரமுமான ஸ்ரீ ஸீதை எனும் கன்னிகையை' என்று சதானந்தர் கூற

உடனே ரகுகுல குலகுருவான வஸிஷ்டர் ஸ்ரீ ராமனின் ப்ரவரத்தைக் கூறலானார்.

यजुर्वेद शाखाध्यायिने, वासिष्ठ मैत्रावरुण, कौण्डिन्यत्रयार्षेय प्रवरान्वित वसिष्ठ गोत्रोद्भवाय, त्रिभुवनाधीशाय अखिलाण्डकोटि ब्रह्माण्ड नायकाय, तत्त्वातीताय, सच्चिदानन्दमूर्तये, सूर्यवंश पावनाय, अखिलजगदानन्द कारकाय, क्षीराब्धि वासिने, शरणागत वत्सलाय, कौसल्यानन्दवर्धनाय, ताटका ताटकेयान्तकाय, श्रीपादरेणु पालित गौतमकलत्राय, परमभागवतार्चिताय, खण्डीकृत त्रिपुर चापाय, साधुजन निवास वृक्षाय, लक्ष्मणाग्रजाय, श्रीवत्स कौस्तुभहार कनक केयूरादि दिव्याभरण भूषिताय, वैजयन्ती वनमाला शोभिताय, इक्ष्वाकुवंशोद्भवाय, नाभाग वर्मणः नप्त्रे, अजमहाराज वर्मणः पौत्राय, दशरथ महाराज वर्मणः पुत्राय, श्रीरामचन्द्र वर्मणे साक्षान्नारायण स्वरूपाय वराय

யஜுர் வேத சாகாத்யாயினே, வாஸிஷ்ட மைத்ராவருண கௌண்டின்ய த்ர்யார்ஷேய ப்ரவரான்வித வஸிஷ்ட கோத்ரோத்பவாய,

த்ரி புவனாதீஶாய, அகிலாண்டகோடி ப்ரஹ்மாண்ட நாயகாய, தத்வாதீதாய, ஸச்சிதானந்த மூர்த்தயே, ஸூர்ய வம்ச பாவனாய, அகில ஜகதானந்த காரகாய, க்ஷீராப்தி வாஸினே. சரணாகதவத்ஸலாய, கௌஸல்யானந்த வர்த்தனாய தாடகா தாடகேயாந்தகாய, ஸ்ரீபாதரேணு பாலித கௌதம களத்ராய, பரமபாகவத அர்ச்சிதாய, கண்டீக்ருத த்ரிபுரசாபாய, ஸாது ஜனநிவாஸவ்ருக்ஷாய, லக்ஷ்மணாக்ரஜாய, ஸ்ரீவத்ஸ-கௌஸ்துப-ஹார-கனக கேயூராதி திவ்யாபரண பூஷிதாய, வைஜயந்தீ வனமாலாசோபிதாய, இக்ஷ்வாகு வம்ஶோத்பவாய நாபாக வர்மண: நப்த்ரே, அஜமஹாராஜ வர்மண: பௌத்ராய, தசரத மஹாராஜ வர்மண: புத்ராய, ஸ்ரீ ராமசந்த்ர வர்மணே ஸாக்ஷாத் நாராயண ஸ்வரூபாய வராய,

''யஜுர் வேதத்தை அத்யயனம் பண்ணியவரும், வஸிஷ்டர் மைத்ரா வருணர் கௌண்டின்யர் ஆகிய ரிஷிகள் மூவரையும் கொண்ட ப்ரவரத்தோடு கூடின வஸிஷ்ட கோத்ரத்தில் அவதரித்தவரும், மூவுலகத் தலைவனும், கோடிக்கணக்கான அண்டங்களையுடைய எல்லா ப்ரஹ் மாண்டங்களுக்கும் நாயகனும், நாம் காணும் சேதன அசேதன தத்வங்களுக்கு மேம்பட்டவனும், ஸத், சித், ஆனந்த ஸ்வரூபனும், ஸூர்ய வம்சத்தைத் தூயதாக்கியவனும், உலகத்தினர் அனைவரையும் மகிழ்விப்பவனும், திருப்பாற் கடலுள் பையத் துயின்றவனும், சரணடைந்தவர்களிடம் பரிவு காட்டுபவனும், தாயாம் கோஸலைக்கு மேன்மேலும் மகிழ்வளிப்பவனும், தாடகைக்கும் அவள் மக்களுக்கும் யமனும், கௌதம முனிவரின் மனைவியாம் அஹல் யையைத் தனது திருவடித் துகள்களினால் காத்தவனும், பாகவதோத்தமர்களான மஹர்ஷிகளால் போற்றப்பட்டவனும், முப்புரம் எரித்தவனின் வில்லை இறுத்தவனும், நல்லோர்கட்கு புகலிடமாயுள்ளவனும், லக்ஷ்மணனுக்கு முன் தோன்றியவனும், ஸ்ரீவத்ஸமெனு மருவையும், கௌஸ்துப மணியையும், முத்து மாலையையும், தோள்வளைகளையும், அணிகலன்களாகக் கொண்ட வனும், வைஜயந்தீ மாலையையும் துளஸீ மாலையையும் அணிந்தவனும், மங்கள மூர்த்தியும், இக்ஷ்வாகு வம்சத் தோன்றலும், நாபாகவர்மாவின் கொள்ளுப் பேரனும், அஜமஹாராஜரின் பேரனும், தசரத சக்ரவர்த்தியின் புத்ரனும், ஸ்ரீமந் நாராயணனின் நேர் அவதாரமுமான ஸ்ரீ ராமசந்திரன் எனும் வரனின் பொருட்டு'', என்று வஸிஷ்டர் கூறியதும் ஜனகமஹாராஜா தாஸ்யாமி தாஸ்யாமி தாஸ்யாமி, கொடுப்பேன்; கொடுப்பேன், கொடுப் பேன் என்று உறுதிபடக் கூறினார்.

இவ்வாறாக தசரதர் கன்னியை வரிக்க, ஜனகர் வாக்தானம் பண்ண வரனாகிய ராமன் ஸீதையைக் கைத்தலம் பற்றினார், தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான். (க.ரா. கடிமண) இதுவரை தசரத ராமனாய், கோஸலை ராமனாய்த் திகழ்ந்தவன் இது போழ்து ஸீதா ராமனாக ஆனான்.

पतिव्रतामहाभागा छायेवानुगता सदा
इत्युक्त्वा प्राक्षिपद्राजा मन्त्रपूतं जलं तदा

பதிவ்ரதா மஹாபாகா சாயேவ அனுகதா ஸதா ।
இத்யுக்த்வா ப்ராக்ஷிபத் ராஜா மந்த்ரபூதம் ஜலம் ததா ॥

வா.ரா. பால. - 73

கோமகன்முன் சனகன் குளிர் நன்னீர்
பூமகளும் பொருளும் என நீ என்
மாமகள் தன்னொடும் மன்னுதி என்னாத்
தாமரையன்ன தடக்கையின் ஈந்தான்.

க.ரா.பால. - கடிமண.

கோமகன்: சக்ரவர்த்தித் திருமகன் ராமன், பொருளும்: பரம் பொருளான திருமால், மாமகள்: அழகிய மகளான ஸீதை.

ஜனகர் : ''ராமா! இவள் பதிவ்ரதை, கற்புக்கனலி. பெரும் பாக்யத்தை உடையவள், இவள் கை பிடித்ததினால் இனி நீ பெரும் பாக்யசாலியாகிறாய். நிழல் போல் உன்னையே பின்பற்றுபவள், (நம் நிழல் நாம் கிழக்கை நோக்கியிருக்கும்போது ஸூர்யோதய காலத்தில் நமக்குப் பின்னால் இருக்கும், மதியத்தில் நல்ல வெயில் உறைக்கும் பொழுது நிழல் நம்மோடு ஒன்றிவிடும். மாலையில் நமக்கு முன் புறத்தில் தோன்றி கடைசியில் மறைந்துவிடும். அதுபோல ஸீதையும் நீ காட்டிற்கு ஏகும் பொழுது ''அக்ரத: தே கமிஷ்யாமி ம்ருத்னந்தீ குச கண்டகான்'' என்றபடி முன்னே சென்று திருவடியில் குத்தக்கூடிய தர்பம் முள் செடி முதலியவற்றைத் தான் மிதித்து ராமன் காலில் குத்தாதவாறு செய்வாள். மத்தியில் பஞ்சவடியிலும், பின்னர் அரசாளும் போதும் மதியத்தில் வெயிலின் வெம்மை உறைக்கும் பொழுது நிழல் நம்மோடு ஒன்றி விடுவதுபோல், இவள் கஷ்ட காலத்திலும் உனக்கு உறுதுணையாக நிற்பாள். கடைசியில் மாலை நிழல் மறைவது போல் இவளும் நீ ஸரயூவில் மூழ்கி அவதாரத்தை முடித்துக் கொள்வதற்கு முன்பே பூமியில் நுழைந்து மறைந்து விடுவாள் என்பது தொனி.)'' என்று கூறி மந்திரங்களை ஓதி, ஜபிக்கப்பட்ட குளிர்ந்த நன்னீரைத் தாரையாக வார்த்து ஸீதையைத் தானமாகக் கொடுத்தார். மேலும் மஹாலக்ஷ்மியும் திருமாலும் போல அழகிய என் மகளோடும் நிலை பெற்று நீடூழி வாழ்வீராக என வாழ்த்தினார்.

साधु साध्विति देवानां ऋषीणां वदतां तदा
देवदुन्दुभिनिर्घोषः पुष्प वर्षो महानभूत् ॥

ஸாது ஸாது இதிதேவானாம் ரிஷீணாம் வததாம் ஸதா ।
தேவ துந்துபி நிர்கோஷ: புஷ்பவர்ஷ: மஹான் அபூத் ॥

வா.ரா. பால. - 73

வானவர் பூமழை மன்னவர் பொற்பூ
ஏனையர் தூவும் இலங்கு ஒளிமுத்தம்
தான்நகு நாள் மலர் என்ற இவை தம்மால்
மீன் நகுவானின் விளங்கியது இப்பார்.

க.ரா.பால. - கடிமன.

ஒளிமுத்தம்: ஒளிர்கின்ற முத்துக்கள், தான்நகு: தானே மலரும், மீன்: நக்ஷத்திரங்கள்.

ஸீதாராம பாணிக்ரஹண ஶுப முஹூர்த்த வேளையில் தேவர்களும் மஹர்ஷிகளும் நன்று, நன்று என்றனர். மற்றையோர் முத்துக்களை மகிழ்ச்சியினால் தூவினர். வந்திருந்த மன்னர்கள் பொன் மலர்களைத் தூவினர். இச்சுப வேளையில் மகிழ்ந்த மரங்கள் அனைத்தும் தாமாக மலர்ந்த மலர்களைத் தூவின. இதனால் நக்ஷத்திரங்களால் விளங்கும் வானம் போன்று பூமியும் விளங்கியதாம். மேலும் தேவர்கள் துந்துபி வாத்யங்களை முழக்கி மகிழ்ந்தனராம்.

இங்கு ஜனகர் ஸீதையைக் குறிப்பிடும் பொழுது ''இவள் நல்ல பதிவ்ரதை'' என்றார். கல்யாணம் பண்ணிக் கொடுத்ததும் மாமனார், ''மாப்பிள்ளை! நம்ம பெண் ரொம்ப பதிவ்ரதை'' என்றால் எவ்வளவு விரஸமாயிருக்கும்! பின் ஏன் சொன்னார்? பிற்காலத்திய பாதிவ்ரத்ய (கற்பு) விஷயத்தில் தான்! ராமன் ஸந்தேஹப்பட்டு இலங்கையில் அக்னி ப்ரேவசம் செய்யும்படி சொல்லப் போகிறார்; வண்ணான் வார்த்தையைக் கேட்டு காட்டுக்கு அனுப்பப்போகிறார். ரிஷியானபடியால் நடக்கப் போவதை அறிந்து பேசினார் என்று கொள்ள வேண்டும், மேலும் அனஸூயா மும்மூர்த்திகளைத் தன் கற்பினால் குழந்தையாக்கினவள்; நளாயினீ பதி சுச்ருகைஷ பண்ணியவள்; இவர்கள் இருக்க

अहल्या द्रौपदी तारा सीता मन्दोदरी तथा
प्रातःकाले स्मरेन्नित्यं महापातक नाशिनीः ॥

அஹல்யா த்ரௌபதீ தாரா ஸீதா மந்தோதரீ ததா ।
ப்ராத: காலே ஸ்மரேத் நித்யம் மஹாபாதக நாசினீ: ॥

என்று ஐவர்களை மாத்திரம் காலையில் நினைக்கும்படி சொல்வானேன்? இவர்கள் விஷயத்தில் தான் ஸந்தேஹம் (ஐயம்) ஏற்படுகிறது. அதைப் போக்கவே அவர்களைக் குறிப்பிட்டார்கள்.

ஸுந்தர காண்டத்தில் (24ம் ஸர்க்கம்) அரக்கிகளோடு பேசும் பொழுது ஸீதை தன்னை ''ஸூர்யனை ஸுவர்ச்சலை போலவும், இந்திரனை சசீ போலவும், வஸிஷ்டரை அருந்ததீ போலவும், சந்திரனை ரோஹிணீ போல

வும், அகத்தியரை லோபாமுத்ரை போலவும், ச்யவனரை ஸுகன்யா போலவும், ஸத்யவானை ஸாவித்ரீ போலவும், கபிலரை ஸ்ரீமதீ போலவும், ஸௌதாஸரை மதயந்தீ போலவும், ஸகரனை கேசினீ போலவும், நளனை தமயந்தீ போலவும் ராமனைப் பின் தொடர்பவள் யான்' என்கிறாள். இத்தகைய ஸீதையினிடத்தில் ஸந்தேஹம் ஏற்படும்போது அதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகச் சொன்னாராம்.

மஹாபாகா: ஸீதை பெரும் பாக்யவதீ, இவளை மணப்பதால் உனக்கும் பாக்யம் கிட்டும், ராமன் பதினோராயிரம் வர்ஷங்கள் ராஜ்ய பரிபாலனம் செய்ததில் பதினான்கு ஆண்டுகள் தான் வனவாஸம் செய்ய வேண்டியிருந்தது. இதுவும் லோகத்திற்கு பாக்யத்தை அளிக்க, ஸீதை ஏற்றபடி.

தனக்கு (ஜனகருக்கு) பிள்ளைகள் இல்லாததினால் மிதிலா ராஜ்யமும் உனக்குச் சேரும் பாக்யமும் ஏற்படும்.

மஹாபாகா: பிராட்டி திருமாலின் திருமார்பிலே வசிக்கிறாள், அவள் திருவடிகளாலே துகைக்கப்பட்ட மார்பு, திருமார்பு ஆயிற்று. அவள் துகைத்ததினால் தோன்றிய மருவைத்தான் ஸ்ரீ வத்ஸம் என்கிறோம். இதனால் எம்பெருமான் ஸ்ரீ வத்ஸன் எனப்படுகிறான். திருவரங்கனைத் துதிக்கும் போது ஸ்வாமி தேசிகன்:

श्रीवत्सेन प्रथितविभवं श्रीपदन्यासधन्यं

''ஸ்ரீ வத்ஸேன ப்ரதித விபவம் ஸ்ரீபதன்யாஸ தன்யம்

பகவத்யான ஸ்லோகம்

மத்யம் பாஹ்வோ: ''பரமனின் திருக்கைகட்கு இடையே உள்ள மார்பு ஸ்ரீ வத்ஸம் எனும் மருவினால் பெருமை பெற்றது மட்டுமன்றி, பிராட்டியின் திருவடிகள் பட்டதினால் பெரும் பேறு பெற்றதாகவும் ஆயிற்று'' எனப் பகர்வர். இவ்வாறு மஹா பாக்யவதீயான ஸீதை மஹாபதிவ்ரதையாகவும் தான தர்மங்களை அனுஷ்டிப்பதோடு உனது தர்மானுஷ்டானத்திற்கு உதவுபவளாகவும் இருப்பாள்'' என்றார்.

தம்பிகட்கும் திருமணம்

लक्ष्मणाऽगच्छ भद्रंते ऊर्मिलांउद्यतां मया
प्रतीच्छ पाणिं गृहीष्व माभूत् कालस्य पर्यय:
तमेव मुक्त्वा जनक: भरतं चाभ्यभाषत
गृहाण पाणिं माण्डव्या: पाणिना रघुनन्दन

शत्रुघ्नं चापि धर्मात्मा अब्रवीज्जनकेश्वरः
श्रुतकीर्तेर्महाबाहो पाणिं गृह्णीष्व पाणिना
सर्वे भवन्तः सौम्याश्च सर्वे सुचरित व्रताः
पत्नीभिस्सन्तु काकुत्स्थाः माभूत्कालस्यपर्ययः
जनकस्य वचः श्रुत्वा पाणिं पाणिभिरस्पृशन् ।

லக்ஷ்மண! ஆகச்ச பத்ரம்தே ஊர்மிளாம் உத்யதாம் மயா ।
ப்ரதீச்ச பாணிம் க்ருண்ஹீஷ்வ மாபூத் காலஸ்ய பர்யய: ॥
தம்ஏவம் உக்த்வா ஜனக: பரதம் ச அப்ய பாஷத ।
க்ருஹாண பாணிம் மாண்டவ்யா: பாணினா ரகுநந்தன! ॥
சத்ருக்னம் சாபி தர்மாத்மா அப்ரவீத் ஜனகேஶ்வர: ।
ச்ருதகீர்த்தே: மஹாபாஹோ! பாணீம் க்ருண்ஹீஷ்வ பாணினா ॥
ஸர்வே பவந்த: ஸௌம்யா: ச ஸர்வே ஸுசரித வ்ரதா: ।
பத்னீ பி: ஸந்து காகுத்ஸ்தா: மாபூத் காலஸ்ய பர்யய: ॥
ஜனகஸ்ய வச: ஶ்ருத்வா பாணிம் பாணிபி: அஸ்ப்ருசன் ॥
வா.ரா. பால. - 73.

உடனே ஜனகர் இளைய பெருமாளை அழைத்து ''லக்ஷ்மணா! முன்பே நிச்சயித்தபடி உனக்கு எனது புத்ரியாகிய ஊர்மிளையைக் கொடுக்கிறேன். அவள் கையைப் பிடித்து ஏற்றுக் கொள்வாயாக. தாமதிக்க வேண்டாம். சுபத்தை விரைந்து செய்ய வேண்டும்'' என்றார்.

[இலக்குவனுக்கு, பரதனுக்கு (மூத்தவனுக்கு) முன் பாணிக்ரஹணம் தகுமோ எனில், பின்னோதரர்கள் (ஒரே தாய்வயிற்றில் பிறவாதவர்கள்) ஆனபடியால் தோஷமில்லை என்பர்.]

பின்னர் பரதனைத் தம்பியின் பெண்களுள் மூத்தவளான மாண்டவியின் கையை பற்றிக் கொள்ளும்படியும், சத்ருக்னனிடம் ச்ருத கீர்த்தியின் பாணியைப் பற்றிக் கொள்ளும்படியும் கூறினார். (இங்கு ஜனகர் தம்பியின் பெண்களை ஏற்றுக்கொள்ளும்படி தன் ஸம்மதியைக் கூறினார். குசத்வஜரே பரத சத்ருக்னர்கட்கு தமது பெண்களைத் தாரை வார்த்துக் கொடுத்தார்.)

பின்னர் நால்வரையும் பார்த்து ''சீரிய முறையில் ப்ரஹ்மசர்யத்தை அனுஷ்டித்து வந்த நீங்கள் இனி தாமதிக்காது ராஜ கன்னிகைகளின் கைகளைப் பற்றித் தக்க மனைவியர்களோடு கூடியவர்களாக ஆகக் கடவீர்'' என்றதும், மணப் பெண்களின் கைகளைப் பற்றிக் கொண்டார்களாம்.

अग्निं प्रदक्षिणीकृत्य वेदिं राजानमेव च
ऋषीन् चैव महात्मानः सभार्याः रघुसत्तमाः

அக்னிம் ப்ரதக்ஷிணீ க்ருத்ய வேதிம் ராஜானமேவ ச ।
ரிஷீன் சைவ மஹாத்மான: ஸபார்யா: ரகுஸத்தமா: ॥

வா.ரா. பால. 73

வலங் கொடு தீயை வணங்கினர் வந்து
பொலம் புரி நூலவர் செய்பொருள் முற்றி
இலங்கொளி அம்மிமிதித்து எதிர் நின்ற
கலங்கலில் கற்பின் அருந்ததி கண்டார்.

க.ரா. பால. - கடிமணம்

பொலம் புரிநூல்: அழகிய முப்புரி நூலாலான காப்பு நாண். செய்பொருள்: சடங்குகள்

ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்னர்கள் ஸீதை, ஊர்மிளை, மாண்டவீ, ச்ருதகீர்த்தி ஆகியோரின் கைகளைப் பற்றிய பொழுது அங்குள்ளோர் சிலர் மத்தளம் கொட்டினார்கள். சிலர் வரிசங்கம் எடுத்து ஊதினர். நால்வரும் தம் மனைவியரின் கைகளைப் பற்றியவாறு ஹோமத்தீயை மும்முறை வலம் வந்தனர். அப்பொழுது ஹோமவேதியையும், தசரதரையும் ஜனகரையும் மஹாத்மாக்களான மஹர்ஷிகளையும் சேர்த்து வலம் வந்தனர். மேலும் அழகிய முப்புரி நூலாலமைந்த காப்பு நாண் கட்டிய செம்மையுடைய திருக்கையால் தத்தம் மனைவியின் தாளைத் தத்தம் கைகளால் பற்றி அம்மி மிதிக்கச் செய்து 'பிற புருஷர்களைக் கண்டால் கற்புநெறி வழுவாது, மனம் நெகிழாது இந்தக்கல் போல் மனம் யாண்டும் கலங்காது இருக்க வேண்டும்' என உணர்த்தினர். எடுத்துக்காட்டாக, எந்நிலையிலும் வஸிஷ்டரை விட்டுப் பிரியாது கற்பரசியாகத் திகழும் எதிரே அமர்ந்துள்ள, மன்னுயிர் யாவும் தொழ நிற்கும் அருந்ததியைக் காட்டிப் பார்க்கச் செய்தனர். அது போழ்து,

ஆர்த்தன பேரிகள், ஆர்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை, ஆர்த்தனர் வானோர்
ஆர்த்தன பல்கலை ஆர்த்தன பல்லாண்டு
ஆர்த்தன வண்டினம், ஆர்த்தன வேலை.

க.ரா. பால. - கடிமணம்

பேரிகள்: மங்கள வாத்யங்கள், பல்கலை: தர்ம சாஸ்த்ரங்கள், வேலை: கடல்.

ஸீதா கல்யாணம் லோக க்ஷேமத்தை விளைவிப்பதாதலால் மங்கள வாத்யங்கள் முழங்கின. கல்யாணத்தை உலகறியச் செய்ய சங்குகளும் முழங்கின. திவ்ய தம்பதிகளின் சேர்த்தியை ஸேவித்து மகிழ்ந்த நான்மறை யாளர்கள் வேதங்களை ஓதினர். ராவணபயம் நீங்கப் போவதை நினைத்து வானோர்கள் மகிழ்ச்சியினால் ஆரவாரம் செய்தனர். நன்னெறி புகட்டும் வேதங்களும் தர்ம சாஸ்த்ரங்களும் தம்மில் கூறிய நெறி வழுவாது தீயோரைக் களைந்தும் நல்லோரைக் காத்தும் வருகின்ற இராமனின் திருமணத்தைக்

கண்டு மகிழ்ந்து ஆரவாரம் செய்தனவாம். மகளிர் பல்லாண்டு பாடினர், இவர்கள் அணிந்துள்ள பூமாலைகளிலுள்ள தேனைப் பருக வந்த வண்டினங்கள் ரீங்காரம் செய்தன. கடலும் தன் வண்ணத்தை ஏற்றுத் தன் மீது சயனிக்கும் (படுக்கும்) பிரானின் திருமணத்தை அறிந்து பொங்கி மகிழ்ந்து ஆர்த்ததாம்.

பெரியோரை வணங்குதல்

கேகயன் மாமகள் கேழ் கிளர் பாதம்
தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கி
ஆய தன் அன்னை அடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாள் தொழலோடும்.

க.ரா. பால. - கடிமணம்.

கேழ்: ஒளி.

கல்யாணம் மங்களமாக இனிது பூர்த்தியாயிற்று. திருமண வேதியின் அருகில் அமர்ந்திருந்த தந்தை, மாமனார், வஸிஷ்டர், மஹர்ஷிகள் ஆகியோரை தம்பதியாக வணங்கி, பெண்கள் இருக்குமிடம் சென்றான் ஸீதா ராமன். அங்கு முதலில் கேகய மன்னன் மகளாகிய கைகேயியின் ஒளிரும் திருவடிகளில் தன் தாயினும் மிகுந்த அன்போடு தாழ்ந்து வணங்கினான்.* பின்னர் தன்னைப் பெற்ற தாயான கோஸலையின் திருவடி இணையைத் தன் தலைக்கு அணியாகச் சூடி ஸாஷ்டாங்கமாக வணங்கினான். பின் மனத் தூய்மையுடைய ஸுமித்திரையின் தாள்களில் வணங்கித் தாய்மார்களின் ஆசியைப் பெற்றான்.

வான்மீகி, இங்கு திருமணம் ஆனதும் உடனே யாரையும் வணங்கியதாக தெளிவாகக் கூறவில்லை. கம்பரோ தந்தையரை வணங்கியதைக் குறிப்பிடாது தாய்மார்களை வணங்கியதைக் குறிப்பிடுகிறார். ஏன்?

குறிப்பு: தன்னைப் பெற்றெடுத்த கோஸலையை அல்லவா முதலில் வணங்க வேண்டும்? பட்டத்து மூத்தராணி, தந்தைக்கு அடுத்தபடி தொழ வேண்டியவள், இவளைவிட்டு கைகேயியை முதலில் தொழுதது ஏன்? தாயை முதலில் வணங்கினால் சிறிய தாய் சிறிது உள்ளம் மாறுபடுவாள். உரிய தாயோ எவ்வழியிலும் பிரியமாவாள். 'அம்மா! நான் வந்த காரியத் திற்குத் துணையைச் சேர்த்துக் கொண்டேன். இனிமேல் நீ தான் கருணை புரிய வேண்டும். தாய் தந்தையரோ என்னை முடி மன்னன் ஆக்கி ஒரு அடியும் அகலாதபடி பந்தத்தில் ஆழ்த்தி விடுவர். நீ தான் என்னை வெளியேற்றி என் பிறப்பிற்கு (அவதாரத்திற்கு) ஒளி செய்ய வேண்டும்' என வணங்கி வேண்டிய படி.

भूप्रदक्षिण षट्केन काशीयात्राऽयुतेन च
सेतुस्नान शतैर्यच्च तत्फलं मातृवन्दने
न अन्नोदक समंदानं नद्वादश्याः परंव्रतम्
नगायत्र्याः परोमन्त्रः न मातुर्दैवतं परम्

பூ ப்ரதக்ஷிணஷட்கேன காமீயாத்ரா அயுதேன ச ।
ஸேது ஸ்நானமதை: யச்ச தத் பலம் மாத்ரு வந்தனே ॥
ந அன்னோதகஸமம் தானம் ந த்வாதச்யா: பரம் வ்ரதம் ।
நகாயத்ர்யா: பரோமந்த்ர: நமாது: தைவதம் பரம் ॥

தானங்களுள் சிறந்தவை அன்னதானமும் தீர்த்ததானமும்; வ்ரதங்களுள் சிறந்தது த்வாதசீவ்ரதம்; மந்த்ரங்களுள் சிறந்தது காயத்ரீ மந்த்ரம்; தேவதைகளுள் சிறந்தவள் தாய்.

ஆறு முறை பூப்ரதக்ஷிணம் செய்வதாலும், பதினாயிரம் தடவை காசியாத்திரை செய்வதாலும், நூறு தடவை ஸேது ஸ்நானம் செய்வதாலும் என்ன பலன் (புண்யம்) கிடைக்குமோ, அத்தகு பலனைத் தாயை வணங்குவதினால் அடையலாம், என ப்ரமாணங்கள் கூறுவதால் கம்பர் தாய் வணக்கத்தை நூலில் குறித்தார் போலும்.

திருக்கல்யாண மஹோத்ஸவம்

पुष्पवृष्टिर्महत्यासीत् अन्तरिक्षात् सुभास्वरा
दिव्य दुन्दुभिनिर्घोषैः गीतवादित्र निःस्वनैः
ननृतुश्चाप्सरस्संधाः गन्धर्वाश्चजगुःकलम्

புஷ்பவ்ருஷ்டி: மஹதீ ஆஸீத் அந்தரிக்ஷாத் ஸுபாஸ்வரா ॥
திவ்ய துந்துபி நிர்கோனஷ: கீதவாதித்ர நிஸ்வனை: ॥
நந்ருது: ச அப்ஸரஸ்ஸங்கா: கந்தர்வா: ச ஜகு: கலம்

வா.ரா. பால. - 73

நூற் கடல் அன்னவர் சொல்கடன் நோக்கி
மால் கடல் அன்ன மனத்தவளோடும்
கார் கடல் ஒப்பது ஓர் கருணைக்கடல் பண்டை
பாற் கடல் அன்னது ஓர் பாயல் அணைந்தான்

கடன்: முறைமை (கட்டளை), மால்: வேட்கை, கார்: கரிய, பாயல்: திருப்பள்ளி மெத்தை.

பங்குனி உத்தரம் ஆன பகல் போது
அங்க இருக்கினில் ஆயிரம் நாம
சிங்க மணத் தொழில் செய்த திறத்தால்
மங்கல அங்கி வசிட்டன் வளர்த்தான்

க.ரா.பால. - பரசுராமன்

இருக்கினில்: வேதத்தில் கூறியபடி, மணம்: விவாஹச்சடங்கு, அங்கி: அக்னி

ராகவஸிம்ஹனின் திருக்கல்யாண மஹோத்ஸவம் பங்குனி உத்திரத் தன்று நிகழ்ந்தது. தேவர்கள் என்றும் வாடாத கற்பக மலர்களை வானத்தி னின்றும் தூவிய வண்ணம் இருந்தனர். மேலும் வானத்திலே அப்ஸரஸ்ஸுக்கள் நாட்டியமாடினர். இதற்குச் சிலர் பதம் பாடினர். கந்தர்வர்கள் பாடி மகிழ்ந்தனர். துந்துபி வாத்யத்தை ஒலிக்கச் செய்து ஸீதா கல்யாணமானதை உலகினர்க்கு அறிவித்தனர். வஸிஷ்டர் ஆயிரம்பேரானுக்குத் திருமணச் சடங்குகளை வேத விதிப்படி அக்னியில் ஹோமம் செய்து முடித்தார். இதே போன்று மற்ற மூவருக்கும் நிகழ்ந்தது. பின்னர் நான்கு தம்பதிகளும் தாய் தந்தையரோடும் சுற்றத்தோடும் முன்பு தங்கிய இடத்திற்கு வந்தனர். கருங்கடல் போன்று அருட்கடலான ராமபிரானுக்கு அன்றைய இரவில் ப்ரவிச்ய ஹோமத்தைத் தர்ம சாஸ்த்ரங்களிற் கூறிய நியமப்படி வஸிஷ்டர் நடத்திவைத்தார். விவாஹத்திற்கான அக்னி இருக்குமிடத்தில் தான் திருமணத்

தம்பதிகள் ஶேஷ ஹோமம் முடியும்வரை, இருக்க வேண்டும். ஐந்து நாள் கல்யாணம், இந்த ஐந்து நாட்களும் சேர்ந்து வாழ்வதால் இதுவரை அறிமுகம் ஆகாத ராமனிடத்தில் ஸீதைக்கு வேட்கை (ஆசை) தோன்றியதாம். இவ்வாறாக ஐந்து நாட்களும், திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட அனந்தாழ்வான் போன்று வசதி படைத்த திருமாளிகையில் ஸீதாராம தம்பதிகள் தங்கியிருந்தபடி.

இன்று ஐந்து அல்லது ஐம்பது நிமிடங்களில் கல்யாணம். அன்றோ ஐந்து நாட்களில், முதல் நாள் இரவில் ப்ரவிச்யஹோமம் நடக்கும். அது தொடங்கி சேஷ ஹோமம் வரை பிள்ளை வீட்டார் தங்குமிடத்தில் செய்வர், ஒரு நாள் ஹோமம் நடக்கும் வேதிக்கு ஸீதாராம தம்பதிகள் வந்து விட்டார்கள். ஜனகரோ, தசரதரோ, கௌஸல்யையோ, புரோஹிதர் வஸிஷ்டரோ வந்து சேரவில்லை. வாய்ப்பு கிட்டியது தம்பதிகட்கு, ராமன் ''ஸீதே! உன் வதனத்தின் அழகு'' எனத் தொடங்குகிறான். ஸீதைக்கோ வெட்கம், அச்சம், யாராவது வந்து விட்டாலோ என்று, கணவனோடு பேச இரண்டையும் மீறி ஆசை. புருஷனைப் பார்க்கத் தூண்டுகிறது. அப்பொழுது, ராமன் பேசியதை ஒலிப்பதிவு செய்கிறார் ஹனுமன் நாடகக்காரர்.

वदनममृत रश्मिं पश्य कान्ते ! तवोर्व्यां
अनिलतुलन दण्डेनास्य वार्धौ विधाता
स्थित मतुलय दिन्दुः खेचरोऽभूल्लघुत्वात्
क्षिपति च परिपूर्त्यै तस्य ताराः किमेताः

வதனம் அம்ருதரச்மிம் பச்ய காந்தே! தவ உர்வ்யாம்
அனில துலன தண்டேன அஸ்ய வார்தௌ விதாதா ।
ஸ்த்திதம் அதுலயத் இந்து: கேசர: அபூத் லகுத்வாத்
க்ஷிபதி ச பரிபூர்த்யை தஸ்ய தாரா: கிம் ஏதா: ॥

ஹநுமன் நாடகம்

''காந்தே!—அன்பே! படைப்பவனாகிய நான்முகன் மிதிலையிலுள்ள உனது திருமுகத்தையும், திருப்பாற்கடலில் தோன்றிய சந்திரனையும் குணத்தினாலும், அழகினாலும் ஒப்பிட்டுப் பார்க்கிறான். சீர்தூக்கிப் பார்த்து உண்மையை ஒப்புக் கொள்ள மனமில்லை போலும். உடனே வாயுவாகிற துலாக்கோலில் இரு முனைகளிலும் தட்டுக்களைக் கட்டித் தொங்கவிட்டு பூமியில் உன் முகத்தையும் வானத்தில் சந்திரனையும் வைத்து நிறுத்தான், சந்திரனுள்ள தட்டு வானத்தினின்றும் கீழே இறங்கவில்லை. உனது குணத்தின் உயர்வும், அழகின் பெருமையும் கனத்தினால் தட்டைக் கீழே அழுத்துகிறது. உன்னை விட குணத்திலும் அழகிலும் உயர்வினை, பெருமையினை இழந்த சந்திரன் (தட்டு) மேலேயே நின்றது. சந்திரனை உனக்கு சமமாக ஆக்க எண்ணி அச்விநீ, பரணி முதலிய நக்ஷத்திரங்களை ஒவ்வொன்

றாக சந்திரன் தட்டில் போட்டுப் பார்த்தார். ஆயினும் முயற்சி பலிக்க வில்லை. ஸீதே அழகெலாம் ஒருங்கே திரண்ட அழுத்தம் பொழியும் உன் முகம் எங்கே! தன்னிடையே மாசைப் பெற்ற சந்திரன் எங்கே!''

रमण चरणयुग्मं तावकं भावयित्वा
मधुर गिरमुदारं रामदासी ब्रवीमि
कृतमपि गुरु धात्राऽऽस्वाद्य निर्णीयतां मे
वदन ममृतरश्मेः मण्डलं वा प्रियेण ॥

ரமணா! சரணயுக்மம் தாவகம் பாவயித்வா
மதுரகிரம் உதாரம் ராமதாஸீ ப்ரவீமி ।
க்ருதமபி குரு தாத்ரா ஆஸ்வாத்ய நிர்ணீயதாம் மே
வதனம் அம்ருதரச்மே: மண்டலம் வா ப்ரியேண ॥

ஹனுமன் நாடகம்

ஸீதை: ''நாதா! (அழகனே!) உமது திருவடித்தாமரைகளை எனது மனதில் இருத்தி அடியாளும் இனிதாக ஒரு வார்த்தையைச் சொல்ல அனுமதியுங்கள். நான்முகன் எனது வதனத்தைச் சிறப்பாகவும், சந்திர மண்டலத்தைச் சிறிது குறைவாகவும் படைத்திருக்கலாம். எனினும் தீர்ப்புச் சொல்லப் புகுந்த எனதன்புக்குரிய தாங்கள் இரண்டையும் சுவைத்துப் பார்த்தன்றோ தீர்ப்புச் சொல்ல வேண்டும்'' என்றாள்.

ते चतुर्थसहिताः त्रयो बभुः सूनवोनववधूपरिग्रहाः
सामदानविधिभेद निग्रहाः सिद्धिमन्त इवतस्य भूपतेः ॥

தே சதுர்த்த ஸஹிதா: த்ரய ப ஸூனவ: நவவதூ பரிக்ரஹா: ।
ஸாம, தானவிதி பேத நிக்ரஹா: ஸித்திமந்த: இவ தஸ்ய பூபதே! ॥

ता नराधिपसुताः नृपात्मजैः ते च ताभि रगमन्कृतार्थताम्
सोऽभवद्वरवधू समागमः प्रत्ययः प्रकृति योगसन्निभः

தா: நராதிப ஸுதா: ந்ருபாத்மஜை: தே ச தாபி: அகமன் க்ருதார்த்தாம் ।

ஸ: அபவத் வரவதூ ஸமாகம: ப்ரத்யய ப்ரக்ருதி யோகஸந்நிப: ॥

காளிதாஸன், ரகுவம்சம் - 11

தசரத ராஜ குமாரர்களாகிய நால்வரும் மணப் பெண்களை மணந்து திகழ்ந்தனர். இது தசரதருக்கு அரசியலில் ஓர் வெற்றி போல் இருந்ததாம். அரசர் தம் நாட்டை ஸாமம், தானம், பேதம், தண்டம் எனும் நான்கு வகை உபாயங்களைக் கொண்டு ஆண்டு, ஆட்சியில் வெற்றியைப் பெறுகிறார்.

அதாவது நாட்டின் பகையை நல்லுரையினாலோ, சிறிது கொடையினாலோ, பகையின் நண்பர்களைப் பிரித்துவிடுவதினாலோ, இம் மூன்றிலும் முடியா விடில் அடித்து வெற்றி வாகை சூடுவதினாலோ நாட்டினர்க்கு நன்மையைச் செய் கிறார். இங்கு குமாரர்கள் நால்வரும் நான்கு உபாயங்கள். குமாரர் களாகிய நான்கு உபாயங்களும் பயன்களைப் (மணமக்களை) பெற்றன போலும்.

நிற்க, சொற்களை ப்ரக்ருதி (பகுதி) ப்ரத்யயம் (விகுதி) எனப் பிரிப்பர். ஒன்றை விட்டு ஒன்றினால் பொருளின் முழுமையைப் பெற முடியாது. பகுதி விகுதியின் உதவியினால் பயனை நல்ல பொருளைப் பெறுவது போல் குமாரர்கள் நால்வரும் மணப்பெண்கள் நால்வரையும் பெற்ற க்ருதார்த்தர்களாக, குலம் சீலம் வயது அழகு இவற்றைப் பெற்ற பயனை அடைந்தவர்களாக ஆனார்களாம். இவர்களின் தாம்பத்ய ஸம்பந்தம் பகுதி விகுதிகளின் சேர்க்கை போன்று ஒருவரோடு ஒருவர் இணைந்து செயல்படும் தன்மையை உணர்த்தியபடி.

த்ருஷ்டி பரிஹாரம்

(நாம் கேட்ட ஒரு பௌராணிகரின் கற்பனைக் கூற்று.)

கல்யாணம் நல்ல முறையில் நடந்துவிட்டால் த்ருஷ்டிபரிஹாரத்திற் காக—கண்ணெச்சில் படாமைக்காக ஒரு குழப்பத்தைத் தோற்றுவித்துப் பரிஹாஸம் பண்ணும் வழக்கம் உண்டு.

ஸீதா கல்யாணத்தன்று த்ரிலோக ஸஞ்சாரியான நாரதர் நேரே இலங்கைக்குச் சென்று ராவணனைப் பார்த்துப் பேசினார்: ''ராவணா! உன்னால் சிவதனுஸ்ஸை நாணேற்ற முடியவில்லை. சிறுவன் ராமன் வில்லை எடுத்தான், வளைத்தான், வில்லும் ஒடிந்தது. எனவே வில்லிறுத்த ராமனுக்கு இன்று ஸீதையைத் திருமணம் செய்து வைக்கப் போகிறார்கள். இப்பொழுது நீ என் சொற்படி நடந்தால் ஸீதையை நீயே பெறலாம்'' என்றார்.

ராவணன்: ''தாங்கள் சொல்லி நான் கேட்காமலிருப்பேனா? அவச்யம் செய்கிறேன் கூறுங்கள்'' என்றான்.

நாரதர்: ''நீ உடனே ராமன் வேடத்தில் மிதிலைக்குச் செல். தெற்குக் கோட்டை வாயிலின் வழியாக உள்ளே செல். காலை சரியாக 7 மணிக்கு எதிரே ஸீதை வருவாள். ராமன் போல் பேசிக் கொண்டே ஸீதையைத் தூக்கிக் கொண்டு வந்துவிடலாம்.''

ராவணன்: ''அப்படியானால் தாங்களும் என்னோடு கூட வாருங்கள். நீர் பக்கத்திலிருந்தால் ஸீதையும் நம்புவாள். சந்தடியின்றி எளிதாகத் தூக்கிக் கொண்டு வந்துவிடுவேன்.''

நாரதர்: ''நான் வரமுடியாது. வேறு வேலையிருக்கிறது. விடை பெறு கிறேன்'' என்று கூறி வான வீதியில் புறப்பட்டார். நேராக தண்டகாரண்யம் சென்று சூர்ப்பணகையைச் சந்தித்தார். மிதிலையில் நிகழ்ந்த விஷயத்தைச் சொல்லி ''ராமன் கட்டழகன், அவனுக்கு ஸீதை ஏற்றவளல்லள். நீ ராமனை மணக்க விரும்பினால் நேராக மிதிலைக்குச் செல். ஸீதை வேடம்தரித்துச் சரியாக காலை ஏழு மணிக்கு வடக்குக் கோட்டை வாயிலின் வழியாக உள்ளே செல். எதிரே ராமன் வருவான். அப்படியே அவனைத் தூக்கிக் கொண்டு தண்டகம் வந்து சேர். பின்னர் அவனையே (ராமனையே) திருமணம் செய்து கொள்ளலாம்'' என்றார்.

இருவரும் நாரதர் சொன்னபடி குறித்த நேரத்தில் உள்ளே நுழைந்தனர். (ராவண) ராமன் (சூர்ப்பணகா) ஸீதையைத் தூக்கிக் கொண்டு வானத்தில் விரைந்து வந்தான். அப்பொழுது ''ஸீதை மனிதப் பெண்தானே, ஏன் இவ்வளவு கனக்கிறாள்'' என எண்ணினான். அப்பொழுது வந்த தேவர்கள் இவர்களை அடையாளம் கண்டு கொண்டு ''அண்ணனுக்கும் தங்கைக்கும் கல்யாணம், வைபோகமே'' என்று கூறிக் கைகளைத் தட்டிப் பரிஹாஸம் செய்தனர். இருவரும் ஒருவர் முகத்தை மற்றொருவர் உற்று நோக்கினர். ''அண்ணா! ராவணா! நீயா'' என்றாள் சூர்ப்பணகை, உடனே அவளைத் தொப்பென்று கீழே போட்டான் ராவணன். ''இருவரும் ஏமாந்தோமே, அந்த நாரதர் எங்கே?'' என்றார்கள். யார் கண்டார் அவரை. நாரதர் முகவரி யாருக்குத்தான் தெரியும்? எங்கே போனாரோ?

अथ रात्र्यांव्यतीतायां विश्वामित्रो महामुनिः
आपृष्ट्वा तौ च राजानौ जगामोत्तरपर्वतम्

அத ராத்ர்யாம் வ்யதீதாயாம், விஸ்வாமித்ர: மஹாமுனி: ।
ஆப்ருஷ்ட்வா தௌச ராஜானௌ ஜகாம உத்தரபர்வநம் ॥

வா.ரா. பால. - 74

திருமணம் இனிது பூர்த்தியாக, அன்று இரவு அங்கேயே தங்கி மறுநாட் காலை விஸ்வாமித்ரர் இரு அரசர்களிடமும் விடை பெற்றுத் தவம் புரிய ஏற்ற இமயத்தை நோக்கி விரைந்து சென்றார். ராமனுக்கு அஸ்த்ர, பலா, அதிபலா, சஸ்த்ரங்களையும், கொடுப்பேன், கலியாணம் பண்ணி வைப்பேன் என முதலிலேயே முனிவர் சொல்லியிருந்ததால், மேள தாளத்தோடு தடையின்றி ராமாதிகளைக் கொடுத்திருப்பார் தசரதர். ஆனால் ப்ருவதே ஹி பலேன ஸாதவ: நது கண்டேன நிஜோபயோகிதாம், ஸாதுக்கள் விளையப் போகும் பயனைக் கொண்டுதான் பேசுவார்களே ஒழிய, தான் நல்க இருக்கும் உதவிகளை வாய் திறந்து பேசமாட்டார்கள்.

ப்ராஜாபத்ய விவாஹம்

ராமன் செய்து கொண்ட கல்யாணம் சாஸ்த்ர ஸம்மதம் ஆகுமா என்பதில் சிலருக்கு ஐயம், ஏனெனில் ''வீர்ய சுல்காம் மம ஸுதாம்'' என்று ஜனகர் பேசியதில் பிள்ளை தரப்பிலிருந்து வீர்ய சுல்கத்தைப் பெற்றுக் கொண்டு ஜனகர் பெண்ணைக் கொடுத்ததாகத் தெரிகிறது. இது சிறப்புடையதாகாது, என்பர் சிலர். எனவே இங்கு விவாஹத்தைப் பற்றிச் சிறிது விளக்குவோம்.

கல்யாணங்கள் 8 வகைப்பட்டன.

ब्राह्मो दैवः तथैवार्षः प्राजापत्य स्तथाऽसुरः ।
गान्धर्वोराक्षसश्चैव पैशाश श्चाष्टमोऽधमः ॥

ப்ராம்ஹோ தைவ: ததை வார்ஷ: ப்ராஜாபத்ய: ததாஆஸுர: ।
காந்தர்வ: ராக்ஷஸஶ்சைவ பைஶாஶஶ் ச அஷ்டம: அதம: ॥

1.ப்ராம்ஹம், 2. தைவம், 3. ஆர்ஷம், 4. ப்ராஜாபத்யம், 5. ஆஸுரம், 6. காந்தர்வம், 7. ராக்ஷஸம், 8. பைசாசம் என்று விவாஹம் எட்டு வகைப்படும்.

1. **ப்ராம்ஹம்:** வேதாத்யயனம் பண்ணியவனும், பண்புடையவனும் ஆகிய ஒருவனை, தன் இல்லத்திற்கு அழைத்து நல்லாடை கொடுத்து உடுக்கச் செய்து சந்தனாதிகளால் உபசரித்துத் தனது கன்னிப் பெண்ணைக் கொடுப்பது.

2 **தைவம்:** யாகங்களில் ரித்விக்காக இருந்து சுறுசுறுப்பாக நல்ல முறையில் யாக கார்யங்களைச் செய்யும் ஒருவனுக்கு ஆடை ஆபரணங் களால் அழகூட்டித் தன் பெண்ணைத் தானமாகக் கொடுப்பது.

3. **ஆர்ஷம்:** பெண்ணின் தகப்பனார் மணமகனிடமிருந்து பசுக்களை யும் காளைகளையும் (செல்வத்தை) பெற்றுக் கொண்டு தன் பெண்ணை மணம் செய்து கொடுப்பது.

4. **ப்ராஜாபத்யம்:** நீங்கள் இருவரும் சேர்ந்து நல்லறப் பணிகளைச் செய்வீர்களாக! தர்மங்களை அனுஷ்டிப்பீர்களாக! என்று கூறி உபசரித்து வரனுக்குப் பெண்ணை அளிப்பது.

5. **ஆஸுரம்:** மணப் பெண்ணுக்கும், இவளுடைய உறவினர்கட்கும் தனத்தைக் கொடுத்து மகிழ்வித்து, தான் விரும்பிய பெண்ணைப் பெறுவது.

6. **காந்தர்வம்:** பெரியோர்களின் தொடர்பின்றி ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் காதலித்து மனம் ஒப்பிச் சேர்வது.

7. **ராக்ஷஸம்:** தான் விரும்பிய பெண்ணை அவளுக்கோ, அவள் தாய் தந்தையருக்கோ, உறவினர்கட்கோ விருப்பமில்லாவிடினும் அடித்தோ, உதைத்தோ எதிர்ப்பைச் சமாளித்துப் பெண் அழுதாலும், அலறினாலும் பலாத்காரமாக வீட்டினின்றும் கடத்திச் சென்றுப் பெறுவது.

8. **பைஶாசம்:** பெண் தனிமையில் தூங்கும் பொழுதோ, மனம் கலங்கி ஸ்வாதீனமில்லாமல் பைத்தியம் போன்று இருக்கும் பொழுதோ அவளை விரும்பி அடைவது. இது மிக மட்டமானதாகும்.

இந்த எட்டு வகை விவாஹங்களில் ஸீதாராம கல்யாணம் எதிலும் சேராது.

ராமனை அழைத்து ஸீதையை கொடுக்காததால் ப்ராம்ஹம் அன்று. ராமன் க்ஷத்திரியகுலத்தவன். யாகத்தில் ரித்விக்காகப் பணிபுரிய உரிமை யில்லை; எனவே தைவமும் அன்று. ''வீர்ய சுல்கா மமஸுதா'' என்றபடி ராமனின் வில்லிறுத்த வீர்யத்திற்காக ஸீதையைக் கொடுப்பதாகக் கூறிய படியால் ப்ராஜாபத்யமும் அன்று. ஜனகருக்குப் பணத்தைக் கொடுத்து ஸீதையைப் பெறாதபடியால் ஆஸுரமும் அன்று. ராமனும் ஸீதையும் காதலித்துப் பிறர் அறியாது மணந்து கொள்ளாதபடியால் காந்தர்வ விவாஹமு மன்று. அடிதடிகளால் பயமுறுத்தி, பலாத்காரமாக ஸீதையை ராமன் பெறாதபடியால் ராக்ஷஸ விவாஹமும் அன்று. தூக்கத்திலோ, மயங்கி இருந்த காலத்தோ ஸீதையைக் கொள்ளாத படியால் பைஶாசமும் அன்று. எனவே ராமஸீதா விவாஹம் முறையற்றது எனச் சிலர் கூறுவர், இது தவறு.

''இயம் ஸீதா மமஸுதா ஸஹதர்மசரீ தவ'' என்று ஸீதையைக் கைப்பிடித்து 'ஏற்றுக்கொள்' என்று கொடுக்கும் பொழுது ''ஸஹதர்ம சரீதவ'' உனக்கு உடன் இருந்து தர்ம கார்யங்களைச் செய்பவள் என்று கூறியபடியால் இது ப்ராஜாபத்ய விவாஹமேயாகும். ஆச்வலாயனர், கௌதமர், மனு, போதயனர் போன்ற மஹர்ஷிகள் ''நீங்கள் இருவரும் அறப்பணிகளை (தர்ம கார்யங்களை)ச் செய்யுங்கள்'' என்று கூறிக் கொடுப்பது ப்ராஜாபத்ய விவாஹம் எனத் தத்தம் நூல்களில் கூறியுள்ளனர்.

''வீர்ய சுல்காம் மம ஸுதாம்'' என்பது சுல்கமாக ஒன்றைப் பெற்றுக் கொண்டு ஸீதையைக் கொடுத்ததாகப் பொருள் அன்று. பெண்ணைப் பெற்றவர் எவரும் சிறந்தவரனைத் தேடித்தான் பெண்ணைக் கொடுப்பர்.

विद्यया ब्राह्मणः श्रेष्ठः वीर्येण क्षत्रियः स्मृतः
वैश्यस्तु धान्यधनतः शूद्रश्चैव तु जन्मतः

வித்யயா ப்ராஹ்மண: ஶ்ரேஷ்ட: வீர்யேண க்ஷத்ரிய: ஸ்ம்ருத: ।
வைஶ்யஸ்து தான்யதனத: சூத்ர: சைவது ஜன்மத: ॥

கல்வியினால் அந்தணனும், வீர்யத்தினால் க்ஷத்ரியனும், தான்யத்தினாலும், தனத்தினாலும் வைச்யனும், பிறப்பினால் சூத்ரனும் சிறந்தவர்கள் எனும் வசனத்திற்கேற்ப க்ஷத்ரியர்களுள் சிறந்தவனை மணமகனாக, தானே தேர்ந்தெடுக்கவில்லை. நாணேற்றுவதைக் கருவியாக (ஸாதனமாக) வைத்துத் தேர்ந்தெடுத்தாரே ஒழிய ராமனிடம் ஒரு பொருளைப் பெற்றுக் கொண்டு ஸீதையைக் கொடுத்தார் என்பது அச்சொல்லுக்குப் பொருளன்று.

सप्तावरे महाघोरे निरये काल साह्वये
स्वेद मूत्रं पुरीषञ्च तस्मिन् मूढः समश्नुते ॥

ஸப்தாவரே மஹாகோரே நிரயே காலஸாத்பயே ।
ஸ்வேதம் மூத்ரம் புரீஷம் ச தஸ்மின்மூட: ஸமஶ்னுதே ॥

எவனொருவன் தன் பிழைப்பிற்காக வரனிடமிருந்து தனத்தைப் பெறுகிறானோ,* அவனும் ஏழு தலைமுறையினரும், வியர்வை, மல மூத்ராதிகளை உட்கொண்டு நரகத்தில் துன்புறுவர் என்று சொல்லப்படுகிறது. இவ்வளவு தடுக்கப்பட்ட இழி செயலை ஜனகர் செய்தார் என்றால் யாராவது நம்புவார்களா?

எனவே ஸீதாராம விவாஹம் ஶாஸ்த்ர ஸம்மதமான ப்ராஜாபத்ய விவாஹமே, முதல் நான்கு விவாஹங்களில் தான் தாரைவார்த்துப் பெண்ணைக் கொடுப்பது. இவையே சிறந்த திருமணங்களாகும், இவற்றுள்ளும் பிந்தியதை விட முந்தியதே மிகச் சிறந்ததாம்.

विश्वामित्रे गते राजा वैदेहं मिथिलाधिपम्
आपृष्ट्वाऽथजगामाशु राजा दशरथ पुरीम्
अथ राजा विदेहानां ददौ कन्या धनं बहु
गवांशतसहस्राणि बहूनि मिथिलेश्वरः
कम्बलानाञ्च मुख्यानां क्षौमान् कोटचम्बराणि च
हस्त्यश्वरथ पादातं दिव्य रूपं स्वलंकृतम्

குறிப்பு: வரன் வீட்டாரிடமிருந்து பெண்ணுக்கு அலங்காரமாகக் கொடுக்கப்படும் அணிகளைப் பெறுவது குற்றமன்று, தன் பிழைப்புக்காகப் பெறுவதே குற்றமாகும். இக்காலத்தில் தன் பிழைப்புக்காக வரன் வீட்டார் பெண் வீட்டாரை நிர்பந்தித்துச் செல்வத்தைக் கோருவதும், பெறுவதும், கணவனின் கொடுமையைப் பொறாது மணமான பெண்கள் உயிர் துறப்பதும், வாழ்க்கையின் அங்கமாகி விட்டது. இத்தகையோர் பின்னால் வரும் நரகவேதனையைச் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

ददौ कन्यापिता तासां दासीदासमनुत्तमम्
हिरण्यस्य सुवर्णस्य मुक्तानां विद्रुमस्य च
ददौ परम संहृष्टः कन्याधनमनुत्तमम् ॥

விஶ்வாமித்ரே கதே ராஜா வைதேஹம் மிதிலாதிபம் ।
ஆப்ருஷ்ட்வா அத ஜகாமாஶு ராஜா தசரத: புரீம் ॥
அத ராஜா விதேஹானாம் ததௌ கன்யா தனம் பஹு ।
கவாம் ஶதஸஹஸ்ராணி பஹூனி மிதிலேஶ்வர: ॥
கம்பலானாம் ச முக்யானாம் க்ஷௌமான் கோட்யம்பராணிச ।
ஹஸ்த்யச்வ ரத பாதா தம் திவ்யரூபம் ஸ்வலங்க்ருதம் ॥
ததௌ கன்யாபிதா தாஸாம், தாஸீ தாஸம் அனுத்தமம் ।
ஹிரண்யஸ்ய ஸுவர்ணஸ்ய முக்தானாம் வித்ருமஸ்ய ச ॥
ததௌ பரம ஸம்ஹ்ருஷ்ட: கன்யாதனம் அனுத்தமம் ॥

வா.ரா, பால. - 74

விஶ்வாமித்ர முனிவர் ராஜகுமார தம்பதிகளை ஆசீர்வதித்துப் புறப்பட்டுச்சென்றதும், தசரதரும் ஜனகரிடம் விடைபெற்று அயோத்திக்குப் புறப்பட்டார். அப்பொழுது மிதிலை அரசரான ஜனகர் கன்யாதனமாக நிறைய செல்வத்தைக் கொடுத்தார். மேலும் பல லக்ஷம் பசுக்கள், கம்பளங்கள், பட்டு வஸ்த்ரங்கள், ஆடைகள், நல்லணிகளால் அலங்கரிக்கப்பட்ட தேர்ப்படை, யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை, ஆண் பெண் பணியாட்கள், தங்கம், வெள்ளி, முத்துக்கள், பவழங்கள் ஆகியவற்றைச் சீர்வரிசையாக மகிழ்ச்சியுடன் கொடுத்தனுப்பினார்.

பரசுராமர் வருகை

தன் மக்களும் மருமக்களும் நனி தன் கழல் தழுவ
மன் மக்களும் அயல் மக்களும் வயின் மொய்த்திட மிதிலைத்
தொல் மக்களும் மனம் உக்கு உயிர் பிரிவு என்பது ஓர் துயரின்
வன்மை கடல்புக, உய்ப்பதோர் வழிபுக்கனன் மறவோன்.

க.ரா. பால. - பரசுராமர்

மன் மக்கள்: பிற ராஜகுமாரர்கள், அயல் மக்கள்: மற்ற முனிவர், பொது மக்கள், வயின்: பக்கத்தில் (அருகில்), தொல்: பழைய, உக்கு: நெகிழ்ந்து, உய்ப்பதோர் வழி: அயோத்திக்குப் போவதற்கு உரிய வழி

गच्छन्तं तं नर व्याघ्रं सर्षिसंघं सराघवं
घोराः स्म पक्षिणो वाचः व्याहरन्ति समन्ततः
भौमाश्चैव मृगास्सर्वे गच्छन्तिस्म प्रदक्षिणम्

கச்சந்தம் தம் நரவ்யாக்ரம் ஸர்ஷி ஸங்கம் ஸராகவம் ।
கோரா: ஸ்ம பக்ஷிண: வாச: வ்யாஹரந்தி ஸமந்தத: ॥
பௌமா: சைவ ம்ருகா: ஸர்வே கச்சந்தி ஸ்ம ப்ரதக்ஷிணம் ।

வா.ரா. பால. - 74

ஏகும் அளவையின் வந்தன வலமும் மயில், இடமும்
காகம் முதலிய, முந்திய தடை செய்வன கண்டான்
நாகம் அனன் இடை இங்கு உளது இடையூறு என நடவான்
மாகம் மணி அணி தேரொடும் நின்றான் நெறி வந்தான்.

க.ரா. பால். - பரசுராமர்

தசரத சக்ரவர்த்தீ திருவயோத்திக்குப் புறப்படலானார். உடனே ராஜ குமாரர்கள் நால்வரும் தத்தம் மனைவியரோடு வந்து மஹாராஜரை வணங்கிக் கூடப் புறப்பட்டனர். மருமகப் பிள்ளைகளின் தோழர்களாக வந்திருந்த பிற ராஜகுமாரர்களும், முனிவர் பெருமக்களும், பேரரசரைச் சூழ்ந்த வண்ணம் பயணமாயினர். எல்லோரும் புறப்படவே மிதிலை மக்கட்கு இருப்புக் கொள்ளவில்லை. பிரிவாற்றாமையால் மனம் நெகிழ்ந்து, தம் உடலிலிருந்து உயிர் பிரிகின்றதோ எனும் நிலைக்கு ஆளாயினர். சின்னாட்கள் தான் பழகினர் என்றாலும் ஒத்த உணர்வுடையவர்கள் ஆயினர். உண்மையான நட்புக்கு நாட்டு ஒற்றுமையும், மிகுதியான பழக்கமும் தேவை என்பதில்லை. ஒத்த உணர்ச்சியே போதுமானது, இங்கு

''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்'' குறள் - 785

நட்பிற்கு ஒரே நாட்டவராக இருத்தலும், நெருங்கிப் பழகுதலும், உணர்ச்சி ஒத்திருத்தலும் காரணங்கள் என்பர். ஆயினும் ஒத்த உணர்வே— கருத்து ஒத்திருத்தலே இன்றியமையாத காரணமாகும்.

மிதிலை மக்கள் ராமனையும் அவன் குடும்பத்தினரையும் தம் உயிர்போல் கருதினர். எனவே உற்ற நட்புடைய ராமாதிகளின் பிரிவு மிதிலையரை துன்பக்கடலில் ஆழ்த்திற்றாம். இவ்வாறாகப் பிரியா விடைபெற்று அயோத்தி வழியை அடைந்தனர். வழியில் முன்னே மன்னர் மன்னனும், பின்னே (மாநகர் உறைபவர் மனம் நனி பின் செல) மிதிலை மக்களின் மனமும், நடுவே தம்பியரும் சூழ சீதையுடன் இனிது சென்றான் ராமன்.

சிறிது தூரம் சென்றதும் தசரதர் மேலே செல்லாது நின்றுவிட்டார். ஏன்? சகுனம் சரியாக இல்லை. இனிதாகக் கூவும் பறவைகள் பயங்கரமான ஒலியை எழுப்பின. இது ஆபத்து நேரிடும் என்பதைக் காட்டுகிறது. சில விலங்குகள் வலமாகச் சென்றன. இது நன்மை நேரப்போவதை அறிவிக் கிறது. வலியன், கருடன், காடை, கழுகு, ஆந்தை, உடும்பு, கீரி, குரங்கு இவை இடமாகச் சென்றால் பிரயாணம் தீங்கின்றி முடியும், நாரை, காக்கை, கிளி, கொக்கு, மயில், கோழி, ஓணான், புள்ளிமான், புலி, நரி, புனுகு பூனை ஆகியவை வலமாகச் சென்றால் நன்மை விளையும். இவை வலமும் இடமுமாக மாறிச் சென்றால் சகுனத்தடையாம். இதைக் கண்டு யானை போன்ற கம்பீரமான தோற்றமுள்ள தயரதனும் தன் தேரை நிறுத்தி விட்டான்.

उपस्थितं भयं घोरं दिव्यं पक्षि मुखाच्च्युतम्
मृगाः प्रशमयन्त्येते सन्तापः त्यज्यतामयम् ॥

உபஸ்திதம் பயம் கோரம் திவ்யம் பக்ஷிமுகாத்ச்யுதம் ।
ம்ருகா: ப்ரஶமயந்தி ஏதே ஸந்தாப: த்யஜ்யதாம் அயம் ॥

வா.ரா. பால. - 74

வஸிஷ்டர்: ''அரசே! அஞ்சற்க. பறவைகளின் ஒலியின் மூலம் பேரா பத்து விளையும் என அறிகிறோம். ஆயினும் வலமாகச் செல்லும் விலங்கு கள் இடையூறுகள் அகன்று நன்மை விளையப் போவதைக் காட்டுகின்றன. கவலை வேண்டாம். 'இன்றே வரும் இடையூறு அது நன்றாய்விடும்'' என்றார். யாத்திரை தொடர்ந்தது.

तेषां संवदतां तत्र वायुः प्रादुर्बभूवह
कम्पयन् पृथिवीं सर्वां पातयंश्च द्रुमान् शुभान्

तमसा संवृतः सूर्यः सर्वे नावेदिषुर्दिशः
वसिष्ठ ऋषयधान्ये राजाच ससुतस्तदा
ससंज्ञा इवतत्राऽऽसन् सर्वमन्य द्विचेतनम्
तस्मिन् तमसि धोरे तु भस्मच्छन्नेव सा चमूः
ददर्शभीमसंकाशं जटा मण्डल धारिणम्
भार्गवं जामदग्र्यं तं राजाराज विमर्दनम्
स्कन्धे चाऽऽसाद्य परशुं धनुर्विद्युद्गणोवमम्

தேஷாம் ஸம்வததாம் தத்ர வாயு: ப்ராதுர் பபூவஹ ।
கம்பயன் ப்ருதிவீம் ஸர்வாம் பாதயன் ச த்ருமான் சுபான் ॥
தமஸா ஸம்வ்ருத: ஸூர்ய: ஸர்வே நாவேதிஷு: திஶ: ॥
வஸிஷ்ட: ரிஷய: ச அன்யே ராஜா ச ஸஸுதஸ் ததா ।
ஸஸம்ஞ்ஞா இவ தத்ராஸன் ஸர்வம் அன்யத் விசேதனம் ॥
தஸ்மின் தமஸி கோரேது பஸ்ம சனனேவ ஸா சமூ: ।
ததர்ச பீமஸங்காஶம் ஜடாமண்டல தாரிணம் ॥
பார்கவம் ஜாமதக்ன்யம் ச ராஜா ராஜ விமர்தனம் ।
ஸ்கந்தே ச ஆஸாத்ய பரசும் தனு: வித்யுத்கணோபமம் ॥

வா.ரா. பால. - 74

பொன்னின் மலை வருகின்றது போல்வான் அனல் கால்வான்
உன்னும் தழல் விழியான் உரும் அதிர்கின்றதுஓர் உரையான்

க.ரா. பால. - பரசுராமர்

கால்வான்: உமிழ்வான், உரும்: இடி

இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் பொழுது பெரும் புயற் காற்று வீசிற்று. நிலம் நடுங்கிற்று. ஆல் அரசு போன்ற பெரும் மரங்கள் எல்லாம் தரையில் சாய்ந்தன. கதிரவன் ஒளிமங்க எங்கும் இருள் சூழ்ந்தது. திசைகளையே அறிய முடியவில்லை. தசரதரோடு வந்த அனைவரும் (ஸேனைகள் உள்பட) உணர்விழந்தனர், ஆனால் வஸிஷ்டர், மஹர்ஷிகள், தசரதர், ராஜகுமாரர்கள், பிரஜ்ஞை (உணர்வு) உடையவர்கள் போன்று தோன்றினர். இந்நிலையில் எதிரே ஓர் உருவம் தோன்றியது. அது தங்கமே உருவான மஹா மேரு மலை இடம் பெயர்ந்து இங்கே வருகின்றதோ எனத் தோன்றியது. பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தது. தலையில் அடர்ந்த ஜடைகள், மூச்சுக்காற்றினின்றும் நெருப்பை உமிழ்கிறான். கனலைக் கக்கும் கண்கள், தோள்களில் கோடாலியும் வில்லும் மின்னல் கூட்டம் போல் காட்சி தருகின்றன. உற்று நோக்கியதில் பேரரசர்களையெல்லாம் கொன்று குவித்த

ஜமதக்கினியின் குமாரரான பரசுராமன் என அறிந்தனர். அவருடைய பேச்சு இடி இடிப்பது போல் பயங்கரமாயிருந்தது.

வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகள் ''இவர் அரசர்களைக் கொன்று வஞ்சம் தீர்ந்து கோபம் தணிந்தவர். இனி மீண்டும் க்ஷத்திரியர்களைக் கொல்ல விரும்பாதவர். எதற்கு இப்பொழுது இங்கு வருகிறாரோ'' என எண்ணியவர்களாய் இனிய குரலில் ''ராமா! ராமா! என அழைத்து நல்வரவு கூறி அர்க்ய பாத்யாதிகளை ஸமர்ப்பித்து உபசரித்தனர்.

பொங்கும் படை இரியக் கிளர் புருவம் கடை நெரிய
வெம் கண் பொறி சிதறக் கடிது உரும் ஏறு என விடையா
சிங்கம் என உயர்தேர் வருகுமரன் எதிர் சென்றான்
அம் கண் அரசு அவனும் இவன் ஆரோ எனுமளவில்

க.ரா.பால. - பரசுராமர்

तदद्भुतमचिन्त्यं च भेदनं धनुष स्त्वया
तच्छ्रुत्वाऽहमनुप्राप्तो धनुर्गृह्या परं शुभम्
तदिदं घोर संकाशं जामदग्र्यं महद्धनुः
पूरयस्व शरेणैव स्वबलं दर्शयस्व मे
तदिदं ते बलं दृष्ट्वा धनुषोऽस्य प्रपूरणे
द्वन्द्वयुद्धं प्रदास्यामि वीर्यश्लाध्य महं तव

தம் அத்புதம் அசிந்த்யம் ச பேதனம் தனுஷ: த்வயா ।
தத் ஶ்ருத்வா அஹம் அனுப்ராப்த: தனு: க்ருஹ்ய பரம் சுபம ॥
ததிதம் கோர ஸங்காசம் ஜாமதக்ந்யம் மஹத்தனு: ॥
பூரயஸ்வ ஶரேணைவ ஸ்வபலம் தர்ஶயஸ்வ ச ॥
ததஹம் தே பலம் த்ருஷ்ட்வா தனுஷ: அஸ்ய ப்ரபூரணே ।
த்வந்த்வ யுத்தம் ப்ரதாஸ்யாமி வீர்ய ஶ்லாக்ய மஹம்தவ! ॥

வா.ரா. பால. - 75

நம் ராஜகுமாரர்கள் நால்வருக்கும் திருமணம் ஆனதை நினைத்து நினைத்துப் பெரு மகிழ்ச்சியோடு அரசருக்கு முன்னும் பின்னும் செல்கின்ற ராணுவ வீரர்கள் பரசுராமரைப் பார்த்தனர். அவர் புருவங்களிலே அச் சுறுத்தும் நெரிப்பு, கோபத்தினால் சிவந்த கண்களிலே தீப்பொறி பறப்பு, ஆகியவற்றைக்கண்டு பயந்து சிதறி ஓட ஆரம்பித்தனர். பரசுராமர், மஹர்ஷி களின் வரவேற்பில் கவனம் செலுத்தாது கம்பீரமாக விரைந்து தேரின் மீது வரும் சக்ரவர்த்தித் திருமகனான ராகவஸிம்ஹனின் எதிரே சென்றார். தம் கண்ணழகால் யாவரையும் கவரும் ராமன் ''இவர் யாரோ?'' என விசாரித்தான்.

இற்று ஒடிய சிலையின் திறம் அறிவேன் இனி யான் உன்
பொன் தோள் வலி நிலை சோதனை புரிவான் நசை உடையேன்
செற்று ஒடிய திரள் தோள் உறுதினவும் சிறிது உடையேன்
மற்று ஓர்பொருள் இலது இங்கு இது வரவு என்றனன் உரவோன்.

க.ரா. பால. - பரசுராமர்

நசை: விருப்பம், செற்று: (அரசர்களை) அழித்து, ஒடிய: மேம்பட்ட

''ராமா! பிறரால் நாணேற்ற முடியாத சிவதனுஸ்ஸை எடுத்து நாணேற்றியது மட்டுமன்றி ஒடித்துவிட்டாய். பிற அரசர்கள் நினைத்தற்கரிய செயலைச் செய்து பெருமை பெற்றாய்'', அதுமட்டுமன்று.

कौमार केलि गोपायित कौशिकाध्वर !
रणाध्वर धुर्य भव्य दिव्यास्त्र बृन्दवन्दित
तनुतर विशिख विताडन विघटित विशरारु शरारु ताटका ताटकेय

கௌமார கேளி கோபாயித கௌஶிகாத்வர ।
ரணாத்வர துர்ய பவ்ய திவ்யாஸ்த்ர ப்ருந்த வந்தித ।ர
தனுதர விஶிக விதாடன விகடித விசராரு சராரு தாடகா தாடகேய ।

ஸ்வாமி தேசிகன் - ரகுவீரகத்யம்

''நீ குழந்தைகளின் விளையாட்டாக கௌஶிகரின் வேள்வியைக் காத்தாய், யுத்தமாகிற வேள்வியில் விரும்பியதை நிறைவேற்ற வல்லவையும், பிறருக்கு நன்மையை அளிப்பவையுமான திவ்யாஸ்த்ரங்களால் வணங்கப்பட்டாய்! அஜாத சத்ருக்களான விஸ்வாமித்ரர் முதலிய முனிவர்களைத் துன்புறுத்திய தாடகை ஸுபாஹு முதலிய அரக்கர்களை உனது கூரிய அம்புகளால் தொலைத்தாய்! என்னே உன் பெருமை!''

पुराणं जर्झरं चापं भङ्क्त्वा त्वं कत्थसे मुदा
इदंतु वैष्णवं चापं आरोपयसि चेद्गुणम्

புராணம் ஜர்ஜரம் சாபம் பங்க்த்வா த்வம் கத்தஸே முதா ।
இதம் து வைஷ்ணவம் சாபம் ஆரோபயஸி சேத் குணம் ॥

''உன் பெருமை இருக்கட்டும். நீ ஒரு வில்லை ஒடித்தாயே அதன் பெருமை தெரியுமா? அது முன்பே ஒடிந்தவில். மிகப்பழையது. துருஏறிக் கலகலத்து இற்றுப்போனது. அதை ஒடித்தோம் எனப் பெருமைப் படுகிறாய். இதோபார், இது விஷ்ணுதனுஸ், இதை நாணேற்று பார்ப்போம். உன் தோள்வலியை நேரே நான் பார்க்கிறேன். நான் இருபத்தொரு தலைமுறை அரசர்களைக் கொன்று குவித்தவன். உன்னைப் பார்த்ததும் என் தோளில்

தினவு எடுக்கிறது. ஒரு வேளை நீ விஷ்ணுதனுஸை நாணேற்றி விட்டால் உன்னோடு மல்யுத்தம் செய்து என் தினவைப் போக்கிக் கொள்ளுகிறேன்.''

त्वं राम हति मन्नाम्ना चरसि क्षत्रियाधम
द्वन्द्व युद्धं प्रयच्छाशु यदित्वं क्षत्रियोऽसि मे
पुराणं जर्झरं चापं भंक्त्वा त्वं कत्थसे मुदा
इदंतु वैष्णवं चापं आरोपयसि चेद्रुणम्

த்வம் ராம: இதி மந்நாம்நா சரஸிக்ஷத்ரியாதம! ।
த்வந்த்வ யுத்தம் ப்ரயச்ச ஆசு யதித்வம் க்ஷத்ரிய: அஸிமே ॥
புராணம் ஜர்ஜரம் சாபம் பங்க்த்வாத்வம் கத்தஸேமுதா ।
இதம் து வைஷ்ணவம் சாபம் ஆரோபயஸி சேத் குணம் ॥

ஆனந்த ராமாயணம்

अन्यदा जगति राम इत्ययं शब्दः उच्चरित एव मामगात् ॥
व्रीडमावहति मे स संप्रति व्यस्तवृत्तिरुदयोन्मुखेत्वयि

அன்யதா ஜகதி ராம: இத்யயம் ஶப்த: உச்சரித ஏவ மாமகாத்
வ்ரீடம் ஆவஹதிமேஸ ஸம்ப்ரதி வ்யஸ்தவ்ருத்தி: உதயோன் முகேத்வயி

காளிதாஸன் ரகுவம்சம் - 11

''மேலும் நீ ராமன் எனும் எனது பெயரை வைத்துக் கொண்டு ஊர் எல்லாம் சுற்றி வருகிறாய். இந்நாள் வரை ராமன் என்றால் பரசுராமனாகிய என்னைத்தான் குறிக்கும். இப்பொழுதோ ஈரரசு பட்டுவிட்டது. இது எனக்கு மிகுந்த வெட்கமாக இருக்கிறது. உளுத்துப்போன சிவதனுஸ்ஸை ஒடித்து விட்டு வீரனாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். இதோ பார் விஷ்ணு தனுஸ்ஸை'' என்றார்.

तच्चाप मीशकर पीडन वीतसारं
प्रागपि अभज्यत भवांस्तु निमित्त मात्रम् ।
राजन्यक प्रधन साधन मस्मदीयं
आकर्ष कार्मुक मिदं गरुडध्वजस्य

தச்சாபம் ஈசகரபீடன வீதஸாரம்
ப்ராகபி அபஜ்யத பவாந்து நிமித்தமாத்ரம் ।
ராஜன் யக ப்ரதன ஸாதனம் அஸ்மதீயம்
ஆகர்ஷ கார்முகம் இதம் கருடத்வ ஜஸ்ய ॥

आकृष्टेन पुन रमुनैव धनुषा किल अस्मानभियोक्ष्यसे
क्षत्रवध सत्र दीक्षितानां चिरस्य होता परशुः अस्माक मस्त्येव ।

ஆக்ருஷ்டேன புன: அமுனைவ தனுஷா கில அஸ்மான்
அபியோக்ஷ்யஸே ।
க்ஷத்ர வத ஸத்ரே தீக்ஷிதானாம் சிரஸ்யஹோதா பரஶு:
அஸ்மாகம் அஸ்த்யேவ ॥

முராரி

''அந்த வில் சிவனின் கைப்பட்டு பட்டு வலிமை குன்றி ஒடிந்த நிலையில் இருந்தது. இப்பொழுது ஒடிவதற்கு நீ ஒரு காரணமாக (சாக்காக) ஆனாய்! இந்த விஷ்ணுதனுஸ், அரசர் குழாங்களை ஒழித்துக்கட்ட உதவியது. இதை நாணேற்றி என்னோடு நீ போரிடத் தொடங்கினால் க்ஷத்திரிய வதம் எனும் யாகத்தில் யஜமானனான (தீக்ஷிதனான) எனக்கு இந்தப் பரசு (கோடாலி) ரித்விக்காக இருந்து உன்னை ஒழித்துக் கட்டி விடும்.''

மூவெழு முறைமை பாரின் முடியுடை வேந்தை எல்லாம்
மேவுஎழு மழுவின் வாயால் வேர் அற களைகட்டு அன்னார்
தூஎழு குருதி வெள்ளம் துறையிடை முறையின் எந்தைக்கு
ஆவன கடன்கள் நேர்ந்தேன் அருஞ்சினம் அடக்கிப் போந்தேன்.

க.ரா. பால. - பரசுராமன்

மூவேழு தலைமுறை: 21 தலைமுறை, வேந்தை: அரசர்களை, மேவுஎழுமழு: விரும்பி எழும் கோடாலி, களைகட்டு: பயிர்கட்கு களை பிடுங்குதல் போல அழித்து, தூ: தசை, கடன்: பித்ருகர்மாக்கள்

क्षत्रजातमपकार वैरिमे तन्निहत्य बहुशः शमं गताः
सुप्त सर्पइव दण्डघट्टनात् रोषितोस्मि तव विक्रमश्रवात्
मैथिलस्यधनुः अन्यपार्थिवैः त्वं किलानमितपूर्वमक्षणोः
तन्निशम्य भवतासमर्थये वीर्यशृङ्गमिव भग्नमात्मनः

க்ஷத்ரஜாதம் அபகாரவைரி மே தத் நிஹத்ய பஹுஶ: சமம்கதா: ।
ஸுப்த ஸர்ப்ப இவ தண்ட கட்டனாத் ரோஷித: அஸ்மி தவ விக்ரம
ஶ்ரவாத் ॥
மைதிலஸ்ய தனு: அன்யபார்த்திவை: த்வம் கிலஅநமித பூர்வம்
அக்ஷணோ: ॥
தத் நிசம்ய பவதா ஸமர்தயே வீர்யச்ருங்கமிவ பக்னம் ஆத்மன: ॥

காளிதாசன், ரகுவம்சம் - 11

''ராமா! க்ஷத்திரிய இனமே எனக்கு ஜன்ம விரோதி. என் தந்தை ஜமதக்னி முனிவரை, கார்த்த வீரியனின் குமாரர்கள் தலையைத் துணித்துக் கொன்றனர். அப்பொழுது என் தாய் ரேணுகா 21 முறை மார்பில் அடித்துக் கொண்டு புலம்பினாள். அது கண்டு நான் 21 தலைமுறை க்ஷத்திரியர்களைக் கொன்று மீண்டும் தலை எடுக்காதபடி செய்வேன். அவர்களின் ரத்தம் நிரம்பிய குளங்கள் அமைத்து அதில் தந்தைக்குத் தர்பணம் பண்ணுவேன்'' என சபதம் செய்தேன். அதன்படி நடத்தியும் காட்டினேன். ஆனால் தசரதர் தப்பித்துக் கொண்டார். எப்படி? தசரதரின் வம்சத்தில் மூலகர் முன்னோராவர். அவருடைய பிள்ளை நாரீகவசர், அதாவது அவரைக் கொல்ல நான் வரும் போது கவசம் போன்று பெண்கள் பலர் சூழ்ந்து கொள்வார்கள். இதைக் கண்ட நான் கருணையினால் செய்வதறியாது வெட்கித் தலை குனிந்து சென்று விடுவேன். இதனால் அந்த அரசருக்கு நாரீகவசர் என்றே பெயர் ஏற்பட்டது. இவர் தகப்பனார் இவ்வம்சத்திற்கு மூலமாக இருந்தபடியால் மூலகர் எனப் பெயர் ஏற்பட்டது.''

अश्मगान्मूलकोजज्ञे यः स्त्रीभिः परिरक्षितः
नारीकवच इत्युक्तः निक्षत्रे मूलकोऽभवत् ॥

அஶ்மகாத் மூலக:ஜ ஜ்ஞே ய: ஸ்த்ரீபி: பரிரக்ஷித: ।
நாரீகவச: இத்யுக்த: நிக்ஷத்ரே மூலக: அபவத் ॥

பரசுராமர் மணமானவரை ஓராண்டிற்குள் கொல்வதில்லை. இதை அறிந்த தசரதர் ஒவ்வொரு வருடமும் கல்யாணம் பண்ணிக்கொண்டு விடுவார். அதை அறிந்த பரசுராமர் இவரைக் கொல்லாது விட்டுவிடுவார். இந்த ஸமயம் பிள்ளைகட்கு கல்யாணமானபடியால், அவர் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை. எனவே தன்னைக் கொன்று விடுவாரோ எனப் பயம் தசரதருக்கு ஏற்பட்டது.

பரசுராமர் மேலும் கூறினார்: ''விரோதிகளான க்ஷத்திரியர்களைக் கொன்ற எனக்கு சாந்தி வந்தது. எனவே, நான் வென்ற இப்பூமியை காச்யபமுனிவருக்குத் தானமாகக் கொடுத்து விட்டுத் தவம் செய்து கொண்டிருந்தேன். பிற அரசர்களால் நாணேற்ற முடியாத வில்லை நீ நாணேற்ற முயன்று அதை ஒடித்தே விட்டாய். நீ வில்லை ஒடிக்கவில்லை; பரசுராமனே மாவீரன் எனும் எனது புகழை, புகழாகிற என் கொம்பையே ஒடித்துவிட்டாய். இச்செயல் தூங்குகின்ற ஸர்ப்பத்தைத் தடியால் அடித்து எழுப்புவதற்கு ஒப்பாகும். எனவே எனது தோள்களில் தினவு எடுக்க உன் தோள் வலியை ஆராயவே நான் வந்தேன்'' என்றார்.

உலகு எலாம் முனிவற்கு ஈந்தேன் உறுபகை ஒடுக்கிப்
போந்தேன்,
அலகுஇல் மாதவங்கள் செய்து, ஓர் அருவரை இருந்தேன்
ஆண்டைச்

சிலையை நீ இறுத்த ஓசை செவியுறச் சீறி வந்தேன்.
மலைகுவன் வல்லையாகின் வாங்குதி தனுவை என்றான்.

க.ரா. பால. - பரசுராமன்

முனிவற்கு: காச்யபருக்கு, அலகு: அளவு, அருவரை: மஹேந்திரமலை, ஆண்டை: அவ்விடத்து, வல்லை ஆயின்: வலிமையுடையவன் ஆயின், மலைகுவன்: போர் புரிவேன்.

அப்போது இடையே புகுந்து தசரதர் பரசுராமனிடம் சொன்னார்.

(விஸ்வாமித்திரர் அயோத்திராமனின் கைவண்ணத்தையும், கால் வண்ணத்தையும் கண்டு பெருமை கொண்டார். தசரதரோ, அவர் குடும்பத்தினரோ ராமனின் வீரத்தை, பெருமையை அறியார், அதை நேரில் காணும் பாக்யத்தைப் பரசுராமன் நல்குகிறான்.)

क्षत्र रोषात् प्रशान्तस्त्वं ब्राह्मणश्च महातपाः
बालानां मम पुत्राणां अभयं दातु मर्हसि
सहस्राक्षे प्रतिज्ञाय शस्त्रं प्रक्षिप्तवानसि
मम सर्वविनाशाय संप्राप्त स्त्वं महामुने
नचैकस्मिन् हते रामे सर्वे जीवामहे वयम् ॥

க்ஷத்ர ரோஷாத் ப்ரஶாந்த: த்வம் ப்ராஹ்மண: ச மஹாயஶா: ।
பாலானாம் மம புத்ராணாம் அபயம் தாதும் அர்ஹஸி ॥
ஸஹஸ்ராக்ஷே ப்ரதிஜ்ஞாய ஶஸ்த்ரம் நிக்ஷிப்தவான் அஸி ॥
மம ஸர்வவினாஶாய ஸம்ப்ராப்த: த்வம் மஹாமுனே ।
நச ஏகஸ்மின் ஹதே ராமே ஸர்வே ஜீவாமஹே வயம் ॥

வா.ரா. பால. - 75

தசரதர்: ''பரசுராமரே! நீர் கோபம் தணிந்து அந்தணர்கட்குப் பெருமை தரக்கூடிய தவத்தினை மேற்கொண்டு, இனி நான் ஆயுதம் ஏந்துவதில்லை என்று இந்திரனிடம் சபதம் செய்துவிட்டு, நிலத்தையும் காச்யபருக்குத் தானம் செய்துவிட்டு மஹேந்திர மலைக்குச் சென்றீர் என அறிந்து அச்ச மின்றி வெளியே வந்தேன். ஆனால் எனது கெட்ட காலம் உம்மை இங்கே அழைத்து வந்தது போலும். நீரோ ராமனோடு போர் புரிய விரும்புகிறீர். ராமன் அழிந்தால் நாங்கள் அனைவரும் அழிந்தவர்கள் ஆவோம், அவனே எங்கள் உயிர்.''

अनादृत्यैव तद्वाक्यं राममेवाभ्यभाषत

அனாத்ருத்யைவ தத்வாக்யம் ராமமேவ அப்யபாஷத ॥

வா.ரா. பால. - 75

''அதிஸ்னேஹ: பாபசங்கீ'' மக்களிடமோ, பொருளிடமோ, மிகுதியாக அன்பைச் செலுத்துபவர் அவற்றுக்கு ஏதாவது சிறிது தீங்கு நேரிடினும் பேராபத்து நேரிடுமோ என ஐயுற்று மயங்குவது இயல்பு. ராமனைத் தசரதர், அன்னைமார்கள், அயோத்தி மக்கள் அனைவரும் தத்தம் உயிராகவே கருதிப் பழகி வந்தனர். எனவே பரசுராமனால் ராமனின் உயிருக்கு ஆபத்து நேரிடின் தசரதர், தாம் அழிவது மட்டுமன்றி தம்மையும் தம் நாட்டையும் சார்ந்திருக்கும் அனைவரும் அழிவர் என்பதை ''ஸர்வவினாசாய'' எனக் குறிப்பிட்டார். தசரதர் எவ்வளவு கெஞ்சியும் அவருக்கு முகம்கொடாது ராமனை அணுகிப் பரசுராமர் பேசினார் :

உலகு எலாம் முனிவற்கு ஈந்தேன், உறுபகை
ஒடுக்கிப் போந்தேன்
அலகு இல் மா தவங்கள் செய்து ஓர் அரு வரை
இருந்தேன் ஆண்டை
சிலையை நீ இறுத்த ஓசை செவி உறச் சீறி வந்தேன்,
மலைகுவென் வல்லையாகின் வாங்குதி தனுவை என்றான்.

க.ரா.பால. - பரசுராமன்

''அயோத்தி ராமா! என் தந்தையைக் கொன்ற க்ஷத்திரிய வம்சத்தை அழித்து, புறப்பகையை ஒடுக்கிய யான் உட்பகையாகிய அரிஷட்வர்க்கங்களை (காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யாதிகளை) ஒடுக்கினேன். மஹேந்திர மலைக்குச் சென்று பெருந்தவம் புரிந்து வருகிறேன். நீ சிவ தனுஸ்ஸை ஒடித்த ஒலியைச் செவியுற்றதும், மீண்டும் ராஜவம்சங்கள் தலை எடுக்குமோ என அஞ்சி மீண்டும் சீறி எழுந்தேன். வந்தேன் உன்னோடு போரிட. திறன் இருப்பின் இதோ இந்த விஷ்ணு தனுஸ்ஸைப் பிடி'' எனச் சீறிப் பேசினான்.

कातरोऽसि यदि वोद्गतार्चिषा तर्जितः परशु धारया मम ।
ज्यानिधात कठिनाङ्गुलिर्वृथा बध्यतामभययाचनाञ्जलिः ॥

காதரோஅஸி யதி வோத்கதார்ச்சிஷா தர்ஜித: பரசுதாரயா மம ।
ஜ்யாநிகாத கடினாங்குளி: வ்ருதா பத்யதாம் அபயயாசனாஞ்ஜலி: ॥

காளிதாஸன், ரகுவம்ஶம் - 17.

உடனே, ராமன் கோடாலியைப் பார்த்தான் போலும். அதைக் கண்ட பரசுராமர், ''கோடாரியின் கூரிய நுனிப் பகுதியினின்றும் ஒளி வீசுகிறதே, அதைக் கண்டு அஞ்சுவாயாகின், வில்லின் நாணைப் பூட்டிப்பூட்டி சுண்டிச் சுண்டிக் காய்த்துப் போன விரல்களையுடைய கைகளைப் பெற்று என்ன பயன்? அவ்விரல்களையெல்லாம் ஒன்று சேர்த்து கைகளைக் கூப்பி (அஞ்ஜலி செய்து) 'எனக்கு அபயம் அளிப்பீர்' என வேண்டலாம். போரிட

அஞ்சினால் அதைச் செய்'' என்றார். மேலும் வில்லின் வரலாற்றைக் கூறினார்.

விற்களின் வரலாறு

इमे द्वे धनुषी श्रेष्ठे दिव्ये लोकाभिपूजिते
दृढे बलवती मुख्ये सुकृते विश्वकर्मणा
त्रिपुरघ्नं नरश्रेष्ठ भग्नं काकुत्स्थ यत्त्वया
तदिदं वैष्णवं राम धनुः परपुरञ्जयम्
समानसारं काकुत्स्थ रौद्रेण धनुषात्विदम्
हुंकारेण महादेवः स्तम्भितोऽथ त्रिलोचनः
जृम्भितं तद्धनु र्दृष्ट्वा शैवं विष्णु पराक्रमैः
अधिकं मेनिरे विष्णुं देवाः सर्षिगणा स्तथा
धनू रुद्रस्तु संक्रुद्धो विदेहेषु महायशाः
देवरातस्य राजर्षेः ददौ हस्ते ससायकम्
इदञ्च वैष्णवं राम धनुः पर पुरञ्जयम्
ऋचीके भार्गवे प्रादात् विष्णुः सन्यासमुत्तमम् ।

இமே த்வே தனுஷீ ஶ்ரேஷ்டே திவ்யே லோகாபி பூஜிதே ।
தருடே பலவதீமுக்யே ஸுக்ருதே விச்வகர்மணா ॥
த்ரிபுரக்னம் நரச்ரேஷ்ட! பக்னம் காகுத்ஸ்த யத் த்வயா ।
ததிதம் வைஷ்ணவம் ராம! த்னு: பரம பரபுரஞ்ஜயம் ॥
ஸமான ஸாரம் காகுத்ஸ்த । ரௌத்ரேண தனுஷாது இதம் ।
ஹுங்காரேண மஹாதேவ: ஸ்தம்பித: அத த்ரிலோசன: ॥
ஜ்ரும் பிதம் தத்தனு: த்ருஷ்ட்வா சைவம் விஷ்ணு பராக்ரமை: ।
அதிகம் மேனிரே விஷ்ணும் தேவா: ஸர்ஷிகணா: ததா ॥
தனூ ருத்ர:து ஸம்க்ருத்த: விதேஹேஷு மஹாயஶா: ।
தேவராதஸ்ய ராஜர்ஷே: ததௌ ஹஸ்தே ஸஸாயகம் ॥
இதம் ச வைஷ்ணவம் ராம! தனு: பர புரஞ்ஜயம் ॥
ருசீகே பார்க்கவே ப்ராதாத் விஷ்ணு: ஸந்யாஸம் உத்தமம் ।

வா.ரா. பால. - 75

''தேவ தச்சனாகிய விஶ்வ கர்மாவினால் இரண்டு விற்கள் செய்யப் பட்டன. தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒன்றை மஹாவிஷ்ணு எடுத்துக் கொண்டார். மற்றொன்றை சிவன் எடுத்துக் கொண்டார். சிவன் த்ரிபுர

ஸம்ஹாரம் பண்ணும் போது அவர் வில்லின் நுனியில் திருமால் இருந்து சிவனுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார். சிவனின் பரிகரமாக விஷ்ணு இருந்தபடியால் சிவனே உயர்ந்தவன் என்ற எண்ணம் ஏற்பட்டது. பின்னர் சிவன் தக்ஷயஜ்ஞத்தை அழித்தார். அப்பொழுது கூடிய தேவர்கள் இவ்விற்களுள் எது உயர்ந்தது. எவர் உயர்ந்தவர்? அதாவது சிவனா? விஷ்ணுவா? என பிரமனைக் கேட்டனர். இதற்கு விடை காண பிரமன் இருவருவர்க்குள் பகைமையை மூட்டி போரிடச் செய்தார். பெரும் போர் நிகழ்ந்தது. இதுகாறும் பயங்கரமான விளைவுகளைத் தோற்றுவித்த சிவதனுஸ் சிதிலமாயிற்று; ஒடிந்தது எனலாம்.

''அந்நிலையில் மஹாவிஷ்ணு உலகத்தையே நடுங்கச் செய்யும் ஹூம்காரத்தைச் செய்தார். அப்பேரிடி போன்ற ஒலியைக் கேட்டதும் சிவன் ஸ்தம்பித்துப் போனார். சிவன், வில்தான் பயன்படவில்லையே என நெற்றிக் கண்ணைத் திறந்து விஷ்ணுவை எரித்துவிட முயன்றார். விஷ்ணு தேஜஸ்ஸில் முக்கண்ணனுக்கு வலியிழந்தது. அதுபோழ்து தேவர்களும், மஹர்ஷிகளும் கெஞ்சி இறைஞ்சிப் பிரார்த்திக்க அமைதி ஏற்பட்டது. விஷ்ணு பராக்ரமத் தினால் சிவதனுஸ் ஒடிந்ததையும் சிவனின் செயலற்ற நிலையையும் நேரில் கண்ட தேவர் குழாமும் அறிஞர்களான மஹர்ஷிகள் கூட்டமும் விஷ்ணுவே பரதத்வமெனும் முடிவுக்கு (தீர்மானத்திற்கு) வந்தது.

''அப்பொழுது சிவன் தனது வில்லை மிதிலை அதிபதியும், ராஜர் ஷியுமான தேவரதனிடம் கொடுக்க அதை அவர் பூஜித்து வந்தார். பின்னர் வருணன் ஜனகரின் யாகத்திற்குப் பயனாக அவருக்கே வில்லை உரிய தாக்கினான். மஹாவிஷ்ணு தனது வில்லை ப்ருகு குலதிலகமாய்த் திகழ்ந்த ரிசீகரிடம் கொடுக்க, அவர் தமது வில்லை மஹா தபஸ்வியான எனது தந்தை ஜமதக்னி முனிவரிடம் கொடுத்தார். (எனது தாத்தா என் தகப்பனாருக்குக் கொடுத்தார்) தவம் புரிந்து வந்த எனது தகப்பனாரைக் கார்த்தவீர்யார் ஜுனனது குமாரர்கள் கொன்றனர். நான் தெறிதவறிய அரசர்களை 21 தலைமுறை கொன்று குவித்தவன். (ரஷ்யாவில் ஜார் புரட்சி, பிரிட்டனில் அரசன் கோல் தவறியபோது மக்கள் வெகுண்டு எழுந்தது. இங்கு அந்தணன் மக்களைக் காக்கப் புல்லேந்திய கையில் வாளேந்தியது ஆகியவை நோக்கத் தக்கவை.)

கோஸலராமனும் பரசுராமனும்

तदिदं वैष्णवं राम पितृपैतामहं महत्
क्षत्रधर्मं पुरस्कृत्य गृह्णीष्व धनुरुत्तमम्
आरोप्य सधनुः रामः शरं सज्यं चकारह
जामदग्न्यं ततो रामं रामः क्रुद्धोऽब्रवीदिदम्
ब्राह्मणोऽसीति पूज्यो मे विश्वामित्र कृतेनच
तस्माच्छक्तो न ते राम मोक्तुं प्राणहरं शरम्

ததிதம் வைஷ்ணவம் ராம! பித்ருபைதாமஹம் மஹத் ।
க்ஷத்ர தர்மம் புரஸ்க்ருத்ய க்ருண்ஹீஷ்வ தனு: உத்தமம் ॥
ஆரோப்ய ஸதனு: ராம: ஶரம் ஸஜ்யம் சகார ஹ ।
ஜாமதக்ந்யம் தத: ராமம் ராம: க்ருத்த: அப்ரவீத் இதம் ॥
ப்ராஹ்மண: அஸி இதி பூஜ்யோமே விஶ்வாமித்ர க்ருதேன ச ।
தஸ்மாத் ஶக்த: நதே ராம: மோக்தும் ப்ராணஹரம் ஶரம் ॥

வா.ரா. பால. - 76

युगपत्प्राप्त गुणयोः चाप भार्गव रामयोः ।
ऋजुता वक्रतां प्राप वक्रता च तथार्जवं ॥

யுகபத் ப்ராப்தகுணயோ: சாப பார்கவராமயோ: ।
ருஜுதாவக்ரதாம் ப்ராப வக்ரதா சததா, ஆர்ஜமம் ॥

போஜசம்பூ

भोः ब्रह्मन् भवता समं न घटते संग्राम वार्ताऽपि नः
सर्वेहीन बलाः वयं बलवतां यूयं स्थिताः मूर्धनि ।
यस्मा देकगुणं शरासनमिदं सुव्यक्तमुर्बीभुजाम्
अस्माकं भवतोयतो नवगुणं यज्ञोपवीतं बलम् ॥

போப்ரஹ்மன்! பவதா ஸமம் ந கடதே ஸங்க்ராம வார்த்தா அபிந:
ஸர்வே ஹீனபலா: வயம், பலவதாம் யூயம் ஸ்த்திதா: மூர்த்தனி ।
யஸ்மாத் ஏககுணம் ஶராஸனம் இதம் ஸுவ்யக்தம் உர்வீ புஜாம்
அஸ்மாகம், பவத: யத: நவகுணம் யஜ்ஞோபவீதம் பலம் ॥

ஹனுமந்நாடகம்

तावुभावपि परस्परस्थितौ वर्धमान परिहीन तेजसौ
पश्यतिस्म जनता दिनात्यये पार्वणौ शशि दिवाकराविच

தௌ உபௌ அபி பரஸ்பரஸ்திதௌ வர்த மான பரிஹீன
தேஜஸௌ ।
பச்யதி ஸ்ம ஜனதா தினாத்யயே பார்வணௌசசி திவாகரௌ
இவ

காளிதாஸன் - ரகுவம்சம்

வில்லின் வரலாற்றைக் கூறிய பரசுராமர் ''ராமா! இத்தகு பெருமை மிக்கது இந்த விஷ்ணுதனுஸ். எனது தந்தை பாட்டன்மார்களால் போற்றப்பட்டது. நீயோ க்ஷத்திரியன். இதை ஏற்று நாணேற்றுவதுதான் உனக்கு அழகு'' என வில்லை நீட்டினார். நீட்டிய வில்லை ராமன், உடனே வாங்கி நாணேற்றி விட்டார். அப்பொழுதுள்ள ராமர்களின் முகத்தோற்றத்தை மஹாகவி படம் பிடித்துக் காட்டுகிறார்.

தாசரதி ராமனின் முகத்தில் தேஜஸ் வளர்ந்து கொண்டே போகிறது. பிறரால் முடியாது என நினைத்த செயலை செய்து காட்டிய பெருமிதம். வீரத்துடன் பேசிய பரசுராமனின் முகப் பொலிவு குறைந்து கொண்டே வருகிறது. ''பிறருக்கு செயற்கரியது என நினைத்து இறுமாப் புடன் நீட்டிய வில்லை ஒரு கணத்தில் சிறிதும் ஆராயாது நாணேற்றி விட்டானே. இனி என்ன செய்வானோ'' எனும் அச்சம் பரசுராமர் முகத்தில் வட்டமிடுகிறது.

இந்நிலையில் அருகில் இருந்து நோக்கியவர்கட்கு பௌர்ணமியன்று (குமரிமுனை கடற்கரையில்) மாலையில் வளரும் சந்திரனும் தேயும் கதிரவனும் நினைவுக்கு வந்ததாம்.

ராமன் கையில் இருந்த பரசுராமன் வில் நேராக இருந்தது, நாணைப் பூட்டியதும் வளைந்து வக்ரமாயிற்று. இறுமாப்புடன் வக்ரத் தன்மையுடன் இருந்த பரசுராமன் நேரியவனாக ஆனான். அதாவது மனதில் இருந்த மாசு (தீய எண்ணங்கள்) அகன்று நற்பண்புகள் எண்ணங்கள் உடையவனாக, ஆகி ராமன் விஷ்ணுவின் அவதாரம் என நினைத்தானாம்.

நாணேற்றியதும் பரசுராமனைப் பார்த்து பேசினான் ராமன்: ''ஓ அந்தணரே! உம்மோடு போர்புரிவது என்கிற பேச்சுக்கே இடமில்லை நாங்கள் வலிமையற்றவர்கள், நீரோ பலசாலிகளின் முன்னணியில் நிற்பவர். ஏனெனில் அரசர்களாகிய எங்கள் கையில், ஒரே குணத்தை (நாண் கயிற்றை) உடைய வில்தான் இருக்கிறது. உமது மேனியிலே ஒன்பது குணங்களை யுடைய (நூல்களையுடைய) யஞ்ஜோப வீதம் (பூணூல்) வலிமைமிக்கதாக ஒளிர்கிறது. (''திக்பலம் க்ஷத்திரிய பலம் ப்ரஹ்ம தேஜோபலம் பலம்'' என விஸ்வாமித்திரர் கூறியதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.) சிறிது கோபத்

துடன் ''பரசுராமரே! நீர் அந்தணர். க்ஷத்திரியர்களாகிய எங்களுக்கு மதிப்புடன் போற்றுதற்கு உரியவர். எனவே உயிரைக் குடிக்கும் அம்பை உம்மீது விட மனம் தயங்குகிறது. அதோடு நீர் எனது குருவான விஸ்வாமித்திரருடைய தங்கையான ஸத்யவதியின் பேரன் அல்லவா.''

इमां वा त्वद्गतिं राम तपोबलसमर्जिताम् ।
लोकानप्रतिमान् वापि हनिष्यामीति मे मतिः ।
नह्य यं वैष्णवो दिव्यः शरः परपुरं जयः
मोघः पतति वीर्येण बलदर्पविनाशनः ॥

இமாம் வாத்வத்கதிம் ராம தபோ பலஸமர்ஜிதாம்
லோகான் அப்பரதி மான்வா ஹனிஷ்யாமி இதி மே மதி: ।
நஹி அயம்வைஷ்ணவ: திவ்ய: சர: பரபுரம் ஜய:
மோக: பததி வீர்யேண பலதர்ப்ப வினாஶன: ॥

வா.ரா. பால. - 76

**பூதலத்து அரசை எல்லாம் பொன்றுவித்தனை என்றாலும்
வேதவித்தாய மேலோன் மைந்தன் நீ விரதம் பூண்டாய்
ஆதலிற்கொல்லல் ஆகாது அம்பு இது பிழைப்பது அன்றால்
யாது இதற்கு இலக்கம் ஆவது இயம்புதி விரைவில் என்றான்.**

க.ரா. பால. - பரசுராமன்

பொன்றுதல்: அழித்தல், மேலோன்: தந்தை ஜமதக்னி, விரதம்: தவவேடம்.

''மேலும் நீர் உமக்குரிய ப்ராம்ஹண தர்மத்தினின்றும் வழுவி அரசர்களைக் கொன்றதால் க்ஷத்திரிய தர்மத்தை மேற்கொண்டதால் குலதர்மத்தை விட்டவர். ஆயினும் மஹா தபஸ்வியின் குமாரன். தவவேடம் பூண்டவர். எனவே கொல்ல மனம் தயங்குகிறது. எனினும் நாம் தொடுத்த அம்பு வீண் போகாது. அதற்கு எதை இலக்காக ஆக்கலாம். உமது நடக்கும் ஆற்றலைக் குறியாக்கி முடமாக ஆக்கிவிடவா? அல்லது நீர் செய்த புண்ணியங்களின் பயனாக தேவருலகங்களைப் பெறமுடியாமல் செய்யவா?'' என்றார்.

लोकास्त्वप्रतिमा राम निर्जिताः तपसा मया
जहितान् शर मुख्येन माऽभूत्कालस्य पर्ययः
जडीकृते तदालोके रामे वरधर्नुधरे
निर्वीर्योजामदग्न्योऽसौ रामो राम मुदैक्षत

லோகா: துஅப்ரதிமா ராம! நிர்ஜிதா: தபஸா மயா ।
ஜஹிதான் சரமுக்யேன மாபூது காலஸ்ய பர்யய: ॥

ஜடீக்ருதே ததாலோகே ராமே வர தனுர் தரே ।
நிர் வீர்ய: ஜாமதக்ன்ய: அஸெள ராம: ராமம் உதைக்ஷத ॥

வா.ரா. பால. - 76

இந்நிலையில் இரு ராமர்களின் சந்திப்பை அறிந்த பிரமன் முதலிய தேவர்கள் வானத்தில் வந்து சூழ்ந்தனர். என்ன ஆகுமோ என உலகத்தினர் மயங்கி நின்றனர். பரசுராமனும் தன் வீர்யம் இழந்து பெயரளவுக்கு உயிர் உடையவனாய் பேசலுற்றான்.

பரசுராமன்: ''நான் வென்ற இப்பார் முழுவதையும் கச்யப முனிவருக்குப் பூதானமாகக் கொடுத்துவிட்டேன். இரவில் இங்கு தங்குதல் கூடாது. விரைந்து மஹேந்திர மலைக்குச் செல்ல வேண்டும். நடந்து செல்லக் கால்கள் தேவை. எனவே நல்லுலகங்களை நல்கும் புண்யங்களின் (தவத்தின்) சக்தியை அம்புக்கு இலக்கு ஆக்கலாம்'' என்றார்.

கை அவண் நெகிழ்தலும் கணையும் சென்று அவன்
மை அறு தவம் எலாம் வாரி மீண்டதே.

க.ரா. பால. - பரசுராமன்

மையறு: குற்றமற்ற, தூய, வாரி: கவர்ந்து.

எய்யப்படும் அம்பு உருவமுள்ள பொருளைத்தான் அழிக்கும். ஆனால் ராம பாணமோ அருவமான (உருவமற்ற) பொருளையும்—புண்ணியத் தையும் அழித்ததாம்.

अक्षयं मधुहन्तारं जानामि त्वां सुरोत्तमम्
नचेयं ममकाकुत्स्थ व्रीडाभवितुमर्हति
त्वया त्रैलोक्यनाथेन यदहं विमुखीकृतः
रामो दाशरथिः श्रीमान् चिक्षेपशरमुत्तमम्
रामं दाशरथिं रामः जामदग्न्यः प्रशस्य च
ततः प्रदक्षिणं कृत्वा जगामात्मगतिं प्रभुः

அக்ஷயம் மது ஹந்தாரம் ஜானாமித்வாம் ஸுரோத்தமம் ।
நச இயம் மம காகுத்ஸ்த வ்ரீடா பவிதும் அர்ஹதி ।
த்வயா த்ரைலோக்ய நாதேன யதஹம் விமுகீ க்ருத: ॥
ராம: தாசரதி: ஸ்ரீமான் சிக்ஷேப சரம் உத்தமம் ॥
ராமம் தாசரதிம் ராம: ஜாமதக்ன்ய: ப்ரஸஸ்ய ச ।
தத: ப்ரதக்ஷிணம் க்ருத்வா ஜகாம ஆத்மகதிம் ப்ரபு: ॥

வா.ரா. பால. - 76

शतकोटि शतगुण कठिन परशुधर मुनिवर करघृत दुखनमतम
निजधनुराकर्षण प्रकाशित पारमेष्ट्य ।

சத கோடி சதகுண கடின பரசுதர முனிவர கரத்ருத
துரவனமதம நிஜ தனுராகர்ஷண ப்ராகாஶித பாரமேஷ்டய ॥

ஸ்வாமி தேசிகன் - ரகுவீரகத்யம்

என்வில்வலி கண்டுபோ என்று எதிர்வந்தான்,
தன், வில்லினோடு தவத்தை எதிர்வாங்கி
முன் வில் வலித்து முது பெண் உயிருண்டான் –
தன், வில்லின் வன்மையைப் பாடிப்பற
தாசரதி தன்மையைப் பாடிப்பற

பெரியாழ்வார் திருமொழி, 3 - 9 - 2

முதுபெண்: தாடகை

ततः परशुरामस्य देहान्निर्गत्य वैष्णवम्
पश्यतां सर्वदेवानां तेजो राम मुपाविशत्

தத: பரசுராமஸ்ய தேஹாத் நிர்கத்ய வைஷ்ணவம் ।
பஶ்யதாம் ஸர்வதேவானாம் தேஜ: ராமம் உபாவிசத் ॥

நாரஸிம்ஹ புராணம்

பரசுராமர்: ''தாசரதி ராமா! நீ தேவதேவோத்தமன்; விகாரமற்றவன்; மதுகைடபர்களைக் கொன்று வேதங்களை மீட்டு பிரமனுக்கு உபதேசித்த வன். தீயோர்களை அழிக்கும் தன்மையன், புருஷோத்தமனாகிய நீ என்னை வென்றதால் நான் வெட்கப்படவில்லை. பூர்ணாவதாரமான உன்னுடைய அம்சாவதாரமான எனக்கு வெட்கம் ஏன்? பிறரால் அவமதிக்கப்பட்டா லன்றோ வெட்கப்பட வேண்டும்?''

தேவர்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க பரசுராமரிடமிருந்த வைஷ்ணவ தேஜஸ் தாசரதி ராமனிடம் போய்ச் சேர்ந்ததாம். பரசுராமரின் அவதார கார்யம் அன்றோடு முடிந்தது. பரசுராமர் ஸம்பாதித்த தவப்பயனை (புண்ய லோகங்களை) ராமன் இவ்வம்புக்கு இலக்காக்கி அழித்தாராம். பாத்மத்தில் ''சதயஜ்ஞ க்ருதம் புண்யம் தத: ஸ்த்ராய ந்யவேதயத்'' என்றபடி.

வஜ்ராயுதத்தைவிட நூறு மடங்கு கடினமான, பிறரால் வளைக்க முடியாத தனது (விஷ்ணு) தனுஸ்ஸை (திவ்ய வைஷ்ணவ தேஜஸ்ஸை) ஆகர்ஷித்து தன்னுடைய பரத்வத்தைக் காட்டியதாக ஸ்வாமிதேசிகன் ஸாதிக்கும்படி, உடனே தாசரதியை ஜமதக்னிமுனிவரின் குமாரர் துதித்துப் பாராட்டிப் பிரதக்ஷிணம் செய்து (வலம் வந்து) மஹேந்திர மலைக்குச் சென்றாராம். ராமனைப் புகழ்ந்ததை அத்யாத்ம ராமாயணத்தில் பார்ப்போம்.

संस्मरन् पूर्ववृत्तान्तं इदं वचन मब्रवीत्
राम राम महा बाहो जाने त्वां परमेश्वरम्

ஸம்ஸ்மரன் பூர்வ வ்ருத்தாந்தம் இதம் வசனம் அப்ரவீத் ।
ராம! ராம! மஹாபாஹோ! ஜானே த்வாம் பரமேஶ்வர! ॥

அத்யாத்ம ராமா. பால. - 7

उत्तिष्ठ तपसो ब्रह्मन् फलितं ने तपो महत्
मच्चिदंशेन युक्त स्त्वं जहि हैहय पुङ्गवम्
तत स्त्रि स्सप्तकृस्त्वं हत्वा क्षत्रिय मण्डलम्
कृत्स्नां भूमिं कश्यपाय दत्वा शालि मुपावह
त्रेता मुखेदाशरथिः भूत्वा रामोऽहमव्ययः
मत्तेजः पुन रादास्ये त्वयि दत्तं मयापुरा
इत्युक्त्वाऽन्तर्दधे देवः तथा सर्वं कृतं मया
स एव विष्णुस्त्वं राम जातोऽसि ब्रह्मणार्थितः
मयि स्थितंतु त्वत्तेजः त्वयैव पुनराहृतम्
यदिमे अनुग्रहो राम तवास्ति मधुसूदन
त्वद्भक्त सङ्ग स्त्वापादे दृढा भक्तिस्तदास्तु मे

உத்திஷ்ட தபஸ: ப்ரஹ்மன்! பலிதம் தே தப: மஹத் ।
மச்சிதம் சேன யுக்த: த்வம் ஜஹி ஹைஹய புங்கவம் ॥
தத: ஸ்த்ரிஸ்: ஸப்தக்ருத் த்வம் ஹத்வா க்ஷத்ரிய மண்டலம் ॥
க்ருத்ஸ்னாம் பூமிம் கச்யபாய ததவா சாந்திம் உபாவஹ ।
த்ரேதா முகே தாசரதி: பூத்வா ராம: அஹம் அவ்யய: ॥
மத்தேஜ: புன: ஆதாஸ்யே த்வயி தத்தம் மயா புரா ।
இதி உக்த்வா அந்தர்ததே தேவ: ததா ஸர்வம் க்ருதம் மயா ॥
ஸ ஏவ விஷ்ணு: த்வம் ராம! ஜாத: அஸி ப்ரஹ்மணா அர்தித: ।
மயிஸ்திதம் து த்வத்தேஜ: த்வயைவ புன: ஆஹ்ருதம் ॥
யதி மே அனுக்ரஹ: ராம! தவ அஸ்தி மது ஸூதன ।
த்வத் பக்த ஸங்க: த்வத்பாதே த்ருடா பக்தி ஸதா அஸ்துமே ॥

அத்யாத்ம ராமா. பால. - 7

பரசுராமன் தன் கை வில்லை ராமன் வாங்கியதும் வலிவு இழந்தவனாய் சிறிது யோசித்துப் பேசலானான். ''தோள்வலி மிகுந்த ராமா! முன்பு நிகழ்ந்தவை அனைத்தும் இப்பொழுது என் நினைவுக்கு வருகின்றன.

பரவாஸுதேவா! ராமா! உன்னை நன்கு அறிவேன். அடியேன் இளமைப் பருவத்தில் எனது தந்தையைக் கொன்ற கார்த்தவீர்ய அர்ஜுனனைக் கொல்வதற்காகப் பெருந்தவம் புரிந்தேன். நாராயணா! அப்பொழுது நீர் ப்ரத்யக்ஷமாகி அருளியதாவது: ''அந்தணரே! உமது தவத்தினைக் கண்டு மெச்சுகிறோம். போதும்; தவத்தைக் கலைத்து எழுந்திரும். இனி நீர் எமது அம்சத்தை, தேஜஸ்ஸைப் பெற்று ஓர் அவதாரமாகவே கொண்டாடப் படுவீர். எளிதாக ஹைஹயனை, கார்த்தவீர்யனை மாய்ப்பீர். அதற்குப் பிறகு இருபத்தொரு தலைமுறை மக்கட்குத் தீங்கு விளைவிக்கும் அரசர்களைக் கொன்று சாந்தியை, அமைதியை நிலைநாட்டுவீர். வென்ற பூமண்டலத்தை கச்யபருக்குத் தானமாகக் கொடுத்துவிட்டு சாந்தியை நீரும் பெறுவீர். த்ரேதாயுகத்தின் ஆரம்பத்தில் நான் தசரத குமாரனாக அவதரித்து உமக்கு இப்பொழுது யான் அளிக்கும் தேஜஸ்ஸை திரும்பப் பெறுவேன்'' என்று கூறி மறைந்த நாராயணனல்லரோ நீர்! உமது உத்திரவுப்படி அனைத்தையும் செய்து முடித்தேன். நீர் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு. பிரமனின் பிரார்த்தனைக்கு இணங்க அவதரித்தவர். நீர் அளித்த தேஜஸ்ஸை (பரமனின் ஆற்றலை) நீரே ஏற்றுக் கொண்டுவிட்டீர். ராமா! உமது அருள் எனக்குத் தேவை. இனி எனக்கு உன் அடியார்களின் தொடர்பையும், உமது திருவடிகளில் மாறாத பக்தியையும் அளித்து அருளுவீர்'' என்றார்.

எண்ணிய பொருள் எலாம் இனிது முற்றுக
மண்ணிய மணி நிற வண்ண! வண்துழாய்க்
கண்ணிய! யாவர்க்கும் களைகண் ஆகிய
புண்ணிய! விடை எனத் தொழுது போயினான்.

க.ரா. பால. - பரசுராமர்

மண்ணிய: சுத்தம் செய்யப்பட்ட (பட்டை தீட்டப்பட்ட) கண்ணிய: மாலையை உடைய, களைகண்: புகலிடம், விடை: விடையளிப்பாயாக.

''ராமா! நீ பட்டை தீட்டிய மரகத மணி ஒளிர்வது போன்ற திவ்ய மங்கள விக்ரஹத்தோடு (திருமேனியோடு) காட்சி அளிக்கிறாய். புருஷோத்த மனுக்குரிய அழகிய திருத்துழாய்மாலை உன் பரத்துவத்தைக் காட்டுகிறது. இன்னார் இனியர் எனும் வேற்றுமையின்றி அந்தணர், அந்நியர் எல்லையில் நின்ற அனைவருக்கும் புகலிடமாய்த் திகழும் புண்ணியன். நீ இராக்கதர்வாழ் இலங்கை பாழாகப் படைபொருது சரணாகதர்களான, தேவர்கள், முனிவர் கள் மற்றும் நல்லோர்கள் அனைவரையும் காப்போம் என எண்ணியவை யாவற்றையும் இனிது நிறைவேற்றிப் பல்லாண்டு வாழ்வாயாக. நான் போய் வருகிறேன். எனக்கு விடையளித்து அருள்வீர்' எனப் போற்றி வடதிசை நோக்கிப் புறப்பட்டார், பரசுராமர்.

மங்களகரமான வாழ்க்கை

பரசுராம கர்வ பங்கத்தின் படிப்பினையை போஜ ராஜனிடம் கேட்போம்.

नूनं जनेन पुरुषे महति प्रयुक्तम्
आगः परं तदनु रूप फलं प्रसूते
कृत्वा रघू द्वह गतौ क्षण मन्तरायं
यद्भार्गवः पर गते र्विहतिं प्रपेदे

நூனம் ஜனேன புருஷே மஹதி ப்ரயுக்தம்
ஆக: பரம் ததனுரூப பலம் ப்ரஸூதே ।
க்ருத்வா ரகூத்வஹ கதே: க்ஷணம் அந்தராயம்
யத் பார்கவ: பரகதே: விஹதிம் ப்ரபேதே ॥

போஜசம்பூ - பாலகாண்டம்

பகவானிடத்திலோ பகவத் பக்தர்களிடத்திலோ செய்யப்படும் அபசாரம் (தீங்கு) உடனே அதற்குரிய தண்டனையை அளித்துவிடும். திருமணமாகி அயோத்திக்குச் செல்லும் ராமன், தசரதர், வஸிஷ்டர் மஹர்ஷிகள் ஆகிய பகவானுடையவும், பாகவதர்களுடையவும் கதியை, போக்கை, பிரயாணத்தைத் தடுத்த பரசுராமர் பாகவதாபசாரத்தினால், தாம் பல்லாண்டுகள் பசி, தாகம், வெப்பம், குளிர் ஆகியவற்றைப் பொறுத்துக் கொண்டு தவம் செய்து ஈட்டிய ஸ்வர்க்கம் முதலான புண்ய லோகங்களைப் பெறுவதற்கான கதியை இழந்தார். இனி அவர் நல்ல பல மேலுலகங்களை அடைய முடியாது; காலால் நடந்து ''மஹேந்த்ரம்'' எனும் மலைக்குத்தான் போக முடியும்.

பிறர்க்கு இன்னாமுற்பகல் செய்யின் தமக்கு
இன்னா பிற்பகல்தாமே வரும். குறள் - 316

பாகவதாபசாரம் மிகக் கொடியது. வாலியோடு போர் புரிய ஸுக்ரீவன் முதல் நாள் போகும் போது வழியிலுள்ள மஹர்ஷிகளை வணங்காது சென்றான். எனவே வாலியிடம் அடிபட்டுத் திரும்பினான். ராமன் உடன் இருந்தும், ஸுக்ரீவனுக்குப் பாதுகாப்பு கிடைக்கவில்லை. பாகவதர்களான ரிஷிகளை அலட்சியப்படுத்தியதால் ராமன் (பகவான்) உதவவில்லை. அதோடு ராமனோடு நிகழ்ந்த முதற் சந்திப்பின் போது ரிச்யமூகத்தில் ஸுக்ரீவன் ராமனுக்கு ஆஸனம் இட்டான். உடன் இருந்த இளைய பெருமாளுக்கு (பாகவதனுக்கு) ஆஸனம் போடவில்லை. இதுவும் ஒரு அபசாரம். எனவே வாலியிடம் அடிபட்டான். மறுநாள் போகும் போது

வழியிலிருந்த ஆச்ரமத்திலுள்ள முனிவர்களை வணங்கி ஆசிபெற்றுச் சென்றான். அன்று வாலி வதம் ஆகி வெற்றியுடன் திரும்பினான். ஸ்வாமிதேசிகன் ரஹஸ்யத்ரயஸாரம் அபராதபரிஹாராதிகாரத்தில் பரி ஹரணியங்களானவற்றில் (விடத் தக்கவைகளில்) ராஜதாராபராதம் போல பாகவதாபசாரம் ப்ரதானம் என்று அருளி பகவத் ராமானுஜருடைய ஸ்ரீ பாஷ்ய ஸ்ரீ ஸூக்தியைப் ப்ரமாணமாகக் காட்டினார். அதாவது பக்தியோக நிஷ்டன் ஒருவன் பக்திக்கு அங்கங்களைச் சரியாக அனுஷ்டித்தும், பலனை அடையாது பாவக்கடலிலேயே துன்புறக் காரணம் ப்ரஹ்மவித் (பாகவத) அபசாரம் தான் என்று.*

தசரதரின் மகிழ்ச்சி

गते राभे प्रशान्तात्मा रामो दाशरथिर्धनुः
वरुणाया प्रमेयाय ददौ हस्ते ससायकम्
गतो राम इति श्रुत्वा हृष्टः प्रमुदितो नृपः
बाहुभ्यां संपरिष्वज्य मूर्ध्नि चाघ्राय राघवम्
पुनर्जातं तदामेने पुत्र मात्मान मेव च ॥

கதே ராமே ப்ரஶாந்தாத்மா ராம: தாசரதி: தனு: ।
வருணாய அப்ரமேயாய ததௌ ஹஸ்தே ஸ ஸாயகம் ।
கத: ராம: இதி ஶ்ருத்வா ஹ்ருஷ்ட: ப்ரமுதித: ந்ருப: ।
பாஹுப்யாம் ஸம்பரிஷ்வஜ்ய மூர்த்நிச ஆக்ராய ராகவம் ।
புனர் ஜாதம் ததாமேனே புத்ரம் ஆத்மான மேவச ॥

வ.ரா. பால. - 77

அழிந்து அவன் போனபின் அமலன் ஐஉணர்வு
ஒழிந்து, தன்னுயிர் உலைந்து உருகு தாதையைப்
பொழிந்த பேரன்பினால் தொழுது, முன்பு புக்கு
இழிந்த வான் துயர்க் கடல் கரைநின்று ஏற்றினான் ॥

க.ரா. பால. - பரசுராமன்

அமலன் : குற்றமற்றவன், உலைந்து : வருந்தி (மூர்ச்சித்து)

குறிப்பு: *ஸ்ரீ வைஷ்ணவர்களுள் சிலர், தம்மை வைதிகராக நினைத்துக் கொண்டிருப்பவர்கள் பெரியோர்களைப் பற்றி இகழ்ந்து பேசுவதையும் வம்பளப்பதையும் பெருமையாகக் கருதுகின்றனர். இதைத் தவிர்ப்பது நன்மை பயக்கும்.*

வெளிப்படும் உணர்வினன் விழுமம் நீங்கியே
தளிர்ப்புறும் மதகரித்தானையான் இடைக்
குளிப்பரும் துயர்க்கடல் கோடு கண்டவன்
களிப்பெனும் கரையிலாக் கடலுள் ஆழ்ந்தனன்.

க.ரா. பால. - பரசுராமன்

விழுமம்: துன்பம், கரித்தானை: யானைப்படை, கோடு: எல்லை, கரை

அயோத்தி ராமனிடம் விடை பெற்ற பரசுராமர் விரைந்து சென்றார். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த தேவர்களுள், வருணனை தசரத ராமர் அழைத்து, கேட்கும்போது கொண்டுவரச் சொல்லி, அம்புகளுடன் விஷ்ணு தனுஸ்ஸைக் ஒப்படைத்தார்.

பின்னர் நேராகத் தந்தையிடம் வந்தார். தந்தையோ தனக்கும் பிள்ளைகட்கும் என்ன தீங்கு நேருமோ எனும் அச்சத்தினால் புலன்களின் உணர்வின்றி மனம் வருந்தி மூர்ச்சை அடைந்த நிலையில் இருந்தார். அவரைப் பேரன்போடு வணங்கி, பரசுராமன், அகன்றதை விண்ணப்பித்தார். இதைக் கேட்டதும் சக்ரவர்த்தி மகிழ்ந்தார், மிக மகிழ்ந்தார். ராமனை இரு கைகளாலும் இறுகத் தழுவினார்; உச்சி முகந்தார்; ராமனும், தானும் புனர் ஜன்மம் எடுத்ததாக மீண்டும் பிறப்பு எய்தியதாக எண்ணினார். இதைக் கம்பர் ''பெரும் துன்பக் கடலில் மூழ்கிச் சிக்குண்டு கரை ஏறாது தவிக்கும் தாதையைக் கரையேற்றினான் ராமன்'' என்பார். அதாவது உடல் முழுவதும் மயிர்க்கூச்சு உண்டாகப் பெரு மகிழ்வு எய்தினார்; இழந்த புலன்களின் உணர்வைப் பெற்றார். மூர்ச்சை தெளிந்தார். ஒரு கடலினின்றும் கரை யேறியவன் மற்றொரு கடலில் மூழ்கி விட்டாராம். துன்பக் கடலினின்றும் கரையேறியவன் மகிழ்வு எனும் கரையில்லாக் கடலில் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினாராம். இங்கு பெற்றோர்களின் மக்கட் பாசம் எத்தகையது என்பதை உணர முடிகிறது.

ஒருவனைத் தழுவி நின்று உச்சிமோந்து தன்
அருவி அம்கண் எனும் கலசம் ஆட்டினான்.

க.ரா. பால. - பரசராமன்

ஒருவனை: ஒப்பற்ற ராமனை

தசரதர், தம் மைந்தனைக் கைகளால் அணைத்து நின்று, உச்சிமோந்து தம் அழகிய கண்களினின்றும் வெளிப்படும் ஆனந்தக் கண்ணீர்ப் பெருக் காகிற மங்கள கலச நீரால் மஞ்சனமாட்டினாராம்.

तस्य भवत् क्षण शुचः परितोष लाभः
कक्षाग्नि लङ्घित तरो रिव वृष्टिपातः

தஸ்ய அபவத் க்ஷண ஶுச: பரிதோஷலாப:
கக்ஷாக்னிலங்கித தரோ: இவ வ்ருஷ்டிபாத: ॥

காளிதாஸன், ரகுவம்சம் - 11

சூழும் காட்டுத் தீயினால் வெந்த மரத்திற்கு மழை ஆனந்தம் தருவது போன்று பரசுராமனின் வருகையினால் மூர்ச்சித்த தசரதருக்கு ராமனின் வெற்றி, பெருமகிழ்ச்சியை அளித்ததாம்.

அயோத்தியில் வரவேற்பு

चोदयामास तां सेनां जगामाशु ततः पुरीम्
सिक्तराजपथांरम्यां प्रकीर्णकुसुमोत्कराम्
कौसल्या च सुमित्रा च कैकेयीच सुमध्यमा
वधू प्रतिग्रहेयुक्ता याश्चान्या राजयोषित:
अर्चयन् मङ्गलाशीर्भिः मङ्गलैरभ्यपूजयन्
देवतायतनान्याशु सर्वाः ताः प्रत्यपूजयन्
रेमिरे मुदितास्सर्वाः भर्तृभिस्सहिता रहः
कुमाराश्च महात्मानो वीर्येणाप्रतिमाभुवि
कृतदाराः कृतास्त्राश्च सधनाः स सुहृज्जनाः
शुश्रूषमाणाः पितरं वर्तयन्ति नरर्षभाः

சோதயாமாஸ தாம் ஸேனாம் ஜகாம ஆசு தத: புரீம் ।
ஸிக்த ராஜ பதாம் ரம்யாம் ப்ரகீர்ண குஸுமோத்கராம் ॥
கௌஸல்யா ச ஸுமித்ராச கைகேயீச ஸுமத்யமா ।
வதூ ப்ரதி க்ரஹே யுக்தா யாஶ்சான்யா: ராஜயோஷித: ॥
அர்ச்சயன் மங்கலாஶீர்பி: மங்களை: அப்யபூஜயன் ॥
தேவதா யதானானி ஆஶு ஸர்வா: தா: ப்ரத்யபூஜயன் ॥
அபிவாத்ய அபிவாத்யான்ச ஸர்வா: ராஜஸுதா: ததா ॥
ரேமிரே முதிதா: ஸர்வா: பர்த்ருபி: ஸஹிதா: ரஹ: ॥
குமாரா: ச மஹாத்மான: வீர்யேண அப்ரதிமா: புவி ।
க்ருததாரா: க்ருதாஸ்த்ரா: ச ஸதனா: ஸஸுஹ்ருஜ்ஜனா: ॥
ஶுஶ்ருஷமாணா: பிதரம் வர்த்தயந்தி நரர்ஷபா: ।

வா.ரா. பால. - 77

தசரதர் உடன்வந்த படையினரையும், மற்றோர்களையும் விரைந்து செல்லும்படி உத்தரவிடவே அனைவரும் அயோத்தி நகரை வந்தடைந்தனர்.

எல்லோரும் வருவதற்கு முன்பே பட்டத்து ராணிகளான கோஸலை, ஸுமித்திரை, கைகேயி ஆகிய மூவரும் மற்ற ராஜ மஹிஷிகளும் நகருக்கு வந்து, புதிதாக மணமாகி வரும் ஸீதை, ஊர்மிளை, மாண்டவி, ஶ்ருதகீர்த்தி ஆகிய மாற்றுப் பெண்களையும், இவர்களோடு கூடிய ராமர், லக்ஷ்மணர், பரதர், சத்ருக்னர் ஆகிய தத்தம் குமாரர்களையும் தம்பதிகளாக வரவேற்கத் தயாராயினர். அயோத்தி மக்களும் புதுமண தம்பதிகள் ஊர்வலமாக வரும் ராஜவீதிகளை அலங்கரித்தனர்; எங்கும் நன்னீர் தெளித்துத் தூசுகள் அகற்றிக் கோலமிட்டனர்; பன்னீர் தெளித்து நறுமண மலர்களைத் தூவினர்; இல்லங்கள் தோறும் தோரணங்களைக் கட்டினர்; வாயில்களில் பூர்ண கும்பங்கள் வைத்து, குத்துவிளக்குகளை ஏற்றினர். அயோத்தி நகரமே விழாக்கோலம் பூண்டது. நகரத்தின் வாயிலில் சக்ரவர்த்தியோடும், பந்து ஜனங்களோடும் வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளோடும், படை களோடும் வந்த புதுமணத் தம்பதிகளை நகர மக்கள் வரவேற்று மகிழ்ச்சி பொங்கத் துதித்தனர்.

नमस्ते जगतां नाथ नमस्ते भक्ति भावन
नमः कारुणिकानन्त रामचन्द्रनमोऽस्तुते

நமஸ்தே ஜகதாம் நாத! நமஸ்தே பக்தி பாவன! ।
நம: காருணிக! ஆனந்த! ராமசந்த்ர நமோஸ்துதே ॥

அத்யாத்ம ராமாயணம்

रामाय रामभद्राय रामचन्द्राय वेधसे
रघुनाथाय नाथाय सीतायाः पतये नमः

ராமாய ராமபத்ராய ராமசந்த்ராய வேதஸே ।
ரகுநாதாய நாதாய ஸீ தாயா: பதயே நம: ॥

இவ்வாறு நகரமாந்தர் துதித்துப் போற்ற தம்பதிகள் அரண்மனை வாயில்களை அடைந்ததும், கோஸலை முதலிய அன்னைமார்களும் மற்றோர்களும் மங்களம் பாடி, பிடிசுற்றி த்ருஷ்டி கழித்து, உள்ளே அழைத்துச் சென்றனர். பின்னர் பட்டு வஸ்த்ரங்களையும் மங்களமான, திருவாபரணங்களையும், மலர்களையும் அணிவித்து மணையில் வைத்துப் பாடி க்ருஹப்ரவேச முஹூர்த்தத்தையும் நடத்தினர். தம்பதிகள் நால்வரும் இக்ஷ்வாகு குலதெய்வமான திருவரங்கனையும், மற்ற கிராம நகர தேவதை களையும் வணங்கினர்; அரண்மனையிலுள்ளவர்களும், அரண்மனைக்கு வந்தவர்களுமான பெரியோர்களை வணங்கி ஆசீர்வாதம் பெற்றனர். பின்னர் அவரவர்கட்கு உரிய அரண்மனைகட்குச் சென்று இல்லற வாழ்க்கையை மகிழ்வுடன் நடத்திவந்தனர்.

माता पितृभ्यां संहृष्टो राम स्सीतासमन्वित:
रेमे वैकुण्ठभवने श्रिया सह यथा हरि: ॥

மாதா பித்ருப்யாம் ஸம்ஹ்ருஷ்ட: ராம: ஸீதா ஸமன்வித: ।
ரேமே வைகுண்டபவனே ஶ்ரியா ஸஹ யதா ஹரி: ।

அத்யாத்ம ராமாயணம்

ராமன் தாய் தந்தைகளோடும் ஸீதையோடும் ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீமந் நாராயணன் மஹாலக்ஷ்மியோடு இருப்பது போன்று ஆனந்தமாக இருந்தான். ராஜகுமாரர்கள் நால்வரும் மன உறுதியோடும், நிகரற்ற வீரத்தோடும், நண்பர்களோடும் அஸ்த்ர சஸ்த்ரங்களில் நிபுணர்களாய் தந்தைக்கு உதவியாக ராஜ கார்யங்களைக் கவனிப்பதோடு பித்ரு சுச்ருஷையையும் (தந்தைக்குத் தேவையான அன்புத் தொண்டையும்) செய்து வந்தனர்.

ராமனது குணநலன்கள்

तितिक्षव: कारुणिका: सुहृद: सर्वदेहिनाम् ।
अजातशत्रव: शान्ता: साधव: साधु भूषणा: ॥
सङ्ग: तेष्वथ तेप्रार्थ्य: सर्वदोषहरा:हि ते ।

திதிக்ஷவ: காருணிகா: ஸுஹ்ருத ஸர்வதேஹினாம் ।
அஜாதஶத்ரவ: ஶாந்தா: ஸாதவ: ஸாதுபூஷணா: ॥
ஸங்க: தேஷு அத தேப்ரார்த்ய: ஸர்வதோஷஹரா: ஹி தே ।

ஸ்ரீமத் பாகவதம்

பொறுமையும் கருணையும் எல்லோரிடமும் நட்பும் பகையின்மையும் அமைதியுமே உருவாய் திகழ்பவர்கள் ஸாதுக்கள். இவர்களின் தொடர்பு நம் பாபத்தைப் போக்கவல்லது. இத்தகு நல்லோரின் சேர்க்கை எவரையும் திருத்தி நல்வழிப்படுத்தும். இத்தகைய ஸாதுக்களோடு எப்பொழுதும் தொடர்பு கொண்டிருக்கும் ராமனிடம் தீய குணங்களே நெருங்காததோடு நற்குணங்கள் தாமே வந்து குடிகொள்வதில் ஆச்சரியம் என்ன?

आचार्यात् पादमादत्ते पादं शिष्य: स्वमेधया
पादं सब्रह्मचारिभ्य: पादं काल क्रमेण च ॥

ஆசார்யாத் பாத மாதத்தே பாதம் சிஷ்ய: ஸ்வமேதயா ।
பாதம் ஸப்ரஹ்ம சாரிப்ய: பாதம் காலக்ரமேண ச ॥

ஒருவன் தன் அறிவில் நாலில் ஒரு பங்கை ஆசிரியரிடமிருந்தும் இரண்டாவது பங்கை தனக்குள்ள இயற்கையான புத்தியாலும் மூன்றாவது

பங்கை உடன்படிக்கும் மாணவர்களிடமிருந்தும் நான்காவது பங்கை கால க்ரமத்தில் ஏற்படும் அனுபவத்தினாலும் பெற்று அறிவில் முழுமை பெறுகிறான்.

बुद्धिमान् मधुराभाषी पूर्वभाषी प्रियंवदः
वीर्यवान् नच वीर्येण महतास्वेन विस्मितः
नचानृतकथः विद्वान् वृद्धानां प्रतिपूजकः
अनुरक्तः प्रजाभिश्च प्रजाश्चाप्यनुरञ्जते ॥

புத்திமான் மதுராபாஷீ பூர்வபாஷீ ப்ரியம் வத:।
வீர்யவான் நச வீர்யேண மஹதாஸ்வேன விஸ்மித: ॥
நச அந்ருதகத: வித்வான் வ்ருத் தானாம் ப்ரதிபூஜக: ।
அனுரக்த: ப்ரஜாபி: ச ப்ரஜா: சாபி அனுரஞ்ஜதே ॥

வா.ரா. அயோத்யா- 1

நுண்ணிய அறிவுடையவன் என்பவன், மக்களின் நல்வாழ்விற்குத் தேவையான வழி முறைகளை ஆராய்ந்து செயல்படுபவன் ஆவான்.

இந்த அறிவும் அவனவன் சுய தகுதிக்கேற்ப நான்கு வகைப்படும் என்கிறோம்.

தைல புத்தி: தான் கசடறக் கற்றதை பல்லோரும் பயன்பெறும்படி விளக்க மாக எடுத்துக் கூறுவது, எண்ணெயை தண்ணீரில் விட்டால் அது பரவுவது போல இவன் அறிவு உலகில் பரந்து பிரகாசிக்கும். இவனை எல்லோரும் போற்றுவர்.

க்ருத புத்தி: நெய்யை தண்ணீரில் விட்டால் பரவாமல் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் இருக்கும். இது போல அவன் கற்றது பிறருக்குப் பயன்படாமல் அவனோடு நின்றுவிடும்.

கம்பள புத்தி: மணலில் விரித்த கம்பளத்தை உதறினால் அதில் ஒட்டிய மணல் முற்றிலும் உதிர்ந்து விடுவதைப் போல் அவன் கற்றது பிறர்க்குப் பயன்படாததோடு அவனுக்கும் பயன்படாது.

ம்ருத்திகா புத்தி: ஆசிரியரிடம் கற்பதும், தானே புத்தகங்களைப் படிப் பதும், பிறர் சொல்லக் கேட்பதும் எதுவும் களிமண்ணுருண்டையில் நீர் உட்புகாதது போல இவன் மூளையில் ஏறாது.

ராமனோ புகழத்தக்க, பாராட்டத்தக்க பேரறிவு பெற்றவன், எனவே தன்னிடம் வரும் அறிஞர்கட்கு சாஸ்த்ர ஸூக்ஷ்மங்களையும் தர்ம ஸூக்ஷ்மங்களையும் எடுத்தியம்பி மகிழ்விப்பானாம்.

நாம் ஒருவருக்கு, அவர் வேண்டும் பொருளைக் கொடுப்பதை விட அவரைப் பார்க்கும் பொழுது முகத்தைத் திருப்பிக் கொள்ளாமல் மலர்ந்த இனிய முகத்தோடு வரவேற்று இனிதாகப் பேசுவதே நல்லறம் என்பர்.

அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன் சொலன்ஆகப் பெறின். குறள்-92

ராமன் சக்ரவர்த்தியின் திருமகன் ஆனபடியாலும், தந்தைக்கு உதவ அரசாட்சியில் தானும் பங்கேற்று மக்கள் நலன்களைப் பேணி வருவதாலும் பல்வகைப்பட்ட மக்கள் இவனிடம் வந்து கொண்டே இருப்பார்கள். அவர்களோடும், தந்தையோடும், தாயோடும் பேசும் பொழுது தனது ஓய்வின்மையைப் பொருட்படுத்தாது மதுரமாக, ப்ரியமாக, இனிதாக அகம் மகிழும்படிப் பேசுவானாம். அதோடு வருகின்றவர்கள் அருகில் வரட்டுமே என எண்ணாது தானே எதிர்கொண்டு அழைத்துப் பேசுவானாம். அவன் வாயில் கொடிய சொற்கள் எந்நிலையிலும் வராதாம்.

கால்நடையாக வழிப் பயணம் செய்யும் ஒருவன் பசி எடுத்தபோது எதிரே ஒரு மரத்தைப் பார்க்கிறான். நல்ல காய்ப்பு, பழுத்த பழங்களின் கனம் தாங்காது வளைந்து தொங்குகின்றன கிளைகள். எட்டாக் கனிகள் அல்ல. கனிகள் கிளிகள் கொத்தும் நிலையில் பழுத்திருக்கின்றன. அவற்றுள் பழுத்த தேன் சுவைக்கனிகளை பறித்து மனமும் வயிறும் மகிழ உண்பானேயொழிய பற்களைக் கூசச் செய்யும் புளிக்கும் காய்களைப் பறித்து உண்பானோ?

இனிய உளவாக இன்னாத கூறல்கனி
இருப்பக்காய் கவர்ந்து அற்று. குறள்-100

ராமன் பகைவனிடத்தும் இனிதாகப் பேசும் இயல்பினன், எனினும் தன்னைச் சார்ந்த ஸுஹ்ருத்துக்களின் பகையை அழிக்கும் திறம் பெற்றவன். பிறர் வியக்கும் இத்தகுத் திறனைப் பெற்றிருப்பதால் ''நான் சிறந்த போர் வீரன்'' என கர்வம் கொள்ளாதவன். பரிஹாஸமாகக்கூட பொய் பேசாதவன்.

विवाह काले रति संप्रयोगे प्राणात्यये सर्वधनापहारे ।
मित्रस्य चार्थेऽपि अनृतं वदेयुः पञ्चानृतान्याहुरपातकानि ॥

விவாஹ காலே ரதி ஸம்ப்ரயோகே ப்ராணாத்யயே
ஸர்வதனாபஹாரே ।
மித்ரஸ் யச அர்தேபி அந்ருதம் வதேயு: பஞ்சாந்ருதாநி
ஆஹு: அபாதகானி ॥

கல்யாணத்திலும், இன்ப காலத்திலும், உயிருக்கு ஆபத்து ஏற்படும் பொழுதும், சொத்துக்கள் முழுவதும் பறிக்கப்படும் பொழுதும், நண்பனைக் காப்பாற்றவும் பொய் சொல்வார்கள். இந்த ஐந்து பொய்களும் குற்றமற்றவை என அறநூல் கூறும். இத்தகு நிலையிலும் ராமன் பொய் பேச மாட்டான்.

ஆயினும் இவ்வைந்து நிலைகளையும் நுண்ணறிவினால் வேறு வகையில் திறன்பட சமாளித்து உதவுவான். அரண்மனைக்கு வரும் அறிவிலும் வயதிலும், பண்பிலும் முதியோர்களான நல்லோர்களைத் தான் எழுந்து எதிர் கொண்டு வரவேற்று உபசரிப்பான்.

நாட்டு மக்களை மகிழ்விப்பதினால் மன்னன், ''ராஜா'' எனப்படுகிறான். இச்சொல்லே திரிந்து தமிழில் அரசன் எனப்படுகிறது. இப்பெயருக்கேற்ப கற்றவர், கல்லாதவர் ஆகிய அனைத்து மக்களையும் நேசித்து அவர்தம் இன்னல் போக்கி மகிழ்விப்பானாம். மக்களும் அன்புடன் அவனது ஆணைப்படி கடமைகளைச் செய்து ராமனை மகிழ்விப்பார்களாம். கோனும் குடியும் ஒருவருக்கொருவர் நேசிப்பராயின் நாட்டின் முன்னேற்றத்திற்கு எல்லையேது?

எல்லையற்ற கருணையை உடையவன், பிறர்படும் துன்பத்தைப் பொறுக்காதவன், ''கருணாகாகுத்ஸ்த'' என்பர் ஸ்வாமி தேசிகன்.

கோபத்தை அடக்கியவன், சிலருக்குத் தம்மை அறியாது கோபம் வந்துவிடும். ''க்ருத்தோ ஹன்யாத் குருனபி'' கோபம் பொல்லாதது. கோபத்தினால், தன் ஆசானையும் கொல்லும் நிலை ஏற்பட்டுவிடும். கோபம் மதியை மயக்கி சுயநினைவை இழக்கச் செய்து அவனையே அழித்துவிடும். ராமன் இயற்கையாகவே கோபமில்லாதவன். கரன், தூஷணன், ராவணன் முதலிய துஷ்டர்களை மாய்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட பொழுதும் ''க்ரோதம் ஆஹாரயத் தீவ்ரம்'' மிகவும் ச்ரமப்பட்டு கோபத்தை வர வழைத்துக்கொண்டு அவர்களை ஸம்ஹாரம் பண்ணியதாக வால்மீகி பகர்வர். எளியோர்களைக் கண்ட இடத்து மனமிரங்கித் தேவையை அளித்து உதவுவான். க்ஷத்ரியனாகையாலே துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனமாகிற குலதர்மத்தைக் கைவிடாதவன். ஒருவனைப் பார்த்த மாத்திரத்தில் அவன் மனதிலுள்ளதை–எண்ணத்தை, உடல் வலியை உணர்ந்து அதற்கேற்ப செயல்படுவான். ராமன் மிக ஸாது, அதாவது சிஷ்டன் எவ்வித குற்றமும் இல்லாதவன்.

उपकारिषु यस्साधुः साधुत्वे तस्यकोगुणः ।
अपकारिषुयस्साधुः स साधुः परिकीर्तितः ॥

உபகாரிஷுய: ஸாது: ஸாதுத்வே, தஸ்யகோகுண: ।
அபகாரிஷுய: ஸாது: ஸ ஸாது: பரிகீர்த்தித: ॥

நமக்கு உதவியவர்களிடம் நல்லவனாயிருப்பது பெரிதன்று. தனக்குத் தீங்கிழைத்தவனுக்கும் நன்மை செய்யும் ஸாது இவன்.''

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். குறள் - 314

தனக்குத் தீங்கிழைத்தோர்க்கும் இனியவற்றைச் செய்து அவர், தாமே வெட்கித் தலை குனிந்து நிற்பதையே தண்டனையாக்கி அத்தீமையையே மறந்துவிடுவானாம். இத்தகு நற்குண நற்பண்புகள் நிறைந்த ராமனை நாட்டு மக்கள் உயிருக்கு உயிராய் நேசித்தனராம். அயோத்தி மக்கட்கு இரண்டு உயிர்களாம். ஒன்று அவர்தம், உடலில் உள்ளே சுற்றித்திரியும். மற்றொன்று வெளியில் ராமனாகச் சுற்றி வருமாம். மக்களுக்கு அவ்வளவு அன்பு ராமனிடத்தில் ''உயிர் என்ன வெல்லமோ'' என்பர் ஆம். ராமனாகிற உயிர் வெல்லம் தான், ராம என்றாலே வாயில் (ஜலம் ஊறும்) நாவில் தித்திப்பான், மனதால் நினைத்தால் உள்ளத்தில் தித்திப்பான்.

பரதனின் பயணம்

अयंकेकयराजस्य पुत्रो वसति पुत्रक
त्वां नेतु मागतो वीर युधाजिन्मातुलस्तव ॥

அயம் கேகயராஜஸ்ய புத்ரோ வஸதி புத்ரக! ।
த்வாம் நேதும் ஆகத: வீர! யுதாஜித் மாதுல: தவ ॥

வா.ரா. பால. - 77

ஒருநாள் கேகயநாட்டு அரசனின் புதல்வனாகிய யுதாஜித் தனது ஸஹோதரி கைகேயியின் புதல்வனாகிய பரதனை அழைத்துச் செல்ல அரண்மனைக்கு வந்தார். தசரதரும் மைத்துனரை உபசரித்து, பரதனை அழைத்துச் சொன்னார்: ''பரதா! குழந்தாய்! உனது மாமா உன்னை அழைத்துச் செல்ல வந்திருக்கிறார்'' என்றார். இங்கு மகனை விட்டுப் பிரிய மனமின்மையால் ''சென்றுவா'' எனக் கூறவில்லை போலும்.

ஏவலும் இறைஞ்சிப்போய் இராமன் சேவடிப்
பூவின்ன சென்னியிற் புனைந்து போயினான்
ஆவி அங்கு அவன் அலது இல்லையாதலால்
ஓவல்இல் உயிர்பிரிந்து உடல்சென்று அன்னவே.

க.ரா.பால. பரசுராமன்

பரதன் புறப்படும் பொழுது தந்தையை வணங்கியும், ராமனின் அழகிய திருவடித் தாமரைகளைத் தலைமேற் கொண்டு வணங்கியும் புறப்பட்டானாம். பரதனுக்கு எல்லாம் ராமனே ஆதலால் ராமனைத் தவிர்த்து வேறு உயிர் இல்லாதபடியால், 'பிரிக்க முடியாத உயிரை (ராமனை) இங்கு விட்டு விட்டு பரதனாகிய உடம்பு மாத்திரம் புறப்பட்டதோ' என்னும்படி இருந்ததாம்.

गमनायाभिचक्राम शत्रुघ्नसहितस्तदा ।

கமனாய அபி சக்ராம சத்ருக்ன ஸஹித: ததா ॥

வா.ரா. பால. - 77

பரதனும் தந்தையிடம் விடை பெற்றுத் தனது உடன் பிரியாத் தம்பியான சத்ருக்னனோடு கேகய நாட்டிற்குப் புறப்பட்டான்.

இன்ப வாழ்வு

पितुराज्ञां पुरस्कृत्य पौरकार्याणि सर्वशः

चकार रामो धर्मात्मा प्रियाणिच हितानिच ।

मातृभ्यो मातृ कार्याणि कृत्वा परमयन्त्रितः

गुरूणां गुरु कार्याणि काले कालेऽन्ववैक्षत

रामस्तु सीतयासार्धं विजहार बहून् ऋतून्

मनस्वी तद्गतमना नित्यं हृदिसमर्पितः

प्रियातु सीता रामस्य दाराः पितृकृता इति

गुणाद्रूपगुणाच्चापि प्रीति भूंयोभ्यवर्धत

तस्याश्च भर्ताद्विगुणं हृदये परिवर्तते

अन्तर्जात मभिव्यक्तं आख्याति हृदयं हृदा ।

பிது: ஆஜ்ஞாம் புரஸ்க்ருத்ய பௌரகார்யாணி ஸர்வச: ।

சகார ராம: தர்மாத்மா ப்ரியாணி சஹிதானி ச ॥

மாத்ருப்ய: மாத்ருகார்யாணி க்ருத்வா பரமயந்த்ரித: ।

குரூணாம் குருகார்யாணி காலே காலே அன்வவைக்ஷத ॥

ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார பஹூன் ருதூன் ।

மனஸ்வீ தத்கத: மநா: நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித: ॥

ப்ரியா து ஸீதா ராமஸ்ய தாரா: பித்ருக்ருதா இதி ।

குணாத் ரூப குணாத் சாபி ப்ரீதி: பூய: அப்யவர்த்த ॥

தஸ்யா: ச பர்தாத்விகுணம் ஹ்ருதயே பரிவர்த்ததே ।

அந்தர்ஜாதமபி வ்யக்தம் ஆக்யாதிஹ்ருதயம் ஹ்ருதா ॥

வா.ரா.பால. - 77

பரதனும் சத்ருக்னனும் கேகய நாட்டிற்குச் சென்றனர். அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை ராமனே ஏற்றான். தினந்தோறும் சக்ரவர்த்தி தசரதரின் கட்டளையைத் தலைமேற்கொண்டு நாட்டுக்கு ஆற்ற வேண்டிய அரசுப் பணிகள் அனைத்தையும் தானே முன் நின்று செய்யலானான்.

லக்ஷ்மணனோ எப்பொழுதும் ராமனுக்கு உறுதுணையாக நின்றான். தாய்மார்கள் மூவருக்கும் மற்றோருக்கும் தேவையான உதவிகளையும் கடமைகளையும் வேதமும் ஸ்ம்ருதியும் கூறுகின்றபடி செய்துவந்தான். இதே போன்று வஸிஷ்டர் முதலிய குருமார்கட்குத் தேவையான பணிவிடை களையும் காலம் தவறாது முறைப்படி செய்து வந்தான். இவ்வாறு ஸ்ரீ ராமனுடைய நற்பண்புகளாலும், நல்நடத்தையாலும் மன்னன் தசரதனும், அந்தணர்களும், வணிகர்களும் மற்றோரும் மிக மகிழ்ந்து வாழ்ந்தனராம்.

அறவழியில் நின்று செல்வத்தைத் திரட்டி மக்களை நன்முறையில் வாழச் செய்த ராமன், தானும் ஸீதையோடு அறவழி வழுவாது பல்லாண்டு கள் இன்ப வாழ்வு வாழ்ந்தானாம். இங்கு வால்மீகி பல்லாண்டுகள் எனக்கூறாது பல ருதுக்கள் என்றார். ருதுக்கள் மாதங்களை கொண்டவை. ருதுக்களில் தட்ப வெப்ப நிலை, மாறுதலை அடையும். அதற்கேற்ப இன்ப நுகர்ச்சியும், நுகரும் பொருள்களும் மாறுதலை அடையும், எனவே அந்த அந்தக் காலத்திற்கேற்ற இன்பங்களை நுகர்ந்து ஸீதையுடன் இனிது வாழ்ந்தான்.

ஸீதை அயோனிஜை; ஒரு பெண்ணின் வயிற்றில் பிறந்தவள் அல்லள். எனவே இயற்கையாகவே அழகும் பண்பும் பெற்றவள். இவளிடத்தில் அனுகூலமான மனதை உடையவனாகையாலே அவளிடமிருந்து பிரிக்க முடியாதபடி எப்பொழுதும் அவளையே விரும்பிய மனத்தனாக ஸீதையின் இதயத்திலேயே தங்கினான். ஏன்? ஜனகர் ஸீதையை மணம் செய்து கொள்ளுமாறு கூறிய பொழுது வேண்டாம் என்று தடுக்காது பெண்ணைப் பார்த்ததும் ''இவளே என் ராமனுக்கு ஏற்றவள்'' என எண்ணி, தந்தை தசரதர் விரைந்து கல்யாணத்தை பண்ணிவைத்தபடியால் ராமனுக்கு ஸீதை ப்ரிய மானாள். அதோடு வேறு காரணங்களும் உண்டு. அவள் செய்த (பதி) சுச்ரூஷையும் (தொண்டும்), திருமேனியின் ஒப்பற்ற அழகும், உயர்குடிப் பிறப்பும் காரணங்களாகும். ஸீதையின் பதியாகிய ராமன் அவள் இதயத்தில் இரு மடங்கு தங்கினானாம். அதாவது ராமன் ஸீதையை நேசிப்பதைவிட ஸீதை ராமனை இருமடங்கு நேசித்தாளாம் (காதலித்தாளாம்). ராமனோ ஸீதையை, தந்தை மணம் புரிவித்ததாலும், குணம், அழகு, நற்குடிப் பிறப்புகளின் காரணமாகவும் விரும்பினான். ஆனால் ஸீதையோ நம் கைப்பிடித்த கணவன் என்ற காரணத்தினால் ராமனை இருமடங்கு நேசித் தாளாம். இதே கருத்தை அனஸூயை பேசும் பொழுது,

दु:शील: काम वृत्तोवा धनैर्वा परिवर्जित:
स्त्रीणामार्यस्वभावानां परमं दैवतं पति:

துஶ்ஶீல: காமவ்ருத்த: வா தனை: வா பரிவர்ஜித: ।
ஸ்த்ரீணாம் ஆர்யஸ்வபாவானாம் பரமம் தைவதம் பதி: ॥

வா.ரா. அயோத்யா - 117

கணவன் பண்பற்றவனாகவும், செல்வமில்லாதவனாகவும், காம லோலனாகவும், இருப்பினும் கற்பரசியான பெண்களுக்கு அவனே வணங்கப்படும் தெய்வமாவான் என்றாள், இதற்கு ஸீதை :

यद्यपि एष भवेत् भर्ता मम आर्ये ! वृत्तिवर्जितः ।
अद्वैधं अत्र वर्तव्यं तयाप्येष मया भवेत् ॥

யத்யபி ஏஷ: பவேத் பர்தா மம ஆர்யே! வ்ருத்தி வர்ஜித: ।
அத்வைதம் அத்ரவர்த்தவ்யம் ததாபி ஏஷ: மயா பவேத் ॥

வா.ரா. அயோத்யா. - 117

எனது கணவனாகிய ராமன் நடத்தை கெட்டவராக இருப்பினும் ஐயத்திற்கு இடமின்றி அவருக்குத் தொண்டு செய்வதே என் கடமை என பதிலிறுத்தாள். எனவே ஸீதை கணவன் என்ற ஒரே காரணத்திற்காகவே ராமனிடம் இருமடங்கு அன்பைப் பொழிந்தாளாம்.

ஸ்ரீமத் பாகவதத்திலும் கண்ணன் கோபியர்களிடம் உபதேசிப்பான்: ''கணவனுக்குத் தொண்டு செய்வது பெண்களின் தலையாய கடமையாகும். கணவனுக்கு மாத்திரமன்றி அவனுடைய உறவினர்கட்கும் தன் மக்களுக்கும் சுச்ரூஷை செய்ய வேண்டும். தன் கணவன் பண்பற்றும், கெட்டும், அறிவிலியாயும், நோயாளியாயும், கிழவனாயும், ஏழையாயும் இருந்தாலும் தன் கணவனை விடக்கூடாது. அவ்வாறின்றேல் அவளுக்கு மேலுலகம் கிடைக்காது''.

இங்கிதத்தினாலும் ஊஹத்தினாலும் ஸீதையின் உள்ளக்கிடக்கையை அறிந்து ராமன் ப்ரீதியைச் செலுத்தினான். ராமனின் உள்ளத்தை அறிவதில் ஸீதை ராமனை விட கெட்டிக்காரி, ஏன்? ''இங்கிதஜ்ஞா: ச கோஸலா:'' என்பது போல மிதிலையர்களும் பிறர் உள்ளத்தை அறிவதில் புத்திசாலிகள், உயரிய ஜனகவம்சத்தில் தோன்றியவள்; அதோடு ஸீதை அயோனிஜை; தேவர்களை ஒத்தவள். அது மட்டோ! மஹாலக்ஷ்மியே ஸீதையாக உருவெடுத்தவள். இந்த நான்கு காரணங்களினால் ராமனின் உள்ளத்தை அறிவதில் ஸீதை தேர்ந்தவள். எனவே ராமனை அவன் நினைப்பதற்கேற்ப இன்புறச் செய்தாளாம்.

तयासराजर्षिसुतोभिरामया समेयिवानुत्तमराज कन्यया
अतीव रामः शुशुभेऽतिकामया विभुः श्रिया विष्णुरिवामरेश्वरः

தயா ஸ ராஜர்ஷிஸுத: அபிராமயா, ஸமேயிவான் உத்தமராஜ கன்யயா ।
அதீவ ராம: ஶுஶுபே அதிகாமயா, விபு: ஶ்ரியா விஷ்ணுரிவ அமரேஶ்வர: ॥

வா.ரா. பால. - 77

இன்புற்று வாழ எல்லோருக்கும் ஆசைதான். ஆனால் அதற்குத் தேவையான வசதிகள் (பொருள்கள் ஸாதனங்கள்) வேண்டும். ராமனோ மஹாராஜரின் குமாரன், அதோடு பல்லாண்டுகள் தவம் இருந்து பிறந்தவன். இன்ப வாழ்வைப் பெறுவதற்குரிய நுகரும் பொருள்களுக்குக் குறை ஏது? வாழ்க்கைத் துணைவியாக வந்த அவளோ உத்தம ராஜ கன்யா, சீரும் சிறப்பும் தைவானுக்ரஹமும் பெற்ற மஹாராஜாவின் பெண், தன் பெண் குறைவின்றி இன்ப வாழ்வைப் பெறுதற்குத் தேவையான நுகரும் பொருள்கள் அனைத்தையும் சீர்வரிசையாகக் கொடுத்திருப்பாரே. எவ்வளவு இருந்தால் என்ன? தம்பதிகளுள் கவர்ச்சியும், அழகும், மன ஒற்றுமையும் வேண்டுமே. ஆம். அவற்றிற்கு இங்கு குறைவு ஏது? கணவனோ ராமன்! தன் அழகி னாலும், பேச்சினாலும், குணத்தினாலும் எல்லாம் துறந்த முனிவர்களைக் கூடக் கவரும் தன்மை உடையவன். ஸீதையோ அபிராமா, கட்டழகி, கணவனைக் கவர்வதில் என்ன தடை? தம்பதிகளின் உள்ளத்தில் பரஸ்பரம் அன்பு இல்லாவிடில் எத்தனை இருந்தும் என்ன பயன்? அன்பிற்கும் குறை வில்லை என்கிறார் ஆதிகவி.

ராமன் ஸாக்ஷாத் மன்மத மன்மதன். காமன், மனதில் காம உணர்ச்சியைத் தூண்டுபவன். ஸீதையோ அதிகாமா. ராமன் தன்னை நேசிப்பதைவிட இருமடங்கு பர்தாவை–ராமனை நேசிப்பவள். இத்தகு தாம்பத்ய ஒற்றுமை அமைந்துவிட்டால் புருஷனின் பாக்யமே பாக்யம். இத்தகு ஸீதாராம தம்பதிகளை யாரோடு ஒப்பிட்டுப் பேசுவது? உவமை யோடு பேசுவதுதானே கவிஞனுக்கு அழகு. வால்மீகி தேடினார், சரியான முடிவுக்கு வந்தார். கடல் கடலைப் போலத்தான் இருக்கும். வானம் வானத்தைப் போலத்தான் இருக்கும். ஏன்? இவற்றிற்கு நிகரான வேறு பொருள் கிடையாதே! அதே போல ஸீதாராம தம்பதிகள் ஸீதாராம தம்பதி களைப் போன்றே இன்புற்று வாழ்ந்தார்கள். ஆம் இவர் கட்கு நிகராக வேறு எவருமிலர் தான்.

ஆயினும் ஒன்றையே உபமான மாகவும் உபமேயமாகவும் சொல்வது கவி மரபுக்கு இழுக்காகுமே. அதற்காகத்தான் அவதார பேதத்தை (மூர்த்தி வேறு பாட்டை) மனதிற் கொண்டு திருமா மணி மண்டபத்தில் நித்ய ஸூரிகள் புடைசூழ இன்னமுதத் திருமகளான பெரிய பிராட்டியாரோடு இன்புற்று வாழும் பரரூபத்திலுள்ள பரவாஸுதேவனைப் போன்று (லக்ஷ்மீ நாராயணனைப் போன்று) ஆனந்தமாக விளங்கினார்கள் என்றார். ஸ்ரீ வைகுண்டமும் அயோத்யா, இதுவும் அயோத்யா. இடத்தின் ஒற்றுமையும் இங்கு நோக்கத்தக்கது. பரம் விபவம் எனும் மூர்த்தி (திருமேனி) வேறு பாட்டை மனதிற் கொண்டே பத்ம புராணமும் கூறும்.

तत्र द्वादश वर्षाणि राघवः सहसीतया
रमयामास धर्मात्मा नारायण इव श्रिया

தத்ர த்வாதஶ வர்ஷாணி ராகவ: ஸஹ ஸீதயா।
ரமயாமாஸ தர்மாத்மா நாராயண இவஶ்ரியா ॥

பாத்ம புராணம்

ராமன் பதினைந்தாவது வயதில் விஸ்வாமித்ர முனிவரோடு சென்று ஸீதா கல்யாணமாகி பன்னிரண்டு ஆண்டு காலம் லக்ஷ்மியோடு நாராயணன் போன்று இல்லறத்தில் பெருமகிழ்வோடு ஆனந்தமாக வாழ்ந்தார்.

பால காண்டத்தைப் பாராயணம் செய்தால் அது நாட்டில் மழை யின்மையைப் போக்கி ஸுபிக்ஷத்தைக் கொடுக்கும். பெரும் துன்பங் களையும் க்ரஹங்களினால் ஏற்படும் துன்பங்களையும் போக்கி நல்வாழ்வை அளிக்கும்.

नमोऽस्तु रामाय सलक्ष्मणाय
देव्यै च तस्यै जनकात्मजायै ॥

நம: அஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய
தேவ்யை ச தஸ்யை ஜனகாத்மஜாயை

ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரம வெளியீடுகள்

		விலை ரூ.
1.	ஸந்த்யாவந்தனம் (தமிழ்-யாஜுஷம்)	10/-
2.	ஸந்த்யாவந்தனம் (ஸம்ஸ்க்ருதம்-யாஜுஷம்)	10/-
3.	சாத்துமுறை க்ரமம்	10/-
4.	சில்லரை ரஹஸ்யங்கள் (முதல் பாகம்)	200/-
5.	சில்லரை ரஹஸ்யங்கள் (இரண்டாம் பாகம்)	அச்சில்
6.	சில்லரை ரஹஸ்யங்கள் (மூன்றாம் பாகம்)	250/-
7.	ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்	350/-
8.	இராமபிரானைக் கற்போம்	200/-

இப்புத்தகங்கள் கிடைக்கும் இடம்

தொலைபேசி மூலம் உறுதி செய்து கொண்டு செல்லவும்.

1. **ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா அலுவலகம்.**
   தேசிக பவனம்,
   27, வேங்கடேச அக்ரஹாரம்,
   மயிலாப்பூர், சென்னை - 600 004.
   தொலைபேசி : 044-4611540.
2. **Dr. S. பார்த்தஸாரதி,**
   "தேசிக ஸதனம்",
   24, 28வது கிராஸ் ரோடு,
   பெஸண்ட் நகர்,
   சென்னை - 600 090.
   தொலைபேசி : 044-490 0327
3. **ஸ்ரீ N.K. ராமஸ்வாமி,**
   213, கிழக்கு உத்தர வீதி,
   ஸ்ரீ ரங்கம், (திருச்சி) - 620 006
   தொலைபேசி : 0431-434438
4. **ஸ்ரீ D. ராஜகோபாலன்,**
   D-B/109A, DDA Flats.
   ஹரிநகர்,.
   புதுதில்லி 110 064
   தொலைபேசி : 011-5492877
5. கனபாடி, வேத வித்வான்,
   Dr. N. அநந்த நரஸிம்ஹாசார்யார்
   33, ஸமீரபுரம்,
   இரண்டாவது கிராஸ்,
   சாம்ராஜ்பெட்போஸ்ட்,
   பங்களூர் - 560 018.
   தொலைபேசி : 080-6511056
6. **Dr. N. கோபாலாச்சாரி,**
   "சரணாகதி"
   ஸ்ரீ க்ருஷ்ண ஸபா, ப்ளாட் 264,
   ஜே.எஸ். யக்ஞிக் மார்க்
   சியான் கிழக்கு,
   மும்பை - 400 002
   தொலைபேசி
   (ஸபா) 022-4094 495
   (வீடு) 022-4095 582
7. **ஸ்ரீ N.S. பார்த்தஸாரதி**
   1, ராகவய்யா சாலை,
   தி.நகர், சென்னை - 600 017
   தொலைபேசி : 044-8280949

கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?
புல் பா முதலாப் புல் எறும்பு ஆதி ஒன்று இன்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே.

— திருவாய்மொழி - 7 ப.5 தி.

எவ்வித விகாரமும் இல்லாதவன், விசித்ரமான ஆற்றல் படைத்தவன், ஞான ஸ்வரூபமானவன், ஆனந்தமே வடிவு எடுத்தவன், அனைத்து உலகங்களையும் படைப்பவன் தர்மங்களை உபதேசித்து பிரசாரம் செய்பவன், உபய விபூதிநாதன், தீயோர்களைக் களைவதற்காகவே அவதரிப்பவன், எடுப்பான தோள்களும், திரண்டு பருத்த முழங்கால்கள் வரை நீண்ட கைகளும், சங்கு போன்ற கழுத்தும், பார்வையான கன்னங்களும், அகன்ற மார்பும் உடையவன், ஶரணாகத ரக்ஷகன், கொடுத்த வாக்கை மீறாதவன், எல்லையற்ற கல்யாண குணங்கள் நிரம்பியவன்—அவனே அயோத்தி வாழ் இராமபிரான்.

—வால்மீகி, பாலகாண்டம்

வென்றிசேர் இலங்கையானை வென்ற மால்வீரன் ஓத
நின்ற, ராமாயணத்தின் நிகழ்ந்திடு கதைகள் தம்மில்
ஒன்றினைப் படித்தோர் தாமும், உரைத்திடக்
கேட்டோர் தாமும்
நன்று இது என்றோர் தாமும் நரகமது எய்திடாரே.

—கம்பன், காப்பு படலம்